# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

*1978, பிப்ரவரி 28, மார்ச் 1, 2, 3, 4 ஆம் நாட்கள்*

*(தொகுதி 13—எண்கள் 1 முதல் 5)*

©
தமிழ் நாடு அரசு
1979

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 11

D
V211,31 N78
N79.1351
122110

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறுவது சட்ட மன்றப்பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

1978 பிப்ரவரி 28, மார்ச்சு 1, 2, 3, 4 ஆம் நாட்கள்

*(தொகுதி 13—எண்கள் 1 முதல் 5)*

## உள்ளடக்கம்

செவ்வாய்க்கிழமை, 1978 பிப்ரவரி, 28

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | i—vi |
| தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல். | viii—xv |
| வினாக்கள் விடைகள்— | 1—38 |
| ஒழுங்குப் பிரச்னை— | |
| (அ) பார்வையாளர் மாடத்தில் ரகசிய போலீஸ் அதிகாரிகள் (சி.ஐ.டி.க்கள்) இருப்பது குறித்து .. | 38—43 |
| (ஆ) ஓர் உறுப்பினர் விடுதலையானது பற்றிய பேரவைத் தலைவரின் அறிவிப்பு குறித்து | 41—45 |
| (இ) கேள்வி நேரத்தில் அளிக்கப்பட்ட துணை வினாவிற்கான விடை குறித்து | 43—45 |

**செவ்வாய்க்கிழமை, 1978 பிப்ரவரி, 28 – தொடர்ச்சி.**

பக்கங்கள்


3. உரிமைப் பிரச்னை—

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளேடு மீது எழுப்பப் பட்ட உரிமைப் பிரச்னை மீது மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்பு ... 46—47

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை, இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவு எடுத் துள்ளதாக மத்திய வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளது குறித்து ... 47—60

5. அறிவிப்பு—

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கம் குறித்து ... 60

6. தகவல் கோரல்—

அறிவிப்புக் கொடுக்கப்பட்ட சில தீர்மானங் கள் குறித்து ... 60—62

7. கவன ஈர்ப்பு—

அரசு கலைக் கல்லூரி தற்காலிக ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டதும், அவர்கள் மேற் கொண்டுள்ள உண்ணாவிரதத்தினால் ஏற் பட்டுள்ள நிலையும் குறித்து ... 62—64

8. 1978–79-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. ... 64—128

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 128—129


**புதன்கிழமை, 1978 மார்ச்சு, 1**


1. இரங்கல் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். வி. நடேச முதலியார் மறைவு பற்றி. ... 133

2. வினாக்கள்—விடைகள் ... 133—163

3. தகவல் கோரல்—

(அ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை எடுப்பது குறித்து. ... 163




**புதன் கிழமை, 1978 மார்ச், 1—தொடர்ச்சி.**

பக்கங்கள்


3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை நுழைவாயிலில் உறுப்பினர்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப் படுவதும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதும் குறித்து. ... 164—165

4. உரிமைப் பிரச்னை—

(அ) 'குங்குமம்', 'முரசொலி' பத்திரிகைகள் மீது எழுப்பப்பட்ட உரிமைப்பிரச்னை கள் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு ... 165—166

(ஆ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது ... 166—167

5. ஒத்திவைப்புத் தீர்மானம்—

காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப் படுவது குறித்து. ... 168—172

6. கவன ஈர்ப்பு—

திருச்சி மாவட்டத்தில் கைத்தறி நூல் பாவு பசை போடும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து. ... 172—174

7. 1978—79-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. ... 174—240

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... 240


**வியாழக்கிழமை, 1978 மார்ச்சு, 2**


1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. 241—270

2. தகவல் கோரல்—

சமூகநலத்துறை அமைச்சருக்குப் பதிலாக வேறு அமைச்சர் கேள்விக்கு பதிலளித்தது குறித்து. ... 270

3. உரிமைப் பிரச்னை—

நிதிநிலை அறிக்கையை பேரவை முன் வைக்கு முன் ஆளுநர் உரை இல்லாதது குறித்து. ... 271—293

வியாழக்கிழமை, 1978 மார்ச், 2—தொடர்ச்சி.


பக்கங்கள்

4. கவன ஈர்ப்பு—

(அ) பழவேற்காடு அடுத்த கோட்டைக்குப் பக்கத்தில் மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரம் குறித்து. 294

(ஆ) சென்னைக் கடலில் விசைப்படகுக்காரர்கள் கட்டுமர மீனவர்களை கடலில் தாக்கியதும், அதனால் அயோத்தியா குப்பத்தில் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்தும். 295—301

5. 1978—79-ம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. 301—334

6. அறிவிப்பு—

பேரவையில் மானியக் கோரிக்கைகளை முன்மொழிய பரிந்துரை அளித்து ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி .. .. 334

7. 1978—79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் கோரிக்கை எண் 17—கல்வி .. 334—360

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 361


வெள்ளிக்கிழமை, 1978—மார்ச்சு, 3


1. வினாக்கள்-விடைகள் .. .. .. .. 449—492

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 449—481

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 481—492

2. தகவல் கோரல்—

(அ) முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினாக்களை எடுத்துக் கொள்ளாதது குறித்து. 492

(ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு சலுகை குறித்து. 499—500

(இ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து 500




வெள்ளிக்கிழமை, 1978 மார்ச், 3—தொடர்ச்சி.


பக்கங்கள்

3. ஒழுங்குப் பிரச்சினை—

ஒரே பொருள் கொண்ட சில வினாக்களுக்கு அவையில் விடையளிப்பதும், அதே பொருள் கொண்ட மற்றொரு வினாவிற்கு விடையை அச்சடித்து வழங்குவதும் குறித்து. 493

4. கூவத்தில் இருந்து வரும் நாற்றத்தால் உறுப்பினர் விடுதியில் தங்கள் உறுப்பினர்களை பாதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து. 494—495

5. அறிவிப்புகள்—

(அ) பேரவையின் அலுவல் குறித்து .. 495—499

(ஆ) தமிழ் நாடு 1978-ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு. .. 508

6. அமைச்சரின் அறிக்கை—

மின் உற்பத்தி மீது விதித்துள்ள ஆயத் தீர்வையை மறு பரிசீலனை செய்து, திரும்பப் பெறக் கோரி மாண்புமிகு முதலமைச்சர், இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய தந்தி குறித்துப் பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த அறிக்கை. .. .. .. 500—503

7. கவன ஈர்ப்பு—

கல்லூரி ஆசிரியர்கள் அனைத்துச் சங்கமும் நடத்த இருக்கும் தேர்வுகளை மேற்பார்வையிடும் பணியைப் புறக்கணிப்பதென எடுத்த முடிவும், அதன் விளைவுகளும் குறித்து. .. 504—508

8. அரசினர் சட்ட முன்வடிவு—

தமிழ் நாடு 1978-ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு. .. .. .. .. 508

9. 1978-79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி) கோரிக்கை எண் 17—கல்வி—தொடர்ச்சி. 508—570

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 577

சனிக்கிழமை, 1978 மார்ச்சு, 4


பக்கங்கள்

1. வினுக்கள்—விடைகள். .. 587—626

2. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் பழைய விடுதியில் நடந்த திருட்டு குறித்து .. 626

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சிவகங்கை, மதுரை, பரமக்குடி, நாமக்கல், போடி போன்ற இடங்களில் டாக்சி ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள் கடனை வசூலிப்பதில் காட்டும் கெடுபிடி குறித்து .. .. 627—632

4. கவன ஈர்ப்பு—

(அ) தஞ்சை மாவட்டம் வளப்பக்குடியில் அரிசனங்கள் புறக்கணிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை .. 632—635

(ஆ) தேனித் தொகுதியில் பெரும்பாலான கிராமங்கள் 'பெரிடோனியா' நோயால் பருத்திப் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து .. 635—637

5. 1978—79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண்: 17 கல்வி—(தொடர்ச்சி) 637—724

6. அறிவிப்பு—

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம் .. 724

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 726




## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. முனு ஆதி

**பேரவைத் துணைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :**

1. திரு. கே. பண்ணை சேதுராம்.
2. திரு. இரா. முத்தையா.
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. கே. கே. முத்தையா.

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர் :**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர் :**

திரு. த. இராதாகிருஷ்ணன்.

**குழு அலுவலர் :**

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஹானர்ஸ்)

**சார்புச் செயலாளர்கள் :**

திரு. வி. சீதாராமன், பி.காம்.

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ.

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர் :**

திரு. கே. சுந்தரராசன்.

**தலைமை நிருபர் :**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

**எஸ்டேட் அதிகாரி :**

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

*1978 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாளன்று இத்துறையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1 அண்ணமலை, திரு. எம். .. | ஹரூர் (செ.வ.ச.). |
| 2 அப்துல்ரஜாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 அப்துல் லத்தீப், திரு. கி. | கடலூர். |
| 4 அப்புனு கவுண்டர், திரு. கா. | பெண்ணகரம். |
| 5 அமிர்த ராஜ், திரு. இரா. | திருச்செந்தூர். |
| 6 அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி. |
| 7 அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.). |
| 8 அரங்கசாமி, திரு. கு. | குன்னூர் (செ.வ.). |
| 9 அரங்கநாதன், திரு. அ. க. | வேலூர். |
| 10 அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி. |
| 11 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 12 அருணசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.). |
| 13 அர்சுனன், திரு. வீ. .. | ஆரணி. |
| 14 அழகர்சாமி, திரு. சோ .. | கோவில்பட்டி. |
| 15 அன்பழகன், திரு. க. | புரசவாக்கம். |
| 16 அன்பழகன், திரு. தி. .. | நாட்ரார்ம்பள்ளி. |
| 17 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 18 ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. | மதுராந்தகம். |
| 20 ஆறுமுகம், திரு. எச். ஜி. | பேர்ணாம்பட்ட |
| 21 ஆறுமுகம், திரு. இல. | திருநாவலூர். |
| 22 ஆறுமுகம், திரு. எம். .. | சேலம்-2. |
| 23 ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர். |
| 24 இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி. |
| 27 இராதா, திரு. எஸ். ஆர்... | கும்பகோணம். |
| 28 இராமசாமி, திரு. க. ந. கா. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 30 இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.). |
| 31 இராமசாமி, திரு. டி. .. | இராமநாதபுரம். |
| 32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர். |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை. |
| 34 இராமச்சந்திரன், திரு. என். | செஞ்சி. |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 36 இராமசந்திர ரெட்டி, திரு. என். | ஓசூர். |
| 37 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. | நல்லி. |
| 39 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 41 உக்கிரபாண்டியன், திரு. க. | பரமக்குடி (செ.வ.). |
| 42 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 43 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 44 உமாநாத், திரு. ரா. .. | நாகப்பட்டினம். |
| 45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்). | திருநெல்வேலி. |
| 47 எத்திராஜ், திரு. கி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. | பள்ளிப்பேட். |
| 49 ஐசரி வேலன், திரு. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 50 கணேசன், திரு. இ. | எடப்பாடி. |
| 51 கணேசன், திரு. எஸ். .. | பூம்புகார். |
| 52 கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 53 கந்தசாமி, திரு. க. .. | ஆண்டிப்பட்டி. |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 55 கபாலி, திரு. டி. கே. .. | மயிலாப்பூர். |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம். | திருவாடானை. |
| 57 கருணகிரி முத்தையா, திரு. க. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. ... | அண்ணாநகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. தாழை. மு. | திருவாரூர் (செ.வ.). |
| 60 கருணாமூர்த்தி, திரு. வெ. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம். |
| 62 கலியமூர்த்தி, திரு. துரை. | சிதம்பரம். |
| 63 காத்தமுத்து, திரு. கி.பெ. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்). | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. பொ. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. இரா. | ஏற்காடு (ஆ. வா.) |
| 67 கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 68 கிட்டு, திரு. ப. கோ. .. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி. எம். | பாலக்கோடு. |
| 70 கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 72 கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் (செ.வ. |
| 74 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர். |
| 75 குருசாமி, திரு. ப. ... | ஆண்டியூர் (செ.வ.). |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 77 கோதண்டராமன். திரு. வி. கே. | குடியாத்தம். |
| 78 கோதண்டராமன், என்கிற முசிறிப்புத்தன், திரு. பி. | முசிறி. |
| 79 கோபாலன், திரு. போ. | உதகமண்டலம். |
| 80 கோவிந்தராசன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 81 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 82 கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |
| 83 சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 84 சண்முகம், திரு. கா. ந. | லால்குடி. |
| 85 சண்முகம், திரு. ப. உ. .. | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 87 சண்முகம், திரு. கூ. [illegible], ச. | திருப்பத்தூர். |
| 88 சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். | கம்பம். |
| 90 சந்திரன், திரு. ப. .. | பெரணமல்லூர். |
| 91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராயநகர், சென்னை. |
| 92 சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டிணம். |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்). | திருமங்கலம். |
| [illegible] சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபஞ்சம். |
| 95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம் விளக்கு, சென்னை. |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 98 சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 99 சிவசாமி, திரு. செ. .. | இளையாங்குடி. |
| 100 சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர். |
| 101 சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.). |
| 102 சின்னசாமி, திரு. வி. கொ. | புவானிசாகர். |
| 103 சின்னய்யர், திரு. வீ. .. | குளத்தூர் (செ.வ.). |
| 104 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம். |
| 108 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 110 சுப்பராயன், திரு. என். | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. சே. ஜே. | போளூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 113 சுப்பிரமணியம், திரு. ஆர். சி. | கடலாடி. |
| 114 சுப்பிரமணியம், திரு. டி. | ஆண்டிமடம். |
| 115 சுப்பிரமணியம், திரு. ஓ. | சிவகங்கை. |
| 116 சுப்பிரமணியன், திரு. மா. | சின்னசேலம். |
| 117 சுப்பிரமணியம், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.). |
| 118 சுப்பிரவேலு, திரு. கே. | சீர்காழி (செ.வ.). |
| 119 சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 சுப்புலட்சுமி, திருமதி .. | மொடக்குறிச்சி. |
| 121 சுப்பையா, திரு. ச. .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 122 சுவாமிதாஸ், திரு. அ. | பத்மநாபபுரம். |
| 123 செங்கோடன், திரு. கா. | கபிலமலை. |
| 124 செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 125 செல்லப்பன், திரு. ஏ. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 126 செல்வராசன், திரு. அ. | துறைமுகம், சென்னை. |
| 127 செல்வராஜ், திரு. சீனி | சமயநல்லூர், (செ.வ.) |
| 128 செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.) |
| 130 சோமசுந்தரம், திரு. ஓ. ப. | பொள்ளாச்சி. |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 132 சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 134 சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம். |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. | விளவங்கோடு. |
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 137 தங்கவேல், திரு. ர. ச. | வால்பாறை (செ.வ.) |
| 138 தண்டபாணி, திரு. ர். க. சு. | காங்கேயம். |
| 139 தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 141 தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. | ராஜபாளையம், (செ.வ.) |
| 143 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர். |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 துரைசாமி, திரு. ப. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கரபுரம். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 துலுக்காணம், திரு. வ. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 152 தைலப்பன், திரு. டி. எம். | ஒரத்தநாடு |
| 153 நடராசன், திரு. ஆ. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தீ. சு. | பார்க்டவுன், சென்னை. |
| 156 நாச்சிமுத்து, திரு. சு. .. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பெ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 பரமசிவன், திரு. அ. ம. | மேலூர். |
| 162 பரமசிவம், திரு. மொ. | வானூர் (செ.வ.) |
| 163 பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிச்சாமி, திரு. சொ. ந. | அவிநாசி (செ.வ.) |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ. ப. | ஒட்டன்சத்திரம். |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 168 பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 169 | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 | பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. | சோழவந்தான். |
| 171 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 172 | பாலாஜி, திரு. க. . | காஞ்சீபுரம். |
| 173 | பாலுச்சாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 174 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 175 | புஸ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 176 | பெரியசாமி, திரு. மொ. | மங்களூர் (செ.வ.) |
| 177 | பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 178 | பெரியசாமி, திரு. டி.பி.மு. | மதுரை மேற்கு. |
| 179 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 180 | பெருமாள், திரு. ரா.கு. | விளாத்திகுளம். |
| 181 | பொன்னுசாமி, டாக்டர் ஏ. | பெருந்துறை. |
| 182 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம். |
| 183 | பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) | திருச்செங்கோடு. |
| 184 | மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 185 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர். |
| 186 | மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ.வ.) |
| 187 | மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 188 | மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்). | பாளையங்கோட்டை. |
| 189 | மாணிக்கம், திரு. சி. ... | திருச்சிராப்பள்ளி—1. |
| 190 | மார்க்கபந்து, திரு. ரா. | அணைக்கட்டு. |
| 191 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் | (நியமன உறுப்பினர்) |
| 192 | மாரிமுத்து, திரு. ஏ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 193 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 194 | முத்துச்சாமி, திரு. பா. க.சி. | தர்மபுரி. |
| 195 | முத்துச்சாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 196 | முத்துச்சாமி கரையாளர், திரு. சு. | தென்காசி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 197 | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 198 | முருகேசன், திரு. கூ.ச. | திருவரம்பூர். |
| 199 | முனிசாமி, திரு. பொ. .. | வந்தவாசி, (செ.வ.) |
| 200 | முனிரத்தினம், திரு. எஸ். | கும்மிடிபூண்டி. |
| 201 | முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்). | தாம்பரம், சென்னை. |
| 202 | மூக்கையா தேவர், திரு. பி.கே. | உசிலம்பட்டி. |
| 203 | யூசுப், திரு. யா.சை.மு. | ராதாபுரம். |
| 204 | ரகுமான்கான், திரு. ஏ. | சேப்பாக்கம், சென்னை. |
| 205 | ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 206 | ரகோத்துமன், திரு. கோ. | முகையூர். |
| 207 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 208 | ரசாக், திரு. எம்.எம்.ஏ. | கடையநல்லூர். |
| 209 | ராமசாமி, திரு. கோ. .. | சிவகாசி. |
| 210 | ராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோயில். |
| 211 | ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர். |
| 212 | ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 | ராமலிங்கம், திரு. இ. .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 214 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 215 | ராஜு, திரு. செ.மெ. .. | தலைவாசல் (செ.வ.) |
| 216 | ராஜு, திரு. வி.கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 217 | லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 | லத்தீப், திரு. எம்.ஏ. .. | வாணியம்பாடி. |
| 219 | வடிவேலு, திரு. கே. .. | கரூர். |
| 220 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல். |
| 221 | வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்—1. |
| 222 | வாசன், திரு. சீ.மு. .. | வேடசந்தூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 223 வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 224 விஜயராகவன், திரு பொ. | கிள்ளியூர். |
| 225 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 229 வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஓட்டபிடாரம் (செ.வ.) |
| 230 ஜகதீசன், திரு. ஆரூர். | செங்கல்பட்டு. |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி. |
| 232 ஜெபமணி திரு. ர. | சாத்தான்குளம். |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. | காட்பாடி. |
| 235 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டாறு. |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார். | அமைச்சர். |
| 2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். | அமைச்சர். |
| 3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். | அமைச்சர். |
| 4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. | அமைச்சர். |
| 5 திரு. வி.பி. இராமன் | தலைமை வழக்கறிஞர். |

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (INDEX) பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கிய தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கிய தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக (தீ) என்று போடுவது தீர்மானத்தையும். (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள் நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும் 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின்கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது:—

| | |
|---|---|
| அ | அறிக்கை |
| அறிவி. | அறிவிப்பு |
| அ.வி. | அரைமணி விவாதம் |
| கு.வி. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | பொது விவாதம் |

அ—தொடர்ச்சி.


| | பக்கங்கள். |
|---|---|
| **அரங்கநாதன், திரு. அ. க.,—** | |
| கூட்டுறவு நூற்பு ஆலை, அரியூர், விரிவு படுத்தும் திட்டம். .. .. .. .. | 623—625 |
| **அரங்கநாதன், திரு., செ.—** | |
| கல்லூரி ஆசிரியர்கள், தேர்வுகள் மேற்பார்வையிடும் பணியைப் புறக்கணிப்பதென எடுத்துள்ள முடிவு குறித்து. (க.ஈ.அ.) .. .. | 504—505, 506, 507 |
| வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு கல்வி. .. .. .. .. | 334, 338, 508—509, 706—724 |
| **அரசு அலுவலர்கள்—** | |
| கேஞல் சூப்பிரண்டுகள், சம்பளம். .. .. | 135 |
| பிள்ளைகளுக்கு உதவித் தொகை, வருமான உச்சவரம்பு. .. .. .. | 146—147 |
| **அரிசனங்கள்—** | |
| அவிஞசி வட்டத்தில் உழவு மாடுகள் வழங்காமை. | 259—261 |
| நிலம் கையகப்படுத்துதல்—செட்டிக்குறிச்சி கிராமம், இராமனுதபுரம் மாவட்டம். .. 1978 XIII .. | 611—615 |
| வீடுகள், மின்னல் கிராமம், .. .. | 609—611 |
| புறக்கணிக்கப்பட்டது குறித்து, தஞ்சை மாவட்டம் வளப்பக்குடியில். (க. ஈ.) .. | 632—635 |
| வீட்டுவசதி வாரியம், அமைத்தல் விவரம் .. | 487 |
| வீடுகள், வேங்கைவாடி, (தெ. மா.) .. .. | 155—156 |
| **அழகர்சாமி, திரு. சா.—** | |
| பொருள் போக்குவரத்துக் கழகம், பணியாற்றுவோர். .. .. .. | 156—157 |
| வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ. வி.) .. | 174—186 |




அ—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **அறிக்கை அளித்தல்—** | |
| மின் உற்பத்தி மீது மந்திய அரசு விதித்துள்ள ஆயத் தீர்வைக்கு எதிர்ப்பு .. .. | 500—503 |
| **அன்பழகன், திரு. க.—** | |
| வரவு-செலவு திட்டம், 1978-79 (பொ. வி.) .. | 64—83 |
| வாக்கெடுப்பு—கல்வி .. .. .. | 679—706 |
| **அன்பழகன், திரு. தி.—** | |
| வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு கல்வி .. .. .. .. | 571—574 |


## ஆ


| | |
|---|---|
| **ஆசிரியர்கள்—** | |
| கல்லூரி தேர்வுகள் மேற்பார்வையிடும் பணியைப் புறக்கணிப்பதென எடுத்துள்ள முடிவு குறித்து (க.ஈ.) .. .. .. .. | 504—507 |
| கலைக்கல்லூரி, தற்காலிக வெளியேற்றப்பெற்றவர்கள் உண்ணுவிரதம் குறித்து (க.ஈ.) .. | 62—64 |
| தமிழ் பயிற்றுநர்கள் .. .. .. | 12—15 |
| **ஆறுமுகம் திரு. எச். ஜி.—** | |
| உறுப்பினர்கள் பழைய விடுதியில் நடந்த திருட்டு குறித்து (த.கோ.) .. .. .. | 626 |
| **ஆறுமுகம் திரு. த.—** | |
| ஏலாக்குறிச்சி வைப்பூர் சாலை (திருச்சி மாவட்டம்), அரசு மேற்கொள்வது குறித்து .. .. | 484 |
| **ஆறுமுகம் திரு. மு.—** | |
| வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு கல்வி .. .. .. .. | 335 |
| **ஆனூர் ஜெகதீசன் திரு.—** | |
| வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு; கல்வி. .. .. .. .. | 557—562 |

இ

பக்கங்கள்

இரங்கல் குறிப்பு—
நடேச முதலியார், திரு. எஸ். வி — 133

இராசமாணிக்கம் திரு. இரா.—
விடுதலையானது பற்றி பேரவைத் தலைவரின் அறிவிப்பு குறித்து (ஓ.பி.) .. .. 41, 45—46

இராசு திரு. செ. ம.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு; கல்வி .. .. .. .. 542—54[illegible]

இராணுவத்தினர்—
பொருள் போக்குவரத்துக் கழகம், பணியாற்றுவோர் .. .. .. .. 156—157

இராதா திரு. எஸ். ஆக்.—
வரவு—செலவு திட்டம், 1978-79 (பொ.வி.) .. 83—93

இராமசந்திரா ரெட்டி திரு. என்.—
பால்வளத் திட்டம், ஓசூரில் தொடங்குதல் .. 265

இராமச்சந்திரன் திரு. எம். ஜி.—
வரவு-செலவுத் திட்டம் 1978-79 (பொ.வி.) .. 326—328
.. 329, 330
.. 331, 332,
.. 333

இராமச்சந்திரன் திரு. ச.—
மின் உற்பத்தி மீது மத்திய அரசு விதித்துள்ள ஆயத்தீர்வைக்கு எதிர்ப்பு (அ.) .. 500—503

இராமச்சந்திரன் செஞ்சி. ந. திரு.—
பொருள் போக்குவரத்துக் கழகம், பணியாற்றுவோர் .. .. .. .. 156—157
முன்சீப் நீதி மன்றம், செஞ்சி, நிறுவுதல் .. 486

இராமசாமி திரு. எஸ். ஜே.—
உணவு தானியங்கள், மாநிலங்களிடையே கொண்டு செல்ல கட்டுப்பாடு .. .. .. 459—462



இ—தொடர்ச்சி.

பக்கங்கள்

இராமசாமி திரு. எஸ். ஜே.—தொடர்ச்சி.
குடிநீர் வழங்கல்; மேல்விஷாரம், கீழ்விஷாரம், வடாற்காடு மாவட்டம் .. .. 153—154
பள்ளிவாசல், ஆவலூர் கிராமம், முத்தவல்லியால் மோசடி .. .. .. .. 621—623
வீடுகள், அரிசனங்களுக்கு, மின்னல் கிராமம் .. 609—611

இராமசாமி திரு. த.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ. வி.) .. 198

இராமலிங்கம் திரு. செ.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு; கல்வி .. .. .. .. 529—533

இராஜா முகமது திரு. கே.—
கைத்தறி நூல்பாவு பசை போடும் தொழிலாளர்கள், திருச்சி மாவட்டம், வேலை நிறுத்தம் (க.ஈ.அ.) .. 172—173, 174

இராஜாராம் நாயுடு திரு. தெ. இரா.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, (பொ. வி.) .. 93—95

இராஜாராம் ரெட்டி திரு. டி. ஆர்.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு; கல்வி .. .. .. 649—652

இளங்கோவன் திரு. கோ.—
வரவு-செலவுத் திட்டம், 1978-1979— வாக்கெடுப்பு; கல்வி .. .. .. 336—344

இறைச்சிக்கூடம்—
புளியந்தோப்பு, சென்னை மாநகராட்சி, நவீனமாக்கல் .. .. .. 148

ஈ

ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் திரு. பி.—
கெனல் சூப்பிரிண்டெண்டெண்டுகள் சம்பளம் 135

ஈ—தொடர்ச்சி.


பக்கங்கள்

ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் திரு. பி.—தொடர்ச்சி.

கைத்தறி நூல்பாவு பசை போடும் தொழிலாளர்கள், திருச்சி மாவட்டம், வேலை நிறுத்தம், (க. ஈ.) .. .. .. 172

உ

உணவு தானியங்கள்—

நடமாட்டத் தடைகளை அகற்றல் .. .. 462—464

மாநிலங்களிடையே கொண்டு செல்ல கட்டுப்பாடு 459—462

உமாநாத் திரு. ரா.—

அரிசனங்கள்-வளப்பக்குடியில் (தஞ்சை மாவட்டம்) புறக்கணிக்கப்பட்டது குறித்து (க. ஈ.) .. 632—633, 635

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது (உ. பி.) 166—167

கல்லூரி ஆசிரியர்கள், தேர்வுகள் மேற்பார்வையிடும் பணியைப் புறக்கணிப்பதென எடுத்துள்ள முடிவு குறித்து (க. ஈ.) .. .. 504, 505

கலைக்கல்லூரி வெளியேற்றப் பெற்ற தற்காலிக ஆசிரியர்கள் உண்ணாவிரதம் குறித்து (க. ஈ.) 62—63, 64

கைத்தறி நூல்பாவு பசை போடும் தொழிலாளர்கள், திருச்சி மாவட்டம், வேலை நிறுத்தம் (க. ஈ.) .. .. .. 172, 173—174

கோல்டன் சினி, கோல்டன் பிலிம் ஆகிய ஸ்டுடியோக்கள் மூடியதால் வேலை இழந்த தொழிலாளர்கள் விவரம் .. .. 469—470

மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது குறித்து (ஒ. தீ.) .. .. 48—51

மீனவர்கள், கடலில் ஏற்பட்ட மோதலால், அயோத்தியாகுப்பத்தில் பதட்ட நிலை (க. ஈ.) 295

உரிமைப் பிரச்சினை—

பார்க்க—தலைவர், தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்




உ—தொடர்ச்சி.


பக்கங்கள்

உள்ளாட்சிகள்—

வீட்டுவரி உயர்வு, சிவகங்கை .. .. 491

கூத்தாநல்லூரில் காய்கறி அங்காடி .. .. 254—255

எ

எட்மண்ட் திரு. க. உரொ.—

கலைக்கல்லூரி வெளியேற்றப்பெற்ற தற்காலிக ஆசிரியர்கள் உண்ணாவிரதம் குறித்து (க.ஈ.அ.) 62—63, 64

பழவேற்காடு, கோட்டக்குப்பத்தில், மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரம் (க. ஈ. அ.) 294

மீனவர்கள், கடலில் ஏற்பட்ட மோதலால் அயோத்தியா குப்பத்தில் பதட்ட நிலை (க.ஈ.அ.) 294, 295, 296, 297, 299, 300

வரவு-செலவுத் திட்டம், 1978-79 (போ. வி.) 180

ஏ

ஏடுகள்—

பேரவை முன்வைக்கப்பெற்றவை .. .. 128—129, 240, 361, 577, 726

ஏகாம்பர ரெட்டி திரு. ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, (பொ. வி.) 119—121

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு, கல்வி .. .. .. 676—678

ஏரிகள்—பார்க்க நீர்ப்பாசனம்

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

கடன் வசூலில் கெடுபிடி, டாக்சி ஓட்டுநர் கூட்டுறவு சங்கங்கள், சிவகங்கை, மதுரை, பரமக்குடி, நாமக்கல் போடி போன்ற இடங்களில் 627—632

காவல் நிலையம், காரைக்குடி தெற்கு, ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப்படுவது குறித்து 168—172

ஒ—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.** | |
| மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது குறித்து .. .. | 47—60 |
| **ஒலிபரப்பு—** | |
| அண்ணு சொற்பொழிவுகள், ஒலிப்பதிவு செய்யப் பெற்றவை | 6—10 |
| **ஒழுங்குப் பிரச்சினைகள்—** | |
| கூவத்திலிருந்து வரும் நாற்றம் குறித்து .. | 494—495 |
| துணை வினவிற்கான விடை குறித்து .. .. | 43—45 |
| பார்வையாளர் மாடத்தில் ரகசிய போலீஸ் அதிகாரிகள் இருப்பது .. .. .. | 38—41, 42—43 |
| விடுதலையானது பற்றிய பேரவைத் தலைவரின் அறிவிப்பு குறித்து .. .. .. | 41, 45—46 |
| வினக்களுக்கான விடைகள் அச்சடித்து வழங்குவது குறித்து .. .. .. | 493—494 |


ஓ


| | |
|---|---|
| **ஓய்வூதியம்—** | |
| வயதான அனதைகள், விதவைகள் .. .. | 244—248 |


க


| | |
|---|---|
| **கட்டடம்—** | |
| 'ஊராட்சி இல்லம்' வேலூர், வசூல் .. .. | 253—254 |
| **கடல் அரிப்பு—** | |
| பட்டினப்பாக்கம் .. .. .. | 32 |
| **கண்ணன், திரு. ம.—** | |
| வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு, கல்வி .. .. .. | 509—512 |




க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கணேசன், திரு. எஸ்.—** | |
| இறால் வகைகள், சர்வே, .. .. .. | 136—140 |
| உயர்நீதிமன்றம் (சென்னை) பைசல் ஆகாதுள்ள கிரிமினல் சிவில் வழக்குகள்—விவரம் .. | 453—456 |
| சிப்காட் நிதியுதவியால் அமைக்கப்பெற்ற தொழில் பிரிவுகள் .. .. .. | 483, 579—583 |
| தகவல் நிலையங்கள், விவரம் .. .. | 252 |
| துறைமுகம், நாகப்பட்டினம், அபிவிருத்தி .. | 157—159 |
| பத்திரிகைகள் மீது நடவடிக்கை, 1976-ல், விவரங்கள் .. .. .. | 599—601 |
| வருவாய்த்துறை, சீரமைப்பு .. .. | 241—243 |
| விவசாயிகள் பிரச்னை குறித்து ஆணைக் குழு | 617—621 |
| **கந்தசாமி, திரு. கே.—** | |
| கூட்டுறவு, சட்டங்கள் மாற்றியமைப்பது, கே. சந்தானம் கமிட்டியின் அறிக்கை குறித்து. | 588—592 |
| திருப்பூர்-அக்கணம்பாளையம் வழித்தடத்தில் பேருந்து விடுதல் .. .. .. | 262 |
| பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப்பாசனம், பல்லடத்திற்கு விஸ்தரிப்பு .. .. | 248—249 |
| வரவு-செலவுத் திட்டம், 1978-79-வாக்கெடுப்பு கல்வி .. .. .. | 664—668 |
| **கரியமாணிக்க அம்பலம், திரு. கரு. ராம.—** | |
| குடிநீர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை, மதுரையில் .. .. .. | 605 |
| **கருணாநிதி, திரு. தாழை. மு.—** | |
| மேம்பாலம், இரயில்வே மேம்பாலம், திருவாரூர், கட்டப்படுவதில் தாமதம் குறித்து நடவடிக்கை | 615 |

பக்கங்கள்

**கருணாநிதி, திரு. மு.—**

நிதிநிலை அறிக்கைக்கு முன் ஆளுநர் உரை இல்லாதது குறித்து (உ. பி.) .. .. 282—283

மின் உற்பத்தி மீது மத்திய அரசு விதித்துள்ள ஆயத்தீர்வைக்கு எதிர்ப்பு (அ.) .. .. 503

முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினா எடுத்துக்கொள்ளாதது குறித்து (த. கோ.) 492

வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ. வி.) 215—240, 313, 320, 323

வினாக்களுக்கு விடைகள் அச்சடித்து வழங்குவது குறித்து (ஒ. பி.) .. .. .. 493—494

**கல்லூரிகள்—**

தமிழ் பயிற்றுனர்கள் .. .. .. 12—15

வெளியேற்றப் பெற்ற தற்காலிக ஆசிரியர்கள் உண்ணா விரதம் குறித்து (க. ஈ.) .. .. 62—64

**கல்வி—**

முதன்மை, அலுவலகம், புதுக்கோட்டை .. 16

**கவன ஈர்ப்புகள்—**

அரிசன்ங்கள் வளப்பக்குடி (தஞ்சை மாவட்டம்) புறக்கணிக்கப்பட்டது குறித்து .. 632—635

கல்லூரி ஆசிரியர்கள், தேர்வுகள் மேற்பார்வையிடும் பணியைப் புறக்கணிப்பதென எடுத்துள்ள முடிவு குறித்து .. .. 504—507

கலைக்கல்லூரி, வெளியேற்றப்பெற்ற தற்காலிக ஆசிரியர்கள் உண்ணாவிரதம் குறித்து .. 62—64

கைத்தறி நூல்பாவு பசை போடும் தொழிலாளர்கள், திருச்சி மாவட்டம், வேலை நிறுத்தம் 172—174

பழவேற்காடு, கோட்டைக் குப்பத்தில் மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரம் .. .. 294

'பெரிடோனியா' நோய் (தேனி தொகுதியில்) பருத்திப் பயிர்களுக்கு ஏற்பட்டது குறித்து .. 635—637







பக்கங்கள்

**கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.**

மீனவர்கள், கடலில் ஏற்பட்ட மோதலால், அயோத்தியாக் குப்பத்தில் பதட்ட நிலை .. 295—301

**கழகங்கள்—**

பொருள் போக்குவரத்து, ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் .. .. 616—617

**கிட்டப்பா, திரு. என்.—**

அண்ணா சொற்பொழிவுகள் ஒலிப்பதிவு செய்யப் பெற்றவை .. ... 6—10

உயர்நீதி மன்றம், மதுரையில் கிளை .. .. 135

உயர்நீதி மன்றம் (சென்னை), பத்தாண்டுகளுக்கு மேலாக பைசல் ஆகாத வழக்குகள், விவரம் .. 452-453

கோழிவளர்ப்பு, பண்ணை நிறுவ அரசு உதவி 263

தரையடித் தண்ணீர் வேளாண்மைக்குப் பயன்படுத்துதல் (தஞ்சை மாவட்டம்) .. 1—4

தீண்டாமை, கைது செய்யப்பட்டோர் விவரம் 475—476

நிர்வாகம், தமிழ்நாடு மாளிகை, புதுடில்லி .. 488

பாலங்கள், உடையூர் பருத்திக்குடியை இணைக்க (மாயூரம் ஒன்றியம்) .. 603—605

பொற்கொல்லர்கள் பிள்ளைகளுக்கு பயிற்சி வகுப்புகள் .. 257

மத்திய சிறைச்சாலைகள், பெண்களுக்கு .. 136

வரவு-செலவுத் திட்டம், 1978-79— வாக்கெடுப்பு கல்வி .. 335

**கிருஷ்ணன், திரு. ரா.—**

கைத்தறி நூல்பாவு பசை போடும் தொழிலாளர்கள், திருச்சி மாவட்டம், வேலை நிறுத்தம் (க. ஈ.) .. .. .. 172

வரவு-செலவுத் திட்டம், 1978-79 - வாக்கெடுப்பு: கல்வி. .. 657—66

## க—தொடர்ச்சி.


பக்கங்கள்

**குடிநீர்—**
- சிதம்பரத்துக்கு கொள்ளிடம் நீர் — 255—257
- தெருக்களுக்கு குழாய்கள் இணைப்பு, மன்னார்குடி — 255
- பற்றாக் குறையைப் போக்க நடவடிக்கை, குடியாத்தம் நகரில் — 606—608
- பற்றாக் குறையைப் போக்க நடவடிக்கை, மதுரையில் — 605
- வடிகால் வாரியத் திட்டங்கள், கோவை — 485, 584—585
- வழுங்கல், மேல்விஷாரம், கீழ்விஷாரம், வடாற்காடு மாவட்டம் — 153—154

**குளங்கள் - பார்க்க நீர்ப்பாசனம்**

**குழந்தைவேலு, திரு. ப.—**
- பயிர் நோய்- 'பெரிடோனியா' நோய் பருத்திப் பயிர்களுக்கு-(தேனி தொகுதியில்) (க.ஈ.அ) — 635—637

**கூட்டுறவு—**
- கடன் வசூலில் கெடுபிடி, டாக்ஸி ஓட்டுநர் கூட்டுறவு சங்கங்கள் (சிவகங்கை, மதுரை, பரமக்குடி, நாமக்கல், போடி போன்ற இடங்களில்) (ஒ.தீ) — 627—632
- சங்கங்களின் தலைவர்கள், அங்கத்தினர்கள் மீதான ஊழல்கள், கமிட்டியின் அறிக்கை நிலை — 592—599
- சட்டங்கள் மாற்றியமைப்பது, கே. சந்தானம் கமிட்டியின் அறிக்கை குறித்து. — 588—592
- நூற்பு ஆலை, அரியூர், விரிவுபடுத்தும் திட்டம் — 623—625
- வத்தலகுண்டு, பழம் பதனிடும் தொழிற்சாலை — 34—36

**கோதண்டராமன், திரு. வி. கே.—**
- அரிசன வீட்டுவசதி வாரியம், விவரம் — 487
- உதவித் தொகை, வயதான அனாதைகள் விதவைகள் — 244
- உயர்நீதிமன்றம் (சென்னை), பைசல் ஆகாதுள்ள கிரிமினல், சிவில் வழக்குகள், விவரம் — 453—456




## க—தொடர்ச்சி.


பக்கங்கள்.

**கோதண்டராமன், திரு. வி. கே.—தொடர்ச்சி**
- ஏரி ஆழப்படுத்தல், பேரணாம்பட்டு வடஆற்காடு மாவட்டம் — 468
- குடிநீர், பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை, குடியாத்தம் நகரில் — 606—608
- கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், அங்கத்தினர்கள் மீதான ஊழல்கள், கமிட்டியின் அறிக்கை நிலை — 592—599
- கூட்டுறவு, சட்டங்கள் மாற்றியமைப்பது—கே. சந்தானம் கமிட்டியின் அறிக்கை குறித்து — 588—592
- கொத்தடிமை ஒழிப்பு — 470—471
- பூச்சிக் கொல்லி மருந்து கொள்முதல், 1970-ம் ஆண்டுமுதல் விவரம் — 481—482

**கோழி வளர்ப்பு—**
- பண்ணைகள் நிறுவ அரசு உதவி — 263—264

**கைத்தறி—**
- ரெடிமேட் ஆடைகள் ஏற்றுமதி விவரம் — 484
- நூல்பாவு பசை போடும் தொழிலாளர்கள், திருச்சி மாவட்டம், வேலை நிறுத்தம் (க.ஈ.) — 172—174

### ச

**சங்கரய்யா, திரு. என்.—**
- மின் உற்பத்தி மீது மத்திய அரசு விதித்துள்ள ஆயத்தீர்வைக்கு எதிர்ப்பு (அறி) — 503
- வரவு-செலவுத்திட்டம், 1978-79 (பொ. வி,) — 98—115

**சட்டம்-ஒழுங்கு—**
- உறுப்பினர்கள் பழைய விடுதியில் நடந்த திருட்டு குறித்து (த.கோ) — 626
- பழவேற்காடு, கோட்டைக்குப்பத்தில் மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரம் (க.ஈ) — 294
- மீனவர்கள், கடலில் ஏற்பட்ட மோதலால் அயோத்தியா குப்பத்தில் பதட்டநிலை (க.ஈ) — 295—301

ச—தொடர்ச்சி


பக்கங்கள்

**சட்ட முன்வடிவுகள்—**

- மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு; 1978 ஆளுநர் இசைவு அறிமுகம் .. .. 508

**சண்முகம், திரு. ஆர்.—**

- வரவு செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு—கல்வி .. .. .. 647—649

**சண்முகம், திரு. கூத்தக்குடி, ச.—**

- புயல், வெள்ளம் பாதிப்பு, விவசாயிகளுக்குச் சலுகை (த.கோ) .. .. 499—500

**சந்திரன், திரு. ப.—**

- வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: கல்வி .. .. .. 336, 553—556

**சந்திரன் ஜெயபால், திரு. இரா—**

- வரவுசெலவுத்திட்டம், 1978-79 வாக்கெடுப்பு; கல்வி .. .. 545—549

**சமரசம், டாக்டர். கே.—**

- அவுட்-டோர் விளையாட்டு அரங்கம், தர்மபுரி மாவட்டம் .. .. 147—148

**சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.—**

- வரவு செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: கல்வி .. .. 335, 348—352

**சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.—**

- இறால், தவளை ஏற்றுமதிக்கு விற்பனைவரி விலக்கு .. .. .. 243
- நூலகங்கள், மதுரை மாநகராட்சி வாங்கும் பத்திரிகைகள் விவரம் .. .. .. 488—489
- பட்டினப்பாக்கம், கடல் அரிப்பு .. 32
- புறம்போக்கில் ஆக்கிரமிப்பு, அனுப்பானடி, மதுரை .. 468




ச—தொடர்ச்சி.


பக்கங்கள்

**சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.—தொடர்ச்சி.**

- மின்வாரியத் தலைமைப் பொறியாளர்கள், விவரம் 250
- விளையாட்டுத் திடல், செயிண்ட் பேட்'ஸ் உயர்நிலைப் பள்ளி, சென்னை. .. 146
- வினாக்களுக்கான விடைகள், அச்சடித்து வழங்குவது குறித்து (ஒ. பி.) .. 493—494

**சாலைகள்—**

- ஏலாக்குறிச்சி-வைப்பூர் சாலை (திருச்சி மாவட்டம்) அரசு மேற்கொள்வது குறித்து .. 484
- சிதம்பரம்-பிச்சாவரம், மேம்பாட்டுத் திட்டம். .. 261—262
- சென்னையில் அண்ணா சாலைக்கு இணையாக புதியது அமைத்தல் .. 30

**சிவசாமி, திரு. செ.—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு: கல்வி .. 335, 521—526

**சிறைச்சாலைகள்—**

- பெண்களுக்கு .. 136

**சின்னராசு, திரு. க. இரா.—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: கல்வி. .. 549—553

**சீனிவாச ரெட்டியார், திரு. பொ. எ.—**

- ஏரி, நல்லூர் மராமத்து, பாதியில் நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து (தோகைமலை பிர்க்கா). 587

**சுகாதாரம்—**

- ஆரம்ப சுகாதார நிலையங்கள் .. 483

**சுந்தரராஜ், திரு. நா.—**

- முதன்மைக் கல்வி அலுவலகம், புதுக்கோட்டை.. 160
- விற்பனைக்குழு, புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைத்தல் .. 269

ச—தொடர்ச்சி:


பக்கங்கள்

சுப்ரவேலு, திரு. கா.—

உயர் தொடக்கப்பள்ளி, கொண்டல், சீர்காழி வட்டம் .. 155

நீதிமன்றங்கள், தமிழில் தீர்ப்பு .. 457—458

சுப்ரமணியம், திரு. ஒ.—

கடன் வசூல், டாக்ஸி ஓட்டுநர் கூட்டுறவு சங்கங்கள் கெடுபிடி குறித்து (சிவகங்கை, மதுரை, பரமக்குடி, நாமக்கல், போடி போன்ற இடங்களில்) (ஒ. தீ.) .. 629

வீட்டுவரி உயர்வு, சிவகங்கை .. 491

சுப்பிரமணியன், திரு. சின்னசேலம். மா.—

ஏரி, தகரை கிராமம், சின்னசேலம் ஒன்றியம், கட்டும்பணி முடிவுறாமல் இருப்பது .. 588

தமிழ் பயிற்றுநர்கள், நீக்கியது குறித்து .. 12—15

மண்வள ஆராய்ச்சி (தென் ஆற்காடு மாவட்டம்) செய்தல் 265

வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ. வி.) .. 115—118

சுப்பிரமணியன். திரு. வ. மூ.—

உயர்நீதி மன்றம், மதுரையில் கிளை .. 135

சுப்பு, திரு. க.—

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை, விவாதம் (த.கோ.) 500

கடன் வசூலில் கெடுபிடி, டாக்ஸி ஓட்டுநர் கூட்டுறவு சங்கங்கள், (சிவகங்கை, மதுரை, பரமக்குடி, நாமக்கல், போடி போன்ற இடங்களில்) (ஒ. தீ.) .. 627—629

மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது குறித்து (ஒ. தீ.) .. 51—53

சுப்புலட்சுமி, திருமதி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: கல்வி .. 533—538

சுரங்கப்பாதை—பார்க்க பாலங்கள்




ச—தொடர்ச்சி:


பக்கங்கள்

சுற்றுலா—

குற்றாலம், மையமாக்குதல் .. 11—12

தகவல் நிலையங்கள், விவரம் .. 252—253

செல்வராசன், திரு. அ.—

உயர்நீதிமன்றம் (சென்னை) பைசல் ஆகாதுள்ள கிரிமினல், சிவில் வழக்குகள்—விவரம் .. 453—456

சுரங்கப்பாதை, சென்னை .. 148—149

மின்சார வாரியம், வாடகைக் கட்டடங்களில் அலுவலகம் .. 133—134

செல்வராஜ், திரு. மு.—

உணவு தானியங்கள், மாநிலங்களிடையே கொண்டு செல்ல கட்டுப்பாடு .. 459—461

சௌந்தரபாண்டியன், திரு. பெ.—

அரிசனங்கள் - புறக்கணிக்கப்பட்டது குறித்து, தஞ்சை மாவட்டம் வனப்பக்குடியில் (க.ஈ.அ.) .. 632—633 634—635

சௌந்தரராசன், திரு. கே.—

வரவு—செலவுத் திட்டம், 1978—79 வாக்கெடுப்பு—கல்வி .. 657


த


தகவல் கோரல்—

அறிவிப்புக் கொடுக்கப் பெற்ற தீர்மானங்கள் குறித்து .. 60—62

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை,—அதிகாரிகள்மீது நடவடிக்கை .. 163

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை விவாதம் குறித்து 500

உறுப்பினர்கள் பழைய விடுதியில் நடந்த திருட்டு குறித்து .. 626

உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் 164—165

சமூக நலத்துறை அமைச்சருக்கு பதிலாக வேறு அமைச்சர் கேள்விகளுக்கு பதிலளித்தது குறித்து. 270

பக்கங்கள்

துகவல் கோரல்—தொடர்ச்சி.

புயல், வெள்ளம் பாதிப்பு, விவசாயிகளுக்குச் சலுகை 499—500

முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினு எடுத்துக் கொள்ளாதது குறித்து .. 492

தலைவர் :

அறிவிப்புகள்—

பேரவை அலுவல் குறித்து .. 495—499

பேரவை அலுவல் வரிசை மாற்றம் குறித்து .. 724—725

மானியக் கோரிக்கைகளை முன்மொழிய, ஆளுநரிடமிருந்து செய்தி .. 334

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 (ஆளுநர் இசைவு) .. 508

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—

அவையில் கொண்டுவந்து காட்டப்பெறும் பொருட்கள்

அவையில் எப்பொருளைக் காண்பிக்கிறபோதும் தலைவரிடம் முதலில் காண்பித்து. அனுமதி பெற்றுத்தான் காண்பிக்க வேண்டும் .. 659

உரிமைப் பிரச்னை—

ஆளுநர் உரை இல்லாதது குறித்து—

''1978-79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவையில் வைப்பதற்கு முன் ஆளுநர் உரை இருக்க வேண்டியது அவசியம் என்றும், அது இல்லாததால் அவை உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என்றும்'', சில உறுப்பினர்கள், 1978 மார்ச்சு 2 ஆம் நாள் உரிமைப் பிரச்சினை ஒன்றினை எழுப்பினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க் கட்சிகளின் தலைவர்கள், அவை முன்னவர் ஆகியோரின் கருத்துக்களை கேட்டறிந்தபின் தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :—





பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்னை—தொடர்ச்சி.

ஆளுநர் உரை இல்லாதது குறித்து—தொடர்ச்சி.

''மே பாராளுமன்ற விதிமுறைகளின் படி, 'அவை உரிமை' என்பது, ''ஒரு செய்கையோ அல்லது செய்கை இன்மையோ பாராளுமன்றத்தின் நடைமுறைகளை அல்லது அது இயங்குவதற்கு தடையாகவோ அல்லது வேறு விதமாகவோ தடங்கல்களை விளைவிப்பதாகவோ அல்லது அவை உறுப்பினரோ அல்லது அவையின் அலுவலர்களோ தங்களது பணியை ஆற்றவொண்ணுது தடுத்து அல்லது அதற்கு ஊறு விளைவிக்கும் செயல் எதுவாக இருப்பினும், செயல் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது எந்த விதமாகவோ இருப்பினும், அத்தகைய செயல்கள் எல்லாமே அவையை அவமதிக்கும் செயல்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு அவை உரிமையை பாதிப்பது'' என்று கூறப்படுகிறது.

ஆளுநர் உரை என்பது அவையால் நிர்ணயிக்கப்பட்ட முறைகளின் கீழ் நிகழ்த்தப்படுவது அல்ல. அது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 176 (1)-வது பிரிவின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள ஒன்ருகும். அப்பிரிவில் பொதுத் தேர்தலுக்குப் பின் கூட்டப்படும் முதல் கூட்டத்திலும், ஆண்டு துவக்கத்தில் கூட்டப்படும் முதல் கூட்டத் தொடரின் ஆரம்பத்திலும் ஆளுநர், அவை கூட்டப்பெற்றதற்கான காரணங்களை விளக்கி உரை நிகழ்த்த வேண்டுமென்று உள்ளது. ஆண்டு என்ருல் நடைமுறையில் இருக்கும் ஆங்கில முறைப்படி வகுக்கப்பட்ட ஆண்டு ஆகும்.

எனவே, இப்போது நடப்பது 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28-ம் நாள் தொடங்கப்பெற்ற கூட்டத்தொடரின் தொடர்ச்சிதானே ஒழிய, புதிய கூட்டத்தொடர் அல்ல; 1978-ஆம்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்னை—தொடர்ச்சி.

ஆளுநர் உரை இல்லாதது குறித்து—தொடர்ச்சி.

ஆண்டின் முதல் கூட்டத்தொடர் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அப்படி புதிய கூட்டத்தொடராக ஆரம்பித்தால்தான் அரசமைப்புச் சட்டத்தின் 176 (1) பிரிவின்படி ஆளுநர் உரை அவசியம். 1977-ஆம் ஆண்டின் கூட்டத் தொடரின் தொடர்ச்சியாக நாம் இப்போது கூடி இருப்பதால் ஆளுநர் உரையுடன் இக்கூட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற வாதம் தவறானது.

எனவே, உறுப்பினர்களுக்கு விவாதிப்பதற்குள்ள எந்த உரிமையையும் மறுக்கும் நோக்கம் இல்லை என்பதாலும், அரசியல் சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டே பேரவை கூட்டப்பட்டது என்பதாலும் இதில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.'' 271—29

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்மீது—

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்மீது 1978, பிப்ரவரி 23—ஆம் நாள் அவையில் எழுப்பப்பெற்ற உரிமை மீறல் பிரச்சினைமீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:—

''அவையையோ அல்லது அவை உறுப்பினர்களையோ மக்கள் மத்தியில் எந்தவிதமான ஆதாரமும் இன்றி களங்கம் கற்பிக்கும் வகையில் எழுதுவது வன்மையாகக் கண்டிக்க வேண்டியதுதான். சம்பந்தப்பட்ட உறுப்பினர் மறுப்பை பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. பத்திரிகையின் துணை ஆசிரியர் வருத்தம் தெரிவித்து இனிமேல் நிகழாதவாறு பார்த்துக் கொள்வதாகவும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற உள்நோக்கம் எதுவுமில்லையென்றும் விளக்கம் கூறியுள்ளதால் இவ்வாறு இனி







தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்மீது—தொடர்ச்சி.

நடைபெறுவண்ணம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையும், மற்ற பத்திரிகைகளும் கவனிப்பாக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்து, மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்ற எனது முடிவை தெரிவித்துக் கொள்கிறேன்.'' .. 46—47

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்மீது அவையில் எழுப்பப்பெற்ற உரிமைமீறல் பிரச்சினைமீது, தலைவர் அளித்த தீர்ப்பை திரும்ப அப்பத்திரிகை வெளியிடும்போது ''பிழைக்கு வருத்தம் போடவும் இல்லை; இனிமேல் இதுபோல் போடமாட்டோம் என்பதையும் போடவில்லை; தலைவர் அளித்த எச்சரிக்கையையும் போடவில்லை; இது வேண்டுமென்றே அவை உரிமையை மீறிய செயலாகும்'' என 1978, மார்ச் 1 ஆம் நாள் ஓர் உறுப்பினர் உரிமைமீறல் பிரச்சினையை எழுப்பினார்.

'இது குறித்து பின்னால் தீர்ப்பளிப்பதாக தலைவர் குறிப்புரைத்தார். * .. 166—167

'குங்குமம்' 'முரசொலி' நாளேடுகள் மீது—

'குங்குமம்' 'முரசொலி' நாளேடுகள்மீது 1978 பிப்ரவரி 25 ஆம் நாள் அவையில் எழுப்பப் பெற்ற உரிமை மீறல் பிரச்சினைமீது தலைவர் அளித்த தீர்ப்பாவது:—

''ஆசிரியர்களை விளக்கம் கேட்டதற்கு 'குங்குமம்' ஆசிரியர் இவ்வாறு நேர்ந்ததற்காக மிகவும் வருந்துவதாகவும், இனி எச்சரிக்கையோடு இருந்து இம்மாதிரி நேராவண்ணம் பார்த்துக் கொள்வதாகவும் உறுதி அளித்துள்ளார்.

* 1978, மார்ச் 6 ஆம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

பக்கங்கள்

**தலைவர்—தொடர்ச்சி.**

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.**

உரிமைப் பிரச்னை—தொடர்ச்சி.

ஆளுநர் உரை இல்லாதது குறித்து—தொடர்ச்சி.

'குங்குமம்' 'முரசொலி' நாளேடுகள் மீது—தொடர்ச்சி.

*எனவே, அதை ஏற்று, இதில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.*

*'முரசொலி' ஆசிரியர் வெளியிட்டுள்ள கார்ட்டூன் ஒரு நகைச்சுவை சித்திரமே தவிர, இச்சட்ட மன்றத்தின் எந்த உறுப்பினரையும் குறிக்கவில்லை என்றும், அம்மாதிரியான நோக்கம் வாசகர்களிடத்தில் தோன்றும் கருத்தில் கார்ட்டூன் போடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இந்தக் கார்ட்டூனில் எந்த அம்சமும் சட்ட மன்ற நடவடிக்கையைக் குறிப்பது போல் இல்லை என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். எனவே, நகைச்சுவை உணர்வோடு போடப்பட்டது என்று ஆசிரியர் கூறியுள்ளதால் இந்த அவை தனது கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு இதில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.'' .. 165—166*

ஒத்திவைப்புத் தீர்மானம்—

காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்து கொண்டதாக கூறப் பெறுவது குறித்து:

*நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. 168—172*

டாக்சி ஓட்டுநர் சங்கங்கள், கடனை வசூலிப்பதில் காட்டும் கெடுபிடி குறித்து.

*போக்குவரத்து அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்னர் இசைவு மறுக்கப் பெற்றது .. 632*





பக்கங்கள்

**தலைவர்—தொடர்ச்சி.**

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.**

ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

மொழிப் பிரச்சினை—

*மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகள், இந்தியில் நடத்தப் போவதாக மத்திய அமைச்சரின் பேச்சு:—*

*நிதியமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. .. 47, 48, 60*

ஒழுங்குப் பிரச்சினைகள்—

*பார்வையாளர் மாடத்தில் சி.ஐ.டி-க்களை அனுமதிப்பது குறித்து—*

*பார்வையாளர் மாடத்தில் சி.ஐ.டி-க்கள் அமர்ந்திருப்பதாகக் கூறி, தலைவரின் அனுமதியைப் பெற்று அவர்கள் வந்திருக்கிறார்களா என்று வினவி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது அவர்கள் செக்ரடேரியேட் ஸ்டாப், வாட்ச் அண்ட் வார்டு ஸ்டாப்— என்றும் தலைவர் கூறி பின்வருமாறு குறிப்புரைத்தார்:*

*''லாபியானாலும் சரி, காலரியானாலும் சரி, சி.ஐ.டி.-க்கள் என்ற முறையில் அனுமதி பெற்று வரக்கூடாது. ஆனால் அவர்கள் நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டுமென்று அனுமதி கேட்டு வரலாம். அவர்களும் மனிதர்கள்தான் அவர்களும் நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு உரிமை இருக்கிறது. ஒவ்வொருவரும் சி. ஐ. டியா என்று தலைவரோ உறுப்பினர்களோ பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சி.ஐ.டி. க்கள் அதிகார பூர்வமான முறையிலே வரக்கூடாது'' 39—43*

வினா நேரத்தில் எழுப்ப முடியாது—

*கேள்வி நேரத்தில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பக் கூடாது. .. 462*

பக்கம்

தலைவர்— தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்— தொடர்ச்சி.

குற்றச்சாட்டுகள்—

மொத்தமாகச் சொல்லாமல் குறிப்பிட்ட இடத்தில் எங்காவது இருந்தால் தெரிவிக்கலாம். 511

தீர்ப்பு குறித்து—

உறுப்பினர்கள்தலைவரை கட்டுப்படுத்தவோ அல்லது தீர்ப்பு இப்படி இருக்கவேண்டு மென்று யோசனை கூறவோ முடியாது. 292—293

நேரம் ஒதுக்கல்—

அதிகமான உறுப்பினர்கள் பேசவேண்டியிருப்பதால் பேசும் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட தொகுதி பிரச்சினையை மட்டும் பேசலாம். 533

பேச்சை முடித்துக் கொள்ளுதல்—

ஓர் உறுப்பினர் தம் பேச்சை குறிப்பிட்ட நேரத்தில் முடித்துக் கொள்ளவேண்டும். 571

பேசும் முறை—

உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசக்கூடாது. 282

தலைவர் நின்றுகொண்டிருக்கும் போது உறுப்பினர்களும் எழுந்து நின்று பேசக் கூடாது. 39

தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது உறுப்பினர் பேசிக் கொண்டிருப்பது உறுப்பினர் பெற்ற அனுபவத்திற்கு நல்லதல்ல. இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி அவையின் மரபைக் காப்பது. 594



பக்கம்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி

பேசும் முறை—தொடர்ச்சி

வரவு செலவுத்திட்ட பொதுவிவாதத்திற்கு நிதி அமைச்சர் பதிலளித்தவுடன் ஒவ்வொருவரும் விளக்கம் கேட்கமுற்பட்டபோது தலைவர் அளித்த குறிபபுரையாவது:

"பொது விவாதத்தின் உறுப்பினர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு குறைபாட்டுக்கும் அமைச்சர் பதில் சொல்ல நேரமும் இல்லை; நினைவும் இருக்காது. அதனால் அந்தந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்." 331

வாக்கெடுப்பின்போது பேசமுடியாது—

மானியக் கோரிக்கையின் மீது உறுப்பினர்கள் பேசி அமைச்சரும் பதில் சொல்லி முடித்துவிட்ட பிறகு வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் உறுப்பினர்மீண்டும் பேசுவதற்கோ கேள்வி கேட்பதற்கோ உரிமை கிடையாது. 723, 724

வினாக்கள் விடைகள்—

துணை வினாக்கள்—

குற்றச்சாட்டு—

ஓர் உறுப்பினர் தனிப்பட்ட நபரின் பெயரைச் சொல்லி துணைவினாவில் குற்றஞ்சாட்டியபோது தலைவர் அக் கேள்வியை நீக்கம் செய்து, கீழ்க் கண்டவாறு தீர்ப்புரைத்தார்:

"ஒரு தனிப்பட்ட நபரின் பெயரைச் சொல்லிக் கேட்பது சரியல்ல. இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை". 593—594

கேட்கும் வாய்ப்பு—

"எல்லோரும் துணைக் கேள்வி கேட்க வேண்டுமென்றுவிரும்பினால்முடியாது. பரவலாக எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும்." 26

த—தொடர்ச்சி

பக்கங்கள்


**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி,

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

துணை வினாக்கள்—தொடர்ச்சி.

கேட்கும் வாய்ப்பு—தொடர்ச்சி.

ஒரு துணைவினா கேட்க தமக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று ஓர் உறுப்பினர் வற்புறுத்தியபோது, அவ் உறுப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப் பெறாவிட்டாலும் அவர் சார்ந்திருக்கின்ற கட்சிக்கு வாய்ப்பு அளிக்கப் பெற்றிருக்கிறது என்றும் துணைவினா கேட்க அனுமதி கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று உறுப்பினர் வற்புறுத்த முடியாது என்றும் தீர்ப்புரைத்த தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:—

"ஓர் உறுப்பினருக்கு எல்லாக் கேள்விகளிலும் துணைவினா கேட்க வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று இல்லை. இருக்கின்ற நேரத்தையும் பொருளையும்பொறுத்து, அதற்கேற்றவாறுதான் சந்தர்ப்பம் தரமுடியும்." 27

முன் வரிசையில் இருக்கும் ஓர் உறுப்பினர் துணைவினா கேட்க வேண்டுமென்று அடுத்த கேள்விக்கு தலைவர் சென்ற பிறகும் கூட—வற்புறுத்திய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:—

"முன்வரிசையில் இருக்கும் உறுப்பினர் கருதுவது போல் அவர் எழுந்திருக்கும் போது எல்லாம் எல்லாக் கேள்விகளுக்கும் அவர் அழைக்கப் பெற வேண்டுமென்பது கட்டாயமில்லை." 623

"முன் வரிசையில் இருப்பவர்கள் மற்ற உறுப்பினர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்." 625




த—தொடர்ச்சி

பக்கங்கள்


**தலைவர்—தொடர்ச்சி**

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி.

துணைவினாக்கள்—தொடர்ச்சி

சுருக்கமாக இருத்தல்

துணைவினாக்கள் போடுகின்ற உறுப்பினர்களும் அவைகளுக்குப் பதில் சொல்கின்ற அமைச்சர்களும்சுருக்கமாகச் சொன்னால் நலமாக இருக்கும். 464

தொடர்புடைமை—

சம்பந்தப்பட்ட விஷயம் பற்றிக் கேட்க வேண்டும். 609

மூலக்கேள்வியில் கேட்கப் பெற்றுள்ள பகுதியைப் பற்றியல்லாமல் வேறு பகுதியைப்பற்றி துணைவினாக்கள் எழுப்பப் பெறின் அதற்கானபதில் அமைச்சரிடம் இருக்காது. அதனால் அமைச்சர் அத் துணைவினாவிற்குப் பதில் சொல்ல இயலாது. 450

பொது—

அமைச்சரிடம் தகவல் இருக்கும்படியான துணை வினாக்களைக் கேட்க வேண்டும். 621

ஒரு கேள்விக்கு 'இல்லை' என்று பதில் அளிக்கப்பட்ட பிறகு அதைப்போன்ற இன்னொரு வினாவிற்கு இடமில்லை. 261

ஓர் உறுப்பினர் பல கேள்விகளை ஒன்றாக சேர்த்துக் கேட்டபொழுது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"இத்தனை கேள்விகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கேட்டால் எப்படி பதில் அளிக்க முடியும்?" 8

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி

துணைவினாக்கள்—தொடர்ச்சி

பொது—தொடர்ச்சி

குறிப்பிட்ட ஒரு பிரச்சினை பற்றிய கேள்வி மீது துணைக் கேள்விகள் கேட்க பல உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:—

"இது கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை. கேள்விகளை ஏராளமாக கேட்கத்தான் மனம் வரும். மானியக் கோரிக்கைவிவாதத்தில் இதைப்பற்றி விளக்கமாகப் பேசலாம்." 466

தாம் கேட்ட துணைவினாவிற்கு அமைச்சர் சரியான பதில் சொல்லவில்லையென்று ஓர் உறுப்பினர் கூறியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென்று அமைச்சரைக் கட்டாயப்படுத்த முடியாது." 611

துணைவினா கேட்கிற போது விளக்கங்கள் விவரங்கள் வேண்டாம், பேசிக் கொண்டே போகாமல் கேள்வி கேட்க வேண்டும். 608

திருவேங்கடம் திரு பெ. சு.—

உறுப்பினர்கள் பழைய விடுதியில் நடந்த திருட்டு குறித்து. (த.கோ) .. .. 626

தீண்டாமை—

கைது செய்யப்பட்டோர் விவரம். .. 475—476

துரை கலியமூர்த்தி, திரு.—

இருல், வளர்ப்பு நிலையம், .. .. 140—142

சிதம்பரம், கொள்ளிடத்தில் இருந்து குடிநீர்.. 255





பக்கங்கள்

துரைகலியமூர்த்தி, திரு.—தொடர்ச்சி

சிதம்பரம்—பிச்சாவரம் சாலை, மேம்பாட்டுத் திட்டம் .. .. .. 261

சிதம்பரம், ஞானப்பிரகாசம் குளம் அடைப்பால் சுகாதாரக்கேடு. .. .. 490

ஸ்டுடியோக்கள் மூடப்பட்டுள்ளவை, விவரம் .. 469

துரைமுத்துசாமி, திரு.—

இரயில்வே மேம்பாலம், சென்னை - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை - உளுந்தூர்பேட்டை அருகே. .. .. .. 477—479

உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைவழங்குதல் (த.கோ.) .. .. 164—165

கல்ராயன் மலை—

கொத்தடிமை ஒழிப்பு .. .. 471—475

மின் இணைப்பு — .. .. 29—30

கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், அங்கத்தினர்கள் மீதான ஊழல்கள்- கமிட்டியின் அறிக்கை-நிலை. .. .. 592—599

கைத்தறி ரெடிமேட் ஆடைகள் ஏற்றுமதி, விவரம், .. .. 484

சமூகநலத்துறை அமைச்சருக்குப் பதிலாக வேறு அமைச்சர் கேள்விகளுக்குப் பதிலளித்தது குறித்து (த.கோ.) .. .. 270

வரவுசெலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு கல்வி, .. .. .. 538—542

துரைமுருகன், திரு—

பார்வையாளர் மாடத்தில் ரகசிய போலீஸ் அதிகாரிகள் இருப்பது (ஒ.பி) .. .. 38—41

ராஜா தோப்பில் அணைகட்டும் திட்டம் .. 4—5

துளுக்காணம், திரு. வ—

அரிசன குடியிருப்பு, வேங்கைவாடி (தெ.மா) .. 155—156

த— தொடர்ச்சி

பக்கங்கள்

துலுக்காணம் திரு வ—தொடர்ச்சி

மணிமுத்தா நதி குறுக்கே பாலம்— புது உச்சிமேடு அருகே.. 489

வரஞ்சுரம் கிராமத்தை இணைக்க.. 485

துரைமுகம்—

நாகப்பட்டினம், அபிவிருத்தி .. .. 157—159

தைலப்பன், திரு டி எம்

இரயில்வே மேம்பாலம், தஞ்சாவூர்-பட்டுக் கோட்டை சாலை, .. 477

மின்சார வாரியம், பன்மாடிக் கட்டடம், .. 134—135

தொழிலாளர்கள்

இன்சூரன்ஸ் மருத்துவமனைகள் .. .. 16—19

கொத்தடிமை, ஒழிப்பு, .. .. 470—471

கொத்தடிமை, கல்ராயன் மலைவாழ் மக்கள் மீட்பு .. .. .. 471—475

கோல்டன்சினி, கோல்டன் பிலிம் ஆகிய ஸ்டுடியோக்களை முடியதால் வேலை இழந்தோர், விவரம் .. .. 469—470

சிப்காட் நிதியுதவியால் அமைக்கப் பெற்றவை.. 483, 597—583

நெசவு, பனியன், சாயக் கம்பெனிகள் கரூர் .. 36—38

ஸ்டுடியோக்கள் மூடப்பட்டுள்ளவை விவரம்.. 469

ந

நடராசன் திரு ஆ—

அணை, பாலத்துறை அருகே—கோவை மா-வ .. 587

ஆரம்ப சுகாதார நிலையங்கள், .. .. 483

குடிநீர்த்திட்டங்கள், கோவை. .. .. 485, 584—585

தொழிலாளர் இன்சூரன்ஸ் மருந்துவமனைகள் .. 16—19

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் செட்டிப்பாளையம் குட்டைக்கு விஸ்தரிப்பு .. .. 249—250

மதுக்கரை ஒன்றியத்தில் புதிய பாலங்கள் .. 486



ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நடராஜன், திரு. ஆ,—தொடர்ச்சி.

வேலைவாய்ப்பிற்காக, கோவையில் பதிவு செய்தோர் விவரம் .. .. .. 483

வேலை வாய்ப்புக்கு பதிவு செய்தோர், விவரம் 482

நிதி அலுவல் —

வரவு-செலவுத் திட்டம் 1978-79— பொது விவாதம் .. .. .. 64—138, 174—240, 301— 334, 334—360

வாக்கெடுப்பு, .. .. 508—576

கல்வி .. 637—724

நிர்வாகம்—

ஒரே உணவு மண்டலம், கல்கத்தா மாநாட்டில் ஆய்வு .. .. .. .. 464—468

குடும்பநலத் திட்ட விளம்பரப் பிரிவு, செய்தி மக்கள் தொடர்பு துறையுடன் இணைத்தல் .. 251—252

தமிழ்நாடு மாளிகை, புதுடெல்லி .. .. 488

வருவாய்த்துறை, சீரமைப்பு .. .. 241—243

நிலங்கள் —

புறம்போக்கில், ஆக்கிரமிப்பு, அனுப்பானடி மதுரை .. .. .. 468

நீக்கம்— .. 27,60,251, 276,288, 292,293, 455,458, 476,593, 594,625, 626

நீதிமன்றங்கள்—

செஞ்சியில் முன்சீப் கோர்ட், நிறுவுதல் .. 486

தமிழில் தீர்ப்பு .. .. .. 457

பக்கங்கள்

நீதிமன்றங்கள்—தொடர்ச்சி.

உயர் நீதி மன்றம் (சென்னை), பத்தாண்டுகளுக்கு மேலாக பைசல் ஆகாத வழக்குகள், விவரம் 452—453

உயர்நீதி மன்றம் (சென்னை) பைசல் ஆகாத கிரிமினல், சிவில் வழக்குகள் விவரம் .. .. 453—456

மதுரையில் கிளை .. 135

நீர்ப்பாசனம்—

அணைகள்—

பாலத்துறை அருகே (கோவை மாவட்டம்) .. 587

ராஜா தேர்ப்பில் கட்டுவது குறித்து .. .. 4—5

இணைப்புக் கால்வாய்த் திட்டங்கள், சடையனேரி, விவரம் .. .. .. .. 491—492

ஏரிகள்—

உய்யக்குண்டான் (தி.மா.) ஆழப்படுத்துதல் .. 449—451

சிம்மணப்பூதூர் (வ.மா.), வாய்க்கால், பழுது பார்த்தல் .. .. 452

தகரை கிராமம், சின்ன சேலம் ஒன்றியத்தில் கட்டும் பணி முடிவுறாமல் இருப்பது .. 588

திருமேனி (த. மா.) உடைப்பால் குறுவை சாகுபடி பாதிப்பு, விவரம் .. .. .. 479

நல்லூர், மராமத்து பாதியில் நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து (தோகைமலை பிர்கா) 1978 XIII 587

பேரணாம்பட்டு (வ. மா.) ஆழப்படுத்துதல் .. 468

குளங்கள்—

ஞானப்பிரகாசம் குளம் (சிதம்பரம்) அடைப்பால் சுகாதாரக்கேடு .. .. .. 490

சிற்றூறு, பிளவுக்கல் அணை .. .. 1

தரையடித் தண்ணீர், வேளாண்மைக்கு பயன்படுத்துதல் (தஞ்சை மாவட்டம்) .. 1—4





பக்கங்கள்

நீர்ப்பாசனம்—தொடர்ச்சி

திட்டங்கள், தேனி ஒன்றியம் .. .. 451

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம், செட்டிப்பாளையம் குட்டைக்கு விஸ்தரிப்பு .. .. 248—250

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம், பல்லடத்திற்கு விஸ்தரிப்பு .. .. .. .. 248—249

நூலகங்கள்—

மதுரை மாநகராட்சி வாங்கும் பத்திரிகைகள் விவரம் .. .. .. .. 488—489

ப

பண்ணை சேதுராம், திரு. கே.—

வத்தலகுண்டு, பழம் பதனிடும் தொழிற்சாலை 34—36

பத்திரிகை(கள்)—

பத்திரிகைகள் மீது நடவடிக்கை, 1976-ல், விவரங்கள் .. .. .. .. 599—601

பழனிசாமி, திரு. சொ. ந.—

அவிஞசி வட்டத்தில் உழவு மாடுகள் வழங்காமை 259

''தாசபளஞ்சிகா'' வகுப்பினர் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் .. .. .. 23—28

பழனியப்பன், திரு. அ. ப.—

'முரசொலி' பத்திரிகைக்கு விளம்பரம்-1975-ல் .. 601—603

பள்ளிகள்—

விளையாட்டுத் திடல், செயின்ட் பேட்ஸ் உயர் நிலைப் பள்ளி, சென்னை .. .. .. 146

உயர் தொடக்கப் பள்ளி, கொண்டல், சீர்காழி வட்டம் .. .. .. 155

பள்ளிவாசல் —

ஆவலூர் கிராமம், முத்தவல்லியால் மோசடி .. 621—623

பால்வளம்—

ஒசூரில் பண்ணை தொடங்கல் .. .. 265

திருவண்ணாமலையில் குளிரூட்டு நிலையம் .. 88

ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

பாலகிருஷ்ணன், திரு. சோ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ.வி.) .. 205

பாலங்கள்—

இரயில்வே மேம்பாலம்— சென்னை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை, உளுந்தூர்பேட்டை அருகே 477—479

இரயில்வே மேம்பாலம் — தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை சாலை .. .. .. 477

இரயில்வே மேம்பாலம் — திருவாரூர்—கட்டப்படுவதில் தாமதம் குறித்து நடவடிக்கை .. 615

உடையூர்— பருத்திக்குடியை இணைக்க (மாயூரம் ஒன்றியம்) .. .. .. .. 603—605

சுரங்கப் பாதை, சென்னை, ஸ்டான்லி மருத்துவ மனை அருகே .. .. .. 148—49

பணகுடி அனுமான் ஆறு .. .. .. 31—32

மதுக்கரை ஒன்றியம் .. .. .. 486

வரஞ்சுரம் கிராமம் அருகே மணிமுத்தா நதி குறுக்கே கட்டுதல் .. .. .. 485

பாலன், திரு. க.—

இறைச்சிக் கூடம், புளியந்தோப்பு, சென்னை மாநகராட்சி, நவீனமாக்கல் .. 148

பாலாஜி, திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ.வி.) 121—123

பிற்பட்டோர்—

''தாசபளஞ்சிகா'' வகுப்பினரை பட்டியலில் சேர்த்தல் ... .. .. .. 23—28

புருஷோத்தமன், திரு. து. —

அண்ணாசாலைக்கு இணையாக புதிய சாலை (சென்னை) அமைத்தல் .. .. .. .. 30

குடும்ப நலத்திட்ட விளம்பரப் பிரிவு, செய்தி மக்கள் தொடர்பு துறையுடன் இணைத்தல் .. 251—252




ப—தொடர்ச்சி


பக்கங்கள்

புஷ்பராஜ் திரு. த—

வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு கல்வி, .. 574—576

பொன்னுரங்கம் திரு. ப—

சுரங்கப்பாதை ஸ்டான்லி மருத்துவ மனை அருகே சென்னை, ... 148—149

பொன்னையன் திரு. சி—

கடன் வசூல், டாக்ஸி ஓட்டுநர் கூட்டுறவு சங்கங்கள் கெடுபிடி குறித்து (சிவகங்கை, மதுரை, பரமக்குடி, நாமக்கல், போடி போன்ற இடங்களில்) (ஒ.தீ.) .. 629—632

போக்குவரத்து—

கோயமுத்தூர்-சென்னை பேருந்து வழித்தடம் .. 159—163

திருப்பூர்-அக்கணம்பாளையம் வழித்தடத்தில் பேருந்து விடுதல், .. 262

ம

மணிமாறன் திரு. மா—

உதவித் தொகை, அரசு ஊழியர்களின் பிள்ளைகள், வருமான உச்சவரம்பு .. 146—147

மருத்துவ மனைகள்—

சிங்காநல்லூர், பெயர்வைத்தல் .. 16—19

தொழிலாளர் இன்ஷுரன்ஸ், .. 19—21

மருந்து கொள்முதல் .. 21—23

மருதாசலம் திரு. க—

சிங்காநல்லூர் இ.எஸ் ஐ. மருத்துவமனை, அண்ணா பெயர் வைத்தல் .. 19—21

மனோகரன் திரு. கி—

காவல் நிலையம், காரைக்குடி தெற்கு, ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப்படுவது குறித்து (ஒ.தீ.) .. 170—171

கூவத்திலிருந்து வரும் நாற்றம் குறித்து (ஒ.பி.) 494—495

பக்கங்கள்

மனோகரன் திரு. இ—தொடர்ச்சி

நிதிநிலை அறிக்கைக்கு முன் ஆளுநர் உரை இல்லாதது குறித்து (உ.பி.) .. 278—282, 284—286

புயல், வெள்ளம் பாதிப்பு விவசாயிகளுக்குச் சலுகை (த.கோ.) 499—500

மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது குறித்து (ஒ. தீ.) .. 55—60

மின் உற்பத்தி மீது மத்திய அரசு விதித்துள்ள ஆயத்தீர்வைக்கு எதிர்ப்பு (அறி.) .. 503

முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினா எடுத்துக் கொள்ளாதது குறித்து (த.கோ.) 492

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு, 1978 (அறி.) .. 508

வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ. வி.) 239, 301—313, 314—320, 321—322, 323, 324, 325, 326, 328, 329, 330,

மார்க்கபந்து திரு. ரா—

கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், அங்கத்தினர்கள் மீதான ஊழல்கள்—கமிட்டியின் அறிக்கை—நிலை .. 592—599

மாரிமுத்து திரு. ஏ. ஆர்—

அரிசன காலனி, நிலம் கையகப்படுத்துதல், செட்டிக்குறிச்சி கிராமம், இராமனுதபுரம் மாவட்டம் .. 611—615

பழவேற்காடு, கோட்டைக்குப்பத்தில் மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரம் (க. ஈ.) .. [illegible]4

மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது குறித்து (ஒ. தீ.) .. 53—54

வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ. வி.) 198—215



பக்கங்கள்

மின்சாரம்—

உற்பத்தி மீது மத்திய அரசு விதித்துள்ள ஆயத்தீர்வைக்கு எதிர்ப்பு (அறி.) .. 500—503

கல்ராயன் மலை (தெ. மாவட்டம்) இணைப்பு 29—30

மீனளம்—

இறால் வகைகள், சர்வே .. 136—140

இறால், வளர்ப்பு நிலையம் .. 140—142

கடலில் மீன் பிடிக்க விதிகள் .. 142—145

முத்துசாமி திரு. பா. க. சி—

பேருந்து, கோயமுத்தூர்-சென்னை பேருந்து வழித்தடம், .. 159—163

முருகேசன் திரு கூ. ச—

ஏரிகள் ஆழப்படுத்தல், உய்யக்கொண்டான் ஆற்றுப் பாசனம் (திருச்சி மா.) .. 449—451

ய

யூசுப் திரு. யா. சை. மு—

பணகுடி அனுமான் ஆற்றுப்பாலம் .. 31—32

ர

ரகுமான்கான் திரு அ—

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை, அதிகாரிகள் மீது நடவடிக்கை (த.கோ.) .. 163

கல்லூரி ஆசிரியர்கள், தேர்வுகள் மேற்பார்வையிடும் பணியைப் புறக்கணிப்பதென எடுத்துள்ள முடிவு குறித்து (க.ஈ.) 507

நிதிநிலை அறிக்கைக்கு முன் ஆளுநர் உரை இல்லாதது குறித்து (உ.பி.) .. 271—275

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு கல்வி. .. 637—647

ரசாக் திரு. எம். எம். ஏ—

குற்றாலத்தை சுற்றுலாமையமாக்குதல் .. [illegible]—2

பக்கங்கள்

ராமணி திரு. கு—

உணவுப் பொருள்கள், நடமாட்டத்தடைகளை அகற்றல் .. 462—464

ஒரே உணவு மண்டலம், கல்கத்தா மாநாட்டில் ஆய்வு ... 464—468

தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகள், மருந்து கொள்முதல் .. 21—23

நெசவு, பனியன், சாயக்கம்பெனிகள் கரூர் .. 36—38

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு கல்வி .. 335, 353—360

வீடுகள் ஒதுக்கல், ஹவுஸிங் யூனிட், கோவை நகரம் .. 149—153

ராமநாதன் திரு சி—

வரவு-செலவுத் திட்டம். 1978-79, வாக்கெடுப்பு கல்வி, .. 527—529

ல

லத்தீப் திரு. எம். ஏ—

இரூல், தவளை ஏற்றுமதிக்கு விற்பனை வரி விலக்கு. 243

கூவத்திலிருந்து வரும் நாற்றம் குறித்து (ஒ.பி.) 494—495

துணை வினாவிற்கான விடை குறித்து (ஒ.பி.) .. 43—45

வரவு செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு, கல்வி .. .. .. .. .. 336, 562—571

வ

வரதராஜன் திரு. என்—

உணவு தானியங்கள், மாநிலங்களிடையே கொண்டு செல்ல கட்டுப்பாடு .. .. 459—462

வரி(கள்)

இரூல், தவளை ஏற்றுமதிக்கு விற்பனை வரிவிலக்கு 243—244

வீட்டுவரி, உயர்வு, சிவகங்கை .. .. 491







பக்கங்கள்

வாரியங்கள்—

மின்சாரம், தலைமைப் பொறியாளர்கள், விவரம் 250—251

வாரியம்—

மின்சாரம், பன்மாடி அலுவலகக் கட்டடம், .. 134—135

மின்சாரம், வாடகைக் கட்டடங்களில் அலுவலகம் 133—134

விவசாயம்—

ஆணைக் குழு விவசாயிகள் பிரச்னையை ஆராய் அமைத்தல் .. .. .. .. .. 617—621

கடலைப் பயிர் (தஞ்சை) விவரம் .. .. 490

கடும் மழையால், தஞ்சையில் குறுவை பாதிப்பு .. 480—481

பூச்சிக் கொல்லி மருந்து கொள்முதல் 1970-ம் ஆண்டு முதல் விவரம் .. .. .. 481—482

'பெரிடோனியா' நோய் பருத்திப் பயிர்களுக்கு (தேனீ தொகுதியில்) (க.ஈ.) .. 635—637

மண்வள ஆராய்ச்சி (தெ.மா.) செய்தல் .. 265—268

மரவள்ளிக் கிழங்கு, நியாயவிலை .. .. 34

விளம்பரம்—

'முரசொலி' பத்திரிகைக்கு 1975-ல் .. .. 601—603

விளையாட்டு அரங்கம்—

அவுட்-டோர், தர்மபுரி மாவட்டம், .. .. 147—148

விற்பனைக் கூடங்கள் —

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைத்தல் .. 269—270, 362

வின்சென்ட் திரு. மீ—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—கல்வி .. .. .. .. 518—521

வ—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| **விஜயராகவன் திரு. பொ.—** | |
| காவல் நிலையம், காரைக்குடி தெற்கு, ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்துக் கொண்டதாகக் கூறப் படுவது குறித்து, (ஒ.தீ.) .. .. .. | 168 |
| வரவு செலவுத்திட்டம், 1978-1979, வாக்கெடுப்பு கல்வி .. .. .. .. .. | 512—517 |
| **வீட்டு வசதி—** | |
| அரிஜனங்களுக்கு, மின்னல் கிராமம் .. .. | 609—611 |
| வாரிய வீடுகள் ஒதுக்கல், கோவை நகரம் .. | 149—153 |
| **வெள்ளைச்சாமி திரு. ஆ.—** | |
| வரவு—செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு, கல்வி .. .. .. .. .. | 345—348 |
| வரவு-செலவுத்திட்டம், 1978-79 (பொ.வி.) .. | 95—98 |
| **வேணுகோபால் திரு. த.—** | |
| ஊராட்சி இல்லம், வேலூர், கட்டிட வசூல் .. | 253 |
| பால் குளிரூட்டும் நிலையம், திருவண்ணாமலை .. | 33 |
| **வேலை வாய்ப்பு—** | |
| அலுவலகங்களில் பதிவு செய்தோர் விவரம் .. | 482 |
| கோவை அலுவலகத்தில் பதிவு செய்தோர் விவரம் .. .. .. .. .. | 483 |
| பொற்கொல்லர்கள் பிள்ளைகளுக்கு பயிற்சி வகுப்புகள் .. .. .. .. .. | 257—259 |


ஜ


| | |
|---|---|
| **ஜெயராமன் திரு. வெ. இரா.—** | |
| நீர்ப்பாசனத் திட்டம், தேனீ ஒன்றியம் .. | 451 |
| பெரிபோனியா' நோய் (தேனீ தொகுதியில்) பருத்திப் பயிர்களுக்கு ஏற்பட்டதுகுறித்து (க.ஈ.) .. .. .. .. .. | 635—637 |




ஜ—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| **ஜெபமணி திரு. ர—** | |
| வரவு-செலவுத்திட்டம், 1978-79, (பொ.வி.) .. | 123—128 |
| **ஜெயவேலு திரு. எம். ஏ—** | |
| வரவு செலவுத்திட்டம், 1978-1979 வாக்கெடுப்பு கல்வி .. .. .. .. .. | 662—664 |
| **ஜேம்ஸ் திரு. ஜே—** | |
| அறிவிப்புக் கொடுக்கப் பெற்ற தீர்மானங்கள் குறித்து (த.கோ.) .. .. .. .. | 60—62 |
| காவல் நிலையம், காரைக்குடி தெற்கு ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்துக் கொண்டதாகக் கூறப் படுவது குறித்து (ஒ.தீ.) .. .. .. | 168—169 |
| சிற்றுறு பிளவுக்கல் அணை .. .. .. | 1 |
| நிதிநிலை அறிக்கைக்கு முன், ஆளுநர் உரை இல்லாதது குறித்து. (உ.பி.) .. .. | 276—278 |
| வரவு-செலவுத்திட்டம், 1978-1979 வாக்கெடுப்பு கல்வி .. .. .. .. .. | 668—676 |
| **ஜேம்ஸ் திரு. ஜே—** | |
| வரவு-செலவுத் திட்டம், 1978-79 (பொ.வி.) .. | 186—198, 205 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## செவ்வாய்க்கிழமை, 1978 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### பிளவுக்கல் அணை

* 301 வினா—திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் சிற்றாற்றுக்கு குறுக்கே பிளவுக்கல் அணை கட்டியதால் ஏற்கனவே அந்த ஆற்றின் மூலம் பாசன வசதி பெற்றிருந்த கோவனேரி போன்ற கண்மாய் பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்வதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா? அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக்குத் தரையடித் தண்ணீர்.

* 302 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் தரையடித் தண்ணீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திட அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவையின் முன் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீரை பயன்படுத்தி அங்கே அருகாமையில் உள்ள பகுதிகளுக்கு பாசனம் அளிப்பதற்கு அங்குள்ள திட்டங்களை

---

** 130-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கான விவரங்களை அறிவிக்க இயலுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காவிரி பாய்கிற தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீரை ஓரளவுக்குத்தான் பயன்படுத்த முடியும் என்ற அடிப்படையில் இந்த நிலத்தடி நீர் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கர்நாடக மாநில அரசு கூட அந்த நிலத்தடி நீரை பயன்படுத்தலாமே என்று குறிப்பிட்டார்கள். மேட்டூர் நீர்த் தேக்கத்திலேயிருந்து தண்ணீர் திறந்து விடுகிறபோதுதான் தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீர் கிடைக்கிறது என்பது தொழில் நுட்ப வல்லுநர்களின் கருத்து. ஆகவே ஓரளவுக்குத்தான் அந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியும்.

திரு. என். கிட்டப்பா : குறிப்பாக அமெரிக்காவின் துணை கொண்டு தஞ்சை மாவட்டத்தில் இதற்கு முன்னாலேயே ஆர்ட்டீஷியன் கிணறுகள் சில இடங்களில் இயங்கி வருகின்றன. இந்த ஆர்ட்டீஷியன் கிணறுகளை இன்னும் அதிகமான இடங்களில் ஏற்படுத்த அரசு ஏதேனும் முயற்சிகளை மேற் கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அமெரிக்க ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் காவிரியாறு கழிமுகப் பகுதி ஆய்வு செய்யப்பட்டு அக்விஃபயர்—நிலத்தடி நீர் தங்கிகள் எந்த அளவுக்கு கீழே இருக்கிறது என்று பார்த்து எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்றும் கணக்கெடுத்திருக்கிறார்கள். அந்த நிலத்தடி நீர் தங்கிகள் காவிரியாற்றிலே இருந்து வருகிற தண்ணீரே ஒழிய வேறெல்ல. ஆகையினால் காவிரியாற்று நீரோட்டத்தைப் பொறுத்த அளவில் தான், நிலத்தடி நீர் பயன்படுத்தப்படும் என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தஞ்சை மாவட்டத்தில் மின் இணைப்பு கொடுத்த அதே நேரத்தில் அரசின் கணக்கில் உள்ள பம்ப் செட்டுகள் எத்தனை என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அது பற்றி பதிலளிக்க முடியும். தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுக்கு 1,200 கிணறுகளுக்கு மின்சாரத்தை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் கோரி வந்துள்ள மனுக்களின் எண்ணிக்கை 3,721.



திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தஞ்சை மாவட்டத்திலே காவிரி ஆறு பாய்கின்றது. காவிரித் தண்ணீரை வைத்துத்தான் அங்கே ஊற்றுத் தண்ணீர் கிடைக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே அந்த ஓரத்திலே இருக்கிற இடத்திலே எல்லாம் ஏராளமான ஆர்ட்டீஷியன் ஊற்றுகள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்தி இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசை அணுகி மாநில அரசு செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்தை ஆராய்ந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சௌ. வே. வரதராஜன் : இந்தச் சிறிய விவசாயிகள் அதாவது பத்து ஏக்கர் வரையில் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள் நிலத்தடி நீரை உபயோகப்படுத்தும் முறையில் சமுதாய ரீதியில் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது பற்றி வரவு-செலவுத் திட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. ஒ. சுப்பிரமணியம் : நிலத்தடி நீர் இந்த மாநிலம் முழுவதும் எங்கெங்கு கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைப் பற்றிய விரிவான அறிக்கையை க்ரவுண்ட் வாட்டர் செல்காரர்கள் கொடுத்திருக்கிறார்களா ? அந்த விவரங்களைச் சொல்வதற்கு இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கிட்டதட்ட 90 பங்கு முடிந்து விட்டது. அந்த அறிக்கை தரப்பட்டிருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தர முடியும்.

திரு. ரா. மார்க்கபந்து : பொதுவாக நிலத்தடி நீர் இல்லை என்ற ஒரே ஒரு காரணத்தைக் காட்டி பம்ப் செட்களுக்கு மின் இணைப்புக் கேட்கிற யாருக்கும் மின் இணைப்புக் கிடைக்க முடியாத ஒரு நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தீர்த்து, பம்ப் செட்களுக்கு இணைப்பு வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு இணைப்பு கொடுக்க மாற்றுத் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் குறிப்பில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. சௌந்திரராசன் : தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மழை, வெள்ளத்தின் விளைவாக நிலத்தடி நீர் வளம் பெருகியிருப்பதாகச் சொல்கிறார்கள். இதை அடிப்படையாக் வைத்தாவது புதிதாக பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்கும் நிலை ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 35,000 பம்ப் செட்களுக்கு வழங்குவது என்று தீர்மானித்துள்ளோம். அவைகளைப் பொறுத்த வரையில் இந்த நிலத்தடி சான்றிதழ் தேவைப்படாது.

## ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்

* 303 வினா—திரு. துரை முருகன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டம், லத்தேரிக்கருகில் ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அத் திட்டம் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பரிசீலனை முடிந்த பிறகுதான் எப்பொழுது துவக்குவது என்பதற்கான முடிவு எடுக்க இயலும்.

திரு. துரை முருகன் : இந்த அணை கட்டுவதற்கு 1974-ல் அரசாங்கச் சார்பில் பொதுப்பணித்துறை சீஃப் என்ஜினீயர் அவர்கள் எல்லாம் அந்த இடத்திற்கு வந்து அது குறித்து ஆய்வு செய்து ரிப்போர்ட் கூடத் தயார் செய்திருந்தார்கள். அப்போது நான் காட்பாடி எம்.எல்.ஏ. ஆக இருந்தேன். அந்த ஆண்டே அதைத் துவக்குவதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஐந்து ஏரிகளுக்கு ஆண்டு முழுவதும் நீர் வருகிற ஒரு வாய்ப்பு இந்த அணைக்கட்டுத் திட்டத்தினால் ஏற்படும். கிட்டத்தட்ட 500 ஏக்கர் புன்செய் நிலங்கள் நன்செய்யாக மாற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இதன் அத்தியாவசியத்தை உணர்ந்து உடனடியாக இந்த ஆண்டே அதைத் துவக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அறிவித்ததில் ஒன்றும் தவறு இல்லை. அதனால்தான் ஆய்வில் இருக்கிறது.





திரு. எம். ஏ. ஜெயவேலு : சில சேர்க்கக் கூடாத செலவினங்களை அதிகாரிகள் சேர்த்திருப்பதால் இந்தத் தாமதம் என்பதை அரசு உணருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 24 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயார் செய்திருக்கிறார்கள். அதன்மூலம் 504 ஏக்கர் நிரந்தர பாசன உறுதியும், 67 ஏக்கர் பாசன வசதியும் கிடைக்கும் என்று கூறப்பட்டு இருக்கிறது. 24 இலட்சம் ரூபாய் அளவு தேவையா என்பதுபற்றித்தான் ஆய்வு நடைபெற்று வருகிறது.

திரு. எம். ஏ. ஜெயவேலு : இந்த அணைக்கட்டிலிருந்து தாராப்படவேடு என்ற ஊருக்கு நீர் செல்லும்போது அந்த நீர் போகிற இடங்கள் எல்லாம் தற்போது வீட்டு மனைகளாக்கப் பட்டு விடுவதால் அந்த நீர் பூராவையும் இந்த ராஜா தோப்பு அணைக்கட்டில் தேக்கி வைப்பது உதவியாகயிருக்கும் என்று அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக்கிற விவரம் இத் திட்டம் ஆய்வு செய்யும் போது எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. துரை முருகன் : காட்பாடி தாராட்படவேடு ஏரியில் இருந்து வருகிற நீர் பாயும் இடங்கள் கொஞ்சம் டவுன்ஷிப்பாக மாற்றப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்கள் தண்ணீர் வருகிற வாய்க்கால்கள் வீட்டு மனைகளாக மாற்றப்படவில்லை. ராஜா தோப்பு தண்ணீர் லத்தேரி, சிற்றேரி அன்னஸ்குடி ஏரி போன்ற வற்றிற்குச் செல்லுகிறது. விருதம்பட்டு, காங்கேயநல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள புன்செய் நிலங்களும் நன்செய்யாக மாற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, செலவைப் பாராது—24 இலட்சம் ரூபாய் என்ன, 50 இலட்சம் ரூபாய் செலவானாலும் இந்த அணைக் கட்டுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அட்சரம் இலட்சம் பெறும் என்று சொல்வார்கள். அதேபோல் உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துவார்களேயானால் வேண்டுமானால் நாம் அதைக் கருதலாம். உறுப்பினர்கள் இருவரும் ஒரே பகுதியிலிருந்து வருவதால் துரை முருகன் அவர்களும், திரு. ஜெயவேலு அவர்களும் இங்கு பரிமாறிக்கொண்ட விளக்கத்திற்கு நன்றி.

## பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவுகள்.

*304 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட சொற்பொழிவுகளை வானொலியின் சென்னை, திருச்சி நிலையங்களில் ஒலிபரப்பு செய்திட அரசு ஆவன செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வானொலியின் நிர்வாகம் மாநில அரசுக்கு உட்பட்டதல்ல. என்றாலும், மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை ஏற்று, சம்பந்தப்பட்ட மத்திய அரசு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளும்.

[முற்பகல் 9–10]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சொற்பொழிவுகளில் சில முக்கியமான சொற்பொழிவுகள் டேப் ரிகார்டு மூலம் டேப் செய்யப்பட்டு பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. இவைகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டி, அவைகளில் முக்கியமானவற்றை கிராமபோன் ரிக்கார்டு மூலம் வெளியிடுவதற்கு அரசு முன் வருமா ? அரசு இப்படி முன் வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் புலவர் கோவிந்தன் அவர்களிடம், தமிழகத்தில் அதிகமான அளவுக்கு அண்ணா அவர்களுடைய பேச்சு டேப் ரிக்கார்டு செய்யப்பட்டு இருக்கின்றன. அவை அரசினுடைய முயற்சிக்கு உதவிகரமாக இருக்கும் என்பதையும் அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருந்து வருவதோடு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரசினிடத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உரைகள் பதிவு செய்யப்பட்ட நாடாக்கள் மிக சொற்பமாகவே இருக்கின்றன. தனிப்பட்டவர்கள் யாரிடமாவது இருந்து, அவற்றை அரசுக்கு வழங்குவார்களேயானால், அவை மிக்க பயனுள்ளதாக இருக்கும். கடந்த முறை கூட, அண்ணா அவர்களின் நினைவு நாளன்று அண்ணா அவர்களுடைய பேச்சு பதிவு செய்யப்பட்ட நாடாவை வைத்து, அண்ணா சதுக்கத்தில் அவர்களுடைய நினைவாக ஒலிபரப்பப்பட்டது. அகில இந்திய வானொலி நிலையத்திற்கு அண்ணா அவர்களுடைய பிறந்த நாளிலும், நினைவு நாளிலும் அவர்களுடைய பேச்சுக்கள் ஒலிபரப்பப் பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இவற்றில் அரசாங்கம் ஏற்கெனவே உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு புலவர் அவர்கள் வைத்திருக்கின்ற டேப்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அரசுக்குத் தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சுக்கள் வானொலி மூலம் ஒலிபரப்பப்படுகின்ற அதே நேரத்தில், அண்ணா அவர்களுடைய நினைவாக இருக்கின்ற அண்ணா சதுக்கத்தில், தினசரி, மாலை 6 மணி முதல் 8 மணி வரையிலும் அண்ணா அவர்களுடைய பேச்சுக்கள் ஒலிபரப்புவதாக அறிவிக்கப்பட்டால் தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகின்ற மக்கள் அண்ணா அவர்களுடைய பேச்சைக் கேட்பதற்கு வாய்ப்பாக அமையலாம். அதை அரசு செய்வதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அடிப்படையில்தான் அரசும் அப்பேர்ப்பட்ட முயற்சிகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. தினசரி ஒலிபரப்பப்படும் என்று இல்லாமல், வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் என்று நிர்ணயித்து அண்ணா அவர்களுடைய குரலைக் கேட்பதற்கு என்று அங்கே வருகின்ற மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில், அது என்றைக்கு என்பதை மனதில் இருத்தி, அதைக் கேட்க வேண்டும் என்ற அக்கறையோடு கவனம் செலுத்துகின்ற வகையில் அமைய வேண்டும். அதல்லாமல் ஏதோ பொழுது போக்காக இருக்கின்ற வகையில் அதை கவனிப்பாரற்ற நிலைமையில் ஒலிபரப்பப்படுகின்ற சாதாரண நிலைக்கு அது வந்துவிடக் கூடாது. ஆகவே, அரசு இதில் மிகுந்த கவனம் செலுத்தி அந்தக் கருத்தை பரிசீலனை செய்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : அறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சுக்களை மட்டுமன்றி அவர்களுடைய எழுத்துக்களை—பெரியார் அவர்கள் எழுத்துக்களை எல்லாம் தனியாக பெரிய வால்யூம்களாக வெளியிடுகிறார்கள்—அதுபோல் அண்ணா அவர்களுடைய எழுத்துக்களையும் பப்ளிசிட்டி அன்ட் இன்பர்மேஷன் டிப்பார்ட்மென்ட் மூலமாக குறைந்த விலையில் வால்யூம்களை வெளியிடுகின்ற யோசனை அரசினிடம் உள்ளதா ? அதே போன்று அண்ணா அவர்களுடைய பேச்சுக்கள் நிறைந்த டேப்களை குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும்படியான அளவில் விநியோகிக்க

அரசு ஏற்பாடு செய்யுமா? அதே நேரத்தில், அண்ணா அவர்களுடைய பேச்சை ஒலிபரப்ப வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், ஈரோட்டில் பெரியார் அவர்களுடைய வீட்டில் ஒலிபரப்பப்பட்டு வந்த பெரியார் அவர்களுடைய பேச்சின் ஒலி பரப்பு நிறுத்தப்பட்டு விட்டது அரசுக்குத் தெரியுமா? அதைப் பற்றி மீண்டும் அரசு கவனிக்குமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இத்தனை கேள்விகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கேட்டால் எப்படி பதில் அளிக்க முடியும்?

<u>திரு. துரை முருகன்</u> : மூன்று கேள்விகளையும் தொடர்பாகத்தான் கேட்டிருக்கிறேன்......

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் கேட்ட இந்தக் கேள்விகளை எல்லாம் இத்தனை ஆண்டுக் காலமாகக் கேட்கவில்லை என்றாலும், இவையெல்லாம் வரவேற்கத்தக்க யோசனைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கும் இந்த அவைக்கும் மகிழ்வோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். இப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் இங்கு இப்போது தெரிவிப்பதற்கு முன்பே, அரசு இதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது என்பதையும், எங்கெங்கு அண்ணா அவர்களுடைய புத்தகங்கள், தனியார்கள் யாரிடம் உரிமை பெறப்பட்டு இருக்கின்றன என்பது பற்றியும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அவைகளை எல்லாம் ஒன்று சேர்த்து அண்ணா அவர்களுடைய நூலையும், அண்ணா அவர்களுடைய பேச்சுக்களையும் தொகுத்து, இந்த நாட்டில் அவைகள் அழியாத இலக்கியங்களாக—பொதுமக்களின் சொத்தாக ஆக்குவதற்கு ஏற்கனவே அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவர் அவர்களே, முன்னாலே இதைப்பற்றிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பிறகு, இத்தகைய கேள்வி ஒன்று என்னால் கேட்கப்பட்டு, அதற்கு அன்றைய தினம் அளிக்கப்பட்ட பதிலில் பெருமதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் குடும்பத்தில் யாரோ, நான் எல்லோரையும் குறிப்பிடவில்லை, யாரோ சில பேர் அத்தகைய நூல்களை அரசாங்கம் வெளியிடுவதற்கு இன்னும் இசைவு தரவில்லை என்று பதில் அளிக்கப்பட்டது. எனவே, அதற்கான முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரிய செல்வங்களை, எழுத்துச் செல்வங்களை வெளியிடுவதற்கான உத்தேசம் உண்டா? அதேபோல் பேச்சுக்களை வானொலியில் ஒலிபரப்ப மாநிலத்திற்கு வெளியே உள்ளவர்கள்கூட இதைப் புரிந்து கொள்வதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புறேன்.





<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்கள் அனைத்தையும் தமிழ்நாட்டிலே மாத்திரம் அல்லாமல், அகில இந்தியாவிலுமே அகில உலகத்திலுமே புகழ் அளிக்கின்ற வகையிலே ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள்பற்றி இந்த அரசு யோசித்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. அ. க. அரங்கநாதன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற தத்துவத்தை விளக்குகின்ற வகையில் 'வேலைக்காரி' என்ற திரைப்படமும், அதையொட்டி 'சொர்க்கவாசல்', 'ஓர் இரவு' என்பதையும், அதேபோல் 'நல்லவன் வாழ்வான்' என்ற திரைப்படங்களையும் இந்த அரசு விலைக்கு வாங்கி, அதைப் பொதுமக்களுக்கு இலவசமாகக் காண்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, திரைப் படங்களை விலைக்கு வாங்கி, அதைப் பொது மக்களுக்குக் காட்டுவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமான விஷயமல்ல. இது சாதாரணமாகவே பொதுமக்களுக்குக் காட்டப்பட்டு வருகின்றது. என்றாலும், இலக்கியங்களைப் பாதுகாத்து, அவை என்றென்றைக்கும் அழியா இலக்கியங்களாகப் பாதுகாப்பது என்பதுதான் இந்த அரசின் இலட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. துரை முத்துசாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சுக்களைத் தொகுத்து வெளியிடயிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக என்னுடைய கட்சியின் சார்பில் அவர்களுக்குப், பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே தமிழ்ச் சமுதாயத்திற்காகவும், இந்த நாட்டு மக்களுக்காகவும் அரை நூற்றாண்டுக்கு மேலாக மறைந்த பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் ஆற்றிய தொண்டை இந்த நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள். ஆகவே, அப்பேர்ப்பட்ட தலைவர் அவர்களுடைய பேச்சுக்களையும் தமிழகம் மட்டுமல்லாமல், அகில உலகத்திற்கும் பயன் அளிக்கின்ற வகையிலே செய்வதற்கான ஏற்பாட்டையும் இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u>: தலைவர் அவர்களே, காமராஜ் அவர்களின் பேச்சுக்கள் மாத்திரமல்ல, தமிழ்நாட்டிலே தோன்றிய அத்தனைப் பெருந் தலைவர்களுடைய, தேசியத் தலைவர்களுடைய இலக்கியங்களையும் காப்பாற்றி, இந்த நாட்டிற்கு அளிக்க வேண்டுமென்பதிலே இந்த அரசுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது? அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்றாலும்,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அவைத் தலைவர் அவர்கள் மூலமாக ஒரு யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவுச் சின்னங்களை ஏற்படுத்துவதற்கு தமிழகத்திலேதான் அரசு இருக்கிறது. ஆனால், பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்கு அகில இந்தியாவிலும் அரசுகள் இருக்கின்றன மத்திய அரசும் இருக்கின்றது. அதனாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த யோசனையை மத்திய அரசுக்குத் தெரிவிப்பார்களானால், அது பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

திரு. க. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காஞ்சீபுரம் இல்லம் அவரது நினைவு இல்லமாக ஆக்கப்படுமா ? அண்ணாவின் பொன் மொழிகள் அந்த இல்லத்தில் சுற்றுலாவிற்கு வருகின்ற மக்கள் அறிகின்ற வகையிலே வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லம் முன்பிருந்த அரசால் பொதுச் சொத்தாக ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிகிறேன். எனவே, இதைப் பற்றி பரிசீலனை செய்து, தொடர்ந்து காஞ்சீபுரம் இல்லத்தையும் நினைவுச் சின்னமாக ஆக்குவதற்கான ஏற்பாடுகளை, முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படம் தமிழ்நாட்டில் அரசு அலுவலகங்களில் மாட்டப்பட்டிருந்தன. நெருக்கடி நேரத்தின்போது பல இடங்களில் அண்ணா அவர்களின் படத்தை அகற்றிவிட்டார்கள். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகும் கூட பல அலுவலகங்களிலே அண்ணாவின் திருவுருவப் படத்தை மாட்டாமல் மூலையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே, எல்லா அலுவலகங்களிலும் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படத்தை மாட்ட அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படம் தேசியத் தலைவர்கள் பட்டியலில் இணைத்து அரசு அலுவலகங்கள் அனைத்திலும் வைக்கவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எங்காவது வைக்கவில்லை என்றாலும், எந்த அதிகாரியாவது வேண்டுமென்றே வைக்காமல் இருப்பார்களேயானாலும் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து தகவல் தந்தால் உரிய நடவடிக்கைகளை அரசு உடனே மேற்கொள்ளும்.



## திருக்குற்றாலத்தை சுற்றுலா மையமாக்கல்

* 305 வினா— திரு. எம் எம். ஏ. ரசாக் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை மாவட்டத்திலுள்ள திருக்குற்றாலத்தை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருக்குற்றாலத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையமாக மேம்படுத்த 6-வது திட்டத்தில் இந்த இடத்தை சேர்த்திட தமிழக அரசு இந்திய அரசு சுற்றுலாத்துறைக்கு அண்மையில் அனுப்பியுள்ள தமிழக சுற்றுலா வள சர்வேயில் ( Tamil Nadu Tourism potential Survey ) யோசனை கூறியுள்ளது.

திரு. எம். எம். ஏ. ரசாக் : அது எந்த ஆண்டு நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எந்த ஆண்டு என்று குறிப்பிட்டுக் கூற முடியாது. ஆனால், தமிழக அரசினுடைய சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரை திருக்குற்றாலத்தை ஒரு முக்கிய தேசிய சுற்றுலா இடமாகக் கருதி மேற்கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் ; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது திருக்குற்றாலத்தை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு டூரிஸ்ட் சென்டராக சேர்த்துக்கொள்ள பரிந்துரை செய்துள்ளதாகக் கூறினார். வேறு எந்தெந்த இடங்களை இந்தமாதிரி ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் டூரிஸ்ட் சென்டர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆறாவது ஐந்தாண்டுத் திட்டதில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குப் பல்வேறு திட்டங்களை அரசு பரிந்துரை செய்திருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களை சேகரித்துத் தர இயலும்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : அவ்வாறு நிறைவேற்றப்படும்போது இங்கு ஏழை நடுத்தர மக்கள் தங்க வசதியாக கட்டிடங்கள் குறைந்த வாடகையில் கட்டிக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாநில சுற்றுலா வாரியத்தின் சார்பில் இப்போதே ஒரு திட்டம் 15 லட்சம் ரூபாய் செலவில் நடுத்தர மக்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு சுற்றுலா பயணிகள் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான இடத்தைச் காட்டிலாகாவில் இருந்து பெறுவதற்காக, அனுமதிக்காக சுற்றுலா வாரியம் காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ் பயிற்றுநர்கள்.

* 306 வினா— சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர்; கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சியில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு மூலமாக நியமனம் செய்யப்பட்ட தமிழ் பயிற்றுநர்களை நீக்கியது உண்மையா?

(ஆ) அதன் காரணம் என்ன ?

(இ) அப்படி பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் நியமனம் செய்ய இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ). இக் கேள்விகளுக்கு இடமில்லை.

சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : தாற்காலிகமாக அரசுத் துறையில் நியமனம் செய்யப்படுகிறவர்கள் நீக்கப்படும் போது எந்த அடிப்படையில் நீக்கப்படுகிறார்கள்? அரசுப் பணித் தேர்வு ஆணைக் குழு மூலமாகத் தேர்தெடுக்கப்பட்டவர்கள் தாற்காலிகமாக நியமிக்கப் பட்டவர்கள் நீக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட புகார்கள் எம்.எல். ஏக்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் எந்த அடிப்படையில் நீக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களோ அந்த அடிப்படையில்தான் நீக்கப்படுகிறார்கள்.

திரு. ரா. மார்க்கப்பந்து : குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் கல்வித் தகுதி இல்லை, வயது வரம்பு சரியில்லை என்ற காரணத்தைக் காட்டி யார் யார் நியமிக்கப் பட்டிருந்தார்களோ அவர்களை எல்லாம் ஒரே



யடியாக நீக்குகிற உத்தரவைப் போட்டிருந்தார்கள். அது இப்போது அமலுக்கு வந்து கொண்டிருக்கும் காரணத்தால், ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டு காலம் அரசாங்க உத்தியோகத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கூட வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் அரசாங்கத்தோடு போராடி நீதிமன்றத்தைக்கூட நாட வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தக் கஷ்டங்களை நீக்க மனிதாபிமான அடிப்படையில் யார் யார் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர்களை ரெகுலரைஸ் செய்ய, முறைப்படுத்த இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசாங்கம் செயல்படுவதற்குரிய சட்டங்கள், விதிகள், இருக்கின்றன. அவைகளுக்கு உட்பட்டுத்தான் நாங்கள் உத்தரவுகளைப் போட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளிலே பணியாற்றுகின்ற தகுதி பெற்றவர்களை கல்லூரிகளுக்கு புரமோஷனில் பயிற்றுநர்களாக நியமனம் செய்கிறார்கள், ஆனால் அவர்களுடைய பணியை ரெகுலரைஸ் செய்ய அரசாங்கம் தவறிவிட்டது. ஆறு ஆண்டுக் காலம் வரையில் பணியாற்றியவர்கள் திரும்பவும் உயர்நிலைப் பள்ளிகளுக்கே அனுப்பப்படுகிறார்களே, இந்த முறையைத் தவிர்த்து அவர்கள் தொடர்ந்து கல்லூரிகளிலே பணியாற்றக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தருகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த பயிற்றுநர் பதவிகளுக்குச் சென்றவர்கள் நீண்டகாலமாக அங்கேயே பணிபுரிகிறார்கள், அதே பதவியில் பணியாற்ற வேண்டிய நிலைமைதான் இருந்தது; அவர்கள் பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு வேண்டுமென்று கேட்டு பதவி உயர்வு தராத நிலை இருந்தது. ஆனால் இப்போது 15 பேர்க்ளுக்கு பதவி உயர்வு தரப்பட்டதாகத் தெரிகிறது. இன்னும் அதிகமான பேர்களுக்குப் பதவி உயர்வுகள் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நாம் புதிய உத்தரவின்மூலம் 5 ஆண்டுக் காலம் பணி செய்தவர்களை எல்லாம் அந்தத் தகுதிகள் இருக்குமானால் உடனடியாகப் பதவி உயர்வு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 பிப்ரவரி 28

திரு. ஜே. ஜேம்ஸ் : கல்லூரிகளில் 10(ஏ) (1) விதியின்படி பலர் நியமிக்கப்பட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றியும்கூட பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நியமனம் செய்யப்பட்டவர்கள் வருகிறபோது இவர்களை மாற்றிவிடுகிறார்கள், பிறகு மீண்டும் அரசு வேலையில் சேருவதற்கு வாய்ப்பு இல்லாத முறையில் அவர்களுடைய வயது வரம்பு அதிகமாகிவிடுகிறது. ஆகவே அவர்களையெல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பாமல் நேரடியாகவே ரெகுலரைஸ் செய்வதற்கான முறையில் விதி முறைகளைத் திருத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் மற்றவர்களும் 5, 6 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தாலும்கூட அவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் தேறவில்லை என்ற காரணத்தால் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள் என்பது உண்மையா? இந்த ஆண்டு அப்படி எத்தனை பேர்கள் நீக்கம் செய்யப்பட்டார்கள்? அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் தகவல் அளிக்கலாம்.

*307. வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1973ஆம் ஆண்டில் அரசு கலைக்கல்லூரிகளில் தமிழ் பயிற்றுநர் (Tutors) பதவிகளுக்காக அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் நியமனம் செய்யப்பட்டார்கள்?

(இ) இன்னும் எத்தனை பேர் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 120 பேர்கள், (ஆ) 103 பேர்கள். (இ) 17 பேர்கள்.



1978 பிப்ரவரி 28]

மீதமுள்ள 17 பேர்களுக்கும் தற்போது பயிற்றுநர் பதவி ஏதும் காலியில்லாததால் நியமன ஆணை வழங்க இயலாது. ஆயினும் பணியிடம் ஏற்படும்போது அவர்களுக்கு நியமன ஆணை வழங்கப்படும்.

சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த தமிழ் பயிற்றுநர்கள பதவிக்காக 1973ஆம் ஆண்டிலே கால் பார் செய்யப்பட்டு 1974ஆம் ஆண்டிலே இண்டர்வியூ நடத்தப்பட்டு, 1975 ஆம் ஆண்டிலே அவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதால் உயர்நிலைப் பள்ளிகளில் அவர்கள் பதவிகளை இழந்து விடுகிறார்கள். அப்போது அவர்களுக்கு வயது எவ்வளவு இருக்கும் என்பதை நாம் யூகித்து அறிந்து கொள்ளலாம். கல்லூரிகளிலேயும் அவர்கள் பதவிகளை இழந்து விட்டிருக்கிறார்கள். இப்படி 17 பேர்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அவர்களுக்கும் உடனடியாக வேலை கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, காலி இல்லாத இடத்தில் பதவியில் அமர்த்த இயலாது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதிலிறுத்தார்கள். ஆனால் நெருக்கடி காலத்திலே எத்தனை பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்? அவ்வாறு அனுப்பப்பட்டவர்களையும் மீண்டும் பணியில் அமர்த்த அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அனுப்பப்பட்டதாக கணக்கு எதையும் நான் சொல்லவில்லை.

திரு. க. சுப்பு : பயிற்றுநர்கள் என்று தேர்ந்தெடுக்கப்படுகிற போது ஒரே தகுதி, ஒரே ஆற்றல் இருந்தாலும்கூட இரண்டு பிரிவுகளாக அவர்கள் வைக்கப்படுகிறார்கள். அப்படியில்லாமல் ஒரே பிரிவு ஆக அதை ஆக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் கோரிக்கையை வைத்துப் போராட்டம் கூட நடத்துகிறார்கள். அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இனிமேல் அதுதான் நடைமுறையாக இருக்கும்.

[1978 பிப்ரவரி 28

## புதுக்கோட்டை மாவட்டத்தில் முதன்மைக்கல்வி அலுவலகம்.

*308 வினா—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் தனியாக முதன்மைக் கல்வி அலுவலகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்று தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு இவ்வளவு நாட்களாகியும் இதுவரையில் தனியாக முதன்மைக் கல்வி அலுவலகம் இல்லாமல் இருப்பது பெரிய குறையாக இருப்பதால் வருகின்ற கல்வி ஆண்டுக்கு முன்பாகவே இந்த அலுவலகம் திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பரிசீலனை முடிந்தவுடன் முதன்மைக் கல்வி அலுவலகம் ஏற்படும்.

## தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகள்.

*309 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) புதிய மருத்துவ மனைகள் கட்டத் திட்டமுள்ளதா ?

(இ) ஆம் எனில், இவ்வாண்டு எத்தனை இடங்களில் கட்டப்படும் ?



1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகளின் எண்ணிக்கை—நான்கு.

1. சென்னை (அயனாவரம்).
2. சென்னை (கலைஞர் கருணாநிதி நகர்).
3. மதுரை.
4. கோவை.

(ஆ) ஆம்.

(இ) சேலம், வேலூர் ஆகிய இரண்டு இடங்களில் கட்டப்படும்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, கோவையிலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் போதிய அளவிற்குப் படுக்கை இல்லாத காரணத்தினால் நோயாளிகள் அங்கேயிருந்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவது அரசுக்குத் தெரியுமா ? எனவே, அங்கே மேலும் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள மருத்துவமனையை நானும் இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் 9 ஆம் தேதி இரவு 12-20 மணிக்கு இன்ஸ்பெக்ஷன் செய்திருக்கிறோம். அன்று காலையிலும் செய்தோம். இப்படிப்பட்ட புகார் எங்களிடம் வரவில்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் யூனிபார்ம் அணிய வேண்டுமென்று சட்டம் இருந்தாலும் அதை மீறுகின்ற வகையிலே யூனிபார்ம் உடை அணியாமல் சாதாரண உடையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நான் இன்ஸ்பெக்ஷன் செய்தபொழுது கோவையிலே அப்படி டாக்டர்கள் இருந்ததைப் பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, சிங்காநல்லூரிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் சுகாதார முறைப்படி . . . . . . . . . .

[1978 பிப்ரவரி 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அடுத்த கேள்வி. இப்பொழுது இருக்கும் கேள்வியைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இ.எஸ்.ஐ. மருத்துவமனை நம்முடைய மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இருக்கிறது. அவைகளில் மருத்துவர்களும் சரியாகப் பணியாற்றுவதில்லை, மருந்துகளும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்று தொழிலாளர்கள் மத்தியில் சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் சரியான முறையில் இன்ஸ்பெக்ஷன் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி ஏதாவது பரிசோதனைகள் நடைபெறுகிறதா? அப்படி நடைபெற்றிருந்தால் விவரம் என்ன என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய குற்றச்சாட்டு ஓரளவுக்கு உண்மை. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் துறை அமைச்சர் என்ற முறையில் சென்னையிலிருந்து செங்கோட்டை வரையில் அநேகமாக எல்லா மருத்துவ மனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் தனியாகவும், அதிகாரிகளுடனும், சட்டமன்ற உறுப்பினர்களுடனும் பரிசோதனை செய்திருக்கிறேன். ' அப்பிரிஸியபில் இம்ப்ரூவ்மெண்ட் ' பாராட்டக்கூடிய அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் அவர்கள் பருவ காலத் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்கள் என்ற காரணத்தால் பயன்படுத்த முடியாமல் போகிறது. மாநில லேபர் அட்வைசரி போர்டு, இந்தத் திட்டத்தைச் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. இந்த அரசு உடனடியாக அவர்களுக்கும், இ.எஸ்.ஐ. திட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி முடிவெடுக்க வேண்டியது மத்திய அரசு. இருந்தாலும் அண்மையிலே கூடயிருக்கின்ற மாநில அட்வைசரி போர்டு மூலம் மீண்டும் வலியுறுத்த மாண்புமிகு உறுப்பினரவர்கள் சார்ந்த இயக்கத்திற்கும் வாய்ப்பு கிடைக்கலாம்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, மருத்துவ மனைகளில் இருக்கும் மருந்துகளில் 90 சதவிகிதம் வெளியிலே விற்கப்படுவதாகவும், ஒரு மருத்துவமனையில் ஊசி மருந்துக்குப் பதிலாக மண்ணெண்ணெயை ஏற்றியதாகவும் முதலமைச்சரவர்



1978 பிப்ரவரி 28]

கள் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவரது செல்லப் பிள்ளையாக, மண்டு மந்திரி என்று அழைக்கப்படும் அமைச்சரவர்கள் அதைத்தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, செல்லப்பிள்ளை என்று சொல்வதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னது மருத்துவமனை. இது தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை.

* 310 வினா—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை அருகில் உள்ள சிங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சூட்ட வேண்டுமென்ற திட்டம் கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தினை மறுபரிசீலனை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, கோவையை அடுத்துள்ள சிங்காநல்லூரிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அறிஞர் அண்ணாவினுடைய பெயரை வைக்க வேண்டுமென்பது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சொல்லி வருகின்ற ஒன்று. அதனைக் கைவிட்டு விட்டதா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று 1969-ல் அரசு முடிவெடுத்தது. தொழிற் சங்கங்கள் திரு. என்.ஜி.ஆர். அவர்கள் பெயரை வைக்க வேண்டுமென்றிருந்தது. ஆனால், மத்திய அரசின் ஆணையின்படி யாருடைய பெயரும் வைக்கக் கூடாது என்ற காரணத்தினால், யாருடைய பெயரும் வைக்கப்படவில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே அரசு ஏற்கனவே ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. அந்த முடிவினுடைய அடிப்படையில் மீண்டும் ஏதாவது பெயர் வைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு உத்தேசம் இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அறிஞர் அண்ணாவினுடைய பெயரை அந்த மருத்துவமனைக்கு வைப்பதிலே சிக்கல் இருப்பதாகவும் மத்திய அரசிடமிருந்து அதற்கு அனுமதி வேண்டுமென்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அண்ணாவினுடைய பெயரை அம் மருத்துவமனைக்கு வைக்க மாநில அரசு மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இங்கே மத்திய அரசு என்பது, அரசு ஈட்டுறுதிக் கழகம் என்று ஒன்றிருக்கிறது—அதைக் குறிக்கிறது. அதனுடைய முடிவு இது. முடிந்துபோன பிரச்னையை மீண்டும் எடுப்பது அவ்வளவு உசிதம் அல்ல என்று கருதப்படுகிறது.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, கோயம்புத்தூரிலே இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கு விடுமுறை தருவதில் அவசர காலத்தில் பின்பற்றப்பட்டுவந்த முறையை, இந்த அரசாங்கமும் தொடர்ந்து கடைப்பிடிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, தொழிலாளர்களுக்கு மருத்துவர்கள் விடுமுறை தர மறுக்கிறார்கள். அதனை நீக்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு லீவு தருவது அவர்களுக்குள்ள நோயைப் பொறுத்தது. அதை நிர்ணயிக்க வேண்டியவர்கள் மருத்துவர்கள்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரர்களே இந்தப் பெயர் வைக்கும் விஷயத்திலே மறுபடியும் நாங்கள் தலையிட விரும்பவில்லை என்று சொல்வதைப் பொறுத்தவரைக்கும் நான் தலையிடவில்லை. அது அவர்களுடைய இஷ்டம். ஆனால் மத்திய அரசு அதாவது அந்தக் கழகத்தினுடைய தலைமை என்ற அர்த்தத்தில் நீங்கள் இங்கு சொல்லி இருக்கிறீர்கள். அவர்கள் பெயரைப் போடக் கூடாது என்று சொன்னால் மாநில அரசுக்கு ஒரு பெயர் வைக்கக்கூட இன்டிபென்டன்ட் டெசிஷன் எடுக்க அதிகாரம் இருக்கிறதா, இல்லையா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே இது சென்ட்ரல் கவர்ன்மென்ட்டினுடைய பாலிசி. அந்தக் கடிதத்தினுடைய நகலை மாண்புமிகு உறுப்பினருக்கு நாளைய மறுதினம் அனுப்பி வைக்கிறேன்.



திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லும்போது மாநில அரசுக்குப் பெயர் வைக்கின்ற அதிகாரம் இல்லையென்று சொன்னார்கள். இதை வைத்தாவது புதிய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே இந்தக் கழகத்தின் அமைப்பே டெல்லியில் தலைமைப் பீடம். இங்கே இருப்பது அதனுடைய கிளைகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே இ.எஸ்.ஐ. திட்டத்திலே மாநில சர்க்காருடைய பங்கு என்ன ? மத்திய அரசும் பங்கு போடுகிறது—மாநில சர்க்காருடைய பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*311 வினா— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் மருந்து கொள்முதல் செய்வதை பரவலாக்குவது என்ற முறையை அரசு அமுலாக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனால் ஏற்பட்டுள்ள நன்மைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9–40.]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் சப்ளையாகின்ற மருந்துகள் யாவும் ஒரு மையத்திலிருந்து விநியோகிக்கப்படுகிறதா ? அல்லது அந்த மருத்துவமனைகள் இல்லாத பெரிய டிஸ்பென்சரிகள் உட்பட்ட பெரிய Net work of organisations இருப்பதால் இதற்குப் பல இடங்களில் பரவலாக வழங்குவதனால் பலன் இல்லையா, எது சிறந்தது என்பதற்கான விடையை எதிர் பார்க்கிறேன்.

[1978 பிப்ரவரி 28

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே டெல்லியில் உள்ள குழுவால் நிர்ணயிக்கப்படுகிற மருந்துகள். விலைக்கேற்ப அங்கே உள்ள அதிகாரி வாங்கி சென்னையில் உள்ள இரண்டு மருத்துவமனைகள், கோவை, மதுரையில் உள்ள மருத்துவமனைகளில் ஸ்டாக் செய்துவிட்டு அங்கிருந்து மருந்தகங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. எந்தக் கம்பெனியில் வாங்க வேண்டும் என்றும் டெல்லியில் உள்ள குழு நிர்ணயிக்கிறது.. அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் அனுப்பவில்லை என்றால் அந்தந்த ஸ்டாக் செய்யக்கூடிய மருத்துவமனையில் உள்ள அதிகாரிகளுக்கு வாங்குவதற்கு அதிகாரம் இருக்கிறது. அங்கே இருந்தும் குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்கவில்லை என்றால், மருந்தகங்களிலேயே வாங்கி உடனடியாக தொழிலாளர்களுக்குக் கொடுக்க, 200 ரூபாய் டெப்பாசிட், இம்பிரஸ்ட் கேஷ் இருக்கிறது. அப்படி அவர்களும் வாங்க வசதி இல்லை என்றால், தொழிலாளர்களே வாங்கிக் கொண்டால் அதை அவர்கள் 'ரீ இம்பர்ஸ்' செய்யும் வசதி இருக்கிறது. அரசாங்கம் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறது.

<u>திரு. கு. ரமணி :</u> தலைவர் அவர்களே, விலை உயர்ந்த மருந்துகள் பல அரசாங்க இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கிடைக்காமல் டாக்டர்கள் சீட்டு எழுதிக் கொடுத்து வெளியில் இருந்து வாங்கி கொடுங்கள் என்று சொல்வதினால், நோயாளிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாக என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கப் போகிறது ?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, விலை உயர்ந்த மருந்துகள் கிடைக்கவில்லை என்று, எனக்கு இரண்டு இடங்களில் இருந்து புகார் வந்தது. உடனடியாக அந்த மருத்துவமனைகளுக்கு நேரே சென்று Substitute medicine கொடுக்காமல் Special medicine தான் கொடுக்க வேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறேன். கோவையைப் பொறுத்த வரையில் நானும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சென்றிருந்த பொழுது, அப்படிப்பட்ட குறையை யாரும் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் மருத்துவமனைகளில் மருந்துகள் திருட்டுப் போகிறது என்ற குற்றச்சாட்டை வெளியில் பகிரங்கமாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந்தால் தொழிலாளர் நல அமைச்சரிடம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அப்படி ஏதாவது மருந்துகள் திருட்டுப்போனது என்ற புகார் வந்ததா ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அதிகாரிகள் விசாரிக்கப்பட்டார்களா என்ற விவரத்தைத் தெரிவித்தால் சரியாக இருக்கும் ?



1978 பிப்ரவரி 28]

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, மருந்து கொள்முதல் செய்வது பற்றி; திருட்டுப் போவதைப் பற்றி அல்ல.

## "தாசபளஞ்சிகா" வகுப்பினர்.

*312 வினா—திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாசபளஞ்சிகா சாதியைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பொதுமக்கள் கொடுத்த கோரிக்கையின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :</u> கோவையில் உள்ள தாசபளஞ்சிகா மகாஜன சங்கம் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ம் நாள் தேதியிட்ட கோரிக்கை மனுவில் தாசபளஞ்சிகா சமூகம் தமிழ் நாட்டில் 4,350 பேர் அடங்கிய சிறுபான்மை சமூகம் என்றும் கோவை, நீலகிரி மாவட்டங்களில் வசிக்கிறார்கள் என்றும் கூறி, அச் சமூகத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

<u>திரு. சொ. ந. பழனிச்சாமி :</u> தலைவர் அவர்களே, கன்னடியர் என்ற வகுப்பினர் பிற்பட்டோர் வகுப்பினர் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அந்த வகுப்பில் முக்கியமான உட்பிரிவு இந்த தாசபளஞ்சிகா வகுப்பினர். அவர்களை இந்தக் பட்டியலில் சேர்த்திருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன். கல்வி, தொழில் மற்றும் அனைத்துச் சலுகைகளை கன்னடியர்களுக்கு வழங்குவதைப் போல இந்த தாசபளஞ்சிகா வகுப்பினருக்கும் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :</u> தலைவர் அவர்களே, இந்த சலுகை அளிப்பதைப்பற்றி நிலைமை என்ன என்று அறிவதற்காக மாவட்ட அளவிலே உள்ள அந்த சமுதாயத்தின் அதிகாரிகளுடைய கருத்தை அரசாங்கம் கேட்டது. அவர்கள் முதல் அறிக்கையிலே ஒரு கருத்தும், மீண்டும் கேட்டபோது வேறொரு கருத்தும் தெரிவித்த காரணத்தாலே. எந்தக் கருத்தினை ஏற்றுக் கொள்வது என்று அரசு பரிசீலனை செய்கிறது. ஆகவே, கீழ்மட்டத்தில் இருந்து வருகிற தகவல்களில் குழப்பம் இருப்பதாலும், இந்தச் சமுதாயம் எந்த நிலையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும் மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்து அறிக்கை பெற்று பரிசீலனைசெய்ய இருக்கிறது.

[1978 பிப்ரவரி 28

திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவரவர்களே, காரைக்குடி தொகுதியிலும், கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் வாழுகிற செட்டி நாட்டு வணிகர்கள் சமூகத்தையும் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் இதுவரையில் அரசுக்கு வரவில்லை. இனிமேல் வருமானால் ஆராய்ந்து பார்த்து பரிசீலனை செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, மிகவும் பின் தங்கிய சமூகம் என்று இருக்க வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்து, அப்படி பிரிக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அவர் இந்தக் கோரிக்கை எழுப்புவதற்கு முன்பே, 1972-ம் ஆண்டு அப்படி பிரிக்கப்பட்டு, 39 சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருச்சி சௌந்திரராஜன்..

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, ஒரு முக்கியமான கேள்வி.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், தொடர்ந்து மற்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்கவேண்டும், ஏற்கெனவே இரண்டு உறுப்பினர்கள் கையைத் தூக்கிக் கொண்டு இருக்கிறார்கள். திருச்சி ஆர். சௌந்திரராஜன் பெயரைக் கூப்பிட்டு விட்டேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் பின்தங்கியோர் சமுதாயப் பட்டியலில் சேர்ப்பதற்கு என்ன வரைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அந்தச் சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், பொருளாதார நிலைமை, சமூகத்தில் அவர்கள் மதிக்கப்படும் நிலைமை, இவைகள் அத்தனையும் கருத்தில் கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், இன்னும் 8 கேள்விகள் இருக்கின்றன. இன்னும் 15 நிமிடம் தான் கேள்வி நேரம் இருக்கிறது. எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. இதனால் மற்ற நிகழ்ச்சிகளுக்கான நேரம் பாதிக்கப்படும்,

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள மிகவும் பின்தங்கியோர் பட்டியல் 1972-ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள் அதற்காக மெத்த மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் அது அங்கீகரிக்கப்பட்டு இருந்தும், அதற்குரிய ஒரு சலுகை கூட அந்தச் சமூகத்தினருக்குக் கொடுக்கப்படவில்லை. கல்விச் சலுகை கொடுத்து வந்தார்கள். அதையும் எடுத்து விட்டார்கள். ஆகவே, அந்த மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ந்துள்ள சமுதாய மக்களுக்கு பிரத்யேக சலுகைகள அளிக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே அப்போது எழுப்பிய கோரிக்கை, சமுதாயத்தில் தாழ்ந்து இருக்கிற சில ஜாதியினரை மிகவும் பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பது தான். அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு இருக்கிறது. இப்போது அவர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் தரப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிற காரணத்தால், அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்ப : பேரவைத் தலைவரவர்களே, பல்வேறு சமுதாயத்தைச சேர்ந்தவர்கள் தங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஸ்ரீவில்லிப் புத்தூரில் உள்ள மஞ்சள்வார் செட்டியார் என்ற சமுநாயத்தினர் ஏற்கெனவே அந்தக் கோரிக்கையை விடுத்து அலுத்துப்போய் விட்டார்கள். பண்ருட்டியில் இதுபோன்று சமுதாயத்தினர் இருக்கின்றனர், ஆகவே, ஒட்டுமொத்தமாக எந்தெந்த சமுதாயத்தினர் பின்தங்கியோர் சமுதாயம் என்பதை ஆராய்ந்து அது பற்றி பரிந்துரை செய்ய அரசு ஒரு கமிஷன் அமைக்குமா? அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் இருப்பதைத்தான் எழுதிக் கொடுப்பார்கள், கமிஷன் அமைப்பதில் அரசுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு, அது பரிசீலனை செய்து பரிந்துரை செய்தால் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு இயலும். ஆகவே, அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே; 1969-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட சட்டநாதன் குழுவும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பின்தங்கிய எல்லா சமுதாயத்தினருடைய

[1978 பிப்ரவரி 28

பொருளாதார நிலையையும் ஆராய்ந்து அறிய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத், தருணம் இப்போது வந்து இருக்கிறது. மத்திய அரசாங்கம் இதற்காக ஒரு கமிஷன் நியமித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கமிஷனிடத்தில் இந்த கோரிக்கையை எழுப்பி, அதை நாடு முழுவதற்கும் அமுல் நடத்தும் படியாக இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அரிசன மக்கள்—இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்—கிருஸ்துவ மதத்திற்கு மதமாற்றத்தின் காரணமாக அரிசனங்களுக்கு இருக்கும் சலுகைகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். அதற்கு அரசியல் சட்டம் காரணமாக இருக்கிறது. ஆகவே கிருஸ்துவ அரிசனங்களுக்கும் எல்லாச் சலுகைகளையும் கொடுக்கும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்துவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா?

[முற்பகல் 9-50.]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இப்போது அரிசன கிறிஸ்தவர்களுக்கு இரண்டு சலுகைகளைத் தவிர மற்ற எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. கல்விச் சலுகை, வேலைவாய்ப்புச்சலுகை இந்த இரண்டும் அளிக்கப் படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடம் கேட்க வேண்டிய கேள்வியை மாநில அரசிடம் கேட்கிறார்கள். மத்திய அரசிடம் இந்தக் கேள்வியை எழுப்புங்கள்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, உருது பேசும் முஸ்லீம்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்திருப்பதைப்போல தமிழ் பேசும் முஸ்லீம்களையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பார்ப்போம்.

(பல உறுப்பினர்கள் துணை வினாவிற்காக கைகளை உயர்த்திக் கொண்டிருந்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் குறிப்பிட்ட தொகுதி பற்றி கேள்வி கேட்டால் நேரம் மிச்சமாகும். இன்னும் 8 கேள்விகள் இருக்கின்றன. (திரு. துரை முத்துசாமி எழுந்தார்) தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். எல்லோரும் துணை வினா கேட்க வேண்டுமென்று விரும்பினால் முடியாது. பரவலாக எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.



1978 பிப்ரவரி 28]

திரு. துரை முத்துசாமி : நான் அரை மணி நேரமாக ஒரு துணை வினாவிற்கு கையைத் தூக்கிக் கொண்டு இருக்கிறேன். இன்னும் எனக்கு வாய்ப்புத் தரவில்லை. அதனால்தான் கேட்கிறேன்; இது ஒரு முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கும் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். ஓர் உறுப்பினருக்கு எல்லாக் கேள்விகளிலும் துணை வினா கேட்க வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றில்லை. உங்களுக்கு இந்தக் கேள்விக்கு வாய்ப்புத் தரவில்லையானால் நீங்கள் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்புத் தந்திருக்கிறேன். ஆகவே, கொடுத்துதான் ஆகவேண்டுமென்று நீங்கள் வற்புறுத்தக் கூடாது. இருக்கின்ற நேரத்தையும் பொருளையும் பொறுத்து, அதற்கேற்றவாறுதான் சந்தர்ப்பம் தர முடியும். ஒரு மணி நேரத்திற்குள் 20 கேள்விகள் முடிக்கப்பட வேண்டும். அதை உறுப்பினர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும், அடுத்து திரு. லத்தீப் அவர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, பொருளாதார அடிப்படையில் தான் முக்கியமாகச் சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி இருந்தால் ஒரு தாழ்த்தப்பட்டவர் கிறிஸ்தவராக மாறியதும் பொருளாதார நிலைமை மேம்பட்டு விடுவதில்லை, சலுகைகளில் கல்விச்சலுகையும் வேலைவாய்ப்புச் சலுகையும் தான் முக்கியமானவை. இவைகள் இல்லாமல் மற்ற சலுகைகள் கொடுத்தும் அவ்வளவாகப் பயனளிக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கும் கல்விச் சலுகையும் வேலைவாய்ப்புச்சலுகையும் அளிக்கப்படுமா? அதோடு முஸ்லீம்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தர்பாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு மதங்களையும் குழப்புகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் எப்போது கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். * * இந்திய அரசு அரசியல் சட்டத்தில் விதித்திருக்கிற விதிமுறை காரணமாக இந்த இரண்டு சலுகைகளையும் கொடுக்க முடியாமல் இருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, தற்போது 'குரூப் ஒன் சர்வீஸ்' எழுதுவதற்கு பிற்பட்டோர் வயது வரம்பு 31 என்றிருக்கிறது. அதை எடுத்துவிடும் திட்டம் இருக்கிறதா? அதோடு கல்வராயன் மலையின் மேல் பகுதியில் இருக்கிறவர்களை

---

*60 ஆம் பக்கத்தில் கண்டுள்ள மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மலைஜாதியினர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்; ஆனால் அடிவாரத்தில் இருக்கிறவர்கள் என்ன ஜாதி என்று குறிப்பிடப்படாமல் அவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களையும் மலைஜாதியினர் பட்டியலில் சேர்த்து எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அப்படி கோரிக்கை வருமானால் அதைப் பற்றி ஆராய்ந்து பரிசீலிக்கப்படும்.

(திரு எம். ஆறுமுகம் அவர்கள் எழுநதார்கள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மதுராந்தகம் ஆறுமுகம் கேட்கட்டும்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, பின்தங்கியோர் பட்டியலில் இருப்பவர்களுக்கு 31 சதவீதம் ஒதுக்கப்படுவதை மிகப் பின்தங்கியோருக்கு அதில் பாதி பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று அரசுக்கு ஏதாவது குறிப்பு வந்திருக்கிறதா? குறிப்பு வந்து இருக்கிறது என்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட கோரிக்கையை சில சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய இருக்கிறது.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் கொளத்தூர் மலைப் பகுதியில் வசித்து வருகிற கொண்டா ரெட்டி பழங்குடி மக்கள் ஏற்கெனவே அனுபவித்து வந்த கல்வி மற்றும் பிற சலுகைகள் தற்போது மேட்டூர் தாசில்தார்—சப் கலெக்டர் ஆகியோரால் மறுக்கப்பட்டு வருகிறது என்று பொதுமக்களிடமிருந்து அரசுக்கு மனு வந்திருக்கிறதா? அது பற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் வரவில்லை. வருமானால் நிச்சயம் அரசு பரிசீலனை செய்யும்.





## கல்வராயன் மலைப்பகுதிக்கு மின் இணைப்பு

* 313 வினா: திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலைக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இம்மக்கள் வாழும் பகுதிகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் மின் இணைப்புத்தருவது சம்பந்தமாக தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ரூ. 10 இலட்சம் மானியமாக வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலைப் பகுதியில் நடப்பு ஆண்டில் இரண்டு கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

திரு துரை முத்துசாமி: எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு எவ்வளவு தொகை என்பதை அறிவிக்க இயலுமா? அதோடு கல்வராயன் மலையிலே மின் இணைப்புத்தருவதற்கு மின்சார இலாகாவைச் சேர்ந்தவர்கள் யோசனை கூறினால் எடுத்துக்கொள்ளப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த நிபுணர்களின் கருத்துக்கள் எடுத்துக்கொள்ளப் படும் என்று கூறினார்கள். அதுபற்றி எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி அமைக்கத் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தத் திட்டம் கல்வராயன் மலை தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலை சேலம் மாவட்டம், பச்சைமலை சேலம் மாவட்டம் ஆகிய பகுதி களில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் அரசம்பட்டி, மொட்டம்பட்டி ஆகிய கிராமங் களுக்கும் விஸ்தரிப்பது குறித்து பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கல்வராயன் மலையைப் பற்றிய கேள்வி அதைப் பற்றி மட்டும் நீங்கள் கேளுங்கள்.

திரு சி. பழனிமுத்து: சேலம் மாவட்டம் கல்வராயன் மலையிலும் தென்னாற்காடு மாவட்டம் கல்வராயன் மலையிலும் இந்தத் திட்டம் இணைந்துள்ளதாகக் கூறப்பட்டது. கல்வராயன்

மலைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது கருமாந்துறை, செம்படுகை, மண்ணூர் ஆகிய கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு பெ.சௌந்தரபாண்டியன்:</u> தமிழ்நாடு மின் வாரியம் ரு 123 லட்சத்தில் பழங்குடி மக்கள் நலவாழ்வுக்காக துணைத்திட்டத்தின் கீழ் இம்மக்கள் வாழும் பகுதிகளுக்கு மின் இணைப்பு தர ஒரு செயற்குறிப்பை அரசுக்கு அனுப்பியது. இதனைப் பரிசீலத்து பின்னர் அதன் முதல் கட்டமாக 1977 ஆம் ஆண்டுக்காக ரூ 10 லட்சம் அரசு மானியமாக வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## சென்னை நகரில் புதிய சாலை அமைப்பு

*314 வினா : <u>திரு. து. புருஷோத்தமன் :</u> மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணாசாலைக்கு இணையாக மாற்றுச் சாலையொன்று அசோக்நகர், கோடம்பாக்கம் வழியாக அமைக்கும் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> குறிப்பிடப்பட்டுள்ளசாலை அண்ணா சாலைக்கு இணையாக அமைக்கப்படும் சாலை அல்ல. அண்ணா சாலையில் 12·4 கிலோ மீட்டரிலிருந்து பிரித்து கிண்டி தொழிற்பேட்டை, அசோக் நகர், கோடம்பாக்கம் வழியாகப் பூவிருந்தவல்லி தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து சென்னை திருவள்ளூர் தேசிய நெடுஞ்சாலையில் 11·7 கிலோ மீட்டரில் சேரும் நீளம் வரை போடப்படும் மாற்று வழிச் சாலையாகும். இச்சாலையின் பணி, உலக வங்கித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இப்பணி, இவ்வாண்டிலேயே துவங்கப்பட்டு படிப்படியாக 1980-க்குள் முடிக்கப்படும்,

<u>திரு. து. புருஷோத்தமன் :</u> தலைவரவர்களே, அண்ணாசாலையில் தற்போது நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி உள்ளது. அதற்கு மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மாற்று வழித் திட்டத்தின் அடிப்படையிலேதான் இது அமைக்கப்பட்டு வருகிறது.





## பணகுடி அனுமான் ஆற்றுப்பாலம்

* 315 வினா : <u>திரு. யா. சை. மு. யூசுப் :</u> மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசீய நெடுஞ்சாலை எண் 7-ல் உள்ள நெல்லை—நாகர்கோயில் சாலை 0·56 கி.மீ. உள்ள பணகுடி—அனுமான் ஆற்றுப்பாலம் அகலப்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் இருந்து கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> (அ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. யா. சை. மு. யூசுப் :</u> தேசீய நெடுஞ்சாலை எண். 7-ல் உள்ள நெல்லை—நாகர்கோயில் சாலையில் உள்ள பணகுடி—அனுமான் ஆற்றுப்பாலத்தை அகலப்படுத்துவதில் சிக்கல் இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பாலத்தை அகலப்படுத்த எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> பேரவைத் தலைவரவர்களே, தற்போது மதுரை-கன்னியாகுமரி சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் உள்ள பணகுடி மாற்று வழிச்சாலை அகலப்படுத்தும் திட்டம் ஆகியவைகளுக்கு மத்திய அரசு அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளும் அழைக்கப்பட்டு வேலை தொடங்கும் நிலையில் இருக்கிறது.

(முற்பகல் 10-00)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை அனுமதியுடன் மேலும் சில நிமிடங்கள் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

<u>திரு. யா. சை. மு. யூசுப் :</u> தற்போது பணகுடி நகருக்கு உள்ளேயிருந்து செல்கிற தேசிய நெடுஞ்சாலைக்கு ஒரு மாற்று வழிச்சாலை அமைக்கப்பட்டாலும் எல்லாப் போக்குவரத்துகளும் தற்போது அனுமான் ஆற்றுப்பாலம் வழியில் உள்ள பாலத்தை அதைக் கடந்து செல்வதால்—அந்தப் பாலம் குறுகலாக இருப்பதால்—அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் அந்தப் பாலத்தை அகலப்படுத்த ஏதாவது ஒரு தொகையில் இருந்து ஸ்டேட் ஹைவேஸ் பண்ட் அல்லது நேஷனல் ஹைவேஸ் பண்டிலிருந்து ஏதாவது தொகையை எடுத்து இந்தப் பாலத்தை அகலப்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது அமைக்கப் படயிருக்கிற மாற்றுவழிச்சாலை மத்திய அரசு நிதியில் இருந்து தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்தில் மேற்கொள்ளப் பட இருக்கிறது. அந்த மாற்றுவழிச்சாலையை தேசீய நெடுஞ் சாலைப் பிரிவு ஏற்றுக் கொண்ட பிறகு ஏற்கெனவே இருந்த பாலம் மாநில அரசுக்கு உட்பட்டு வந்துவிடும். பிறகு அந்தப் பாலத்தை அகலப்படுத்துவது பற்றி யோசிக்கலாம்.

## பட்டனப்பாக்கத்தில் கடல் அரிப்பு

* 316 வினா: திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு. எஸ். கணேசன் :

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்தில் பட்டினப்பாக்கம் பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) பட்டினப்பாக்கம் பகுதியில் அகில இந்திய வானொலி யையும் ஓசியானிக் ஓட்டலையும் இணைக்குமிடத்தில் கடற்கரை சாலையில் ஆகஸ்டு 1977-ல் சுமார் 60 மீட்டர் நீளத்திற்கு கடல் அரிப்பு ஏற்பட்டு சேதமடைந்துவிட்டது. இக்கடல் அரிப்பு நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையினரால் உடனே துரிதகதியில் கவனிக்கப்பட்டு ரூபாய் 1.23 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப் பட்டுவிட்டது. அக்டோபர் 1977-ல் பெய்த பெருமழையின் கார ணமாக இச்சாலையில் மீண்டும் கடல் அரிப்பு ஏற்பட்டது. இதனைப் பழுதுபார்க்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறி யாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த கடல் அரிப்பை பழுதுபார்ப்பதாகச் சொல்கிறார்கள். கடலரிப்பைத் தடுக்க கற்களைப் போடுவதா ? அந்தச் சாலை இரண்டு முறை பழுத டைந்துவிட்டது. எனவே அந்தச் சாலையை நல்ல முறையில் மீண்டும் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் மாற்றுச்சாலையில் உள்ள மின்சார விளக்குகள் பல மாதங்களாக எரியவில்லை, அதை எரியச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 7.7 இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் பகுதியை மீண்டும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மின் விளக்குகள் எரியவும் நடவடிக்கை எடுக்கப்படும்.



1978 பிப்ரவரி 28]

## திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம்.

* 317 வினா : திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) திருவண்ணாமலையில் உள்ள பால் குளிரூட்டும் நிலை யத்தை விரிவுபடுத்தும் நோக்கம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

(இ) திருவண்ணாமலை, போளூர் பகுதிகளில் புதியதாக பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவக் கோரி வந்துள்ள விண்ணப்பங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) திருவண்ணாமலை யில் உள்ள பால் குளிர்ப்பதன நிலையத்தை தினம் 40,000 லிட்டர் வரை குளிர் செய்யும் அளவிற்கு விரிவுபடுத்தத் திட்டம் உள்ளது.

(ஆ) இவ்விரிவுபடுத்தும் பணி 1978-79-ல் தொடங்கி படிப்படியாகச் செயல்படுத்தப் பெறும்.

(இ) தேவையான அடிப்படை பணிகளை பலப்படுத்த செயல் முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : கிராமங்களில் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும் என்று ஏற்கனவே அதற்குப் பணம் கட்டிய கிராமங்கள் எவ்வளவு என்று அறிவிப்பீர் களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருவண்ணாமலை பகுதியில் 14 கிராமங்களில் இருந்து பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் ஏற்படுத்துமாறு வேண்டுகோள் வந்துள்ளன. அவைகள் ஆராயப்பட்டு வருகின்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள் கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பரமக்குடியில் பால் பதனிடு சென்டர் ஒன்று அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களா கோரிக்கை இருந்து வருகிறது. எப்போது அது ஆரம்பிக்கப்படும்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பரமக்குடிப்ற் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1978 பிப்ரவரி 28

## மரவள்ளிக்கிழங்குக்கு நியாய விலை.

* 318 வினு : திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி, பரவாக்கோட்டை, மேலவாசல் பகுதியில் பயிரிடப்படும் மரவள்ளிக்கிழங்குக்கு நியாயமான விலை கிடைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படும் விஸ்தீரணம் 95 ஏக்கர் மட்டுமேயாகும். விற்பனையில் எந்தவித கஷ்டமும் இல்லாததால் நடவடிக்கை யாதும் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மன்னார்குடி பகுதியில் அதிகமாக மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கிற வகையில்—தஞ்சை மாவட்டத்தில் வேறு தொழிற்சாலைகள் இல்லையென்ற காரணத்தாலும்—அங்கு விவசாயிகள் உற்பத்தி செய்கிற மரவள்ளிக்கிழங்கை கோவைக்கு எடுத்துச் சென்று அவர்கள் விற்பனை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது—மரவள்ளிக்கிழங்கைக் கொண்டு பல பொருள்கள் தயாரிக்கிற ஒரு ஆலையை மன்னார்குடி பகுதியில் நிறுவ அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்குத் தேவையான மூலப் பொருள் போதிய அளவிற்குக் கிடைக்க வேண்டும். அப்படி மூலப் பொருள் கிடைத்தால், அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருந்தால் இந்த அரசு உடனடியாகப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வத்தலக்குண்டு பழம் பதனிடும் தொழிற்சாலை.

* 319 வினு : திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டுவில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்ட பழம் பதனிடும் தொழிற்சாலை தற்பொழுது செயல்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், காரணம் என்ன ?



1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) வத்தலகுண்டில் தனியாகக் கூட்டுறவுச் சங்கம் எதுவும் பழம் பதனிடும் தொழிலின் கீழ் செயல்படவில்லை. தமிழ் நாடு மாநில பனைவெல்ல கூட்டுறவு இணையம் அவ்வூரில் ஒரு பழம் பதனிடும் அலகு ஒன்றைச் செயல்படுத்தி வந்தது. அது இலாபகரமாகச் செயல்படாமையால் மூடப்பட்டு விட்டது.

திரு. ரா. கா. சு. தண்டபாணி : பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்ற இடங்களில் இப்படிப்பட்ட தொழிற்சாலை அமைக்கப்படுகிறதா அல்லது அதிகமாக விற்பனையாகின்ற அதாவது மார்க்கெட் இருக்கும் இடங்களில் ஏற்படுத்தப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், கிஸான் போன்று பழச்சாறுகளை பாட்டில்களில் தயாரித்துக் கொடுக்கும் திட்டம் ஏதாவது அரசினிடத்தில் இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பழம் அதிகமாக உற்பத்தியாகின்ற இடங்களில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை வைப்பதுதான் லாபகரமாக இருக்கும் என்று காதி கிராமத் தொழில் வாரியம் முடிவு செய்திருக்கிறது. எங்கெல்லாம் பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன, எங்கெல்லாம் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம் என்று காதி தொழில் வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிஸான் போன்ற பதனிடப்பட்ட பழச்சாறு தயாரித்து அளிக்கும் திட்டம் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கிராம கைத்தொழில் வாரியம் பழங்களை பதனிடும் தொழிற்சாலைகளை இரண்டு மூன்று இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறது. இங்கிருந்து பழச்சாறு, ஜாம் போன்றவைகள் நல்லமுறையில் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன் : மலர்புரி என்று அழைக்கப்படுகிற நிலக்கோட்டை, திண்டுக்கல் பகுதியில் வாசனை நிறைந்த மல்லிகை, செவ்வந்தி, ரோஜா போன்ற மலர்கள் ஏராளம் கிடைக்கின்றன. இவைகளிலிருந்து எஸென்ஸ் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கலாம் என்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விவரங்கள் வந்திருக்கிறதா, அங்குள்ள மக்களிடமிருந்து இதற்கான கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா ? அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூலக் கேள்வி, பழங்களைப் பற்றியது, பூக்களைப்பற்றி அல்ல.

திரு. என். பழனிவேல் : பழனிப் பகுதியைச் சேர்ந்த ஆயக்குடியில் நல்ல முறையில் கொய்யா, மா, பலா போன்ற பழங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன என்பது அரசுக்கு நன்கு தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே அந்தப் பகுதியில் பழங்களைப் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் வற்புறுத்தி வருகிறார்கள். ஆகவே அங்கே பழங்கள் பதனிடும் ஒரு தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, எந்த எந்த இடங்களில் பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன என்கின்ற ஒரு குறிப்பை இப்போது காதி கிராமத் தொழில் வாரியம் தயாரித்து வருகிறது. இது முடிவு செய்யப்பட்ட பின்னால் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை எங்கெங்கு ஏற்படுத்தலாம் என்பதைப்பற்றி வாரியம் முடிவு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கரூரில் உள்ள நெசவு முதலிய கம்பெனிகள்.

*320 வினா : திரு. கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகரில் உள்ள 370 நெசவு, பனியன், சாயக் கம்பெனிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அவைகளை திறக்கவும் தொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) முதல் (இ) வரை : விபரமான அறிக்கை @ சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இங்கு வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுத்திருக்கின்ற விவரங்கள் அல்லாமல் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கரூரில் இவர்களுக்குக்

@ 132ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



கொடுக்க வேண்டிய நூலை மாஸ்டர் வீவர்கள் வேறு இடங்களுக்குக் கடத்திக் கொண்டு போய், மற்ற இடங்களில் விற்பனை செய்துவிடுகிறார்கள். இதனால் சாதாரண நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இப்படி கடத்திக் கொண்டு போய் நூலை விற்கின்றவர்கள் பேரில் கடுமையான உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கரூர் பகுதியில் ஏற்பட்ட பிரச்னை, கைத்தறித் துறைக்கு என்று சில ரகங்களை ஒதுக்குகிறோம். அதே நேரத்தில் விசைத்தறிக்கென்று ஒதுக்கப்படுகின்ற ரகங்களை மீறி விசைத்தறியாளர்களால் தயாரிக்கப்படும்போது, அவற்றைத் தடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதற்கான கோரிக்கைகளை வைத்து வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. விசைத்தறிக்கு இன்னின்ன ரகங்கள் என்று ஒதுக்கிக் கொடுத்து. அதற்கென்று பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டு வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நூல்களைக் கடத்திக் கொண்டுவிற்கப்படுகின்றது என்பது உண்மையல்ல. கைத்தறிக் கென்று ஒதுக்கப்படுகின்ற நூல்களை அவர்களே தங்கள் ரகங்களைத் தயாரிக்க முடியாமல் வேறுவகையில் மறைமுகமாக கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதுபோலவே விசைத்தறிகளுக்கு நூல் கொடுக்கப்படுகிறது.

உதாரணமாக பெட்ஷீட் 47 அங்குலத்திற்கு குறைவாக விசைத்தறிகள் தயாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 47 அங்குலத்திற்கு மேல் கைத்தறிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. இவைகளை பின்பற்றுவதில், சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக வேலைநிறுத்தங்கள், போராட்டங்கள் ஏற்படுகின்றன. இப்போது அரசாங்கம் மிகக் கண்டிப்பாக இருந்து, ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இதுசம்பந்தமான குழப்பங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–10]

திரு. ரா. உமர்நாத் : தலைவர் அவர்களே, முதல் போராட்டம் ஏற்பட்டது, சமரச ஏற்பாட்டிற்குப் பிறகு அது சரியாக அமுல் நடத்தப்படவில்லை என்ற குறைகள் தொழிலாளர்களிடையே உருவானது, அது சரியாக என்போர்ஸ் செய்யப்படவில்லை என்பதால். இரண்டாவது நடந்தது. அவர்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் கறாராக அமுல் நடத்தப்படவில்லை என்பதால், பிராப்பர் என்போர்ஸ்மென்ட், அரேன்ஜ்மென்ட் இதற்காக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன?

[1978 பிப்ரவரி 28

__மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது__: தலைவர் அவர்களே, இந்த ரக ஒப்பந்தத்தை கண்டிப்பாக பின்பற்றுவிட்டால் என்ன விதமான நடவடிக்கை எடுப்பது என்பது சட்டத்திலே கூடத் தெளிவாக இல்லை. இருந்தாலும் கூட, கைத்தறி நெசவாளர்களின் நலனைக் காப்பாற்றுவதற்கு கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை, கைத்தறியிலே தயாரிப்பதற்கு வாய்ப்புத் தராமல் விசைத்தறியிலே தயாரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, விசைத்தறியிலே 20,000 பெறுமான துணிகளைப் பறிமுதல் செய்து, வழக்குமன்றத்திற்குச் சென்று, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு அங்கே எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லாமல், நெசவாளர்கள் ஓரளவிற்கு அமைதியாக வேலை செய்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்__ : விளுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) பார்வையாளர் மாடத்தில் ரகசிய போலீஸ் அதிகாரிகள் (சி. ஐ. டி. க்கள்) இருப்பது குறித்து.

* __திரு. துரை முருகன்:__ ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஏற்கனவே காலரிகளிலும், பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களிலும் அமர தலைவர் அவர்களிடமிருந்தும், எம். எல். ஏ. க்கள் கொடுக்கும் கடிதங்களை வாங்கிக் கொண்டு வருவதுதான் வழக்கம். ஆனால், இன்றைக்கு வழக்கத்திற்கு மாறாக லாபிகளில் பார்க்கிறேன்; பார்வையாளர்கள் மாடத்திலே பார்க்கிறேன், அங்கேயெல்லாம் சி. ஐ. டி.-க்கள் இடத்தை அடைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 4 வரிசைகளில் அவர்கள்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இவ்வளவு சி. ஐ. டி.க்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள் இவ்வளவு ஜரூராக எம். எல். ஏக்களைச் சுற்றிக்கொண்டு இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.



1978 பிப்ரவரி 28]

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ உறுப்பினர் அவர்களுக்கு சி. ஐ. டி.க்களைக் கண்டு இவ்வளவு பயம் ஏன் என்று தெரியவில்லை. அவர்கள் எல்லாம் சி. ஐ. டிக்கள் என்று சொல்வதற்கில்லை. தெரிந்துகொண்டு சொல்ல வேண்டும். சி. ஐ. டி.க்கள் அவர்களுடைய கடமையைச் செய்கிறார்கள். துரை முருகனுக்கு அவர்கள்மேல் இவ்வளவு அக்கறை தேவையில்லை.

__திரு. துரை முருகன் :__ தலைவர் அவர்களே, சி. ஐ. டி.க்காரர்களைக் கண்டு எனக்கு அக்கறை இல்லை; சி. ஐ. டி.க்கு நான் பயப்படவுமில்லை. ஆனால் அவையைச் சேர்ந்த இடத்தில் அவர்கள் தங்களுடைய அனுமதியுடன் வந்திருக்கிறார்களா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். தாங்கள் அவர்களுக்கு அனுமதி ..........

__மாண்புமிகு பேரவைத் தலைவர்__ : தயவுசெய்து உட்காருங்கள். உறுப்பினர் அவர்களுக்கு பேச உரிமை உண்டு. ஆனால் முறையாகப் பேச வேண்டும். நான் எழுந்து நின்று கொண்டிருக்கும்போது உறுப்பினர் அவர்களும் எழுந்து நின்று பேசக் கூடாது. நான் நின்றுகொண்டிருக்கிறேன், நீங்களும் நின்று கொண்டு பேசினால் என்ன செய்வது. நீங்கள் பேசுவதற்கு இப்போதே எழுந்து பதில் சொல்லவேண்டுமென்பதில்லை விவாத மேடையில் தான் அப்படிச் செய்யலாம். இது சட்ட மன்றம். தாங்கள் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும் அவர்கள் சி. ஐ. டிக்களா அல்லது யார் என்று தெரிந்து கொள்ளாமல் பேசுவது சரியல்ல. அப்படிச் சந்தேகம் இருந்தால் என் அறையிலே வந்து கேளுங்கள்; சபையிலே கேட்க வேண்டாம்.

__திரு. துரை முருகன்__ : சி. ஐ. டி. க்கள் என்று நிரூபிக்க தயார்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்__ : சி. ஐ. டி.க்கள் வரலாமா வரக்கூடாதா என்பது வேறு பிரச்சினை. அவைத் தலைவருக்கு அவர்களை அனுமதிப்பதற்கும், அனுமதிக்காமல் இருப்பதற்கும் உரிமை உண்டு. அவர்கள் வாட்ச் அண்டு வார்டின் பிரதிநிதிகள்.

__திரு க. சுப்பு :__ தலைவர் அவர்களே, அவர்கள் தங்கள் அனுமதியின் பேரில் ..............

__மாண்புமிகு பேரவைத் தலைவர்__ : தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் அவருக்காக வக்காலத்து வாங்க வேண்டாம். தாங்கள் பேசுவதாக இருந்தால் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெயிஸ் பண்ணிவிட்டுப் பேசுங்கள். தயவுசெய்து இப்போது உட்காருங்கள்.

[1978 பிப்ரவரி 28

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில்

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, விளக்கம் கேட்கிறீர்கள். இதற்கெல்லாம் இப்போது நேரமில்லை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்கு நீங்கள் இப்போது திருப்பி பதில் சொல்வது நல்லதல்ல. இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கேள்வி போடவில்லை, கிளாரிபிகேஷன் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிளாரிபிகேஷனுக்கு இடமில்லை. எனவே, தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, விசிடர்ஸ் காலரியிலே, இந்த ப்ரிசிங்ஸ்ட்ஸ்-க்குள் வர வேண்டுமானால் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் வரவேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. எனவே, சி.ஐ.டிக்களைத் தவிர மற்றவர்கள் அனுமதி பெற்று வருவதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால், சி.ஐ.டிக்கள் இங்கே வருவதற்கு தாங்கள் அனுமதி வழங்கினீர்களா என்று அறிய விரும்புகிறேன். தங்களுடைய அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காகத்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி வழங்கினேனா இல்லையா என்பதுபற்றியெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். இங்கு ஒன்றும் அது முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இன்றைக்கு தமிழகத்தில் அரசு ஊழியர்கள் எல்லாம் ஸ்ட்ரைக் செய்து போராட்டம் நடத்துவதன் பேரில் அவசரத் தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்கப்பட வேண்டுமென்று கேட்டபோது அரசுத் தரப்பில் அவர்களோடு கலந்து பேசி முடிவுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. அதனால் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டு பேச்சுவார்த்தை நடந்ததாகத் தெரிகிறது. இன்று காலைப் பத்திரிகையைப் பார்த்தால் பேச்சுவார்த்தை........

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு மாரிமுத்து அவர்கள் எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வந்த பிறகு எழுப்பலாம். சம்பந்தப்பட்ட முதலமைச்சர் அவர்கள் இல்லாத நிலையில் அவைத் தலைவர் என்ன செய்ய முடியும்? அதைப்பற்றி இப்போது எழுப்ப வேண்டாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நேற்றைய முன் தினம் நாங்கள் வெளிநடப்புச் செய்தபோது லாபியில் இரண்டு சி.ஐ.டி.க்கள் சுற்றிச் சுற்றி வந்தார்கள். எங்களைச் சுற்றி ஏன் சி.ஐ.டி.க்கள் சுற்றி வருகிறார்கள் என்று சார்ஜென்டைக் கூடக் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாள் அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் இவ்வாறு கேட்கிறார்கள். அவர்கள் செகரடேரியட் ஸ்டாப் ஆக இருப்பார்கள். யார் எங்கே வந்தாலும் நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்? யாராக இருந்தாலும் அவைத் தலைவர் அனுமதியோடு வரலாம். அதிலே ஒன்றும் ஆபத்து இல்லை. தைரியமாக இருக்கலாம்.

## (ஆ) ஓர் உறுப்பினர் விடுதலையானது பற்றிய பேரவைத் தலைவரின் அறிவிப்பு குறித்து.

திரு. இரா. இராசமாணிக்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர். நான் திருச்சி மத்திய சிறையிலிருந்து தண்டனைக் காலம் முடிவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாகவே விடுதலை செய்யப்பட்டு விட்டதாக தாங்கள் சபையில் 24—2—78 அன்று அறிவித்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை அன்றைக்கே தீர்ந்து விட்டது. தயவு செய்து உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோடு பேசி சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டது. இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வரவில்லை.

## (அ) பார்வையாளர் மாடத்தில் ரகசிய போலீஸ் அதிகாரிகள் இருப்பது குறித்து—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் இங்கே சி.ஐ.டி.க்கள் உங்கள் அனுமதியோடு வந்திருக்கிறார்கள் என்று கூறினால் அவர்கள் இங்கே பார்வையாளர்களாக வந்திருக்கிறார்களா அல்லது அவர்கள் கடமையைச் செய்ய வந்திருக்கிறார்களா? அவர்கள் கடமையைச் செய்ய இங்கே என்ன சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் அறியக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு தாங்கள் விளக்கம் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1978 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பிரிசிங்ஸட்ஸ் ஆப்தி ஹவுஸ் என்று சொல்லப்படுகிற சட்டமன்ற வரையறைக்குள்ளே சி.ஐ.டி.க்கள் வருவது சரியாக இருக்காது. ஆனல் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரை சி.ஐ.டி.க்கள் என்று சொல்லுகிருர்கள் என்பது தெளிவாக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்—யாரைப் பார்த்தாலும் சி.ஐ.டி.க்களாகத் தெரி கிறதா ?

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சி.ஐ.டி.க்கள் இங்கு வரலாம், வந்திருக்கலாம் என்று கூறிஞர்கள்........ .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அதை உறுதிப் படுத்த வேண்டாம். சி.ஐ.டி.க்கள் என் அனுமதி பெற்று வந் திருக்கிருர்கள் என்று நான் கூறவில்லை. அவர்கள் சி.ஐ.டி.க்களா என்று நான் விசாரித்தபோது செகரடேரியட் ஸ்டாப் என்று தெரிய வந்தது. அதைப் பற்றி இங்கே இவ்வளவு தூரம் பேச வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் சொன்னேனே தவிர வேறல்ல. பரவலாக வெள்ளை உடை அணிந்தவர்கள் இருக்கி ருர்கள். காக்கி உடையுடன் இல்லை. அவர்கள் வாச் அண்டு வார்டு ஸ்டாப்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்கள் மீது குறை சொல்லுவதற்காக நான் சொன்ன கருத்து அல்ல. சி.ஐ.டி. க்கள் சட்ட மன்ற நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தில் அங்கத்தினர்களிடத்திலேயே நுழைவுச் சீட்டு பெற்றுக்கொண்டு கூட அவர்கள் வந்திருக்கக்கூடும். நான் கூடக் கொடுத்திருக்கலாம். நாஞ்சில் மனோகரன் கூடத் தந்திருக்க லாம். இன்னும் சொல்லப் போனல் அமைச்சர்களாக இருப்ப வர்களுடைய அலுவலர்களே கூட வந்திருக்கலாம். அரசு அலு வலர்கள் கூட வந்திருக்கலாம். அது வேறு விவகாரம்.

ஆனல் தலைவர் அவர்கள் சொல்லுகிறபோது சி.ஐ.டி.க்கள் வரலாம் என்ற கருத்து வந்தது. அப்படி வரலாம் என்று சொல்லு கிற கருத்து சரியல்ல. வந்திருக்கிருர்களா அல்லவா என்பது கூட முக்கியமல்ல. வரலாம் என்ற கருத்து தலைவர் அவர்களிடத்தில் இருந்து வந்த காரணத்தால்தான் நான் இதனைச் சுட்டிக்காட்டுகிறேன். சி.ஐ.டி.க்கள் அனுமதி பெற்று வந்தாலும், அனுமதி பெருமல் வந்தாலும், அவர்கள் தொழில் முறைப்படி தவறி வந்திருப்பார்களானல் அவர்கள் அப்படி வருவது முறையல்ல என்று தலைவர் அவர்கள் தெரிவிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 பிப்ரவரி 28]

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. நான் சொன்னது, அவர்கள் சி.ஐ.டி. என்ற முறையிலே என்னிடம் அனுமதி பெற்று வரவில்லை. அவர்களும் நடவடிக்கைகளைப் பார்க்கலாம் என்று வந்து இருக்கலாம். அவர்களும் மனிதர்கள் தான், அவர்களும் நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு உரிமை இருக் கிறது. சி.ஐ.டி.க்கள் இந்த நடவடிக்கைகளைப் பார்க்கக் கூடாது என்று சொல்ல முடியாதல்லவா ?

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொள்வது, என்ன நடைபெற்றது என்பதல்ல. இனிமேல் என்ன நடைபெற வேண்டும் என்பதைத்தான் கேட்கிறேன். அந்த முறையிலே சி.ஐ.டி.க்கள் அவர்கள் அலுவலாக இங்கே வரக் கூடாது என்ற முறைய தாங்கள் அவைக்கு அறிவிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விசிட்டர்ஸ் காலரியிலே உறுப்பினர்களின் அனுமதிபெற்று யார் வேண்டுமானலும் வரலாம். ஆனல் பிரஸிங்க்ட்ஸ் ஆப் தி ஹவுஸ் என்பதில், சட்ட மன்றத்துக்குள்ளே யாரும் வரமுடியாது. அது போல் சி.ஐ.டி.க்கள், How can they come ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லாபியானலும் சரி, காலரி யானலும் சரி, சி.ஐ.டி.க்கள் என்ற முறையில் அனுமதிபெற்று வரக் கூடாது. ஆனல் அவர்கள் நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டுமென்று அனுமதி கேட்டு வரலாம். ஒவ்வொருவரும் சி.ஐ.டி.யா என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது, உறுப்பி னர்களோ நானே சி.ஐ.டி.யா இல்லையா என்று பார்த்துக் கண்டு பிடிக்க முடியாது. சி.ஐ.டி.க்கள் அதிகாரபூர்வமான முறை யிலே வரக் கூடாது என்று முடிவு சொல்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொருவரும் எழுப் பிக் கொண்டிருந்தால் நேரம் ஆகிறது, 234 உறுப்பினர்களும் இப்படியே எழுப்பிக் கொண்டிருந்தால் என்ன செய்ய முடியும் ?

## (இ) கேள்வி நேரத்தில் அளிக்கப்பட்ட துணை வினா விற்கான விடை குறித்து

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான் எழுப்புவது ஒழுங்குப் பிரச்சினைக்குள் வருகிறதா இல்லையா என்பதைப் பற்றி தாங்கள் முடிவு சொல்லவில்லை. இங்கே நாம் பேசுகின்ற பேச் சுக்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தைப் பற்றி இருப்பதாக இருக்கக் ஏற்கனவே திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பியபோது

கூடாது, அப்படிப்பட்ட குறிப்புகள் ரிக்கார்டுகளிலே இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன், ஆகவே இதை நான் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் * * * *
என்று சொல்வது அந்தச் சமுதாயத்திற்கு ஓரளவிற்குப் பாதகத்தை ஏற்படுத்தும். அதைப்பற்றி விளக்கம் சொல்லி, அதன் மூலம் அப்படிச் சபைக் குறிப்புகளிலே இருந்தால் அவைகளை நீக்க வேண்டுமென்ற முறையில்தான் நான் சொல்லுகிறேன். இதைப் பற்றி தாங்கள் முடிவு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இதைத்தான் நான் குறிப்பிடுவதற்கு எழுந்தேன். தாங்கள் பலமாக உத்திரவைப் பிறப்பித்து என்னை உட்காரச் சொன்னீர்கள். நான் உட்கார்ந்து விட்டேன். இதைப் பற்றி நான் எழுப்ப நினைத்தபோது என்னை உட்காரச் சொன்னது வேதனைக்குரிய விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சமுதாயத்தை இழிவுபடுத்துகின்ற முறையில் அமைச்சர் அவர்கள் சொன்னதை அவைக்குறிப்புகளிலிருந்து எடுத்து விட வேண்டும் அல்லது அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்லி விட்டால் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்ட கருத்தும், உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட கருத்தும் என்னைப் பொறுத்த வரையில் ஏற்புடைத்தான கருத்தாக நான் கருதுகிறேன்

* * என்பதைவிட மனமாற்றம் காரணமாக மாறுகிறார்கள் என்பதாக இருக்குமானால் அபிப்பிராயபேதத்திற்கு இடம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அப்படி வருகின்ற கருத்துக்கள் குறிப்பேட்டில் இடம் பெறாமல் இருக்குமானால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் பதில் அளிக்கிற நேரத்திலே ஏன் மாறினார்கள், எதற்காக மாறினார்கள் என்று ஆராயப்பட வேண்டும் என்று தான் குறிப்பிட்டேன். அவர்களுடைய உள்ளத்தை புண்படுத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

---

* * 60-ம் பக்கத்தில் கண்டுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆகவே, அது ஒவ்வொருவருடைய எண்ணத்தைப் பொறுத்தது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதை நான் நாளைக்கு நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து, * * * என்ற குறிப்பு இருக்குமானால் எப்படிச் செய்யலாம் என்பதைப் பற்றி முடிவெடுக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, * *
என்பது அரசாங்கத்தின் ஆய்வுக்கு உரியது அல்ல. அது தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தைப் பொறுத்தது. * * *
அதை அரசு ஆய்வு செய்யும் என்று சொல்வதும் தவறு. சலுகை பொருளாதார வசதி அடிப்படையில் அளிக்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் * * * * என்று சொல்லியது.......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ஏற்கனவே கருத்து தெரிவித்ததற்குப் பிறகு, நீங்கள் குறிப்பேட்டைப் பார்த்து அதை எப்படித் திருத்துவது என்பதாகச் சொல்லியானதற்குப் பிறகு தயவுசெய்து இதை விட்டுவிட நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவரையில் பத்திரிகைகளிலும் வெளியிட வேண்டாமென்று உத்தரவிடுகிறேன்.

## (ஆ) ஓர் உறுப்பினர் விடுதலையானதுபற்றிய பேரவைத் தலைவரின் அறிவிப்பு குறித்து—தொடர்ச்சி.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, சபையிலே என்னைப்பற்றித் தவறான தகவலை அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவையிலே அறிவித்த காரணத்தால் அவையிலேயே தீர்த்துக் கொள்ளலாம் என்று நான் அந்தக் கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் நானும் பேசியபொழுது பிறகு இதைப் பற்றிச் சொல்கிறேன் என்று சொன்னேன். ஆய்வில் இருக்கிறது, நாளையோ மறுநாளோ சொல்கிறேன். இது முற்றுப்புள்ளியாக வில்லை.

## (3) உரிமைப் பிரச்சினை.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளேடு மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினை மீது மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி அன்று, திரு. உமாநாத், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. வி. ஆர். ஜெயராமன் ஆகியோர், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மீது, அப் பத்திரிகை தனது 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதியிட்ட இதழில் உறுப்பினர்களைப் பற்றி வெளியிட்டுள்ள ஒரு செய்தியின் மீது உரிமைப் பிரச்சினையை அவையில் எழுப்பியபோது அப்பத்திரிகையின் விளக்கத்தைக் கேட்டு பின் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன். பத்திரிகை ஆசிரியரை விளக்கம் கேட்டதற்கு, பின் வருமாறு விளக்கத்தை அனுப்பியுள்ளார்கள்:—

We wish to submit that the main thrust of the report is to highlight the difficulties experienced by the employees in getting their C.D. amount refunded. The heading of the report as well as the opening paragraphs bear out our intentions.

It was not our intention to malign any member of the Legislative Assembly or impute any motives to the members. We regret a portion of the report has given rise to an issue of privilege of the House and its members. We wish to make it clear it is not our intention to cast any reflection on members of the House nor impede them in the discharge of their normal duties.

We assure you we shall be more careful in future in the publication of such reports.

As a proof of our bona fides, we have already published a statement of Mr. R. Umanath, a member of the House in our issue dated 23rd, February 1978, a copy of which is enclosed for your kind attention.

அவையையோ அல்லது அவை உறுப்பினர்களையோ மக்கள் மத்தியில் எந்த விதமான ஆதாரமும் இன்றி களங்கம் கற்பிக்கும் வகையில் எழுதுவது வன்மையாகக் கண்டிக்க வேண்டியது தான்.



திரு. உமாநாத் அவர்கள் கொடுத்த மறுப்பையும் 23—2—1978 அன்றைய பத்திரிகையில் வெளியிட்டு இருக்கிறார்கள். மேலும், பத்திரிகையின் துணை ஆசிரியர் திரு. சேஷாத்திரி வருத்தம் தெரிவித்து இனிமேல் இவ்வாறு நிகழாதவாறு பார்த்துக் கொள்வதாகவும், களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற உள் நோக்கம் எதுவும் பத்திரிகைக்கு இல்லை என்றும் விளக்கம் கூறியுள்ளதால், இவ்வாறு இனி நடைபெறா வண்ணம் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையும், மற்ற பத்திரிகைகளும் கவனிப்பாக இருக்க வேண்டுமென்ற எச்சரிக்கை செய்து, மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்ற எனது முடிவை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றி நான் உரிமை பிரச்னை கொடுத்திருக்கிறேன். அது மிகவும் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம். சட்டப் பிரச்னையானது அது. அதைப்பற்றி இது வரையில் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது அதன் முக்கியத்துவத்தைக் குறைப்பதாக இருக்கும். மிகவும் அவசியமான பிரச்னை. அதை எடுத்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இன்னும் ஆய்வில் இருக்கிறது. அன்றைய தினம் உறுப்பினரிடத்தில் அறையிலே சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் இன்னும் வருகை தராததால் பிறகு தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. உச்சி : நான் ஒன்றைக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள்.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக மத்திய வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளது குறித்து.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

The External Affairs Minister Mr. A. B. Vajpayee said here last night that the Government of India had decided to conduct U. P. S. C. Examination through medium of Hindi. This is a serious and urgent

(பேரவைத் தலைவர்)

matter which will affect the candidates from the entire Tamil Nadu. Hence it requires adjournment of the discussion of other items for the discussion of the above subject."

என்று திரு. ஆர். உமாநாத் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதேபொருள் குறித்து திரு. க. சுப்பு அவர்களும் திரு. என். வரதராசன் அவர்களும், திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–30]

<u>திரு. ரா. உமாநாத் :</u> அவைத் தலைவரவர்களே, இது பெரும் எக்ஸ்ப்ளோசிவ் பிரச்னையாக இருப்பதால், தமிழகத்தில் மட்டும் அல்லாது, இந்தி பேசாத மாநிலங்களிலே ஒரு வெடிப்பு வரும் பிரச்னையாக இருப்பதால் நான் மிகவும் நிதானமாகவே சொல்ல விரும்புகிறேன். இம்மாதம், 26, 27 தேதிகளிலே ஆங்கிலப் பத்திரிகைகளிலே வந்திருக்கக்கூடிய செய்தி. அந்தக் குறிப்பிட்ட விஷயம் என்னவென்றால்...... 'இந்தி மொழியில் யூ.பி.எஸ்.சி. தேர்வை நடத்துவது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக வெளி விவகார மந்திரி திரு. வாஜ்பாயி இங்கு அறிவித்தார்' என்பதாகும்.

மத்திய அரசாங்க முடிவு சம்பந்தமான முக்கியத்துவம் என்னவென்றால், முன்னே சில தனி அமைச்சர்கள் பேசுவார்கள். ஒரு மத்திய அமைச்சர் இலண்டனுக்குப் போனபோது சொன்னதாகப் பத்திரிகையிலே வந்தது உங்களுக்குத் தெரியும். அதாவது, ஆங்கில மொழியை இராணியாகவும், தமிழையும் மற்ற மொழிகளையும், தாசியாகவும் இந்திய மக்கள் கருதுகிறார்கள் என்று கேவலமான முறையிலே பேசியது உங்களுக்குத் தெரியும். இது தனிப்பட்ட முறையில் அமைச்சர் பேசுவது.

இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்னை, கனம் மத்திய அமைச்சர் வாஜ்பாயி தனிப்பட்ட முறையில் கருத்தைத் தெரிவித்தது அல்ல. இது மத்திய அரசாங்கத்தினுடைய முடிவு என்று வந்திருப்பதால், முக்கியமான பிரச்னையாக வருகிறது. இது அமுலுக்கு வந்தால், தமிழ் நாட்டு மக்களுக்கும், பொதுவாக இந்தி பேசாத மக்களுக்கும் பயங்கர விளைவுகளை உண்டாக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு முடிவின் 'இம்ப்ளிகேஷன்'—விளைவு—என்னவென்று சொன்னால், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கும் மக்கள் தங்கள் தாய் மொழியிலேயே யூ.பி.எஸ்.சி. தேர்வு எழுத முடியும். ஆனால், தமிழ்,



மலையாளம், தெலுங்கு, கன்னடம், வங்காளம், ஒரியா, குஜராத்தி போன்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிற பல்வேறு மக்கள் அவர்கள் தாய் மொழியிலே யூ.பி.எஸ்.சி. எக்ஸாமினேஷன் எழுத முடியாது. இதனுடைய அர்த்தம் ஒரே நாட்டில், ஒரு பகுதி மக்கள் தாய் மொழியிலே எழுத அனுமதிக்கப் படுகிறார்கள். இன்னொரு பகுதி மக்கள் தாய் மொழியிலே எழுதத் தடை செய்யப்படுகிறார்கள். இதனால், இந்தி பேசும் காண்டிடேட்டுகளுக்கு, இந்தி பேசாத காண்டிடேட்டுகளைவிட பெரிய அட்வான்டேஜ் கிடைக்கிறது. இது ஒன்று.

இரண்டாவது, இதனால், இந்தி பேசாத மக்களுக்கு வேலை வாய்ப்பு மேன்மேலும் சுருங்கிக் கொண்டே இருக்கும்.

மூன்றாவது, இதனால், இந்தி பேசக்கூடியவர்கள் முதல்தர பிரஜைகளாகவும் இந்தி பேசாத மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாகவும் பிரிக்கப்படுகிறார்கள். இதுதான் நாட்டை, 'பால்கனைஸ்' பண்ணும் என்று சொல்ல விரும்புகிறேன். 'பால்கனைஸ்' பண்ணும் என்று சொல்லும்போது, நாட்டினுடைய ஒற்றுமையைப்பற்றி அடிக்கடி பேசக்கூடியவர்கள் இப்படிப்பட்ட கொள்கையைக் கையாண்டால், அவர்கள் நாட்டைத் துண்டாக்குகிறார்கள் என்பது மட்டுமல்ல. அம்மாதிரி, செய்வதன் மூலமாக நாடு துண்டாகும் என்பதுதான் இப்படிப்பட்ட கொள்கையின் விளைவாகும்.

இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்கு நான் ஒன்று கொண்டு வர விரும்புகிறேன். இந்தி பேசாத மக்கள் மீது அவர்கள் விரும்பும்வரை, இந்தி திணிக்கப்படமாட்டாது என்று பிரதமர்—மறைந்த பண்டிதர் நேரு அவர்களும் மறைந்த லால் பகதூர் சாஸ்திரி அவர்களும், மற்றும் இந்திரா காந்தி அவர்களும், மொரார்ஜி தேசாய் அவர்களும், தெரிவித்திருக்கிறார்கள்.

அத்தோடு, பெங்களூரிலே ஜனதாக் கட்சிக் காரியக் கமிட்டியிலே தீர்மானம் நிறைவேற்றி இந்த உறுதி மொழியை அவர்கள் தந்திருக்கிறார்கள். அத்தனை உறுதி மொழிகளையும் இப்பொழுது எடுத்திருக்கக்கூடிய மத்திய அரசாங்க முடிவின் வாயிலாக அவர்கள் காற்றில் பறக்க விடுகிறார்கள் என்றுதான் அர்த்தம். யூ.பி.எஸ்.சி. தேர்வை இந்தியில் நடத்துவது என்பது. இது மத்திய அரசின் தந்திரத்தின் ஒரு பகுதியென்று நான் கருதுகிறேன். அதாவது, மறைமுகமாக இந்தியைப் பரப்புவது ஆகும்.

நாடாளுமன்றத்தில், ஆங்கிலத்தில் கேள்வி கேட்கப் படுமானால், இந்தி எனக்குத் தெரியாது என்பதால், ஆங்கிலத்தில் கேள்வி கேட்டால், ஆங்கிலத்திலே பதில் சொல்லும் நிலை இருந்தது முன்பு. இப்பொழுது, ஆங்கிலத்தில் கேட்டால், இந்தியில்தான் பதில் சொல்வது என்ற முறையிருக்கிறது.

(முற்பகல் 10–40)

வேண்டும். அவர் தெரிவித்து விட்டார், அந்த உறுதிமொழி சட்டமாக்குவது பற்றி என்ற பிரச்னைக்கு இடமே கிடையாது என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

இந்தி பேசாத பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து குடியரசுத் தலைவரைச் சந்தித்து மகஜர் கொடுத்துள்ளனர். அதிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்கிறது. அந்தப் பிரச்னை இப்போது வேறுவிதமாகப் போய்க்கொண்டு இருக்கிறது.

இந்தியைப் பரப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப் பட்டு விட்டது. அதற்காக ரூ. 100 கோடி செலவழிக்கப்படுகிறதா என்று கேட்டதற்கு, இல்லை இல்லை $5\frac{1}{2}$ கோடி தான் செலவழிக்கிறோம்என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இந்தியை பரப்புகிறார்கள் என்று சொல்கிறபோது இந்தி திணிக்கப்படுகிறது என்பது அல்ல. தமிழ்நாட்டு மக்கள் இந்தியா முழுவதும் சென்று வாழ்வதற்கு இது பாதகமாக இருக்கிறது என்பது பொருள். இந்தி பேசாத மக்கள் நாடு முழுவதும் சென்றே வாழவேண்டும் என்றால் அவர்கள் புரிந்துகொள்கின்ற மொழி இருந்தாக வேண்டும் அதற்கு ஆங்கிலம் தான் இணைப்பு மொழியாக இருக்கிறது. அதற்கு அந்த அந்தஸ்த்தைக் கொடுத்துச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

ஆனால், மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக, அந்த ஆங்கிலத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைக்கு வெளிநாட்டு விவகார மந்திரி உள்நாட்டு விவகாரங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

அவர் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் ஆரம்பித்து இப்போது உள்நாட்டிலும் எல்லாவற்றிலும் இந்தி வரும் என்று அறிவித்து இருக்கிறார்கள்.

கிரிக்கெட் ரன்னிங் காமென்ட்ரி கேட்கவேண்டும் என்றால்கூட 15 நிமிடம் ஆங்கிலம், 15 நிமிடம் இந்தி என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த 15 நிமிடத்தில் யார் எப்படி விளையாடினார்கள் என்பது கூடப் புரிந்து கொள்ள முடிவது இல்லை. அந்த அளவிற்கு இந்தி மீது வெறித்தனம் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தியாவிலே இருக்கும் மக்கள் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மக்கள் பேசுவதைக் கேட்டு, புரிந்து கொள்ளவும் வேண்டும். ஆகவே, ஆங்கிலம் நீடிக்கப்படத்தக்க அளவிற்கு செய்ய நாம் எதையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.



அப்படித் தியாகம் செய்ய வில்லை என்று சொன்னால், பிறகு வாழ்க்கை வாழ்ந்து என்ன பிரயோசனம் என்கிற நிலைமையேற்படும்.

ஆகவே, புரட்சிகரமாக ஒரு முடிவை எடுத்து அந்த மாதிரியான முடிவை முறியடிப்பதற்கு இந்த அரசாங்கம் இங்கேயொரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக, எதைப்பற்றியும் கவலைப்படக் கூடாது. இப்படி செய்தால் சர்க்கார் நிலைக்குமா, நிலைக்காதா என்ற பிரச்னை இல்லை உங்களோடு சேர்ந்து நாங்களும் அந்தத் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றித் தருகிறோம்.

தீர்மானம் கொண்டு வரப்படவில்லை என்றாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலாவது இங்கே நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதற்காக இந்த அவையை ஒத்தி வைத்தாலும் பரவாயில்லை. அவையைக் கலைத்து விட்டாலும் கவலையில்லை. இந்தப் பிரச்னையில் ஒரு துணிவோடு நிற்க வேண்டும். இது ஒரு உணர்வு உள்ள பிரச்னை, தமிழ் மக்களின் உயிர் பிரச்னை என்று எடுத்துக்கொண்டு அரசாங்கம் சரியான வகையில் அந்த விளைவுகளை தடுத்து நிறுத்த எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தி பேசாத பகுதி மக்கள் மத்தியில் இந்தி திணிக்கப்படுமோ என்கிற அச்ச உணர்வு உண்டாகும் வகையில் மத்திய அரசு வெளி விவகார அமைச்சர் மதிப்பிற்குரிய வாஜ்பாய் அவர்கள் வெளியிட்டு இருக்கும் கருத்து நம்மை எல்லாம் வேதனைப்படுத்தும் ஒன்றாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில், ஜனதா கட்சி ஆட்சியில் இருக்கும் தலைவர்கள் பிரதம அமைச்சர்உள்பட—இந்தி திணிக்கப்படமாட்டாது என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஆனால் மறு பக்கத்திலே இந்த யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதுவது இந்தியில் தான் என்று தற்போது முடிவு எடுத்து இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய பிரதம அமைச்சர் அவர்கள் திணிக்கப்படாது என்று ஒரு புறம் சொல்லிக் கொண்டு இருக்கிறபோது, இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், ஒருவேளை அவர்களைக் கலந்து கொள்ளாமல் அவரவர்கள் தங்கள் இஷ்டப்படி முடிவு எடுக்கிறார்களா என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நாளுக்குநாள் இந்த ஜனதா கட்சியின் சர்க்கார், அமைச்சர்கள் ஒவ்வொருவரும் முரண்பாடான அறிவிப்பை அறிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு எத்தகைய பாதகம் ஏற்படுத்தும் என்பதை நான் எடுத்துச் சொல்லத் தேவை கிடையாது.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 பிப்ரவரி 28

முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில்; மதிப்பிற்குரிய நேரு அவர்கள் ஆட்சியில் இந்திராகாந்தி ஆட்சி இருந்தவரையில் இந்தி பேசாத மக்கள்மீது இந்தி திணிக்கப்படமாட்டாது, அந்த உறுதிமொழி காப்பாற்றப்பட்டு வந்து இருக்கிறது. இன்றைக்கு பிரதம அமைச்சராக இருக்கும் மொரார்ஜி தேசாய் அவர்கள் கூட இந்தி பேசாத மக்கள்மீது இந்தி திணிக்கப்படமாட்டாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக இந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த அறிவிப்பு நம்மையெல்லாம் வேதனைக்கு ஆளாக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த மாதிரியான முடிவை மத்திய அரசு நிறைவேற்ற நாம் அனுமதிக்கக் கூடாது அப்படி அனுமதிக்கப் பட்டால், இந்த மொழி உணர்வு இருக்கிறதே அது தேசத்தைக் கூறாக ஆக்கக் கூடிய நிலைமையை உருவாக்கும் என்பதிலே எங்களைப் பொறுத்த வரையில் சந்தேகம் கிடையாது.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மும்மொழிக் கொள்கையை நாங்கள் தீவிரமாக ஆதரித்து வருகிறோம். மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தாலும் இந்தி பேசாத மக்கள்மீது இந்தி திணிக்கப்படக்கூடாது என்பதிலே நாங்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறோம் என்று அவர்கள் அறிவித்தார்கள், இந்தி பேசாத மக்கள் இருக்கும் இடங்களில் ஆங்கிலமும் துணை மொழியாக இருக்க வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு கிடையாது.

ஆனால் இன்று இருக்கும் ஆட்சியாளர்கள் இந்தி மொழிமீது வெறி உணர்வு கொண்டு இருக்கிறார்கள். அமைச்சர்கள் பல் வேறு வகையில் இப்படிப் பேசி சங்கடங்களை விளைவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் மற்ற மாநிலங்களில் இருக்கும் அரசாங்கத்திற்கும் சங்கடம் ஏற்பட்டு இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி அமைக்க மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதை உணர்த்தும் வகையில் மாநில சர்க்கார், நம்முடைய உணர்வுகளை, தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளைத் தெரிவிக்கும் வகையில், இந்தித் திணிப்பை நாங்கள் எதிர்க்கிறோம் என்ற உணர்வை தெரிவிக்கும் வகையில், மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கும் வகையில், மாநில அரசு இந்த அவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தால் அது ரொம்ப வரவேற்கத்தக்கதாகும். அது இந்தச் சட்ட மன்றத்திலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுமானால், அது மத்திய அரசுக்கு ஒரு பாடமாக, நம் உணர்வுகளை புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக, நம் தமிழகத்தின் எதிர் காலத்தை நல்ல விதத்தில் இருக்கச் செய்ய நல்ல சூழ்நிலையை உருவாக்கக்கூடியதாக அமையும் என்று தெரிவித்து, தீர்மானம் கொண்டு வர வாய்ப்பு இல்லை என்றால், இந்த அவையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கு நமது உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், திரு. சுப்பு அவர்களும், திரு. மாரிமுத்து அவர்களும் மத்திய வெளி உறவு அமைச்சர் அருமை நண்பர் வாஜ்பாய் அவர்கள் பேசியதாக இந்துப் பத்திரிகையில் வெளியான செய்தியை இங்கு படித்துக் காட்டி, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு இனிமேல் இந்தியிலேதான் எழுத வேண்டும்மென்று மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது என்று திட்டவட்டமாகத் தெரிவித்ததை எடுத்துச் சொல்லி, எவ்வளவு நெருக்கடி வந்தாலும் சரி, சோதனைகள் ஏற்பட்டாலும் சரி, இந்தப் போக்கை தடுத்து நிறுத்தி ஆகவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்த நிலையில் தான் நண்பர் சுப்பு அவர்களும் பேசி, இறுதியில் தனக்கு இருக்கிற ஆசை என்று, சொல்லி—சபையைக் கூட கலைத்து விடலாம் என்று சொல்லி உட்கார்ந்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : கலைக்கப்படுவது இந்திக்காக.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஓ ! அப்படியா !

நமது மாரிமுத்து அவர்களும் பேசும் போது உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் பேசினார்கள்.

நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். இந்த மொழிப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகமும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் எந்த அளவுக்கு கருத்துக்களை வகுத்திருக்கிறது என்பதை நான் சபைக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்போதெல்லாம் எந்த அளவுக்கு நாங்கள் ஏச்சுக்களைப் பெற்றிருக்கிறோம், எந்த அளவுக்கு தாக்குதல்களுக்கு இரையாகியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திரு. மாரிமுத்து அவர்கள் கூட அப்போது திட்டியிருக்கக்கூடும். ஆனால் இப்போது அவர்களுக்கு இருக்கிற உணர்ச்சி வரவேற்கத்தக்க ஒன்று (திரு. ஏ. ஆர். மாரிமுத்து—எப்போதும் உண்டு). திரு. மாரிமுத்து அவர்களுக்கு அந்த உணர்ச்சி எப்போதும் உண்டு என்று இப்போது தெரிவித்ததற்கு நான் மெத்த மகிழ்ச்சியை சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவைக்கு ஒரு கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நண்பர் உமாநாத் அவர்கள் பேசும்போது யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு எழுதச் செல்பவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது ஷெட்யூலில் இருக்கிற 15 மொழிகளிலேயும் எழுதுவதற்கு உரிமைப் படைத்தவர்கள்;

அதை இந்தியப் பேரரசு ஒப்புக் கொள்ள வேண்டும் ; ஒப்புக் கொள்ளத்தக்க வகையில் அவர்களைக் கொண்டு வருவதற்கு இந்த சர்க்கார் அழுத்தமாக, திட்டவட்டமாக, உறுதியாக, பலமாக என்று பல வார்த்தைகளை—வேறு ஏதாவது சொன்னீர்களா— (சில குரல்கள்—கரூராக)—கரூராக என்று தனது வேகத்தை வெளிக் காட்டினார்கள். அருமை நண்பர் உமாநாத் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இந்தியை பலவந்தமாக நீங்கள் திணிப்பீர்களானால் இந்தியத் துணைக் கண்டம் துண்டு துண்டாகிவிடும் என்று அருமை நண்பர் உமாநாத் அவர்கள் பேசிய கருத்தை நாடாளுமன்றத்தில் நான் பேசும் போது திரு. உமாநாத் அவர்கள் கூட இருந்தார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்து—அவரை அவமானப்படுத்துவதற்காக அல்ல—அவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற இந்த புதிய உணர்ச்சிக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். என்பதைத் தெரிவிப்பதற்காகக் குறிப்பிட விரும்புகிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> சார், ஒரு கிளாரிஃபிகேஷன். இந்த உணர்ச்சி அப்போதும் இருந்தது. மத்திய சர்க்காரின் மொழிக் கொள்கையை அப்போதும் ஏற்றுக் கொள்ளவில்லை, இந்தியைத் திணித்தால் அது 'செப்பரேடிஸ்ட் டென்டன்ஸி' யை ஊக்குவிக்கும் என்பது எங்கள் கட்சியின் கொள்கையாக பல்லாண்டு காலமாக இருக்கிறது.

[முற்பகல் 10-50.]

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> நான் திரு. உமாநாத் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். கொத்தாரி கமிஷன் ஒன்று 1975 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு இந்த மொழிப் பிரச்னை பற்றி, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் எப்படி எப்படி அவர்கள் தேர்வு எழுதலாம் என்பது பற்றி அந்தக் கமிஷன் தனது ரிப்போர்ட்டை இந்திய அரசுக்குத் தந்திருக்கிறது. அது குறித்து இந்தியப் பேரரசு இது வரையில் முடிவு எடுக்கவில்லை.

கொத்தாரி கமிஷன் தெரிவித்திருப்பது கேள்விகள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும், விடைகள் அனைத்து 15 மொழிகளிலும் எழுதுகிற அளவிற்கு அந்த உரிமையை மாநில மக்கள் பெற்றாக வேண்டும் என்று கொத்தாரி கமிஷன் தெரிவித்தது. அதற்கு முற்றிலும் மாறாக நம் வெளி விவகார அமைச்சர் திரு. வாஜ்பாய் அவர்கள் பேசியதாக இன்றைக்கு அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்த தகவலை இந்த அவைக்கு முன்னால், வைக்க விரும்புகிறேன்:



'with regrrd to my speech on February 25th on the occation of the release of the souvenir in memory of the late Justice Kishore Chaturvedi I must deny categorically having said that the Government had decided to conduct U.P.S.C. Examinations in the Hindi medium. What in fact stated was that it was important for all the Indian languages to be adopted simultaneously and very soon for conducting U.P.S.C. Examinations. I must also make it clear that I did not make any reference to the status of Hindi as a medium of instruction in the non-Hindi States.'

இதைப் பேசியவர்கள் திரு. வாஜ்பாய் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது இன்றைக்கு இந்துஸ்தான் டைம்ஸ்-லிருந்து எனக்குக் கிடைத்தத கவல். இந்துஸ்தான் டைம்ஸிலும் தவறுதல் வரலாம் அல்லவா ? இந்துப் பத்திரிகையில் இப்போது தவறு வந்திருப்பதுபோல் எனக்கு ஒரு உணர்வு ஏற்பட்டதால்' சொல்கிறேன்.

இங்கே வருவதற்கு முன்பு திரு. வாஜ்பாய் அவர்களோடு தொடர்பு கொண்டு பேசினேன். இப்படி நீங்கள் பேசியது உண்மையா ? ஒத்திவைப்புத் தீர்மானம் ஓங்காரக் கூச்சலிட்டாத்துக் கொண்டிருக்கிறது. சபை விறுவிறுப்பாக இருந்துக் கொண்டிருக்கிறது என்று கேட்டபோது திரு. வாஜ்பாய் அவர்கள் சொன்ன கருத்தை அப்படியே தெரிவிக்கிறேன். மனோகரன், என்னைத் தெரிந்ததற்குப் பிறகும் நான் இப்படி பேசியிருப்பேன் என்று நீங்கள் நம்புகிறீர்களா, தயவு செய்து உங்கள் உறுப்பினர்களிடம் சொல்லுங்கள், நான் அப்படிப் பேசவில்லை என்று. நான் பேசியது 15 மொழிகளிலும் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் தேர்வில் அனைவருக்கும் எழுதுகிற உரிமை இருக்க வேண்டுமென்று தான் பேசினேன் என்று திரு. வாஜ்பாய் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (ஆரவாரம்).

திரு. உமாநாத் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. வாஜ்பாய் அவர்கள் பேசியது சரி. ஆனால் சில முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, இரகசியமாக. அது விஷயத்திலும் இந்த அரசு எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் எப்படி விரும்புகிறார்களோ அந்த அளவிற்கு இந்த அரசு மிக ஜாக்கிரதையாக இருக்கும் என்ற உறுதியை இந்த அரசின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திணிப்பு எந்தக் காரணத்தைக் கொண்டும் எதிர்க்கப்படக்கூடிய ஒன்று. அதை இந்த அரசு எதிர்க்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

மும்மொழித் திட்டத்திற்கு ஆதரவு தந்த என் அருமை—நண்பர் திரு. மாரிமுத்து அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கொள்கை இரு மொழிக் கொள்கை என்பதை நான் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

ஆகையால் இதற்கு மேல் ஒத்திவைப்பு தேவையில்லை என்று நான் கருதுகிறேன். திரு. வாஜ்பாய் அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். அதற்குப் பிறகு பண்டித நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிக்கு சட்டவடிவம் தர வேண்டும் என்பது பல நாட்களாக நாங்கள் கேட்டுக் கொண்டு வருகிற கோரிக்கை.

நேற்றையதினம் மேலவையில் பேசிய நமது பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள்— திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள்— அது தேவை இல்லாத ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அவரது கருத்தாக இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். அந்தக் கருத்துக்கு மறு கருத்து மற்றவர்களும் சொல்லக்கூடும் என்று நான் நம்புகிறேன்.

சுருக்கமாக ஒன்றை மட்டும் சூசகமாகச் சொல்கிறேன். அருமை நண்பர் திரு. வாஜ்பாய் அவர்கள் யூ. என். ஓ-க்குச் சென்ற போது நான் இந்தியில்தான் பேசுவேன் என்று சொன்ன போது அதே அமைச்சரவையில் இருக்கிற இன்னொரு அமைச்சர் அவர்கள்— அவரது பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை— அப்படியானால் அடுத்த முறை நான் யூ. என். ஓ-க்குப் போனால் வங்காள மொழியில் பேச வேண்டிவரும் என்று சொன்னதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அங்கு ஒன்றுபட்ட, ஒருமித்த கருத்து இன்றைக்கு மேலேயிருக்கிற அமைச்சரவையில் இந்த மொழிப் பிரச்னை குறித்து வரவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, பாரதப் பிரதமர் அவர்கள் சொன்ன கருத்து, அதுதான் லாஸ்ட் வேர்ட் என்று எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. திருப்பிப் போராடுவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்தில் தயாராயிருக்கிறது.

ஒருவராக இருந்தாலும், திரு. ஆசைத்தம்பி அவர்கள் உடன் இருக்கிறார்கள். அதே போல் பல இந்திமொழி பேசாத மாநிலங்களிலுள்ள பலரும் நமக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, அது சரியாக இருந்தாலும் சரி, தவறாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட கசப்பான உணர்வுகள் வளருமானால்— வளரக் கூடாது என்று நான் நினைக்கிறேன். அப்படி வளர்ந்து கொண்டு போகுமேயானால்





நிச்சயமாக அது ஆபத்தான உணர்வுகளாக அமையும் என்பதையும், இப்படிப்பட்ட நிலைமை வேதனை நிறைந்ததாக அமையும் என்பதையும் மத்திய சர்க்காருக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆபத்தான சூழ்நிலை என்பதற்கான விளக்கத்தை நான் கூற விரும்பவில்லை. மாண்புமிகு உமாநாத் அவர்கள் நல்ல முறையில் விளக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இந்த நாட்டுக்கு ஏற்பட்டு விடக் கூடாது.

இது வெறும் ஸென்டிமெண்டல் இஷ்யூ மட்டுமல்ல. ஸைக்காலாஜிக்கல் இஷ்யூ மட்டுமல்ல, "மேட்டர் ஆஃப் ரைட்ஸ்" என்ற முறையில் உரிமைப் பிரச்னையாக இதை நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட உரிமைக்கு ஆபத்து வராத நிலையை பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக மாண்புமிகு உமாநாத் அவர்கள் பயன்படுத்தியஅதே வார்த்தைகளை நானும் வேதனையோடு பயன்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம் என்பதைக் கூறி, இந்த அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த உறுதியை வழங்குகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. உமாநாத் அவர்கள் எழுந்திருந்தார் ........)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒத்தி வைப்பு தீர்மானத்தில் தயவுசெய்து மீண்டும் கேள்விகளை கேட்காதீர்கள், தயவு செய்து உட்காருங்கள் ........

(<u>திரு. க. சுப்பு</u> அவர்கள் எழுந்திருந்தார்........)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சுப்பு அவர்கள் தயவு செய்து உட்காருங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்போது கடைப்பிடித்து வருகின்ற மரபுகளைக் கெடுத்து விடாதீர்கள். தயவு செய்து உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு :</u> கிளாரிபிக்கேஷன் மட்டும்தான். இது முக்கியமான பிரச்னை........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> உங்களைப்போன்றுதான் திரு. உமாநாத் அவர்களும் எழுந்திருந்தார், அவர்களிடம் விஷயத்தை விளக்கியதும், உட்கார்ந்து விட்டார்கள். தயவுசெய்து ஆரோக்கியமான முறைகளைக் கடைபிடிக்க உதவி செய்யுங்கள்.... திரு. சுப்பு அவர்கள் என்ன கேட்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்...............

<u>திரு. க. சுப்பு :</u> நான் என்ன கேட்கப் போகிறேன் என்று நான் சொல்வதற்கு முன்பே எப்படித் தெரியும் ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. உமாநாத் அவர்களைப் பேச அனுமதித்தால் திரு. சுப்பு அவர்களும் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் திரு. உமாநாத் அவர்களை உட்காரச் சொன்னேன். அவர்கள் உட்கார்ந்து விட்டார்கள். அவர்களே உட்கார்ந்து விட்டபோது நீங்கள் ஏன் இன்னும் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறீர்கள், என்னிடம் வைராக்கியமாக இருக்க வேண்டும் என்று நினைத்துத்தான் இப்படி வற்புறுத்துகிறீர்களா ?

<u>திரு. க. சுப்பு :</u> இது முக்கியமான பிரச்னை, அதில் ஒன்றிரண்டு விஷயங்களைக்கூடக் கேட்பதற்கு உரிமையில்லை என்றால் என்ன செய்வது ........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு அவை முன்னவர்கள் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (5) அறிவிப்பு.

### நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கம் குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இங்கு மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் அவர்கள் பயன்படுத்திய சில வார்த்தைகளைப் பொறுத்து பிரச்னையைக் கிளப்பினார்கள். இது சம்பந்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை பார்த்தேன். அவற்றில்...... * * * என்று மொத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிட வேண்டும் என்று உத்திரவிடுகின்றேன்.

## (6) தகவல் கோரல்.

### அறிவிப்புக் கொடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் குறித்து.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் மிக முக்கியமான தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருந்தேன். காரைக்குடியில் நடைபெற்ற சம்பவம். இது சாதாரணமான காரியம் என்று சொல்லிவிட முடியாது. இதை இன்றைக்கு எடுத்துக்





கொள்ளவில்லையென்றாலும் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயம். ஆகவே, இது என்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்று காலையில் கூட இது பற்றி தொடர்பு கொண்டேன். சில விவரங்கள் இன்னும் வரவேண்டியிருக்கிறது என்று தெரிய வந்தது. இன்றைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் இருந்தேன். விவரங்கள் இன்னும் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டதால், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். இதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> 41-வது விதியின் கீழ் கல்லூரி ஆசிரியர்கள் சம்பந்தமாக நான் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருந்தேன்......அது இதில் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.... எனக்கு ஏற்படுகின்ற சந்தேகம்..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> சந்தேகத்தை எல்லாம் இங்கே கேட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. நீங்கள் கொடுத்தது இன்னும் ஆய்வில் இருக்கிறது. மறுக்கப்பட்டுவிட்டது என்று உங்களுக்கு இதுவரையிலும் தகவல் எதுவும் வரவில்லையென்றால் அது இன்னும் ஆய்வில் இருக்கிறது என்றுதான் பொருள். அது பற்றி பின்னால் அறிவிக்கப்படும்.

[முற்பகல் 11-00]

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் என்னால் கொடுக்கப்பட்டதும், இதே சம்பந்தப்பட்ட விஷயம்தான். இதற்கு அனுமதி அளித்து விவாதத்திற்கு வந்துவிட்டால், அதற்கு அனுமதி இல்லாமல் போய்விடும். ஆகவேதான் கேட்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதே விஷயமாக இருந்தால் தயவு செய்து சொல்லுங்கள். அதையும் இதோடு இணைக்கத் தயார்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> விதி 41-ன் கீழ் நானும், திரு அழகர்சாமி அவர்களும் இரண்டு பேரும் சேர்ந்து கையெழுத்திட்டு, இந்தத் தனியார் ஆசிரியர்கள் போராட்டத்தைப் பற்றி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தாங்களும் திரு. அழகர்சாமி அவர்களும் கொடுத்திருப்பது பரீட்சையைப் புறக்கணிப்பது பற்றிய பிரச்னை. இங்கே கொடுக்கப்பட்டிருப்பது அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்பது. எனவே, நீங்கள் கொடுத்தது வேறு, இந்தப் பிரச்னை வேறு. எனவே, அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. க. சுப்பு : ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டதனால் தான், இந்த பகிஷ்கரிப்பே வந்தது. அதனால், அது வேறு, இது வேறு என்று சொல்வதற்கு இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் நான் ஏற்கனவே இதே பிரச்னையைப் பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்திலே மற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனக்கு ஏன் அனுமதி கொடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்குமானால், அதுபற்றி என் அறையிலே கலந்து பேசலாம். அதை வைத்துக் கொண்டு இங்கே பேசுவதற்கு இப்போது நேரமில்லை.

7. கவன ஈர்ப்பு.

அரசுக் கலைக் கல்லூரி தற்காலிக ஆசிரியர்கள் வெளியேற்றப் பட்டதும், அவர்கள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத் தினால் ஏற்பட்டுள்ள நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். உமா நாத், ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், பொ. விஜயராகவன் ஆகியோர் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் .

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி யினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் ;

" தமிழக அரசினர் கலைக் கல்லூரிகளில் ஐந்தாண்டு முதல் ஏழாண்டு வரை பணியாற்றிய தற்காலிக ஆசிரியர்கள் வெளி யேற்றப்பட்டதையும், மேலும் வெளியேற்றப் பெற இருப்பதை யும் எதிர்த்து அனைவரையும் நிரந்தரமாக்கக் கோரி, மேற்படி ஆசிரியர்கள் மாநிலக் கல்லூரி முன் 20—2—1978ஆம் தேதி யன்று மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத்தையொட்டி எழுந்துள்ள நிலைமை குறித்து."

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள்/பயிற்றுநர்கள்/விரிவுரையாளர்கள் (Assistant Professors/Tutors/Demonstrators) பதவிக்கு தமிழ்நாடு தேர்வுக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால்



தற்காலிகமாக காலியாக உள்ள பதவிகளில் பொது விதி 10 (ஏ)(1) மூலம் ஆசிரியர்களை நியமனம் செய்துகொள்ள கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் இவ்வாறு தற்காலிகமாகப் பணியில் உள்ளவர்களை முறைப்படுத்த தமிழ் நாடு கல்வி தனிவிதிகளில் இடமில்லை. ஆதலால் மேற்படி தற்காலிகமாகப் பணிபுரிபவர்கள் முறையாக பணியில் சேரவேண்டு மானால் தமிழ்நாடு தேர்வுக் குழுவின் மூலம் தேர்வுபெற்று நியமனம் பெற வேண்டும்.

2. மேலும் தற்போது தற்காலிகமாகப் பணிபுரியும் அனைவரது பணியையும் அரசால் முறைப்படுத்த இயலாது. தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் மூலம் தகுதிபெற்று வருவோரை நிய மனம் செய்யும்போது, தற்காலிகமாக பணிபுரிவோரை பணி நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் 5 ஆண்டு முதல் 7 ஆண்டு வரை பணிபுரிந்த உதவிப் பேரசிரியரோ, பயிற்றுநரோ இதுவரை பதவி நீக்கம் செய்யப்படவில்லை. புவி யியல் பிரிவில் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருவர் உதவிப் பேராசிரியராகப் பணியில் அமர்த்தப்பட இருப்பதால் 5 ஆண்டுகள் பணிபுரிந்த ஒரு தற்காலிக உதவிப் பேராசிரியரை 31—3—1978-க்குப் பிறகு பணி நீக்கம் செய்ய வேண்டியுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் கள் 7 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகு, அவர்கள் இன்னொரு வேலைக்குச் செல்வதற்கு ஏஜ் பார்-ஆகி விடக்கூடிய பிரச்னைக்கு இடமிருக்கிறது. இந்த சிரமம் இருப்பதால், என்னுடைய கேள்வி என்னவென்றால், என்ஜினியரிங் காலேஜ்களிலே டெக்னிகல் டைரக் டர் இப்படிப்பட்ட தற்காலிக ஆசிரியர்களை அவர்களுடைய சர்வீசுகளை ரெகுலரைஸ் செய்வது என்ற முறையை மேற்கொண் டிருப்பதுபோல், கல்வித் துறையில், 'பி' விங்கில் இதேமாதிரி டெம்பரரியர்கப் பணியாற்றிவர்களை முறைப்படுத்தியிருப்பது போல், இதிலே இப்படி 5 முதல் 7 ஆண்டுகள் பணியாற்றிய வர்களின் பணியையும் ஏன் ரெகுலரைஸ் செய்யக்கூடாது என்பதுதான்.

மறுபக்கத்தில், நமது முதல் அமைச்சர் அவர்களே, சேலம் லையன்ஸ் கிளப்பில் பேசுகின்றபோது, இம்மாதிரி சர்வீஸ் கமிஷ னிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வேலைக்கு வந்தால், 4, 5 வருஷங்களாக டெம்பரரியாகப் பணியாற்றக்கூடியவர்கள் வேலையை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது, இப்படிச் சட்டத்திலே இருக்கிறது, இது நியாயம்தானா என்று முதல் அமைச் சர் அவர்களே வெளியே கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்

இப்போது மொட்டையடித்த பி.டபிள்யூ.டீ. என்ஜினியர்களைக் கூட கனம் இராமச்சந்திரன் அவர்கள், அந்த விஷயத்திலே முடி வெடுத்து ஹோஸ்ட் செய்த அவர்கள் பணியைக்கூட முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே ஏற்றுக் கொண்டிருக்கும்போது, அதே போன்ற இந்த ஒரு கேசிலே மட்டும் ஏன் அவர்கள் வெளியே அனுப்பப்பட்டிருகிறார்கள் 1—7—1975-லே 100 பேர்கள் அப்படி வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்களே, அப்படிப்பட்டவர்களை திரும்பவும் எடுத்துக் கொள்வதற்கு குறுக்கே நிற்கக் கூடியது என்ன ?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகிற வகையில் இந்த அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

## (8) 1978-79ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்

<u>திரு. க. அன்பழகன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978-79ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய திறமைகளைப் பயன்படுத்தி மிகுந்த அளவுக்குத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தாங்கள் ஆற்றக்கூடிய கடமைகளை விளக்கி அந்த அறிக்கையை வழங்கியிருக்கிறார்கள். அவருடைய பெரிய முயற்சியை அந்த அறிக்கையைக் காண்கிறபோது நம்மால் உணர முடிகிறதே தவிர, அவருடைய முயற்சிக்கேற்ற பலன் அந்த அறிக்கையின் மூலமாகக் கிடைக்குமா அல்லது தமிழக மக்களின் தேவைக்கேற்ற அளவுக்கு ஒரு அரசு, மாநில அரசு திட்டம் தீட்டி செயலாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கிறபோது, பழமொழியாகச் சொல்வதானால்—'பழைய குருடி கதவைத் திறடி' என்ற பழமொழியைப் போல பல ஆண்டு காலமாக இருந்து வருகிற அந்தச் சூழ்நிலையால் விளைகின்ற அந்தச் சிக்கல் இப்போதும் விளைந்திருக்கிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் என்று சொல்லுகிறபோது அவர் என்னுடைய நண்பர் என்பதற்காக நான் மகிழ்ச்சியடைந்தாலும் கூட, அவரும் ஒரு சூழ்நிலையில் கைதியாகத்தான் இருக்கிறார் என்பதை, சூழ்நிலையின் கைதியாகத்தான் மாநில அமைச்சர்கள் இருக்க வேண்டிய நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு நினைவூட்டாமல் இருக்க முடியவில்லை.





[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினர் குறைகூறிப் பேச நேரிடுமானால், குறைகூறிப் பேசுகிற எதிர்க் கட்சியினரை எப்படியாவது கண்டிக்க வேண்டுமென்று காட்டுகிற ஆர்வத்தை நான் உணருகிறேன். ஆனால் ஆளும் கட்சி அமைச்சர்களைக் கண்டிப்பதாக எதிர்க்கட்சியினரின கருத்துக்களை எண்ணிக் கொள்ளாமல் ஆளும் கட்சி எந்தக் கட்சியாக இருந்தாலும், இந்த நாட்டில் இருக்கும் சூழ்நிலை அந்த ஆளும் கட்சி மக்களுக்குத் தேவையான கடமைகளை நிறைவேற்ற முடியாததாகத்தான் அரசியல் சட்ட அமைப்பு முறை அமைந்திருக்கிறது என்பதை எதிர்க்கட்சியினர் சுட்டிக் காட்டுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, ஒரு வகையில் எதிர்க் கட்சியினர் அவர்கள் மீது சொல்லுகிற குறைகள் எல்லாம்கூட, ஆட்சியின் நிர்வாகத்திலே அல்ல; நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியுள்ள நிதிப் பற்றாக்குறைக் குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொல்வதெல்லாம் ஆட்சியில் இருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவாகத்தான் எண்ணிக் கொள்ள வேண்டும். அதுதான் அறிஞர் அண்ணா அவர்களின் வழியைப் புரிந்தவர்கள் ஏற்றுக் கொள்கின்ற நெறியாகும். அதனால் கிடைக்கக்கூடிய நற்பலன் அதிகமாக இருக்குமே தவிர குறை ஏற்படாது என்பதை நினைவூட்டுகிறேன்.

இந்த அவை ஒரு கூட்டுக் கூட்டமாக, ஒரு தொடர் கூட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக ஆளுநர் உரையோடு தொடங்கப்பட வேண்டிய நிலைக்கு மாறாக ஆளுநர் உரையை இந்த அவையில் நாம் கேட்கக் கூடிய வாய்ப்பு, அதன்மூலம் அரசாங்கத்தின் கொள்கையை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு, அரசாங்கத்தின் கொள்கையைப்பற்றி நாம் எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பு பல்வேறு விதமான கருத்துக்களை விளக்குவதற்கான அந்த வாய்ப்பு தவறிப் போய்விட்டது, இல்லாமல் போய்விட்டது என்பதற்காக எதிர்க்கட்சியைச் சார்ந்த பலரும் குறைபட்டதை இந்த அவை நன்றாக அறியும்.

அப்படிக் கூறப்பட்டபோது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்த நிலை ஏற்பட்டதற்கு ஒரு வருத்தம் தெரிவிக்கிற நிலை இல்லை. அது எந்தக் காரணத்தால் ஏற்பட்டாலும், சரி, சட்டமன்ற நடைமுறையில் கொடுத்திருக்கக்கூடிய வாய்ப்பு எதிர்க் கட்சியினருக்குக் கிடைக்கவில்லை, உறுப்பினர்களுக்குக் கிடைக்கவில்லை. அது வேண்டுமென்றே அளிக்கப்படாத வாய்ப்பாக இருந்தாலும் சரி, அல்லது தவறி விடப்பட்டதாக இருந்தாலும் சரி, இன்னொரு வாய்ப்பு கிடைக்கும் என்று இருந்தாலும் சரி, அதை எடுத்துச் சொல்லும் போது ஆளும் கட்சி, எதிர்க்கட்சிக்கு அந்தவாய்ப்பைத் தராமல் போனதற்கு ஒரு வருத்தம் தெரிவிக்கிற முறையில் தான் அந்தக் கருத்தை தெளிவு

[திரு. க. அன்பழகன்] [1978 பிப்ரவரி 28

படுத்தி இருக்கவேண்டும். அப்படி ஒருகருத்தைத் தெரிவிக்காமல் ஏதோ ஆளுநர் உரையை இந்த அவையில் நிகழ்த்துவதற்கு இல்லாமல் செய்துவிட்ட காரியம் ஆளும் கட்சியின் ஒரு உரிமையை போல் அது ஒருமுறையைப் போல் பேசுவது அவ்வளவு சிறப் பாகத் தோன்றவில்லை.

ஆளுநர் உரை நிகழ்த்த வேண்டும் என்று சொல்லும்போது, நாங்கள் ஆளுநர் பேச வேண்டும் என்பதற்காக அதைச் சொல்ல வில்லை. இந்த அரசின் கருத்து வெளிப்பட வேண்டும். கொள்கை வெளிப்பட வேண்டுமென்பதுதான் எங்கள் எண்ணம். ஒருவேளை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லக்கூடும் :—

[முற்பகல் 11–10]

எங்களுக்கு இப்போது என்ன கொள்கை இருக்கிறது சொல்வதற்கு; நடைமுறையிலே செயலாற்றுவதற்கே பல்வேறு சிக்கல்கள் எங்களுக்கு இருக்கிற நேரத்திலே இப்போது என்ன கொள்கையை எடுத்துச் சொல்ல முடியும்; கொள்கை என்று நாங்கள் பேச ஆரம்பித்தாலே மாநிலத்தின் முக்கியமான பிரச்சினையாகிய மாநில உரிமையற்ற தன்மையையும் மாநில சுயாட்சியற்ற தன்மையையும் விளக்கவேண்டிய நிலைமை ஏற்படும், ஆளுநர் உரை என்று சொல்லிவிட்டால், மக்களுடைய குறைகளைப் போக்குகின்ற வழியாக மிக நீண்டகாலமாக இருக்கின்ற காவிரி நீர்ப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல், ஏதோ இடைக் காலத்திலே தண்ணீர் மட்டும் வந்துவிட்டது என்ற நிலைமை இருக்கிறபோது கட்டாயமாக தஞ்சை மாவட்டத்திற்கு, திருச்சி மாவட்டத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர், தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர், தமிழ்நாட்டிலே உணவுப் பற்றுக்குறை என்றைக்கும் ஏற்படாமலிருக்க கிடைக்க வேண்டிய தண்ணீர் பிரச்சினையில் இன்னும் பரிகாரம் காணாத நிலையில் ஆளுநர் உரையை எப்படி இங்கே வைப்பது என்றும் கேள்வியை ஆளுங்கட்சியினர் தங்களுக்குள்ளேயே கேட்டிருக்கலாம்.

ஆனால்; எனக்குக் கிடைத்த செய்தியை வைத்துப் பார்க்கிற போது, ஆளுநர் உரையிலே இந்த அரசினுடைய கருத்துக்களை, கொள்கைகளை வைத்துவிட்டால், மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளோடு கருத்துக்களோடு ஏதாவது ஒரு வகையில் மாறுபாடு வந்துவிட்டால் இந்த அரசுக்கு நல்லதல்ல என்ற முடிவுக்கு அவர்கள் வந்து, எல்லாவிதத்திலும் மத்திய அரசுடன் ஒட்டிக் கொண்டுதான் இருக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டு— சற்று முன்னாலே இந்தி மொழி ஆதிக்கம் பற்றி இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தபோது நாஞ்சில் மனோகரன் அவர்கள் நிதியமைச்சராகவும் முன்னவராகவும் இருந்து எடுத்துச் சொன்னது—போன்ற எண்ணங்கள் அந்தக் கருத்துக்கு ஒட்டிய



1978 பிப்ரவரி 28] [திரு. க. அன்பழகன்]

தாக இல்லாத காரணத்தினாலே, ஆளுநர் உரை வைக்கப்படுமானால் அதிலே மத்திய அரசுடன் கருத்து மாறுபாடுகளுக்கு சந்தர்ப்பம் அளிப்பதாக அமையும். ஆதலால் இந்த அவையிலே அதைக் கொண்டுவரவேண்டாம் என்று எண்ணி இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் அண்மையிலே டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கே பிரதமர் மொரார்ஜி தேசாயைச் சந்தித்திருக்கிறார்கள், அதற்குப் பிறகு பாட்னாவில் இருக்கிற உடல் நலம் குறைந்திருக்கிற திரு. ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களைச் சந்தித்து இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சந்தித்ததை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அந்தச் சந்திப்பின் மூலமாக சில கருத்து பறிமாற்றங்கள் சில கருத்து வளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால் அதே நேரத்திலே அந்தச் சந்திப்பிற்குப் பிறகு முதலமைச்சர் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துப் பேசிய போது இதைத்தான் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

Mr. Ramachandran said he also informed the Prme Minister that the polices and programmes of the All India Anna DMK Government were on the lines similar to these of the Janata Govern-ment Mr. Desai was appreciative of this . . . .

ஜனதா அரசாங்கத்தினுடைய கொள்கைகளும் நடைமுறைகளும் எதுவோ அதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தமிழக அரசை நடத்துகின்ற அந்தக் கட்சியின் கொள்கையாகவும் நடைமுறை திட்டமாகவும் Policies and Frogramme இருக்கிறது என்று முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

ஆளுநர் உரை மூலமாக நமக்குச் சொல்ல வேண்டிய கருத்தை நிருபர்கள் சந்திப்பில் மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளை முழு அளவுக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது. தமிழக அரசு என்று சொல்லி நாட்டுக்கு அறிவித்துள்ளார்—அதன் மூலம் ஏதேனும் நன்மை கிடைப்பதாக இருந்தால்கூட நான் மகிழ்ச்சி அடைவேன், ஆனால் அதன் காரணமாக தமிழகத்தின் நலன்கள் எங்கே பாதிக்கப்பட்டு விடுமோ என்ற கவலைதான் எனக்கு இவைகளை எல்லாம் ஆளுநர் உரையில் சொன்னால் சட்டமன்றத்திலே உள்ளே ஆளுங்கட்சி உறுப்பினர்கள்கூட விரும்பி ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணத்தோடு டெல்லியில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்து விட்டு பத்திரிகை நிருபர்களுக்கு அந்தக் கருத்தை தெரிவித்து இருக்கிறார்,

திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைப் பார்த்து அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்கிறபோது, ஏதாவது ஒரு குறிப்பிட்ட விஷயத்தில், எந்தத் துறையில் மத்திய அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்லிருந்தால் உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைவேன். ஆனால் மொத்தமாக அறிஞர் அண்ணா அவர்கள் தோற்றுவித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் வழியிலே வந்த அமைப்பு, இன்றைக்கு தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கடமையை நிறைவேற்றுகின்ற நேரத்தில், மத்திய அரசே இன்றைக்கு பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத நேரத்தில், மத்தியரசின் சில இலட்சியங்களிலே நாம் ஒத்துப் போக முடியுமே தவிர அத்தனை இலட்சியங்களிலேயும் ஒத்துப் போக முடியாத நேரத்தில் இப்படியொரு கருத்தைத் தெரிவித்து இருப்பதும் அதைத் தொடர்ந்து

Mr. Desai was appreciative of this . . . .

தனது கருத்தைக் கேட்டு மொரார்ஜி தேசாய் அவர்கள் மிகவும் மனநிறைவு அடைந்தார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்வார்களேயானால் தமிழ்நாட்டு மக்களின் குறைகளைச் சொல்ல வேண்டிய முதலமைச்சரவர்கள், நமக்குக் கிடைக்க வண்டிய பங்கை வாதிட்டுப் பெறவேண்டிய முதலமைச்சரவர்கள், இந்தி போன்ற பிரச்சினையில் தமிழக அரசைப் பொறுத்த வரையில் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்தியைத் திணிப்பதை எதிர்ப்போம் என்று சொல்லவேண்டிய முதலமைச்சரவர்கள் இப்படி, தொகையை எழுதிக்கொள்ளுங்கள், செக்கிலே அடியிலே கையெழுத்துப் போடுகிறேன் என்பதைப் போலச் சொல்லியிருப்பது வருந்தத்தக்கதொன்று. ஒருவேளை இது தவறாக இருக்குமேயானால், முதலமைச்சர், இந்து பத்திரிகையில் வந்திருக்கிற அந்தக் கருத்துக்கு மறுப்பு வெளியிட்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர், வெறும் எம். ஜி. ஆர். அல்ல. அப்படி மறுப்பு வெளியிடாத காரணத்தால்; ஆளுநர் உரை மூலம் வராவிட்டாலும், அரசாங்கத்தின் கொள்கையாக வெளியிடப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஒருவேளை நிதிஅமைச்சர் அவர்கள் குறிப்பிடக்கூடும், ஒருசில குறிப்பிட்ட காரியங்களில் மத்திய அரசாங்கத்தோடு ஒத்துப் போவோம், வேறு காரியங்களில் வேறுபடுகிறோம் என்று சொல்வார்களேயானால் அதை நான் ஏற்றுக் கொண்டாலும், முதலமைச்சருடைய கருத்து அது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்,





அதுமட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையில் கொள்கை விளக்கத்தைப் பொறுத்தவரையிலே, கிராமப் பகுதிகளிலே வாழும் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற அந்த ஆர்வத்தைக் காட்டுகின்ற குறிப்புகள் இருக்கின்றனவே தவிர அவற்றைச் செயல்படுத்துகின்ற வாய்ப்புகள் அதிலே இல்லை. நான் விரிவாகப் படித்துப் பார்த்தேன். இந்த அரசாங்கம் நடைமுறையிலே இந்த ஆண்டில் என்னென்ன சட்டங்களைக் கொண்டுவர இருக்கிறது என்ற கருத்தோ, என்னென்ன கொள்கைகள் வரைமுறை செய்யப்பட வேண்டிய அளவிற்கு இருக்கின்றன என்ற கருத்தோ எதுவும் சொல்லப்படவில்லை.

கூட்டுறவுத் துறையைப் பற்றி, அதைச் சீர்திருத்தி அமைப்பதற்காக ஏதோ சட்டமே வரும் என்றெல்லாம் பேசப்பட்டது. அடுத்து பஞ்சாயத்து பற்றி அண்மையில் ஒரு கருத்து வந்திருக்கிறது, பத்திரிகையிலே இருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அட்வைசரி கமிட்டி போட இருக்கிறது இதற்காக என்று: ஆலோசனைக் குழுவில் எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லாதவர்களை—குற்றச்சாட்டு இருக்கின்ற காரணத்தினாலேயே குற்றவாளி ஆகிறார் என்று கருதி—குற்றச்சாட்டு சொல்லப்படாதவர்களாகப் பார்த்து அந்தக் குழுவில் போடுவோம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்ாக இருக்கின்றவர்களின் நிலைமை என்ன? பஞ்சாயத்து ஒன்றியங்களிலே, கூட்டுமன்றங்களிலே இடம் பெற்றிருக்கின்ற, பஞ்சாயத்து மன்றத் தலைவர்கள் ஏராளமானவர்கள், அதிலே என்ன நிலைமைகளுக்கு ஆளாவார்கள் என்றுகூடத் தெரிவிக்காமல் ஆலோசனைக் குழு இயங்கும் என்ற கருத்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுபற்றி சட்டமாக வருவதானாலும் அல்லது அரசாங்கத்தின் திட்டமாக இருந்தாலும் கூட அதைப்பற்றிய விவரம் இந்த அறிக்கையில் வரவில்லை.

நகர நில உச்சவரம்புச் சட்டம் பற்றியும் குறிப்பில்லை, மத்திய அரசு அகில இந்திய அடிப்படையிலே எத்தனையோ பெரும் நகரங்களில் பலவேறுவிதமான சூழ்நிலைகளில் இருந்தாலும் ஒரு நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதிலே உச்சவரம்பு நிலம் எவ்வளவு இருக்கலாம். சமுதாய நீதிக்கு உகந்த முறையிலே சென்னை நகரத்திலே உள்ள நிலம் எவ்வளவு, உச்சவரம்பின் மூலம் எவ்வளவு கிடைக்கும், ஒருவரின் நிலத்தின் அதிகபட்ச அளவு எதுவாக இருக்கலாம் என்று விளக்கமாக சட்டம் கொண்டு வந்து விட்டார்கள். ஏழை மக்கள் பாதிக்கப்படாத அளவில் விலை கட்டுப்படியாக ஆகவேண்டுமென்ற காரணத்திற்காக நகர நில உச்சவரம்பு என்ற கொள்கையை

[திரு. க. அன்பழகன்] [1978 பிப்ரவரி 23

நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோமே தவிர, தாறுமாறான, ஏறுமாறான, விளக்கம் பெறாமல், தெளிவு இல்லாமல், இன்னும் சொல்லப் போனால் அந்தந்த மாநகரங்களின் தனித் தன்மை தெரியாமல், அந்தந்த மக்களின் சூழ்நிலைகளை விளங்கிக் கொள்ளாமல் உச்சவரம்பு எவ்வளவு என்று வைத்தால் காசு ஏற்கக் கூடிய, மிச்சம் எவ்வளவு வரும் என்று தெரியாமல், வீடு அவனுக்கு மாட்டுக் கொட்டகை அரசாங்கத்திற்கு என்பது போன்று பைத்தியக்காரத்தனமாக ஒரு சட்டம் நடைமுறையிலே நெருக்கடி கால ஆட்சிக்காலத்திலே கொண்டு வரப்பட்டது. அதற்கு எதிர்ப்பு ஏராளமாகி இருப்பதுடன் குழப்பமும் அதிகமாகியிருக்கிறது. நான் நினைக்கிறேன், இந்த அவையிலேகூட இந்தச் சட்டத்தையே நடைமுறையிலே இல்லாமல் எடுத்துவிட எண்ணம் இருப்பதாக கூறப்பட்டது. இந்தச் சட்டத்தை நீக்கும் உரிமையும் மாநில அரசாங்கத்திற்கே இருக்கிறது என்று தெரிகிறது.

ஆனால் அண்மையில் சட்ட அமைச்சரவர்கள், **மத்திய சர்க்கார்** செய்த சட்டம், நாம் எப்படித் தலையிட முடியும் **என்று** கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் சார்பாக அங்கே உள்ள அமைச்சர் சொல்கிற பொழுது, நாங்கள் செய்த சட்டம் என்றாலும், அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் மாநிலங்களின் முடிவு என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குழப்பமான கட்டம் இன்னும் இருக்கிறபோது அதைப்பற்றி ஒரு விளக்கத்தை இந்த அறிக்கையில் தந்திருக்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கை என்பது மக்களின் வாழ்க்கை விதியையும் உருவாக்குமாறு அமைவதாகும். அதில் இந்தச் சட்டத்தைப் பற்றி ஒரு கருத்தைக்கூட தரவில்லை. இன்னும் சொல்லப் போனால் கொள்கை அடிப்படையில் நகர நில உச்சவரம்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் நடைமுறையிலேதான் எதிர்க்கிறோம், அது கிழித்து எறியப்பட வேண்டிய சட்டம். தமிழ் நாட்டிலே எந்த நகரத்திற்கும் பொருந்தி வராத சட்டம் என்பதை ஒரு ஐந்தாண்டுக் காலம் நகராட்சி அமைப்பு முறைகளை, டவுன் பிளானிங் முறைகளைப்பற்றி நான் அறிந்து கொண்டவன் என்ற காரணத்தாலும், மக்களின் நிலை என்ன என்பதையும், மக்களின் எண்ண ஓட்டத்தையும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பெற்றவன் என்ற முறையிலேயும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1978 பிப்ரவரி 23] [திரு. க. அன்பழகன்]

[முற்பகல் 11–20]

அதே போலத்தான், இந்த அரசு, நாங்களெல்லாம் கேட்டுக் கொண்டாலும்கூட, அரசாங்கத்திலே பொறுப்பிலே உள்ளவர்கள்—'பப்ளிக் மென்' என்ற தகுதிக்கு உரியவர்கள், தவறான காரியத்திலே ஈடுபடுவார்களானால், அதை விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் தேவை என்ற அளவில் ஏற்கனவே போடப்பட்ட சட்டத்தை—பப்ளிக் மென் கிரிமினல் மிஸ்கான்டக்ட் ஆக்ட்—என்ற அந்தச் சட்டத்தை, ரத்து செய்தது. நான் அப்பொழுதே சொன்னேன், 'நீங்கள் ரத்து செய்கிறீர்கள். இந்தச் சட்டத்திலே ஏதேனும் குறை இருக்குமானால் அதை மாற்றுங்கள்; இல்லாவிட்டால் நீங்கள் ஒரு சட்டம் கொண்டு வாருங்கள். அதற்கிடையிலே, மத்திய அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டம் கொண்டு வரப்படுமானால், அதற்கு நாம் உட்பட்டு விடுவதாக நீங்கள் கருதி விடாதீர்கள்; அது அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கு எவ்வகையிலும் உடன்பாடானது அல்ல' என்று.

ஆனால், ஆட்சிப் பொறுப்பிலேயுள்ளவர்கள், அந்த அளவுக்கு நான் எடுத்துச் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமா என்பதால் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்றைக்கு, அதை ஏற்றுக் கொள்ளாததால், மத்திய அரசு, நாட்டிலே பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கிற எல்லோர் மீதும் விசாரணை வைக்கிற அதிகாரத்தைப் பெறுகிற அடிப்படையை அவர்கள் ஏற்படுத்துவார்களானால், மத்திய அரசினுடைய பிடி அதிலே இருக்குமானால், அந்தச் சட்டத்தின் மூலமாக, மாநில முதலமைச்சர் அந்தச் சட்டத்திற்கு உட்படுவாரானால், முதலமைச்சராக இருப்பவர், மாண்புமிகு எம். ஜி. ஆர். எனக்கு எதிர்க் கட்சியைச்சேர்ந்தவர் என்றாலும்கூட, அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் 1967-வது ஆண்டிலேயே, அப்பொழுது உள்துறைஅமைச்சராக இருந்த திரு. சவான் அவர்களிடமிருந்துஅ வருக்கு வந்த கடிதத்திற்குப் பதில் எழுதுகிறபொழுது மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். பிரதமருடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவராக மாநில முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் ஆகிறார்கள் என்று சவான் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

th: authority for ensuring the observance of the code of conduct will be the Prime Minister and the Union Home Minister in the case of Chief Minister and Ministers

[திரு. க. அன்பழகன்] [1978 பிப்ரவரி 2

மத்திய அரசாங்கத்தினுடைய பிரதம அமைச்சரும், உள்துறை அமைச்சரும் ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டு, விசாரிக்க, அல்லது நடவடிக்கை எடுக்க உரிமை பெற்றவர்கள் ஆகிறார்கள் என்ற கருத்தை திரு. சவான் அவர்கள் தெரிவித்தார். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் இங்கிருந்து எழுதிய பதிலிலே

Constitutionaly the Central Ministers are under the control of Prime Minister and the State Ministers are under the 'ontrol of Chief Minister

என்று தெரிவித்துவிட்டு,

The Chief Minister is independent of Prime Minister and Home Minister. So, the Chief Minister will be the authority of State Ministers என்று தெரிவித்திருக்கிறார்.

இதை கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த நாட்களில் நான் இந்த வாதத்தைச் சொன்னால், ஒருவேளை இப்பொழுது ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும் பொழுது இதைச் சொன்னால். கலைஞர் கருணாநிதியைக் காப்பாற்றுவதற்காக அன்பழகன் கையாளுகிற மாபெரும் தந்திரத்திலே இது ஒன்று என்று சொல்வார்கள். நல்லவேளையாக இன்று முதலமைச்சர் எம். ஜி. ஆர். நிதியமைச்சர் மனோகரன், எனவேதான் சொல்கிறேன், அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன வாதத்திற்கு நீங்கள் முழுப் பொறுப்பேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்று அறிஞர் அண்ணா அவர்கள் எழுதியதற்கொப்ப, மத்திய அரசாங்க அதிகாரத்திலே, மாநில அரசாங்கம் உட்பட்டு விடக் கூடாது. ஒருவேளை பொதுவானவற்றில் மத்திய சர்க்கார் சொல்வதை ஒத்துக் கொள்ளலாம்; உதவி செய்யலாம்; இன்னும் சொல்லப்போனால், விட்டுத் தரலாம். ஆனால், அடிமையாகிவிடக்கூடாது என்ற எண்ணத்தோடு அறிஞர் அண்ணா எடுத்துச் சொன்ன அது இன்று முதலமைச்சராக இருக்கிற எம். ஜி. ஆருக்கு புரியாமல் இருப்பதற்குக் காரணம் இல்லை. ஒத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் காரணம் இல்லை. ஒத்துக்கொள்வதாலே, வேண்டுமானால், வேறு தொடர்புகள், வேறு காரியங்கள் தடைப்படும் என்று கருதுவாரானாலும், இதில் தெளிவாக இருக்க வேண்டும்.



1978 பிப்ரவரி 28] திரு. க. அன்பழகன்

இன்றைக்கும் சொல்கிறேன், எம். ஜி. ஆர்.—முதலமைச்சர்—அவர்தான், எங்கள் எதிரி. ஆனால் அவருடைய உரிமையைக் காப்பாற்றுகிற அந்தப் பொறுப்பும் அறிஞர் அண்ணா அவர்கள் வழியில் நடக்கிற எங்களுக்கு இருக்கிறதென்ற காரணத்தால், மீண்டும் சொல்கிறேன், இங்கு ஆட்சிப் பொறுப்பிலேயுள்ளவர்கள் மீது எந்தக் குற்றம் வந்தாலும், இந்தத் தமிழக மக்களும்; சட்ட மன்றமும்தான் முடிவு காணும் பொறுப்புடையதே தவிர, வேறு யார் வெளியிலேயிருந்து முடிவுகாணவும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது, என்று. ஒருவேளை; இதுவரை, ஏற்கனவே வேறு பல காரணங்களாலும், தவறான மனப்பான்மையுடன் அணுகிவிட்டீர்கள், என்றாலும், இனி அதை நாங்கள் திருத்திக்கொள்ள தயாராக இருக்கிறோம், என்று இப்பொழுதாவது, சொல்ல முன்வரலாம்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u>: தலைவர் அவர்களே பேராசிரியர் பேசும்போது, எம்.ஜி.ஆர். எங்களது எதிரி என்று குறிப்பிட்டார்கள். உண்மையில் அவர் அப்படி கருதுகிறாரா, அல்லது எதிர்க்கட்சி தலைவர் என்ற அளவுக்கு, நண்பர் என்ற அளவுக்கு அவர் அப்படிக் கருதுகிறாரா என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

<u>திரு. க. அன்பழகன்</u>: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற அந்தப் பொருளிலேதான் சொன்னேனே, தவிர, தனிப்பட்ட முறையிலே எம்.ஜி.ஆரிடத்திலே எனக்குப் பகை இருப்பதற்குக் காரணம் இல்லை. அவர் ஈடுபடுகிற எந்தத் துறையிலேயும் நான் ஈடுபடவில்லை. அரசியலிலே தான் அவரை எதிர்த்துப் போராடுகிறவன் நான். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பொறுப்பிலே இருக்கிற நான் சொல்கிறேன்—அவரிடத்திலே என்ன மாறுபாடு இருந்தாலும்—அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர். இந்தத் தமிழ்நாட்டின் முதலமைச்சர், இந்தியப் பிரதமர், உள்துறை அமைச்சர் அவர்களால் விசாரிக்கப்படக் கூடிய கட்டத்திலே என்றைக்கும் இருக்கக் கூடாது. தனிப்பட்ட விவகாரத்தினாலும், மத்திய அரசோடு அவருக்கிற உறவினால் உடன்பாடோ மாறுபாடோ இருக்கலாம், அது வேறு. முதலமைச்சர் என்றமுறையிலே அந்த நிலையில் இருக்கவேண்டும் என்பதற்காக அழுத்தந்திருத்தமாக அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தை அடிக்கடி சொல்லி போற்றிப் புகழுகிற மனப்பான்மை உடையவர்களாக இருக்கிற நீங்கள் இதை மறந்துவிடமாட்டீர்கள்; மறந்து விடக் கூடாது என்று

கேட்டுக் கொள்கிறேன். அப்படிமறந்து விட்டால் எதிர்காலத்தில் இங்கே யார் இருப்பார்களோ, யார் வந்தாலும் அவர்களுக்கு அந்த எண்ணம் வருமோ, வராதோ யாரும் அறியமாட்டார்கள் என்ற ஏக்கத்தோடு அண்ணாவின் கொள்கையை காப்பாற்றுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாநிலத்திலே உள்ள மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல்வேறு கடமைகளை நிறைவேற்றுவதாகச் சொல்வதற்கு முயற்சிக்கிறார்கள். அந்த முயற்சி வரவேற்கவேண்டியதுதான். ஆனால் வரவேற்க முடியாத அளவுக்கு, உள்ள மிக முக்கியமான ஒரு கருத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

7-வது நிதிநிலைக் குழு இங்கே வந்திருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் மனோகரன் அவர்கள், மத்திய நிதிக் குழுவினிடத்திலே, மாநிலத்தின் சார்பாக தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய கருத்து, நிதிக் குழுவினிடத்திலே ஒரு மாநில அரசு எடுத்து வைக்கிற வாதங்கள் மிக, மிகத் தெளிவாக, வலியுறுத்துவதாக உரிமைகளைக் கேட்பதாக, இன்னும் சொல்லப்போனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளா விட்டால் நாட்டு மக்களுக்கு சுட்டிக் காட்டுவதாக அது இருக்கவேண்டும் என்பது நிதி நிலை அறிக்கையிலே அந்த அளவுக்கு முழுவதும் இடம் பெறாவிட்டாலும் கூட Copy of tha Memorandum to the Seventh Finance Commission. அந்தநிதிப் பங்கீடு கேட்டுள்ள விவரத்தை அச்சிட்டு இந்த அவையில் அவர்கள் வைத்திருக்கலாம். வைத்திருந்தால் இந்த விவாதத்திற்கும் உதவியாக இருக்கும். இனிமேல் எதிர்காலத்திலாவது அவர்கள் அதைத் தர முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே 42-வது பக்கத்திலே, ஏழாவது நிதிக் குழுவைப்பற்றி சொல்லுகிறபோது அந்தக் குழுவிடம் "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கும் ஏற்ப, இந்தப் பொதுவான வருவாய்ஆதாரங்களிலிருந்து மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என நிதிக் குழுவிடம் முறையிட்டுள்ளோம்" என்றும் "ஆண்டு தோறும் அதிகரிக்கும் வருவாய் இனங்கள் மாநிலங்களுக்குப் போதிய அளவில் அளிக்கப் பெறவேண்டும். இந்த அடிப்படையில்தான் கூட்டு நிறுவன வரி வருவாயில் மாநிலங்களுக்கும் பங்கு அளிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





இந்தத் தொடர்கள் கருத்தை ஓரளவுக்குத் தெரிவிக்கின்றன. இந்தக் கருத்துக்கள் நேற்றுக்கூட நம்முடைய சாதிக் பாட்சா கூறியபடி, முறையிடுகிறோம், வேண்டிக் கொள்கிறோம் என்றெல்லாம் இருப்பதை விட நம்முடைய உரிமையை வலியுறுத்திக் கேட்க வேண்டும் இன்னும் சொல்லப்போனால் நம்முடைய உரிமையை ஒப்புக்கொள்ள வேண்டும், கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்கிற அந்தத் தொனி அமைய வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆங்கிலத்திலே அது தெளிவாக இருக்கிறது.

We have urged the Finance Commission that they should ensure that these resources are allocated to the States in a manner fully consistent with the functions and responsibilities assigned to them under the Constinution.

அரசியல் சட்டப்படி நமக்கு இருக்கிற நியாயமான உரிமையைக் கேட்கிறோம். கடமையை ஆற்றுவதற்கு என்ற கருத்து அதில் இருக்கிறது. We have urged என்பதிலே இருக்கிறது. ஆனால் அந்த We havestrongly represented that the Corporation Tax should be made part of divisible pool. என்பதை மொழி பெயர்க்கும் போது, இந்தப் நிதியுடன் சேர்க்கப்பட வேண்டும் வருவாய் மாநிலங்களுக்குப் பிரித்து அளிக்கப்படும் என்பதற்குப் பதிலாக, "இந்த அடிப்படையில்தான் கூட்டு நிறுவன வரி வருவாயில் மாநிலங்களுக்கும் பங்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்' என்று காணப்படுகிறது அந்தசொற்றொடரிலே 'சென்ஸ்' ஏறத்தாழ ஒத்துவரும். ஆனால் சொற்றொடர்கள் ஆங்கிலத்திலே இருக்கிற அதே வகையில், அதே தெளிவோடு அமைய மொழி பெயர்ப்பிலே முழு அளவு அக்கறை காட்டவில்லை என்ற எண்ணத்தை எனக்குத் தோற்றுவிக்கிறது.

[முற்பகல் 11.30]

நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு ஆங்கிலமும், தெரியும், தமிழும் தெரியும். ஆங்கில உரையை அவர் படித்துப் பார்த்து ஏற்றிருப்பார், தமிழிலே அது பின்னர், மொழி பெயர்க்கப்பட்டு இருக்கக்கூடும். அது அப்படியே இங்கே அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது. பல்வேறு இடங்களில் சற்று ஆங்கில உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே கருத்து சற்று வேறுபாடும் அளவிற்கு இருக்கிறது.

இதிலே வேலை வாய்ப்பு பற்றியும், அதற்கு கிராமத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்று சொல்லுகிறபோது, பக்கம் 22–23-ல் பாரா 29-ல் கைத்தறி–கதர் வளர்ச்சி பற்றி சொல்லியிருக்கிறார்கள், கதர்–கிராமத் தொழில் வாரியத்தின்

மூலமாக விசைச் செக்குகள் நிறுவி, எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தை பெருமளவில் விரிவுபடுத்தி, மேலும் பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முற்படுவோம், என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் எத்தனை இளைஞர்களுக்குத் தரப் போகிறீர்கள் என்கிற ஐயம் ஏற்பட்ட காரணத்தால், ஆங்கிலத்தில் இருக்கிற உரையைப் படித்துப் பார்த்தேன். அப்படி ஆங்கிலத்தில் இருக்கிற உரையைப் படித்துப் பார்க்கிறபோது, அதிலே இல்லாத ஒரு தொடர் இதிலே வந்து இருக்கிறது. ஆங்கிலத்தில் இருக்கிற கருத்து பக்கம் 18 பாரா 29-ல், இருக்கிறது.

We propose to significantly increase employment by providing power ghanis to young entrepreneurs under the scheme being implemented by the Khadi and Village Industries Board.

அது தெளிவாக இருக்கிறது. ஆனால் தமிழில் வருகிறபோது அதில் இன்னொரு தொடரையும் சேர்த்து எழுதி இருக்கிறார்கள். தமிழ் அறிக்கையில் ஒரு தொடர் ஒட்டிக்கொண்டு இருக்கிறது. இப்படி இங்கே நான் பல்வேறு பகுதிகளைப் படித்துக்காட்ட முடியும். ஆனால் நேரம் அதிகம் ஆகும் என்பதால் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழிலே 18-வது பக்கத்திலே 'சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்களும் பொறியியல் நிபுணர்களும் உயர் கல்வி, பெற்ற ஆசிரியர்களும் நகரங்களையே நாடுகின்றனர். கிராமங்களை அணுகத் தயங்குகின்றனர்' என்று போடப்பட்டு இருக்கிறது. அதையே ஆங்கிலத்தில் பார்க்கிறபோது தெளிவாக இருக்கிறது. சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் என்று சொன்னால், எம்.பி.பி.எஸ். படித்து விட்டு, அதற்கு மேல் எம்.டி., எம்.எஸ். என்று சிறப்புச் பட்டம் பெற்றவர்கள் என்று பொருள். அண்மையில் ஒருவர் பேசினார் என்று கருதுகிறேன். டாக்டர் ராமமூர்த்தி போன்றவர்கள் கிராமப்புறத்தில் சென்று பணியாற்றவேண்டும் என்று. அவர்கள் கிராமத்துக்குச் சென்று யாருக்குப் பணியாற்றுவது, எந்த வகையில் பணியாற்றுவது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, இந்த குறிப்பில் உள்ள சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் என்பதற்கு ஆங்கிலத்தில் என்ன இருக்கிறது என்று ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஆங்கிலத்திலே இருக்கிற தொடர்

Skilled manpower in the form of Doctors, Engineers and highly skilled teachers tend to concentrate in urban centres and avoid rural areas என்றுள்ளது.



ஸ்கில்டு மேன் பவர் என்று சொல்கிறபோது பொதுவகையில் திறமையற்றவர்களை குறிப்பிடடு ஸ்கில்டு மேன்பவர் என்பதில் டாக்டர் என்றும் இருக்கிறது. அதைத் தமிழிலே மொழி பெயர்க்கும்போது இந்தக் குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டவிரும்புகிறேன்.

பட்ஜெட் உரையாக இருக்கிற காரணத்தால் வேறு—உரையாக இருந்தால் அதிலே வரும் குறைகளை மிகைப்படுத்தி பெரிய கருத்து வேற்றுமை இருக்கிறது என்று சொல்லமாட்டேன்—நிதிநிலை உரையாக இருப்பதால், வரிக்கு வரி சரியான மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும். சட்டத்தை எழுதும்போது எந்த அளவிற்கு வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து எழுத வேண்டுமோ, அந்த அளவிற்கு பட்ஜெட் உரைக்கும் செய்யவேண்டும். அந்த பட்ஜெட் உரையின் முழு அளவிற்கு பொருள் வேறுபாடு ஏற்பட இடம் இல்லாமல் ஒத்து இருக்கவேண்டும்.

நான் ஆங்கிலத்தையும் சேர்த்துப் படித்த காரணத்தால், எனக்கு ஏற்படக்கூடிய தெளிவு, ஆங்கில உரையைப் படிக்க முடியாதவர்களுக்கு ஏற்பட முடியாது. ஆகவே, நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட மொழி பெயர்ப்பால் ஏற்படக்கூடிய குழப்பத்தைத் தவிர்க்க ஆங்கிலத்தில் எந்த அளவிற்கு உரை சரியாக இருக்கிறதோ அந்த அளவிற்குத் தமிழிலும் உள்ள உரை சரியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

நான் குழம்பிவிடக் கூடாது என்று சொல்கிறார்கள். நான் எடுத்துச்சொன்ன விளக்கம் நாஞ்சிலார் அவர்களைக் குழப்பிவிடக் கூடியது என்று சொன்னால் இதற்கு மேலும் அதிகமாக நான் பயின்று கொண்டு வரவேண்டும். நான் சொல்ல விரும்புவது எல்லாம் இப்போது ஏற்பட்ட குழப்பத்தைப் போல் உங்கள் பக்கத்திலே இருப்பவர்களுக்கும் ஏற்படுமானால்—தற்போது இருப்பவரைச் சொல்லவில்லை வேறு யாராவது இருந்தால் அந்தக் குழப்பத்தை தவிர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்றுசொல்லியிருக்கிறார்கள். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதுதான். கடந்த ஆண்டும் அறிவித்திருக்கிறார்கள். ஏறத்தாழ ஒரு லட்சம் பேருக்கு சிறுதொழில் செய்வதற்கு, அதன் மூலம் வேலை வாய்ப்பளிக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்றார்கள். அதற்குப் பிறகு

அண்மையில் முதலமைச்சர் திருச்சிக்குச் சென்றபோது அங்கு "ஒரு ரகசியத்தைச் சொல்லப்போகிறேன். இங்கே சொல்வது சரியல்ல ; இருந்தாலும் சொல்லுகிறேன் ; இரண்டு லட்சம் பேர்களுக்கு கிராமப்புறத்திலே வேலை வாய்ப்புக் கொடுக்க திட்டம் போட்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள்.

இப்படிப்பட்ட வேலைவாய்ப்பளிக்கும் ஒரு திட்டம் ஏற்கனவே—கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வந்திருக்கிறது. ஆனால் இதுவரையில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டது? இலட்சம் பேருக்குக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அதில் 5,000 பேருக்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா? அதற்கான சூழ்நிலையாவது உருவாக்கப்பட்டிருக்கிறதா ? இதுவரை இல்லையே. எங்காவது உருவாக்கியிருக்கிறோம் என்று சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராகயிருக்கிறன். நான் இதைக் குற்றமாகச் சொல்லவில்லை.

நமக்குத் தேவையும் ஆசையும் அதிகமாக இருக்கிறது. அதை எந்த அளவுக்கு நிறைவேற்ற முடிகிறது என்பதுதான் பிரச்னை. ஏற்கனவே அறிவிக்கபட்ட திட்டம் இப்படி இருக்கும்போது, இப்போது இரண்டு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதே, அது எப்படி நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும். 5,000 பேருக்கே உருவாக்கித் தரமுடியாமல் இருக்கும்போது இரண்டு லட்சம் பேருக்கு எப்படித் தரப்போகிறீர்கள் ?

அதைப் போல, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 10 ஆயிரம் சிறு தொழில்கள் உடனடியாகத் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அது 5 ஆண்டுகளில் அல்ல ; 12 மாதங்களில் அந்த ஆண்டில் 5 மாதங்கள் கடந்து, 7 மாதங்கள் தான்பாக்கி இருந்தன. இந்த 7 மாதங்களுக்குள் 10,000 அல்ல என்று கூறலாம். ஆனால், 12 மாதத்திலாவது 10,000 சிறு தொழில்கள் தொடங்குவது என்பது முடியுமா என்பதைத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் அப்போது பேசும் போதே குறிப்பிட்டேன். இப்பொழுதுள்ள 50,000 சிறு தொழில்கள் சரியாக நடத்த முடியாத நிலைமைக்கு ஆளாகி இருக்கின்றன. அவை தொடர்ந்து நடக்கவாவது உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெவித்தேன். அதற்கு வழிமுறை என்ன என்று கேட்டேன். பதில் சொல்லவில்லை.

இந்த ஆண்டு 7 மாவட்டங்களில் மாவட்ட தொழில் நிலையங்களைத் தொடங்குவது பற்றி அறிவித்திருக்கிறார்கள். ஒரு அரசாங்கம் 7 மாவட்டங்களில் சிறுதொழில்களைத் தொடங்குவதற்காக மாவட்டத் தொழில் நிலையங்கள் அமைப்பது வர





வேற்கத்தக்கது. ஆனால் அந்த 7 மாவட்டங்கள் எது, எது என்று தெரிவிக்கப்படவில்லை. சாதாரணமாக திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை போன்றபகுதிகளில் அதாவது எம். ஆர். டி. ஏரியா என்பார்களே அந்தப் பகுதிகளில் ஆரம்பிப்பதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆனால் இந்த அறிக்கையிலே எந்த அடிப்படையில் மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படும் என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஒரு வேளை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 7 மாவட்டங்களைப் பரவலாகத் தேர்ந்தெடுப்பார்களா என்பதும் புரியவில்லை.

அதைப்போல. பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க 'லான்ட் ஆர்மி' அமைப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். லான்ட் ஆர்மி என்ற பெயரே எனக்குப் பிடிக்கவில்லை என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களே தொடங்கி வைத்த 'சீரணி' என்ற பெயரை வைத்துக்கொள்ளலாமே! அது பிடிக்கவில்லை என்றால் வேறு ஏதாவது ஒரு பெயரை வைத்துக்கொள்ளுங்கள். சீரணி என்று வையுங்கள். அல்லது நிலச் சீர்திருத்தப் படை என்று வையுங்கள்: சீரணி என்பது கலைஞர் வைத்த பெயர் அல்ல ; அண்ணா வைத்ததுதானே! கலைஞர் வைத்த பெயர் என்றால் உங்களுக்குப் பிடிக்காது. (குறுக்கீடு: அவர் கைராசிக்காரர் ஆயிற்றே. அதனால் தப்பில்லை.)

நிலப்படைத் திட்டத்தில் 2 ஆயிரம் பேருக்குப் பயிற்சி தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த 2 ஆயிரம் பேரை எந்தெந்த இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1967 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அறிஞர் அண்ணா அவர்கள் 'லாண்ட் ஆர்மி'—நிலப்படை அமைப்போம் என்று அறிவித்தார்கள். அந்த வார்த்தையைத்தான் பயன்படுத்தியிருக்கிறோம். திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அண்ணா குறிப்பிட்டு கூறியபெயராக இருந்தாலும் அதன்பிறகு அண்ணா அவர்களே தான் அந்தப் பெயர் பொருத்தமாக இல்லை என்று சொல்லி, 'பிராஸ்பெரிட்டி பிரிகேட்—சீரணி' என்ற பெயரை வைத்தார்கள். அதனால் தான் சொன்னேன், கலைஞர் வைத்த பெயர் என்றால் விட்டு விடுங்கள்; ஏனென்றால் அவரை உங்களுக்குப் பிடிக்காது: (குறுக்கீடு) அவர் ஒன்றும் வேண்டாதவர் இல்லையே (சிரிப்பு). நான் எதைச்சொன்னாலும் நிதி அமைச்சர்

தனக்குத்தான் என்று எடுத்துக்கொள்கிறார். நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். நான் சொல்வது இங்கே இல்லாதவர்களுக்கு. ஆகவே, ' நிலப் படை ' என்ற பெயரை மாற்றி ' சீரணி ' அல்லது நிலச் சீர்திருத்தப் படை ' என்ற பெயரை வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலப்படைக்கு ஆள் சேர்த்து, அவர்களுக்கு 3 அல்லது 6 மாதம் பொது வேலை அளித்து, அந்தக் காலத்தில் உணவு, உடை, உறையுள் போன்ற வசதிகளைச் செய்துகொடுத்து, போகும் போது 'லம்ப் சம் மவுண்ட்' கொடுத்து கையில் மொத்தப் பணம் கொடுத்து அனுப்பி விடுவது என்றால் வேலையில்லாப் பிரச்னை தீர்ந்து விடுமா? இது பொது மக்களையும் ஏமாற்றுவது மாதிரி அல்லவா இருக்கிறது. இப்படிச் செய்தால் பொதுவாக ஏமாற்றமளிப்பதாக இருக்குமே தவிர கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதாக இருக்காது.

[முற்பகல் 11-40]

அவர்களை நிரந்தரமாக இப்படையில் வைத்துக்கொள்ள முடியுமா? ஆண்டு முழுவதற்குப் வேலை கிடைக்காததால், வருமானம் இல்லாதவர்கள், உழைக்கும் வாய்ப்பு வேண்டியவர்கள், தங்கள் உடல் உழைப்பைத் தரக்கூடியவர்கள் கிராமந்தோறும் உள்ளனர். அப்படி உள்ளபோது மண்வெட்டி எடுப்பதற்கு எஸ்.எஸ்.எல்.சி படித்து இருக்க வேண்டுமா? இதற்குப் பொறுக்கி எடுக்கப் போகிறார்களா? பொதுவாகவே மக்களுக்கு உழைக்கும் வாய்ப்பு தரவேண்டும்.

கிராமச் சீரமைப்புத் திட்டம் நல்லமுறையில் வெற்றி பெறுமானால் எல்லா வகையிலும் ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் அமையும். ஆகவே, இந்தக் கிராமப்புறச் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் ஒரு நாளைக்கு 4 ரூபாய், 5 ரூபாய் கூலி என்ற முறையில் அவர்களுக்குக் கூலி தர நிலைமை இல்லாவிட்டாலும் போதிய அளவுக்குச் சம்பளம் தந்து, அந்த வகையில் அந்தந்தப் பகுதி மக்களையே இதில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதே போல் இன்றையதினம் கிராமங்களை முன்னேற்றுவோம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டு அதற்காக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ''நூறு காத பயணமும் முதலில் ஒரு சில அடிகள் வைத்து தானே தொடங்கப் பெற வேண்டும்'' என்று இப்போதுதான் நம்முடைய நிதியமைச்சரவர்கள் நடைவண்டியை வைத்துக்கொண்டு நடக்கப் பழகத் தொடங்கிக் கொண்டிருக்கிறார்.



நீண்ட நாட்களாக அவரை அப்படிப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஒரு ஆசை. நூறு காத தூரப் பயணம் செய்ய முதலில் சில அடிகள் எடுத்து வைத்துத் தானே நடக்க வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உணர்வுகளுக்காக மகிழ்ச்சி அடைந்தாலும் அதன் அடிப்படைக் காரணத்தைப் பார்க்கிற போது நாங்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முற்பட்டிருக்கிறோம் என்றும் இதற்கு முன்னாலிருந்ததிராவிட முன்னேற்றக் கழக அரசு இதைச் செய்யவில்லை என்று சொல்வதே நோக்கமாக இருக்கிறது.

இந்தக் காரியத்தை நீங்கள் வந்துதானா ஆரம்பித்தீர்கள்? இதற்கு முன்னாலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கிராம வளர்ச்சிக்கான காரியங்களைக் கவனிக்கவில்லையா ? இங்கே இருக்கிறாரே பொதுப் பணித் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன், அவர் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில் இருந்த போது அவர் தொகுதியிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுத்து சாலை இணைப்பு எற்படுத்தி ஒவ்வொரு கிராமமும் அவருடைய சேவையைப் பாராட்டும்படியாக வைத்திருக்கிறார்கள். உங்கள் ஆட்சியின் மூலமாகவா அந்தக் காரியங்கள் நடைபெற்றன? இன்னும் அங்கே நாளைக்குத் தேர்தல் நடந்தால் கூட அவர் வெற்றி பெறுவார். இது அவரைப் பாராட்டுவதற்குத்தான் சொல்கிறேனே தவிர குறை சொல்வதற்காக அல்ல. திரு. இராமச்சந்திரன் அவர்கள் செய்த அந்தப் பணி திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போதா செய்யப்பட்டது ?

கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில் அவர் அமைச்சராக இருந்த நேரத்தில் அந்தக் காரியத்தைச் செய்தார்கள். திரு. மனோகரன் நிதி அமைச்சராக இருக்கிற நேரத்தில் அந்தக் காரியங்கள் திட்டமிடப்பட்டு இன்றைக்கு நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமபுற வளர்ச்சி பற்றிய அடிப்படை பிரச்சினையைக் காந்தியடிகளும் அமரர் அண்ணாவும் சுட்டிக் காட்டினார்கள் என்பதையும் இங்கே கூறியிருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அறிஞர் அண்ணாவும் இதே மாமன்றத்தில் முதலமைச்சராக இருந்து 1967–68 ; 68-69 ஆண்டுகளில் நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் வைத்திருக்கிறார்கள். அந்தநேரத்தில் அவர்கள் கிராமப்புற வளர்ச்சி குறித்து திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். போடாமலா இருப்பார்கள்? இங்கே நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1978 பிப்ரவரி 28

நாஞ்சில் மனோகரனை விடவா கிராமப் புற வளர்ச்சியைக் குறித்து அறிஞர் அண்ணா அவர்களுக்கு அக்கறை குறைவாக இருந்திருக்க முடியும் ? அறிஞர் அண்ணா அவர்களுக்கு இல்லாத அக்கறையா திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு இருக்கிறது ? இந்த அவையிலே இருக்கும் அனைவரையும் கேட்கிறேன். மகாத்மா காந்தியை விடவா? அறிஞர் அண்ணாவை விடவா நாஞ்சில்மனோகரனும், எம். ஜி. ஆர். அவர்களும் கிராமப் புற வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள்? ஆகவே நாங்கள்தான் இதைத் தொடங்கி வைத்தோம் என்று நீங்கள் சொல்வது பொருத்தம் உடையதாக இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள் 1967–68 ஆண்டுகளில் எடுத்துக் கொடுத்த அடிச் சுவட்டை பின்பற்றி தான் கலைஞர் அவர்கள் ஏழாண்டுக் காலம் ஆட்சி நடத்தினார்கள் நாங்கள் அறிவித்த அந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் நீங்கள் இங்கே ஆட்சி நடத்துகிறீர்கள். எனவே நாங்கள் தான் அந்த அடிச்சுவட்டையே ஆரம்பிக்கிறோம் என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க ஆட்சியில் நிறைவேறிய திட்டங்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்ல நேரமில்லை என்ற காரணத்தால் சொல்கிறேன், இதில் பக்கத்திற்குப் பக்கம் நீங்கள் செய்ய இருக்கிற காரியங்கள் நாங்கள் ஏற்கனவே செய்ய முற்பட்டு எங்களால் மேலும் முடியவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த காரியங்களைத்தான் நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்களே தவிர அவை புதியவை அல்ல.

கிராமங்களிலிருந்து மக்கள் பெரிய நகரங்களை நோக்கி வருகிறார்கள் என்பதைச் சொல்லி, கிராம மக்கள் பெரிய நகரங்களை நோக்கி வர வேண்டிய அவசியம் இல்லாத ஒரு சூழ்நிலையை கிராமங்களில் ஏற்கனவே ஏற்படுத்தியிருந்தால் இந்தக் கஷ்டம் வந்திருக்காது என்று சொல்லி கிராமங்கள் ஏற்கனவே கவனிக்கப்படவில்லை என்று சொல்லும்போது இடையில் சொல்கிறீர்கள் சிறு நகரங்கள் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. என்று. அப்படிப் புறக்கணிக்கப்பட்டிருக்கிற சிறு நகரங்களை மேம்படுத்த இனியாவது உடனடியாக ஏதாவது செய்ய முடியுமா என்றால் செய்யக்கூடிய வாய்ப்பு இல்லை என்றும் குறிப்பிடுகிறீர்கள்.

ஐந்தாண்டுகள் நான் அமைச்சராக இருந்தபோது சிறு நகரங்களுக்குச் செய்யப்படக் கூடிய திட்டங்கள் என்ற முறையில் குடிநீர் வாரியத்தின் மூலம் கோவில்பட்டி போன்ற பல சிறு நகரங்களுக்கு 50 லட்சம், 60 லட்சம், ஒரு கோடி ரூபாய் செலவில் அங்கெல்லாம் குடிநீர் திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. சிறிய நகரங்கள் பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளன என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு, இன்னொரு பக்கத்தில் அதே நிதி அமைச்சர் அவர்கள் 'கிராமங்களை எல்லாம் சிறு நகரங்கள்



1978 பிப்ரவரி 28] [திரு. க. அன்பழகன்]

ஆக்க நாங்கள் முயற்சிக்கிறோம்' என்று சொல்லக்கூடிய அந்த பரிதாபத்திற்குரிய நிலைக்கு ஆளாகிறீர்கள். எல்லா கிராமங்களுமே வளர்ச்சியுற்றுவிட்டால் அப்புறம் சிறு நகரமே இருக்காது. கிராமங்கள், சிறுநகரங்கள், பெரு நகரங்கள் இவற்றிற்கிடையே அதிகமான வேறுபாடு உண்டு. அகில இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் சிறிய கிராமங்களில் இருந்து பெரிய நகரங்கள் வரை ஒரு 'கோஆர்டினேடட் டெவலப்மென்ட்', ஒரு நெருக்கமான தொடர்பு வளர்ச்சி நிலவக்கூடிய நிலையைப் பெற்றிருக்கிறது என்பதைப் புள்ளி விவரத்தோடு எடுத்துக்காட்ட முடியும்.

ஐந்து மைல்களுக்கு ஒரு இடத்தில் ஒரு சிறிய நகரத்தைப் பெற்றிருப்பது தமிழகம்தான். இருபது மைல்களுக்கு ஒரு இடத்தில் ஏறக்குறைய ஒரு தாலூகா தலைநகரைப் பெற்றிருப்பது தமிழகம் தான். நாற்பது ஐம்பது மைல்களுக்கு உள்ளாக ஒரு மாவட்ட தலைநகரைப் பெற்றிருப்பது தமிழகம்தான். ஆகவே இப்படிப்பட்ட ஒரு கோஆர்டினேட்டெட் டெவலப்மென்ட், இப்படிப்பட்ட ஒரு தொடர்பான வளர்ச்சி இருப்பதால் தான் கிராமங்கள் ஓரளவு வளர்கின்றன. நேரம் இல்லாத காரணத்தால், நிறையப் பேசுவதற்கு இருந்தாலும், மன்னித்துக் கொள்ள வேண்டும், நான் முன்னுரையிலேதான் நிற்கிறேன். இதோடு முடித்துக் கொள்கிறேன்.

ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். கிராம வளர்ச்சி, கிராம வளர்ச்சி என்ற பெயரால் பரவலாகத் திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றித் தருகிற பெரிய முயற்சியில் அக்கறை காட்ட வேண்டுமே தவிர கிராம வளர்ச்சி என்று சொல்லி விட்டதால் மட்டும் கிராமங்கள் வளர்ந்துவிடும் என்று கருதாதீர்கள்.
அதற்காகத்தான் ஊராட்சி ஒன்றியங்கள் நல்ல முறையில் செயல்படவேண்டும் என்று சொல்கிறோம். நூற்றுக்கணக்கான ஊராட்சி ஒன்றியங்கள் அரசியல் கட்சி நோக்கத்தோடு செயல்பட்ட நெருக்கடி கால அரசால் ஒடுக்கப்பட்டுக் கிடப்பதை இன்றைய ஆட்சியாளர் உணர்ந்து ஒன்றியத் தேர்தல்களை நடத்தி அதன் மூலம் தமிழ் நாட்டில் கிராம வளர்ச்சியை ஏற்படுத்த முன் வரவேண்டும். தவிர சில அரசியல் காரணங்களால் அப்படிப்பட்ட ஊராட்சி மன்றத் தேர்தல்கள்ன்வி எல்லாவற்றையும் ஒத்திப் போட்டால் இந்த அரசு செய்ய வேண்டிய நல்ல கடமையை செய்வதற்கான வாய்ப்பை இழந்ததாகிவிடும் என்று நினைவூட்டி என்னுடைய கருத்துக்களை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பற்றி பலவிதமான கருத்துக்கள் இன்றைக்கு உலவினாலும் ஆளும் கட்சியில் இருக்கிற நாங்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையை மனநிறைவோடு வரவேற்று எங்களுடைய மகிழ்ச்சியை நாங்கள் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் தாக்கல் செய்த நேரத்தில் ஆளும்கட்சி உறுப்பினர்கள் அதை வரவேற்கிற விதத்தில் அவர்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காக அவர்கள் கரவொலியை எழுப்பவில்லை என்ற வருத்தம் எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு எழுந்ததைப் பார்க்கிற நேரத்தில் எங்களுக்கு உள்ளபடியே வியப்பாக இருந்தது.

நாங்கள் மிகுந்த கட்டுப்பாட்டோடு செயல்பட வேண்டும் என்ற வகையில் நம்முடைய வரவேற்புகள் அத்தனையும் முகத்தில் காட்ட வேண்டுமே தவிர இங்கிருக்கிற பெஞ்சுகளில் அடிப்பதன் மூலம் வரவேற்க வேண்டாம் என்ற கட்டுப்பாட்டுக்கு வந்ததை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் வேறுவிதமாகக் கருதி நாங்கள அதை வரவேற்கவில்லை என்ற கருத்தை உலவ விட்டார்கள்.

நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் இந்த நிதிநிலை அறிக்கையை மனநிறைவோடு வரவேற்கிறோம். அன்று நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படித்து முடித்தும் இந்த மன்றத்தில் இருக்கிற நாங்கள் எல்லாம் அவர்களுடைய கையைக் குலுக்கி எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கவேண்டும் என்று நாங்கள் முண்டியடித்துக் கொண்டுவருகிற நேரத்தில் இந்த மன்றத்தில் இருக்கிற, இந்தக் குறையைச் சொன்னவர்கள் நிதி அமைச்சர் அவர்களது கைகளை விடாமல் பிடித்துக்கொண்டு நாங்கள் பலமாக இதை வரவேற்கிறோம். அழகாக நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல செய்திருக்கிறீர்கள் என்று சொன்னது பத்திரிகையில் வராமல் போயிற்றே என்பதை நினைக்கும்போது நான் வருத்தப்படுகிறேன்.

[முற்பகல் 11-50]

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி அன்றைக்கு வேகமாக வரவேற்றார்கள். ஆனால், பத்திரிகைகளில் கருத்துக்களைக் கொடுக்கிற நேரத்தில், வேறுவிதமாகச் செய்திகள் வர ஆரம்பித்தது. இந்த நிதிநிலை அறிக்கை மிகப் பெரும் புயல் பாதிக்கப்பட்டதற்குப் பின்னால், வெள்ள பாதிப்புக்குப் பின்னால் எவ்வளவோ கோடிக்காகணக்கான ரூபாய்களைச் செலவு செய்த பின்னால், தயார் செய்யப்பட்டிருக்கிறது. பல திட்டங்களைக் குறிப்பிட்டு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள்.





ஆனால், இதை எதிர்க்கின்றவர்களைக்கூட நான் பார்க்கின்றேன், வேகத்தைக் காண்கின்றேன். வேகமாக இருக்கும் என்பதற்காக ஏதோ சொல்லப்படுகிறதே தவிர உண்மையான வேகத்தை இதில் பார்க்க முடியவில்லை. சில ஆலோசனைகளைத்தான் சொல்லுகிறார்கள். அவைகள் வரவேற்க வேண்டியவைகள்தான். ஒன்றை நான் சொல்வேன். இந்த நிதிநிலை அறிக்கை கொள்கை அறிக்கையாக, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் கொள்கையின் பிரதிபலிப்பாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, கொள்கையே இல்லாதவர்களாக, கொள்கைகளைப்பற்றி அரிச்சுவடி நிலையில் தான் நாங்கள் இருக்கிறோம் என்று கருதுகின்றவர்களுக்கு மிக்க மரியாதையோடு தெரிவித்துக் கொள்வேன்.

கொள்கைகளைத் தெரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால் தான், கொள்கைகளின் அரிச்சுவடியைத் தெரிந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், அண்ணாவின் கொள்கைகளை வாழ வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்த அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கினோம், இல்லாவிட்டால் இருந்த இடத்திலேயே இருந்திருப்போம். கொள்கைகள் காப்பாற்றப்பட வேண்டும் அண்ணாவின் கொள்கைள் உயிரோடு வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இந்த இயக்கத்தைத் துவக்கினோம் இல்லையென்றால் நாங்கள் இடத்தை மாற்றிக்கொள்ள் வேண்டிய அவசியமேயில்லை.

ஆகவே, அண்ணாவின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற வகையில் தான் பல்வேறு பகுதிகளை இந்த நிதிநிலை அறிக்கையில் காண முடிகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது கொண்டு வரப்பட்ட நிதிநிலை அறிக்கைகளையும் வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதே நேரத்தில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் ஆட்சி காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையையும் பர்த்தேன். பலவிதமான இனங்களில், வரவாக இருந்தாலும் சரி, செலவாக இருந்தாலும் சரி, எந்த வகையிலாவது நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் விட்டுவிட்டிருப்பார்களோ என்கின்ற பயத்தோடு அந்தக் கணக்குகளை எல்லாம் பார்த்தபோது, நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைந்தேன். வரவாக இருந்தாலும் சரி, செலவாக இருந்தாலும் சரி, எந்த இடத்தில் தாழ்ந்துவிடாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை தாழ்வில்லை என்பதைச் சுட்டிக்காட்டிற்று என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்:

எடுத்துக்காட்டாக நான் சொல்ல விரும்புகிறேன். 1974-75ல் மொத்த வரவு 520·29 கோடி ரூபாய்தான். ஆனால் 1978-79ல் 680.8 கோடி ரூபாய் என்கின்ற அளவுக்கு ரூ. 159.79 கோடி

அளவுக்கு உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். இதை சாதனையில்லை என்று சொல்லுவார்களேயானால் அவர்களுக்காக நான் பரிதாபப்படுகிறேன்.

அதேபோல முன்னால் வரிகள் மூலம் வருவாயை எடுத்துக் கொண்டால், 1974-75-ல் 305.68 கோடி ரூபாயாக இருந்தது, 1978-79-ல் 377.51 கோடியாக உயர்த்திக்காட்டி அதில் 71 கோடி அதிகப்படுத்திக் காட்டியிருக்கிறோம். பிரித்துக்கொடுப்பதின் மூலமாக மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய வருவாய், 1974-75-ல் 97.36 கோடியாக இருந்தது 1978-79-ல் 145.75 கோடியாக உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள்.

அதே போல் மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள் வருவதில், நாம் ஏதாவது ஏமாந்துவிட்டோமா என்று பயந்து கொண்டே பார்த்தேன். அதில் 1974-75-ல் 27.13 கோடி என்று இருந்ததற்குப் பதிலாக 1978-79-ல் 66.96 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, விற்பனை வரியை எடுத்துக் கொண்டால், 1974-75-ல் 187 கோடியாக இருந்தது, 1978-79-ல் 259 கோடியாக உயர்த்திக் காட்டப் பட்டிருக்கிறது. இதில் மட்டும் 71 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்திக் காட்டியிருக்கிறோம்.

அதேபோல், மோட்டார் வண்டிகள் வரிகள் மூலமாக 1974-75-ல் 38.87 கோடியாக இருந்தது, 1978-79-ல் 52.43 கோடியாக உயர்த்திக் காண்பிக்கப்பட்டது, 13.56 கோடி அளவுக்கு உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

அதே போல் செலவுக் கணக்கில் எங்கே குறைவாக காண்பிக்கப்பட்டிருக்கிறதோ என்று பார்த்தேன். அப்படியில்லாமல், 1974-75-ல் 528.36 கோடியாக இருந்தது, வருவாய்க் கணக்கில் செலவாக 1978-79-ல் 726.76 கோடியாக உயர்த்தப்பட்டது. இதிலே மட்டும் 198.40 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டது.

அதேபோல், பொதுவான பணிகளுக்கு 1974-75லே 143 கோடி ரூபாய் என்றிருந்தது ; 1978-79-லே இது 226 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதே போல், சமூக, சமுதாயப் பணிகளுக்காக 1974-75-லே செலவு 223 கோடி ரூபாய் என்றிருந்தது ; 1978-79-லே இது 304 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.



அதேபோல், பொருளாதாரப் பணிகளிலே 1974-75-லே 147 கோடி என்று இருந்தது, 1978-79-லே 176 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதேபோல், கல்விக்கான செலவு, மருத்துவச் செலவு, வேளாண்மைக்கான செலவு, அல்லது எந்தச் செலவானாலும் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி உயர்த்திக் கொடுத்திருப்பதே, இந்த அரசின் மிகப் பெரிய சாதனையாகும்.

அதேபோல், அரசு ஊழியர்களுக்காக மூன்றாவது சம்பளக் கமிஷனை அமைத்து, அப்படி அமைக்கப்பட்டதோடு அல்லாமல், உடனடியாக ஏப்ரல் மாதத்திலிருந்தே அதன் பலன் ஊழியர்களுக்குக் கிடைக்கும் என்று அறிவித்து, அதற்கான வழிவகைகளைச் செய்திருப்பது நாம் பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். 25 ரூபாய் இடைக்கால நிவாரணமாகக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், ஊதிய அறிவிப்புக்குச் சம்பளக் கமிஷன் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டு 30 கோடி ரூபாயும், பஞ்சப்படி தருவதற்காக என்று 24 கோடி ரூபாயும் பேசி வாங்கப்பட்டிருப்பதை நாம் உள்ளபடியே பாராட்டியாக வேண்டும்.

ஆனால், இந்த நேரத்தில் அரசு ஊழியர்களுக்காக வாதாடுகிறவர்கள் பற்றி நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள் எந்த நிலையில் இருந்து வாதாடுகிறார்கள் என்று நான் பார்க்கிறேன். அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவர், இன்றைக்கு அரசு ஊழியர்களுக்காக வாதாடுகின்றவர், அன்றைக்குத் தலைமைச் செயலகத்திலே இருக்கின்ற ஊழியர்கள் பஞ்சப்படி வேண்டுமென்று போராட்டம் நடத்துவதற்கு முன்வந்த நேரத்திலே, அவர்களில் 400 பேர்களை அரசு ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, அவர்கள் மீது எத்தனைவிதமான நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதை நான் இன்றைக்கும் மறப்பதற்கில்லை.

அது மட்டுமல்ல, அன்றைக்கு அவர்கள் போராட்டத்திற்கு வருகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களுடைய அடிப்படை உரிமையாக இருந்த சங்கத்தின் உரிமையைப் பறிப்பதாக திடீரென்று அறிவித்தார்கள். அரசு ஊழியர்களின் சங்கங்களின் உரிமைகள் எல்லாம் பறிக்கப்படுகின்றன என்று அறிவித்தார்கள். அன்றைக்கு ஊழியர்கள் பயந்தார்கள்.

நமது சங்கங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றதே என்று அரசு ஊழியர்கள் பயந்த நேரத்திலே, அன்றைக்கு எனக்கு நினைவிற்கு வருகிறது, எங்கள் கட்சியிலிருந்த ஒரே ஒரு நாடாளும் மன்ற உறுப்பினராக இருந்த திரு. மாயத் தேவர் அவர்கள் அன்றைக்கு ஒரு அறிவிப்பு விட்டார்கள். அப்படி இந்த அரசு இந்த உரிமையைப் பறிக்குமானால், அது இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்குப் பின்னால்தான், அவசர அவசரமாக, வேறு வழியில்லாமல், இந்த உரிமைகளைத் தருகிறோம் என்று முன்வந்தார்கள்.

ஆனால், இன்றைக்குப் பேசப்படுகிறது, நாங்கள்தான் அரசு ஊழியர்களின் ஆதரவாளர்கள், நாங்கள்தான் அவர்களுக்குத் துணை நிற்கிறோம் என்று சொல்கின்றவர்கள், அன்றைக்கு பஞ்சப் படி வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அவர்கள் அதற்கு ஒரு உச்ச வரம்பு விதித்தார்கள். இந்தப் புதிய முறையை, மரபை உண்டாக்கியவர்கள் தான் இன்றைக்குத் துணை நிற்பதாகக் கூறுகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

அது மட்டுமல்ல.. மின்சாரத் தொழிலாளர்கள் அன்றைக்குப் போராடிய நேரத்திலே, அவர்கள் உபயோகித்த வார்த்தை உலக சரித்திரத்திலேயே இல்லாத ஒரு வார்த்தை என்று அன்றைக்குச் சொல்லப்பட்டது. இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராகவும், பழைய முதல் அமைச்சராகவும் உள்ளவர் அன்றைக்குச் சொன்னார்கள். இந்தத் தொழிலாளர்கள் இப்படிப் போராட்டத்திலே இறங்கினால், ''நான் இரும்புக் கரங்கள் கொண்டு இந்தப் போராட்டத்தை அடக்குவேன்'' என்று அவர்கள் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் நெஞ்சத்திலே இருந்து அகற்றப்படவில்லை.

இதேபோல், பட்டதாரி ஆசிரியர்கள் போராடிய நேரத்திலே, அவர்களில் எத்தனை பேர்களைச் சிறைக்கு அனுப்பி சிறையிலே அடைத்தார்கள் என்பதும், அவர்களிடமிருந்து மன்னிப்புக் கடிதங்கள் எழுதி வாங்கப்பட்டது என்பதும் நாம் என்றைக்கும் மறக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தாலும் கூட, இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அவர்களுக்கு நியாயமாகத் தரவேண்டிய ஊதியங்களைக் கொடுத்து, அவர்களுடைய ஊதியங்களை அதிகப்படுத்துகின்ற வகையிலே, சம்பளக் கமிஷன் அமைத்து, அது அமுலுக்கு வருகின்ற நாள் 1—4—1978 என்று அறிவித்து, தரவேண்டிய எந்தச் சலுகையையும் அவர்கள் கொடுத்திருப்பதை கண்டு நான் பெருமைப்படுகிறேன்.



இதேபோல், பல்வேறு தொழிலிலே உள்ள தொழிலாளர்களுக்கு, பல்வேறு தரப்பினருக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வசதிகள் செய்துக் கொடுக்கப்படுகின்ற வகையிலே, பல்வேறு காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12·00)

ஆனால், இந்த அரசு வெறும் 9 கோடி ரூபாய்க்கு வரி விதித்ததைப்பற்றி அவ்வளவு வேகமாகப் பேசப்படுகிறது என்பதை நினைத்துப் பார்க்கிறேன். வரி விதிக்கிற இந்த நேரத்தில், வரியே இல்லாமல் ஒரு பட்ஜட் வந்திருக்கக் கூடாதா என்று நினைக்கிறவர்கள் கூட, வரி விதிப்பால் மீண்டும் பல உயர்வுகள் ஏற்பட்டு விடுமோ என்று நினைக்கின்றவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பஸ் இருக்கைகளுக்கான கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். சிலபேர் அச்சப்பட்டார்கள். இப்படி இருக்கைகளின் கட்டணத்தை உயர்த்தியதன் மூலமாக நாளைய தினம் பயணிகள் கட்டணம் அதிகப்படுத்தப்படுமோ என்ற ஐயத்தை எழுப்பினார்கள். இப்படிப் பேசுவதன் மூலமாக பஸ் முதலாளிகள் விழித்துக் கொண்டு கட்டணத்தை உயர்த்தலாம் என்ற உணர்வு அவர்களுக்கு வருகிற வகையில் அமைந்திருக்கிறதே தவிர, நிச்சயமாக பஸ் முதலாளிகள் இன்றைக்குக் கட்டணத்தை உயர்த்துகின்ற அளவுக்கு அரசு பார்த்துக் கொண்டிருக்காது என்பது அனைவருக்கும் தெரியும். அப்படி பஸ் முதலாளிகள் கட்டணத்தை உயர்த்துவார்களானால் நிச்சயமாக ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்கள் எல்லாம் கூட, அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையில் இல்லை என்பதைத் தைரியமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்லுவேன்—வேறு எந்த அரசும் சாதிக்காத ஒன்றை, இந்த அரசு பதவி ஏற்றவுடன் தமிழ் நாடு முழுவதும் ஓடிக் கொண்டிருக்கும் விரைவுப் பேருந்துகளின் கட்டணத்தைக் குறைத்துக் காட்டிய பெருமை எங்களுடைய போக்குவரத்து அமைச்சருக்கு இருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்தில் பாராட்டியாக வேண்டும். இந்த அரசின் செயலை, இந்த அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால் விரைவுப் போக்குவரத்துக் கட்டணத்தை, சாதாரணமாக அல்ல, 15 ரூபாய் செலுத்துகிறவர்கள் கூட, 1 ரூபாய் 60 காசு குறைகின்ற அளவுக்குக் கட்டணத்தைக் குறைத்துக் காட்டிய பெருமையைப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பாராட்டுகிற மனோபாவம் இல்லாத காரணத்தால் பாராட்டவில்லை.

ஆனால் அதே நேரத்தில் இந்த அரசு கொள்கையை இழந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்—கொள்கையை இழப்பதற்கோ, விடுவதற்கோ எங்களைப் போன்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள் விடமாட்டோம் என்பது எதிர்க்கட்சியில் இருக்கும் அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் பேசும்போது சொன்னார்கள், ''1967 ஆம் ஆண்டிலிருந்து நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் ; எத்தனையோ அரசுகள் இருந்திருக்கின்றன ; முதலமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள் ; ஆனால், மடாதிபதிகளை யாரும் எதுவும் செய்ய முடியவில்லை '' என்று மனவேதனையோடு தெரிவித்தார்கள். திரு. கிட்டப்பா போன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். நாம்—திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக வருவதற்கு முன்னால் எந்த அளவுக்கு மடாதிபதிகளை எதிர்த்துப் பேசினோம், எந்த அளவுக்கு நிலச்சுவான்தார்களை எதிர்த்துப் பேசினோம் என்பது என் நினைவில் இருக்கிறது. அவ்வளவு பேச்சுப் பேசினோம். பேசியதற்குப் பின்னால் என்ன விளைவுகள் ?

அவ்வளவு மடாதிபதிகளும் அன்று ஆளும் கட்சியைப் பிடித்துக் கொண்டு அவர்கள் சாதிக்க வேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொண்டார்கள். விவசாயிகள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் ; மடாதிபதிகள் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கு ஆளும் கட்சியில் இருந்தவர்கள்தான் மடாதிபதிகளுக்கு உதவி செய்கிற வகையில் எவ்வளவு பலன்களைப் பெற்றார்கள் என்பதை ஆதாரத்தோடு காட்ட வேண்டுமென்றால் காட்டத் தயாராக இருக்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள ஒருவர் அன்றைக்கு ஆளும் கட்சியில் இருந்தார்கள். பட்டுக்கோட்டையில் எழுத்தாணி என்ற கிராமத்தில் பல நூறு ஏக்கர் நிலத்தை ஒரு மடாதிபதிக்குச் சொந்தமான நிலத்தை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். அதிலே மட்டும் அவர் இரண்டு மூன்று இலட்சம் ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருப்பார்.

அதேபோல் கும்பகோணத்தில் அன்றைய ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் கோயில் நிலத்தை எல்லாம் எடுத்துக் கொண்டார். 30 ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொண்டு ஏழை எளியவர்களை வெளியேற்றிவிட்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்பதை இன்றைக்கும் நாடு மறக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் எங்களுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னாலே, தேர்தல் வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால், நான் அவரோடு இருந்த



நேரத்திலே அவருடைய உணர்வுகள் புரிய ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அன்றைக்கு ஒரு நாள் அவருடைய அவசரமான வேலையாக அவர் போய்க் கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் ஒரு மடாதிபதியின் ஏஜெண்ட் அவரை வந்து பார்த்து, மடாதிபதி அவரைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லுகிறார். ஆனால் அவர் அந்த ஏஜெண்டிடம் '' நான் மடாதிபதியைப் பார்க்க விரும்பவில்லை, எனக்கு வேலை இருக்கிறது '' என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்களை '' ஏன் நீங்கள் பார்க்க மறுக்கிறீர்கள் ? '' என்று நான் கேட்டேன். அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள். '' நான் பார்ப்பதன் மூலம் தங்களுக்கு என்ன லாபம் கிடைக்கப் போகிறது என்பதற்காக முன்கூட்டியே பிடிக்க அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள் ; அந்த மடாதிபதிகளுக்கு நாம் அடிமையாகிவிடக் கூடாது என்பதால் நான் பார்க்க விரும்பவில்லை '' என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்தான் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறாரே தவிர, வேறல்ல. இந்த நாட்டில் இருக்கும் எந்த நிலச்சுவான்தாரும், எந்த மிகப் பெரிய முதலாளியும். . . .

திரு. க. சுப்பு : முதலமைச்சர் மடாதிபதியைப் பார்க்க மறுத்துவிட்டார் என்று சொல்கிறார். ஏற்கனவே மின்சாரத் துறை அமைச்சர், ஒரு தொழிலதிபரை முதலமைச்சர் பார்க்க மறுத்துவிட்டார் என்று சொன்னார், முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் சொல்லுகிறபோது, பொதுமக்களை முதலமைச்சர் பார்க்க மறுக்கிறார் என்று சொன்னார். இப்படி முதலமைச்சர் பார்க்க மறுத்துக் கொண்டிருந்தால் யாரைத்தான் சந்திக்க இருக்கிறார் என்பதைத் தெரிவிப்பார்களா?

திரு. எஸ். ஆர். இராதா : முதலமைச்சர் யாரைத்தான் சந்திக்க விரும்புகிறார் என்று திரு. சுப்புவுக்கு சந்தேகம் வந்தது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல. நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், இந்தியாவில் மட்டுமல்ல; உலகத்திலே வேறு எந்த நாட்டிலேயும் சரி, அதிகமான மக்களைச் சந்தித்துக் கொண்டு அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரே ஒரு தனி மனிதர் யார் என்றால் எங்களுடைய புரட்சித் தலைவர் தான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். ஆனால் யாரும் பார்க்க வேண்டுமென்று துடிதுடிக்கக் கூடாது, பிரச்சினைகளுக்காக அவரைப் பார்க்க வேண்டுமென்றால் அவர்களைப் பார்ப்பதற்காக அவர் தயாராக இருக்கிறார். போகின்ற வழியிலே வருகிறவர்களை எல்லாம் நிறுத்தி அவர் பார்க்கிறார், 70 வயது 80 வயது கிழவிகள் போகிற நேரத்திலே தன்னுடைய காரை நிறுத்தி அவர்களைப் பார்த்துவிட்டுப் போகிறவர் அவர் ஒருவர் தான். யார் யார் மக்களைப் பார்க்க மறுத்தார்கள் என்று எனக்குத் தெரியும். திரு. சுப்பு என்னைக் கேட்கிறார். ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னாலே எனக்குத் தெரியும், ஆட்சிப் பொறுப்பிலே இருந்து கொண்டு சாதாரண ஏழை கட்சித் தொண்டனைப் பார்ப்பதற்குக்கூட நேரம் இல்லாமல், இவனை வெளியே போகட்டும்

என்று சொன்னவர்களை எனக்குத் தெரியும். அடையாளம் வேண்டுமானால் காட்டுவேன். இப்படி வேண்டுமென்றே திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்கிறார்கள், முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை, எங்கே இருக்கிறார், பார்ப்பது கடினமாக இருக்கிறது என்று. திரு. சுப்பு அவர்கள் இப்படிச் சொல்வதால் அவரைப் பார்க்க வேண்டுமென்று ஆசையை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிகிறது. திரு. சுப்பு அவர்கள அவர்களைப் பார்க்க வேண்டுமென்றால் இப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம். அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றுதான் நினைக்கிறேன். அவர் எதற்காக இப்படிக் கூறுகிறார் என்று எனக்குத் தெரியும். ........

திரு. க. சுப்பு : அவர்கள் நிறையப் பேர்களைப் பார்க்கிறார்கள், பார்க்கலாம். ஆனால் நான் சொல்லுவது குறைகளைக் கேட்பதற்குப் பார்ப்பது. திரு. பக்தவத்சலம் அவர்கள 'லஞ்ச ஊழலை ஒழித்து விடுகிறேன் என்று சொல்கிறார். ஆனால் பொதுமக்களைப் பார்க்க மறுக்கிறார்' என்று சொல்லியிருக்கிறார். உறுப்பினர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி கோட்டையிலே தினம் ஒரு மணி நேரம் ஒதுக்கி பொதுமக்களைச் சந்தித்து அவர்களுடைய மனுக்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது. உறுப்பினர் அவர்கள் தம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்துவார்களா?

திரு. எஸ். ஆர். இராதா : உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர் அதிகமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் குறைகளைக் கேட்கவில்லை என்று சொன்னார்கள். திரு. சுப்பு அவர்களுக்குத் தெரியாது என்று நான் சொல்லமாட்டேன்; ஆனால் அதை எதற்காக இங்கே சொல்லவில்லை என்று எனக்குத் தெரியும். இன்னும் பெருமையோடு நான் சொல்லிக்கொள்வேன், நான் திரு. சுப்புவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். யாருக்கும் இல்லாத ஒரு சுபாவம் எங்கள் தலைவரிடம் இருக்கிறது. அதுதான் அவரது வளர்ச்சிக்கே காரணம். பார்க்க வந்திருப்பது யாராயிருந்தாலும் அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்று துடிதுடிக்கின்ற ஒரே மனிதர் அவர்தான். அந்த உணர்வு இருக்கின்ற காரணத்தினாலேதான் அன்றைக்கு சினிமா உலகத்திலே அவர் இருக்கின்றபோது ஒருவருக்கு ஒரு கஷ்டம் என்றால் ஆயிரம் ஆயிரமாக எடுத்து வழங்குவார். எத்தனை பேர்களுக்கு பணம் கொடுத்தார் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. பெரிய பதவியிலே இருக்கிறவர்களுக்கு அல்ல, சாதாரணமானவர்களுக்கு, சாதாரண குடிமக்களுக்கு அவர்கள் என்ன வேண்டுமென்று கேட்டவுடனேயே உடனே அதற்காக உத்திரவு போட்டதை நான் என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன். எங்கள் புரட்சித் தலைவரிடத்திலே திரு. சுப்பு அவர்களுக்கு தனி செல்வாக்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியும். எந்தக் காரணத்தினாலே



இங்கே சொல்கிறார் என்று எனக்குப் புரிகிறது. பார்க்க வேண்டுமென்கிற அவரது ஆசையை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒருமணி நேரம் அல்ல, எல்லா காலத்திலேயும் பார்ப்பதற்கு தயாராக இருக்கிறார் (குறுக்கீடு). நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் நானும் சுப்புவும் திட்டமிட்டுப் பேசுவதாகச் சொல்கிறார். ஆனால் இன்னும் நாங்கள் திட்டமிடவில்லை, திட்டமிட ஆரம்பித்தால் விளைவுகள் வேறுவிதமாக போனாலும் போகும்.

[பிற்பகல் 12·10]

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் நண்பர் இராதா அவர்களிடம் வைத்திருக்கின்ற உரிமையின் காரணமாகக் கேலியாக ஒன்றைக் கேட்டேன். சுப்புவும் நீங்களும் இப்படி வாக்குவாதம் செய்து எப்படியாவது முதலமைச்சரை மக்கள் சந்தித்து குறைபாடுகளைச் சொல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் திட்டமிட்டுப் பேசுகிறீர்கள் என்றுதான் சொன்னேனே தவிர, நான் சொன்ன திட்டம் சதித் திட்டம் அல்ல.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே எதிர்க்கட்சித் தலைவரவர்களுடைய திறமை எனக்குத் தெரியும். இதிலேயும் ஒன்றை இடையில் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள் நான் மறுக்க முடியாது.

ஆனால் எங்கள் புரட்சித் தலைவர் முதலமைச்சரவர்களைப் பொறுத்தவரையிலும் அவர் பார்க்க மறுப்பதைப் போலவும் செய்ய மறுப்பதைப் போலவும் இன்றைக்குச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அவர்கள் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், பேசிக் கொண்டிருக்கிறார்கள், குறைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ பார்க்க வேண்டும் என்று நேரம் குறிப்பிட்டு, காலம் குறிப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று வரைமுறைப் படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை. அத்தனை பிரச்சினைகளிலும் அவர்கள் காரியம் ஆற்றிக்கொண்டு வருவதை நாம் பாராட்டியாக வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

நான் இந்த நிதி நிலை அறிக்கையிலே பல்வேறு சாதனைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் மணியடித்துவிட்டீர்கள். எங்களுடைய கட்சியிலே பல்வேறு நண்பர்கள் பேச வேண்டுமென்று ஆர்வத்திலிருப்பதால் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. தே. இரா. இராஜாராம் நாயுடு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பாராட்டி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. தே. இரா. இராஜாராம் நாயுடு] [1978 பிப்ரவரி 28

....The Government already declared that Dharmapuri District is a backward district. Denkanikotta is a most backward and also a forest area which is connected with Karnataka State.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும்; நான் இப்பொழுது தெரிந்து கொண்ட தகவலிலேயிருந்து, எங்களுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்.ஜீ.ஓ. யூனியனைச் சேர்ந்த பரதன் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று என்னுடைய நண்பர் கொறடா அவர்கள் தகவல் கொடுக்கிறார்கள். எனவே பேச்சுவார்த்தை என்றால் தினசரி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நண்பர் சுப்பு போன்றவர்களுக்குத் தெரிவித்து கொள்கிறேன்.

THIRU D. R. RAJARAM NAIDU : There is one dam proposal—Dhoddala Project, pending since 32 years, from the Congress period. During the time of State Elections the Chief Minister of Tamil Nadu assured the people in a public meeting at Anchetty that they would construct the dam, if they came to power. Our Government is having one more efficient and intelligent Engineer who is acting as P.W.D. Minister Hon. Mr. S. Ramachandran. He is more or less equal to Dr. Visveswariah who has suggested construction of the Krishnarajasagar and Bhakranangal Dams. I request the Hon. Chief Minister and the Hon. P.W.D. Minister to consider this dam proposal for immediate implementation which will be helpful for the people in that area.

Secondly, regarding small farmers, last year due to failure of rains, the small farmers did not secure anything. This year the same thing happened. Some hundreds of years back, one great philosopher late Narayanappa has written about this :

"விளைந்தாலும் பஞ்சமே, விளையா விட்டாலும் பஞ்சமே.

So, I request the Hon. Chief Minister to kindly convert the temporary loans and crop loans into long term loans.

Thirdly, regarding Mulberry Plantations, our area is very, very suitable and may be selected for the plantation of Mulberry. In our area there is one biggest Silk Farm at Kolatti. It is the biggest farm in South East Asia. In our area most of the agriculturists are cultivating Mulberry Plantation and they are selling the cacoons at Bangalore at a higher rate, whereas our Government is purchasing at a lower cost. That is the point there.



19‑ பிப்ரவரி 28] [திரு. தே. இரா. இராஜாராம் நாயுடு]

I want to say one thing. From the days of Thiru Omandoor Ramasamy Reddiar who was the Chief Minister some time before of Doctor Kalaignr there was no separate portfolio and separate.

Minister for Handlooms During the peiod of Hon. Chief Minister Thiru M. G. Ramachandran there is a separate portfolio and a separate Minister for Handlooms. I am highly thankful to him for the same.

I request the Hon. Chief Minister to kindly start a Silk Weaving Factory at Denkanikottah to solve the unemployment problem. The Covernment can export silk sarees and shirts to the various countries. Then only, the Government will earn more foreign exchange. Also it will be a benefit to the Government.

கடைசியாக எனக்கு இந்த நேரத்தில் வாய்ப்புக் கொடுத்ததற்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன.

திரு. ஆ. வெள்ளைசாமி : பேரவைத் தலைவரவர்களே 1978–79 ஆண்டு நிதிநிலை அறிக்கையினை வரவேற்று, பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலே பாட்டாளிகளுடைய கூட்டாளிகள் ஆட்சி நடைபெறுகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஏழை, எளிய மக்கள் சிரித்து வாழவேண்டும் என்பதற்காக, உருவாக்கப்பட்டது இந்த நிதிநிலை அறிக்கை. அப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கை ஏழை, எளிய மக்களுக்குக் கரும்பாக இருக்கிறது. ஆனால் பொறாமைக்காரர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை கருப்பாகவும், வெறுப்பாகவும், கசப்பாகவும் தெரிகிறது என்பதை இந்த நேரத்தில் தெளிவாக்க் கூற விரும்புகிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிளாட்டோ என்னும் அறிஞன் சொன்னான், ஒரு நாட்டிலே நாணயமானவர்கள் ஆட்சி நடைபெறவேண்டும் அல்லது ஆட்சிக்கு வருபவர்கள் நாணயமாக ஆட்சிபுரிய வேண்டும் என்று சொன்னார். அந்த வகையில் நமது புரட்சித் தலைவர் தலைமையில், எந்தவித விருப்பு வெறுப்புக்கும் ஆட்படாமல், எந்தவித ஆசாபாசத்திற்கும் இடம் தராமல் சுயமான ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகிறது. கடந்த காலத்திலே, அல்லல்களுடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்தக் காலத்திலே, வள்ளலினுடைய ஆட்சி நடைபெறுகிறது. ஏழைகள் வளம் பெற வேண்டும் என்பதற்காக இந்த ஆட்சி நடைபெறுகிறது.

[திரு. ஆ. வெள்ளைசாமி] [1978 பிப்ரவரி 28

அந்தவகையில் நிதிநிலை அறிக்கை அளித்திருக்கிற மாண்புமிகு நிதியமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்தகால ஆட்சியின் விளைவால், 143 ஆலைகள் மூடப்பட்டிருந்தன ஆனால் நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் சீரிய முயற்சியால் மூடப்பட்ட அந்த ஆலைகளிலுள்ள பூட்டுகள் உடைக்கப்பட்டு, நடக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பண்டைக்காலத்திலே பருந்தால் துரத்தப்பட்ட புறாவிற்குத் தன்னை அற்பணித்த சிபிச் சக்கரவர்த்திபோல், ஏழை, எளியவர்கள் வாழ வேண்டுமென்பதற்காக தன்னை தமிழக மக்களுக்கு ஒப்படைத்து ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் புரட்சித் தலைவர். அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் ஆட்சியிலே, அரிஸ்டாட்டில் கூறியது போல் ஒரு நாடு சுபிட்சம் அடைய வேண்டுமென்றால், ஒரு நாட்டினுடைய வாழ்வும், தாழ்வும் கல்வியிலேதான் இருக்கிறது என்ற கருத்துக்கு ஒப்ப, கல்விக்கு எந்த அளவுக்கு நிதி ஒதுக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு ரூ. 180 கோடிக்கு மேல் ஒதுக்கியிருப்பதை நான் தெளிவாகக் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே மெழுகு உருகுவதைப் போல் உருகி, மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற சூழ்நிலையை மாற்ற, அப்படிப்பட்ட ஏழை, எளியவர்கள் வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்த நல்ல திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள்.

[பிற்பகல் 12–20.]

(திரு. இரா. முத்தையா— தலைமை)

அதற்கு அடுத்தபடியாக எந்த நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமோ, எந்த நாடு முன்னேற்றத்தை நோக்கிசென்று கொண்டிருக்கிறதோ, அதற்கு அடிப்படையான காரணங்கள் மின் சக்தி. மின்சாரம் எந்த அளவு உற்பத்தியாகின்றதோ, எந்த அளவுக்குத் திட்டம் தீட்டப்படுகின்றதோ அதைக்கொண்டுதான் அந்த நாடு முன்னேற முடியும் என்ற அளவிலே மின் உற்பத்தியை பெருக்கவேண்டும் என்பதற்காக 114 கோடி ரூபாய் மின் உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட சீரிய திட்டங்களை எல்லாம் கொண்ட இந்த அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ப.உ.ச. அவர்கள் பேசுகிறபோது அதைப் பண்ருட்டி மண் மாம்பழம் அல்ல, பண்ருட்டி பலாப்பழம் என்று கூறினார்கள். அவரிடத்திலே கூறுவேன் நிதிநிலை அறிக்கையை அவர் படித்துப் பார்த்தாரா அல்லது கடித்துப் பார்த்தாரா என்று தெரியவில்லை. ஆனால் அவர் பலாப்பழத்தை மாம்பழம் என்று கருதிக்கொண்டு மேல் தோலை நீக்கி உள்ளே இருக்கிற நாரை நீக்கி, கொட்டையை நீக்கி சாப்பிடுவதற்குப் பதிலாக, அப்படியே முயற்சித்திருக்கிறார்கள். ஆகவே தான் பலாப்பழம் அவருடைய உதட்டையும், பற்களையும் பதம் பார்த்துவிட்டது என்று நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1978 பிப்ரவரி 28] [திரு. என். சங்கரய்யர்]

அதே நேரத்தில் அவர் பேசும்போது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அரசியல் சட்டத்தை உருவாக்கியபோது நாட்டிலே அசாதாரண சூழ்நிலை ஏற்படுகின்ற நேரத்திலே, அவசர கால சட்டத்தைக் கொண்டு வருகிற வழிவகைகளை செய்திருந்தார்கள். ஆகவேதான் நாட்டிலே எமர்ஜென்சி வந்தது. இந்திய துணைக் கண்டத்திலே வந்தது. தமிழகத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எமர்ஜென்சி காலத்தில் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்று கூறினார்கள் அப்படிக் கூறிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஐ.பி.சி. குற்றத்தை செய்தால், அந்த ஐ.பி.சி. சட்டத்தை உருவாக்கியதிலேயும் குறை காண்பார்கள் என்று தெரிகிறது.

இப்படிப்பட்ட ஒரு சீரிய நிதிநிலை அறிக்கையை அவர்கள் புரட்சியும் இல்லை, புதுமையும் இல்லை. வெள்ளம் வந்தால் இந்தக் கிளிஞ்சலும், கூழாங்கற்களும் பெரும் ஓட்டத்தைத் தடுத்து விட முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில பிரச்சினைகளைக் கூற விரும்புகிறேன். என்னுடைய ஆத்தூர் தொகுதியில் கழக்குன்றூர் ஆற்றுத் திட்டம் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் அரசின் ஆலோசனையில் இருந்து கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றி அங்கே மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற ரெட்டியார் சத்திரம் பகுதிக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பலன்பெற வாய்ப்பிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருப்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புல்வெட்டுக் கண்மாய்த் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், பழனிமலையில் இருக்கிற காடுகளிலே மழை உருவாகி, காட்டாறுகளாக ஓடி அந்தப் பகுதியிலுள்ள பத்துக்கும் மேற்பட்ட குளங்களில் பாய்ந்து நிரம்புகிற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் திண்டுக்கல்லை தனி மாவட்டமாக ஆக்க வேண்டும் என்று கோரிக்கையும் இந்த நேரத்தில் இருக்கிறது. திண்டுக்கல் அத்தனை வசதிகளையும் பெற்றிருக்கிறது. திண்டுக்கல்லை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஆத்தூர் தொகுதியில் நெசவாளர்கள் மிகவும் பெரும்பகுதியாக வாழ்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களின் மூலம் அவர்கள் உற்பத்தி செய்கிற சேலைகளும் துணிகளும் தேங்கிக்

கிடக்கின்றன. அப்படித் தேங்கியிருக்கிற துணிகளை எல்லாம் அரசு வாங்கி அவர்களை வாழ்விக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய பகுதி பிற்பட்ட பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கிற சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்து பராமரிக்கப்படாமல் இருக்கின்றன.

பல பகுதிகளிலே பஸ்களையே பார்க்காத மக்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வழி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. என். சங்கரய்யா : பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1978–79 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை குறித்து மார்க்சிசகம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஏற்கனவே எங்கள் கட்சி உறுப்பினர்கள் பல முக்கியமான கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்; அதைத் தொடர்ந்து, இறுதியாக இந்த உரையின் மீது மார்க்சிசகம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பின்வரும் கருத்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நடக்கும் விவாதத்தில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளைப் பற்றியும், பொதுவாக இருக்கும் பிரச்சினைகளைப் பற்றியும், அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றியும் பல யோசனைகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த யோசனைகளையெல்லாம் ஒவ்வொரு பட்ஜெட் தொடரிலும் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆனால் அடுத்து வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில், ஏற்கனவே சொல்லப்பட்ட யோசனைகள் எத்தனை நிறைவேற்றப்பட்டன, எவையெவை நிறைவேற்றப்படவில்லை, அதற்கான காரணங்கள் என்ன என்பதைப் பற்றி எந்தவிதமான தகவலும் தரப்படுவது இல்லை. அதைக் குறித்துகூட இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். எனவே நான் அதற்கு ஒரு ஆலோசனை கூறுகிறேன்.

இங்கே மின்சார வாரியத்தின் வரவு-செலவு திட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்படுகிற ஆலோசனைகளையெல்லாம் அந்த வாரியம் எடுத்து, எது நிறைவேற்றப்பட்டு இருக்கிறது, இல்லை என்பதை அடுத்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுகிறபோது, தனியாக ஒரு புத்தகமாக கொடுத்து வருகிறார்கள். அப்படி, இந்த பட்ஜெட் விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் யோசனையை எந்த அளவிற்கு ஏற்றுக் கொண்டு நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை குறித்து ஒரு புத்தகம்—1 வருஷம் கழித்து அல்ல—3 மாத காலத்திற்குள்—தொகுத்துக் கொடுத்தால், ஜனநாயக முறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் நிர்வாகத்தின் மீது ஒரு ஆதிக்கத்தை, கன்டிரோலை வைத்து இருக்கிறது என்பதற்கு உதாரணமாக அமையும். சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லும் கருத்தும் எந்த அளவிற்கு



நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும், அறிந்துகொளவதற்கு வசதியாக அது இருக்கும். என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டு, அப்படிப்பட்ட ஒரு புத்தகத்தை சபை முன் வைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இப்போது பல்வேறு இலாக்காக்களில் பல்வேறு வகையான யோசனைகளைக் கூறுவதற்கு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், இன்று நூற்று கணக்கான உறுப்பினர்கள் ஒரு பிரச்னையில் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, ஆழமாக கருத்துக்களை எடுத்து வைக்க முடியவில்லை. எந்தப் பிரச்னையையும் ஆழமாக விவாதிக்க முடியவில்லை. இங்கே நாம் ஒருவர் சொல்லும் கருத்தை ஆழமாக சிந்தித்து, விவாதிக்க முடியவில்லை. பாராளுமன்றத்தில் இருப்பதைப் போல் பல்வேறு ஆலோசனைக் கமிட்டிகளை ஏற்படுத்தினால் நல்ல முறையில் ஆழமாக விவாதிக்க முடியும்.

குறிப்பாக, சேலம் கிரௌண்ட் வாட்டர் பற்றிகூட பரிசீலனைக் கமிட்டி போடப்பட்டு இருக்கிறது. இங்கேயும் கிரௌண்ட் வாட்டர் பற்றி பேசுகிறோம். ஆனால் மேலெழுந்தவாரியாகத்தான் பேச முடிகிறது. ஒவ்வொன்றுக்கும் ஒரு கமிட்டி என்று வருகிறபோது அங்கே அவற்றை ஆழமாக விவாதிக்க முடியும். அப்படிப்பட்ட கமிட்டிகள் போட்டால், சட்டமன்றக் கூட்டம் நடக்கிறபோது அவற்றையும் வைத்துக்கொண்டு விவாதித்தால் நலமாக இருக்கும். நாமும் நல்ல வகையில் அந்தப் பிரச்சனை குறித்து விமர்சனம் செய்யமுடியும். எதிர்க் கட்சியும், பல்வேறு கட்சி உறுப்பினர்களும், மனம் திறந்து அரசாங்கத்தோடு பேசி நிலைமைகளைப் புரிந்துகொண்டு, அந்தப் பிரச்னைகளை விவாதித்து மக்களுக்கு நல்லவகையில் அவற்றை நிறைவேற்ற இயலும், ஆகவே, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த பொதுவான வரவு-செலவு திட்டங்களைப் பார்க்கிறபோது, இன்று நம் நாட்டில் நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன. நாம் முதலாளித்துவ பாதையில் தான் ஒரு சமுதாயத்தை உருவாக்க முயற்சிக்கிறோம். ஆனால் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை என்பது உலகத்திலே தோல்வி அடைந்துவிட்டது – சமீசமான நாடுகள், முதலாளித்துவ பாதையில் இருந்து சோசலிச பாதைக்கு மாறிக் கொண்டு இருக்கின்றன.

[திரு. என். சங்கரய்யா] [1978 பிப்ரவரி 28

ஆகவே, இப்போது ஐரோப்பிய நாட்டிற்கும், அமெரிக்க நாட்டிற்கும் போட்டி, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் போட்டி என்று இருக்கக்கூடிய கால கட்டத்தில், வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாட்டை எப்படி வளர்ச்சி அடையச் செய்யமுடியும். அங்கே நாம் பார்க்கிறோம். சோவியத் ரஷ்யாவில் உள்ள மக்களிடம் வறுமையில்லை, வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை, காரணம் என்னவென்றால், நிலமும், தொழிற்சாலைகளும் மக்களுக்குச் சொந்தமாக்கப்பட்டு விட்டன. அங்கே மக்கள் உற்பத்தி செய்யும் அனைத்துப் பொருள்களின் பயனும் மக்களுக்கு திருப்பி கிடைக்கின்றது ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில் அப்படி அல்ல, அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாட்டில் தொழில் வளர்ச்சி அடைந்தால், அந்தத் தொழிலில் வரும் லாபத்தால் ஏழைகளுக்கு, தொழிலாளர்களுக்கு கிடைப்பது இல்லை. 30 ஆண்டு காலமாக இருந்து வந்த காங்கிரஸ் ஆட்சியும் சரி, தற்போது ஓராண்டு காலமாக இருக்கும் ஜனதா கட்சி ஆட்சியானாலும் சரி, அடிப்படையில் முதலாளித்துவ பாதையில் தான் செல்கிறார்கள் ஆகவே, இன்றைக்கு அவர்களால் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது.

அதுமட்டுமல்ல. இந்த நாட்டில் ஏகபோக முதலாளித்துவம் வளர்ந்து கொண்டுவருகிறது. பன்னாட்டு முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்து வருகிறது. ஏகபோக முதலாளிகள்—உள் நாட்டு முதலாளிகள்—ஆதிக்கம் வளர்ந்து வருகிறது நிலபிரபுத்துவம் வளர்ந்து வருகிறது. இப்படி வெளி நாட்டு முதலாளிகள், உள் நாட்டு முதலாளிகள், நிலப் பிரபுக்கள் ஆகியோரின் ஆதிக்கம் நாட்டில் வளர்ந்து வருகிற காரணத்தால், ஆண்டுக்காண்டு வருமானம்—தேசிய வருமானம்—உயர்ந்து வந்த போதிலும், ஏழை, எளியமக்களின் ஆண்டு வருமானம் உயரவில்லை தேசத்தின் வருமானம் உயருகிறது. ஏழை, எளிய மக்கள் வருமானம் உயரவில்லை. இந்த 3 பூதங்களின் வளர்ச்சிதான் இருக்கிறது.

ஆகவே, இந்த நிலைமையை மாற்ற ஒரு புதிய பாதை தேவை, பன்னாட்டு முதலாளிகளை வெளியேற்றுதல், உள்நாட்டு பெரிய முதலாளிகளின் தொழிற்சாலைகளை தேசீயமயம் ஆக்குதல், நிலப் பிரபுக்களின் நிலங்களின் கிராமத்திலுள்ள நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு இனமாகப் பகிர்ந்து அளித்தல், போன்ற முதலாளித்துவம் இல்லாத பாதை தேவை. இதையெல்லாம் செய்யா விட்டால், எந்த விதமான சீர்திருத்தம் கொண்டு வந்தாலும் இந்தியாவின் வறுமையைப் போக்க முடியாது என்று கூறிக்கொள்கிறேன்



1978 பிப்ரவரி 28] [திரு. என். சங்கரய்யா]

[பிற்பகல் 12-30.]

ஆகவே, இதற்கு ஒரு மாற்றுப் பாதை தேவை. முதலாளித்துவம் இல்லாத சமத்துவத்தைக் கொண்டு வரும் ஒரு மாற்றுப் பாதை அவசியம் தேவை. அதற்கு ஒரு இடது சாரி ஜனநாயக முன்னணி உருவாக்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகத் தோன்றுகிறது. இன்றைக்கு இருக்கிற ஜனதா அரசும் சரி, முன்னால் இருந்த காங்கிரஸ் அரசும் சரி, எல்லோருமே முதலாளித்துவத்திற்குத்தான் பாதை அமைத்திருக்கிறார்கள். சமத்துவ பாதைக்கு இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வழி வகுத்துக் கொண்டிருக்கிறது. சமத்துவப் பாதைக்கு வழி வகுக்கும் ஒரு ஜனநாயக அமைப்பு உருவானால்தான் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பொருளாதார நிலைமையைச் சீர்திருத்த முடியும், இல்லை என்றால் இந்தியப் பொருளாதாரமும் பாதிக்கும், தமிழ்நாடும் பாதிக்கும்.

மொழிப் பிரச்சினைப் பற்றி காலையிலே இங்கு பேசினார்கள். நண்பர் உமாநாத் அவர்களும் மற்றவர்களும் தெளிவாகக் கூறினார்கள். மேலும் அதிகமாக அந்தப் பிரச்சினைக்குள் செல்ல நான் விரும்பவில்லை, இன்றைக்கு இருக்கக்கூடிய ஜனதா அரசின் உள் துறை அமைச்சர் சரண்சிங் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார். இந்தியன் அட்மினிஸ்டிரேட்டிவ் சர்வீஸ், இந்தியன் போலீஸ் சர்வீஸ் என்று இரண்டு சர்வீஸ்கள் இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது கூடாது, தேவையில்லை என்பது எங்களுடைய கருத்து. நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கெனவே தெளிவாக இது பற்றி அறிவித்திருக்கிறது.

ஏற்கெனவே, மாநில சுயாட்சி தீர்மானத்தில் நாங்கள் கூறியிருக்கிறோம். யூனியன் சர்வீஸெஸ், ஸ்டேட் சர்வீஸெஸ் என்று இரண்டு சர்வீஸ்கள்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் இந்தியன் அட்மினிஸ்டிரேடிவ் சர்விஸ், இந்தியன் போலிஸ் சர்விஸ் என்று பணியாளர்களைத் தேர்வு செய்து, நியமனம் செய்யும் போது, அவர்களை சம்பந்தப்பட்ட ஸ்டேட் கட்டுப் படுத்த முடியாது. அவர்கள் தவறு செய்தாலும் மத்திய அரசாங்கம்தான் கேட்க முடியும் ; அவர்கள் மீது 'டிசிபிளினரி ஆக்ஷன்' எடுக்கும் அதிகாரம் மாநிலத்திற்குக் கிடையாது. அதனால் அந்த முறை தேவையில்லை. இது மாநில சுயாட்சித் தன்மையைப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்தக் கருத்தை மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு தெளிவாகக் கூறியிருக்கிறார் India is a multi National State. அது உண்மை. அதற்கு வாஜ்பாயி மறுப்பு தெரிவித்திருக்கிறார். இந்திய யூனியனில் பல மாநிலங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்

றுக்கும் தனித் தன்மை இருக்கிறது. தனித்தனியான பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டுக்கு தமிழ் புத்தாண்டு தினம் வருகிறது. அதைப் போல தெலுங்கு புத்தாண்டு தினம் இந்தி புத்தாண்டு தினம் வருகிறது. இப்படிப்பட்ட 'விஷயங்களில் பண்டிகை நாட்கள் கூட வேறுபடுகின்றன. அது அந்தந்த மாநிலத்தைப் பொறுத்தது.

அது மட்டுமல்ல. பல மொழிகள் பேசுகின்ற மாநிலங்கள் இருக்கின்றன. அதனால்தான் மொழி வழி மாநிலம் அமைக்கப்பட்டது. இப்படி அமைக்கப்பட்ட மாநிலங்கள் எல்லாம் சேர்ந்ததுதான் 'இந்தியன் யூனியன்'. இந்தியா ஒன்று ஆனால் அது பல பிரிவுகளைக் கொண்டது; பல்வேறு மொழி பேசும் மக்களைக் கொண்டது. அதனால்தான் பாரதியார் "செப்பு மொழி பதினெட்டுடையாள், எனில் சிந்தை ஒன்றுடையாள்" என்று விடுதலைப் போராட்டத்தின் போது பாடினார். பல்வேறு மொழி பேசுகின்ற மக்கள் இருந்த போதிலும், எதிரியை விரட்டியடிப்பதில், நாட்டு ஒற்றுமையில் ஒரே கருத்துடையவர்கள். அதனால் தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்க முடிந்தது. எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி அல்லது அதிக அதிகாரம் கொடுத்தால் தான் நன்மை ஏற்படும், ஒற்றுமை நிலவும் என்பதை பல ஆதாரங்களுடன் தெளிவாக்க முடியும்.

'யூனிட்டி இன் டைவர்சிட்டி'—பன்முகப் படுத்தப்பட்ட ஒற்றுமை. அதுதான் இந்தியா. சரண்சிங் அவர்கள் அதை உணர்ந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் மாநில சுயாட்சி பற்றி எவ்வளவோ பேசலாம். நேரம் இல்லாததால் அந்த விவகாரத்திற்குள் அதிகமாகப் போகவில்லை. எல்லாமட்டத்திலும் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு அமைப்பும் சுயேச்சையாக செயல்பட வேண்டும். ஆக, தேசிய ஒற்றுமை என்பது மாநில சுயாட்சி, ஜனநாயகம், சமத்துவம் போன்றவைகளில் ஒன்றுக் கொன்று தொடர்புடையது என்பதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல, நிதி ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றி ஜோதிபாசு கூறியதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாநிலம் வசூல் செய்யும் வரிப் பணத்தில் 75 சதவீதம் அந்த மாநிலத்திற்கு கொடுக்கப்படவேண்டும்.

பலகீனமான மாநிலமாக ஏதாவது ஒரு மாநிலம் இருந்தால் அதற்கு சகோதரத்துவ முறையில் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கலாம். ஆனால் 75 சதவீதம் அந்தந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கை. அப்படி இருந்தால்தான் எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் உதவியை நாடி நிற்க வேண்டிய நிலை ஏற்படாது இந்திய எல்லைக்குட்பட்டு, அந்தந்த மாநிலத்திற்கு வேண்டிய தேவைகளை அந்தந்த மாநிலமே பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட வேண்டும ஸடேட் லிஸ்டில் இருக்கக் கூடியவைகளுக்கு மத்திய அரசின் அனுமதியை எதிர் நோக்கி நிற்கும் நிலை இருக்கக்கூடாது. சட்ட மன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினால் அத செயலாக்கும் அதிகாரம் அந்த மாநிலத்திற்கு இருக்க வேண்டும். இப்போது இருக்கிற முறைப்படி, சட்ட மன்றத்தில் சட்டம் நிறை வேற்றப்பட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பி அவருடைய அங்கீகாரம் கிடைத்தால் தான் செயல்படுத்தமுடியும்; அவர் அங்கீகாரம் அளிக்கவில்லை எனறால் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டத்தைச் செயல் படுத்த முடியாது. ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்கு ஏன் அனுப்ப வேண்டும் என்பது என்னுடைய கேள்வி.





இன்றைக்கு அது மாநில சுயாட்சிக்கு குறுக்கிடுவதாகும். நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற சட்டப் பேரவை கூட்டத் தொடரில் சட்டப் பேரவை மசோதா எண் 5 என்ற மசோதாவை சட்டப் பேரவை நிறைவேற்றியது. அது என்ன தெரியுமா ? அது எவ்வளவு அவசரமான பிரச்னை, தெரியுமா ? புயல், வெள்ளம் இவற்றால் பாதிக்கப்பட்ட தஞ்சை போன்ற பிரதேசங்களில் உள்ள குத்தகை வார விவசாயிகள் ஒரு ஆண்டுக் காலம் எந்தக் காரணத்தைக் கொண்டும் குத்தகை பாக்கியைச் செலுத்த வேண்டியதில்லை; அவர்கள் அவ்வாறு செலுத்த முடியவில்லை என்பதற்காக அவர்கள் மீது வழக்கு போடக்கூடாது என்று அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய மசோதா அது. மிக முக்கியமானதொரு மசோதாவாகும். அது மறுநாளே அமலுக்கு வந்துவிடும் என்று பலர் நினைத்திருக்கலாம்.

மன்னார்குடியில் உள்ள எங்கள் தோழர்கள் சொல்கிறார்கள், அங்கீகாரம் வரவில்லை என்ற நீதிமன்றத்தில் உள்ளவர்கள் சொல்கிறார்கள் என்று. சட்டத் துறை செயலாளரிடம் கேட்டால் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம், மத்திய சர்க்கார் ஏதோ கேட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே அவசரச் சட்டமாகப் போடப்பட்டது அது. அதிலிருந்து வாசகம் மாறியிருக்கிறதா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள், வாசகம் மாறவில்லை என்று பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு மாதமாயிற்று. ஜனவரியில் நிறைவேற்றப்பட்டது. புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகை வார விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய மசோதா அது. அதற்கு, மூன்று நாட்கள் முன்னால் வரை ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கவில்லை யென்பதைப் பற்றி சிறிது சிந்திக்க வேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1978 பிப்ரவரி 28

இப்படி நிலை இருந்தால் எவ்வாறு ஒரு மாநில அரசாங்கம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும் என்பதைப் பற்றி இந்த பேரவையும் அரசாங்கமும் யோசிக்க வேண்டும். ஆகவே பஞ்சாபில் நடைபெறக்கூடிய முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் இப்படிப்பட்ட பிரச்சனைகள் பற்றிப் பேசி மாநில அரசுகளின் அதிகாரங்கள் தெளிவாக்கப்பட வேண்டும் என்று கோருகிறோம்.

அதே போன்று கன்கரன்ட் லிஸ்ட் தேவை இல்லை. மத்திய சர்க்காரின் அதிகார வரம்பு பற்றிய பிரச்சனை, மாநில சர்க்கார்களின் அதிகார வரம்புபற்றிய பிரச்சனை என்று இருக்க வேண்டுமே தவிர இரண்டு பேர்களுக்கும் சேர்ந்து இருக்கக்கூடிய பிரச்னை தேவையே இல்லை. ஆகவே, இதைத் தெளிவாக வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேற்கு வங்க முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசினால் கூட்டப்பட்ட முதல் அமைச்சர்கள் மாநாட்டில் ஒரு யோசனை சொன்னார்கள். அதாவது பத்து அத்தியாவசியப் பண்டங்களை எடுத்துக் கொள்வோம். மிக முக்கியமான பண்டங்களை எடுத்துக் கொள்வோம், அவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவோம், அவற்றை நாடு முழுவதும் கொள்முதல் செய்து சப்ஸிடைஸ்ட் விலையில் மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதாகும். அப்படிச் செய்தால் விலைவாசி ஏறாது, விலைவாசி ஏறவில்லை என்றால் பஞ்சப்படியை உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கை எழாது. ஆனால் அந்த யோசனைக்கு மத்திய சர்க்காரிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை என்று வருத்தத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோரிக்கையை நீங்கள் வலியுறுத்த வேண்டும் என்று. இப்போது என்.ஜீ.ஓ.க்கள் பஞ்சப்படி உயர்வு வேண்டுமென்று கேட்கிறார்கள். மத்திய அரசு இப்போது டி.ஏ. அடுத்த இன்ஸ்டால்மென்ட் கொடுக்க 50 கோடி ரூபாய் ஒதுக்க இருக்கிறார்கள். என்று சொல்கிறார்கள். வேறு வழி இல்லை. காரணம், பல பொருள்களின் விலைகள் உயர்ந்துவிட்டன. வரி உயருகிறது. பொருள்களின் விலைகளும் உயர்கின்றன, அப்போது அகவிலைப் படியை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வருகிறது. உணவுப் பொருள்கள், எண்ணெய் வகைகள், சோப் வகைகள். இவை மக்களுக்கு மிகவும் அவசியம். இப்படிப் பட்ட ஒரு பத்து பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்திவிட்டால் நிலைமை ஓரளவிற்கு சீரடையும். விலைவாசியை கட்டுப்படுத்த மாட்டோம். ஆனால் அதிக ஊதியம் கேட்கக் கூடாது என்று சொல்லக்கூடாது.



1978 பிப்ரவரி 28] [திரு. என். சங்கரய்யா]

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியம். (மேற்கு வங்க முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன யோசனை, முதல் அமைச்சர்கள் மாநாட்டில் ஆலோசிக்கப்படவேண்டும். மிக அத்தியாவசியமான பொருள்களை அரசு கொள்முதல் செய்து மக்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பெரிய பிரச்சனை, வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையை நகர்ப்புற மக்களும் உணருகிறார்கள், கிராமப்புற மக்களும் உணருகிறார்கள்; அனைவரும் உணருகிறார்கள். இதை எப்படித் தீர்க்கப்போகிறோம் ? நான் இம்மாநில அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். நம்மைப் போன்ற இன்னொரு மாநில சர்க்கார் மேற்கு வங்காள சர்க்கார். நம்மைப்போல் அவர்களும் நிதிநிலை பொறுத்து சிரமப்படுகிறார்கள். அவர்கள் மத்திய சர்க்காரைக் கேட்டுப் பார்த்தார்கள், வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக அவதிப்படுபவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று. அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

ஆகவே, இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? 1.6 லட்சம் பேர்களுக்கு, மேற்கு வங்கத்தில் உள்ள வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் ஐந்தாண்டுகளாக பதிவு செய்தும் வேலை கிடைக்காதிருந்தால், அந்தக் குடும்பத்திற்கு மாதம் ரூ. 500-க்கு குறைவாக வருமானம் இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு மூன்றாண்டுக் காலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் அரசாங்கம் நிவாரணம் அளிக்கும்—அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையில் அல்லது மூன்று ஆண்டுகள், இதில் எது குறைவாக இருக்கிறதோ அது—என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு மாநில சர்க்கார் சிரமங்களுக்கு மத்தியில் மத்திய சர்க்காரின் மானியம் இல்லாமல் காட்டியிருக்கும் அடையாள பூர்வமான ஒரு சமிக்ஞை. குறைந்த வருவாயைக் கொண்டே, வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்படுகிறவர்களுக்கு இப்படிச் செய்கிறார்கள். என்றால் மத்திய சர்க்கார் அதிக உதவி கொடுத்தால் எந்தளவிற்கு செய்யமுடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இதை நமது மாநில சர்க்காரும் ஆழ்ந்து பரிசீலிப்பது நல்லது.

[பிற்பகல் 12–40]

மீறி

அதுபோல்தான் வேலை வாய்ப்பற்ற நிலைமை கிராமப்புறங்களை
தில் மேற்கு வங்காளத்தில் செய்திருக்கிறார்கள் என்பதாடுத்து
இங்கேயும் அதையும் செய்ய வேண்டும் என்பதற்காக [illegible]த்தை
வில்லை. அப்படி செய்வது உங்களுக்கு நியாயம் என்று [illegible]பித்து
தால் உங்கள் அரசாங்கத்திலும் செய்யுங்கள். பல [illegible]ளுக்கும்

கணக்கான பேர்கள் இன்றைக்கு கிராமங்களில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அரசாங்கமே இவர்கள் அத்தனை பேருக்கும் எப்படி வேலை கொடுப்பது என்று ஆலோசித்தாக வேண்டியிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் என்ன செய்கிறார்கள்? ஒவ்வொரு ஆளுக்கும் இரண்டு கிலோ கோதுமையும் ஒரு ரூபாயும் கொடுத்து வருகிறார்கள், இவர்கள் மூலமாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் இவர்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள். விவசாய வேலை இல்லாத நேரத்தில், லட்சக்கணக்கான பேர்கள் நம் நாட்டிலும் இருக்கிறார்கள். உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஜூன் மாதத்தில் அறுவடை முடிந்த பின்னால் அவர்களுக்கு வேலை எதுவும் கிடையாது. லட்சக்கணக்கான விவசாயிகள் முழங்காலை கட்டிக்கொண்டு வேலை எதுவுமின்றி திண்ணையில் தான் இருந்து கொண்டிருப்பார்கள்.

இதே போன்ற நிலைமை தான் பல மாவட்டங்களிலும் இருப்பதை நாம் நன்றாக அறிவோம். இவர்களை எல்லாம் பயன்படுத்தி பொதுவான வேலைகளில் ஈடுபடுத்தி, அவர்களுக்கு தான்யமாகவும், ஓரளவுக்கு ரூபாயும் கொடுத்து, அவர்களுடைய வேலையில்லாத நிலைமையை போக்குவதோடு, அவர்களுடைய உழைப்புக்கும் மதிப்பு கொடுத்ததாக அமையும். அதே நேரத்தில் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாகவும் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுடைய கொள்கை சம்பந்தமாக சில பிரச்சனைகளை இந்த அரசாங்கத்தின் உடனடியான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். பாடி தொழிலாளர்கள் பிரச்சனை, நீண்ட காலமாக பேசப்பட்டு வந்த பிரச்சனை, அங்குள்ள கிளேட்டன் கம்பெனியில் இன்றைக்கு 15 தொழிலாளர்களை பழிவாங்கியிருக்கிறார்கள். மேலும் பலரை நீக்குவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த கம்பெனியின் முதலாளிகளுக்கும் நடைபெற்ற ஒப்பந்தத்தில். குற்றச்சாட்டில் இருப்பவர்கள் மீது விசாரணை நடத்துவோம். அதற்குரிய ரிக்கார்டுகளை முதலமைச்சரிடம் சமர்ப்பிப்போம் என்று சொன்னார்கள். பின்னால் அவர்களே விசாரணை நடத்தினார்கள். ஆனால் சொன்னது போல் அவர்கள் எதுவும் செய்யாமல், உடன்பாட்டிலிருந்து பின்வாங்கி விட்டார்கள். இப்போது 15 பேர்களை [illegible]யிலிருந்து நீக்கிவிட்டார்கள். மேலும் பலரை நீக்குவதற்கு பொ[illegible]ட்டிருக்கிறார்கள்.
மக்களு
பொருள் மட்டுமல்ல, காஷ்வல் லேபர் என்று சொல்லிக் கொண்டு விற்கு [illegible]ண்டர்களை வேலையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் லேபர் என்று வைத்துக்கொண்டு, இவர்கள் மூலமாக



சாதாரண தொழிலாளர்களை துன்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதில் போலீஸ் அணுகுமுறை என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. 144 தடையுத்தரவு கிடையாது, ஆனால் போலீஸ் ரெகுலேட்டிங் ஆர்டர் 30-ன் கீழ், கூட்டம் போடுவதற்கு கூட அனுமதி மறுக்கப்படுகிறது. யூனியனைச் சேர்ந்தவர்கள் புகார்கள் கொண்டுபோய் கொடுத்தால் அவை பதிவு செய்யப்படுவதில்லை! ஆனால் யூனியன் ஆட்கள் மீது யாராவது புகார்கள் கொண்டு வந்துகொடுத்தால், வழக்குப் பதிவு செய்து செக்ஷன் 302-ன் கீழ் எல்லாம் வழக்குகளை போட்டு வருகிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

இப்படி ஏகபோக முதலாளிகளாக தங்களை நினைத்துக்கொண்டு அரசாங்கத்தோடு செய்து கொண்ட உடன்பாட்டையும் மீறிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், இப்படிப்பட்ட முதலாளிகளை ஏன் என்று கேட்பதற்கு இந்த அரசு சக்தியற்றதாக இருக்கிறதா, இந்த நாட்டிலுள்ள நாலரைக் கோடி மக்களின் அரசாங்கமாக ஆட்சி செய்து வருகின்ற இந்த அரசுக்கு நாங்கள் பணியமாட்டோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த முதலாளிகளுக்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா என்பதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே தான், இன்றைக்கு பாடியில் இப்படிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்தை அரசு அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போனறு டி.ஐ. சைக்கிள்ஸ் நிறுவனம் விஷயமாக நமது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய நண்பர் தொழிலாளர் அமைச்சர் இராகவானந்தம் அவர்களும், தொழிலாளர் துறையும் தொழிலாளர்களை சார்ந்து இருப்பது தான் பொருத்தமானதாக இருக்கும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இவர்களைப் பொறுத்தவரையில், எத்தனையோ க்ரூப்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் இதில் மட்டும் நஷ்டம் ஏற்படுகிறது என்பதற்காக இதை மூடிவிடுவோம் என்று சொன்னால் எப்படி அதை அனுமதிக்க முடியும். நல்ல காலமாக இதன் கோரிக்கையை அரசு மறுத்துவிட்டது. ஆனால் இவர்கள் நஷ்டம் என்று சொல்லி தொழிற்சாலையை மூடிவிடுவதற்கு முனைந்திக் கொண்டிருக்கிறார்கள்.

அரசு அனுமதி கொடுக்க மறுத்திருக்கிறது, அதையும் மீறி மூடிவிட்டால் என்ன செய்வது, இவர்களுடைய செய்கையை நாம் அனுமதிக்கப் போகிறோமா? இதற்கென்று வழிகொடுத்து விட்டால், இன்னும் பெரிய முதலாளிகள் எல்லாம் அரசாங்கத்தை நிர்பந்தப்படுத்தி தங்கள் விருப்பம் போல் நடக்க ஆரம்பித்து விடுவார்கள். இவர்களைப் போன்று எல்லா முதலாளிகளுக்கும் அந்த நப்பாசை ஏற்பட்டுவிடும். ஆகவே, தொழிலாளர்களின்

[திரு. என். சங்கரய்யா] [1978 பிப்ரவரி 28

நன்மையைக் கருதி மூடிக்கிடக்கின்ற தொழிற்சாலையை திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்கள் மீது பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மதுரையில் பல கல்லூரி மாணவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளை மிக்க பரிவோடு கவனித்து, இந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்று, மாணவர்கள் கல்லூரிகளில் தொடர்ந்து மாணவர்கள் படிப்பதற்கு தகுந்தவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை, அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. கணவனும் மனைவியும் அரசாங்க ஊழியர்களாக இருந்தால், அவர்களை ஒரேயிடத்தில் பணியாற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் பல அதிகாரிகளும் இதை கடைபிடிக்க மறுத்து வருகிறார்கள். மத்திய சர்க்காரில் கணவன் இருந்து, மாநில சர்க்காரில் மனைவியிருந்தாலும் ஒரேயிடமாக வேலை மாற்றத்திற்கான இடம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படாமல், பல குடும்பங்களும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன.

அந்த விதத்தில் சர்க்கார் பணியில் கணவன் மனைவி போன்றவர்கள் பணியாற்றினால், அவர்கள் இருவரும் ஒன்றாக வாழ்வதற்கு யாருடைய தலையீடும் இல்லாமல் அதிகாரிகள் செயல்படுமாறு இந்த அரசாங்கம் அவர்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசியல் கைதிகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். நக்சலைட்டுகள் என்று சொல்லப்படுகிறவர்களை, ஏற்கனவே பல அரசாங்கம் விடுதலை செய்திருக்கிறது. ஆனால், நாம் மட்டும்தான் இப்படிச் செய்யாமல் இருக்கிறோம். லெனின், வெங்கடேசன், மற்றும் தியாகராஜன் என்று சொல்லக்கூடிய நக்சலைட்டுகள் பல ஆண்டுகளாக சிறையிலே வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் சிறையிலே சிந்தித்து, இப்போது மார்க்கிஸ்ட் கொள்கைதான் நல்லது என்று மாறி, அதற்கான கடிதங்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கும் அப்படி எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் வந்திருக்கின்றன. அப்படியிருந்தும் அவர்கள் இன்னும் சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதேபோல் இன்னும் ஒரு சில நக்சலைட்டுகள் இன்னும் சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம்? இதைப் பற்றி திரு. சரண்சிங் அவர்கள் பார்லிமெண்டிலே பதில் அளிக்கையில், இந்த நக்சலைட்டு கைதிகளை விடுதலை செய்யுங்கள் என்று



1978 பிப்ரவரி 28] [திரு. எஸ். சங்கரய்யா]

நாங்கள் சொன்னோம். ஆனால், இதற்கு தமிழ் நாடு அரசுதான் ஆட்சேபணை தெரிவித்திருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்தான் விடுதலை செய்யவில்லை என்று கூறியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். இப்படிப்பட்டவர்களை விடுதலை செய்வதிலே தமிழ்நாடு அரசாங்கத்துக்கு என்ன ஆட்சேபணை வந்தது என்பதை அறிய விரும்புகிறேன். இன்றைக்கு இந்தப் பழி தமிழ்நாடு அரசின்மேல் போடப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்து இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல், மற்றும் இரண்டொரு பிரச்னைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதுபற்றி சர்ச்சை கிளப்பியிருக்கிறார்கள். எனவே, நான் இதை அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நகரத்திற்கும், கிராமத்திற்கும் இன்றைக்கு முரண்பாடு இருக்
கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது உண்மையா என்று
பார்க்க வேண்டும். கிராமத்திற்கும், நகரத்திற்கும் எவ்விதமான
முரண்பாடும் இல்லை. உண்மையான முரண்பாடு என்னவென்றால்,
கிராமங்களிலே உள்ள சிறு விவசாயிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்
கும் இடையேதான் முரண்பாடு இருக்கிறது. இந்த நிலைமை
இன்றைக்கும் இருந்து வருகிறது. நிலப் பிரபுக்களுக்கும், விவ
சாயிகளுக்கும் இடையே உள்ள இந்த முரண்பாட்டை நாம்
மாற்றியமைக்க வேண்டும். இதிலே நாம் சும்மா இருந்தால்
பிரயோஜனம் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே 15 ஸ்டாண்
டர்டு ஏக்கர் நிலம் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது.
இன்றைக்கு யாராவது நெஞ்சிலே கையை வைத்துச் சொல்லுங்
கள். இந்த 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது அமுலில் இருக்
கிறது என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியுமா? சொல்லுங்
கள். கிராமங்களிலே இருக்கின்ற நிலப் பிரபுக்கள் இன்றைக்கு
15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம்தான் வைத்திருக்கிறார்கள் என்று
உறுதியாகச் சொல்ல முடியுமா?

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்
மடங்களைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்
களும், ஆளும் கட்சியிலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவர்கள் தான்
இன்றைக்கு நாட்டிலே அதிகப்படியான நிலங்களை வைத்துக்
கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் டஸ்டிக்
அலவன்சு கொடுத்துவிட்டு, ஏகபோக உரிமையோடு நிலங்களை
அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இன்னும் சொல்லப்

[திரு. எஸ். சங்கரய்யா] [1978 பிப்ரவரி 28

போனால், மூன்றில் ஒரு பங்கு நிலங்களை இவர்கள்தான், இந்த மடங்கள்தான் தனிப்பட்ட முறையில் டிரஸ்ட் என்று அமைத்துக் கொண்டு அனுபவித்துக் கொண்டு வருகின்றார்கள். அதனால் இதற்கான சட்டத்தை நாம் மாற்றியாக வேண்டும். இதிலே இந்த அரசு கண்டிப்பாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இதிலே உறுதியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களிலே உள்ள நிலப் பிரபுக்களுக்கும், அங்கேயுள்ள ஏழை விவசாயிகளுக்கு மிடையேதான் முரண்பாடு இருக்கிறது. கிராமத்திலே இருக்கின்ற ஏழையும், நகரத்திலே இருக்கின்ற ஏழையும் ஒருபக்கம். அதேபோல், கிராமத்திலே இருக்கின்ற நிலப் பிரபுவும், நகரத்திலே இருக்கின்ற ஏகபோக முதலாளியும் மறு பக்கம். இதுதான் உண்மையான மாறுபாடு ; பாகுபாடாகும். இவர்களுக்கிடையே தான் உண்மையான போராட்டம் இன்று நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் பரீட்சார்த்தமான, தீர்க்கதரிசனமான உண்மை என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவந்து, அதற்கான காரியங்களைச் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், அவர்கள் மேல் சபையிலே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், மத்திய சர்க்காரிலிருந்து வந்திருக்கின்ற கைட்லைன்சை வைத்துக் கொண்டு, நில உச்சவரம்புச் சடட்த்தைக் கொண்டு வருவதற்கு இருப்பதாகச் செல்லியிருக்கிறார்கள். அதிலே பிரயோஜனமில்லை. ஏனென்றால், ஜனதா அரசாங்கம் நடத்துகின்ற கைட்-லைன்சிலே, அவர்களுடைய கொள்கையின் பேரில் அது கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இன்றைக்கு மாறு பட்டிருக்கின்றது. இது நிலப் பிரபுக்களுக்கும், முதலாளிகளுக்கும் உதவி செய்கின்ற வகையிலே இருக்கிறதே தவிர, ஏழைகளுக்கு உதவக்கூடியதாக இல்லை. எனவே, இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நமது அரசாங்கம் காரியங்கள் ஆற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர், சாக்கடை வசதி போன்ற பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அவைகளை நான் வரவேற்கின்றேன். ஆனால் இதனால் நிலமற்ற விவசாயிகளுக்கு நாம் என்ன தொழிலை, உத்தியோகத்தைக் கொடுக்க முடியும் ? இதனால் பிரச்சினை தீர்க்கப் படுமா என்று பார்க்க வேண்டும்.

விவசாயிகளுக்கு கிராமங்களில் ஆண்டிலே 3 மாதங்களுக்கு வேலை கிடைக்கிறது. பிறகு வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஏழைகளை முன்னுக்கு கொண்டு வருவதற்கான திட்டங்கள் போடப்பட்டிருக்கிறது என்று சொல்கின்ற நேரத்தில், இயந்திரப் படகுகளுக்காக பிஷரீஸ் கார்ப்பரேஷனுக்கு 92 லட்ச



1978 பிப்ரவரி 28] [திரு. என். சங்கரய்யா]

ரூபாய் கொடுக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்போது, கட்டுமரத்தை வைத்துக் கொண்டிருக்கின்றவனுடைய நிலைமை என்னவாகும் ? அவன் நிச்சயமாக பாதிக்கப்படுவான். அதைப் போலத்தான், விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமையும் இருக்கிறது. கையில் இருக்கக்கூடிய நிலத்தை வைத்து கடன் வாங்கி, அதற்கு கந்து வட்டி கட்டி கஷ்டப்பட்டுக் கொண்டிருப் பதைப் பார்க்கின்றோம். இந்த நிலைமைதான் இன்றைக்கு— தஞ்சை மாவட்டத்திலே உள்ள கிராமங்களிலே இருக்கின்றது என்பதை மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித் துக் கொள்கிறேன்.

இன்றையத் தினம் இப்படி ஆயிரக்கணக்கான விவசாயிகள் வேலையின்றி இருக்கக்கூடிய நேரத்திலே, நாம் இதிலே இயந்தி ரத்தை புகுத்துவது, இயந்திர முறையைக் கையாள்வது சரிதானா என்று பார்க்கவேண்டும். இதனால் எத்தனை பேர்களுக்கு வேலை போகிறது, பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

அதேபோல், வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கின்ற நிலை மையிலே நமக்கு கம்ப்யூட்டர் முறை தேவைதானா என்பதையும் பார்க்க வேண்டும். இதனால் எத்தனை இலட்சக்கணக்கானவர்கள் வேலை பாதிக்கப்படுகிறது. இது நம் நாட்டிற்கு பயனுள்ள முறை யாகாது. முதலாளித்துவ நாடுகளான ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு உகந்ததாகும். விவசாயிகளுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவந்தோம். அது அமுலில் இருக்கின்றதா என்றால், அது நிறைவேற்றப்படவில்லை.

அதேபோல், இன்றைக்கு உமாநாத் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களிலே கிசான் போலீஸ் இருக்கிறது என்றார்கள். கிசான் களுக்கு பாதுகாப்பு அளிப்பதாகக் கூறுகிறார்கள். உண்மையில் அப்படி அல்ல. நிலப் பிரபுக்களின் சார்பாக, கிசான்களின் போராட்டத்தைத் தவிர்ப்பதற்கு பயனுள்ளதாக அது இருக் கிறது.

[பிற்பகல் 12—50]

இன்றைக்கு டி. எஸ். பி.-க்கள், எஸ். பி.-க்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, நான் ஒன்றைக் கூறுகிறேன். இன் றைக்குக் குறைந்த பட்ச கூலிச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரொம்ப வருத்தப் பட்டிருக்கிறார்கள். கிராமங்கள் அபிவிருத்தி அடைய வேண்டு மென்றால் முதலிலேயே விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயச் சட்டத் தைக் கொண்டு வர வேண்டும். எந்த ஒரு மிராசுதாரும் சரியான கூலியைச் சட்டப்படி கொடுக்காவிட்டால் கைது செய்யப்படுவார் என்ற நிலைமை ஏற்பட்டால் நிச்சயம் கிராமங்கள் முன்னேறும்.

குத்தகை விவசாயிகளை வெளியேற்றிவிட்டு அவர்கள் கிராமப் புறங்களில் பங்களா கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவன் தொழிலில் மூலதனம் போடப் போகிறான். ஏகபோக முதலாளிகள் சேர்ந்து கொண்டு தமிழகத்திலுள்ள நகரங்களையும், கிராமங்களையும் சுரண்டும் நிலைமைதான் இருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு சரியான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும், குத்தகைச் சட்டம் கொண்டு வரவேண்டும். பெரும்பாலான குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்படவில்லை. தடுத்து விட்டார்கள். வாய்மொழி சாட்சியாக வைத்துக் கொண்டு, அதை அடிப்படையாகக் கொண்டு கிராமப்புறத்தில் மக்களை வைத்துக் கொண்டு அதிகாரிகள் பதிவு செய்யவேண்டும். நிலச் சீர்திருத்தம் மூலமாக நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனதா கட்சி அரசாங்கத்தின் கொள்கைதான் நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஜனதா கட்சிக் கொள்கை—தீவிர நிலச் சீர்திருத்தத்தைக் கேட்கிறார்களா ? ஏகபோக முதலாளிகளிடம் உள்ள தொழில்களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கூறுகிறார்களா ? ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் முன்னோடிகளும் நாட்டுடைமையாக்கும் கொள்கையையும், நிலச் சீர்திருத்தக் கொள்கையையும் ஏற்றுக் கொண்டுள்ளது. எப்படி இரண்டும் ஒன்றாகும்? ஒன்றாகக் கூடாது. ஒன்றாக இருக்க வேண்டாம். ஒன்றாகப் போக முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜாயின்ட் செக்டார் கம்பெனி என்று தொழில்களை ஜாயின்ட் செக்டாரில் வளர்க்க வேண்டுமென்று முன்பு திட்டமிட்டு 'ஸ்பிக்' கம்பெனியை ஆரம்பித்தார்கள். போன சட்ட மன்றத்திலேயே அது பற்றிக் கேட்டோம். 62 கோடி ரூபாய் மூலதனத்திலே 60 கோடி ரூபாய் மூலதனம் மாநில சர்க்கார், மத்திய சர்க்கார் நிதி உதவி ஸ்தாபனங்கள் போட்டது ; தனியார் எம். எம். ஏ. சிதம்பரம் ஒன்றேமுக்கால் கோடி ரூபாய்—ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் மூலதனம் போட்டு மானேஜிங் டைரக்டர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். பத்து ஆண்டுக் காலத்திற்கு அரசு அவருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறது. இது என்ன கூட்டு ? பொதுமக்கள் பணத்தைக் கொண்டு ஏகபோக முதலாளித்துவத்தைக் வளர்க்கும் கூட்டுத் துறை வேண்டாம். ஏன் நாமே நடத்தக் கூடாது ? இன்றைக்கு பேப்பர் இண்டஸ்ட்ரியில் 51 சதவிகிதம் மாநில சர்க்கார் பங்கு. ஆனால் நடப்பது தனிப்பட்ட நிர்வாகம். இதற்குப் பெயர் கூட்டுத் துறையா ? எதற்காக இந்த வேடிக்கையான கூட்டு ?



சிறு தொழில்களைப் பற்றிக் கூறுகிறார்கள். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியும் சிறு தொழில்களை பாதுகாக்க வேண்டு மென்று நம்புகிறது. அவர்கள் நம்முடைய நண்பர்கள். அவர்கள் யாரால் பாதிக்கப்படுகிறார்கள் ? அவர்கள் டாட்டா, பிர்லா போட்டியில் நிற்க முடியுமா ? அந்த ஏகபோக முதலாளிகளோடு இவர்கள் போட்டி போட முடியுமா ? இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் பதில் அளிக்க வேண்டும்.

சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்று 30 வருஷமாக காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலிருந்து குடிசைத் தொழில்களை வளர்க்க வேண்டும், சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் என்ன நிலை ? பர்பார்மன்ஸ் பட்ஜெட்டைப் பாருங்கள். செயலில் எந்த வகையில் நிறைவேற்றியிருக்கிறது ? உற்பத்தியின் அளவு என்ன ? எவ்வளவு பேர் வேலை பெற்றிருக்கிறார்கள் ? அந்தக் கதை பரிதாபகரமான கதையாகத்தான் இருக்கிறது. ஏகபோக முதலாளிகளிடம் இருக்கக்கூடிய தொழில்களை நாட்டுடைமையாக்காமல் சிறு தொழில்களைப் பாதுகாக்க முடியாது.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ? இன்றைக்கு நான்கு மாவட்டங்களில் மட்டும், கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் மட்டும் நியாய விலைக் கடைகளைத் திறக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்ற பட்ஜெட்டில் 16,000 நியாய விலைக் கடைகளைத் திறப்பதாக அறிவித்தார்கள். இப்போது இந்த நான்கு மாவட்ட மக்கள் தவிர மற்ற மாவட்ட மக்கள் என்னவது ?

என். ஜி. ஓ.-க்கள் சம்பளம் கேட்கிறார்கள் என்று சொன்னால் இன் எப்படி ? அரிசி விலை உயர்ந்தால் அது அவர்கள் பாடா ? ஒரு பொருளின் விலை உயர்ந்தால் அது அவர்கள் பாடா ? மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நியாய விலையில் வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு. மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். அவர்களிடம் மானியம் கேட்க வேண்டும். மத்திய சர்க்காரும் சேர்ந்து கொள்முதல் செய்ய வேண்டும். ஆகவே, நான்கு மாவட்டங்களில் மட்டும் நியாய விலைக் கடைகளைத் திறப்பது போதாது ; விலைவாசிகளைக் கட்டுப்படுத்த மாநிலம் பூராவும் நியாய விலைக் கடைகளைத் திறக்க முன் வர வேண்டும்.

பெரியாறுத் திட்டம், வைகை பாசனத் திட்டம், சென்னை சீரமைப்புத் திட்டம் இவைகளுக்கெல்லாம் உலக வங்கியினுடைய கடன் என்று சொல்லப்படுகிறது. நம்முடைய நாட்டிற்கு உலக வங்கியிடம் கடன் இவ்வளவு சார்ந்துள்ள நிலைமை என்ன ?

[திரு. என். சங்கரய்யா] [1978 பிப்ரவரி 28

நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உலக வங்கி போடுகின்ற நிபந்தனைகள் என்ன, என்ன, அவர்கள் கொடுக்கிற கடனுக்கு என்ன வட்டி விகிதம் வாங்குகிறார்கள். என்ன நோக்கத்தோடு கடன்கள் கொடுக்கப்படுகின்றன என்ற விவரங்கள் எல்லாம் தெரியவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கை உரையைப் பார்த்தால் அதிலே இந்த நிபந்தனைகள் பற்றி, வட்டி விகிதம் பற்றி எல்லாம் சொல்லப்படவில்லை. ஏற்கெனவே நாம் பார்த்திருக்கிறோம், கிணறுகள் வெட்ட கடன் கொடுத்தார்கள். கொடுத்துவிட்டு ஒரு கிணறு தோண்டும்போது இத்தனை அடி தூரம் தாண்டித்தான் இன்னொரு கிணற்றைத் தோண்டவேண்டுமென்று நிபந்தனைகள் போட்டார்கள். உலகமெங்கும் இந்த அடிப்படையிலேதான் கடன் கொடுக்கிறார்களா ? இந்த நிபந்தனைகள் இருக்கக் கூடாது. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலே 43-வது வார்டிலே—பாலகங்காபுரம் பகுதியிலே ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்ற முறையிலே 60 இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே கட்டப்பட்டது. ஆனால் அங்கே ஒரு ரெஸிடென்ஷியல் மெடிக்கல் ஆபீஸர் இல்லை. நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் இல்லை, அந்த ஆஸ்பத்திரி கட்டப்பட்டதன் நோக்கமோ, ஜெனரல் ஆஸ்பத்திரியிலே நோயாளிகள் அதிகம், எல்லோரும் அங்கே போகவேண்டாம், இங்கே ஒரு ஆஸ்பத்திரி கட்டினால் இங்கே போய் வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற முறையிலேதான். ஆனால் இன்றைக்கு அங்கே அங்கேயே தங்கி கவனிக்கும் மெடிக்கல் ஆபீஸர் போடப்படவில்லை, மருந்துகள் இல்லை என்றால் நோயாளிகள் எங்கே போவார்கள் ? ஆகவே, அந்த ஆஸ்பத்திரிக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுரைக்கு குடிநீர் வசதிக்காக வைகை அணைக்கட்டுத் திட்டத்தைக் கொண்டுவந்து விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையிலே பழைய 1-வது வார்டு முதல் 18-வது வார்டு வரையில் உள்ள வீடுகளுக்கு வீட்டு வரிகள் ரிவைஸ் செய்யப்பட்டது. அதனால் வரி உயர்ந்து விட்டது. அதைக் குறைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே, அதைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.





1978 பிப்ரவரி 28] [திரு. என். சங்கரய்யா]

மதுரையிலே புஷ்ப வியாபாரிகளுக்கு, இந்த கமிஷன் வியா
பாரிகளால் அநேக தொல்லைகள் ஏற்படுகின்றன. புஷ்ப விவசாயி
களிடமிருந்து அந்த கமிஷன் வியாபாரிகள் வாங்கிக் கொள்கி
றார்கள். ஆயிரம் பூ என்று சொல்லி வாங்கி 500 பூ, என்று
சொல்லிக் கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் மிகவும் பாதிக்
கப்பட்டிருக்கிறார்கள். அந்த புஷ்ப வியாபாரிகள் எல்லாம்
சேர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், முதலமைச்சருக்கும்
மனு அனுப்பி இருக்கிறார்கள். அரசாங்கம் அதன் மீது நட
வடிக்கை எடுத்து, அரசாங்க முத்திரை கொண்ட தராசைத்
தான் வைத்து அளக்கவேண்டுமென்று உத்திரவிட வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுரை நகராட்சியிலே பணியாற்றிவிட்டு ஓய்வு
பெற்றவர்கள் 1970 ஆம் ஆண்டிற்கு முன்னாலே ஓய்வு பெற்றவர்
கள் காலமாகிக்கொண்டு இருக்கிறார்கள், அவர்கள் பென்ஷனை
உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்
களுக்கு அட்ஹாக் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. அட்ஹாக்
என்பதை நீக்கிவிட்டால் மற்ற ரிடையர் ஆனவர்களுக்கு கிடைக்
கக்கூடிய அளவுக்கு பென்ஷன் கிடைக்கும் என்று சொல்கிறார்கள்.
அது சம்பந்தமான குறிப்பு நிதி அமைச்சரின் அலுவலகத்தில்
சிக்கியிருப்பதாக அறிகிறேன். அதைப் பார்த்து அவர்களுடைய
பென்ஷனை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : அடுத்து பேசவிருக்கிற உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்கள் உரையை ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிதியமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1978–79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற நேரத்திலே நான் ஒன்றை முதற்கண் குறிப்பிட்டாக வேண்டும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்
சிக்கு வருவதற்கு முன்பாக அதனுடைய மாபெருந் தலைவர்,
புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே உள்ள மக்களுக்குக்
கொடுத்த உறுதிமொழிகளை எங்கள் கழகம் ஆட்சிக்கு வந்தால்,
எங்கள் நல்லாட்சி அமைந்தால் நாங்கள் நா நயம் மிக்கவர்களாக
மட்டும் அல்ல, நாணயம் மிக்கவர்களாகவும் இருப்போம் என்று
முழங்கியதற்கிணங்க, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அடித்தளத்

திலே உள்ள மக்களுக்காக, சமுதாயத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக உழைப்போம் என்ற முழக்கத்திற்கிணங்க அந்தக் கொள்கைகள் முழுமையும் இன்றைக்கு நிதி நிலை அறிக்கையில் திட்டங்களாக வடித்திருக்கிறார்கள் என்பதைக் கூறித்தான் ஆகவேண்டும்.

ஏனென்றால், இங்கே பேசியவர்கள் நிதியமைச்சர் சமர்ப்பித்துள்ள நிதிநிலையறிக்கையிலே எந்தப் பக்கத்திலேயும் கிராமம், கிராமம் என்றுதான் இருக்கிறது என்று கூறினார்கள். நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே எந்த ஒரு திட்டவட்டமான கொள்கைகளும் இதில் குறிப்பிடப்படவில்லை என்று கூறினார்கள். நான் விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லையென்றாலும்கூட நம்முடைய நிதியமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

[பிற்பகல் 1–00]

“வேலை வாய்ப்பைப் பெருக்குதல், வறுமை நிலையை அகற்றுதல், கிராமப்புற வளர்ச்சி, சமுதாயத்தின் அடித்தள மக்களின் மேம்பாடு ஆகியவையே நமது அடிப்படைக் குறிக்கோள்கள்” என்று இந்த நிதிநிலை அறிக்கையில் மிகவும் அழகாகக் குறிப்பிட்டிருப்பதை அவர்கள் ஏனோ பார்க்காமல் இருந்திருக்கிறார்கள். ஏனென்றால் கிராமப்புற வளர்ச்சி என்று சொல்லுகின்ற நேரத்தில் கிராமப்புறங்களில் உள்ள ஏரிகளைச் செப்பனிடுவதற்காக 111 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 111 கோடி ரூபாயை யார் அனுபவிக்கப்போகிறார்கள்? அந்த 111 கோடி ரூபாயை அந்த மக்கள் அனுபவிக்க போகிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் தினந்தோறும் ஒருவேளை சோற்றுக்குப் பிறகு மறுவேளைக்குக் கையைப் பிசைந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இந்த 111 கோடி ரூபாய் பரவலாக்கப்படுகின்ற நேரத்தில் அந்தப் பணம் அவர்களுக்கு வேலை வாய்ப்பாகப் பெருகும், வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நேரத்தில் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த அடிப்படையில் கிராமப்புற மக்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள். அது அரசின் திட்டம். ஒரு ‘வெல் பேர் ஸ்டேட்’ என்று சொல்லும் நேரத்தில், கிராமப் புறங்களுக்கு எந்த அளவிற்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமோ, அந்த அளவிற்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். அந்த வகையில் இதில் முயற்சி இருக்கிறது என்றால் கிராமங்கள், கிராமங்கள் என்று பேசுவது ஏன், என்று கேட்கக்கூடாது. கிராமப்புறங்களைப் பார்க்கின்ற இதே அரசு, கிராமப்புறங்களைப் பார்க்கின்ற இதே நிதிநிலை அறிக்கை நகரப்புறங்களைப் பார்க்கவே இல்லையா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.





சென்னை நகரத்தை அழகுபடுத்துவதற்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. கோவை நகரம், சென்னை நகரம், திருச்சி நகரம், மதுரை நகரம் ஆகிய நகரங்களில் ஏழை எளியவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காக தொகை ஒதுக்கியிருக்கிறது. குடிநீர்த் திட்டத்திற்காகத் தொகை ஒதுக்கியிருக்கிறது. கழிவு நீரைப் போக்குவதற்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் கிராமப்புறங்களை மட்டும் பார்க்காமல், நகர்ப்புறங்களையும் பார்த்துத்தான் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகத்தான். ஏனென்றால், வெல்பேர் ஸ்டேட் என்று சொல்லப்படும் அரசு பெருவாரியான மக்களுக்குப் பரவலாக நன்மைகள் கிடைக்க முயற்சி செய்ய வேண்டும். அதுதான் வெல்பேர் ஸ்டேட் என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே கிராமப்புற மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்கும் எந்த அளவிற்கு நன்மைகள் செய்ய முடியுமோ அந்த அளவிற்குத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள்.

நான் குறிப்பிட விரும்புகிறேன், என். ஜி. ஓ. க்களாகிய அரசு அலுவலாளர்களுக்கு எந்த அளவிற்கு ஊதியத்தை உயர்த்த முடியுமோ அந்த அளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள். நான் இதைக் குறிப்பிடும் நேரத்தில், இன்றைக்கு என். ஜி. ஓ. க்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பவர்களைப் பார்க்கிறேன். எங்கள் இதயத்தில் நிரந்தரமான ஒரு இடத்தைப் பிடித்திருக்கின்ற என். ஜி. ஓ. க்களைப் பார்த்துக் கேட்கிறேன், தமிழகத்திலே இதுவரையிலேயும் எத்தனையோ நிதியமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள், எந்த நிதியமைச்சராவது, ஊதியக் குழுவை அமைத்து, அந்த ஊதியக் குழுவின் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிப்பதற்குள்ளாக அந்த ஊதியக் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு ஏற்றுக் கொள்ளும், குறிப்பிட்ட தேதியிருந்து ஏற்றுக் கொள்ளும் என்று எந்தவொரு நிதியமைச்சராவது இங்கே அறிவித்திருக்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை நான் குறிப்பிடுகின்ற அதே நேரத்தில், என். ஜி. ஓ. க்களுக்கு எதையும் செய்யவில்லை, என். ஜி. ஓ. க்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகிறது என்று நான் குறிப்பிட மாட்டேன், அவர்களுடைய உரிமைகள் பார்க்கப்பட வேண்டும், அவர்களுடைய உரிமைகள் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதிலே எனக்கு அழுத்தம் திருத்தமான கொள்கையும், எண்ணமும் உண்டு. ஆனால் அதே நேரத்திலே நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் இங்கே, என். ஜி. ஓ. க்களுக்காகவும், கிராமங்களுக்காக அல்லது நகரங்களுக்காக எந்தவொரு திட்டத்தையும் நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது இதையெல்லாம் சாதனை என்று நான் குறிப்பிட மாட்டேன். காரணம், இவையெல்லாம் ஒரு அரசினுடைய குறிக்கோளாக, கடமையாகத்தான் நான் பார்க்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நான் பேசும் நேரத்தில், இந்த நிதிநிலை அறிக்கையில் என்னென்ன கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். தமிழகத்திலே இது நாள் வரையிலே தமிழ் மொழிக்காக எத்தனையோ பேர் பேசிக் கொண்டிருந்தார்கள், தமிழ்ப் புலவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். வறுமையால் வாடிய புலவர்களுக்கு எப்படிப்பட்ட நன்மைகளைச் செய்ய வேண்டுமோ அப்படிப்பட்ட நன்மைகளைச் செய்யாமல் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த அரசு வறுமையால் வாடிய தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம், அவர்களுடைய பெயர்கள் எடுக்கப்பட்டு, 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

அதை நான் குறிப்பிடும் நேரத்தில் இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எந்த அளவிற்கு நன்மைகள் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நாங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்.

மாநில உறவுகளையும், மத்திய உறவுகளையும் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் இங்கே நான் ஒன்றைக் கடமையுணர்ச்சியோடும், பொறுப்புணர்ச்சியோடும் பேச வேண்டுமென்று நினைக்கிறேன். அதைக் குறிப்பிடும் நேரத்திலே, கேரள அரசாங்கத்திலே கடந்த பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி, தமிழ்நாட்டிலே கன்னியாகுமரி மாவட்டம் தொழில்துறையிலே பிற்படுத்தப்பட்ட மாவட்டம், அந்த மாவட்டத்திலேயிருக்கின்ற ஒரு கயிறு தொழிற்சாலையை மூட வேண்டுமென்று கேரள அரசாங்கம் தீர்மானம் நிறைவேற்றியதாகத் தெரிகிறது. அதை அங்கே இருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு பி. எஸ். சீனிவாசன் கொண்டுவந்ததாகவும், அதை அரசினுடைய சார்பாகவும் நிறைவேற்றியதாகவும் கேள்விப்படுகிறேன். அது 'கேரள குரல்' என்ற பத்திரிகையிலே தெளிவாக வந்திருக்கிறது. அதைப் பார்க்கிற நேரத்தில் ஒரு மாநில அரசு உரிமையிலே மற்ற மாநில அரசுகள் எப்படி தலையிடலாம். அது எந்த அளவுக்கு உண்மை என்பதைப் பரிசீலித்து, இந்த அரசு அதில் தலையிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்று அடுத்த உறுப்பினர் அழைக்கப்பெற்றார்.)





*THIRU A. EKAMBARA REDDY: Mr. Speaker, Sir, I rise to lend my general support to the various developmental schemes formulated by the Hon., Minister for Finance in the Budget.

Now coming to Agriculture, the present Government have aimed at a target of 87 lakh tonnes of foodgrains. last year they aimed at a target of 84 lakh tonnes of foodgrains. In the year previous to that hoped to achieve a target of 74 lakh tonnes of foodgrains. No doubt, the present Government have broughy forward certain advantageous schemes to achieve the target. They have proposed to set up an independent Seed Certification Agenct for ensuring quality seeds for distribution to ryots and I welcome it.

The other point is that the Co-operative Department are issuing consumption loans and agricultural loans to the credit societies for distribution to the weaker and needy ryots. At the same time I must point out that the cost of fertilisers is not in consonance with the cost of cultivation. I suggest that the present Government should move the Central Government to lower the cost of fertilisers so that the cost of cultivation could be reduced and the target of 87 lakhs tonnes of foodgrains could be achieved.

The opening of Fair Price shops is commendable and at the same time I request the Government to extend the scheme of opening of Fair Price Shops, as already promised by them, to all the districts so as to keep control on prices. Now-a-days essential commodities are being sold at abnormal prices and the weaker and poor sections of the people are not in a position purchase them. So, I request the Hon. Minister for Finance to extend the scheme to the remaining districts at an early date.

Regarding irrigation, the Government have come forward to implement a major Tank Modernisation Project in 1978-79 to increase the holding capacity and the efficiency of large tanks with an ayacut of 500 acres and above. I welcome it but I request that the Government should extend the scheme to the tanks with a lesser ayacut also. They have also got A De-silting and Reclamation Scheme to desilt tanks. In my constituency almost all the

[Thirn A. Ekambara Reddy] [1978 பிப்ரவரி 28

tanks are river-fed tanks and every year the tanks are being silted up. So, I request the Hon. Minister to implement such schemer for desilting and reclaming the tanks which are mainly fed by rives water and hill streams.

As regards Rural Development Schemes, the main object of them is to increase the income of the rural population. Most of the villagers depend upon agriculture only. The agricultural labourers are not always provided with labour. During the off-season they have to be provided with labour to supplement their income.

There was a Crash Scheme to provide labour for agricultural labourers during the off-season and that scheme was being implemented with the aid of the Central Government. I request the State Government to kindly move the Central Government to revive that crash for rural development so as to provide labour to the agricultural labourers during the off–season to supplement their income.

Regardinghealth, the opening of mini health centres, is a welcome meare. But there is a scheme of opening limited centres only on the basis of 1 : 1 : 1 ; An expenditure Rs. 18,000 is to be borne by Central Government, State Government and voluntary agencies. Now, there is a prime necessity to open mini health centres as the health needs of the rural population to be preserved. So, I request and suggest that the rate of contribution by the voluntary agency is to be reduced to 1/4th of the total cost of the expenditure. 1/4th of Rs. 18,000, i.e., Rs. 4,500. It is Rs. 6,000 now. They have to bear Rs. 6,000. It it is reduced to Rs. 4,500, more number of mini health centres could be started to provide health care to the deserving, needy patients in the rural area.

Regarding benefit to employees, it is a welcome measure. Those who are getting less than Rs. 200 per month are to get Rs.25 as relief and those getting more than Rs. 200 p.m. will get Rs. 15 as relief.

While that is a relief, it is a matter of regret that the same concession has not been extended to retired pensioners of Tamil Nadu Government. The Second Pay Commission had recommended that 50 per cent of the relief given to the serving personnel should be given to the retired pensioners also. So, I request that the



1978 பிப்ரவரி 28] [Thiru A. Ekambara Reddy]

genuine request of the retired pensioners may kindly be considered and relief given to pensioners drawing Rs. 200 less. At least 50 per cent of the concession given to serving personnel may be given as relief to the retired pensioners who have throughout their lives served this State with utmost care.

During his last, budget speech, the Hon. Finance Minister has spoken about the minimum pension to the Tamil Nadu retired employees. It is Rs. 50 here in Madras, whereas it is Rs. 120 in Karnataka and Rs. 110 in Kerala. So, I request the Hon. Finance Minister to see that the minimum pension of the Tamil Nadu pensioners be raised at least to the level of the pay of serving last grade government servant. This is a genuine request which can be kindly considered and I hope the House will join with me in making this unanimous request to the Hon. Finance Minister and I hope the Hon. Finance Minister will kindly accede to the request and also give 50 per cent of the relief now announced to serving employees, to the retired pensioners also, who are hard hit by the financial crises of the present day.

With these words, I conclude my speech and I thank the Hon. Speaker for having given me this opportunity to speak.

(1–10)

திரு. க. பாலாஜி : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1978–79-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை விவசாயிகளுக்கும் நெசவாளப் பெருங்குடி மக்களுக்கும் நன்மை பயக்கின்ற வகையில் பல திட்டங்களை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக ஏழைகள் பயன் பெறுகின்ற வகையில் வரியைக் குறைத்திருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு வரியைக் குறைத்திருக்கிறார்கள். அப்படிப் பல்முனைகளில் நல்லபல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் பாலாறு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பாலாற்றில் வருடத்திற்கு ஒரு முறை பெரு வெள்ளம் வருகின்ற நேரத்தில், பல விபத்துக்கள் அந்த ஆற்றில் நடைபெறுகின்றன. அந்தப் பாலாற்றில் பேரறிஞர் அண்ணா

அவர்கள் இருக்கிற காலத்திலே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று ஒரு திட்டம் இருந்தது என்று மக்கள் கூறினார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரத்திற்கு அருகாமையில் ஓடுகின்ற வேகவதி ஆற்றை நல்ல முறையில் சீரமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆற்றங்கரையில் தான் நலந்தா பல்கலைக் கழகம் இருந்ததாக பெரியவர்கள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட புனிதமான ஆற்றை நல்ல முறையில் பண்படுத்தி, ஆற்றின் இருபுறத்திலும் நல்ல முறையில் பூங்காக்களை அமைக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அவா கொண்டு இருந்தார்கள். காரணம், அந்த ஆறு ஓடும் பகுதியில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த ஆற்றங்கரையில் பூங்கா அமைப்பார்களேயானால், அந்த நெசவுத் தொழில் செய்கிற நெசவாளப் பெருங்குடி மக்கள் மாலை நேரத்தில் ஓய்வுபெற ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்கிறேன்,

என்னுடைய காஞ்சிபுரம் தொகுதியில் மஞ்சள்நீர் கால்வாய் என்று ஒன்று ஓடுகிறது. அந்த கால்வாயில்தான் நகரத்தின் கழிவுநீர் பூராவும் செல்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ரூ. 90,000 அளவில் அதைச் சீர்படுத்தத் திட்டம் போட்டு, அந்த வகையில் சிற்சில இடங்களில் சீர் செய்து விட்டு பிறகு அந்தக் கால்வாய் நல்ல முறையில் இல்லாத காரணத்தினால் சுகாதாரக் கேடு அங்கே ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், முரசவாக்கம் அருகே வரும் பாலாற்றை வேகவதி ஆற்றோடு இணைத்தால் காஞ்சிபுரம் விவசாயிகளுக்கு அதிகமான பயன் கிடைக்கும். கிட்டத்தட்ட 2,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதி கிடைக்கும். ஆகவே, அங்கே ஒரு கால்வாயை 2 பர்லாங்கிலிருந்து 4 பர்லாங்கு தூரத்திற்கு வெட்டி, இணைத்தால் நல்ல முறையில் காஞ்சிபுரம் மக்களுக்கும், அருகாமையிலுள்ள கிராம மக்களுக்கும் குடிநீர் வசதியும், பாசன வசதியும் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய காஞ்சிபுரம் தொகுதியில் நெசவாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த நெசவாளர்களுக்கு நீண்டகாலக் கடனைக் குறைந்த வட்டியில் கொடுத்து, அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



நெசவாளர்கள் இருக்கும் காஞ்சிபுரம் பகுதியில் மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் நெசவாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட மருத்துவ மனையை நெசவாளர் அதிகம் வாழும் பிள்ளையார்பாளையம் பகுதியில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் காஞ்சிபுரத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் சுற்றுலா நகராக்க வேண்டுமென்று கூறிவந்தார்கள். காஞ்சிபுரத்திலே தான் உலகத்திலே இருக்கின்ற நாடுகளில் இருந்து வரும் அத்தனைபேரும் வந்து பட்டுப் புடவை வாங்கிக்கொண்டு போகிறார்கள். அதைச் சுற்றுலா நகராக்கி, அந்த வகையில் அங்கே நல்ல பல திட்டங்களையும் நிறைவேற்ற அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரத்திலே இருக்கின்ற வீதிகள், ரோடுகள் எல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையில் அமைத்துத்தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த பட்ஜெட் ஏழைகளுக்காக போடப்பட்ட பட்ஜெட். மாற்றுக் கட்சித் தலைவர்கள் இதைக் குறைகூறிப் பேசினார்கள். 'இந்த பட்ஜெட் காகிதத்திலே எழுதப்பட்டுள்ள சர்க்கரை' என்று காகிதப்பூ கதாநாயகன் பேசினார். 'போகாத ஊருக்கு வழிகாட்டுவது போல் இது இருக்கிறது. இது களிமண் மாம்பழம்' என்று பேசினார்கள். ஆனால், இந்த பட்ஜெட் மூலம் புரட்சித் தலைவர் ஊருக்கு வழிகாட்டியிருக்கிறார். உண்மையான சர்க்கரையை அளித்து இருக்கிறார் என்று சொல்லி, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1—20]

*திரு. ர. ஜெபமணி : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை பற்றி நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் அவர்களுடைய கொள்கைகளை வேகம் வேகமாகப் பேசி அதே நேரத்தில் அவர்களுடைய கொள்கைகளை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். எப்படியெல்லாம் மக்களை திசைதிருப்ப முடியும் என்பதுதான் அவர்களுடைய நோக்கம். அவர்கள் இங்கே பேசும்போது ரஷ்யாவிலும், சைனாவிலும் ஏழைகள் இல்லை; அங்கெல்லாம் பிரச்சினைகள் இல்லை என்று சொன்னார்கள், நான் ரஷ்யாவுக்குப் போனதில்லை; சைனாவுக்கும் போனதில்லை. அதனால் அங்கே என்ன நடக்கிறது என்பதும் எனக்குத் தெரியாது.

அங்கே எல்லாமே தேசிய உடைமை என்று சொன்னார்கள். மக்களுடைய அறிவையும் தேசிய உடைமையாக அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அந்த நாடுகளிலே தொழில் நடத்துகிறவர்கள் கூட வெளிநாட்டிலிருந்து தொழிலதிபர்களை இறக்குமதி செய்து தொழில்களை நடத்துகிறார்கள் என்பதை நான் அறிவேன். நான் அங்கே இருக்கிற கம்யூனிஸ்டுகளைப்பற்றி மட்டும் அப்படி குறிப்பிடுகிறேன் என்று எண்ண வேண்டாம். இங்கும் அப்படித்தான் இருக்கிறது.

திரு. நம்பூதிரிபாட் அவர்கள் கேரளத்தில் முதலமைச்சராக இருக்கும்போது டில்லிக்குச் சென்றார்கள்; பிர்லாவை சந்தித்தார்கள்; அவர்கள் வீட்டிலே விருந்து உண்டார்கள்; விருந்து உண்ட பிறகு கேட்டார்கள். கேரளத்திற்கு வந்து தொழில் ஆரம்பியுங்கள்; நாங்கள் முழு பாதுகாப்பு தருகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், இந்தப் போக்கு மிகவும் அபாயகரமானது. அவர்களுடைய கொள்கைக்கு விளம்பரம் கிடைக்க வேண்டும்; அதற்கு என்ன வேண்டுமானாலும் சொல்வார்கள்.

இனிமேல் முதலமைச்சர் டில்லிக்குச் செல்ல வேண்டியதில்லை. அவர்கள் குறிப்பிட்டார்களே ஜோதிபாசு, அந்த ஜோதிபாசுவை கல்கத்தாவிற்குப் போய்ப் பார்த்து வந்தால் போதும். ஜோதிபாசு சொல்வதைச் செய்தால் இந்த நாடு வளரும் என்று நினைக்கிறார்கள். நீங்கள் எப்போதுமே உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுகிறீர்கள். அப்படிப் பேசிப் பேசி மக்களை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்; உங்கள் வழிக்கு மக்களை இழுத்துச் செல்லப் பார்க்கிறீர்கள்; மக்களை திசைதிருப்ப முயற்சி செய்கிறீர்கள். நிச்சயமாக அது நடக்காது. நீங்கள் அப்படி நினைத்தால் உண்மையிலேயே நீங்கள்தான் ஏமாந்து போவீர்கள்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே திட்டம் ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். திட்டம் இருக்கிறதா இல்லையா என்பது வேறு விஷயம். அதைப்பற்றிப் பேச நிறைய நேரம் ஆகும். ஆனால், அவர்களுடைய எண்ணம் என்னவென்றால் மக்களை திசைதிருப்ப வேண்டும்; ஆடுகளை முட்டவிட்டு இடையிலே இரத்தம் குடிக்க காத்திருக்கிற ஓநாயைப் போல அவர்கள் இருப்பார்கள். இந்த எண்ணம் தான் அவர்களுக்கு இருக்கிறது. இந்த நாட்டிலே சரியாக ஒன்று நடக்கிறது என்றால் அதை அவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். உடனே எப்படியாவது குழப்பத்தை ஏற்படுத்துவார்கள்.

ஏதோ அவர்களுக்குத்தான் ஏழை மீது அன்பு இருப்பது போலவும் மற்றவர்களுக்கு அன்பு, இரக்கம் இல்லாதது போலவும் பேசுகிறார்கள். ஏழைகளைக் காக்கத்தான் எல்லோரும் ஓட்டு



கேட்கிறார்கள். யாரும் பணக்காரர்களைக் காக்கப் போகிறோம், ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதில்லை. பணக்காரர்களும் பணக்காரர்களைக்காக்க ஓட்டுப்போடுங்கள் என்று கேட்பதில்லை; எல்லோருமே ஏழைகளைக் காக்க ஓட்டுப் போடுங்கள் என்றுதான் கேட்கிறார்கள். யாராவது டாட்டாவை காக்க ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டிருக்கிறார்களா? பிர்லாவை காக்க ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டிருக்கிறார்களா? அல்லது டி.வி.எஸ்ஸைக்காக ஓட்டு போடுங்கள் என்று கேட்டிருக்கிறார்களா? அப்படி எந்த ஊரிலும் யாரும் கேட்டதில்லை. அப்படியானால் அவர்கள் இந்த நாட்டு மக்களை எப்படி நினைக்கிறார்கள்? ஆடுகள், மாடுகள், கண்ணில்லாத குழந்தைகள் என்றுதானே நினைப்பதாக அர்த்தம். ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறவர்கள் இது குறித்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

அவர்கள் வேகமாகப் பேசி, அவர்கள் கொள்கைகளைத் திணிப்பதில் வல்லவர்கள். இங்கே பேசும்போது சிலர் சொன்னார்கள், இந்த அறிக்கையிலே அண்ணாயிசம் இருக்கிறது என்று; சிலர் கம்யூனிஸமும் இருக்கிறது என்றார்கள். ஆனால், இந்த அறிக்கையிலே கம்யூனிஸமும் இல்லை ; காபிட்டலிஸமும் இல்லை; சோஸலிஸமும் இல்லை. இதிலே புதிதாக என்ன சொல்லியிருக்கிறார்கள் ? எதுவுமே புதியதில்லை. 1966—67 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் பக்தவத்சலம் ஒரு பட்ஜெட்டை சமர்ப்பித்தார்கள். அந்த பட்ஜெட் வெறும் 196 கோடி ரூபாய்க்கானதுதான். ஆனால், இன்றைக்கு 700 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அன்று ஏழை வயோதிகர்களுக்குக் கொடுத்த பென்ஷன் மாதம் 20 ரூபாய். இன்றும் அதே 20 ரூபாய்தான் இருக்கிறது. 20-ஐ 60 ஆக உயர்த்தியிருந்தால் இது ஒரு முற்போக்கு பட்ஜெட் என்று சொல்லியிருப்பேன். அன்றைக்கு இருந்த வரவு—செலவுக்கும் இன்றைக்கு இருக்கிற வரவு—செலவுக்கும் உள்ள விகிதாச்சாரத்தைப் பார்த்தால் அன்றிருந்தபடியேதான் இருக்கிறது. தொகை மட்டும் பெருகியிருக்கிறது. ஆகவே, இது ஏழைகளை ஏமாற்றக்கூடிய பட்ஜெட்டாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை, 'கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பது' என்று சொல்வார்களே, அப்படித்தான் தயாரித்திருக்கிறார்கள். பட்ஜெட்டிலே புரட்சி, புரட்சி என்று சொன்னார்கள். ஆனால், பட்ஜெட்டைப் பார்க்கும்போது புரட்சியைக் காணவில்லை ; வறட்சிதான் நிறைய இருக்கிறது.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> தலைவரவர்களே, ஒரு விளக்கம். அவர்கள் 'வெண்ணெய் தலையிலே கொக்கு வைத்துப் பிடிப்பது' என்று சொன்னார்கள். (பலத்த சிரிப்பு.) அது சரியல்ல. கொக்கு தலையிலே வெண்ணெய் என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, நான் பேசும் போதெல்லாம் அவர்கள் இப்படித்தான் ஏதாவது ஒன்றைச் சொல்லி, என் பேச்சைத் தடுக்கப் பார்க்கிறார்கள். (குறுக்கீடு) இராதா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை என்னால் கேட்கமுடியவில்லை. அவர்கள் சொன்னதை காதில் வாங்க முடியாமல் என்னுடைய பேரப்பிள்ளை திரு. மி. வின்சென்ட் தடுத்துவிட்டான்.

பட்ஜெட்டை நன்றாக இருக்கிறதென்று சிலர் பாராட்டினார்கள். சிலர் அதை எதிர்த்தார்கள். ஆனால் பாராட்டுகிறவர்கள் முதலிலே அழகான வார்த்தைகளால் பாராட்டுகிறேன் என்று சொல்லிவிட்டு பின்னாலே, என் தொகுதியில் இது இல்லை, அதைச் செய்ய முடியவில்லை, இதைச் செய்யமுடியவில்லை. இதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லிக் கொள்கிறேன் என்றுதான் சொல்கிறார்கள். அவர்களுக்கும் எந்த அளவில் இந்த பட்ஜெட்டில் ஒன்றும் இல்லை என்று நன்றாகத் தெரிகிறது.

இதியிலேருந்து என்ன புரிகிறது. பட்ஜெட் என்பது காலா காலமாக இப்படித்தான் வந்திருக்கிறது. கவர்னர் அட்ரஸ் இருந்திருந்தால் அதிலே கொள்கையைப் பற்றிப் பேசி அதற்குப் பிறகு பட்ஜெட் வந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்படியும் இல்லாமல் மெம்பர்களுக்கும் பேசுவதற்கு அனுமதி இல்லாமல் இப்படி ஒரு பட்ஜெட்டைக் கொண்டு வந்திருக்கிறார்களே, ஏன்? எனக்கு அதைப்பற்றிக்கூட கவலை இல்லை.

பட்ஜெட்டைப் பற்றி நான் ஒன்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பட்ஜெட்டிலே ஏதாவது குறை இருந்தால் அதைப்பற்றி பேசுங்கள். மெம்பர்களுக்குப் பேச அனுமதி இல்லை என்று சொல்லி என்னைக் குற்றவாளியாக ஆக்காதீர்கள்.

திரு. ர. ஜெபமணி : நான் யாரையும் திட்ட வரவில்லை ஒரு பெரிய பட்ஜெட்டை, 700, 725 கோடி ரூபாயைச் செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லக்கூடிய மிகப் பெரிய பட்ஜெட்டைத் தரும்போது மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அது பூராவும் தவறுகிவிடக்கூடாது.

'தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம் மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'

ஒரு திட்டத்தைக் கொண்டு வருவது பெரிதல்ல. அதை நடைமுறையில் கொண்டுவருவதுதான் கஷ்டம். முதலமைச்சரின் அறைக் கதவு எப்போதும் திறந்தே இருக்கவேண்டும். அவர்





இந்த நாட்டிலுள்ள எல்லோர் குறைகளையும் கேட்கவேண்டும். அவர் 24 மணி நேரமும் நாட்டு மக்கள் பிரச்சினையை நினைப்பதிலேயே இருக்கவேண்டுமே தவிர அதை விட்டு விட்டு மற்ற இடத்திற்கு துளியும் போவேன் என்று சொல்வது நாட்டு மக்களின் நலனுக்கு பாதகத்தை ஏற்படுத்திவிடும்.

அதைப் போல். அங்குசம்போல் இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் 24 மணி நேரமும் நாட்டு மக்களின் நலனில் அக்கறை செலுத்திக்கொண்டிருக்கவேண்டும். நாட்டைப்பற்றி சிந்திப்பதையே விட்டுவிட்டு திசை திருப்பி நாட்டு மக்களுடைய நலனுக்குச் செலவிடுவதைக் தட்டிக் கழிக்கக்கூடாது.

நான் இங்கே அமர்ந்திருக்கும் சக அங்கத்தினர்களுக்குக் கூற விரும்புகிறேன். இந்த சபைக்கு வராமல் கூட நான் மெம்பராக இருக்க முடியும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை வந்து நான் கையெழுத்துப் போட்டு விட்டால் போதும். அப்படி ஒவ்வொரு அங்கத்தினரும் வராமல் இருந்து விட்டால் சபை கூடுவது எப்போது ? பட்ஜெட் கொண்டு வருவது எப்போது ? சபாநாயகர் உட்காருவது எப்போது? கூட்டம் நடத்துவது எப்போது? சட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி? நாம் எல்லோரும் மனச்சாட்சியை வைத்துக் கொண்டு நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இருக்கிறோம். அதை விட்டு விட்டு நாம் வேறு இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கக்கூடாது.

நம்முடைய முதலமைச்சர் வெளியே பேசும் போது மிக நன்றாகப் பேசுகிறார்கள். அறிவாளிகளை தேர்ந்தெடுங்கள் என்று சொல்கிறார்கள். நான் அகராதியைத் தேடித் தேடிப் பார்த்தேன் அறிவாளி என்பதற்கு என்ன பொருள் என்பது தெரியவில்லை. ஒரு வேளை நான் அதில் இல்லையா என்று ஐயப்பட்டேன். இப்படிப் பேசும் போது மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று அவர்கள் பார்ப்பதில்லை. நல்ல வெள்ளை உள்ளம். அவர் எதைச் சொல்கிறார் என்று அவருக்கே தெரியாது. மற்றவருக்கும் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிறது.

திரு. ர. ஜெபமணி : நல்ல மழை பெய்கிற நேரத்தில் நல்லவர்கள் ஆட்சிக்கு வந்தோம் என்று சொல்கிறார்கள். புயல் வெள்ளம் வந்தபோது மிக மிக நல்லவர்கள் ஆட்சிக்கு வந்தோம் புயல் வெள்ளம் வந்தது என்று சொல்ல முடியுமா? எல்லாம் அவர் சொல்கிறார். நல்லவர் 24 மணி நேரமும் நல்ல காரியங்களை செய்தால் நிச்சயமாக வரவேற்போம்.

[1978 பிப்ரவரி 28

## இணைப்பு I.

[1-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினு எண். 302-க்கான விடையைக் காண்க.]

### சட்டப் பேரவை முன் வைக்கப்பட்ட விவர அறிக்கை:

[Vide answer to L.A.Q. (Starred) No. 610 by Thiru N. Kittappa, M.L.A.]

பதில்.

தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கண்ட சிறு பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. கூட்டுறவுத் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து நாடுகள் வளர்ச்சி கழகத் திட்டங்கள்.

(அ) 7,000 வடிமுனைக் குழாய் கிணறுகள் நீரேற்று கருவியுடன்.

(ஆ) 1,000 ஆழமற்ற குழாய் கிணறுகள் நீரேற்று கருவியுடன்.

(இ) 4,000 நீரேற்று கருவிகள்.

(ஈ) 90 நடுத்தர ஆழக் குழாய்க் கிணறுகள், நீரேற்றுக் கருவியுடன்.

2. மின்சார வாரியத்தினுல் மேற் கொள்ளப்பட்டுள்ள கிராம மின் வசதி கழகத் திட்டங்கள்.

(அ) மாயவரம் ஒன்றியம் 1,300 நீரேற்று கருவிகள்.

(ஆ) செம்பனர் கோவில் ஒன்றியம்—800 நீரேற்று கருவிகள்.

(இ) குத்தாலம் ஒன்றியம்—300 நீரேற்று கருவிகள்.

(ஈ) சீர்காழி ஒன்றியம்—1,000 நீரேற்று கருவிகள்.

(உ) ஆனைக்காரன் சத்திரம்—550 நீரேற்று கருவிகள்.

(ஊ) ஒரத்தநாடு ஒன்றியம்—200 நீரேற்று கருவிகள்.

(எ) பாபநாசம் ஒன்றியம்—300 நீரேற்று கருவிகள்.

மொத்தம்—4,450 நீரேற்று கருவிகள்.



1978, பிப்ரவரி 28]

3. கீழ்க்கண்ட கிராம மின் வசதிக் கழகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, கிராம மின் வசதிக் கழகம், புது டில்லிக்கு, அனுப்பப்பட்டுள்ளன.

| | | நீரேற்றுக் கருவிகள். |
|---|---|---|
| (அ) வலங்கைமான் ஒன்றியம் | .. | 200 |
| (ஆ) அம்மாப்பேட்டை ஒன்றியம் | .. | 175 |
| (இ) குடவாசல் ஒன்றியம் | .. | 300 |
| மொத்தம் | .. | 675 |

நிலநீர் அனுமதி, நிலத்தடி நீர்த் துறையினுல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேலே கண்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. தஞ்சை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்களில் கடன்கள் சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழும் வழங்கப்படுகின்றது.

5. பாசனத்திற்கு நில நீரைப் பெறுவதற்காக, குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள், வடி குழாய் கிணறுகள் ஆகியவை தோண்டும் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு இயந்திரங்களையும் மற்றக் கருவிகளையும், அரசு வாடகைக்கு அளித்து வருகிறது.

## இணைப்பு II.

[36-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 320-க்கான விடையைக் காண்க.]

(அ) மற்றும் (ஆ) : கரூர் நகரில் உள்ள கைத்தறி உரிமையாளர்கள் (முதலாளிகள்) கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பைப் போதிய அளவு அதிகரிக்கவில்லை எனக் கோரி கைத்தறி நெசவாளர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்பாக 5—9—1977 முதல் 11—9—1977 முடிய கரூர் நகரில் உள்ள நெசவு, பனியன், சாயம் முதலிய எல்லா கைத்தறி பாக்டரிகளும் மூடப்பட்டிருந்தன.

(இ) 11—9—1977 ஆம் தேதியன்று கைத்தறி நெசவாளர் போராட்டக்குழு பிரிதிநிதிகள், கைத்தறி உரிமையாளர் பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடந்தது. இக்கூட்டத்தில் விசைத்தறிகளில் பெட்ஸீட், தலையணை உரை தயாரிக்க, கைத்தறி உரிமையாளர்கள் நூல் வழங்கக்கூடாது எனவும் மூடப்பட்ட பாக்டரிகளை உடனடியாகத் திறக்கவும், நெசவுத் தொழிலாளர்களுக்கு திரும்ப வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மீண்டும் 24—10—1977 ஆம் தேதியன்று சென்னையில் கைத்தறி இயக்குநர் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், போராட்டக்குழு, கைத்தறி உரிமையாளர்கள் கரூர், மற்றும் வெள்ளக்கோவில் பகுதிகளைச் சார்ந்த விசைத்தறி உரிமையாளர்கள் ஆகிய முத்தரப்பினரும் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது:

(1) ஏற்கனவே ஒப்பந்தம் செய்தபடி படுக்கை விரிப்புகளில் குறிப்பாக 2/2 ரகங்கள சாதா ரகங்கள் உட்பட விசைத்தறியில் உற்பத்தி செய்யக் கூடாது.

(2) பீசாக (piec ) நெய்யும்போது படுக்கை விரிப்பு ரகங்களை ஒட்டிய வகைகள் 47" அகலத்துக்குட்பட்டே விசைத்தறிகளில் உற்பத்தியாகலாம். 47" அகலத்துக்கு மேற்பட்ட ரகங்கள் கைத்தறிக்கே ஒதுக்கப்படும் என்றும்,

(3) 47" அகலத்துக்கு மேற்பட்ட மேலே (2)-ல் குறிப்பிட்ட ரகங்களில் கைத்தறியில் நெய்ய இயலாதவையும் தேவையான அளவு உற்பத்தி கிடைக்க வகையில்லாத ரகங்களையும் கைத்தறி இயக்குநர் அவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அலுவலர் குழு அனுமதித்தால் மட்டும் விசைத்தறிகளில் உற்பத்தி செய்யலாம்.

---



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## புதன் கிழமை, 1978, மார்ச் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். வி. நடேச முதலியார் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. எஸ். வி. நடேச முதலியார் 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி மறைந்ததைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வி. நடேச முதலியார் பேருந்து உரிமையாளராகவும் மற்றும் வியாபாரியாகவும் இருந்தார். காஞ்சீபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று 1962-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் உறுப்பினராகச் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

### 2. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மின்வாரியக் கட்டடங்கள்.

*321 வினா— திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்கள் மொத்தம் எத்தனை வாடகை கட்டடங்களில் இயங்குகின்றன?

(ஆ) அவைகளுக்காக செலுத்தப்படும் ஆண்டு வாடகை எவ்வளவு ?

(இ) சென்னை அண்ணாசாலையில் உள்ள ராயாலா கார்ப்பரேஷன் பில்டிங்''ல் இயங்கும் மின்சார இலாகா அலுவலகத்தின் மாத வாடகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 46.

(ஆ) ரூ. 12,28,704.

(இ) ரூ. 24,350.

திரு. அ. செல்வராசன் : தலைவர் அவர்களே, ரயோலா கார்ப்பரேஷனுககுச் சொந்தமான இடத்திற்கு 24,350 ரூபாய் வாடகையாக கொடுத்து வருகிறோம். இதைக் கருத்திற்கொண்டு சொந்தக் கட்டிடங்களிலே அலுவலகங்களை நடத்துவதற்கு ஏற்ற வகையில், மாநகராட்சிக்குச் சொந்தமான, ஆனந்தா தியேட்டருக்கு எதிரில் இருக்கும் இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்தில் புதிதாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், ஒரு பத்து மாடி கட்டடம் ஒன்றை கட்டுவதற்கான திட்டமிட்டு வேலை நடைபெற்று வருகிறது.

திரு. அ. செல்வராசன் : இவ்விதம் கட்டப்படும் கட்டடம் எந்த இடத்தில் கட்டப்படும். நான் சொல்லுகின்ற இந்த இடத்தில் பத்து அல்லது பதினைந்து மாடிகள் கொண்ட கட்டடம் கூடக் கட்டலாம். ஆகவே நான் சொல்லுகின்ற இந்த இடத்தில் கட்டடம் கட்டுகின்ற ஆலோசனையை அரசு ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இது சம்பந்தமான விவரங்களை எல்லாம் தருவார்களேயானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

*322 வினா— திரு. டி. எம். தைலப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பன்மாடிக் கட்டடம் கட்டும் செயல் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின்சார வாரியத்தின் பன்மாடிக் கட்டடம், அஸ்திவார வேலைகள் முடிந்து, மேல் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. டி. எம். தைலப்பன் : இப்போது பன்மாடி கட்டடம் கட்டும் நிலை எந்த நிலையில் உள்ளது என்பதை அரசு அறிவிக்குமா



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அஸ்திவாரம் போட்டாகிவிட்டது. மேற்கொண்டு கட்டிட வேலை 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ம் தேதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் மதிப்பு 94.75 இலட்சம் ரூபாய்.

## கேனல் சூப்பிரண்டுகளது சம்பளம்.

*323 வினா— திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை தொகுதியைச் சார்ந்த கேனல் சூப்பிரண்டுகளுக்கு அடிப்படைச் சம்பளம் தலைமை லஸ்கர்களை விடக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) கேனல் சூப்பிரண்டுகளின் சம்பள ஏற்ற முறையை அரசு பரிசீலனை செய்து அரசு ஆணை எண். 209, பொதுப் பணித் துறை, நாள் 16— 2— 78-ல் ரூ. 140— 3— 155— 4— 175— 5— 210-லிருந்து ரூ. 160— 5— 240 ஆக நிர்ணயம் செய்துள்ளது.

## மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு.

*324 வினா— திரு. என். கிட்டப்பா : திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில். சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை நிறுவும்படி மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபை அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அரசு மேற்கொண்ட முடிவு யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMYMUDALIAR :
(a) Yes.

(b) Sitting up of a Bench of the High Court of Madras at Madurai involves Parliamentary Legislation. This Government have addressed the Government of India to take immediate action on this. The decision of the Government of India in this regard is awaited.

The Government of India have requested this Government to obtain and forward the views of the present Chief Justice on the proposal. The High Court has been addressed.

## பெண்களுக்கான மத்திய சிறைச்சாலைகள்.

*325— வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பெண்களுக்கென மத்திய சிறைச்சாலைகள் எங்கெங்கு உள்ளன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR ; There is only one Central Prison for Women in Tamilnadu which is situated at Vellore in North Arcot District.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே ; பெண்கள் கைது செய்யப்படுகிற அவசியம் ஏற்படுகிறபோது, தூத்துக்குடியில் கைது செய்தாலும், கன்னியாகுமரியிலே கைது செய்தாலும், அவர்களை வேலூருக்குக் கொண்டு வருகின்ற துன்பமும், தொல்லையும் ஏற்படுகிறது. எனவே, இதைக் கருதி அரசாங்கம் இனி பெண்களை கைது செய்வதில்லை என்று முடிவெடுக்கின்ற அந்தக் காலம் வரையிலாவது, பெண் அரசியல் கைதிகளை, ஆசிரியைகளைக் கைது செய்வதில்லை என்று முடிவெடுக்கின்ற அந்தக் காலம் வரையிலாவது, மதுரை போன்ற இடத்தில் தெற்குப் பக்கத்திலே பெண்களுக்கான ஒரு மத்திய சிறைச் சாலையை அரசு ஏற்படுத்த முன்வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The suggestion will be subjected to the Governments consideration.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூருக்கு அருகாமையில் இருக்கின்ற திறந்த வெளிச் சிறைச் சாலை எப்போது துவங்கப்பட இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன் .

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This question does not arise from the principal question.

## இறால் மீன் பிடிப்பு.

*326 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இறால், சிங்கி இறால் போன்ற மீன் வகைகள் கடலில் எந்தெந்த இடத்தில் இருக்கின்றன என்பதைப் பற்றி சர்வே செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் சென்னை கடலூர், மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி முதலிய இடங்களில் அண்மைக் கடல் அளவாய்வு நிலையங்கள் இயங்கி வருகின்றன. தமிழ் நாட்டின் கடற்கரையோரத்தில் 20 பாகம் (Fathoms) ஆழம் வரை அளவாய்வு செய்து பழவேற்காடு, எண்ணூர், சென்னை, சதுரங்கப் பட்டினம், கடலூர், பறங்கிப்பேட்டை. தரங்கம்பாடி, நாகப்பட்டினம், கோடிக்கரை, அதிராமபட்டினம், இராமேஸ்வரம், பாம்பன், தூத்துக்குடி, கன்னியாகுமரி, கொளச்சல் முதலிய இடங்களுக்கு அருகாமையில் மீன் பிடிக்குகந்த இடங்களைக் கண்டறிந்துள்ளது. இவ்விடங்களில் தற்போது விசைப் படகுதாரர்கள் அதிக அளவில் இறால் மீன் பிடித்து வருகிறார்கள். கல் இறால் முக்கியமாக கன்னியாகுமரி, திருநெல்வேலி கடலோரத்திலும், கூடுவைத்தும் தாழ்ப்புசெதில் வலை போட்டும் பிடித்து வருகிறார்கள். கீழக் கரைப் பகுதியில் தாழ்ப்பு வலை போட்டுப் பிடிக்கிறார்கள். மற்ற இடங்களில் சிறிதளவில் மற்ற மீன்களுடன் பிடிபடுகிறது. இறால், கல் இறால் மீன்பிடிப்பு 1965–66-ல் 2500 டன்னாக இருந்தது. 1975–76-ல் 13,420 டன்னாக உயர்ந்துள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த் இறால் மீன் பிடிக்கும் தொழில் அந்நியச் செலாவணியை அளிக்கின்ற தொழிலாக இருக்கின்ற காரணத்தினால், இப்போது இருந்து வருகின்ற லாஞ்சு (விசைப்படகு) முறையைப் பயன்படுத்துகின்ற முறையிலிருந்து மாற்றி ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கக் கூடிய விஞ்ஞான முறையிலே நவீன கருவிகள் அடங்கிய விசைப்படகுகள் மூலம் செல்வதற்கு வாய்ப்பு உருவாகியிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஆராய்ச்சி நிலையங்கள் இன்றைய தினம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் ஆழ் கடலில் சென்று மீன் பிடிப்பதற்காக தமிழக அரசு தமிழக மீனைத் துறையின் அதாவது பிஷரீஸ் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாக இரண்டு ட்ராலர்கள் மெக்சிகோ நாட்டிலேயிருந்து, ஒவ்வொன்றும் 40 லட்சம் ரூபாய் செலவில் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 2, 3 நாட்களில் சென்னைத் துறைமுகத்திற்கு அவைகள் வந்து சேருமென்று எதிர் பார்க்கப்படுகிறது. வந்த பிறகு, அவைகள் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் வகையில் பயன்படுத்தப்படும். அதுபற்றி விரிவான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த இறால் பதனிடும் தொழில் கேரளாவிலே அதிகமென்று சொல்கிறார்கள். தமிழகத்திலே அப்படி ஏதாவது இருக்கின்றதா? அப்படியிருந்தால், எந்தெந்த இடங்களில் இருக்கின்றன?

[1978 மார்ச் 1

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இறால் பதனிடுவது என்றால் ஃபீரிஸிங்தான் ; கானிங் செய்வதில்லை. இப்படிப்பட்ட ஃபீரிஸிங் நிலையங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலையங்களும், தனியார் நிறுவனங்களும் இந்த இறால்களைப் பதனிட்டு, அவற்றை வெளிநாடுகளுககு அனுப்புகின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக எத்தனை நிலையங்கள் என்று நான் இப்போது சொல்வதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி கேட்டால், அதற்கான விவரங்கள் சேகரித்துச் சொல்லத் தயாராக இருக்கின்றேன். கேரள நாட்டிலே அதிகமாக ஃபீரிஸ்ட் பிரான்ஸ் ஏற்றுமதி செய்கிறார்கள் எனறு சொல்வது அவ்வளவு சரியல்ல. தமிழ்நாட்டிலே இருந்து கேரள மாநிலத்திற்குக் கொண்டுபோய், அங்கிருந்து பதனிட்டு, வேற்று நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இறால் மீன்கள் எத்தனை சதவிகிதம் தமிழ்நாட்டிலே பயன்படுத்தப்படுகிறது? எத்தனை சதவிகிதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது? இப்போது கூட அரசு இந்த இறால் மீனுக்கு வரி போட்டிருக்கிறது. அந்நியச் செலாவணி அதிகமாக வருகிறதென்ற காரணத்தினால், அரசே இந்தத் தொழிலை ஏற்று நடத்துவதற்கான திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பிடிபடுகின்ற இறால் மீன்களில் பெரும்பகுதி வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகின்றது என்பது உண்மை. ஆனால் எத்தனை சதவிகிதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது, எத்தனை சதவிகிதம் இந்த நாட்டு மக்கள் பயன்படுத்துகிறார்கள் என்ற புள்ளிவிவரம் இப்போது என்னிடம் இல்லை. அதைஏற்றுமதி செய்வதன் மூலம், அதிக அந்நியச் செலாவணி கிடைக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, அரசாங்கமே இந்தத் துறையை ஏற்று நடத்துவதற்கான ஆலோசனை அரசிடம் இப்போது இருக்கிறது.

[முற்பகல் 9–10.]

திரு. கு. ரமணி : அண்மையில் மேற்கு வங்க அரசாங்கம் தமிழக அரசிடத்தில், நாம் இங்கு பிடிக்கின்ற மீன்களை அவர்கள் அதிகமாக வாங்குவதற்கான வியாபார ஒப்பந்தம் செய்ய ஏதேனும் ஆலோசனை நடை பெற்றதா? எந்த அளவுக்கு மேற்கு வங்க அரசோடு தமிழக அரசு மீன் வியாபாரம் செய்ய முடியும் என்ற கணக்கைச் சொல்ல முடியுமா?



1978 மார்ச் 1]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தமிழகத்தினுடைய மீன்பிடி பகுதிகளில் பிடிக்கின்ற உள்நாட்டு மீன்கள் இதுநாள் வரை தனிப்பட்ட வியாபாரிகளாலும், இந்திய உணவுத் துறையின் (எப்.சி.ஐ.) மூலமும் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் மூலமாக நடத்தப்படுகிற அந்தத் துறைஅவ்வளவு லாபகரமாக இல்லாத காரணத்தால், அதை மூடிவிட்ட காரணத்தால் இப்போது அதிலே எந்த விதமான முடிவையும் அரசு எடுக்கவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன் மேற்கு வங்க மீன்துறை அமைச்சர் மாண்புமிகு மண்டல் அவர்கள் தமிழக அரசோடு தொடர்பு கொண்டு இந்த தினார்கள் அவர்கள் வாங்குவதற்குப் பேச்சு வார்த்தைகள் நடத் பெற்றன. அந்தப் பேச்சு வார்த்தைகள் முழுமை பெறவில்லை. நாளையதினம் மேற்கு வங்க மீன்துறை அமைச்சர் மாண்புமிகு மண்டல் அவர்கள் என்னைச் சந்திக்க இருக்கிறார்கள். அப்போது பேச்சு வார்த்தையில் முடிவு ஏற்படலாம் என்று கருதுகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இறால் மீன் வகைகளை சாத்தனூர் போன்ற மீன் பண்ணைகளில் வளர்க்கிறார்களா? இல்லையென்றால் வளர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா? சாத்தனூர் மீன்களை அதிகமாக மேற்கு வங்கத்திற்கு அனுப்பிவிட்டு உள்ளூரில் மீன் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. அதை அரசு நிவர்த்தி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அடுத்த கேள்வியில் அதற்கான பதில் இருக்கிறது. அதைப் படிக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதில் கிடைக்கும்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : தனி நபர்கள் வெளிநாட்டுக்கு இறால் மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா? அப்படி வழங்கப்பட்டிருந்தால் எவ்வளவு பேருக்குத் தமிழ்நாட்டில் உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஏற்றுமதிக்கு உரிமங்கள் பெறாமல் யாரும் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது. எத்தனை பேருக்கு என்ற புள்ளிவிவரங்கள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களைத் தர முடியும்.

திரு. அ.க. அரங்கநாதன் : இறால் மீன்களை உற்பத்தி செய்வதால் கெழுத்தி மீன்கள் இனம் குறைந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். கெழுத்தி மீன்கள் வளர்ச்சிக்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தக் கேள்வி இறால் மீன்களைப் பற்றிய கேள்வி ; கெழுத்தி மீன்களைப் பற்றியது அல்ல.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : இறால் மீன்களை வியாபாரிகள் பவுண்டு கணக்கில் வாங்குகிறார்கள். 40 இறால் கொண்ட ஒரு கிலோவுக்கு ஒரு விலையும், 60 இறால் கொண்ட ஒரு கிலோவுக்கு ஒரு விலையும், 100 இறால் கொண்ட ஒரு கிலோவுக்கு ஒரு விலையும் கொடுக்கிறார்கள். ஆகவே பெரிய இறால், சிறிய இறால் என்று பாராமல் இவைகளுக்கு ஒரே விலை கொடுத்து அரசாங்கம் வாங்கிக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் அரசிடத்தில் இல்லை.

திரு. ரெ. வீ. சவுந்தரராஜன் : தரமுள்ள மீன்களை வெளி நாட்டுக்கு அனுப்பிவிட்டு தரம் குறைந்த மீன்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படி ஒன்றும் இல்லை.

*327 வினா.— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இறால் வளர்ப்பு நிலையம் எத்தனை உள்ளது?

(ஆ) அதில் தனியார் துறை எத்தனை அரசுத்துறை எத்தனை?

(இ) மேலும் தீவிரப்படுத்த அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) மற்றும்(ஆ); தமிழ்நாட்டில் அரசுத்துறையால் நடத்தப்பெறும் இறால் வளர்ப்பு நிலையங்கள் ஐந்து உள்ளன. தனியார் துறையில் ஏதும் இல்லை.

(இ) ஆம். சென்னைக்குத் தெற்கே 36 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோவளத்தில் ரூ. 4.24 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு விரிவான இறால் வளர்ப்புப் பண்ணை கட்டப்பட்டு வருகிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கிள்ளையில் மத்திய அரசின் உதவியுடன் ரூ. 16.52 இலட்சம் செலவில் ஒரு பெரிய இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்க இந்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பழவேற்காடு ஏரி முழுமையும் பிரத்தியேகமாக அளவை செய்யப்பட்டு மலைச்சேரிக்குத் தெற்கே உள்ள இடம் இறால் வளர்ப்புக்குத் தகுந்தது என்று கண்டு அறியப்பட்டுள்ளது.





மீன் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகளை கொச்சியில் உள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் இறால் வளர்ப்பு பற்றி பயிற்சி பெற அனுப்பும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அப்பயிற்சி பெற்ற அலுவலர்கள், தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மீனவர் குழுக்களுக்கு உவர்நீர் மீன் வளர்ப்பு பற்றி பயிற்சிகள் நடத்துவர். இப்பயிற்சி பெற்ற மீனவர்கள் அரசிடம் இருந்து ஒரு ஹெக்டேர் அளவுள்ள உவர் நீர்ப்பரப்பை நீண்டகால அளவில் குத்தகைக்கு எடுத்து அதில் இறால் மீன் வளர்ப்பை மேற்கொள்வர். தமிழ்நாட்டில் 82,000 ஹெக்டேர் உவர் நீர்ப்பரப்பு உள்ளது. அதில் 27,000 ஹெக்டேர்கள் தான் தீவிர இறால் வளர்ப்புக்குக் கொண்டுவர தயாரான நிலையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள் நிறைய கேட்கப்படலாம். ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகப் பதில் சொன்னால் நல்லதாக இருக்கும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்த இறால் மீன்கள் அதிகப் பயனுள்ளதாக இருப்பது மட்டுமல்ல, அதிக வருமானம் உள்ளதாகவும் இருக்கிறது. இந்த இறால் மீன்களை பஞ்சாயத்துக்களிலே இருக்கின்ற ஊரணிகளிலே வளர்த்தால் பஞ்சாயத்துக்களுக்கு நல்ல வருமானம் வரும். இதை மனத்திலே கொண்டு அப்படிப்பட்ட காரியங்களை எல்லா இடங்களிலும் செய்ய இறால் மீன்களை வளர்க்க அரசு ஏற்பாடுகளைச்செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய கேள்வியிலேயே சொன்னார்கள். இறால் மீன்களை ஆங்காங்கே உள்ள ஏரிகளிலே வளர்த்தால் அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கு அவைகளால் அதிக வருமானம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதிக வருமானம் பெற விரும்புகின்ற ஊராட்சி மன்றங்கள் இந்த முயற்சிகளிலே ஈடுபடலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி இறால் வளர்ப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டிய சாத்தியக் கூறுகள் என்ன, என்ன? தர்மபுரி மாவட்டத்திலே கிருஷ்ணகிரி மீன் வளர்ப்புப் பண்ணையிலே இந்த இறால் மீன் வளர்ப்பு நிலையத்தை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கிருஷ்ணகிரி பகுதியில் உள்ள ஏரிகளில் இந்த இறால் மீன் வளர்ப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் படித்த குறிப்பிலிருந்து பார்த்தால் சாத்தனூர் அணையிலே இந்த மீன்களை வளர்ப்பதற்கான திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு

[1978 மார்ச் 1

சாத்தனூர் அணையில் இந்த மீன்களை வளர்க்க ஏற்பாடுகள் செய்யப்படுமா? சாத்தனூர் அணையில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் மேற்கு வங்காளத்திற்கு அனுப்பப்பட்டு விடுவதால் உள்ளூரிலே மீன் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. அதைப் போக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மூலக் கேள்வி இறால் மீன் வளர்ப்பது பற்றியது.

திரு. ஏ. ராமலிங்கம்: தனியார் துறையில் உள்ள மீனவர்களும் சிறு விவசாயிகளுக்கும் இறால் பண்ணை ஏற்படுத்தினால் அரசாங்கம் அதற்கு எவ்வளவு மானியம் கொடுக்கும்? வேறு என்ன என்னவை உதவிக அரசாங்கம் தரமுடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற ஆலோசனை எதுவும் இப்போது அரசிடம் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டையிலே மாகனூர் பகுதியில் இப்படிப்பட்ட மீன் வளர்ப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இங்கே பதில் வழங்கப்பட்டபோது தெரிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு எந்த இடங்களிலும் அது போன்ற பரிசீலனை இல்லை.

## பாக் ஜல சந்தியில் மீன் பிடிப்பு.

328 வின—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டுக் கடற்கரை ஓரங்களில் விசைப்படகுகள் ஆழ்கடலில்தான் மீன் பிடிக்க வேண்டுமென விதியுள்ளதா?

(ஆ) பாக் ஜல சந்தியில் ஆழம் குறைவானதால் நாட்டுப் படகுகள் மட்டுமே மீன் பிடிக்கலாம் என அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) இல்லை.

(ஆ) அவ்வாறு பிறப்பிக்க இயலாது.

திரு. ரா. உமாநாத்: மெக்கனைஸ்ட் போட்ஸ், கட்டுமர போட்ஸ் இவைகள் சம்பந்தமாக, நாகப்பட்டினம் பகுதியிலே மீன்பிடிக்கும்போது மெக்கனைஸ்ட் போட்கள் இரவு நேரங்களிலே தான் செல்கிறார்கள், அப்போது இருட்டாக இருப்பதால் கட்டு



1978 மார்ச் 1]

மரங்களை உடைப்பதற்கு சௌகரியமாக இருக்கிறது. இதைப் பற்றி கட்டுமர மீனவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி அவர்களும் ஒரு உத்திரவாதம் அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். 6 மைலுக்கு அப்பாலே மெக்கனைஸ்ட் போட்கள் சென்று காலை 4 மணி முதல் 6 மணி வரைதான் மீன் பிடிக்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிற முறையில் உடனடியாக அமைச்சர் அதில் தலையிட்டு அவர்களுக்குள் எந்தவிதமான கிளாஷும் வராமல் இருப்பதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்வார்களா?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மீன்பிடித் தொழிலைப் பொறுத்தவரையில் அரசாங்க உத்தரவின் மூலம் எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் அரசு யார் மீதும் திணிக்க முடியாது. சிற்சில இடங்களில் சச்சரவுகள் ஏற்படுகின்ற நேரத்தில் இரண்டு தரப்பாரையும் கூட்டிவைத்துப் பேசி இரண்டு தரப்பாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுமுகமான நிலையை, "காமன் அண்டர்ஸ்டாண்டிங்" என்ற முறையிலே ஏதாவது நாம் முடிவெடுக்க முடியும்.

அந்த மீன்பிடி முறைகளை வரையறுக்க வேண்டுமென்றால் சட்டமன்றத்தின் மூலம் நாம் ஏதாவது சட்டத்தை நிறைவேற்றி அதன் மூலம் இப்படிப்பட்ட மீன்பிடித் தொழிலை வரையறுக்க முடியும். நாகப்பட்டினத்தைப் பொறுத்தவரையில் நேற்றைய தினம் இரண்டு சாராரும் அதிகாரிகளின் முன்னிலையில் பேசி இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதைப்பற்றிய அறிவிப்பு அரசுக்கு வரவில்லை. எப்படிப்பட்ட முடிவுகளை எடுக்க வேண்டுமென்பதற்கு அரசின் சார்பில் நான் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கும்பகோணம் சென்ற பொழுது அதிகாரிகளோடு கலந்து பேசி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இரண்டு சாராரும் சுமுகமான முடிவுக்கு வந்து அரசுக்கு அறிவித்தால் அரசு அதை நிச்சயமாக அமல்படுத்தும்.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களில் விசைப் படகு வைத்திருப்பவர்களுக்கும், நாட்டுப் படகு வைத்திருப்பவர்களுக்கும் இரண்டு மூன்று மாத காலமாகத் தொடர்ந்து மோதல்கள் நடக்கின்றன. அந்த நிகழ்ச்சிகளின் காரணமாகக் கடலோரப் பகுதிகளில் காவல் துறையினருக்கு அதிக வேலை கொடுப்பதால் சர்க்காரின் பணம் வீண் விரயம் ஆகிறது. ஆகவே, விசைப்படகு வைத்திருப்பவர்கள் இலாபத்திற்காக நிற்பவர்கள்; நாட்டுப்படகு வைத்திருப்பவர்கள் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று நினைக்கக் கூடியவர்கள். எனவே, உடனடியாக நாட்டுப் படகு வைத்திருக்கின்ற ஏழை மீனவர்களைப் பாதுகாக்கும் முறையில் ஒரு குறிப்பிட்ட மைல் தூரத்திற்கு நாட்டுப் படகுக்காரர்களுக்குத்தான் சொந்தம் என்று அறிவிக்க அரசு முன்வருமா?

[1978 மார்ச் 1

__மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :__ பேரவைத் தலைவரவர்களே, மீன்பிடித் தொழிலில் கட்டுமரத்தில் செல்லும் தொழிலாளர்களுக்கும், விசைப்படகில் செல்லும் தொழிலாளர்களுக்கும் மத்தியில் தகராறுகள் சிற்சில நேரங்களில் சிற்சில இடங்களில் நடைபெறுவது உண்மை. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அதிகாரிகள் அரசின் தரப்பிலே தலையிட்டு அதற்கான சுமுகமான முடிவுகளை ஆங்காங்கே எடுத்திருக்கிறார்கள். நிரந்தரமான ஒரு பரிகாரத்தைக் காணவும், கட்டுமர மீனவத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் வகையிலேயும் சட்டம் நிறைவேற்றுவதுபற்றி அரசாங்கம் மிகத் தீவிரமாக ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. அதற்கான சட்டம் கூட தயாரிக்கப்பட்டு வருகிறது. அது முடிந்துவிட்டால் இந்தக் கூட்டத்தொடரிலே அவைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அப்படி நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட சில்லரைச் சச்சரவுகள் குறையும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

__திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :__ தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது சில இடங்களில் சில ஒப்பந்தங்களைச் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஒப்பந்தம் செய்தாலும்கூட அந்த ஒப்பந்தத்தை மீறி விசைப் படகுக்காரர்கள் அனாவசியமாக இந்த நாட்டுப் படகுக்காரர்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். அதைக் கண்காணிக்க வேண்டிய போலீஸ் அதிகாரிகள் ஒன்ஸைடாக இருக்கிறார்கள். விசைப் படகுக்காரர்கள் பக்கமாக அவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் இந்த சச்சரவுகள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க போலீஸ் அதிகாரிகள், யார் குற்றம் செய்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

__மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :__ பேரவைத் தலைவரவர்களே, மீன்பிடி தொழிலில் ஏற்படும் தகராறுகளைச் சுமுகமான முறையில் தீர்ப்பதற்காக, தவறு செய்பவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, யாராக இருந்தாலும், கட்டுமரத் தொழிலாளியாக இருந்தாலும் அல்லது விசைப்படகுத் தொழிலாளியாக இருந்தாலும், தவறு செய்பவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டுமென்று காவல் துறையினருக்கு இந்த அரசு ஏற்கனவே அறிவுரை கொடுத்துள்ளது.

__திரு. சோ. அழகர்சாமி :__ தலைவர் அவர்களே, இந்த மீன்பிடி சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், ஒரு வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் தான் விசைப்படகுக்காரர்கள் மீன்பிடிக்க வேண்டும், மீதி நாட்களில் நாட்டுப்படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்று இருந்தால்தான் கறாராக அமல்படுத்த முடியும். ஒமல் கணக்கு என்று வைத்தால் அதை நிறைவேற்றுகின்ற நேரத்தில், போலீசார் விசைப்படகுக்காரர்கள் பக்கம் இருக்க வேண்டிய கட்டாய



1978 மார்ச் 1]

சூழ்நிலை ஏற்படும். எனவே, குறிப்பிட்ட நாட்களில் விசைப் படகுக்காரர்களும், மற்ற நாட்களில் நாட்டுப்படகுக் காரர்களும் மீன்பிடி வேலையைச் செய்ய வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்ய முன்வருமா ?

__மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :__ பேரவைத் தலைவரவர்களே, விசைப்படகுக் காரர்கள் அல்லது நாட்டுப் படகுக்காரர்கள் குறிப்பிட்ட வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல வேண்டுமென்ற ஒரு வரைமுறையை நாம் தமிழகக் கடலோரத்தில் உள்ள அத்தனை கடலோரக் கிராமங்களிலும் அமல் நடத்துவது என்பது முடியாத காரியம். காரணம், கட்டுமரத் தொழிலாளர்கள் வாரத்தில் நான்கு நாட்கள் தொழிலுக்குப் போய்விட்டு மீத மூன்று நாட்களுக்குப் போகவில்லை என்றால்,—அவர்களுடைய பொருளாதார நிலைமை நமக்குத் தெரியும்—மூன்று நாட்களுக்கு வருமானமே இல்லாமல் சங்கடப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. அதைப் போலவே விசைப்படகுத் தொழிலாளர்கள் வாரத்திலே மூன்று நாட்களுக்கு மட்டும் செல்ல வேண்டும், நான்கு நாட்களுக்குப் போகக் கூடாது என்று கட்டுப்பாடு செய்தால் அவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டு அதில் வரும் வருமானத்தின்மூலம்தான் படகுக்கான பாக்கித் தொகையை அடைக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் ஒரு சில பகுதிகளிலே அப்பேர்பட்ட உடன்பாடுகளை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மல்லிப்பட்டினம் என்ற கடலோரக் கிராமத்தில், 4 நாட்களுக்குக் கட்டுமரத் தொழிலாளர்களும் 3 நாட்களுக்கு விசைப்படகுத் தொழிலாளிகளும் மீன்பிடிக்க வேண்டுமென்ற ஒப்பந்தத்திற்கு அவர்களே சம்மதித்து இருக்கிறார்கள்.

இப்பொழுதுகூட நாகப்பட்டினத்திலே தகராறு நடந்து கொண்டிருக்கிறது. அதே ஒப்பந்தத்தை எல்லா இடங்களிலும் நாம் அமுல் நடத்த வேண்டுமென்றால், அவர்கள் ஒத்துவருவதில்லை. ஆகவே, இடத்திற்கு இடம் நிலைமை மாறுபடுகிறது. 3 மைல்களுக்கு அப்பால்தான் விசைப்படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்பதைக் கூட, தமிழ்நாடு பூராவும் யூனிபாரமாக அமுல் நடத்துவது என்பது முடியாத காரியம். காரணம், கடலிலே இருக்கிற ஆழத்தைப் பொறுத்து, அதிலே இருக்கிற மீன் வகைகளைப் பொறுத்துத்தான் அவர்கள் செல்ல முடியும். சில இடங்களிலே, 3 மைல் போனால்கூட ஆழம் இருக்காது, சில இடங்களிலே 2 மைலிலே கூட ஆழம் இருக்கும். ஆகவே, இடத்திற்கு இடம் மாறுபாடு இருக்கிறது. ஆகவேதான், அந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

*Play-ground for St. Bede's High School.*

*1329 Q.—THIRU S.J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the St. Bede's High School, Santhome, Madras authorities have applied for the Government's permission to use the land behind their school for playground purposes ; and

(b) if so. the steps taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :— (அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்குப் படிப்புதவி.

* 330 வினு— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

அரசு ஊழியர்களின் பிள்ளைகள் உதவித் தொகை பெற பெற்ருேர்கள் வருமான உச்சவரம்பை அதிகரிக்க அரசிற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்காக என்று தனியாகப் பெற்ருேர்களின் வருமான வரம்பை அதிகரிக்கும் உத்தேசம் இல்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்களுடைய ஊதியம் விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் ஏற்றப்படுகிறது. அந்தப் பஞ்சப்படி சம்பளத்தோடு சேர்க்கப்படுகிறது. எனவே, ஊதிய வரம்பு இல்லாமல், உள்ளாட்சித் துறையிலே, பணியாற்றுகிற ஊழியர்கள், அரசு கெஜட் பதிவு பெருத ஊழியர்கள் குழந்தைகளுக்குச் சலுகை தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களுக்கென்று தனியாக எந்தவித பரிசீலனையும் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி அளிக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது அப்படி ஒரு உத்தேசம் இல்லை.



திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் பின்தங்கியவர்கள் என்றும் பாகுபடுத்தி, அவர்களுக்கு ஊதிய வரம்பை உயர்த்தித் தருகின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு ஊழியர்களின் பிள்ளைகளும் மற்றவர்களும் உதவித்தொகைகளை தகுதியின் அடிப்படையில் ஆண்டு வருமானம் ரூ. 3,000க்கு அதிகப்படாமல் இருந்தால் பெறுவதற்கு மாநில அரசு உத்தரவு தற்பொழுது அமுலில் உள்ளது. திறமையின் அடிப்படையில் வழங்கும் மேற்கண்ட உதவித் தொகைகளுக்கு வருமான வரம்பை ரூ. 5,000-க்கு உயர்த்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, விவசாயிகளுடைய குழந்தைகளெல்லாம் உயர்கல்வி படிக்கின்ற வகையில் அவர்களுடைய பெற்ருேர்களுடைய வருமான வரம்பை உயர்த்தவும் அதே நேரத்தில், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உதவித் தொகை குறைவாக இருப்பதால், உதவித் தொகையை அதிகரிக்கவும் இந்த அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதைக்கு அப்படி ஒரு யோசனை இல்லை.

*Stadium in Dharmapuri district.*

*331 Q.—Dr. K. SAMARASAM : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(a) whether there is any proposal to construct an out-door stadium in Dharmapuri district ; and

(b) if so, the steps taken so far?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;— (அ) இல்லை.

(ஆ) இவ் வினுவிற்கு இடமில்லை

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே உள்ள விளையாட்டு வீரர்க்ள் மாவட்ட, மாநில, இந்திய அளவு மட்டுமல்லாமல் உலக அரங்குகளிலே, பல விளையாட்டுக்களிலே கலந்துகொண்டு, பல வெற்றிகள் பெற்றிருக்கிருர்கள். இத்தகைய விவேகமும், வீரமும் மிக்க அவர்களை ஊக்குவிக்க, அம்மாவட்டத்தில் அப்படி ஒரு விளையாட்டு அரங்கை ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 1

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து அப்படி ஒரு திட்டம் வருமானால், அதைப் பரிசீலிக்கலாம்.

சென்னை புளியந்தோப்பு இறைச்சிக்கூடம்.

* 332 வினா— திரு. சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை புளியந்தோப்பு பகுதியில் மாநகராட்சி மூலம் கண்காணிக்கப்படும் ஆடு, மாடுகள் வெட்டப்படும் இறைச்சிக் கூடத்தினை நவீன கூடமாக மாற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, அந்தக் கூடமும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதைச் சீர்படுத்தத் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது சென்னைக்கு 25 மைல் தொலைவில் உள்ள திருவள்ளூர் சாலையில் ரெட்ஹில்ஸ் அருகிலுள்ள கொடிவெள்ளி கிராமத்தில் நவீன முறையில் அதை அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, புளியந்தோப்பில் உள்ள ஆடு மாடுகள் வெட்டும் நிலையத்தில் அந்த ஆடு மாடுகளுக்கு வியாதி, நோய் உள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காக எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய விவரம் இல்லை.

ஸ்டான்லி மருத்துவமனை அருகே புதிய சுரங்கப்பாதை

*333 வினா— திரு. அ. செல்வராசன், திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை (புறநோய்ப் பிரிவு அருகில் இருக்கும் M. C. ரோட் ரயில் பாதையின் குறுக்கே ஒரு சுரங்கப்பாதை (Subway) ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?



1978 மார்ச் 28]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. அ. செல்வராசன் : தலைவர் அவர்களே, இந்த எம்.சி. ரோட்டிலே சுரங்கப் பாதை கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சித்தாபுதூரில் வாரியக் குடியிருப்புகள் ஒதுக்கீடு

* 334 வினா— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரம், முதல் வார்டு, சித்தாபுதூரில் உள்ள ஹவுஸிங் யூனிட்டைச் சேர்ந்த வீடுகளில் குடியிருக்க விண்ணப்பம் போட்டவர்களுக்கு வீடுகளை ஒதுக்கிக் கொடுப்பதில் முறை கேடுகள் ஏற்பட்டுள்ளது குறித்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோவை நகரம் சித்தாபுதூர் காலனியில் 1972, 1975 மற்றும் 1976 ஆண்டுகளில் வீடுகளை ஒதுக்கீடு செய்து கொடுப்பதில் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளதாக முறையீடுகள் ஏதும் அரசு பெறவில்லையென்றாலும் சில முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதை அரசு அறிந்து தவறான ஒதுக்கீடுகளைச் சரிபார்த்து உண்மையிலே குடிசை வாசிகள் அல்லாத முறைகேடான ஒதுக்கீடுதாரர்களை வெளியேற்றவும், நிரூபிக்கப்படும் முறைகேடுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கைகளை எடுக்கும்படியும் வீட்டு வசதி வாரியத் தலைவருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, உண்மையிலேயே அந்த வீடுகள் முனிசிபல் தொழிலாளர்களுக்கு வசதி செய்யப்படுவதற்காக அரசாங்கத்தால் கட்டப்பட்டது. ஆனால் இப்போது யாருக்குக் கொடுப்பதற்காகக் கட்டப்பட்டதோ அவர்கள் தெருவிலே நிற்கிறார்கள். மற்றவர்கள்தான் அமைச்சனை சொன்ன மாதிரி, letting and sub-letting மாதிரி இருக்கிறது. ஆகவே அவர்களை வெளியேற்றி, தொழிலாளர்களுக்கு வசதி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது எவ்வளவு குறைந்த காலத்தில் செய்யப்படும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே 150 வீடுகளில் 116 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 34 மீதம் இருந்தது. அந்த 34-ல் 13 வீடுகளை முறையாகக் கொடுத்தார்கள். ஆனால் 15 குடியிருப்புகளை சுக்கூர், முன்னாள் நகரசபைத் தலைவர், இராஜமாணிக்கம், முன்னாள் மேலவை உறுப்பினர், கே. அரங்கநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் முறைகேடாக ஒதுக்கப்பட்டது. அதேபோல இன்னும் 6 பேர்களுக்கு முறையற்ற வகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளைப் பரிசீலித்து முறையாகக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதற்குப் பின்னால் 66 குடியிருப்புகள் கட்டப்பட்டன. அவைகள் 1976 ஜனவரியிலே கொடுக்கப்பட்டன. பின்னர் 66-லே 54 வீடுகளை முறையாக கொடுத்திருக்கிறார்கள். மீதி உள்ள 12-ல், இரண்டு குடியிருப்புகளை வீட்டு வசதி வாரியம் அலுவலகத்திற்குப் பயன்படுத்திக்கொண்டது. மீதி உள்ளது 10 வீடுகள். அதில் 4, 5, 1 வீடுகளை முறையே, முன்னாள் அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் சிபாரிசின் பேரிலும், சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர் கே. அரங்கநாதன் சிபாரிசின் பேரிலும், ப.உ. சண்முகம் அவர்கள் பரிந்துரையின் பேரிலும் மொத்தம் 10வீடுகள் முறைகேடாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, அவர்களை வெளியேற்றித் தகுதியானவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

<u>திரு. மு. அரங்கநாதன்:</u> தலைவர் அவர்களே, தி.மு.க. அரங்கநாதன் என்று சொன்னால், எந்த நேரத்தில் இருந்தார் என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> கோவை மாவட்ட அரங்கநாதன் என்று சொன்னேன்.

<u>திரு. ப.உ. சண்முகம்:</u> தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டியலைப் படிக்கும்போது என் பெயரையும் சேர்த்துப் படித்து, முறைகேடாக சிபாரிசு செய்தேன் என்று சொன்னார்கள். என்ன சிபாரிசு செய்தேன் என்று தெரியவில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து தெரிவித்தால்—முறைகேடு என்று சொன்னார்கள்—என்ன முறைகேடாக நான் சிபாரிசு செய்தேன், யாருக்கு சிபாரிசு செய்தேன் என்று தெரிவித்தார்களானால், இனிமேல் அந்தத் தவறை, அமைச்சர் அவர்களும் செய்யாமல் இருப்பதற்கும் அங்கத்தினர்களும் கவனிப்பதற்கும் வசதியாக இருக்கும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இ. ராகவானந்தம்:</u> பேரவைத் தலைவரவாகளே, இந்த் வாரியத்தில் வீடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அங்கே டிக்லேர்ட் சிலம் என்று சொல்கிற, அந்த குடிசைகளில் இருப்பவர்களை படம் எடுத்து, அந்தப் படத்தை அவர்களிடத்தில் கொடுத்து விட்டு, அவர்களுக்கு





ரூ. 50 பணம் கொடுத்து டிரான்சிட் காம்ப் என்ற இடத்திற்கு அனுப்பி, அவர்களுக்கு அந்த இடத்தில் வீடு கட்டி அவர்களைப் பின்னர் அந்த இடத்தில் குடியேற்றவேண்டும். அப்படி எனியூமரேட் செய்யாதவர்களுக்கு, பதிவு செய்யாதவர்களுக்கு, படம் பிடிக்காதவர்களுக்கு, பரிந்துரை மீது வீடு கொடுக்கும்படி செய்வதுதான் தவறாக முறைகேடாகச் செய்வது என்பதாகும். திரு. ப.உ. சண்முகம் அவர்கள் சிபார்சு செய்து திரு. முத்து, துப்புரவாளர், சுற்றுலா மாளிகை, கோயம்புத்தூர் என்பவருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் வீட்டு வசதி வாரியத்தில் எனியூமரேட் செய்யப்பட்டவரும் அல்ல, ரூ. 250-க்குக்கீழ் வருவாய் பெறுபவரும் அல்ல. அவருக்கு மியர் ரெக்கமன்டேஷன் பேரில் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

<u>திரு. ப.உ. சண்முகம்:</u> தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் இருந்து கோயம்புத்தூரில் இருக்கும் ஒரு துப்புரவாளருக்கு அப்படிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன். அவர் கோவை குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளைப் பற்றிச் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். எனக்கே அப்படி, செய்ததாக நினைவு இல்லை. அப்படிச் செய்திருந்தாலும் ஒரு கடைசி நிலையில் இருக்கும் அரசில் பணியாற்றுகிற பொதுப்பணித்துறை துப்புரவாளருக்குத்தான் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒருவருடைய உரிமையை மறுத்து செய்யப்படவில்லை. இது எப்படி முறைகேடாக இருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இதிலே என்ன தவறு, என்ன முறைகேடு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> தலைவரவர்களே, யாருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. சிலம் ட்வல்லமராக இருந்து இருக்கவேண்டும், டிக்கலேர்ட் ஸ்லமில் இருக்கவேண்டும், படம் பிடிக்கப்பட்டு இருக்கவேண்டும், போட்டோ எடுத்தது அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டு இருக்கவேண்டும். குடும்பத் தலைவர் பெயர் எழுதியிருக்கவேண்டும். டிரான்சிட் காம்ப் செல்வதற்கு ரூ. 50 கொடுக்கப்பட்டு இருக்கவேண்டும். இப்படியெல்லாம் செய்யப்படாதவருக்குக் கொடுக்கப்படுவது ''இர்ரெகுலர்'' என்று சொல்வது. அதற்கு 'முறைகேடு' என்று தமிழில் மொழிபெயர்ப்பு தரப்பட்டுள்ளது.

<u>திரு. ப. உ. சண்முகம்:</u> அமைச்சரின் கடுமையான குரலை ரொம்ப நாளாக நான் அறிந்தவன். ரொம்ப நாள் அவரோடு நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்திலுள்ள குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சென்னையில் இருக்கும் குடிசை மாற்று வாரியத்திற்கும், கோவையில் இருக்கும் குடிசை மாற்று வாரியத்திற்கும் ஒரே மாதிரியான தகுதி நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 1

குடிசை மாற்று வாரியத்தில் ஏதோ ஒரு கடைநிலை ஊழிய ருக்குக் கொடுத்தது தவறு என்று சொல்கிறார்கள். வீடுகள் கட்டுகிறோம். குடிசை மாற்று வாரியத்தில் 200 வீடுகள் கட்டுகிறோம். 100 வீடுகளுக்குத்தான் பதிவு செய்யப்பட்டவர் கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், மற்ற 100 வீடுகளை வேறு யாருக்காவது கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? அதிலே என்ன முறைகேடு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரரைவத் தலைவர் அவர்களே, மீதம் வீடுகள் இருந்தால், அது அந்தப் பகுதியிலே இருக்கின்ற அட்ஜசன்ட் ஸ்லம் டுவல்லர்ஸ், அருகாமையில் இருக் கிற குடிசையில் குடி இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். நான் நினைக்கிறேன். அது இப்படித்தான் நடந்து இருக்கவேண் டும். அவர் சுற்றுலா மாளிகையில் தங்கியிருந்து இருப்பார். ஒருகால் அப்போது அந்தத் துப்புரவாளர் கேட்டு இருப்பார். இவரும் சொல்லியிருப்பார். அவர் ஸ்லம் டுவல்லர் இல்லை. எனியூ மரேட் செய்யப்பட்டவரும் அல்ல. ரூ. 250-க்கு குறைவாக சம்பளம் வாங்குபவரும் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து விவரமாக விளக்கம் கேட்க விரும்புகிறவர்கள், அமைச்சர் அவர்களின் அறைக்குச் சென்று வேண்டுமானால் கேட்டுக்கொள்ளுங்கள். இங்கே நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்களின் அறையில் சென்று கேட்கவேண்டும் என்று சபாநாயகர் அவர்கள் அவையில் தெரிவிக் கக்கூடாது. எந்த அமைச்சரையும் எந்த சட்டமன்ற உறுப்பினரும் அவர்கள் அறையிலே சென்று பார்க்கவேண்டிய கட்டாயம் இல்லை. அவசியம் இருந்தால் அவர்களே போய்ப் பார்த்துக்கொள்வார்கள். சபாநாயகர் அவர்கள் அந்த வகையில் டைரக்ஷன் அளிக்கக் கூடாது. சபாநாயகர் அவர்கள் தன் னுடைய அறைக்கு வந்து கேளுங்கள் என்று சொல்லலாமே தவிர, அமைச்சர்களைச் சென்று பார்க்கச் சொல்வது அவையின் மதிப்புக்கு பொருத்தமானதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவேண்டும், நான் அந்தக் கருத்தில் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் விவரம் தெரிந்தவர்கள், விவரம் தேவைப்படுகின்றவர்கள் என் அறைக்கு வாருங்கள், உங்கள் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அறைக்கு வந்து அந்தத் தகவலை வரவழைந்து அதைத் தெரிந்துகொள்ளலாம். உங்களுக்கு விருப்பம் இருந்தால் செல்லுங்கள் என்று சொன் னேனே தவிர, உங்களுக்கு டைரக்ஷனாக சிபாரிசு செய்யப் படவில்லை. தயவு செய்து முறையாக அந்தப் பிரச்சினையைக் கொண்டு வாருங்கள். கேள்வி நேரத்தில் இது தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 மார்ச் 1]

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மன்னித்துக் கொள்ளுங்கள். குடிசை மாற்று வாரியத்திற்கு என்று விதி முறைகள் வகுத்து இருக்கிறோம். வீடுகள் கட்டியதை எப்படி ஒதுக்குவது என்பதற்கும் விதிமுறைகள் இருக்கின்றனவா? அவைகள் அமைச்சரிடத்தில் இருக்கும். எந்தச் சட்டத்திலும் அப்படிப்பட்ட விதிமுறைகள் இருப்பதாக எனக்கு நினைவு இல்லை. அந்தச் சட்டவிதிகளை இந்த அவைக்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ப. உ. ச. அவர்கள் பரிந்துரையின் மீது கொடுக்கப்பட்டிருப்பது 'நான்-எலிஜிபிலிட்டி', அதாவது கொடுப்பதற்குத் தகுதி இல்லாத ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது என்னு டைய ஸ்டேட்மெண்ட். வேண்டுமானால், தவறு எப்படி நடந்தது என்று உறுப்பினர் அவர்கள் கேட்டால் அதற்கு விளக்கம் தரத் தயார். எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி சுற்றுலா மாளிகையில் இருக்கக்கூடிய துப்புரவாளருக்கு அவர் பரிந்துரை செய்திருக்கிறார், அந்தப் பரிந்துரையின் மீது வீடு கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே அளிக்கப் பட்ட பதில் ப. உ. ச. பற்றியது. அதற்கு ப. உ. ச. விளக்கம் கேட்டார். நான் தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புவது, பதில் அளிக்கிற அமைச்சர்கள் அல்லது கேள்வி கேட்கிற உறுப்பினர்கள், ஒருவர் மீது குற்றஞ்சாட்டுவதாகப் பதில் அளிப்பதையோ அல்லது கேள்வி கேட்பதையோ தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடியவரை அப்படிப் பதில் சொல்லாமல் இருப்பது நல்லது, அப்படி ஏதாவது இருந்தால் அமைச்சரவர்கள் முன் எச்சரிக்கையாக முதலில் என்னிடம் சொல்லியிருக்க வேண்டும். கேள்விக்கு அப்பாற்பட்ட விவ காரங்களைப் பற்றிக் கூறுவது தவறு என்பது என்னுடைய கருத்து. கேள்விக்கேற்ற பதிலை அமைச்சர்கள் சொல்ல வேண்டு மென்றும், இப்படிப்பட்ட பிரச்சனை எழ இடமளிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

## மேல்விஷாரம், கீழ்விஷாரம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல்.

*335வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், மேல்விஷாரம், கீழ்விஷாரம் ஆகிய ஊர்களுக்கு பாலாற்றில் இருந்து குடிநீர் சப்ளை செய்ய அரசாங்கத்திடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) இல்லே.

(ஆ) எழ இடமில்லே.

திரு. துரை முருகன் : தலேவரவர்களே, அமைச்சரவர்கள் இல்லே என்று பதில் சொன்ஞர்கள். ஏற்கனவே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதர் ? ஆம் எனில் எந்த ஆண்டில் நிறை வேற்றப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலேவரவர்களே, கேள்வி வடாற்காடு மாவட்டம், மேல் விஷாரம், கீழ் விஷாரம் ஆகிய ஊர்களுக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் சப்ளே செய்யத் திட்டம் உள்ளதா என்பது. அதற்கு இல்லே என்று சொன்னேன்.

திரு, துரை முருகன் : திட்டம் இப்போது இல்லேயா அல்லது ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டதா? திட்டம் இல்லே என்ருல் இல்லே என்று சொல்ல வேண்டும் ; நிறைவேற்றப்பட்டு விட்டதாஞல் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று சொல்ல வேண்டும். இப்போது இருக்கிறதா இல்லேயா என்பதை மட்டும் பார்க்கக் கூடாது. அது ஏற்கனவே போட்ட ஸ்கீம். அந்த ஸ்கீம் நிறைவேற்றப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; நியாயமாக இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்றுதான் சொல்ல வேண்டும். இருந்தாலும் 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஒரு திட்டம் அமுலில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : இல்லே என்று அமைச்ச ரவர்கள் சொன்ன பிறகு தனிக் கேள்விதான் போட வேண்டும்.

திரு. துரை முருகன்: மன்னிக்க வேண்டும். ஒரு ஊருக்குக் குடி தண்ணீர் சப்ளே செய்யும் திட்டம் இது.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : இல்லே என்று சொன்ன பிறகு மாற்றுக் கேள்விதான் போட வேண்டும். நீங்கள் உட் காருங்கள்.

திரு. துரை முருகன் : நான் கேட்கவில்லே. ஆனுல், இது நியாயமா ? இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று சொல்வதற்கு அமைச்சர் ஏன் வெட்கப்படுகிருர் ? முந்தைய ஆட்சியிலே நிறைவேறி விட்டதென்று சொல்வதற்கு வெட்கமா ?

The Hon. Thiru S. RAGHAVANANDAM; Mr. Speaker, Sir, I am only supposed to give answers to the question raised by Hon. Members.



## அரசினர் நலப்பள்ளி, கொண்டல்.

* 336. வினு.—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் —

கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டத்தில், கொண்டல் அர சினர் நலப்பள்ளியை உயர் தொடக்கப் பள்ளியாக மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கொண்டலில் உள்ள அரசினர் நலப் பள்ளி 1974–1975 முதல் உயர் தொடக்கப் பள்ளியாக இயங்கி வருகிறது.

திரு. கே. சுப்பிரவேலு : தலேவரவர்களே, சீர்காழி வட்டத் தில் கொண்டலில் ஆரம்பப் பள்ளியாக இருந்த பள்ளி உயர்நிலேப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு, இடையிலே இரண்டாண்டு அதற்கு அனுமதி கிடைக்காமல் ஆகிவிட்டது. இப்போது மீண்டும் ஆரம்பிப்பதாகச் சொல்கிருர்கள். அதிலே எத்தனே ஆசிரியர்கள், எந்த வகுப்புவரை நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலேவரவர் களே, ஏற்கெனவே அங்கிருந்த மாவட்ட நல அதிகாரி அவர்கள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெருமலேயே அந்தப் பணியைச் செய்து விட்டார்கள். ஆகவேதான் காலதாமதம் ஏற்பட்டது. இப் போது 7-வது வகுப்புவரை தொடங்க அரசாங்கம் பரிசீலனே செய்து கொண்டிருக்கிறது . கல்வித் துறையைக் கலந்தாலோ சித்து, இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேங்கைவாடி அரிசன குடியிருப்பு

* 337 வினு.—திரு. வ. துலுக்காணம் :— மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில், வேங்கைவாடி அரிசன காலனியில் அரிசனநல வீடு கட்டும் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டி பாதி கட்டடங்களாக உள்ளது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

[1978 மார்ச் 1

(ஆ) ஆம் என்றால், அந்தக் கட்டடங்களையும் இதே போல் பாதியிலேயே நிற்கும் பல காலனிகளில் உள்ள கட்டடங்களையும் உடன் கட்டித்தர எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) வேங்கைவாடி அரிசன காலனியில் கட்டுவதற்கு எடுக்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட வீடுகள் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. வ. துலுக்காணம் : அங்கே இன்னும் வீடுகள் கட்டப்படாமல் இருக்கிற நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைச் சரியாக விசாரணை செய்து மேற்கொண்டு கட்டுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 1974 முதல் 1976-ம் ஆண்டு வரை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று அப்போது இருந்த அரசு உத்தரவிட்டது. மொத்தம் அந்த ஊரில் 80 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது. அரசாங்க உத்தரவின் காரணமாக 20 வீடுகள்தான் கட்ட முடியும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. எஞ்சி இருக்கிற வீடுகள் கட்டுவது பற்றி இனிமேல் பரிசீலனை செய்ய வேண்டியதாகும்.

திரு. வ. துலுக்காணம்: ஃபவுன்டேஷன் போடப்பட்டு பாதியிலேயே நிற்கின்றது. அரசாங்க உத்தரவு இல்லாமல் ஃபவுன்டேஷன் போட மாட்டார்கள். ஆகவே, ஃபவுண்டேஷன் போட்டு கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் அந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : என்னிடம் இருக்கிற விவரப்படி ஃபவுன்டேஷன் போடப்பட்டவீடுகள் எதுவும் கட்டப்படாமல் இல்லை. ஃபவுன்டேஷன் போட்ட வீடுகள் எல்லாம் கட்டப்பட்டுள்ளன. கட்டப்பட வேண்டிய மனைகள்தான் அப்படியே இருக்கின்றன என்பதுதான் இங்கே இருக்கிற விவரம். படிப்படியாக இவை கட்டப்படும்.

பொருள் போக்குவரத்து கழக ஊழியர்கள்



1978 மார்ச் 1]

* 338 வினா.—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் திரு. சோ. அழகர்சாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முன்னாள் ராணுவ வீரர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பொருள் போக்குவரத்துக் கழகத்தில் இப்போழுது எத்தனை முன்னாள் ராணுவத்தினர் பணியாற்றுகிறார்கள் ?

(ஆ) முன்னாள் ராணுவ வீரர்கள் அல்லாதார் எத்தனை பேர் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மற்றும் (ஆ): 1977ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதிய நிலவரப்படி பொருள் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் 247 பேரில், 203 பேர் முன்னாள் இராணுவத்தினர்; 44 பேர் முன்னாள் இராணுவத்தினர் அல்லாதவர்கள். இக் கழகம் முன்னாள் இராணுவத்தினருக்காக மட்டுமே அமைக்கப்பட்டது என்று இதன் அமைப்பு விதிமுறைகளிலோ அல்லது அரசாங்க உத்தரவிலோ கூறப்படவில்லை

திரு. சோ. அழகர்சாமி : முன்னாள் ராணுவத்தினருக்காக மட்டும் இல்லை என்று சொன்னாலும், அதில் வேலைவாய்ப்பு அவர்களுக்கு அளிக்கும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டாலும் இந்தப்போக்குவரத்துக் கழகத்தில் அவர்கள் பலபேர் மனுப் போட்டுஅவர்களுக்கு அங்கே வேலை இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்கு ஒரு முன்னுரிமை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இனி மேலாவது அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: முன்னாள் ராணுவத்தினர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற நிலை இல்லை. மாறாக 13-7-1977 அன்று அந்தப் பொருள் போக்குவரத்துக் கழகத்துக்கு முன்னாள் ராணுவத்தினர் மனுப்போட்டார்கள். அதன்படி நேர்முகத் தேர்விற்கு 50 பேர்கள் அழைக்கப்பட்டும் இரண்டு பேர்கள்தான் வந்தார்கள். அந்த இரண்டு பேர்களும் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அதுபோல 16-8-1977 அன்று 50 முன்னாள் ராணுவத்தினர் அழைக்கப்பட்டு அவர்களிலும் இரண்டு பேர்கள்தான் இறுதியாக வந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் துறைமுகம்.

* 339 வினா.—திரு. எஸ். கணேசன், திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினம் துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்குமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : அண்மையிலே அடிக்கப்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் துறைமுகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிற துறைமுகத்தை நவீனப்படுத்துகிற முறையில் அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளதா? இல்லையென்றால் இந்த அரசு மத்திய அரசுக்கு அவ்வாறு செய்யவேண்டுமென்று குறிப்பு அனுப்ப ஏதேனும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அண்மையில் ஏற்பட்ட புயலின் காரணமாக ஏற்பட்ட சேதாரங்களைச் செப்பனிடுவதற்கு 19 லட்சம் ரூபாய் செலவிலே திட்டம் வகுக்கப்பட்டு செயல் முறையில் இருந்து வருகிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : நாகப்பட்டினத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யுமா. கப்பல்கள் வந்தால் 2 மைல் 3 மைல் படகிலே பயணிகள் செல்லவேண்டியிருக்கிறது. கப்பல்களை அருகாமையில் நிறுத்துகிற அளவுக்கு நாகப்பட்டினம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நாகப்பட்டினம் துறைமுகத்தைப் பொறுத்தவரைக்கும் பயணப் போக்குவரத்தும் சரக்குக் கப்பல் போக்குவரத்தும் 1966 ஆம் ஆண்டுக்குப் பிறகு படிப்படியாகப் குறைந்து கொண்டு வந்துவிட்டது. தமிழக அரசு மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு சென்னை துறைமுகத்திலே ஏற்றுமதி இறக்குமதி செய்கின்ற உணவு தானியங்கள், ரசாயனப் பொருள்கள் முதலியவற்றை கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களிலே மாற்றுவதற்குக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அது இன்னும் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(முற்பகல் 9-50.)

திரு. ரா. உமாநாத் : இடைக்காலத்தில் பாஸஞ்சர் டிராபிக், கப்பல்கள் அங்கு அடிக்கடி வந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாதிருக்கக்கூடிய இந்த நேரத்தில்—மத்திய சர்க்கார் முடிவு எடுக்கும் வரையில் இடைக்காலத்தில் பாசஞ்சர் டிராபிக் கப்பல்கள் வருவதற்கும் மற்ற நிவாரணங்கள் அளிக்கவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்ற மாதம் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் முயற்சியால் நடத்தப்பட்ட கூட்டத்திற்குப் பிறகு மத்திய கப்பல் துறை அமைச்சகத்தோடு தொடர்பு கொண்டு சிதம்பரம் பயணிகள் கப்பல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் வந்து தங்குகிற ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்து வருகிறது.

வெங்காயம் ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் சென்னை துறைமுகத்திலிருந்து நாகை துறைமுகம் வழி ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரையும் செய்யப்பட்டு வருகிறது. அது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கிறேன். அதற்காக நாகையில் ஒரு கோடவுன் கட்டப்பட இருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதங்களினால் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்த பிறகு, அது மேற்கொள்ளப்படும்.

கோயமுத்தூர்—சென்னை பேருந்து வழித்தடம்.

*340—வினா.

திரு. ப.க.சி. முத்துசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோயமுத்தூர்—சென்னை (வழி—மேட்டூர், தருமபுரி, திருப்பத்தூர்) ஓடிக் கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்து பேருந்து (ரூட் நெ. 519) தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணம் என்ன?

(ஆ) மீண்டும் பழையபடி இந்த வழியில் பேருந்து விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) கோயமுத்தூர்—சென்னை (வழி மேட்டூர், தர்மபுரி திருப்பத்தூர்) ஓடிக்கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துப் பேருந்து (தடம் 519) 1-1-1977 முதல் 30-4-1977 வரை தற்காலிக அனுமதியுடன் (Temporary Permit) ஓடி வந்தது. நிரந்தரமாக ஓட்ட மோட்டார் வாகன சட்டப்படி வரைவுத் திட்டம் (Draft Scheme) பிரசுரிக்கப்பட்ட பிறகு தான் உரிமம் பெறலாம்.

(ஆ) தேவையான உரிமம் பெற்று இத் தடத்தில் மறுபடியும் 7-1-1978 முதல் இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

திரு. கெ. சொக்கலிங்கம் : சென்னையிலிருந்து நாவலூர் வரையில் இப்போது 19-பி செல்கிறது. இதற்கு முன்பு சென்னையிலிருந்து அதாவது சைதாப்பேட்டையில் இருந்து கேளம்பாக்கம் வரையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் அந்தப் பேருந்து விடப்பட்டு சென்று கொண்

[1978 மார்ச் 1

டிருந்தது. இப்போது அது விடுபட்டிருக்கிறது. ஆகவே, அதை மறுபடியும் சைதாப்பேட்டையில் இருந்து கேளம்பாக்கத்திற்கு பேருந்து விடுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்** : மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கும்போது தற்காலிகமாக நான்கு மாதம் அனுமதி பெற்று ஓடிவந்தன என்றும் மீண்டும் இப்போது ஓடுகின்றன என்றும்சொன்னார்கள். பொதுவாக அரசுதுணையோடு இயங்குகின்ற கார்ப்பரேஷன்களிலும் இதேமுறைதான் கையாளப்படுகிறதா? நான்கு மாதங்கள் ஓட்டுகிறோம். பின்னர் வசூல் இல்லை என்றால் நிறுத்திவிடுகிறோம் என்று இருக்கக்கூடிய அந்த முறையைக் கையாளாமல் தனிப்பட்டவர்களுக்கு அந்த ரூட்டைக் கொடுக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : கண்டிப்பாக அரசாங்கம் அவ்வாறு முன்வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளுக்குத் தற்காலிகமாக நான்கு மாதங்களுக்கு உரிமம் வழங்கலாம் மோட்டார் வாகனச் சட்ட விதிப்படி, டிரூப்ட் ஸ்கீம், வரைவுத் திட்டம் பிரசுரிக்கப்பட்ட பிறகு நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் கழகங்கள் மூலம் அவ்விடங்களில் விடப்படுகின்றன. இந்தக் குறிப்பிட்ட தடத்தில் மீண்டும் பேருந்துகள் விடப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா** : பல்வேறு வழித்தடங்களில் பேருந்துகள் சென்று கொண்டிருக்கும்போது திடீர் திடீர் என்று நிறுத்தப்படுகிறது வசூல் இல்லை என்ற காரணம் சொல்லப்பட்டு நிறுத்தப்படுகிறது. சில மாதங்கள் வசூல் இல்லாத மாதங்களாக இருக்கின்றன, சில மாதங்கள் அதிகப்படியான வசூல் உள்ள மாதங்களாக இருக்கின்றன. உதாரணமாக, நாகப்பட்டினம்—சேலம் சென்று கொண்டிருந்த பஸ் நல்ல வசூலில் ஓடிக் கொண்டிருந்தது. சில மாதங்களில், மார்கழி போன்ற மாதங்களில் வசூல் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி வசூல் அடிப்படையில் கணக்கிடாமல் மக்களின் தேவைகள் அடிப்படையில் இந்தப் பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற குறைபாடுகள் முன்னர் இருந்தன. இந்த அரசு அதனைப் படிப்படியாக நிவர்த்தி செய்துவருகிறது. உறுப்பினர் அவர்கள் கூறிய வழித் தடத்தில் மீண்டும் பேருந்து விடுவதுபற்றிய செயற்குறிப்பு இப்போது இருந்துவருகிறது.



[1978 மார்ச் 1]

**திரு. இரா. தாமரைக்கனி**: ராஜபாளையம்-நாகாலாபுரத்துக்குக் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பேருந்தை நல்ல முறையில் ஓட்டிக்கொண்டிருந்தது. அது இப்போது தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் முன்பிருந்ததுபோல் ஏற்படுத்தித்தர அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இந்தக் கருத்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மோட்டார் வாகனச் சட்டத்தின்படி தனியார்களுக்கு இரண்டு எண்ணிக்கை அதிகம் பெற்ற காரணத்தால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் மீது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எஸ்.டி.எ. அப்பலட் ட்ரிபுனல் மன்றத்தில் வழக்கு தொடர்ந்து, விசாரணை வழக்குமன்றத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ஓடும் சில வழித்தடங்களில் சில நாட்களில் கலக்ஷன் குறைவு என்கின்ற காரணத்தால் அதாவது செவ்வாய்க் கிழமை, வெள்ளிக்கிழமை போன்ற நாட்களில் கலெக்ஷன்குறைவு என்கின்ற காரணத்திற்காகப் பஸ்களை நிறுத்திவிடுகிறார்கள். அப்படியில்லாமல் அனுமதிக்கப்பட்ட எல்லா வழித்தடங்களிலும் ஒழுங்காக பஸ்களை விடவேண்டும் என்று அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : பேரவைத் தலைவர் அவர்களே, வசூல் இல்லை என்ற காரணத்திற்காக விடப்படுகின்ற பேருந்துகள் நிறுத்தப்படுவது கண்டிக்கத்தக்கது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட வழித்தடம் எது என்பதைத் தெரிவிப்பார்களேயானால் கண்டிப்பான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, வசூல் இல்லை என்பதற்காகப் பஸ்கள் நிறுத்தப்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னையிலிருந்து ஜமீன் மன்றத்தூருக்கும், சென்னையிலிருந்து காரியப்பாக்கத்திற்கும், சென்னையிலிருந்து வேடந்தாங்கலுக்கும் பஸ்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஓடிக்கொண்டிருந்தன அவைகள்—இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி பல கடிதங்களும் எழுதியிருக்கிறேன். உங்களிடமும் இதைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களில், தற்காலிகமாக பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்குமானால், அதைப் பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வசூல் குறைவான இடங்களில் மினி பஸ் விடுவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கிராமப் புறங்களிலே, சிறிய சாலைகளை எல்லாம் இணைப்புச் சாலைகளாக மாற்றிய பின்னல் அந்த இடங்களில் இப்படிப்பட்ட மினி பஸ்களை விடவேண்டும் என்று அரசு முடிவு செய்து, அதன் அடிப்படையில் முன் உதாரணமாக மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டைப் பகுதியில் மினி பஸ்கள் விடப்பட்டன. இப்போது வட ஆற்காடு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட மினி பஸ்கள் விடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்படிப் படிப்படியாகக் கிராமப் புறங்களில் மினி பஸ்களை அரசாங்கம் விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. முனுசாமி : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாற்றிலிருந்து வந்தவாசி வழியாகச் செல்லுகின்ற டவுன் பஸ்ஸில்—பஸ் ஓடிக் கொண்டிருந்த நேரத்தை மாற்றிய காரணத்தால்—500 ரூபாய், 600 ரூபாய் என்று கலக்ஷன் ஆகிக்கொண்டிருந்தது, இந்த டைம் மாற்றத்தின் காரணமாக—நாள் ஒன்றுக்கு 150 ரூபாய் அளவுக்குத்தான் வசூல் ஆகிறது. ஆகவே, இதை மாற்றி, ஆரம்பத்தில் இருந்த நேரமே சரியாக இருக்கும்படியான அளவில் இதை மாற்றி அமைக்க வேண்டும் என்று அந்தத் தொகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தை மாற்றி அமைக்க அமைச்சர் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது பற்றிய குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. க. அரங்கநாதன் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஏராளமான வழித்தடங்களிலுள்ள பஸ்கள் தேசியமயமாக்கப் படாமல் இருந்து வருகிறது. இதன் காரணமாக இதிலுள்ள பஸ் அதிபர்கள், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலுள்ள ஊழியர்களைப் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு லாபம் வரமுடியாத விதத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட எல்லா தனியார் பஸ்களும் எப்போது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தோடு இணைக்கப்பட விருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பஸ்கள் ஓடுகின்ற பல வழித்தடங்களிலும் தனியார் பஸ்களும் ஓடுகின்றன. அதற்கான அனுமதிக்கப்பட்ட காலநேரத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நேஷனலைஸ் செய்கின்ற முறையில் படிப்படியாக நடவடிக்கை எடுத்து தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தோடு சேர்ந்து நாட்டுடமையாக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

அ. இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை எடுப்பது குறித்து.

[முற்பகல் 10-00.]

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், பிரம் தி லேனர்ட் அவுஸ் புளோர் லீடர், இந்த மேஜையின்மீது நீதிபதி இஸ்மாயில் அவர்களின் விசாரணைக் கமிஷன் ரிபோர்ட் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டிலே சில குற்றச்சாட்டுகள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மிசாக் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? அப்படி நடவடிக்கை எடுக்கும் போது இந்த அதிகாரிகள் சஸ்பென்ட் செய்யப்படுவார்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தலைவர்கள் மத்தியிலே ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஏற்கனவே இதைப் பற்றி அறையிலே பேசி யிருக்கிறார்கள். எனவே, குறிப்பிட்ட சிலவற்றை வைத்துக்கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்பது எந்த அடிப்படையிலே தகவல் கோருவதாக ஆகும்? என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. ஏ. ரகுமான் கான் : சர்க்கார் என்ன நடவடிக்கை . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். துரை முத்துசாமி.

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 1

குறிப்பது போல் இல்லை என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். எனவே, நகைச்சுவை உணர்வோடு போடப்பட்டது என்று ஆசிரியர் கூறியுள்ளதால், இந்த அவை தனது கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு இதில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதிரியான கார்ட்டூன்கள் போடும்போது, அவையையோ அல்லது அவை உறுப்பினர்களையோ பற்றி எந்தவிதமான தவறான கருத்திற்கும் வாசகர்களைக் கொண்டு போவதற்கு வழி இல்லாமல் இருப்பது நல்லது என்ற அறிவுரையையும் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உரிமைப் பிரச்னை.

இந்தியன் எக்ஸ்பிரஸ் ' நாளிதழ்மீது,—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' நாளிதழ் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையைக் கொண்டுவர அனுமதி கேட்டுள்ளார். அவையில் அப் பிரச்சனையைக் கொண்டுவர அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் வருத்தத்தோடுதான் நான் மீண்டும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் மீது இப்படிப்பட்ட ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனக்கு இந்தப் பத்திரிகையைப் பழிவாங்கும் எண்ணம் சுத்தமாக இல்லை என்பதை முதலிலே கிளியர் செய்துவிட்டு, அதே நேரத்திலே அங்கத்தினர்களுடைய அந்தஸ்து பற்றிய பிரச்னை இந்த அவையிலே வருகின்ற போது, அதிலே நான் பெர்மாக டிபெண்டு பண்ணுவேன். இதிலே என்ன கான்சிகுவென்சு வந்தாலும் நான் கவலைப்படவில்லை.

அன்றைக்கு ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' மீது நான் எழுப்பிய உரிமைப் பிரச்னை பற்றி தாங்கள் ஏற்கனவே ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். அதிலே 3 அம்சங்கள் தெளிவாக இருக்கின்றன.

இன்று, அதனுடைய எடிட்டர் கொடுத்திருக்கக்கூடிய கடிதத்தில் வருத்தம் தெரிவித்திருக்கிறார். இரண்டாவது, இனிமேல் ஜாக்கிரதையாக இருப்பேன், இந்தமாதிரி விஷயத்தில் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் செய்தி ஜனங்கள் பூராவுக்கும் போயிருப்பதால் இந்தச் செய்தியும் மாநிலம் பூராவும் போக வேண்டுமென்றால் அதை அப்படியே பிரசுரித்திருக்க வேண்டும்



1978 மார்ச் 1] [திரு. ரா. உமாநாத்]

ஆனால், அந்த இரண்டு ஐட்டங்களையும் பிளாக் அவுட் பண்ணியிருக்கிறார்கள். உங்கள் முடிவை அப்படியே தந்திருக்க வேண்டும். அதையும் பிளாக் அவுட் பண்ணியிருக்கிறார்கள்.

இன்றைக்குப் பேப்பரில்—

"The speaker, Mr. Munu Athi accepted the explenation of the Editor of the Newspaper and ruled that no further action was necessary,

என்ன எக்ஸ்பிளனேஷன் ?

"We wish to submit that the main thrust of the report is to highlight the difficulties experienced by the employees in getting their C.D. amount refunded. The heading of the report as well as the opening paragraphs bear out own intentions.

It was not our intention to malign any member of the Legislativn Assembly or impute any motives to the members. We regret a portice of the report has given rise to an issue of privilage of the House and its members... ..

அந்த ரிக்ரட்டும் போடவில்லை ; இனிமேல் செய்ய மாட்டோம் என்பதையும் போடவில்லை. உங்கள் வார்னிங்கையும் போடவில்லை. டெலிபரேட்டாகச் செய்திருக்கிறார்கள். இரண்டையும் பிரசுரிக்க இடம் இல்லையா என்று பார்த்தால் மறு பக்கத்தில்—

Why case against express was droppeo,

சுப்ரீம் கோர்ட் டெசிஷன் ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். உங்கள் டெசிஷனைப் போட, ரூலிங்கைப் போட இடம் இல்லாமல் போய் விட்டதா ? நான் அன்று கமிட்டிக்கு விட வேண்டுமென்று சொன்னேன். தாங்கள் அவர்களுடைய அபாலஜியை ஏற்றுக் கொண்டீர்கள். அதைக் கூட—

The letter from the editor read out by the speaker stated that the main thrust of the report was to highlight the difficulties in getting the C. D. amount, etc., etc.......

இன்று, ஒன்று கமிட்டிக்கு விட வேண்டும், அதை உங்கள் முடிவுக்கு விடுகிறேன். அல்லது, நாடாளுமன்றத்தில் ஒரு முறை இருக்கிறது. அருமை நண்பர் மனோகரன் அவர்களுக்கு, நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இப்படிப்பட்ட விஷயத்தை கமிட்டிக்கு விடுவதில் இருந்து குறைந்த பனிஷ்மென்ட் கொடுப்பது என்றால் என்ன செய்வார்கள் என்றால் இரண்டு தரம் அல்லது மூன்று தரம் அந்தப் பத்திரிகையில் சீக்வன்சோடு பிராமினென்டாக புல் டெக்ஸ்ட் Cons cutively பப்ளிஷ் பண்ண வேண்டுமென்று செய்வது உண்டு. இந்த இரண்டில் எந்த முடிவு எடுப்பது என்பதைத் தங்களிடம் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்த தீர்ப்பைப் பின்னால் அளிக்கிறேன்.

## 5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (அ) காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் 1978-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-ம் நாளன்று ஒரு பெண்ணிடம் காவல் துறையினர் தகாத முறையில் நடந்து கொண்டது பற்றியும், இது குறித்த பொதுக்கூட்டத்தில் கண்டனம் தெரிவித்துப் பேசியபோது ஜனதா கட்சித் தலைவர் தாக்கப்பட்டது பற்றியும், அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. பொ. விஜயராகவன் அவர்களும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கப்படக் கூடியது என்பது குறித்து சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, காரைக்குடி சவுத் போலீஸ் ஸ்டேஷனில் 1978-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-ம் நாள் இரவு பாலம்மாள் என்ற ஒரு பெண்ணிடம் சில போலீஸ் காரர்கள் தகாத முறையில் நடந்து கொண்டு அது அந்தப் பிரதேசத்தில் ஒரு பெரிய கிளர்ச்சியை எழுப்பியுள்ளது. இந்தப் போலீஸ் நிலையத்திலுள்ள காவலர்களே இந்த நிலையில் நடந்து கொண்டார்களே என்பதை அறிந்த பொதுமக்கள், குறிப்பாக ஜனதாக் கட்சியைச் சேர்ந்த மாவட்டத் தலைவர் அவர்களும் மற்றும் சில தொண்டர்களும் சேர்ந்து இது சம்பந்தமாக ஒரு துண்டு பிரசுரத்தை வெளியிட்டார்கள். போலீஸ் நிலையத்தில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெற்றது என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் 1978-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25-ம் நாளன்று இந்த நிகழ்ச்சிகளைக் கண்டிக்க ஒருகண்டனக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள், காரைக்குடியில். இவற்றைப் பற்றிக் கேள்விப்பட்ட சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரு. பால்ராஜ் என்பவர் இம்மாதிரி ஏதாவது நடைபெற்றால், அந்தக் கூட்டத்தில் போலீசைத் தாக்கிப் பேசுகிறவர்களைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்று அன்றையதினம் அவர் தலைமையில் ஒரு போலீஸ் பார்ட்டியோடு அங்கு சென்றார்கள். சென்றது மட்டுமல்லாமல் அங்கு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த இராமநாதபுரம் மாவட்ட ஜனதா கட்சித் தலைவர் பழ. கருப்



பையா அவர்களையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்களையும் இன்னும் மாணவர் ஜனதா கட்சித் தலைவர் விஜயராகவன் அவர்களையும் மற்றும் தொண்டர்களையும் பலமாகத் தாக்கியுள்ளார்கள்.

[முற்பகல் 10–10]

இந்தத் தாக்குதலுக்கு முன்னதாகவே பால்ராஜ் அவர்களுடைய தூண்டுதலின் பேரில், ஆணையின் பேரில் போலீசாரும் அவருமாக அங்கே அலங்காரத்திற்கும் தேவைக்குமாக வைக்கப்பட்டிருந்த அனைத்து ட்யூப் லைட்டுகளையும் அடித்து உடைத்தார்கள். இம்மாதிரி நிகழ்ச்சிகளை நடத்திவிட்டு பல ஜனதா கட்சித் தொண்டர்களை கைது செய்திருக்கிறார்கள்.

குறிப்பாக, அந்த கற்பழிக்கப்பட்ட பெண்மணியை லேடி டாக்டர் அந்த மருத்துவ மனையிலே பரிசோதனை செய்தார். அங்கே உள்ள அத்தனை ஜனதா கட்சித் தலைவர்களும் கண்டித்து இருக்கிறார்கள். இம்மாதிரி வன்முறையில் ஈடுபட்ட போலீசார் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக ஒரே ஒ போலீசார்தான் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார் என் நிச்சயமாக இது நியாயமாக இருக்காது. இதில் உட்பட் போலீசார் இருக்கிறார்கள். பேரவை வயின் பிற

அது மட்டுமல்ல, ஜனதா கட்சிக்காரர்களை அவர்க விவாதிக்க என்றே திட்டமிட்டு தாக்கியிருக்கிறார்கள். அதற்கு இசைவு இன்ஸ்பெக்டரும் சம்பந்தப்பட்டிருக்கிறார். ஆகவே, மீது எல்லாம் கிரிமினல் வழக்குகள் பதிவு செய்யப்பட வே அரசாங்கம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டு சம்பந்தமாக பல பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறு அவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று தெரிந்து வதுகூட முடியாமல் இருக்கிறது. அவர்களை வைத்துள்ள கேட்க களைக்கூட போலீசார் சொல்வதற்குத் தயங்குகிறார்கள். அளவிற்கு நிலைமை சென்றிருக்கிறது என்று சொன்னால், அந்த பிரதேசத்தில் ஒரு போலீஸ் ராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த அரசாங்கம் குறைந்தபட்சம் அந்த அதிகாரிகள்மீது கிரிமினல் வழக்குகள் தொடர வேண்டும், இல்லாவிட்டால் அரசாங்கம் இதற்கு ஒரு நீதி விசாரணை நடத்தவேண்டும். இது சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் இன்னும் பல இருக்கின்றன. ஆகவே அவற்றை யெல்லாம் முழுமையாக விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் 12—2—78 அன்று இரவு சங்கரன் என்ற காவலர் பாதுகாப்புப் பணியில் இருந்தார். அன்று இரவு 10-15 மணிக்கு மாத்தூர் கிராமம் மீனாட்சிசுந்தரம் என்பவரது மகள் பாலம்மாள் காவல் நிலையத்திற்கு வந்து, தன்னை அடையாளம் தெரியாத சிலர் பின்தொடருவதாகத் தெரிவித்து, தான் திருச்சிக்குச் செல்ல வேண்டுமெனவும், இரவு நேரமாதலாலும், பஸ் வசதி இல்லாததாலும் காவல் நிலையத்தில் தங்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார். இதுபற்றி காவல் நிலைய பொதுக் குறிப்பேட்டில் பதிவுசெய்துவிட்டு, மறுநாள் காலை பஸ்ஸில் திருச்சிக்கு அனுப்பிவைக்குமாறு காவலர் சங்கரனுக்கு காவல் நிலையத்தில் இருந்த உதவிக் காவல் ஆய்வாளர் உத்தரவிட்டார்.

காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள துணைக் கருவூல வராந்தாவில் தங்குவதற்கு பாலம்மாள் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் 13—2—78 அன்று காலை 9-30 மணிக்கு பாலம்மாள் சப்-இன்ஸ்பெக்டரின் முன்பு, முந்தைய இரவு 2-30 மணியளவில் தனது பெண்மைக்கு காவலர் சங்கரனால் களங்கம் ஏற்பட்டுவிட்டது என்று முறையிட்டார். கிராம முன்சீப் எழுத்து மூலம் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு ஒன்று காவலர் சங்கரன் மீது பிர.கோ. 354 செக்ஷன் கீழ் பதிவு செய்யப்பட்டது. குற்றம் போலீஸ்பட்ட காவலர் சங்கரன் தற்காலிக வேலை நீக்கம் செய்யப் கொண்டுகது செய்யப்பட்டார். கோர்ட்டில் அவர் ஜாமீனில் ஜனதாக் பட்டார். பாதிப்பிற்குள்ளான பாலம்மாள் அரசினர் றும் சில மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். இச் பிரசுரத்தைதவகோட்டை சப்-கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டு, நிகழ்ச்சிகவாக மாஜிஸ்ட்ரேட் என்ற முறையில் ஒரு விசாரணையை தார்கள். மேற்கொண்டுள்ளார். அவரது விசாரணை அறிக்கை ; பின்பு காவலர் சங்கரன் மீது தகுந்த நடவடிக்கை அப்படவிருக்கின்றது.

25-ம்

கூட்டந்த நிலையில் 25—2—78 அன்று காரைக்குடியில் நடைபெற்ற ஜனதாக் கட்சி பொதுக்கூட்டத்தில் பேசிய சில பேச்சாளர் ர் காவல்துறையினரையும் முதல் அமைச்சரையும் மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் விமரிசித்திருக்கின்றார்கள். திரு. பழ. கருப்பையா பேசும்போது கூட்டத்தினரிடையே சலசலப்பு ஏற்பட்டது. அதனைக் காவல் துறையினர் அமைதிப் படுத்தினர். திரு. வலம்புரி ஜான் பேசும்போது கூட்டத்தினரில் ஒரு பகுதியினர் கோபமடைந்து மேடையை நோக்கி கற்களை வீசியிருக்கின்றனர். கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டவுடன் பாதுகாப்புக்காக இருந்த காவலர்கள் இருவர் மேடைக்கு அருகில் கூட்டத்தினரை அமைதிப்படுத்த முயன்றனர், அக்காவலர்களை மேடையிலிருந்தவர்கள் சோடா பாட்டில்களால் தாக்கியிருக்கின்றனர். காவலர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.





நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே குறைந்த பலப்பிரயோகம் செய்து கூட்டத்தினரை போலீசார் கலைந்து போகச் செய்திருக்கின்றனர். கல்லெறிந்ததின் காரணமாக திரு. பழ. கருப்பையா மற்றும் சிலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அடிபட்ட காவலர் ஒருவர் கொடுத்த புகாரின்பேரில் திரு. பழ. கருப்பையா மற்றும் ஒன்பதுபேர் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திருவாளர்கள் அய்யாவு, சண்முகம் ஆகியோர் தங்களை பழ. கருப்பையா மற்றும் சிலர் தாக்கியதாகக் கொடுத்த புகாரின் பேரில் மேலும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் அறுவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். அன்று இரவு மாவட்ட கலெக்டரும், எஸ்.பி.யும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று நிலைமையை அமைதிப்படுத்தியுள்ளனர்.

இந்நிகழ்ச்சிகள் சம்பந்தமாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருக்கின்றன. புலன் விசாரணை முடிந்தவுடன் யார்மீது தவறு இருப்பினும் சட்ட ரீதியான மேல் நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, இச்சம்பவம் குறித்து விவாதிக்க அவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மேல் கேட்க முடியாது.

திரு. துரை முருகன் : அவர் பெரியவர், அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியவர் என்று இப்பொழுது சொல்லி, பிறகு தாங்கள் கேட்கப் பார்க்கிறீர்கள்.

திரு. ர. ஜெபமணி : ஒரு விளக்கம்.

[1978 மார்ச் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இதிலே பேச கூடாது. தயவு செய்து உட்காருங்கள்.

## 6. கவன ஈர்ப்பு.

### (அ) திருச்சி மாவட்டத்தில் கைத்தறி நூல்பாவு பசை போடும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திருவாளர்கள் ஆர். உமாநாத், ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள், திரு. உமாநாத் அவர்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கைத்தறிக்கு உயிர்நாடியான கைத்தறி நூல் பாவு பசை போடும் தொழிலாளர்கள், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் எல்லா நிவாரணங்களிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டிருப்பதால் 20-2-1978 முதல் திருச்சி மாவட்டம் முழுவதும் வேலை நிறுத்தம் துவக்கியிருப்பது பற்றியும், அதன் விளைவாக அம்மாவட்டத்தில் கைத்தறித் தொழிலே ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது குறித்தும்"

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் நெசவாளர்கள் வசிக்கும் சில பகுதிகளில் குறிப்பாக மணல்மேடு, உறையூர் பகுதிகளில் நெசவாளர் பாவுகளுக்கும், வீடுகளுக்கும் வெள்ளம் புயல் காரணமாக குறிப்பிடத்தக்க அளவுக்கு சேதம் ஏற்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கு, தங்களின் பணியை மீண்டும் தொடங்கும் வரை வாழ்க்கை செலவிற்கு அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களே முன்பணம் கொடுத்து உதவின. சேதமடைந்த வீடுகளை புதுப்பிப்பதற்கு தலா ரூபாய் 500ம் புதிய பாவுகளை அமைப்பதற்கு தலா ரூபாய் 125ம் நெசவாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்கப்பட்டது.

கைத்தறி துணைத் தொழிலாளர்களான நூல் பாவு இடுவோர், பசை போடுபவர், நூல் சுற்றுபவர் ஆகிய தொழிலாளர்களும் தங்களுடைய கருவிகளுக்கு சேதமடைந்து விட்டதாகவும் நெசவாளர்களுக்கு அளித்த பண உதவியைப் போலவே தங்களுக்கும்





அளிக்க வேண்டும் என்று கோரினர். துணை தொழிலாளர்கள்
நெசவாளர்களைப் போன்று அதிகம் பாதிக்கப்படவில்லையாதலால்,
நெசவாளர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிகளை இவர்களுக்கும் அளிக்
கப்பட வேண்டுமென்று முதல் (Pr liminary Enquiry)
விசாரணையில் தெரிய வரவில்லை. இருந்தபோதிலும் இவர்களுக்கு
ஏற்பட்ட இழப்புக்கு ஈடுசெய்ய வங்கிகள் மூலம் பண உதவி
செய்ய கீழ்க்கண்டவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(1) தலா ரூபாய் 100 வீதம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
137 நூல் சுற்றும் தொழிலாளர்களுக்கு கடன் வழங்க அனுமதி
அளித்துள்ளது. இவர்களில் 20 பேர்களுக்கு பணம் வழங்கப்பட்டு
விட்டது. மீதமுள்ள 117 பேர்களுக்கும் இன்னும் சில நாட்
களில் பணம் வழங்கப்பட்டுவிடும்.

(2) இந்திய ஸ்டேட் வங்கி 5 பசைபோடும் தொழிலாளர்
களுக்கு தலா ரூபாய் 500 வீதம் கடனுதவி வழங்கயிருக்கிறது.
மேலும் 4 பசைபோடும் தொழிலாளர்களுக்கு இதேபோல்
கடனுதவி விரைவில் அளிக்கப்பட இருக்கின்றது.

(3) திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நெசவு துணை தொழி
லாளர்களுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனுதவி செய்ய
ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அண்மையில், ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக பாவு
நூல் இடுபவர்கள், பசைபோடுபவர்கள், நூல் சுற்றுபவர்கள் ஆகிய
துணை தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பைப் பற்றிய விரிவான
விசாரணை நடந்து இருக்கிறது. விசாரணையின் முடிவில் உதவி
தேவையென்று தெரியவந்தால் இந்தத் துணை தொழிலாளர்களுக்
கும் உதவி வழங்குவதைப்பற்றி பரிவுடன் கவனிக்கப்படும்.

(முற்பகல் 10-20)

திரு. ரா. உமாநாத்; அவைத் தலைவரவர்களே, அமைச்சர்
கொடுத்த பதிலுக்கு மிக்க நன்றி. விசாரணை நடைபெறுகிறது
என்கிற பொழுது அந்த விசாரணை சம்பந்தமாக பாதிக்கப்பட்ட
அந்தத் தொழிலாளர்களிடம் இதுவரைக்கும் வந்து கலந்து
கேட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, யாராவது ஒரு ஸ்பெஷல்
ஆபீசரை இங்கிருந்து அனுப்பி, அந்த விசாரணையின் பொழுது
உதவி செய்தால் போதும். அந்த உதவியை அளிப்பதற்கும்
பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்
துரைப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படுமா?

அடுத்தது, கடன்கள் பற்றி இங்கே சொன்னார்கள். இரண்டு
மாதமாக நானே பாடுபட்டேன். அந்த வங்கிகள், கலெக்டர்
சொன்னாலும் கேட்க மறுக்கிறார்கள். 137 பேர்களுக்குக் கடன்
வழங்க அனுமதி அளித்தும், 20 பேர்களுக்குத்தான் கடன்

[திரு. ரா. உமாநாத்] [1978 மார்ச் 1

கொடுத்திருக்கிறார்கள். ஃபோட்டோ வேண்டுமென்று கேட்கிறார்கள். பெண்களை அலைக்கழிக்கிறார்கள். ஆகவே, கடன் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கும்போது, அதிலே பிச்சைக்காரத்தனம் ஏன்?

ஆகவே, இரண்டு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ஒன்று, ஒரு ஸ்பெஷல் ஆபீசர் அனுப்பி, விசாரணைக்கு உதவி; தொழிலாளர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். இரண்டாவது, வங்கிகள் கொடுக்கும் கடனை எக்ஸ்பிடைட் செய்ய வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் தெரிவித்த கருத்தின்படி, அவர்கள் அந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள் என்பதைக் கேள்விபட்டவுடனே இங்கிருந்து ஒரு அதிகாரியை அனுப்ப வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டொரு நாளில் இங்கிருந்து ஒரு அதிகாரி சென்று, அங்கே இருக்கிற துணை அதிகாரியோடு ஆலோசனை செய்து, அங்கேயிருக்கிற துணைத் தொழிலாளர்கள் பிரச்னை பற்றி ஆலோசனை வழங்க இருக்கிறார்கள்.

வங்கிகளுக்கும், கடன் வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன், உறுப்பினர் அவர்கள், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனே, ''நீங்கள் கொடுப்பது என்று முடிவு செய்துவிட்ட பிறகு காலதாமதம் ஏற்படுத்துவது, வங்கிகளின்மேல் மக்களுக்குத் தவறான கருத்து வந்துவிடும்'' என்று தெரிவித்து இருக்கிறோம். விரைவிலே, அந்தப்பணம் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. பொ. விஜயராகவன் அவர்கள் அவையிலே இல்லை. ஆகவே, அவரது கவன ஈர்ப்புத் தீர்மானம் தள்ளப்பெறுகிறது.

<u>1978-79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொதுவாதம்—தொடர்ச்சி.</u>

<u>திரு சோ. அழகர்சாமி:</u> பேரவைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு முன்னால், முதலாவது அவை தொடங்குவதற்கு முன்னால், நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னால், கவர்னர் உரையை இந்தச் சபையிலே நிகழ்த்துவது வழக்கமாக இருந்தது. அதிலே, அரசாங்கத்தினுடைய கொள்கை, அரசாங்கம் கடைபிடிக்கவேண்டிய எதிர்கால நடைமுறைகளைப் பற்றியெல்லாம் சொல்வது வழக்கம். அதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை, இந்த நாட்டினுடைய நிலைமைகளையெல்லாம்



1978 மார்ச் 1] [திரு. சோ. அழகர்சாமி]

கூறும்போது, அதை அனுசரித்துப் பின்னால் செய்ய வேண்டிய
சில காரியங்களுக்காக நிதி ஒதுக்குவதிலே மாற்றங்களைச் செய்
வது வழக்கமாக இருந்தது. ஆகவே, கவர்னர் உரை நிகழ்த்த
ஏற்பாடு செய்யாமல் விட்டு விட்டதை முதலாவதாக நான் சுட்
டிக் காட்டாமல் இருக்க முடியாது. அந்தத் தவறு நடக்காமல்
இருந்திருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக நமது மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

புதிதாக இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது கொள்கை
சொல்லப்பட்டிருக்கிறதா என்று திரும்பத் திரும்பப் படித்துப்
பார்த்தேன்; ஒன்றுமே சொல்லப்படவில்லை. அதுமட்டுமல்ல.
கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே
சொல்லப்பட்டதன் தொடர்ச்சியாகவாவது ஏதாவது கூறப்
பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதன் சம்பந்தப்பட்ட
விவரங்கள் ஒன்றும் சொல்லப்படவில்லை.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அவர்கள் சொல்லும்போது புதிதாக 10 ஆயிரம் சிறு தொழில்கள் ஆரம்பித்து 50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தருவோம் என்று சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல; 30 ஆயிரம் நெசவாளர்களைக் கூட்டுறவு முறையில் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள்.

அடுத்தபடியாக விவசாயப் பொருள்கள் நியாயவிலையில் விற்பதற்கு வசதி செய்யப்படும் என்றும் அதற்காக தனியாக ஒரு இயக்குநர் அலுவலகம் அமைக்கத் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள்.

அடுத்தபடியாக 30 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு புதிதாக மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள்.

இதேமாதிரி வங்கிகளின் மூலம் கடன்பெற்று ஒரு லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள்.

இவை எல்லாம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்
றன என்று பார்த்தால், அப்படிப்பட்ட காரியங்கள் இதுவரை
யில் நடைபெறவில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஒரு
லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதாகச் சொன்னார்
கள். அதுவும் கிடைக்கவில்லை.

புதிதாக இந்த ஆண்டு அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள வேறுபாட்டை நீக்கி, கிராமங்கள் நகரங்களாக ஆகின்ற ஒரு லட்சியத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்று சொல்லி, அதற்கு வேண்டிய காரியங்களை எல்லாம் செய்திருக்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள்.

அப்படி என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், முக்கியமாக நான் சொல்ல விரும்புகிறேன், கிராமங்களை நகரப் பகுதிகள் மாதிரி உயர்த்த வேண்டாம். கிராமப்புறத்திலே இருக்கக் கூடிய மக்களுடைய கஷ்டங்களைப் போக்குகின்ற விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றுமே இல்லை.

இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம், காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அரசாங்கங்கள் எல்லாம், கிராமப் புறத்திலே இருக்கிற அடித்தளத்து மக்களை வாழ்விக்கின்ற வகையில் உருப்படியான காரியங்களைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட எந்த காரியங்களும் இது வரையிலே செய்யப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கிராமத்திலே இருக்கிற சாதாரண விவசாயி, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கிற சாதாரண விவசாயிகள், சிறு சிறு கைத்தொழில் செய்து வாழ்பவர்கள் முன்னேற்றம் அடையத்தக்க விதத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். அதுசெய்யப்படவில்லை.

இன்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தாலும் கூட நில வெளியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னாலே இருந்தவர்கள் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை சரிவர பதிவு செய்யாததன் காரணமாக இப்போது சிக்கல் இருக்கிறது. சாகுபடி செய்யக் கூடியவர்கள் யார் பதிவு செய்ய வேண்டும் என்று சட்டத்தின் அடிப்படையிலே சரியாக மக்கள் கமிட்டி மூலமாக 'அதிகாரிகள் சரியாக செய்யாததன் காரணமாக பல இடங்களில் சாகுபடி செய்பவர்கள் பதிவு செய்யவில்லை. அதன் காரணமாக அந்த நிலத்தைப் பரம்பரையாக சாகுபடி செய்து கொண்டிருந்தாலும் கூட, இன்று போலிசு உதவியோடு வெளியேற்றப்படுகிறார்கள்.

இன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி தாலூகாவில் பல இடங்களில் போலிசு உதவியோடு கோர்ட்டின் உத்தரவோடு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே சாகுபடி செய்கிறவன் உண்மையாக சாகுபடி செய்தாலும் அந்த நெல்லை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது.





அதேமாதிரி தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தெங்கனிக் கோட்டை, பொன்னைகரம், ஊத்தங்கரைப் பகுதிகளிலும், கிருஷ்ணகிரி அருகில் உள்ள காவேரிப் பட்டணத்திலும், அந்த சரகத்திலே உள்ள பல இடங்களில் போலிசு உதவியோடு சாகுபடி செய்த விவசாயிகள் அந்த நெல்லை எடுத்துச் செல்ல விடப்படவில்லை. நிலச் சுவான்தார்களின் போக்கு அவ்வாறு இருக்கிறது.

எனது வட்டாரத்தில் இன்று மின்சாரம் சம்பந்தப்பட்டவரையில் மினிமம் சார்ஜ் கட்ட முடியாமல் போனால் மின்சாரம் துண்டிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. மேலும் இன்று புதிதாக ஒரு மின்சார கெப்பாசிட்டர் வாங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. உங்களுடைய மினசாரம் துண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்றால் கட்டாயமாக ஒரு கப்பாசிட்டர் வாங்க வேண்டும் என்று உத்தரவு வந்திருக்கிறது. இது விவசாயிகள் மத்தியிலே பெரும் கொந்தளிப்பை உண்டாக்கியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

இன்றைக்கு கூட்டுறவு கடன்கள் வசூல் செய்வதில் ஏகப்பட்ட ஜப்திகள் இருக்கின்றன. ஏனெனில் தொடர்ந்து கிராமத்தில் உள்ள மக்கள் கஷ்டமான நிலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய விளைபொருள்களுக்கு காலாகாலத்தில் நியாயமான விலை கிடைக்கவில்லை. அதன் காரணமாக வாங்கிய கடனை திரும்பக் கொடுக்க முடியவில்லை.

வறட்சி, புயல் என்று அவர்கள் மேலும் மேலும் கடன் பெற வேண்டியும், பெற்ற கடனைத் திரும்பக் கொடுக்க முடியாத நிலையும் ஏற்பட்டு விட்டது. அவர்களிடமிருந்து கடனை வசூலிக்க கஷ்டம் இல்லாமல், சிரமம் இல்லாமல் வசூலிக்க, ஆராய்ச்சி செய்து பரிந்துரை செய்வதற்காக ஒரு கமிட்டி போட்டு இருக்கிறார்கள். அந்தக் கமிட்டி இப்போது அதைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அதனுடைய அறிக்கை இன்னும் வந்தபாடில்லை. அதற்குள்ளாக ஏகப்பட்ட ஜப்திகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

எங்கள் பகுதியில் இளங்கோவன், கணபதி என்றவர்கள் கடனைத் திருப்பித் தரவில்லை என்பதற்காக நேற்றைய முன் தினம் அவர்களது வீட்டில் ஜப்தி செய்து இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே கஷ்டப்பட்டு பணத்தைத் திருப்பிக். கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். நேற்றைக்கு முன் தினம் ஏலத்திற்கு அவர்களுடைய சொத்தைக் கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் பதறி அடித்துக்கொண்டு எனக்குத் தந்தி கொடுத்து இருக்கிறார்கள். இப்படி சாதாரண ஏழை எளிய விவசாயிகள் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள். தொந்தரவுக்கு ஆட்படுத்தப்படுகிறார்கள்.

இந்த நிலைமைகளை எல்லாம் போக்கினால்தான் கிராமம் முன்னேற்றம் அடையும். கிராமங்களை நகரங்களாக்கும் அளவிற்கு முன்னேற்றம் செய்ய வேண்டாம். இப்படிப்பட்ட தொந்தரவுகள் கிராம மக்களுக்கு இல்லாமல் செய்தால் அதுவே அவர்களுக்கு பெரிய நன்மையாக இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புறத்தில் இருக்கும் மக்கள் முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் எதுவும் ஒழுங்காக அமல் நடத்தப்படவில்லை. அவைகள் சரியான வகையில் அமல் நடத்தப்பட வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் வட்டாரத்தில், ரெட்டிபுரம் என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கே ஜமீன் ஒழிப்புச் சட்டம் வந்தபோதே, ஆளுக்கு இரண்டு எக்கர் நிலம் என்று சொல்லி பட்டா வழங்கப்பட்டது. ஆனால், அந்த இரண்டு ஏக்கர் நிலத்தை சர்வே செய்து கொடுக்கவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் சொல்லியாகிவிட்டது, சட்ட மன்றத்திலும் சொல்லியாகிவிட்டது. இருப்பினும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்படி அரசாங்க இயந்திரம் குறைந்த வேகத்தில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி கிராம மக்கள் நல்ல வகையில் முன்னேற்றம் அடைய இயற்றிய சட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டும். அரசாங்கம் தற்போது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்து இருக்கிறது. ஒரு குவிண்டால் ரூ. 95·90 என்று சொல்லியிருக்கிறது. ஆனால் வெளி மார்க்கெட்டில் அவர்களுக்கு ரூ. 60–65 கூட கிடைக்கவில்லை. பல இடங்களில் தண்ணீர் இருக்கிறது. இருந்தும் நெல்லுக்குத் தகுந்த விலை கிடைக்கவில்லை என்ற காரணத்தால், நெல் போடவேண்டாம் என்று பலர் கருதுகிறார்கள். கண்மாய்கள் நிறைந்து இருக்கின்றன. கிணறுகளில் தண்ணீர் இருக்கிறது. இருந்தாலும் நெல் போட்டால் போட்ட முதல் வராது என்ற பயத்தால் அவர்கள் போட மறுக்கிறார்கள். அரசாங்கம் மீடியம் வெரைட்டிக்குத்தான் விலை நிர்ணயம் செய்து இருக்கிறது. ரூ. 90.95 என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஐ. ஆர். 20 போன்ற ரகங்களுக்கு, நிர்ணயம் செய்யவில்லை. ஆகவே, நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தி செய்கிற அவ்வளவு நெல்லையும் அரசாங்கமே கொள்முதல் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்யாமல் விட்டால், இடைத்தரகர்கள் அந்த நெல்லை வாங்கி முடக்கிவிட்டு, பின்னர் அந்த நெல் விலையை அதிகம் வைத்து விற்றுவிடுகிறார்கள். ஆகவே, தற்போதுள்ள





நிலையில் அரசாங்கம் ரூ. 120ல் இருந்து ரூ. 90 வரையில் நெல் வாங்கலாம். அந்த அளவிற்கு வெரைட்டிக்குத் தகுந்த மாதிரி விலை நிர்ணயம் செய்யலாம். ஆகவே, இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சி மருந்து சம்பந்தப்பட்ட வரையில் 3/4 விலை என்று சொன்னார்கள். ஆனால் அந்த விலைக்கு யாருக்கும் பூச்சு மருந்து கிடைக்கவில்லை. 3/4 விலைக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. முழு விலைக்குக் கூட கிடைக்க வில்லை. 1¼ விலைக்குத்தான் கிடைக்கிறது. அதுவும் தனியாரிடத்தில் தான் கிடைக்கிறது. அரசாங்கம் விற்கும் மருந்து எப்படி தனியார் கடைகளுக்குச் செல்கிறது என்று தெரியவில்லை.

ஆகவே, பூச்சி மருந்து விற்பனையைப் பொருத்தவரையில் அரசாங்க டெப்போவில் மட்டும் தான் பூச்சு மருந்து விற்கப்படவேண்டும். தனியாரிடத்தில் பூச்சி மருந்து விற்பனை செய்யக் கூடாது என்று உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இன்று டயோடா, செவின் போன்ற மருந்துகள் 50 சதவீதம் விலைக்கு, விற்பனை செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால் அது கிடைப்பதில்லை. செவின் விலை 33·50 ரூபாய் என்று சொன்னால், அது ரூ. 38-க்குத்தான் கிடைக்கிறது. அதுவும் தனியாரிடத்தில் கிடைக்கிறது. ஆகவே, நியாயமான முறையில் பூச்சி மருந்து கிடைக்க சரியான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியாரிடத்தில் பூச்சி மருந்து விற்பது தடுக்கப்பட வேண்டும்.

கிராமத்தில் வறுமை போக்கப்பட வேண்டும். இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்பவர்கள் அகில இந்தியாவில் 50 சதவிகிதம் கிராமங்களில் இருக்கிறார்கள் என்றால், தமிழகத்தில் மட்டும் 59 சதவிகிதம் என்ற அளவிற்கு அது உயர்ந்து இருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், கிராமத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்.

கிராமத்தில் உள்ள மக்கள் உழைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்யும் விளை பொருள்களுக்கு நியாய விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை உண்டாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதே போன்று இன்று விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்று சொல்கிறபோது, போன தடவை நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வரக்கூடிய காலத்தில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வழி செய்யும் வகையில் ஒரு

இறந்தவர் குடும்பத்திற்கு 1,000 ரூபாய் வழங்க வேண்டும். அப்படிக் கொடுப்பதில் ஒன்றும் குறைவு ஏற்பட்டு விடாது. அரசாங்கத்தின் நிதிநிலை அந்த அளவுக்கு கஷ்டத்தில் இல்லை.

விபத்தில் இறந்தவர் யாராக இருந்தாலும் அந்தக் குடும்பத்திற்கு 1,000 ரூபாய் கொடுக்க வேண்டும். 1,000 ரூபாய் கொடுப்பதாக அறிவித்துவிட்டு பல கண்டிஷன்களையும் சொல்லியிருக்கிறீர்கள். அதன்படி பார்த்தால் ஒருவருக்கும் உதவித் தொகை கிடைக்காது. பிரந்தாவரம் என்ற இடத்தில் 46 பேர் இறந்தார்கள். ஒருவருக்குக் கூட இன்னும் உதவித் தொகை கிடைக்கவில்லை என்று தெரிகிறது. குடும்பத் தலைவன் சம்பாதிக்கும் திறன் படைத்தவன் இறந்தால்தான் உதவித் தொகை வழங்கப்படும் என்று ஒரு கண்டிஷனை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இந்த கண்டிஷன்படி பார்த்தால் மனைவி செத்தாலும் உதவித் தொகை கிடைக்காது; பிள்ளை செத்தாலும் உதவித் தொகை கிடைக்காது. கணவன் செத்தால்தான் உண்டு. இது ரொம்ப கொடூரமானது. யார் செத்தால் என்ன? செத்தவர் குடும்பத்திற்கு 1,000 ரூபாய் வழங்க வேண்டும். ஆனால் ஒரு வீட்டில் 4, 5 பேர் செத்தால் ஒருவருக்கு மட்டும் கொடுத்தால் போதும்; அத்தனை பேருக்கும் 1,000 ரூபாய் வீதம் கொடுக்க வேண்டியதில்லை.

இந்த பட்ஜெட்டைப் பார்த்தால் மத்திய சர்க்காரானாலும் சரி, மாநில சர்க்காரானாலும் சரி. இரண்டும் ஒரே கொள்கைதான். நேற்று நிதி நிலை அறிக்கையை பட்டேல் அங்கே சமர்ப்பித்திருக்கிறார். கனரகத் தொழில் 20 ஆண்டுகளுக்கு முன்னால், நேரு காலத்தில் தொடங்கியவை. அதனால் நிறைய அந்நியச் செலாவணி வந்து கொண்டிருக்கிறது. பெருகி வரும் அந்நியச் செலாவணியை வைத்து என்ன செய்வது என்று தெரியாமல் குழம்புகிறார் போலத் தெரிகிறது. அந்நிய செலாவணி பெருகி வருவதால் பல பொருட்களை இறக்குமதி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்.

கனரகத் தொழில்களை அந்தக் காலத்தில் ஆரம்பித்ததால் தான் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அதை மறந்துவிட்டு, சிறுதொழில் பக்கம் திரும்பியிருக்கிறார்கள். சிறுதொழில் வேண்டாம் என்று சொல்லவில்லை. நாங்களும் ஒரு காலத்தில் அதற்காக அடித்துக் கொண்டவர்கள்தான். அதற்காக அத்தனையும் குடிசைத் தொழிலாகப் போய்விடக் கூடாது.

அந்தக் காலத்திலும், மீன் வளர்க்க, கோழி வளர்க்க என்று கடன் தந்தார்கள். நாங்களும் வாங்கியிருக்கிறோம். ஆனால் என்ன நிலைமை ஏற்பட்டது? வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. போதுமான அளவுக்கு ஆதாயம் வரவில்லை, கட்டுப்படியாகவில்லை. பல இடங்களில் அத்தகைய தொழிலுக்கு





சப்சிடி ''லோன்'' என்று கொடுத்தார்கள். லோனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அந்த அளவுக்கு குடிசைத் தொழிலில் கஷ்டம் ஏற்பட்டது.

[முற்பகல் 10-40]

மீன் பண்ணை என்று ஆரம்பித்தால் குட்டை இருக்கும் மீன் இருக்காது. பிடித்துப் போட்டு விட்டதாகச் சொல்வார்கள். திட்டம் என்று சொன்னால் பிரயோஜனப்படுகிற திட்டங்களாகத் தீட்ட வேண்டும்.

அடுத்து நிலப்படை. பழைய சீரணி மாதிரி போகக் கூடாது. வேலை கொடுக்கச் சரியான திட்டங்கள் தீட்ட வேண்டும். முன்னால் சீரணி என்ற பெயரால் பணம்தான் காலியாகியது. மக்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டமாக அமைய வேண்டும். புயல் நிவாரணப் பணிகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டுக்குக் கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். அது சரியான முறையில் சீராகச் செய்யப்படவில்லை.

இன்றைக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். மோட்டார் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். டீசல் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதன் காரணமாக பஸ் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. அந்த வரி உயர்வின் காரணமாக சிறு பஸ் முதலாளிகள் பழைய பஸ்களை வைத்துக் கொண்டு ஓட்டுவோம் என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக கிராம ரூட்டுக்களை கட் பண்ணுவோம் நகர ரூட்டுக்கு மட்டும்தான் விடுவோம் என்று சொல்கிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்படாதவாறு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

டீசல் வரி உயர்வின் காரணமாக ஆயில் என்ஜின் தண்ணீர் இறைக்கக் கூடிய விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சினிமா வரிக்கு கம்பவுண்டிங் முறையைக் கொண்டு வந்தார்கள். அதனால் நகரத்தில் இருக்கக் கூடிய சினிமாக் கொட்டகை சொந்தக்காரர்கள் வேண்டுமானால் லாபம் அடையலாம். டவுனில் 5 ஆயிரம் ரூபாய், கட்ட வேண்டிய இடத்தில் 2 ஆயிரம் ரூபாய் கட்டினால் போதும். ஆனால் கிராமங்களில் 50 ரூபாய் வசூலாகக்கூடிய இடத்தில் 100 ரூபாய் கட்ட வேண்டுமென்றிருந்தால் கிராமங்களிலுள்ள சினிமாக் கொட்டகைகளை மூடிவிட வேண்டியிருக்கிறது.

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னாலேயே லோக்கல் சர்சார்ஜை ஸ்பெஷல் ஆபீசர் போட்டிருக்கிறார். அவர் எப்படிப் போடலாம்? பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் வந்த பிறகல்லவா இந்தமாதிரி வரிகளைப் போடலாம்? ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் 1 ரூபாய் என்று

இருந்ததை இரண்டு ரூபாயாக ஆக்கி நூறு சதவீதம் உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே இந்த வரி உயர்வை நிறுத்த வேண்டும். இதை வசூல் பண்ணப் போனால் தகராறு வரும்.

விமானம் மூலம் பூச்சி மருந்து 4, 5 வருஷங்களுக்கு முன்னால் தெளித்ததற்காக இரண்டே முக்கால் ரூபாய், மூன்று ரூபாய் என்று விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதில் கெடுபிடி செய்கிறார்கள், தெளித்தாலும் பிரயோஜனம் இல்லை. விவசாயிகளுக்கு வருமானமும் கிடைக்கவில்லை. நிதியமைச்சரவர்கள் இதை ரத்து செய்வதற்கு வசூல் பண்ணுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 114 கோடி ரூபாய் மின்சார உற்பத்திக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். இது வரவேற்க வேண்டிய விஷயம். போன தடவை 30 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அது கொடுக்கப்படவில்லை. பொதுப்பணித்துறை அமைச்சர் ஏற்கனவே 30 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்து விடுகிறோம் என்று சொல்கிறார்கள். புதிதாகக் கிணறு வெட்டும்போது தனியாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆகவே அந்த 30 ஆயிரம் கிணறுகளுக்கும் முறையாக வரிசையாக மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்காக, உமறுப் புலவர் பெயரில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவியை ஏற்படுத்தத் தமிழக அரசு இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். அதேபோல எங்கள் ஊரில் பாரதியார் பிறந்திருக்கிறார். பாரதியின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும் அது போன்ற பேராசிரியர் பதவியை மதுரை பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீருக்காக நிறைய திட்டம் தீட்டி இருக்கிறார்கள் கோவில்பட்டி வரை தாமிரபரணியிலிருந்து தண்ணீர்கொடுக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு ஒரு கோடி, ஒன்றரைக் கோடி ரூபாய் பஞ்சாயத்துக்கு கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். டவுன் பஞ்சாயத்துக்கு வருஷ வருமானம் ஏங்கே இருக்கிறது. ஆண்டு வருட வருமானம் ஒன்றரை லட்ச ரூபாய் என்றால் இதற்காகக் கட்டவேண்டிய தொகையும் ஒன்றரை லட்ச ரூபாயாக இருக்கிறது. எப்படி அவர்களால் கட்ட முடியும். ஆகவே அதை மானியமாக கொடுத்துவிட வேண்டும், சிறு பஞ்சாயத்துகளுக்கு மானியமாகக் கொடுக்கவேண்டும். டவுன் பஞ்சாயத்துகளுக்கு 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் கொடுக்க வேண்டும்.

ஆகவே, சர்க்கார் பாதி அளவிற்காவது மானியம் கொடுத்து அந்தக் கடனில் பாதியை வசூல் செய்ய வேண்டும்.



கடைசியாக ஒரு விஷயம். கொடுமுடியாறு திட்டத்திற்கு முன்னால் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டும் முப்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு விஷயம்; இப்போது அந்த ஆபீஸ் அங்கிருந்து ஷிப்ட் டாகிறது. ஒரு பெரிய ஆர்ப்பாட்டம், ஹர்த்தால் எல்லாம் நடத்தினார்கள். ஒரு பெரிய மனிதரின் தலையீட்டினால் அந்தக் கொடுமுடியாறுத் திட்டம் நிற்கிறது என்று சொல்லப்படுகிறது. அவர் புதிதாக ஆளும்கட்சியில் வந்து சேர்ந்திருப்பவர். இவ்வளவு செலவு செய்தும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதி பெறக் கூடிய அத் திட்டத்தை இன்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நாற்பது ஏக்கர் நிலத்திற்கு தனக்கு ஒரு கண்மாய் போட்டுக் கொண்டு அந்த அணைக்கட்டுத் திட்டம் வருவதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்வது, அந்தத் திட்டம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். அவர் பெயரை வேண்டுமானால் நான் சொல்லத் தயார். டாக்டர் மத்தியாஸின் தலையீடு காரணமாகத்தான், அவரது மகன்தான் புதிதாக ஆளும் கட்சியில் சேர்ந்திருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உட்பட எல்லோரும் சேர்ந்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அது குறித்து தந்தி வந்திருக்கிறது, உங்களுக்கும் வந்திருக்கும், இந்தத் திட்டமானது நாங்குநேரி பகுதிக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அத் தொகுதி உறுப்பினர் விரிவாகச் சொன்னார்கள். ஆக, அந்தத் திட்டம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

(மணியடிக்கப்பட்டது.)

அடுத்தபடியாக, தென் ஆர்க்காடு, செஞ்சியில் நந்தன் வாய்க்கால் திட்டம். சென்ற ஆண்டு அந்தத் திட்டத்திற்காக நாற்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அதற்காக ஒன்றும் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நீர்ப்பாசனத் திட்டங்கள், ஏற்கெனவே போடப்பட்ட திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும்.

கேரள அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வருகிற தண்ணீரை கோவில்பட்டி, சங்கரன் கோவில் போன்ற பகுதிகளுக்கு பாசன வசதிக்காகத் தருவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, சமுத்திரத்தில் வீணாகப் போகும் தண்ணீரை சிறு சிறு கண்மாய்களில் தேக்கி வைக்கக்கூடியதொரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். புதிதாக பலயிடங்களுக்கும் பாசன

வசதி ஏற்படுத்த விசேஷ முயற்சி செய்து கிராம மக்களுக்கு பாசன வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்ககளால் அவை முன் வைக்கப்பெற்றுள்ள 1978—1979-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது எங்கள் கட்சி சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு ஆண்டு நிதிநிலை அறிக்கையை அவை முன் வைப்பதற்கு முன்பாக ஆளுநர் அவர்களின் வாயிலாக இந்த அரசின் கொள்கைகளை இங்கே எடுத்து வைக்க வேண்டும். அதை இந்த மன்றம் விவாதிக்க வேண்டும். எதிர்க்கட்சியினர் அதன்மீது தங்கள் கருத்துக்களைக் கூற வேண்டும் என்பதெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தில் இம்மாமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள். ஆனால் இன்றைய தினம் ஆளுநர் அவர்கள் உரை இல்லாமலேயே நிதிநிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டுருக்கிறது. இதனால் இந்த அவையிலுள்ள உறுப்பினர்களின் உரிமைகள் எடுக்கப்பட்டது. மட்டுமல்லாமல் ஆளுநர் அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்படவில்லை என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயம் குறித்து விரிவாக விவாதிக்க நான் தயாராயிருக்கிறேன். ஏற்கெனவே ஒரு உரிமை மீறல் பிரச்சினை தங்களிடம் கொடுக்கப்பட்டிருப்பதால், அது விவாதத்திற்கு வர இருக்கிற காரணத்தால் இதனை இதோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது இந்த அரசு மத்திய அரசோடு நல்லுறவு கொள்ள வேண்டும், மத்திய அரசோடு தோளோடு தோளாக நின்று இம்மாநிலத்திற்குத் தேவையான பல பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற நல்லுணர்வினை இந்த நிதிநிலை அறிக்கை வாயிலாக இம்மாநில மக்களுக்குத் தெரிவித்திருப்பது உண்மையில் வரவேற்கத்தக்கதொரு அம்சம். ஏற்கனவே மத்திய அரசோடு கடந்த சில மாதங்களாக நல்லுணர்வு கொண்டிருக்கிற காரணத்தால் எந்தளவிற்கு நம் மாநிலம் நன்மை பெற்றிருக்கிறது என்பதை நான் விரிவரகக் கூற வேண்டிய தேவையில்லை என்று சொன்னாலும் ஒருசில காரியங்களைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10—50]

மத்திய அரசு இந்த நாட்டில் உணவு தானியத்தைப் பொறுத்த வரையில் நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக இருக்க வேண்டும், தேசம் முழுவதும் ஒரே மண்டலமாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்த போது, இந். மாநிலத்திற்கு





னியாக மண்டலம் இருக்க வேண்டும் என்ற கருத்தை இந்த ாநில அரசு கொண்டிருந்தாலும், மத்திய அரசினுடைய கொள் கையை அச்சத்தோடு ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட, இப்போது அதன் பயனாக படி அரிசி 5 ரூபாய் 4 ரூபாய் என்று விற்றது, இப்போது படி அரிசி இரண்டு ரூபாய்க்கு இந்த நாட்டிலுள்ள ல்லா ஏழை எளிய மக்களும் வாங்கக்கூடிய அளவுக்கு வந் திருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் மத்திய அர சின் இந்தக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டதினால் தான் நமக்கு இந்த நன்மை கிடைக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தில் சில கட்டுப் பாடுகள் இருக்கின்ற காரணத்தால் விவசாயியினுடைய நெல்லை நியாயமான நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை என்ற நறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ட்டுப்பாடுகளை பூரணமாக தளர்த்தி விட்டால் நல்ல முறையில் நெல்லை வாங்கிக் கொண்டுபோகக் கூடிய நிலைமையும், அது மட்டு ல்ல உற்பத்தியாளருக்கும் நன்மை பயக்கக்கூடிய நிலைமையும் ருவாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பல ஆண்டுகளாக நாம் சொல்லிக்கொண் டிருந்த நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவது சம்பந்த மாக, இன்றைக்கு மாநிலத்தில் பிரதிநிதியாக மத்திய அரசில் இருக்கும் நம்முடைய எனர்ஜி அமைச்சர் அவர்களின் முயற்சியின் காரணமாக இன்றைக்கு அந்த வேலை தொடங்கப்படவிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நமது மாநில நிதி அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது போல், நம்முடைய எனர்ஜி அமைச்சர் மத்திய அரசில் எடுத்துக்கொள்கின்ற அக்கறையின் காரணமாக நம்முடை மாநிலத்தில் மின் உற்பத்தி பெருக வேண்டும் என்பதற் காக தூத்துக்குடி அனல் மின் நிலையம் விரைவில் செயல்பட வேண்டும் என்கின்ற காரணத்திற்காக, இவற்றுக்கெல்லாம் உட னடியாக அனுமதி அளித்திருப்பது, மத்திய அரசின் தாராள மனப்பான்மையைக் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, திருவனந்தபுரம், நாகர்கோவில், திருநெல் வேலி ரயில் பாதை அமைப்பதற்கு மத்திய அரசு இப்போது அதிகமான நிதியை ஒதுக்கியிருப்பதன் காரணமாக இது உடனடி யாகப்பூர்த்தி அடையக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது என் பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே மத்திய அரசு இந்த மாநிலத்தில் ஏற்பட்ட புயலுக்காக, நிவாரண வேலைகளுக்கு மத்திய அரசு தன் நிதியை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இன்னும் நாம் நல்ல முறையில் மத்திய அரசோடு செயல்பட்டு வந்தால் இன்னும் அதிகமான பயன் அடைய வழிவகை இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த சூழ்நிலையில், பல கட்சிகளுக்கு நான் குறிப்பிடுவது
பிடிக்காமல் இருக்கலாம். அதன் காரணமாகத்தான் நமது நிதி
அமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சிபற்றி எதுவும் குறிப்பிட
வில்லை என்று நினைக்கிறேன். பல கட்சிகள் என்று சொல்லும்
போது திராவிட முன்னேற்றக் கழகத்தை எடுத்துக்கொண்டால்
அவர்கள் மாநில சுயாட்சி வேண்டும் என்று சொல்லுகிறார்கள்
என்றால் அந்தக் கொள்கையில் அவர்கள் அசையாத நம்பிக்கை
வைத்திருக்கிறார்கள். ஆனால் வேறு சில கட்சிகளும் இதைப்பற்றி
சொல்வதை இங்கு நான் காண்கிறேன். அதுதான் ஆச்சரியப்
யப்படும்படியாக இருக்கிறது.

இப்போது சில கட்சிகள் மாநில சுயாட்சி தேவை என்று
சொல்லுகிற அளவுக்கு வந்திருக்கிறது. இந்த நாட்டில் ஜன
நாயக அடிப்படையில் தவறிக் கூட இப்படிப்பட்ட கோரிக்கை
களை எழுப்பக்கூடாது என்று இருந்த சட்டங்களை எல்லாம் திருத்தி
இந்த நாட்டில் ஜனநாயக அமைப்பே இல்லாமல் ஆக்கிய இந்திரா
காந்தியைச் சேர்ந்த கட்சிக்காரர்கள் இன்றைக்கு மாநில சுயாட்சி
தேவைப்படுகிறது என்று சொல்லுகிற போது, இப்போது அமைந்
திருக்கின்ற கர்நாடக மாநில அரசின் முதலமைச்சர் அவர்கள் கூட
இதை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை.

ஆனால் இங்கு இருக்கின்றவர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்
கள் என்பதை நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.
இதன் காரணமாக மாநில அரசின் உறவு மத்திய அரசோடு
கெட்டுப்போகாமல் இருப்பதற்கு நாம் கவனமாக இருக்க வேண்
டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு மார்க்
சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் இதை தீவிர
மாக எடுத்துக் கூறினார்கள், மாநில சுயாட்சி வேண்டும் என்ப
தற்காக. அவர்களுடைய கட்சி ஆளுகின்ற மேற்கு வங்காளத்
தில் இந்தப் பிரச்னையை இன்றைக்கு முன் வைத்திருக்கிறார்கள்.
மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்கின்றார்கள்.

ஆனால் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மேற்கு வங்கா
ளத்தில் இருக்கின்ற நிலைமை என்னவென்று பார்த்தால் இங்கு
இரண்டு நாட்களுக்கு முன்னால் மொழிப்பிரச்னை பற்றி விவாதிக்
கப்பட்ட போது, மாண்புமிகு உமாநாத் அவர்கள், தேவைப்பட்
டால் இந்த மாநிலத்திலுள்ள மக்கள் டெல்லியிலுள்ள பட்டா
ளத்தைச்சந்திப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்றும் பேசுகிறார்
கள் என்றால், அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,
டெல்லியிலுள்ள பட்டாளம் இங்கு வரவேண்டிய தேவையில்லை.
வரவும் மாட்டார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள
வேண்டும். வேண்டுமென்றால், புயல் நிவாரண வேலைகள்
போன்றவற்றுக்கு தேவைப்பட்டால் அவர்கள் வருவார்களே
தவிர, இதற்கெல்லாம் வருவார்கள் என்று நீங்கள் நினைப்பது



அந்த அளவுக்கு இன்றைக்கு மத்திய அரசாங்கத்தில்
தவறு. இருப்பவர்கள் இல்லை என்பதைக் கூறுகின்ற பொழுது, மத்திய
இருப்பவர்கள் இல்லை என்பதைக் கூறுகின்ற பொழுது, மத்திய
அரசாங்கத்தின் பட்டாளம் வேறு சில தேவைகளுக்குத்தான் அங்கு
இருக்கின்றது.

ஒருவேளை திடீரென்று சீனா போன்ற எல்லையோர நாடுகளிலே
இருந்து நமக்குத் தாக்குதல்கள் வந்தால், எல்லையோரப்
பிரதேசங்களாக இருக்கின்ற சில மாநில அரசுகள் எப்படி இருக்
குமோ என்ற ஐயப்பாடு இருக்கின்ற காரணத்தினால், இதிலே
டெல்லி அரசு அதிகப்படியான அக்கறையோடு, கவலையோடு நட
வடிக்கை எடுத்துக் கொள்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பி
னர் உமாநாத் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மாநில சுயாட்சி எங்களுக்கு வேண்டும், எங்க
ளுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் தேவை என்று சொன்னால்,
அப்படிப்பட்ட அதிகஅதிகாரங்களைக் கொடுக்க இன்றையத் தினம்
இருக்கின்ற அரசாங்கம் அப்படித் தருவதிலே கவலைப் படவில்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவையான அதிகப்
படியான அதிகாரங்களை வழங்க மத்திய அரசாங்கம் தயாராக
இருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் கொள்கைகூட மாநில
சுயாட்சியின் அடிப்படையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்
கொடுக்க வேண்டுமென்பதுதான் என்பதைக் கூறிக்கொள்ள விரும்
புகிறேன். ஆனால், மத்திய அரசாங்கம் ஒரு பலமான அரசாங்க
மாக இருக்க வேண்டும். அந்த நிர்வாகம் பலமானதாக இருந்
தால்தான், இந்த நாட்டைக் காத்துக் கொள்வதற்கும், மற்ற
தேசங்களின் தாக்குதல் வந்தால் அதைச் சமாளிப்பதற்கும் முடி
யும்.

எனவே, மத்திய அரசாங்கம் பலமுள்ளதாக இருக்க வேண்
டும். டெல்லியிலே மட்டும் அதிகாரங்களைக்குவித்து வைத்துக்
கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது.
இன்றைய தினம் ஆளுகின்ற ஜனதா கட்சியின் கொள்கையும்
இதுதான் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையத் தினமுள்ள ஜனதா அரசாங்கத்தின் கொள்கை
என்னவென்றால், இந்த நாட்டிற்குத் தேவையான திட்டங்களை
ஏற்படுத்துகின்றபோது, அது சம்பந்தமான முடிவுகளை எடுக்கின்ற
பொறுப்பைக்கூட இந்த நாட்டின் பஞ்சாயத்துக்களுக்கு வழங்க
வேண்டுமென்பதுதான். ஆகவேதான், இப்போதிருக்கின்ற பஞ்
சாயத்துக்கள் எந்த முறையில் செயல்படுகின்றன என்பதைத்
தெரிந்து கொள்வதற்காக திரு அசோக் மேத்தா அவர்கள் தலைமை
யில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல.
அந்தக் குழு இதைப்பற்றிய நிலைமைகளை ஆறு மாதங்களுக்குள்

அறிந்து அரசுக்கு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், உடனடியாக பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதிலே மத்திய அரசாங்கம் செயல்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் இந்த மாநிலத்தை ஆளுகின்ற முதல் அமைச்சர் அவர்களுக்கு மத்திய அரசாங்கத்தோடு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களுக்கு பிரைம் மினிஸ்டர் அவர்களோடு நெருங்கிய உறவு இருக்கின்றது. தேவைப்படுகின்ற அதிகாரங்களை அவர்கள் டெல்லிக்குச் சென்று பிரைம் மினிஸ்டர் அவர்களைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டால், நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது இங்கே, கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாகச் சொல்வார்கள், operation successful but the patient died. அதைப்போல், இந்த நாட்டில் உள்ள பிரச்சினைகளை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளின் வளர்ச்சிக்காக கிராமப் பகுதிகளிலே உள்ள மக்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு பல்வேறு திட்டங்கள் வேண்டுமென்ற உணர்வு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை நாம் நன்கு அறிகிறோம். ஆனால், இதற்கான வழிமுறைகள் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது, அதிலே இந்த அரசாங்கம் மாபெரும் தோல்வியைத்தான் அடைந்திருக்கிறது என்பதை நான் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர், ஏதோ 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் இந்த நாட்டிலே கிராமப்புற மக்களே உள்ளார்கள் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். அதிலும் அண்ணா அவர்கள் ஆட்சிக்குப் பிறகுதான் இதற்கான திட்டங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டது என்று கூறினார்கள். நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாடு சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகளுக்கு முன்னால், 1947 ஆம் ஆண்டு முதலே இந்த கிராமப்புற மக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டன. எனவே, அந்தத் திட்டங்கள்தான் இன்றையத் தினம் நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றதே தவிர, புதிய திட்டங்கள் ஒன்றுமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





சாதாரணமாக, கிராமங்களிலே சாலைகள் அமைத்தல், ஏரி கால்வாய் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்களை வைத்து, அதிலே கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டங்கள் இருந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். இந்த மாநிலத்தின் பொற்காலம் என்று கருதப்படுகின்ற காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் இப்படி கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்களுக்கு அதிகப்படியான வருமானம் வரக்கூடிய பல்வேறுத் திட்டங்கள் அமைக்கப்பட்டன ; அமல் நடத்தப்பட்டன. நான் குறை கூற விரும்பவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் வகுக்கப்பட்டது என்று இன்றைய தினம் அங்கத்தினர்கள் கூறுவது முற்றிலும் தவறு. திரு காமராஜ் அவர்களது ஆட்சிக் காலத்திலேதான் இப்படிப்பட்ட திட்டங்கள் அமைக்கப்பட்டது என்பதை இந்த நாட்டிலே உள்ள மக்கள் அனைவரும் அறிவார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

1947 ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் பெற்ற உடனேயே இந்த நாட்டுக்குத் தேவையான முக்கியமான காரியங்களைச் செய்யத் தொடங்கப்பட்டது. பல பெரிய அணைகள் கட்டப்பட்டன. இன்று கூட அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்— இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை ஆறுகளில் கட்டப்பட வேண்டிய அணைகள் ஒன்றும் இல்லை. எல்லாம் கட்டி முடித்தாகி விட்டது எனறு சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போதே 1967 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே திரு. காமராஜர் அவர்கள் ஆட்சியில் அத்தனை பெரிய திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு விட்டன.

மின்சார உற்பத்தியை எடுத்துக் கொண்டாலும் 1967 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிந்து விட்டன. இதனை இந்த மாமன்றமும் தேச மக்களும் நன்றாக அறிவார்கள். இந்த நாடு இந்த மாநில உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்றால் அதற்கான திட்டங்களை 1967 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே நிறைவேற்றியதன் காரணமாகத்தான் இன்றையத் தினம் உணவுத் துறையில் தன்னிறைவு அடைந்திருக்கிறோம் என்று சொல்ல முடிகிறது.

தொழிற் துறையினை எடுத்துக் கொண்டாலும் கூட மாநிலத்தில் இருக்கும் பெரிய தொழில்கள், சிறு தொழில்கள் எல்லாம் 1967 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே நிறைவேற்றப்பட்டவை என்பதைக் கூறுகிறபோது எஞ்சி இருப்பது என்னவென்றால் இன்று கிராமத்தில் இருக்கின்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க வேண்டும்.

60 சத விகிதம் மக்கள் ''பாவர்டி லைன்'' — வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள் என்றால் இந்த மாநிலத்தை ஆளுகின்ற அரசுக்கு மிகுந்த கடமை இருக்கிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க பல்வேறு திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 1

இந்த பட்ஜட்டைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம், முதலமைச்சர் அவர்கள் உட்பட,, மாவட்டங்கள் தோறும் சென்று புரட்சிகரமான முறையில்—திட்டங்கள் வரப்போகின்றன என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். இப்போதே அவற்றைச் சொல்லிவிட்டால் சட்ட சபையில் குறைப்படுவார்கள், பிரிவிலேஜ் ஆகக் கூட வரும் என்பதால் விவரங்களைச் சொல்லாதது போல்சொல்லிக் கொண்டு வந்தார்கள், மக்கள் எல்லாம் பெரிய திட்டங்கள் வரப் போகின்றன என்று எதிர்ப்பார்த்தார்கள். ஆனால் இலவு காத்த கிளிபோல் இன்றைய தினம் மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.

கிராமப்புற மக்களுக்கு தொழில் வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்றால், மத்திய அரசாங்கத்தின் கொள்கையை அடிப்படைத் திட்டங்களில், முக்கியமான அம்சங்களில் நாங்கள் ஒத்துக் கொள்கிறோம், ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்லுகிற அரசு, மத்திய அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று தெரிந்திருப்பார்கள்.

மத்திய அரசு நிதி நிலை அறிக்கையில் கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கு அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று, வற்புறுத்தியிருக்கிறார்கள். டில்லியில் நேற்றைய தினம் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையில் சிறு தொழில்களுக்கு எந்த அளவுக்கு மானியம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள். கழிந்த ஆண்டு 145 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. நேற்றைய தினம் 219 கோடி ரூபாய் அளவுக்கு சிறு தொழில்களுக்கும், கிராமத் தொழில்களுக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். சிறு தொழில்கள், கிராம தொழில்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற வகையில் பல்வேறு திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். 69 பொருள்களை உற்பத்தி செய்கிற தொழில்களுக்கு எக்ஸைஸ் டியூடியில் இருந்து விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் என்னென்ன சிறுதொழில்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சிறுதொழில்கள் மூலமாக, கிராமத் தொழில்கள் மூலமாகத்தான் தொழிற் புரட்சி ஏற்பட முடியும். இல்லையென்றால் கிராம முன்னேற்றம் என்பது வெறும் கனவாகி விடும்.

ஏழு மாவட்டங்களில் தொழில்கள் அமைப்பதற்கு உதவி செய்யும் தொழில் நிறுவனங்களை அமைக்க இருக்கும் திட்டத்தை உண்மையிலேயே வரவேற்கிறேன். அதிலே ஏற்கெனவே தொழிற் துறையில் பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். இங்கு பேசிய அங்கத்தினர்கள் சிலர் எல்லாம் தென் மாவட்டங்களில்தான் என்ற முறையில் பேசினார்கள். பெயரளவில் கன்னியாகுமரி, இராமநாதபுரம், திருநெல்வேலி என்று காணப்படுகிறதே தவிர 600 கோடி ரூபாயில் ப்ரொப்போர்ஷனேட் அமௌன்ட் பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1978 மார்ச் 1] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆக நீங்கள் 7 தொழில் நிலையங்களைத் தேர்ந்தெடுக்கிறபோது, தொழிற் துறையில் பின்தங்கியிருக்கிற இராமநாதபுரம் ஒரு வேளை அது முதலமைச்சரின் தொகுதியைச் சேர்ந்த மாவட்டம் என்று சிலர் கூறினாலும் கூட தைரியமாகச் செய்யலாம், அது போன்று நெல்லை மாவட்டம், குமரி மாவட்டம் இவைகள் எல்லாம் பின் தங்கிய மாவட்டங்களாக இருப்பதால் 7 தொழில் நிலையங்களில் 3 நிலையங்களை அங்கே தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலே ரப்பர் ஏராளமாகக் கிடைக்கிறது, பனைமரப் பொருட்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன் தென்னை மரப் பொருட்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன, அது மட்டுமல்ல, பெண்கள் கையால் செய்யக்கூடிய எம்ப்ராய்டரி பொருட்கள் அதிகமாகக் கிடைக்கின்றன், ஆகவே அங்கே இந்தக்கழகம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமரியிலே, ஒரு ரப்பர்ஃபேக்டரி தொடங்கவேண்டுமென்று பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது, அதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் அங்கே இருக்கிறது. டி. எம். கே. ஆட்சிக்கு வந்தபோது அப்போது அமைச்சராக இருந்த திரு மாதவன் அவர்களுடைய தொகுதியில் ரப்பர்ஃபேக்டரியை நிறுவ வேண்டும் என்றார்கள், அப்போதே சொன்னோம், தண்ணீர் கூட இல்லாத அந்த இடத்தில் ரப்பர் தொழிற்சாலையைத் தொடங்கினால் செயல்படாது என்று கூறினோம். அதற்கு லைசென்ஸ்தான கொடுக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்படவேயில்லை. எந்த இடத்தில் எந்தத்தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று பார்க்கவேண்டும், குமரி மாவட்டத்தில் ரப்பர் ஃபேக்டரி ஆரம்பித்தால் வெற்றிகரமாகச் செயல்படும்.

குமரி மாவட்டத்தில் பனை தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களுடைய நிலைமை மோசமாக இருக்கிறது. இதைப்பற்றி நான் சில தினங்களுக்கு முன்னாலே முதலமைச்சர் அவர்களிடம் கூடக் கலந்து பேசினேன். அவர்களும் அனுதாபத்துடன கவனிப்பதாகச் சொன்னார்கள். அங்கே ஒரு பாம்கர் ஃபேக்டரி ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிலப்படை பற்றி இதிலே கூறியிருக்கிறார்கள். இதன் வாயிலாக எத்தனை லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கூறியிருக்க வேண்டும். ஒரு வேளை தி. மு. க. ஆரம்பித்த சீரணிப் படையைப் போல இது வந்துவிட்டால் நிச்சயமாக வெற்றி தராது.

நேற்றைய தினம் கூறினார்கள். ஏதோ ஒரு வேளை ஆகாரம் போட்டு, 2 ரூபாய் தினமும் கொடுத்து விவசாயிகளுக்கு வேலை கொடுப்பதாக. அப்படிச் செய்தால் விவசாயத் தொழிலாளர்களை அது நிச்சமாக பாதிக்கும். காரணம் என்னவென்றால், இன்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 1

றைய் தினம் 5, 6 ரூபாய் நாளொன்றுக்குச் சம்பளம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது, நிலப்படை அமைப்பதன் மூலம் அவர்களை வேலைக்கு அமர்த்தி 2, 3 ரூபாய் தினசரி கொடுத்தால் இப்போது வாங்கக் கூடிய ஊதியம் அவர்களுக்குக் கிடைக்காமல் போகும், அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆக்வே, நிலப்படை அமைத்தால் திட்டமிட்டு அவர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்குமாறு, அதிகமான ஏழை விவசாயிகளுக்கு வேலை கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

கிராமங்களில் இப்பொழுதெல்லாம் ஆயிரக்கணக்கன படித்தவர்கள், பட்டதாரிகள் வேலையில்லாமல் அலைந்து திரிகிறார்கள். அவர்கள் கிராமப் புறங்களை விட்டு நகரங்களுக்கு வேலை கிடைக்காதா என்று வருகிறார்கள். நகரங்களில் அதனால் பல பிரச்சினைகள் எழுகின்றன. ஆகவே, கிராமப் புறங்களிலே உள்ள படித்தவர்களுக்கு, பட்டதாரிகளுக்கு முதலிடம் கொடுத்து வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் திட்டம் வைத்திருக்க வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் 3,000 தமிழ் ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்றையத் தினம் பார்த்தால் நிதிநிலை அறிக்கையில் 200 தமிழ் ஆசிரியர்களுக்குத் தான் வேலை அளிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பி. டி. ஆசிரியர்கள் 3,000 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், வித்துவான் படித்தவர்கள் தமிழ் ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் அங்கு மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை வேலையில்லாமல் வைத்திருப்பது நாட்டுக்கும் நல்லதல்ல, அவர்களுக்கும் நல்லதல்ல. அதனால் வேலைக்குப் போக வேண்டிய வயது வரம்பை அவர்கள் தாண்டிவிடுகிறார்கள். அதன் காரணமாக சமுதாயத்திற்குப் பயனில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, வேலை கிடைக்கும் வரை வயது வரம்பிற்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

மற்ற தேசங்களுக்கெல்லாம் நம்முடைய இந்தியாவிலிருந்து படித்த இளைஞர்கள் வேலைக்காகச் சென்றுகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, கேரள மாநிலத்தை எடுத்துக் கொண்டால் அங்கிருந்து இம்மாதிரி படித்த இளைஞர்களை மற்ற நாடுகளுக்கு அனுப்புவதற்காக எந்த நாட்டிலே வேலைக்கு ஆள் தேவைப்படுகிறது என்று விசாரிப்பதற்கு என்று ஒரு கார்ப்பரேஷனையே வைத்திருக்கிறார்கள், ஆனால் நமது மாநிலத்தில் இங்கேயிருந்து வெளியே போகின்றவர்களுக்குப் பல கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறீர்கள். ஆகவே, வெளியே போவது மிகவும் அசாதாரணமாக இருக்கிறது. அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, கேரள மாநிலத்தில் இருப்



1978 மார்ச் 1] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பதைப்போல இங்கேயும் ஒரு கார்ப்பரேஷனை அமைத்து, படித்த இளைஞர்களை மற்ற தேசங்களுக்கு வேலைக்கு அனுப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் பிரச்னையை எடுத்துக்கொண்டால், புதிய கல்வித்திட்டம் வருகின்ற காலத்தில் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் வேலையிலிருந்து பிரித்துவிடக்கூடிய நிலைமை இருப்பதாக ஆசிரியர்கள் அஞ்சுகிறார்கள். அவர்களது வேலைக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைக் கூறவிரும்புகிறேன். இந்த ஆண்டு மாணவர்களுக்குப் பல்வேறு காரணங்களினால் பல நாட்கள் படிப்பில்லாமல் படிப்பு பாழடிக்கப்பட்டது என்பதை இந்த அரசு நன்றாக அறிந்திருக்கிறது. ஆனால் அடுத்த ஆண்டு கூட இந்தப் பிரச்னையின் காரணமாக மாணவர்களின் படிப்பு பாழடையக் கூடாது. ஆகவே, இந்த ஆண்டிலேயே ஆசிரியர்களின் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். ஆசிரியர்களின் வேலைக்கான உத்திரவாதத்தை அரசு கொடுத்தாக வேண்டும்.

அதைப்போல் என்.ஜி.ஓ.க்களைப் பொறுத்த மட்டில் வாழ்க்கைப் புள்ளி ஏற ஏற அவர்கள் டி.ஏ. கேட்பது நியாயமான கோரிக்கை. அரசாங்கத்தின் நிதிநிலை ஒருவேளை இடம் கொடுக்காமல் இருந்தாலும் அவர்களது கோரிக்கையை மறுப்பதற்கு அரசுக்கு நியாயமில்லை. குறிப்பாக, மற்ற மாநிலங்களில் தமிழ் நாட்டைவிட அதிக டி.ஏ. வாங்குகிறார்கள். மத்திய அரசாங்கத்தை எடுத்துக் கொண்டாலும்கூட ஆறுவது இன்ஸ்டால்மென்ட் டி. ஏ. இப்பொழுது கொடுக்கப்படுகிறது. ஆகவே, நமது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் என்.ஜி.ஓ.க்களுக்கு நியாயம் வழங்க வேண்டும். அவர்கள் இப்பொழுது அரசாங்கத்தின் முன் வைத்து போராடிக் கொண்டிருக்கிற கோரிக்கைகளில் நியாயமான கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்தபடியாக, எமர்ஜென்சி காலத்தில் நமது அரசு ஊழியர்கள் பாதிக்கப்பட்டார்கள், பழி வாங்கப்பட்டார்கள். கட்டாயமாகப் பிரித்து விடப்பட்டார்கள். வேறொரு கமிட்டி அமைத்து, யாரால் இவர்கள் பிரித்து விடப்பட்டார்களோ அவர்களையே கமிட்டியாக வைத்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வைத்திருக்கின்ற நிலைமை நிச்சயமாகப் பொருத்தமாக இல்லை. அவர்கள் திரும்பவும் எடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்யமாட்டார்கள். ஆகவே, இந்தக் கமிட்டி அவசியமில்லை.. எமர்ஜென்ஸி காலத்தில் யார் யாரை அரசு பிரித்து விட்டார்களோ அத்தனை அரசு ஊழியர்களையும் திரும்ப வேலையில் அமர்த்த வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, புயல் நிவாரண நிதியாகவும், நட்சத்திர இரவு நிதியாகவும் அரசாங்கத்தின் தரப்பில் பல வசூல்கள் நடத்தப்பட்டன. ஒருவேளை நல்ல அவசியத்திற்காக இருந்

தாலும், தேவை நல்ல நோக்கமாக இருந்தாலும்கூட அது எந்த அளவிற்கு நிலைகேடான முறையில் வலுக் கட்டாயமாக வசூல் நடத்தப்பட்டது என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குப் பல்வேறு அங்கத்தினர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பலயிடங்களில் டிக்கெட் கொடுக்காமலே அரசு ஊழியர்கள் வசூல் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் நிச்சயமாக விரும்பத்தக்கது அல்ல என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிவாரண வேலைகள் சம்பந்தமாக ஆங்காங்கு பல ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன. கான்ட்ராக்ட் கொடுப்பதற்கு மாறாக நாமிநேனஷனில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த வேலைகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. இதை இந்த அரசு தவிர்த்திருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பல பொருட்கள் நியாயமாகக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு திண்டுக்கல் பகுதியில் இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது சம்பந்தமாக மத்திய அமைச்சர் இங்கே வந்து நேரடியாகப் பார்த்து குறைகூறிச் சென்றார்கள் என்பதை இந்த அரசாங்கம் நிச்சயமாக நினைவில் வைத்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, இம்மாதிரி நிலைமைகளைத் தவிர்த்திருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, திருச்சிக்கு அருகில் உள்ள 'பெல்' நிறுவனம் ஏறத்தாழ பத்தாயிரம் தொழிலாளர்களைக் கொண்டது. அங்கே வேலைநிறுத்தம் நடந்து இன்றைக்குத் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது. ஆகவே, அந்த நிறுவனத்தை உடனடியாகத் திறந்து அமைதி ஏற்படுத்தி வேலை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டையில் உள்ள இந்தியன் மெடிசன் கல்லூரி மாணவர்களிடம் கட்டாயமாக நீங்கள் மன்னிப்புக் கடிதம் கொடுக்க வேண்டுமென்று கடிதம்வாங்கி கல்லூரியைத் திறந்திருக்கிறார்கள் மாண்புமிகுநிதியமைச்சரவர்கள் இந்த அவையில் கல்லூரி திறப்போம் என்று வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், அன்றைய தினம் மன்னிப்பு கடிதம் கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. ஆனால், மன்னிப்புக் கடிதம் கட்டாயம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வாங்கியிருக்கிறார்கள். ஏதோ, கல்லூரி நல்ல முறையில் நடக்கிற காரணத்தினாலே, நான் அதை அதிகமாகக் கூற விரும்பவில்லை. ஆனால், மன்னிப்புக் கடிதம் கொடுத்தார்கள் என்ற காரணத்தினால், மாணவர்கள் பழி வாங்கப்படக் கூடாது என்று கூற விரும்புகிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

அடுத்து, சர்வீஸ் கமிஷனால் நியமனம் செய்யப்பட்டு பல ஆண்டுகளாக வேலையிலிருந்த அரசு ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு இப்பொழுது அவர்கள் நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்காலிகமாக வேலையில் இருந்தவர்கள், வேலை நீக்கம் செய்யப்படுவதை நாம் அறிவோம். ஆனால், சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள், பல ஆண்டுகள் வேலை செய்த பிறகு, வேலை நீக்கம் செய்யப்படுவதென்றால், அது வரவேற்கத்தக்கது அல்ல. ஆகவே, அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த பாராளுமன்ற தேர்தல், சட்டசபை தேர்தல் நேரங்களில், தேர்தல் சம்பந்தமாக நடைபெற்ற வழக்குகளை வாபஸ் வாங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில், இன்னும் பல வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. குறிப்பாக, திருவட்டாறு காவல் நிலையத்தில், கிரைம் நெம்பர் 287 வழக்கு அப்படியே இருக்கிறது. அதில், சார்ஜ் சீட்டும் செய்யவில்லை. ஆனால், அதில் ஈடுபட்ட ஏழைத் தொண்டர்கள் வாரத்திற்கு ஒருமுறை கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு ஆணைக்கு இணங்க, அந்த வழக்கை வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இன்னும் இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேச வேண்டும். உங்களுக்கு அரைமணி நேரம் கொடுத்தேன், அதற்கும் மேல் 3 நிமிடம் எடுத்துக்கொண்டீர்கள். எதிர்க்கட்சித் தலைவர்களே ஒத்துழைக்கவில்லையென்றால் நான் என்ன செய்வது ?

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> கடைசியாக, என்னுடைய தொகுதியைப் பற்றிக் கூறிவிட்டு முடித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரியில் வேறு திட்டங்கள் எடுத்துக்கொள்ள வேறு எந்தத் திட்டமும் இல்லை ; பல்வேறு வகையான திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், குறிப்பாக, ஒன்றிரண்டை நான் கூற விரும்புகிறேன். குடமுருட்டித் திட்டத்தைக் கைவிட்டு விட்டதாகக் கூறினார்கள். இத் திட்டத்திற்காக, ஏற்கனவே, பல இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் அந்தத் திட்டத்தை எடுத்து நடத்த அரசு முன் வரவேண்டும்.

அதைப் போல், திருக்குருப்பரப்புக் கால்வாய், மேட்டுசால் கால்வாய், செடிப்பல் சின்னங்கால்-தொடியாறு திட்டம், பொய்கை அணைத் திட்டம் இவைகளெல்லாம் நிறைவேற்றப்படவேண்டும்.

அடுத்து, குலசேகரத்தில், 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனை வேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே, இந்த அரசு அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. டி. இராமசாமி : சபாநாயகர் அவர்களே, உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசுகிறபொழுது, மாதவன் அமைச்சராயிருந்த காலத்தில், இராமநாதபுரத்தில், டையர் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஒரு டயர் தொழிற்சாலை இராமநாதபுரத்திலே இல்லை.

அது மட்டுமல்ல, இராமநாதபுரத்திலே குடி தண்ணீர் இல்லையென்று சொன்னார்கள். 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது ரூ. 40 இலட்சத்துக்குத் திட்டம் இடப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டு, வைகை ஆற்றுப் படுகையிலிருந்து இராமநாதபுரத்திற்குத் தண்ணீர்வந்து மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது, ஜேம்ஸ் அவர்கள் சொன்னது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இந்த அவையிலே கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கை பேரிலே எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் ஒரு முற்போக்கான, மாநிலத்தினுடைய பொருளாதார நலன்களை உயர்த்தக்கூடிய நிதிநிலை அறிக்கையைக் கொடுப்பார் என்று பொதுவாக எல்லோரும் எதிர்பார்த்தோம். இருந்தாலும் கூட, நாம் எதிர்பார்த்த மாதிரி இந்த நிதிநிலை அறிக்கையில்லையென்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-20]

இந்த நிதிநிலை அறிக்கையைச் சென்ற ஆண்டு கொடுத்த அறிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அதைவிட திருப்தியாகவும் இல்லை. அதைவிட உயர்ந்ததாகவும் கூற முடியாது. சென்ற ஆண்டு ரெவின்யூ தரப்பிலே 56 கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. ஆனால் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான தொகை துண்டு விழுந்திருக்கிறது. புயல் வெள்ள நிவாரண வேலைகள் சம்பந்தமாக அதிக தொகை செலவிட்டதன் காரணமாக அந்தத் தொகை அதிகரித்திருக்கிறது.

ஆனால் இந்த ஆண்டும் அதே மாதிரி துண்டு விழக்கூடிய பட்ஜெட்டை அவர்கள் படித்திருக்கிறார்கள். இது 46 கோடி ரூபாய் துண்டு விழக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கை. சென்ற ஆண்டு துண்டு விழுந்ததை ஈடுகட்டவில்லை. இந்த ஆண்டு துண்டு விழப்போவதையும் ஈடுகட்டப்போவதில்லை. ஆக இப்படித் துண்டு விழக்கூடிய தொகையை அப்படியே விட்டுக் கொண்டு போனால், தமிழகத்தினுடைய நிதி நிலைமை





என்ன ஆகும் என்பதைப் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும், சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரெவின்யூ தர்ப்பிலே துண்டு விழக்கூடிய தொகையை ரெவின்யூ வரவிலே இருந்துதான் ஈடு செய்தாக வேண்டும். அதைக் கடன் வாங்கி ஈடுகட்டக் கூடாது. ஆனால் ஒட்டுமொத்தமாக நிதி நிலை அறிக்கையைப் பார்க்கிறபொழுது, அதிலும் 34 கோடி ரூபாய் துண்டு விழக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். இதற்கு 9½ கோடி ரூபாய் வரிகளின் மூலம் ஈடு செய்தது போக, பாக்கி துண்டு விழக்கூடிய நிலை இருக்கிறது. ஆக நிதிநிலைமை மோசமாகிக்கொண்டு வருகிறது என்பதையும் பார்க்கிறோம்.

ஆக சென்ற ஆண்டு துண்டு விழுந்ததையும், இந்த ஆண்டு துண்டுவிழப் போவதையும், சேர்த்துப் பார்க்கும்போது ஒட்டு மொத்தமாக துண்டு விழக்கூடிய கிட்டதட்ட 128 கோடி ரூபாயை நாம் வெளியிலே இருந்து கடன் வாங்கி ஈடு செய்கிற நிலை இருக்கிறது. கடன் வாங்கி செலவு செய்யக் கூடாது' கடன்வாங்கி முதலீடு செய்ய வேண்டும். கடன் வாங்கி செலவு செய்தால் நாளைக்கு எப்படி ஈடு கட்டப் போகிறோம் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். கடன் வாங்கி செலவு செய்தாலோ, பொதுப் பணத்தை எடுத்துச் செலவு செய்தாலோ, ஏற்படக்கூடிய விளைவுகள் என்னவென்றால், நம்முடைய assets and liabilities ஐப் பார்க்கிற போது, சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டில் நமக்கு இருப்பு 302 கோடி ரூபாய்; சென்ற ஆண்டு 248 கோடி ரூபாய்; இந்த ஆண்டு 136 கோடி ரூபாய். நம்முடைய சொத்து குறைந்து கொண்டே வருகிறது என்பதுதான் தெரிகிறது.

Excess of assets over liabilities—கடன் தொகையைக் கழித்து பார்க்கிறபோது, நம்முடைய லயபிலிட்டீஸ் மேல் இருக்கிற எக்சஸ் 136 கோடி ரூபாய். ஆனால் சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு சொத்து 302 கோடி ரூபாயாக இருந்தது. அப்படியானால் என்ன நிலைமை என்றால் இருப்புநிலை கடன்போக குறைந்து கொண்டே வருகிறது என்பதைத்தான் இது குறிப்பிடுகிறது. அப்படிப் பார்க்கும்போது அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை எப்படித் தயாரிக்கப் போகிறீர்கள்? எப்படி ஈடுகட்டப் போகிறீர்கள்?

எனக்கிருக்கிற கவலை எல்லாம் இந்த ஆண்டு கூட ஈடுகட்டாமற் போனால் அடுத்த ஆண்டு எப்படி வளர்ச்சித் திட்டங்களைப் போட முடியும்? மத்திய சர்க்கார் கூட லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். ஆறாவது பிளானில் ஒதுக்கப்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். லட்சம் ரூபாய் ஒதுக்கிற போது, அவர்கள் எல்லாம் தருவார்கள் என்று எதிர்பார்க்காமல், நாமும் கொஞ்சம் நிதிநிலைமையை தயார் பண்ண வேண்டும். மத்திய சர்க்காரும் சொல்லப்போகிறார்கள் நீங்களும் கொஞ்சம் நிதி நிலைமையைத் தயார் செய்ய வேண்டும் என்று. கொஞ்சம் அல்ல, அதிகமாக வேண்டும் என்று சொல்வார்கள். நாம் நிதி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்ச் 1

அதிகமாகச் சேர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகப் போகிறோம். மத்திய சர்க்காருடைய பட்ஜெட்டைப் பார்த்தால் இன்னும் மோசமாக இருக்கிறது. நமக்கு இதிலும் கதி மோட்சம் இல்லை. அதிலும் மோசமாக இருக்கிறது. பரீட்சார்த்தமாக வெளியே பார்த்தாலும், உள்ளே புகுந்து பார்த்தாலும் ஒன்றும் இல்லை. நம்முடைய பிரதம அமைச்சரும், நிதி அமைச்சர் அவர்களும் சிரித்துக் கொண்டே வருகிற போட்டோதான் வருகிறதே தவிர உள்ளே ஒன்றுமே சரியாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

ஏனென்றால் ரூ. 1,050 துண்டு விழும் பட்ஜெட்டை அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். 1,050 ரூ. துண்டு விழும் பட்ஜெட்டைக் கொடுத்ததால் என்ன ஆகப்போகிறது என்றால், டிபிசிட் பைனான்சிங் என்ற அளவில் அவர்கள் செய்து இருக்கிறார்களா என்று தெரியவில்லை.

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் அரசாங்கக் கையிருப்பில் இருக்கும் தங்கத்தை விற்கப் போகிறோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். கையிருப்பில் இருப்பதை கரைத்து விடப்போகிறார்கள். இதையெல்லாம் சேர்த்து வைக்க நாம் எவ்வளவு சிரமப்பட்டோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் தங்கத்தை விற்பதால் இந்த 1,050 ரூ. குறைவைச் சரிகட்டிவிடலாம் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட் உரையில் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தங்கத்தை விற்பதன் மூலம் அந்த டெபிசிட்டை அவர்கள் நீக்கலாம் என்று எதிர்பார்க்கிறார்களோ அந்த அளவிற்கு அது சாத்தியமா, அது சரியாக ,வருமா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் பெரிய, பெரிய எகனாமிக் எக்ஸ்பர்ட்டுகள் கூறுகிற போது, இந்த விலைவாசி உயரும் என்று அவர்கள் குறிப்பிடும் போது, அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நம்முடைய மதிப்பிற்குரிய சட்டமன்ற ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஏதோ பெரிதாக அந்த பட்ஜெட்டில் பண்ணியிருப்பதாகச் சொன்னார்கள். விலைவாசி ஏற்றத்திற்குத்தான் அதிலே வழிவகுத்து இருக்கிறார்கள். மானுபாக்ச்சரிங் கூட்ஸுக்கு வரியை 2 சத விகிதத்தில் இருந்து 5 சத விகிதம் என்று உயர்த்தி இருக்கிறார்கள். 2 சத விகிதம் என்பதை 3 சத விகிதம் ஆக்கியிருக்கலாம் ஒரேயடியாக 5 சத விகிதம் என்று உயர்த்தியிருப்பது விலை ஏற்றத்திற்கு வகை செய்கிறது.

பெரிய பெரிய முதலாளிகளுக்கு வரிச் சலுகைகள் கொடுத்து இருக்கிறார்கள். —வுன்டிராடன் மக்களுக்கு, அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு கீழ் மட்டத்தில் இருக்கும் மக்களுக்கு பெரிய சாதனையையோ, விமோசனங்களையோ, சிரமத்தைப் போக்கும் வகையிலோ அமைந்த பட்ஜெட்டாக அது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பட்ஜெட்டிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், விவசாயத்திற்கு அதிகம் நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள்.



1978 மார்ச் 1] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ரூரல் எகானமி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. விவசாயத்தை அபிவிருத்தி செய் தால் மட்டும் போதாது. அபிவிருத்தி செய்யப்பட்ட விவசாயத் தின் மூலம் ஏற்படக்கூடிய விளை பொருள்களுக்கு நியாய விலை கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கான உத்தரவாதம் அளிக் கப்பட வேண்டும். மத்திய பட்ஜெட்டிலே அது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனக்கு இருக்கும் அச்சம் எல்லாம் சென்ற ஆண்டுக்கு முன்பு 70 லட்சம் டன் விளைந்தது. சென்ற ஆண்டு 74 லட்சம் டன் விளைந்தது. இந்த ஆண்டு 83 லட்சம் டன் விளையும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த 74 லட்சம் டன்னிற்கு நியாயமான விலை கிடைக்காத போது, இதற்கு மட்டும் எப்படி கிடைக்க முடியும். அரசாங்கம் கொள்முதல் விலை நிர்ணயித்து இருந்தாலும், அதைக் கொள்முதல் செய்யாத காரணத்தால் விவசாயிகளுக்கு அந்த விலை கிடைக்கவில்லை.

75 கிலோ மூட்டை 60 ரூபாய்க்குத் தனியார் கேட்கிறார்கள். சர்க்காரும் வாங்க முன் வரவில்லை என்கிறபோது அவர்களுக்கு வேறு வழி இல்லாமல் அந்தக் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தமிழக சர்க்கார் ரூ. 95 ஒரு குவிண்டாலுக்கு என்று சொல்லியிருந்தாலும்,அதைக் கொள் முதல் செய்ய முன்வராததால் பலன் எதுவும் இல்லாமல் போய் விட்டது. ஆகவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒழுங் கான நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு, ஏற் படுத்தி செலவுக்கு ஏற்ற அளவிற்கு விலை உத்திரவாதம் அளிக்கப் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கொள்முதல் செய்கிறபோது, 67 கிலோ மூட்டை என்று சொன்னால், அதை 57 கிலோ என்று சொல்லித்தான் எடுத்துக் கொள்கிறார்கள். இப்போது ஏது ஈர நெல்? இப்போது வாங்குகிற போது அந்த நிலை கடை பிடிக்கப்பட வேண்டுமா? ஆகவே, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய நிலையில் உற் பத்தி செய்யும் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் விவசாயிகளிடத்தில் இருந்து விளைபொருள்களை வாங்க முன் வரவில்லை என்றால், விவசாயம் சீரழிந்து போய் விடும்.

இன்று மத்திய சர்க்காரின் தொழில் விவசாயக் கொள்கையை அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். கிராமப் புறங்களை வளர்க்க விரும்புகிறார்கள். அது எந்த அளவிற்கு அவர்களை ஊக்கு விக்க முடியும் என்று தெரியவில்லை. இந்தியாவில் உணவு உற் பத்தி இந்த ஆண்டில் 12—13 கோடி டன் வரும் என்று சொல் கிறார்கள். இப்படி 13 கோடி டன் வருகிறது என்றால், அதைப் போல் மும்மடங்கு 36 கோடி டன் உற்பத்தி வரும் என்று மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் சொல்லியிருக்கிறார்கள். 12—13 கோடி டன்னையே வாங்கி ஸ்டாக் செய்ய முடியவில்லை. மும்மடங்கு அதிகரிக்கப்போகிறது, 36 கோடி டன் வரப்போகிறது

என்று சொன்னால் என்ன ஆகும்? 12 கோடி டன் வாங்கவே பணம் இல்லை, ரிசர்வ் பாங்க் ஸ்டாக் வைக்கக் கடன் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். போதுமான கிடங்குகள் இல்லை.

வியட்நாமிற்கு கோதுமை 1 லட்சம் டன் வேண்டும் என்று கேட்டார்கள். பின்னர் அவர்கள் அதை மாவாக வேண்டும் என்று கேட்ட நேரத்தில், மாவு அரைப்பதற்குப் போதிய இயந்திரங்கள் இல்லாததால் 6 மாதம் கழித்துத்தான் அதை ஏற்றுமதி செய்ய முடிந்தது. இங்கே தானியங்கள் ஏற்றுமதி செய்ய **போர்ட்** கிடையாது, கப்பல் எங்கே இருக்கிறது, இவைகளை பாதுகாப்பாக வைக்க எங்கே கிடங்குகள் இருக்கின்றன. ஆகவே விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாத வகையில் நாம் காரியங்களை நிறைவேற்ற வேண்டும். அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*[முற்பகல் 11-30].*

இப்போது நிதி அமைச்சர் ரொம்ப சிலாகித்து கிராமத் தொழில் மேம்பாடு, சிறு தொழில் மேம்பாடு என்று அழகாகக் கூறியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அது வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. மத்திய சர்க்காரின் தொழில் கொள்கை ஒட்டுமொத்தமாக அப்படி இருக்கிறது. அதை ஆதரிக்கிறோம் என்று நிதி அமைச்சர் கூறியிருக்கலாம். ஏனென்றால் பொருளாதார கொள்கை, தொழில் கொள்கைகளை வகுப்பது மத்திய சர்க்கார்தான். ஒரு மாநில சர்க்காரால் அந்தக் கொள்கைகளை உருவாக்க முடியாது. அதனால் அந்தக் கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். இந்த நிதிநிலை அறிக்கையில் அப்படிச் சொல்லவில்லை. இங்கே சொல்லியிருக்கின்றவைகளை எல்லாம் கணக்குப் போட்டு பார்த்து விட்டுத்தான் அறிவித்திருக்கிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை.

இப்போதும் காட்டேஜ் இன்டஸ்டிரீஸ் இருக்கின்றன. சிறு தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு மிக மிகப் பெருகிவிடும் என்று சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் இன்றைக்கு இருக்கிற குடிசைத் தொழில்களிலேயே, இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஒழுங்காக வேலை கொடுக்க முடியாமல் வேலையில்லாப் பிரச்சினை எழுந்திருக்கிறது. நம்முடைய நோக்கம் இன்றைக்கு குடிசைத் தொழில்களை நம்பியிருக்கிறவர்கள் மோசம் போய்விடக் கூடாது, நசிந்து விடக்கூடாது என்பது. அது நல்ல நோக்கம். இருக்கின்ற தொழிலையே சரியாக நடத்த முடியாமல் இருக்கும்போது மேலும் சிறு தொழில்களை ஏற்படுத்தி என்ன செய்வது ? இருக்கின்ற தொழில் பாதிக்கப்படுவதற்கு என்ன காரணம் ? சிந்திக்க வேண்டும். உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு மார்க்கெட் இல்லை. அதனால் உற்பத்தியில் தேக்கம் ஏற்பட்டு, அந்தத் தொழிலே பாதிக்கிறது.



மேலும் புதிய தொழில்களை ஏற்படுத்தினால் இன்னும் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும். அதை எங்கே கொண்டு போய் விற்பது ? கூடையையும் முறத்தையும் உற்பத்திச் செய்து எங்கே ஏற்றுமதி செய்வது ? யார் வாங்கிக் கொள்வது ?

இப்போது கதர் 52 கோடி ரூபாய்க்கு உற்பத்தியாகிறது. அதற்குச் சரியான மார்க்கெட் இல்லை. மார்க்கெட் பிடிப்பதற்காக 30 சதவீதம் ரிபேட் கொடுக்க வேண்டியிருக்கிறது. 52 கோடிக்கு உற்பத்தியாகும் போதே இந்த நிலை ஏற்படுகிறது என்றால் அதற்கு மேல் உற்பத்தியானால் என்ன செய்வது? உற்பத்தி செய்யலாம். அதற்கு வேண்டிய 'மான் பவ்வர்' நம்மிடம் இருக்கிறது. ஆக இந்த உற்பத்தியைப் பெருக்குவதினால் பெரிய பலன் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

இப்போது பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். தொழில் மந்தம் ஏற்பட்டு விடும் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிறபடி தொழில் மந்தம் எப்போது ஏற்படும்? உற்பத்தியாகின்ற பொருள் விற்கப்படாமல், தேக்கம் ஏற்படும்போது மந்தம் ஏற்படும். நீங்கள் அறிவித்திருக்கின்ற சிறு தொழில் பெருக்கத்தினால் அந்த நிலைதான் ஏற்படும். நான் இப்படிச் சொல்வதனால், சிறு தொழில்களுக்கு விரோதி என்று தயவுசெய்து யாரும் எண்ணி விடக்கூடாது. சிறு தொழில் வளர்ச்சியை ஆதரிக்கிறேன் ; சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் சிறு தொழில் வளர்ச்சியினால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு, ஒரு மந்த நிலை ஏற்பட்டு, அந்தத் தொழில் நசிந்துவிடக் கூடாது. அதற்கு என்ன செய்வது? விற்பனையாகாத பொருட்களை அரசாங்கமே வாங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்கிறதா? காட்டேஜ் இன்டஸ்டிரியை வளர்க்க வேண்டுமென்று சொல்லும்போது, உற்பத்தியாகும் பொருட்களுக்கு மார்க்கெட் வசதி செய்து கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? அதைப் பற்றி ஒன்றும் இல்லையே. அதற்கு நிதிநிலை அறிக்கையில் வழி வகை செய்யாமல், எப்படி சிறு தொழிலை வளர்க்க முடியும்? அதைச் சிந்திக்க வேண்டும்.

மத்திய சர்க்காரில் ஜனதா அரசின் கொள்கை அப்படி இருக்கிறது ; அந்தக் கொள்கையை அப்படியே செயல்படுத்துவதாக இருந்தால் நிச்சயமாக சீர் குலையும் நிலைமைதான் வந்து விடும். நான் நன்றாகக் கணக்குப் போட்டுப் பார்த்து விட்டுத்தான் இந்தச் சொல்கிறேன். காந்தியடிகள் போட்ட திட்டங்களை நாங்கள் அமுலாக்குகிறோம் என்று அவர்கள் சொல்லலாம். அப்போது காந்தியடிகள் என்ன சொன்னார்கள் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். இந்த நாட்டிலே கோடிக்கணக்கான பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் ; அந்நிய நாட்டார் அவர்கள் நாட்டிலே பெருந் தொழில்களை உருவாக்கி, இங்கே கொண்டு வந்து விற்பனை செய்து, இந்திய நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டிக்

என்று சொன்னால் என்ன ஆகும்? 12 கோடி டன் வாங்கவே பணம் இல்லை, ரிசர்வ் பாங்க் ஸ்டாக் வைக்கக் கடன் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். போதுமான கிடங்குகள் இல்லை.

வியட்நாமிற்கு கோதுமை 1 லட்சம் டன் வேண்டும் என்று கேட்டார்கள். பின்னர் அவர்கள் அதை மாவாக வேண்டும் என்று கேட்ட நேரத்தில், மாவு அரைப்பதற்குப் போதிய இயந்திரங்கள் இல்லாததால் 6 மாதம் கழித்துத்தான் அதை ஏற்றுமதி செய்ய முடிந்தது. இங்கே தானியங்கள் ஏற்றுமதி செய்ய போர்ட் கிடையாது, கப்பல் எங்கே இருக்கிறது, இவைகளை பாதுகாப்பாக வைக்க எங்கே கிடங்குகள் இருக்கின்றன. ஆகவே விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாத வகையில் நாம் காரியங்களை நிறைவேற்ற வேண்டும். அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30].

இப்போது நிதி அமைச்சர் ரொம்ப சிலாகித்து கிராமத் தொழில் மேம்பாடு, சிறு தொழில் மேம்பாடு என்று அழகாகக் கூறியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அது வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. மத்திய சர்க்காரின் தொழில் கொள்கை ஒட்டுமொத்தமாக அப்படி இருக்கிறது. அதை ஆதரிக்கிறோம் என்று நிதி அமைச்சர் கூறியிருக்கலாம். ஏனென்றால் பொருளாதார கொள்கை, தொழில் கொள்கைகளை வகுப்பது மத்திய சர்க்கார்தான். ஒரு மாநில சர்க்காரால் அந்தக் கொள்கைகளை உருவாக்க முடியாது. அதனால் அந்தக் கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். இந்த நிதிநிலை அறிக்கையில் அப்படிச் சொல்லவில்லை. இங்கே சொல்லியிருக்கின்றவைகளை எல்லாம் கணக்குப் போட்டு பார்த்து விட்டுத்தான் அறிவித்திருக்கிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை.

இப்போதும் காட்டேஜ் இன்டஸ்டிரீஸ் இருக்கின்றன. சிறு தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு மிக மிகப் பெருகிவிடும் என்று சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் இன்றைக்கு இருக்கிற குடிசைத் தொழில்களிலேயே, இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஒழுங்காக வேலை கொடுக்க முடியாமல் வேலையில்லாப் பிரச்சினை எழுந்திருக்கிறது. நம்முடைய நோக்கம் இன்றைக்கு குடிசைத் தொழில்களை நம்பியிருக்கிறவர்கள் மோசம் போய்விடக் கூடாது, நசிந்து விடக்கூடாது என்பது. அது நல்ல நோக்கம். இருக்கின்ற தொழிலையே சரியாக நடத்த முடியாமல் இருக்கும்போது மேலும் சிறு தொழில்களை ஏற்படுத்தி என்ன செய்வது? இருக்கின்ற தொழில் பாதிக்கப்படுவதற்கு என்ன காரணம்? சிந்திக்க வேண்டும். உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு மார்க்கெட் இல்லை. அதனால் உற்பத்தியில் தேக்கம் ஏற்பட்டு, அந்தத் தொழிலே பாதிக்கிறது.





மேலும் புதிய தொழில்களை ஏற்படுத்தினால் இன்னும் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும். அதை எங்கே கொண்டு போய் விற்பது? கூடையையும் முறத்தையும் உற்பத்திச் செய்து எங்கே ஏற்றுமதி செய்வது? யார் வாங்கிக் கொள்வது?

இப்போது கதர் 52 கோடி ரூபாய்க்கு உற்பத்தியாகிறது. அதற்குச் சரியான மார்க்கெட் இல்லை. மார்க்கெட் பிடிப்பதற்காக 30 சதவீதம் ரிபேட் கொடுக்க வேண்டியிருக்கிறது. 52 கோடிக்கு உற்பத்தியாகும் போதே இந்த நிலை ஏற்படுகிறது என்றால் அதற்கு மேல் உற்பத்தியானால் என்ன செய்வது? உற்பத்தி செய்யலாம். அதற்கு வேண்டிய 'மான் பவ்வர்' நம்மிடம் இருக்கிறது. ஆக இந்த உற்பத்தியைப் பெருக்குவதினால் பெரிய பலன் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

இப்போது பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். தொழில் மந்தம் ஏற்பட்டு விடும் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிறபடி தொழில் மந்தம் எப்போது ஏற்படும்? உற்பத்தியாகின்ற பொருள் விற்கப்படாமல், தேக்கம் ஏற்படும்போது மந்தம் ஏற்படும். நீங்கள் அறிவித்திருக்கின்ற சிறு தொழில் பெருக்கத்தினால் அந்த நிலைதான் ஏற்படும். நான் இப்படிச் சொல்வதனால் சிறு தொழில்களுக்கு விரோதி என்று தயவுசெய்து யாரும் எண்ணி விடக்கூடாது. சிறு தொழில் வளர்ச்சியை ஆதரிக்கிறேன்; சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் சிறு தொழில் வளர்ச்சியினால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு, ஒரு மந்த நிலை ஏற்பட்டு, அந்தத் தொழில் நசிந்துவிடக் கூடாது. அதற்கு என்ன செய்வது? விற்பனையாகாத பொருட்களை அரசாங்கமே வாங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்கிறதா? காட்டேஜ் இன்டஸ்டிரியை வளர்க்க வேண்டுமென்று சொல்லும்போது, உற்பத்தியாகும் பொருட்களுக்கு மார்க்கெட் வசதி செய்து கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? அதைப் பற்றி ஒன்றும் இல்லையே. அதற்கு நிதிநிலை அறிக்கையில் வழி வகை செய்யாமல், எப்படி சிறு தொழிலை வளர்க்க முடியும்? அதைச் சிந்திக்க வேண்டும்.

மத்திய சர்க்காரில் ஜனதா அரசின் கொள்கை அப்படி இருக்கிறது; அந்தக் கொள்கையை அப்படியே செயல்படுத்துவதாக இருந்தால் நிச்சயமாக சீர்குலையும் நிலைமைதான் வந்து விடும். நான் நன்றாகக் கணக்குப் போட்டுப் பார்த்து விட்டுத்தான் இந்தச் சொல்கிறேன். காந்தியடிகள் போட்ட திட்டங்களை நாங்கள் அமுலாக்குகிறோம் என்று அவர்கள் சொல்லலாம். அப்போது காந்தியடிகள் என்ன சொன்னார்கள் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். இந்த நாட்டிலே கோடிக்கணக்கான பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அந்நிய நாட்டார் அவர்கள் நாட்டிலே பெரும் தொழில்களை உருவாக்கி, இங்கே கொண்டு வந்து விற்பனை செய்து, இந்திய நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டிக்

கொண்டிருக்கிறார்கள் ; அது கூடாது ; அதற்கு இங்கேயே சிறு தொழில்களை, குடிசைத் தொழில்களை உருவாக்க வேண்டும் ; அதன் மூலம் இங்கே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இப்போதைய நிலைமை என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். உற்பத்தியாகின்ற பொருளுக்கு மார்க்கெட் இல்லாதபோது, தொழில் மந்தம் ஏற்படுகின்றபோது, நிலைமை சீராகுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குடிசைத் தொழில்கள் என்று சொல்லி, கூடை, முறம், தேன் போன்றவைகளை உற்பத்திச் செய்தால் அவைகளை யார் வாங்கிக் கொள்வது ? எங்கே ஏற்றுமதி செய்வது ? ஆக, சிறு தொழில்களை வளர்க்க வேண்டும் என்று சொல்லும்போது, முதலில் அதற்கு மார்க்கெட் வசதியைத் தேடிக்கொள்ள வேண்டும். மார்க்கெட் வசதி இல்லாத எந்தத் தொழிலும் வளர முடியாது.

ஒன்றைத் தெளிவாக்கியிருக்கலாம் ; மத்திய சர்க்கார் உருவாக்கிய கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை ; அதனால் இந்தத் தொழில் கொள்கையை, பொருளாதாரக் கொள்கையை வகுத்திருக்கிறோம் என்று அறிவித்திருக்க வேண்டும். ஏனென்றால் நான் ஏற்கெனவே சொன்னபடி ஒரு மாநில அரசால் பொருளாதாரக் கொள்கையையும், தொழில் கொள்கையையும் வகுக்க முடியாது. அதுதான் நிலைமை இந்த விவகாரத்தை இதோடு விட்டு விட்டு, எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் மிகவும் குறைவாக இருப்பதால் வேறு பிரச்சனைகளுக்குச் செல்கிறேன்.

மாநில சுயாட்சி பற்றி விரிவாகப் பேசப்படுகிறது. இதற்கு முன்னாலும் இது பேசப்பட்டது. இப்போது சமீபத்தில் இல்லாமல் இருந்தது. இப்போதும் பேசப்படுகிறது. அந்தந்த மாநிலங்களுக்கு இருக்கின்ற பைனான்சியல் பொசிஷன் அதாவது நிதிநிலைமையில் இருக்கிற சங்கடங்கள்தான் இந்த மாதிரி பிரசிச்னை வருவதற்குக் காரணமாக இருக்குமோ என்று கருதுகிறேன். அல்லது இன்னும் வேறு அரசியல் காரணங்களுக்காகக் கூட இருக்கலாம். மாநில சுயாட்சி பற்றி நல்ல கருத்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையிலும் மத்திய அரசு பலகீனப்பட்டுவிடக் கூடாது. மத்திய அரசு பலமாக இல்லை என்றால் அது என்ன ஆகும் என்றே சொல்ல முடியாது. ஆகவே மாநில சுயாட்சி என்பதை நான் ஒத்துக்கொள்வதேயில்லை. மதிப்பிற்குரிய ஜனதாக் கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் நாங்கள் மாநில சுயாட்சியை எதிர்க்கவில்லை, ஆதரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. நான் இதில் மிகக் கடுமையான கருத்தை உடையவன். மாநிலங்களுக்கு நிதிநிலையைப் பெருக்கிக் கொள்வதற்கு வேண்டுமென்றால் கூடுதல் அதிகாரங்களைக் கேட்பது பற்றி யோசிக்கலாம். ஆனால் அதிக அதிகாரங்க



வேண்டுமென்று கேட்கும்போது நிச்சயமாக மாநிலங்கள் எல்லாம் சிதறுண்டு போகும் என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

நிச்சயமாக மத்தியில் பலவீனமாகிவிட்டால் மாநிலங்கள் சிதறுண்டுபோகும். நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல் மாநிலங்களுக்கு நிதி வசதி போதவில்லை. ஆகவே இந்த நிதி வசதியைப் பெருக்குவதற்கு என்ன வழி என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் ஜனதாக் கட்சியின் வேடிக்கை என்னவென்றால் அவர்கள் ஒருமித்த கருத்தைச் சொல்வதில்லை, என்று சத்தியம் பண்ணி விட்டார்கள். இந்த மாநில சுயாட்சியிலே பிரதம அமைச்சர வர்கள் இது குறித்து பேசவே முடியாது, மாநாடு போட்டும் பேச முடியாது என்று சொல்லிவிட்டார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஜனதாக் கட்சிக்கு எல்லா இடங்களிலும் ஒருமித்தக் கருத்துதான். அவர்கள் கட்சியில்தான் மாண்புமிகு உறுப்பினர் சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் மாநில சுயாட்சி இப்போதே வேண்டுமென்று சொன்னார்கள். தலைவரவர்களோ வேண்டாமென்று சொல்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் சொல்கிற விளக்கம் இது தான், அமைச்சரவர்கள் இதைப்பற்றி கூடிப் பேசவே முடியாது. தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் பேசுங்கள் என்று இவர் கள் தலைவர் திரு. சந்திரசேகர் சொல்கிறார். இதைப்பற்றியும் நாம் ஆலோசிக்க வேண்டும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, மாநில சுயாட்சி வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நம்முடைய மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கொடுத்தால் வருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்பதைத்தான் நான் சொன்னேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஆகவே ஜனதாவைப் பொறுத்த வரையில் ஒருமித்த அபிப்ராயம் இல்லை. அதே நேரத்தில் டீசென்ட்ரலைசேஷன் ஆப் பவர் என்பதை ஒத்துக்கொண் டிருக்கிறார்கள். இப்படி ஒரு குழப்பமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் குழப்பத்திற்கு இடையே எதையும் நாம் முடிவு பண்ணக்கூடாது என்பதை நான் இந்தச் சந்தர்ப் பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சி என்பது நிதிநிலை ஆதாரங்களை எவ்விதம் பெருக்குவது என்பது மட்டுமல்ல, மேற்கு வங்க முதலமைச்சர் சொல்வதைப் பார்த்தால் வெளி நாட்டு உறவு, பாதுகாப்பு, அன்னியச் செலாவணி இவைகளைத் தவிர மற்றவைகளுக்கு அதிகாரங்கள் வேண்டும் என்கிறார். இதை எல்லாம் விட்டுவிட்டால்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்ச் 1

வேறு என்னதான் அவர்களிடம் இருக்கும். இதை நாம் ஆலோ
சிக்க வேண்டும். தேசத்தை சிதற வைக்கும் நிலைமை
களுக்குக் கொண்டுவிடக் கூடாது. நிதி ஆதாரங்களைப் பெருக்கு
வதற்கு வேண்டுமானால் அதற்குரிய வழிமுறைகளைப் பற்றி
கண்டுபிடிக்கலாம் என்பதை மட்டும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாய அபிவிருத்தி, குடிசைத் தொழில் அபிவிருத்தி
ஆகிய இவைகளைப் பற்றி மத்திய சர்க்காரும் சொல்கிறார்கள்.
மாநில சர்க்காரும் சொல்கிறார்கள். ஆனால் இவைகளிலுள்ள பலன்
கீழே உள்ள மக்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்
கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். நிலச் சீர்திருத்தச்
சட்டத்தை எடுத்துக் கொண்டால் அதன் பலன் கீழே உள்ளவர்
களுக்குக் கிடைத்ததா என்றால் இல்லை.

கிரீன் ரெவலூசன் கொண்டுவரப்பட்டதில் அதன் பயன் 20
சதவிகிதம் பேருக்குத்தான் கிடைத்தது. 80 சதவிகிதம் பேருக்குக்
கிடைக்கவில்லை. நிலச்சீர்திருத்தச் சட்டத்தை அமுலாக்கி அதன்
மூலம் கிடைக்கின்ற நிலம் நிலமற்ற உழவர்களுக்குச் சொந்தம்
ஆக்கப்படுமேயானால் அதனுடைய பலன் அவர்களுக்குக் கிடைக்
கும். ஆனால் இதில் நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒன்றையுமே
சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை என்று எனக்கும் தெரிய
வில்லை. இதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம்
சொல்லவேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு
வரவேண்டிய வருவாயைக் கொடுப்பதற்கு என்ன உத்தரவாதம்,
ஒன்றுமேயில்லை. அவர்களுக்கு ஊதிய உயர்வு குறைந்தபட்ச
கூலி ஆகியவை பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை என்பதை
வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய சர்க்காருடைய தொழில் கொள்கையிலே
ஒன்றை நான் குறிப்பிட வேண்டும். அன்னியச் செலாவணி
அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 1,200 கோடி
ரூபாயாக இருந்தது. 4,200 கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது.
இந்த 4,200 ரூபாயைக் கையிலே வைத்துக் கொண்டு 900 கோடி
ரூபாய்க்குப் பன்னாட்டு நிறுவனங்களை அழைத்து மேற்கு ஜெர்
மனியை அழைத்து தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு மத்திய
அரசு அழைப்பு விடுகிறது. பணம் இல்லை, கடன் வாங்க வேண்டு
மென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம் நாம். 4 ஆயிரம் கோடி
ரூபாய் அன்னியச் செலாவணி இருக்கிறது. அதில் 900 கோடி
ரூபாய்க்கு ஏன் பன்னாட்டு நிறுவனத்தைக் கூப்பிட்டு அத்தொழிற்
சாலையை கட்டச் சொல்லி ஏன் சொல்ல வேண்டும் என்பதைக்
கேட்டுக்கொண்டு, இந்த மத்தியத் தொழில் கொள்கை தங்க
ளுக்கு உடன்பாடுதான் என்று மாண்புமிகு நிதியமைச்சர் எப்படிக்
கூறுகிறார் என்பது விளங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.



1978 மார்ச் 1] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

[முற்பகல் 11-40]

ஆகவே, ஒரு முதலாளித்துவ போக்கை நோக்கி, தனியார்
துறையை வளர்ச்சியடையச் செய்யும் போக்கை நோக்கி, மத்திய
அரசு போய்க் கொண்டிருக்கிறது. இந்த மத்திய சர்க்காரின்
கொள்கையை மாநில அரசு ஆதரிக்கிறது என்று சொல்வது
ரொம்பவும் வருந்தத்தக்கது. தொழில் கொள்கை குறித்து
கூறுகிறேன். பட்ஜட்டில் அப்படி இருக்கிறது. அப்படி ஆதரிக்க
வில்லை என்று சொன்னால் அதை இந்தச் சபையில் சொல்ல
வேண்டும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவிரி நீர் பிரச்னை தீர்க்கப்படவே இல்லை.
இதனால் ஏற்படுகிற விளைவுகள் எவ்வளவு சங்கடங்களை ஏற்படுத்து
கின்றன என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். சாகுபடி ஆரம்
பிக்கும்போது நீர் வசதி இல்லாமல் ஒவ்வொரு தடவையும்
கர்நாடக மாநிலத்தைப் போய் கேட்டு கேட்டு நீர் பெறுவது
என்பது எவ்வளவு சிரமத்தைத் தருகிறது என்பதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். அது நமக்கு இருக்கிற உரிமை. அந்த
உரிமையை நாம் வற்புறுத்தி மத்திய சர்க்காரிடம் சொல்லி
கலந்து பேசி இதுபற்றி ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். நம்
மாநிலத்தின் நீர் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அதற்
கான முடிவை விரைவில் எடுக்க சர்க்கார் முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, நெல்லைப் பற்றிச் சொன்னேன். சரியான
விலை கிடைக்கவில்லை. இன்று கரும்பை எடுத்துக்கொண்டால்—
எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள்—நாட்டு வெல்லத்திற்கு
விலையே கிடையாது. சர்க்கரை முதலாளிகளுக்கு ஆக்கம் அளிப்ப
தற்காக இன்று லெவி சர்க்கரைக்கு 15 காசு உயர்த்திப் போட்டி
ருக்கிறது மத்திய சர்க்கார். பொதுமக்களுக்கு ரூ. 2-30-க்கு விற்று
அதில் வரும் தொகையை சர்க்கரை ஆலை முதலாளிகளுக்குக் கொடுப்
பதற்கான ஒரு முடிவை மத்திய சர்க்கார் எடுத்திருக்கிறது.
ஆனால் நாட்டு வெல்லம் உற்பத்தி செய்பவர்களின் நிலை என்ன?
நாட்டு வெல்லத்தின் விலை குறைந்து ரூ 20க்கு விற்றது இன்று
ரூ. 10 ஆகக் குறைந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆகவே
அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக அரசு நடவடிக்கை
எடுக்க வேண்டும். அரசாங்கமே கொள்முதல் செய்ய முடியுமா,
கொள்முதல் செய்து வெளியே ஏற்றுமதி செய்ய முடியுமா என்
பதைப் பற்றி அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும்.

அடுத்து, கிராம அபிவிருத்தித் திட்டத்தில் பால்வள அபி
விருத்தித் திட்டங்கள் உள்ளன. செய்யுங்கள். பால் அதிகமாக
அபிவிருத்தி செய்யவேண்டியதுதான். ஆனால் அப்படி அதிகமாக
அபிவிருத்தி செய்யும் பாலை வைத்துக்கொண்டு அந்தப் பால்
பூராவையும் பதனப்படுத்துகிற வாய்ப்பு நம்மிடம் இல்லை. மிச்ச
மாகும் பாலைக் கொண்டு பால் பவுடர் செய்யும் தொழிற்
சாலையை அமைத்தாகவேண்டும். தேவைக்கு அதிகமாக உள்ள
பாலை பால்பவுடராகச் செய்வதற்கு வழிவகை செய்ய
வேண்டும்.

அதே சமயத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு என்ன விலை கிடைக்கிறது என்று பார்த்தால் அவர்களிடம் இருந்து ரூ. 1-30க்கு வாங்கி ரூ. 2-க்கு விற்கிறார்கள். விவசாயிகளுக்கு, பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, கிடைப்பது ரூ. 1-30 தான். அதை வாங்கி இங்கே கொண்டு வந்து விற்கும்போது ரூ. 1-70, ரூ. 2 வரை விற்கிறார்கள். மூலதனம் மற்றச் செலவுகள் எல்லாம் போக விட்டருக்கு 20 காசு கிடைக்கிறது, பால் உற்பத்தி செய்பவர்களுக்கு, அதை வாங்கி விற்கும்போது 30-ல் இருந்து 50 காசு வரை லாபம் கிடைக்கிறது. ஆகவே பால் உற்பத்தி செய்யக்கூடிய, கறவை மாடுகள் வைத்து உழைத்து பாடுபடக் கூடிய விவசாயிகளுக்கு பாலுக்கு அதிகப்படியான விலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனவர்கள் பிரச்னை. அப்பிரச்னை குறித்து முடிவு செய்யப்பட்டது. சமாதானம் செய்யப்பட்டது என்று பத்திரிகைகளில் வருகிறது. மறுநாள் இரண்டு பேர்களும் அடித்துக் கொண்டு விட்டார்கள் என்று பத்திரிகைகளில் பார்க்கிறோம். இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது. ஒரு முடிவு எடுத்த பிறகு அதை யார் மீறுகிறார்களோ யாராக இருந்தாலும் அவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தால்தான் அந்த முடிவை அமுலாக்க முடியும் என்பதால் அரசாங்கம் தயவு தாட்சண்யம் காட்டாமல் கடுமையாக இருந்து இந்த நாட்டுப் படகுக்காரர்கள் விசைப்படகுக்காரர்கள் இவர்கள் பிரச்சினைக்கு, சண்டைக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புயல், வெள்ளம் இவற்றினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு கூட்டுறவு கடன்களையெல்லாம் ஒத்திப்போட வேண்டுமென்று பலர் பேசியிருக்கிறார்கள். விவசாயிகள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதுசம்பந்தமான முடிவு விரைவாக அறிவிக்கப்பட வேண்டும்.

தஞ்சை மாவட்டம் புயலால் பாதிக்கப்படவில்லையென்றாலும் தண்ணீர் வராததின் காரணமாக கடைசி ஒரு மாதம் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் மிகக்குறைந்து போய்விட்டது. மாவிற்கு ஆறு கலம் வந்திருக்கிறது. சில விடங்களில் மாவிற்கு நான்கு கலம்கூட விளைச்சல் இல்லை. ஆகவே தஞ்சை மாவட்டம் முழுமைக்கும் இந்தக் கூட்டுறவுக் கடன் வசூலை ஒத்திவைக்கவேண்டும் என்றும் அதற்காக அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியே கிடையாது. நெல் சாகுபடி மட்டும் தான் இருக்கிறது. வேறு எதுவும் இல்லை. ஆகவே தொழில் வளர்ச்சி பெருகுகின்ற அளவில் அங்கு சர்க்கரை ஆலை ஒன்றைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





பொதுத்துறையில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆலங்குளத்தில் ஒரு சிமின்ட் தொழிற்சாலை அரசு தரப்பில் நடந்து கொண்டிருக்கிறது. அரசு ஆலை தான். அதில் பில்டர் அமைப்பு ஏற்படுத்தாதன் காரணமாக—சிமின்ட் தூள்கள்—வெளியே போய்—விவசாய நிலங்களை எல்லாம் வீணாக்கிவிட்டது என்று சொல்லப்படுகிறது. அப்படியில்லாமல் அதில் பில்டர் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு பில்டர் போடவேண்டும் என்று அங்குள்ள விவசாயிகள் கோருகின்றார்கள். அதைச் சுற்றி நான்கைந்து மைல்களுக்குச் சுற்றியுள்ள விவசாய நிலங்கள் எல்லாம் கட்டாந்தரையாகப் போய்விட்டது என்றும் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், கயிறு தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது. 100 யூனிட்டுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. ஆனால் இந்த யூனிட்டுகள் எல்லாம் எப்படி நடைபெற்று வருகிறது என்று சொன்னால்; கேரளாவில் இருந்து கயிறு தயாரிப்பதற்குத் தேவைப்படுகின்ற உயர்ந்த ரக நார்கள், பைபர்கள் கிடைப்பதில்லை. இருந்தும் தொடர்ந்து நமது நாட்டில் இந்த தொழிலில் பலர் நல்ல முறையில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள். இதில் இருக்கின்ற சங்கடம் என்னவென்றால் இந்தத் தொழிலை ஆரம்பிக்கும் போது கடன் கொடுத்தவர்கள் தங்களது இன்ஸ்டால்மென்ட்டை கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இரண்டு ஆண்டுகள் க்ரேஸ் பீரியட் கொடுக்கிறார்கள். ஆனால் இந்தத் தொழிலை ஆரம்பித்து நடத்துவதற்கே இரண்டரை ஆண்டுகள் மூன்று ஆண்டுகள் ஆகிறது. காரணம் இதற்கு தேவைப்படுகின்ற மெஷனரிகள் காலத்தோடு கிடைப்பதில்லை. அரசாங்கத்தின் ஒப்புதல் கிடைப்பதிலும் நாளாகிவிடுகிறது.

ஆகவே இந்தத் தொழிலை ஆரம்பித்தவுடனேயே பணம் கட்ட முடியவில்லை. ஆகவே இப்படிப் பணம் கட்டாத காரணத்திற்காக பீனல் இன்டரஸ்ட் போட்டு விடுகிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் 10 ஆயிரம், 15 ஆயிரம் என்று பீனல் இன்டரஸ்ட் போட்டுவிடுகிறார்கள். இந்த நிலையில் இப்படிப்பட்ட தொந்தரவுகள் கொடுப்பதின் காரணமாக இந்தத் தொழில் சரியாக நடைபெறாது. ஆகவே இதை கவனத்தில் கொண்டு, இதற்காக விதிக்கப்படும் பீனல் இன்டரஸ்டை ரத்து செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரியைப் பொறுத்த அளவில் இது பெரிய இன்டஸ்ட்ரியாக இருக்கிறது. ஆனால் இப்போது நிலைமை என்ன? டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் சேர்மென் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் சென்ற ஆண்டிலுள்ள துணிகள்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்ச் 1]

எல்லாம் தேங்கிவிட்டன. இந்த ஆண்டு துணிகளின் விற்பனையும் குறைந்து போய்விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நிதி அமைச்சர் அவர்கள் நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் முக்கியமாக் காட்டனில் உற்பத்தியாகின்ற துணிகளின் விற்பனை மிகவும் குறைந்திருக்கிறது. இதற்கான காரணம் என்ன என்பதை நாம் தெரிந்தாக வேண்டும். காரணம் என்று நான் கருதுவது, சிந்தட்டிக் நூலினால் தயாரிக்கப்படும் துணிகள் உற்பத்தியாவது அதிகமானதின் காரணமாக காட்டன் துணிகளின் விற்பனை குறைந்திருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். நவீன முறைகள் மேலே மேலே போகப் போக இப்படிப்பட்ட சங்கடங்கள் வந்து கொண்டேயிருக்கின்றது. இதற்கு நாம் ஏதாவது ஒரு வழிவகை காணவேண்டும். இதைப்பற்றி நேஷனல் டெவலப்மென்ட் கௌன்சிலில் நாம் எடுத்துச் சொல்லியாக வேண்டும். இந்தப் பிரச்னை வரப்போவதாகத் தெரிகிறது. அப்படி வரும்போது இந்தப் பிரச்னையை எடுத்துக்கூறி, இந்த நிலை தொடர்ந்து கொண்டிருந்தால் நிச்சயமாக பல நூற்பு ஆலைகளிலும் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதை முக்கியமாக நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு கொண்டு வரவேண்டியது நம்முடைய கடமையாகும்.

அடுத்து, திருச்சி பாய்லர் தொழிற்சாலையில் ஸ்டிரைக் நடக்கிறது. அவர்களுடைய கோரிக்கையைப் பார்த்தால் மிகவும் சாதாரணமானது. அதாவது அவர்களுக்கு வேண்டிய பஸ்ஸை நிறுவனமே விட வேண்டும் என்பதுதான். இதை மானேஜ்மென்ட் எளிதில் செய்து முடித்திருக்கலாம். ஏதோ இதை ஒரு பிரஸ்டிஜ் இஷ்யூவாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு அவர்களுக்கு வேண்டிய பஸ் வசதியை ஏற்படுத்திக் கொடுத்து இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்றுதான், டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. இவர்கள் அரசாங்கத்தினிடத்தில் அனுமதி பெற்றுத்தான் மூடினார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. அனுமதி பெறவில்லை என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாக 250 பேர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதில் அரசாங்கம் முழு கவனம் செலுத்தி இதிலுள்ள பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டும், இல்லையென்றால் அரசே இதை ஏற்றெடுத்து நடத்துவதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவர்களை நியமிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். டாக்டர்களைப் போட்டு விடுவதால் மட்டும் நோய் எல்லாம் போய்விடாது. மருந்துகள் இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமையில் கூட,



1978 மார்ச் 1] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இரண்டு மருத்துவர்கள் இருந்தும் கூட அவர்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் இல்லை. பெரும்பாலான இடங்களிலும் பொதுமக்கள் ஹெல்த் சென்டர்களுக்குப் போவதில்லை. சாதாரண கிராமங்களில் கூட கையில் ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ இருந்தால், அதை பஸ் செலவுக்கு எடுத்துக்கொண்டு அருகாமையிலுள்ள வேறு மருத்துவ மனைகளுக்குச் சென்று விடுகிறார்கள். காரணம் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுவதில்லை. இந்த நிலைமையில் இரண்டு டாக்டர்கள் என்றிருப்பதில், மூன்று டாக்டர்களைப் போட்டு விடுவதால் என்ன பயன் ஏற்பட்டு விடும் என்று தெரியவில்லை. இரண்டு டாக்டர்கள் இருக்கும் இடத்தில் மூன்றாவது டாக்டரை போட்டு விடுவதால் என்ன பிரயோசனம் என்று தெரியவில்லை. அதை விட்டு விட்டு, இன்னொரு டாக்டரை வேறு ஒரு இடத்தில் போட்டால் நல்லது. ஆகவே ஒரே சென்டரில் இன்னும் ஒரு டாக்டரைப் போடவேண்டிய அவசியமே இல்லை.

[முற்பகல் 11-50]

அங்கெல்லாம் இரண்டு டாக்டர்களே போதும். இந்த இரண்டு டாக்டர்களுக்குத் தேவையான மருந்துகளை அந்தப் பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே வைக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், மூன்றாவது டாக்டர் போடுவது என்பது பணம்தான் வீண் விரயமாகும்.

குடி தண்ணீர் திட்டத்திற்கு அதிகமான நிதியை இந்த ஆண்டு செலவழிக்க இருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே குடி தண்ணீர் வசதிக்காக, அங்கெல்லாம் கை பம்புகள் போடப்பட்டிருக்கிறது ; ஆனால் அவைகள் பெரும்பாலும் பல இடங்களில் வேலை செய்வதில்லை. யார் ரிப்பேர் செய்வது என்றால், அதற்குப் போதிய ஆட்கள் இல்லை. இப்போது ஆட்கள் போடப்பட்டிருப்பதாக இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது போதிய ஆட்கள் இல்லை. பல இடங்களில் இந்தக் கைபோர் பம்புகள் 10,000, 20,000 ரூபாய் செலவழித்துப் போடப்பட்டும், அவைகளில் சரியாகத் தண்ணீர் வருவதில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசனங்களுக்கு வீட்டு வசதித் திட்டம். சென்ற ஆண்டு இதற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு இதற்கு 2 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது இந்த சோஷியல் வெல்பேர் இலாகாவிற்கு ஒதுக்கியிருப்பதும் குறைந்த தொகையாகும். ஆகவே, இந்தத் தொகை அரிசனங்களுக்கு போதாது என்ற காரணத்தினால் இன்னும் அதிகப்படியான தொகையை வழங்குவதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

வீடுகள் கட்டிக் கொடுப்பதால் மட்டும் அவர்களுடைய நிலை உயர்ந்து விடாது. இதை நான் நீண்டகாலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். சென்ற முறையும் சொன்னேன். அரிசனங்களுக்கு வீடுகளுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையிலே பாதியையேனும், 4,000 ரூபாய் போட்டு வீடு கட்டிக் கொடுப்பதற்குப் பதில், அவர்களுடைய பொருளாதார நிலை உயரத் தொழிலிலே ஈடுபடுத்துகின்ற ஒரு நிலைமை அல்லது அவர்களுக்கு நிலத்தை வாங்கிக் கொடுத்து, அதிலே விவசாயம் செய்யக்கூடிய முறையிலே வசதிகள் செய்துகொடுத்தால் தான் அவர்களுடைய பொருளாதார நிலை உயரும். ஆகவே, வீடுகளுக்காக ஒரு பகுதியையும், இப்படிப்பட்ட திட்டங்களுக்காக மற்றொரு பகுதியையும் ஒதுக்குவதற்கான திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ள முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அரசு அறிவித்திருக்கின்ற சில வரிகளைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். பஸ் வரி, டீசல் வரி உயர்த்தப் பட்டிருக்கிறது. இதனால் என்னவாகும்? பஸ் ஆபரேட்டர்களுக்கு ரொம்பத் தொகை செலவாகும். அப்படிச் செலவாகின்றபோது, கட்டணத்தை உயர்த்தக்கூடிய நிலைமை வருகிறது. தமிழகத்திலே இன்றைக்கு பெரிய பஸ் முதலாளியாக இருக்கின்றவர் டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் ஆவார்கள். அவருக்குத்தான் இது பெரிய ஸ்டிரெயினாக இருக்கும். நான் ஒன்றைத் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பஸ் ஃபேரை, கட்டணத்தை அரசு உயர்த்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல், தனியார் துறையிலும் இந்த பஸ் கட்டணத்தை உயர்த்துகின்ற நிலையை உருவாகக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயி வருமான வரியிலே 5,000-லிருந்து 10,000 வரைக்கும் இப்போது விதிவிலக்களிக்க உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதேமாதிரி, ஸ்லாப் சிஸ்டத்தில் ரூபாய் கணக்கிடப்படுகின்ற ஒரு விகிதாசாரத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், யார் கணக்கு கொடுக்கிறார்கள்? விவசாயிகள் கம்பவுண்டு செய்து கொள்கிறார்கள். இப்படி அவர்கள் கம்பவுண்டு செய்து கொள்வதால், சிறிய விவசாயிகளும், மத்தியதர விவசாயிகளும் இப்படி கம்பவுண்டு என்று வருகின்றபோது அவர்கள் தான் அதிக வரி கொடுக்க வேண்டியிருக்கிறது.

மிக அதிகமாக வசதியுள்ளவர்களுக்கு, செல்வந்தர்களுக்கு இதனால் வரிப் பளுவை குறைத்திருக்கிறார்கள். இதை நிதி அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். மத்தியதர விவசாயிகளுக்கு வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பெரிய விவசாயிகளுக்கு வரிச் சுமை குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதி அமைச்சர் அவர்கள் இந்த வரியை புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்தியதர விவசாயிகளுக்கு வரியை உயர்த்தக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கைக்குப் பதில் சொல்கின்றபோது, இந்த நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் சர்க்காருடைய பரிசீலனையில் இருப்பதாக, சர்க்கார் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், இதுவரையிலும் இந்தச் சட்டத்தை பரிசீலனை செய்து, எந்த மாற்றமும் கொண்டு வரப்படவில்லை, என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரி சட்டத்தைப் பரிசீலனை செய்யாத காரணத்தினால், இதிலே, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் கஷ்டப்படுகின்றார்கள். கட்டிடங்கள் கட்டப்படுவது தவிர்க்கப்பட்டிருக்கிறது. இதிலே ஈடுபடும் ஊழியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்கின்ற நிலைமையை எல்லாம் நாம் பார்க்கிறோம். ஆகவே, உடனடியாக நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டத்தை பரிசீலனை செய்து, அதைத் தகுந்த முறையிலே திருத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் கட்டிடங்களில் குடியிருப்பவர்களுக்கெல்லாம் ஏகத்தாறாக வாடகையை உயர்த்தியிருக்கிறார்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பல்வேறு இடங்களில் சிறு கடைகளை வைத்து தொழில் நடத்துகிறார்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் தனியார் வாசக சாலை ஒன்று—தேசீய வாசக சாலை என்ற பெயரில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அந்த இடத்திற்கு இட வாடகை—கட்டிடத்தை அவர்களே கட்டிக் கொண்டார்கள்—10 ரூபாயாக இருந்தது 1-5-77-ல் இருந்து 31 ரூபாய், 1-11-77-ல் இருந்து 52 ரூபாய்; 1-5-78-ல் இருந்து 73 ரூபாய்; 1-11-78-ல் இருந்து 94 ரூபாய்; 1-5-79-ல் இருந்து 158 ரூபாய் என்று ஒட்டு மொத்தமாக நோட்டீஸ் கொடுத்து 10 ரூபாய் வாடகையாக இருந்ததை 158 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தினால் எப்படி அதைத் தாங்க முடியும்? அவர்கள் மாநாடு கூட்டி அரசுக்குக் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.

சென்னை கச்சாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ஜெயராமன் என்பவர் 16 அடிக்கு 8 அடி இடத்தில் ஒரு கடை வைத்திருக்கிறார்; அவர் 45 ரூபாய் வாடகை கட்டி வந்தார்; இன்றைக்கு 155 ரூபாயாக உயர்த்தி ஒரு வருஷத்திற்குச் சேர்த்துப் போட்டிருக்கிறார். 1,065 ரூபாய்க்கு டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து உடனே கட்டாவிட்டால் காலி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படி ரொம்பச் சங்கடமான நிலைமையைப் பல்வேறு வியாபாரிகளுக்கு ஏற்படுத்தும் காரணத்தால், நியாயத்திற்கு உட்பட்டு செயல்படும் முறையை அரசு எடுக்க வேண்டும். ஒட்டு மொத்தமாக அதிகாரிகளிடம் விட்டு விட்டால் என்ன வேண்டுமானாலும் செய்து கொண்டே இருப்பார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டும்.

எங்கு பார்த்தாலும் நாட்டில்—வட மாநிலங்களில் அரிசனங்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், அடிக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் கொலை செய்யப்படவில்லையே தவிர, பல்வேறு இடங்களில் துன்புறுத்தப்படுகிறார்கள், அடிக்கப்படுகிறார்கள். அவ்வாறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். யார் அரிசனங்களுக்கு விரோதமாகச் செயல்பட்டாலும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிக்கனுங்குப்பத்தில் அரிசனங்கள் தாக்கப்பட்டது குறித்து சென்ற கூட்டத் தொடரிலேயே ரூல் 41 விதியின்கீழ் தீர்மானம் கொடுத்திருந்தும் கடைசி வரை பதில் வரவில்லை; இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகவும் தெரியவில்லை. அந்த மாதிரி இடங்களில் எல்லாம் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து வட மாநிலங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை, தமிழகத்தில் ஏற்பட்டுவிடாமல் அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

திரிசூலம் என்ற கிராமத்தில் கருங்கல் உடைக்கும் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து கோவாப்பரேட்டிவ் சொசைடி ஏற்படுத்தி தங்களுக்கு லைசென்ஸ் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் ஒரு வருஷமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்று தனியார்தான் அதிலே கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திரிசூலம் கிராமத்திலுள்ள கருங்கல் ஜல்லி உடைக்கும் உழைப்பாளர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் இறந்து விட்டால் 10,000 ரூபாய் கொடுப்பதற்கு திட்டம் வைத்திருக்கிறார்கள். நல்ல திட்டம்; ஆனால் அரசு ஊழியர்கள் செயல்பட முடியாத அளவுக்கு அங்கஹீனமுற்றோ, நோய்வாய்ப்பட்டோ இருந்தால், உயிரோடு இருக்கிறார்களே தவிர, உயிரோடு இருக்கும் மனிதர்களைப் போல் செயல்பட முடியாத நிலையில் இருந்தால் அவர்களுக்கும் இந்தத் தொகையை அளிக்கும் கொள்கையை வகுப்பது பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துப் பகுதிகளில் தெரு விளக்குகளுக்கு முன்பு எலக்ட்ரிசிடி போர்டே பல்புகளைப் போட்டு ஒரு தொகையைக் கட்டணமாக வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது பஞ்சாயத்துக்களே பல்புகளை வாங்கிப் போடுவது, மீட்டர்களை வைப்பது என்ற முடிவு செய்யப்பட்டது. இதனால் பஞ்சாயத்துக்களால் பல்பும் வாங்க முடியவில்லை. கட்டணமும் கட்ட முடியவில்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரில் வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் போது முன்பு டெபாசிட் 120 ரூபாய் கட்ட வேண்டுமென்று இருந்தது. இன்று 640 ரூபாய் வரை கட்ட வேண்டுமென்று சொல்லுவதாகத் தெரிகிறது. இவ்வாறு ஒரு நண்பர் எனக்கு எழுதியிருக்கிறார்.





[நண்பகல் 12-00]

ஆகவே இந்த 120 ரூபாயை 640 ரூபாயாக உயர்த்தியிருப்பதால் அது சிறு வீடுகளுக்கு மின் இணைப்புக்கு அவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்வது தாங்க முடியாது, குறிப்பாக, சிறு குடும்பங்களுக்கும் மத்திய வர்க்கத்தினருக்கும் தாங்க முடியாததாக இருக்கும். ஆகவே, பழைய மாதிரியே 120 ரூபாய் கட்டினால் போதும் என்று ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலியில் கொடுமுடியாறு அணைத் திட்டம் 40 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு இன்றைக்கு கைவிடப்படுவதாகச் சொல்லப்படுகிறது அந்த எஞ்சினியர் ஆபிஸ் கூட மூடப்படுவதாகச் சொல்கிறார்கள். அங்கே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 40 லட்சம் ரூபாய் செலவழித்தும் கூட ஏன் நடத்தப்படவில்லை என்பதை அரசு பரிசீலனை செய்து அதை அமலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே திருநெல்வேலி மாவட்டத்திலே சிவகிரியில் கோம்பை அணைத் திட்டம் திட்டமிடப் பட்டது, ஆனால் அமலாக்கப்படாத நிலையில் இருக்கிறது, அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலே வெற்றி வேந்தன் நாடக சபாவினர் தீண்டாமை மதுவிலக்கு சம்பந்தமான நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். பத்து ஆண்டுகளாக. ஆனால், அவர்களுக்குத் திடீரென்று லைசென்ஸ் கொடுக்கப்படாமல் வேறு யாருக்கோ கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். ஏதோ கட்சிக் கண்ணோட்டத்தோடு அப்படிச் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் அது தவறான காரியம். பத்து ஆண்டுகளாக நடத்தி வந்தவர்களுக்கு மீண்டும் லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கு பேசிய பல்வேறு உறுப்பினர்களும் கட்சிகளின் தலைவர்களும் இந்த அவையில் அரசாங்கத்தினுடைய கொள்கை ஏடான ஆளுநர் உரை ஆற்றப்படாமல் நிதிநிலை அறிக்கைக்கே நேரடியாக வந்து விட்டது அவையின் மரபுக்கு உகந்தது அல்ல என்பதையும் சுட்டிக் காட்டி இப்படி ஒரு தவறு நடந்தது வருந்தத்தக்கது என்ற தங்களுடைய ஆழ்ந்த கவலையையும் தெரிவித்து அரசாங்கத்தினுடைய கொள்கையின் மீது 6 அல்லது 7 நாட்கள்

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

விவாதிக்கக் கூடிய வாய்ப்பினை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் இழந்துவிட நேரிட்டது என்பதையும் குறிப்பிட்டு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை நானும் வழிமொழிகின்ற நிலையிலே இருக்கிறேன்.

ஆளுநர் என்கின்ற பதவி ஒன்று தேவையா என்ற வினா எழுகின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கின்ற பதில் வேறானது. ஆனால் அந்தப் பதவி ஒன்று இருந்து அந்தப் பதவிக்கு உரியவர் மூலமாக அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கங்கள் நிதிநிலை அறிக்கைக்கு முன்பு வைக்கப்படுகிற மரபு இந்த ஆண்டு கைவிடப் பட்டிருப்பது உள்ளபடியே ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என்பதை நான் அவை முன்னவர் என்னுடைய நண்பர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு வரவாக வரக்கூடியது 680 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டுவிட்டு இதுவும் பற்றாக் குறை நிதிநிலை அறிக்கை தான் என்றும் நிதியமைச்சர் தன்னுடைய அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்: கடந்த 7, 8 திங்கள்களுக்கு முன்பு நிதி நிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்து அந்த அறிக்கையில் பற்றாக் குறை எவ்வளவு என்பதைச் சுட்டிக் காட்டி இந்தப் பற்றாக்குறையை எந்த எந்த வகைகளில் எல்லாம் சரிக்கட்டுவோம் என்பதற்காக சில வழிமுறைகளை எடுத்துச் சொல்லி அவைகளிலே தலைசிறந்த வழி முறை லஞ்ச லாவண்யங்கள், ஊழல்கள் இவைகளை ஒழிப்பதன் மூலம் இந்தப் பற்றாக் குறை சரிக்கட்டப்படும் என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

பற்றாக் குறை சரிக்கட்டப் படாத நிலையைக் காணுகிற நேரத்திலே அவர்கள் குறிப்பிட்ட லஞ்ச லாவண்யங்கள், ஊழல்கள் இவைகள் எல்லாம் இன்னும் அகற்றப்படவில்லையோ என்ற ஐயப்பாடு—இப்படி பற்றாக்குறை மேலும் வளருகிற நேரத்திலே—அவை உறுப்பினர்களுக்கு ஏற்படாமல் இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் "பார்த்தீர்களா இந்த ஆண்டு எங்களுடைய வரவு-செலவுத் திட்டத்தில் 680 கோடி ரூபாய் வரவு காட்டியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு 500 கோடி ரூபாய் அளவிற்குத்தான் தங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே வரவினைக் காட்டினார்கள். இது எவ்வளவு பெரிய முன்னேற்றம்" என்றெல்லாம் அதை ஒரு பெரிய சாதனை என்ற தலைப்பிலேகூடக் கொண்டுவந்து இங்கே உரையாற்றினார்கள். அவர்கள் அவைகளை வேண்டுமென்று பேசினார்கள் என்று நான் கருதவில்லை. சிலர் புரிந்து கொண்டு பேசியிருக்கலாம். சிலர் அதைப் பற்றி புரியாமலும் பேசியிருக்கலாம்.



1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

ஆனால், இந்த அவைக்கு நான் விளக்க வேண்டிய அவசியத்திலே இருக்கின்ற ஒன்று, 1968-69 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்த பொழுது வரவு வரும் என்று எதிர் பார்க்கப்பட்ட தொகை 248 கோடி ரூபாய், 1975-76 இல், அதாவது கழக அரசு கலைக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் இந்த அரசினுடைய வரவு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட எதிர் பார்க்கப்பட்ட வரவு 501 கோடி ரூபாய். பிறகு 1976—77-இல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் 501 கோடி ரூபாய் 576 கோடி ரூபாயாக வளர்ந்து 1977—78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை நாடாளு மன்றத்திலே நிதியமைச்சர் எச் எம். படேல் அளித்தபொழுது அது 635 கோடி ரூபாய் வரவு என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த 635 கோடியாக வளர்ந்தது தான் 1978—79 ஆம் ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் 680 கோடி ரூபாய் வரவு வரும் என்று வடிவம் எடுத்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

இதிலே மிக முக்கியமாக மூன்று துறைகளை எடுத்துக் கொண்டால், கல்வி வேளாண்மை மருத்துவம் ஆகிய இந்தத் துறைகளுக்குச் செலவிடப்பட்ட தொகை 1968—69 ஆம் ஆண்டிலே எவ்வளவு என்பதையும் இப்பொழுது எவ்வளவு என்பதையும் ஒப்பிடுகின்ற நேரத்தில் இது எப்படி படிப்படியாக வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 248 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட 1968—69 ஆம் ஆண்டில் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய இந்த மூன்று முக்கிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 87.10 கோடி ரூபாய், 501 கோடி ரூபாய் வரவு வரும் என்று மதிப்பிடப்பட்ட கழக ஆட்சியில் அதாவது 1975—76 இல் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய இந்த மூன்று துறைகளுக்காக 181.78 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் ஆட்சியில் 1976—77 இல் 576 கோடி ரூபாய் வரவு வரும் என்று மதிப்பிடப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் இந்த மூன்று துறைகளுக்கும்—கல்வி, வேளாண்மை மருத்துவம் ஆகிய மூன்று துறைகளுக்கும்—195.64 கோடி ரூபாய் மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 635 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்த்து மதிப்பிடப்பட்ட 1977—78 ஆம் ஆண்டு ற்
எச். எம். படேல் நாடாளுமன்றத்தில் வைத்த நிதிநிலைக்கிய
அறிக்கையில் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிந்திருக்கிறது
ளுக்கு 229-69 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிப்பிடுவதற்கே
பொழுது 680 கோடி ரூபாய் வரவு வரும் என்று எழகத்தினுடைய
படுகின்ற பொழுது இந்த மூன்று துறைகளுக்கும் 25ன்னேற்றத்திலே
ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 69-ம் ஆண்டு
கு, தொடர்ந்து

ஆக, 229 கோடியிலிருந்து 253 கோடியாக உ, இன்றைக்கு
வரவும். படேல் அவர்கள் பட்ஜெட் சமர்ப்பித்தப்பட்டுள்ள முன்
கோடியாக வளர்ந்தது, 680 கோடியாக இப்பெதுக் கழக அரசு
நிலையை அடைந்திருக்கிறது. கூடாது.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

ஏதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் அவ்வப்பொழுது வரவுகள் அதிகப்பட்டு வருகின்ற நேரத்தில் அதற்கான ஒதுக்கீடு களும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன என்பதைத்தான் இது காட்டுகிறது என்பதைச் சுட்டிச் சொல்லத்தான் இந்த விவரங்களை இந்த மாமன்றத்தில் நான் சொல்ல முன் வந்தேன்.

இப்படி ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் மக்கள் ஆட்சி நடைபெற்றாலும், அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்காமல் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றாலும், வரவுக்கு ஏற்றவாறு ஒதுக்கப்படுகின்ற நிலை மையைத்தான் இந்த அறிக்கைகள் சுட்டிக் காட்டிக் கொண் டிருக்கின்றன.

இது ஒரு மரபு வழியில், நேற்றைய தினம் பேராசிரியர் குறிப்பிட்டதைப் போல தொடர்ந்து நடைபெற்று வருகின்ற செலவுகள், ஒதுக்கீடுகள், வரவுக் கேற்றவாறு ஒதுக்கப்படுகின் றன என்ற அளவிலே நாம் இதை வரவேற்கிறோம். அதுதான் நிலைமை என்பதை உணர்கிறோம்.

இதற்கிடையிலே நாங்கள் புதிதாகத் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தப் புதிய அரசினுடைய கொள்கைகள், திட் டங்கள், அவைகளின் மூலம் செய்யப்படப் போகின்ற காரியங்கள் சாதனைகள் என்னென்ன என்பதைத்தான் இந்த அவையிலே நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

அப்படிப்பட்ட கொள்கை அறிவிப்புகளும், புதிய திட்டங் களும் எதுவும் இல்லாமல், தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்ற வருவாய்க்குத் தக்க பல துறைகளுக்கு ஒதுக்கிடு செய்திருக்கிற இந்தத் தொகை அதிகப்பட்டிருக்கிறதே யல்லாமல், கழக ஆட்சிக்காலத்திலே என்ன நடைபெற்றது என்ற வினா எழுப்புகிறவர்களைப் பார்த்து நான் சொல்ல விரும்புவ தெல்லாம், கழக ஆட்சிக்காலத்திலே அரசு அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த கொள்கை வழிநின்று பல திட்டங்களை ஒவ் வொரு நிதிநிலை அறிக்கையிலும், கொள்கை அடிப்படையிலும் அறிவித்து, அதற்கேற்ப நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறது என்
68ப பதை மாமன்றத்து உறுப்பினர்கள், இன்றைக்கு ஆளுங்கட்சி
இருப்பவர்கள், ஆளுங்கட்சியிலே இருக்கிறோம் என்
னேற்றக் க திற்காக மறுத்தாலும் கூட, அவர்களுடைய மனதிலே
ளுடைய எல்லாம் நிச்சயமாக நிழலாடாமல் இருக்கமாட்ட
இது எவ்வள ால்ல விரும்புகிறேன்.
ஒரு பெரிய
இங்கே உரை ணமாகச் சொல்லவேண்டுமானால், 1968–69 ஆப
மென்று பேசி ாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர், ஆகிய இரண்டு
கொண்டு பேசி ன்களுக்காக, ரூ. 6 கோடியே 51 இலட்சம் அளவிலே
பேசியிருக்கலா ஒதுக்கம் செய்யப்பட்டது. அந்த ரூ. 6 கோடியே
ம் நிதி ஒதுக்கமும் பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்



1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

தப்பட்டவர்களும் என்று சேர்த்து ஒதுக்கப்பட்ட தொகை.
அந்த ரூ. 6 கோடியே 51 இலட்சத்தில் பிற்படுத்தப்பட்ட
மக்களுக்குச் செல்விடப்பட்ட தொகை எவ்வளவு என்று பார்த்
தால், ரூ. 1 கோடியே 73 இலட்சம்தான். இதிலே, அரிசனங்க
ளுக்கு அதிகமாகச் செலவிட்டார்கள், பிற்படுத்தப்பட்டவர்
களுக்குக் குறைவாகச் செலவிடப்பட்டது என்கின்ற குறைபாட்டை
நான் சொல்ல வரவில்லை.

அரிசனங்களுக்கும் இன்னும் அதிகமாகச் செலவிடவேண்டு
மென்கிற அதே நேரத்தில், மக்கள் தொகையில் அவர்களைவிட
அதிகமாகவுள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் அதிகமாகக்
செலவிட வேண்டுமென்ற குறிக்கோளுடன் 1969-க்குப் பிறகு
கழக அரசு தாழ்த்தப்பட்டோர் நலன், பிற்படுத்தப்பட்டோர்
நலன் ஆகிய இரண்டு சமூகத்தாருக்கும் விரிவாகப் பணியாற்ற
வேண்டுமென்ற ஒரு கொள்கை நோக்கோடு, ஒரு வழிமுறையை
வகுத்து, அரிசன நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
இரண்டையும் அன்றைக்கு இருந்ததை மாற்றியமைத்துத் தனித்
தனி இலாகாக்களாக்கி, தனித்தனி இலாகாக்கள் ஆக்கியது
மாத்திரமல்ல; அந்த இலாக்காக்களைத் தனித்தனி அமைச்சர்
களிடம் ஒப்படைத்தோம். இன்னும் சொல்லப்போனால், பிற்
படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் என்கிற தலைப்பிலே
ஒரு அமைச்சர் உருவாக்கப்பட்டு, அவரிடத்திலே வேறுசில
இலாகாக்களும், பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டன என்பதை
நாடு நன்கு அறியும்.

அப்படி இலாகாக்கள் பிரிக்கப்பட்டு அமைச்சர்களும் தனித்
தனியாக ஆக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்
டோர் நலன்களைக் கவனிப்பதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டு
அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, ரூ. 1
கோடியே 73 இலட்சம் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக
1969-ல் ஒதுக்கப்பட்டதற்குப் பதிலாக, 1975–76-ஆம் ஆண்டில்
ஏறத்தாழ 6 கோடி ரூபாய் பிற்படுத்தப்பட்டோர் நன்மைக்
காக ஒதுக்கப்பட்டது என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1975–76-ல் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக ரூ. 11 கோடி
ஒதுக்கீடு செய்யப்பட்டது. அன்றைக்குக் கழக அரசு பிற்
படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு ஒதுக்கிய
ரூ. 17 கோடி இன்றைக்கு ரூ. 25 கோடியாக உயர்ந்திருக்கிறது
என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. நான் குறிப்பிடுவதற்கே
காரணம், இது அரசினுடைய, அரசை இயக்கிய கழகத்தினுடைய
தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திலே
கொண்டிருந்த கொள்கை அடிப்படையிலே 1969-ம் ஆண்டு
அறிவிக்கப்பட்ட ஒரு பிரகடனம். அதற்குப் பிறகு, தொடர்ந்து
செய்யப்பட்ட சாதனை. அதன் காரணமாக, இன்றைக்கு
நாட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள முன்
னேற்றம், வளர்ச்சி, இவைகளுக்கு, அன்றைக்குக் கழக அரசு
அடித்தளம் அமைத்தது என்பதை மறந்து விடக்கூடாது.

[பிற்பகல் 12—10]

மனு நீதித் திட்டம் என்ற ஒன்றைக் கழக அரசு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, 1969-லே அறிவித்து, மக்களுடைய குறைகளைக் கூடுமானவரையில் அந்தந்த இடத்திலேயே தீர்ப்பது என்பதற்கேற்ப கிராமங்களை நாடி அதிகாரிகள் சென்றார்கள்; ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக் கணக்கான மனுக்களைப் பெற்று அவைகளுக்கான தீர்வுகள் அங்கங்கே காணப்பட்டன.

அதை நான் சொல்வதை விட State Administra 'on Repoit என்ற தலைப்பில் உள்ள புத்தகம் 1977 ஆம் ஆண்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியிலே அச்சேற்றப்பட்டது. நல்லவேளையாக, 1977-லே அச்சேற்றப்பட்டாலும் கூட, 1975—76 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரையிலும், கழக அரசு புரிந்த சாதனைகள் எதையும் அந்த ஏடு மறைத்திடவில்லை. இன்றைக்குள்ள தலைமைச் செயலாளர் அவர்கள்தான் இதற்கு முன்னுரையும் கூட எழுதியுள்ளார். ஆனால் இவைகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படாமல் 7, 8 பிரதிகளே காக்கப்பட்டிருக்கிறது, என்றும் அனைவருக்கும் வழங்கப் பட்டிருந்தால் கழக ஆட்சி அடித்தளத்து மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எந்தெந்தத் வகையில் எல்லாம் ஆற்றிவந்தது என்கின்ற பேருண்மை மற்றவர்களுக்குத் தெரிந்து விடக்கூடாது என்ற காரணத்தால் மற்றவர்களுக்கு மறைக்கப்பட்டு விட்டது என்ற செய்தியும் உலவுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியாது.

அந்த அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டிலே, 1977 ஆம் ஆண்டிலே அச்சிடப்பட்ட அந்தப் புத்தகத்தில் கழக ஆட்சியில் வெளியான சாதனைகள் வரிசையாகத் தொகுத்து வெளியிடப் பட்டிருக்கிறது. அதில் ஆங்கிலத்திலே உள்ளதை அப்படியே தமிழில் நான் இங்கே படித்துக் காட்டுகிறேன்.

''1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஏற்படுத்தப் பட்ட குடிசை மாற்று வாரியத்தினுடைய குறிப்பின்படி, சென்னை நகரில் 1,202 குடிசைப் பகுதிகள் இருப்பதாகவும் அவைகளில் மொத்தம் 1,63,804 குடும்பங்கள் இருப்பதாகவும் அந்தக் குடும்பங்களிலே மொத்தம் 7½ லட்சம் பேர்கள் வாழ்வதாகவும், அவர்களுக்காக 38,335 குடியிருப்புகளை கட்டுவதற்கு, 132 குடிசை மாற்று வாரியத் திட்டங்களில் கட்டுவதற்கு, 33½ கோடி ரூபாய் அரசினால் வழங்கப் பட்டது. இது வரையில்—அதாவது மார்ச்சு 1976 வரையில் 183,85 குடியிருப்புக்கள் கட்டப்பட்டன. இன்னும் 3,044 குடிசைகள் கட்டப்படவிருக்கின்றன. ஆக மொத்தம் 21 ஆயிரம் குடியிருப்புக்கள் கட்டிமுடிக்கப்பட்டன.''

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் சென்னையில், திடீர் திடீரென்று குடிசைகள் தீப்பிடித்து எரிந்ததன் விளைவாக, அண்ணா அவர்கள், எரியாத வீடுகள் கட்டித்





தருகின்ற திட்டத்தை அமுல்படுத்தினார்கள். அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, அந்தத் திட்டமும் மறுபரிசிலனை செய்யப்பட்டு, அதைவிட குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடிசைவாழ் மக்களுக்கு, மாடி வீடுகள் கட்டித் தருகிற அந்தத் திட்டம், நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, அதற்கென்று கட்டப்பட்ட வீடுகள்தாம் அந்த 21 ஆயிரம் குடியிருப்புக்கள். நகரத்திற்குத்தானே செய்தீர்கள் கிராமங்களுக்கு என்ன செய்தீர்கள் என்று இந்தக் குறிப்பினை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பயன்படுத்த மாட்டார் என்று நாம் நம்புகிறோம்.

அதே அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டிலே, 1974—75-ல் தாழ்த்தப்பட்டோர் நல வீட்டு வசதிக் கழகம் செயல்படத் தொடங்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் வீடுகளைக் கட்டுவதற்காக, மாநில அரசால் கையகப்படுத்தப்பட்ட மனைகளைப் பெற்று, பல இடங்களில் முதல் கட்டமாக ஒரு லட்சம் வீடுகளை, 5 ஆண்டு காலத்திற்குள் கட்டுவதற்காக, திட்டம் வகுக்கப்பட்டு, நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, 1975—76 ஆண்டு இறுதிக்குள், ஏறத்தாழ 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அரிசனங்களுக்கு இலவசமாகக் கட்டித்தரப்பட்டது. அதே 1975—76 ஆண்டு ரிப்போர்ட்டில் இதுவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்திலே ஒன்றை நிதி அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சென்ற நிதி நிலை அறிக்கையில் அவர் குறிப்பிட்டார். அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் அறிவித்தார். ஆனால் நான் விசாரித்து அறிந்து கொண்ட வகையில் அப்படி வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை அந்த வாரியத்திற்கு அளிப்பதற்கான அரசாங்க ஆணை, இதுவரையிலே பிறப்பிக்கப்படவில்லை என்கிற வருந்தத்தக்க செய்தியினை நான் கேள்விப்பட்டேன். நிதி அமைச்சர், அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்து 7 மாதங்கள் ஆகியும் அந்த வாரியத்திற்கு அந்தப் பணத்தை ஒதுக்குவதற்கான அரசாங்க ஆணை இது வரை 7 மாதங்களுக்குப் பிறகும் இன்னும் பிறப்பிக்கபட வில்லை என்பது பெரிய குறைபாடு. அதை நிதி அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னுடைய பெரிய கடமையாகும்.

[பிற்பகல் 12—20]

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

எனவே, கிராமங்களிலே இருக்கும் அரிசனங்களுக்கும், மீனவர்களுக்கும் இலவசமாக வீடு கட்டித் தருவது என்கின்ற கொள்கை வழித் திட்டத்தை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

கிராமங்கள், சிறு கிராமங்கள், பெரு நகரங்கள் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை பெருக்குவதற்காகத்தான் கழக அரசு குடிநீர் வாரியத்தை அமைத்து, விரிவான அளவில் அந்தப் பணியை நிறைவேற்றி இருக்கிறது. கிராமத்தைப் பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் பல இடங்களில் குறிப்பிட்டு இருப்பதை ஆளும் கட்சி உறுப்பினர்களும், தோழமைக் கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் காட்டி, எத்தனை இடங்களில் கிராமங்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று கூறி விட்டு, எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். நானும் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

1971–1972 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்—நான் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலம்—நான் நினைவூட்ட விரும்புகிற அந்த வாசகம்—"பரந்து கிடக்கின்ற பல்லாயிரம் கிராமங்களிலும், பட்டினக் கரைகளிலும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் அளிப்பது என்பதை நோயற்ற வாழ்விற்கான அருமருந்தாகக் கருதி, இந்த அரசு வேகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற குடிநீர் திட்டம் ஒன்றை அமைத்துள்ளது" என்று அப்போதே குறிப்பிட்டு இருக்கிறேன்.

கிராமங்களை முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் கவனிக்கவில்லை என்று சொல்லுகிறார்களே, அதற்காக 1971 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள வாசகத்தையும், அதன் தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகளையும் நான் இங்கே எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமையாகும் என்று கருதுகிறேன்.

1971–1972 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள மற்றொரு வாசகத்தையும் நினைவூட்டுகிறேன். "நகர் புறங்களின் வசதி வாய்ப்புகளை கிராமப்புறத்து மக்கள் ஒருகால் கட்டத்திற்குள் பெற்றிட வேண்டும் என்னும் குன்றா ஆர்வத்துடன் செயல்படும் இந்த அரசு வெகு விரைவில் எல்லா கிராமங்களுக்கும் மின் ஒளியும், மின் வசதியும் கிடைத்திட முயற்சிகள் மேற்கொள்ளும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறேன்.

1973-1974 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட "கிராம முன்னேற்றம்" என்ற தலைப்பில் நான் வெளியிட்ட வாசகங்களை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். "ஆயிரத்து ஐநூறு மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களையும் இடையே உள்ள ஊர்களையும் முக்கிய சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகள் அமைப்புத் திட்டம் ஒன்றைக் கடந்த ஆண்டு வரவு செலவு—திட்ட அறிக்கையில் நான் வெளியிட்டேன். இவ்வகையிலே 19 கோடி ரூபாய் அளவில் தீட்டப்பட்ட திட்டத்தின் கீழ் 1972–1973 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். இப் பணிக்கென 1973–1974 ஆம் ஆண்டிலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது," என்று குறிப்பிட்டு இருக்கிறேன்.



1978 மார்ச் 1 [திரு. மு. கருணாநிதி]

எனவே, கிராமங்களுக்கு சாலை வசதித் திட்டம், குடிநீர் திட்டம், வீட்டு வசதி திட்டம், சுகாதார திட்டம், இவைகள் அத்தனையும் முன்பு இருந்த கழக ஆட்சி காலத்தில் துவங்கப்பட்ட திட்டங்கள் என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, இத்தகைய நல்ல காரியங்கள் முந்தைய ஆட்சியில் நடைபெற்று இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், கிராமங்கள் கிராமங்கள் என்று பல இடங்களில் சொல்லப்பட்டு இருந்தாலும், கிராம வளர்ச்சி பற்றி பேசப்பட்டு இருந்தாலும், குறிப்பாக கிராமத்திட்டங்களை, இன்னின்ன காரியங்களைச் செய்தோம், செய்கிறோம், எந்த அளவிற்கு தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரங்களை நிதி அமைச்சர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. எனவே, புதிய அறிவிப்புகள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்ற குற்றச் சாட்டை திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் அல்ல மற்றும் உள்ள கட்சியின் தலைவர்களும் இங்கே எடுத்துக் காட்டி இருக்கின்றனர்.

குடியிருப்பு மனைகள் குடியிருப்பவர்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தது திராவிட முன்னேற்ற கழகம். அது நகரங்களுக்கா, கிராமங்களுக்கா, என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தச் சட்டத்தின் மூலம் பயன் பெற்ற குடும்பங்கள் 1,28,000 குடும்பங்கள். அந்த 1,28,000 குடும்பங்களில் முக்கால் வாசிபேர் விவசாயிகள், தாழ்த்தப் பட்ட மக்கள் எஞ்சியோர் பிற்படுத்தப்பட்ட மக்கள். அந்தச் சட்டம் இயற்றப்பட்டு, அதற்கான செயல்படுத்தப்படுகின்ற விழா திருத்துறைப் பூண்டியில் நடத்தப்பட்டபோது மறைந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். 'பல ஆண்டுகாலமாக சொந்த குடிசையில் படுத்துத் தூங்க வழி இல்லாத அரிசன பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்று இரவு இந்தக் கூட்டம் முடிந்ததும் வீட்டிற்குச் செல்லுகிற நேரத்தில் அப்பாடா, இன்று தான் சொந்தக் குடிசையில் தூங்கப் போகிறேன் என்று சொல்வார்கள் என்று உணர்ச்சிப் பெருக்கெடுக்க அவர் கூறிய வாசகத்தை நான் மறந்து விடுவதற்கு இல்லை. எனவே அந்தக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க செய்யப்பட்ட அந்தச் சட்டம் கழகம் தன்னுடைய அகத்திலே கொண்டு இருக்கிற கொள்கையின்பால் விளைந்த சட்டம் என்பதையும் மறந்து விடக்கூடாது.

30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று காங்கிரஸ் ஆட்சியில் உச்ச வரம்பு கொண்டுவரப்பட்டு, அது 15, ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைக்கப்பட்டு, குறைக்கப்பட்டது மட்டும் அல்ல; அதுவரை உபரியாக இருந்த நிலங்களை, அதற்கு முன்பிருந்த அரசு கையகப் படுத்தாத நிலங்களை, ஏறத்தாழ 30,000 ஏக்கரா நிலங்களை கையகப்படுத்தி; நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தகுதியுள்ளவர்களுக்கு அளித்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை நினைவூட்டக்கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

இந்தியாவிலேயே மின்வசதி இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு தான் கழக ஆட்சிக்காலத்தில்.

அரியானாவை சொல்வார்கள். அரியானாதான் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளித்தது என்று, அந்த அரியானாவை நம்முடைய தமிழ் நாட்டுடன் கணக்கிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டிலேயே இருக்கிற செங்கல்பட்டு மாவட்டம் அளவுதான் அரியானா அதை மறந்துவிடக்கூடாது. முதல் மாநிலம் என்ற வரிசையில் அந்த அரியானாவை முதலில் வைத்து, தமிழ்நாட்டை இரண்டாவதாக வைப்பது சரியாக இருக்கலாம். ஆனால் நிலப்பரப்பு சரியாகாது. அதை விட பல மடங்கு பெரிய அளவு கொண்ட தமிழ் நாட்டில் இன்னும் 1000 அல்லது 1500 கிராமங்கள் தவிர மற்ற எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி, அதிலும் குறிப்பாக 20,000-க்கு மேற்பட்ட அரிசன காலனிகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசில் தான்.

அவைகளை எல்லாம் மறந்துவிடாமல் நம்முடைய தலைமைச் செயலாளர் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் தேதி வெளியிட்ட 1974-1975 ஆம் ஆண்டு ஸ்டேட் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டில் அதை வெளியிட்டார்கள். அதிலே ஆச்சரியம். அந்த அறிக்கையிலே கூட குடியரசுத் தலைவர் ஆட்சியில் தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்களுடைய முன்னுரையில்

"It is hoped that this publication will prove to be very useful, in that it contains a detailed account of the progress made by the State in all its developmental activities, particularly in the implementation of the Plan Schemes and the social welfare measures."

என்று மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளியிடப்பட்டது குடியரசுத் தலைவர் ஆட்சியில், அந்த உரை கிழிக்கப்படாமல் வெளியிடப்பட்டது மகிழ்ச்சியளிக்கக்கூடியது. அது இங்கே மறைக்கப்பட்டிருந்தாலும் இந்த மாமன்றத்திலே இப்போது என்னுடைய உரையின்மூலம் வெளியிடப்பட்டிருக்கிறது என்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்று அந்தக் கொள்கை அண்ணா அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பிறகு அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அது தீவிரமாக்கப்பட்டு, பெரிய பஸ் அதிபர்களின் ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் கைப்பற்றப்பட்டு, டி. வி. எஸ்., ராமன் அண்டு ராமன் , ஏ. பி. டி., போன்ற பெரிய கம்பெனிகளை அரசு ஏற்று, தந்தை பெரியார், அண்ணா கட்டபொம்மன், சேரன், சோழன், பாண்டியன் பல்லவன் ஆகியோர் பெயரால் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.



1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

இன்றைக்கு திரு மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதி அளிப்பது பற்றிக் கூறினார்கள். பணிக் காலத்தில் மறைந்து விட்ட அரசு ஊழியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதியாக 10,000 ரூபாய் தருவது என்ற மிக அருமையான திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் அறிமுகப் படுத்தியது என்பதை மறந்துவிடுவதற்கில்லை. ஆக, நகரங்கள், சிறு நகரங்கள், கிராமங்கள், பட்டித் தொட்டிகளில் வாழும் மக்கள், அடித்தளத்திலே இருக்கிற மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய இந்தக் காரியங்கள் ஏதோ இன்றைக்கு கேலி செய்யப்படுகின்றவைகளாக இருந்தாலும் அவைகள் மறைக்கப் படக் கூடிய காரியங்கள் அல்ல. இன்று அவைகளைத்தான் இந்த அரசு தொடர்ந்து செய்து வருகின்றது. சிலவற்றை அவர்கள் மந்தப் போக்கிலே செய்து வந்தாலும் அவைகளை கைவிட்டுவிட முடியாத அளவில் செய்து வருகிறார்கள்.

நிதியமைச்சர் கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த சில காரியங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆனால் அதோடு நிறுத்திவிடாமல் ஒவ்வொரு கட்டத்திலும் புதிய புதிய திட்டங்கள் அடித்தளத்து மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவைகள் இந்த அறிக்கையிலே காணப்படவில்லை என்பதை கழகத்தின் சார்பாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரி, சென்ற அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட அல்லது கவர்னர் உரையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்களாவது நிறைவேற்றப்படும் திட்டங்களாக இருக்கின்றனவா என்றால் இல்லை. 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று — கவர்னர் சென்ற ஆண்டு அறிவித்தார்கள். இப்போது கவர்னர் உரை இல்லாமல் இருப்பதற்கு காரணம், ஒருவேளை கவர்னர் ஆற்றிய அந்த உரை நினைவிற்கு வந்து, அந்த 16,000 நியாயவிலைக் கடைகள் எங்கே என்று கேட்டுவிடுவார்களோ என்பதற்காக நம்முடைய திறமையான நிதியமைச்சர், அதை (avoid) 'அவாய்ட்' செய்து விட்டாரோ என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-30).

16,000 நியாயவிலைக் கடைகள் அறிவிக்கப்பட்டு பிறகு ஏழெட்டு மாதங்களாகியும் பலமுறை இந்த மன்றத்தில் அது பற்றி கேட்கப்பட்டு நம் முதல் அமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள். இந்தச்சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததும் வெளியே சென்று அதிகாரிகளை அழைத்து அந்த 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக்கும் வேலைதான் முதல்வேலை என்று அவர்கள் சொன்னார்கள். அதிலுள்ள கஷ்டங்களைப் பற்றி நாங்கள் ஆக்கபூர்வமாக எடுத்துச் சொன்னோம். அப்போது எல்லாம் அதிகாரிகளைக் கலந்து கொண்டுதான் செய்திருக்கிறோம், எதிர் கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று அன்று சொன்னார்கள்,

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

ஆனால் சொல்லி ஏழெட்டு மாதங்கள் உருண்டுபோய்விட்டன. 16,000 நியாய விலைக்கடைகளில், நெல்லை மாவட்டத்தில் 400 நியாயவிலைக் கடைகள் வரும் என்று உணவு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அங்கும் நியாயவிலைக் கடைகள் வந்ததாகத் தெரியவில்லை. இப்போது மிக ஜாக்கிரதையாகச் சொல்லி விட்டார்கள். நியாயவிலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் எல்லாம் நியாய விலைக்கடைகள் ஏற்படுத்தப்படும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன பொருள் என்றால் ஏற்கனவே கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் இருக்கிற கடைகளையெல்லாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொண்டு மிச்சமுள்ள கடைகளை வைப்பதற்கு அதில் உத்தேசித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அதிகாரிகளின் திறமையை நானும் ஏழாண்டுகளாக முதல் அமைச்சராக இருந்த முறையில் அறிவேன். ஆகவே அதிகாரிகளின் திறமையும் நிதி அமைச்சர் அவர்களுடைய வாக்கு சாதுர்யமும் இரண்டும் சேர்ந்த வாசகமாக மாறி அந்த 16,000 என்ற எண்ணிக்கையை மிகத் தந்திரமாக திரை போட்டு மறைத்திருக்கிறது. அப்படி மறைப்பதற்காக எங்கள் பாராட்டுதல்களைச் சொல்லவேண்டுமே தவிர 16,000 நியாயவிலைக் கடைகள் எங்கே என்று கேட்கிற நேரத்தில் நான் பாராட்ட முடியாதவனாக இருக்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் நம்முடைய மாநில நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுகிற நேரத்தில் மதுவிலக்கை இன்று செயல்படுத்துகிற தன்மையால் 140 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு இழப்பு ஏற்படுகிறது, அதை மத்திய அரசாங்கம் தரவேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். இது இன்று நேற்றல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலும், இப்போதும் வலியுறுத்தப்படுகிற ஒரு கோரிக்கையாக இருந்து வருகிறது. 140 கோடி ரூபாய் மதுவிலக்கு நிறைவேற்றுகிற மாநிலத்திற்கு நஷ்டயீடாக, இழப்பீடாக தர வேண்டும் என்று கேட்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த அரசு சார்பில் தன்னுடைய குரலைக் கொடுக்கத் தயாராயிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் கவர்னர் அவர்கள் பேசியதாக ஒரு கருத்து வெளி வந்தது. நம் முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்கூட பேசியதாக ஒரு கருத்து வெளிவந்தது. ஏற்கெனவே மதுவிலக்கிற்காக விற்பனை வரி என்ற ஒரு பெரிய காமதேனுவை உற்பத்தி செய்திருக்கிறார்களே, அந்த காமதேனு வந்த பிறகு இதற்காக ஏன் மத்திய அரசாங்கத்தினிடம் பணம் கேட்கிறீர்கள் என்று குரல் எழுப்புகிறார்கள். உண்மை. விற்பனை வரியை ராஜாஜி அவர்கள் கொண்டுவந்து மதுவிலக்கினால் ஏற்படுகிற



1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

இழப்பிற்கு நஷ்டயீடு கட்டத்தான். ஆனால் மதுவிலக்கு இருக்கிற மாநிலங்கள் மாத்திரமல்லாமல் ராஜாஜி அவர்களுடைய வழியைப் பின்பற்றி மதுவிலக்கில் நீண்ட அக்கறை இருப்பவர்கள் மாத்திரமல்ல, அந்த மாநிலங்களும் விற்பனை வரியை இன்றைக்கு அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். கள்ளுக்கடைகள் இருக்கிற கர்நாடகாவிலும் விற்பனை வரி இருக்கிறது. கள்ளுக்கடைகள் இருக்கிற ஆந்திராவிலும் விற்பனை வரி இருக்கிறது. கள்ளுக் கடைகள் இருக்கிற மேற்கு வங்கத்திலும் விற்பனை வரி இருக்கிறது ஆக, அவர்கள் எல்லாம் கள்ளுக்கடைகளும் வைத்துக் கொள்வார்களாம், விற்பனை வரியையும் அனுபவித்துக்கொள்வார்களாம். இங்கே நாம் கள்ளுக்கடைகளை அகற்றிவிட வேண்டுமாம், ஆனால், விற்பனை வரியை வைத்துக்கொண்டு அதைச் சரிக்கட்ட வேண்டுமாம் என்ற அந்த வாதம் பொருந்தாத வாதமாகும்.

ஆகவே மதுவிலக்கினால் ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்டுவதற்கு மத்திய அரசு தமிழக அரசுக்கு, எங்கெங்கு மதுவிலக்கு அமல் படுத்தப்படுகிறதோ அந்த மாநில அரசுகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதுதான் நியாயமாகும் என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு பெரு மகிழ்ச்சி ஏற்படும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், நாம் எழுப்பிய அதே கோரிக்கையை — ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது — நாங்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பிய நேரத்தில் இன்றைக்கு ஆளும்கட்சியாக இருக்கிற அண்ணா தி.மு.க. வினர் பக்தவத்சலம் அவர்களுடைய வாதத்தை எடுத்து வைக்கத் தவறவில்லை. விற்பனை வரியால் வரக்கூடிய வருமானத்தைக் கொண்டு அந்த இழப்பை சரிக்கட்டிக்கொள்ளக் கூடாதா என்ற வாதங்களை சில நேரங்களில் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசியிருந்தாலும் மாநில நன்மை கருதி அதில் போட்டாபோட்டி காட்டா குஸ்தி என்று இல்லாமல் அதற்காக பழிக்குப்பழி என்று இல்லாமல் மாநில உரிமை கருதி நீங்கள் கோருகிற அந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய மாநில உறவுகள் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகமாகக் கோடிட்டு காட்டவில்லை என்பதை நம்முடைய எதிர் கட்சித்துணைத்தலைவர் பேராசிரியர் அவர்களும் நண்பர் சங்கரய்யா, நண்பர் உமாநாத் போன்றவர்களும் பேசும்போது எடுத்துச்சொன்னார்கள். மத்திய மாநில உறவுகள் பற்றி என்ன பேச வேண்டும், என்ன எழுதவேண்டும், என்ன சொல்ல வேண்டும், என்பதை இம்மாமன்றம் திராவிட முன்னேற்றம் கழகம் ஆட்சி பொறுப்பில் இருந்தநேரத்தில் ஒரு தீர்மான வடிவிலே கொடுத்திருக்கிறது. மாநில சுயாட்சித் தீர்மானம் நாலைந்து நாட்களாக விவாதிக்கப் பட்டு அந்தத் தீர்மானம் இங்கே பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு ஷேக் அப்துல்லா, ஜோதிபாசு, பாதல் போன்றவர்கள் எல்லாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று சொல்லுகின்றார்கள், அவர்கள் மட்டுமல்ல, மீண்டும் இன்றைக்கு கர்நாடகத்தில் முதலமைச்சராக வந்திருக்கிற தேவராஜ் அர்சும் கூட கூறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைச் சுட்டிக்காட்டித்தான் மாநில சுயாட்சி கோரிக்கையை நாம வலியுறுத்தினோம். எப்பொழுதும் மத்தியிலே ஒரே கட்சி ஆட்சியும் மாநிலங்களில் ஒரே கட்சியினுடைய ஆட்சியும் இருக்கின்ற நேரத்தில், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, காரியங்கள் நடைபெறக்கூடும். ஒருவரை ஒருவர் இணைந்து போய்விட முடியும்.

ஆனால் இன்றைக்கு இந்தியாவின் நிலைமை என்ன ? மத்தியிலே ஜனதா ஆட்சி, மேற்கு வங்காளத்தில் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி, தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி,கேரளத்தில் கூட்டணி ஆட்சி, பஞ்சாபிலே அகாலிதளத்தின் ஆட்சி; இப்படி மத்தியில் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய ஆட்சியும், நான்கைந்து மாநிலங்களில் வேறு கட்சிகளின் ஆட்சிகளும் நடைபெறுகின்ற நேரத்தில் தான் மாநில சுயாட்சியின் பெருமையை உணர முடியும். இந்திரா காந்தி அம்மையாரே இன்றைக்கு மீண்டும் மத்தியிலே வீற்றிருப்பார்களேயானால் தேவராஜ் அர்சு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற குரலை இவ்வளவு பலத்த குரலில் எழுப்பியிருக்கமாட்டார். அவருக்கே தலைவலி என்று வந்த பிறகு தான் மத்திய சர்க்காரை எதிர்த்து ஒரு அறிக்கை விட முடிந்தது. மாநில சர்க்காரைக் கேள்வி கேட்க மத்திய சர்க்காருக்கு என்ன உரிமை இருக்கிறது ? மாநில சர்க்கார் மீது புகார் கூறப்பட்டால் அதைப் பற்றி விசாரிக்க மத்திய அரசுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்ற கேள்வியை அவருக்கே ஒரு சங்கடம் வந்தபோது தான் அறிவிக்க முடிந்தது.

ஆனால் எங்களுக்குச் சங்கடம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, மாநில சுயாட்சி தேவை என்று கேட்பது. எங்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சி தேவை என்ற காரணத்தினால் தான் இந்த நிலை வந்தது. ஆகவே மற்றவர்களைப்போல் சங்கடம் வந்த பின்னால் நாங்கள் மாநில சுயாட்சி கேட்கவில்லை. மாநில சுயாட்சி கேட்டு எங்கள் உரிமைகளை வற்புறுத்திய காரணத்தினால் தான் எங்களுக்குச் சங்கடமே வந்தது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

மாநில சுயாட்சி கேட்கும்போது இது பிரிவினையிலே கொண்டு போய் விடுமோ என்று நாங்கள் அஞ்சுவதால், அதன் காரணமாகத்தான் நாங்கள் மாநில சுயாட்சியை ஆதரிக்க வில்லை என்றெல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேறு பலரும் பேசினார்கள். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற அண்ணா திராவிட





முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இது ஒரு பிரிவினை கோஷம்; எனவேதான் நாங்கள் இதை ஆதரிக்க வில்லை என்று அன்றும் சொன்னார்கள், இன்றும் சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

முதலமைச்சராக வீற்றிருக்கின்ற நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் பல கூட்டங்களில் "நாங்கள் விரும்புவது மாநில சுயாட்சியல்ல. மக்கள் சுயாட்சி" என்று சொன்னார்கள். அது என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை. காலம் வரும்போது புரிய வைப்பார் என்று கருதுகிறேன்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்பது மறை முகமாகப் பிரிவினை உணர்ச்சி என்று சொல்லுகின்றவர்களுக்கு ஆப்பு அடித்ததுபோல், ஆணி அறைந்ததைப் போல் என்னுடைய அருமை நண்பர் மனோகரன் அவர்கள், அவருடைய மணிவாசகத் தமிழில் எழுதிய கட்டுரை ஒன்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். 'தென்னகம்' பத்திரிகையில் எழுதப்பட்டு 'அரசியல் அலைகள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரை, நான்தான் இதை வெளியிட்டேன் என்று நினைவு, அது என்ன கட்டுரை, அதில் என்ன எழுதியிருக்கிறார்.. "ராஜபாளையத்தில் நடைபெற்று முடிந்து விட்ட தி.மு.க. மாவட்ட மாநாட்டில் பேசிய பேச்சாளர்களில் பெரும்பாலோர் மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசயிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்படாவிட்டால் பழைய 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற லட்சியத்திற்குப் புத்துயிர் தருவோம் என்று பேசியதாக சில பத்திரிகைகள் விஷமப் பிரச்சாரம் புரிந்திருக்கின்றன. (இன்றைக்கு அப்படி யாராவது சொன்னால் அது விஷம பிரச்சாரம் தான் என்பது இன்றைய நிதி அமைச்சரின் அன்றைய தீர்ப்பு....)

"மாநாட்டிலே பேசிய பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் தி.மு.க. கோரும் மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினை வாதம் அல்ல" என்றார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது அதிகப்படியான அதிகாரங்களைக் கோரும் அல்லது அளவுக்கு மீறி மத்தியில் குவிக்கப்பட்டுக் கிடக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கும் கோரிக்கைக்கு பிரிவினை முலாம் பூசாதீர்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இது தமிழகம் ஒன்றுக்கே உரித்தான தனிக் குரல் அல்ல என்றும், ஆகையினாலே தி.மு.க.வைத் தனிமைப் படுத்துகிற முயற்சியினின்று தரங்கெட்ட அரசியல்வாதிகள் விலகிக்கொள்ள வேண்டிய நியாயத்தை வலியுறுத்தியிருக்கின்றார். 'செல்ப் ஆட்டோனமி' என்பதற்கும் 'செல்ப் டிட்டர்மினேஷன்' என்பதற்கும் இருக்கின்ற இடைவெளியை இணைக்க முடியாத தொலை தூரத்தைச் சுட்டிக்காட்டி இந்த நியாயமான மாநில சுயாட்சி கோரிக்கையை கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

வீடு கொடுக்கச் சிபார்சு செய்து விட்டார்கள் என்று அதைப் பெருங்குறையாக எடுத்துச் சொன்னார்கள். அதை ப.உ.ச. அவர்களும் இங்கே மறுத்தார்கள். அதற்கான விளக்கங்கள் அளிக்கப் பட்டன.

நான் கேட்பதெல்லாம் கடந்த 7 மாத காலமாக தமிழகத்திலே இந்த அரசு புரிந்த சாதனைகளை நீங்கள் எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக, கடந்தகால திராவிட முன்னேற்ற கழக அரசு பற்றிப் பேசுவதிலேயே அதிக நேரம் செலவழிக்கிறீர்கள்;

இன்னொன்றையும் சொல்கிறேன். அமைச்சர்கள் அடிக்கடி சவால் விடாதீர்கள்; அது நல்லதும்கூட அல்ல. எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் கொஞ்சம் கடுமையாகக்கூட பேசி விடலாம். பொறுப்பிலே இருக்கின்ற அமைச்சர்கள் அடிக்கடி சவால் விடுவதும், பிறகு பதில் சவால்கள் எதிர்க் கட்சியினர் விடுவதும் நல்லதல்ல. இன்னும் சில அமைச்சர்கள் இருக்கிறார்கள். மேடைகளிலே என்ன பேசுகிறார்கள் என்பதையெல்லாம் பத்திரிகைக் குறிப்புகள் மூலம் அவையின் முன்னவர் அவர்களும் அறிந்திருப்பார்கள். முதல் அமைச்சர் அவர்களும் அறிந்திருப்பார்கள். ஆகவே, இந்த விளக்கங்களுக்குக் கெல்லாம் செல்ல இப்போது நான் விரும்பவில்லை. ஆனால், 7 மாத காலமாக ஆட்சியை நடத்தத் தொடங்கிய பின், பழைய ஊழலைப் பற்றி புகார்களைப் பற்றி, சர்க்காரியா பற்றி நாள் தோறும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்கு இந்திராகாந்தி மொழியில் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், திருச்சி மாநாட்டில் பேசிய இந்திரா காந்தி அம்மையார் சொல்லியிருக்கிறார்—'என்னோடு இருக்கும் வரையில் அவர்கள் எல்லாம் ஊழல் பேர்வழிகள் ; அவர்களுடைய கட்சிக்குப் போய்விட்டால் புனிதமானவர்களாகிவிடுகிறார்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். போன வருடம் நான் சொன்னதை இந்த வருடம் இந்திரா காந்தி அம்மையார் சொல்லுகிறார். போன வருடம் எனக்கு சர்க்காரியா: இந்த வருடம் அவருக்கு ஷா. இப்படிக் கமிஷன்கள் மாறி மாறி வந்த பிறகு மனோ நிலைமையும் மாறி மாறி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற வரை அவர்கள் ஊழல் பேர்வழிகள், விசாரணைக்குரியவர்கள்: இங்கிருந்து அங்கு வந்து விட்டால் அவர்கள் நல்லவர்களாக, உத்தமர்களாக, புத்தர்களாக ஆகிவிடுகிறார்கள்.

54 குற்றச்சாட்டுகள் திராவிட முன்னேற்றக் கழக அரசு பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 28 குற்றச்சாட்டுகளுக்கான அறிக்கையில் முதல் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிச்சமுள்ள பகுதிக்கு விரைவில் கொடுக்கப்பட இருக்கிறது. அதைப் பற்றி நாள்தோறும் அமைச்சர் பெருமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நல்லவேளை இப்போது சட்ட மன்றம் நடைபெறுவதால் பேச வாய்ப்பில்லாத காரணத்தால் பேசாமல் இருக்கிறார்கள். இது முடிந்தவுடன் மீண்டும் ஆலாபனங்களை ஆரம்பிக்கிறோம் என்ற அந்த அளவுக்குப் பேசுகிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம்—28 குற்றச்சாட்டுகளுக்குச் சர்க்காரியா தன்னுடைய அறிக்கையை அறிவித்திருக்கிறார். மிச்சமுள்ள குற்றச் சாட்டுகளுக்கு என்ன செய்ய போகிறீர்கள்? நீங்களே அவைகளை கைவிட்டு விட்டீர்களா? அந்த 28 குற்றச்சாட்டில் சாரம் இல்லையா? வேண்டுமென்றே கொடுத்தோம் என்று பகிரங்கமாக அறிவிக்கப் போகிறீர்களா? அல்லது நீங்களே கமிஷன் போட்டு விசாரிக்கப் போகிறீர்களா? அந்தக் கமிஷனுக்குக் குற்றச்சாட்டு கொடுத்த நீங்கள் வாக்குமூலங்களை அளிக்கத் தயாராக இருக்கிறீர்களா ? இவைகளுக்கெல்லாம் நாடு உங்களிடத்திலிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.



1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

அது மாத்திரமல்ல. நண்பர் ஜேம்ஸ் அவர்கள் கூடப் பேசினார்கள். மற்றவர்களைக் குற்றம் சொல்லுகிற நேரத்தில், கடந்த காலத்தில் இருந்த ஆட்சியின் தவறுகளை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில் அவற்றைத் திருத்தும் வாய்ப்பைப் பெற்று நீங்கள் சரிவரச் செய்திருக்கிறீர்கள் என்றால் இல்லை.

திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னதைப் போல் புயல் நிவாரண நிதிக்கு நட்சத்திர இரவு நிகழ்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது. வேண்டாமென்று சொல்லவில்லை. எப்படி அதற்கான நிதி வசூலிக்கப்பட்டது? பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி தரவேண்டியதுதான். நான்கு கோடி ரூபாய்க்கு மேல் மக்கள் தந்திருக்கிறார்கள். இதிலே இரண்டு கோடி ரூபாயோ, ஒன்றரைக் கோடி ரூபாயோ கிடைத்திருக்கிறது. ஆனால் அது வசூலிக்கப் பட்ட முறை என்ன? முதலமைச்சர் அவர்கள் மதுரையிலேயோ வேறு ஒரு நிகழ்ச்சியிலேயோ பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "அதிகாரிகள் தவறு செய்தார்கள் இந்த நிதி வசூலில் என்று யாராவது சொன்னால் அதற்காக யாரும் அதிகாரிகள் கவலைப்பட வேண்டாம் ; நானே அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன்; என்ற அளவுக்கு முதலமைச்சர் பேசியிருக்கிறார், இதோ ஒன்றைப் படிக்கிறேன்.

'நகராட்சி அலுவலகம் சேலம்.'

சி. 11–4280/78 என்ற எண்ணுள்ள சுற்றறிக்கை. நாள் -2–1978.

பொருள் : நட்சத்திர இரவு—புயல் வெள்ள நிவாரண நிதி—நன்கொடை வசூல்—குறித்து.

பார்வை : இவ்வலுவலக 27–1–1978 தேதிய சி. 11–4280/78 எண். சுற்றறிக்கை.

'நட்சத்திர இரவு' நிகழ்ச்சி நடத்தி புயல் வெள்ள நிவாரணத்திக்கு நிதி வசூலிக்க நன்கொடை டிக்கட்டுகள் ஒவ்வொருவரிவிற்கும் குறியீடு நிர்ணயித்து 31–1–1978-ல் வழங்கப்பட்டது.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

டிக்கட்டுகள் வழங்கி ஒரு வாரம் ஆகியும் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் 10% கூட எந்த ஒரு பிரிவும் வசூலிக்காதது, வருந்தத்தக்கதாயுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு டிக்கட் கூட விற்காமல் திருப்பித் தரக்கூடாதென கூறி வருகிறார். மற்ற அரசுத் துறையினர் வசூலில் தீவிரம் காட்டுவது போல் நகராட்சியும் தீவிரம் காட்ட வேண்டும். ஆகையால் எல்லாப் பிரிவு தலைமை அலுவலகர்களும் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்குத் தேவையான அறிவுரை வழங்கி வழங்கப்பட்ட டிக்கட்டுகள் அனைத்தையும் விற்பனை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 11, 12—2—1978 ஆகிய இரு தினங்களும் விடுமுறையாதலால் 10—2—1978-க்குள் விற்பனை செய்த தொகை செலுத்துவதுடன் விற்பனை செய்ய இயலவில்லையென ஒரு டிக்கட் கூடத் திருப்பித் தரக் கூடாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது வற்புறுத்தப்பட்ட ஒன்று அல்லவா ? ஒரு டிக்கட் கூடத் திருப்பித் தரக்கூடாது என்று சொல்லி அனைத்துப் பிரிவு தலைமை அலுவலர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மிச்சப்பட்டிருக்கும் டிக்கட்டுகளை யாரிடத்தில் கொடுப்பார்கள்? யாரும் வாங்கவில்லை என்றால் அவர்களே பணம் போட்டுத்தானே தர வேண்டும். இது கெடுபிடி அல்லவா? இதற்கு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா?

அதைப் போல் இன்னொன்று. கோபி பிரஸ், கோவையில் அச்சடிக்கப்பட்ட நன்கொடைச் சீட்டு. தமிழக அரசு முதலமைச்சர் புயல் நிவாரண நிதி என்று போடப்பட்டிருக்கிறது. நன்கொடைச் சீட்டில் எண்ணே கிடையாது. கையெழுத்தும் கிடையாது. பத்து ரூபாய்ச் சீட்டு; இதில் ஊழல் நடைபெற்றிருக்கக் கூடுமா, கூடாதா? இதை விசாரிக்க வேண்டுமா? வேண்டாமா?

[பிற்பகல் 12—50]

இன்னொன்று. மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்முக உதவியாளர் என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கையெழுத்துப் போடாமலே ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஊழல் நடைபெற்றிருக்கலாமா இல்லையா? சேலம் நகராட்சி அலுவலகத்தின் அறிக்கையை நான் படித்துக் காட்டினேன் அந்த அறிக்கையின் நகலை நான் வைத்திருக்கிறேன். தேவையானால் நான் அரசுக்குத் தர தயாராக இருக்கிறேன்.

ஒரு நகரசுத்தி தொழிலாளருக்கு சிபாரிசு செய்தது ஒரு பெரிய குற்றமாக அமைச்சர் இராகவானந்தத்தால், இங்கு எடுத்துச் சொல்லப் பட்டது. ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்ட



1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

மன்ற உறுப்பினர்கள் எதிலும் தலையிடுவதில்லை என்று முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் பெருமையாகப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பர்கூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களின் செயல் முறைகள் முன்னிலை, திரு. ரா. தேவராஜன் ந. க. எண். 12354/77சி. 1நாள் 4—1—1978 பொருள் கல்வி ஆரம்பக் கல்வி பர்கூர் சட்டமன்றத் தொகுதி எம். எல். ஏ. எஸ். ஜி. ஆறுமுகம் அவர்களின் சிபாரிசின் பேரில் மாறுதல் அளித்தல் ஆணையிடல் தொடர்பாக, பார்வை மாவட்ட கல்வி அலுவலர் ந. க. எண். 15218/77 இ. நாள் 20—12—1977.

ஆணை : பார்வையில் கண்டுள்ள மாவட்ட கல்வி அலுவலரின் ஆணையின்படி கீழ்க்கண்டுள்ளபடி மாறுதல் அளித்து ஆணையிடப்படுகிறது அவர்கள் உடனடியாக விடுவிப்புப்பெற்று புதிய பள்ளிகளில் சேர்ந்துகொள்ள வேண்டியது. தொடர்புள்ள தலைமையாசிரியர்கள் விடுவிப்பு மற்றும் சேர்த்துக்கொண்டு அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டியது, ஆசிரியரின் பெயர் என். பெரிய தம்பி. இடைநிலை உதவி ஆசிரியர், கரடிக் கொல்லுப் பட்டி, மாறுதல் அளிக்கும் பள்ளியின் பெயர், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கே. புதூர் வரிசை எண் 2க்குப் பதிலாக ஆசிரியர் ஆ. சிவானந்தம் இடைநிலை ஆசிரியர் கே. புதூர் மாறுதல் அளிக்கும் பள்ளியின் பெயர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கரடிகொல்லுப்பட்டி, வரிசை எண். 1க்குப் பதிலாக ஒப்பம் தேவராஜன்.

ஆக, ஒரு எம். எல். ஏ. வுக்குப் பிடிக்காத காரணத்தால் எம் எல் ஏ அவர்களின் சிபாரிசின்பேரில் மாறுதல் அளித்தல் என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள், இதனுடைய நகல் என்னிடத்தில் இருக்கிறது உங்களுக்கு அது தேவையானால், நீங்கள் விசாரணை நடத்த வேண்டுமென்றால் கடிதத்தின் நகலைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் கட்சிக் கண்ணோட்டத்தோடு எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை என்று அடிக்கடி கூறப்படுகிறது அது பெரிதாகப் பேசப்படுகிறது.

மக்கள் குழு அமைக்க ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். ந.க.அ. எண், 3—1025/78 நாள் 28—1—1978 ஊராட்சி ஒன்றியம் அரவக்குறிச்சி, அனுப்புதல் எம். சிதம்பரம் பி.எஸ் ஸி. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், அரவக்குறிச்சி பெறுதல் : எல்லா ஊராட்சித் தலைவர்களுக்கும் பொருள்: குழு ஊராட்சி அளவில் சட்டப்படி இல்லாது அமைக்கும் குழுப் பட்டியலில் அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர் பட்டியல் அனுப்பப் பட்டது. தகவல் : இந்த அலுவலகத்தின் இதே எண்ணுள்ள 27—1—1978 தேதிய கடிதம் தங்கள் ஊராட்சியில் மக்கள்

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

குழு அமைத்து உறுப்பினர்கள் பட்டியல் அனுப்பிவைக்கும் படி மேற்காணும் இந்த அலுவலகத்தின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. அப்படி அமைக்கப்படும் குழுவில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் தங்கள் ஊராட்சிப் பொறுப்பில் உள்ள நபரை அ. இ. அ. தி. மு. க. கட்சியின் சார்பில் உறுப்பினராக அவசியம் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறது. ஒப்பம் எம். சிதம்பரம் நகல். தொடர்புள்ள ஊர் நல உதவியாளர்களுக்கு. இது கட்சித் தலையீடா இல்லையா?

குழு அமையுங்கள் அதிலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று ஆணை போகவில்லை, இதிலே அகில இந்திய அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்த ஒருவரை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆணை போகிறது. இது கட்சித் தலையீடா இல்லையா? முதலமைச்சர் சொல்கிறார் அதிகாரிகளே, கவலைப்படாதீர்கள், நான் இருக்கிறேன், நான் இருக்க பயம் ஏன் என்று அபயம் கொடுத்திருக்கிறார்.

இதைப் போலவே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மிகப் பயங்கரமாக மிகக் கெடுபிடியாக தரப்பட்டுள்ள அறிக்கையிலே ஒரு நபருக்கு இவ்வளவு பேர்கள் அழைத்து வர வேண்டும். தவறினால் சம்பந்தபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு கிராம சேவக் 15 பேர்களை அழைத்து வர வேண்டும், இது சாதாரண காரியமா? ஒரு மருத்துவ மாது 27 பேர்களை அழைத்து வர வேண்டும். ஒரு ஆயா ஒரு நபர் 27 பேர்களை அழைத்து வர வேண்டும். கிராமசேவகிகள் ஒரு நபர் 15 பேர்களை அழைத்துக்கொண்டு வர வேண்டும். பால சேவகிகள் ஒரு நபர் இரண்டு பேர்களை அழைத்துக் கொண்டுவந்தாக வேண்டும் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு. இந்த கெடுபிடியின் காரணமாகத்தான் சில பைத்தியம் பிடித்தவர்களுக்கும் மனநோய் உள்ள வாலிபர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள் என்று ஏடுகளிலே எல்லாம் கூட செய்திகள் வந்தன. இவைகள் எல்லாம் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறுகின்ற தவறுகள் என்று அரசின் சார்பில் சொன்னால்கூட அவைகளில் அரசுக்கும் பொறுப்பு உண்டு என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பெயரே பிடிக்காதவர்கள், உயிரோடிருப்பவர்கள் தங்கள் பெயரை நகரங்களுக்கு வைக்கிறார்கள், ஊர்களுக்குப் பெயர் வைத்துக் கொள்கிறார்கள்; அவைகளை எல்லாம் அழிக்க வேண்டும் என்று முடிவெடுத்தவர்கள்.



1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

ஒரு அறிக்கையைப் படிக்கிறேன்.

From

K. T. Vaidyalingam,
Assistant Executive Engineer,
TWAD Board/EWS SUB-DIVISION
Tiruchengodu.
TO THE COMMISSIONER
PALLIPALAYAM.

Sub: HONOURABLE MINISTER FOR LABOUR-INSPECTION OF Tiruchengode, Salem, II and Mettur Constitu.ncies on 16th and 17th December 1977 - instruction issused to provide water supply for the newly formed colony Raghavananda Nagar, in Alampalayam Panchayat.

காலனிக்கு வாட்டர் சப்ளை செய்வதில் என்ன தவறப்பா என்று கேட்பீர்கள். என்ன காரணம் தெரியுமா?

To provid; water for the newly formed colony (Raghavananda Nagar, Alampulayam Panchayat).

" இராகவானந்தம் நகர் " என்று பெயரிட்டதும் அமைச்சரே உடனடியாகக் கவனித்து குடிதண்ணீர் திட்டத்தை உடனடியாக கவனிக்கிறோம் என்று கவனிக்கின்ற அளவுக்குப்பெயரிலே மோகம் இல்லாதவர்கள் இப்படிச் செயல்படுகிறார்கள்.

நிதியமைச்சர் கூடச் சொன்னார். நல்ல காரியத்திற்காக—அரசாங்கக் காரியத்திற்காக அதிகாரிகள் கொஞ்சம் கெடுபிடியாக நிதி வசூலிப்பது தவறாகாது, கட்சிக் காரியத்திற்காகத்தான் இப்படிச் செய்யக் கூடாது என்று நிதியமைச்சர் திருச்சியிலே நிருபர்களிடம் கூறினார். நிருபர்களிடம் பேசிய அதே திருச்சியில் தான் கட்சி நிதி திரட்டும் நிகழ்ச்சிக்காக அமைச்சர் ஒருவரே பல இடங்களுக்குச் சென்று வணிகர்களைச் சந்தித்து கட்டாய நிதி வசூல் செய்த குற்றச்சாட்டை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்போது இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக் காட்டினேன்.

இன்னொன்று. " அண்ணா " பத்திரிகை வாங்கா விட்டால் என்ன நடவடிக்கை தெரியுமா? அதையும் படிக்கிறேன்; கேளுங்கள்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
காட்பாடி.
தேதி : 10—11—1977.

குறிப்பு.

பொருள் : சமூகக் நலம்—அண்ணா நாளிதழ்—சமூக கல்வி நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல்—மேற்படி நாளிதழினை பெற்றுக் கொள்ளாமைக்கு—சமாதானம் கேட்டல்.

பார்வை : நிர்வாக மேலாளர் அண்ணா நாளிதழ் சென்னை அவர்களின் கடிதம் நாள் 7—12—1977.

சேவூர் சமூகக் கல்வி நிலையத்திற்கு அனுப்பப்படும் அண்ணா நாளிதழை சேவூர் ஒன்றியப் பள்ளித் தலைமை ஆசிரியர் திருப்பி அனுப்பி விட்டதாக பார்வையில் குறிப்பிட்ட கடிதத்தில் நிர்வாக மேலாளர் தெரிவித்துள்ளார். அண்ணா நாளிதழினைக் திருப்பி அனுப்பி விட்டமைக்கான சமாதானத்தை இக் குறிப்பாணை கிடைத்த மூன்று தினங்களுக்குள் அனுப்பத் தவறினால் மேற்கொண்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

(ஒப்பம்,)

ஆணையாளருக்காக.

நீங்களும் இதையெல்லாம் செய்யவில்லையா என்று ஒரே வரியில் கேட்கலாம். இதையெல்லாம் மாற்றிச் செய்ய நீங்கள் வந்ததாகச் சொன்னீர்களே, நீங்கள் ஏன் செய்யவில்லை என்பதுதான் கேள்வி. இதையே தொடர்ந்து செய்வதென்றால் நாங்களே இருந்துவிட்டுப் போகிறோம், நீங்கள் ஏன் வர வேண்டும்? உத்தமர்களைப் போலப் பேசிவிட்டு, கடுகளவு தவறும் எங்கள் ஆட்சியிலே நடைபெறாது என்று கூறினீர்கள். நான் இப்படி அடுக்கடுக்காக எடுத்துக் காட்டியிருக்கிறேன், இவ்வளவு குற்றச்சாட்டுகளையும்.

இன்னுமொன்று. அமைச்சரின் பெயரைச் சொல்லாமல் சொல்கிறேன். முதலமைச்சர்கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் குதிரைப் பந்தய மைதானத்திற்குச் சென்றார். அதாவது சீப் மினிஸ்டர்ஸ் கப் என்ற அந்த விழாவுக்கு முதலமைச்சர் செல்வது வாடிக்கை; அதற்காக நம்முடைய முதலமைச்சர் சென்று அங்கே பேசியிருக்கின்ற பேச்சைப் படித்துப் பார்த்தேன். அங்கே நடக்கின்ற ஊழல்களைப்பற்றி முதல்வர் அங்கே பேசி இருக்கிறார். அந்தக் குதிரைப் பந்தயத்திற்கு முதல்வர் செல்வதைப் போலவோ அல்லது ஒருநாள் அழைக்கப்பட்டு நிதி அமைச்சர் செல்வதாக இருந்தால் அதைப் போலவோ கவர்னர் செல்வதைப் போலவோ இல்லாமல், பந்தயம் நடைபெறுகின்ற





தினம் எல்லாம் ஒரு அமைச்சரின் தாயார் போய் வருகிறார்; அமைச்சரின் தாயார் போவதைக் கட்டுப்படுத்த முடியுமா? எப்படித் தடுக்க முடியும் என்று கேட்கலாம். அமைச்சருடைய தாயார் எதிலே போகிறார் என்றால், சர்க்காருடைய காரிலே போகிறார்.

முதலமைச்சர் பேசியதாக நான் படித்தேன்; அல்லது கேள்விப்பட்டேன். சினிமா தியேட்டர் வாசலில் அமைச்சர்களின் கார்கள் நின்றால்கூட, கட்சியின் தொண்டர்கள் அந்தக் காரைத் தள்ளிக்கொண்டு வந்து அவர்களுடைய வீட்டு வாசலில் போட்டு விடுங்கள் என்று கடுமையான உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக நான் கேள்விப்பட்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைந்தேன். இது சினிமாத் தியேட்டர்கூட அல்ல; முதலமைச்சருடைய துறையான சினிமா தியேட்டர்கூட அல்ல. முதலமைச்சருக்கும், எனக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் பிடிக்காத குதிரைப் பந்தயத்திற்கு ஒரு அமைச்சருடைய தாயார் செல்கிறார், சர்க்காருடைய காரிலே செல்கிறார். போட்டோக்கள் இருக்கின்றன. நான் நிதியமைச்சரிடம் தருகின்றேன். இதைத் தந்து விட்ட காரணத்தால் வேறு போட்டாக்கள் இல்லாமல் போய்விடவில்லை. ஆகவே, நிதியமைச்சரிடம் அந்தப் போட்டோக்களைத் தருகிறேன். அந்தக் காரின் நம்பர் இருக்கிறது. அந்தப் போட்டோவைத் தருகின்றேன். இந்தப் போட்டோ—அவர்கள் போய் டிக்கெட் வாங்குகிறார்கள், அதையும் தருகிறேன், இது காரிலிருந்து இறங்குகிறார்கள், இதையும் தருகிறேன். இது டிக்கெட் வாங்குகின்ற இடத்திற்குச் செல்கிறார்கள், அதையும் தருகிறேன். அவர்களோடு செக்யூரிட்டி ஆபிசர் செல்கிறார். அதையும் தருகிறேன். இவ்வளவு படங்களையும் தருகின்றேன்.

[பிற்பகல் 1-00.]

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : எதிர்க்கட்சித் தலைவருக்கு எவ்வளவோ வேலைகள் இருந்தும், இதிலேயும் அக்கறை காட்டுகிறார் என்பதில் எனக்குத் திருப்தி.

<u>திரு. மு. கருணாநிதி</u> : இப்பொழுதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இதுதான் வேலையாக இருக்கும். ஏனென்றால், நீங்கள் செய்ததை நாங்கள் செய்ய வேண்டாமா? இவ்வளவு ஆதாரங்களையும் உங்களுக்குத் தந்திருக்கிறேன். இவைகளைப் பற்றி நீங்கள் பதில் அளிக்கும்போது எனக்கு விளக்கம் அளிப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால், புத்தருடைய ஆட்சி, உத்தமர்களுடைய ஆட்சி என்று கூறி, கழக ஆட்சி ஊழல் ஆட்சி, ஊழல் ஆட்சி என்று புகார் கூறித் தொடர்ந்து 5 ஆண்டுக் காலத்தைக் கடத்தி விடலாம் என்று எண்ணினீர்கள். உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே நல்ல திட்டங்கள், மக்களை வாழ்விக்கின்ற திட்டங்கள், மக்களுக்கு முன்னேற்றம் தருகின்ற திட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு டெசிஷன் எடுப்பது சம்பந்தமாக பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். உங்களுக்கு சப்மிட் செய்யப்பட்ட ரிப்போர்ட்டில்—(குறுக்கீடு) ரெவின்யூ போர்டை அபாலிஷ் பண்ணுவதைப் பற்றி ஒரு கோரிக்கை இருக்கிறது. அப்படி அபாலிஷ் பண்ணுவதைப் பற்றி இந்த அரசின் நோக்கம் என்ன? இல்லை என்றால் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்து நடைபெற்ற தொடர்கூட்டங்களில் பேசுகிற ஒவ்வொரு பேச்சாளரும், சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த ரெவின்யூ போர்டை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்ற தங்களுடைய கருத்துக்களை பலமாக வலியுறுத்தி வந்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இது குறித்து அரசு ஆராயும் என்று நான் இந்த மன்றத்தில் தெரிவித்து இருக்கிறேன் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ரெவின்யூ இலாகா சீரமைப்பு நடைபெறுகின்ற காலத்தில், ஜமாபந்தி முறையினால் பயன் ஏதும் இல்லை என்பதைக் கருதி அதை நிறுத்தக் கூடாதா ? அடுத்து கிராமத்தில் செட்டில்மெண்டு நடந்து 35 ஆண்டுகள் ஆகியும் இன்னும் கிராம ரெக்கார்டுகள் சரியாக இல்லை. அதையும் சரிவர வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டை ஒழிக்க வேண்டும் என்று சொன்ன அதே உறுப்பினர்கள் இதையும் தெரிவித்தார்கள் என்பதை நான் உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த ரெவின்யூ நிர்வாக சீர்திருத்தக் குழு 1954-ல் ஒன்றும், அதற்குப் பின்னாலே மற்றொன்றும் போடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய குழுக்கள் என்ன பரிந்துரைகளை வழங்கியிருக்கின்றன என்பதனை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, திரு. ராமச்சந்தர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. அவர் என்ன கருத்து தெரிவித்தார் என்பதற்கு ஒரு தனிக் கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுகுறித்து நிதித் துறையைக் கலந்து ஆலோசித்து குழு அமைப்பது பற்றி முடிவு எடுக்கப்படும்.





திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை பற்றி புலனாய்வு செய்யும்போது, என்னென்ன கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு கருதுகிறது. குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், தாசில்தார் ஆகிய *3 அதிகார நிலைகள் வேண்டாம் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறதே, அதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதுபற்றியும் ஆலோசிக்கப்படும்.

*Sales tax on prawns etc ,*

*342 Q—Thiru K. ABDUL LATHEEF, Thiru S. J. SADIQ PASHA Will the —Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any representation has been received from the Sea Food Agents Association, Madras for exemption from the operation of the General Sales Tax Act for prawns, frogs etc , during August—September 1977 by the Government; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இறால் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, முதலில் அளித்த 'ஆம்' என்ற பதிலுக்கொப்ப, உடனடியாக அரசு பரிசீலித்து, அதற்கு விற்பனை வரியில் இருந்து ரத்து செய்து உடனடியாக ஆணையிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் சாதிக் பாட்சா அவர்களின் சுவைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவருக்கு இருக்கும் இறால் பஞ்சம் எனக்குப் புரிகிறது. மீன் விற்பனைக்கு வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் கடைசிக் கொள்முதல் முனையில், இறால் மீன்கள், கடல் நண்டுகள், நண்டுகள், தவளைகள், தவளைக்கால்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 137-வது இனத்தின் கீழ் 3—3—1975-ஆம் நாளிலிருந்து 5 சதவீத வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். இவற்றிற்கு ஒருமுனை வரி

விதிக்கத் தக்கதாகையால் ரூபாய் 50,000 வரையிலுள்ள மொத்த விற்பனைக்கு வழங்கப்படும் பொது விலக்கு மேற்சொன்னவற்றின் விற்பனைக்குப் பொருந்தாது. எனினும் சிறு வணிகர்களுக்கு உதவி புரிவதற்காக, மேற்சொன்னவற்றை விற்பனை செய்யும் வணிகர்களின் ஆண்டு மொத்த விற்பனை 10,000 ரூபாய்க்கு அதிகப்படாமல் இருந்தால், அவர்களுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து அரசு விலக்களித்துள்ளது.

வணிக வரித்துறை அதிகாரிகளால், கடல் உணவு ஏஜெண்டுகள் மீனவர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்படும் தொல்லைகள் குறித்து திருவாளர்கள் விஜயராகவன், எம். எல். ஏ., ஆர். இ. சந்திரன் ஜெயபால், எம். எல். ஏ., கே. பாலாஜி, எம். எல். ஏ., கணேசன், எம். எல். ஏ., ஆகியோரும் தமிழ்நாடு விசைப்படகு மீன்பிடிப்போர் சங்கமும், தமிழ்நாடு கடல் உணவு முகவர்கள் சங்கமும் (சென்னை) மீனவர்கள் பலரும் அரசுக்கு முறையிட்டுள்ளதோடு, இறால், மீன்கள், கடல் நண்டுகள், நண்டுகள், தவளைகள், தவளைக்கால்கள், ஆகியவற்றின் விற்பனைக்கு விலக்களிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். இந்த முறையீட்டைக் குறித்து, கருத்து தெரிவிக்குமாறு வருவாய்த்துறை வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளது. அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

* 343 வினா—

## வயதான அஞ்சைகளுக்கும் விதவைகளுக்கும் உதவி

* திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வயதான அஞ்சைகளுக்கும் விதவைகளுக்கும் உதவிப் பணம் கொடுக்கப்படுகிறதா ? எவ்வளவு ?

(ஆ) அதை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) ஆம். மாதம் ரூ. 20.

(ஆ) இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, 30 வயதிற்குக் கீழே விதவைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய இந்த அரசு என்ன ஏற்பாடு செய்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, மூப்புக் காலப் உதவித் தொகைத் திட்டத்தை 45 வயதுக்குக் குறைந்த புகலற்ற விதவைகளுக்கு நீட்டிக்கும் ஆணைகள் நிதித்துறையின்



27—5—1975-ம் நாளிட்ட 507-ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மூப்புக் கால உதவித் தொகை பெறும் திட்டத்தில் பின்பற்றப்படும் அதே நடைமுறை இவர்களைப் பொறுத்தும் பின்பற்றப்படுகிறது. இதுவரை 4,203 புகலற்ற விதவைகளுக்கு மூப்புக்கால உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட் திட்ட அறிக்கையில் அவர்களுக்கு 45 வயது என்று குறிப்பிட்டிருந்த வயது வரம்பை 40 ஆக குறைத்து இருக்கிறோம். அதற்கு ஜி. ஓ. விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, வயதானவர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து கொடுக்கப்பட்டு வரும் ரூ. 20 தான் இன்றும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் எவ்வளவு பேருக்குக் கொடுத்தார்களோ அவர்களுக்கு மட்டும் தான் இது தரப்பட்டு வருகிறது. அதிலே யாராவது ஒருவர் இறந்து இருந்தால், அவர்களுக்குப் பதிலாக ஒருவர் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற திட்டமிருக்கிறது.

ஆகவே, வயதானவர்களுக்கு, வேறு விதமான துணை இல்லாதவர்களுக்கு, உதவி செய்ய உறவினர்கள் இல்லாதவர்களுக்கு, குழந்தைகள் இல்லாதவர்களுக்கு, அத்தனை பேருக்கும் இந்த பென்ஷன் கொடுக்கப்படும் என்ற முறையில் திட்டத்தை விரிவு படுத்தி, அந்த மக்கள் அனைவருக்கும் பென்ஷன் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. அழகர்சாமி அவர்கள் தெரிவித்த கருத்து மனிதாபிமானத்தின் அடிப்படையில் தெரிவித்த கருத்து என்று ஏற்றுக்கொள்ள எனக்கு அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் அதைச் செயல்படுத்துவதற்கு அரசின் நிதிப்பளு ஆதாரம் எந்த அளவிற்கு வசதியாக இருக்கும் என்பதை பொறுத்து தான் செய்யமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. சோ. அழகர்சாமி: கூடுதலாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்தால் அரசுக்கு ஒன்றும் குறைந்துவிடாது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அப்படி ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு கோடி, ஒரு கோடி என்று கொடுப்பதாக இருந்தால் நிதி ஆதாரம் எங்கே இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு. உமாநாத்: தலைவரவர்களே, வயோதிகர்கள் இப்போது இருக்கக்கூடிய உதவித் தொகைத் திட்டத்தின் பயனை அடைவதற்கு போடப்படும் நிபந்தனைகளிலே பஞ்சாயத்

மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விண்ணப்பத்தைப் போட்டுவிட்டு, தாலுக்கா ஆபீசுக்கும் வீட்டுக்குமாக அலைந்து திரிய வேண்டியிருக்கிறது. அப்ளிக்கேஷன் போட்டு பதில் வருவதற்கு முன் இறந்து போகக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட இரண்டு கேஸ் எனக்குத் தெரியும். ஆகவே, மனு போட்டால் துரித நடவடிக்கை—ஸ்பெஷல் ஸ்டெப்ஸ்-எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நண்பர் உமாநாத் அவர்கள் இங்கே ஒரு சோகமான செய்தியைச் சொன்னார்கள். விண்ணப்பித்து நீண்ட காலம் அதற்கு ஆகி, செயலுக்கு வருவதற்கு முன்னால் இரண்டு பேர் இறந்து போனார்கள் என்று சொன்னார்கள். அது எந்த ஆண்டில் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன.

திரு. ரா. உமாநாத் : போன ஆண்டு நடந்திருக்கிறது. இப்போதும் டிலே பிராக்டிஸ்தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த டிலேயைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சென்ற ஆண்டு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் எந்த அளவுக்கு இதிலே விரைவுபடுத்த முடியுமோ அந்த அளவுக்கு விரைவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. ராம. கரிய மாணிக்கம் அம்பலம் : சார், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிதிநிலை இடைஞ்சலாக இருக்கிறது என்று சொன்னார்கள். முதியோர்களுக்குக் கொடுப்பது 20 ரூபாய்தான். அது மிகக் குறைந்த தொகை. இந்த உதவித் தொகையைப் பெறுவதற்காக ஏராளமான முதியோர்கள் மனு போடுகிறார்கள். பலருக்கும் கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து நீங்கள் வாங்கிக் கொடுக்கவில்லையே என்று குறைப்படுகிறார்கள். இது ஒரு சிறு தொகையாக இருப்பதால் பெரிய மனது வைத்து தகுதி படைத்த எல்லோருக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்தக் கேள்விபற்றி அழகர்சாமி அவர்களுக்கு பதில் சொல்லும்போதே சொன்னேன். இப்போது நிதி ஆதாரம் சரியாக இல்லை. இந்த 20 ரூபாய் உதவித் தொகை போதாது ; இது மிகவும் குறைவுதான். நிதி ஆதாரம் சரியாக இருக்குமானால் கூட்டிக் கொடுக்க இந்த அரசுக்கு அபிப்பிராயபேதம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, முதியோர் உதவித் தொகை கேட்டு விண்ணப்பம் வருகிறபோது விரைந்து முடிவெடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்;



விரைந்து முடிவெடுக்கிறபோது, இவ்வளவு விண்ணப்பங்களில் இவ்வளவு பேர்களுக்குத்தான் தரமுடியும் என்று சொல்லி, மற்றவர்களுக்கு இல்லை என்ற நிலை உடனே சொன்னால், அதுவே அவர்களுக்கு இறுதி முடிவாகிவிடும். ஆகவே, விரைவான முடிவை அறிவிக்கும்போது அவர்களுக்கு ஏதாவது உதவி உண்டு என்று அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இது பேராசிரியரின் விளக்கவுரை என்று எடுத்துக்கொள்கிறேன், அரசு இதிலே அக்கறை காட்டுகிறது என்ற அடிப்படையிலேதான் அறிவித்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, அரசு இதிலே அதிக அக்கறை காட்டியிருந்தும் 'அலாட்மென்ட்' பேர்தத்தால் விண்ணப்பிக்கும் அத்தனை முதியோருக்கும் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, 'அலாட்மென்ட்' கூட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்ன அலாட்மென்ட் கேட்கிறார்கள் ? (குறுக்கீடு—பணம்) நான் ஏற்கெனவே திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறேன். நிதிநிலை சரியாக இருந்தால் அதிகப்படுத்திக் கொடுப்பதில் அபிப்பிராயபேதம் இல்லை. நண்பர் சிவசாமி போன்றவர்கள் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு உறுதுணையாக இருந்தால் அவர்கள் மூலம் இந்தக் காரியத்தைச் செய்யவும் தயார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஆண்டுக்கு இவ்வளவு பேருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. சில தாலுக்கா அலுவலகங்களில் வயோதிகர்கள் விண்ணப்பம் கொடுக்கும்போது அவர்களுக்குத் தகுதி இருந்தும் கூட, மேற்கொண்டு ஒதுக்க பணம் இல்லாததால் ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருப்பவர் மறைந்தால்தான் கொடுக்க முடியும் என்று தாசில்தார் கூறுகிறார். அதனால் தொகையை அதிகமாக ஒதுக்கி, தகுதி படைத்த எல்லோருக்கும் கொடுத்து, அவர்களை ஆறுதலடையச் செய்யும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அபிப்பிராயபேதம் இல்லை என்று சொன்னேன். தாசில்தார் குறுக்கே நிற்பதாக அவர்கள் சொல்கிறார்கள் ...

திரு. பெ. சு. திருவேங்கடம்: இதை இவ்வளவு பேருக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று ஏதாவது உத்தரவிடப்பட்டிருக்கிறதா என்று அறிவிக்கவேண்டும். மேற்கொண்டுகொடுக்கப்பட்ட நிதியில் யாராவது உயிர் துறந்தால் அதற்குப்பிறகு இந்த விண்ணப்பங்கள் பற்றி ஆலோசிக்கப்படும் நிலை இருக்கிறது. ஆகவே மேலும் அதிகரித்துக் கொடுக்கபப்டுமா? அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இதற்கு பலமுறை பதில் சொல்லிவிட்டேன் என்றே கருதுகிறேன். நிதியாதாரம்தான் அடிப்படை, அதிகமாக இருந்தால் அதிகரித்துக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

## Irrigation facilities under Parambikulam-Aliyar Project.

*344 Q.—Thiru K. KANDASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(a) whether the Government are aware of the fact that the extension of Parambikulam-Aliyar Project in Palladam which was sanctioned by previous Government was stayed during emergency; and

(b) whether there is any proposal to revive the said scheme in Palladam area considering the drought condition prevailing in that area?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தை நிறைவேற்றுவதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. செ. சதாசிவம் : பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து அவர்கள் காலத்திலேயே இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கின்றபோது திருச்சி ஜில்லாவிலுள்ள கரூர் தாலுக்காவும் இதில் பயனடையும் என்று உறுதியைக் கொடுத்தார்கள். அப்போது மராமத்து இலாக்கா அமைச்சராக இருந்த திரு. ராமையா அவர்கள் காங்கேயத்திலே ஒரு மகாநாடு போட்டு அந்த மகாநாட்டிலே இந்த உறுதி மொழியை உறுதியாக்கினார்கள். இந்தத் திட்டம் பரிபூரணமாக கோவை ஜில்லாவிலே பயன் கொடுக்கிறது. கரூர் தாலுக்கா மிக வறண்ட பிரதேசமாக இருப்பதனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியுள்ள நிதியின் மூலமாக கரூர் தாலுக்காவும் பயன் பெற அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே அவர் எதிர்பார்த்தது 32 டி.எம்.சி ஆனால் நமக்குக் கிடைத்தது 23 டி.எம்.சி. தான்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த பரம்பிக்குளம் ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் கவர்னர் அவர்களின் ஆட்சியின் போது ஒத்திவைக்கப்பட்ட இதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களும் பட்ஜெட்டிலே ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த





விஸ்தரிப்புத் திட்டத்தை எதிர்த்து ஹைக்கோர்ட்டிலே வழக்கு தொடரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, இது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியே இதற்குத் தூண்டுதலாக அமைந்துவிடக் கூடாது. அப்படி எதுவும் இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பல்லடம் பகுதிக்கு விஸ்தரிக்கப்படயிருக்கும் இந்தத் திட்டம் திருப்பூர் சூலூர் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதன் மூலம் பயன் பெறும் தாலுக்காக்கள் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் ஆகியவையாகும்.

* 345 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால் மூலம் செட்டிபாளையம் (மதுக்கரை ஒன்றியம்) குட்டைக்கு நீர் விடும் திட்டம் கைவிடப்பட்டதற்கான காரணம் யாது ?

(ஆ) மீண்டும் அதனைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஆயக்கட்டு பகுதிக்கே போதிய தண்ணீர் இன்மையாலும், இத்திட்டம் நிறைவேற்றப்பட அதிகப்படியான தொகை செலவு செய்யப்பட வேண்டியுள்ளது என்ற காரணம் கருதியும் கைவிடப்பட்டது.

(ஆ) இல்லை.

திரு. கு. ரமணி : பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லை என்ற விடையை அமைச்சரவர்கள் தந்தார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் எவ்வளவு தண்ணீர் நமக்கு மொத்தமாகக் கிடைக்கும் என்பதற்கு கேரள-தமிழக அரசுகளிடையே பேச்சுவார்த்தை இறுதிப்படுத்தப்பட்டு முடிவு ஆகி உள்ளதா ? இன்னும் தண்ணீர் கிடைப்பதற்கு பாத்தியதை உண்டா ? அப்படியானால் எப்போது கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரள அரசுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தியதில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆறுகளின் மீது மீண்டும் பேசுவதற்குத் தயாராக இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதனால்தான் நான் முதல் கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே சொன்னேன். 32 டி.எம்.சி. இலட்சியம் என்று திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் 23 டி.எம்.சி. தான் இப்போது கிடைக்கும் நிலை இருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. து. ராமசாமி : பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்து இன்றுவரை அதை விஸ்தரிப்பதற்கு பல நிலைகளில் முடிவு எடுக்கப்பட்டு இடையில் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று பல கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தை தாராபுரம் தாலுகாவிற்கு விஸ்தரித்துக் கொடுத்து, எவ்வளவு ஏக்கர்கள் தாராபுரம் விஸ்தரிப்பில் எடுத்துக்கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட இருக்கிறது. தாராபுரத்தில் 38,150 ஏக்கர் பலன்பெறும்.

## மின்வாரிய தலைமைப் பொறியாளர்கள்.

*346 வினு—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மின்சார வாரியத்தில் உள்ள தலைமை என்ஜினியர்களின் மொத்த எண்ணிக்கை என்ன ?

(ஆ) தலைமை என்ஜினியர்களின் தலைமை அலுவலகம் எங்கே உள்ளது ?

(இ) தலைமை அலுவலகங்கள் ஒரே இடத்தில் இருப்பதை மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆறு.

(ஆ) ஒன்று கோவையில் உள்ளது மற்றவை சென்னையில் உள்ளன.



(இ) தேவையை ஒட்டி அவ்வப்போது மாற்றம் செய்யப்படுகிறது.

திரு. மு. அரங்கநாதன் : இந்த * * * அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியையொட்டிக் கேளுங்கள். அந்த விவரம் அங்கே இருக்க முடியுமா என்று யோசித்துக் கேட்க வேண்டும். எண்ணிக்கை கேட்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு செலவழித்தார்கள் என்றில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்வி நேரத்தில் சார்ஜஸ் கூடாது என்பது நமது விதிமுறையில் இருக்கிறது. அதனால் உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினு சரியாக இராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வியையொட்டி கேள்வி கேட்க வேண்டும். திரு அரங்கநாதன் கேட்ட கேள்வியில் அந்த வார்த்தைகளை நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு மு. அரங்கநாதன் : மின் பொறியாளர்களைப் பற்றிய கேள்வி இது. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். கேள்வியையொட்டி துணைக் கேள்வி கேட்க வேண்டும். எழுந்து பேசிவிடுவது சுலபம். மீண்டும் அதையே பேசினால் என்ன பொருள் ?

## குடும்பநலத் திட்ட விளம்பரப் பிரிவு.

*347 வினு—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்ட விளம்பரப் பிரிவை தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறையுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 மார்ச் 2

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) குடும்ப நலத் திட்ட விளம்பரப் பிரிவு மட்டுமின்றி, விவசாயத் துறை போன்ற மற்றைய துறைகளிலுள்ள விளம்பரப் பிரிவுகளையும் தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையுடன் இணைப்பது பற்றிய கருத்துரு ஒன்று மிகவும் தொடக்க நிலையிலுள்ளது. தொடர்புடைய துறைகளின் கருத்துக்கள் சேகரிக்கப்படுகின்றன.

## தகவல் நிலையங்கள்.

*348 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டிலுள்ள தகவல் நிலையங்கள் (Information Centres) எத்தனை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூன்று. சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

திரு எஸ். கணேசன் : பல சுற்றுலா மையங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க சிலைகளும் ஓவியங்களும் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக பூம்புகாரில் சிலப்பதிகார காவியம் சிலைகளாக வடிக்கப்பட்டிருக்கிறது. வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு அந்தச் சிற்பங்களையெல்லாம் விவரிக்கின்ற முறையில் சுற்றுலா இன்பர்மேஷன் சென்டரில் பணியாற்றுகிறவர்களுக்கு பயிற்சி ஏதாவது அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூலக் கேள்வி செய்தித் துறையிலுள்ள செய்தி நிலையங்கள் பற்றியது. சுற்றுலாத்துறை பற்றிய செய்தி நிலையங்களைப் பற்றித்தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரமுடியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : இத்தகைய செய்தி நிலையங்கள் இப்போது மாநிலத்தில் மூன்று இடங்களில் மட்டும் செயல் படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இப்படிப்பட்ட செய்தி நிலையங்களை ஏற்படுத்துவது தான் பயனுடையதாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?



1978 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : செய்தி நிலையங்களை விரிவுபடுத்தக்கூடிய கருத்துக்களை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேலூரில் உள்ள 'ஊராட்சி இல்லம்'.

*349 வினா—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூரில் கட்டப்பட்டுள்ள 'ஊராட்சி இல்லம்' என்ற கட்டடத்திற்கு மாவட்டத்திலுள்ள ஊராட்சி மன்றங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) மேற்படி ஊராட்சி இல்லத்தின் திறப்புவிழா தமிழ் நாடு ஊரக வளர்ச்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மூலம் நடைபெற்றதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

| | ரூபாய் |
|---|---|
| (அ) ஊராட்சிகளிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. | 1,56,999.50 |
| பேரூராட்சிகளிடமிருந்து நன்கொடையாகப் பெற்றது. | 9,170.00 |
| மொத்தம் | 1,66,169.50 |

(ஆ) மேற்படி கட்டடம் ஏதாவது ஒரு அதிகாரபற்றற்ற ஒரு சங்கத்தின் மூலம் இயங்குவது நடைமுறைக்கு உதவும் என்பதாலும், வளர்ச்சித் துறையினருக்கும், இந்தக் கட்டடத்திற்கும் தொடர்பு உள்ளதாலும் திறப்பு விழா ஷ்டி சங்கத்தின் மூலம் நடைபெற்றது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி இல்லத்திற்கு ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்கள் மூலமாக வசூலித்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்கள் இதற்குப் பணம் வசூலிக்கவில்லை. ஊராட்சிகளிடமிருந்துதான் வசூலிக்கப்பட்டது.

திரு. துரை முருகன் : ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் பணம் கொடுத்து இந்த இல்லம் கட்டப்பட்டிருக்கிறது. ஊராட்சிப் பணியாளர்கள் இதற்கென்று பணம் எதுவும் தரவில்லை. அப்படி உதவி எதுவும் இல்லாத நிலையில் ஊராட்சிப் பணியாளர்கள் சங்கத்தினை இத்துடன் ஏன் இணைக்க வேண்டும் ? இதில் ஏதாவது உள்நோக்கம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அதிகாரப் பற்றற்ற ஒரு சங்கத்தின் மூலம் இது இயங்க வேண்டும் என்பதற்காகத்தான், அவர்கள் மூலமாக திறப்பு விழா நடைபெற்றது. ஆனால் இப்போது இதன் நிர்வாகம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின்கீழ் தான் இருந்து வருகிறது.

திரு. துரை முத்துசாமி : இதே முறையில் அனைத்து மாவட்டங்களிலும் ஊராட்சி இல்லங்களை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஊராட்சி மன்றங்களே சேர்ந்து முடிவு செய்ய வேண்டியது.

திரு. ப. சந்திரன் : வேலூரில் கட்டப்பட்டுள்ள இந்த இல்லத்தில் போதிய அறைகள் இருந்தும், தொலைபேசி வசதி, குடிநீர் வசதி போன்றவைகள் இல்லை. இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

## கூத்தாநல்லூரில் அங்காடி.

*350 வினா—திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூரில் சுமார் 80 ஆயிரம் திட்டத்தில் காய்கறி மார்க்கெட் அமைக்கக் கட்டடம் கட்ட அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இதற்கு அரசு அனுமதி தேவையில்லை. பேரூராட்சிக்கே அதிகாரம் இருக்கிறது.



(ஆ) கூத்தாநல்லூர் பேரூராட்சி ரூ. 85,000 மதிப்பீட்டுத் தொகையில் காய்கறி மார்க்கெட் கட்டடம் கட்டுவதற்கு 30—6—77 நாளைய தீர்மானத்தில் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேற்படி மதிப்பீடு திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை மற்றும் கிராம வேலைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி கோரி அனுப்பப் பட்டுள்ளது என்றும் அவர் அனுமதி வழங்கியவுடன் வேலை துவக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கு சைக்கிள் மூலமாக வீடுகளில் கறிகாய் கொண்டு போய் கொடுக்கும் ஒரு திட்டத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கூத்தாநல்லூரில் உள்ள கட்டடத்தைப் பற்றிய கேள்வி. நீங்கள் கேட்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

## மன்னார்குடியில் பொதுக்குழாய்கள்.

*351 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் தெருக்களுக்கு பொதுக்குழாய்கள் இணைப்பதில் சிக்கல் உள்ளதா ?

(ஆ) ஆயுள் காப்பீட்டு கழகம் தெருக்களுக்கு இணைப்புக் கொடுக்கும் திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மன்னார்குடி குடிநீர் திட்டத்திற்காக அரசிடமும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமும் மன்னார்குடி நகராட்சி வாங்கியுள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ப, நிதிநிலையை சீரமைக்கக் கருதி, கடந்த இரண்டாண்டுகளாக நகராட்சி எல்லைக்குள் தெருக் குழாய்கள் அமைப்பது குறைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக வீட்டுக் குழாய் இணைப்புகள் அதிகமாகத் தரப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

## சிதம்பரத்திற்கு குடிநீர் வழங்கல்.

*352 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நகராட்சிக்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

[1978 மார்ச் 2

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சிப் பகுதிக்கு அருகாமையிலுள்ள சுமார் 4 மைல் தூரத்தில் இருக்கும் கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர வேண்டும் என்று அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்திருக்கிருர்கள். ஆகவே இனிமேலாவது அதுபற்றி பரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திற்கு குடிதண்ணீர் கொண்டுவருவதற்கு வடக்கு ராஜன் கால்வாயிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு ஒரு திட்டமிருக்கிறது. ஜனத்தொகையைப் பொறுத்த வரையில் 1991-ல் 68 ஆயிரமாக இருக்கும், 2006-ல் 87 ஆயிரமாக இருக்கும். இங்கு அதிக நீர் வழங்குவதற்காக 64,00,000 ரூபாய் செலவில் ஒரு திட்டமும், அதை பராமரிப்பதற்காக 2 லட்சத்து 40 ஆயிரம் செலவில் ஒரு திட்டமும் வகுக்கப்பட்டிருக்கிறது. நகராட்சிக்கு இதற்குப் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால், வேருெரு மாற்றுத் திட்டம் ரூபாய் 20 லட்சத்திலும், மற்றும் பராமரிப்புக்காக 53 ஆயிரம் செலவில் ஒரு திட்டமும், சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது, இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கு நிதி ஆதாரம் கிடைக்குமாளுல் அரசு அனுமதி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கொள்ளிடத்திலிருந்து தான் இந்த வடக்கு ராஜன் கால்வாய் பிரிகின்ற நிலை இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டிஞர்கள். எனவே, இந்த வடக்கு ராஜன் கால்வாயிலிருந்து இப்போது போடப்பட்டுள்ள திட்டத்தின்கீழ் அங்கே சிதம்பரம் நகராட்சியிலே போதுமான நிதி ஆதாரம் இல்லாவிட்டாலும், அரசாங்கமே முன்வந்து பக்கத்திலே அண்ணுமலைப் பல்கலைக்கழகம் போன்ற பெரிய நிறுவனம் இருப்பதைக் கருதி, அங்கே குடிநீர் வசதி செய்துகொடுக்க முன்வருமா ?



1978 மார்ச் 2]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டத்திற்கு நிதி வசதியில்லாத காரணத்திஞல், இருக்கின்ற திட்டத்தையே அபிவிருத்தி செய்வது தான் இப்போது நான் சொன்ன திட்டம். அரசாங்கமே ஏற்று நடத்துவது என்பது, நாங்கள் தேர்தலிலே முன்னே அளித்துள்ள வாக்குறுதிக்கேற்ப, கிராமங்களுக்கு குடிதண்ணீர் அளிப்பது என்ற முறையிலே டைப் 1, டைப் 2 என்று போட்டிருக்கிருேம். டைப் 1 என்பது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் இல்லாத கிராமங்கள் ; டைப் 2 என்பது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் தண்ணீர் இருக்கும், பட் நாட் பாட்டபுள். அதாவது குடிக்கக்கூடிய தண்ணீராக இருக்காது. உப்புத் தண்ணீராக இருக்கும். இந்தக் கிராமங்களுக்கு மட்டும் உடனடியாக அரசுச் செலவிலே குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது என்பது இந்த அரசாங்கத்தினுடைய இப்போதைய திட்டம்.

## பொற்கொல்லர்கள் பிள்ளைகளுக்கு பயிற்சி வகுப்புகள்.

*353 விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சர்வீஸ் கமிஷன் "குரூப் 4" தேர்வில் கலந்துகொள்ளும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் பொற்கொல்லர்களின் குழந்தைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென பொற்கொல்லர் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அரசு எடுத்துக்கொண்ட முடிவு யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(ஆ) பொதுப்பணியாளர் தேர்வாணைக்குழுவின் 'குரூப் 4' தேர்வில் கலந்துகொள்ளும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தவிர ஏனையோர் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை என்ற காரணத்தாலும், பொற்கொல்லர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளதாலும் இக் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரணத்தை விளக்கியிருக்கிருர்கள். இந்த சர்வீஸ் கமிஷன் குரூப் 4 தேர்வில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தவிர, ஏனைய பொற்கொல்லர்களைத் தவிர, மற்ற மற்ற பிற்படுத்தப்பட்ட பிரிவுகளிலே உள்ளவர்களுக்கும் அத்தகைய வாய்ப்புக்களைப் பெற அரசு ஏதேனும் ரர்வி அளித்து வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது எந்தவிதமான உதவியும் அளிக்கப்படவில்லை. இனிமேல் இது போன்ற பிரிவினை துவக்குவதற்குப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. செல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எந்தெந்த முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையங்களில் பொது அறிவு, கட்டுரை, சுருக்கி எழுதுதல், மொழி பெயர்ப்பு, நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி, மற்றும் தமிழ்நாடு தேர்வுக் குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற இதர துறைகளுக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவர் அவர்களே, இந்தச் சலுகை நீட்டிக்கப்படுகின்ற நேரத்தில் கருமார், தச்சர் போன்றவர்களையும் இந்த அரசு சேர்த்துக்கொள்ள பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பின்தங்கியவர்களுக்கு நீட்டிக்கப்படுகின்ற நேரத்திலே, இவர்களும் அந்தப் பட்டியலிலே வருகின்ற காரணத்தினால், இது பரிசீலிக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வீஸ் கமிஷன் குரூப் 4-ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்ற வகுப்புகளில், பொற்கொல்லர்களைத் தவிர மற்றும் பிற்பட்டவர்கள், மிகவும் பிற்பட்டவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள், எந்தெந்த இடங்களில் இந்தப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அப்படி யாரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. வெ. கருணாமூர்த்தி: இந்தத் திட்டத்தின் கீழ், குரூப் 4-ல் எந்தெந்தப் பயிற்சி அளிக்கப்படுகின்றது? உதவித் தொகை ஏதேனும் அளிக்கப்படுகின்றதா? மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் இதிலே வாய்ப்பு அளிக்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னென்ன பயிற்சி அளிக்கப்படுகின்றது என்று ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாணவ





ருக்கும் 45 ரூபாய் உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. மதம் மாறிய கிறித்தவர்களும் இந்தப் பயிற்சி வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. சி. பெ. காத்தமுத்து : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு குரூப் 4 பயிற்சி அளிப்பது போல், பிற்பட்ட மக்களுக்கும் இந்தமாதிரி பயிற்சி அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பின்தங்கிய மக்களும் எல்லாத் துறையிலும் முன்னேற வேண்டும், பொருளாதாரத்தில் பிற்பட்டவர்களும் முன்னேற வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கொள்கை. இந்த நல்ல ஆலோசனையை ஏற்று பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## அவிநாசி வட்டத்தில் உழவு மாடுகள் வழங்கல்.

*354 வினா—திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவிநாசி தாலூகாவில் உள்ள அரிசனப் பொது மக்களுக்கு கடந்த 2 ஆண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அவிநாசி தாலூகாவில் அரிசனப் பொது மக்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மை.

திரு. சொ. ந. பழனிச்சாமி : அரிசனப் பெருங்குடி மக்களுக்கு உழவு மாடுகள் வழங்க அரசு மானியமாகக் கொடுக்கிறதா? விவசாயச் சாமான்கள் வழங்கவும் மானியம் தரப்படுகிறதா? அரசு கொடுக்கும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க முன் வருமா? ஒவ்வொரு தாலூகாவுக்கும் எவ்வளவு உழவு மாடுகள் வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : உழவு மாடுகள் விவசாயம் செய்கிற ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு தொகை என்று ஒதுக்கப்படுகிறது. அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் யார் யாருக்கு வழங்கப்பட வேண்டுமென்று தேர்ந்தெடுத்து வழங்குகிற முறை நடைமுறையில் இருக்கிறது.

[1978 மார்ச் 2

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் ; இது அவிநாசி தாலூகா சம்பந்தப்பட்ட கேள்வி. திருச்சி சௌந்தரராஜன் . . . . .

திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : இந்தத் திட்டம் எந்த ஆண்டில் துவங்கப்பட்டது ? எந்த அடிப்படையில் வழங்கப் படுகிறது ? மதம் மாறிய கிறித்தவர்களுக்கும் வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் திட்டம் 1958-ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறது. மாடுகளை வாங்குகிறவர்கள் உழவர்களா என்று முதலில் பார்க்கிறோம். அவர்களுக்கு ஒரு ஏக்கர் புஞ்சையோ, அரை ஏக்கர் நஞ்சையோ இருக்கிறதா என்று பார்க்கிறோம். அதுவும் இல்லையென்றால் மூன்றாண்டுக் காலம் குத்தகை நிலத்தை உழுகிறாரா என்று பார்க் கிறோம். ஆகவே, இந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது. மதம் மாறிய கிறித்தவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படு கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரண்டாண்டுகளாக அவிநாசி தாலூகாவில் உழவு மாடுகள் வழங்கும் திட்டம் நடை முறைப் படுத்தப்பட வில்லை என்று சொன்னார்கள். ஆகவே, மூன்றாவது ஆண்டு அந்த இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து அதிக மாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நிச்சயமாக மன இரக்கம் இருக்கு மென்று கருதுகிறேன். உறுப்பினர் அவர்கள் கோரிக்கையைப் பரிசீலித்து ஒப்புக்கொள்ளச் செய்யலாம்.

திரு. எம். அண்ணாமலை : அவிநாசி வட்டத்தில் இரண் டாண்டு காலமாக அரிசனங்களுக்கு உழவு மாடுகள் வழங்கப் படாமல் உள்ளதென்ற மூலக் கேள்விக்கு, இல்லை என்று அமைச் சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன காரணத்தினால் வழங்கப் படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன் ?;

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகைதான் ஒதுக்குகிறார் கள். உழவு மாடுகள் வழங்கப்படுகிற நேரத்தில் பாரபட்சம் காட்டக் கூடாது என்பதற்காகத்தான் திருவுளச் சீட்டு போடு கிறார்கள். அவிநாசி தாலூகாவுக்கு அதிர்ஷ்டம் இல்லை போலும்.



1978 மார்ச் 2]

திரு. துரை முருகன் : கேள்வி அவிநாசி சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவிநாசி சம்பந்தப்பட்ட கேள்வியைத்தான் நான் கேட்கிறேன். அவிநாசி தாலூகாவில் இரண்டாண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கப்பட வில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டாண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கப்பட வேண்டு மென்று கோரி வந்த மகஜர்கள் எத்தனை ? அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? கொடுக்கப்படும் மாடுகள் ஒரு ஜாதி மாடா அல்லது எல்லா மாடுகளும் வாங்கப் பணம் கொடுக்கப்படுகிறதா ? எந்த மாட்டை வாங்குவது ? காங்கேயம் மாட்டை வாங்குவதா அல்லது வேறு மாட்டை வாங்குவதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவிநாசிக்குக் கொடுக்க வில்லை என்று சொன்ன பிறகு இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

## சிதம்பரம்—பிச்சாவரம் சாலை.

* 355விஞ—திரு. துரை கலியமூர்த்தி திரு. எம். செல்வராஜ். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம்—பிச்சாவரம் வழித்தடம் மிகவும் சீர் கெட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம், எனில், அதனை சீர் செய்யும் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 2.40 லட்சம் மதிப்பில் இச்சாலையை மேம்பாடு செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : சிதம்பரம் தாலூகாவில் பிச்சாவரம் பகுதி பேரறிஞர் அண்ணா அவர்களை மிகவும் கவர்ந்த பகுதி என்பதை உணர்ந்திருக்கிறோம். பிச்சாவரத்தை சுற்றுலா ஸ்தல மாக ஆக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு பல மாதங் கள் ஆகின்றன. பிச்சாவரத்தின் முக்கியத்துவத்தைக் கருதி

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை விரைந்து செய்து முடிக்க முன் வருவார்களா ? எவ்வளவு விரைவில் செய்வார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் அப்பகுதி மிகவும் சீர்கெட்டு இருக்கிற காரணத்தால் தார் ரோடு போடுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. விரைவில் அந்தப் பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலிருந்து பிச்சாவரம் செல்வதற்கு ஒரு குறுக்கு வழி இருக்கிறது. அந்த வழியில் சென்ருல் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தூரம் குறைவாக இருக்கும். அந்த வழியை பிச்சாவரம் செல்வதற்குப் பயன்படுத்த—அதை சுற்றுலா துறையினுடைய பாதையாக ஏற்று உடனடியாக ஏற்படுத்த—அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

## Tiruppur-Akkanampalayam bus route.

*356 Q.—Thiru K. KANDASWAMY : Will the Honourable the Minister for Transport be pleased to state:

(a) whether it is a fact that a permit was issued for plying town bus from Tiruppur Bus stand, Dharapuram road, Government Hospital Chettipalayam, Mudroad to Ayyampalayam, Kalinathampalayam, Akkanampalayam, etc., to the Government Transport Undertaking;

(b) whether the Government are aware that buses are not operated on the route; and

(c) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; (அ) இல்லை.

(ஆ) & (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.



## கோழி வளர்ப்புப் பண்ணைகள் நிறுவ உதவி.

*357 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழி வளர்ப்புப் பண்ணைகள் நிறுவிட அரசு உதவி புரிந்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிறு உழவர், சொற்ப நில உழவர், வேளாண்மைத் தொழிலாளர் ஆகியவர்களுக்கும் இது தவிர மலைவாசிகளுக்கும் அரசு உதவி செய்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த கோழி வளர்ப்புப் பண்ணைகள் பெரும்பாலும் கிராமங்களில்தான் இருந்து வருகின்றன என்று சொல்லப்படுகிறது. நகரங்களிலும் கோழிகளை வளர்க்கின்ற திட்டங்களுக்கு உதவும் வகையில் அதற்கான முயற்சிகளை எந்த வகையில் அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மட்டுமல்லாமல் நகர்ப்புறங்களிலும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்த கோழிப் பண்ணைகளில் மிகவும் நஷ்டம்தான் வருகிறது. இந்தக் கோழிப் பண்ணைகளை ஊக்குவிப்பதற்கு, நஷ்டம் வராமல் நடத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கூடுமானவரையில் நட்டம் இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மூலமாகச் செயல்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தற்போது தமிழகத்தில் கோழி வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை இருக்கின்றன ? இந்த கோழி வளர்ப்புப் பண்ணைகளில் எத்தனை கோழிகள் உயிரோடு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, திரு. கிட்டப்பா அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கிராமங்களிலே கோழி வளர்க்கிறபோது அடிக்கடி ஏதாவது வியாதி வந்து ஏககாலத்திலே செத்து விடுகின்றன, கிராமங்களிலே அதற்குப் போதுமான மருத்துவ வசதிகள் இல்லை, ஆகவே மருத்துவ வசதிகள் செய்து தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கோழிகளுக்கு நோய் வந்தால் அவைகளைத் தடுக்கக்கூடிய முறையிலே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கோழிகள் இறக்காமல் இருப்பதற்கும் நல்ல முறையிலே வளர்க்கப்படுவதற்கும் உண்டான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைகள் நட்டத்தில் ஓடுவதாகச் சொல்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக்கபூர்வமான நடவடிக்கை என்றால் என்ன ? ஆக்கப்பூர்வமான என்ற அந்த வார்த்தையே அதை வளர்ச்சி செய்து விடுமோ ? நட்டம் இல்லாமல் அவைகள் நடக்கக்கூடிய வகையில் இல்லை. காரணம் தீவனத்தின் விலை அதிகமாக இருக்கிறது என்கிறார்கள், ஆகவே, தீவனத்தைக் குறைந்த விலையில் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே ஆக்கப் பூர்வமான நடவடிக்கை என்று சொன்னால் கோழிகள் இடும் முட்டைகளின் எண்ணிக்கையைப் பெருக்குவது, கோழிகளை அதிகமான விலைக்கு விற்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வது, கோழிப் பண்ணைகள் நட்டம் இல்லாமல் நடக்குமாறு அதிகாரிகளைக் கண்காணித்துக் கொண்டு நல்ல முறையிலே நடத்துவது ஆகியவை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள். இந்த நடவடிக்கைகளை இந்த அரசு தவறாமல் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, முதுகளத்தூர் பகுதியிலே பேரையூரிலே கோழிப் பண்ணை ஒன்று இருந்து. 3, 4 ஆண்டுகளுக்கு முன்னதாக மூடப்பட்டு விட்டது, அதை மறுபடியும் திறக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபற்றி அரசு ஆராயும்.





*Animal Husbandry Scheme*

*358 Q.—Thiru N. RAMACHANDRA REDDY : Will the Honourable the Minister for Social Welfare be pleased to state :

(a) whether it is a fact that an Overseas Development Agency Scheme for the development of Animal Husbandry has been formed and a special officer has been posted to attend to the preliminary work; and

(b) if so, the present stage thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். ஒசூர் கால்நடைப் பண்ணையில் பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் ஒரு பால்வளத் திட்டம் நிறுவ செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இத் திட்டம் துவக்குவதற்கான ஆயத்த வேலைகளை மேற்கொள்ள தமிழ்நாடு பால்வள நிறுவனத்திலுள்ள ஒரு அலுவலர், நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) திட்டம் துவங்குவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது,

தென்னாற்காடு மாவட்டத்தில் மண்வள ஆராய்ச்சி.

*359 வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் மண்வள ஆராய்ச்சி ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தப் பகுதிகளில் எப்போது செய்யப்பட்டது ?

(இ) அதன் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்து ஒன்றிய வாரியாக மண் வள நிர்ணய வரைபடம் 1970 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.

(இ) ஒவ்வொரு பகுதியின் மண்வளத்தை அறிவதனால் அந்தந்தப் பகுதியின் மண்ணின் வளத்தையும், குறைபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு, தேவையான உரத்தையும் அதன் அளவையும் நிர்ணயித்து, அதிக விளைச்சலை அடைய வழி வகுக்க

முடியும். இந்த மண் வளச் சோதனையின் மூலம் தென்னாற்காடு மாவட்டத்தில் சுமார் 18,000 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள் களர் அல்லது உவர் தன்மையுடையன என்பதும் கணிக்கப்பட்டுள்ளது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகள் தங்கள் நிலங்களுடைய மண் எந்தத் தன்மையுடையது என்று கண்டு அதற்கேற்ப உரம் இட்டு அதிக மகசூல் கிடைக்கும் என்ற அடிப்படையில் அப்படிப்பட்ட பிரச்சாரத்தை விவசாயிகள் மத்தியில் தீவிரமாகச் செய்ய அரசு முடிவெடுக்குமா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அந்தப் பரிசோதனையைத் தீவிரப்படுத்துகின்ற அதேநேரத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் ஏறக்குறைய 18,000 ஹெக்டேர்ப் பரப்புள்ள நிலங்களைக் கண்டுபிடித்து அந்த நிலங்களின் மண் வளத்தை அறிந்து அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் 'மொபைல் வேன்கள்' மூலம் 'மொபைல் லெபரட்டரி, அதாவது ஊர்ந்து செல்லக்கூடிய ஆராய்ச்சி நிலையங்களையெல்லாம் இந்த அரசு வைத்திருக்கிறது. அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அங்கேயே, நிலத்தின் பக்கத்திலேயே சென்று உடனடியாக அந்தப் பரிசோதயைச் செய்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் கூறி வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றியது. அதை நினைவூட்டி திரு. பி. எச். பாண்டியன் அவர்களைக் கேள்வி கேட்க அழைக்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, இது தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றியதாக இருந்தாலும், நெல்லை மாவட்டத்தில் அதிகாரிகள், நிலச்சொந்தக்காரர்களைக் கேட்காமல் மண்வளப் பாதுகாப்பு என்று சொல்லி, அவர்களுடைய நிலத்தில் அவர்கள் வெட்டி உயர்த்திய கரைக்கு நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து கடன் வசூல் செய்வதைப்போலக் கெடுபிடி நடக்கிறது. இப்படிப்பட்ட நிலையை இந்த அரசு அறியுமா ? நிலச் சொந்தக்காரர்களைக் கேட்காமல் மண்வளப் பாதுகாப்பு என்று கூறுகின்ற இந்த அரசு நிச்சயமாக அந்த வசூலைத் தள்ளி வைக்க ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன். பேரவைத் தலைவரவர்களே, நான் சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன். மண்வளப் பாதுகாப்பு என்று நெல்லை மாவட்டத்தில்—இந்த அரசு போட்டது அல்ல—நிலச் சொந்தக்காரர்களைக் கேட்காமல் மண்ணின் கரையை உயர்த்தி அந்த நிதிச் செலவுக்காக அரசு இப்பொழுது வசூல் செய்வதைத் தள்ளி வைக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கேட்ட கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. எஸ். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மண் பரிசோதனை செய்யும் நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கின்றது அத்தனை தாலூக்காக்களிலும் இல்லை. அங்கே சில வசதிகள் இல்லாமல் இருக்கிறது. எனவே, அந்த மண் பரிசோதனை செய்யும் நிலையம், ஒவ்வொரு தாலூக்காவிலும் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, எந்தெந்த இடங்களிலே மண்வளப் பரிசோதனை நிலையங்கள் இல்லையோ அந்த இடங்களுக்கு மொபைல் லெபரேட்டரி என்று நான் ஏற்கனவே சொன்னேன். அதுமாதிரி ஆராய்ச்சி நிலையங்கள் அங்கேயே, எங்கெங்கு மண்வளப் பரிசோதனை நடத்த வேண்டுமோ அந்த இடங்களுக்குச் சென்று நடத்தி வருகின்றன. மேலும் பல இடங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் இல்லாமல் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஆராய்ந்து ஆலோசனை செய்து வருகிறது. எங்கெங்கு பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தலாம் என்பது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.50]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த மண் ஆய்வுக் குழு என்று தென்னாற்காட்டிலும் மற்ற இடங்களிலும் செயல்படுகின்றது. இதனுடைய 'ஆர்கனைசேஷன் செட் அப்' என்ன ? எத்தனை பேர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள்? இந்த டெஸ்ட் செய்தபிறகு, அதனுடைய விளைவுகளை, சென்ட்ரல் டீம் வைத்து, ஆராய்ச்சி செய்து, மற்ற மாவட்டங்களுக்கும் பயன்படும் வகையில், செய்திகள் சேகரித்து, மற்ற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறதா என்ற விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண் வள ஆராய்ச்சி, ஆர்கனைசேஷனல் செட் அப் பற்றிக் கேட்டார்கள். அதைப்பற்றி தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மண்வளப் பரிசோதனை அங்கே நடக்கும்போது, அந்தப் பரிசோதனை மூலமாகக் கிடைக்கும் விளைவுகளை நாம் மற்ற மாவட்டங்களுக்கும் தெரிவிப்பது வழக்கம். அதைப் போலத்தான் இப்பொழுதும் நடக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வரதராஜன்—தென் ஆற்காடு மாவட்ட மண் வளத்தைப் பற்றி கேள்வி கேளுங்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த மண் வள ஆய்வுக் கூடத்திற்கு விவசாயிகள் அனைவரும் மனுப் போட்டால், ஆய்வு செய்வார்களா ? அல்லது, குறிப்பிட்ட பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு மட்டும் ஆய்வுக்கு அனுப்புகிறார்களா என்ற விவரத்தைச் சொல்ல இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு 'ஆல்கலைன்' அல்லது 'சலைன்'—உவர் அல்லது துவர்ப்பு மண் இருக்கிறதோ, அந்த இடங்களையெல்லாம் ஆராய்ந்து, இந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மண்ணை ஆராய்ச்சி செய்து விவசாயிகளுக்கு அறிவிக்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் சொல்வதுபோல், ஏழை விவசாயிகளுக்கு அந்த மண்ணை நல்ல மண்ணாக மாற்றுவதற்கான செலவுகளைச் செய்ய முடியவில்லை. இப்பொழுது இந்தத் திட்டத்தின்கீழ், ஏதாவது கடன்கள் வழங்க ஏற்பாடு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இல்லையென்றாலும், மேற்கொண்டாவது இந்த அரசு செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக, ஏழை எளிய விவசாயிகள், பலன் அடைய வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும். விளைச்சலை அதிகமாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த ஆராய்ச்சி நிலையங்கள் ஈடுபட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ; அதேபோல், மலையிலேயிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு (Hill Area Development Scheme) போன்ற பல திட்டங்களின் அடிப்படையிலே அவர்களுக்கு வேண்டிய புண உதவி செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் மண்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி நிலையங்கள் தமிழகத்திலே எத்தனை செயல்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, நடமாடும் 'மொபைல் லேபரட்டரீஸ்', இதுவரையிலும் 3 லேபரட்டரீஸ், ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. அவைகள் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.



புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விற்பனைக் குழு

*360 வினா—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திற்கென தனியாக மார்க்கெட்டிங் கமிட்டி (Market Committee) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை * ஒன்று அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, திருச்சியில் தற்பொழுது இயங்கிக்கொண்டு வருகிற 'மார்க்கெட்டிங் கமிட்டி' யானது, பல்வேறு சூழல்களுக்கு உதவியிருக்கிற காரணத்தினால், மேலும் பல்வேறு வசதிகள் புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கிடைக்காத காரணத்தினால், உடனடியாக இந்த ஆண்டே எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தனியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அமைப்பதற்கான ஆலோசனையை அரசு ஆராய்ந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கும் அரசினுடைய ஆராய்ச்சியிலே இருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, மார்க்கெட்டிங் கமிட்டியின் விற்பனை விளைபொருள் பட்டியலில் அதிக வருவாய் தருவது நெல்தான். ஆனால், தமிழ்நாடு உணவு வழங்குபொருள் கழகத்திற்கு விற்கப்படும் நெல்லுக்கு செஸ் வசூலிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அந்தத் தடையை நீக்கி, மீண்டும் செஸ் வசூலிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மூலக் கேள்வி புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தனியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைப் பற்றியது. செஸ் பற்றிய கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

---

*362 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, புதுக்கோட்டையும், திருச்சியும் ஒன்றாக இருந்த காரணத்தினால், அதைப் பிரித்த நேரத்திலே, இந்த மார்க்கெட்டிங் கமிட்டியை புதுக்கோட்டைக்குத் தனியாக அமைக்கிற நேரத்திலே, திருச்சி மாவட்டத்திலேயிருக்கிற மார்க்கெட்டிங் கமிட்டி நல்ல முறையிலே செயல்படாததனால், அதையும் மாற்றியமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே இருக்கக்கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இப்பொழுது நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சரியாகச் செயல்படவில்லையென்று சொல்கிறார். அப்படி ஏதாவது புகார்கள் வந்தால், அதைத் தயவுசெய்து அரசுக்கு அனுப்பினால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

## 2. தகவல் கோரல்.

### சமூக நலத்துறை அமைச்சருக்குப் பதிலாக வேறு அமைச்சர் கேள்விக்கு பதிலளித்தது குறித்து.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, இன்று சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கேள்விக்கு வேறு அமைச்சர் பதில் அளித்தாரே, அதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஓர் வழக்கறிஞர்; கூட்டுப் பொறுப்பு இருப்பதாலே எந்த அமைச்சரும் பதில் சொல்லலாம். வேறு எந்த காரணமும் இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, நான் பல தடவை உங்களுடைய கவனத்தைக் கவர்வதற்காக கை தூக்கிக் காண்பித்தேன். தகவலைப் பெற வேண்டும் என்ற எண்ணம் எனக்கிருக்கிறது. இருந்தும் தாங்கள் எனக்கு ஓரவஞ்சனை செய்கிறீர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வடார்க்காடு மாவட்டம் என்று வரும்போது திரு. இராமசாமியை விடமாட்டேன். தங்களை ஒட்டிய கேள்வி இல்லை என்பதால் விட்டிருப்பேன். தயவுசெய்து வேண்டுமென்றே தங்களைக் கவனிக்கவில்லை என்று கருதவேண்டாம்.





## (3) உரிமைப் பிரச்னை.

### நிதிநிலை அறிக்கையை பேரவைமுன் வைக்குமுன் ஆளுநர் உரை இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை குறித்த பிரச்சினை.

"1978–79-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவையின் முன் வைப்பதற்கு முன் ஆளுநர் உரை இருக்க வேண்டியது அவசியம் என்றும், அது இல்லாததால் அவை உரிமை பாதிக்கப்பட்டுள்ளது" என்றும், பேரவையின் 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ரகுமான் கான், பி. விஜயராகவன், ஜே. ஜேம்ஸ் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இது குறித்துப் பேரவையில் எழுப்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

ஏற்கனவே இது பல தடவைகள் இந்த அவையிலே பேசப்பட்ட பிரச்சினை. சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அரசியல் சட்டத்தின் 202-வது பிரிவின்படி நிதிநிலை அறிக்கையை, சமர்ப்பித்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தின் 202-வது பிரிவின்படி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் சமர்ப்பித்தது சரியானது. ஆனால் அரசியல் சட்டத்தின் 176-வது பிரிவும், தமிழ்நாடு சட்டப் பேரவை 8, 9, 10, 11, 12 ஆகிய விதிகளும், நிதி அமைச்சர் இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தவேண்டும். அதன் மீது விவாதம் நடைபெறவேண்டும். அப்படி ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவதும், விவாதம் நடைபெறுவதும், இருக்க வேண்டும் என்று சட்டமன்றப் பேரவை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், ஆளுநர் எந்த சந்தர்ப்பங்களில் உரை நிகழ்த்த வேண்டும் என்பது குறித்து அரசியல் சட்டத்தினுடைய 176-வது பிரிவு மிகத் தெளிவாக குறிப்பிடுகிறது. அரசியல் சட்டத்தினுடைய 176-வது பிரிவு

At the commencement of the first session after each general election tooh Legislative Assembly and at the commencement of the first session fahetc year the Governor shall address the Legislative Assembly என்று இருக்கிறது.

இந்த அரசியல் சட்டத்தினுடைய 176-வது பிரிவு, இரண்டு Pre-requisites சந்தர்ப்பத்திலே தெளிவாக 'Governor shall address' என்றும் 'manda ony provision கட்டாயம் அமுல் நடத்த வேண்டிய பிரிவாக இருக்கிறது. ஒரு சந்தர்ப்பம் சட்டப்பேரவையின் தேர்தல் முடிவடைந்தவுடன் முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தவும், அதன் மீது விவாதம் நடைபெறவும் வேண்டும். இரண்டாவது சந்தர்ப்பத்தைச் சொல்லும்போது 'First session of each year' ஒவ்வொரு ஆண்டினுடைய முதல் கூட்டத் தொடரின்போது ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தவும், அதன் மீது விவாதம் நடைபெறவும் வேண்டும் என்று அரசியல் சட்டத்தினுடைய 176-வது விதியில் தெளிவாகக் கூறப்படுகிறது.

"Provision shall be made by the rules regulating the procedure of the House or either House for the allotment of time for discussion of the matter refered to in such address

அதோடு மட்டுமல்ல. இந்தச் சட்டப்பேரவையில் ஆளுநர் உரை, அதன் மீது விவாதம் நடத்துவதற்கு நேரத்தை ஒதுக்குகின்ற விதத்தில் இந்தச் சட்டப்பேரவை விதிகள் இருக்கவேண்டும் என்று Man datory Provisions கட்டாயமாக இருக்கவேண்டும் என்று விதி தெளிவாகச் சொல்கிறது.

[முற்பகல் 10.00]

அதன்படி சட்டமன்றப் பேரவையின் விதிகள் 9 மிகத் தெளிவாக குறிப்பிடுகிறது :—

9 (1);—under Article 176(2) of the Constitution the Speaker shall in consultaiion with the Leader of the House and the Business Advisory Committee, if any, allot the time necessary for the discussion of the matters refered to in the Governor's adderss under Article 1976 (1)"

அரசியல் சட்டத்தின் 176-வது பிரிவின்படி இந்த மன்றத்தின் தலைவர், அவை முன்னவரைக் கலந்து கொண்டும், அதைப்போல் அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்து கொண்டும் ஆளுநர் உரை நிகழ்த்தவும், அதன்மீது விவாதம் நடத்தவும் 'நேரத்தை அலாட் செய்வது—ஷல் அலாட்'—என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்தப் பிரிவுகள் எல்லாம் அரசியல் சட்டம் 176-வது பிரிவின்படி அமல் நடத்தப்பட வேண்டியவைகள். ஆனால் இங்கே அது அமல் நடத்தப்படவில்லை.

அப்படி அமல் நடத்தப்படாததற்கு, ஆளுநர் உரை நிகழ்த்தப்படாமல் அதன் பேரில் விவாதம் நடைபெறாமல், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். இது சட்டவிரோதமானது. பாராளுமன்ற உரிமைக்கு ஆதார சுருதியாக இருக்கும் இந்த மன்றத்தின் விவாத உரிமைகள் பறிக்கப்பட்டு இருக்கின்றன. இது என்னுடைய முதல் குற்றச்சாட்டு.



அதேபோல் இந்த அவையின் உரிமையும் பறிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அரசியல் சட்டத்தின் பிரிவு 176-ன்படி, சட்டமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்று முடிந்த உடன் கூடுகின்ற சட்டமன்றக் கூட்டத்தின் முதல் தொடரில் ஆளுநர் உரை நிகழ்த்தப்பட வேண்டும். இது அரசியல் சட்டத்தின் 176-வது பிரிவின்படி ஒரு கண்டிஷன். அந்த அடிப்படையில் சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்று முடிந்த உடன், இந்தத் தேர்தல் முடிந்தவுடன், இந்த அவையில் நடைபெற்ற முதல் கூட்டத் தொடரில் இங்கே ஆளுநர் உரை வந்தது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தயவு செய்து முடித்துக் கொள்ளுங்கள். எல்லாம் சொல்லியாகிவிட்டது.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் எல்லாவற்றையும் சொல்லியாகிவிட்டது. முடிக்க வரும்போது திரும்பவும் ஆரம்பித்தால் எப்படி? ஒத்தி வைப்புத் தீர்மானம் வேறு இருக்கிறது.

<u>திரு. ஏ. ரகுமரன்கான்</u> : நான் இன்னும் முடிக்கவில்லை. இரண்டு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் 1/2 மணி நேரம் கூடப் பேசலாம். எல்லாம் சொல்லியாகிவிட்டபடியால் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : இன்னும் நிதியமைச்சரின் அறிக்கை குறித்து கருத்து சொல்ல வில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் எழுப்பியுள்ள பிரச்னை மீது சுருக்கமாகப் பேச வேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : அப்போது ஆளுநர் உரை நிகழ்த்தப்பட்டு விவாதமும் நடைபெற்றது. ஆனால் இப்போது 1978-ம் ஆண்டுக்கு இது முதல் கூட்டத் தொடர். ஆண்டு என்று சொன்னால் 1977—78 நிதியாண்டு என்று அல்ல. ஆண்டு என்பதற்கு எதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்குத் தெளிவாக அரசியல் சட்டத்தின் 176-வது பிரிவு குறிப்பிட்டு இருக்கிறது. ஆண்டு என்றால் எந்த ஆண்டு என்று குறிப்பிடப்படவில்லை என்றால்—அதுபற்றி அரசியல் சட்டத்திலே விளக்கம் இல்லாதபோது, அரசியல் சட்டத்தின் பிரிவு சொல்கிறது, ஜெனரல்

கிராசஸ் ஆக்ட் அதற்கு அப்ளை செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறது. ஆகவே, பைனான்சியல் இயர் என்று எடுத்துக்கொள்ளாமல் காலண்டர் ஆண்டு என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால், இந்தச் சபையின் கூட்டத் தொடர் 1977-வது ஆண்டின் கன்டினுவஸ் செசன், இது தொடர் கூட்டமே தவிர—அந்தக் கூட்டம் ப்ரொரோக் செய்யப்படவில்லை—முடித்து வைக்கப்படவில்லை—அது முடித்து வைக்கப்பட்டால் தான், அரசியல் சட்டத்தின் 176-வது பிரிவின் படி முதல் கூட்டத் தொடர் ஆகும் என்று சொல்கிறீர்கள். இப்போது 1978-ம் ஆண்டு நடைபெறுகிறது. ஆகவே, இந்தத் கூட்டத்தொடர் 1977-ம் ஆண்டு தொடர் கூட்டம் முடித்து வைக்கப்படவில்லை—ப்ரொரோக் செய்யப்படவில்லை—சபாநாயகர் அவர்கள் ஒத்தி தான் வைத்து இருக்கிறார்—அட்ஜெர்ன் செய்து இருக்கிறார்—இந்தஅவை கவர்னர் ப்ரொரோக் செய்யப்படவில்லை என்று சொல்லி, இது தொடர் கூட்டம்: ஆகவே, 176-வது விதியின்கீழ் இங்கே கவர்னர் உரை நிகழ்த்தவேண்டிய அவசியம் இல்லை என்று அவர்கள் முடிவு எடுத்து, நடத்தத் தேவையில்லை என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அத்துடன் 3 ப்ரீசிடென்ஸ்—மரபுகள் இருக்கின்றன—எனவே ஆளுநர் உரை இல்லாமல், விவாதம் இல்லாமல் நடத்துவது தவறு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, இன்னொரு காரணத்தையும் சொல்லியிருக்கிறார்கள். புயல், வெள்ளச் சேதத்தால் தமிழகம் பாதிக்கப்பட்டது. ஜனவரி 10-ம் தேதி தான் இந்தக் கூட்டத்தொடர் முடிக்கப்பட்டது. குறைந்த அவகாசம். ஆகவே, ஆளுநர் உரை நிகழ்த்த அவகாசம் இல்லை. ஆகவே, ஆளுநர் உரை இல்லை. என்று மூன்று காரணங்களைச் சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், ஏன் ப்ரொரோக் செய்யப்படவில்லை? அரசியல் சட்டத்தின் 163- பிரிவு மிகத் தெளிவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் முடித்துக்கொள்ளுங்கள். உறுப்பினருடைய முக்கிய நோக்கத்தை இந்த அவை புரிந்து கொண்டு இருக்கிறது. நீங்கள் தயவு செய்து நேரத்தை வீணாக்காதீர்கள்.

திரு. ஏ. ரகுமான்கான் : இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இரண்டு நிமிடம் இரண்டுநிமிடம் என்று சொல்லி பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்.





THIRU A. RAHMANKHAN : Sir, I may take two minutes. I shall finish my arguments.

அரசியல் சட்டம் 163-வது பிரிவில்,

" There shall be a Council of Ministers with the Chief Minister at the head to aid and advise the Governor in the exercise of his function, except in so far as he is by or under this Constitution required to exercise his function or any of them in his discretion "

என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

முதலமைச்சரும், இந்த அமைச்சரவையும் கவர்னர் சரியாகச் செயல்படுவதற்கு ஆலோசனை வழங்க வேண்டும்; கவர்னருடன் ஆலோசனை நடத்த வேண்டும், அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. சபையை நடத்துவது, அல்லது ஒத்திவைப்பது என்று ஆளுநருக்குச் சொல்ல வேண்டும்; ஆலோசனை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அப்படி இருந்தும்கூட இன்றுவரை 'ப்ரொரோக்' செய்யவில்லை என்றால் இதிலே 'மோட்டிவ்' இருக்கிறது. ஆளுநர் உரையாற்றக்கூடாது என்று திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்றுதான் இது என்பதில் சந்தேகமில்லை.

ஏன் உரையாற்ற விடவில்லை என்றால், மதுவிலக்கை இந்த அரசு அமுல்படுத்துகிறது என்று சொல்கிறார்கள் என்றால், அது பற்றி கேட்கும்போது ஒரு எக்கச்சக்கமான நிலைமை உருவாகிவிடக் கூடும்; ஊழல் என்று வருகிறபோது அதிலே எதிர்க் கேள்விகள் பல எழும். அப்படியானால்........(மணியடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இரண்டு நிமிடம், இரண்டு நிமிடம் என்று பேசிக்கொண்டே போகிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள். மேற்கொண்டும் நேரம் கொடுக்க இயலாது; உட்காருங்கள். அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'அட்ஜர்ன்மென்ட் மோஷன்' கொடுத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உரிமைப் பிரச்சனை. (திரு. ஏ. ரகுமான்கான் எழுந்தார்). நீங்கள் உட்காருங்கள். திரு. ஜேம்ஸ்.

திரு. ஏ. ரகுமான்கான்: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதிக நேரம் பேசி விட்டீர்கள். தயவு செய்து உட்காருங்கள். நான் மணி யடித்த பின்னால் நீங்கள் பேசிய பேச்சுக்கள் அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். திரு. ஜேம்ஸ்—நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூறிய கருத்துக்கள் நீங்க லாக மேற்கொண்டு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த உரிமைப் பிரச்சனை மீது இந்த அரசுத் தரப்பில் தரப் படுகின்ற வாதத்திற்கு ஒரு பதிலைக் கூறவிரும்புகிறேன். ஏற்கனவே நடைபெற்ற சட்டசபைத் தொடர் கூட்டம் 'புரொரோக்' செய் யப்படாததால் இப்போது நடக்கிற கூட்டம் அதன் தொடர் கூட்டமாக இருக்கிற காரணத்தால் கவர்னர் உரையாற்ற வேண் டிய அவசியம் இல்லை என்ற கருத்தை அரசு தரப்பில் கூறுவதாகத் தெரிகிறது.

புரொரோக் பண்ணுவதற்கு என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது, எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி அரசியல் சட்டத்தில் விதிமுறைகள் தெளிவாக இல்லை. புரொரோக் செய்து, அடுத்த பட்ஜெட் கூட்டத்திற்கு முன்னால் கவர்னர் உரையாற்ற வேண்டுமென்பது ஒரு 'புரொசீஜர்' ஆக இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 'ஆர்டிக்கிள் 176 ஆப் தி கான்ஸ்டிடியூஷன்' படி ஆளுநர் ஒவ்வோராண்டு ஆரம்பத்திலும் உரையாற்ற வேண்டுமென்று.

"It is a mandatory provision"

அதுபற்றி நான் அதிகம் கூறவேண்டிய அவசியம் இல்லை. அந்த ஆர்ட்டிகிளில் தெளிவாக இருக்கிறது.

ஆக, ஆளுநர் உரைவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால், அரசு ஏற்கனவே நடைபெற்ற அந்தத் தொடர் கூட்டத்தை புரொ ரோக் செய்யவேண்டிய பொறுப்பு இருக்கிறது. கவர்னர்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



உரையாற்ற வேண்டியது கட்டாயம். அதற்காக அந்தக் கூட்டத் தொடரை புரொரோக் செய்திருக்க வேண்டும். புரொரோக் செய்யாததால் கவர்னர் உரையாற்ற முடியாத ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி விட்டார்கள்; இது இந்த மாமன்றத்தின் மரபை மீறிய ஒன்று என்ற குற்றச்சாட்டை இங்கே கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு ஆண்டு என்று சொன்னால் 'ஃபினான்ஷியல் இயர்' என்ற வாதத்தை அரசுத் தரப்பிலே எடுத்துவைத்ததற்கு திரு. இரகுமான்கான் அவர்கள் விளக்கம் கூறிவிட்டார்கள். ஆண்டு என்றால் அரசியல் சட்டத்திலே 'இன்டர்பிரட்டேஷன்' செய்யும் போது 'ஜெனரல் கிளாஸ் அப்ளை' செய்யலாம் என்று இருக்கிறது. ஆர்ட்டிகிள் 367-ல் விளக்கமாக இருக்கிறது.

ஆக, ஜெனரல் கிளாஸ் அப்ளை செய்யும் போது ஒரு ஆண்டு என்று கூறுகிற போது, "கிளாஸ் 3, ஐட்டம் 66 ஆப் தி ஜெனரல்? கிளாஸ் ஆக்ட்' என்ன கூறுகிறது என்றால் 'ஃபினான்ஷியல் இயர் அல்ல 'பிரிட்டிஷ் காலண்டர் இயர்' என்று தெளிவாகக் கூறுகிறது.

[முற்பகல் 10—10]

ஆக சட்டமன்றக் கூட்டம் 1976—77 ஆம் ஆண்டு நடைபெற வில்லை. 1978 ஆம் ஆண்டில்தான் நடைபெறுகிறது என்பதில் ஐயமில்லை, என்பதைத் தங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆக 1978-ஆம் ஆண்டு நடைபெறுகிற முதல் கூட்டம் என்ற எண்ணத்தினால் இந்தக் கூட்டத்திற்கு முன்னோடியாக ஆளுநர் அவர்களது உரை அவசியம் இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

ஆகவே ஆளுநர் அவர்கள் உரையாற்றாமல் நடந்த மற்ற சட்டமன்றம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் எல்லாம் சட்ட ரீதியாகச் செல்லாது என்பதற்கு ஆதாரங்கள் எத்தனையோ இருக்கின்றன. அது உயர்நீதி மன்றத்துக்குக்கூட எடுத்துச் செல்லப்பட்டு உயர்நீதி மன்றங்கள் கூட தீர்ப்பளித்திருக்கின்றன. இவைகளை எல்லாம் உதாரணத்துக்கு எடுத்துக் காட்டி நான் முடித்துக்கொள்கிறேன்.

அதாவது Parliamentary Practice and Rules of Procedure என்ற Kaul and Shakdhar அவருடைய புத்தகத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

If a Legislature meets and transacts Legislative business without the preliminary of an address by the Governor, when required under Article 176 its proceedings are illegal and invalid and may be questioned in a Court of Law.

அதற்கு ஆதாரமாக AIR 1966 Calcutta 363—ஐ எடுத்துக்காட்டியிருக்கிருர்கள்.

We think this provision is mandatory provision In the Constitution. If it is a mandatory provision, the violation of this provision by this Government has taken place and so all the proceedings already taken place in the House are all illegal and void.

உயர்நீதி மன்றத்தில் கூட இந்தப் பிரச்சினை எடுத்துச் சொல்லப்பட்டு இதற்கு ஒரு முடிவு, தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத் தீர்ப்பை மீறி இந்த அரசு செயல்பட்டிருக்கிறது என்று சொன்னுல் உண்மையிலேயே வருந்தத்தக்கது. இது மிகவும் முக்கியமானதொரு உரிமைப் பிரச்சினை. ஆகவே இந்த உரிமைப்பிரச்சினை எழுகின்றது.

ஆக இப்போதுகூட ஒன்றும் இதில் தாமதம் ஆகிவிடவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத்தில் இன்றைய தினம் கவர்னர் உரையை எடுத்துக் கொள்ளலாம். இன்றுதான் கடைசி நாள் இந்த பட்ஜெட் விவாதத்தின் மீது. ஆளுநர் உரை இல்லை, ஆகையால் அதன்மீது பேச வாய்ப்பில்லை என்று எழுந்துள்ள இந்த சட்ட பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற முறையில் இந்தப் பேரவையின், மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து ஆளுநர் அவர்களை அழைத்து அவர்களுடைய உரையை இங்கே நிகழ்த்தி அதன்மீது விவாதித்த பிறகு மற்றவற்றை எடுத்துக் கொள்ளும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தச் செய்தால் நல்லது. உண்மையிலேயே இங்கே எழுந்திருக்கின்ற இந்தச் சட்டப் பிரச்சினைக்கு தீர்வு காண இயலும்.

ஆகவே, ஒன்று இதைப் பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். அல்லது ஆளுநர் அவர்களை அழைத்துப் பேசச் செய்து அதன் மீது விவாதத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அருமை நண்பர் ரகுமான் கான் அவர்களும் ஜேம்ஸ் அவர்களும் ஒரு பிரிவிலேஜ் இஷ்யூ என்ற பெயரில் கவர்னர் உரை இல்லாமல் இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கக்கூடாது. கவர்னர் உரைக்குப் பிறகுதான் அது தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆக இது சபையின் உரிமை மீறல் அல்லது சபை உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டிய வாய்ப்புகளைத் தட்டிப் பறிப்பதாகும் என்ற ஒரு கருத்தோடு அரசியல் சட்டத்தின் சில சரத்துக்களை இங்கே மேற்கோள்காட்டி இரண்டு பேரும் பேசினுர்கள்.



அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போழுது இந்த பட்ஜெட் விவாதத்தை நிறுத்தி வைத்து உடனடியாக ராஜ்பவனுக்குப் போய் கவர்னரை அழைத்து இங்கே கொண்டு வந்து நிறுத்தி அவருடைய உரையை நிகழ்த்தியதற்குப் பிறகு பட்ஜெட் பற்றி என்னுடைய பதிலைப் பேசுமாறு கேட்டிருக்கிருர். ராஜ்பவன் சென்றுவர எனக்கு இப்போது நேரமில்லை. எழுப்பிய பிரச்சினைக்கு சுருக்கி பதில் சொல்லிவிட்டு நான் பட்ஜெட் விவாதத்தின் போது விளக்கமாகப் பேசவிரும்புகிறேன்.

இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது ஆருவது அசெம்பளியின் இரண்டாவது செஷன், இரண்டாவது ஸிட்டிங் என்பதை முதலில் நினைவு வைத்துக் கொள்வது நல்லது. இது "ப்ரொரோக்" செய்யப்படவில்லை. கவர்னரால் அறுதியிட்டு இறுதியாக்கப்படவில்லை. இது சபாநாயகர் அவர்களால் ஒத்தி வைக்கப்பட்டது. ஒத்திவைக்கப்பட்டது பற்றி கவர்னரிடம் சொன்னீர்களா என்று ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: ஏன் 'ப்ரொரோக்' செய்யவில்லை என்று கேட்டேன். மிஸ்லீட் செய்யாதீர்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: 'ப்ரொரோக்' செய்வதும், அட்ஜேர்ன் செய்வதும் 'அட்மினிடிஸ்ரேட்டிவ் கன்வீனியன்ஸைப்' பொறுத்ததே தவிர சட்டத்தில் எந்த இடத்திலுமே ஒவ்வொரு பட்ஜெட் சமர்ப்பிக்கிற நேரத்தில் எல்லாம் கவர்னர் உரையாற்ற வேண்டும் என்று எங்கே இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

பொதுத் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு முதல் தட்வையாக நடைபெறுகிற கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உரையாற்ற வேண்டும் என்பது ஆர்டிகிள் 176. ஆர்டிகிள் 202 பற்றி இங்கே குறிப்பிட்டார்கள், அது கவர்னர் அவர்கள் உரையாற்றுவதற்காக அல்ல. எப்போது அந்த நிதிநிலை அறிக்கையை வைப்பது என்ற தேதியைக் குறிப்பிடுவதற்காக உள்ள ஆர்டிகிள். இரண்டையும் குழப்பக்கூடாது.

இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இது மரபு மீறியது, மரபு மீறியது என்று பேசப்படுகிறது. நான் கொண்டிருக்கிற கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். மரபுகள் மாறலாம். மரபுகள் மாற்றப்படக்கூடிய ஒன்று. ஆனுல் வரம்புகள் தாண்டப்படகூடாத ஒன்று.

இங்கு மரபைப் பற்றி பேசும்போது நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்து பத்திரிகையில் ஒரு தலையங்கம் வந்திருக்கிறது. மரபைக் காப்பாற்றுவதில் மெத்த மரியாதை காட்டுகிற இந்து பத்திரிகை நாம் இன்றைக்கு கட்டி அழுது

கொண்டிருக்கிற மரபைப் பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்திருப்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

உங்கள் அனுமதியோடு அதைப் படிக்க விரும்புகிறேன்.

*Why wait till 5 p.m.?*

The presentation of the annual Union Budget has its own ceremonial which includes the Finance Minister entering the Lok Sabha with a reinforced dispatch box. The secrets of the detailed proposals for taxation are passed on even to brother Ministers only at a Cabinet meeting, just before their revelation to Parliament.

All these precautions, of course, make sense but why should the 'muhurat' for the presentation of the Budget be so late in the day as 5 P.M.? The Finance Minister first ambles on with the preliminary speech surveying the economic and financial situation.

Gone are the days when the central budget was of immediate concern only to the monied classes. The net is now spread so widely and is made of such fine mesh as to catch one and all.

(முற்பகல் 10·20)

நான் குறிப்பிட விரும்புகிற கருத்துக்கு வருகிறேன்.

The original timing of the session perhaps had something to do with the exigencies of State when India was ruled by the British. There was the matter of the difference between the Greenwich Mean Time and the Indian Standard Time and 12 Noon for the Secretary of State for India in London was after 5' O' clock for the Finance Member in the Viceroy's Executive Council in New Delhi.

இதற்காக வைக்கப்பட்டதுதான் அந்த ஐந்து (5) மணி. அதற்குப் பிறகு 'இந்து' எழுதுகிறது. . . .

There seems to be no valid reason why 30 years after independence was won, the Union Government should persist with an archaic practice.

''பத்தாம் பசலிக் கொள்கை''

Eleven O'clock in the Morning should be as good a time as any to unravel to the public the mysteries of the extra levies being imposed or the minor concessions that may be given away here and there.





நான் தெரிவிக்க விரும்புவது வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்ட மரபுகளில் ஒன்று. மாலை ஐந்து மணிக்கு இந்திய துணைக் கண்டத்தின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் என்பது. அப்படி மாலை ஐந்து மணிக்கு சமர்ப்பிக்கும் போது லண்டனில் 12 மணி, அது அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு மரபு. விடுதலை கிடைத்த முப்பது ஆண்டுகளுக்குப் பின்னாலும் இதைக் கட்டி அழுகிறார்களே வெட்கம் இல்லையா என்று 'இந்து' பத்திரிகை கேட்டு இருப்பதை நான் அவையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்ததாக ஏன் 'ப்ரொரோக்' செய்யவில்லை, ஏன் சட்டசபைக் கூட்டத் தொடரை முடிக்கவில்லை என்று ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். அரசாங்கத்தின் அலுவல் காரணமாக அதைச் செய்ய வேண்டிய உரிமை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நண்பர் ரகுமான்கான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஆரம்பத்தில், தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக வெள்ளச் சேற்றத்தின் காரணமாக ஏற்பட்ட நஷ்டங்களைப் பற்றியெல்லாம் இங்கு விவாதிக்கப்பட்டது.

அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதிக்க வேண்டியிருந்ததால், இடையிலே ஒரு கூட்டத்தை கூட்டியிருக்கிறோம். இப்போது திரும்பவும், கவர்னர் உரை இல்லையா, கவர்னர் உரை இல்லையா, அது இல்லாவிட்டால் பட்ஜெட்டே பறி போய்விட்டதுபோல் பதறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அவைக்கு மெத்தப் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு இன்னொன்றையும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி அவர்களுக்கு கவர்னர் உரையைப் பற்றி கவர்னர் என்ற அந்த நிறுவனத்தைப் பற்றி, அந்த அமைப்பைப் பற்றி திட்டவட்டமான ஒரு கருத்து உண்டு. வாதத்திற்காக இதைச் சொல்லுகிறேன். அவர் அடிக்கடி சொல்லியிருக்கிறார். கவர்னர் பதவி என்பது தேவையில்லாதது ஒன்று. கவர்னர் பதவி என்பது அனாவசியமானது. கவர்னர் பதவி என்பதும், கவர்னர் உரை என்பதும் சம்பிரதாயமான ஒரு சடங்கு அது தேவையற்றது. . என்று . .

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அண்ணா அவர்களும் சொல்லி இருக்கிறார்கள் கலைஞர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள் என்று தான் அவர்கள் சொல்லுகிறார்கள். . .

திரு. ஏ. ரகுமான்கான் : அவர்கள் இப்போது அப்படி பேசவில்லை.......

திரு. து. புருஷோத்தமன் : அப்படி பேசியதை அவர் வாபஸ் பெறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. புருஷோத்தமன் அவர்கள் உட்கார்ந்து கொண்டே அப்படி பேசக்கூடாது. எழுந்து நின்று கேளுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான் : இது அவை உறுப்பினர்களுடைய உரிமை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய உரிமையைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை.. கேட்பதை எழுந்து கேளுங்கள் என்றுதான் சொல்லுகிறேன்.......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும் போது எனக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது.............. அண்ணா அவர்கள் சொன்னார்கள், அண்ணா அவர்கள் சொன்னார்கள்..... என்று சொன்னால் கருணாநிதி அவர்கள் சொன்னது, அல்லது சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்லவா ? நான் இப்போதும் அதைத்தான் சொல்லவிரும்புகிறேன்.......

இதைப் பற்றி கருணாநிதி என்ன எழுதுவார் அல்லது என்ன எழுதுவார் என்று எதிர்பார்த்தேன் என்றால் இப்படிப்பட்ட சம்பிரதாயம் தேவையில்லை, அதன் முன்னோடியாக இப்படிப்பட்ட நிலை வந்திருப்பதை நான் வரவேற்கிறேன் என்று எழுதுவார், அல்லது சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னை கொடுத்தவர்கள் நண்பர் ஜேம்ஸ் அவர்களும், ரகுமான் கான் அவர்களும், மனோகரன் அவர்கள் என்னுடைய பெயரையும் இங்கே இழுத்துப் பேசிய காரணத்தினால் நான் சில விளக்கங்களை, தன்னிலை விளக்கங்களைத் தர விரும்புகிறேன்.

கவர்னர் உரை இல்லாமல் நிதி நிலைத் திட்டங்களை அளிப்பது பற்றி நான் பத்திரிகையிலே அறிக்கை விடுத்த நேரத்திலும், பத்திரிகையிலே கடிதம் வாயிலாக கட்டுரை எழுதிய நேரத்திலும், நேற்றைய தினம் பேசிய நேரத்திலும் நான் ஒன்றைத் தெளிவாகக் கூறியிருக்கிறேன். இதை மனோகரன் அவர்கள் அறிந்து இருப்பார்கள் என்றும் கருதுகிறேன். நான் குறிப்பிடுவது கவர்னர் பதவி வேண்டுமா ? இந்தக் கேள்விக்கு விடை வேறு.



கவர்னர் பதவி இருக்கின்ற வரையில் அதற்குரிய மரியாதை, மரபுகளை காப்பாற்ற வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கையே தவிர,'' கவர்னர் பதவி தேவையில்லாத ஒன்று என்று ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே ஆளும் கட்சியின் சார்பிலே மனோகரன் அவர்கள் கொண்டு வருவார்களானால், அதை ஆதரிக்கின்ற முதல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகத்தான் இருக்கும் என்று நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். (ஆரவாரம்) அப்படியானால் அதன் மீது உரை இப்போது இல்லை என்று அறிவித்து, இருப்பதற்கு மாறாக இனிமேல் எப்போதும் இருக்காது என்ற அடிப்படையிலே சொல்வார்களானால் அதை ஆதரித்து எழுதியிருப்பேன். அப்படிச் சொல்லவில்லை. '' நாங்கள் இப்போது வைக்க வில்லை. செப்டம்பர் மாதத்திலே வைக்கப் போகிறோம், கொள்கை அறிவிப்பு இந்த பட்ஜெட்டிலே இல்லை' என்று கொள்கை அறிவிப்பு இல்லாத ஒரு பட்ஜெட்டை கொண்டு வந்து, பின்னாலே கொள்கைகளை அறிவிக்கப் போகிறோம் என்கின்ற வகையிலே இந்த பட்ஜெட்டைக் கொண்டு வந்த காரணத்தினால்தான் வாதமே இவ்வாறு ஆகிவிட்டது. எனவே, கவர்னர் பதவி இருக்க வேண்டுமென்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிஞ்சிற்றும் கிடையாது.

கவர்னர் பதவி இல்லாவிட்டால் யார் உரை ஆற்றுவது என்றால், அப்போது ஏற்படுகின்ற அரசியல் மாற்றத்தினால், மாநில சுயாட்சி கிடைத்து விட்டால், முதல் அமைச்சர் அவர்களே கூட கவர்னர் உரை போல் ஒரு உரையை ஆற்றலாம். அல்லது சபாநாயகர் அவர்கள்கூட ஒரு உரையை ஆற்றி, அதற்குப் பிறகு, அதன் தொடர்பான நிதி நிலை அறிக்கையைக் கொண்டு வருகின்ற அப்பேர்ப்பட்ட ஏற்பாடுகள் மாநில சுயாட்சி ஏற்படுகின்ற நேரத்திலே ஏற்படலாம்.

ஆனால், எனக்குள்ள சங்கடமெல்லாம் முதல் கட்டத்தில் கவர்னர் உரை ஆற்றி, அதற்குப் பிறகு சபாநாயகர் அதைத் தமிழிலே படித்து, இவ்வளவு பெரிய மாற்றங்களைச் செய்து கொண்டு வந்துவிட்டு, கவர்னர் உரையை திடீரென்று விட்டு விடுவது என்பது என்ன மரபு ? மரபுகள் காப்பாற்றப்பட வேண்டும், கடை பிடிக்கப்படவேண்டும் என்று நான் சொன்னதற்கு, மரபுகள் கட்டி அழ வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்று மனோகரன் அவர்கள் சொன்னது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. மரபுகள் கட்டி அழப்பட வேண்டியதல்ல ; போற்றிப் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படி சம்பிரதாயங்களை கைவிட்டு, குடியரசுத் தலைவர் உரை, கவர்னர் உரை தேவையில்லை என்று கருதி, ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வாதத்திற்காக இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னேன். இந்தப் பதவி வேண்டியதில்லை, சட்டங்கள், சம்பிரதாயங்கள் என்று சொல்லப்பட்ட பிறகு இப்படிபட்ட ஒரு நிலை வந்தவுடன், இது ஒரு முன்னோடியாக இருக்கிறது என்று கருதி, இதை ஆதரித்து எழுதக்கூடும் என்று நான் கருதிக் கொண்டிருந்தேன். அதற்கு மாறாக, இந்தப் பதவி வேண்டுமா , வேண்டாமா என்பது வேறு. ஆனால், இந்தப் பதவி இருக்கின்ற வரை, இந்த மரபு காப்பாற்றப்பட வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

நான் தெரிவித்தது, மரபு மாறலாம், மாற்றப்படலாம் ; வரம்பு தாண்டப்படக் கூடாது என்பதுதான். இதை நான் இன்னும் வலியுறுத்துகிறேன். இப்போது மரபு மாற்றப்படுகிறது என்று பேசுகிறபோது, அரசியல் சட்டத்தின் ஆர்டிகிள் 176 மீறப்படவில்லை.

அது மட்டுமல்ல, ஆளுநர் உரைக்குப் பிறகுதான், கொள்கை விளக்கங்கள் கிடைக்கும், அதற்குப் பிறகுதான் அதைப் பற்றி விவாதிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் வாதத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். என்ன காரணம் என்பதற்கு, இங்கே சமர்ப்பித்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையானது அரசின் கொள்கை விளக்க ஏடுதான், பிரகடனம் தான் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதை வைத்து விவாதிப்பதன் மூலம், அரசின் கொள்கையை நீங்கள் ஏற்று விவாதித்து இருக்கிறீர்கள். ஆகவே, பட்ஜெட் கொள்கை விளக்கம் அல்ல என்பதை நான் மறுக்கிறேன் என்பதை நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்குப் பிறகு இப்படிப்பட்ட வாய்ப்பில்லாமல் போனால், பெரிய பெரிய முக்கியமான தத்துவங்களை, பிரகடனங்களை எல்லாம் எப்படி விவாதிக்க முடியும் என்ற கேள்வி இங்கே கேட்கப்பட்டது.

[முற்பகல் 10-30]

நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை வைக்கிறேன். மிக முக்கியமான ஒரு பிரச்சினையைக்குறித்து இதே அவை விவாதித்திருக்கிறது. எனது நினைவு சரியாக இருக்குமானால் 1968 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன்–சபைப் ரொரோக் செய்யப்படவில்லை ; இடையில் சபை கூட்டப்பட்டது. கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தில், கவர்னர் உரை இல்லாமலே கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தில் மிக முக்கியமான ஒரு பிரச்சினை விவாதிக்கப்பட்டு, அனைத்துக் கட்சிகளாலும் பாராட்டப்பட்டு, ஏற்றுக்



கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பதை நினைவூட்டுகிறேன். அதுதான் 'லாங்வேஜ் இஷ்யூ'. அதை இங்கு கொண்டு வந்தவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆக, கொள்கைகளை விவாதிக்க கவர்னர் உரை இருந்தால்தான் முடியும் என்ற வாதம் அடிப்படையற்ற வாதம் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நீங்கள் பாராளுமன்ற நடவடிக்கையை எடுத்துப் பார்த்தால் ஒரு குறிப்பே இருக்கிறது. சில சமயங்களில் பிரசிடென்ட் அட்ரெஸ் இல்லாமலே பட்ஜட் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது; இடைவெளி ஏராளமாகவும் இருந்திருக்கிறது. ஆகையால் இது கவர்னரை அவமதிப்பதற்கோ, மரபு என்று சொல்லப்படுகிறதே அந்த மரபைக் கேலி செய்வதற்கோ, அல்லது இங்கு இருக்கிற உறுப்பினர்களுக்கு இருக்கிற வாய்ப்புக்களைப் பறித்துக் கொள்வதற்கோ, அல்லது போதுமான அவகாசம் தரக்கூடாது என்று சொல்லுவதற்கோ அல்லது கவர்னருக்கும் இந்த அரசுக்கும் இடையிலே தகராறு இருக்கிறது, ஒரு வேளை கவர்னர் அந்த உரையைப் படிக்க ஆரம்பித்தால் அவருடைய கொள்கைகளையும் ஒரு வேளை சொல்லி விடுவாரோ என்று அஞ்சி விட்டு விட்டார்களோ என்பதற்கெல்லாம் அல்ல. கவர்னர் என்ன சொல்லப் போகிறார்—

After all what is Governer's address ?

'நீங்கள் எழுதிக் கொடுப்பதைத்தான் அவர்கள் படிக்கிறார்கள்' என்று சொன்னார்கள். ஆக, நாங்கள் எழுதிக் கொடுப்பதைத் தான், இந்த அரசாங்கத்தின் கொள்கைகளைத்தான் அவர் படிக்கப் போகிறார்;

ஒரே ஒரு எக்சப்ஷன் ; மேற்கு வங்கத்தில் நடந்தது: ஒரு குறிப்பிட்ட பகுதியை நான் படிக்க மாட்டேன் என்று கவர்னர் சொன்னார்—அந்தக் கவர்னர், ஆனால் நான் இந்தச் சபைக்கு உறுதியளிக்கிறேன்—இங்கே இருக்கின்ற ஆளுநர் அவர்கள் இந்த அரசு எழுதிக் கொடுப்பதை அப்படியே படிப்பவர் ; கொஞ்சம் கூடத் திருத்த மாட்டாதவர் என்பதை அவர் சார்பில் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, அனுவசியமாக கவர்னரை இங்கே இழுத்து அவருக்கும் இந்த அரசுக்கும் இடையே ஏதோ தகராறு இருப்பது போன்ற ஒரு மாயையை உருவாக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தெளிவாகச் சொல்லுகிறேன்—

It is strictly legal. It is strictly constitutional. There is no violation of any norms.

என்பதைத் தெரிந்துக் கொண்டு, அந்தக் காரணத்தைக் கொண்டும் தயவு செய்து அரசாங்கத்திற்கு உள் நோக்கம் கற்பிக்க வேண்டாமென்று அருமை நண்பர்கள் ரகுமான்கான் அவர்களையும், ஜேம்ஸ் அவர்களையும் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு, அருமையான சூழ்நிலையைக் கெடுத்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொண்டு, அவர்கள் அனைவரையும் வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு, நீண்ட நாட்களாக இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டு பட்ஜெட்டில் இதைப் பற்றியெல்லாம் விவாதித்திருக்கிறீர்கள்; இப்போது தனியாகவே கொஞ்ச நேரம் அதற்கென்று எடுத்து விவாதித்த பிறகு மேலும் நேரத்தை வீணாக்காது அடுத்த பிரச்சினைக்குப் போவோம்;

அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்களும், ரகுமான்கான் அவர்களும் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்; இங்கு இருக்கிற அத்தனை உறுப்பினர்களும், ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.; ஆகையால் இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முடிவு செய்கிற பொறுப்பைப் பேரவைத் தலைவர் அவர்களே நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டு நான் அமைகிறேன்.

(திரு. ஜேம்ஸ் எழுந்தார்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தாங்கள் உட்காருங்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : இதிலே பேச உரிமையிருக்கிறது....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : விவாதம் முடிந்த பிறகு மறுபடியும் பேச உரிமை இல்லை. உங்களுக்கே அது தெரியும், மேற்கொண்டு அனுமதிப்பதில்லை. எல்லா விவாதமும் முடிந்து விட்டது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தீர்மானத்தைக் கொண்டுவந்தவன் என்ற முறையில்....

<u>மாண்புமிகு பேரவைத்தலைவர்</u> ; உரிமைப் பிரச்சினையில் மறுபடியும் எழுந்து விவாதிப்பதற்கு இடமில்லை;

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தாங்கள் தயவுசெய்து....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தயவு செய்து தாங்கள் அமருங்கள். மேலும் மேலும் எழுந்து பேச உரிமை இல்லை.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நான் தீர்மானம் கொண்டுவந்தவன். பேச உரிமை இருக்கிறது.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இது தீர்மானம் அல்ல. ஒரு பொருளைப் பற்றிக் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை.

<u>THIRU J. JAMES</u> : It is a motion of privilage.

<u>MR. SPEAKER</u> : It is only a matter of breach of privilege.

<u>THIRU J. JAMES</u> : I am not going into the reply.

<u>MR. SPEAKER</u> : Yes, then?

<u>THIRU J. JAMES</u> : I am not going to speak on the motion also.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது என்று நான் சொன்னால் நீங்கள் எழுப்பலாம்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு மேல்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : சொல்லக் கூடாது வாய்ப்புக் கிடையாது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : உரிமை இல்லை என்பதற்கு விதியைக் காட்டுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் உரிமை இருக்கிறது என்பதற்கு மரபையோ, விதியையோ ஆதாரத்தோடு காட்டுங்கள். இப்படிப்பட்ட உரிமைப் பிரச்சினை மீது மேலும் மேலும் விவாதிக்கப்பட சந்தர்ப்பம் தரப்பட்டிருக்கிறது என்பதை எங்காவது காட்டுங்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : அதை நான் கொடுத்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நேரமாகிறது உட்காருங்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நீங்கள் கேட்டு இருக்கிறீர்கள், அதற்கு பதில் அளிக்க என்னை அனுமதியுங்கள். It is a privilege motion moved by me.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It is not a motion. உறுப்பினர் கொடுத்திருப்பது It is a matter of privilege. ஒருவர் மூவ் பண்ணி, இன்னொருவர் செகண்ட் பண்ணுவது தான் மோஷன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் மோஷன்தான் கொண்டு வந்திருக்கிறேன். இந்த பிரச்சினை சம்பந்தமாக பிரிவிலேஜ் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நான் மோஷன் கொண்டு வந்திருக்கிறேன். நான் பேசியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள், அதற்குப் பிறகு முடிவாக பதில் சொல்ல வேண்டிய உரிமை எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாட்டர் ஆப் பிரிவிலேஜ் என்ற முறையிலே தான் நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதிலே பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது என்று நான் அனுமதித்தால் தான் நீங்கள் மோஷனைக் கொண்டு வர முடியும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் மோஷன் கொடுத்திருக்கிறேன். எனக்குப் பேச உரிமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு பதில் பேச எனக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : * * *

மாண்புமிகு திரு. கி. மனோகரன் * * * என்று உறுப்பினர் சொல்வது எந்த வகையிலே நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஜேம்ஸ்க்காக அல்ல. நாம் கடைப் பிடிக்கிற ஒழுங்கு முறைகள் எப்படி இருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன்.

Rule 184-A—"A member wishing to raise a matter of privilege shall before the Commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised."

That is the first point.

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது—



Secondly,

*Rule* 185 : "A member may, with the consent of the Speaker raise a question involving a breach of privilege either of a member or of the House or of a Committee thereof"

இரண்டும் கடைப் பிடித்தபிறகு மூன்றாவது.

A *prima facie* case of breach of privilege must be made out.

*Rule* 189 : "If the Speaker holds that the *prima facie* case exists, he may allow a motion to be made by any member that the alleged breach of privilege be referred to the Committee of Privileges, or in the alternative, that it be dealt with by the House itself."

என்று பல கட்டங்களில் கிளியராக இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு சொல்லிவிட்டேன். தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு ஜேம்ஸ் அவர்கள் * * * என்று சொல்லியது குறிப்பேட்டில் இடம் பெறத் தகுதி படைத்ததா என்பதைப் பற்றி தாங்கள் உத்திரவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள் இரண்டாவதாகப் பேச உரிமை இல்லையென்று சொன்ன பிறகும் எழுந்து பேசிய அத்தனையும் நீக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : * * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

"The Speaker of the Uttar Pradesh State Assembly, Shri A.G. Kher ruled on March 7, that the Governor's address was not necessery to open the Budget session. The Speaket quoted Article 176 of the Constitution which provided that at the commencement of first session of every year, the Governor would address the Assembly or in the case of a State having a Legislative Council, both Houses assembled together and inform the legislators of its causes of summons. Shri Kher pointed out that the present session was not the first session. of the new year. it was in fact in continuation of the second session of last year (1972) as had been mentioned in the agenda."

எனவே உறுப்பினர்களுக்கு விவாதிப்பதற்குள்ள எந்த உரிமையையும் மறுக்கும் நோக்கம் இல்லை என்பதாலும், அரசியல் சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டே பேரவை கூட்டப்பட்டது என்பதாலும் இதில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இம்மாதிரியான பிரச்சினைகளை வெளியிலே எழுப்பப்பட்டு அதற்கு விளக்கங்கள் அளிக்கப்பட்ட பிறகு, அதே பொருள் குறித்து பல்வேறு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையின் விவாதத்தில் எழுப்பி, அதற்கு அரசு தரப்பில் பதில் சொல்லும் வாய்ப்பு இருந்தும், இவ்வாறு உரிமைப் பிரச்சினை என்று எழுப்புவது எவ்வளவு நல்லது என்பது அவை முடிவு செய்ய வேண்டும். எனது அறையிலேயே இதற்கு இசைவை மறுத்திருக்கலாம். ஆயினும் விரிவான விளக்கம் அளிக்க வேண்டுமென்பதற்காக இங்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆயினும் இம்மாதிரி பிரச்சினைகளை நாம் ஒரு நிதானத்துடன் அணுகுவது நல்லது என்றும் கூற விழைகிறேன்.

திரு சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார் உங்கள் அனுமதியோடுதான் எழுப்புகிறேன். பேரவைத் தலைவரவர்களே, மன்றத்திலே ஒரு உரிமை பிரச்சினை வருமானால், இருதரப்பு வாதத்தைக் கேட்டு பின்னர் தாங்கள் தீர்ப்பளிப்பது இதுவரை இருந்து வருகிற முறை. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்துப் பேச வேண்டும். என்னைக் கட்டுப்படுத்தவோ, யோசனை சொல்கிற அளவுக்கோ இது இல்லை. இரண்டாவது, இந்த வாதப் பிரதிவாதங்கள் ஏற்கனவே, வெளியிலே எழுப்பப்பட்ட பிறகுதான் இங்கே

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





கொண்டு வரப் பட்டிருக்கிறது. உரிமைப் பிரச்சினையாக, இவ்வளவு விவாதங்கள்அவையிலே நடந்தபிறகு வெளியிலே விளக்கங்கள் தந்துவிட்ட பிறகு. இங்கு எழுப்ப அனுமதிக்க வேண்டுமா என்று கேட்கவேண்டிய உறுப்பினர் அவர்கள் எனது தீர்ப்பைப் பற்றியே கேள்வி கேட்டால் என்ன சொல்வது.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் * * *
என்று உறுப்பினர் சொன்னதை "எக்ஸ்பஞ்ச்" செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பை உடனடியாகக் கூறக் கூடாது என்று எந்த விதி என்னைக் கட்டுப்படுத்துகிறது? உறுப்பினர் சொன்னது நியாயம் அல்ல. கனம் உறுப்பினர் ஆறுமுகம் அப்படி பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு துரை முருகன்; * * *

தயவு செய்து உங்கள் தீர்ப்பைப் பற்றிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எங்கோ திசை திருப்பாதீர்கள். எனக்கு உறுதுணையாக எந்த உறுப்பினர் இருந்தாலும் அவர் சொல்வதைக் கேட்பேன்.

திரு. துரை முருகன் : * * *

திரு எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு தீர்ப்பை அளித்துவிட்டீர்கள். .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள்; அதைப்பற்றிய பிரச்சினை இல்லை.

திரு. ஏ. ரகுமான்கான் : தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்பு கூறிய பிறகு திரு துரைமுருகன் விளக்கம் கேட்ட பிறகு...... தீர்ப்புக்குப் பிறகு, திரு. ஆறுமுகம் பேசியதை நீக்கினீர்கள். அதைப் போல், திரு. துரைமுருகன் பேசியதையும் நீங்கள் நீக்குவீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு. துரைமுருகன் பேசியதையும் நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(முற்பகல் 10–50)

## (4) கவன ஈர்ப்பு.

### (அ) பழவேற்காடு அடுத்த கோட்டைக் குப்பத்தில் மீனவர்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 12–2–78-ல் பழவேற்காடு அடுத்த கோட்டைகுப்பத்தில், மீனவர்கள் மத்தியில் கலவரம் ஏற்பட்டதன் விளைவாக 8 பேர்கள் படுகாயம் அடைந்தும் படகுகளையும், வலைகளையும் நாசமாக்கி தீக்கிரையிட்டு சொத்துக்களை நாசமாக்கியும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து திருவாளர்கள் ஏ.ஆர். மாரிமுத்து, ப.பொன்னுரங்கம் ஆகியோர் மாண்புமிகு உணவு–கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, 12–2–78-ல் பழவேற்காடு அடுத்த கோட்டைக் குப்பத்தில், மீனவர்கள் மத்தியில் கலவரம் ஏற்பட்டதன் விளைவாக 8 பேர்கள் படுகாயம் அடைந்ததும் படகுகளையும் வலைகளையும் தீக்கிரையிட்டு சொத்துக்களை நாசமாக்கியும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஆண்டிக்குப்பம். நடுக்குப்பம், மற்றும் கோட்டைக் குப்பம் மீனவர்கள் செயற்கை நைலான் நூலினால் செய்யப்பட்ட அடைப்பு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதை லைட் அவுஸ் அரிசன காலனி மீனவர்களும், கூனன் குப்பம் மீனவர்களும் ஆட்சேபித்தனர். இதன் தொடர்பாக கூனன் குப்பம் சாத்தான் குப்பம் பகுதியைச் சார்ந்த கடல் மீனவர்கள் நைலான் நூலில் பின்னிய ஆரவலையை பழவேற்காடு ஏரியின் மேற்பகுதியில் பயன்படுத்தி மீன்பிடிக்க பக்கிங்காம் கால்வாயை ஊடுருவிச் செல்வதை ஆண்டிகுப்பம், நடுகுப்பம், கோட்டைகுப்பம் மீனவர்கள் ஆட்சேபித்தால், மேற்கண்ட மீனவர்களிடையே மோதல்கள் ஏற்பட்டது.

நான் மேற்கண்ட குப்பத்தின் மீனவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய சமரச கூட்டம் ஒன்றை 24–2–78 அன்று தலைமைச் செயலகத்தில் கூட்டினேன். மீனவத்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளும் உடன் இருந்தனர். இருதரப்பு மீனவர்களின் கருத்துக்களைக் கேட்ட பின்னர், மோதல்கள் நிகழ்ந்த பகுதிக்கே சென்று அங்குள்ள நிலைமையை அறிந்து வருமாறு மீன்வளத் துறையினரை கேட்டுக் கொண்டிருக்கிறேன். மேற்குறித்த தகராறுகள் விரைவில் தீர்த்துவைக்கப்படும்.





### (ஆ) சென்னைக் கடலில் விசைப் படகுக்காரர்கள் கட்டுமர மீனவர்களை கடலில் தாக்கியதும் அதனால் அயோத்தியா குப்பத்தில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சமீபத்தில் சென்னைக் கடலில் விசைப் படகுக்காரர்கள் கட்டுமர மீனவர்களை கடலிலே தாக்கி நான்கு மீனவர்கள் கொல்லப்பட்டது பற்றியும் அதன் விளைவாக அயோத்தியாகுப்பத்தில் ஏற்பட்ட பதட்ட நிலை சம்பந்தமாகவும் கை கலப்பு சம்பந்தமாகவும் எழுந்துள்ள நிலை குறித்து திருவாளர்கள் ரா.உமாநாத், ஆர்.கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், மு. அம்பிகாபதி, மு. அரங்கநாதன் ஆகியோர், மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சமீபத்தில் சென்னைக் கடலில் விசைப் படகுக்காரர்கள், கட்டுமர மீனவர்களை கடலிலே தாக்கி நான்கு மீனவர்கள் கொல்லப்பட்டது பற்றியும் அதன் விளைவாக அயோத்தியாகுப்பத்தில் ஏற்பட்ட பதட்ட நிலை சம்பந்தமாகவும், கைகலப்பு சம்பந்தமாகவும், எழுந்துள்ள நிலை குறித்து, மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, சென்னை செங்கை மாவட்ட கடலோரப் பகுதிகளில் விசைப்படகாளர்களுக்கும் கட்டுமர மீனவர்களுக்கும் ஏற்படும் மோதல்கள் மீன்பிடி இடத்தைப் பொறுத்தே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. 13–2–1978 அன்று காலை சுமார் 8-00 மணி அளவில் அயோத்தியாகுப்பத்தைச் சார்ந்த திருவாளர்கள் ஆறுமுகம் மற்றும் செல்வமணி ஆகியோர் தங்கள் கட்டுமரத்தில் சென்னை துறைமுகத்திற்கு நேரே உள்ள கடற்பகுதியில் சுமார் 1½ மைல் தொலைவில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது ஓர் விசைப் படகால் அவர்களது கட்டுமரம் மோதப்பட்டது. இம் மோதலில் ஆறுமுகத்தின் வலக்காலில் காயம் ஏற்படவே, அவரை அவருடைய மருமகன் செல்வமணி அயோத்தியா குப்பத்திற்கு கொண்டுவந்து பின்னர் இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் சேர்த்தார். தற்போது உடல்நலம் தேறி வருகிறார். இதனைக் கேள்வியுற்ற கட்டுமர மீனவர்கள் சுமார் 1,000 பேர் அவர்தம் குடும்பத்தினருடன் நீண்ட நாட்களாக நிகழும் இவ்வித நிகழ்ச்சிகளை அரசின் கவனத்திற்கு கொண்டுவர கட்டுமரங்களையும் மற்றும் மரத் துண்டுகளையும் மாட்டான் குப்பம், அயோத்தியா குப்பம் மற்றும் நொச்சிக் குப்பம் அருகில் உள்ள காமராஜர் சாலையில் கிடத்தி போக்குவரத்தை அடைத்தனர்.

நகர காவல்துறை மேலதிகாரிகள் மற்றும் மீன்துறை துணை இயக்குநர் உடனே தலத்திற்கு சென்று மேற்கொண்டு ஏதும் கலவர நிகழ்ச்சிகள் நடக்காவண்ணம் தடுத்து அப்பகுதியில் சாலைப் போக்குவரத்திற்கும் மாற்று வழிசெய்தனர். மேலும் அவர்கள் கட்டுமர மீனவர்களை அணுகி குற்றம் புரிந்த விசைப் படகாளர்கள் மேல் விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறி, போக்குவரத்து இடையூறை அகற்ற செய்தனர். மேலும் அவ்விடத்து முன்னணித் தலைவர்களும் மீனவர்களிடம் பேசியதன் விளைவாக அவர்கள் கலைந்து சென்றனர் வழக்கமாக போக்குவரத்தும் பிற்பகல் 1.15 மணி அளவில் கொண்டுவரப்பட்டது. செல்வமணியின் புகாரின் பேரில் டி-6 அண்ணா சதுக்க காவல் நிலையத்தில் வழக்கொன்று பதிவாகி அது விசாரணையில் இருக்கிறது. தற்போது அந்தப் பகுதி வழக்கம் போல் அமைதியான நிலை இருக்கிறது.

விசைப் படகுகள் மூன்று மைல்களுக்கப்பால்தான் மீன்பிடித் தொழிலில் ஈடுபடவேண்டும். அந்த மூன்று மைல் எல்லையினைத் தெரிவிக்கும் பொருட்டும் விசைப்படகுகள் காசிமேட்டைத் தளமாகக் கொண்டு மீன்பிடி இடங்களுக்கு மீன்பிடிக்கச் சென்று திரும்பி வரும் பாதையை தெரிவிக்கும் பொருட்டும் வடக்கே எண்ணூர் குப்பத்திலிருந்து தெற்கே கோவளம் வரை முக்கிய மீனவர் குப்பங்கள் நேரே கடலில் மீன்துறை மிதவை போயாக்களை மிதக்கவிட்டிருக்கிறது. நகர காவல் துறை ஆணையாளரும் எண்ணூரிலிருந்து திருவான்மியூர் வரை உள்ள கடற்பகுதியில் ரோந்து காவல் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான்கு ரோந்து படகுகள் மூலம் இப் பகுதிகளில் மீன்பிடிக்கும் விசைப் படகாளர்கள் தங்கள் பகுதியிலேயே மீன்பிடித் தொழில் செய்யும் வண்ணம் ரோந்து காவல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. விழிப்பான ரோந்து காவல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கடலில் விசைப்படகு மீனவர்கள் கட்டுமர மீனவர்கள் சண்டையால் நான்கு மீனவர்கள் இறந்தார்கள் என்பது சரியான தகவல் அல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை)

<u>திரு. ரா. உமாநாத் :</u> தலைவரவர்களே, போனதடவை இந்த விஷயம் வந்தபோது, கனம் முதலமைச்சர் அவர்கள் சபைக்கு நல்லதொரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். அதாவது கடலிலே போலீஸ் பெட்ரோல் பண்ணுவதற்கு விசேஷ ஏற்பாடு செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், என்னுடைய கேள்வி என்ன என்று சொன்னால், அதற்குப் பிறகு தான் கடலிலே சண்டை நடந்து இருக்கிறது. அதற்கு முன்னால் தரையில்தான் நடந்தது. இப்போது கடலிலேயே பயங்கரமான சண்டை நடந்து இருக்கிறது. அந்த போலீஸ் பெட்ரோலிங்



அந்த நேரத்தில், அந்தக் கலகம் கடலில் இருந்த நேரத்தில் எங்கே போயிருந்தது. என்ன செய்துக் கொண்டிருந்தார்கள். ஏன் அதை அவர்கள் தடுக்கவில்லை. அல்லது போலீஸ் பெட்ரோலிங் இல்லாமல் இருந்ததா ? இருந்தது என்று சொன்னால், போலீசார் ஏன் தடுக்கவில்லை, அல்லது பெட்ரோலிங் இல்லை என்று சொன்னால் என்ன காரணம் ?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்ன வாக்குறுதியின் பேரில் ஏற்கெனவே கடலில் காவல் துறை பெட்ரோல் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அதற்கு விசேஷமான விசேஷ படகுகள் மீன்துறைக்கும், போலீஸ் துறைக்கும் அளித்து இருக்கிறோம். அவர்கள் ரோந்து போட்டு, அது நடந்து கொண்டு இருக்கிறது. அவர்கள் சுற்றவேண்டிய தூரம் 15 மைல் தூரம்.. ஆகவே, ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்குச் சென்றுகொண்டிருக்கின்ற நேரத்தில், வேறு பகுதியில் கலவரம் நடக்காது என்பதற்கு எப்படி உத்தரவாதம் கொடுக்க முடியும் ?

They cannot be always watching the whole distance. They can be only at one point and not throughout the Coastal area.

என்றாலும், அந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில், கடலில் எந்தவிதமான தகராறும் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நடைபெற்றது எல்லாம் விசைப்படகு ஒன்று கட்டுமரத்தில் மோதிவிட்டது. வேண்டுமென்றே மோதினார்கள் என்று சொல்கிறார்கள். மோதினார்கள் என்பதற்கு ஆதாரங்கள் சேகரித்துக் கொண்டு இருக்கிறார்கள். மோதியது உண்மை. அப்படி மோதியதால் கட்டுமரத்தில் இருந்த ஒருவரின் வலதுகால் முறிந்து விட்டது. அதன் காரணமாக தகராறு ஏற்பட்டது. கடற்கரையில் யாரோ ஒருவர் விசைப்படகு மோதி இறந்து விட்டார் என்று வதந்தி வந்த காரணத்தால், ஆத்திரம் அடைந்த கட்டுமர மீனவத் தொழிலாளர்கள் தாக்குவதற்கு கடலில் இறங்கினார்கள். உடனடியாக அது தடுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டது.

<u>திரு. ரா. உமாநாத் :</u> ஒரு ரோந்து போட்டுதான் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, அவர்களால் 15 மைல் கவனிக்க முடியாது. நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இந்தப் பிரச்னை அடிக்கடி வருவதால், ஒரு ரோந்து படகு போதாது என்று சொல்கிறபோது அதற்குத் தகுந்தாற்போல் எண்ணிக்கையை ஏன் இன்கிரீஸ் செய்யக்கூடாது அதுவும் இப்படிப்பட்ட ரகளை கலகம் அடிக்கடி நடைபெறுவதால், இதனுடைய ரிபர்குஷன் மாகாணத்தில் இருக்கும் எல்லாக் கடற்கரை

ஓரங்களிலும் வருவதால், அந்த விசைப்படகுகளை அரசாங்கமே மேற்கொண்டு, கூட்டுறவுத் துறையில் அவற்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே நல்லதொரு யோசனையை சொல்லியிருக்கிறார்கள். இந்த யோசனையை இந்த அரசு பரிசீலித்து அதைச் செயல்படுத்தும்போது அவர்களுடைய ஆதரவு நிச்சயமாக அரசுக்கு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

<u>*திரு. மு. அரங்கநாதன் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நடுக்குப்பம், அயோத்தியாக்குப்பம், மாட்டான் குப்பம் பற்றி விளக்கம் கொடுத்தார்கள். நன்றி. அதே நேரத்தில் அமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வருவது, ஏறத்தாழ 6 மாத காலமாகத்தான் கடலோரப் பகுதியில், அதுவும் குறிப்பாக சென்னை கடலோரப் பகுதியில் அதிகமாக இப்படிப்பட்ட கலவரங்கள் நடந்துக்கொண்டு வருகின்றன என்பதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

இரண்டாவதாக நான் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது, அமைச்சர் அவர்கள் இரு தரப்பினரையும் கூடிப் பேசியதற்குப் பிறகும், அதன் பேரில் முடிவு எடுக்கப்பட்ட பின்பும், ராயபுரத்தில் துப்பாக்கிச் சூடு நடந்து இரண்டு பேர் பலியாகியிருக்கிறார்கள். எனது ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நான் இருவர் என்றுதான் குறிப்பிட்டு இருக்கின்றேன். ஆனால், இங்கே கொடுக்கப்பட்டு இருக்கும் தகவலில் உள்ள வாசகம் 4 பேர் என்று தவறாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அமைச்சரவர்கள் எல்லோரையும் அழைத்துப் பேசிய நேரத்தில் ஒரு வாரத்தில் 4 நாட்கள் கட்டுமரக்காரர்களும், 3 நாட்களுக்கு விசைப்படகுக்காரர்களும் கடலில் மீன் பிடிக்கச் செல்வது என்று முடிவு எடுக்கப்பட்டதாக அறிகிறேன். அப்படிச் செல்கிற நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் சேர் இருக்கும் இடத்தில்தான் மீன் கிடைக்கிறது. மணல் இருக்கின்ற இடத்தில் கிடைப்பது இல்லை என்று சொல்லப்படுகிறது. நேற்றையதினம் கேள்வியில்கூட நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். அந்த விசைப்படகுக்காரர்களுக்கு விஞ்ஞான ரீதியில் மேலும் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட விசைப்படகுகள் அளித்து பயிற்சி பெறச் செய்து இன்னமும் ஆழ்கடல் சென்று மீன் பிடிக்கும் நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையில் அமைச்சர் அவர்கள் முன்னால் எடுக்கப்பட்ட நிலையைச் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுகிறேன்.



<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பின்னாலே, ஓரிரு கேள்விகள் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

[ முற்பகல் 11·00 ]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அமைச்சரவர்கள் விளக்கம் அளித்த பின்னால் ஏதாவது சந்தேகம் கேட்கவேண்டுமானால் சுருக்கமாகக் கேட்க வேண்டும். மீண்டும் ஒரு விவாதத்தை ஆரம்பிக்கக்கூடாது.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அமைச்சரவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். அது பற்றி சில ..........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இது ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல ; கவன ஈர்ப்புத் தீர்மானம். விளக்கத்திற்குப் பின்னால் ஏதாவது ஒன்றிரண்டு கேள்விகளை சுருக்கமாகக் கேட்கலாம்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> நான் 22—2—1978 அன்று ஒரு ஒத்திவைப்புத் திர்மானம் விதி 42-ன் கீழ் கொடுத்திருந்தேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். ஒரே பொருள் பற்றி பல உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்திருந்த காரணத்தால் அதைமாற்றி விதி41-ன் கீழ் மாற்றி, உங்கள் பெயரும் சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் இங்கே விளக்கம் கூறிவிட்டார்கள். ஏதாவது சந்தேகம் இருந்தால் ஒன்றிரண்டு கேள்விகள் சுருக்கமாக நீங்கள் கேட்கலாம்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> நான் விதி 42-ன் கீழ் கொடுத்த தீர்மானத்தை நீங்கள் 41-ன் கீழ் எடுத்துக் கொண்டதற்கு நன்றி. 4 நாட்களுக்கு கட்டுமரக்காரர்களும், 3 நாட்களுக்கு விசைப்படகுக்காரர்களும் மீன் பிடிப்பது என்று அவர்கள் கூடிப் பேசி இருக்கிறார்கள். அதற்கு அமைச்சரவர்கள் உதவி புரிய வேண்டும். அப்படிச் செய்தால் கலவரம் நிகழாமல் தடுத்து விடலாம் என்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் :</u> துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே இரண்டு மீனவர்கள் கடலிலே இறந்து விட்டதாகக் கூறியிருக்கிறார்கள். திரு. உமாநாத் அவர்கள் விதி 41-ன் கீழ் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் 4 பேர்கள் இறந்துவிட்டதாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. க. உரொ. எட்மெண்ட்] [1978 மார்ச் 2

இதை வைத்துப் பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்கு கிடைத்த வதந்திகளை வைத்து, ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ''இது ஒரு வதந்தியே தவிர, உண்மையல்ல. என்றாலும், காவல்துறையினர் இதுபற்றி பரிசீலனை செய்து, யாரும் மரணம் அடையவில்லை; ஒரே ஒரு மீனவருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால்தான் சென்னை கடலோரப் பகுதிகளில் மீனவர்களுக்கிடையே மோதல் வருகிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது தவறு, ஒரு தவறான கருத்தை இங்கே சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த போதும தமிழ் நாடு கடலோரப் பகுதிகளில் மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. தொழில் நடத்துகிறவர்களுக்கிடையே, தொழிலில் போட்டி ஏற்படுகிற போது அப்பேர்ப்பட்ட மோதல்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

4 நாட்கள் கட்டுமர மீனவர்களும், 3 நாள் விசைப்படகு மீனவர்களும் மீன் பிடிக்கச் செல்ல வேண்டுமென்பதை இரு சாராரும் ஒப்புக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இரு சாராரும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. விசைப்படகு மீனவர்கள் அந்த யோசனையைத் தெரிவித்தார்கள்: ஆனால், கட்டுமர மீனவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தபோதிலும் மோதலை தவிர்க்கும் பொருட்டு, விசைப்படகு மீனவர்கள் நேராக 3 மைல் தூரம் கிழக்கே சென்றபிறகுதான் தென்கிழக்கோ, வடகிழக்கோ சென்று மீன்பிடிக்க வேண்டுமென்று ஒப்பந்தம ஏற்பட்டு, அந்த ஒப்பந்தத்தில் இரு சாராரும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதன் மூலம் இப்பேர்ப்பட்ட மோதல்களை தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்........

திரு. துரை முத்துசாமி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஒத்திவைப்புத் தீர்மானமும், கவன ஈர்ப்புத் தீர்மானமும் கொடுக்கப்பட்டு, விதி 41-ன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக அவை எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் விவாதத்திற்குப் பதில் அளித்து விட்டார்கள். அதற்குப் பின்னாலே



1978 மார்ச் 2] [திரு. துரை முத்துசாமி]

ஒவ்வொரு உறுப்பினரும் கேள்வி நேரத்தின்போது கேள்வி கேட்பதுபோல் மாற்றி மாற்றி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், அமைச்சர் அவர்களும் அதற்கு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் விவாதத்திற்குப் பதில் சொன்ன பிறகு தாங்கள் தீர்ப்பளிக்க...... ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வது முழுவதும் தவறு. நீங்கள் முதலில் உட்காருங்கள். கால் அட்டன்ஷனில் அமைச்சரின் விளக்கத்திற்கு பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் அவர்களுடைய சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாம். அமைச்சரும் அதற்குப் பதிலளிக்கலாம். அதற்கு தலைவரின் தீர்ப்புத் தேவையில்லை? அது வழக்கமும் அல்ல. (திரு. துரை முத்துசாமி எழுந்தார்) நீங்கள் உட்காருங்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது, அமைச்சர் விளக்கம் அளித்த பின்னால் அவைத் தலைவரின் தீர்ப்பு அளிக்கப்படும். ஆனால் கால் அட்டன்ஷனில் அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டு விளக்கம் பெறலாம். அதற்கு அவைத் தலைவரின் தீர்ப்பு தேவையில்லை. நீங்கள் இரண்டையும் ஒன்றாக்கி அவைத் தலைவர் தீர்ப்பளிக்கவில்லை என்று கேட்க விரும்பினால் அது தவறு. கவன ஈர்ப்புத் தீர்மானமும் ஒத்திவைப்புத் தீர்மானமும் ஒன்றல்ல.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, நான் கேட்பது, விதி 41-ன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் விவாதத்திற்கு வந்து, விளக்கம் அளித்த பின்னால் கேள்வி நேரத்தில் கேள்வி கேட்பதைப் போல் கேள்வியும் பதிலும் வருவது அனுமதிக்கக்கூடியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீதுதான் தலைவரவர்கள் தீர்ப்பளிக்க வேண்டுமே யொழிய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு தலைவர்வர்கள் தீர்ப்பளிக்க வேண்டியது இல்லை. ஆகவே தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

## (5) 1978–79-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே 1978–79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை இந்த அவையில் தாக்கல் செய்ததை ஒட்டி அனைத்துக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மொத்தம் 82 பேர்கள் பேசியிருக்கிறார்கள். ஏறத்தாழ பதினெட்டு மணி நேரங்களுக்கு மேல் விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. எந்த அளவுக்கு இந்த

அவைக்கு இந்தக் கொள்கை பிரகடனத்தின் மேல் அல்லது இந்த நிதிநிலை அறிக்கையின் மேல் அக்கறை இருக்கிறது என்பதற்கும் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் கோரிக்கைகளை விளக்கிக் கூறுவதில் எந்த அளவிற்கு அவர்கள் ஆர்வம் காட்டினார்கள் என்பதற்கும் இந்த கணக்கு ஒரு அடிப்படையாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். நான் எனது பேச்சின் ஆரம்பத்தில் எனது நிதிநிலை அறிக்கையில் கடைசிப் பக்கத்தை முன்னணியாக வைத்து எனது பேச்சைத் தொடங்க விரும்புகிறேன். எனது பேச்சின் கடைசிப் பகுதி இதுதான்.

" தலைவரவர்களே, மன நிறைவோடு இந்த நிதிநிலை அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன். அமரர் அண்ணாவின் ஆசைக் கனவுகளுக்குப் படிப்படியாக வடிவம் சமைத்திடும் முயற்சிகளில் இது ஒன்று எனக்கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். எல்லாம் இதிலே அடங்கியிருக்கிறது எனக்கூறி என்னை ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. சென்றடைய விரும்பும் இலட்சிய முகட்டின் தோற்றம் கண்ணெதிரே தெரிகிறது. வயற்காடுகளில், தொழிற்சாலைகளில், மலைப்பகுதிகளில், கடலோரப் பகுதிகளில், பின்தங்கிய இடங்களில் தங்களது வியர்வையைச் சிந்தி, பிறருக்காக காலாகாலம் உழைத்து, தங்களை உருக்குலைத்துக்கொண்டு, மற்றையோர்களை உருவாக்கி வாழ வைக்கும் அந்த நடமாடும் தெய்வங்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை மன மகிழ்ச்சியை நிறைவை, நம்பிக்கையை ஏற்படுத்திட அரசு மேற்கொள்ளும் பல முயற்சிகளின் ஒரு கூறுதான் இந்த நிதி நிலை அறிக்கை."

எனது பேச்சின் கடைசிப் பகுதியிலே இவ்வாறு நான் தெரிவித்திருக்கிறேன். நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புவது இந்த அறிக்கையில் நிச்சயமாக வாண வேடிக்கை இல்லை அல்லது வானவில்லின் வர்ண ஜாலங்கள் இல்லை. முற்றிலும் மாறாக நம்பிக்கையின் ஒளி இந்த நிதிநிலை அறிக்கை முழுவதும் பரவிக் கிடக்கிறது என்பதை நான் பெருமிதத்தோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இந்த நிதிநிலை அறிக்கையை பற்றி பல பேர்கள் பேசினார்கள். குறிப்பாக கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் இங்கே பேசினார்கள், இதிலே எதுவுமே இல்லை என்ற அடிப்படையில் சில பேர்கள் பேசினார்கள். சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்று சில பேர்கள் பேசினார்கள்.

[முற்பகல் 11-10]

நாங்கள் விட்டுவிட்டதைத்தானே நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள் என்று சில பேர்கள் குறிப்பிட்டார்கள். இது பண்ருட்டியில் செய்யப்பட்ட களிமண்ணாலான மாம்பழம் என்று பண்ருட்டிக்கு சம்பந்தமில்லாத மாம்பழத்தை பலாச்சுளைக்குப் பதிலாக எனது அருமை நண்பர் சண்முகம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒருவேளை இந்த பட்ஜெட்டை அவர்கள் பலாச்சுளையாகக் கருதியிருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன்.



அதற்குப் பிறகு பேசிய எனது அருமை எதிர்கட்சித் துணைத் தலைவர் அன்பழகன் அவர்கள் இதில் புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை, மனோகரமும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். திருப்பி அவர்களுக்கு நான் சொல்லமுடியும். உங்கள் பேச்சில் புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை, அன்பும் இல்லை, அழகும் இல்லை என்று சொல்லிவிட முடியும். வார்த்தை ஜாலங்களில் நான் அதிகக் கவனம் செலுத்த விரும்பவில்லை.

நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது எனக்கு எந்தளவிற்கு சிரமத்தைக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்கு சிரமத்தை குறைத்தார்கள். அதற்குரிய காரணம் 'நான் என்ன செய்தேன்' என்பதைப் பற்றித் தான் அவரது பேச்சு அமைந்திருந்ததே தவிர இந்த நிதிநிலை அறிக்கைபற்றி அவர்கள் பெரும்பாலான அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பதை இந்த அவையில் நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதிலே எதுவுமே இல்லையா என்ற கேள்வியை இதய சுத்தியோடு கேட்குமாறு நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். நான் போட்டிருக்கிற இந்த பட்ஜெட் 1979 வரை நம்முடைய திட்டச் செலவு ரூ. 1,169 கோடியாகும். அதாவது தேசிய வளர்ச்சிக் குழு நிர்ணயித்த அளவிற்கு மேலாக இருக்கும் என்ற என் கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நடப்பாண்டிற்கு 260 கோடி ரூபாய்க்கு மேல் 45 கோடி ரூபாய் அளவில் அதாவது 17 சத வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இது திட்டச் செலவை மேம்படுத்துவதில் அரசு கொண்டுள்ள அக்கறைக்கு அறிகுறியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதை நான் இங்கே , குறிப்பிட்டிருக்கிறேன். காலம் செல்லச் செல்ல 'ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு, பழமொழி என்பதைவிட ஒரு தத்துவம் உண்டு.

'Increase in economic activities will increase expenditure of the State.'

என்று குறிப்பிடுவார்கள்.

ஒரு மாநிலத்தின் பொருளாதாரத் திட்டங்கள், அந்தத் திட்டங்களை அதிகப்படுத்துகிறபோது செலவினங்கள் அதிகமாகும். அந்தச் செலவினங்கள் அதிகமாகும்போது அந்தச் செலவுகளுக்கான நிதி ஆதாரங்களைத் தேடுவதற்கு அரசு பல முயற்சிகளில் ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்படும்.

நான் கேட்டுக்கொள்கிறேன், எதிர்கட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து. மின்சாரத்திற்கு 114 கோடி ரூபாய், பாசனத்திற்கு 24·9 கோடி ரூபாய், விவசாயமும் அதனைச் சேர்ந்த துறைகளுக்காக 44·6 கோடி ரூபாய், தொழில் 13·5 கோடி ரூபாய், போக்கு

வரத்தும் சாலைவசதியும் 28·3 கோடி ரூபாய், குடிநீர் வழங்கலும் கழிவுநீர் அகற்றலும் 27·3 கோடி ரூபாய், என்று இங்கே ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர அதை வைத்துக் கொண்டு நீங்கள் என்னென்ன செய்யப் போகிறீர்கள் என்பதைப் பற்றி ஏன் இந்த பட்ஜெட்டில் நீங்கள் விளக்கவில்லை என்று இங்கே சில பேர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்கெல்லாம் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒதுக்கப் பட்டிருக்கிறது. எந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவது என்ற திட்டங்கள் தயாராயிருக்கின்றன. அந்தத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்கு நாம் எப்படி எப்படி பணியாற்ற வேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிற சந்தர்ப்பம் இது என்பதை நான் பெருமதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்றும் இங்கே பேசினார்கள். நாங்கள் செய்ததைத்தானே நீங்களும் செய்கிறீர்கள் என்றால் இது வாதமாகாது. அப்படியானால் மிக சிறப்புக்குரிய வகையில் இருப்பது வெள்ளைக்காரனாகத்தான் இருப்பானே தவிர வெள்ளைக்காரனுக்குத்தான் அந்த பெருமை கிடைக்க முடியும், காரணம் வெள்ளைக் காரன் சொல்லலாம் நான்தான் இந்தியா முழுவதும் இருப்புப் பாதை போட்டேன், நான்தான் கட்டடங்களைக் கட்டினேன், நான்தான் அதைச் செய்தேன், நான்தான் இதைச் செய்தேன் என்று சொல்லக்கூடும். அதற்குப் பிறகு, வெள்ளைக்காரன் ஆட்சிக்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி வந்தது. காங்கிரஸ் ஆட்சி 1967யோடு கவிழ்ந்தது. கவிழ்ந்த பிறகு தி.மு.க. வந்தது. தி.மு.க. சார்பில் திட்டங்கள் தீட்டப்பட்டன. பெரிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முனைப்போடு செயல்பட்ட அந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள், எங்களது புனிதத் தலைவர் காமராஜ் அவர்கள் போட்ட திட்டங்களைத்தானே நீங்கள் இப்போது செயல் நடத்துகிறீர்கள், 'இன்ப்ராஸ்ட்ரக்சர்' போட்டது நாங்கள்தானே என்று கேட்டார்கள். இன்றைக்கு அதே கேள்வியை திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள பல நண்பர்களும் எதிர் கட்சி தலைவர் அவர்களும் கேட்கிறார்கள். நாங்கள் செய்ததைத் தானே நீங்கள் செய்கிறீர்கள்.

தெளிவாக நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள், நான் இதைப்பற்றி பேசியபோது இதை பலரும் ஏற்றுக்கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் காலத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள் பாதியில் விடப்பட்டிருந்தால் அதை முழுமையாக நிறைவேற்றுவோம், அதே நேரத்தில் புதிய திட்டங்களை கொண்டு வருவதற்கு இந்தச் சர்க்கார் புதிய திட்டங்களை கொண்டு வரும் என்பதை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். ஆகவே, நீங்கள் என்ன செய்தீர்கள், நாங்கள்தான் செய்தோம் நாங்கள்தான் செய்தோம் என்று பேசிக்கொண்டிருப்பதில் எந்தவித பயனும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.





அதே போன்றுதான் நமது அருமை துணை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், தமிழ்நாட்டிலிருக்கிற கிராமங்களுக்கும் நகர்புறங்களுக்கும் இடையில் இருக்கின்ற இணைப்புப் பாதைகளை எல்லாம் நாங்கள்தான் போட்டோம் என்று சொன்னார்கள்,. அதாவது கிராமங்களுக்கும் நகர்புறங்களுக்கும் 'லிங்க்' எங்களால்தான் வந்தது என்ற கருத்துப்பட சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன. நீங்கள் தான் அதற்கு முயற்சிகளை மேற்கொண்டீர்கள், அதில் எங்களுக்கு அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் சில இடங்களில் அந்த 'லிங்க்' 'மிஸ்'ஸாகியிருக்கிறது என்பதைத்தான் நான் தெரித்துக்கொள்ள விரும்புகிறேன். மிஸ்-ஸாகி போன லிங்கை கனக்ட் செய்கின்ற முயற்சியில்தான் இந்த ஆட்சி ஈடுபட்டுள்ளது என்பதை அருமை அன்பழகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப்பிறகு, இங்கே பேச வேண்டிய கருத்துக்கள் என்று எடுத்துக்கொண்டால், அருமை நண்பர் சண்முகம் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். விடை அளிப்பதற்கு தகுந்த ஒரு கேள்வியாக இருந்தது என்று நான் கருதுகிறேன். அதாவது மோட்டார் வாகனங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரியிலிருந்து கிடைக்கின்ற வரி வருவாயிலிருந்து ஒரு சதவீதத்தை நீங்கள் எடுத்து அதை முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்குக் கொண்டு செல்லுகின்றீர்களே, அது எந்த அளவுக்கு சட்ட ரீதியாக முறையாக இருக்கும், எந்த அளவுக்கு நியாயம் என்ற ஒரு கேள்வியை கேட்டார். அருமை நண்பர் சண்முகம் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி வரியிலிருந்து வருவாய் வந்தவுடன் உடனே அதை எடுத்துக் கொண்டு அதை அப்படியே பார்சல் செய்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கொண்டு செல்லப்பட்டுவிடும் என்று அவர்கள் கருதுவார்களேயானால், நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்வேன், அது தவறான கருத்தின் அடிப்படையில் கூறப்படுகின்ற கருத்து என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், சட்டப்படி, இதற்கென்று தனியாக அப்ரோப்பிரியேஷன் கொண்டு வரப்பட்டு அனுமதி பெற்று Consolidated Fundக்கு சென்று முதலமைச்சர் நிதிக்கு செல்ல வேண்டும். இதுதான் முறையாக செய்யப்படுகிறது. இப்படியிருக்கும் போது, இப்படி மாற்றுவது என்ன நியாயம் / நாளைக்கு முதலமைச்சராக வருகின்றவர்கள் இதை மிஸ் யூஸ் செய்யமாட்டார்கள் என்று எப்படி சொல்ல முடியும் என்று கேட்டார்கள். நான் அருமை சண்முகம் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன் அவர் நல்ல விவரம் தெரிந்தவர் என்ற காரணத்தினால் தான் இதைச் சொல்லுகிறேன். இதற்கென்று 'இயர் மார்க்' செய்த பிறகு, இந்த நிதி சென்றதற்குப் பிறகு, ஆடிட் செய்து இந்த சபையில் கணக்குகள் வைக்கப்படும், இவ்வெல்லாம் தெரிந்தும்

எப்படி இப்படிப்பட்ட எண்ணம் அவர்களது உள்ளத்தில் தோன்றிற்று என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தயவு செய்து அருமை நண்பர் சண்முகம் அவர்கள் இந்த விஷயத்தில் நல்ல தெளிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட கருத்து வர வேண்டிய தேவையே இல்லை. எந்த நிதியும் எதற்காக ஒதுக்கப்படுகிறதோ அதற்காகத்தான் செலவு செய்யப்படும். அது மிஸ்யூஸ் செய்யப்படும் என்ற கருத்தே சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, குறுக்கிட்டுப் பேசுவதற்குகாக மன்னிக்கவும். நிதி அமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல் எடுத்துக்கொண்டால், ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ஒதுக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும், நான்கைந்து பேர்களுக்கு இயற்கையின் சோதனையால்-நான்கைந்து பேர்களுக்கு 5,000 ரூபாய் வீதம் கொடுத்ததுபோக மீதியுள்ள தொகை எல்லாம் அக்குமுலேட்டாகிக்கொண்டு வருமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன், அல்லது இந்தத் தொகை வேறு திட்டங்களுக்கு டைவர்ட் செய்யப்படுமா என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் முன்பே குறிப்பிட்டது போல், இயர் மார்க்' செய்துவிட்டதற்குப் பிறகு அந்தத் தொகையை வேறு இனங்களுக்கு சாதாரணமாக செலவழிப்பதில்லை. இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன.. Munipal Act என்று ஒன்று இருக்கிறது. அதில்/

Temporary diversion of earmarked funds. Under the existing law orders and rules specified below, the Municipal Councils should not divert the following earmarked funds even temporarily for other purposes without the previous sanction of the Gov rnmcnt.

(முற்பகல் 11-20)

இப்படி எதற்கு என்று குறிப்புகள் இருக்கின்றது.

Water and Drainage Tax Fund, Deposits (including Provident Funds), Lighting Tax Fund, Loan Funds, Special Provlncial Grants, Elementary Education Fund.

இப்படி பல இருக்கிறது. இது வேறு ஒன்றுக்கும் திசை திருப்ப முடியாது. இன்னும் ஒன்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு



கிறேன். இதற்கு என்று சொன்னதற்குப் பிறகு, அதற்கு மாறாக வேறு திட்டத்திற்கு செலவு செய்யக்கூடாது என்ற நிலைமை சட்டரீதியாக இருக்கிறது.

வேறொரு கேள்வியைப் பற்றியும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு இதற்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது; அதற்கு அதற்கு என்று மட்டும்தான் செலவழிக்கப்படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ் அதாவது காவல் துறையிலே நமக்கு எவ்விதமான வருமானமும் வருவதில்லை. நாம் மாறாக, அந்தத் துறைக்கு செலவழித்துக் கொண்டிருக்கிறோம். சேல்ஸ் டாக்சில் வருமானம் வருகிறது. இங்கே எல்லோருக்கும் எடுத்துச் சொன்னபடி, நமக்கு அது காமதேனுவாக இருக்கிறது. அந்த வருமானத்தை நாம் பல துறைகளுக்குப் பயன்படுத்துகிறோம். ஆனால், இங்கே டிஸ்கிரிஷனரி பண்டு என்று வைத்துக்கொண்டு, அதிலே இந்தப் பணம் பின்னால் வருகின்ற ஒரு முதல் அமைச்சர் பாழாக்கி விட முடியும் என்ற எண்ணம் தூய உள்ளம் படைத்த சண்முகம் அவர்களுக்கு வரக்கூடாது என்பதை மீண்டும் ஒருமுறை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்தி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டும் அல்ல. சண்முகம் அவர்களுக்கு விளக்கம் தேவையானால், நான் அவருக்கு இதையெல்லாம் இப்போது படிக்க நேரமில்லை., இந்திய அரசியல் சட்டத்திலே இருக்கின்ற ஆர்டிகல்களை மட்டும் சொல்கிறேன். அதைத் தயவுசெய்து அவர்கள் வீட்டிலேபோய் படித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். 266(1),266(3), 282, 283(1), 206(1)(சி) இவைகளில் உள்ளவற்றைப் படித்தால், விளக்கம் பெற்று, இந்த மாதிரியான கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பேசியவர்கள் இன்னும் சில சில கருத்துக்களை வெளியிட்டார்கள். நான் அவர்களுக்கு இதையெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெட்ரோல் விலையிலே 2 பைசா அதிகம் போட்டு விட்டார்கள்; அதே போல் டீசலிலேயும் ஏற்றி விட்டார்கள். இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்களா என்றெல்லாம் கேட்டார்கள்.

மின்சாரத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை, இதுவரை இதற்கு முன்னாலே எந்த அரசும் ஒதுக்க முடியாத அளவிற்கு நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மின்சாரம் அதிகமாகக் கிடைக்கின்ற வாய்ப்பு இந்த மாநிலத்திற்கு நிச்சயம் வரயிருக்கிறது. டீசல் காஸ்ட்லியாக இருப்பது தெரியும். இப்படிப்பட்ட நிலைமையில் இருந்து விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக,

1978 மார்ச் 2] [திரு கி. மனோகரன்]

இந்தக் காரியம் செய்தால், இந்த முயற்சியிலே ஈடுபட்டால், அதிக மின்சார உற்பத்தியினால் விவசாயிகள் பயன்படுவார்கள் என்பதால் இந்தச் சர்க்கார் இதிலே கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே நேரத்தில் இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு கிலோ மீட்டருக்கு இவ்வளவு என்று கட்டணம் இன்கிரீஸ் ஆகுமென்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. டீசிலினால் அந்த அளவிற்கு பாதிக்கவில்லை என்பதற்கு இதைச் சொல்கிறேன். ஓரளவிற்கு பெருகியிருக்கின்றது என்றே வைத்துக் கொண்டாலும்கூட அது மிகச் சாதாரணமான அளவிற்குத்தான் பாதிக்குமே தவிர, கடுமையாக பாதிக்கின்ற நிலைமை இந்த வரிச் சுமையினால் வரவில்லை என்பதை நான் கணக்கிட்டுப் பார்த்து தெரிந்து கொண்டிருக்கிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்னையைக் கிளப்பினார்கள். பஸ் அதிபர்கள் தங்கள் பஸ் கட்டணத்தை உயர்த்துவார்களே? அதற்கு என்னச் செய்வது? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, நான் அரசின் சார்பாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பஸ் கட்டணத்தை உயர்த்துவதற்கு நாங்கள் இந்த பஸ் அதிபர்களை அனுமதிக்க மாட்டோம் என்ற உறுதியை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தத் துறையிலும் உங்களுக்கு எந்தவிதமானச் சந்தேகமும் வேண்டியதில்லை என்பதை நான் பணிவோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, இன்னும் சில பேர் கருத்துக்கள் தெரிவித்த போது, எந்த அளவிற்கு இந்த அரசு கிராம வளர்ச்சிக்கு தனது கருத்தை, எண்ணத்தை வைத்திருக்கிறது? அது எப்படி வளரப் போகிறது? எப்படி மாறப்போகிறது என்று கேட்டார்கள். நீங்கள் பட்ஜெட்டைப் படிக்கும்போது எனது அருமை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன். நீங்கள் எப்போதும் பீஸ்மீலாகப் படிக்காதீர்கள், படிப்பதை ஆரம்பத்திலிருந்து கடைசிவரையும் படியுங்கள், அதிலே நடுவிலே ஓடுகின்ற இழையை பிரித்து விடாதீர்கள் தயவுசெய்து பிழை காணும் எந்த நோக்கத்தோடும் அதை அணுகாதீர்கள் என்று தயவுசெய்து நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் ஒரு தன்னிறைவுத் திட்டம் என்ற ஒன்றை இங்கே வைத்திருக்கிறோம். அந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன். ஒரு சில கிராமங்கள் ஒன்றாக இணைக்கப் பெற்று, அந்தக் கிராமங்களில் சின்னஞ்சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அந்தத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பை உருவாக்கி, வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் அந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகி எந்தெந்தப் பொருள்களைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குப் பொருள்களை உருவாக்குவது, உற்பத்தி செய்வது என்ற திட்டத்தை வைத்திருக்கிறோம். இது சவுத் கொரியாவில் நடைமுறையில் இருக்கும் திட்டம்.





இன்னொன்றும் தெரிவித்துக் கொள்கிறேன். சபை உறுப்பினர்கள் கேட்கக்கூடும். சிறு சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கிறீர்கள்—உதாரணத்திற்கு குண்டூசி என்று வைத்துக் கொள்ளுங்கள்; தவறு அல்ல; அல்லது பிளாட்டிங் பேப்பர் என்று வைத்துக் கொள்ளுங்கள்; தவறு அல்ல; மை தயாரிப்பது என்று வைத்துக் கொள்ளுங்கள்; தவறு அல்ல. இப்படி சிறு சிறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம், தவறு அல்ல. மையை அடைப்பதற்குப் பாட்டில்கள் தயாரிக்கலாம்; தவறு அல்ல.; நாற்காலி, மேஜைகள் தயாரிக்கலாம், தவறு அல்ல. பென்சில் பேனாக்கள் தயாரிக்கலாம், தவறு அல்ல.

இவைகளை எல்லாம் தயாரித்தால் மார்க்கெட்டுக்கு எங்கே போவார்கள் என்ற கேள்வி எழக்கூடும். அரசு சார்பாகத் தருவிக்கிற, அரசு அலுவலகங்களில் பயன்படுத்துகிற அத்தனை பொருள்களையும் இந்தச் சின்னஞ்சிறு தொழிற்சாலைகளில் இருந்து வாங்குவோம் என்ற உறுதியை இந்த அளவுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மார்க்கெட் எப்படி ஆகும் என்ற அச்சம் தேவையில்லை. எலக்ட்ரிசிடி போர்டு கூட முன் வந்திருக்கிறது. 'நாங்கள் மூன்று கோடி ரூபாய் அளவுக்குத் தேவையான பொருள்களை இந்தச் சின்னஞ்சிறு தொழிற்சாலைகளில் இருந்து வாங்கத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மன நிறைவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அப்படி பத்து, சிறு, சிறு கிராமங்களை எடுத்து அந்த அளவுக்கு முன் மாதிரி திட்டமாக மேற்கொண்டு, அது கொஞ்சம் கொஞ்சமாக பரவி, தமிழகம் முழுமையும் வருமானால் நிச்சயமாக நாங்கள் எண்ணியிருக்கும் அந்த எண்ணத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பல பேர் கேட்டார்கள். ஏழு மாதங்கள் ஆயிற்றே, நீங்கள் என்ன இதுவரை சாதித்தீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் சாதித்த சாதனைகள் எவ்வளவு என்பதற்கு இங்கே என்னிடம் குறிப்புகள் இருக்கின்றன. அந்தக் குறிப்புப்படி ஏறத்தாழ 40 ஜி.ஓ.க்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன; ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டன; நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதன் கணக்கு என்னிடம் இருக்கிறது.

போன பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு எவை எவை செயல் படுத்தப்பட்டன என்று சில பேர் கேட்டார்கள். நான் சென்ற நிதிநிலை அறிக்கையின்போது அறிவித்தேன்—

Rural Drinking Water Supply Scheme. ஜி.ஓ. 30—8—77-ல் அனுப்பியாயிற்று. வேலைகள் நடைபெற்று வருகின்றன. தயவு செய்து உறுப்பினர்கள் கடுமையாக விமர்சனம் செய்வதற்கு முன்பு அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பிறகு—

''Scheme for promotion of high quality low budget Tamil films with a Social cont nt.''

என்று அறிவித்தோம். அதற்கு ஜி.ஓ. அனுப்பி நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

''Third unit of Tuticorin Thermal Pr jects.''

அதற்குத் துறையின் சாங்ஜன் அளித்தாயிற்று. வேலைகள் நடைபெற ஆரம்பித்தாகி விட்டது ''Commitee for Rural Employment-LandArmy'' அதைச் செயல்படுத்த திட்டங்களைத் தயாரித்தாயிற்று. அந்தத் திட்டங்கள் துரிதமாகச் செயல்பட இருக்கின்றன.

''Expansion of Rural Roads Programme''

அதற்கு ஜி. ஓ. 10—1—1978-ல் போடப்பட்டாயிற்று.

Opening of Diary Complex at Erode, 15 key village Blocks (Animal Husbandry)

15 வில்லேஜ் பிளாக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டாயிற்று. ஜி. ஓ. தயாராகி விட்டது. அவர்கள் பதினைந்தைத் திறக்க இருக்கிறார்கள். ''Establishment of Fisheri s College under Tamil Nadu Agricultural University.'' ஜி. ஓ. அனுப்பியாகி விட்டது. அதற்குரிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டாயிற்று.

''Educ tional concessions for Children of Scheduled Castes/ Scheduled Tribes.''

ஜி.ஓ. நம்பர் இருக்கிறது. 13—10—1977-ல் அனுமதி அளிக்கப் பட்டு விட்டது. வேலைகள் தொடங்கியாயிற்று. இத்தனையும் சொல்லுகிறேன். அவர்கள் நேரில் சென்று பார்க்க வேண்டு மென்று கேட்டுக் கெள்கிறேன்.

''Fr e supply of books and note books to Children of Widows.''

அதுவும் இந்த அகடமிக் இயரிலேயே ஆரம்பமாயிற்று.

ஏறத்தாழ 40 திட்டங்கள் இன்றைக்குச் செயல் வடிவம் பெற்றுவிட்டன. ஏழாண்டுக் காலத்தில் நீங்கள் செய்ததை நாங்கள் ஏழு மாதத்திற்குள் செய்துவிட முடியும் என்று நீங்கள் எதிர் பார்க்க மாட்டீர்கள் என்று மனதார நம்புகிறேன். ஆனால் இந்த ஏழு மாத காலத்திற்குள்ளாக இத்தனையையும் மன நிறைவோடு செய்திருக்கிறோமே அதற்கு ஒரு பாராட்டாவது வரக்கூடாதா





என்று கேட்கிற உரிமை எனக்கு இருக்கிறது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் சண்முகம் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து இதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டு மென்றுகேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய நிதி ஆதாரம் எவ்வளவு என்று தெரியும். இவ் வளவு சிக்கலான நிலைமையிலும், இவ்வளவு திட்டங்களைத் தீட்டி இவர்கள் எல்லாம் பணியாற்றுகிறார்களே என்று பாராட்டுவதற்கு மனம் இல்லாவிட்டாலும் குறுக்கே பாறாங்கல்லை வைக்கிற முயற்சியை நீங்கள் தயவு செய்து விட்டு விடவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11·30)

அதற்குப் பிறகு இன்னொன்றைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதை மிகச் சாதாரணமாக யாரும் கருத மாட்டார்கள். இதுவரை 2 பே கமிஷன்கள் நியமிக்கப்பட்டிருக் கின்றன. முதலாவது பே கமிஷன் எடுத்துக்கொண்ட மாதங்கள் 16 மாதங்கள். இரண்டாவது பே கமிஷன் இம்பிளிமென்டேஷனுக்கு எடுத்துக்கொண்ட மாதங்கள் 13. நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அமைக்கப் பட்ட இந்த பே கமிஷன் எடுத்துக்கொண்ட மாதங்கள் எட்டே எட்டு தான்.

அது மட்டுமல்ல இதுவரை வரலாறு காணாத அளவுக்கு அந்த ரிப்போர்ட் வருவதற்குள்ளாகவே ஒரு தேதியைக் குறித்து, அந்தத் தேதியிலிருந்து. ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் அதற்குத் தரப்படும் என்று சொல்லிய அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன் (ஆர்வாரம்).

இன்னொன்றையும் இங்கே பெருமையோடு நான் சொல்லியாக வேண்டும். போன பட்ஜெட் வந்தபோது அது ஒரு பெருங் குறையாகச் சொல்லப்பட்டது, 200 ரூபாய்க்கு மேல் அதிகமாக சம்பளம் வாங்குகிறவர்களுக்குத் தான் உயர்வு கொடுக்கப்பட்டது. இருநூறு ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ஒன்றுமே தரப்படவில்லை என்ற குறை அது. அந்தக் குறையை அதற்கு முன்னாலே தி.மு.க. சர்க்கார் தான் செய்தது. இந்த பட்ஜெட் தயாரிக்கப்படுகிறபோது 200 ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 'நான் ரெக்கரிங் லம்ப் சம்' ஆக 25 ரூபாயும், 200 ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 15 ரூபாய் என்றும் தரப்பட்டது என்று அறிவிக்கப்பட்டபோது அதைப்பற்றி

என்ன கிண்டல், என்ன கேலி, இது என்ன ஒரு பெரிய சலுகையா என்று எல்லாம் கேட்டார்கள். கேட்ட அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1975—76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை என்னுடைய அருமை எதிர்க்கட்சித் தலைவர் நிதியமைச்சராக இருந்து அளித்தபோது, இந்த நாட்டிலே நிதி ஆதாரங்கள் நெருக்கடி நிலையிலே இருந்தால் அது இப்படித்தான் இருக்கும் என்பதை வண்ணத் தமிழிலே இங்கே அளித்திருக்கிறார். அவர் அளித்ததை நான் படித்துக் காட்டுகிறேன். அப்போது அவர் எங்களைப் பாராட்டப் போகிறாரா, திசைமாற்றப் போகிறாரா என்று தெரியவில்லை. நிச்சயமாக பாராட்டுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால் பொறுப்பிலே உள்ளவர்களுக்குத்தான் பளு தெரியும், இல்லாதவர்களுக்கு பளு தெரியாது, மற்றவர்கள் மேல் பொறுப்பை வைக்கிற எண்ணம் வரும். நான் அதைப் படித்துக் காட்டுகிறேன். மூன்றாவது பாராவிலே,

'' உலகெங்கும் விலைவாசி உயர்வு கடுமையாக இருந்தபோதிலும், ஏழ்மை மிக்க இந்திய நாட்டுக்கு அதனைச் சமாளிக்கும் சக்தி இன்னும் முழுமையாக ஏற்படவில்லை. ''

நிலைமையை உணர்ந்த பேச்சு.

'' நிலையற்ற தன்மையில் பணத்தின் மதிப்பு ஊசலாடும் போது, வருமானத்தின் உண்மை மதிப்பு ஒளியிழந்து விடுகிறது.''

அவரது உணர்வு.

'' முதலீடுகளுக்கும் சேமிப்புகளுக்கும் அதே கதி தான். களையப்படவேண்டுமென்று கருதுகிற சமுதாய ஏற்றத் தாழ்வுகள், சற்றும் அசைந்து கொடுக்காமல் நிற்பதற்கும் இந்தப் பொருளாதாரச் சிக்கல் தான் காரணமாகிறது. விலை ஏறுகிறது, ஊதியங்கள் உயர்த்தப் படுகின்றன. விண்ணில் ஏறிப்பறக்கும் காற்றாடிப் போல் ஏறுகிற விலைவாசிகளுக்கு உயர்த்தப்படுகிற ஊதியங்கள், மேலும் உயரப் பறப்பதற்கு உதவுகிற நூல்கயிறாக அமைகின்றது. ஊதிய உயர்வு கோரிக்கை வைப்பதற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்திய நாட்டில் இருக்கிறார்கள். காரணம்—அவர்களுக்கு எந்த ஊதியமும் இல்லை. ஊதியம் இருந்தால் தானே 'உயர்த்த வேண்டுமென்ற குரலே எழப்போகிறது? அவர்களுக்கும் சேர்த்துத்தான்—சரியாகச் சொல்வதானால், அவர்களை 'முக்கியமாக வைத்துத்தான், நமது பொருளாதாரப் புரட்சியையே உருவாக்க வேண்டும்.'' இது அவர்கள் பேசிய பேச்சு. இந்த நிலை எங்களுக்கு இருப்பதைப் பார்த்து இந்த நெருக்கடி நிலையிலே உங்களுக்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு யோசனைகளைச் சொல்கிறோம் என்று சொல்



வதற்குப் பதில் இதில் என்ன இருக்கிறது, ஏனோ தானோ என்று இந்த பட்ஜெட்டை கடிந்து கொள்வது எதிர்க்கட்சித் தலைவருக்கு அழகல்ல....

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நிதி ஆதாரங்களைப் பொறுத்து இந்த அரசுக்கு ஒத்துழைக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயார் என்று நேற்றைய தினம் கூட நான் பேசி இருக்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பீட்டிற்கு மத்திய சர்க்கார் நமக்குப் பணம் தர வேண்டுமென்ற கருத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறேன்.

என்.ஜி. ஓக்களின் கோரிக்கைகளைப் பற்றிப் பேசும்பொழுது நிதி ஆதாரங்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்ற மற்ற கோரிக்கைகளில் கவனம் செலுத்தலாம், நிதி ஆதாரங்களின் கஷ்டத்தை நாங்களும் உணர்வோம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். இவைகளெல்லாம் 1975—76 ஆம் ஆண்டுக்காக படித்த நிலைமையும் இப்பொழுதுள்ள நிலைமையும் ஒரே மாதிரியான தன்மையுடையது தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவர்கள் விளக்கம் தந்ததற்காக நான் மிகவும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிநிலை நெருக்கடி அவருக்குப் புரிகிறது. ஆகவே, என்.ஜி.ஓக்கள் இப்பொழுது கிளர்ச்சிகளிலே ஈடுபடுகிறார்கள், நிச்சயமாக அந்தக் கிளர்ச்சியில் நீங்கள் ஈடுபடாதீர்கள், நிதிநிலை சரியாக இல்லை என்று வக்கீலாக எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இருக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்குப் பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். மிக முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். மதுவிலக்கு காரணமாக ஏறத்தாழ 140 கோடி ரூபாய் நமக்கு இழப்பு இருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அந்த மதுவிலக்கைக் கடுமையாக அமல் செய்கின்ற நேரத்தில் அதற்கென்று ஆகின்ற செலவினங்களையும் கணக்கெடுத்துப் பார்க்கின்ற நேரத்தில் அது 10 கோடி ரூபாய்க்கு மேல் என்று ஆகி ஏறத்தாழ மொத்தம் 150 கோடி ரூபாய் வந்து நிற்கும். இன்றைக்கு ஒரு கணக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நேற்றைக்கு என்னோடு பேசிக் கொண்டிருக்கும் பொழுது, இந்தியா முழுவதும் மதுவிலக்கு ஏற

பட்டால் கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் வராதா என்று கேட்டார்கள். அதற்கு ஒரு விளக்கம் இங்கே தரப் பட்டிருக்கிறது.

"The total loss of revenue on account of introduction of prohibition in the 5 years begining from 1978-79 could be of the order of Rs. 3,700 crores."

Dr. P. C. Chander, Minister for Education and Social Welfare.

அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதை ஈடுகட்ட மத்திய சர்க்காரிடம் நாங்கள் பணம் கேட்போம், வலியுறுத்துவோம் என்று தெரிவித்தபொழுது, சேல்ஸ் டாக்சிலேயிருந்து கிடைக்கின்றபொழுது நீங்கள் ஏன் இதற்காகக் கேட்கிறீர்கள், சேல்ஸ் டாக்ஸை உருவாக்கியதே அதற்காகத்தானே என்று வாதம் கிளப்பப்பட்டது. அந்த வாதத்தைக் கிளப்பியவர் பெருமதிப்பிற்குரிய நமது முதியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் என்று கருதுகிறேன். அந்த வாதத்தைத் தூள் தூளாக்குகின்ற அளவிற்கு நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மிக அருமையாகப் பேசினார்கள். இதன்மூலம் எனக்குப் பளு குறைந்து விட்டதாகக் கருதுகிறேன்.

எங்களைப் பொறுத்த வரையில் நீங்கள் வாதாடுகிறீர்களா, சென்று அந்தப் பணத்தைக் கேட்பீர்களா என்று கேட்டால், நான் பலமுறை தெரிவித்திருக்கிறேன், பைனான்ஸ் கமிஷன் இங்கே வந்தபொழுதும் சரி, நமது முதலமைச்சரும் நானும் டெல்லி சென்று பிளானிங் கமிஷனைச் சந்தித்தபொழுதும் சரி, எந்த அளவிற்கு இதைப்பற்றி வலியுறுத்திக் கூற முடியுமோ அந்த அளவிற்கு வலியுறுத்தி அவர்களின் அனுதாபத்தைப் பெறுகின்ற அளவிற்குச் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது என்ன பிச்சைக் காசா, அனுதாபத்தை உருவாக்கி வாங்க வேண்டுமா ? ஏன் கீழே இறங்கிப் போகிறீர்கள் என்று சிலர் கேட்கக் கூடும். பிரச்னைகள் விளக்கும்பொழுது அவர்களே சொன்னார்கள், 150 கோடி ரூபாய் இழப்பா என்று ஆச்சரியப்பட்டு அனுதாபப் பட்டார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அதை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம், வாங்குவதற்காக முயற்சிப்போம், அந்த முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவரவர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள் அத்தனைபேரும் இந்தச் சர்க்காருக்கு உதவியாக இருக்கும் என்று நமது எதிர்க்கட்சி தலைவரவர்கள் நேற்று எடுத்துச் சொன்னதற்காக நான் அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்





அதற்குப் பிறகு நான் வேறு சில பிரச்சினைகள் உங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இங்கே உமாநாத் அவர்கள் ரொம்ப போராட்ட வேகத்தோடு பேசினார்கள். சென்ட்ரல் ஸ்டேட் ரிலேஷன் பற்றிப் பேசினார்கள்: அவர் பேசிக்கொண்டிருக்கும்போது நானும் எதிர்க் கட்சித் தலைவரவர்களும் சொல்லிக் கொண்டிருந்தோம், நாம் பேசி பேசி ஓய்ந்த ஆனால் நீங்காத ஒரு பிரச்சினையை இன்றைக்குப் புதிதாக உமாநாத் பேசுவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள். உமாநாத் அவர்கள்கூட அந்தத் கருத்துக்கு வந்திருப்பது பெருமைக்குரியது. மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் என்று எடுத்து நாங்கள் அடிக்கடி பேசி, பாராளுமன்றத்திலே பேசி, இன்னும் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். நான் எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சராக இருக்கும் பொழுது அவரது பாராட்டைப் பெற்றவன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, நானும் எதிர்க் கட்சித் தலைவரும்—அப்பொழுது அவர் முதலமைச்சராக இருந்த பொழுது ஒரு கூட்டத்திலே நான் பேசினேன் மாநில சுயாட்சி பற்றி,

[முற்பகல் 11-40]

பேசி முடிந்ததற்குப் பிறகு, தொலைபேசியிலே தொடர்பு கொண்டு என்னிடம் அவர் சொன்னார்—அற்புதமாகப் பேசினீர்கள் என்று தொலை பேசியில் சொன்னார். ஆனால், மேடையிலே அவர் சொன்னது, 'மனோகரன் இங்கே பேசிய இந்தப் பேச்சை இத்தோடு நிறுத்தி விடாமல், இந்திய துணைக் கண்டத்துப் பாராளுமன்றத்தில், லோக் சபாவில், இந்திரா அம்மையார் உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது, அவர்களுக்கு எதிரில் அருமையான ஆங்கிலத்திலே பேச வேண்டும். இது இந்த மணிச் செட்டித் தெருவோடு நின்று விடக்கூடாது. தமிழகம் முழுமையும் சுற்ற வேண்டும். இதை இங்கே சொல்வதற்குப் காரணம் அவரிடம் தனியாகச் சொன்னால், ஒருவேளை, அவர் தப்பி ஓடி விடலாம். ஆகவே, உங்களையெல்லாம் சாட்சி வைத்துக்கொண்டு சொல்கிறேன், என்று—பெருமையோடு, ஆசையோடு சொன்னார் என்பதை நான் மறக்கவில்லை. இப்பொழுதும் அப்படித்தான் எண்ணுகிறார் ஆனால், அந்த எண்ணத்தில் கொஞ்சம் வேறுபாடு.

மன்னிக்கவேண்டும், அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிறபொழுது,—தவறாகக் கருதிவிடக் கூடாது—அவருக்கு முஜிபுர் ரகுமான் பட்டம் தரப்படவில்லை. அந்தப் பட்டம் தரப் பட்டபிறகுதான் எனக்குப் பயம் ஏற்பட்டது. முஜிபுர் ரகுமான் என்ற பட்டம் தரப் பட்டதோடு மட்டுமல்ல, மாநாடுகளில், முஜிபுர் ரகுமான் படம் ஒரு பக்கத்திலேயும் இவருடைய படம் ஒரு பக்கத்திலேயும் இருக்கும். முஜிபுர் ரகுமான் நாட்டைத்

துண்டாடுவதற்கான இலட்சியத்தை வைத்தவர். அந்த எண்ணங்களின் அடிப்படையில் இவர் இயங்குகின்றாரோ என்ற சந்தேகம் எனக்கு எழ ஆரம்பித்தது. இன்னும் சொல்கிறேன், ஒரு நாள் காலையில், திடீரென்று தமிழகத்தின் தலைநகரத்தில் எந்தச் சுவரைப் பார்த்தாலும் 'முஜிபுரே, கலைஞரே வருக, வாழ்க' என்று ஒட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்த பிறகு, கேட்ட பிறகு, எங்கோ ஒரு பெரிய ஆபத்து உருவாவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. மாநிலங்களில் அதிகாரங்கள். பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில், என்றைக்கும் தெளிவாக இருக்கிற இந்த கட்சி, அத்தகைய உரிமைகளைப் பேணிக் காப்பதில் நிச்சயம் உறுதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். (ஆரவாரம்.)

அது மட்டுமல்ல, மாநில சுயாட்சியைப் பற்றி பேச வேண்டுமென்று ஜோதி பாசு அவர்கள் கேட்டிருக்கிறார்கள், ஷேக் அப்துல்லா அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏன், குஜராத் அமைச்சரவர்கள் கூடக் கேட்டிருக்கிறார்கள். பாதல் அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப் போல், நமது தேவராஜ் அர்ஸ் அவர்கள் இப்பொழுது புதிதாக, நிலைமைகளின் மாற்றத்தையொட்டி கேட்பதாக எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். நிலைமை மாற்றத்தை ஒட்டித்தான் பல காரியங்கள் நடக்கும். இதெல்லாம் நமக்குத் தெரிந்ததுதான். என்றாலும், தெரிவிக்க விரும்புகிறேன்.

in the field of finance—financial powers.

இதில், அதிக அதிகாரங்களைப் பெறுவதற்குப் இந்தச் சர்க்கார் நிச்சயம் பின்வாங்காது என்பதை உறுதியாக இந்த மன்றத்தில் சொல்லவிரும்புகிறேன். (ஆரவாரம்.)

அதே நேரத்தில், இன்னொன்றையும் நான் பிரதம அமைச்சருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் பேசும் பொழுது சொன்னார். என்னோடு தனியாக வந்து பேசுங்கள். என்று சொன்னார். தனியாக வந்து பேசும் பொழுது உண்மையிலே அன்புள்ளவராக இருக்கிறார். நல்லவர். இது எனக்கும் அவருக்கும் இருக்கிற பிரச்சினை என்றோ அல்லது முதலமைச்சருக்கும் எனக்கும் இருக்கிற பிரச்னை என்றோ நான் கருதவில்லை. இந்தப் பிரச்னை சில பேர்கள் எடுத்துக் கூறியதைப் போல் நாடு தழுவிய பிரச்சினை. இது அறைக்குள்ளே மட்டும் விவாதிக்கத் கூடிய பிரச்னை என்று நான் கருதவில்லை.

நண்பர் மாரிமுத்து அவர்கள் கூட நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று பேசிவிட்டு ஆனால் அதிக அதிகாரங்கள் பெறுவதுபற்றிப் பேசுவதற்கு நான் உங்களோடு துணை புரிவேன் என்று சொன்னார்.



உமாநாத் அவர்கள் தான் சொன்னார்கள் கொஞ்சம் வேகமாகவே சொன்னார்கள். ஜோதிபாசு அவர்கள் மத்திய அரசுக்கு அனுப்பியதை உமாநாத்துக்குத் தந்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர் மத்திய சர்க்காருக்கு அனுப்பிய தஸ்தாவேஜுகள் என் கைக்குக் கிடைத்தது. அதையெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். நான் வெளிப்படையாகத் தெரிவிக்கிறேன். ஜோதி பாசுவின் கருத்தோட்டத்தோடு இந்த அரசு தனது கருத்தோட்டத்தை இணைத்துக்கொள்ள இயலாது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அதைப் படித்துப் பார்க்கும்போது, நோக்கங்கள் எங்கோ இருக்கின்றன. ஆக்கபூர்வமான யோசனை இருந்தால் நான் வரவேற்கிறேன். நான் எடுத்த எடுப்பிலே அதைப் படித்துவிட்டு இன்றைக்குக் கருத்துத் தெரிவிக்கிறேன் என்று கருத வேண்டாம்.

அருமை நண்பர் அசோக் மித்ரா அவர்கள் 50—50 பர்சன்ட் என்று பேசினார்கள். மொத்த வருமானத்திலே 50 சதவிகிதத்தை நாம் வைத்துக் கொண்டு மீதி இருக்கிற 50 சதவிகிதத்தை மத்திய சர்க்காருக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் சில பேர்கள் பேசுகிற போது '75 percent for States 25 percent for the Centre.'' என்று குறிப்பிட்டார்கள். இது உட்கார்ந்து கொண்டு வாதிக்க வேண்டிய ஒன்று. மறக்காமல் பிரதம அமைச்சர் அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் சொல்வது. இப்பொது இந்தப் பிரச்சினை—உறங்கிக் கிடந்த பிரச்சினை—உயிருள்ள பிரச்சினையாக உலவ ஆரம்பித்தாயிற்று. அதற்கு முன்னால் அவர்கள் கண்ணடைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அவரது கட்சியிலே கூட இதிலே பல்வேறு அபிப்பிராயங்கள் இருக்கின்றன.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் என்ன எழுதியிருக்கிறது என்பதைப் பற்றி அருமை நண்பர் சாதிக்பாட்சா அவர்கள் பேசும்போது தெளிவாகச் சொன்னார். சந்திரசேகர் சொல்வார்—"There is no need for any national dialogue for Centre, State relations" இது டெல்லி.

பெங்களூரிலே "I have no objection to have discussion with the leaders of the opposition" இது பெங்களூர். அங்கே பேசுகிறபோது. பெருமதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகின்ற நேரத்தில் பேசிய பேச்சுக்கள் என்னுடைய காதுகளில் ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கின்றன. அவர் தெரிவித்தார், மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

"Of course I want a strong Centre But if the States are weak the Centre can never be Strong".
என்ற கருத்தைத் தெரிவித்தார். பெருமதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் அதிலே இருந்து வழுவக்கூடாது என்று கேட்டுக் கொள்ளும் உரிமை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல இன்னொன்றையும் தெரிவித்துகொள்கிறேன். எங்களது அரசின் சார்பாக முதலமைச்சரின் சார்பாக நான் மெத்த மகிழ்ச்சியோடும், உரிமையோடும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காருடைய காவல் துறையினரை இங்கே அனுமதிப்பதற்கு இல்லை—இந்த அரசு அனுமதிக்காது என்பதை மிகத் திட்டவட்டமாக தெரிவிக்க விரும்புகிறேன். (அரவாரம்).

இந்தப் பிரச்சினை பல நேரத்திலும் பேசப்பட்டது. இந்தப் பிரச்சினை குறித்து அங்கே இருக்கிற அமைச்சரிடத்திலே விவாதிக்கிறபோது "நீங்களே உங்களுக்கு என்று தனி போலீஸ் ஏன் வைத்திருக்கிறீர்கள்" என்று நான் கேட்டபோது, அவர்கள் சொன்ன விளக்கம் எனக்கு சரியானதாகப் படவில்லை. நான் 42-வது அரசியல் சட்டத்தைப் பற்றி விவாதிக்கின்ற நேரத்திலே சொன்னேன், எதற்கென்று உங்களுக்கு ஒரு தனி போலீஸ் என்று. அதற்கு கோகலே, சட்ட அமைச்சர், சொன்னார், அவருக்கு அவ்வளவாக அரசியல் வராது, நீதிபதியாக இருந்தவர், ஆகவே மற்றவர்கள் அவரைப்பற்றி மற்றவர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்தத் தேசிய நீரோட்டத்தோடு தொடர்பில்லை என்ற காரணத்தாலே அவர் சொன்னார், "நாங்கள் ஏன் இந்தப் போலீசை வைத்திருக்கிறோம் என்றால், எங்களுடைய சென்ட்ரல் கவர்ன்மென்டு சொத்துக்களாகிய, போஸ்ட் ஆபீஸ் இருக்கிறது, ரயில்வே இருக்கிறது, இன்டீக்ரல் கோச் பேக்டரி நிறுவனம் இருக்கிறது, "பெல்" நிறுவனம் இருக்கிறது ஆக இந்த மத்திய சர்க்காருக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அதைக் காப்பாற்றுவதற்கு ஒரு போலீஸ் தேவையில்லையா" என்று கேட்டார்.

நான் சொன்னேன். தயவு செய்து பிரித்துப் பேசாதீர்கள். நீங்கள் சொல்கிற அத்தனைக் கட்டடங்களும் எங்களுடைய மாநிலத்தில்தான் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களுக்கு இழப்பு என்றால் எங்களுக்குத்தான் நஷ்டம், உங்களுக்கு அல்ல என்று சொன்னேன். அவைகளைக் காப்பாற்றுகிற பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது என்கிற உணர்வோடு நான் பேசுகிறேன், தயவு செய்து பிரித்துப் பேசாதீர்கள் என்று அவர்களுக்கு நான் சொன்னேன். அந்த உணர்வோடுதான் இப்போதும் நான் சொல்கிறேன், அந்தப் போலீசை அனுமதிக்க நாங்கள் தயாராக இல்லை.





திரு. ரா. உமாநாத் : அப்படியானால் சென்னையில் ரிசர்வ் போலீஸ் இருக்கிறது. அப்படிப்பட்ட டிஸ்பியூட் வந்தபோது பாடியில் ஏன் அந்த ரிசர்வ் போலீசை அனுமதித்தீர்கள்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நீங்கள் அனுமதித்ததைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நான் நடக்கப் போவதை சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : எங்கள் கொள்கை, நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்வதினால் நான் கேட்கிறேன். அப்படியானால் முன்னே அனுமதித்தது தவறு, இனிமேல் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறீர்களா ?

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் உமாநாத் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்ல நான் கடமைப்பட்டு இருப்பதால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாநில அரசுக்கு தேவைக்கு அதிகமாக போலீஸ் பாதுகாப்பு, காவல்துறை ஆட்கள் தேவை என்கிறபோது மத்திய அரசைக் கேட்டுப் பெறுவது என்பது வழக்கம். அந்த முறையில் தேவைக்கு அது பயன்படுத்தப்பட்டது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் விரைவாக முடிக்க விரும்புகிறேன். சில பிரச்னைகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்றைக்கு வைத்தார்கள். அதற்கும் பட்ஜெட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், நான் சொல்ல வேண்டாம் என்று தான் நினைத்தேன், என்றாலும் சொல்கிற அளவிற்கு என்னை ஆக்கி விட்டார்கள், ஆகவே நான் அதைச் சொல்ல வேண்டிய அவசியம் வந்து இருக்கிறது என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இதிலே மிக முக்கியமாக ஒன்றைச் சொன்னார்கள். கோபியில் வெள்ள நிவாரண நிதிக்கான வசூல் ரசீது போலியாக கோபி பிரஸ்ஸில் அடிக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த ரசீதில், தமிழக அரசு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என்று அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சீட்டு அனுமதிச் சீட்டு என்று போட்டிருக்கிறது, அதிலே எண்களே கிடையாது, கையெழுத்தும் கிடையாது, நன்கொடை ரூ. 10 என்று போட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே ஒருவேளை ஊழல் நடைபெற்று இருக்கக்கூடுமா, கூடாதா, விசாரிக்க வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டார். நான் எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ரசீது இருக்கட்டும். நான் பிறகு பார்த்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்ததை பற்றி கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைக்

கேட்டதில், கோவை மாவட்டத்தில் விற்கப்பட்ட டிக்கெட், கோவை கூட்டுறவு அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு, டிக்கெட்டுகள் அத்தனைக்கும் நெம்பர் உண்டு என்றும், ஒவ்வொரு டிக்கெட்டிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கையெழுத்து போடப்பட்டு இருக்கிறது என்றும் குறிப்பிட்டு இருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளபடி கையெழுத்து இல்லாத, நெம்பர் இல்லாத ரசீது பற்றி விசாரணை நடத்துவதாக அவர் தனது கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்.

நான் கேட்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் வருத்தப்படக் கூடாது. அதோ அங்கே இருக்கிற லத்தீப், அதற்கு அப்பால் அங்கேயிருக்கும் அழகர்சாமி, அதற்கு அப்பாலே இருக்கும் ஜேம்ஸ், இதோ உட்கார்ந்து இருக்கிறாரே என் அருமை நண்பர் உமாநாத், இங்கேயிருக்கிற மாரிமுத்து, இவர்களுக்கு எல்லாம் கிடைக்காத அந்த ரசீது, அந்தக் கள்ள ரசீது எப்படி எதிர்க் கட்சித் தலைவருக்கு மட்டும் கிடைக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்வதற்காக நான் சொன்னேனே தவிர வேறு அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, இப்படிப்பட்ட புகார்கள் எதிர்க்கட்சியிலேஉள்ளவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. நேற்றைய தினம் நம்முடைய ஜேம்ஸ் அவர்கள் காரைக்குடி சம்பவத்தைப் பற்றி இங்கே பிரச்னை எழுப்பினார்கள். அதே சம்பவத்தைப் பற்றி எனக்குக்கூட 'தந்தி வந்தது. யார் யாருக்கு எப்படி வாய்ப்பு கிடைக்கிறதோ அந்த நேரத்தில் அதை எழுப்புகிறார்கள். எனக்கு அனுப்பப்பட்ட அந்த டிக்கெட் என்னிடத்தில் இருக்கிறது. விரும்பினால் அதைத் தங்களிடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறேன். கோபி பிரஸ், கோவை, அங்கு அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. தமிழக அரசின் முதலமைச்சர் பொதுநிவாரண நிதி, நாள் 13—2—1978. காலம் மாலை 6 மணி. நடக்கும் இடம் வ.உ.சி. மைதானம். அனுமதி ஒருவர் மட்டும், நன்கொடை ரூ. 10 என்று குறிப்பிட்டு, தமிழக முன்னணி நட்சத்திரங்கள் பங்கு பெறுகிறார்கள் என்று அந்த டிக்கெட்டில் போடப்பட்டு இருக்கிறது. இன்னொரு டிக்கெட், அவர் பெயரை அடித்துவிட்டு . அனுப்பியிருக்கிறார்—பயந்து கொண்டு—டிக்கெட் வாங்கியவர். சேலத்தில் அச்சடிக்கப்பட்ட டிக்கெட் அது. மகாத்மா காந்தி திடலில் நடக்கும் என்று போட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் என்று அச்சடிக்கப்பட்டுள்ளது. ஆனால் கையெழுத்து இல்லை. அந்த இரண்டு டிக்கெட்டும் என்னிடத்திலே இருக்கிறது. விசாரிப்பதாக இருந்தால் தருகிறேன். (அந்த இரண்டு டிக்கெட்டுகளும், நிதியமைச்சரிடம் அளிக்கப் ..டு, பின்னர் அது முதலமைச்சரிடம் அளிக்கப்பட்டது.)



<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> இது கோவையிலே நடந்தது என்று குறிப்பிட்டார்கள். கோவையைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. (சிரிப்பு) அது இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆனால் ஒரு பொது உண்மையை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். டாலர்கள் கூட அச்சடிக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. கள்ள நோட்டுகள் அச்சடிக்கப்படுகின்றன. கள்ள டிக்கெட்டுகள் அச்சடிக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் மறந்து விடவில்லை. எடுத்துக் காட்டியதற்காக நன்றி தெரிவிக்கிறேன். ஆகவே, ஊழல், ஊழல் என்று ஏன் சொல்கிறீர்கள். இதில் ஊழல் நடந்து இருக்கிறதா இல்லையா என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> கோவையைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். விளக்கம் தந்தால் பரவாயில்லை.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> அந்தக் கோவையில் பெரிய பெரிய தொழில்கள் அடிக்கடி நடக்கும் என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறு எந்த நோக்கத்தையும், காரணத்தையும் கற்பிக்கச் சொல்லவில்லை என்பதை திரு. லத்தீப் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> கள்ள நோட்டு அச்சடிப்பதைச் சொல்லி கோவையைச் சொன்னீர்கள்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> கள்ள நோட்டு அச்சடிப்பது இந்தியா முழுவதும் இருக்கிறது என்று சொன்னேன்.

அதற்குப் பிறகு இன்னொன்றை மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே வைத்தார்கள். அதாவது, ராகவானந்தம் நகர் என்ற ஒரு நகரில், அங்கு தொழிலமைச்சர் சென்றபோது (குறுக்கீடு—தொழிலாளர் நல அமைச்சர்) தொழிலாளர் அமைச்சர் (குறுக்கீடு) தொழிலாளர் நல அமைச்சர் சென்றபோது, அங்கே இருக்கிற குறைகளைக் கேட்டுவிட்டு, " இங்கே தண்ணீர் இல்லையா, உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப்படும் " என்று கூறியதாகவும், அவருடைய உத்தரவின் பேரில் உடனடியாகத் தண்ணீர்வசதி செய்து கொடுக்கப்பட்டதாகவும் கூறினார்கள். அதற்குக் காரணம் என்ன என்று கேட்டபோது, ரொம்ப ஜாக்கிரதையாகவும், தந்திரமாகவும் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நகருக்கு ராகவானந்தம் நகர் என்று பெயர் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அதைச் சொல்லிவிட்டுச் சொன்னார்கள், மற்றவர்கள் பெயர்களை எல்லாம் எடுத்துவிடவேண்டுமென்று உத்தரவிட்டு விட்டு, ராகவானந்தம் நகர் ன்று பெயர் வைக்கலாமா என்று கேட்டார்கள்.

நான் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், நம் கண்ணெதிரிலேயே கருணாநிதி நகர் இருக்கிறது, இந்திரா நகர் இருக்கிறது, காந்தி நகர் இருக்கிறது என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால் அங்கு என்ன நடந்தது என்பதையும் தெரிவிக்கிறேன். அமைச்சர் ராகவானந்தம் அவர்கள் ஈரோடுக்குச் சென்றபோது, அந்த ஊர்மக்கள் ஆலம்பாளையத்தில் விண்ணப்பம் தந்திருக்கிறார்கள், ராகவானந்தம் அவர்கள் எந்தக் காரியத்தையும் சுறுசுறுப்பாகச் செய்யக் கூடியவர் என்று இந்த அமைச்சரவையிலே பெயரெடுத்தவர்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன். அந்த சுறுசுறுப்பின் காரணமாக, அங்கேயே இருந்துகொண்டு அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின்மீது அக்கறை செலுத்தி, குடிதண்ணீர் வழங்க உத்தரவு போட ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அது நடந்திருக்கிறது அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அந்தப் பஞ்சாயத்துப் பகுதி மக்கள் அவருக்கு தெரியாமல் ராகவானந்தம் நகர் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மக்களாகப் பார்த்து அந்தப் பெயரை போடுகிறபோது அவர் பெயரை போட்டதால்தான் உடனடியாகத் தண்ணீர் வழங்கப்பட்டது என்று சொல்வது சரியல்ல.

திரு. மு. கருணாநிதி : நான் கூறியதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அதற்கு ஆதாரமாக கடிதங்கள் இருக்கின்றன. அதை உங்களை நம்பி தரத்தயாராக இருக்கிறேன். நீங்கள் அதை மாற்ற மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில், இந்த மாமன்றத்தின் முன் தங்களிடம் தருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எதிர்கட்சித் தலைவரவர்களுக்கு சந்தேகம் இருந்தால் 'போட்டோஸ்டெட் காபி' கொடுத்தால் போதும்.

திரு. மு. கருணாநிதி : கடிதத்தைப் படிக்கிறேன். படித்துவிட்டு தந்து விடுகிறேன். கடிதத்தை அசிஸ்டன்ட் எஞ்சினீயர் எழுதியிருக்கிறார்.



From
K. T. Vaidyalingam,
Assistant Executive Engineer,
TWAD Board/RWS/SUB-DIVISION
Tiruchengode.

To
The Commissioner,
Pallipalayam

Sir,

*Subject* :Honourable Minister for Labour—Inspection of Tiruchengode Salem II and Mettur Constituencies on 16th and 17th December, 1977—Instruction issued to provide water supply for the newly formed colony 'Raghavananda Nagar' in Alampalayam Panchayat.

Ref : Letter No. 12149/78 dated 25—1—1978.

In continuation of this office letter cited I request you to provide water for the newly formed colony (Raghavananda Nagar) in Alampalayam Town Panchayat. ஆக உத்தரவு போட்டது ராகவானந்தம் காலனிக்கு என்று தான் இருக்கிறது, அவர்கள் போட்டோ ஸ்டெட் காப்பி கொடுத்தால் போதும் என்றார்கள், நான் அந்த கடிதத்தையே முதலமைச்சரிடம் ஒப்படைக்கிறேன்,

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இதை அசிஸ்டன்ட் என்ஜினியர் போட்டதாகச் சொல்கிறார்கள். ராகவானந்தம் இல்லை.........

திரு. மு. கருணாநிதி : கடிதம் தெளிவாக இருக்கிறது. இதைப் படிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எத்தனை முறை படிப்பது.

திரு. மு. கருணாநிதி ; நீங்கள் முதலமைச்சர் எழுந்தாலும் உட்கார மாட்டேன் என்கிறீர்கள். இதைப் படித்துவிட்டு உங்களிடமே தந்துவிடுகிறேன்.

"Honourable Minister for Labour—Inspection of Tiruchengode, Salem II and Mettur Constituencies on 16th and 17th December, 1977 Instructions issued"

To provide Water supply to Raghavanandam Colony என்று போட்டு, அவர்கள் வந்ததன் தொடர்பாக, இந்த இன்ஸ்ட்ரக்ஷன் தரப்படுகிறது என்று சொல்லி, ராகவானந்தம் காலனிக்கு வாட்டர் சப்ளை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (கடிதத்தை நிதியமைச்சரிடம் கொடுத்தார்).

(நண்பகல் மணி 12-00).

நான் ஆரம்பத்தில் கூட சொன்னேன். இராகாவானந்தம் அவர்களுக்கு தனது பேரில் ஊர் இருக்கவேண்டுமென்றோ, தெரு இருக்கவேண்டுமென்றோ எந்தவிதமான அரிப்பும் அவர்களுக்கு இல்லை. அப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்தவர்கள் அவர்கள். அவர்கள்பால் ஆசைப்பட்டு அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்த மக்கள் அந்தப் பெயரைப் போட்டிருக்கிறார்கள். அப்படி போட்டதை யொட்டி இங்கே இருப்பவர்கள் அப்படி போட்டிருக்கக்கூடும். அது ஒரு பெரிய க்ரைம் என்று கருத என்ன இடம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதை ஒரு பெரிய பிரச்னையாக தூக்கிக்கொண்டு மற்றவர்களை விட்டு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேச வைத்திருக்கலாம், தானாக இந்த வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டுமா என்று நான் கொஞ்சம் யோசித்துப் பார்க்கிறேன். அதற்காக நான் மெத்தவும் வருத்தப்படுகிறேன். ஏனென்றால் நான் அவரை உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கிறேன்.

அதற்குப் பிறகு இன்னொன்றும் சொன்னார்கள். ரொம்ப வேதனையோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு அமைச்சரின் தாயார் ரேஸ் நடக்கிற இடத்திற்கு அரசாங்கவாகனத்தைப் பயன்படுத்தி போகிறார்கள், படம் இதோ இருக்கிறது. என்றார்கள். அதை ரொம்ப அருமையான முறையில் அவர் அதை ஜோடித்துப் பேசியது கண்டு அவரது பழங்கால அந்த வர்ணனைகளுக்கு நான் சென்றேன். "காரிலிருந்து இறங்குகிறார், படம் இதோ! கையைப் பிடித்து அழைத்து வருகிறார்கள், படம் இதோ அதோ டிக்கட் வாங்கச் செல்கிறார், படம் இதோ!. டிக்கட் வாங்கி கையில் கொடுக்கிறார்கள் படம் இதோ!" என்று சொல்லி சில படங்களைத் தூக்கிப் போட்டார்கள். நான் அப்போதே கேட்டேன், நீங்கள் பல வேலைகளில் இந்த வேலையையும் வைத்திருக்கிறீர்களா என்று. அப்போது அவர்கள் சொன்னார்கள், இதுதான் எங்கள் வேலையாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபனை யில்லை.

ஆனால் நான் கேட்டுக்கொள்வது, ஒரு அமைச்சரின் தாய் அமைச்சரின் காரைப் பயன்படுத்துவது தவறு என்று நீங்கள் கருதுகிறீர்களா? பயன்படுத்தக்கூடாது என்பதற்கான விதி இருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா? அந்த அமைச்சரின் தாய் அந்த இடத்திற்குச் செல்லக்கூடாது என்று ஏதாவது சட்டமிருக்கிறதா? போனால் என்ன தவறு என்று நீங்கள் கருதுகிறீர்கள்? நீங்கள் அந்தக் காரியங்களைச் செய்யவேயில்லை என்று மனதில் கைவைத்து சொல்லமுடியுமா என்று நான் கேட்கிறேன். எவ்வளவோ அமைச்சர்கள் தங்கள் துணைவிமார்களை



அழைத்துக்கொண்டு பலயிடங்களுக்குச் சென்றிருப்பதை நான் பார்த்திருக்கிறேன், அதில் தவறு இல்லை. அப்படிச் செய்வது தவறு என்று நோக்கம் கற்பிக்கிற முறையில் நேற்றைய தினம் நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசியது எனது உள்ளத்தை பெரிதும் புண்படுத்திற்று என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உண்மையில் சொல்கிறேன். நேற்று அந்தப் பேச்சைக் கேட்ட பிறகு, அவர்கள், அந்த அமைச்சர் அழுதுகொண்டே, இன்றைக்கு அவைக்கு வராததற்கு காரணம் அவர்கள் அழுதுகொண்டே இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுவும், ஒரு பெண் அமைச்சரைப்பற்றி இப்படிப்பட்ட ஒரு காரியத்தை இங்கே பழைய முதல் அமைச்சரும் இன்றைய எதிர்கட்சித் தலைவருமாக இருக்கிற அவர்கள் பேசியிருப்பது அவ்வளவு உசிதமான காரியமா என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

<u>திரு. மு. கருணாநிதி :</u> அமைச்சர் அவர்களின் தாயார் சென்றது அமைச்சரின் கார் அல்ல, சோஷியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட் கார் என்று சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> நான் அரசாங்கக் காரில் என்றுதான் சொல்கிறேன். அதில் என்ன தப்பு? மற்றவர்கள் போகவில்லையா? நீங்கள் போகவில்லையா? உங்கள் இதயத்தில் கை வைத்து சொல்லுங்கள் பார்க்கலாம். எவ்வளவோ இடங்களில் அரசாங்கக் கார்களில் நானே பார்த்திருக்கிறேன், நீங்கள் அமைச்சர்களாக இருந்தபோது. அந்த இடங்களையெல்லாம் நான் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. நாகரீகத்தோடு பேச வேண்டுமென்று நான் நினைக்கிறேன். (ஆரவாரம்).

ஆகவே, நான் அருமை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாக, திட்டவட்டமாக தெரிவித்த கருத்தை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து தன்னை வளர்த்துக்கொள்வதற்கு எந்த அமைச்சராவது முயற்சிப்பாரேயானால் 24 மணி நேரத்திற்குள்ளாக அவர்கள் இந்த அமைச்சரவையில் இருக்கமாட்டார் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவாகள் சொன்னதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

நான் பணிவோடு உங்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து இப்படிப்பட்ட காரியங்களில் நாம் ஈடுபடாமலிருப்போம். நல்ல உறவுகளை வளர்ப்போம். நமது பழைய முதல் அமைச்சர் அவர்கள் வசனத்தில் சொன்னால் 'நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், நடப்பவைகள்

நல்லவையாக அமையட்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டு இன்று இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த பட்ஜெட்டில் எல்லாம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் 'இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர்' உருவாகியிருக்கிறது. அடிப்படை தளம் பலமாக இருக்கிறது, நிச்சயமாக ஐந்தாண்டுகளுக்குள்ளாக ஒரு தன்னிறைவை பெற்ற மாநிலமாக நம் மாநிலம் ஆக இந்த பட்ஜட் உருவாக்கிக் காட்டும் என்ற உறுதியை இந்தச் சபையில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அருமை நண்பர் சண்முகம் அவர்கள் இப்படி ஏன் பேசினார்கள் என்று தெரியவில்லை. ஏன் இப்படி அதிகாரிகள் மனோகரனை குழப்புகிறார்கள் என்று கேட்டார். தயவு செய்து இப்படியெல்லாம் சொல்லாதீர்கள். அதிகாரிகள் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் முன்பு உங்களை குழப்பிய அதிகாரிகள் என்று எடுத்துக் கொள்வது? அல்லது உங்களை மட்டும் தெளிவாக்கிவிட்டு எங்களை மட்டும் அதிகாரிகள் குழப்பிக்கொண்டிருக்கிறார்களா? அப்படியென்ன, அதிகாரிகள் எங்களை குழப்புகிற அளவுக்கு நாங்கள் குழம்பியா இருக்கிறோம். அதிகாரிகள் சொல்லியதைக் கேட்டு நான் குழம்பியா விடுவேன், தயவு செய்து இனிமேலாவது, இப்படி அதிகாரிகளைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ, எதிர்கட்சியிலுள்ளவர்களாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியிலுள்ளவர்களாக இருந்தாலும் சரி; புண்படுத்தாமல் இருக்க வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக்கொண்டு, எல்லோரும் சேர்ந்து தமிழகத்தை காப்பாற்றி, நல்ல முறையில் வாழ வைக்கிற முயற்சியில், அதற்கேற்ற வகையில் பொருளாதாரத்தில் நிற்கின்ற வகையில் தமிழகத்தை உருவாக்குவதற்கு உங்களது உதவிகளை எல்லாம் நாடி, நான் அமருகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சில கேள்விகளை கேட்டு இதற்கு முதலமைச்சர் பதில் சொல்லுவாரா என்று கேட்டுவிட்டு இங்கு அமர்ந்திருக்கின்ற காரணத்தினால் நான் பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

மாநில சுயாட்சி என்றும் மக்கள் சுயாட்சி என்றும் சொல்லப்பட்டதைப்பற்றி நான் என்னுடைய தெளிவான எண்ணத்தை சொல்ல விரும்புகிறேன். மாநில சுயாட்சி என்பதற்கு ஒரு மாநிலத்தை ஆளுகின்ற அரசுக்கு என்னென்ன அதிகாரங்கள் தேவை என்பதை அடிப்படையாகக்கொண்டு மாநில சுயாட்சி என்று கேட்கப்பட்டது என்பதை எல்லோரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு இதில் என்னென்ன அதிகாரங்கள் இருக்கவேண்டும் மாநில அரசுக்கு என்னென்ன அதிகா



ரங்கள் இருக்கவேண்டும் என்பதில் அடிப்படையில் மாநில சுயாட்சியைப்பற்றி கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன என்றும் நான் கருதுகிறேன். குறுக்கீடு ஆமாம் என்று ஒப்புக்கொள்ளுவதற்கு நன்றி. நான் மக்கள் ஆட்சி என்பதை எந்த நேரத்தில் எப்போது பயன்படுத்தினேன் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து ஆண்டு காலமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்த துன்பங்களை எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் பெரும்பான்மையாக ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு எதிர்க்கட்சிகளை எந்த விதத்திலும் பழி வாங்கிக் கொள்ளலாம் என்கின்ற சூழ்நிலை இருக்கின்ற நேரத்தில் அப்போது எதிர்க்கட்சிகள் படுகின்ற வேதனைகளுக்குட்பட்டு அதே நேரத்தில் மக்களின் நம்பிக்கையை ஆளுகின்ற கட்சி இழந்து விட்ட பிறகு மக்களே மக்களுடைய நம்பிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு அவர்களுடைய கருத்தை வெளியிடுகின்ற நேரத்தில் அமரர் அண்ணா அவர்கள் சொன்னதற்கு இணங்க, ஆட்சியில் இருக்கின்ற கட்சியை திரும்ப அழைக்கின்ற உரிமையிருப்பது தான் மக்கள் சுயாட்சி என்றும், மக்களின் சுயாட்சி எண்ணத்தை நிறைவேற்றுகின்ற அளவுக்கு அந்த உரிமை மக்களுக்கு வேண்டும் என்கின்ற வகையில் நான் அப்போது சொன்னதை இப்போதும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

பஞ்சாயத்து போர்டாக இருந்தாலும் சரி. நகர மன்றங்களாக இருந்தாலும் சரி, யூனியன்களாக இருந்தாலும் சரி, மாநகராட்சி மன்றங்களாக இருந்தாலும் சரி, அல்லது மாநிலத்தை ஆளுகின்ற ஆட்சியானாலும் சரி, அவர்களை திரும்ப அழைக்கின்ற உரிமை மக்களுக்கு இருந்தாக வேண்டும், அவர்களை தட்டிக்கேட்பதற்கு, மக்களுக்கு உரிமை இருந்தாக வேண்டும் இந்த எண்ணம் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்ற அடிப்படையைப் பார்த்தால், நாங்கள் பட்ட வேதனைகள், கொலை செய்யப்பட்ட நிலைமைகள், மாணவன் பாலசுந்தரம் போன்றவர்கள் விடுதியில் துரத்தி துரத்திக் கொல்லப்பட்ட நிலைமைகள்—இவைகளை எல்லாம் நான் சொல்லவிரும்பவில்லை—சொல்ல தேவையும் இல்லை—இப்படிப்பட்ட வேதனைகளை தாங்கிக் கொள்ள முடியாத நிலைமையில், ஒரு ஆட்சி, பெரும்பான்மையை வைத்துக் கொண்டு ஆட்சிக்கு வந்திருக்கும் கட்சியை மாற்றுவதற்கு எத்தகைய உரிமையும் எதிர்க்கட்சிகளுக்கு இல்லாத நிலைமையில் அவைகள் அழிக்கப்பட்டுவிடும் என்ற நிலைமையில் இல்லாமல் மக்களுடைய எண்ணத்தை வெளியிடுகின்ற அளவுக்கு மாநிலத்தின் அதிகாரங்கள் அதிகப்படுத்தப்பட்டாலும் மாநில சுயாட்சி என்கின்ற அளவில் அதிகாரங்கள் அமைந்து

ஆட்சி அமைக்கப்பட்டாலும் ஆட்சியில் இருக்கின்றவர்களை மக்கள் விரும்புகின்ற நேரத்தில் திரும்ப அழைக்கின்ற உரிமை பெற்று மக்கள் தங்களுக்கு விருப்பமான ஆட்சியை அமைத்துக்கொள்ளுவதற்கான உரிமையை பெற்றுக்கொள்வது என்பது தான் மக்கள் சுயாட்சி என்பதை குறிப்பிட்டேன் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது அவர்களுக்கு பொருத்தமாக அமையவில்லை என்றால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே நான் எனது நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் பேசி முடித்ததற்குப் பிறகு முக்கியமான இரண்டு அறிவிப்புகளை இப்போது வெளியிட இருக்கிறேன்.

அரசிதழ் பதிவு பெறு ஊழியர்களின் சங்கங்களுடைய பல கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுமையுடன் கேட்டார்கள். இக்கோரிக்கைகளைப் பற்றிய நிர்வாக, நிதிப் பிரச்சினைகளை கவனமாகப் பரிசீலிக்கவேண்டும். இவ்வாறு பரிசீலித்த பிறகு நாம் அரசு ஊழியர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவோம். இதற்கிடையில் ஊழியர்களுக்கு உடனடி பரிகாரம் காணும் முடிவுகளை இப்போதே வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பள்ளிச் சிறுவர்களுக்கும் அலுவலகம் செல்வோர்களுக்கும் கிடைக்கும் பேருந்துப் போக்குவரத்து வசதிகளைக் பெருக்கும் பொருட்டு பள்ளிக்கூட. அரசு அலுவலக வேலை நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. அலுவலர்களுக்கு, குறிப்பாகத் தாய்மார்களுக்கு காலை, 9½ மணிக்கு அலுவலகம் வந்து சேருவது இன்னலை அளிக்கும் ஒன்றாக உள்ளது என்று சொல்லப்படுகிறது. இதை நாம் பரிசீலித்து அலுவலகங்களின் வேலை நேரங்களை மாற்றி அமைக்க ஆவன செய்வோம்.

அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் தாராளமான இலவச மருத்துவ வசதிகள் இப்போது வழங்கப்படுகின்றன. அரசு ஊழியர்களின் வருங்கால வைப்புத் தொகையில் இருந்து குடும்பத்தினருக்கு தொடர்ந்த காய்ச்சல் போன்ற தெளிவற்ற காரணங்களுக்குப் பணம் எடுப்பதை ஓரளவு கட்டுப்படுத்தும் பொருட்டு சமீபத்தில் ஒரு ஆணை பிறப்பித்தோம். ஓய்வு பெறும் காலத்தில் அரசு ஊழியர்கள் கணக்கில் கணிசமான அளவு பணம் இருந்தால் தான் அவர்கள் குடும்பம் காப்பாற்றப்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆயினும் அரசு அலுவலர்களின் கோரிக்கையின் பேரில் இந்த உத்தரவை அமுலாக்குவதை நிறுத்தி





வைத்துள்ளோம். அரசு ஊழியர் கூட்டு மன்றத்தில் (Civil Service Joint Council) இதை விரிவாக விவாதிக்க முடிவு செய்துள்ளோம். அதன் அடிப்படையில் அலுவலர்களுக்கு இன்னல் விளையாத வண்ணமும், அதே நேரத்தில் அவர்களுடைய நீண்ட கால நலனைக் கருத்தில் கொண்டும், அலுவலர்களுடைய ஒப்புதலின் அடிப்படையின் பேரில், தக்க மாற்று ஆணை பிறப்பிக்கப்படும.

இந்த நேரத்தில் மற்றொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதை நண்பர் மாரிமுத்து அவர்களின் தனிக் கவனத்திற்கு வைக்கிறேன். அதே சமயத்தில் சபையின் கவனத்திற்கும் பொதுவாக வைக்கிறேன். சமீபத்தில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் விளைச்சல் 25 சதவீதமும், அதற்கு குறைவாகவும் மதிப்பிட்டிருந்தால், நில வரி, தண்ணீர் மேல் வரி, உள்ளூர் மேல் வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல் வரி, சிறப்பு நன்செய்த் தீர்வை, சிறப்புத் தண்ணீர் மேல்வரி, பணப் பயிர்களுக்கான வரி முதலியவற்றை வருவாய் வாரிய ஆணைகளுக்குட்பட்டு முழுவதும் தள்ளுபடி செய்து ஏற்கனவே அரசு ஆணையிடப்பட்டுள்ளது. (ஆரவாரம்).

மேற்கண்ட சலுகைகளை மேலும் தளர்த்தி, குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்களை மத்திய காலக்கடன்களாக மாற்றுவதற்கு வருவாய்த் துறை அதிகாரி வழங்கும் அணவாரி சான்றிதழ் அடிப்படையில் 6 அணவும் (37 பைசா) அதற்குக் கீழும் விளைச்சல் இருந்தால் மேற்கூறிய வரிவிதிப்புகளை முழுவதும் தள்ளுபடி செய்வதென அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது (ஆரவாரம்) எங்கெங்கு நில வரி தள்ளுபடி செய்யப்படுகிறதோ, அங்கு உள்ளூர் மேல்வரி மீதான மிகு வரியையும் (Local cess charge) அதே அடிப்படையில் தள்ளுபடி செய்ய வேண்டுமென பஞ்சாயத்து ஒன்றியங்களைக் கேட்டுக் கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த அரசின் நல்லெண்ணத்திற்கு இது ஒரு நற்சாட்சிப் பத்திரமாக இருக்கிறது என்பதை மாரிமுத்து அவர்கள் கருதுவார்கள் என்று நம்புகிறேன்

<u>மாண்புமிகு திரு எம் ஜி. இராமச்சந்திரன்</u> : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் கட்சியிலுள்ள பர்கூர் எம்.எல்.ஏ. ஆறுமுகம் அவர்கள் மீது, அவர் கையெழுத்திட்டு, சிபார்சு செய்து, அதை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிபார்சை அந்த அதிகாரி அங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். என்பதைக் குறிப்பிட்டார்கள். நான் விசாரித்ததற்கு ஏற்ப, எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் மக்கள் கொடுத்த

விண்ணப்பத்தில் இவர் கையெழுத்திட்டு அதை அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதையும், இவர் தனிப்பட்ட முறையில் எந்த லாபத்தையும் கருதி அந்த எண்ணத்தில் சிபாரிசு செய்யவில்லை என்பதையும், அதுவும் தவறு என்று நிரூபிக்கப்படுமானால் நான் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்கிறேன். மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிறவர்களிடம் அந்தந்தத் தொகுதியில் இருக்கும் மக்கள் விண்ணப்பங்களைக் கொடுப்பதும், அந்த விண்ணப்பங்களை அடிப்படையாக வைத்து அந்த விண்ணப்பத்திலே கையெழுத்திட்டு அதிகாரிகளுக்கு அனுப்புவதும் தவறு என்று யாரும் சொல்ல மாட்டார்கள், கருத மாட்டார்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்; அவ்வாறு நடைபெற்றிருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை நமது எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் நேற்றைக்குக் கிளப்பினார்கள். பேசும்போது கடுமையான வார்த்தைகளைக் கூட பயன்படுத்தி 'அந்த அர்பன் லாண்ட் சீலிங் ஆக்டை கிழித்தெறியக் கூடத் தயாராக இருக்கிறேன்' என்று குறிப்பிட்டார்கள். நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் தொடர் கூட்டத்திலேயே அர்பன் லாண்ட் சீலிங் பில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> கனம் நிதியமைச்சர் அவர்கள் திரு. ஜோதி பாசு அவர்கள் அனுப்பியிருக்கும் ப்ரொபோசல்ஸ் பொறுத்தவரை இணையவில்லை என்று சொன்னார்கள். மிக நன்றி. ஒரு கான்க்கிரீட் ப்ரொபோசலை அவர்கள் வைத்திருக்கிறார்கள். இதை ஒத்துக் கொண்டவர்கள்தான் அந்தக் கூட்டத்தைக் கூட்டினால் வரவேண்டுமென்ற நிலை கிடையாது. ஒரு நாளில் இதைப் பற்றிய டிபேட், கான்சன்சஸை அறிய ஒரு சீஃப் மினிஸ்டர் கூட்டத்தை கூட்டுகிறார். அதிலே நம்முடைய சீஃப் மினிஸ்டர் கலந்து கொள்வார்களா ? அப்படிப் போவதற்கு முன்னால் சபையில் அதைப் பற்றி டிஸ்கஸ் செய்து சபையின் கருத்தை அறிந்து கொள்ள வழி செய்வார்களா ?





<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> நான் 18, 19ஆம் தேதி டில்லிக்குச் செல்லுகிற நேரத்தில், 20 ஆம் தேதி அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்று வங்காள முதலமைச்சர் அவர்களிடம் இருந்து அழைப்பு வந்திருக்கிற காரணத்தால் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு என்ன பேசப்படுகிறது, என்ன சொல்லப்படுகிறது என்பதைத் தெரிந்து அதற்குப் பிறகு சட்டமன்றத்தில் அதைச் சொல்லி அதற்குப்பிறகு மன்றத்தில் என்ன முடிவு எடுக்கிறோமோ அதை அரசு தங்கள் கொள்கைக்கேற்ப முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட உரையாற்றினார்கள். உறுப்பினர்கள் பல்வேறு குறைபாடுகளை பற்றிக் குறிப்பிட்டார்கள். சில முக்கியமான விஷயங்களைப் பற்றிக் கூட கருத்துத் தெரிவிக்கவில்லை. அதை எல்லாம் பற்றி எப்போது சொல்லப் போகிறார்கள் அல்லது பேசப் போகிறார்கள் ? நாங்கள் எப்போது தெரிந்து கொள்வது?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உறுப்பினர்கள் சொல்கின்ற ஒவ்வொரு குறைப்பாட்டுக்கும் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல வேண்டுமென்றால் நேரமும் இல்லை. நினைவும் இருக்காது. அந்தந்த மானியக் கோரிக்கை விவாதங்களின்போது விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

<u>திரு. எம் ஏ. லத்தீப் :</u> தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சனை, மொழிப் பிரச்சனை குறித்து மத்திய மாநில அரசுகளுக்கிடையே நடைபெறுகிற கடிதப் போக்குவரத்து குறித்த விவரத்தைக் கேட்டதற்கு மேலவையில், ஒரு கடிதம் வந்திருப்பதாகவும், அந்தக் கடிதத்தின் விவரங்களை வெளியிடுவது பொது நன்மைக்கு உகந்ததாக இருக்காது என்ற கருத்து, சொல்லப்பட்டிருப்பதால் பல்வேறு விதமான ஐயப்பாடுகள் தமிழக மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. ஆக, தமிழக அரசினுடைய நிலைமை என்ன என்பதைத் தயவுசெய்து விளக்கிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எவ்வளவோ குற்றச் சாட்டுக்களைச் சொல்லுவார்கள். சொல்லுவது உரிமை, கடமை. அதற்காக ஒரு அமைச்சர் சபைக்கு வரவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டு உண்மையா இல்லையா என்பது வேறு. அதனால் அமைச்சர் அவர்கள் சபைக்கு வராமல் இருப்பது வருத்தமாக இருக்கிறது. ஆகவே அவர்கள் சபைக்கு வரவேண்டும், சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் பிரச்சனையைப் பற்றி எங்களுடைய கருத்து என்ன என்பது தமிழகம் முழுவதும் மட்டுமல்ல ; இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் தெரியும் என்பதைத் தெளிவுபடச் சொல்லியிருக்கிறேன்.

[பிற்பகல் 12—20]

நேற்றைய தினமோ முந்தைய தினமோ முன்னவர் அவர்கள் இதைப்பற்றி வெளியிட்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இரு மொழிதான் என்பதை நான் சொல்லும்பொழுது எல்லோரும் அதை முழு மனதோடு ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. (ஆரவாரம்)

அதோடு இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். எப்படி அந்தக் கடிதம் வந்தது என்பதைப் பற்றியும் எதற்காக அந்தக் கடிதம் வந்தது என்பதைப் பற்றியும், மொழிப் பிரச்சனை பற்றியதா என்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று கருதுகிறேன். மொழியைப் பற்றி என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதல்ல கேள்வி. என் நினைவு சரியாக இருக்குமானால் பிரதம அமைச்சரிடமிருந்து முதலமைச்சருக்கு என்ன கடிதம் வந்திருக்கிறது. என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கக் கூடும் மொழிப் பிரச்சனைப்பற்றி பிரதம அமைச்சரிடமிருந்து முதலமைச்சருக்கு எந்தக் கடிதமும் வரவில்லை, எங்களைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு எந்த வகையிலும் வரவில்லை.

பொதுவாக கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் அவரவர்கள் எண்ணங்கள் நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்ற அளவிலே எழுதப்படுகிற கடிதமாக இருக்கலாம், இந்த அரசைப் பொறுத்தவரையில் எங்களைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு வரவில்லை என்பதையும் நாங்கள் ஆங்கிலத்திலேதான் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சர் அவர்கள் சபைக்கு வருவதைப் பற்றிக் கேட்டேன்........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பி. டி. எஸ். அவர்கள் இங்கே வரவில்லை என்பதைப் பற்றியும், வரவேண்டும் என்பதைப் பற்றியும் அவர்கள் சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒரு கொள்கையை வைத்துக் கொள்ள விரும்புகிறோம். ஒவ்வொருவரும் மிகுந்த எச்சரிக்கையோடு பொது வாழ்க்கையில்



இருக்கவேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். நாங்கள் மற்றவர்கள் மீது சொன்ன குற்றத்தை நாங்கள் செய்வதோ எங்கள் வீட்டார் செய்வதோ நல்லதல்ல என்பது எங்களுடைய கருத்து. திரு. லத்தீப் அவர்களுடைய எண்ணத்தை நான் இப்போது புரிந்து கொள்கின்ற வகையில் பி. டி. எஸ். அவர்களுடைய பதில் என்ன கிடைக்கிறது என்பதை அறிந்து அந்தக் குற்றத்திற்கு யார் பொறுப்பு என்பதைத் தெரிந்துகொள்ள இருக்கிறேன். அதற்குப் பிறகு அவர்கள் நிச்சயமாக இங்கே கலந்து கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளை—சட்டமன்றமாக இருக்கலாம், ஊராட்சியாக இருக்கலாம்—திரும்பப்பெறவேண்டுமென்ற உரிமை வேண்டும், அதுதான் தான் கூறிய மக்கள் சுயாட்சி என்று விளக்கம் தந்தார்கள். அது தனிப்பட்டவர்களுடைய கருத்தாக இல்லாமல் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகவே ஒரு தீர்மானத்தை—ஏனென்றால் அதற்கு அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்; அந்த முறையிலே இங்கே தீர்மானம் கொண்டுவந்து—நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அப்படி விரும்பினால் இந்த அரசுக்கு அதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பெருவாரியான உறுப்பினர்களுக்கு விருப்பம்தான். ஆகவே சில பேர்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. துரை முத்துசாமி : சார், முக்கியமான விஷயம்....

திரு. என். வரதராஜன் : சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள், அப்ரோப்ரியேஷன் பில் வருகிறபோது கேள்விகள் கேட்கலாம். ஓரளவுக்கு விட்டுக் கொடுத்தாகிவிட்டது. அடுத்து, 1978–79 ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, எனக்கும் வாய்ப்பு கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். எதற்கெடுத்தாலும் நானும் பேசுவேன் என்று சொன்னால், துரை முத்துசாமிக்காக மட்டும் அவை இல்லை, 234 உறுப்பினர்களுக்காகவும் இருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : ஒவ்வொருவருக்கும் மூன்று தடவைகள் சந்தர்ப்பம் கொடுக்கிறீர்கள், அதுபோல் எனக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கொடுக்கவில்லையென்றால், அறையிலே வந்து சேருங்கள். இங்கே, உட்காருங்கள் என்று சொன்னால் உட்கார்ந்துதான் ஆகவேண்டும்.

## (6) அறிவிப்பு

## பேரவையில் மானியக் கோரிக்கைகளை முன்மொழிய பரிந்துரை அளித்து ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1978—79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1978-79."

Notice of Demands for Grants has already been circulated to the Members.

## 7. 1978—79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

## கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,75,69,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு ஒதுக்கப்பெற வேண்டும்."



திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைக் குறைத்து, கல்வியின் தரத்தை உயர்த்தத் தவறியதைச் சுட்டிக்காட்டி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,75,69,28,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ.வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்களுக்கு நிர்ணயித்த சம்பள விகிதம் கொடுப்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,75,69,28,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி:—தலைவரவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவர்களிடமிருந்து மிக அதிகமான படிப்புக் கட்டணங்களையும், இதர பல கட்டணங்களையும் நிருவாகிகள் வசூலித்து வருவதைக் குறைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்காதது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,75,69,28,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. ARUMUGAM : Sir, to discuss the need to post both husband and wife employed in the teaching profession at the same place and to avoid separating them, I move the following cut motion:—

"That the allotment of Rs 1,75,69,28,000 under Demand No. 17-Education be reduced by Rs. 100".

திரு. செ. சிவசாமி :—தலைவரவர்களே, கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், மத்தியதரப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களின் சம்பள உயர்வு பற்றியும், நலன்கள் பற்றியும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,75,69,28,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

கும் கூட அந்தந்த ஊர்ப் பொது மக்கள் ரொக்கமாக ரூ. 25,000 கொடுக்கவேண்டும். இந்த அறக் கட்டளைத் தொகை அல்லது ரொக்கப் பணத்தை 15,000, 5,000, 5,000 என மூன்று தவணைகளில் ஆண்டுக்கு ஒன்றாக மூன்று ஆண்டுகளில் தரலாம் என்று சொல்லியிருக்கிறார். முன்பே, அங்கீகாரம் பெற்றிருக்கிற பள்ளிகளுக்கு இப்படி ஒரு ஆணை அவசியந்தானா என்பதை அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த ஆணையும் கால தாமதத்திற்குக் காரணம் என்று கருதுகிறேன்.

இத்தகைய மேல் உயர்நிலைப் பள்ளிகள் ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் தொடங்கப்பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில், 'சொல்லுதல் யார்க்கும் எளிய' என்ற குறளை நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மேல் உயர்நிலைப் பள்ளிகளில் 11—12 வகுப்புகளில் தமிழே பாட மொழியாக இருக்கும் என்றும் அறிவித்திருக்கிறார்கள், போற்றுகிறேன், புகழ்கிறேன். தமிழே என்பதில் உள்ள 'ஏகாரம்' தேற்ற ஏகாரமாக இருக்கும் என எண்ணினேன். அதே பத்தியில் 'ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயில விரும்புபவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்திப் பயில அனுமதிக்கப்படுவர்' என குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டும் கெட்டான் நிலை கூடாது கூடவே, கூடாது என சொல்லவிரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழில் பயின்றவர்கள் மேல் உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழில் பயிற்றுவிக்கப்படவேண்டும், உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தில் பயின்றவர்கள் மேல் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்படலாம், இப்படி தெளிவாக ஆணை பிறப்பிக்க வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். இரு தரப்பினருக்கும் கற்பிப்புக் கட்டணம் வசூலிக்கத் தேவையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கல்வித் தகுதிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், ஒவ்வொரு பள்ளியிலும் ஏதேனும் ஒரு தொழில் பாடம் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டு, தொழில் பாடம் கற்பிக்கப்போகும் ஆசிரியர்களது கல்வித் தகுதியைப் பற்றிச் சொல்லவில்லை. இதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் 1978—79லிருந்து 11-வது வகுப்பு நீக்கப்படும், இதனால் சுமார் 7 ஆயிரம் பி.டி.பட்டதாரி ஆசிரியர்கள் பாதிக்கப்படலாம். என்றாலும்



எவரும் வேலை இழக்காமல் பார்த்துக் கொள்வோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

10—2—3 ஆண்டுப் படிப்பு 1978-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும். 1979 ஜூனிலே கல்லூரிகளில் இருந்து, புதுமுக வகுப்பு நீக்கப்படும். இதன் காரணமாக கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்காமல் அரசு பார்த்துக் கொள்ளும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்கள் 7 ஆயிரம் பேர்கள் பாதிக்கப்படலாம் என்றாலும் வேலை இழப்பு இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ளும். கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்கு அரசின் மீது ஐயம் வருகிறது. அந்த ஐயத்தை நீக்குகின்ற வகையில், போக்குகின்ற வகையில் ஆணைபிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்கள் நிறைவேற்றப்படும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது: சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் 1—4—1976 முதல் அமுலாகி, 1977 செப்டம்பர் மாதத்தில் ஆணை வெளியிடப்பட்டது. பணிப்பயன் 1—11—1977 முதல் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக, பயிற்றுனர்களையும் (டியூட்டர்ஸ்) விளக்குநர்களையும் (டெமான்ஸ்டிரேட்டர்ஸ்) எடுத்துக் கொள்வோம். ஒரே தகுதி பெற்றவர்களாக இருந்தும் ஒருவரை துணைப் பேராசிரியராக நியமிக்கிறார்கள்? மற்றவரை பயிற்றுனர்களாக நியமிக்கிறார்கள், அல்லது விளக்குநராக நியமிக்கிறார்கள். இது முறையில்லை என்ற ஒரு முறையீடு அவர்களிடத்திலே இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அப்படிப்பட்ட பயிற்றுனர்களும் விளக்குநர்களும் 5 ஆண்டுகள் பணியாற்றினால், அவர்களுக்கும் துணைப் பேராசிரியர்களுக்கான ஊதியம் தரப்படும் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 5 ஆண்டுகள் என்ற கருத்தால் அவர்களுக்குப் பயன் இல்லை என்று பேசப்படுகிறது. ஒன்று, 5 ஆண்டுகள் என்பதைக் குறைக்க வேண்டும் அல்லது நீக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அவர்களிடம் மகிழ்ச்சியில்லை.

[திரு. கோ. இளங்கோவன்] [1978 மார்ச் 2

அடுத்து, துணைப் பேராசிரியர்களை எடுத்துக் கொண்டால் புதிதாகச் சேருகிறவர்களுக்குத்தான் இந்த அறிவிப்பினால் லாபம் இருக்கிறதே ஒழிய நீண்ட நாள் பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். 10 ஆண்டு பணியாற்றுகிற துணைப்பேராசிரியரை எடுத்துக் கொண்டால், இந்தப் புதிய விகிதத்தில் 10 அல்லது 15 ரூபாய்தான் அதிகம் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களிடத்திலேயும் மகிழ்ச்சி காணப்படவில்லை.

அடுத்து, பேராசிரியர்கள் நிலைக்கு வந்தால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் துணைப்பேராசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகிய இரண்டும் இருவேறு பதவிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இருவேறு சம்பள வ்கிதங்கள் அறிவிக்கப்படவில்லை. இது எப்படி நியாயமாகும்? துணைப்பேராசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகிய இருவருக்கும் ஒரே சம்பளம். இது சரிதானா? என்று கேட்கிறார்கள். அப்படி இருக்குமானால், பேராசிரியர்கள், தங்களுக்குக் கீழே பணிபுரியும் துணைப்பேராசிரியர்களிடம் எப்படி வேலை வாங்க முடியும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் துணைப்பேராசிரியர்கள் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்று வேறு ஊருக்கு மாற்றப்படுகிறார்கள். ஏன் இந்த பதவி உயர்வு என்றும் கேட்கிறார்கள். பதவி உயர்ந்தும் பயன் என்ன என்று கேட்கிறார்கள். இதனையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12·40)

புதிதாக நியமிக்கப்படும் அண்டர்-கிராசுவேட் காலேஜ் பிரின்சிபால் இருக்கிறார்களே அவர்களுக்குத் தனிச் சம்பள விகிதம் தரப்படவில்லை. மாறாக துணைப் பேராசிரியருடைய சம்பளத்தோடு ரூ. 100 கூட்டித்தருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் எதிர் காலத்தில் யாரும் கல்லூரி முதல்வராக வருவதற்குத் தயங்குவார்கள் என்றகருத்துசொல்லப்படுகிறது. எனவே, அந்த முறையில் பார்க்கிறபோது கல்லூரி மட்டத்தில் யாருக்கும் மகிழ்ச்சி இல்லை.

இந்தச் சூழ்நிலையில் தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள், பேராசிரியப் பெருமக்கள் எங்கே. தங்களுக்கு வேலை போய்விடுமோ என்று கருதுகிறார்கள். எனவே அவர்களுக்கு வேலை போய்விடாது என்ற உத்தரவை வாய் மூலமாகத் தராமல் தகுந்த ஆணை மூலம் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன.



[திரு. கோ. இளங்கோவன்] [1978 மார்ச் 2

தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அவர்களுக்குத் தரப்படும் சம்பளப் நேரடியாகத் தரப்படவேண்டும் என்று சொல்கிறார்கள். அதை அரசு மீண்டும் ம்ணடும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் இருக்கிறது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கிறது, மதுரைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. ஆனால் மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு இப்போது துணை வேந்தர் இருக்கிறாரா? என்றால் இருப்பதாகத் தெரியவில்லை. துணை வேந்தர் இல்லாமல் பல்கலைக்கழகம் இருக்கலாமா, அது முறையா என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

ஓய்வு பெறும் ஆசிரியர்கள், அவர்களுடைய ஓய்வு ஊதியத்தைப் பற்றி முறையீடு வைத்து இருக்கிறார்கள். ஒன்று, ஓய்வு பெறும் ஆசிரியர்கள்—அவர்களுக்கு ஓய்வூதியம் குறைந்தது ரூபாய் நூறு தரப்படவேண்டும் என்று கேட்கிறார்கள். அடுத்ததாக, சென்னையிலுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டும் அரசுத்துறை செலவில் எம்.ஓ. மூலம் பணம் அனுப்பி வைக்கப்படுகிறது. ஆனால் வேறு பகுதியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு எம்.ஓ. மூலம் அவைகள் அனுப்பப்படுவதில்லை. அதைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஃபேமிலி பென்ஷன் அந்த ஓய்வு பெறும் ஆசிரியர்கள் அனைவருக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜி.ஓ.எம்.எஸ்.நெ. 929, பைனான்ஸ் (பென்ஷன்) டிபார்ட்மெண்ட், தேதி 15-9-1977—அதிலே 1961 ஜூன் முன் ஓய்வு பெற்றவர்களுக்கு 10 ரூபாய் 1961ஜூனுக்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு ரூ. 5-ம் என்று இருக்கிறது. அதிலே அனுமலி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை மாற்றி, 1-6-1970-க்கு முன் ஓய்வுபெற்ற எல்லோருக்கும் ரூ. 10 என்று திருத்தவேண்டும் என்று கருத்து சொல்லப்படுகிறது. அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாலைந்து வீதிகளுக்கு ஒன்று வீதம், நல்லதுவாய் வசதியாய் இல்லம் ஒன்று வேண்டும் என்று பாரதிதாசன் சொன்னது போல், அந்த நூலகங்கள் தமிழகத்தைப் பொறுத்த வரையில் எத்தனை இருக்கின்றன என்று பார்க்கவேண்டும்.

கன்னிமாரா நூலகம். மாவட்ட மைய நூலகம் 13 இருக்கின்றன; கிளை நூலகங்கள் 1,442 இருக்கின்றன. எனவே நூலகங்கள் மிகுதியாக ஏற்படுவதற்கு வழிகோலவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 2] [திரு. கோ. இளங்கோவன்]

இந்த நேரத்தில் குறிப்பாகச் சொல்கிறேன். மைய நூலகங்கள், கிளை நூலகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் நிலை மிகவும் அவல நிலையாக இருக்கிறது. அவர்களுக்கு மாதந்தோறும் சரிவர சம்பளம் கிடைப்பது இல்லை. சம்பளம் சரிவர கொடுக்க ஆவன செய்யவேண்டும். ஆவன செய்யவேண்டும் என்று பல முறை இந்த மன்றத்தில் கேட்கப்பட்டபிறகும், ஆவன செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், மற்றொரு கருத்தையும் சொல்கிறேன். கன்னிமாரா பொது நூலகம் இருக்கிறது. அந்த நூலகத்தின் நுழை வாயிலில் கன்னிமாரா பொது ஜன நூலகம் என்று போர்டு இருக்கிறது. அதை கன்னிமாரா பொதுமக்கள் நூலகம் என்று மாற்றவேண்டும் அல்லது கன்னிமாரா பொது நூலகம் என்றாவது மாற்றவேண்டும். கன்னிமாரா நூலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் அரசு ஊழியர்கள்தான். ஆனால், அவர்கள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படுவது இல்லை. அங்கேயிருக்கும் இயக்குநர் அவர்கள் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் நியமிக்கிறார்கள், அதிலே பல கோளாறுகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், ரெபரன்ஸ் அசிஸ்டென்ஸ் என்று ஒரு 5 பதவிகள் இருக்கின்றன. அந்த 5 பதவிகளை நிரப்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர் முதலில் என்ன ஆணை போடுகிறார் என்றால், அதற்கு குறிப்பிட்ட தகுதியுடையவர்கள் மனுச் செய்து கொள்ளலாம். அதற்கு பி.ஏ., பி.எஸ்ஸி. படித்து இருக்கவேண்டும். டிகிரி அல்லது டிப்ளோமா இன் லைப்ரரி சைன்ஸ் படித்து இருக்க வேண்டும் என்று ஆணை இருக்கிறது. அப்படி மனுச் செய்தவர்களை விட்டு விட்டு கீழே இருக்கும் எழுத்தர்களை அந்தப் பதவிக்கு, பதவி உயர்வு கொடுத்து நியமித்து இருக்கிறார்கள். இது போல் பல குறைபாடுகள் இருப்பதால், அவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அந்த ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும், அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பள்ளிகளிலே இரவுக்காவலர்களும் தோட்டக் காவலர்களும் குறைந்த ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலையைக் கவனிக்க வேண்டும்.



[திரு. கோ. இளங்கோவன்] [1978 மார்ச் 2

சில பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. சில நேரங்களில் அவர்கள் ஒரு பள்ளிக்கும் இன்னொரு பள்ளிக்கும் இடையே 5 அல்லது 6 மைல் தூரம் நடந்து சென்று பணியாற்ற வேண்டியிருக்கிறது. அப்படி இருந்தும் அவர்களுக்குப் பாதிச் சம்பளம் தான் தரப்படுகிறது. இந்த நிலையைப் போக்க வேண்டும்.

கல்விக்காக நிறைய தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லி பெருமைப்பட்டுக்கொள்ளலாம். தொகை ஒதுக்கித் தருவதில் பெருமையில்லை; கல்வியின் தரத்தை உயர்த்துவதில் தான் பெருமை.

''டப்பா டப்பா வீரப்பா
எப்படப்பா கல்யாணம்
மாதம் பிறக்கட்டும்
மல்லிகைப்பூ விரியட்டும்
எம்ஜியார் சண்டை
பானுமதி கொண்டை
குளம்நிறைய கொக்கு
பிடிக்கிறா ருக்கு''

இப்படி ஒரு பாட்டு 4-வது வகுப்பு மாணவர்களுக்கு வருகிறது. இது இங்கே இல்லை, பாண்டிச்சேரியில்தான் என்று சொல்வார்கள். பாண்டிச்சேரியிலும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சியில் இருக்கிறது. அந்த நிலை தமிழ்நாட்டுக்கு வரவேண்டாமென்றும், அது கல்வியின் தரத்தை உயர்த்தாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இங்கே கம்பர் பற்றியும், வள்ளலார் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி சில கருத்துக்களைச் சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ''தீ பரவட்டும்'' என்ற நூலை வெளியிட்டார்கள். அதன் மூலம் அண்ணாவின் பெயர் தமிழ் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோரோடு கம்பராமாயணம் பற்றி நடைபெற்ற பட்டிமன்றங்கள் மூலம் வெளிவந்த கருத்துக்களே அண்ணாவின் தீ பரவட்டும் என்ற புத்தகம். அவருடைய சொல்லாற்றல் அதில் வெளிப்படுகிறது.

1978 மார்ச் 2] [திரு. கோ. இளங்கோவன்]

அது மட்டுமல்ல. கம்பராமாயணத்திலிருந்து உருவானது தான் 'இராவண காவியம்'. அதன் ஆசிரியர் பவானி குழந்தை அவர்கள். அந்தப் புத்தகத்திற்கு தடை உத்தரவு போட்டிருந்தார்கள். அந்த தடை உத்தரவு நீக்கப்பட்டு விட்டதா என்பது கூடத் தெரியவில்லை. பேரறிஞர் அண்ணு அவர்கள் அந்த நூலுக்கு முன்னுரையும் தீட்டியுள்ளார்கள். அடுத்து,

''அன்றந்த இலங்கையினை
ஆண்ட மறத்தமிழன்

ஐயாண்டு திசை முகத்தும்
தன்புகழை வைத்தோன்

குன்றெடுக்கும் பெருந்தோளான்
கொடைகொடுக்கும் கையான்

குள்ளநரிச் செயல்செய்யும்
கூட்டத்தின் கூற்றம்

என்தமிழர் மூதாதை
இராவணன்காண் அவன் நாமம்
இவ்வுலகம் அஞ்சும்

வஞ்ச விபீஷணனின் அண்ணனென்று தன்னை

வையத்தார் சொல்லுமொரு
மாபழிக்கே அஞ்சும்

நெஞ்சானை நல்யாழின்
நரம்புதனைத் தடவி

நிறைய இசைச் செவியமுது
தரும்புலவன் தன்னை

வெஞ்சமரில் சாதல்வர
நேர்ந்திடினும் சூழ்ச்சி

விரும்பாத பெருந்தகையை

வாழ்த்துகின்ற தமிழரை
தமிழரென் பேன்

மறந்தவரைச் சழக்க ரெனச் சொல்வேன்''

என்று பறைசாற்றிய பாவேந்தர் பாரதிதாசன் வழிவந்த நாம் அவற்றை யெல்லாம் மறந்துவிடக்கூடாது என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.



1978 மார்ச் 2]

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978–79 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின்மீது பேசும் வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் ஏற்றத் தாழ்வை நிர்ணயிப்பது அந்த நாட்டுக் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற கல்வியில்தான் இருக்கிறது என்று இன்று நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுலே அரிஸ்டாடில் கூறிஞர். அதைப்போல கிராமங்களில் கல்விக் கூடங்களை ஏற்படுத்தி, அவை எப்படி நடைபெறுகின்றன என்பதை அறிய விரும்பிஞர் லெனின். பெண்கள் பெருமளவில் பள்ளிக்கூடங்களுக்கு வரவில்லை என்பதை அறிந்த லெனின், '' பெண்கள் கல்விக் கூடங்களுக்கு வரவில்லை என்ருல் பெண்களைத் தேடி கல்விக் கூடங்கள் செல்ல வேண்டும் '' என்று தெரிவித்தார். அப்பேர்ப்பட்ட கல்வி முறை தமிழ்நாட்டுக்கு வேண்டும் என்ற எண்ணத்திலே இன்றைக்கு ஏறத்தாழ 180 கோடி ரூபாய் ஒதுக்கி, கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும், மாணவர்கள் நல்லமுறையில் கல்வி கற்க வேண்டும் என்று திட்டம் தீட்டி, செயலாற்றி வருகிறது நம்முடைய தமிழக அரசு.

அப்படித் திட்டங்கள் தீட்டி செயல்பட்டாலும், பல்லாண்டு காலமாக, ஆண்டுக்காண்டு இந்தக் கல்வித் துறையில் பல சீர்கேடுகள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன. கல்வித்துறையிலே இன்னும் பழைய பாணியையே பின்பற்றி வருகிருர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டில் குலக் கல்வி முறையைப் புகுத்திஞர்கள். அப்பேர்ப்பட்ட ஒரு முறைகூட இன்றைக்கு நமக்குத் தேவைப்படுமோ என்று கருதும் சூழ்நிலை ஏற்படுகிறது. இன்று தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்ற கல்வி, எதிர்காலத்திலே ஊக்குவிக்கின்ற வகையிலே ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் எதுவும் இல்லையென்று சொல்லவேண்டியவர்களாக இருக்கிருேம். ஏனென்ருல் பி.ஏ., பி.எஸ்.ஸி., படித்துவிட்டு எத்தனையோ மாணவர்கள் வேலையில்லாமல் நடுத் தெருவில் அலைந்து கொண்டிருக்கிருர்கள்; வேலை தேடி திண்டாடிக் கொண்டிருக்கிருர்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[ பிற்பகல் 12–50 ]

ஆகவே, அவர்களுக்கு நல்லதொரு வருங்காலத்தை, எதிர் காலத்தை, அமைக்க ஏதுவாக இருக்கிற ஒரு கல்வி முறையை அமைந்துக் கொடுக்க, அந்தக் கல்வி முறையைப் படித்த நாம் ஏதாவது ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தியாக வேண்டும் என்ற கால கட்டத்திலே இருக்கிருேம்.

இன்னொன்று, எந்த ஒரு மாணவன் எந்தப் பாடத்தில் விருப்பப்படுகிறானோ; எந்தப் பாடத்தில் அவன் திறமையுள்ளவனாக இருக்கிறானோ அவன் அந்தப் பாடத்தைக் கற்க முடியாத ஒரு சூழ்நிலை இன்று தமிழகத்தில் இருக்கிறது. ஆரம்ப காலம்தொட்டு ஒரு மாணவன் குறிப்பிட்ட ஒரு பாடத்தில் திறமை உள்ளவனாக இருப்பான். ஆனால் அவன் வேறு ஒரு பாடத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை பல்லாண்டுகளாகத் தமிழகத்தில் நிலவி வருகிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாற்றியமைக்கப்பட வேண்டும், அதற்காகப் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகள் நிறுவிய காலத்திலிருந்து அவர்கள் தங்கள் சொந்த நலன் கருதியே, சொந்த லாபத்தைக் கருதியே அந்தப் பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் வருகிற மாணவர்களின் கல்வித் தரம் பற்றி அவர்கள் கருதுவதில்லை. அதே நேரத்தில் அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் நலன்கள் பற்றியும் அவர்கள் மனதில் கருதுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நிர்வாகம் மூலம் அவர்களுக்கு என்ன ஆதாயம் இருக்கிறது என்றுதான் கருதுகிறார்களே தவிர வேறு எதுவும் இல்லை.

ஆகவே, அந்தத் தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்தி அங்குள்ள முறைகேடுகளை நம் அரசு தீர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் மாணவர்களுக்கு அளிக்கின்ற உபகாரச் சம்பளத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்தில் இருந்து மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற உபகாரச் சம்பளம் இன்று ஜாதி அடிப்படையில் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் அளிக்கப்படுகிற நேரத்தில் உண்மையில், மேல் ஜாதி என்று நம்மால் குறிப்பிடப்படுகிற ஒரு இனத்தைச் சார்ந்த மாணவர்கள், நல்லமுறையில் முதல் வகுப்பில் தேறக்கூடிய மாணவனாக இருந்தாலும் அரசு அளிக்கிற உபகாரச் சம்பளத்தை அவனால் பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் எளியவர்களாக இருப்பதால் திறமை இருந்தும், நல்ல அறிவு இருந்தும் தன்னுடைய கல்வியை மேற்கொண்டு தொடர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே, ஜாதி அடிப்படையில் உபகாரச் சம்பளம் கொடுக்கக் கூடாது என்று நான் கூறவில்லை. அதே நேரத்தில் தகுதியின் அடிப்படையில் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் திறமை உள்ளவர்களாக இருந்தால், நல்ல முறையில் தேறி வருபவர்களாக இருந்தால் அவர்களுக்கும் இந்த உபகாரச் சம்பளம் அளிக்க நாம் வழிவகை காண வேண்டும் என்று தெளிவாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளங்கோவன் அவர்கள் பேசியதற்கு நான் ஒரு சிறிய கருத்தைக் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

"டப்பா டப்பா கலைஞரப்பா ; எப்பாடப்பா உன் ஞானம் ;
மாதம் பிறக்கட்டும்—காகிதப்பூ எரியட்டும் ;
கருணாநிதி சண்டை, தர்மா கொண்டை,
வீடு எல்லாம் செக்கு, எடுப்பாருக்கு" என்று கூறிக்கொண்டு

ஒரு சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே கள்ளர் ரிக்ளமேஷன் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே ஒரு சில இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அப்பள்ளிகள் நடத்தப் படுகின்றன. கள்ளர் ரிக்ளமேஷன் பள்ளி நிர்வாக அதிகாரி மூலம் அப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி என்று இருந்து கொண்டு வருகிறார். அப்படி ஒரு அதிகாரி இருப்பதன் காரணமாக அவர்கள் மாவட்டம் முழுவதும் பரவிக் கிடக்கிற பள்ளிகளை சரிவர கட்டுப்படுத்த முடியவில்லை. என் தொகுதியைப் பொறுத்த வரையில் நல்லூர், பெத்துப்பட்டி கிராமங்களில் அப்பள்ளிகள் இருக்கின்றன. அவை சரிவர நடப்பதில்லை. ஆசிரியர்கள் 11 மணிக்கு, 12 மணிக்கு பள்ளிக்கு வருகிறார்கள். பிறகு மதிய உணவிற்காகச் சென்று விடுகிறார்கள். எனவே இந்தப் பள்ளிகளை எல்லாம் அரசாங்கப் பள்ளிகளாக அல்லது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளாக மாற்ற அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற நர்சரிப் பள்ளிகள் அதிகமாக கட்டணம் வாங்கி வருகிறார்கள். ஏழை எளிய மக்கள் அங்கு போய் படிப்பது என்பது கஷ்டமாக இருப்பதால், ஏழை எளிய மக்களுக்கு அங்கே போய் படிக்க வாய்ப்பில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் பல ஆங் காங்கே நடைபெற்று வருகின்றன. இவற்றில் தவறுகள் நடை பெறுகின்ற நேரத்தில், அங்கு பைலாக்கள் இருந்தாலும், தவறான காரியங்கள் பல இடங்களில் நடைபெறுகின்றன. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஆத்தூர் பகுதியில், சின்னாளப்பட்டி என்ற இடத்தில் தேவாங்கர் உயர்நிலைப் பள்ளி ஒன்றிருக்கிறது, அதில் தேர்தல் நடைபெற்றது. அங்கு ஒரு கரஸ்பான்டன்ட் இருந்தார். அவருடைய பதவிக் காலம் முடிந்ததும் முறையாக தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அவர் தன்னிஷ்டம் போல் தேர்தலை நடத்திவிட்டு, நான்தான் கரஸ்பான்டன்ட் என்று

கூறிக் கொண்டு வந்தார். அங்குள்ள பொது மக்களும் அங்கு நடைபெற்றது சரியல்ல என்றும் அதை கவனிக்க வேண்டும் என்றும் இயக்குநர் அவர்களுக்குக் கோரிக்கையாக தெரிவித்திருந்தார்கள். ஆகவே இப்படிப்பட்ட பள்ளிகளில் தேவைப்பட்டால் பைலாக்களை மாற்றி சீரமைக்க வேண்டும்.

இப்படி சிக்கல் ஏற்படுகின்ற பள்ளிகளை எல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்துவதோ அல்லது ரிசீவர் அமைத்து, அரசாங்கமே தன்னுடைய நேரடிப் பார்வையில் வைத்து நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த திருமலைராயபுரம் என்ற இடத்தில் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் கட்டடம் கட்டுவதற்கு, அங்குள்ள பொதுமக்கள் 10 ஆயிரம் ரூபாயோ அல்லது 15 ஆயிரம் ரூபாயோ தொகை கட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் உள்ள அய்யம்பாளையம் என்ற இடத்தில் தனியார் பள்ளி ஒன்று உள்ளது. அதனுடைய நிர்வாகம் சரியாக இல்லை. கட்டடங்கள் இல்லை, நான்கு பக்கமும் சுவர்தான் இருக்கிறதே தவிர மேற்கூரை இல்லை. ஆகவே இந்தப் பள்ளியை அரசாங்கமே எடுத்துக் கட்டடம் கட்டிக் கொடுத்து அங்குள்ள ஏழை எளிய மக்கள் தங்கள் பிள்ளைகளை படிக்க வைப்பதற்கு வசதியாக வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சீரிய கல்வித் துறைக்காக 180 கோடி ரூபாய் இந்த மான்யத்திற்காக ஒதுக்கியிருப்பதைப் பாராட்டி ஏழை எளிய மக்களுக்காக உதவி செய்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, விடை பெற்றுக் கொள்கிறேன், வணக்கம்.

<u>*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் :</u> சட்ட பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டுக்கான கல்வி மான்யத்தின் மீது பாபஞ்சம் ரெ. வீ. சவுந்திரராஜன் ஆகிய நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் ஏன் இவ்விதம் கூறுகிறேன் என்றால், கடந்த 23-ம் தேதி பட்ஜெட்டின் மீது நான் பேசியபோது, அதை தினமலர் பத்திரிகையில் ஆர். சி. சாமிநாதன் என்றும், தஞ்சை, திருச்சி, மாலைமுரசு பத்திரிகைகளில் சுந்தரராஜன் என்றும், திருமயம் தொகுதி என்றும் போட்டிருந்தார்கள். அதனால்தான் என்னுடைய பெயரைச் சொல்லிவிட்டுப் பேச்சை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய நேரத்தை—எனக்கு ஒதுக்கப்பட்டதை குறைக்க, வேண்டாம் என்றும் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.





'' அறம் பொருள், இன்பம், வீடு பயக்கும்—புறங்கடை
நலிசையும் நாட்டும்—உறுங்கவல் ஒன்று உற்றுழியும்,
கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு
உற்ற துணை.......''

என்று ஔவையார் பாட்டிச் சொன்னார். ஆனால் இப்போது எப்படியிருக்கிறது என்றால், இன்றைக்கு கல்வி கற்றவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்கள் பல இலட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள்.

பி.யூ.சி. பாஸ் செய்தவர்கள் இலட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். பட்டதாரிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, முதுநிலை பட்டதாரிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டதாரிகளும் அனேகம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் வேலையற்று இருக்கிறார்கள். நம்முடைய கல்வி முறை எப்படியிருக்கிறது என்றால், உத்தியோகத்தை நம்பித்தான் நமது கல்வி முறை இருக்கிறது. ஏழைகளாக இருந்தாலும் சரி, பணக்காரர்களாக இருந்தாலும் சரி, உத்தியோகத்தை நம்பித்தான் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்கிறார்கள். உத்தியோகம் கிடைப்பதோ சிரமமாக இருக்கிறது. இதற்கு ஏதாவது ஒரு வழிவகை செய்தாக வேண்டும்.

[பிற்பகல் 1—00]

ஏனென்றால், இவர்கள் வேலையில்லாமல் இருப்பதால் ஏஜ் பாராகி (Age bar) விடுகிறது ; அதனால் கஷ்டப்படுகிறார்கள். இது உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். எத்தனை பேர் தங்களிடம் வந்து வேலை, வேலை என்று அலைகிறார்கள் என்பதும் தெரியும். ஆகையால், இதுமாதிரி படித்து பட்டம் பெற்றவர்களையும், எஸ்.எஸ்.எல்.சி.க்கு மேல் படிக்க முடியாத நிலையில் இருக்கின்றவர்களுக்கும் வேலைவாய்ப்புத் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நான் இதற்கு முன்பு கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் சுமார் 20,000, பட்டதாரி ஆசிரியர்கள் சுமார் 8,000, அதேபோல் தமிழ் ஆசிரியர்கள் சுமார் 4,000, உடற்பயிற்சி ஆசிரியர்கள் சுமார் 3,000 ஆகியவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதே நேரத்தில் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அப்போது ஆசிரியர்கள் தேவைப்பட்டது. இப்போது தேவையில்லாத அளவுக்கு, அதிகரித்திருப்பதற்கு காரணம்என்னவென்று ஒன்றும் புரியவில்லை. இங்கிருக்கக்கூடியவர்களுக்கும் தெரியும் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு பி,டி. ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு இருந்தது. அதனால்,

[திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்] [1978 மார்ச் 2

(திரு. இரா. முத்தையா தலைமை.)

ஹையர் செகண்டரி எஜுகேஷன் பற்றி ஒரு சில வார்த்தைகள். அரசினர் பள்ளிகளாக இருந்தாலும் ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் வசூல் செய்வது என்பது சிரமமாக இருக்கிறது. ஆங்கில போதனா மொழிக்கு ஹையர் செகண்டரி நிலையில் சம்பளம் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தமிழ் போதனா மொழிக்கு இலவசம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆங்கில போதனா மொழிக்கும் இலவசமாக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவராக இருந்தபோது யூனியன் அளவில் 5-வதில் இருந்து 8-வது வகுப்பு வரை காமன் எக்ஸாமினேஷன் முறை கொண்டுவரப்பட்டது. அந்த மாதிரி இருக்க வேண்டுமென்று சட்டமே செய்தால் கூட நன்றாக இருக்கும். அப்போது அவர்கள் கண்டிப்பாகப் பாடம் நடத்திதான் தீர வேண்டுமென்ற நிலை இருக்கும். இப்போது சில இடங்களில் சில ஆசிரியர்கள் 5, 6 பாடங்களை நடத்தி விட்டு காலாண்டுக்கும் ஐந்து பாடங்கள்; அரையாண்டுக்கும் அதே ஐந்து பாடங்கள் என்று நடைபெறுவதாக தெரிகிறது. முழு ஆண்டுத் தேர்வுக்கும் அதே ஐந்து பாடங்கள். ஆகவே, காமன் எக்ஸாமினேஷன் என்று வைத்தால் எல்லாப் பாடத்தையும் நடத்தியே தீர வேண்டுமென்ற நிலை ஏற்படும். அதனைச் சட்டபூர்வமாகக் கொண்டு வந்தால் நல்லது.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க மாணவர்கள் இங்கு சுற்றுப் பயணம் வந்தார்கள். அவர்கள் இங்கே சுற்றிப் பார்த்துவிட்டு மூன்று அபிப்பிராயங்களைச் சொன்னார்கள். முதலாவது, அமெரிக்காவில் மாணவர்கள் எல்லாம் அரசியலில் கலந்து கொள்ளமாட்டார்களாம்; அடுத்து பட்டதாரி மாணவர்களின் வயது அமெரிக்காவில் அதிகம்; இங்கு பட்டதாரி மாணவர்களின் வயது மிகவும் குறைவாக இருக்கிறது. அடுத்தது, இங்கே படிப்பவர்கள் உத்தியோகத்தை நம்பித்தான் படிக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அமெரிக்காவில் படித்துவிட்டு வெளியே வந்தவுடன் தாயையோ, தகப்பனையோ அல்லது வேறு யாரையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் சுயமாகவே சம்பாத்தியம் செய்து கொள்ள முடியும் என்ற நிலை அமெரிக்காவில் இருக்கிறது. இவ்வாறு அவர்கள் சொன்னார்கள்.

நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக ஏறத்தாழ 176 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அதிலே வேலை வாய்ப்பை அதிகமாக ஆக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.



1978 மார்ச் 2]

[பிற்பகல் 1-10]

* திரு. கு. ரமணி: மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற கல்வி மானியம் சம்பந்தமான விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 30 வருடங்கள் ஆகியும், எழுத்தறிவு, கல்வியறிவு உள்ளவர்கள், குறைந்தபட்ச தேவை கல்வி அறிவு பெற்றவர்கள் எத்தனை சதமானம் நம் நாட்டிலே உள்ளார்கள் என்பதை இந்திய அரசாங்கத்தினுடைய கல்வியமைச்சர் அவர்களுள சில நாட்களுக்கு முன்னாலே நாட்டிற்கு அறிவித்துள்ளார்கள். இன்றைக்கும் பெருவாரியான பேர்கள் நம் நாட்டிலே குறைந்த பட்ச கல்வி அறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அதனுடைய முக்கியமான காரணம் என்ன? எல்லோரும் அறிந்த உண்மையான காரணம் ஒன்றே ஒன்றுதான். ஏழ்மையும் வறுமையும் அவர்களை கல்வி கற்கும்படியான திசைக்குக் கொண்டு வரவில்லை என்பதான நிலைமையை இந்த அரசும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். இப்போது கல்வித் திட்டத்தில் மாற்றம் என்பதைப்பற்றி 10—2—3 என்று பிரித்து ஒரு திட்டம் வருகிறது. ஆனால் வருடங்களைப் பிரித்துப் போடுவதால் மட்டும் இந்த அடிப்படை குறை நீங்கி விடாது என்பதை நாம் அத்தனைபேரும் உணரவேண்டியுள்ளது. முன்பு 11, 1, 3 என்ற திட்டம் இருந்தது. இன்றைக்கு அது 10, 2, 3 என்று மாற்றப்பட்டு இப்படி வருடங்கள் மாற்றப்படுவதால் மட்டும் கல்வியினுடைய தரம், குணம் உயரும், இந்தக் கல்வி வாழ்க்கையோடு ஒட்டி இணைந்து சமுதாயத்திற்கு உதவி செய்யும் என்று இதை மட்டும் ஆதாரமாகக் கொண்டு சொல்லிவிட முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி இந்த வருடங்களைப் பிரித்து மாற்றுவதன் மூலம் ஏற்கனவே அரசாங்கம் அளித்துள்ள உறுதிமொழிப்படி ஆசிரியர்களுக்கு வேலை போய்விடக்கூடாது என்பதைத் திட்டவட்டமாக நான் சொல்ல விரும்புகிறேன். அந்த அபாயம் இருக்கிறது என்று அவர்கள் பயப்படுகிறார்கள். இந்த 10, 2, 3 திட்டம் வெற்றியா, தோல்வியா என்பதைப்பற்றி இப்போது ஒன்றும் சொல்வதற்கு இல்லை. அது அனுபவத்தில் பார்த்து சொல்லவேண்டிய விஷயம். ஆனால் சுமார் 5 ஆயிரத்திற்கு மேற்கொண்ட ஆசிரியர்களுக்கு இதனால் வேலை போய்விடலாம் என்ற அபாயம், பயம் ஆசிரியர்களின் உள்ளத்தில் இருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எந்தக் காரணத்தைக்கொண்டும் எந்த ஆசிரியருக்கும் இந்த மாற்றத்தின் காரணமாக வேலை இழப்பு கூடாது என்பதை நாங்கள் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறோம்.

அடுத்து, ஆரம்பக் கல்வி விஷயமாக, இன்று கிராமங்களிலே உள்ள நிலைமை, கோடிக்கணக்கான மக்கள், ஏழை எளிய மக்கள், விவசாய மக்கள், சுரண்டப்பட்ட மக்கள், பல சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்கள், ஏழை மக்கள் அவர்களுக்குக் கிராமங்களில் கல்வி புகட்டுவதற்கு கல்விக்கூடங்கள் நிறுவி, கல்விப் பயிற்சி நிறைவு பெற்றிருக்கிறது என்று சொல்லமுடியாது. இங்கே 180 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. பெருந்தொகைதான்; சந்தேகம் இல்லை, ஆனால் இந்தத் தொகையைக் கொண்டே இந்தப் பிரச்சினை தீரப்போவதில்லை. ஒரு பழமொழி பள்ளிகளில் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆசிரியராக இருந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று பள்ளிப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் பள்ளியில்லா ஊரில் குடியிருக்காதே என்று சொல்லும் அளவிற்கு நாம் வரவில்லை. பள்ளி இல்லாத ஊரிலே குடியிருக்காமல் ஓடிவிடவேண்டும் என்று பொருளல்ல. அந்த அளவிற்கு பள்ளியில்லாத கிராமமோ தெருவோ கிடையாது என்ற நிலையைத் தமிழகத்திலே உண்டாக்கவேண்டும் என்ற அந்த நோக்கில் நாம் முன்னேற வேண்டும், அதற்காகப் பாடுபடவேண்டும் என்பதை நாம் கவனத்தில் இறுத்திக்கொள்ள வேண்டும் என்பது 'எங்களுடைய கருத்து.

கிராமங்களிலே இன்றைக்குக் கல்வி கற்க முன்வரும் குழந்தைகள், ஆரம்பப் பள்ளிகளுக்கு வரும் குழந்தைகள், கொஞ்ச நாட்களுக்குப் பயிலுவதும் பிறகு விட்டுவிடுவதும், தேக்கம் அடைந்திருப்பதும், பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் படிப்புக்கு வராமல் போகும் நிலைமைகள் இருக்கின்றன என்று அறிக்கைகளிலும், குறிப்புகளிலும் இருந்து பார்க்கிறோம், அனுபவத்திலும் பார்க்கிறோம். ஏன்? நான் ஏற்கனவே சொன்ன நிலைமைதான். வறுமைதான் காரணம். ஒரு விவசாயக் கூலி, அரிசன, தாழ்த்தப்பட்ட மகன், அவர்களது குடும்பத்திலுள்ள ஐந்தாறு வயது நிரம்பிய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் சுள்ளி விறகு பொறுக்க அனுப்புகிறார்கள். தங்களுடைய குடும்பங்களிலே அந்தக் குழந்தையும் உழைத்துப் பாதுகாக்க வேண்டுமென்ற நிலைக்குச் செல்கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். வறுமை ஒழிக்கப்பட வேண்டியது அடிப்படை என்பது உண்மைதான். ஆனால் இதையும் கருத்திற் கொண்டு அந்தக் குழந்தைகள் உட்பட பள்ளிகளுக்கு வந்து சேர, அவர்களுக்கு உணவு, அவர்களுக்கு உடை, அவர்களுக்குப் புத்தகங்கள் ஆகியவற்றை, வேறுவிதமான பிரிவினைகளைப் பாராட்டாமல் ஏழைகளாக இருக்கின்ற அத்தனை குழந்தைகளுக்கும் அந்த வசதிகளைச் செய்யும் அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தக் குழந்தைகள் பள்ளிக்கு வந்து போகும் நிலைமையில் இன்னும் கொஞ்சம் அபிவிருத்தி அடையும்.



தேவையான அளவிற்குப் பள்ளிகள் கூட கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கு நிதிநிலை காரணம் என்று சொல்லலாம். ஆனால் இன்றைக்கும் பலயிடங்களில் பள்ளி வேண்டும், பள்ளி வேண்டும் என்ற கோரிக்கைகள் இருக்கின்றன. பள்ளிகள் இல்லாத இடங்களும் இருக்கின்றன. அந்த இடங்களிலெல்லாம் பள்ளிகளைக் கட்டுவது மிகமிக அவசியமாகும்.

அடுத்து, இந்தக் குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும் கல்வி கற்பிக்கும்படியான அந்த மகத்தான கடமையை நிறைவேற்றும் ஆசிரியர்களின் நிலைமை இதில் இரண்டறப் பிணைந்து பிரிக்க முடியாத விஷயம். அவர்களுக்கிடையில் மிகப் பயங்கரமான நிலைமை நிலவிக்கொண்டிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை. செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றவர்கள் ஏழு ஆண்டுகளுக்கு மேல் சர்வீஸ் ஆனவர்கள் உட்பட சுமார் 25,000 பேர் தமிழ்நாட்டில் வேலையில்லாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுதான் உண்மையான கணக்கா என்று அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற காலத்தில் சொல்லுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

கோவை மாவட்டத்தில், கோவை நகரத்தில் இருக்கும் வேலை தேடித் தரும் ஸ்தாபன அதிகாரியிடத்தில் நான் கேட்ட காலத்தில் அவருடைய எல்லைக்குள்ளே வந்திருக்கும் வேலையில்லா ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,500-க்கு மேல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதில் ஏழு வருடங்கள் வரையில் வேலையில்லாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியென்றால் வேலையில்லாத் திண்டாட்டம் படித்த ஆசிரியர்கள் மத்தியில் எந்த நிலைமையை உருவாக்கியிருக்கிறது, அவர்கள் என்ன கதிக்கு ஆகிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

தமிழ்ப் புலவர்கள் 4,000-க்கு மேல் வேலையற்றவர்களாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதேமாதிரி உடற்பயிற்சி ஆசிரியர்கள் 4,000 பேர்களுக்கு மேல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பி.டி. பட்டதாரி ஆசிரியர்கள் 8,000 பேருக்கு மேல் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் முழுவதும் முற்றிலும் சரியா, இல்லையா என்பதை அரசும் பார்த்து அவர்களும் சொல்லட்டும். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற நிலைமை இப்படிப்பட்ட படித்த, கல்வி கற்பிக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பான அவர்களிடத்தில் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆகவே, வேலையின்மையைப் போக்க இவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுப்பதற்காக அரசு தங்களுக்குள் நிதிவசதியை இன்னும் பெருக்கிக்கொண்டு எந்த அளவிற்குபள்ளிக்

கூடங்களையும், படிப்பு வசதிகளையும் உருவாக்க முடியுமோ அதிலே ஈடுபட வேண்டியது மிகமிக அவசியம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி, பல்கலைக்கழகத்தில் இருக்கும்படியான ஆசிரியர்கள், கல்லூரிகளில் இருக்கும்படியான ஆசிரியர்கள் மிக முக்கியமான கோரிக்கையை வைத்து, அதற்காக மதுரைப் பல்கலைக்கழகத்தில் போராட்டம் நடைபெற்றதும், நமது மாண்புமிகு அமைச்சரும், முதலமைச்சரும் அதிலே எப்படி சுமூகமான நிலைமைகளைக் கொண்டுவந்தார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் அவர்களின் கோரிக்கை இன்னும் நிறைவேறவில்லை. அவர்கள் மத்தியில் மிகப் பெரிய மனக் கஷ்டம் இருக்கிறது. அவர்கள் சொல்லும்படியான விஷயம் என்ன? யு.ஜி.சி. சம்பள விகிதத்தை அமலாக்க வேண்டும், 1973 ஆம் வருடம் ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து அமலாக்கி யிருக்க வேண்டும், ஆனால் தமிழ்நாட்டில் அவ்வாறு அமலாக்க வில்லை, இந்திய நாட்டில் சுமார் 12 மாநிலங்களில் அவ் வாறு ஆக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். கேரளா போன்ற மாநிலங்களில் சம்பள விகிதம் இன்னும் நல்ல முறையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். 1973 ஆம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு முடிய இதை அமலாக்கும் செலவை மத்திய சர்க்கார் 80 சத வீதம் கொடுக்கத் தயார் என்று குறிப்பிட் டிருக்கிறார்கள். அப்படியென்றால் இதை அமல் நடத்தி மத்திய சர்க்காரிடத்திலிருந்து அவர்கள் தரக்கூடிய உதவியையும் பெற்றுக்கொண்டு ஏன் இந்த ஆசிரியர்களுக்கு அமலாக்கக் கூடாது? இதில் என்ன பெரிய கஷ்டம் அரசுக்கு ஏற்படும் என்பதை அரசு கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

அடுத்து கிராக்கிப்படி விஷயத்தை எடுத்துக்கொண்டால், அவர்கள் கேட்கும் டியர்னெஸ் அலவன்ஸ் நியாயமானதே. தமிழ்நாட்டிலே டியர்னெஸ் அலவன்ஸ் மிகமிகக் குறைவு என்று அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். மொத்த ஊதியத்தை மற்ற மாநிலங்களோடு தாரதம்மியப் படுத்திப் பார்த்தால் தமிழ்நாட்டில் கொடுப்பது மிகமிகக் குறைவு என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 1-20)

கடைசியாக, அவர்களுடைய போராட்டம் நடைபெற்று, பேச்சுவார்த்தைகள் நடைபெற்று தமிழக அரசு இதை 1977 ஜுலையிலிருந்து அமுலாக்குவதற்கு ஒப்புக்கொண்டார்கள். அதற்குப் பிறகும்கூட, தமிழக அரசு போட்டிருக்கிற திட்டத் தின்படி அமுலாக்கினால், அவர்களுக்குக் கிடைக்கும்படியான தொகை ரூ. 5 க்கும், ரூ. 10-க்கும் மேல் இல்லையென்று



அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக, தற் போது அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம், இங்கே நாம் கொடுக்கப் போகின்ற தொகை, இரண்டையும் கணக் கிட்டுப் பார்த்தால், அதிலே பெரிய வித்தியாசம் இல்லை யென்று சொல்கிறார்கள்.

தற்பொழுது அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் ரூ. 475. பஞ்சப்படி ரூ. 165. ஆக இரண்டும் சேர்த்து ரூ. 640. ஆனால், யு.ஜி.சி. சம்பளப்படி கொடுக்கவிருப்பது ரூ. 700. இதைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால், அதிகப்படியாக வரக்கூடிய, புதிய ஊதிய விகிதத்தால் வரக்கூடிய தொகை, புதிதாக பேராசிரியர்களாகப் பதவிக்கு வருபவர்களுக்குத் தான் உதவியாக இருக்கிறது. ஏற்கனவே, இருக்கும்படியான, சர்வீஸ் ஆனவர்களுக்கு இதில் நியாயம் கிடைக்கவில்லையென்று கூறுகிறார்கள்.

1973 ஆம் வருடத்திலேயே திட்டத்தை உருவாக்கியிருந் தால், 5, 6 வருஷ காலத்தில் அவர்களுக்கு இழப்பு ஏற்பட் டிருக்காது. 5, 6 வருஷ காலத்தில், விலைவாசி எப்படி ஏறிக்கொண்டிருக்கிறது? இதை அப்பொழுதே அமலுக்குக் கொண்டு வந்திருந்தால், விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப, கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வு, கிராக்கிப்படி கிடைக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். அதுவும் கிடைக்கவில்லை. ஆகவே, அரசு இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மிச்சப் பணத்தை ஒரே சமயத்தில் கொடுக்க முன் வருமானால், அதில் 20 சத வீதத்தை, பிரா விடன்ட் பண்டிலும், கடன் பத்திரங்களிலும் போடலாம் என்றும், இன்னும் 20 சதவீதத்தை வெள்ள நிவாரணத் திற்களிக்கலாம் என்றும் அவர்கள் கூறி, ஒட்டு மொத்தச் சலுகையைக் கூட பலவிதங்களில் குறைத்துக்கொள்ள அவர் கள் தயாராக இருந்தும் அதை அரசு கவனிக்காமல் இருப்பது சரியல்ல என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, கல்லூரி ஆசிரியர்கள் மத்தியில் நிலவுகிற குமுறலைத் தீர்ப்பதற்குக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, மற்றொரு முக்கியமான விஷயம்—தற்காலிக ஆசிரியர்கள் என்று வைக்கப்பட்டவர்கள் 300-லிருந்து 400 பேர்கள் இருக்கிறார்கள். எண்ணிக்கையில் பெரிய அளவில் இருப்பவர்கள் அல்ல. ஆனால், அவர்களுடைய நிலைமை என்ன? ஒரு வருஷத்திலிருந்து 10 வருஷம் வரை சர்வீஸ் ஆன பிறகும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களும் படித்துப் பட்டம் பெற்று ஆசிரியர்களாகப் பணி செய்து கொண்டிருப் பவர்கள், அப்படிப்பட்டவர்கள், 6 வருஷம், 7 வருஷம்,

8 வருஷம் சர்வீஸுக்குப் பிறகு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுத வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுடைய நடைமுறை அனுபவம் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படவில்லை. அவர்கள் எழுத்துத் தேர்விலே தேர்ச்சிபெறுகிறார்கள். ஆனால், சர்வீஸ் கமிஷன் நடத்துகிற வாய்மொழித் தேர்விலே தோல்வி அடைகிறார்கள். அப்படியானால், அவர்களுடைய சர்வீஸ், வாழ்க்கை நிலை என்ன ஆகிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய சர்வீஸ் அடிப்படையில் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

ஏற்கனவே, 60 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் பாக்கி இருப்பவர்களுக்கு வேலை போய் விடும் என்ற அபாயம் இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். பாக்கியிருப்பவர்களை, அவர்களுடைய சர்வீஸ்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நிரந்தரமாக்க வேண்டும். வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி, ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு. அமைச்சரவர்கள் முன் வைத்திருக்கும்படியான இந்த அறிக்கையிலே வேலை வாய்ப்பு என்று குறிப்பிடப்பட்டிருப்பது, 1,000 இடைநிலை ஆசிரியர்களுக்கு வேலை, 200 முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கு வேலை, 200 உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலை என்று கூறுகிறார்கள். ரூ. 180 கோடிக்குக் கல்வித் திட்டம் நிறைவேற்றுவதில், புதிதாக வேலைவாய்ப்பு தருவது இவ்வளவுதான். அப்படியானால், வேலையில்லாத் திண்டாட்டம் வளர்வதற்கும், வேலை அளிப்பதற்கும் எந்த அளவு தொடர்பு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்கனவே ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் மத்தியில் நிலவிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், வேலை வாய்ப்புகள் மேன்மேலும் பெருக திட்டங்கள் தீட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று இந்தக் கல்வித் திட்டத்திலே அசுர்காா உழைக்கக்கூடியவர்கள் வேறு பலரும் இருக்கிறார்கள். நூலக ஊழியர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளப்படாமல், சிறு சிறு குழுக்களாகப் பல இடங்களில் இருந்தும் எந்த வாய்ப்பு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்காமல், திடீர் திடீரென்று இடமாற்றம் செய்யப்பட்டு கஷ்டங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். அவர்களுக்கு நீண்ட



நாட்களாகப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் ஊதிய உயர்வும், மற்ற வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும்.

மற்றும் டெக்னிகல் ஸ்டாப் போன்ற ஊழியர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். அவர்களும் கல்விக் காக சேவை செய்யக்கூடியவர்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கை நிலையையும் வருமானத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இதை எல்லாம் இணைந்துதான் கல்வித் திட்டம், அதையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

குடும்பநல நிதி, மருத்துவ விடுப்பு போன்ற வசதிகளை அரசு ஊழியர்களுக்கு கிடைப்பதைப் போல இன்றைக்கு அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்களுக்குக் கிடைக்கிற போதாத வருமானத்தைக் கொண்டு இந்த வசதிகள் அவர்களுக்கு இல்லாததால் அதிகப்படியான செலவு அவர்கள் பெறும் சம்பளத்திலிருந்தே செய்யப்படுகிற நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருக்கிறது. அதையும் கவனத்தில் கொண்டு அப்படிப்பட்ட திட்டங்களை இவர்களுக்கும் அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஆசிரியர்களை ரொம்ப ரொம்ப அலைக்கழிக்கக்கூடிய விஷயம், அவர்களுடைய இடமாற்றம். ஊராட்சி ஒன்றியங்களில், நகராட்சிகளிலே நினைத்தபடி இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. இது எனக்கு நேரடி அனுபவம் ஆகும். அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். கோவை நகராட்சியில் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே உள்ள முனிசிபாலிடியில் ஆசிரியர்கள் குடியிருப்புக்கு அருகாமையில் வேலையில் அமர்த்தப்பட வேண்டும். தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யக்கூடாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றிப் பல வருஷங்கள் ஆகியும், அது கடைப்பிடிக்காமல், அமுல் நடத்தப்படாமல் இருக்கிறது. இதே மாதிரி புருஷன் ஒரு இடத்திலும், மனைவி இன்னொரு இடத்திலும் மாற்றப்பட்டு அவர்களை ஒரே இடத்தில் வேலை பார்க்கவிடாமல், இரண்டு பேர்களையும் இரண்டு இடத்திற்குப் பிரித்து அவர்களுடைய வாழ்க்கை ரொம்பவும் பாதிக்கின்ற நிலை இருக்கிறது.

ஆகவே இந்த மாதிரி இருக்கிற தீர்மானங்கள் அமுலாக்கப்பட வேண்டும் என்றும் அதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். புருஷனும் மனைவியும் ஒரே பள்ளியில் பணியாற்றுகின்ற வாய்ப்பினைத் தர வேண்டும்.

## இணைப்பு I.

[29ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 360—க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் 14—1—1974—ம்தேதி முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இருந்த சில பகுதிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து சேர்க்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சில பகுதிகள் ஏற்கெனவே தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி விற்பனைக் குழுக்களின் வரையறுக்குட்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தனியாக விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுக்களின் இருப்புக்களையும் பொறுப்புக்களையும் (Assets and Liabilities) பிரிக்க வேண்டும். புதிதாக விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்பொழுது, சம்பந்தப்பட்ட குழுக்களின் இருப்புகளையும் பொறுப்புகளையும் பிரிப்பதற்கு, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின்கீழ் தற்சமயம் இடமில்லை. எனவே தேவையான சட்ட திருத்தம் அரசின் ஆய்வில் இருக்கிறது. மேற்குறிப்பிட்ட சட்டம் திருத்தப்பட்ட பின்னர் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தனியாக விற்பனைக் குழு அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.



## இணைப்பு-II

[336 ஆம் பக்கத்தில் இனம் 6—க்கான அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி.

(1978-79 வரவு-செலவு மதிப்பீடு.)

# I தோற்றுவாய்.

**கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்**

கல்விக்காக 1978—79ஆம் ஆண்டில் ரூ. 176 கோடி (''மானியக் கோரிக்கை 17—கல்வி'' யின் கீழ்) நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை 1978—79-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 727 கோடியில் 24 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி மானியத்தின் கீழ் 1975—76-ல் ரூ. 123 கோடியும் 1976—77-ல் ரூ. 143 கோடியும் செலவாயின. 1977—78-க்கான திருத்த மதிப்பீடு ரூ. 169 கோடியாகும். இதிலிருந்து கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது என்பது தெரியவரும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1978—79 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | 1978—79 வரவு-செலவு மதிப்பீடு | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 277. கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி. | 77,69 | 4,71 | 82,40 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி .. | 54,25 | 4,43 | 58,68 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 21,20 | 1,62 | 22,82 |
| 4. சிறப்புக் கல்வி .. | 67 | 51 | 1,18 |

[1978 மார்ச் 2

| | | | |
|---|---|---|---|
| 5. தேசிய மாணவர் படை, விளையாட்டு முதலியவை. | 1,41 | 24 | 1,65 |
| 6. பிற இனங்கள் | 1 | .. | 1 |
| 7. தொழில் நுட்பக் கல்வி .. | 5,21 | 1,03 | 6,24 |
| மொத்தம்—277. கல்வி. | 1,60,44 | 12,54 | 1,72,98 |
| 278. கலை, பண்பாடு. | 22 | 17 | 39 |
| தொல்பொருள் ஆராய்ச்சி .. | 6 | 8 | 14 |
| ஆவணக் காப்பகமும் அரும் பொருட் காட்சி சாலைகளும் .. | 27 | 1 | 28 |
| பொது நூலகங்கள். | 1,30 | 2 | 1,32 |
| | 1,85 | 28 | 2,13 |
| 288. மூகப பாதுகாப்பும் நலனும் (ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முதலியன) .. | 38 | 2 | 40 |
| Recovories | 18 | ... | 18 |
| மொத்தம் மானியக் கோரிக்கை "17. கல்வி." | 1,62,85 | 12,84 | 1,75,69 |



1978 மார்ச் 2]

3. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரி கட்டிடங்கள் கடன்கள் முதலியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1978–79-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| | திட்டத்தின் கீழ் வராத செலவு. | திட்டச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **பொதுக் கல்வி.** | | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| 314. சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் .. .. .. | .. | 75 | 75 |
| சமூகக் கல்வி .. .. | .. | 8 | 8 |
| மானியக் கோரிக்கை 37—பொதுப் பணி— | | | |
| அரசுப் பள்ளிக் கட்டிடங்கள் | 3 | 11 | 14 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. | 5,17 | — | 5,17 |
| (ஆ) வருவாய்க்கணக்கின் கீழ் வராத செலவு— | | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள் .. ... | 1 | 4,62 | 4,63 |
| 767. கடன்கள்—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் .. | 1 | ... | 1 |
| 677. தேசிய கடன்படிப்புதவித் தொகைகள் .. | 45 | .. | 45 |
| **மொத்தம்—பொதுக் கல்வி.** | 5,67 | 5,56 | 11,23 |

[1978 மார்ச் 2

| | திட்டத்தின் கீழ் வராத செலவு | திட்டச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **தொழில் நுட்பக் கல்வி.** | | | |
| 477. அரசு தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு .. | .. | 11 | 11 |
| 677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள் .. .. .. | 9 | .. | 9 |
| மொத்தம்—தொழிற் கல்வி .. | 9 | 11 | 20 |
| மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும். | 5,76 | 5,67 | 11,43 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால் 1978–79-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 187 கோடியாகும்.

4 (i) அரிசனங்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கான செலவுகள் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 25 கோடியாகும்.

(ii) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின்கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 10 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூ. 25 கோடியும், ரூ. 10 கோடியும்) கணக்கில் கொண்டால், 1978–79-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 222 கோடியாக இருக்கும்.



1978 மார்ச் 2]

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி, 477. கல்வி மூலதனச் செலவு, 677. கடன் முதலியன) கல்வியின் பல்வேறு துறைகளுக்கு 1978-79ஆம் ஆண்டில் செய்யப்படும் திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்).

| | பொறுப் பேற்ற செலவினம். | 1978–79-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **பொதுக் கல்வி—** | | | |
| (1) பள்ளிக் கல்வி | 12,21<br>(+)14 | 1,18 | 13,39<br>(+)14 |
| (2) கல்லூரிக் கல்வி | 1,70<br>(+)77 | 40 | 2,10<br>(+)77 |
| | 13,91<br>(+)91 | 1,58 | 15,49<br>(+)91 |
| தொழில் நுட்பக்கல்வி | 75<br>+23 | 20 | 95<br>+23 |
| சத்துணவு—நண்பகல் உணவு. | 16 | 6 | 22 |
| கலைப்பணிகள் .. | 21<br>(+) 4 | 7 | 28<br>(+) 4 |
| | 15,03<br>(+)1,18 | 1,91 | 16,94<br>(+)1,18 |

**கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் மாற்றுதல்.—**

8. இந்திய அரசியல் சட்டத்தின் 42-வது திருத்தத்தின் மூலம் மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ள கல்வி பற்றிய அதிகாரத்தை மறுபடியும் முன்பு போலவே மாநிலங்களுக்கு மாற்ற வேண்டுமென்பது பெரும்பாலோர் கருத்து. அனைத்த

[1978 மார்ச் 2

நிலைமைகளையும் தீர ஆலோசித்துத்தான் இந்திய அரசியல் சட்டம் வகுக்கப்பட்டபொழுது கல்வி, மாநிலப் பட்டியலில் வைக்கப்பட்டது. கல்வி, மாநிலப் பட்டியலில் தான் இருக்க வேண்டும் என்பதே கல்வி வல்லுநர் அனைவரின் கருத்தாகும். கோத்தாரி கல்வி ஆணைக்குழுவின் கருத்தும் அதுவே.

9. மத்திய மந்திரிசபை கலந்து ஆலோசித்து கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற முடிவெடுத்த பின்னர் இப்பொழுது அது மறுபரிசீலனை செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது. கல்வியைப் பொதுப் பட்டியலில் வைத்திருப்பது விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கும், கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும்.

10. ஆகவே, முதலில் செய்த முடிவுப்படியே கல்வி பற்றிய அதிகாரத்தை மீண்டும் மாநிலப்பட்டியலுக்கு மாற்றுவதற்கு வேண்டிய திருத்தத்தை மைய அரசு கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விஷயத்தில் இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இவ்வரசின் கருத்தை ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்.



1978 மார்ச் 2]

# II. பள்ளிக் கல்வி

(i) பொது.

1. கல்விச் செலவில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத்தான் ஆகிறது. 1978–79 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 176 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 141 கோடியாகும்.

2. தமிழ் நாட்டில் 1977–78-ல் (1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதி அன்று இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய புள்ளி விவரங்கள் வருமாறு :—

| பள்ளிக்கூடங்கள். | எண்ணிக்கை. | | | மாணவர்கள். (இலட்சத்தில்) | ஆசிரியர்கள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | | (3) | (4) |
| உயர்நிலைப் பள்ளிகள்— | | | | | |
| சாதாரணப் பள்ளிகள் .. | 2,912 | அரசு | 1,928 | 17·26 | 68,698 |
| | | நகராட்சி | 123 | | |
| | | தனியார் | 861 | | |
| ஆங்கிலோ—இந்தியப் பள்ளிகள் CBSE ISC பள்ளிகள். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் முதலியவை. | 146 | ரயில்வே, மைய அரசு | 17 | | |
| | | தனியார் | 129 | 1·05 | 4,341 |
| | 3,058 | | | 18·31 | 73,039 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயர் தொடக்கப் பள்ளிகள்:— | 5,709 | அரசு | 248 | 24·35 | 68,794 |
| | | நகராட்சி | 389 | | |
| | | ஊராட்சி ஒன்றியம் | 3,110 | | |
| | | தனியார் | 1,962 | | |
| தொடக்கப் பள்ளிகள்— | 27,395 | அரசு | 1,413 | 41·50 | 1,11,184 |
| | | நகராட்சி | 1,058 | | |
| | | ஊராட்சி ஒன்றியம். | 19,921 | | |
| | | தனியார் | 5,003 | | |
| பெரு மொத்தம் ... | 36,162 | | | 84·16 | 2,53,017 |
| | | | | (மாணவர்கள் 48·61 இலட்சம்; மாணவியர் 35·55 இலட்சம்). | (ஆசிரியர்கள் 1,55,619 ஆசிரியைகள் 97,398). |



| பள்ளிக்கூடங்கள்: (1) | எண்ணிக்கை: (2) | மாணவர்கள்: (3) | ஆசிரியர்கள்: (4) |
|---|---|---|---|
| ஏனைய நிறுவனங்கள்— | | | |
| இளஞ்சிறுர் பள்ளிகள் ... | 40 | 5,300 | 131 |
| கீழ்த்திசைப்பள்ளிகள் ... | 17 (12 சம்ஸ்கிருதம் —5 அராபிக்) | 2,500 | 167 |
| சைனிக் பள்ளி, அமராவதி நகர். | 1 | 540 | ... |
| ஊனமுற்றவருக்கான பள்ளிகள். | 40 (பார்வையற்றவருக்கு 18; காது கேளாதவருக்கு 19: மற்றவருக்கு 3). | 3,700 | 335 |
| ஆசிரியர் பயிற்சி பள்ளிகள். | 80 | 2,600 | 317 |
| கைத்தொழில் பயிற்சி மையங்கள். | 7 | 500 | 40 |

3. தமிழ்நாட்டில் 1976–77, 1977–78-ம் ஆண்டு களில் பள்ளிகளில் சேர்ந்து பயின்று வந்த மாணவ மாணவியர் விவரங்கள் வருமாறு :—

| | 1976–77. | 1977–78 |
|---|---|---|
| (அ) 6–11 வயது தொகுதிச் சிறுர்கள் (தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் 1—5 வகுப்புகள்). | | |
| பள்ளியில் சேர்க்கப்பட்ட மாண வர்கள் (இலட்சத்தில்) .. | 57.52 | 59.85 |
| மொத்த எண்ணிக்கை (இலட்சத் தில்) .. .. .. | 63.16 | 64.07 |
| (5-லிருந்து 10 முடிய ஆறு வயதுத் தொகுதிகள்). | | |
| விழுக்காடு (சதவீதம்) .. | 91.7 | 93·4 |
| (ஆ) 11—14 வயதுத் தொகுதி (உயர் தொடக்கப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் 6–8 வகுப்புகள்). | | |
| பள்ளியில் சேர்க்கப்பட்ட மாண வர்கள் (இலட்சத்தில்) .. | 15.50 | 16.33 |
| மொத்த எண்ணிக்கை (இலட்சத் தில்) .. .. .. | 28.42 | 28.83 |
| விழுக்காடு (சதவீதம்) .. | 54.4 | 56.8 |
| (இ) 14—17 வயதுத் தொகுதி (உயர்நிலைப் பள்ளிகளில் 9 .1 வகுப்புகள்). | | |
| பள்ளியில் சேர்க்கப்பட்ட மாண வர்கள் (இலட்சத்தில்) .. | 8·02 | 7·93 |
| மொத்த எண்ணிக்கை (இலட்சத் தில்) .. .. .. | 23·46 | 23·80 |
| விழுக்காடு (சதவீதம்) .. | 34·1 | 33·4 |





1977–78-ல் 11-ம் வகுப்பில் புதிய பாடத்திட்டம் அமுலுக்கு வந்தபடியால் 1977 ஆம் ஆண்டு மார்ச்சில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதித் தோல்வியுற்ற மாணவர்களுள் எவரையும் 1977–78-ல் பதினோரும் வகுப்பில் இரண்டாம் தடவையாகப் பயில அனுமதிக்க இயலவில்லை. 1977–78ல் 14—17 வயதுத் தொகுதி மாணவர் எண்ணிக்கை குறைந்ததற்கு இது முக்கியமான காரணமாகும்.

4. 1978–79 ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும், (உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 200 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகளும்; உயர் தொடக் கப் பள்ளிகளுக்கு 200 முதல் நிலைத் தமிழாசிரியர் பதவி களும் புதிதாக ஏற்படுத்தப்படும்.

5. தமிழ்நாட்டில் உள்ள 2½ லட்சம் ஆசிரியர்களோடும் பள்ளிக் கல்வித்துறை நல்ல தொடர்பு வைத்திருக்க வகை செய்து "தமிழ்நாட்டில் கல்வி" என்னும் பெயரில் ஒரு காலாண்டு இதழ் ஒன்றை வெளியிட அரசு ஏற்பளித்துள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் உள்ள ஆசிரியர் குழு ஒன்று அதை வெளியிடும். தமிழ், ஆங்கிலம் இரு மொழி யிலும் கட்டுரைகளை அது வெளியிடும். கல்வி, நிருவாக விஷயங்களைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும். அவ்வப் பொழுது தெரியவரும் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடும். அரசாணைகள், கல்வி இயக்குநர் அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றுள் முதன்மை வாய்ந்தனவற்றின் சுருக்கங்களும் இடம் பெறும். ஆசிரியர்கள், அதிகாரிகள் ஆகியோர் எழுதும் கட்டுரைகளையும் வெளியிடும். பள்ளிக்கல்வி, அரசுத் தேர்வு, மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், பள்ளி சாராக் கல்வி, கல்லூரிக் கல்வி (தேவையானுல் பிறவகைக் கல்விகளோடு தொடர்புடைய வேறு துறைகள்) ஆகிய பல துறைகளுக்கும் பொதுவாக இவ்விதழ் பயன்படும்.

6. தற்பொழுது பெற்றோர்–ஆசிரியர் சங்கம் வெளியிடும் "செய்தி", தமிழ்நாடு சாரண சாரணியர் சங்கத்தின் இதழ் போன்றவையெல்லாம் மேற்சொன்ன பொது இதழுடன் இணைக்கப்படும். அரசுத் தேர்வு இயக்குனர் நடத்தும் தேர்வு களைப் பற்றிய விவரங்களும் அவ்விதழில் அவ்வப்பொழுது வெளிவரும். இன்னும் சில காலம் கழித்து தேவையானுல் மூன்று மாதங்களுக்குக் குறைந்த இடைவெளியில் அந்த இதழ் வெளியிடுவது குறித்துக் கருதப்படும்.

## (ii) தொடக்கக் கல்வி.

மாணவர் சேர்க்கை—

1. மேலே குறிப்பிட்டபடி 6–11 வயதுத் தொகுதிச் சிறுர்களில் 93·4 விழுக்காட்டினரும், 11–14 வயது தொகுதிச் சிறுர்களில் 56.8 விழுக்காட்டினரும் இதுவரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1977–78ஆம் ஆண்டில் இவ்விரு வயதுத் தொகுதிகளின்கீழ் 3.21 இலட்சம் மாணவ, மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1977–78 ஆம் ஆண்டில் இருந்து 33,104 தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 65.85 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,978 ஆகும். ஆசிரியர், மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

2. தொடக்கப்பள்ளியில் சேரும் மாணவ மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே பெரும் எண்ணிக்கையில் பள்ளியிலிருந்து நின்றுவிடும் நிலையை மாற்ற அரசு முனைந்துள்ளது. தற்பொழுது இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில் எந்த அளவுக்கு இந்தப் பிரச்சினை உள்ளது என்பதைப் பின்வரும் புள்ளிவிவரங்கள் காட்டும்:—

| ஆண்டு. | வகுப்பு. | மொத்த மாணவர். (இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1972–73 .. .. | 1 | 13.86 |
| 1973–74 .. | 2 | 12.62 |
| 1974–75 .. .. | 3 | 11.18 |
| 1975–76 .. .. | 4 | 9.55 |
| 1976–77 .. .. | 5 | 8.03 |

இவற்றிலிருந்து முதல்வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்கின்றனர் என்பதும் மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்டு நின்றுவிடுகின்றனர் என்பதும் தெளிவாகும்.

3. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்களும், கற்பலகைகளும் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ, மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்ப



தையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு (கல்வி வல்லுநர்கள் கருத்தைப் பின்பற்றி) தொடக்கப் பள்ளிகளில் முதல் சில வகுப்புகளிலாவது ஆண்டிறுதித் தேர்வில் மாணவர்கள் எவரையும் தோல்வியுறச் செய்யாமலிருப்பதும் ஓரளவு பரிகாரமாகும். ஆந்திரப் பிரதேசம், கேரளா முதலிய மாநிலங்களில் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, முதல் சில வகுப்புகளில் மாணவர்களைத் தோல்வியுறச் செய்யக் கூடாது என்ற நிலை செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1977–78 முதல் இம்மாநிலத்திலும் 1–3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல்வகுப்பிற்கனுப்பும் முறையைச் செயல்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. அதாவது, எடுத்துக்காட்டாக, 1977–78ஆம் ஆண்டில் 1/2/3 வகுப்புகளில் பயில்வோர் அனைவரும் 1978–79-ம் ஆண்டில் 2/3/4 வகுப்புகளுக்கு அனுப்பப்படுவர். அதே நேரத்தில் கீழ்வகுப்புகளில் புகட்டப்படும் கல்வியின் தரம் நல்ல முறையில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும், அவ்வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் படிப்பறிவு வளர்ச்சியை அவ்வப்பொழுது மதிப்பிட்டு, கவனம் தேவையான மாணவர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்திடச் செய்யவும், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4. தொடக்கப் பள்ளிகளில், அறிவியல் போதனையை மேம்படுத்தும்பொருட்டு பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற்பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும் ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இதன் மூலம் 12,620 தொடக்கப் பள்ளிகளும், 3,830 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1978–79ல் மேலும் 150 உயர் தொடக்கப் பள்ளிகள் பயனடையும்.

**நண்பகல் உணவுத் திட்டம்—**

5. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படி செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இப்பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகிய மிகவும் ஏழைக்குடும்பங்களிலிருக்கின்ற மாணவர்கள் இத்திட்டத்தால் நற்பயன் பெறுகின்றனர். தொடக்க-உயர் தொடக்க நிலைப் பள்ளிகளில் 1–8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.25 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத் துறை நடத்திவரும் பள்ளி

களில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ் வெண்ணிக்கையில் அடங்குவர். 1978–79ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் செலவிடப்படும். நண்பகல் உணவுத் திட்டத்திற்காக மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. 'கேர்' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவை தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது.

6. நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப் பெற்று சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் உணவு எடுத்துச்சென்று வழங்கும் மையச் சமையற்கூடத் திட்டம் செங்கற்பட்டு தென்ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இம்ம வட்டங்களில் இயங்கிவரும் 97 சமையற் கூடங்களும் கேர் ாநிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம்மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற்கூடங்களிலிருந்து பள்ளிகட்கு உணவை எடுத்துச்சென்று வழங்க 224 உந்துவண்டிகளையும் 'கேர் நிறுவனம் வழங்கியுள்ளது. இந்த பெட்ரோல் வண்டிகள் பயன்படாத வகையில் பழுதாகும் போது புதிதாக வாங்கும் வண்டிகளை டீசல் வண்டிகளாக வாங்கினால் செலவு குறையும். ஆகையால் அவ்வாறே படிப் படியாகச் செய்யப்பட்டு வருகிறது. 1976–77லும் 1977-78லும் 23 டீசல் வண்டிகள் வாங்கப்பட்டன. 1978-79-ல் 10 டீசல் வண்டிகள் வாங்கப்படும். இவ் வண்டிகளையும், சமையல் சாதனங்களையும் பழுது பார்க்க 'கேர்' நிறுவன்த்தின் உதவியுடன் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள விக்கிரவாண்டியில் ரூ. 15 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஒரு பணிமனை செயல்பட்டு வருகிறது.

7. நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சீராகச் சேமித்து அவ்வப்பொழுது வழங்கிட 'கேர்' நிறுவன உதவியுடன் ஏறத்தாழ ரூ. 3 இலட்சம் செலவில் வட்டாரக் கிடங்குகள் எட்டும், அடையாற்றில் மையக் கிடங்கு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.



இலவசப் புத்தகங்கள் வழங்குதல்—

8. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். 1972–73-ம் ஆண்டிலிருந்து பாடநூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்காக பாடநூல் நிறுவனம் ஆண்டுதோறும் ரூ. 25 இலட்சம் செலவிட்டு வருகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்குச் சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் 1978–79இல் ரூ. 3 இலட்சத்தை மாநில அரசு செலவிடும்.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்—

9. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75லிருந்து தொடக்கப் பள்ளி கட்டிட மானியம் ரூ. 10,000, ரூ. 17,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிருவாகத்தினர் தர வேண்டிய குறைந்தபட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000, ரூ. 8,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1978–79இல் நகராட்சி மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் தர ரூ. 4 இலட்சமும் அரசுத் தொடக்கப் பள்ளி கட்டிடங்களுக்காக ரூ. 11 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1978–79இல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி கட்டிடங்களுக்காக ரூ. 75 இலட்சம் சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு–செலவுத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்—

10. தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 33,000 தொடக்கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில் 23,000 பள்ளிகளை (சுமார் 19,900 தொடக்கப் பள்ளிகளும், 3,100 உயர் தொடக்கப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வருகின்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்)— உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்

படுகிறது. 1971ஆம் ஆண்டு மக்கட் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.

11. சுமார் 1,450 பள்ளிகளை (சுமார் 1,060 தொடக்கப் பள்ளிகளும், சுமார் 390 உயர் தொடக்கப் பள்ளிகளும்) நகராட்சிகளும், சென்னை, மதுரை மாநகராட்சிகளும் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

### (ii) உயர்நிலைப்பள்ளிக் கல்வி

1. 1977–78ல் தமிழ்நாட்டில் 14–17 வயதுத் தொகுதியினர் 23.80 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 33.4 விழுக்காடாகிய 7.93 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9–11 வகுப்புக்களில் பயின்று வந்தனர். 1977–78ல் இம்மாநிலத்தில் இருந்த 3,058 உயர்நிலைப் பள்ளிகளில் 73,000 ஆசிரியர்களும், 18.31 இலட்சம் மாணவர்களும் இருந்தனர். 1977–78ஆம் ஆண்டில் 28 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன (அரசுப் பள்ளிகள் 21ம், தனியார் பள்ளிகள் 7ம்).

அறிவியல் கல்வி.

2. புதிய பாடத் திட்டத்தின்கீழ் ஆறும் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித் தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கும் நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது. (ஆய்வுக்கூட கட்டிடத்திற்காக ரூபாய் 37,000மும், கருவிகளுக்காக ரூபாய் 18,000மும்) தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ.40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வித் துறை இயக்குநரே வாங்கி வழங்குகிறார். எஞ்சிய ரூ. 22,200 ஆய்வுக்கூட கட்டிடத்திற்காகும்.



கட்டிடத்திற்கான செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ.22,200, இதில் எது குறைவோ அது என்ற அடிப்படையில் ஆய்வுக்கூட கட்டிட மானியம் வழங்கப்படுகிறது. 1977–78 முடிய 943 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக்கூட நிதியுதவி பெற்றிருந்தன. (1977-78ம் ஆண்டில் பெற்ற 50 பள்ளிகள் உட்பட). 1978–79ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த வகையில் 1978–79ல் செலவிட வேண்டிய தொகை உட்பட). 1978–79–ல் மேலும் 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடம் அமைக்கப்படும்.

3. தற்பொழுதுள்ள 3,058 உயர்நிலைப் பள்ளிகளில் 507 பள்ளிகளில் (அரசு 125; தனியார் 344; நகராட்சி 38; மட்டுமே ஆய்வுக்கூட உதவியாளர்கள் உள்ளனர். 1978–79ல் மேலும் 80 பள்ளிகளில் ஆய்வுக்கூட உதவியாளர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

4. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 42 நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகள் உள்ளன (1977–78-ல் வாங்கிய 6 வண்டிகள் உட்பட). இதனால் தற்போதுள்ள 48 கல்வி மாவட்டங்களுள் 42 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஆய்வுக்கூட வண்டி பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

5. 1977 நவம்பரில் சென்னையில் மாநில அறிவியல் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. 63 உயர்நிலைப் பள்ளிகள் அதில் பங்கேற்றன. மாவட்ட நகரங்களிலும் அத்தகைய அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதே இந்த அறிவியல் கண்காட்சிகளின் நோக்கமாகும்.

6. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொருத்தமான நூலக புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1977–78ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1978–79ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒலி-ஒளிக் கல்வி—

7. 1977–78ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் தேர்ந்தெடுத்த ஐந்து பள்ளிகளுக்கு ஒலி-ஒளிக் கல்வி வசதியை பெருக்கும் வகையில் பள்ளிக்கு ஒரு 16

நடமாடும் மருத்துவ வண்டிகள்—

14. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக் கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன.

மெட்ரிகுலேசன் பள்ளிகள்—

15. தமிழ்நாட்டில் 31 மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 31,000 மாணவர்கள். ஆசிரியர்கள் எண்ணிக்கை 1,100 ஆகும். இவை மாணவர் களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாட மொழி ஆங்கில மாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. இவை அண்மைக் காலம் வரை சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங் களுடன் இணைந்து இருந்தன. 1976ஆம் ஆண்டு டிசம்பரி லிருந்து இவை பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன.

16. மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளிகளுக்குத் தனி ஆய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(IV). பள்ளிப் பாடங்கள், பாடத் திட்டம், பாடநூல்கள்.

பள்ளிப் பாடத் திட்டத் திருத்தம்—

1972–73ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு அடிப்படையிலான புதிய பாடத் திட்டம் படிப்படி யாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1976–77 ஆம் ஆண்டுக்குள் 1–10 வகுப்புகளில் அப்பாடத் திட்டம் அமுலுக்கு வந்து விட்டது. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் 1976ஆம் ஆண்டுக்குள் 1–10 வகுப்புகளில் அனைத்துப் பாடங் களிலும் புதிய பாடத் திட்டம் அமுலுக்கு வந்து விட்டது. புதிய பாடத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருந்த புதுமுறைக் கணிதம், தரமுயர்த்தப்பட்ட அறிவியல் ஆகியவற்றை நன் முறையில் நடத்த வகை செய்வதற்காக 1972–73 முதல் 1975–76 வரை கணிதம், அறிவியல் ஆசிரியர்களுக்குப் பணி யிடைப் பயிற்சித் திட்டம் ஒன்று பெருமளவில் நடத்தப் பட்டது. தொடக்கப் பள்ளிகளிலிருந்து 60,000 ஆசிரியர் கள், உயர் தொடக்கப் பள்ளிகளிலிருந்து 30,000 ஆசிரி யர்கள், உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து 12,000 ஆசிரியர்கள் ஆகியோர் இத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றனர்.



2. தற்போது பள்ளிகளில் அமுலில் உள்ள பாடத்திட்டத் தின் சுமை மாணவர்களுக்கு அதிகமாக இருப்பதாக பல இடங்களிலிருந்தும் முறையீடுகள் வந்தன. மைய அரசுக் கல்வித் துறைக் குழு ஒன்றும் பள்ளிப் பாடத் திட்டங்களின் பளுவைக் குறைப்பதன் தேவையை வலியுறுத்தியுள்ளது. எனவே கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங்களில் (குறிப்பாக கணக்கில்) உள்ள அதிகப்படி சுமையை 1978–79 முதல் அனைத்து வகுப்புகளிலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. புதிய பாடத்திட்டத்தின்கீழ் (முன்னர் 10, 11-வது வகுப்புகளில் கற்பிக்கப்பட்டு வந்த) விருப்பப் பாடங்களுக்கு இடமில்லை. எனவே, 1976–77ஆம் ஆண்டிலிருந்து 10-வது வகுப்பிலும், 1977–78ஆம் ஆண்டிலிருந்து 10–11 வகுப்பு களிலும் விருப்பப் பாடங்கள் நீக்கப்பட்டு விட்டன. எனினும் விருப்பப் பாட ஆசிரியர் பதவிகள் சுமார் 3,200-ல் எவற்றை யும் நீக்கக்கூடாது என்றும், ஆசிரியர்—மாணவர் விகிதத் திற்குட்பட்டு அந்தந்தப் பள்ளியிலோ அல்லது பிற பள்ளி களிலோ 8–11 வகுப்புகளுக்கு அப்பதவிகளை மாற்றி அப் பதவிகளைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டது. எனவே, விருப்பப் பாடங்கள் நீங்கி விட்டது என்ற ஒரு காரணத்தினுல் மட்டும் எந்த ஆசிரியரும் வேலை இழக்க நேரவில்லை.

4. அவ்வாறே, 1977–78ஆம் ஆண்டில் 11ஆவது வகுப் பில் மட்டும் கற்பிக்கப்பட்டு வந்த இருமுனைப் பாடத் திட்டங்களைக் கற்பிக்கும் 1,541 ஆசிரியர்களுக்கும் இவ் வாண்டு வேலைப்பளு குறைந்திருப்பினும், அவர்களையும் இவ்வாண்டு பணியில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டு மென ஆணை வெளியிடப்பட்டது. 1978–79 முதல் இரு முனைப் பாடங்களின் நிலைமை, அவற்றைக் கற்பிக்கும் ஆசிரி யர்கள் நிலைமை ஆகியவை குறித்து விரைவில் ஆணை வெளி யிடப்படும்.

பல்வகைப் பயிற்சிப் பாடஙசள்.

5. உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சி தருவதற் காக பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளை நிறுவுமாறு கோத்தாரி கல்விக்குழு பரிந்துரைத்துள்ளது. 1974–75, 1975–76 ஆண்டுகளில் சுமார் 70 உயர்நிலைப் பள்ளிகள் பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இப் பள்ளிகள் வானொலிப் பெட்டிகள் பழுது பார்த்தல், மின் இயக்கிகள்

பின்னுதல், உந்து வண்டி பழுது பார்த்தல், வேளாண்மைப்
பொறியியல், விற்பனையாளர் பயிற்சி, தையல் போன்ற
வற்றைப் பாட நேரத்திற்குப் புறம்பான வேளைகளில் கற்பிக்
கின்றன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

பள்ளிப் பாட நூல்கள்.

6. பள்ளிகளுக்கான அரசுப்பாட நூல்களை வெளியிட்டு
வழங்கும் பொறுப்பு 1970-ல் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப்
பாட நூல் நிறுவனத்துடையதாகும். தரமான நூல்களை
உருவாக்குவதிலும், அவற்றை மலிவு விலையில் விற்பதிலும்
அந்நிறுவனம் நற்பணியாற்றியுள்ளது. 1977–78-ல் அந்
நிறுவனம் ரூபாய் மூன்றரைக்கோடி விலையுள்ள சுமார் 2½
கோடி எண்ணிக்கை பாட நூல் படிகளை அச்சிட்டு
வழங்கியது.

7. இந்நிறுவன் புத்தகங்கள், 47 மொத்த விற்பனை
யாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்) மூலமாகவும், பதிவு செய்
யப்பட்ட 1,600 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும்
மாநில முழுவதும் விற்கப்படுகின்றன. பாட நூல்கள் உரிய
காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்குக் கிடைக்க
இந் நிறுவனம் வகை செய்துள்ளது.

8. 1977–78-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி
களில் உள்ள மாணவர்களுக்கு ரூ. 3.60 லட்சம் மதிப்புள்ள
பாடநூல்களையும் பயிற்சி நோட்டுகளையும் பாட நூல் நிறு
வனம் இலவசமாக வழங்கியது.

(V) ஆசிரியர் பயிற்சி.

1. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப
பயிற்சி அளித்திட, இம்மாநிலத்தில் தற்போது 80 ஆசிரியர்
பயிற்சி நிலையங்கள் உள்ளன (இளஞ்சிறுர் பள்ளி ஆசிரியர்
பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ—இந்திய ஆசிரியர்
பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி வில்லிங்டன் மற்றும் புனித
கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு
ஒன்ருக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு
ஆகியவை உட்பட). கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற
ஆசிரியர்களிடையே. வேலையில்லாத் திண்டாட்டம் பெரு
மளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில்
ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டுதான் மாணவர்கள் சேர்த்துக்
கொள்ளப்படுகிருர்கள். அதுவும், குறைந்த எண்ணிக்கை
மாணவர்களே சேர்க்கப்படுகின்றனர். 1977–78-ல்
பள்ளிக்கு 35 பேர் வீதத்தில் சுமார் 2,600 மாணவர்கள்
செகண்டரி ஆசிரியர் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டன ர.





2. தற்போது இம்மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கில
மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒன்பது
செயல்பட்டு வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர்,
திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள
மையங்கள் ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்
1,755 பேருக்கு (35 தொகுதியினர் : மூன்று வாரப் பயிற்சி)
ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன.
கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், மேலூர்
ஆகிய ஆறு இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டு தோறும்
உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 2,700 பேருக்கு (60
தொகுதியினர் : நான்கு வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்று
விப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. பயிற்சி பெற்ற
பட்டதாரி ஆசிரியர்களுக்காக 3 முதல் 5 மாதங்கள் நடை
பெறும் நீண்டகாலப் பயிற்சி, ஆண்டுதோறும் பெங்களூரி
லுள்ள வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் அளிக்கப்பட்டு
வருகிறது. இந்நிறுவனத்தில் இதுவரை 536 பட்டதாரி
ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

3. அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் தரத்தை
மேம்படுத்தும் நோக்கத்துடன், ஒவ்வொரு ஆண்டும் பி.டி
ஆசிரியர்கள் எம். எட். படிப்பிற்கு அனுப்பப்படுகின்றனர்.
இதுவரை, 100 ஆசிரியர்கள் முகமையில் அனுப்பப்பட்டுள்
ளனர். 1978–79-ல் மேலும் 20 பேர் முகமையில் அனுப்பப்
படுவர்.

(VI) பள்ளித் தேர்வுகள்.

1. 1975 பிப்ரவரி வரை பள்ளிக் கல்வி இயக்குநரே
அரசுத் தேர்வு ஆணையாளராகவும் இருந்தார். 1975
பிப்ரவரியிலிருந்து, அரசுத் தேர்வுகளுக்குத் தனியாக
இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இவரே கல்வி
ஆராய்ச்சி பயிற்சிக்கான மாநிலக் குழுவுக்கும்
இயக்குநராவர்). அவருக்கு உதவியாக துணை இயக்குநர்
ஒருவரும், செயலாளர் ஒருவரும், கூடுதல் செயலாளர்கள்
மூவரும், நேர்முக உதவியாளர் ஒருவரும், முதுநிலைக்கணக்கு
அதிகாரி ஒருவரும் உள்ளனர்.

2. இவர் ஆண்டுதோறும் சுமார் 34 தேர்வுகளை
நடத்துகிருர் (எஸ். எஸ். எல். சி.; ஆங்கிலோ இந்திய
பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வு; ஆசிரியர் பயிற்சி
சான்றிதழ் தேர்வு உட்பட). அவற்றில் ஆண்டுக்கு ஒரு
முறை நடப்பன சில, ஆண்டுக்கு இரண்டு முறை நடப்பன
சில.

[1978 மார்ச் 2

3. இத்துறை நடத்தும் தேர்வுகளில் பள்ளியிறுதித் தேர்வு முதன்மையானதாகும். அது மார்ச் தேர்வில் சுமார் 1,000 இடங்களிலும் அக்டோபர் தேர்வில் சுமார் 150 இடங்களிலும் நடைபெறுகிறது. 1977 மார்ச் தேர்வில் எழுதியவர்களின் எண்ணிக்கை 2.85 இலட்சமாகும். அவர்களில் வெற்றி பெற்றவர்களின் விழுக்காடு 55 ஆகும். 1977 அக்டோபரில் 51,000 பேர் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதி அவர்களில் 16.5 விழுக்காட்டினர் தேர்ச்சி பெற்றனர்.

4. 1978 மார்ச்—ஏப்ரல் மாதங்களில் பின்வரும் மூன்று வகையான மாணவர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்வுகள் எழுதுவார்கள் :—

(1) 10 ஆண்டு பள்ளிப் படிப்புக்கான புதிய பாடத்திட்டத்தை 10 ஆண்டுகளில் முடித்தவர்கள்.

(2) மேற்சொன்ன 10 ஆண்டுப் பள்ளிப் படிப்புப் பாடத்திட்டத்தை 11 ஆண்டுகளில் (அதாவது 9—10 வகுப்புக்களுக்கான புதிய பாடத்திட்டத்தை 9—11 வகுப்புகளில் 1975—76 முதல் 1977—78 முடிய) பயின்றவர்கள்.

(3) பழைய (1969ம் ஆண்டு திட்டப்படி) 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. பாடத் திட்டப்படி பயின்று 1977 அக்டோபரிலோ அதற்கு முன்னரோ எஸ்.எஸ்.எல்.சி. தேற முடியாமல் 1978 மார்ச்சில் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதுபவர்.

இந்த மூன்று வகையினரும் வெவ்வேறு வகைக் கேள்வித் தாள்களுக்கு விடையளிக்க வேண்டியிருக்கும்.

5. பள்ளிகளில் பயின்று அவற்றின் மூலம் எஸ்.எஸ். எல்.சி. தேர்வு எழுதுபவர்களுள் பின்வரும் வகையினர் 1978 மார்ச்-ஏப்ரல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு தேர்வுக் கட்டணமாகிய ரூ. 15 தரவேண்டியதில்லை என ஆணையிடப் பட்டுள்ளது :—

(1) ஷெட்டியூல் வகுப்பினர், மலை சாதியினர் ஆகிய பிரிவினர்.

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுள் பெற்றோர் அல்லது காப்பாளர் ஆண்டு வருமானம் ரூ. 2,500க்கு மேற்போகாமல் இருப்பவர்கள்.



1978 மார்ச் 2]

6. 18 வயதடைந்தவர்களும், இம்மாநிலத்தின் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுமான அனைவரும், தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ். எல்.சி. தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர்.

7. கல்லூரி வகுப்பில் சேருவதற்குத் தகுதி பெற வேண்டுமாயின் தற்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் ஒரே தடவையில் எல்லா பாடங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும். இந்த முறையை மாற்றியமைத்து பாடம் பாடமாக (இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் தேர்வு எழுதி) தேர்ச்சி பெற்றாலும் உயர் வகுப்புகளில் சேர அனுமதிக்கலாம் என செகண்டரி கல்விக் குழுவும், உயர் செகண்டரிக் கல்விக் குழுவும் பரிந்துரை செய்துள்ளன. இதுகுறித்து பின்வருமாறு அரசு ஆணையிட்டுள்ளது: அதாவது எஸ்.எஸ்.எல்.சி., ஏ.ஐ.எஸ்.எல்.சி., ஓரியன்டல் பள்ளியிறுதித் தேர்வு (ஓ.எஸ்.எல்.சி.), மெட்ரிகுலேசன் ஆகிய எந்த தேர்வாயினும் சரி, 1978 மார்ச்—ஏப்ரல் தேர்வில் அனைத்துப் பாடங்களையும் எழுதி அவற்றுள் எவற்றிலாவது தோல்வியுற்றால் தோல்வியுற்ற பாடங்களை மட்டும் 1978 அக்டோபரில் எழுதி அவற்றில் மட்டும் அப்பொழுது வெற்றி பெற்றால் 1979—80 முதல் அவர்கள் (உயர் செகன்டரி கல்விக்குழு விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு) ஹையர் செகண்டரி வகுப்பில் சேரமுடியும் என்பதே அந்த ஆணையாகும். இது இந்த அரசு கல்வித் துறையில் கொணர்ந்துள்ள ஒரு முதன்மை வாய்ந்த சீர்திருத்தமாகும்.

8. எஸ்.எஸ்.எல்.சி., ஆங்கிலோ இந்திய பள்ளிப் படிப்புச் சான்றிதழ், ஓரியண்டல் பள்ளிப் படிப்பு சான்றிதழ் ஆகிய தேர்வுகளில் முதல்/இரண்டாவது/அடுத்த சில தகுதி மாணவர்களுக்கு தங்கப் பதக்கம்/வெள்ளிப் பதக்கம்/தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் முதன் முதலாக 1977 டிசம்பரில் மாணவர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### (VII) கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக்கான மாநிலக் குழு.

1. கல்வி ஆராய்ச்சி பயிற்சிக்கான மாநிலக் குழு (SCERT) பள்ளிக் கல்வி நிலையில் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. இது நற்பயன் விளைத்த பல கருத்தரங்குகளையும் பயிற்சி வகுப்புகளையும் பணிப் பயிற்சிகளையும் நடத்தியுள்ளது.

2. பிரிட்டிஷ் கவுன்சிலின் உடனுழைப்புடனும், உதவியுடனும் இக்குழு சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் நிலையங்களை நிறுவியுள்ளது. கல்விப் பிரச்சினைகள் குறித்து ஆசிரியர்கள், ஒன்றுகக்கூடி விவாதிப்பதற்கும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கும் ஏற்ற பொது மன்றங்களாக இந்நிலையங்கள் திகழ்கின்றன.

3. கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் புதிய பாடத்திட்டங்களைச் செயல்படுத்த உதவுமுகத்தான் இந்நிறுவனம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு உதவியாக கணிதம் பயிற்றுவிக்கும் உபகரணத் தொகுப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது; புதுக் கணிதத்தில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களையும் இக்குழு அவ்வப்பொழுது தீர்த்து வந்தது.

4. யுனிசெப் உதவியுடன், இக்குழு சோதனைத்திட்டங்கள் இரண்டை நடத்தி வருகின்றது. ஒன்று "தொடக்க கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்" இதன்கீழ் புதிய பாடத்திட்டம் ஒன்று சில பள்ளிகளில் செயல்படுகிறது. மற்றொன்று, "சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி, வளர்ச்சி நடவடிக்கைகள்". இதன்கீழ் பள்ளிக் கல்வி, இளஞ்சிறார் பள்ளிக் கல்வி, பள்ளிசாராக் கல்வி ஆகிய மூன்றும் இணைந்த கல்வி முப்பது தொடக்கப் பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

5. பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 50 ஊர்களிலுள்ள தொடக்கப் பள்ளிகளின் மூலம் "கல்வி மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்" ஒன்றை மாநிலக்கல்வி ஆராய்ச்சி பயிற்சி குழு செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ் கிராமப்புற வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். மாணவர்களின் பெற்றோர்களும், பள்ளியை விட்டு நின்றுவிட்ட சிறுவர்களும் சுயமாக வேலை செய்து ஓரளவு சம்பாதிக்க வகை செய்யும் திறமைகளை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு அந்த ஆசிரியர்கள் உதவுகிறார்கள்.

6. 1978 ஜனவரியிலிருந்து SCERTல் "தேர்வு முறை சீர்திருத்தப் பிரிவு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பள்ளித் தேர்வுகளில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றியும், "கேள்வி வங்கிகள்" போன்ற புதுமையான மதிப்பீட்டு முறைகள் பற்றியும் அப்பிரிவு ஆய்வுகள் செய்யும்.



(VIII) விளையாட்டுகள், உடற்பயிற்சிக் கல்வி முதலியன

அனைத்துப் பள்ளிகளிலும் உடற் பயிற்சிக்கல்வி கட்டாயமாகும். எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் 6-8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப்பள்ளிகளிலும் 6-9 வகுப்புகளிலும் உடற் பயிற்சிக்கல்வி தேர்வுக்கான பாடங்களில் ஒன்றாகும். இந்தப் பள்ளிகள் அனைத்திலும் 6-9 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் உடற் பயிற்சிக் கல்வியில் பெறும் மதிப்பெண்கள், அடுத்த உயர் வகுப்பிற்கு அனுப்புவதற்கான கொள்கைகளை வகுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

2. மாநில விளையாட்டுக் குழுவும் மாவட்ட விளையாட்டுக் குழுக்களும் மாணவர்களிடையே மட்டுமின்றி பொது மக்கள் இடையேயும் விளையாட்டுப் போட்டிகளையும், விளையாட்டுகளையும் நன்கு பரப்பிட பணிசெய்து வருகின்றன. மாநில விளையாட்டுக் குழுவிற்கு 1975-76-ல் சுமார் ரூ. 12 இலட்சம் மட்டுமே மானியம் வழங்கப்பட்டது. 1977-78-ல் மானியத் தொகை ரூ. 16 இலட்சமாக உயர்த்தப்பட்டது. கூடுதல் மானியத்தைக் கொண்டு கிராமங்களிலுள்ள மாணவர்களல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளையும், உடற் பயிற்சியையும் தீவிரமாகப் பரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

3. மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிப்பதற்கு என உடற் பயிற்சிக் களரிகளை கல்வி நிலையங்களில் தொடங்கவும் ஏற்பளிக்கப்பட இருக்கிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டுகளையும், உடற் பயிற்சியையும் பேணி வளர்க்கும் நோக்கத்துடன் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் போற்றி அவர்களுக்கு ஆதரவும் பாராட்டும் அளித்திட அரசு கருதியுள்ளது, தலை சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருள் முதுமைக் காலத்தில் வறுமையால் வாடுபவர்களுக்கு (மாத வருமானம் ரூ. 150-க்கு குறைவாக உள்ளவர்களுக்கு) மாதம் ரூ. 75 வீதம் உதவிப் பணம் கொடுக்கும் திட்டமொன்று 1978-79 முதல் தொடங்க இருக்கிறது. இவ்வாண்டில் 25 பேருக்கு இந்த உதவிப் பணம் தரப்படும்.

சாரண சாரணியர் இயக்கம்.

5. தமிழ்நாடு சாரணர் கழகம் 1977-78-ல் மொத்தம் 1,25,000 சாரணர்களையும், சாரணியர்களையும் கொண்டிருந்தது. 1977-78-ல் கூடுதலாக 7,000 மாணவர்கள் ரூ. 60,000

செலவில் சாரணர்களாகச் சேர்க்கப்படுவர். 1977-ம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் சான்றிதழ், பரிசு வில்லைகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள 650 சாரணர், சாரணியர்களை, அனுப்பிய பெருமை தமிழ்நாட்டுச் சாரண சாரணியர் கழகத்தையே சாரும்.

6. பாரத் சாரண சாரணியர் அமைப்பின் எட்டாவது தேசிய விழாவை சென்னையில் 1979 சனவரியில் கொண்டாட தமிழக அரசு இசைந்துள்ளது. நாட்டின் அனைத்துப்பகுதிகளிலிருந்தும் அண்டை நாடுகள் சிலவற்றிலிருந்தும் சுமார் இருபதாயிரம் சாரண சாரணியர் அவ்விழாவில் கலந்து கொள்வர். இந்தத் தேசிய விழா முதன்முதலாக தமிழ்நாட்டில் நடைபெற இருக்கிறது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க கல்வியமைச்சர் தலைமையில் மாநில மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

(ix) பள்ளி வளர்ச்சியில் சமுதாயத்தினர் பங்கேற்றல்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்

பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் (1976-77 முடிய) பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் 556 நடந்துள்ளன. பொதுமக்களிடமிருந்து ரூ. 14 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது அறிவியல்- நூல் நிலைய மேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 1976-77 வரை ரூ. 3 கோடி செலவில் 41 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

(x) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்.

1. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் தற்போது பின்வரும் விவரப்படி சுமார் 2.53 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.—

| பள்ளிகள். | அரசு. | ஊராட்சி ஒன்றியம். | நகராட்சி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொடக்கப் பள்ளி .. | 7,814 | 66,757 | 8,918 |
| உயர் தொடக்கப் பள்ளி | 4,257 | 29,493 | 6,699 |
| உயர்நிலைப் பள்ளி .. | 39,403 | .. | 3,974 |
| | 51,474 | 96,250 | 19,591 |



| பள்ளிகள். | தனியார். | மொத்தம். |
|---|---|---|
| (1) | (5) | (6) |
| தொடக்கப் பள்ளி .. | 27,695 | 1,11,184 |
| உயர் தொடக்கப் பள்ளி | 28,345 | 68,794 |
| உயர்நிலைப் பள்ளி .. | 29,662 | 73,039 |
| | 85,702 | 2,53,017 |

| பள்ளிகள். | ஆண்கள், பெண்கள் விவரம் தனித்தனியே | |
|---|---|---|
| | ஆண். | பெண். |
| (1) | (7) | (8) |
| தொடக்கப் பள்ளி .. | 69,846 | 41,338 |
| உயர் தொடக்கப் பள்ளி | 36,755 | 32,039 |
| உயர்நிலைப் பள்ளி .. | 49,018 | 24,021 |
| | 1,55,619 | 97,398 |

2. தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கும் ஊதியத்தால் ஏற்படும் செலவு 1970-71-ல் சுமார் ரூ. 55 கோடியாக இருந்தது. 1978-79-ல் சுமார் ரூ. 130 கோடியாக உயரும்.

தேர்வுத்தர பதவிகள் :

3. பிற துறைகளில் பணியாற்றுபவர்களோடு ஒப்பிடுகையில் ஆசிரியர்கட்குள்ள பதவி உயர்வு வாய்ப்பு குறைவே. எனவே ஏறத்தாழ எல்லாவகை ஆசிரியர்களுக்கும் பத்தாண்டு பணி முடிந்ததும் தேர்வுத்தரப் பதவிகள் தரப்படுகின்றன. பத்தாண்டுப் பணியைக் கணக்கிடும்பொழுது அனைத்து வகை (அரசு, உள்ளாட்சி, தனியார்) நிருவாகப் பள்ளிகளிலும் ஆற்றிய பணி கணக்கிடப்படும் (பணி முறிவுகள் இருந்தபோதிலும்). பணி முறிவுக் காலம் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

4. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியருக்கான தகுதி இருந்தும் தொடக்கநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களாகத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றி வந்த 1,500 ஆசிரியர் களுக்கு 1-6-1977 முதல் இடைநிலை ஆசிரியர் பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன (ஆண்டுக்கு ரூ. 7 இலட்சம் செலவில்).

**தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப்பள்ளி ஆசிரியர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் ஓய்வு காலப் பலன்கள்.**

5. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள், தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றி, 1-6-1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளிகளிலிருந்து 1-4-1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளன. அவர்கள், ஓய்வூதியம் பணிக்கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களையொப்பப் பெறுகின்ற னர். ஓய்வூதிய இறுதி ஆணை வெளியிடுவதில் காலத் தாழ்வு ஏற்பட்டால் அல்லலுறுமலிருக்க தற்காலிக ஓய்வூதியமும் பணிக்கொடையும் பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட்டுள்ளது.

6. மாநில அரசுப் பணியாளர்களுக்கான தமிழ்நாடு குடும்ப நல நிதித் திட்டமும் (அரசுப் பணியிலிருக்கும்போது ஒருவர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்கும் திட்டம்) தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

7. அரசுப் பள்ளியல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னர் இருந்த குடும்ப ஓய்வூதிய நிபந்தனைகள் 5-1-1978 அன்று தாராளமாக்கப்பட்டுள்ளன. 1-4-1962-க்குப் பின்னர் அவ் வப்பொழுது இறந்த அத்தகைய பள்ளி ஆசிரியர்கள் எவ்வ ளவு ஆண்டுகள் பணி செய்து இருந்தால் குடும்ப ஓய்வூதியம் தரலாம் என்று இருந்த ஆண்டு வரம்புகளை ஓரளவு குறைத்து இப்பொழுது ஆணையிட்டுள்ளதால் (முன்னர் இருந்த) கூடுதல் ஆண்டு வரம்புகள் அடிப்படையில் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுமல் இருந்தவர்களுள் பலர் இப்பொழுது குறைக் கப்பட்ட ஆண்டு வரம்பு அடிப்படையில் 5-1-1978 முதல் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவர்.

8. தமிழ் நாட்டு அரசு ஊழியர்களும், உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களும் ஏற்கெனவே பெற்றுவந்த மற்றொரு சலுகை யும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அண்மையில் விரிவாக் கப்பட்டுள்ளது. அதாவது தனியார் பள்ளி ஆசிரியர்கள் பணியிலிருக்கும்பொழுதே இறந்து விட்டால் உடனடியாக அவர்கள் குடும்பத்துக்கு ரூ. 1,000 வழங்கப்பட்டு பின்னர் அத்தொகை அவ்வாசிரியர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தி னருக்குச் சேர வேண்டிய ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம், குடும்பநலத் திட்டத்தின்கீழ் கிட்டும் ரூ. 10,000 ஆகிய இவை ஏதேனுமொன்றிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படும்.



9. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன் கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

**ஆசிரியர்கள் நலனுக்கான தேசிய நிதி**

10. ஆசிரியர்கள் நலனுக்கான தேசிய அமைப்பின் வசூல் நிதியிலிருந்து, 1976–77 ஆம் ஆண்டில், உதவி பெறத் தகுதி வாய்ந்த 517 ஆசிரியர்களுக்கு ரூ. 2 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. 1977–78-ல் இதுவரை சுமார் 500 ஆசிரியர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட் டுள்ளது.

11. ஆசிரியர்களின் பிள்ளைகள் தொழில் படிப்புகளைப் படிக்க படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1977–78-லிருந்து அரசு ஏற்பளித்துள்ளது. பணியிலுள்ள, ஓய்வுபெற்ற மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளை களுக்கு இப் படிப்புதவித் தொகைகள் கிட்டும். ஆண்டு தோறும் புதிதாக 80 படிப்புதவித் தொகைகள் அளிக்கப் படும் (பொறியியல் படிப்புக்கு 25; மருத்துவம் 25; வேளாண்மை 20; கால்நடை மருத்துவம் 10) இப்படிப் புதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 500 ஆகும். இதனைப் பெறும் மாணவர்களின் தாய் தந்தையர் மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 6,000-க்கு (வீட்டு வாடகைப்படி, நகர ஈட் டுப்படி போன்றவற்றைக் கணக்கிலெடுக்காமல்) மேல் போகக்கூடாது. ஆசிரியர் நல தேசிய நிதியிலிருந்து இப் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

12. ஆசிரியர் நல தேசிய நிதி பணத்திலிருந்து சென்னை யில் ரூபாய் 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் ஒன்றைக் கட்டவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

13. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் மாநில அரசு விருதுகள்

தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும், ரொக்கப் பணம் ரூபாய் 200-ம் அளிக்கப்படுகின்றன.

### அரசுப் பள்ளி ஆசிரியர்கள்

14. அரசு (பி. பிரிவு) உயர்நிலைப் பள்ளிகளில் 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1973-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதி முடியவுள்ள காலத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி. டி. ஆசிரியர்கள் சிலர் பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையான நியமனம் பெற்றனர். அரசு ''ஏ பிரிவு'' உயர்நிலைப் பள்ளிகளில் 1973-74-ல் முதலில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி. டி. ஆசிரியர்கள் சிலரும் பின்னர் அவ்வாணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டபின் முறையான நியமனம் பெற்றனர். இவ்விருவகை பி. டி. ஆசிரியர்களையும் அவரவர் எந்த நாளில் முதலில் தற்காலிகமாக நியமனம் பெற்றனரோ அந்த நாள் முதல் முறையாக நியமிக்க அரசு ஆணையிட்டுள்ளது (அவர்களுடைய பணிமூப்பு வரிசை தேர்வாணைக் குழு நிர்ணயித்தபடி நீடிக்கும்). இவ்வாறு முந்திய நாட்களிலிருந்து பணி முறைப்படுத்தப்படுவதால் சேர வேண்டிய நிலுவைப் பணம் முழுவதையும் அவர்களுக்குக் கொடுத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

15. அரசு (பி. பிரிவு) உயர்நிலைப் பள்ளிகளில் 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1973-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதி முடிய பி. டி. ஆசிரியர்களும் முதனிலைத் தமிழாசிரியர்களுமாக 702 பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர். தொழில் பழகு ஆசிரியர் திட்டம், ஐந்து இலட்சம் பேருக்கு வேலை திட்டம் ஆகியவற்றின்கீழ் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 250 பி. டி. ஆசிரியர்களும் 120 முதனிலைத் தமிழாசிரியர்களும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தவிர நெடுநாளாக தற்காலிகமாகப் பணியாற்றிவந்த வேறு பி. டி. ஆசிரியர்களும் முதனிலைத் தமிழாசிரியர்களும் இருந்தனர். இவர்கள் அனைவரின் பணியையும் முறைப்படுத்த நெடுநாளாக அரசுக்கு கோரிக்கைகள் வந்து கொண்டிருந்தன. பி. டி. ஆசிரியர்கள் முதனிலைத் தமிழாசிரியர் ஆகிய பதவிகளுக்கு முறையான நேரடி நியமனம் தமிழ்நாட்டு அரசுப்பணியாளர் தேர்வுக் குழு மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்று இருப்பதால் இத்தகைய தற்காலிக பி. டி. ஆசிரியர்கள், முதனிலைத் தமிழாசிரியர் ஆகியோருக்காகவென்றே தனியாக ஒரு தேர்வை



அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலம் நடத்திட அரசு ஏற்பாடு செய்துள்ளது. அவ்வாசிரியர்களுள் 1977-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ந் தேதி அன்றைய நிலவரப்படி ஓராண்டு தற்காலிகப்பணி (தொடர்ந்து அல்லது விட்டுவிட்டு) முடித்திருந்து அந்நாளில் பணியிலிருந்தவர்களும் அந்நாளில் பணியில் இல்லாமலிருந்தால், அவ்வாறு ஓராண்டு பணி முடித்துவிட்டு 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி அன்று அல்லது அதற்குப் பின் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும் அத்தேர்வில் கலந்து கொள்ளலாம். இவ்வகையினருள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுபவர் யாராவது வயது வரம்பைத் தாண்டி விட்டிருந்தால் அவர்களுக்காக வயது வரம்பைத் தளர்த்தவும் அரசு ஆயத்தமாக உள்ளது.

### பள்ளிகளில் எழுத்தர் முதலிய பதவிகள்

16. பள்ளிக் கல்வித் துறையில் உள்ள இளநிலை எழுத்தர், எழுத்தர் ஆகிய பதவிகள் மொத்தம் 2,115. அவற்றுள் எழுத்தர் பதவிகள் 376. மூன்று இளநிலை எழுத்தருக்கு ஒரு எழுத்தர் என்ற நிலை ஏற்பட இன்னும் 153 எழுத்தர் பதவிகள் தேவை. எனவே தேவையான அளவுக்கு இளநிலை எழுத்தர் பதவிகளை எழுத்தர் பதவிகளாகப் படிப்படியாகக் உயர்த்திடக் கருதி 1978-79-ல் முதற்கண் 50 பதவிகள் எழுத்தர் பதவிகளாக உயர்த்தப்படும்.

17. அரசு (பி. பிரிவு) உயர்நிலைப் பள்ளிகளில் (ரூபாய் 140—195 சம்பள விகிதத்தில்) உள்ள ஆவண எழுத்தர் பதவிகளையெல்லாம் இளநிலை எழுத்தர் பதவிகளாக உயர்த்தி இப்பொழுதுள்ள ஆவண எழுத்தர்களுள் எவரெவருக்கு இளநிலை எழுத்தருக்குரிய தகுதிகள் உள்ளனவோ அவர்களுக்கு எல்லாம் இளநிலை எழுத்தர் ஆக பதவி உயர்வு தர முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை இவ்வாறு 400 பதவிகள் இளநிலை எழுத்தர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. 1978-79-ல் மேலும் 100 பதவிகள் உயர்த்தப்படும்.

### (xi) முதியோர் கல்வியும் பள்ளிசாராக் கல்வியும்

1. 1971-ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டில் 39·39 விழுக்காட்டினர் (ஆண்களில் 51·68 விழுக்காட்டினரும், பெண்களில் 26·83 விழுக்காட்டினரும்) எழுதப் படிக்கத் தெரிந்து இருந்தனர். அக் கணக்கின்படி அனைத்திந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு 29·34 ஆகும். (ஆண்கள் 39·51 விழுக்காடு, பெண்கள் 18·44 விழுக்காடு). தமிழ்நாட்டில் 1971-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கின்படி இருந்த 4·12 கோடி மக்களுள், 1·63 கோடி பேரே எழுதப்படிக்கத் தெரிந்து இருந்தனர்.

[1978 மார்ச் 2

2. பதினொன்கு வயதுக்குக் குறைந்த அனைத்துச் சிறுவர் சிறுமியரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்னும் முயற்சிகளில் ஈடுபடும் அதே நேரத்தில், நம் மக்களில் வயது வந்தவர்களுக்கும் கல்வி வசதிகள் அளித்து அவர்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வழி செய்யவேண்டும் என்பதில் மைய அரசும், மாநில அரசும் மிகவும் அக்கறை கொண்டுள்ளன. இந்நாடு முழுவதிலும் வரும் ஐந்து ஆண்டுகளில் 15—35 வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களுள் எழுதப்படிக்கத் தெரியாமலிருக்கும் சுமார் 10 கோடி பேர்களுக்குக் குறைந்த அளவு எழுதப்படிக்கவாவது கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது மைய அரசின் நோக்கமாகும். அவர்களுக்கு அளிக்கப்படும் முதியோர் கல்வியின் மூலம் அவர்கள் மேற்கொண்டு தாமாகவே படிப்பறிவை வளர்த்துக் கொள்ளும் திறனைப் பெற்று தமது வளர்ச்சிக்கும் தம்மைச் சுற்றியுள்ள சமுதாய வளர்ச்சிக்கும் தன்னம்பிக்கையுடன் தீவிரமாகப் பாடுபட இயலும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற அனைத்து மாநிலங்களும் அந்தந்த மாநிலத்திற்கு எழுத்தறிவிப்புத் திட்டங்களை வகுத்திடக் கோரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரும் 5 ஆண்டுகளில் 15—35 வயதுத் தொகுதியில் எழுத்தறிவில்லாமலிருப்பவர்கள் 65 இலட்சம் பேருக்கு எழுத்தறிவிக்கத் திட்டமிட வேண்டும். தமிழ்நாட்டில் முதியோர் கல்விக்கான மாநிலக் குழு ஒன்று அமைக்கப்படுகிறது. எழுத்தறிவிப்புப் பணிக்காக விரிவான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்குத் தேவையான அளவு மைய அரசு மானிய உதவி கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. 1978-79-ல் முதியோர் கல்விக்கும் பள்ளிசாராக் கல்விக்கும் மொத்தம் ரூபாய் 39 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ''தேசியப் பணித் திட்டத்தை'' சேர்ந்த கல்லூரி மாணவர்கள், தேசிய மாணவர் படையினர் ஆகியோரும் நேரு இளைஞர் மன்ற பணியாளர்களும் எழுத்தறிவிப்புப் பணியில் பயன்படுத்தப்படுகின்றனர். முதியோர் எழுத்தறிவுத் திட்டம் நாடு தழுவிய இயக்கமாக வளர வேண்டுமென்பது அரசின் கொள்கை. இதனையொட்டி, இந்தத் துறையில் ஈடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உதவ புதிய திட்டமொன்று செயற்படுத்தப்படும். கல்வியின் பயன், கிராம முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாக அமைய, எழுத்தறிவு பெறுவோருக்கு, வேளாண்மை, கிராம—குடிசைத் தொழில்கள், கூட்டுறவு இயக்கம், சுகாதாரம், சத்துணவு, குடும்பநலத் திட்டம், கால்நடைப் பராமரிப்பு இவை போன்ற பொருள்களைப் பற்றி எளிய நடையில் புத்தகங்கள் தயாரித்து வழங்கப்படும்.



1978 மார்ச் 2]

4. ''வேளாண்மைத் தொழிலோடு இணைந்த எழுத்தறிவுத் திட்டம்'' என்னும் மைய அரசு பண உதவித் திட்டம் எட்டு மாவட்டங்களில் மொத்தம் சுமார் 600 நிலையங்களில் செயல்படுகிறது. 1977-78-ல் இந் நிலையங்களிலிருந்து சுமார் 20,000 பேர் கல்வி அறிவு பெற்று வெளியேறுவர்.

5. பள்ளி சாராக் கல்வியில் மற்றும் ஒரு மத்திய அரசு பண உதவித் திட்டமும் உள்ளது. இத் திட்டத்தின்கீழ் 15—25 வயதுத் தொகுதியினருக்கு கல்வி கற்பிக்கப்படும். திருச்சி, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோயமுத்தூர், தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 இடங்களில் இத்திட்டம் செயல்படுகிறது. பாதி மாவட்டங்களில் செலவை மைய அரசும் பாதியில் மாநில அரசும் ஏற்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், இத் திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூபாய் 1 இலட்சம் செலவாகின்றது. இத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் சுமார் 45,000 மாணவர்கள் பயனடைகின்றனர்.

6. பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டு விடுபவர்கள், பள்ளிக்கே செல்லாதவர் ஆகிய இருவகையினரிலும், 6—11, 11—14 வயதுத் தொகுதியினருக்கும் பள்ளி சாராக் கல்வி அளிக்கும் திட்டம் ஒன்றையும் மாநில அரசு தனது செலவிலேயே செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 1976-77-ல் ஒரு இடத்திலும் 1977-78-ல் இரண்டாவதாக மற்றொரு இடத்திலும் இவ்வகுப்புகள் தொடங்கப்பட்டன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் நாள்தோறும் சுமார் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். இத் திட்டத்தில் 1977-78 இல் 25,000 பேர் பயில்கின்றனர். 1978-79 இல் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் இரண்டு புதிய இடங்கள் என மொத்தம் 748 இடங்களில் இக்கல்வி முறை விரிவு செய்யப்படும்.

7. ஏழ்மைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களும் எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டவர்களுமான இளைஞர்களுக்கு 11-வது வகுப்புத் தாக்கில் கல்வி கற்பிக்க மைலாப்பூர் செயிண்ட் தாமஸ் கான்வெண்டில் 1975ஆம் ஆண்டு முதல் மாலை நேரங்களில் பள்ளி சாராக் கல்வி வகுப்

புகள் நடத்தப்படுகின்றன. இத் திட்டத்திற்கு அரசு ஆண்டுக்கு சுமார் ரூபாய் 25,000 மானியம் வழங்குகிறது. இத்தகைய வகுப்புகள் கோட்டூர்புரத்தில் இரண்டாவதாக ஒரு மையத்திலும் தொடங்கப்பட்டுள்ளன.

நேரு இளைஞர் நிலையங்கள்.

8. நேரு இளைஞர் நிலையங்கள் ஏழு கடலூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், கோயமுத்தூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் ஐந்தைத் தொடக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இவை குறிப்பாக, பள்ளிசாராக் கல்வித் துறையில் பயனுள்ள பணிகளைச் செய்கின்றன. பள்ளி சாராக் கல்வி எல்லா இளைஞர்களுக்கும் கிட்டச் செய்வதும், இளைஞர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதும் பாடல்கள், நாடகங்கள் மூலமாக ஆக்க பூர்வமான நடவடிக்கைகளுக்கு வசதி செய்வதும், போட்டி விளையாட்டுக்கள், உடற்பயிற்சிக் கல்வி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்வதும் இந் நிலையங்களின் பணிகளாகும்.



# III மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி

புதிய 10+2+3 ஆண்டு படிப்பு முறையில் +2 நிலையை பள்ளிகளில் வைப்பதே நல்லதென்பது பொதுவாக கல்வி வல்லுநர்களின் கருத்தாகும். தமிழ்நாட்டில் 1978–79 ஆம் ஆண்டு முதல் தொடங்கவிருக்கும் மேல் உயர்நிலைப் பள்ளி (ஹையர் செகண்டரி) வகுப்பை உயர்நிலைப் பள்ளி களிலேயே வைத்திடத் தமிழக அரசும் முடிவு செய்துள்ளது. மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்பு சுமார் 400 பள்ளிகளில் தொடங்கப்படும். இயன்றவரை ஊராட்சி ஒன்றியப்பகுதி ஒவ்வொன்றிலும் ஒரு மேல் உயர்நிலைப் பள்ளியாவது இருக்கும். மேல் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்திட அரசு ஏற்பளித்துள்ள முதல் பட்டியலில் உள்ள பள்ளிகளின் விவ்ரம் வருமாறு :—

உயர்நிலைப் பள்ளிகள்—

| | | |
|---|---|---|
| சென்னை | .. | 18 |
| வெளியூர் | .. | 182 |
| | | 200 |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் | .. .. | 14 |
| மெட்ரிகுலேசன் பள்ளிகள் | .. .. | 6 |
| | | 220 |

தேர்ந்தெடுத்துள்ள தனியார் அல்லது நகராட்சிப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் நிர்வாகத்தினர் ரூ. 25,000 அறக் கட்டளைத் தொகை கொடுக்க வேண்டும். அரசுப் பள்ளி களுக்கும் கூட அந்தந்த ஊர்ப் பொது மக்கள் ரொக்கமாக ரூ. 25,000 கொடுக்க வேண்டும். இந்த அறக் கட்டளைத் தொகை அல்லது ரொக்கப் பணத்தை 15,000, 5,000, 5,000 என மூன்று தவணைகளில் ஆண்டுக்கு ஒன்றாக மூன்று ஆண்டுகளில் தரலாம்.

2. மேல் உயர்நிலைப் பள்ளிப்படிப்பிற்கான பாடத் திட் டங்களை முடிவு செய்து ஏற்பளிக்கப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்களைத் தயாரிக்கும் வேலையைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் செய்து வருகிறது. மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்பில் பகுதி I-இன் கீழ் ஒவ்வொரு மாணவனும்

தமிழை (அல்லது வேறு 12 மொழிகளுள் யாதானுமொன்றை) படிக்க வேண்டும். பகுதி II-இன்கீழ் ஆங்கிலம் பயில வேண்டும். பகுதி III-இன் கீழ் பொதுவான பாடங்களைப் (Academic Stream) பயில்பவர்கள் அறிவியல் பாடங்கள் அல்லது கலைப் பாடங்களில் ஏதாவது நான்கை எடுத்துப் பயில வேண்டும். பகுதி III-இன்கீழ் தொழில் பாடங்களை (Vocational Stream) பயில்பவர்கள் தொழில் பாடம் ஒன்றை பயில்வதோடு அத் தொழிலோடு தொடர்புடையதாக அறிவியல் அல்லது கலைப் பாடங்களில் இருந்து ஒரு பாடத்தையும் தேர்ந்தெடுத்துப் பயில வேண்டும். உயர் செகண்டரி நிலையில் பல்வேறு துறைகளில் எத்தனை தொழில் பாடங்களைக் கற்றுத்தர ஏற்பளிக்கப் பட்டுள்ளது என்ற விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| வேளாண்மை .. .. .. .. | 15 |
| மனையியல் .. .. .. .. .. | 9 |
| பொறியியல்—தொழில் நுட்பவியல் .. | 8 |
| வணிகம் .. .. .. .. .. | 9 |
| உடல்நலம் .. .. .. .. .. | 8 |
| பல்வகை .. .. .. .. | 3 |
| மொத்தம் .. | 52 |

வசதிகள் இருப்பதைப் பொருத்தும் மாணவர்கள் சேர்வதைப் பொருத்தும் ஒவ்வொரு மேல் உயர்நிலைப் பள்ளியிலும் 1978–79 முதல் ஒரு தொழில் பாடமாவது தொடங்கப் பெறும். எந்தெந்தப் பள்ளிகளில் என்னென்ன தொழில் பாடங்களைத் தொடங்கினால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை முடிவு செய்ய அனைத்து மாவட்டங்களிலும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

3. மேல் உயர்நிலைப் பள்ளிகளில் 11—12 வகுப்புகளில் தமிழே பாட மொழியாக இருக்கும் என அரசு அறிவித்துள்ளது. தமிழைப் பாடமொழியாகக் கொண்டு பயில்பவர்களுக்கு இரு வகுப்புகளிலும் கற்பிப்புக் கட்டணம் கிடையாது; சிறப்புக் கட்டணம் மட்டுமே குறித்த விகிதங்களில் செலுத்த வேண்டும். மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்பில் ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயில விரும்புபவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்திப் பயில அனுமதிக்கப்படுவர். அவர்களுக்கு 11—12 வகுப்புகளில்



இலவசக் கல்வி கிடையாது. மெட்ரிகுலேசன் பள்ளிகளும் ஆங்கிலோ-இந்திய பள்ளிகளும் ஏற்கனவே 1—11 வகுப்புகளில் கற்பிப்புக் கட்டணம் வசூலிக்கின்றன. அவை மேல் உயர்நிலைப் பள்ளி நிலையிலும் கற்பிப்புக் கட்டணம் வசூலிக்க அனுமதிக்கப்படும்.

4. 1978–79 இல் மேல் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்திடத் தேர்ந்தெடுத்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 133 பள்ளிகளில் மொத்தம் ரூ. 2 கோடி செலவில் (ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி ரூ. 1½ லட்சம் செலவில் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூட அறையும்) கட்டட வசதி செய்ய ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அரசு மேல் உயர்நிலைப் பள்ளிக் கட்டட வேலைகளுக்கு 1978–79 இல் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு ஆய்வுக் கூட தளவாடங்களை அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்பு ஆசிரியர்களுக்கு பின்வரும் தகுதிகளை நிர்ணயிக்கலாமாவென்று ஆய்வு செய்யப் பட்டு வருகிறது :—

உயர்செகண்டரிப் பள்ளித் தலைமையாசிரியர் .. எம்.ஏ., / எம்.எஸ்.சி. / எம்.காம்; பி.டி. / பி.எட்; ஏற்பளித்த பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் ஆசிரியராக 10 ஆண்டு அனுபவம்.

ஆசிரியர்கள் .. எம்.ஏ./ எம்.எஸ்.சி. / எம்.காம்; பி.டி./பி.எட். (தேவையான மொழியில் அல்லது பாடத்தில்)

மேற்கண்ட தகுதிகள் படைத்தவர்கள் கிடைக்காவிட்டால் பின்வரும் தகுதிகளைப் பெற்றவர்களை பின்வரும் வரிசை முறைப்படி நியமிக்கலாமாவென்றும் ஆய்வு செய்யப்படுகிறது

(1) பி.ஏ./பி.எஸ்.சி./பி.காம். (தேவையான மொழியில் அல்லது பாடத்தில்)—முதல் அல்லது இரண்டாவது வகுப்பில்;
பி.டி./பி.எட்;
ஏற்பளித்த கல்வி நிறுவனங்களில் ஆசிரியராக 10 ஆண்டு அனுபவம்.

(2) பி.ஏ./பி.எஸ்.சி./பி.காம். (தேவையான மொழியில் அல்லது பாடத்தில்) மூன்றாவது வகுப்பில்;
பி.டி./பி.எட்.,
ஏற்பளித்த பள்ளிகளில் ஆசிரியராக 15 ஆண்டு அனுபவம்.

(3) எம்.ஏ.,/எம்.எஸ்.சி./எம்.காம். (தேவையான மொழியில் அல்லது பாடத்தில்)—(பி.டி./பி.எட். இல்லாமல்) இவர்கள் நியமிக்கப்பட்டால் நியமித்த மூன்று ஆண்டுகளுக்குள் அஞ்சல் முறையிலோ, மாலை நேரக் கல்லூரியிலோ பகுதிநேர வகுப்புகளிலோ பயின்று பி.டி./பி.எட். பட்டம் பெற்றாக வேண்டும்.

ஆசிரியர்கள் தகுதிகள் குறித்தும் சம்பள விகிதம் குறித்தும் விரைவில் இறுதியான ஆணைகள் வெளியாகும். உயர்நிலைப் பள்ளிகளில் தற்பொழுது பணியாற்றும் ஆசிரியர்களுள் மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்புக்கான தகுதியுடையவர்களனைவரும் இயன்றவரை மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் எடுத்துக் கொள்ளப்படுவர்.

6. தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 1978-79-லிருந்து 11 ஆம் வகுப்பு நீங்கிவிடும் காரணத்தால் சுமார் 7,000 பி.டி. ஆசிரியர்கள் பாதிக்கப்படலாம். இவர்களில் மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆசிரியருக்கு வரையறுக்கப்படும் தகுதிகளைப் பெற்றுள்ளவர்களை அக் கல்வி பயிற்றுவதற்கு எடுத்துக் கொள்ளலாம். ஏனையோரைப் பொறுத்த மட்டிலும் எவரும் வேலையிழக்காதபடி அரசு பார்த்துக் கொள்ளும். ஆசிரியர், மாணவர் விகிதம் அனுமதிக்குமாயின் அந்தந்த பள்ளிகளில் உள்ள 8—10 வகுப்புகளுக்கு 11ஆம் வகுப்பு பி.டி. ஆசிரியர் பதவிகள் மாற்றப்படும். அல்லது ஆசிரியர்-மாணவர் விகிதப்படி கூடுதல் ஆசிரியர்கள் தேவைப்படும் பிற பள்ளிகளுக்கு அப்பதவிகள் மாற்றப்படும்.



## IV கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் 1947 ஆம் ஆண்டில் 24 ஆக இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1977–78 ஆம் ஆண்டில் 188 ஆக உயர்ந்துள்ளது. 1947-ம் ஆண்டில் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 17,000 என இருந்தது; இது 1977–78 ஆம் ஆண்டில் 2,09,000 ஆக உயர்ந்துள்ளது. இக் கல்லூரிகளிலும், கல்லூரிக் கல்வி இயக்குநரது கட்டுப்பாட்டின்கீழ் அமைந்த பிற நிலையங்களிலும் 1977–78 ஆம் ஆண்டில் படித்து வந்த மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் ஆகியோர் எண்ணிக்கை வருமாறு :—

| நிலையங்களின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. (முழுமையான எண்களில்). | | ஆசிரியர் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | | (3) | |
| (1) கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்— | | | | | |
| அரசினர் கல்லூரிகள். | 51 | புகுமுக வகுப்பு. | 89,000 | | |
| உதவிபெறும் கல்லூரிகள். | 137 | | | | |
| | 188 | பி. ஏ. | 43,000 | அரசுக் கல்லூரிகள். | 3,812 |
| | | பி. எஸ். சி. | 49,000 | | |
| | | பி. காம். | 21,000 | தனியார் கல்லூரிகள். | 8,394 |
| சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைந்தவை. | 110 | பட்ட வகுப்பு மாணவர் தொகை. | 1,13,000 | மொத்தம்.. | 12,206 |
| மதுரையுடன் இணைந்தவை | 77 | | | | |
| அண்ணாமலையுடன் இணைந்தது. | 1 | எம். ஏ. | | | |
| | | எம். எஸ். சி. | 7,000 | | |
| | | எம். காம். | | | |
| | | ஆக மொத்தம்.. | 2,09,000 | | |
| (2) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்— | | | 2,700 | | 23 |
| அரசினர் கல்லூரிகள். | 7 | | | | |
| தனியார் கல்லூரிகள் | 16 | | | | |
| (3) பிற கல்லூரிகள் — | | | | | |
| உடற் பயிற்சிக் கல்லூரிகள். | 3 | | 340 | | 30 |
| கீழ்த்திசைக் கல்லூரிகள். | 16 | | 1,700 | | 124 |
| சமூகவியல் பணிக்கல்லூரிகள். | 2 | | 170 | | 16 |
| ஊரக உயர்நிலை நிலையங்கள். | 2 | | 620 | | 75 |
| இசைக்கல்லூரி (அரசு). | 1 | | 250 | | 23 |

2. 10+2+3 ஆண்டுப்படிப்பு 1978 ஜூன் முதல் நடைமுறைக்கு வரும். 1979 ஜூனிலிருந்து கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்பு நீங்கிவிடும். இதன் காரணமாக கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்காதபடி அரசு பார்த்துக்கொள்ளும். இதற்காக பல்கலைக் கழகங்களுடன் கலந்து கல்லூரி ஆசிரியர்களுடைய வேலைப்பளு பற்றிய நடைமுறைகள் தேவையான அளவுக்குத் திருத்தியமைக்கப்படும்.

புதிய பல்கலைக் கழகங்கள்.

3. மொத்தமுள்ள 188 கலை, அறிவியல் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னை பல்கலைக் கழகத்துடனும் 77 மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் ஒன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவை. பல்கலைக் கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைப்புப் பெற்றிருத்தல் கூடாது என பல்கலைக் கழகங்கள் பற்றிய கசேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே, இம்மாநிலத்தில் மேலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுவது இன்றியமையாதது என்பது தெளிவாகும். திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக (கல்லூரிகளுக்கு இணைப்பளிக்கும் வகையைச் சார்ந்த) இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுவது குறித்து மைய அரசுடனும் பல்கலைக் கழக மானியக்குழுவுடனும் முனைப்புடன் இவ்வரசு கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் கீழும் உள்ள கல்லூரிகளில் நன்கு நடக்கும் கல்லூரிகள் ஒரு சிலவற்றை தேர்ந்தெடுத்து அவற்றுக்கு சுய ஆட்சி உரிமை தந்தால் கல்லூரிக் கல்வி தரம் உயருமென்று கருதி பல்கலைக்கழக மானியக்குழு அதற்காக திட்டமொன்று வகுத்தது, இதனை சென்னை, மதுரைப் பல்கலைக்கழக கல்லூரிகளில் செயல்படுத்த வகை செய்து பல்கலைக்கழகச் சட்டங்கள் 1977 டிசம்பரில் திருத்தப் பட்டுள்ளன. எனவே, அவ்வாறு சுய ஆட்சி உரிமை பெறும் கல்லூரிகள் பாடத்திட்டங்கள் வகுக்கவும், தேர்வு நடத்தவும் தாம் தாமே வல்லுநர் குழுக்கள் அமைத்து, கல்வித் தரம் உயரக் கூடியவகையில் செயல்பட வாய்ப்புண்டு.

5. இம்மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவை ஏறத்தாழ முழுமையாக நிறைவேற்றபட்டுவிட்டது எனலாம். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாண



வர்கள் நெருக்கி முன்வருகின்றனர். ஆனால், கிராமப்புறப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுது பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1977–78-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 9,000 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி—6,500 ; தமிழ்ப்பாட மொழி—2,500) பட்ட வகுப்புகளில் 11,700 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி —7,700, தமிழ்ப் பாடமொழி-4,000) காலியாக இருந்தன. எனவே, புதிய கல்லூரிகளைத் தொடங்க அனுமதிப்பதைவிட தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் பயன்படுத்த வகை செய்வதே விரும்பத்தக்கதாகும். கல்லூரிக் கல்வியின் தரத்தை மேம் படுத்துவதில் இனி முழுக் கவனம் செலுத்துவதே சிறந்த தாகும்.

கல்வித் தர மேம்பாடு.

6. ஐந்தாம் திட்டக் காலத்தில் அரசுக் கல்லூரிகளில் கல்வித்தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. 1977–78-ல் அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக அறிவியல் பட்டப்படிப்புகள் நான்கு, கலைப்பட்டப்படிப்புகள் இரண்டு, வணிகவியல் பட்டப்படிப்பு ஒன்று, அறிவியல் பட்ட மேற் படிப்பு வகுப்பு ஒன்று ஆகியவற்றைத் தொடங்க ஏற்பளிக்கப் பட்டது. 1978–79-ல் புதிய பட்ட வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும், புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூ. 1 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியை ஒரு பட்ட மேற் படிப்பு—ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. 1978–79-ம் ஆண்டு இதற்கான நடவடிக்கைகள் தொடங்கப் படும்.

7. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதிகள் பெருக்கப்படும். இதற்காக 1977-1978-ம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் செலவிடப்பட்டது. 1978-79-ல் ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன்படுத்திட பாட புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்களை அமைப் பதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சம் செலவிடப்படு கிறது. 1978-79-ம் ஆண்டிலும் ரூபாய் 1 இலட்சம் செல விடப்படும்.

9. மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதிவண்டி நிறுத்துமிடம் ஆகியவற்றை அமைக்கவும், விளையாட்டுத் திடல்களைச் செப்பனிடுவதற்காகவும், விளையாட்டுப் பொருள்கள் போன்றவற்றை வாங்குவதற்காகவும் 1977-78-ம் ஆண்டில் அரசுக் கல்லூரிகளில் ரூபாய் 5 இலட்சமும், தனியார் கல்லூரிகளில் ரூபாய் 5 இலட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளில் இவ்வசதிகளுக்காக 1978-79-ல் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. 1977 நவம்பரில் திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் புயலாலும், வெள்ளத்தாலும் தனியார் கல்லூரிகளில் சிலவற்றின் கட்டடங்கள், தளவாடங்கள், பிற சொத்துக்கள் ஆகியவை பெருஞ் சேதமுற்றன. சேதத்தின் அளவை சென்னைப் பல்கலைக்கழக ஆய்வுக் குழு ஒன்று மதிப்பீட்டு அறிக்கை தந்தது. அவ்வறிக்கையின் அடிப்படையிலும் பல்கலைக்கழகத் துணை வேந்தரின் பரிந்துரையின் பேரிலும் சேதம் அடைந்த கல்லூரிகளுக்கு அரசு சிறப்பு மானியமாக ரூபாய் 51 இலட்சம் வழங்கியுள்ளது.

11. அரசுக் கல்லூரிக் கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்காக 1978-79-ல் ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (புதிய வேலைகளுக்காக ரூபாய் 11 இலட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1978-79-ல் செலவுக்காக ரூபாய் 21 இலட்சமும்). தனியார் கல்லூரிகளுக்குக் கட்டட மானியம் தர ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களுடைய கல்வித் தகுதியினை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் செயல்படுகின்றன. பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி. எச். டி.) பட்டம் பெறுவதற்காக பேராசிரியர்கள் முகமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973-74 முதல் இத்திட்டத்தின் கீழ் 19 பேர் டாக்டர் நிலை ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டதில் எழுவர் படிப்பை முடித்து திரும்ப வேலையில் சேர்ந்துவிட்டனர். 1978-79-ல் புதியதாக ஆறு பேராசிரியர்கள் டாக்டர் பயிற்சிக்கு அனுப்பப் படுவார்கள். நிரந்தரமாகப் பணிபுரியும் பேராசிரியர்களைத் தவிர வெளியிலிருந்தும் சில பேராசிரியர்கள் விரிவுரையாற்ற அழைக்கப்படுகின்றனர். தமிழ் மொழி வாயிலாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் நினைவூட்டும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2,915 ஆசிரியர்கள் பலனடைந்துள்ளனர்.



13. தொடர்கல்வி அளிப்பதில் மாலை வேளைக் கல்லூரிகளும், அஞ்சல் கல்வித் திட்டங்களும் மிகவும் பயனளிக்கும் முறையில் விளங்குகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 45 கல்லூரிகளில் மாலை வேளை வகுப்புகள் நடத்தப் பெற்றன; அவற்றில் 10,000 மாணவர்கள் படித்தனர். மதுரைப் பல்கலைக் கழகம் புகுமுக வகுப்புக்கும், பி. ஏ., பி. காம்., எம். ஏ. வகுப்புகளுக்கும் பயிற்றுவிப்பதற்காக அஞ்சல் கல்வித் திட்டத்தை நடத்தி வருகிறது. மாணவர் சமுதாயத்தினரிடையே இவை மிகவும் போற்றி வரவேற்கப்படுகின்றன.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்:

14. புகுமுக வகுப்பில் கற்பிப்புக் கட்டணங்கள் எவையும் வசூலிக்கப்படுவதில்லை. இலவச புகுமுக வகுப்புக் கல்வித் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 2 கோடியாகும். தமிழ்ப் பயிற்று மொழிக்குரிய பயிற்சி உதவிப் பணத்திற்கான விவரங்கள் பின்னர் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்டவற்றுடன் வேறு பல படிப்புதவித் தொகை திட்டங்களும் பயிற்சி உதவிப் பணத் திட்டங்களும் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை வருமாறு :—

| திட்டம். | 1977-78-ஆம் ஆண்டில் புதிதாக ஒப்பளிக்கப்பட்ட படிப்புதவித் தொகையின் எண்ணிக்கை. | 1977-78-ஆம் ஆண்டில் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) ஒப்பளிக்கப்பட்டவற்றின் மொத்த எண்ணிக்கை. | 1978-79-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம். |
|---|---|---|---|
| (1) | (2) | ( ) | (4) (ரூபாய் இலட்சங்களில்) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,314 | 4,000 | 35 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை. | 70 | 220 | 3 |
| தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,444 | 5,092 | 45 |

1974-75ஆம் ஆண்டிலிருந்து தேசியப் படிப்புதவித் தொகை, பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் தேசிய படிப்புதவித் தொகை ஆகிய இரண்டுக்கும் ஆகும் செலவை மாநில அரசே ஏற்று வருகின்றது. உடல் ஊனமுற்றவர்கள், பாதுகாப்புப் பணியாளரது குழந்தைகள், விடுதலைப் போர் வீரர்களின் குழந்தைகள், மற்றும் பர்மா, இலங்கை அகதிகளின் குழந்தைகள் போன்றவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டங்களும் உள்ளன. தாழ்த்தப் பட்ட இனங்கள்/பழங்குடிகள் மற்றும் பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்த மாணவர்கள் அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

15. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் 60 சதவீதம் அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கும் புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ஆண்டு தோறும் உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அப்பிரிவினரைச் சார்ந்த கிறித்தவர்களுக்கும் இவ்வுதவிப் பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வளவாயிருப்பினும் இவ்வுதவிப் பணம் உண்டு. உதவிப்பணம் ஆளுக்கு ரூ.300 வழங்கப்படுகின்றது. அவர்கள் தாம் விரும்பும் மேற் படிப்பை மேற்கொள்ள இது அவர்களுக்கு உதவும். தாழ்த்தப்பட்ட சாதியினர் பழங்குடிகள் என்ற வகையில் அவர்களுக்குக் கிட்டும் மற்றெல்லாச் சலுகைகளுக்கும் பண உதவிகளுக்கும் மேலாக இந்த ரூ. 300 உதவி கிட்டும். இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 8 இலட்சமாகும்.

16. 1977-78 ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் ஷெட்யூல்டு வகுப்பினர், மலைச் சாதியினர் ஆகியோருக்கு (அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல்) முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. முன்னர் இருந்த வருமான வரம்பாகிய ஆண்டுக்கு ரூ. 2,500 என்பது நீக்கப்பட்டுவிட்டது.

17. கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் சேர்ந்துவிட்ட மாணவர்கள் பின் பொறியியல், மருத்துவம் முதலிய கல்லூரிகளில் சேருவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கலைக் கல்லூரியை விட்டுச் செல்லும்பொழுது அவர்கள் கலைக் கல்லூரியில் கட்டிய கட்டணத்தை திருப்பித் தரலாமென அரசு ஆணையிட்டுள்ளது.



கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழி :

18. 1966-67 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் கலைப்பாடங்களில் தமிழும் பயிற்று மொழியாக ஆனது. 1967-68 ஆம் ஆண்டிலிருந்து பி.ஏ. பட்ட வகுப்பிலும், 1968-69 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1969-70 ஆம் ஆண்டிலிருந்து பி.எஸ்.சி. வகுப்பிலும் தமிழ் பாட மொழியானது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பி.ஏ., பி.எஸ்.சி. வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணம் / புத்தகப்படியாக ஆண்டுக்கு ரூ. 180-ம் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 50-ம் வழங்கப்படுகின்றன. 1975-76 ஆம் ஆண்டு முதல் 1977-78 முடிய இந்த உதவிப் பணம் பாடப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், எழுதுபொருள்கள் ஆகியவைகளாகவே தரப்பட்டு வந்தது. 1978-79 முதல் இதை மாற்றி மீண்டும் பணமாகவே தரப்படும். ஆண்டுதோறும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்கள் எண்ணிக்கை (அரசினர் மற்றும் தனியார், கல்லூரிகளில் வருமாறு)—

| ஆண்டு. | புகுமுக வகுப்பு. | பட்டப்படிப்பு. | மொத்தம். | தமிழ்ப் பயிற்று மொழி வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி உதவிப் பணம் மற்றும் புத்தகப்படி இவற்றுக்கான செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969-70 | 19,502 | 3,739 | 23,241 | .. |
| 1970-71 | 20,638 | 4,027 | 24,665 | .. |
| 1971-72 | 20,895 | 15,936 | 36,831 | 39 |
| 1972-73 | 21,224 | 16,786 | 38,010 | 45 |
| 1973-74 | 18,355 | 18,693 | 37,048 | 43 |
| 1974-75 | 19,542 | 15,839 | 35,381 | 40 |
| 1975-76 | 17,784 | 14,869 | 32,653 | 36 |
| 1976-77 | 20,103 | 13,471 | 33,574 | 34 |
| 1977-78 | 22,763 | 12,300 | 35,063 | 34 |

தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தை மாணவர்கள் இன்னும் பெருமளவில் விரும்பி ஏற்கச் செய்ய அரசும் பல்கலைக்கழகங்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

19. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 800பாடபுத்தகங்களை வெளியிட்டுள்ளது. இவ்வெளியீடுகளில் பலவற்றைப் பாட நூல்களாகவும், குறிப்புப் புத்தகங்களாகவும் மாணவர்கள் பயன்படுத்திட பல்கலைக் கழகங்கள் பரிந்துரை செய்துள்ளன. பாட நூல் நிறுவனம் 1978–79 ஆம் ஆண்டில் மேலும் பல கல்லூரிப் பாட நூல்களை வெளியிடும்.

பல்கலைக்கழக மானியக்குழு சம்பள விகிதங்கள்:

1. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் பின்வரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு, அதாவது :

அரசு மற்றும் தனியார் கலை அறிவியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள்;

பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயிலகங்களும்;

சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கெல்லாம் 1–4–1976 முதல் அமுலாக்கி 1977 செப்டம்பரில் ஆணை வெளியிடப்பட்டது. பணப் பயன் 1–1–1977 முதல் கிட்டும்.

21. மேற்கண்ட ஆணைகளில் திருத்தங்கள் கோரி முறையீடுகள் வந்தன. அரசு அவற்றைப் பரிவுடன் ஆய்வு செய்து பின்வரும் சலுகைகளை அறிவித்துள்ளது. அதாவது, 1—12—1977 அன்று ஐந்தாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குனர்கள் (டெமான்ஸ்ரேட்டர் பயிற்றுநர்கள் (ட்யூட்டர்) ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.காம். போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1-12-1977 முதல் துணைப் பேராசிரியர்கள்/விரிவுரையாளர்கள் பதவி அளிக்கப்பட்டு, அப்பதவிக்கான பல்கலைக்கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்படும். இனிமேல் இந்த தகுதிகளை (5 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் பணி பட்ட மேற்படிப்பு தகுதி) பெறுபவர்களுக்கும் இந்த சலுகை கிட்டும்.

22. மேலும் சில சலுகைகளைக்கேட்டு கோரிக்கைகள் வந்துள்ளன; அவை அரசின் ஆய்வில் உள்ளன.





தனியார் கல்லூரிகள்.

23. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத் தாழ்வின்றியும் சம்பளம் பெற்றுவர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கும் மானியம் வழங்குவதில் புதிய முறையை 1-7-77 முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் கீழ் சம்பளம் வழங்கும் வகையில் அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப் பற்றுக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது.

24. தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு காலப் பலன்களை (ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் போன்றவை) 1-4-1962 முதல் பெற்று வருகின்றனர். 1—4—1976 முதல் மேற்கண்ட பலன்கள் அக்கல்லூரிகளிலுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன. அண்மையில், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு விடுப்பு வசதிகளும் தாராளமாக்கப்பட்டுள்ளன. மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் எடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது அது 18 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் படை:

25. தமிழ் நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்பொழுது 22,000 மாணவ–மாணவியர்களைக் கொண்ட 48 முது நிலைப் பிரிவுகளும், 67,000 மாணவ – மாணவியர்களைக் கொண்ட 675 இளநிலைப் பிரிவுகளும் உள்ளன. இவற்றில் 3,000 மாணவியரைக் கொண்ட முதுநிலைப் பிரிவுகள் 5-ம், 5,300 மாணவியரைக் கொண்ட இளநிலைப் பிரிவுகள் 53-ம் அடங்கும். தேசிய மாணவர் படைக்கு இவ்வரசு 1978–79-ம் ஆண்டில் செலவிடவிருக்கும் தொகை ரூ. 113 இலட்சமாகும்.

26. 1978-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் டில்லியில் நடைபெற்ற குடியரசு விழாவில் தமிழ்நாட்டுத் தேசிய மாணவர் படைப் பிரிவு பல மாநிலங்களும் அடைய விரும்பும் அனைத்திந்திய விருதை தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்துள்ளது. இந்த விருதை வழங்கத் தொடங்கி எட்டுஆண்டுகள் ஆகின்றன. 1976-ல் தவிர மற்ற ஏழு ஆண்டுகளிலும் அதனைத் தமிழ் நாடே பெற்று வந்துள்ளது.

தேசிய பணித் திட்டம்:

27. தேசியப் பணிப் பிரிவானது கல்லூரி மாணவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை நாட்டுப் பணியில், குறிப்பாக கல்விப் பணியில், ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்

குடன் துவக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்த பல்கலைக் கழகங்கள் மாணவர் ஒருவருக்கு ரூ. 60 என்ற கணக்கில் மானியம் பெறுகின்றன. மேற்கண்ட தொகையில் ரூ. 35-ஐ இந்திய அரசும் ரூ. 25-ஐ மாநில அரசும் அளிக்கின்றன. இத்திட்டத்தில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருள் விருப்பமுள்ளோர் பங்கு கொள்கின்றனர். இத்திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர் எண்ணிக்கை 1976–77-ல் 20,000 ஆக இருந்தது, 1977–78-ல் 40,000 ஆக உயர்ந்தது. ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களில் பாதிபேர் விடுமுறைக் காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியை) செய்கின்றனர்: இத்திட்டத்திற்கு 1978–79-ம் ஆண்டில் ரூ. 21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டக் கல்வி:

28. சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தொகை 1968–69-ல் 1,045 ஆக இருந்தது. 1977–78-ல் சுமார் 2,495 ஆக (முழு வேளை பட்டப்படிப்பு வகுப்புகளில் 1,695, மாலை நேரப் பட்டப்படிப்பு வகுப்புகளில் 740; எம்.எல். வகுப்புகளில் 60) உயர்ந்துள்ளது. 1978–79-ல் எம்.எல். வகுப்பில் ஏழாவது பிரிவு (சொத்துரிமைச் சட்டம்) தொடங்கப்படும். சென்னைச் சட்டக் கல்லூரியில் முழுவேளை பட்டப்படிப்பின் மூன்றாண்டு வகுப்புகளிலும் ஒவ்வொரு பிரிவில் தமிழே பயிற்று மொழியாக உள்ளது.

29. 1974–75-ம் ஆண்டில் மதுரையிலும் ஒரு சட்டக் கல்லூரி திறக்கப்பட்டது. அக்கல்லூரியில் 1977–78-ம் ஆண்டில் முழு நேர வகுப்புகளில் 900 மாணவர்கள் படிக்கின்றனர். 1977–78-ம் ஆண்டிலிருந்து அக்கல்லூரியிலும் மாலை வகுப்பு துவக்கப்பட்டு முதலாண்டு சட்ட வகுப்பில் 80 பேர்கள் பயில்கின்றனர். மதுரைச் சட்டக் கல்லூரிக் கட்டடம், மாணவரில்லம் ஆகியவற்றின் கட்டட வேலைகளை முடிக்கவும், அக்கல்லூரிக் கட்டடத்தின் மேல், முதல் மாடி கட்டவும் 1978–79-ல் ரூ. 12 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



# V தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1978–79-ல் சுமார் ரூ. 7 கோடி (தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டடச் செலவு போன்றவை உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும் 39 பல் தொழில் நுட்பப் பயிலகங்களும் [மூன்று மகளிர் பயிலகங்களும், ஆறு தனித் தொழில் பட்டய (டிப்ளமா) கல்வியகங்களும், மூன்று கலை- கைத் திறன் கல்வியகங்களும் உட்பட], 14 தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகளும் உள்ளன. தற்போது ஆண்டு தோறும், பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்காக 1,422 மாணவர்களும், பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்பிற்காக 5,125 மாணவர்களும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

2. மேற்சொன்ன ஏழு பொறியியல் கல்லூரிகள் தவிர கிண்டியிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரி, மற்றும் இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் தொழில் நுட்பவியல் கல்லூரி திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி, ஆகிய ஐந்து பொறியியல் கல்லூரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன. அவை பல்கலைக் கழகங்களைச் சார்ந்தவை ; அல்லது தன்னாட்சி உரிமை பெற்றவை ஆகும்.

தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்–

3. சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான சட்ட முன் வடிவத்துக்கு மைய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. அந்த இசைவு வந்ததும் விரைவில் அச்சட்ட முன் வடிவம் தமிழ் நாட்டுச் சட்ட மன்றத்தின் முன் வைக்கப்படும்.

கல்வித் தர உயர்வு:

4. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட தொடக்கத்திலிருந்து தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர் செய்து ஒரு முகப்படுத்துவதிலும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதிலுமே அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும் பிரிவுகளிலும் எந்தெந்த பயிற்சிகளைப் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்களோ அந்தந்த பயிற்சிகளை அளிக்கவும்,

தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத்திட்டங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பொறியியல் கல்லூரியில் 15 பட்டப் படிப்பு முறைகளும், 31 பட்ட மேற்படிப்பு முறைகளும், 8 பட்ட மேற்படிப்பு நிலைப்பட்டய முறைகளும் உள்ளன. பல் தொழில் நுட்ப பயிலகங்களில் 37 பட்டய முறைகளும், 18 பட்டய மேற்படிப்பு முறைகளும், 17 சான்றிதழ் படிப்பு முறைகளும் உள்ளன.

5. 1978–79-ல் கோயம்புத்தூரிலுள்ள அரசு தொழில் நுட்பவியல் கல்லூரியில் உற்பத்திப் பொறியியலில் (Production Engineering) பட்ட வகுப்பு ஒன்றும், மதுரையிலுள்ள தியாகராசர் பொறியியல் கல்லூரியில் ''மின்னணு மற்றும் செய்தித் தொடர்பியலில்'' பட்ட வகுப்பு ஒன்றும் புதிதாகத் தொடங்கப்படும்.

6. 1977–78 ஆம் ஆண்டிலிருந்து சென்னையிலுள்ள வேதியியல் தொழில் நுட்பப் பயிலகத்தில், வேதித் தொழில் நுட்பவியலில் (Polymer Technology) பட்டயப் படிப்பு ஒன்றும், சென்னையிலுள்ள மைய தொழில் நுட்பப் பயிலகத்திலும் கோயம்புத்தூரிலுள்ள அரசு பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் மின்னணுவியல் பட்டய படிப்புகளும் தொடங்கப்பட்டன. 1978–79-ல் சென்னையிலுள்ள மையத் தொழில் நுட்பப் பயிலகத்தில் கட்டிட வேலைகள் முதலானவற்றுக்கு வெவ்வேறு தளவாடங்கள் முதலியவை எவ்வளவு தேவை என்று முன்கூட்டியே மதிப்பீடு செய்து தருவதற்கென (Quantity Surveying) பட்டய மேற்படிப்பு முறை ஒன்று தொடங்கப்படும். கோயம்புத்தூரிலுள்ள அரசு பல் தொழில் நுட்பப் பயிலகத்தில் கட்டடவியல், இயந்திரவியல், மின்னியல் துறைகளில் பகுதி நேரப் பட்டயப் படிப்பு தொடங்கப்படும்.

7. சென்னையிலுள்ள கலை கைத்திறன் கல்லூரியில் ''பொருள் வடிவமைப்புத் துறையில் (துணிகளின் அலங்கார வேலைப்பாடு, விளம்பரப்பணி ஆகியவற்றில்)'' பட்ட வகுப்பு தொடங்கப்படும்.

8. 1977–78-ல் கிண்டி பொறியியற் கல்லூரியில் Structural Dynamics, சுற்றுப்புற நலப் பொறியியல் (Environmental Engineering) உச்ச மின்னியல் (High Voltage) ஆகிய துறைகளின் ஆய்வுக் கூடங்களுக்கும் கோயம்புத்தூரிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் வெப்ப இயந்திரங்கள் (Heat Engines) ஆய்வுக் கூடத்துக்கும் கூடுதல் தளவாடங்கள்



வாங்கித் தரப்பட்டு தரமுயர்த்தப்பட்டன. 1978-79-ல் கோயம்புத்தூரிலுள்ள அரசுத் தொழில் நுட்பக் கல்லூரியில் மின்னணுவியல் ஆய்வுக்கூடம் தரம் உயர்த்தப் படும். அக்கல்லூரியில் ரூ. 2·4 இலட்சம் செலவில் மகளிர் விடுதி ஒன்று கட்டப்படும். காரைக்குடியிலுள்ள அழகப்பச் செட்டியார் பொறியியற் கல்லூரியில் மேலும் ஒரு மாணவர் விடுதி கட்ட ஏற்பளிக்கப்படும். அவ்வகையில் 1978–79ல் ரூ. 1·5 இலட்சம் செலவிடப்படும்.

9. நன்கு வளர்ந்த பல் தொழில் நுட்ப பயிலகங்களுக்கு தாமே புதுக்கல்வி திட்டங்களை வகுக்கவும், இருக்கும் பாடத் திட்டத்தைச் சீர்திருத்தவும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல்புரியவும், தாங்கள் விரும்பியவாறு பயிற்சி அளிக்கவும், கற்பிக்கவும் உரிமை வழங்கப்படுகிறது. இதையொட்டி இதுவரை தன்னுரிமை வழங்கப்பட்டுள்ள பாடமுறைகளின் விவரம் வருமாறு: கோயம்புத்தூர் பி. எஸ். ஜி. பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் உள்ள எல்லாப்படிப்பு முறைகளும், சேலம் தியாகராயர் பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் ராஜபாளையம் பி.ஏ.சி. ராமசாமி ராஜா பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் நெசவுத் தொழில் நுட்பவியல் படிப்பு முறை, சென்னையிலுள்ள மைய தொழில் நுட்பப் பயிலகத்தில் நகரமைப்பு—ஊரமைப்பு பற்றிய பட்டய மேற்படிப்பு: பொள்ளாச்சியிலுள்ள நாச்சிமுத்து பல்தொழில் பயிலகத்திலும் மதுரையிலுள்ள தமிழ்நாடு பல் தொழில் பயிலகத்திலும் உந்து வண்டிப் பொறியியல் பட்டயப் படிப்பு.

பயிற்று துறை வளர்ச்சி—

10. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் பொறியியற் கல்லூரி பல்தொழில் பயிலக ஆசிரியர்களுக்கும் பொருந்துவனவாகும்.

11. பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற இந்தியத் தொழிலியல் கல்வியகங்கள், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வியகம் போன்றவற்றுக்கு அனுப்பப்படுகின்றனர். சில ஆசிரியர்கள் தங்கள் செலவில் தங்கள் முயற்சியிலும் டாக்டர் பட்டம் பெறுகின்றனர். இதுவரை 54 ஆசிரியர்கள் இவ்வாறு டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். மேலும் 31 ஆசிரியர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். 1978–79-ல் மேலும் ஐந்து பேர் பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

12. பல்தொழில் நுட்பப் பயிலக ஆசிரியர்கள் சென்னையிலுள்ள "தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்கு" உயர் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இதுவரை 217 ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். 27 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1978–79 ஆம் ஆண்டு மேலும் 30 ஆசிரியர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

**ஆராய்ச்சியைப் பேணுதல்—**

13. ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுப் பணிகள் வளர வேண்டும் என்பது நன்கு உணரப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் நிலை ஆராய்ச்சி எந்த அளவுக்கு நன்கு நடைபெறுகிறதோ அந்த அளவுக்கு இப்பணி சிறக்கும். அண்மையில் சில ஆண்டுகளில் பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் பட்டத்திற்கு (முழு நேர மற்றும் பகுதி நேர) ஆராய்ச்சி செய்ய மாணவர்கள் பதிவு செய்து கொள்வது ஊக்குவிக்கப்படுகிறது. இதுவரை 108 மாணவர்கள் டாக்டர் பட்ட ஆராய்ச்சிக்கு பதிவு செய்து கொண்டுள்ளனர். டாக்டர் பட்ட ஆராய்ச்சிக்காக தனியார் தொழிற் கல்வி நிறுவனங்கள் செய்யும் செலவு முழுவதையும் ஏற்க அரசு இசைந்துள்ளது.

**தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்—**

14. இம்மாநிலத்தில் தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் வழங்கப்படும் மானியத் தொகை படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 160 இலட்சம் மானியத் தொகையாக அளிக்கப்படும்.

15. தனியார் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்கு 1–1–1975 முதலும் அவற்றிலுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1–4–1977 முதலும் தாராள ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

**விரிவுப் பணிகள்—**

16. தொழில் கல்வி நிலையங்களை விரிவுப் பணிகளில் ஈடுபடுத்த முனைப்பான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தொடர் கல்வி வசதிகள் அளிக்கப்படுகின்றன. பரிசோதனை மற்றும் அறிவுரை கூறும் பணிகள் நடைபெறுகின்றன. கிராமப்புற கைவினைஞர்கள் புதிய கருவிகளைக் கையாளவும் புதிய தொழில் நுட்பவியல் முன்னேற்றங்களின் பயனை அடையவும் உதவியளிக்கப்படுகிறது.



**1. தொடர் கல்வி.—**

பணியாற்றும் பொறியியலறிஞர்களுக்கு மறுபார்வை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவரவர் துறையில் அவ்வப்பொழுது நிகழும் வளர்ச்சிகளைப் பற்றி அவர்கள் இவற்றின் மூலம் அறிந்துகொள்ள இயலுகிறது. பெரும்பாலும் இவ்வகுப்புகளை நடத்த ஆகும் செலவு வசூலிக்கும் கட்டணத் தொகைக்கு மேல் போவதில்லை. ஆண்டுதோறும் பல்வேறு பொறியியற் கல்லூரிகளிலும் சுமார் 25 மறுபார்வை வகுப்புகள் நடக்கின்றன. ஒவ்வொன்றிலும் சுமார் 30 பேர் பயன் பெறுகின்றனர். 1978–79-ல் சுமார் 60 வகுப்புகள் நடைபெறும்.

**2. பரிசோதனை மற்றும் அறிவுரை கூறும் பணி.—**

தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் தனியார் தொழிற்சாலைகள் முதலியன விரும்பும் பரிசோதனைகள் செய்துதரப்படுவதுடன் அவர்கள் கோரும் பிரச்சினைகள் பற்றி அறிவுரை கூறும் பணியும் நடைபெறுகிறது. இவற்றுக்கு குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

**3. கிராமப்புற வளர்ச்சி.—**

கிராமப்புற மக்கள் எளிதில் பயன்படுத்தத் தக்கவையும் அவர்கள் செயல் திறனைப் பெருக்குபவையும் ஆன பல சுலபமான பொருள்கள், கருவிகள், முதலியவற்றை பல்தொழில் பயிலகங்கள் சில உருவாக்கியுள்ளன. சிறு கடைசல் பொறி ; மண்ணெண்ணெய் அடுப்பு ; புகையில்லாத சூளை; சீர்திருத்தப்பட்ட மாட்டுவண்டி முதலியவை அத்தகைய சில கண்டு பிடிப்புகளாகும்.

**வணிகவியல் பாடங்களில் தேர்வு —**

17. தொழில் நுட்ப இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டெழுத்து, சுருக்கெழுத்து, வரவு செலவுக் கணக்கியல், வணிகவியல் பயிற்சி, வணிகப் புவியியல், வங்கியியல் போன்றவற்றிற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்களுக்கு தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார்.

**கணித அறிவியல் நிறுவனம் —**

18. அடையாற்றில் அமைக்கப்பட்டுள்ள கணித அறிவியல் நிறுவனம் மாநில அரசு, மைய அரசு ஆகியவற்றின் உதவியோடு செயல்படுகிற தன்னுரிமை பெற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்திற்கு மாநில அரசு ஆண்டுக்கு ரூ. 3.5 இலட்சம்

மானியமாக அளிக்கின்றது. தற்போது, அடிப்படைக் கணிதம் மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் துறைகளில் உயர்தர ஆராய்ச்சி நடத்திவரும் இந்நிறுவனம் அனைத்திந்திய பெருமையை அடைந்துள்ளது.

சென்னைத் தொழில் நுட்பவியல் கல்வியகம்—

19. சென்னை தொழில் நுட்பவியல் கல்வியகம் 1949-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1969–70 ஆம் ஆண்டு முதல் இது மாநிலக் கல்வி அமைச்சரின் கீழ் அமைந்த ஒரு மேலாண்மைக் குழுவின் ஆட்சியின் கீழ் வந்தது. இந்நிறுவனம் வானவூர்திப் பொறியியல், உந்து வண்டிப் பொறியியல், மின்னணுப் பொறியியல், கருவிப் பொறியியல், உற்பத்திப் பொறியியல் (1977–78-ல் தொடங்கியது), ஆகியவற்றில் பயிற்சி அளிக்கின்றது. அக்கல்வியகத்தில் அறிவியல் பட்டதாரிகளே சேர்க்கப்படுகின்றனர். வானவூர்திப் பொறியியல், மின்னணுப் பொறியியல் ஆகிய துறைகளில் இந்நிறுவனம் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த பட்ட மேற்படிப்பு வகுப்புகளையும் நடத்துகின்றது. 1974–75 வரை இந் நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ஆகும் செலவில் நிகர பற்றுக்குறைத தொகையில் மூன்றில் ஒரு பகுதியையும் 1974–75-ம் ஆண்டு முதல் நிகரப் பற்றுக்குறை முழுவதையும் மாநில அரசு ஏற்று வருகிறது.

வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி—

20. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி 1964–65 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அது தன்னுரிமையுள்ள நிறுவனமாகும். தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சரே அதன் ஆட்சிக் குழுவின் தலைவராவார். தற்போது அக்கல்லூரியில் ஆண்டுதோறும் 200 மாணவர்கள் பொறியியல் . பட்டப்படிப்பிற்கு எடுத்துக்கொள்ளப் படுகிறார்கள். கல்லூரியிலுள்ள இடங்களில் பாதி இம்மாநில மாணவர்களைக் கொண்டும், பாதி பிற மாநில மாணவர்களைக் கொண்டும் நிரப்பப்படுகின்றன. அக்கல்லூரிக்கு ஆண்டுதோறும் ஆகும் செலவில் பாதியை மைய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்று வருகின்றன. செலவில் மாநிலம் ஏற்கும் பங்கு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 20இலட்சமாகும். அக்கல்லூரியில் நடக்கும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் அனைத்துக்கும், சென்னைப் பல்கலைக்கழகம் தன்னுரிமை வழங்கியுள்ளது.





மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம், திருச்சிராப்பள்ளி.

21. " மாநிலக் கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிறுவனம் ", புகுமுக வகுப்பு தேறிய மாணவர்களுக்கு தொழில் கல்வி பயிற்றுவிப்பதற்காக 1975–76 ஆம் ஆண்டு முதல் திருச்சிராப்பள்ளியில் துவங்கப்பட்டது. அது தன்னுரிமை உள்ளது. கல்வி அமைச்சர் இந்நிறுவனத்தின் ஆளுகைக் குழுவிற்குத் தலைவராவர். திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அதன் துணைத் தலைவராவர். அது 42 மாதங்கள் கொண்ட (27 மாதங்கள் நிலையப் பயிற்சியும் 15 மாதங்கள் வேலை அனுபவமும் உடைய) கல்வித் திட்டங்களை நடத்தி வருகிறது. (1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2) மின் கருவிகளும் முறைகளும், (3) நெசவும் நவீன அழகு வேலைப்பாடும் என்ற மூன்று பாடத்திட்டங்கள் அங்கு உள்ளன. ஒவ்வொரு பாடத் திட்டத்திற்கும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாநில அரசு இந் நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2 இலட்சம் மானியம் அளிக்கின்றது.

[1978 மார்ச் 2

# VI. கலைப் பணிகள்.

(i) இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலியவை.

இயல், இசை, நாடக மன்றம்—

1. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு நிறுவனமாகும். இம்மன்றம் நடனம், நாடகம், இசை ஆகிய கலைகளை ஆதரித்து வளர்க்கும் அரும்பணியைச் செய்து வருகின்றது. இது இந்திய அரசின் கலாச்சாரப் பரிமாற்றுத் திட்டத்தின்கீழ் வெளிநாடுகளிலிருந்து வரும் கலைக் குழுக்களுக்கு வரவேற்பளிக்கிறது. சிறந்த நாடகங்களின் ஆக்கத்திற்கு ஊக்கமளிக்கின்றது. தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு கலைக் குழுக்கள் செல்ல ஆதரவளித்தும் வருகின்றது.

2. திறம் மிக்க சிறந்த கலைஞர்களை ஊக்குவிப்பது இம்மன்றத்தின் தலையாய பணியாகும். ஆண்டுதோறும் இம்மன்றம் வாய்ப்பாட்டு, வயலின் இசை, மிருதங்கம், நாதஸ்வரம், புல்லாங்குழல், ஹரிகதா காலட்சேபம் ஆகியவற்றின் திறம்மிகு கலைஞர்களை, கலையரங்க நிகழ்ச்சி ஒன்றின் மூலம் தேர்வு செய்து அவர்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் அக்கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் மானியம் அளிக்கிறது. 1963 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 600-க்கு மேற்பட்ட கலைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். இதற்காக ஆண்டு தோறும் ஏறத்தாழ 30,000 ரூபாய் செலவாகிறது. 1960 ஆம் ஆண்டு முதல் இம்மன்றம் சிறந்த கலைஞர்களுக்கு 'கலைமாமணி' என்ற பட்டமளித்து சிறப்பிக்கின்றது. கடந்த 15 ஆண்டுகளில் இம்மன்றம் இசை, நடனம், நாடகம், திரைப்படம், கிராமியக் கலைகள் ஆகியவற்றில் ஏறத்தாழ 425 கலைஞர்களுக்கு பட்டமளித்துச் சிறப்பித்துள்ளது. 1975 ஆம் ஆண்டு முதல் "கலைமாமணி" பட்டம் பெற்றவர்கள் 10 கலைஞர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரொக்கப் பரிசாக (பொற்கிழி) ரூ. 1,000 கொடுத்து வருகிறது. இதற்கென முதலமைச்சர் தனி நிதியிலிருந்து கொடுத்த ரூபாய் ஒரு லட்சத்தின் வட்டியிலிருந்து இப்பரிசு அளிக்கப்படுகிறது.

3. நமது இசை, நாடக வளப் பாரம்பரியத்தை வருங்காலச் சந்ததிகளின் நன்மைக்காக பேணிக்காக்கும் வகையிலும் அயல் நாடுகளிலிருந்து வரும் கலைஞர்கள்



1978 மார்ச் 2]

ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையிலும் சிறப்புடைய இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளையும், புகழ்வாய்ந்த நாடகக் குழுக்கள் நடித்த பழைய நாடகங்களையும் இம்மன்றம் ஒலிப்பதிவு செய்கின்றது. இம்மன்றம் அவ்வித ஒலிப்பதிவுகளின் சிறந்த தொகுப்பொன்றை சேர்த்துள்ளது.

4. அண்மையில் இந்து அறநிலையத்துறை நாதஸ்வரம் பயில்பவர்கள் ஐவருக்கு ஆளுக்கு மாதம் ரூ. 500 வீதமும், தவில் பயில்பவர்கள் ஐவருக்கு ஆளுக்கு மாதம் ரூ. 300 வீதமும் உதவிப்பணம் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு ஏற்பளித்துள்ளது.

ஆண்டுதோறும் தொல் மரபுக் கேற்பத் தமிழில் புதிய இசைப்பாடல்களை எழுதும் கவிஞர் ஒருவருக்கு ரூ. 5,000 ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்ப்பண்பாட்டுக்கு இசைந்த வகையிலும், இசை நுணுக்கங்களுக்கேற்ற வகையிலும் புதிய மெட்டுக்களைப் புகுத்தும் இசைவாணர் ஒருவருக்கும் இத்தகைய ரொக்கப்பரிசு ஒன்று வழங்கப்படும். இது குறித்து இயல் இசை நாடக மன்றம் நடவடிக்கை எடுக்கும்.

5. நாடகக் கலையை ஊக்குவிக்க, இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப்பயிற்சி அளிக்கவும் அதனுடன், பொதுக் கல்வி கற்பிக்கவும் வழி வகைகள் செய்து, சிறந்த மாணவ நாடகக் குழுக்களை உருவாக்கி அவைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கப் புதியதொரு திட்டம் கொண்டு வரப்படும். கிராமீயக் கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஒய்வூதியம்—

6. வறுமையால் வாடும் ஏறத்தாழ 500 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின்கீழ் ரூ. 75 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டுகாலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் வறுமை நிலையிலேயே தொடர்ந்தால் மீண்டும் மூன்று ஆண்டு மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்து விட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிதி நிலையை பொறுத்து இறக்கும்வரை மூன்றாண்டுகளுக்கொருமுறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகி

றது. இப்பணிக்கு ஆண்டுதோறும் ரூ. 7 இலட்சம் செலவாகிறது. 1978—79-ல் மேலும் 100 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓவியம் நுண்கலைக் குழு—

7. ஓவியம் முதலிய நுண்கலைகளைப் பேணி வளர்க்கும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு தன்னாட்சியுரிமையுள்ள மற்றொரு நிறுவனமாகும். அது கல்வி அமைச்சரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. இக்குழு ஆண்டுதோறும் கலைக் கண்காட்சிகள் நடத்துகிறது. சிறந்த ஓவியங்களுக்கும் சிறபங்களுக்கும் ரொக்கப் பரிசு அளிக்கிறது. கலை நிறுவனங்களுக்கு மானியமளிக்கிறது. திறம் மிக்க இளம் கலைஞர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ. 150 வீதம் உதவித் தொகை அளிக்கிறது. இக்குழுவிற்கு ஆண்டுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மானியம் தரப்படுகிறது.

ஜவஹர்லால் நேரு பால பவன்—

8. ஜவஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து பெற்ற ரூ. 16 இலட்சம் (அந்நிதி இம்மாநிலத்திலிருந்து வசூலித்த தொகையில் 40 விழுக்காடு) உதவித் தொகையைப் பயன்படுத்தி ஜவஹர்லால் நேரு பாலபவன் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படுகின்றது கலை, இசை, நடனம் முதலியவற்றின் இளஞ்சிறார்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ள வசதி அளிக்கும்படி கல்வி மற்றும் மனமகிழ் மன்றமாக அது இருக்கும். இந்நிறுவனத்தை அமைக்கும் முதனிலைப் பணி தற்போது கவனிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள்—

9. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் முழுநேர மாணவர்கள் 246 பேரும், பகுதி நேர மாணவர்கள் 250 பேரும் பயிலுகின்றனர். இதில் முழுநேர ஆசிரியர்கள் 23 பேரும் பகுதி நேர ஆசிரியர்கள் 13 பேரும் பணி செய்கின்றனர் இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, கருவி இசை பரத நாட்டியம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இக்கல்லூரி அனைத்திந்திய அளவில் புகழ்பெற்று விளங்குகின்றது. பிற மாநிலங்கள் பலவற்றிலிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இக்கல்லூரியில் பயில்கின்றனர். வேலைக்குச் செல்லும் பெண்கள், இல்லத்தரசிகள், ஆண்கள் ஆகியோருள் இசையார்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகை





யில் சென்னை நகரில் நான்கு மையங்களில் மாலை நேரங்களில் இசை வகுப்புகள் (வாய்ப்பாட்டு, வயலின், வீணை) நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் 64 பேருக்கு பகுதி நேர ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றனர்.

10. மதுரை மாநகரத்தில் இசைக் கல்லூரி ஒன்றை வரும் ஆண்டில் நிறுவ அரசு முடிவெடுத்துள்ளது. இது சென்னையிலுள்ள இசைக் கல்லூரியின் இணைப்பாக இயங்கும்.

(ii) ஆவணக் காப்பகமும் அருங்காட்சியகங்களும்

1. தென் ஆசியாவில் வளமான அரசு ஆவணத் தொகுப்பைப் பெற்றுள்ளது தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகமாகும். அது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு ஆவணக்காப்பகமாகவும் செயல்படுகிறது. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆவணங்கள் அதில் உள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்குத் தரப்படுகின்றன.

2. ஆவணச் செயல்முறையை அதிகப்படியான பணியாளர்கள் மற்றும் கருவி கலங்களைக் கொண்டு புதுமைப்படுத்தும் முயற்சிகள் தொடருகின்றன. 1978—79-ல் நுண் நிழற்படக் கருவி ஒன்று வாங்கப்படும்.

3. 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக்குழு, தென்னிந்தியாவில் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து தரமான ஆராய்ச்சியுரைகளை எழுதும் திறனும் ஆற்றலுமுடையவர்களை ஊக்குவிக்கின்றது. அவர்களுக்கு ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளையும் சூழலையும் அளிப்பதுடன் ஆண்டுதோறும் நான்கு ஆராய்ச்சி மாணவப் பணியிடங்களும் (Fellowships) வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக்கும் ரூ. 5,000 சில்லரைச் செலவினங்களுக்காக ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்றது.

4. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தைச் சேர்ந்தவையான (17—18-வது நூற்றுண்டுகளைச் சார்ந்த) முக்கியமான ஆவணங்களின் படிகள் அல்லது சுருக்கங்கள் அச்சிடப்பட்டு வரலாற்றுராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படும் புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளோர் அவற்றை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் வகையில் மிகக் குறைந்த விலையில் ஆவணக் காப்பகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

5. மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச் சுவடிகள் பிரிவும் ஆவணக் காப்பக மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் தான் செயல்படுகின்றது.

அருங்காட்சியகங்கள்:

6. சென்னையிலும், புதுக்கோட்டையிலும் அரசு அருங்காட்சியகங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகங்கள் சிறந்த சிற்பங்கள், மரச் செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இவை தவிர தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருள்களும் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. பொதுமக்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் இவற்றால் பெரும்பயனடைந்து வருகின்றனர். இவ்வருங்காட்சியகங்கள் பொது மக்களுக்கான அறிவியல் விரிவுரைகளையும் கண்காட்சிகளையும் நடத்தி வருகின்றன.

7. 1978–79-ல் இத்துறை சேலத்தில் கிளை அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க இருக்கிறது. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டங்களும் அவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

(iii) பொது நூலகங்கள்.

12. கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3 இலட்சம் புத்தகங்கள் உள்ளன். உறுப்பினர்கள் 10,000 பேராவர். புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 13 மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. 1,442 கிளை நூலகங்களும் உள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நூலக ஆணைக் குழு அமைக்கப்பட வேண்டியுள்ளது. பொது நூல் நிலையச் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இன்னும் விரிவாக்கப்படவில்லை. ஏறக்குறைய 3,000 பேர் இந் நூலகங்களில் பணி புரிகின்றனர். இந்நூல் நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 61 லட்சம். இவையனைத்தின் உறுப்பினர்களும் மொத்தம் 7 லட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாதவர்களும் நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் பயன் படுத்தலாம். மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள், நடமாடும் நூலகங்கள் போன்ற சிறப்பான நூலகப் பணிகளையும் புகுத்தியுள்ளன.





13. நூலக நிதியின் பெரும்பகுதி ரூபாய்க்கு 5 பைசா வீதம் வீட்டுவரி, சொத்துவரி ஆகியவற்றின்மீது வசூலிக்கப்படும் நூலக மேல் வரியைக் கொண்டதாகும். ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் ஏறத்தாழ ரூ. 70 இலட்சம் முதல் ரூ. 80 இலட்சம் வரை நூலக மேல் வரியாகப் பெறுகின்றன. சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமான இணை மானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973–74 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு 1977–78-ம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் கொடுத்த புத்தகங்கள் 1,172 ; மொத்தம் கொடுத்த படிகள் 3,37,000; செலவு ரூ. 25 இலட்சம். இது தவிர திட்டப் பணிகளின் கீழ் துவங்கப்பட்ட நூலகங்களுக்காக அரசு தனி மானியம் வழங்குகின்றது. 1973–74 ஆம் ஆண்டு முதல் திட்ட மானியத்திலும் 50 விழுக்காடு புத்தகங்களாக வழங்கப்படுகின்றது. 1978–79 ஆம் ஆண்டு பொது நூலகங்களுக்காக ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 132 இலட்சமாக இருக்கும்.

14. 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாளிலிருந்து பொது நூலகங்களுக்காக தனி இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் நாட்டில் நூலகப் பணியின் தற்போதைய அமைப்பை ஆராய்ந்து அதன் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான வழிவகைகள் பற்றி ஆலோசனை கூற ஐவர் குழு ஒன்றை அரசு அமைத்தது. அக் குழு 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அறிக்கையை அனுப்பியது. அக் குழுவின் பல்வேறு பரிந்துரைகளும் விரிவாக ஆராயப்பட்டன. அதன் பரிந்துரைகளில் ஒன்றை ஏற்று, 1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து முழுநேர மாவட்ட நூலக அலுவலர்கள் மாவட்டத்திற்கு ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் நாட்டில் நூல் நிலையப் பணியை முழுவதும் சீரமைத்திட வேறு சில பல பரிந்துரைகளையும் அக் குழு அளித்துள்ளது. அவற்றை நிறைவேற்ற 1948 ஆம் ஆண்டு ''தமிழ்நாடு பொது நூல் நிலைய சட்டத்திற்கு'' பல திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கும். அவைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூல் நிலையம்.

4. தஞ்சாவூர், மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூல் நிலையம் மதிப்பு மிக்க கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட முதன்மையான நூல் நிலையம். அதில் 30,377

சட்டம் இந்தியா முழுவதும் அமுலுக்கு வந்தது. இத்திட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்கள் எழுவர் பல்வேறு மாவட்டத் தலைமையிடங்களில் பணிபுரிகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பதிவுத் திட்டத்தின் செலவை 1—4—1976 முதல் மூன்றுண்டுகளுக்கு மைய அரசு ஏற்கும்.



# VII: தமிழ் வளர்ச்சி

1978-79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 66 இலட்சமாகும். இத்தொகையில் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கான புத்தகப்படி வழங்கிட ரூ. 40 இலட்சம் செலவிடப்படும். கல்லூரி பாடப் புத்தகங்களைத் தமிழில் கொணர்வதற்காக ரூ. 10 இலட்சம் செலவிடப்படும். தமிழ் வளர்ச்சித் துறைக்காகவும் அதன் செயற்பாடுகளுக்காகவும் ரூ. 12 இலட்சம் செலவிடப்படும். வேறு சில காரியங்களுக்காக ரூ. 4 இலட்சம் செலவிடப்படும்.

## தமிழ் வளர்ச்சி இயக்கம்.

2. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் திட்டத்தினை முழு முனைப்புடன் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதில் அரசு ஆவல் கொண்டுள்ளது. சட்டங்கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. அரசுத் துறைகள் பயன்படுத்திட ஆட்சிச் சொல்லகராதியும், சிறப்புச் சொல்லகராதிகளும் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழை ஆட்சி மொழியாகக் கொள்வதில் ஏற்படும் முன்னேற்றத்தை ஆய்வு செய்திட தனி ஆய்வுப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். 1867-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பெற்ற தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணை ஒன்று தொகுக்கப்பட்டு வருகின்றது. 1867 முதல் 1910 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு எட்டு தொகுதிகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளுக்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

3. ஆதாரபூர்வமான தமிழ்நாட்டு வரலாற்றினை எழுதுவதற்கான வல்லுநர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றில் இரண்டு தொகுதிகள் முடிக்கப் பெற்றுள்ளன. தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதியானது ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது; சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும். தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டத்தையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது.

4. பிற மாநிலங்களிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களும் வேறு நிறுவனங்களும் தமிழ்ப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்துவதற்கும், தமிழில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கும் தமிழில் பகுதி நேரப் பட்டயப்படிப்பு வகுப்புகளை நடத்துவதற்கும் இவ்வரசு தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது. தமிழில் வகுப்புகள் தொடங்குவது குறித்து பல பல்கலைக் கழகங்களின் இசைவு கோரப்பட்டு உள்ளது. அவற்றிடமிருந்து பதில் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. பிற மொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு குழு அமைக்கப்படுகிறது. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அதன் தலைவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர், சென்னை பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், ஆட்சி மொழிக் குழுவின் தலைவர், சாகித்ய அகாடெமியின் மண்டலத் தலைவர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்ாக இருப்பர். இக்குழு முதலில் இத்துறையில் இதுவரை இவ்வாறு வெளி வந்துள்ள மொழிபெயர்ப்பு நூல்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து, இனிமேல் ஆற்ற வேண்டிய பணி குறித்து முடிவு செய்யும். கவனமான ஆய்வுக்குப் பின் எந்தெந்த நூல்களை இந்த மொழிப் பெயர்ப்புப் பணிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது குறித்து முடிவு செய்து, அவற்றைத் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் மூலமாக வெளியிடும்.

6. வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 100 வீதம் ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1978 சனவரியில் தொடங்கப்பட்டது. மாத வருமானம் 150-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழ் அறிஞர்களுக்கு இந்த ஓய்வூதியம் கிட்டும். 1977-78 ஆம் ஆண்டுக்கு இந்த ஓய்வூதியம் 50 பேருக்கு வழங்கப்படும். ஐந்து பேருக்கு 15-1-1978 திருவள்ளுவர் நாள் முதல் இந்த ஓய்வு ஊதியம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் அரும் பணியாற்றியுள்ள அறிஞர்களுக்கும், அத்தகையோர் தங்கள் குடும்பங்களை வறுமை நிலையில் விட்டு விட்டு மாண்டு போய் இருந்தால் அக்குடும்பங்களுக்கும் இந்த ஓய்வூதியம் தரப்படும். ஓய்வூதியம் தரத் தகுதி வாய்ந்தவர்களை வல்லுநர் குழு ஒன்று தேர்ந்தெடுக்கிறது. ஓய்வூதியம் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத்



தரப்படுகிறது. மூன்றாண்டு, மூன்றாண்டாகப் புதுப்பித்துக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தமிழ்வளர்ச்சி இயக்குநர் செயல்படுத்தி வருகிறார்.

7. கம்பர், வள்ளலார் போன்ற தமிழினச் சான்றோர்களுக்கு நினைவுச் சின்னமாய், சென்னையில் தமிழ்ப்பண்பாட்டு மைய நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்து உள்ளது. இந்த நிலையத்தில் நூலக, படிப்பக வசதிகளும், பட்டி அரங்கமும், காட்சிப் பொருள்களுக்கான இடங்களும் அமைக்கப்படும்.

8. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்காக, உமறுப் புலவர் பெயரில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவி ஏற்படுத்த இரண்டு இலட்சம் ரூபாய் மானியம் தரப்பட இருக்கிறது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

9. தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞராகவும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகவும் உள்ள திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை தொகுக்கும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். அவ்வகர முதலி முழு விரிவு வாய்ந்ததாகவும், திட்டவட்டமானதாகவும் அமையும். அது சுமார் 12 தொகுதிகளாக வெளிவரும். முதல் தொகுதி 1978-ம் ஆண்டு இறுதிக்குள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

10. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறுவப்பட்டது. தமிழ் ஆராய்ச்சியில் பற்றுள்ள உலக அறிஞர்களின் ஒத்துழைப்புடன், தமிழ்த் துறையிலும் தொடர்புள்ள பிற துறைகளிலும் ஆராய்ச்சியை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். 1972 ஆம் ஆண்டிலிருந்து இந்நிலையம் தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. உலக நாடுகளில் உள்ள அறிஞர்கள் பலர் எழுதும் கட்டுரைகள் அவ்விதழில் இடம் பெறுகின்றன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் சிறந்த நூலகம் ஒன்று இந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ கொடையாக அளித்துள்ள காட்சி கேள்விச் சாதனத்தின்

உதவியுடன், மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியைக் கொண்டும் வெளி நாட்டு மாணவர்களுக்கு இந்நிலையம் சிறப்பான முறையில் தமிழ் கற்றுத் தருகிறது. இதுவரை இந்நிறுவனம் 12 நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இலக்கியக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகளை இந்நிறுவனம் மாதந்தோறும் நடத்தி வருகிறது. அண்மையில் சில ஆண்டுகளாக இந்நிலையம் தமிழ்நாடு அரசிடமிருந்து ஆண்டு தோறும் மூன்று இலட்சம் ரூபாய்கள் அளவில் மானியம் பெற்று வருகின்றது. தற்போது இந்நிறுவனம், அடையாறு மத்தியப் பல்தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தில் அமைந்து உள்ளது. இந்நிறுவனத்திற்கு நிலையான கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக தற்போது இந்நிறுவனம் இருக்கும் இடத்திற்கு அருகில் ஆறு ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கி உள்ளது.



## இணைப்பு II—அ.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

(சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.)

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு). (3) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1976–77. (5) | 1977–78. (6) |
|---|---|---|---|---|---|
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | | |
| வயதுத் தொகுதி 6–11 — | | | | | |
| சிறுவர் .. .. | 25.85 | 26.79 | 30.45 | 31.93 | 32.39 |
| சிறுமியர் .. .. | 25.64 | 26.58 | 29.79 | 31.23 | 31.68 |
| மொத்தம் .. .. | 51.49 | 53.37 | 60.24 | 63.16 | 64.07 |

இணைப்பு II-அ—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| .. | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு.) | 1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு.) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு.) | 1976–77 | 1977–78 |
|---|---|---|---|---|---|
| (1) .. | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (சிறுவர், | சிறுமியர் | எண்ணிக்கை | இலட்சத்தில்) | |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர். | | | | | |
| சதவீதம்— | | | | | |
| 6 முதல் 11 தொகுதி— .. | | | | | |
| சிறுவர் .. .. | 102.03 | 105.34 | 100.6 | 100.3 | 102.2 |
| சிறுமியர் .. .. | 73.08 | 78.85 | 79.6 | 81.7 | 84.4 |
| மொத்தம் .. | 87.61 | 92.15 | 90.2 | 91.7 | 93.4 |
| 11 முதல் 14 தொகுதி— | | | | | |
| சிறுவர் .. .. | 63.78 | 68.23 | 66.3 | 67.7 | 70.3 |
| சிறுமியர் .. .. | 30.72 | 36.79 | 37.9 | 41.0 | 42.9 |
| மொத்தம் .. | 47.31 | 52.57 | 52.3 | 54.4 | 56.8 |
| 14 முதல் 17 தொகுதி— | | | | | |
| சிறுவர் .. .. | 41.38 | 44.48 | 43.0 | 44.9 | 43.7 |
| சிறுமியர் .. .. | 17.83 | 21.52 | 21.8 | 23.1 | 22.9 |
| மொத்தம் .. | 29.65 | 33.05 | 33.0 | 34.1 | 33.4 |
| ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை— | | | | | |
| தொடக்கப் பள்ளிகள் .. | 24,641 | 25,694 | 26,726 | 27,306 | 27,395 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் .. | 6,065 | 6,018 | 5,773 | 5,730 | 5,709 |

இணைப்பு II-அ—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965-66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2) | 1968-69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு.) (3) | 1973-74 (நான்காவது திட்ட முடிவு.) (4) | 1976-77 (5) | 1977-78 (6) |
|---|---|---|---|---|---|
| | (சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்) | | | | |
| உயர் நிலைப் பள்ளிகள் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மைய அரசுப் பள்ளிகள் உட்பட) ... | 2,234 | 2,513 | 2,823 | 3,030 | 3,058 |
| | 32,940 | 34,225 | 35,322 | 36,066 | 36,162 |
| உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | | |
| தொடக்கப் பள்ளிகள் | 88,173 | 91,918 | 1,06,332 | 1,11,033 | 1,11,184 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 59,943 | 62,222 | 66,843 | 67,846 | 68,794 |
| உயர் நிலைப் பள்ளிகள் ... | 48,574 | 54,857 | 65,959 | 72,838 | 73,039 |
| மொத்தம் ... | 1,96,690 | 2,08,997 | 2,39,134 | 2,51,717 | 2,53,017 |
| ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)— | | | | | |
| (1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | | |
| தொடக்கப் பள்ளிகள் | 27 | 36 | 35 | 36 | 37 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 35 | 33 | 33 | 33 | 33 |
| உயர்நிலைப் பள்ளிகள் ... | 31 | 26 | 24 | 24 | 24 |

## இணைப்பு—தொடர்ச்சி.

### பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965-66 (மூன்றுவது திட்ட முடிவு). (2) | 1965-66 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு) (3) | 1973-74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1976-77 (5) | 1977-78 (6) |
|---|---|---|---|---|---|
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியிலிருந்து நீக்கி)— | | | | | |
| தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி .. | 37 | 37 | 37 | 36 | 37 |
| உயர் தொடக்க நிலை வகுப்புத் தொகுதி .. | 32 | 33 | 33 | 33 | 33 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி .. .. | 32 | 32 | 29 | 30 | 27 |



## இணைப்பு இரண்டு.

### கல்லூரிக் கல்வி புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1965-66 மூன்றுவது திட்ட முடிவு. | | 1968-69 ஆண்டுத் திட்டங்கள் முடிவு. | |
|---|---|---|---|---|
| (1) | (2) மார்ச். | (3) அக்டோபர். 1966. | (4) ஏப்ரல். | (5) அக்டோபர். 1968. |
| 1. எஸ். எஸ். எல். சி. எழுதிய மாணவர் எண்ணிக்கை. | 1,46,592 | 31,327 | 1,96,272 | 57,374 |
| 2. அவர்களுள் தேறியோர் எண்ணிக்கை | 75,270 | 8,128 | 98,181 | 11,004 |
| 3. கல்லூரிப் படிப்புக்கு சென்ற மாணவர்கள். | 39,507 | | 59,743 | |
| 4. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. | | 39,507 | | 59,743 |
| (2) பி.ஏ. — | | 11,349 | | 28,016 |

| | | |
|---|---|---|
| (3) பி.எஸ்சி. .. | 22,381 | 33,576 |
| (4) பி. காம். .. | 3,050 | 4,556 |
| (5) பட்ட மேற்படிப்பு | 2,607 | 3,624 |
| | 78,894 | 1,29,515 |
| 5. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | |
| (1) அரசுக் கல்லூரிகள் | .. | 1,509 |
| (2) தனியார் கல்லூரிகள். | .. | 5,071 |
| | 4,932 | 6,580 |
| 6. கல்லூரிகள் எண்ணிக்கை— | | |
| (1) அரசு .. | 21 | 33 |
| (2) தனியார் . | 71 | 93 |
| | 92 | 126 |



இணைப்பு இரண்டு—தொடர்ச்சி.

கல்லூரிக் கல்வி—புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| விவரங்கள். | 1973-74 நான்காவது திட்ட முடிவு. | | 1976-77. | | 1977-78. | |
|---|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | மார்ச். 1973. | அக். | மார்ச். 1976. | அக். | மார்ச். 1977. | அக். |
| 1. எஸ். எஸ். எல். சி. எழுதிய மாணவர் எண்ணிக்கை. | 1,93,686 | 30,361 | 2,25,971 | 25,301 | 2,85,298 | 50,529 |
| 2. அவர்களுள் தேறியோர் எண்ணிக்கை. | 96,903 | 5,367 | 1,30,874 | 6,738 | 1,43,731 | 6,956 |
| 3. கல்லூரிப் படிப்புக்கு சென்ற மாணவர்கள். | 72,646 | | 84,257 | | 89,423 | |
| 4. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | | | |
| (1) புகுமுக வகுப்பு.. | 72,646 | | 84,257 | | 89,423 | |
| (2) பி.ஏ. .. | 51,698 | | 44,697 | | 43,077 | |

| | | | |
|---|---|---|---|
| (3) பி. எஸ்சி. .. | 49,057 | 48,110 | 48,948 |
| (4) பி. காம். .. | 14,859 | 19,195 | 20,451 |
| (5) பட்ட மேற்படிப்பு. | 6,993 | 7,043 | 7,012 |
| | 1.95,253 | 2,03,302 | 2,08,911 |
| 5. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | |
| (1) அரசுக் கல்லூரிகள். | 2,969 | 3,733 | 3,812 |
| (2) தனியார் கல்லூரிகள். | 7,090 | 7,883 | 8,394 |
| | 10,059 | 11,616 | 12,206 |
| 6. கல்லூரிகள் எண்ணிக்கை— | | | |
| (1) அரசு .. | 51 | 51 | 51 |
| (2) தனியார் .. | 127 | 138 | 137 |
| | 178 | 189 | 188 |



## இணைப்பு 3

தொழில் நுட்பக் கல்வி —புள்ளி விவரங்கள்:

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968–69 (ஆண்டுத் திட்ட கால முடிவு). (3) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1976–77 (5) | 1977–78, (6) |
|---|---|---|---|---|---|
| (அ) பொறியியற் கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | | |
| (1) அரசு .. | 3 | 4 | 4 | 4 | 4 |
| (2) தனியார் .. .. .. | 4 | 3 | 3 | 3 | 3 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. | 5 | 5 | 5 | 5 | 5 |
| மொத்தம் .. | 12 | 12 | 12 | 12 | 12 |
| (ஆ) பல்தொழிற் பயிலகங்கள் எண்ணிக்கை — | | | | | |
| (1) அரசு .. .. .. | 16 | 16 | 19* | 19* | 19* |
| (2) தனியார் .. .. .. | 18 | 18 | 19 | 19 | 19 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. | 1 | 1 | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 35 | 35 | 39 | 39 | 39 |

*கலை—தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்கள் மூன்றையும் சேர்த்து.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்— | | | | | |
| (1) அரசு .. .. .. | 11 | 11 | 11 | 11 | 11 |
| (2) தனியார் .. .. .. | 4 | 4 | 3 | 3 | 3 |
| மொத்தம் .. | 15 | 15 | 14 | 14 | 14 |
| (உ) ஆசிரியர்கள் எண்ணிக்கை— | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் .. | .. | .. | .. | 741 | 749 |
| (2) பல்தொழிற் பயிலகங்கள் .. | .. | .. | .. | 1,134 | 1,184 |
| (3) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள். | .. | .. | .. | 103 | 103 |
| மொத்தம் .. | .. | .. | .. | 1,978 | 2,036 |
| (ஊ) மாணவர்கள் எண்ணிக்கை— | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் .. | 5,289 | 7,163 | 6,796 | 7,885 | 7,964 |
| (2) பல்தொழிற் பயிலகங்கள் .. | 10,526 | 12,633 | 10,591 | 14,131 | 14,200 |
| (3) தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகள். | 1,124 | 1,304 | 1,704 | 2,166 | 2,000 |
| மொத்தம் .. .. | 16,939 | 21,100 | 19,091 | 24,182 | 24,164 |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### வெள்ளிக்கிழமை, 1978 மார்ச், 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### உய்யக்கொண்டான் வாய்க்கால் ஏரிகள்.

*361 வினா— திரு. கூ. ச. முருகேசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதியைச் சார்ந்துள்ள உய்யக்கொண்டான் ஆற்று வாய்க்கால் ஏரிகளை (குளங்கள்) ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதியைச் சார்ந்துள்ள உய்யக்கொண்டான் ஆற்றுப் பாசன ஏரிகளில் தூர் எடுக்கும் வேலை எதுவும் தற்போது ஆய்வில் இல்லை. எனினும் ஏரிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கூ. ச. முருகேசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் இப்போது இல்லை என்று சொன்னார்கள். உய்யக்கொண்டான் ஆற்றுப் பாசனம் சரியாக இருந்தால், கூத்தப்பா, பெரியகுளம், வளப்பூர் போன்ற ஏரிகளைச் சுற்றி ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் பாசனம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. முன்னிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இதற்கு ஒரு திட்டம் தீட்டி இருந்தது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் தெரிவித்தது ஏரிகள் மராமத்துச் செய்யப்படும் திட்டம் இல்லை என்று. கரை அமைப்பு போன்ற திட்டங்கள் ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் இரண்டு ஏரிகளும், சிறு பாசனத் திட்டத்தின்கீழ் இரண்டு ஏரிகளும் மராமத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நடப்பாண்டில் 5 ஏரிகள் பழுது பார்க்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. உய்யக்கொண்டான் கால்வாய் சீரமைப்பு வேலையும் இப்போது நடைபெற்று வருகிறது.

[1978 மார்ச் 3

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, உய்யக் கொண்டான் வாய்க்காலினால் திருவெறும்பூர் பயன்படுவதைப் போல, திருவையாறில் ஒரு பகுதியும் பயனடைகிறது. ஆகவே, ஏரிகளை ஆழப்படுத்தும் வேலைகளைத் தொடங்கும் போது உய்யக் கொண்டான் கால்வாய் சீரமைப்புப் பணியையும் நிறைவேற்றி, திருவையாறு பகுதி மக்களும் அதன் பயனை அடைய துரித நடவடிக்கை எடுக்க வழிவகைச் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்களின் யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது திருவெறும்பூர் பகுதியைச் சேர்ந்தது. நீங்கள் கேட்கும் கேள்விக்கு அமைச்சரிடம் விளக்கம் இருக்காது. அதனால் அமைச்சரவர்கள் உங்கள் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாது. நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவரவர்களே, உய்யக் கொண்டான் ஆறு திருச்சி நகரின் மையமாகச் சென்று திருவெறும்பூரை அடைகிறது. அந்த ஆற்றிலே வெள்ளம் வரும் போதெல்லாம் திருச்சி நகரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, திருச்சி நகரப் பகுதியில் அந்த ஆற்றின் கரையை சிமின்ட் அல்லது வேறு கற்களைப் போட்டு உயர்த்தி, பலப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எப்போதோ ஒரு முறை வெள்ளம் வருகிறது. இந்தத் தடவை சற்றும் எதிர்பாராதவிதமான புயலும் மழையும் சேர்ந்து வந்த காரணத்தினால் அந்தப் பகுதியில் வெள்ளம் வந்தது. அதற்காக கரை அமைப்பது சிக்கனமாக இருக்காது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த உய்யக் கொண்டான் ஆறு திருச்சி நகரின் இருதயம் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த ஆற்றிலிருந்து எக்கச்சக்கமான நாற்றம் அடித்து, பொதுச் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அந்த நாற்றத்தைத் தடுக்க நடவடிக்கை உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வெள்ளம் வருமானால் அந்த நாற்றத்தை அடித்துக் கொண்டு போய்விடும்.



1978 மார்ச் 3]

திரு. ரா. உமாநாத் : எப்போதோ ஒரு தடவைதான் வெள்ளம் வரும் என்று சொன்னார்கள். அதனால் 'மேஜர் போர்ஷன்' நாற்றம் அடிக்கும் காலமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதை நகராட்சி மன்றம் கவனிக்கும்.

## தேனி ஒன்றியத்திற்கு பாசன வசதிகள்.

* 362 வினா—திரு. வெ. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: தேனி ஒன்றியத்திலுள்ள வறட்சிப் பகுதிகளாகிய கொடுவிலார்பட்டி, தாடிச்சேரி தப்புக்குண்டு, பூமலைக்குண்டு, ஜங்கல்பட்டி ரெவின்யூ கிராமங்களுக்கான நீர்பாசனத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு அரசு செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாளிட்ட அரசு பொதுப்பணித்துறை ஆணை எண் 647-ல் பெரிய குளம் தாலுக்காவில் பி. டி. ராஜன் வாய்க்கால் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தினால் கொடுவிலார்பட்டி, தாடிச்சேரி, தொப்புக்குண்டு, பூமலைக்குண்டு, ஜங்கல்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள கண்மாய்கள் பயனடைய இருக்கின்றன.

திரு. வெ. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக தேனி ஒன்றியப் பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கு மேற்படாமல் பயனடையும் வகையில் பாசனக் கண்மாய்களுக்கு " ஸ்டெபுலைசேஷன் " (Stabilisation) ஏற்படும் நிலைதான் இருக்கிறது. அதனால் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 180 எம்.சி.எப்.டி. தண்ணீர் முழுவதையும் தேனி வட்டத்திற்குப் பயன்படுத்த முடியாது ஆகவே, இப்போது நடந்துவருகிற உலக வங்கித் திட்டத்தின்கீழ் பாசன வசதி அளிக்கப்படும் 35,000 ஏக்கர் திட்டத்தில், தேனி பகுதிக்கு மேலும் 10,000 ஏக்கர் புதிய 'டிரை ஆயக்கட்டு' ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே ஒரு 'சம மட்ட வாய்க்கால்' அதாவது 'காண்டூர் கனல்' வெட்டி, தண்ணீர் தருவதற்குக் கேட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## சிம்மணப்பூதூர் ஏரி வாய்க்கால்கள்.

* 363 வினா—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊத்தங்கரை வட்டம், மகனூர்பட்டி ஊராட்சியிலுள்ள, ஏக்கூர் ஏரி, மகனூர்பட்டி ஏரி, ஆரியகவுண்டன் அணை இவைகளுக்கு வடாற்காடு மாவட்டம், சிம்மணப்பூதூர் ஏரியிலிருந்து நீர் வரும் வாய்க்கால்கள் பழுது பார்க்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பழுதான பகுதியைச் சீரமைப்பதற்குரிய மதிப்பீடு ஒன்று சேலம், தர்மபுரி மேற்பார்வை பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். அண்ணாமலை : ஊத்தங்கரை, மகனூர்பட்டி ஊராட்சியிலுள்ள, ஏக்கூர் ஏரி, மகனூர்பட்டி ஏரி, ஆரியக் கவுண்டன்அணை இவைகளுக்கு வடாற்காடு மாவட்டம், சிம்மணப் பூதூர் ஏரியிலிருந்து நீர் வரும் வாய்க்கால்கள் பழுது பார்க்கப் படுவதாகச் சொன்னார்கள். வாய்க்கால் குறுகி உள்ளதாலும் அணை கோடியிலிருந்து பூசக்கவுண்டன் ஏரிக்கு வரக்கூடிய அந்த வாய்க்கால் மிகவும் பழுதுபட்டுள்ளதால் மழை காலங்களில் வரும் தண்ணீர் கரைபுரண்டு விளைநிலங்களையும் தோட்டங்களையும் அழிக்கின்ற ஒரு நிலை இருப்பதோடு மேற்கண்ட ஏரியில் தண்ணீரற்று வறட்சிப் பகுதியாக உள்ளது. ஆகவே, இதைச் சீர்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசுக்கு உத்தேசம் இருப்பதனால்தான் அந்த வாய்க்காலை சீரமைப்பதற்கு ஒரு மதிப்பீடு தயாரித்து இருக்கிறார்கள். அதற்கு ரூ. 27,000 செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னை உயர்நீதிமன்றத்தில் பைசல் ஆகாமல் உள்ள வழக்குகள்.

* 364 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை உயர்நீதி மன்றத்தில் கடந்த பத்தாண்டுக்கு மேலாகவும் பைசல் ஆகாத வழக்குகள் எத்தனை உள்ளன?



The HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: There are 22 cases pending with the High Court which are more than ten years old.

*365 வினா—திரு. எஸ். கணேசன்
திரு. அ. செல்வராசன்
திரு. வி.கே. கோதண்டராமன்
} மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்—

கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தில் இதுவரை பைசலாகாமல் உள்ள கிரிமினல் சிவில் வழக்குகள் எத்தனை?

(ஆ) துரிதமாக பைசல் செய்ய அரசு எடுத்திருக்கும் முயற்சி என்ன?

The HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : (a) The number of cases pending disposal of the High Court, Madras as on 26th November 1977 are as follows :—

| | |
|---|---|
| Civil cases .. .. .. .. .. .. | 46,791 |
| Criminal cases .. .. .. .. .. .. | 5,154 |

(b) Periodical meetings of the Honourable Judges are convened to discuss ways and means to reduce arrears and their suggestions for checking the rise in pendency and to reduce arrears are considered by the Honourable Chief Justice and instructions given.

In respect of old cases only for valid grounds and compelling reasons adjournments for very short period is given.

THIRU R. MARGABANDHU : Is it a fact that several cases are pending because orders are not passed on interlocutory applications inlower courts. As a result, revision petitions in High Court get delayed. So will steps be taken for early disposal of interlocutory applications according to serial order so that pending cases in civil courts can be reduced ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : The normal practice is the Judge who admits a civil revision petition or civil miscellaneous petition against an interlocutory order passed by subordinate court would fix his attention on the earlier disposal of the matter and therefore normally they are not posted in accordance with, what I call, the serial numbers of the cases of old arrears.

[1978 மார்ச் 3

THIRU P. H. PANDIAN; Is it not a fact that the sanctioned strength of Allahabad High Court is 48 Judges and also that of Delhi High Court is 21 Judges and if so will this Government request the Central Government to increase the sanctioned strength of permanent judges from 16 to 21 in Madras High Court? May I also know whether the delays are law's delay or Courts' delay ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: So far as the second part of the question is concerned, it is too big a question to be answered in a supplementary.

So far as the first part of the question is concerned, the increase in strength of Judges of Madras High Court is under serious contemplation if Government. I do not know about the actual strength of Judges in Allahabad and Delhi High Courts, as it exists today.

(முற்பகல் 9-10)

திரு. ஓ. சுப்பிரமணியம் ; 50,000க்கு அதிகமான சிவில், கிரிமினல் கேஸ்கள் பெண்டிங்காக இருக்கும்போது இந்தப் பளுவைக் குறைப்பதற்காக மதுரையில் உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதியை ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Yes. This question does not arise from the main question in this matter. But every effort is being made by this Government in urging the Central Government to constitute a Bench at Madurai.

டாக்டர் கே. சமரசம்; பெரும்பாலும் வழக்குகளில் வாக்கு மூலங்கள், சாட்சிகள் இவைகள் எல்லாம் கீழ்கோர்ட்டிலேயே முடிந்து உயர்நீதி மன்றத்திற்கு வருகிறது. பெரும்பாலும் பைல்களை வைத்துக்கொண்டு தீர்ப்பளிக்கக்கூடியவற்றை வேகமாக முடிப் பதற்கு உடனடியாக அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: There is the monitoring Cell constituted by the Government of India. They are periodically reviewing the entire institution pendency and disposal of cases' particularly in consultation with the respective High Courts and with our High Courts. Therefore every effort is being taken at the level of the State Government as well as the Union Government for expeditious disposal of cases in the quickest possible manner.

THIRU R. UMANATH: Mr. Speaker, Sir, the Hon. Minister in his reply said that the Chief Justice had discussed the matter and given nstructions with regard to the speedy disposal. I would like to know what those instructions are, so that it may be assured that will be effective.



1978 மார்ச் 3]

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I did not say the Chief Justice had given instructions. What I said is there is a monitoring Cell constituted by the Union Government. They are always in consultation with the Chief Justice. The Chief Justice always holds periodical meetings with his brother Judges and gives instructions regarding the arrangement of the older cases and for their proper disposal as early as possible or for quicker disposal.

திரு. துரை முத்துசாமி : சேலம் மாவட்டத்தின் தலை நகரில் இருக்கக்கூடிய மாவட்ட முன்சீப் கோர்ட்டுகள் எல்லாம் ஒரேயிடத்தில் குவிந்து கிடப்பதால் கிராம மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே சேலம் தலைநகரில் இருக்கிற முன்சீப் கோர்ட்டுகளை அந்தந்த தாலூக்காக்களில் மாற்றியமைப் பதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : This question does not arise from the main question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உயர்நீதிமன்றம் பற்றிய கேள்வி. தாங்கள் ஒரு வழக்கறிஞராக இருந்தும் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்களே. அமைச்சர்களிடம் அதற் கான தகவல்கள் இருக்குமா?

திரு. என் வரதராஜன் :

* * * * *

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: The HON. Member may please wait for my answer on that question.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது ** ** என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட குற்றச்சாட்டைக் கூறுவது சரிதானா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. என். வரதராஜன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பேட்டில் ஏறியிருக்கிறதல்லவா?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நீதி வழங்குவதில் தாமதமாகிறது என்று வேண்டுமானால் சொல்லாமே தவிர ** என்று கூறுவது சரியாகயிருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே திரு. வரதராஜன் அவர்கள் போட்ட கேள்வியை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன். அவர்கள் புதிதாகக் கேள்வி போடட்டும்.

திரு. என். வரதராஜன் : ஆண்டுக் கணக்காக வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் நீட்டிப்பதும், நம்முடைய தாய்மொழியில் சாதாரண மக்கள் நீதியைப் பெறமுடியாமல் இருப்பதும் அவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது என்பதால் அதை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நிச்சயமாக இந்த அரசு அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. போ. கோபாலன் : வழக்குகள் நடந்து முடிந்ததற்குப் பின்னால் அவர்களுக்கு நிலம் சம்பந்தப்பட்ட டாக்குமென்ட்ஸ் எல்லாம் கொடுக்க பல மாதங்கள், ஆண்டுகள் பிடிக்கிறது. அதை விரைவில் கொடுத்தால் அவர்கள் தங்கள் எதிர்காலத்திற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்ட முடியும். எனவே அவை விரைவில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: This question does not arise from the main question.

திரு. எஸ். ஜே. இராமசாமி; தலைவர் அவர்களே, இப்போது பென்டிங்காக இருக்கும் வழக்குகளில் சிவில் வழக்குகள் அதிகமாக பென்டிங்காக இருப்பதாக புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பென்டிங்காக இருக்கும் கிரிமினல் வழக்குகள் 5,000 அளவுக்கு மேல் என்றும், சிவில் வழக்குகள் 50,000 மேல் இருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இவற்றை விரைவில் தீர்ப்பதற்கு இன்னும் எவ்வளவு ஜட்ஜ்கள் தேவை என்று கருதுகிறீர்கள்? இதற்காக எத்தனை ஜட்ஜ்களை நியமிக்கப் போகிறீர்கள்? அப்படி நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

THE HON. THIRU K.NARAYANASWA MYMUDALIAR: Mainly the number of judges required for the disposal of the npendig cases depends on various factors. At least one is the human factor. One judge temperamentally is quite competent to make greater disposals than the other. So it will be very difficult to have a yard-stick for any institution to assess the exact numbe r f judges required for the disposal of the cases.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



## நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு.

* 366. வினா—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு சட்டத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் தட்டெழுத்தர்களின் தட்டுப்பாடு காரணமாக நீதி மன்றத் தீர்ப்புகள் தமிழில் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR :

(a) & (b) A paper is placed on the table of the House.

திரு. கே. சுப்பிரவேலு: அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்தத் தட்டெழுத்தர்கள் சில காலங்களில் கிடைக்காத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU NARAYANASWAMYMUDALIYAR: Thec ause for not delivering judgements in Tamil by reason of the shortage of Typists and Steno-typists may be partly true and partly correct, but not wholly true and not wholly correct. For the High Court has given permission to the presiding officers who are not able to express themselves in good Tamil to write judgements in English upto November 1977. It is only later some of the Presiding officers also asked for further permission to write judgements in English and that period is extended up to 31st January 1978. The present position, is, it is presumed that hereafter the judgement will be written in Tamil. But anyway there is still the shortage of Typists and Steno-typists who are versed in Tamil language.

---

578–579ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்; பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தமிழில் கேட்கிறோம், பதில் ஆங்கிலத்தில் இருக்கிறது. நாங்கள் தமிழில் சொல்வதை அவர்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை, அவர்கள் ஆங்கிலத்தில் சொல்வதை எங்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை, இங்கேயே இப்படிப்பட்ட சிரமமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்புகளை தமிழில் தருவதற்கு வசதியாக தட்டெழுத தர்களை அதிகப்படுத்துவதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? இங்கேயே இவ்வளவு சிரமங்கள் இருப்பதைப் பார்த்து இதில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. புது தட்டெழுத்து இயந்திரங்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதில் நாங்கள் பரிசீலனை செய்து கொண்டு இருப்பது மட்டுமல்ல, அதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தற்பொழுது இருக்கிற தட்டெழுத்தில் அதிகமான எழுத்துக்கள் இருக்கின்றன. தந்தை பெரியார் அவர்கள் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற முறையில் தட்டெழுத்துக்களில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று விரும்பினார். அந்த முறையில் தட்டெழுத்து இயந்திரங்கள் தயாரிக்கப்படுமானால் தட்டெழுத்து இயந்திரங்கள் தயாரிக்கப்படுவதற்கும், இதில் பயிற்சி பெறுபவர்களுக்கும் எளிதாகவும், வசதியாகவும் இருக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதைப்பற்றி அரசு அக்கறையோடு பரிசீலனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே,

*      *      *      *      *      *

(முற்பகல் 9-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மார்க்கபந்து அவர்கள் எழுப்பிய கேள்விமேல் பேசிய அத்தனையையும் நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





## மாநிலங்களுக்கிடையே உணவு தானியங்கள் கொண்டு செல்லல்:

திரு. மு. செல்வராஜ்<br>
திரு. என். வரதராஜன்<br>
திரு. எஸ். ஜே. இராமசாமி<br>
} மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர்—

கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மத்திய அரசு மாநிலம் விட்டு மற்ற மாநிலங்களுக்கு உணவு தானியங்களை கட்டுப்பாடின்றி கொண்டுபோகலாம் என்று உத்தரவு இட்டுள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசாங்கம் ஆட்சேபணை தெரிவித்ததா?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் மாநிலங்களுக்கிடையே அரிசி, நெல் மீதிருந்த போக்குவரத்து கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கி அனைத்திந்தியாவையும் ஒரே உணவு மண்டலமாக ஆக்கி மத்திய அரசு உத்திரவு பிறப்பித்தது.

(ஆ) மற்றும் (இ) முன்னதாக புது டில்லியில் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் தேதி நடந்த மாநாட்டில் 1976 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ந் தேதி முதல் செயலாக்கப்பட்டு வந்த தென் உணவு மண்டல ஏற்பாடே தமிழ் நாட்டின் நலன்களுக்குச் சிறந்தது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் புதிய ஏற்பாட்டிற்கு அரசின் ஆட்சேபணையைத் தெரிவித்து இம்முடிவை மத்திய அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரி 1977 ஆம் ஆண்டு செப்டம்ர் மாதம் 30-ந் தேதி அன்று தமிழக முதல்வர் பாரத பிரதமருக்கு விளக்கமாக ஓர் அவசரத் தந்தி அனுப்பினார். தங்களிடம் போதிய அரிசி கையிருப்பில் இருப்பதாகவும், தமிழ் நாட்டின் பொது விநியோகத் தேவைக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி வழங்கப்படுமென்றும், நம்முடைய நலன்கள் பாதிக்காதபடி கவனித்துக் கொள்ளப்படும் என்றும் மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

மு. செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியபதிலில் இருந்து மத்திய அரசாங்க உதவியால் நம்முடைய தமிழகத்திற்கு

உணவுப் பற்றாக்குறை, உணவுக் குறை ஏற்படாது, பாதிக்காது என்று சொல்கிறார்கள். எனவே, இந்த விளக்கத்திற்குப் பிறகு, நம் அரசு மறு பரிசீலனை செய்து மீண்டும் இந்தப் பழைய நிலைமைக்கு வருவதற்கு எண்ணம் இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் தேதி டெல்லியில் நடைபெற்ற அனைத்து உணவு மண்டல மாநாட்டில் தமிழகம் தன்னுடைய கருத்தை வலியுறுத்தி, அந்தக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறது. அதற்குப் பிறகு, மத்திய அரசாங்கம் இந்தியத் துணைக் கண்டத்தை ஒரு உணவு மண்டலமாக்கியதன் பேரில், நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு தந்தியை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி, புதிய உணவு மண்டலக் கொள்கையால் தமிழகத்தினுடைய உரிமை ஒருவேளை பாதிக்கப்படலாம்; ஆகவே, 1976-லிருந்த நிலைமைக்கு மறுபடியும் திரும்பிச் செல்ல வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். என்றாலும், மத்திய அரசாங்கம் இந்தியா பூராவும் ஒரே உணவு மண்டலமாக ஆக்குவதன் மூலம் தமிழகத்தின் நலன் பாதிக்கப்படாது என்றும், அப்பேர்ப்பட்ட நிலைமை எற்படுகிறபோது, மத்திய அரசாங்கம் தாராளமாக, போதுமான அரிசியை தங்கள் கையிருப்பிலிருந்து நமக்குத் தரத் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படித் தெரிவித்ததன் பேரில், அதற்குப் பிறகு நாம் அதை வலியுறுத்தவில்லை.

திரு. என். வரதராஜன் : மத்திய அரசு ஒரே உணவு மண்டலம் என்று அமைத்திருப்பதன் காரணமாக நம் மாநிலத்தின் உணவுத் தேவைகள் பாதிக்கப்படும் என்று அரசு கருதுகிறதா ? அப்படியானால் வருகிற ஆறு மாத காலம் அறுவடை இல்லாத காலமாக இருப்பதால் இந்த நிலைமையில் நம்முடைய கொள்முதலில் தேவையான அளவு இருப்பை அதிகப்படுத்திக் கொள்ள அரசு விரும்புகிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : உணவு மண்டலம் இப்போது திருத்தி அமைக்கப்பட்டு இந்தியத் துணைக்கண்டம் ஒரே உணவு மண்டலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் காரணத்தால் தமிழகத்தில் உணவுத் துறையில் பாதிப்பு ஏற்படுகிற நிலைமை இருந்தது. ஆனால் நாம் பயப்படுகிற அளவுக்கு பாதிப்பு ஏற்படாத அளவுக்கு மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்திற்கு உதவி செய்திருக்கிறது. தமிழகத்தில் விளைகின்ற நெல்லை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போவதற்குக் கட்டுப்பாட்டை வரையறுக்க முடியாத வகையில் இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுகிற நெல்லுக்குப்





போதுமான லெவி கொடுத்துவிட்டுத்தான் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற வகையில் தமிழக அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆகவே, தமிழகத்தின் நிலைமை அதிகமாகப் பாதிக்கப்படாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இ. ராமசாமி: இன்றைக்கு நெல் பயிரிடக் கூடிய விவசாயிகளுக்கு விலை நிர்ணயித்திருப்பது குறைவாக இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 95 ரூபாய் ரேட் போட்டு வாங்குகிற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதையாவது செய்வார்களா ? இன்றைக்கு இங்கு நெல்லுக்குக் கட்டுப்படியாகின்ற விலை கிடைக்காத நிலையில் இங்கிருந்து வெளி மாநிலத்திற்குப் போவதை அனுமதிக்கலாம் அல்லவா? இங்கு ஆந்திரத்தில் இருந்து கூட அரிசி வந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்த நிலையைப் புரிந்து கொண்டு பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு இப்போது அரிசி வந்து கொண்டிருப்பதால் வெளி மாநிலங்களுக்கு அரிசி, நெல் எடுத்துச் செல்ல விவசாயிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு அரிசி இப்போதுதான் வந்துக் கொண்டிருக்கிறது என்பது அல்ல. தென் உணவு மண்டலமாக இருந்த நேரத்திலும் ஆந்திர மாநிலத்திலிருந்து அதிகமாக அரிசி வந்து கொண்டிருந்தது. ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி வந்தும் ஒருவேளை பற்றாக்குறை ஏற்படுமோ என்பதை மனதில் வைத்து அதைச் சமாளிக்கின்ற வகையில் பஞ்சாப், ஒரிஸா ஆகிய இரண்டு மாநிலங்களில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபாய் அளவிற்குத் தேவையான நெல்லைத் தருவித்து வைத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தியா முழுவதும் ஒரே உணவு மண்டலமாக ஆக்கியதன் பிறகு நமது மாநிலத்தில் உணவு தானியத்தின் விலை குறைந்திருக்கிறதா அல்லது கூடியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தியத் துணைக் கண்டத்தை ஒரே உணவு மண்டலம் ஆக்கிய உடனே அரிசி விலை சற்று உயர்திருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றையதினம் அரிசி விலை குறைந்திருப்பதற்குக் காரணம் விளைச்சல் அதிகமாகி அறுவடை ஆகியிருப்பது

தான். அறுவடை இல்லாத காலங்களில் விலை ஏறுகிறதா இல்லையா என்று பார்த்து இந்தியத் துணைக் கண்டத்தை ஒரே உணவு மண்டலம் ஆக்கியதன் விளைவுகளைப் பற்றிச் சொல்ல முடியும்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்: பாயின்ட் ஆப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

*368. வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) உணவுப் பொருட்கள் நடமாட்டத் தடைகளை அகற்றி இந்தியா முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக்கியதால் விலையேற்றமும், பதுக்கலும் ஏற்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விலையேற்றத்தையும், பதுக்கலையும் தடுக்க தீவிர கொள்முதலும், 16,000 நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகமும் துரிதமாக செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நடமாட்ட தடைகளை அகற்றி நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக்கியவுடன் அரிசியின் விலைகள் உயர்ந்தன. அறுவடை துவங்கியதும் விலைகள் குறைந்து தற்போது கட்டுக்கடங்கியுள்ளன. பதுக்கல் ஏற்படவில்லை. ஆயினும் தேவையான அளவு அரிசி/நெல் மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் விலைகளை கட்டுப்படுத்தி அவற்றை தடையின்றி பொது மக்களுக்கு நியாயவிலையில் விநியோகம் செய்யும் பொருட்டு அரசு முன்னெச்சரிக்கையாக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது—

1. கிராமங்களில் நியாய விலைக் கடை திறப்பது.

2. கடலை எண்ணெய் விலையைக் குறைத்திருப்பது.

3. ஆலையாளர்களிடம் கொள்முதல் செய்தல்.

4. வர்த்தகர்களிடம் கொள்முதல் செய்தல்.

5. தற்போதுள்ள நியாய விலைக்கடைகளை பலநோக்கு கொண்டவையாக மாற்றி அரிசி, கோதுமை, சர்க்கரை தவிர மற்ற இன்றியமையாப் பண்டங்களையும் விநியோகம் செய்தல்;



(முற்பகல் 9—30)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஒரே உணவு மண்டலமாக இந்தியா முழுமைக்கும் அமைக்கப்பட்டதால் இன்றைக்கு விலையேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அறுவடைக் காலத்திலே கொஞ்சம் அதிகப்படியான சப்ளை வருவதால் அதிக விலையேற்றம் காணப்படவில்லை என்று மெத்தனமாக இருப்பது சரியாகுமா ? இந்தக் காலம் முடிவதற்குள் இந்த ஸ்டாக் முழுவதையும் பெரும் வியாபாரிகளும் கள்ளமார்கெட் காரர்களும் வாங்கி சேமிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு இப்போது சேமித்து விட்டு பிறகு விலை ஏற்றி விற்பார்கள் என்பதை அரசு எதிர்பார்க்கிறதா? அதைப் போக்குவதற்கு விவசாயிகளிடமிருந்து நேரடியாக இன்றைக்கு வாங்குவதைவிட அதிகப்படியாகக் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ? இந்த அரசுக்கு அப்படிப்பட்ட சிந்தனை ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அறுவடை இல்லாத ஜூன் முதல் அக்டோபர் வரையில் உள்ள மாதங்களில் அரிசி விலை ஏறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை மனத்திலே கொண்டுதான் இந்த அரசு அப்படிப்பட்ட சூழ்நிலையைச் சமாளிக்கிற வகையில் வடமாநிலங்கலிருந்து ஏறத்தாழ 1½ லட்சம் டன் அரிசி வாங்கி இப்போது சேமிப்பிலே வைத்திருக்கிறது. இப்போதே விவசாயிகளிடமிருந்து நேரடியாகத் தான் கொள்முதல் செய்யப்படுகிறது. கட்டாயக் கொள்முதல் இல்லையே தவிர, விவசாயிகளே விரும்பி அரசாங்கத்திடம் கொடுப்பார்களேயானால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அரசு அறிவித்த விலைக்கு வாங்குவதற்குத் தயாராக இருக்கிறது. அப்படி வாங்குகின்ற அளவுக்கு விவசாயிகள் கொடுக்கிற அளவுக்கு தஞ்சை மாவட்டம் இன்னும் சொல்ல வேண்டுமானால் உபரி மாவட்டங்களிலே பர்ச்சேஸிங் சென்டர்ஸ்—போதுமான கொள்முதல் நிலையங்களை அரசு திறந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே உணவு மண்டலக் கொள்கையை இந்த அரசு எதிர்த்த நிலை சரியானது தான், அதற்காக மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறபோது மீண்டும் மத்திய அரசாங்கத்திடமிருந்து தகவல் வந்தபின் அந்தக் கொள்கையிலிருந்து இந்த அரசாங்கம் பின்வாங்கிக் கொண்டு இருக்கிறதா அல்லது அதே கொள்கையைத் தான் கொண்டிருக்கிறதா என்று தெரியவில்லை, அந்த அச்சத்தைப் போக்க அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். விவசாயிகள் கொள்முதல் நெல்லை வைத்துக்

கொண்டு திண்டாட வேண்டியிருக்கிறது, வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்வதைவிட நாம் கொள்முதலை அதிகப்படுத்த அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கையை இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய கொள்கை இந்தியாவை ஒரே உணவு மண்டலமாக்குவது சரியில்லை என்பது. அந்தக் கொள்கையிலே இந்த அரசு இன்றைக்கும் இருக்கிறது. அவ்வப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்கின்ற நேரங்களில் தென் உணவு மண்டலம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும் மத்திய அரசாங்கம் தங்களிடம் கையிருப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லி தமிழகத்தின் உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம் பார்த்துக் கொள்வதாக உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். இதிலே தமிழக அரசு கவனமாக இருக்கிறது, மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 90 ரூபாயும் நடுத்தர ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 95 ரூபாயும் விலையை அரசு அறிவித்து இருக்கிறது. இந்த விலையிலே விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குவதற்குப் போதுமான கொள்முதல் நிலையங்களை பல்வேறு மாவட்டங்களில் ஆரம்பித்து வாங்கிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் விவசாயிகள் முன்வந்து இந்த அரசுக்குக் கொடுப்பதற்கு அவர்களுடைய மனநிலை சரியில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போடுகின்ற உறுப்பினர்களும், பதில் சொல்லுகின்ற அமைச்சர்களும் சுருக்கமாகச் சொன்னால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

*369. வினா—திரு கு. ரமணி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்கத்தாவில் ஐந்து மாநில உணவு அமைச்சர்கள் மாநாட்டில் நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக்கப்பட்டதன் விளைவுகள் ஆராயப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து இந்த மாநிலங்கள் என்ன யோசனைகளை முன்வைத்துள்ளன? தமிழக அரசின் யோசனை என்ன?

(இ) தமிழகத்தில் முன்பிருந்த நிலையே தொடருவதற்கு மத்திய அரசு அனுமதித்துள்ளதா?



மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) நாடு முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக அமைக்க மத்திய அரசு செய்த முடிவின் விளைவுகளை ஆராய, ஐந்து மாநில உணவு அமைச்சர்களை மேற்கு வங்காள உணவு அமைச்சர் அழைத்திருந்தார்.

(ஆ) முன்பு இருந்தது போலவே தனித்தனி உணவு மண்டலமாக இயங்க வேண்டுமென்ற கருத்து அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தனி உணவு மண்டலமாக அமைக்க இயலாவிடில், 15-10-1976 முதல் 1-10-1977 வரை இருந்தது போல், கேரளம் நீங்கலாக ஆந்திரம், கர்நாடகம், தமிழ்நாடு, பாண்டிச்சேரி, காரைக்கால் சேர்ந்த தென் உணவு மண்டல முறையே நீடிக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டது.

(இ) இக் கருத்துக்களைப் பரிசீலித்த மத்திய அரசு, நாடு முழுவதும் பொதுவான உணவு மண்டலக் கொள்கையைச் செயல்படுத்துவதே, நாட்டின் நலனுக்கு உகந்தது என்று அறிவுரை கூறியுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ஒரே உணவு மண்டலம் என்பது சரியாக ஆகாது என்ற கருத்தினை நமது அரசு முன் வைத்துள்ளது. அது சம்பந்தமாக மத்திய சர்க்கார் இன்னும் அவர்களுடைய நிலையை மாற்றிக்கொள்ளவில்லை என்று உள்ளதால் இப்பொழுது வரக்கூடிய எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஆரம்பித்தால், உணவு நெருக்கடி ஏற்பட ஆரம்பித்தால், விலையேற ஆரம்பித்தால், அப்பொழுது இந்தக் கொள்கையை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாதா? அதற்குத் தமிழக அரசு எந்த முறையில் தொடர்ந்து இந்தக் கொள்கையை மத்திய சர்க்கார் மாற்ற வேண்டுமென்று கூற உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, வருங்காலத்தில் அரிசியின் விலை ஏறும் என்று இந்த அரசு நிச்சயமாக எதிர் பார்க்கவில்லை. அப்படி ஏறுகின்ற சூழ்நிலை ஒருவேளை உருவாக்கப்பட்டாலும் கையிருப்பில் போதுமான அளவு இருக்கின்ற காரணத்தால் பொது விநியோகத்தின் மூலம் ஏறுகின்ற விலையைக் கட்டுப்படுத்தலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இத்தனை சூழ்நிலைகளையும் மீறி ஒருவேளை அரிசியின் விலை ஏறுமேயானால் அப்பொழுது மீண்டும் தமிழக அரசு தன்னுடைய கொள்கையை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தலாமா என்பதைப் பற்றி பின்னர் ஆலோசிக்கலாம்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தனி உணவு மண்டலம் என்பது இந்த அரசினுடைய நீண்ட நாள் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த

பொழுது தமிழ்நாடு தனி உணவு மண்டலமாக இருக்க வேண்டுமென்பதைத்தான் வலியுறுத்தியிருக்கிறார்கள். அது தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. பல நேரங்களில் தென் மாநிலங்கள் ஒன்றாக ஆக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு யோசனை கூறிய நேரத்திலும் கழக அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, தனி உணவு மண்டலமாகவே நீடித்தது. இடையில், கவர்னர் ஆட்சிக்காலத்தில், உணவு அமைச்சரவர்கள் தேதி குறிப்பிட்டுக் காட்டியதைப்போல, கவர்னர் ஆட்சிக்காலத்தில், இடைக்காலத்தில், கேரளம் நீங்கலாக மற்ற மூன்று மாநிலங்கள் உள்ளடக்கிய தென் உணவு மண்டலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு ஐந்து முதலமைச்சர்கள் கூடிய மாநாட்டில் அதுவே இருக்கலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டதாக உணவு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். முதலில் ஒரு கேள்விக்குப் பதில் அளித்த பொழுது நம்முடைய முதலமைச்சரவர்கள் தென் உணவு மண்டலத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், இந்தியா முழுவதும் ஒரே உணவு மண்டலமாக இருக்கத்தான் ஒத்துக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டார்கள். எனவே, நான் உணவு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது, எப்பொழுதும் தமிழ்நாடு தனி உணவு மண்டலமாக இருப்பதுதான் தமிழ்நாட்டிற்கு வசதியானது என்ற வகையில், நம்முடைய மாநிலத்திற்கு அதுதான் ஏற்றது என்ற வகையில் தனி உணவு மண்டலத்தை இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநருடைய ஆட்சிக் காலத்தில், அவசரநிலை அமலில் இருந்த நேரத்தில் தமிழ்நாடு தனி உணவு மண்டலமாக இருந்ததை மாற்றியமைத்து கேரளம் நீங்கலாக மற்ற தென் மாநிலங்கள் சேர்ந்த ஒரு தென் உணவு மண்டலத்தை மத்திய அரசாங்கம் அமைத்தது. இன்றையதினம் மீண்டும் தமிழ்நாட்டைப் தனி உணவு மண்டலமாக ஆக்கக் கூடாதா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே வினா எழுப்பியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதையும் தமிழ்நாடு அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி வந்திருக்கிறது. இருந்தாலும் மத்திய அரசாங்கம் இந்தியா முழுவதும் ஒரே உணவு மண்டலமாக இருக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறது. சூழ்நிலைகளைப் பொறுத்திருந்து பார்த்து, அதற்குப் பிறகு தமிழ்நாடு அரசாங்கம் வலியுறுத்த வேண்டிய நேரத்தில் நிச்சயமாக வலியுறுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை. கேள்விகள் ஏராளமாகக் கேட்கத்தான் மனம் வரும். ஆனால் மானியக் கோரிக்கையில் இதைப்பற்றி விளக்கமாகப் பேசலாம். இது பாலிசி மேட்டர்.





[முற்பகல் 9-40]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, 'மார்க்கெட் ஃபோர்சஸ்' என்று சொல்லக்கூடிய சக்திகளையெல்லாம் கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் விளக்கம் தந்தார்கள். அதிலே ஒன்று, வெளி மாநிலங்களிலிருந்து பரவலாக கொள்முதல் செய்வது. வெளிமாநிலங்களிலிருந்து பரவலாகக் கொள்முதல் செய்வதை விட, தமிழ்நாட்டில் பரவலாக்க் கொள்முதல் செய்வதால், இங்கே விவசாயிகளுக்கு அதிகவிலை கொடுப்பதற்கும், வருங்காலத்தில் விலையேற்றத்தைத் தடுப்பதற்குப் சாத்தியமாகும். அப்படி அரசு செய்திருக்கிறதா? செய்யாவிட்டால், இனி செய்ய அரசு முன்வருமா? வெளிமாநிலங்களில் கொள்முதல் செய்யும்போது, அரியானாவில் கொள்முதல் செய்த அரிசி, மிகவும் கீழ்த்தரமாகவும், ஊசிப்போனதாகவும் இருக்கிறது என்ற நிலைமை சொல்லப்படுகிறது. அது உண்மைதானா? அப்படியிருந்தால், அது எந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது? அது திருப்பித் தரப்படுமா? அதற்கு மாற்று வகையிலே வேறு ஏற்பாடு செய்யப்படுமா என அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அரியானா போன்ற மாநிலங்களிலேயிருந்து வாங்கப்பட்ட நெல் மிகவும் மோசமான, தரக்குறைவான நெல்லாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே நிலைமை அப்படியில்லை. தரமுள்ள நெல்லைத்தான் இந்த அரசாங்கம் வாங்கியிருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கூடுதல் விலை கொடுத்து வாங்கப்பட்டது என்றும் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப்பட்டது. மத்திய அரசாங்கம் நெல்லுக்கு என்ன விலை கொடுக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்களோ, 'சப்போர்ட்டிங் பிரைஸ்', அந்த விலையிலேதான் வட மாநிலங்களிலேயிருந்து இந்த அரசாங்கம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன மூலமாக, நெல்லை வாங்கியிருக்கிறது என்பதையும், நான் இந்த அவையிலே இருக்கிற உறுப்பினரவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள், இந்த மாநிலத்திலேயே வாங்குவதற்குப் பதிலாக, வெளி மாநிலங்களிலே வாங்க வேண்டிய அவசியம் என்ன? வெளி மாநிலங்களில் வாங்குவதற்குப் பதிலாக இங்கேயே வாங்கியிருக்கலாம் என்று சொன்னார்கள். நாம் வட மாநிலங்களிலேயிருந்து நெல் வாங்கிய நேரத்திலே தமிழகத்திலே குறுவை சாகுபடி நெல்தான் இருந்தது. குறுவை அறுவடை நெல் நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைக்க முடியாத நெல் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, அந்த

நேரத்திலே குறுவை நெல்லை வாங்குவதைவிட, வட மாநிலங்களிலே வாங்குவதுதான் உசிதம், அதுதான் சிறந்தது என்ற யோசனையின் அடிப்படையிலேதான் அப்பொழுது வட மாநிலத்திலேயிருந்து வாங்கியது. என்றாலும், தொடர்ந்து வெளியிலிருந்து வாங்கும் யோசனை இந்த அரசாங்கத்திடம் இல்லை. இப்பொழுது வட மாநிலங்களிலிருந்து அரிசி வாங்குவதை இந்த அரசாங்கம் நிறுத்தியுள்ளது இப்பொழுது. நம்முடைய விவசாயிகளிடமிருந்து அரசு வாங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## மதுரையில் சாலை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு.

*370 வினா— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை 45-வது வார்டு அனுப்பானடி புதுத்தெரு ரோடு புறம்போக்கு இடத்தை ஒரு சிலர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது.

## பேர்ணும்பட்டு ஏரி.

*371 வினா— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் பேர்ணும்பட்டிலுள்ள ஏரி மண் மேடிட்டு தண்ணீர் தேங்க முடியாத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை தூர் எடுத்து ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) இந்த ஏரி பேர்ணும்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்புக்கு உட்பட்டது. இந்த ஏரியின் தூர் வாரும் வேலையை அந்த ஊராட்சி ஒன்றியமே மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளது.





## மூடப்பட்டுள்ள ஸ்டுடியோக்கள்.

* 372 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது தமிழ்நாட்டில் எத்தனை ஸ்டுடியோக்கள் மூடப்பட்டுள்ளன ?

(ஆ) அதனால் எத்தனை பேர் வேலை இழந்துள்ளனர் ?

(இ) மூடிய ஸ்டுடியோக்களைத் திறப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மூன்று.

(ஆ) சுமார் 530 பேர்.

(இ) மூடிய ஸ்டுடியோக்களைத் திறக்க அரசினரிடம் நடவடிக்கை ஏதும் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஸ்டுடியோக்களில் வேலை செய்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, வேலை இழந்திருக்கிறார்களே, அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, ஏன் இந்த ஸ்டுடியோக்கள் மூடப்பட்டன ? எதற்காக மூடியிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சரவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 3 ஸ்டுடியோக்களும் 1975-லேயே மூடப்பட்டுவிட்டன.

* 373 வினா— திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோல்டன் சினி ஸ்டுடியோ, கோல்டன் பிலிம் ஸ்டுடியோ ஆகிய நிறுவனங்கள் மூடப்பட்டதன் விளைவாக வேலையிழந்த தொழிலாளிகள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : கோல்டன் சினி ஸ்டுடியோ மூடப்பட்டதால் வேலையிழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 200 ஆகும்.

[1978 மார்ச் 3

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மூடப்பட்ட மில்கள் அல்லது ஸ்டுடியோக்கள் போன்ற எந்த நிறுவனமாக இருந் தாலும், தொழிலாளர்களாகவே அதை எடுத்து நடத்துவதற்கு முன் வந்தால், அரசாங்கம் அதற்கு அசிஸ்ட் பண்ணும், உதவி செய்யும், ஊக்குவிக்கும் என்று நம்முடைய கனம் முதலமைச்ச ரவர்கள் நல்ல ஒரு யோசனையை முன்னுல் சொல்லியிருந்தார். இந்தக் குறிப்பிட்ட இரண்டு ஸ்டுடியோக்களுடைய தொழிலாளர் கள் அந்த ஸ்டுடியோக்களை எடுத்து நடத்துவதற்கே முன் வந் திருக்கிருர்கள். அதனுடைய நிர்வாகிகளும் அவர்களிடம் ஒப்ப டைக்கத் தயாராக இருக்கிருர்கள். ஆகவே, அன்றைக்கு முதல் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியின்படி, தொழிலாளர்கள் அதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய அசிஸ்டன்ஸ் கொடுப்பதற்குத் தயாரா என்று கேட்க விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்ட கேள் விக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகிகளும் தொழிலாளர்களும் ஒருங்கிணைந்து நியாயமான முறையில் எப்படி இந்தப் படப்பிடிப்பு நிலையத்தை நடத்த முடியுமோ, அதற் கேற்ற திட்டங்களோடு அரசை அணுகினுல் அரசு பரிசீலிக்கும்.

திரு ரா. உமாநாத் : தலைவரவர்களே, அவர்களுக்கு சம்பள பாக்கிகளும் பல பாக்கிகளும் இருப்பதனுலே, அன்எம்ப்ளாய் மென்ட் இருக்கும்போது அவர்கள் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே, கனம் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் தலையிட்டு அந்தப் பாக்கிகளைக் கொடுப்பதற்கு ஏதாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி அந்தப் படப்பிடிப்பு நிலையத்தைத் திறப் பதற்குத் தொழிலாளர்கள் பொறுப்பேற்று அதை நடத்துவதற்கு முன்வந்திருக்கிருர்கள் ; இந்த அரசு உதவி செய்யுமா என்பது. அதற்கேற்ப நாங்கள் பரிசீலிக்கிருேம் என்று சொன்னபொழுது பழைய பாக்கியைக் கொடுக்க முடியுமா என்று கேட்கிருர்கள். இந்தக் கேள்வி பொருத்தமா என்பதை பேரவைத் தலைவரவர் களே முடிவு செய்து கொள்வதோடு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன், அந்தப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சனை என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரியும், அவருக்கும் தெரியும்.

## கொத்தடிமை முறை

* 374 வினு—திரு. வி. கே கோதண்டராமன் : மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா:—

இம்மாநிலத்தில் கொத்தடிமை முறை பூரணமாக ஒழிக்கப் பட்டு விட்டதா ?



[978 மார்ச் 3]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழகத்தில் த்தடிமை முறை பூரணமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. தமி தில் ஒன்பது மாவட்டங்களில் கொத்தடிமை முறை காணப் டது. 2,271 குடும்பங்களைச் சார்ந்த 2,883 கொத்தடிமைகளை அரசு விடுவித்தது. இது தவிர கல்ராயன் மலைப் பகுதியில் 24,945 பேர்கள் இம்முறையினின்றுப் விடுவிக்கப்பட்டார்கள். அவர் களுக்கான மறுவாழ்வுப் பணிகளை அரசு செய்து வருகிறது.

* 375 வினு—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) தென்னுற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுகா, கல்வராயன் மலை வாழ்மக்கள் கொத்தடிமையிலிருந்து மீட்கப் பட்டுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) கல்வ ராயன் மலைவாழ் மக்கள் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டு விட்டார்கள்.

(ஆ) கல்வராயன் மலைப்பகுதியில் 5,828 குடும்பங்களைச் சார்ந்த 24,945 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டு பின் விடு விக்கப்பட்டார்கள்; அம்முறையும் அகற்றப்பட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதியில் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப் பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அவர் களுக்கு விவசாயத்திற்கு நிலங்களும், வீடுகட்ட வீட்டுமனைகளும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்காக 18 குழந்தைகள் காப் பகங்களும், மூன்று குடியிருப்புப் பள்ளியும் துவக்கப்பட உள்ளன. புதுப்பாலப்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகமும், சுகாதாரப் பணிகளுக்காக 4 மருத்துவக் குழுக்களும் பணியாற்றுகின்றன. 3 கூட்டுறவு வங்கிகள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் விநி யோகம் செய்யப்படுகின்றது. வேளாண்மைப் பணிகளுக்கு விவ சாயக் கடனும் கொடுக்கப்படுகிறது. ரூ. 57·3 இலட்சம் செலவில் சாலைப்போக்குவரத்து வசதிகள் செய்யப்படுகின்றது.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொத்தடிமைகளின் புனர்வாழ்வு பற்றிக் குறிப் பிட்டார்கள். அதே நேரத்தில் அவர்கள் பயிரிட்டுக் கொண் டிருந்த உழக்காடு, புனல்காடு போன்ற பகுதிகளை எல்லாம் வனத் துறை இலாகாவினர் செக்ஷன் 66-ன் கீழ் எடுத்துக் கொள்வோம் என்று சொல்லியிருக்கிருர்கள். அந்த விவசாயிகளுக்கு அந்த

[1978 மா

நிலங்களைப் பட்டா கொடுக்காமல் இருக்கிறார்கள். அவ கவனித்து அவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலை அவர்களே, இந்தத் துறை கொத்தடிமைகளுக்கு வாழ்வளிப்ப காக பணியாற்றும் துறையாகும். பட்டா செய்து கொடுப் வேறு துறை செய்ய வேண்டியதாகும்.

<u>திரு. க. மருதாசலம் :</u> தலைவர் அவர்களே, 374-வ கேள்வியை ஒட்டி அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். த ழகத்திலே எந்தெந்த மாவட்டங்களில் கொத்தடிமைகளாக இரு தவர்கள் கண்டு பிடிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்க அறிவிப்பார்களா ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவ அவர்களே, தென்னார்க்காடு, திருச்சி, திருநெல்வேலி, மதுரை சேலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் நீலகி மாவட்டங்களில் கொத்தடிமைகளாக இருந்தவர்கள் கண்டுபிடி கப்பட்டு, அவர்கள் அடிமை முறையில் இருந்து விடுவிக்கப்பட்டிரு கிறார்கள்.

(முற்பகல் 9—50)

<u>திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் :</u> பேரவைத் தலைவரவர்களே கொத்தடிமை முறை ஒழிப்புத் திட்டம் யாரால், எப்போது கொண்டுவரப்பட்டது ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> மாண்புமிகு உறுப்பினருக்கே அது நன்றாகத் தெரியும்.

<u>திரு. சி. கோவிந்தராசன் :</u> பேரவைத் தலைவரவர்களே, கொத்தடிமை முறை அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டதாக அமைச் சர் அவர்கள் கூறினார்கள். இங்கே சென்னைக்கு அருகிலேயே பல்லாவரம் குவாரி, தாம்பரம் குவாரி ஆகிய இடங்களில் கொத் தடிமை முறை இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து அமைச்சரவைக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். கொத்த டிமை என்று சொன்னால் எந்த அடிப்படையில் அது இருக்க வேண்டும் ? கொத்தடிமை என்றால் ஒருவரிடமிருந்து முன்னதாக, பெற்றுக்கொண்ட கூலிக்காக கடைசி வரையில் வேலை செய்யும் முறை இருக்கிறது. இது கொத்தடிமை என்று இந்த அரசு கருதுகிறதா ? இப்படிப்பட்ட கொத்தடிமை நிலைமை இருப்பதை ஒழித்துக் கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. அதை ஒழிக்கவும் அரசு முயற்சி எடுத்து, நடவடிக்கை எடுக்குமா ? கொத்தடிமை என்பதற்கு என்ன விளக்கம் என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மார்ச் 3]

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> சட்டப் ரவைத் தலைவரவர்களே, கொத்தடிமை என்பதை மாண்புமிகு றுப்பினர் நன்றாகத் தெரிந்து இருந்தாலும், இந்த அரசின் த்து என்ன என்பதை அவர்கள் அறிய விரும்புகிறார்கள் ன்று நான் கருதுகிறேன். கொத்தடிமை என்றால் காலம் லமாகக் கடன் பெற்றதன் விளைவாக குடும்பங்கள் பரம்பரை ரம்பரையாக பெரிய பெரிய பணக்காரர்களின் அடிமையாக ருந்து, அங்கே தொடர்ந்து வேலை செய்ய வேண்டிய அவசியத் ல் இருந்தார்கள் என்று பல விளக்கங்கள் தரப்பட்டு இருக்கின் ன. இங்கே சொல்லப்பட்டது, சென்னைக்கு அருகிலேயே மொத்த த்தகை என்ற பெயரில் எப்படி காலத்தை குறிப்பிட்டு, அத்தனை ாலத்திற்கு வேலை செய்ய வேண்டும் என்று ஒப்பந்தத்தோடு வலை செய்கிறார்களோ, அதைப் போல் தொழிலாளர்கள் இத் னை காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருப்பதாகக் கூறப் படுகிறது. உண்மையிலேயே அது ஆண்டாண்டு காலத்திற்கு இருக்க முடியாது. ஒரு குறித்த காலத்திற்குத்தான் இருக்க முடியும். அந்தத் தொழிலைச் செய்வதற்கு அதை ஏலத்தில் எடுப் பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் தான் கொடுக்கப்படுகிறது என்று தெரிந்து இருக்கும். உறுப்பினர் அப்படிப்பட்ட சந்தேகத் திற்கு ஆளாக மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

<u>திரு. இரா. தாமரைக்கனி :</u> தலைவரவர்களே, கொத்தடிமை களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு என்னென்ன திட்டங்களைத் தீட்டியுள்ளது ? கொத்தடிமைகளுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் உண்டா ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:</u> தலைவரவர் களே, தமிழக அரசு அவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டங்களை அமல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள விவரமாவது: விவசாயம் செய்ய 724 பேர்களுக்கு நிலங்கள் இலவசமாக ஒப் டைப்பு செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆயிரம் பேர்களுக்கு விவசாயக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக வீடுகட்ட வசதி அளித்தல் போன்றவற்றுக்கு அரசு ஏற்பாடு செய்து வருகிறது. இடைக்கால உதவியாக ஒரு குடும்பத்திற்கு மாதம் ரூ. 100 வீதம் 5 மாதங்களுக்கு அளிக்கப்படுகிறது. அதில் 3-ல் ஒரு பங்கு அரசு மானியமாகவும், மீதி வங்கிக் கடனாக வும் அளிக்கப்படுகிறது. வீட்டு வசதியும் செய்யப்பட்டு வருகிற றது.

<u>திரு. கே. உச்சி :</u> தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் கொத்தடிமை முறை முழுமையாக நீக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பாவப்பட்ட மக்கள் மீது அதிக அக்கறை கொண்டு, இந்த அரசு அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக் குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, எங்களுக்குத் தரப்பட்டு இருக்கின்ற தகவலில் இருந்து இங்கே அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றார்கள். அதற்குரிய ஆதாரத்தோடு உறுப்பினர்கள் எங்களுக்கு செய்திகளைச் சேகரித்துத் தர முயற்சித்தால் நாங்கள் அதிகாரிகளைக் கொண்டு பரிசீலிப்பதோடு, அந்தத் தகவலையும் பயன்படுத்தி, நாங்கள் அரசு அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, கொத்தடிமை ஒழிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று சொல்கிற போது, தஞ்சைமாவட்டம் குறிப்பிடப்படவில்லை. தஞ்சை மாவட்டத்தில் கொத்தடிமை என்ற பெயரில் இல்லா விட்டாலும், அங்கே இருக்கும் மிகப் பெரிய நிலச்சுவான்தார்கள் ஆயிரக்கணக்கான பண்ணையாட்களை வைத்து இருக்கிறார்கள். அந்த் கொத்தடிமைகளை ஒழித்ததுபோன்று, இதே போன்று பண்ணையடிமைகளையும் ஒழிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை என்றாலும், யாரையும் கொத்தடிமைகளாகக் கொள்ள வேண்டுமென்று பணக்காரர்களோ, அல்லது குத்தகைதாரர்களோ விரும்பினாலும், இந்த அரசு அதற்கு ஒத்துழைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, எல்லாவிதமான கொத்தடிமைத் தளைகளும் அகற்றப்பட வேண்டும் என்று தமிழகத்தில் முதல் குரல் கொடுத்தவர்கள் பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தான். ஆகவே, அவர்களின்—பெரியார்—அண்ணாவின்—கொள்கைகளை எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக எந்தெந்த மாவட்டங்களில் கொத்தடிமை முறை இருந்ததோ அந்த மாவட்டங்களில் தீவிரமாகப் பரப்பச் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, செயல்படுத்துவதில் தீவிரம் இருக்கிறது. இதைவிட தீவிரமாக வேண்டும் என்றால் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன தகவல்களைச் சொல்கிறார்களோ, என்ன திட்டங்களைச் சொல்கிறார்களோ, அதைப் பரிசீலிக்க நிச்சயமாக இந்த அரசு தயங்காது.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நிறைய கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வளிக்க உதவுகின்ற திட்டம் நம்முடைய அரசிடம் இருக்கிறதா?





மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நீலகிரி மாவட்டத்தில் எருமாடு என்ற கிராமத்தில் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட 70 பணியர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காக 104.58 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 4,59,000 ரூபாய் இத்திட்டத்திற்குச் செலவாகும் என்று மதிப்பீடு தயாரித்திருக்கிறது இந்த அரசு.

## தீண்டாமைக் குற்றங்கள்.

*376. வினா—திரு. என். கிட்டப்பா:—மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தீண்டாமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 1976-77 ஆம் ஆண்டில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 1976-77ஆம் ஆண்டில் 2,957 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

திரு. ரா. உமாநாத். தலைவரவர்களே, இன்றைக்கும் நம்முடைய மாநிலத்தில் பல இடங்களில் அரிசனங்களை சமூக பகிஷ்காரம் செய்வது நடந்து கொண்டிருக்கிறது. தீண்டாமை தடை அதிகாரிகளும், போலீசும், நிலப் பிரபுக்களும் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய கேள்வி, இன்றைய தீண்டாமைத் தடுப்புச் சட்டம் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்படுகிறது? தீண்டாமை நிலைமை இன்றைக்குத் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு இருக்கிறது? இத்திட்டத்தைச் சரியாகச் செயல்படுத்த 'என்போர்ஸ்மென்ட் அதாரிட்டீஸ் ப்ராப்பராக ஆக்ட்' பண்ணுவதற்கு 'ஸ்ட்ரீம் லைன்' செய்து ஒரு 'ஸ்பெஷியல் என்குயரி கமிஷன்' அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழகத்தில் தீண்டாமை முறை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நாம் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலே பார்க்கிறோம். இந்த ஜாதி ஒழிப்பு முறையை மேற்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். தீண்டாமைக் குற்றங்களைக் குறைக்கத்தான் ஆங்காங்கே இருக்கிற மாவட்ட காவலர்கள் தீவிரமாக ரோந்து வருகிறார்கள். எங்கெங்கே இப்படிப்பட்ட பிரச்சனை இருக்கிறதோ அங்கங்கே உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கிறார்கள். ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் குறைபாடு இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 3

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்கு போடப்பட்டதா? அந்த வழக்குகள் என்ன ஆனது என்கிற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, 1976-77ஆம் ஆண்டில் 2,957 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது 2,630 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. வழக்குகளின் முடிவுகள் பின்வருமாறு:—

988 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 713 வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டது. 14 வழக்குகள் தவறான தகவலால் பதிவு செய்யப்பட்டன. 152 வழக்குகள் அறிக்கைக்காக அனுப்பப்பட்டது. 37 வழக்குகள் ஆய்வில் உள்ளன. 653 வழக்குகள் வழக்கு மன்றத்தில் உள்ளன. 24 வழக்குகளில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இவ்விதம் தீண்டாமைக் குற்றங்களுக்காக தண்டனை அளிக்கப்பட்டவர்கள் ஊராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களின் தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்று தடை விதித்து சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அப்படிச் சட்டம் இருந்தும், அரசாங்கம் விரும்பினால் விதிவிலக்கு அளிக்கலாம் என்று ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இது உள்ளாட்சி அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியையும் அதன் தொடர்பானவற்றையும் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



## தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையில் மேம்பாலம்

*377 வினா— திரு டி. எம். தைலப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையில் தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்கருகில் உள்ள இரயில் பாதைகளைக் கடக்க மேம்பாலம் அமைக்கும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : இல்லை.

[முற்பகல் 10—00]

திரு டி. எம். தைலப்பன் : தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை பஸ் ரூட்டில் தஞ்சை-கும்பகோணம் இரயில் பாதையும் தஞ்சை-நாகப்பட்டினம் இரயில் பாதையும் இருக்கிறது. அதைக் கடந்து செல்ல ஆயிரக்கணக்கான பஸ்களும், லாரிகளும், மாட்டு வண்டிகளும் வெகுநேரம் காத்திருந்து செல்ல வேண்டியிருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு அந்த மேம்பாலத்தை உடனடியாக அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மேம்பாலத்தை அமைப்பதற்கு சுமார் 35 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. மத்திய அரசு இதில் 50 சதவீதம் செலவை ஏற்க வேண்டியுள்ளது. இதுபற்றி தீர ஆராய்ந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சற்று நீட்டிக்கிறேன்.

## உளுந்தூர்பேட்டை அருகே மேம்பாலம்.

*378 வினா—திரு துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் வரும் உளுந்தூர்பேட்டை ரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

[1978 மார்ச் 3

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை எண். 45-ல் கி.மீ. 194-2-ல் மேம்பாலம் கட்டும் பணிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. மீண்டும் கோரிக்கையை வலியுறுத்திய பின்னர் இப்பணியை வரும் திட்டத்தில் சேர்ப்பது பற்றி கவனிக்கப் படுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. துரை முத்துசாமி: எத்தனை லட்சம் செலவில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு எப்போது அனுப்பப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த மேம்பாலம் கட்டுவதற்கு மாநில அரசு 50 சதவீதம் செலவினத்தையும் மத்திய அரசு 50 சதவீதம் செலவினத்தையும் ஏற்கவேண்டியுள்ளது. மத்திய அரசு 50 சதவீதம் செலவினை ஏற்கவேண்டுமென மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டது. மத்திய அரசு நடப் பாண்டில் அதை ஏற்றுக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படுமென்று 1977-ல் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் விரைவில் இதை ஏற்று நடைமுறைப் படுத்த செயல்கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த நெடுஞ் சாலைகளில் பெரிய மேம்பாலத்தை அமைப்பதற்கு 50 சதவீதம் மத்திய அரசும் 50 சதவீதம் மாநில அரசும் ஏற்க இருக்கின்ற காரணத்தால் அப்படிப்பட்ட மேம்பாலங்கள் கட்டுவது தடைப் படுகிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். 5, 6 தாலுக்காக்களை தஞ்சையுடன் அது இணைக்கின்றது. அதைக் கடந்து செல்வதற்கு 5 தாலுக்காவிலிருந்து வரும் கல்லூரிக்கு செல்கின்றவர்களும், பள்ளிக்குப் போகின்றவர்களும் அந்த ரயில் பாதை மூடி இருப்பதால் ஒருமணி நேரத்திற்கு மேல் தாமதித்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இதனை கவனத்தில் கொண்டு விரைவில் அந்த மேம்பாலத்தை அமைப்பதற்குத் திட்டம் தீட்டப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தமிழகத்தின் பல பகுதிகளிலும் இருக்கின்ற ரயில் பாதைகளின் குறுக்கே மேம்பாலங்கள் கட்டுவதன் தேவையை மாநில அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தால் உடனடியாக அவைகளைக் கட்டுவதற்கு காரியங்கள் மேற் கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. நிதிநிலை காரணமாக மத்திய அரசு தாமதம் செய்து வருவதாகத் தெரிகிறது. மாநில அரசு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி அந்த மேம்பாலங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 மார்ச் 3]

திரு. எம். ஆறுமுகம் : 1978—79 இரயில்வே பட்ஜெட்டில் கூறும்போது, இரயில்வே பாதைகளில் மேம்பாலங்கள் கட்டும் போது அதன் செலவை முழுக்க முழுக்க மத்திய அரசே ஏற்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படியானால் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இனிமேல் மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்மையில்கூட மத்திய அரசிடமிருந்து வந்த தாக்கீதில் 50 சதவீதம் செலவினத்தைத் தான் புதிய மேம்பாலங்கள் அமைக்கும் போது மத்திய அரசு எடுத்துக் கொள்வதாகவும், ஏற்கனவே இருக்கிற மேம்பாலங்களை சீரமைப்பதற்கு உண்டான செலவைக்கூட மத்திய அரசு ஏற்க இயலாது என்றும் தெரிவித்துள்ளது. நிதிநிலையின் காரணமாக மத்திய அரசு தயக்கம் காட்டுகிற காரணத்தால் அந்த 50 சதவீத செலவையாவது மத்திய அரசு கண்டிப்பாகத் தரவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மன்னார்குடி வட்டத்தில் குறுவை சாகுபடி.

*379 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா திருமேனி ஏரி 16—10—1977 அன்று உடைப்பெடுத்ததால் மகராஜபுரம், பாலையக்கோட்டை, திருமக்கோட்டை, வள்ளூர், எளவனூர், போன்ற பகுதிகளில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரியின் உள்வாயில் ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்பவர்களில் சிலரால் கடந்த 16—10—77 அன்று நடுநிசியில் ஏரியில் ஓர் உடைப்பு வெட்டிவிடப் பட்டது. அதனால் ஏற்பட்ட நீர்ப்பெருக்கு அருகே உள்ள திருமேனி ஆற்றில் கலந்துவிட்டது. பொதுப்பணித்துறையினரால் இந்த உடைப்பு அடைக்கப்பட்டது. ஏரியின் உடைப்பினால் பயிர்களுக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. தண்ணீர் முழுவதும் இரண்டு நாட்களில் வடிந்து விட்டது. சுமார் 100 ஏக்கர் பரப்பில் குறுவை மற்றும் சம்பா, ஐ. ஆர். 20 நெற்பயிர் இதனால் லேசாக பாதிக்கப்பட்டது.

[1978 மார்ச் 3

குறுவை அறுவடை.

*380 வினு—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அண்மையில் 20-10-77 முதல் பெய்த கடும் மழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் குறுவை அறுவடை பாதிக்கப் பட்டதா?

(ஆ) இதன் விளைவாக ஏற்பட்ட சேதம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அண்மையில் 20-10-77 முதல் பெய்த கடும் மழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் 1,21,773 ஏக்கர் பரப்பளவு குறுவை அறுவடை பாதிக்கப் பட்டுள்ளது.

(ஆ) ஒரு இலட்சம் மெட்ரிக் டன் குறுவை நெல் சேத மடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. கோ. இளங்கோவன் : புயலுக்குப் பின்னல் அறுவடை யான நிலங்களிலெல்லாம் 25 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடு வரைதான் அறுவடை செய்யப்பட்டது. அது அரசின் கணக்கில் சரியாக வராததின் காரணமாக அந்த விவசாயிகளுக்கு உரிய சலுகைகள் அளிக்கப்பட வில்லை, என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : இந்த விஷயம் குறித்து நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் கூட இந்த அவையில் அறிவித்திருக்கிறார்கள். வெள்ளம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, எங்கெங்கு 25 சதவீதத்திற்குக் குறைவாக விளைச்சல் உண்டோ அந்தப் பகுதிகளுக் கெல்லாம் தண்ணீர் வரி, நிலவரி போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. முனிசாமி: மழை காரணமாக ஏரிகளில் எல்லாம் ஆழம் கம்மியாகிவிட்டதால் அவற்றில் தூர் வார அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபொதுப் பணித் துறையினரால் செய்யப்பட வேண்டிய வேலை. இருந்தாலும் இந்த அரசு அதை கவனத்தில் கொள்ளும்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : சபை முன்னவர் நேற்றைய தினம் அறிவிக்கும் போது 36 காசும் அதற்குக் கீழும் என்று அறிவித்தார்கள். இப்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 25 காசு என்று சொல்கிறார்கள். ஆகவே இதுபற்றி நிதியமைச்சர் விளக்கம் அளிப்பார்களா?



1978 மார்ச் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னவர் அவர்கள் தமிழகம் முழுவதும் பற்றிச் சொல்லியிருப்பார், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டம் பற்றி மட்டும் சொல்லியிருக்கலாம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தமிழ்நாட்டிற்குள்ளேதானே தஞ்சை மாவட்டமும் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : புயலால், வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதிகளில் 25 சதவிகிதத்திற்குக் குறைவாக விளைச்சல் உள்ள பகுதிகளுக்கு நிலவரி, தண்ணீர் வரி போன்ற சலுகைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினுக்கள்.

பூச்சிக் கொல்லி மருந்து கொள்முதல்.

276 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூச்சிக் கொல்லி மருந்துகள் 1970-ம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது ?

(ஆ) இப்போது எவ்வளவு ஸ்டாக் உள்ளது ?

(இ) இதில் எவ்வளவு காலம் கடந்தவை ?

விடை : (அ) கொள்முதல் செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளின அளவு :

| | | |
|---|---|---|
| 1970—71 | பொடி | 34,874.4 மெ. டன்கள் |
| | திரவம் | 8,20,306 லிட்டர்கள் |
| 1971—72 | பொடி | 40,933 மெ. டன்கள் |
| | திரவம் | 12,86,034 லிட்டர்கள் |
| 1972—73 | பொடி | 24,257 மெ. டன்கள் |
| | திரவம் | 9,32,831 லிட்டர்கள் |
| 1973—74 | பொடி | 13,566 மெ. டன்கள் |
| | திரவம் | 5,84,512 லிட்டர்கள் |
| 1974-75 | பொடி | 13,210.7 மெ. டன்கள் |
| | திரவம் | 6,88,684 லிட்டர்கள் |

| | | |
|---|---|---|
| 1975–76 | பொடி | 2,751 மெ. டன்கள் |
| | திரவம் | 1,68,650 லிட்டர்கள் |
| 1976–77 | பொடி | 1,717.580 மெ. டன்கள் |
| | திரவம் | 29,500 லிட்டர்கள் |

(ஆ) 1—11—1977 நாளன்று கையிருப்பு அளவு பூச்சிக் கொல்லிகள் :

| | |
|---|---|
| பொடி | 2,445.197 மெ. டன்கள் |
| திரவம் | 2,28,678 லிட்டர்கள் |
| களைக் கொல்லித் திரவம் | 8,744 லிட்டர்கள் |

(இ) பூச்சிக் கொல்லிகள் :

| | |
|---|---|
| பொடி | 13,940 மெ. டன்கள் |
| திரவம் | 78,173 லிட்டர்கள் |
| களைக் கொல்லித் திரவம் | 7,776 லிட்டர்கள் |

இந்த மருந்துகள் நிரப்பிகளில் குறிக்கப்பட்டுள்ள காலக்கெடு கடந்த போதிலும், அவை வீரியம் உள்ளவையா என பரிசோதனை செய்த பின்னரே விற்பனை செய்யப்படுகின்றன.

## தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்கள்.

277 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலைக்காக பதிவு செய்து உள்ளவர்கள் எவ்வளவு பேர் ?

(ஆ) அதில் பட்டதாரிகள் எவ்வளவு பேர் ?

(இ) தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ?

விடை :

(அ) 31—10—77 அன்றைய நிலவரப்படி 9,38,524 பேர்கள்.

(ஆ) 99, 111 பேர்கள்.

(இ) 1,36,448 பேர்கள் (பட்டியல் இனத்தினரும், மலை சாதியினரும்),



278 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அதில் பட்டதாரிகள் எவ்வளவு பேர் ?

(இ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ?

விடை :

(அ) 31—10—77 அன்றைய நிலவரப்படி 76,104. பேர்கள்.

(ஆ) 6,732 பேர்கள்

(இ) 12,120 பேர்கள் (பட்டியல் இனத்தினரும், மலை சாதியினரும்).

## *Firms assisted by 'SIPCOT'*

279.Q.—THIRU S. GANESAN: Will the Hon. the Chief Minister be pleased to state the details of the firms financed by the SIPCOT which are earning profits and incurred loss?

விடை : விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

280 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஒன்றியத்திலும் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் துவங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு எவ்வளவு சுகாதார நிலையங்கள் துவக்கப்படும் ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

* 579-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 மார்ச் 3

## ஏலாக்குறிச்சி—வைப்பூர் சாலை.

**281 வினா—திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள ஏலாக்குறிச்சி—வைப்பூர் சாலையை அரசு மேற்கொள்ளும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆமெனில், எந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும் ?

**விடை :**

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

## ரெடிமேட் ஆடைகள் ஏற்றுமதி.

**282 வினா—திரு. துரை முத்துசாமி :** மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலிருந்து ரெடிமேட் ஆடைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ? எந்தெந்த கம்பெனிகள் ? விவரம் என்ன ?

**விடை :** தமிழ்நாட்டிலிருந்து கைத்தறி ரெடிமேட் ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

எல்லா ஆடை ஏற்றுமதியாளர்களும் தங்கள் பெயரை சென்னையில் உள்ள கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்திலே பதிவு செய்துகொள்வதில்லையாதலால், தமிழ்நாட்டிலே குறிப்பிட்ட காலத்திலே உள்ள ஆடை ஏற்றுமதியாளர்களின் சரியான எண்ணிக்கையினைத் தெரிவிக்க இயலவில்லை. ஏற்றுமதி சலுகைகளைப் பெறுவதற்காக ஆடை ஏற்றுமதியாளர்கள் தங்களின் பெயரை பம்பாயில் உள்ள பருத்தி துணி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், பட்டு, ராயன் ஏற்றுமதி மேம்பாட்டுக்கழகம் ஆகியவற்றிலும் பதிவு செய்து உள்ளனர். இந்திய துணி உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள, தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 160 ஆடை ஏற்றுமதியாளர்கள் கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்து உள்ளனர். 1975—76-ல் ரூ. 10 கோடியாக இருந்த கைத்தறி ரெடிமேட் ஆடைகளின் ஏற்றுமதி 1976—77-ல் ரூ. 17 கோடியாக அதிகரித்து இருக்கிறது. இது நாட்டின் எல்லா மையங்களிலும் இருந்து கைத்தறி ஆடைகளின் மொத்த ஏற்றுமதியாக ரூ. 150 கோடியில் ஒன்பதில் ஒரு பாகமாகும்.



1978 மார்ச் 3]

## மணிமுத்தா நதியின் குறுக்கே பாலங்கள்.

**283 வினா—திரு. வ. துலுக்காணம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில் வரஞ்சுரம் கிராமத்தை இணைக்க மணிமுத்தா ஆற்றின் குறுக்கே ஒரு இணைப்பு பாலம் கட்ட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பாலம் கட்டப்படும் ?

**விடை :** (அ) இல்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**284 வினா—திரு. வ. துலுக்காணம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில் புதுஉச்சிமேடு, பழைய உச்சிமேடு இவைகளை இணைக்க மணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு இணைப்பு பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், எப்போது பாலம் கட்டப்படும் ?

**விடை :** (அ) இல்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கோவை மாவட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

**285 வினா—திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) கோவை மாவட்டத்தில் இவ்வாண்டு குடிநீர் வாரியத்தால் நிறைவேற்றப்பட இருக்கும் குடிநீர்த் திட்டங்கள் எவை ?

(ஆ) அதற்குச் செலவிட இருக்கும் தொகை எவ்வளவு ?

**விடை :** விவரங்கள் அடங்கிய *அறிக்கையொன்று அவையின் முன் வைக்கப்படுகிறது.

---

* 584-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 மார்ச் 3

## மதுக்கரை ஒன்றியத்தில் புதிய பாலங்கள்.

286 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியத்தில், குமிட்டிப்பதிக்கும் மாலகோவிலுக்கும் இடையே உள்ள பாதையின் குறுக்கே ஓடும் ஆற்றிற்கு பாலம் அமைக்கும் திட்டம் உண்டா ?

விடை : இல்லை.

287 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், எட்டிமடை பேரூராட்சியில் எட்டி மடைக்கும், குங்காகவுண்டன்புதூருக்கும் இடையே உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீடு என்ன ?

விடை : (அ) இல்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## செஞ்சியில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம்.

288 வினா—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டதுறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சியில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல்செயல்பட தொடங்கும்?

விடை; (அ) ஆம்.

(ஆ) நீதிமன்றங்கள் அமைப்பது குறித்து உயர்நீதிமன்றப் பதிவாளரிடமிருந்து கேட்கப்பட்டுள்ள முன்னுரிமைப்பட்டியல் வரப்பெற்றவுடன், செஞ்சியில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.



1978 மார்ச் 3]

## அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழக அலுவலகம்

289 வினா—திரு. வீ. கே. கோதண்டராமன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன வீட்டுவசதி வாரியம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) ஆரம்பத்தில் அந்த அலுவலகம் அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இருந்ததா ? அல்லது தனியார் கட்டடத்தில் இருந்ததா ?

(இ) ஆரம்பம் முதல் இதுவரை மாதா மாதம் கொடுக்கப்பட்ட வாடகை எவ்வளவு ?

விடை—

(அ) 1974-ம் ஆண்டு.

(ஆ) அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இருந்தது.

(இ) ஆரம்பம் முதல் இதுவரை அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் இருந்த இடங்கள், காலம், மாத வாடகை முதலிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| அலுவலகமிருந்த கட்டிடவிலாசம். | பரப்பளவு சதுர அடி. | தங்கியிருந்த காலம். | தொகை ரூ. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. எழிலகம், சென்னை-5. | .. | 15—2—74 முதல் 30—4—74 வரை | அரசினர் கட்டிடம். |
| 2. 12, மெயின் ரோடு, காந்திநகர், அடையாறு, சென்னை-20. | 3,362 | 1—5—74 முதல் 24—9—75 வரை | 2,740 |
| 3. 31-ஏ, ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-6. | 8,484 | 25—9—75 முதல் 31—3—77 வரை. | 8,000 |
| 4. 2, வாசு தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை-10. | 5,059 | 1—4—77 முதல் | 5,000 |

[1978 மார்ச் 3

இப்போதுள்ள கட்டிடத்தில் அரிசன வீட்டு வளர்ச்சிக் கழக அலுவலகம் மட்டுமல்லாமல் அக்கழகத்தின் சென்னை கோட்ட செயற் பொறியாளர் அலுவலகமும் இயங்கி வருகிறது.

## தமிழ்நாடு மாளிகை, புதுடில்லி.

**290 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு மாளிகை நிர்வாகம் யாருடைய பொறுப்பில் உள்ளது ?

(ஆ) அதற்காக ஆண்டொன்றுக்குச் செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) புதுடில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் தலைமைச் செயலகத்தில் பொதுத் துறையின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது.

(ஆ) அதற்காக கடந்த மூன்றாண்டுகளில் ஆன நிகரச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| வருடம். | நிகரச் செலவு. | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| 1974–75 | 3,38,604 | 28 |
| 1975–76 | 4,04,028 | 16 |
| 1976–77 | 6,28,848 | 80 |

## மதுரை மாநகராட்சியின்கீழ் உள்ள நூலகங்கள்

**291 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சி நிர்வாகத்திலுள்ள நூலகங்களிலும் படிப்பகங்களிலும் (Local Library and Reading Rooms) என்னென்ன பத்திரிக்கைகள் வாங்கப்படுகின்றன ?

(ஆ) இது குறித்து அரசு உத்திரவுகள் உண்டா ?



1978 மார்ச் 3]

விடை—(அ) மதுரை மாநகராட்சி நிர்வாகத்திலுள்ள மத்திய நூலகத்திலும் மாநகராட்சி கட்டிடத்தில் உள்ள நூலகத்திலும் வாங்கப்படும் செய்தித் தாள்களும் மற்ற இதழ்களும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :

(1) மதுரை நகர மத்திய நூலகம்—

1. இந்து
2. தினமணி
3. இந்தியன் எக்ஸ்பிரஸ்
4. தினத்தந்தி
5. மஞ்சரி
6. கலைமகள்.
7. சுயராஜ்யா.
8. குமுதம்
9. கல்கி
10. ஆனந்த விகடன்
11. கிராம ராஜ்யம்

(2) மதுரை மாநகராட்சி கட்டிடத்திலுள்ள நூலகம்—

1. இந்து
2. இந்தியன் எக்ஸ்பிரஸ்
3. தினமணி
4. முரசொலி
5. தினந்தந்தி
6. மாலை முரசு
7. தமிழ் முரசு
8. மதுரை மணி
9. செய்தி
10. அன்னை நாடு
11. தீக்கதிர்
12. ஆனந்த விகடன்
13. தினமணி கதிர்
14. கல்கி
15. குமுதம்
16. இல்லஸ்ட்ரேடட் வீக்லி
17. ரீடர்ஸ் டைஜிஸ்ட்
18. டைம்
19. ஸ்க்ரீன்
20. பிலிம் பேர்
21. கலைமகள்
22. நல்வழி.

(ஆ) மேலே கண்ட செய்தித்தாள்களும் இதழ்களும் வாங்குவதற்கு மதுரை மாநகராட்சிக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகையால் அரசு உத்தரவு தேவையில்லை.

## ஞானப்பிரகாசம் குளம், சிதம்பரம்

292 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரத்தில் உள்ள ஞானப்பிரகாசம் குளத்தில் ஒருவகை பூண்டு, குளத்தை அடைத்துக் கொண்டு மீன் வளர்ப்பு தடைபடுவதோ சுகாதாரம் இல்லாமல் அழுகி நாற்றம் எடுக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்னில், என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—(அ) அண்டு (ஆ) சிதம்பரம் நகரிலுள்ள ஞானப்பிரகாசம் குளத்திற்கு தண்ணீர் பாயும் வாய்க்கால் பாலமான் ஆற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. பாலமான் ஆற்றில் அவ்வப்போது அடித்துவரும் ''ஆகாசத்தாமரை'' என்ற பூண்டுகள் ஞானப்பிரகாசம் குளத்திற்கும் வருகின்றன. அவைகள் அவ்வப்போது நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் அப்புறப்படுத்தப்படுகின்றன. ஆதலால் அவைகள் அழுகி நாற்றம் கண்டு சுகாதாரம் பாதிக்கப்படுகிறது என்ற நிலையோ அல்லது மீன் வளர்ப்பு தடைபடுவதோ கிடையாது. அப்பூண்டுகள் தற்போது இக்குளத்தில் இல்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## தஞ்சை மாவட்டத்தில் கடலை பயிரிடல்

293 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கடலை பயிரிடும் பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) உற்பத்தியாகும் கடலையை அரசே கொள்முதல் செய்யத் திட்டம் உண்டா ?

விடை—(அ) தஞ்சை மாவட்டத்தில், நீர்ப்பாசன வசதி இல்லாத 26,449 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், நீர்ப்பாசன வசதியுடைய 11,670 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் கடலை பயிர் செய்யப்படுகிறது.

(ஆ) 1978-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் பயிராகும் நிலக் கடலையை அரசே கொள்முதல் செய்யும் உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.



## சிவகங்கை வீட்டுவரி விதிப்பு.

294 வினா—திரு. ஒ. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை நகராட்சியில் உள்ள வீடுகளுக்கு திடீரென 25 சதவிகித வரி விதிப்பு 30 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளதா ?

(ஆ) இது குறித்து பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளது அரசு கவனத்திற்கு வந்ததா ?

(இ) இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை : (அ) 25 சதவிகித வரி விதிப்பை 30 சதவிகிதமாக உயர்த்த நகராட்சியால் தீர்மானிக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகளும், அபிப்பிராயங்களும் கோரப்பட்டதின் பேரில், வரப்பெற்ற ஆட்சேபணைகளைக் கவனத்தில் கொண்டு இவ்வரிவுயர்வு 28 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அண்டு (இ) வரி விகித உயர்வு குறித்து தனிப்பட்ட நபர் ஒருவரிடமிருந்து முறையீடு அரசுக்கு கிடைக்கப்பெற்று அதன்பேரில் விவர அறிக்கை கோரப்பட்டுள்ளது.

## சடையனேரி இணைப்புக் கால்வாய்.

295 வினா—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சடையனேரி இணைப்புக் கால்வாய் திட்டத்திற்கு இது வரை எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

(ஆ) இத் திட்டம் எப்போது முடியும்? அதன் விவரம் என்ன ?

விடை : (அ) சடையனேரி இணைப்புக் கால்வாய் திட்டத்திற்கு, 1977 செப்டம்பர் மாதம் வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 30,09,160.

(ஆ) இத் திட்டம் டிசம்பர் 1977 முடிவுக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கால்வாய் வெட்டும் வேலைகள் சில சிறிய இறுதி வேலைகளைத் தவிர அநேகமாக

முடித்துவிட்டன. நான்கு குறுக்குக்கட்டிடங்கள் கட்டும் வேலைகள் முன்னேற்றத்திலுள்ளன. மண்கரைகள் 6,500 மீட்டரிலிருந்து 8,000 மீட்டர் வரை அமைக்கப்பட வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி/* இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

(அ) முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினுக்களை எடுத்துக்கொள்ளாதது குறித்து.

திரு. மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, கடந்த பத்து நாட்களாக சட்ட மன்ற கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் முக்கியமாக பொது நிர்வாகத் துறை, போலீஸ் துறை, தொழில் துறை, மருத்துவத் துறை, அறநிலையத் துறை ஆகிய துறைகள் மிகப் பெரிய துறைகளாகும். இவைகளைப் பற்றி எந்தக் கேள்வியும் இந்த மாமன்றத்தில் இடம் பெருமலிருப்பதும் அதற்குரிய கேள்விகளை உறுப்பினர்கள் கேட்கிற வாய்ப்பு இல்லாமலிருப்பதும், அதற்கான விளக்கங்களை இத்தனை துறைகளையும் தன்னகத்தே வைத்திருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் தருகிற சூழ்நிலை இல்லாமலிருப்பதும் வருந்தத்தக்க ஒன்ருகும்; இக்குறை தீர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்விக்கு நான் தர விரும்புகிற பதில் அடுத்தடுத்து முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற அத்தனை இலாக்காக்களையும் யொட்டிய கேள்விகளுக்கு பதில் அளிக்க அவர்கள் இருக்கிருர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



[முற்பகல் 10-10]

(3) ஒழுங்குப் பிரச்னை.

ஒரு பொருள் கொண்ட சில வினுக்களுக்கு அவையில் விடையளிப்பதும் அதே பொருள் கொண்ட மற்ருெரு வினுவிற்கு விடையை அச்சடித்து வழங்குவதும் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயின்ட் ஆப் ஆர்டர், நான் எழுப்ப விரும்புவது ஒரு முக்கியமான பிரச்னை. இங்கு பல கேள்விகள் கேட்கப்பட்டு பல மாதங்களுக்குப் பிறகு விடை வருகிறது. அதுவும் பெரும்பான்மையான கேள்விகள் விடைகள் அச்சடித்துக் கொடுத்திருக்கிருர்கள். 200 கேள்விகளுக்கு மேல் அச்சடித்து பதிலைக் கொடுத்திருக்கிருர்கள். இவ்விதம் இல்லாமல் சபையிலேயே கேள்விகளுக்கான சுருக்கமான பதிலை வைக்கலாம். உதாரணமாக 378-ம் எண் கேள்வியை எடுத்துக் கொண்டால், அவையில் எடுத்துக் கொள்ளப்பட்டு பதில் தரப் படுகிறது, ஆனுல் அதே பொருள் கொண்ட கேள்விக்கான பதில் அச்சடித்து வைக்கப்படுகிறது. இப்படி ஒரே பொருள் கொண்ட கேள்விகளுக்கு இரு விதமாக பதில் தரப்படுகிறது. அரசாங்கம் மிகுந்த செலவு செய்து இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் தருகிறது. அவற்றையெல்லாம் அச்சடித்துக் கொடுத்து விடாமல், இந்த மன்றத்திலேயே விடைகளை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை விட எனக்கும் கேள்விகளை விரைவில் கேட்டு முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனுல் கேள்விகளைக் கேட்கும் உறுப்பினர்கள் மூலக்கேள்விகளை ஒட்டிக் கேட்காமல் வேறு பல கேள்விகளைக்கேட்கிருர்கள்........பதில்களை அச்சடித்துக் கொடுப்பது சம்பந்தமாக பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் நாம் முடிவு எடுத்து இருக்கிருேம்...... ஆகவே தான்......

திரு. மு. கருணுநிதி : அப்படி ஒரு முடிவு எடுத்திருப்பது உண்மைதான் என்ருலும், திரு. சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டது, ஒரே மாதிரியான கேள்விக்கு, அதாவது ஒரே பொருள் உள்ள கேள்விக்கு—சில நட்சத்திரக் குறியிட்ட கேள்வியாக அவையில் எடுக்கப்பட்டு பதிலளிக்கப்படுகிறது, ஆனுல் அதே பொருள் உள்ள சில கேள்விகளுக்கு பதில்கள் அச்சடிக்கப்பட்டு தரப்படுகிறது. இப்படி ஒரே வகையான கேள்விகளுக்கு இரண்டு முறையாக பதில் தரப்படுவது சரியல்ல என்பதைத்தான் குறிப்பிடுகிருர்.

[1978 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். ஒரே பொருள் உள்ள கேள்விகள் இரண்டு மூன்று முறைகளில் வரக் கூடாது என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இதைப் பற்றி கவனிக் கிறேன்.

(4) கூவத்திலிருந்து வரும் நாற்றத்தால் உறுப்பினர் விடுதியில் தங்கும் உறுப்பினர்களை பாதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்னையை இங்கே கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தங்கள் பணியைச் செய்வதற்கு நான் சொல்வது உதவிகரமாக இருக்கும் என்ற வகையில் தான் இந்த ஒழுங்குப் பிரச்னையை நான் இங்கு எழுப்ப விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளை செய்ய முடியாத அளவுக்கு அவர்கள் தங்குகின்ற இடத்தில் இருக்கிறது என்பதை நான் அரசுக்கு, அதன் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் 6-வது மாடியில் இருந்தால் கூட, கூவத்தில் இருந்து வருகின்ற நாற்றம் கபாலக் கோட்டைக்குள் இருக்கின்ற மூளையைக் கூட வெளியேக் கொண்டு வருகின்ற அளவுக்கு—அந்த வாடை இரவு நேரங்களில் வருகிறது. இதை சகித்துக் கொண்டு உறுப்பினர்கள் அங்கு இருக்கவே முடியாது. இதற்கு அரசு ஏதாவது செய்ய வேண்டும். ஒன்று இதை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது வேறு இடங்களை சட்டமன்ற உறுப்பினர் களுக்குத் தர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நாற்றம் சட்ட மன்ற உறுப்பினர் விடுதிக்குள் வருவதைத் தடுக்க தக்க நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று,

சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதிக்குள் யார் யார் தான் வரவேண்டும் என்ற வரையறை இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் போவதற்கும் வருவதற்கும் இடைஞ்சலாக இருக் கின்ற விதத்தில் பல வகையான சூழ்நிலைகள் இருக்கின்றன. இதையும் அரசு கவனிக்க வேண்டும். ஏனென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம்....

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய அறையில் இருந்தால் அந்த அளவுக்கு நாற்றம் அடிக்கிறது என்பது மட்டுமல்ல, என் னுடைய அறைக்கு பக்கத்திலுள்ள அறையில் ஒரு திருட்டு நடை பெற்றிருக்கிறது.



1978 மார்ச் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில், நாற்றம் அடிக்கிறது. அதைப் போக்க வேண்டும் என்று சொல்வது அவசர முக்கியத்துவம் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். வேறு இருக்கின்ற விஷயங் களைப் பற்றி மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம். உறுப் பினர் அவர்கள் 6-வது மாடியில் இருந்து கொண்டு நாற்றம் அடிப்பதைப் பற்றிச் சொல்லுகிறார். நான் பக்கத்திலேயே இருந்து கொண்டு அனுபவிக்கிறேன்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற பகுதிகளில் இருக் கின்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற நாற்றத்தை எல்லாம் சகித்துக் கொண்டு வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நாற்றத்தையும் சகித்துக் கொள்ள வேண்டும் என்று நான் வாதாடவில்லை. இந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

## (5) அறிவிப்புகள்.

### (அ) பேரவையின் அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுப்படி பேரவை யின் அலுவல்கள் பற்றிய விவரம்:

1978—79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(திரு. கூத்தக்குடி ச. சண்முகம் எழுந்தார்)........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே என் அறிவிப்பை வாசிக்கத் தொடங்கி விட்டேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கேள்வியைப் பின்னால் எழுப்பலாம்.

| | |
|---|---|
| 3—3—1978 வெள்ளிக்கிழமை<br>4—3—1978 சனிக்கிழமை | 17 கல்வி. |
| 5—3—1978 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 6—3—1978 திங்கட்கிழமை | 26 கைத்தறியும், நெசவுத் தொழிலும்.<br>27 கதர். |
| 7—3—1978 செவ்வாய்க்கிழமை | 22 கால்நடை வளர்ப்பு } 2 மணி<br>30 சமூக நலன். } நேரம்.<br>47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். } 1½ மணி நேரம். |
| 8—3—1978 புதன்கிழமை | 10 பால் வழங்கு திட்டங்கள்.<br>20 வேளாண்மை.<br>50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. |
| 9—3—1978 வியாழக்கிழமை | 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.<br>33 வீட்டுவசதி.<br>49 பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. |
| 10—3—1978 வெள்ளிக்கிழமை | 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.<br>34 நகர்ப் பகுதி மேம்பாடு. |
| 11—3—1978 சனிக்கிழமை | 36 பாசனம்.<br>37 பொதுப்பணிகள்—கட்டடங்கள்.<br>38 பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்.<br>52 பாசனம் குறித்த மூலதனச் செலவு.<br>53 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு— கட்டடங்கள். |





| | |
|---|---|
| 12—3—1978 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 13—3—1978 திங்கட்கிழமை | 21 மீனளம்.<br>35 நுகர்பொருள் வழங்கல்.<br>57 பல்வகை மூலதனச் செலவு. |
| 14—3—1978 செவ்வாய்க்கிழமை | 6 பத்திரப் பதிவு.<br>23 கூட்டுறவு.<br>25 சின்கோனா.<br>45 காட்டுவளத் துறை.<br>56 காட்டுவள மூலதனச் செலவு. |
| 15—3—1978 புதன்கிழமை | 15 காவல் துறை. |
| 16—3—1978 வியாழக்கிழமை | 16 தீயணைப்புப் பணிகள். |
| 17—3—1978 வெள்ளிக்கிழமை | 12 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். |
| 18—3—1978 சனிக்கிழமை | 31 பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.<br>32 பின்தங்கிய வகுப்பினர் நலன்.<br>44 எழுதுபொருள் அச்சுத்துறை. |
| 19—3—1978 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 20—3—1978 திங்கட்கிழமை | 3 மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.<br>39 சாலைகளும், பாலங்களும்.<br>40 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து.<br>54 சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.<br>55 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 21—3—1978 செவ்வாய்க்கிழமை | 1 நில வரித்துறை.<br>11 மாவட்ட நிர்வாகம். |

| | |
|---|---|
| 22—3—1978 புதன்கிழமை | 24 தொழில்கள்.<br>51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| 23—3—1978 வியாழக்கிழமை | (1) 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையை அளித்தல்.<br>(2) 1970–71 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை அளித்தல்.<br>(3) 18 மருத்துவம்.<br>19 பொதுச் சுகாதாரம். |
| 24—3—1978 வெள்ளிக்கிழமை | தூய வெள்ளி— விடுமுறை. |
| 25—3—1978 சனிக்கிழமை | 7 மாநில சட்டமன்றம்.<br>8 தேர்தல்கள்.<br>9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். |
| 26—3—1978 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 27—3—1978 திங்கட்கிழமை | 2 மாநில ஆயத் தீர்வை.<br>4 பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம்.<br>5 முத்திரைத்தாள்கள்— நிர்வாகம்.<br>58 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். |
| 28—3—1978 செவ்வாய்க்கிழமை | 13 நீதி நிர்வாகம்.<br>14 சிறைச்சாலைகள்.<br>41 இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு.<br>42 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.<br>43 பல்வகை;<br>46 இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.<br>48 ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.<br>(41 முதல் 48 வரை:) விவாதமின்றி வாக்கெடுப்புக்கு விடப்பெறும். |



(2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் (1978–79).

(3) 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம்.

(4) 1970–71 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம்.

| | |
|---|---|
| 29—3—1978 புதன்கிழமை | நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் மீது விவாதமும் அவற்றை நிறைவேற்றலும். |
| 30—3—1978 வியாழக்கிழமை | அரசியலமைப்பு (44-வது திருத்த) சட்டமுன்வடிவிற்கு ஏற்பளிப்பது குறித்த தீர்மானம். |

பேரவை 5—4—1978 வரை கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பேரவையின் மற்ற அலுவல்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்பெறும்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணி முதல் பிற்பகல் 1–30 மணி வரை கூடும்.

(முற்பகல் 10–20)

## 2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

### (ஆ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்குச் சலுகை குறித்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அனுவாரியாக விளைச்சல் 37 காசுகள் அதற்குக் கீழே இருந்தால் அவர்களுக்குச் சலுகை அளிக்கக்கூடிய முறையை அறிவித்தார்கள். இன்றைக்கு இந்த அவையில் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் 25 சதமானம் அதற்குக் குறைவாக விளைச்சல் உள்ள விவசாயிகளுக்குச் சலுகை என்று சொன்னார்கள். நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்

[திரு. கூத்தக்குடி ச. சண்முகம்]

கள் அறிவித்த சலுகை பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே, சலுகை 25 சதமானத்திற்குக் கீழ் விளைச்சல் உள்ளவர்களுக்கா அல்லது அனுவாரி விளைச்சல் 37 பைசாவுக்குக் குறைவாக இருப்பவர்களுக்கா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நேற்றைக்கு நிதிநிலை அறிக்கையின்போது நான் அளித்த பதிலில் இந்தச் சபைக்குத் தெரிவித்த சலுகைதான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய சலுகை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து.

திரு. க. சுப்பு : நிகழ்ச்சி நிரல் பற்றி வாசித்தீர்கள். ஏற்கனவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அது இடம் பெறவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அதுபற்றி அரசு ஆய்வு செய்து எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து முடிவு செய்து 5—4—78 அன்று விவாதிக்கப்பட இருக்கிறது. அதற்கான அறிவிப்பு பின்னால் அறிவிக்கப்பட இருக்கும் நிகழ்ச்சி நிரலில் வரும்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

அமைச்சரின் அறிக்கை.

6. மின் உற்பத்தி மீது விதித்துள்ள ஆயத் தீர்வையை மறுபரிசீலனை செய்து திரும்பப் பெறக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் இந்திய பிரதமருக்கு அனுப்பிய தந்தி குறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே மத்திய அரசு வரவு செலவுத் திட்டத்தில் மின் உற்பத்தி மீது யூனிட் ஒன்றுக்கு 2-பைசா வீதம் ஆயத்தீர்வை விதித்துள்ளதை இந்த அவை அறியும். இது மின்வாரியத்தின் தற்போதைய நிதி நிலை பற்றுக்குறையை மேலும் அதிகமாக்குவதுடன் மாநில அரசின் நிதிநிலை பற்றுக்குறையை மறைமுகமாகவும் அதிகரிக்க வகை செய்கிறது. மாநிலத்திற்கு கிடைக்கக்கூடிய வருவாய், மத்திய அரசு நிதிக்கு மாற்றப்படுமாதலால், இது மத்திய மாநில அரசிற்கிடையேயுள்ள சுமுகமான நிதிப் பங்கீடு உறவுக்கு உகந்தது அல்ல. இந்நிலையில் முதலமைச்சர் பிரதமருக்கு தந்தி மூலம் கீழ்க்கண்ட எதிர்ப்பு தெரிவித்துள்ளார்;



[திரு. ச. இராமச்சந்திரன்]

WE ARE DEEPLY CONCERNED AT IMPOSITION IN RECENT CENTRAL BUDGET OF EXCISE DUTY OF TWO PAISE PER UNIT ON ELECTRICITY GENERATED (.) ADDITIONAL RESOURCES FROM ELECTRICITY TARIFF INCREASES HAVE SO FAR BEEN FULLY AVAILABLE AS PLAN RESOURCE TO STATE ELECTRICITY BOARD AND FOR STATE PLAN (.) LEVY OF THIS DUTY WILL MAKE SERIOUS INROADS INTO THIS RESOURCE (.) IN PRESENT CONTEXT WHEN STATES ARE PRESSING FOR ADDITIONAL RESOURCE TRANSFERS FROM THE CENTRE TO STATES YOU WILL APPRECIATE THAT THIS UNPRECEDENTED TAX SEEKS TO TRANSFER RESOURCES FROM STATE ELECTRICITY BOARDS TO CENTRAL EXCHEQUER AND CURTAILS EVEN THE PRESENT LIMITED SCOPE FOR STATE ELECTRICITY BOARDS AND STATE GOVERNMENT TO RAISE RESOURCES(.)

2. TRANSMISSION LOSSES ARE GENERALLY AROUND TWENTY PER CENT(.) DUTY OF TWO PAISE PER KWH WILL THEREFORE MEAN AN AVERAGE INCREASE OF TWO POINT FIVE PAISE PER KWH ON ENERGY SOLD(.) THIS WILL HAVE TO BE RECOVERED MAINLY FROM INDUSTRIAL SECTOR SINCE AGRICULTURE IS EXEMPT AND DOMESTIC AND COMMERCIAL CONSUMPTION IS NOT SIGNIFICANT(.) SUCH AN INCREASE WILL PARTICULARLY AFFECT SMALL INDUSTRIES AND WILL ALSO LEAD TO PRODUCTION LOSS, PRICE INCREASE AND UNEMPLOYMENT AS SMALL AND MEDIUM UNITS MAY NOT BE ABLE TO WITHSTAND HIGHER COSTS(.)

3. APART FROM THE FACT THAT TRANSFER OF POTENTIAL REVENUE AVAILABLE TO ELECTRICITY BOARDS TO CENTRE WILL BE UNJUSTIFIED, I MIGHT POINT OUT THAT SCOPE FOR ANY SIGNIFICANT INCREASE TO INDUSTRIAL TARIFFS IS LIMITED IN OUR STATE(.) THIS DUTY WILL THEREFORE HAVE TO BE

[திரு. சா. இராமச்சந்திரன்]

MET FROM RESOURCES OF ELECTRICITY BOARD WHICH IS ALREADY IN DEFICIT (.) THEY WILL ACCORDINGLY NEED SUBSIDY FROM STATE GOVERNMENT FOR MEETING THE DUTY (.) THIS WILL INEVITABLY RESULT IN FURTHER UNCOVERED DEFICIT IN STATE BUDGET AND OVER DRAFT SITUATION (.)

4. I MIGHT ALSO MENTION THAT THE VERY SIGNIFICANT IMPACT OF THIS MEASURE WAS NOT TAKEN INTO ACCOUNT WHILE FINALISING FINANCING PAT TERN FOR STATE PLANS IN RECENT DISCUSSIONS HELD WITH DEPUTY CHAIRMAN PLANNING COMMISSION (.) THIS LEVY WILL THEREFORE CUT INTO THE SIZE OF STATE PLANS WHICH HAVE ALREADY BEEN ANNOUNCED(.)

5. EARNESTLY REQUEST THAT CENTRE MAY RECONSIDER THIS DUTY AND WITHDRAW IT ALTOGETHER BOTH ON GROUNDS OF PRINCIPLE AND PRACTICAL CONSIDERATIONS(.) REGARDS.

மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் மின்சார உற்பத்தியின் மீது விதிக்கப்பட்டுள்ள ஆயத்தீர்வை மின்சார வாரிய—மாநில நிதி ஆதாரங்களை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது. மாநிலங்கள் தங்களது நிதி ஆதாரங்களை விரிவுபடுத்த வேண்டும் என வற்புறுத்திவரும் இந்தச் சூழ்நிலையில் மாநில மின்சார வாரியங்களின் நிதி ஆதாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளும் வகையில் அமைந்துள்ள நியாயமற்ற இந்த வரி விதிப்பு ஏற்கனவே விரிவுபடுத்த முடியாத நிலையில் நிதிப்பற்றுக் குறையில் இருந்து வரும் மாநில அரசு, மாநில மின்சார வாரியங்களின் வருவாய்களைக் கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஏற்கனவே மின்தொடர்களில் ஏற்படும் இழப்பு 20 சதவிகிதம் என்ற அளவில் உள்ளது. விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சக்தி மட்டுமே இவ்வரி விதிப்பிலிருந்து விளக்களிக்கப்பட்டிருப்பதால், இவ்வரிவிதிப்பை தொழிற்சாலைகளுக்கும் மற்ற காரியங்களுக்கும் பயன்படுத்தும் மின்சக்தி—நுகர்வோரிடமிருந்து பெற வேண்டும். சிறு தொழில்கள் இந்த வரிச் சுமையைத் தாங்க முடியாத நிலை ஏற்பட்டு உற்பத்தியில் இழப்பையும், விலைவாசிகள் உயர்வையும் வேலையில்லாத நிலைமைகளையும் கூட தோற்றுவிக்கச் செய்யும்.



(திரு. ச. இராமச்சந்திரன்)

தொழில்களுக்கான மின் கட்டணத்தை கணிசமான அளவிற்கு உயர்த்த முடியாத நிலைமையே இம்மாநிலத்தில் உள்ளது. ஏற்கனவே நிதிப்பற்றுக்குறையில் உள்ள மின்சார வாரியங்கள் இந்தச் சுமையைத் தாங்க முடியாது. எனவே மின்சார வாரியம் இந்த வரிச்சுமையை சரிக்கட்ட மாநில அரசின் மானியத்தை எதிர்நோக்கவேண்டியிருக்கும். அது மாநில அரசின் நிதி நிலையைப் பாதிக்கும். எனவே மின்சார வாரியங்களின் நிதி ஆதாரங்களை மத்திய அரசு ஏற்றுக்கொள்வது நியாயமானதல்ல.

இவ்வரி விதிப்பு மாநில அரசின் அறிவிக்கப்பட்ட திட்டங்களைக்கூட குறைத்திட வேண்டிய நிர்பந்தத்தை உருவாக்கும்.

கொள்கைகளின் அடிப்படையிலும் நிலவிவரும் நிலைமைகளின் அடிப்படையிலும் மத்திய அரசு இவ்வரி விதிப்பினைப்பற்றி மறு பரிசீலனை செய்து திரும்பப் பெற வேண்டும்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்ததற்குப் பிறகு அதிலே அபிப்பிராயங்கள் சொல்வது மரபு அல்ல என்றாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கை ஏற்றுக்கொள்ளத் தக்க ஒன்று. இதற்கு நல்ல பதில் மத்திய அரசிடமிருந்து வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஒருவேளை அந்த பதில் வராவிட்டால் இந்த மன்றத்தினுடைய ஏகோபித்த குரலாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தை, நாம் எதற்கும் பதிலை எதிர்பார்ப்போம், சாதகமான பதில் வந்தால் பிரச்சினை இல்லை. அப்படி வராவிட்டால் எதிர்க்கட்சித் தலைவர் தந்த யோசனையை முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் கலந்து ஒரு தீர்மான வடிவில் கொண்டு வரலாமா என்பதைப் பற்றி யோசிக்கப்படும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. என். சங்கரய்யா :</u> பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி மத்திய ஆயத் தீர்வையினால் தமிழ்நாடு மின்சார வாரியம் எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதை உத்தேசமாகத் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, இந்த மின் உற்பத்திக்கு 2 பைசா என்கின்ற இந்த ஆயத் தீர்வையின் மூலமாக சுமார் 14 கோடி ரூபாய் மின்சார வாரியம் கொடுக்க வேண்டி வரும். அதைப்போலவே நிலக்கரிக்கு அவர்கள் விதித்த கூடுதல் வரியின் காரணமாக இன்னும் 2 கோடி ரூபாய் கொடுக்க வேண்டிவரும். ஆக 16 கோடி ரூபாய் நாம் கொடுக்க வேண்டிவரும்.

## (7) கவன ஈர்ப்பு

**கல்லூரி ஆசிரியர்கள் அனைத்துச் சங்கமும் நடத்த இருக்கும் தேர்வுகளை மேற்பார்வையிடும் பணியை புறக்கணிப்பதென எடுத்த முடிவும் அதன் விளைவுகளும் குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 41 வது விதி
யின் கீழ், திருவாளர்கள் ஆர். உமாநாத், ஆர். கிருஷ்ணன்,
பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், ஏ. ஆர். பாரிமுத்து,
சோ. அழகர்சாமி, எம். ஏ. லத்தீப், ஜே. ஜேம்ஸ், பொ. விஜய
ராகவன், ரா. மார்க்கபந்து, ப. சந்திரன், ஏ. ரகுமான்கான்,
துரைமுருகன், ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டுவருகிறார்கள். திரு. ஆர். உமாநாத்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்
களின் அனைத்துச் சங்கங்களும் மாநிலம் முழுவதும் நடக்க இருக்
கும் தேர்வுகளை மேற்பார்வையிடுவதைப் புறக்கணிப்பதென முடி
வெடுத்தது பற்றியும், அதன் விளைவாக பல்லாயிரக் கணக்கான
மாணவர்கள் தேர்வு எழுதுவது பாதிக்கப்பெறக்கூடிய அபாயம்
ஏற்பட்டிருப்பது பற்றியும் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவுர்
களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(முற்பகல் 10.30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, இவ்வரசு பல்கலைக் கழக மானியக் குழு
பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை அமல்படுத்துவதிலுள்ள பல்
வேறு நிலைகளை விவரமாக ஆய்ந்தறிந்த பின்னர் கல்லூரி மற்றும்
பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதியங்களை மாற்றி அமைத்து
21—9—1977 அன்று ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவ்வாணை
களின்படி திருந்திய ஊதிய விகிதம் 1—4—1976 முதல் நடை
முறைக்கு கொணரப்படும். ஆயின் இதற்கான பணப்பயன்
1—1—1977 முதல் ஆசிரியர்களுக்குக் கிட்டும். பின்னர் பயிற்று
நர் மற்றும் விளக்குநர்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று இவ்
வரசு தமது ஆணை எண். 2659, கல்வி, நாள் 28—12—1977-ல்
திருந்திய ஊதிய விகிதங்களை அமுல்படுத்துவதில் பட்ட மேற்
படிப்பு கல்வித் தகுதியும், 1—12—1977 அன்று 5, ஆண்டுகள்
பணி நிறைவு எய்தியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள்
உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்ற ஆணையை
யும் வழங்கியுள்ளது.



பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மதுரைப் பல்கலைக்
கழக ஆசிரியர் சங்கம் ஆகியவைகள் பல்கலைக் கழக மானியக்குழு
பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களை 1—1—1973 முதல் நடை
முறைக்குக் கொணர்தல் வேண்டும் என்று கோரி வருகின்றனர்.
தற்பொழுதுள்ள நிதிப் பற்றாக்குறை நிலையினால் 1—1—1973
முதல் திருந்திய ஊதிய விகிதங்களை நடைமுறைக்குக் கொணர
இயலாத நிலையில் அரசு உள்ளது.

தற்பொழுது கல்லூரி ஆசிரியர் சங்க கூட்டு நடவடிக்கைக்குழு
விடுத்துள்ள கோரிக்கைகளை அரசு மிக்க கவனத்துடன் பரிசீலித்து
வருகிறது. மேலும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களது
முறையீடுகள் குறித்து அரசு இதுகாறும் பரிவுடன் பரிசீலித்து
வந்துள்ளது. இனியும் அவர்களது குறைகளைப் போக்க ஆவன
செய்ய வேண்டும் என்ற உறுதியும் பூண்டுள்ளது.

1977 டிசம்பர் திங்களில் மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்
களின் தேர்வுப் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கைகளினால் மாண
வர்களுக்கு எண்ணிலடங்கா இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன.
இதைக் கருத்தில் கொண்டும், ஆசிரியர்களின் இதரக் கோரிக்
கைகள் அரசினரின் பரிசீலனையில் இருந்து வருவதாலும், தேர்வுப்
பணிப் புறக்கணிப்பினால் மாணவர் மற்றும் பெற்றோர்கட்கு ஏற்
படும் இடர்பாடுகளைத் தவிர்க்கும்பொருட்டும், கல்லூரி மற்றும்
பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது தேர்வுப் பணி புறக்கணிப்பது
என்ற முடிவினைக் கைவிட்டு, வரும் தேர்வுகள் சிறப்பான முறை
யில் நடைபெற ஒத்துழைப்பு நல்குவர் என்று அரசு நம்பிக்கை
கொண்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, யு. ஜி. சி.
ஸ்கேலை அமல் நடத்துவது சம்பந்தமாக 1—1—1973 முதல்
அமல் நடத்த வேண்டுமென்ற அவர்களது கோரிக்கையைப் பற்றி
அவர்கள் என்னமோ முரட்டுத்தனமாக நிற்பது போன்ற ஒரு
எண்ணம் இந்த மாநிலத்தில் உண்டாக்கப்படுகிறது, அது
உண்மையல்ல.

அவர்கள் சில மாற்று யோசனைகளையும் வைத்திருக்கிறார்கள்.
நிதிநிலைமை பற்றி அமைச்சரவர்கள் சொன்னதால் அவர்கள்
ஐந்து மாற்று யோசனைகளை வைத்திருக்கிறார்கள். அந்த ஐந்து
யோசனைகளில் ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்வீர்களா என்று
நான் கேட்க விரும்புகிறேன்.

1—1—1973 முதல் அதை அமல் நடத்த வேண்டும். அதிலே
அரியர்ஸ் கொடுப்பதிலே மாநில அரசாங்கம் கொடுக்கவேண்
டிய பகுதியை ரொக்கமாகக் கொடுக்கவேண்டாம், பாண்டாகக்
கொடுங்கள் என்ற மாற்று யோசனையை வைத்திருக்கிறார்கள்.
அல்லது மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் 1—1—1973

முதல் அமல் நடத்தி, கொடுக்க வேண்டிய முழு மானியத்தை, அரியர்ஸை அதையும் பாண்டாகக் கொடுக்கலாம், பணத்தை புயல் வெள்ள நிவாரணத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது சென்னை வைஸ்—சான்சலர் ஒரு ப்ரப்போசலை சொல்லியிருக்கிறார், 1—1—1974 முதல் அமல் நடத்தப்பட வேண்டும் என்று. அதையாவது ஏற்றுக்கொள்கிறீர்களா ?

நான்காவதாக, தேதியை மாற்ற முடியவில்லை என்றால் அந்தத் தேதியிலிருந்து அமல் நடத்தி பஞ்சப்படியையாவது தனியாகக் கொடுப்பீர்களா என்ற மாற்று யோசனையும் இருக்கிறது.

இறுதியாக ஸ்கேலை 1—1—1973-இலிருந்து அமல் நடத்தி மானிடரி பெனிஃபிட்டை 1—1—1977 முதல் அமல் நடத்துவது: எனவே, இதில் அவர்கள் முரட்டுத்தனமாக நிற்கவில்லை. ஐந்து ஆல்டர் நேட்டிவ்ஸை வைத்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டுக்கு விரிவான ப்ரேம் ஓர்க் இருக்கிறது. இந்த ஐந்தில் ஏதாவது ஒன்றை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது இவைகளை சீரியஸாகப் பரிசிலனை செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ? (மணியடிக்கப்பட்டது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. உமாநாத் அவர்கள் சுருக்கமாகப் பேசலாமே.

<u>திரு. ரா. உமாநாத் :</u> நான் முடித்த பிறகுதான் தாங்கள் மணியடித்தீர்கள்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சில யோசனைகளை ஆசிரியர்களின் சார்பாக தெரிவித்தார்கள். நேற்றைய தினம் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரைக்கும் அந்தப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இதிலே கூறப்பட்ட சில யோசனைகளைச் சொல்லவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் வேறு சில யோசனைகளைச் சொன்னார்கள். மறுபடி ஞாயிறு காலை 8-00 மணிக்கு சந்தித்துப் பேசி, சுமுகமான முடிவுகளை மேற்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவில் இந்தப் பிரச்சினை பேசப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசின்படி 1973-வது ஆண்டிலிருந்து அமுல் நடத்தப்பட வேண்டுமென்று இன்றையத்தினம் ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களில், 1973-வது ஆண்டிலிருந்து அது அமுல் நடத்தப்படுகிறது. இந்த மாநில அரசுக்கு என்ன நிதிப் பிரச்னையோ அதேவித பிரச்சினைத்தான் இந்தியாவிலுள்ள இதர மாநிலங்களுக்கும் இருக்கின்றது.

அது மட்டுமல்ல, பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசை அமுல்படுத்த ஆகும் செலவில் 80 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநில அரசு 20 சதவீதத்தைத்தான் ஏற்றுக் கொள்கிறது. அதையும் 5 ஆண்டுகளில் கொடுக்கலாம். அப்படியிருக்கும்போது, அவர்களது நியாயமான கோரிக்கையை ஏன் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லையென்பது முதல் கேள்வி.

இரண்டாவது, 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக கல்லூரியை விட்டு 2 பிளஸை நீக்குவதால், கல்லூரி ஆசிரியர்கள் வேலைக்கு பாதிப்பு இல்லையென்று அரசு கூறுகிறது. பாதுகாக்கப்படுவார்கள் என்று சாதாரண உத்திரவாதம்தான் தரப்படுகிறதே தவிர, எந்தவிதத்தில் பாதுகாக்கப்படுவார்கள் ? பாதுகாக்கப்பட என்ன திட்டம் இருக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியுமா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ரகுமான்கான் இன்று பேச பெயரையும் கொடுத்திருக்கிறார். கல்வி மானியத்திலே அழகாக, விளக்கமாகப் பேசலாம். திரு. ஜேம்ஸ் அவர்களுக்கும் அதையே சொல்லிக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவரவர்களே, அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் இந்தத் தேர்தலிலே தி. மு. கழகத்திலே வந்து சேர்ந்தார் என்று நான் கருதவில்லை. முன்னாலேயிருந்து அதிலே இருக்கிறார். 1973-லேயிருந்து 1976 ஜனவரி 31-ம் தேதி வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தது. அந்தக் காலகட்டத்தில் இதை அமுல் படுத்தியிருக்கலாம். அப்பொழுது அந்த அரசினால் ஏற்கப்பட முடியாத சிபாரிசுகள்தான் இந்தப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசுகள். எனவே, அப்பொழுது என்ன சங்கடங்கள் இருந்தனவோ, அவைகள் இந்த அரசுக்கும் இருக்கும் என்பதை அவர்கள்முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இருந்தாலும், நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறோம். பேசி நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த அளவில் இதை முடிந்துக் கொள்ளலாம்.

## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு, மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (8) அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

## (9) 1978–79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### கோரிக்கை எண். 17—கல்வி—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் வைத்திருந்த அறிக்கையில் சில பிழைகள் இருக்கின்றன. அதையும் சொல்லி விடுகிறேன். மானியக் கோரிக்கை தமிழ் பதிப்பில் பக்கம் 51ல் உடற்பயிற்சிக் கல்லூரி மாணவர் எண்ணிக்கை 700 என்று இருப்பது 340 என்று இருக்க வேண்டும். பக்கம் 102-ல் 1976-77,



[திரு. செ. அரங்கநாயகம்]

தொழிற்பயிலக (பாலிடெக்னிக்) ஆசிரியர் எண்ணிக்கை 1,184 என்பது 1,134 என்றும், மொத்தம் 2,028 என்பது 1,978 என்றும் இருக்க வேண்டும்.

சாதனை நிலை அறிக்கை (பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்) முதல் பக்கத்தில் 1975-76 ஆம் ஆண்டு இருந்த தொடக்கப் பள்ளிகள் (உயர் தொடக்கப்பள்ளிகள் உட்பட) எண்ணிக்கை 26,949 என்றிருப்பதற்குப் பதிலாக 32,690 என்று இருக்க வேண்டும்.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர்கள் பேச இருப்பதால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எட்டு நிமிஷம் ஒதுக்கியிருக்கிறேன். அதற்கேற்றபடி எல்லோரும் பேசினால் நலமாக இருக்கும். (குறுக்கீடு) பேராசிரியர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். உறுப்பினர்களைக் குறைத்துக் கொள்ளுங்கள், 15 நிமிடம் வேண்டுமானாலும் தருகிறேன். உறுப்பினர்கள் நிறையப் பெயர் தந்திருக்கிறார்கள்.

*திரு. ம. கண்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்வி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

1978-79ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இந்தக் கல்வி மானியத்திற்காக 176 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மொத்த நிதி நிலையில் 24 விழுக்காடு ஆகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையினை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இந்த 1978-79 ஆண்டு 1,000 இடைநிலை ஆசிரியர்களையும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களையும், 200 முதுநிலைத் தமிழாசிரியர்களையும் புதிதாக ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் நான் பேசும்போது, ஆளும் கட்சித் தரப்பில் பாராட்டிப் பேச இருக்கிறேன்., ஆனால் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இதிலே புரட்சி இல்லை புதுமை இல்லை என்று பேச ஆரம்பிப்பார்கள். நான் எதிர்க்கட்சி உறுப்பினர்களைக்கேட்டுக் கொள்ள விரும்புவது, புரட்சி என்றால் என்ன, புதுமை என்றால் என்ன, அவர்கள் எதை புரட்சி என்று சொல்கிறார்கள், எதை புதுமை என்று சொல்கிறார்கள்? அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, இன்னும் இந்த மானியத்தின்மீது எதிர்க்கட்சியினர் யாரும் பேசவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றே பேசியிருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : அவர் பேசும்போது பேசுவார்கள் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசியதற்கு என்று சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. ம. கண்ணன் : இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது நான் எதையும் புதுமையாகப் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று பேசிய போது என்று சொல்லுங்கள், இந்த அடிப்படையிலே உங்கள் பேச்சு இருக்கட்டும்.

திரு. ம. கண்ணன் : கல்வி மானியத்தின்மீது பேசும் போது நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக நாட்டில் கல்வியின் தரம் நாளுக்கு நாள் தாழ்ந்து கொண்டே போகிறது என்பது பரவலான கருத்தாகும். இதற்கான காரணம் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள்தான் என்று குறிப்பிட விரும்புகிறேன். எந்த ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியரும் சரியாகக்கல்வி புகட்டுவதே கிடையாது. ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்வது கிடையாது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பது கிடையாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று கல்வி போதித்தால் கல்வியின் தரம் நாட்டில் எவ்வாறு குறைந்து போகும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

நம்முடைய அரசின் மூலம் நம்முடைய கல்வி அதிகாரிகளுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பள்ளிக்கூடங்களில் ஒழுங்காகப் பாடம் நடைபெறுகிறதா, ஆசிரியர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்கிறார்களா என்பதை கல்வி அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். ஒரு ஆய்வுக் குழுவினை அதிகாரிகள் மூலமாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல அறிவாளிகளாக வருவார்கள் என்று பெற்றோர்கள் எதிர்பார்த்து அவர்களை பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள்; ஆனால் அவர்களுடைய எண்ணங்கள் ஈடேற முடியாமல் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் அந்தப் பெற்றோரின் எண்ணங்களை கெடுத்து விடுகிறார்கள். நான் மீண்டும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களையே குறை கூற விரும்புகிறேன்.



[திரு. ம. கண்ணன்]

என்னுடைய தொகுதியில் நிறைய ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. நான் ஒவ்வொரு முறையும் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்யும்போது, ஒவ்வொரு முறையும் பள்ளிகளுக்குச் செல்கிறபோது, அங்கே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் வருவது இல்லை, ஒழுங்காக வருவது இல்லை என்பதைப் பார்த்து இருக்கிறேன். குறித்த நேரத்தில் பள்ளிக்கு ஆசிரியர்களே வருவது இல்லை. பிறகு எப்படி குழந்தைகள் பள்ளிக்குச் சென்று ஒழுங்காகப் படிப்பார்கள் என்று என்னால் சொல்ல முடியவில்லை. தயவு செய்து இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன், அரசின் சார்பில் பள்ளிகளைக் கண்காணிக்க ஒரு ஆய்வுக் குழு அமைக்க வேண்டும். அப்படி ஆய்வுக் குழு அமைத்து பள்ளிகள் சரிவர நடக்கின்றனவா, குழந்தைகளுக்குப் பாடம் சரிவர கற்றுக் கொடுக்கப்படுகிறதா, ஆசிரியர்கள் சரிவர வருகிறார்களா, ஒழுங்காக வருகிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, உறுப்பினர் பேசும் போது ஆசிரியர்கள் பள்ளிக்கூடத்தில் இல்லை என்று சொல்கிறார்கள், அது சரிதானா ?

திரு. ம. கண்ணன் : பொதுவாக ஆரம்பப் பள்ளிகளில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் வருவது இல்லை என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டத்திலும், ஸ்கூல் இன்ஸ்பெக்டர்கள், துணை இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் இது பற்றி புகார் செய்யலாம். மொத்தமாக இப்படிச் சொல்லாமல், குறிப்பிட்ட இடத்தில் எங்காவது இருந்தால் தெரிவியுங்கள்.

திரு. ம. கண்ணன் : நான் இப்படிச் செய்து இருக்கிறேன், என்னுடைய தொகுதியில் சில பள்ளிகளை நான் பார்வையிடச் சென்றபோது அங்கே ஆசிரியர்கள் இல்லாததை மாவட்ட கல்வி அலுவலருக்குத் தெரிவித்து, அந்தப் புகார் மீது அவர் சில ஆசிரியர்கள் மேல் நடவடிக்கை கூட எடுத்து இருக்கிறார். அந்த ஆசிரியர்கள் எல்லாம் சேர்ந்து என் மேலேயே ஒரு புகார் பட்டியலை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய நிலை இப்படி இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் இந்த மானியத்தில், தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள், மாணவியர்கள் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே நின்று விடும் நிலையை மாற்ற அரசு நடவடிக்கை

[திரு. ம. கண்ணன்]

எடுத்து இருப்பதாக இந்த மானியக்கோரிக்கையில் தெரிவித்து இருக்கிறது. அதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்தையும் ஆரம்பித்து, 1978-79-ம் ஆண்டில் ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது என்ற நல்ல விவரத்தை இங்கே கல்வி அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்கள் பல முறை தேர்வு எழுதியும் தவறிவிட்டால், புகுமுக வகுப்பில் சேருவதற்கு மனுப் போட முடியாமல் இருந்த நிலைமையை மாற்றி, அவர்கள் தற்போது கல்லூரியில் சேர இயலும் என்று அரசு கொண்டு வந்து இருக்கும் திட்டம் மாணவர்களுக்கு இந்த அரசு நல்லதொரு வாய்ப்பை கல்லூரியில் படிக்க ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறது. பிரித்தும், பிரித்தும், மொத்தமாக எழுதியும் தேர்வு பெறக்கூடிய—ஒரு சில பாடங்களை எழுதி ஒரு தடவையும், வேறு சில பாடங்களை எழுதி ஒரு தடவையும்—தேர்வு பெறக்கூடிய மாணவர்கள் அவற்றை முடித்த உடன் கல்லூரியில் சேர்ந்து படிக்க இந்த நிதிநிலை அறிக்கையில் வழி வகுத்து இருப்பதை மாணவ சமுதாயத்தினர் பாராட்டியிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தமிழகத்தில் புதிதாக பல்கலைக் கழகங்கள், திருச்சி, கோயமுத்தூர் போன்ற இடங்களில் ஆரம்பிக்க இருப்பதை இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதை வரவேற்றுப் பேசக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்படி பல முக்கிய திட்டங் களை இந்த நிதிநிலை அறிக்கை வாயிலாக வெளியிட்டுள்ள நம் முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

[முற்பகல் 10-50]

*திரு. பொ. விஜயராகவன் : துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விழைகிறேன்.

இந்த மானியத்தில் முதன் முதலாக எடுத்துச்சொல்ல விரும்பு வது 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற புதிய திட்டம் கல்வித் துறையின ரால் சிறப்பாக வகுக்கப்பட்டு 1978-79 ஆம் ஆண்டில் நடை முறைக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பாராட்டுக் குரியது என்றாலும் இன்றைக்கு 1978-79ஆம் ஆண்டில் அது ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறபோது இன்னும்



[திரு. பொ. விஜயராகவன்]

எத்தனை பள்ளிகளுக்கு ஹையர் செகண்டரி தகுதி கொடுக்க வேண்டும், எத்தனைப் பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். சுமார் 200 பள்ளிகள்தான் ஹையர் செகண்டரி பள்ளிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது ; மற்ற பள்ளிகள் அறிவிக்கப்படவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 1978-79ஆம் ஆண்டு இந்தக் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டால் அதற்கான ஆயத்தங்கள் இன்றைக்கு அர சிடம் முடங்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுமட்டுமல்லா மல் ஒரு லிஸ்ட் போட்டார்கள். இன்னொரு லிஸ்ட் அரசிடம் முடங்கி இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் சுமார் 3,000 உயர்நிலைப் பள்ளிகள் இருப்பதாக இந்த அறிக்கை யில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 3,000 பள்ளிகள் இருக்கிற இடத்தில் 4 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு ஹையர் செகண்டரி பள்ளி என்று அளித்தால் கூட சுமார் 750 பள்ளிகள் வரும். இந்த 750 பள்ளிகளுக்காவது ஹையர் செகண்டரி தகுதி கொடுத் தால்தான் கிராமப்புற மக்களும் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற மக்களும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று கல்வி மாவட்டங்களும் ஒரு முதன்மை கல்வி அலுவலகமும் இருக்கின்றன. அங்கே இன்றைக்கு 9 பள்ளிகளுக்குத்தான் இந்த ஹையர் செகண்டரி தகுதி அளித்திருக்கிறார்கள். குறைந்த பட்சம் 45 பள்ளிகளுக் காவது இந்த அனுமதி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இனிமே லாவது அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 58 சதவிகிதத்திற்கு மேல் கல்வியறிவு பெற்றவர்கள் அங்கே இருக்கிறார்கள் என்ற அடிப்படையில், கல்வி கற்கின்றவர் களின் விகிதாசாரம் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதிகமான ஹையர் செகண்டரி பள்ளிகளை நடத்த அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கருங்கல் அரசு உயர்நிலைப்பள்ளி, முஞ்சிறை அரசு உயர்நிலைப்பள்ளி, கொல்லங்கோடு அரசு உயர்நிலைப்பள்ளி, இரணி யல் அரசு உயர்நிலைப்பள்ளி, கொட்டாரம் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும்.

அதைப்போல வாவறை கத்தோலிக்க மிஷனரிகளால் நடத்தப் படும் பள்ளி, கொல்லங்கோடு கொல்லமட்டி, மத்திகோடு எல்.எம்.எஸ். பள்ளி, கிறிஸ்துகோவில் எல்.எம்.எஸ். பள்ளி, பள்ளியாடி தனியார் பள்ளி மற்றும் பல தனியார் பள்ளிகளுக் கும் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1978 மார்ச் 3

அடுத்தபடியாக, ஹையர் செண்டரியைப் பொறுத்த வரை யில் ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயிலும் மாண வர்கள் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும், தமிழை பாட மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்றும் அறிவித்திருக்கிறார்கள். இதை மாற்றியமைத்து, ஆங்கிலத்தை பாடமொழியாகக் கொண்டிருந் தாலும், தமிழைப் பாடமொழியாகக் கொண்டிருந்தாலும் இரு சாராரும் கட்டணம் இல்லாமல் படிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றை முக்கியமாக குறிப்பிட விரும்புகிறேன்; இந்த மாமன்றத்திலே பலரும் அதைத் தெரிவித்திருக்கிறார்கள். பள்ளிக் கட்டடங்கள் மிகவும் மோசமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பள்ளிக் கூட கட்டடங்கள் இடிந்துவிழக் கூடிய நிலையில் இருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, தேங்காய்ப்பட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ண விலாஸ் நடுநிலைப்பள்ளி, நல்லூர், ஆதங்கோடு அரசு நடுநிலைப்பள்ளி, புலியூசாலை அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிக் கட்டடங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பல பள்ளிகள் தற்காலிக கொட்டகைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லாப் பள்ளிகளுக்கும் நல்ல கட்டடம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஆசிரியர்கள் பிரச்னை பெரும் பிரச்னையாகிக் கொண்டிருக்கிறது. செகண்டரி கிரேடு ட்ரெயினிங் முடித்துக்கொண்டு பல ஆண்டுகாலமாக வேலை கிடைக்காமல், இன்றைக்கு அவர்கள் உச்ச வயது வரம்பையும் தாண்டிவிட்டார் கள்.

கடந்த ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்தில் கல்வி அமைச்சரவர் கள் வானொலியில் பேசும்போது அரசின் கொள்கையாக ஆசிரியர் களுடைய வயது வரம்பை 35 ஆக உயர்த்துவோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். வயது வரம்பை உயர்த்தும் கொள்கையை அரசு அறிவித்திருப்பதால், அதைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். வயது வரம்பைத் தாண்டிவிட்டதால் பலருக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ் ஆசிரி யர்கள் பெருமளவில் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதனால் சில இடங்களில் போராட்டங்கள் கூட வெடித்துக் கிளம்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.



1978 மார்ச் 3] [திரு. பொ. விஜயராகவன்]

அப்படியிருக்கிற ஒரு சூழ்நிலையில், 35 வயது வரையில் வயது வரம்பை அரசு உயர்த்துகிற இந்த நேரத்தில், அதற்கான அறிவிப்புகள் வர நாட்கள் பிடிக்கும் என்ற காரணத்தால் இந்த வயதுவரம்பை இப்போது தாண்டியிருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்வதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்னொன்று, பள்ளி ஆசிரியர்கள் பள்ளி சாரா கல்வி வகுப்புகளை நாள்தோறும் மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகிறார்கள். இவர்களுக்கு இன்று சுமார் ரூ. 50 மதிப்பூதியம் கொடுக்கப் படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த பள்ளி சாராக் கல்வித் திட்டத்திற்கு, வகுப்புகள் நடத்த இப்போது வேலை யில்லாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிக்கிற வகையில் வேலையில்லாதிருக்கும் ஆசிரியர்களுக்கு உதவி செய்கிற வகையில் அவர்களை அதில் ஈடுபடுத்தி அவர்களுக்கு இன்னும் சிறிது அதிக மாகச் சிறப்பு ஊதியம் அளித்து, அவர்களுக்கு நிரந்தரமான வேலை கிடைக்கும் வரையில் இதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக் கிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கு இன்று வேலையில்லாத நிலை மிக மோசமான ஒரு சூழ்நிலையில் இந்த அரசை இழுத்துச் செல்கிறது. அப்படியிருக்கிற இந்த நேரத்தில் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள்—ஆசிரியர்கள் விகிதாசாத்தை மாற்றியமைத்து வேலை வாய்ப்பினை வழங்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்று என்னிடம் சொன்னார்கள், கரூர் நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி உயர் நிலைப் பள்ளிக்கு அந்த நகராட்சி மன்ற தலைவர் காமராஜ் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று இந்த அரசுக்கு எழுதியனுப்பியும் அது இன்றையதினம் நிறுத்தப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நகராட்சி மன்றமே அப்படி பெயர் சூட்ட வேண்டும் என்று தீர்மானம் போட்டுள்ளது. எனவே, அந்தப் பகுதிமக்கள் விரும்பு கிற காரணத்தால் அந்தப் பள்ளிக்கு தலைவர் காமராஜ் அவர் களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

அடுத்து, கல்லூரி ஆசிரியர்கள் பிரச்னையை எடுத்துப்பார்க்கிற நேரத்தில் அவர்களுக்கு அவர்களது வேலை பாதுகாப்பு பற்றி அஞ்சுகிற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்போது 10+2+3 என்ற கல்விமுறை வந்ததன் காரணமாக கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் வேலை போய்விடுமோ, தாங்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அதுகுறித்து பரிசீலனை செய்து அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படாத விதத்தில் அவர்

[திரு. பொ. விஜயராகவன்] [1978 மார்ச் 3

களின் வேலைக்கு பாதுகாப்பு அளித்து அதற்கு இந்த அரசு உத்தரவாதம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் 10(எ)(1) என்று சொல்லப்படுகிற தற்காலிக கல்லூரி ஆசிரியர்களுக்கு, அவர்கள் ஐந்து, ஆறு, ஏழு ஆண்டுகள் பணியாற்றியும் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் நூற்றுக்கணக்கான பேர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களை, வேலையில் நிரந்தரமாக்குகிற வகையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த ட்யூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர் பதவிகளில் உள்ள பட்ட மேற்படிப்பு பெற்றவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது குறித்து இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்து அதையும் செயலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. உடற்பயிற்சி ஆசிரியர்கள், நூலக அலுவலர்கள் இவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற சம்பளத்தோடு ஆசிரியர்களுக்குள்ள எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று மாநிலம் முழுவதும் கல்ரிகளில் பயின்று வருகிற கல்லூரி மாணவர்கள் பேரில் பல வழக்குகள் தொடரப்பட்டிருக்கிற சூழ் நிலையில் அவர்கள் வருகிற பரீட்சை எழுத ஒரு சுமுகமான சாத்தியப்பாடு இல்லாமல் அவர்கள் அஞ்சிக் கொண்டிருக்கிற ஒரு நிலை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் கிருத்துவக் கல்லூரி, நாகர்கோவில் ஸ்காட் க்ரிஸ்டியன் கல்லூரி, இந்துக் கல்லூரி, ஆரல்வாய்மொழியிலுள்ள அறிஞர் அண்ணா கல்லூரி இவற்றிலுள்ள மாணவர்கள்மீது இன்று வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியிலும், மதுரையில் பல கல்லூரிகளிலும், சென்னை சட்டக்கல்லூரியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் உள்ள மாணவர்கள் மீது இன்று வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இந்த வழக்குகளை, மனிதாபிமான கண்ணோட்டத்தோடு, பரீட்சைகள் நெருங்கி வருகிற காரணத்தால் அதைக் கருத்திற்கொண்டு, மாணவர்கள் சுமுகமாக பரீட்சை எழுத வகைசெய்கிற முறையில் அவர்கள்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்று மைய நூலகங்களைப் பொறுத்தவரையில் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 13 மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் இவற்றிற்கு



1978 மார்ச் 3]

[திரு. பொ விஜயராகவன்]

மட்டும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படாத நிலையிருக்கிறது. எனவே, இதைக் கருத்திற் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் இத் திட்டத்தை விரிவுபடுத்தி மைய நூலகங்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—00)

கடைசியாக ஒரு கருத்தைச்சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று விரும்புகிறேன். இந்த மான்யக் கோரிக்கை அறிக்கையில் 31-வது பக்கத்தில் 'விளையாட்டுகள், உடற்பயிற்சிக் கல்வி முதலியன—' என்ற தலைப்பில் 2-வது பாராவில்—''மாநில விளையாட்டுக்குழுவும் மாவட்ட விளையாட்டுக் குழுக்களும் மாணவர்களிடையே மட்டுமின்றி பொது மக்கள் இடையேயும் விளையாட்டுப் போட்டிகளையும், விளையாட்டுகளையும் நன்கு பரப்பிட பணி செய்து வருகின்றன. மாநில விளையாட்டுக் குழுவிற்கு 1975—76-ல் சுமார் ரூ. 12 இலட்சம் மட்டுமே மானியம் வழங்கப்பட்டது. 1977—78-ல் மானியத் தொகை ரூ. 16 இலட்சமாக உயர்த்தப்பட்டது. கூடுதல் மானியத்தைக் கொண்டு கிராமங்களிலுள்ள மாணவர்களல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளையும் உடற்பயிற்சியையும் தீவிரமாகப் பரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்....'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இத் தருணத்தில் ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்மைப்போன்று இருக்கின்ற பஞ்சாப் போன்ற மாநிலங்களில் விளையாட்டுத்துறைக்கு தனியாக அமைச்சகம் ஒன்றை ஏற்படுத்தி, அதில் இளைஞர்களிடையும், மாணவர்களிடையும் விளையாட்டுத் துறையில் நல்ல முன்னேற்றங்களை ஏற்படுத்தி அதன் மூலம் வேலைவாய்ப்பை அளிக்கின்ற திட்டங்களை உருவாக்குவதற்கும் மாநில அரசு செயல்பட்டு வருகிறது. இங்கே சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் கொண்டால் இதற்கு என்று கொடுக்கப்படும் பணம் எவ்வளவு என்று திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. 176 கோடி ரூபாய் என்று திட்டமிட்டிருக்கின்ற கல்வி மானியத்தில், ஒரு கோடி ரூபாயாவது இந்த விளையாட்டுத் துறையை உருவாக்குகின்ற வகையில் நிதி ஒதுக்கி மாநிலத்திலுள்ள இளைஞர்களையும் மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, விளையாட்டு பயிற்சியாளர்களாக இருக்கின்றவர்கள் வேதனைக்குள்ளானவர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களையும் அரசு அலுவலர்களாகக் கருதி, அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படுகின்ற எல்லாச் சலுகைகளையும் இவர்களுக்கும் அறிவிக்க வேண்டும் எனறு கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி ,முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. மீ. வின்சென்ட்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1978–79-ம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கல்வி மானியக் கோரிக்கையில் நம்பிக்கையூட்டும், மக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு நல்ல புதிய திட்டங்களை காண முடிகிறது என்பதை இந்தச் சபைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இதிலுள்ள புதிய திட்டங்களை எல்லாம் புதுமையான திட்டங்களாக அமைத்திருக்கின்றார்கள் என்பது தான் என்னுடைய கருத்து. ஒன்றும் வகுப்பு முதல் 3-ம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்கள் அவர்களுடைய தேர்வை அடிப்படையாகக் கொண்டு, அவர்களை நிர்ணயிக்கக் கூடாது என்ற புதிய திட்டத்தை வகுத்து, மூன்றும் வகுப்பு வரை தேர்வு என்று ஒன்று வேண்டியதில்லை என்ற புதுமையான திட்டம் ஒன்றினை இந்த மானியக் கோரிக்கையில் அறிவித்திருக்கிறார்கள்.

ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற ஐரோப்பிய நாடுகளில் இதே போல், பிஞ்சு மனங்களைக் கொண்ட, பிஞ்சு உள்ளங்களைக் கொண்ட மாணவர்களை பயப்படுத்தக் கூடாது என்கின்ற நல்ல உணர்வில், ஒன்று முதல் 3-ம் வகுப்பு வரை தேர்வுகள் என்பது அங்கீகரிக்கப்படாமல் திறந்த உள்ளங்களுக்குச் சொந்தக்காரர்களாக ஆக்கப்பட்டு, பயமற்ற நிலையில் வாழ்க்கைப் பாதையில் தடைக்கல் தகர்க்கப்பட்டு கழக அரசும் இந்தப் புதுமையான திட்டத்தைத் தீட்டி தமிழகத்திற்குத்தந்திருக்கிறது. ஆதலால் அஞ்சா நெஞ்சம் படைத்த உள்ளம் கொண்ட கல்லூரி மாணவர்கள் அனைவரும், பிஞ்சு மாணவர்களுக்கு ஒன்றும் வகுப்பு முதல் மூன்றும் வகுப்புவரை தேர்வு இல்லை என்பதைப்போல் எங்களுக்கும் தேர்வு வேண்டாம் என்ற நிலைக்கு வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கி வந்த மெட்ரிக்குலேஷன் படிப்பு இருந்து வந்த பள்ளிகளை இனிமேல் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் மாற்றப்பட்டிருக்கிறது. அதற்காக தனியாக வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு தனியாக ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டு, இருக்கிறார்கள். இதன் மூலம் 1,100 ஆசிரியர்கள் பலன் பெறுகிறார்கள். அரசு ஆசிரியர்களுக்குக் கொடுக்கக் கூடிய அனைத்து வசதிகளும் அவர்களுக்கும் இந்தப் பட்ஜெட் மூலம், இந்த மானியக் கோரிக்கை மூலம் கொடுக்கப்படுகிறது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வதோடு 'டீச்சர்ஸ் வெல்பேர் பன்ட்' மூலம் ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியில், விவசாயக் கல்லூரியில், கால்நடை கல்லூரியில், பொறியியல் கல்லூரியில் படிக்கின்ற ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு ஆண்டு தோறும் 500 ரூபாய்



மானியம் அளிக்கின்ற முறையில், உதவித் தொகை 'டீச்சர்ஸ் வெல்பேர் பன்ட்' மூலம் இயக்குநர் அவர்கள் அளிப்பார்கள் என்ற செய்தியை இந்த அறிக்கை தந்திருக்கிறது.

ஆதலால் நாளைய உலகத்திற்கு வரவு கூறும் வெள்ளிப் புள்ளிகள் மாணவ மணிகளை உருவாக்குகின்ற புனிதப் பணியினைத் தான் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, ஆசிரியர்கள் கோரிக்கைகள் போடுவதும், தேர்வு எழுதுகின்ற நேரத்தில் தங்கள் பணிகளை முடக்கி விடுவதற்காகத் தயாராகி விடக் கூடாது. அதன்மூலம் தங்களுடைய புனிதம் பணிகளுக்கு அவர்கள் களங்கம் கற்பிப்பதாகும் என்ற செய்தியை நான் தெரிவித்துக் கொள்வதோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை அவர்கள் கோரித்தான் வேண்டிக் கொள்ள வேண்டுமென்பதல்ல, அவர்கள் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாட பளு குறைக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் ஆசிரியர்களுக்கு தங்களுடைய வேலைப் பளு குறைகிறது. 1-முதல் 5-ஆம் வகுப்பு வரை புதிய கணிதம் எடுக்கப்படுகிறது. இவைகளின் மூலம் கிடைக்கின்ற நேரத்தை ஆசிரியர்கள் பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர, அதைக் கோரிக்கைகளுக்காகவும், முறையீடுகளுக்காகவும், போராட்டங்களுக்காகவும், தங்களுடைய நேரத்தை ஒதுக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1,400 ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதாக இந்த மானிய கோரிக்கை தகவல் தருகிறது. 1,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு, 1,000 பேருக்கு புதிதாக வேலையளிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், செகண்டரி கிரேடு அன்-எம்ப்ளாய்டு டிரெயின்ட் டீச்சர்ஸ் ஏஜ் எக்ஸெம்ஷனுக்காக 1974 ஆம் ஆண்டிலிருந்து 39 பேர்கள் குமரி மாவட்டத்திலிருந்து அவர்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்டதற்குப் பிறகும், அமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையான பதிலைச் சாதகமாகத் தந்ததற்குப் பிறகும், அதிகாரிகள் முடக்கிப் போட்டிருப்பது நாளுக்கு நாள் வேதனை தருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, இந்த ஏஜ் எக்ஸெம்ஷனை அவர்களுக்கு வழங்குவதோடு, ஆயிரம் செகண்டரி கிரேடு டீச்சர்களுக்கு புதிய வேலை கொடுப்பதால், வேலையிழந்து, வாழ்விழந்தவர்களாகக் கருதப்பட்டிருக்கும் இந்த நல்ல உள்ளங்களுக்கு வேலை வாய்ப்பை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்பதை நான் இந்த அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. 10 பிளஸ் 2 வந்துவிட்ட காரணத்தால், பிளஸ் 2க்கு எம்.ஏ. எம்.எஸ்.ஸி., ஆசிரியர்கள் பாடம் கற்பிக்க

[திரு. மீ. வின்சென்ட்]

இருக்கிறார்கள். 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளுக்கு செகண்டரி கிரேடு டீச்சர்ஸ் பாடம் எடுக்கிறார்கள். பி.ஏ. படித்து விட்டு இருப்பவர் 9 முதல் பத்துவரை பாடம் எடுக்க முடியும். வேலையில்லாமல் காத்திருக்கும் இந்த பி.ஏ. டீச்சர்ஸ்களுக்கு இன்றைக்கு தங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் அவர்கள் வாழ்வில் வீசக்கூடிய ஒளி அணைந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆதலால், அவர்களுக்கு செக்ண்டரி கிரேடு டீச்சர்ஸ்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்திலே வேலை செய்வதற்குத் தயாராக இருக்கின்ற காரணத்தினால், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை இப்படிப்பட்டவர்களை வேலை செய்வதற்கு எடுத்து, அவர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்று நான் கேடடுக் கொள்கிறேன்.

இன்றைய ஒரு புதிய கல்வி முறை 10 பிளஸ் 2. இது பாராட்டுவதற்கு உரிய மனோபாவம் படைத்த அனைத்துக் கட்சியனரும் பாராட்டிவிட்டார்கள். 30 ஆண்டுக் காலமாக கல்வி முறை நாட்டில் மாற்றப்பட வேண்டும். கல்வி முறை சீரமைக்கப்பட வேண்டும், எம்.ஏ. படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருப்பதால், நிலைமை மாற வேண்டும். தொழிலாளர்கள் அடிப்படையில் தொழில் சம்பந்தப்பட்ட நம்பிக்கையில் ஒரு திட்டம் காண வேண்டுமென்ற ஒரு எண்ணம் நம் அனைவருக்கும் உரியது. இது 30 ஆண்டுக் காலமாக இருந்து வருகிற ஒன்று.

இன்று தொழில் நுட்பத் துறையின் துணையோடு 10 பிளஸ் 2 வாக இது உருவெடுத்திருக்கிறது. இந்த 10 பிளஸ் 2 எந்த அடிப்படையில் அமுலாக்கப்படுகிறது என்பதை மத்திய அரசு, அரியானா கல்வி அமைச்சர் அவர்களையும், அரியானா கல்வி செயலாளர் அவர்களையும் இங்கே அனுப்பி 10 பிளஸ் 2 திட்டம் எப்படி இங்கே அமுலாக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து சென்று, அப்படி அமுல்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தை இங்கே பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். ஆதலால் நம் தமிழகத்தின் கல்வித் துறை இன்று மற்ற மாநிலங்களுக்கு அறிவுறுத்தும் வகையில் சீராக நடைபெறுகிறது என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

ஒரு முக்கியமான செய்தியை இதுவரையிலும் இல்லாத நிலையில் நம்முடைய கல்வி இயக்குநர் அவர்கள் செய்து வருகிறார்கள் என்பதால் நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1976 ஆம் ஆண்டு வரை கல்வி வளர்ச்சிக்காக இரண்டாயிரம் ரேடியோக்கள்தான் பள்ளிகளில் இருந்து வந்தன. அத்தனை பெற்றோர்களும், ஆசிரியர்களும் தங்களது பணத்திலே ரேடியோக்களை வாங்கி மாணவர்களுடைய அறிவு வளர்ச்சிக்காக



திரு. மீ. வின்சென்ட்

அதைத் துணைப்படுத்தினார்கள். ஆனால் இப்போது ஒன்றரை ஆண்டு காலத்தில் இரண்டாயிரமாக இருந்த ரேடியோக்களின் எண்ணிக்கை 30,000 என்ற அளவுக்கு உருவெடுத்து இன்று 30,000 பள்ளிகளில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த வளர்ச்சிக்காக இயக்குநரைப் பாராட்டுகிறேன். குமரி மாவட்டம் ஒரு எஜுகேஷனல் டிஸ்டரிக்ட் ஆக இருக்கிறது. ஆதலால் அங்கே கல்வி வளர்ச்சிக்காக ஒரு வானொலி நிலையத்தை அமைத்துத் தரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மார்த்தாண்டம் கிறித்தவக் கல்லூரி மாணவர்கள் மேல் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு உண்மை அல்ல என்ற நிலையில் ஆசிரியர்களே கூட்டங்களைப் போட்டு எடுத்துச் சொல்லுகிற காரணத்தால்— அரசு போலீஸ் அதிகாரிகளை நம்பித்தான் ஆக வேண்டுமென்று சொன்னாலும், அரசுக்குப் போலீஸ் அதிகாரிகள் தவறான தகவலைத் தருவதாக குமரி மாவட்டத்தில் இந்த மாணவர்கள் பிரச்சினையில் பேசப்படுவதால், அதில் ஆக்கபூர்வமான வழிகளை அரசு விசாரணை மூலம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு முக்கியமான பிரச்சினை. நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பென்ஷன் கிடைக்காமல் இருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில், மாண்டவர்கள் போக 150 பேர் 10 ஆண்டு, 20 ஆண்டு காலமாகப் பென்ஷன் கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களுடைய சர்வீஸ் ரிஜிஸ்டர்கள் அரசுத் தாப்பில் காணப்படவில்லை என்ற நிலையைச் சொல்லியிருக்கிறார்கள். சி.இ.ஒ., பென்ஷன் சேங்க்ஷன் பண்ணியும், பண்ண முடியாது என்று அக்கவுன்டென்ட் ஜெனரல் கூறுவதாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் நிதி செக்ஷனும், கல்வி செக்ஷனும் அருள் கூர்ந்து சர்வீஸ் ரிஜிஸ்டர் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று ஜி.ஒ. போட முன்வர வேண்டும். தலை வெளுத்து, களை இழந்து, பல் விழுந்து, குரல் இழந்து நிற்கும் அந்தத் தாத்தாக்களுக்கு பென்ஷன் வழங்குவதற்கு அரசு உறுதுணை புரிய வேண்டுமென்று கேட்டு, நன்றிசொல்லி அமைகிறேன். வணக்கம்.

*திரு. செ. சிவசாமி: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கு கல்விக்காக 176 கோடி ரூபாய் செலவழிக்கப்பட இருக்கிறது. அதுமட்டுமல்ல; தொழில் நுட்பக் கல்வி, பொதுக் கல்விக்கு செலவழிக்கப்படும் 11 கோடியையும் சேர்த்துக் கொண்டால் மொத்தம் 187 கோடி ரூபாய் இந்த மாநிலத்தில் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. இந்த ஆண்டு புதிய கல்வித் திட்டத்தை 10 பிளஸ் 2 பிளஸ் 3 கல்வித் திட்டத்திற்காக நான்கு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட இருக்கிறது. இந்த மாநிலத்தில் புதிதாக 400 உயர் நிலைப் பள்ளி கட்டடங்களைக் கட்டுவது, ஆசிரியர்கள், இடை நிலை ஆசிரியர்

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>: உறுப்பினரவர்கள் விளக்கமாக அதைப்பற்றி எழுதிக் கொடுக்க வேண்டும்.

<u>திரு. செ. சிவசாமி</u>: நான் நிச்சயமாக எழுதிக் கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் கல்வித்துறையில் விளையாடப்படுகிறது. இந்த நிலைமைகள் மாற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் இங்கேயிருக்கின்ற அரசு முற்போக்கான அரசு, முற்போக்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற அரசு, ஏறத்தாழ 175 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. இப்படியெல்லாம் செலவழிப்பதிலே இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஒன்றாம் தேதி ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் செக் மூலம் பட்டுவாடா செய்ய வேண்டும். அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. சாதாரண கிராமங்களாக இருந்தாலும் கூடப் பரவாயில்லை, ஆனால் பெரிய டவுன்களில் உபாத்தியாயர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல, இந்த மாநிலத்தில் எங்கு பார்த்தாலும் ஜாதியின் பெயராலே ஹைஸ்கூல்களும், கல்லூரிகளும், இன்னும் பல கல்வி ஸ்தாபனங்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட கல்வி ஸ்தாபனங்களில் உள்ள அத்தனை பெயர்களையும் ஒழிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் மாணவர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் உரிய அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும். இன்றைக்கு நம் மாநிலத்தில் உள்ள நிலைமை என்னவென்றால், தமிழ் கற்கக் கூடிய மாணவர்களாக இருந்தாலும் சரி, அல்லது தமிழ் வகுப்பு எடுக்கக் கூடிய உபாத்தியாயர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு இரண்டாம் தர அந்தஸ்துதான் இருக்கிறது. அதை மாற்றி அவர்களுக்கு முதல் தர அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹையர் கிரேட் ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 85 இலட்சம் பேர்கள் இந்த மாநிலத்தில் இருக்கிறார்கள். இவர்கள் 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரையில் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஹையர் கிரேட் ஆசிரியர்களைப் படிப்படியாக செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்று பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. அரசும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்றுவரையில் அதற்கான அடிப்படை முயற்சி செய்யப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



[திரு. செ. சிவசாமி]

அதுமட்டுமல்ல, அரசு ஆசிரியர்களாகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் அரசு மருத்துவம் செய்து கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துகள் போன்றவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசியர்களின் குழந்தைகளுக்கும் மருத்துவம் மறுக்கப்படுகிறது. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மீண்டும் இதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஆசிரியர்களின் குழந்னதகள் தங்கிப் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் கல்வியின் தரம் மிகவும் கீழான நிலையில் இருக்கிறது. அந்தக் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். ஏனென்றால், பஞ்சாயத்து பள்ளிகளிலே படிக்கப்போகும் குழந்தைகள் யார் என்றால், 100-க்கு 99 பேர்கள் கிராமாந்திரப் பகுதியிலுள்ள குழந்தைகளாகும். அந்தக் குழந்தைகளின் கல்வித் தரம் மிகக் குறைவாக இருக்கிறது. அவர்கள் அங்கே படித்து விட்டு ஹைஸ்கூல்களுக்கோ அல்லது கல்லூரிகளுக்கோ வரும்பொழுது ஒன்றுமே தெரியாமல் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, நகரங்களிலே இருக்கின்ற குழந்தைகளின் அந்தஸ்திற்கு ஏற்ப அந்தக் குழந்தைகளின் அந்தஸ்தையும் உயர்த்த வேண்டும். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளின் கல்வித் தரத்தையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடியில் பெண்கள் கல்லூரி ஒன்று கொண்டுவர வேண்டும். அது கிட்டத்தட்ட 60,000 ஜனங்கள் கொண்ட மிகப் பெரிய நகரம். அந்த நகரத்தில் கல்லூரி கிடையாது. பக்கத்தில் 25 மைல், 30 மைல்களுக்கு மத்தியில் பெண்களுக்கு என்று தனியாகக் கல்லூரி கிடையாது. ஆகவே, மிகப் பெரிய முனிசிபாலிட்டியான அந்த நகரத்தில் கல்லூரி கொண்டு வர அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விளையாட்டிற்காக ஓரளவுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்க வேண்டிய அம்சமாகும். ஆனால் விளையாட்டுகளில் இன்றைக்கு சர்வதேசப் போட்டிகளிலே கலந்து கொள்ளும் அளவில் ஆரம்ப அஸ்திவாரம் போடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உலகத்திலே ஜெர்மனியும் சோவியத் ரஷ்யாவும் இந்த வகையில் முன்னணியில் நிற்கிறது. நாம் ஏன் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதைச் சிந்தனை செய்து பார்த்து, நாம் அந்த வகையில் முன் அடி எடுத்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, டெஸ்டிடியூஷன் சர்டிபிகேட் என்று ஏழைகளுக்குக் கொடுக்கப்படும் அந்த சர்ட்டிபிகேட்டிற்கான வருமான அளவு கிட்டத்தட்ட 300 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

[திரு. செ. சிவசாமி]

இந்த சர்ட்டிபிகேட்டை தாசில்தாரிடம் கேட்கும் நேரத்தில் நான் பொய் சர்ட்டிபிகேட் கொடுக்க முடியாது என்று சொல்கிறார். காரணம் என்னவென்று கேட்டால், ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வருமானம் என்று வைத்துக் கொண்டாலும் 365 நாட்களுக்கும் 365 ரூபாய் வருமானம் வரும், அப்படியிருக்கும்பொழுது 300 ரூபாய்க்குக் கீழே வருமானம் என்று எப்படி சர்ட்டிபிகேட் கொடுக்க முடியும், எப்பொழுதோ பிரிட்டிஷ்காரன் காலத்தில் இந்த முறை இருந்தது, இந்த முறையை மாற்ற வேண்டும், சட்ட சபையில் சொல்லி, அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று ஏற்பாடு செய்யாமல், எங்களிடத்தில் சர்ட்டிபிகேட் கேட்பதால் நாங்கள் பொய் சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த டெஸ்ட்டிடியூஷன் சர்டிபிகேட் கொடுப்பதற்கான வருமான வரம்பை அதிகமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இளையாங்குடி கல்லூரியில் வேலை நிறுத்தம் தொடர்ச்சியாக 5 நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகள், பெரிய பிரதானமான கோரிக்கைகள் அல்ல. மூன்றே மூன்றுதான் அவர்களுடைய கோரிக்கைகள்.

ஒன்று, பரமக்குடிக்குப் பஸ் விட வேண்டுமென்பது. பரமக்குடியிலிருந்து இளையாங்குடிக்குக் கிட்டத்தட்ட 120 பையன்கள் வந்து படிக்கிறார்கள். அவர்கள் வருவதற்கும் திரும்பிப் போவதற்கும் பஸ்கள் விட வேண்டுமென்று கேட்கிறார்கள். அரசாங்கம் அதை ஒத்துக் கொள்கிறது. நாங்கள் எல்லாம் உட்கார்ந்து பேசி முடிவெடுத்து, பஸ் விட வேண்டுமென்று சொன்னோம். இப்பொழுது பஸ்ஸை ஒழுங்காக விடாததாலே மீண்டும் தொந்தரவு வருகிறது. அடுத்தது, பஸ் பாஸ்ஸும் கேட்கிறார்கள். மூன்றாவது, அந்த ரோடு ரிப்பேர் ஆகியிருக்கிறது. அதைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த மூன்றையும் ஏற்றுக் கொண்டால், நிச்சயமாக அந்தக் கல்லூரி மூடிக் கிடக்க வேண்டிய அவசியம் இல்லை.

கடைசியாக, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, திருப்பத்தூரில் ஒரு ஹைஸ்கூல் கட்டுவதாக ஏற்கனவே, குறிப்பாகச் சொல்லப் பட்டது. அதை நம்முடைய மதிப்பிற்குரிய கூத்தகுடி நண்பர் தெரிவித்துவிட்டுச் சென்றார். அவர் நேரடியாகச் சொல்ல வேண்டுமென்று என்னிடம் சொல்லி விட்டுச் சென்றார். அந்த ஹைஸ்கூல் ஓட்டைக் குடிசை மாதிரி இருக்கிறது. ஆகவே, அதைப் பிரித்துச் சீரான கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



திரு. சி. ராமநாதன் : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையின்பேரில் ஒரு சில கருத்துக்கள் கூற முற்படுகிறேன்.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்ற வள்ளுவன் வாக்குக்கொப்ப, வாழுகின்ற உயிர்களுக்குக் கல்வி முக்கியம் என்று வலியுறுத்தி, அதை வரவேற்று, நம்முடைய அரசு கல்வியைக் கிராமப்புறங்களிலே, தமிழகத்திலே, நல்ல முறையிலே பரப்புவதற்காகக் கிட்டத்தட்ட ரூ. 176 கோடி ஒதுக்கி கல்வியைப் பரப்ப முயற்சி எடுத்துக் கொண்டதற்கு, உண்மையிலே கல்வி அமைச்சருக்கு என்னுடைய மிகுந்த பாராட்டு தலைத் தெரிவித்துக் கொண்டு, நிதிநிலை அறிக்கையிலே பணத்தை அதிகமாக ஒதுக்கி இருக்கிறீர்களே ஒழிய, வேறென்ன என்று சொன்ன மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இந்த மானியக் கோரிக்கையைப் பார்த்த பிறகாகிலும் கொஞ்சம் நிம்மதி இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

1978–79 ஆம் ஆண்டிலே, 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும் (உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 200 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகளும் ; உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 முதல் நிலைத் தமிழாசிரியர் பதவிகளும் கொடுப்பதாக, அதாவது, 1,400 ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிப்பதாக அறிவித்துள்ளதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து, முதல் வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 சதவீதத்தினரே 5-ஆம் வகுப்புவரைத் தொடர்ந்து படிக்கின்றனர் என்றும் மீதி 42 சதவீதத்தினரும் இடையிலேயே பள்ளியைவிட்டு நின்று விடுகின்றனர் என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்று. ஏனென்றால், ஒரு குறையைக் கண்டு பிடித்து விட்ட பிறகு, அதை நிவர்த்தி செய்ய முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்பதிலே எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட இடம் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

[முற்பகல் 11·30]

அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் நகர்ப்புறங்களில் படிக்கும் மாணவர்கள் நூற்றுக்கு நூறு இருக்க ளாம். ஆனால் கிராமப்புறங்களிலே மாணவர்களின் எண்ணிக்கைத் நான் குறையும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏன்

[திரு சி. ராமநாதன்]

என்ருல், கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்கள், படிக்க வசதி யற்ற நிலையிலே அவர்கள் பெற்ருேர்கள் குடும்ப நிதிநிலை காரண மாக அவர்களைத் தங்கள் தொழில்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிருர்கள் என்பதை இந்த நேரத்தில் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்று வதற்கு இந்த அரசு பெரும்பாலும் முயற்சிக்க வேண்டும் என்றும், சீரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து எஸ்.எஸ்.எல்.சி., ஈ.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி., மெட்ரிகுலேஷன் ஆகிய தேர்வுகளில் இதுவரை எழுதியவர்களுக்கு, தங்களுடைய பாடப் பிரிவுகளிலே ஒன்றிரண்டை விட்டுவிட்டால், அவர்கள் திரும்ப மேற்படிப்புக்கு சேருவதற்கு பூரா பிரிவுகளையும் எழுத வேண்டும் என்று இருந்தது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி இப்போது இடையிலே ஒன்றிரண்டு விட்டுவிட்டாலும் தனித்தனியாக எழுதித் தேர்வுபெற்று, மேல் வகுப்பில் சேரலாம் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்ருகும். இது கிராமத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு, விவேகம் அற்ற மக்களுக்கு, பாமர மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் அளிப்பது போன்ற நிலைமை உருவாகும் என்பதை உண்மையிலேயே பாராட்டி, அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்த தமிழக அரசுக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 50 கிராமங் களில் உள்ள தொடக்கப் பள்ளிகளின் மூலம், கல்வி மூலம் கிராமப் புற வளர்ச்சிக்கான ஒருங்கிணைத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி, மாநில கல்வி ஆராய்ச்சி வளர்ச்சிக் குழு செயல்படுத்தி வருகிறது. இதில் பெற்ருேர்களும், பள்ளியைவிட்டு நின்று விட்ட சிறுவர் களும் சுயமாக வேலை செய்து ஓரளவு சம்பாதிக்க வகை செய்யும் திறமைகளை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு வாய்ப் பளிக்கப்படுகிறது என்று சொல்லிக் கொள்வது, மிகவும் வர வேற்கத் தக்க ஒன்று. அபடிப்பட்ட நிலைமைகள் மற்ற கிராமப் புறங்களிலேயும் ஏற்படுத்தி அங்குள்ள கிராம மக்களுக்கு வாழ் வளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து தமிழ்நாட்டில் விளையாட்டுகளையும், உடற் பயிற்சியையும் பேணி வளர்க்கும் நோக்கத்துடன் அவர்களுக்கு ஆதரவும் பாராட்டும் அளித்திட அரசு முன்வந்ததன் மூலம், தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு, வயது முதிர்ந்த பிறகு, அவர்களுடைய மாத வருமானத்தைக் கணக்கிட்டு மாதம் 150 ரூபாய்க்குக் குறைவாக உள்ளவர்களுக்கு, அவர்களுக்கு உதவியாக மாதம் ரூபாய் 75 கொடுப்பது உண்மையிலேயே அவர்களுக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தும் என்று இந்த நேரத் திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



[திரு. சி. ராமநாதன்]

மேலும், திருச்சியிலும், கோவையிலும் தனித்தனியாக பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தவிருப்பதுபற்றி அரசு எடுத் துள்ள முயற்சி உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்று.

தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டு, பி.யு.சி., பி.ஏ. பி.எஸ்.ஸி. இவைகளைப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை ரூ. 50—ரூ. 150 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனல் அவை பணமாகக் கொடுக்கப்படாமல், அவர்களுக்குப் புத்தக மாகவும், குறிப்புப் புத்தகங்களாகவும், எழுதுபொருள் என்றும் இப்படி கொடுக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, அவர்களுக்குப் பணமாகக் கொடுக்க முன் வந்தது, உண்மையிலேயே அவர் களுக்கு உதவிகரமான நிலையை ஏற்படுத்தும் என்று நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வறுமையில் வாடும் ஏறத்தாழ 500 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் ரூ. 75 வீதம் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படும். ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் வறுமை நிலையிலே தொடர்ந்தால் மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படும். அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்து விட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிதிநிலையை பொருத்து இறக்கும் வரை வழங்கப்படும் என்று சொல்வது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்ருகும்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஓரிரு கருத்துகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விருத்தாசலம் தொகுதியில் முகாசபரூர், இருப்பு, முதுனை ஆகிய கிராமங்களில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. மாணவ, மாணவியர் மரத்தின் கீழும், திடலிலும் படிக்கிருர்கள். ஆகவே, இந்த இடங்களில் உள்ள பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலத்தில் ஒரு பெண்கள் பாலிடெக்னிக் அமைத்துத் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். கொளஞ்சியப்பர் கல்லூரிக்கு பி.எஸ்.ஸி., வேதியல், தாவர இயல், விலங்கியல், முதுகலைத் தமிழ் (எம்.ஏ), முதுகலை வரலாறு (எம்.ஏ), முதுகலை வணிகவியல் (எம்.காம்) இவைகளை ஏற்படுத்திக் கொடுத்தால் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் படிக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> உட்காருங்கள். மீதியுள்ள விவரங்களை இன்னெரு நாள் சொல்லிக்கொள்ளலாம்.

<u>திரு. செ. இராமலிங்கம் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978—79-ம் ஆண்டின் கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களையும் இந்த அவையில் தெரிவிக்க விரும்புகிறேன். கல்விக்காக ரூ. 176 கோடி ஒதுக்கப்பட்டு இருந்தாலும், தரமான

[திரு. செ. இராமலிங்கம்]

கல்விக்காக சில முறையான திட்டங்களை நான் தேடித் தேடிப் பார்த்தேன், காணவில்லை. என்னுடைய கட்சி உறுப்பினர் நேற்றையதினம் பேசிய அண்ணன் இளங்கோவன் அவர்கள் பேசுகிற நேரத்தில், பாண்டிச்சேரியில் இருக்கும் அ.இ.அ.தி.மு.க. அரசு 4-வது வகுப்புக்கு வைத்துள்ள பாடப்புத்தகத்தில் இருக்கும் பாடல் ஒன்றைப் பாடிக்காண்பித்து, அந்த மாநிலத்தில் அவர்களின் கல்வித் திட்டம் எவ்வாறு இருக்கிறது என்பதை விளக்கினார்கள். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் லாவணி போல் பதில் பாட்டு பாடினார்கள். ஆனால் நான் என்ன கூறுகிறேன் என்றால், பாட திட்டத்தை மட்டுமல்ல, இந்த மாமன்றத்தின் தரத்தை தாழ்த்த அவர்கள் அப்படிச் செய்கிறார்களோ. என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது.

இன்றையதினம் ரூ. 176 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சீரான, நல்ல தரமான கல்வித் திட்டம் இந்த ஆண்டில் அமல் நடத்தப்படுவதற்கான திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. நான் இங்கே குறிப்பாகக் கூற விரும்புவது எல்லாம் ஆரம்பக் கல்வி எந்த அளவிற்குச் செம்மையாக இருக்கிறதோ அந்த அளவிற்குத் தான் ஒவ்வொரு மாணவனின் உயர்நிலைக்கல்வி அமைய முடியும். இன்னும் சொல்லப்போனால், ஆரம்பக் கல்வி பாடப்புத்தகங்களில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களின் பகுத்தறிவுக் கட்டுரைகளையும் பாடநூலில்இடம்பெறச் செய்யவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. எனவே வருகின்ற ஆண்டில் அந்த பாடநூல் நிறுவனம், அந்த டெக்ஸ்ட் புக் சொசைடி, பேரறிஞர் அண்ணாவின் கட்டுரைகளையும், பெரியாரின் கட்டுரைகளையும் அந்தப் பாட நூல்களில் இடம்பெறச் செய்யும் என்று நான் கருதுகிறேன்.

பாடநூல்களை விற்பனை செய்கிறபோது, தனிப்பட்டவர்களை ஏஜென்டுகளாக நியமித்து அவர்கள் மூலம் விற்பனை செய்வதால் குறித்த காலத்தில் மாணவர்களுக்குப் பாடப்புத்தகம் கிடைப்பது இல்லை. எனவே அவற்றை யெல்லாம் அந்தந்தப் பள்ளி மூலமாக மாணவர்களுக்கு விற்கும் முறையைக் கொண்டு வரவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. வருகின்ற ஆண்டில் அந்தப் பள்ளிப் பாடப் புத்தகங்களை ஒவ்வொரு பள்ளியிலும் விற்க ஆரம்பித்தால் அது மாணவர்களுக்குச் சரியான நேரத்தில் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எலிமென்டரி எஜுகேஷனைப் பொறுத்தவரையில், ஜப்பான் போன்ற முன்னேறியுள்ள நாடுகளில், பி.எச்.டி., முதுகலை பட்டம் பெற்றவர்கள், எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதாக நான் அறிகிறேன்.



[திரு. செ. இராமலிங்கம்]

அதேபோன்று நம் நாட்டிலும் ஆரம்பக் கல்விக் கூடங்களில் முதுகலை பட்டம் பெற்றவர்களை நியமித்தால், துவக்கக் கல்வி சிறந்த முறையில் அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

மேலும் நம் தமிழ்நாட்டில் சில தனிப்பட்ட நர்சரி பள்ளிகள் மிகவும் நடைபெறுகின்றன. அந்த பள்ளிகளைக்கூட அரசு அங்கீகரிக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

மேலும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு ஏராளமான சிரமங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில்—சில ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளுக்கு மட்டும் பாலர்வாடி அனுமதித்து, பாலர் வாடி ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கு சரியான ஊதியம் கிடைப்பதில்லை. அவர்களுக்கெல்லாம் குறைந்பட்சம் இளநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியமாவது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பள்ளிகளில் பணிபுரியும் ஆயாக்களுக்கு ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து நிதிக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது. அதைமாற்றி, ஆயாக்களுக்கும் அரசே குறைந்தபட்சம் 150 ரூபாயாவது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பள்ளிகளில் பணியாற்றும் வாட்ச்மேன், தோட்டக் காரர்களுக்கு விடுப்புச் சலுகை போன்றவைகள் கிடையாது. அவர்களுக்கும் விடுப்புச் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தஞ்சை மாவட்டத்தில் அரிசன நல இலாகாவினரால் நிர்வாகம் செய்யப்படுகிற பள்ளிகளில்—அங்குள்ள பள்ளிகளுக்கு மட்டும் மாணவர்களின் விகிதம் 40 என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் மற்ற பள்ளிகளில் ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள் என்று இருப்பதை அரிசன நல பள்ளிகளுக்கு மட்டும் ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்று இருக்கிறது. இதை மாற்றி மற்றப் பள்ளிகளைப்போல ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அரிசன நல இலாக்கா ஆரிசியர்களுக்கு டிராப்ட் மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது. மாவட்ட கல்வி அதிகாரியிடமிருந்து டிராப்ட் வந்து அவர்கள் சம்பளம் வாங்குவதற்கு 4, 5 நாட்கள் அதாவது முதல் தேதியில் சம்பளம் வாங்க முடியாமல், 4 அல்லது 5-ந் தேதிதான் சம்பளம் வாங்க முடிகிறது. ஆகவே, தாசில்தார் மூலம் டிராப்டை மாற்றி முதல் தேதியே சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்]

மேலும் அரிசன இலாகா நிர்வகிக்கும் பள்ளிகளில் சுமார் ஆறு மாதத்திற்கு மேலாக 27 முதுநிலை ஆசிரியர் பதவிகள் காலியாக இருக்கின்றன. அதைப்போல 90 இளநிலை ஆசிரியர் பதவிகளும் காலியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த காலியிடங்களை எல்லாம் நிரப்பினால் ஆசிரியர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் கணிசமாகக் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றால் இரண்டு ஏக்கர் நிலமும், 400 மாணவர்களும் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைக் குறைத்து ஒரு ஏக்கர் நிலம் இருந்தால் கூட உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்ற விதிமுறையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 'கேர்' நிறுவனம் வழங்குகின்ற உணவுப் பொருட்களை ஒரு குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் வழங்கி வருகிறார்கள். அப்படியில்லாமல் அங்கே உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் பகிர்ந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஹையர் செகண்டரி திட்டத்தில் 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற திட்டத்தை அரசு அமுல்படுத்த இருக்கிறது. இன்னும் 2 அல்லது 3 மாதங்களுக்குள் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வர இருந்தாலும் இதுவரை இறுதியான ஒரு முடிவை இந்த அரசு அறிவிக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. இந்த ஹையர் செண்டரி பள்ளிகளில் யாரை தலைமை ஆசிரியர்களாக நியமிப்பது? 'ஏ-விங்' ஆசிரியர்களையா அல்லது 'பி விங்' ஆசிரியர்களையா? 'ஏ', 'பி', 'சி' விங்குகளை எப்போது ஒன்றாக இணைப்பது? என்பவைபற்றி இதுவரை ஒரு முடிவும் எடுக்கவில்லை. இதற்கு மூன்றுபேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழு எப்போது அமைக்கப்பட்டது, அதன் தலைவர் யார், அதன் அறிக்கை எப்போது வரும் என்பது யாருக்கும் தெரியாத ஒரு புதிராக இருக்கிறது. விரைவிலேயே அந்தக் குழுவின் அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹையர் செகண்டரி பள்ளியை ஜூனியர் காலேஜ் ஆக்கப் போகிறார்களா? அல்லது உயர்நிலைப் பள்ளியாக வைக்கப் போகிறார்களா? அங்கே தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்களை தலைமை ஆசிரியர் என்று சொல்லப் போகிறார்களா அல்லது பிரின்சிபால் என்று சொல்லப் போகிறார்களா என்ற திட்டவட்டமான அறிவிப்பு இல்லை என்பது வருந்தத்தக்கது. மேலும் 'ஏ விங்', 'பி விங்' ஆசிரியர்களை ஒன்றாக இணைப்பதில் மூவர் குழு எந்த



[திரு. செ. இராமலிங்கம்]

அடிப்படையைக் கையாளும் என்பதும் இங்கே குறிப்பிடப்படவில்லை. அதை எல்லாம் தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருக்கிற நூலகங்களை விரிவு படுத்த வேண்டும். சென்னையில் இருக்கிற கன்னிமரா லைப்ரரியில் டிப்டி லைபரரியன் போஸ்ட் வேக்கன்டாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதோடு மேலும் பல பதவிகள் வேக்கன்டாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். காலியாக இருக்கின்ற பதவி இடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நூலகங்களிலே பணிபுரியும் ஊழியர்களுக்குச் சரியான ஒரு ஊதியம் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்து சம்பளம் சரியாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், திருவிடைமருதூரில் நாச்சியார்கோவில் பகுதியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும், ஆடுதுறையில் ஒரு உயர்நிலைப் பள்ளியையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவிடைமருதூரில் விவசாயத்தை நம்பியிருக்கும் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் ஆடுதுறை விவசாய ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அதை ஒரு விவசாயக் கல்லூரியாக மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்குத் தேவையான பெஞ்சுகளும் கட்டிடங்களும் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அதிகமான அங்கத்தினர்கள் பேச வேண்டியிருப்பதால் ஒவ்வொருவரும் 10 நிமிடம் எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய தொகுதி பிரச்சினையை மட்டும் பேசுங்கள்.

<u>*திருமதி சுப்புலட்சுமி :</u> மதிப்பிற்குரிய மாமன்றத் துணைத் தலைவரவர்களே, கல்வியமைச்சரவர்களால் வழங்கப்பட்ட 1977–78-ம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின் மீது எனது சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

கல்வியைப் பொறுத்த மட்டில் அதன் அதிகாரத்தை முன்போலவே அதாவது மத்தியப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று கோத்தாரிக் கல்வி ஆணைக்குழுவின்

[திருமதி சுப்புலட்சுமி]

பரிந்துரையை ஏற்று மைய அரசிடமிருந்து தக்க ஆணைகளை எதிர்ப்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையிலேயே வரவேற்கத் தக்க ஒரு அம்சமாகும்.

தொடக்க கல்வியைச் சீர்படுத்தும் எண்ணத்துடனும் அதே சமயத்தில் கல்வியின் தரம் குறைந்துவிடாமலும் 1977–78 முதல் இம்மாநிலம் முழுவதும் 1 முதல் 3 வரையான வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கு அனுப்பும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

மாணவர்களின் கவனம் பள்ளியின்பால் ஈர்க்கப்படுவதற்கு அங்கே அடித்தளத்தில் வாழ்கின்ற அந்த மக்களின் குழந்தைகளுக்கென சீருடைத் திட்டம், இலவசமாகப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், நண்பகல் உணவுத் திட்டம் ஆகியவை சிறந்த அம்சங்களாகும். ஆனாலும் இந்த இலவச புத்தகங்களை வழங்குவதில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கவும், நண்பகல் உணவுத் திட்டத்தில் ஆங்காங்கே ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்கவும் அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளுக்கும் தனியார் பள்ளிகளுக்கும் ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்கும் அந்த ஆய்வுக்கூடங்களுக்குரிய கருவிகள் வாங்குவதற்கும் அரசு மானியத் தொகை அளிக்கிறது. ஆண்டு தோறும் கிராமப் பகுதிகளிலுள்ள பள்ளிகளை அதிக அளவில் தேர்ந்தெடுத்து கூடிய விரைவில் எல்லாப் பள்ளிகளும் ஆய்வுக் கூட வசதியினைப் பெறுமாறு செய்தல் மாணவர்களது கல்வித் தரத்தை உயர்த்தவும் மேற்படிப்பிற்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

கிராமப் பகுதிகளில் இன்னும் எத்தனையோ பள்ளிகளில் சரியான நூல் நிலையங்கள் இருப்பதில்லை. ஆசிரியர்களுக்குக் கூட போதுமான ரெபரன்ஸ் புத்தகங்கள் இல்லாததால் பாடப் புத்தகங்களில் இருப்பதை அப்படியே மாணவர்களுக்குப் போதிப்பதை இன்னும் சில கிராமப் புறப் பள்ளிகளில் காணலாம். இத்தகைய நிலையினை நீக்க அரசே பொருத்தமான நூலகப் புத்தகங்களை வாங்கி பள்ளிகளுக்கு வழங்குவது வரவேற்கத்தக்கவொரு அம்சம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொடக்கப்பள்ளிகளுக்கும் உயர் நிலைப்பள்ளிகளுக்கும் ஆக எல்லாப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டி வாங்குவதிலே இப்போது கடைப்பிடிக்கக்கூடிய முறை பாராட்டத்தக்க ஒன்றாகும். வானொலிப் பெட்டி வாங்கி எல்லாப் பள்ளிகளுக்கும் இது கிடைக்குமாறு அமல் படுத்தப் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[திருமதி சுப்புலட்சுமி]

கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களிலும் உயர் தொடக்கப் பள்ளியிலிருந்து உயர் நிலைப் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களிலும் முதல் மதிப்பெண் பெற்றவர்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து உதவித் தொகை அளித்து வந்துள்ளது.

(முற்பகல் 11-50)

ஆனால் 1978–79-ம் ஆண்டிலிருந்து இந்த எண்ணிக்கை நான்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு யூனியனில் இருந்தும் நன்றாக படிக்கக்கூடிய நான்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 என்றும், அரசு குறிப்பிடுகிற பள்ளி விடுதியில் தங்காமல் வெளியில் இருந்துக்கொண்டு பள்ளி சென்று வருகிற மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 என்றும், மாணவர்கள் தாங்களே விரும்புகிற பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கு ரூ. 150 ஆண்டு ஒன்றுக்கு வழங்குவது என்ற நிலையிருக்கிறது. இதில் தாங்கள் விரும்பும் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை ரூ. 500 என்று உயர்த்தப்படவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மைய அரசு கல்விக் குழு பரிந்துரையின்மீது 1—5 வகுப்புகள் முடிய உள்ள புதிய முறைக் கல்வித் திட்டத்தை நீக்கியும் உயர் நிலைப் பள்ளிகளில் புதிய அறிவியல், கணிதம் இவைகளில் கல்வியின் தரம் குறையாமல் சில பகுதிகளை நீக்கியிருப்பது தமிழக மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. ஷெட்யூல்ட் வகுப்பினர், மலை ஜாதியினர், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களில் ரூ.2,500-க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களின் குழந்தைகள் இவர்களுக்கு 1978 மார்ச் எஸ். எஸ். எல். சி. தேர்வுக் கட்டணம் ரூ. 18 செலுத்த வேண்டியதில்லை என்ற அரசு ஆணை கிராம மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

1978 மார்ச் ஏப்ரல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் எல்லாப் பாடங்களையும் எழுதி எவற்றிலாவது தோல்வியுற்றால் அந்தப் பாடத்தை, தோல்வியுற்ற பாடத்தை மட்டும் எழுதி பாஸ் செய்து உயர் செகண்டரி வகுப்பில் சேர முடியும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் 78-க்கு முன்பு தேர்வு எழுதி ஒன்றிரண்டு பாடங்களில் தோல்வியுற்ற மாணவர்களுக்கும் இந்த விதி பொருந்துமா என்பது குறிப்பிடப்படவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 78-க்கு முன் எழுதிய மாணவர்களுக்கும் இந்த விதி பொருந்தும் என்று அறிவிப்பார்களானால் அதனால் பல மாணவர்கள் பயன் பெறமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

[1978 மார்ச் 3

[திருமதி சுப்புலட்சுமி]

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் இவற்றில் உடற்பயிற்சி கட்டாய பாடமாக்கப்பட்டிருப்பதைப் போல் ஓவியத்தைக் கட்டாய பாடமாக்க ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஓவியம் தீட்டுதல், கவிதை புனைதல், சொல்லாற்றலை வளர்த்தல், நடிப்புத்திறனை வளர்த்தல் இவைகளுக்கு நாம் அதிக சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஒரு மாணவர் தனது கருத்துக்களை ஓவியமாகவோ, கவிதையாகவோ வெளிப்படுத்தும்போதுதான் புதிய புதிய கருத்துக்கள் அவன் உள்ளத்தில் பிறக்கின்றன. இப்படி இயல்பாகவே இருக்கும் திறமையை நாம்வெளிக்கொணர்வதன் மூலம் மாணவர்களது கல்வித் தரம் தாமாகவே முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து, முதியோர் கல்வித் திட்டம். மிக மிக இன்றிமையாததும், அரசு அதிக அக்கறையுடன் செயல்பட வேண்டிய திட்டமாகும். இந்த முதியோர் கல்வித் திட்டம். பேரறிஞர் அண்ணா அவர்கள் அதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். நாட்டு மேம்பாட்டிற்காகப் போடப்படுகின்ற திட்டங்கள் நல்ல முறையில் வெற்றி பெறவும் கிராமங்கள் வளர்ச்சி பெறவும் அனைவரும் எழுதப் படிக்கத்தெரிந்திருப்பது மிக அவசியம். ஆகவே இத் திட்டத்திற்காக அரசு எவ்வளவு வேண்டுமானாலும் செலவிடலாம். ஒரு மாபெரும் கட்டடத்தை நிர்மாணிப்பதில் அஸ்திவாரம் அமைப்பதுபோன்றது இத்திட்டம். இதற்குச் செலவிடும் முதலீடு ஒரு போதும் வீணாவதில்லை. இத் திட்டம் நல்லமுறையில் செயல்பட சமூக சேவா ஸ்தாபனங்களைப் பயன்படுத்துவதுடன் அரசியல் கட்சி வேறுபாடு இன்றி தமிழக வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இதற்காக ஒத்துழைப்பு நல்குவோமானால் குறைந்தது ஐந்தாண்டுகளுக்குள்ளாக தமிழகத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இல்லை என்ற ஒரு நிலையைக் கிராமங்கள் எய்துவிடும்.

கிராமங்கள் பொருளாதாரத் துறையிலும் மற்ற துறைகளிலும் என்னதான் முன்னேற்றம் அடைந்தாலும் கல்வி அறிவில் முன்னேற்றப் பெறாத வரையில் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை ஜாதி சமயப்பூசல்களை அறவே நீக்குவது என்பது இயலாத காரியம். முதியோர் கல்வித் திட்டத்தின்பால் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு மாலை வேளைகளில் இலவசச் சிற்றுண்டியோ அல்லது கல்வி சம்பந்தமான இலவசத் திரைப்படங்களோ காண்பிக்கப்படலாம். மேல் உயர்நிலை பள்ளிகளில் தமிழே போதனா மொழியாக இருக்கும் என்றும் தமிழைப் போதனாமொழியாகக் கொண்டு பயில்கிற மாணவர்களுக்கு கற்பிப்புக் கட்டணம் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது தொடர்ந்து தமிழே பயிற்று மொழியாக அமையும் என்பதற்கு ஒரு சூசகமான அறிவிப்பாகும். (மணியடிக்கப்பட்டது)



1978 மார்ச் 3]

[திருமதி சுப்புலட்சுமி]

அடுத்து, கஜேந்திரகட்கர் குழு பரிந்துரைப்படி திருச்சியிலும் கோவையிலும் அமையவிருக்கும் பல்கலைக்கழகங்களை விரைவில் அமைத்துத் தர அரசு ஆவன செய்ய வேண்டும். மாணவர்களிடையே கட்டுப்பாட்டையும் காலந் தாழ்த்தாமையையும் கீழ்ப்படிதலையும் ஆரம்பத்திலிருந்தே வளர்த்து வருவதற்கு தேசீய மாணவர் படைப் பயிற்சி ஒரு சிறந்த சாதனமாகும். கிராமத்தில் இருக்கும் சிறிய பள்ளிகள் முதற் கொண்டு அனைத்துக் கல்லூரிகளிலும் இத் திட்டம் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

அதைப் போல் 10 ஏ (1) பிரிவின்கீழ் அரசு கலைக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தேவையான படிப்பும் அனுபவமும் பெற்று மற்ற அரசுப் பணிகளுக்குச் செல்லும்போது வயது வரம்பினைக் கடந்துவிட்ட நிலையில் அவர்களது பணி நிரந்தரமாக்கப்பட அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். தற்சமயம் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு அரசு வேலை தருவதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

யு.ஜி.ஸி. ஸ்கேலைப் பொறுத்தவரையில் 1-1-1973 முதல் அமுலுக்கு வந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன காரணத்தினாலோ அதை அமல் படுத்த தவறிவிட்டது. புரட்சித் தலைவரின் ஆட்சி அமைந்தவுடன் அமல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால் புயல், வெள்ளப்பெருக்கு காரணமாகத் தற்போது இருக்கின்ற நிதிநிலையைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் மாற்றுவழிகளை அரசின் முன் வைத்திருக்கிறார்கள். அதைக் கவனத்தில் கொண்டு ஆசிரியர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு உரிய முறையில் உதவிகளை அளிக்கும் என்று நம்புகிறேன்.

மேல் உயர்நிலைக் கல்வியைக் கொண்டு வருகின்ற நேரத்தில் பொறுத்த அளவில் பதவி உயர்வில் பாரபட்சம் இல்லாமல் இருப்பதற்காக 'ஏ' விங் 'பி' விங் ஆசிரியர்களை இணைத்து அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் தனியார் துறையின்கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் இதில் பயன்பெறக்கூடிய அளவில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் உள்ள பள்ளிகளை எடுத்துக் கொண்டால், அதில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஸ்தல ஸ்தாபன அதிகாரி, உதவி ஆய்வாளர், கல்வி விரிவு அலுவலர் என்ற மூன்று அதிகாரிகளின் கீழ் பணிபுரிவது இதிலுள்ள ஆசிரியர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி இவர்களில் யாரேனும் ஒருவரின் கட்டுப்பாட்டுக்குள் வருவது நல்லது, அதற்குத் தகுந்த முறையில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 3

[திருமதி சுப்புலட்சுமி]

மாநில விருதுகள் வழங்கும் விஷயத்தில், தவறுகள் நடைபெறுகின்றன. பாரபட்சம் காண்பிக்கப்படுகிறது. பொதுமக்கள் ஒரு ஆசிரியர் ஒழுங்காகப் பள்ளிக்கு வருவதில்லை என்கின்ற ஒரு புகாரை நான் கல்வி அமைச்சர் அவர்களுக்கும், மற்ற கல்வித்துறை அதிகாரிகளுக்கும் அனுப்பியிருந்தும் கூட, சென்ற ஆண்டு விருது வழங்குவதில் அதே ஆசிரியர் விருது பெற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதுபற்றி ஆசிரியர்கள் மத்தியில் கசப்பான எண்ணம் தோன்றியுள்ளது. ஆகவே இப்படி மாநில விருதுகள் கொடுக்கும் நேரத்தில் உண்மையாக பாடுபடுகின்ற ஆசியர்களுக்கு விருதுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என்ற வள்ளுவர் வாக்குப்படி அறிவுக்கண் தருகின்ற ஆசிரியர்கள் சமுதாயத்தில் நல்ல நிலையை அடையச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, என்னுடைய தொகுதியில் ஹையர் செக்கன்டரி பள்ளி ஒன்று கூட ஆரம்பிக்கப்படவில்லை. அதை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியைச் சேர்ந்த கொடுமுடி சங்கரன் உயர்நிலைப்பள்ளியில், கட்டிடம் கட்டுவதற்குப் போதுமான மான்யம் வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்புக் கிடைத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறைக்காக இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி போதுமா என்று பார்த்தால் திருடனால் திருட முடியாத தீயினால் சுட முடியாத—வெள்ளத்தால் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தை அடைவதற்காக—இன்றைக்குப் படிக்கின்ற மாணவர்கள் புளிய மரத்தடிகளின் கீழும்,கோவில் தாழ்வாரத்திலும் இருந்து படிக்கின்ற இந்த அவல நிலையைப் போக்குவதற்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி போதாது என்றே சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு மூன்று அல்லது நான்கு பள்ளிகளை ரிப்பேர் செய்யக் கூடிய அளவில்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களை எடுத்துக் கொண்டால் அவைகளில் இவைகளுக்கு என்று இருக்கும் 50 லட்சம், 60 லட்சம் இவற்றை யெல்லாம் எடுத்து, அந்தந்த



1978 மார்ச் 3]

[திரு. துரை முத்துசாமி]

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டிக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறதா என்று சொன்னால் அதுவும் இல்லை. இதற்காக ஊராட்சி ஒன்றியத்திலிருந்து முறையீடுகள் வந்தாலும் அரசாங்கம் அனுமதிப்பதில்லை. இதை அனுமதித்தால் மாணவர்கள் நல்ல முறையில் படிப்பதற்குத் தகுந்த அளவில் பள்ளிக் கட்டிடங்களை கட்டிக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.]

மதிய உணவை எடுத்துக் கொண்டால், அதில் கல்லும், புழுக்களும் அதிகமாக இருக்கின்றன. இதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ரிப்போர்ட் கொடுத்தும் கூட நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதன் காரணமாக சின்னஞ்சிறு பிள்ளைகள் இந்த உணவை உண்பதால் அவர்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. அதே போன்று கல்லும், புழுக்களும் மதிய உணவில் இல்லாமல் இருக்கத்தகுந்த அளவுக்கு இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டும்.

பாடபுத்தகங்களை எடுத்துக் கொண்டால், மறைந்த பெருந்தலைவர், காமராஜ், பெரியார், அண்ணா இவர்களைப்பற்றி யெல்லாம் நல்லமுறையில் அந்த பிஞ்சு உள்ளங்கள் புரிகின்ற முறையில் பாட புத்தகங்கள் அமைய வேண்டும். ஆனால் இப்போது அந்த பிஞ்சு உள்ளங்களை நஞ்சு உள்ளங்களாக ஆக்குகின்ற முறையில் பெரியார், காமராஜர், அண்ணா இவர்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்கின்ற நிலைமையை மாற்றி இப்படிப்பட்ட இளம் உள்ளங்களுக்கு மட்டுமல்ல, கல்லூரியில் படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் வைத்தால் அது நல்ல வழிகாட்டியாக இருக்கும், அந்த முறையில் அதை வைக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை கட்டாயப்படுத்தப் போவதில்லை எனறு மாநில ஆட்சியும் மத்திய ஆட்சியும் சொன்னார்கள்.

[நண்பகல் 12-00]

ஆனால், இப்போது இருக்கின்ற நிலைமை என்னவென்றால் ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற ஆசிரியர்கள் இதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள் ; நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். அவர்கள் ஒரு கேஸ் செய்ய வேண்டுமென்றால், அதற்கு 200 ரூபாய் செலவாகிறது. இதை அவர்கள் எப்படிச் செய்வது என்று வேதனைக் குரல் எழுப்புகிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் 750 கேஸ்கள் செய்ய வேண்டுமென்று சொன்னால்,

[திரு. துரை முத்துசாமி]

அவர்கள் அங்குள்ள ஆசிரியர்களைத் தான் செய்யச் சொல்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், அப்படிப்பட்டவர்களுக்கு இன்கிரிமென்ட், அரியர்ஸ் இல்லை. அதே போல் டிரான்ஸ்பர் இல்லை; பி. எப். இல்லை. மேலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலைமைதான் இருக்கின்றது. அப்படிப்பட்ட அவல நிலை இருக்கின்ற காரணத்தினால், இதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஆசிரியர்கள்தான்.

ஆனால், பட்ஜெட்டிலேயும் சரி, இந்த மான்யக் கோரிக்கையிலும் சரி மக்களைப் பார்த்து, ஏழைகளைப் பார்த்து சொல்லக் கூடிய அனுதாப வார்த்தைகளாகத்தான் இருக்கிறது. இந்த அரசுக்கு அவர்கள்மேல் எவ்வளவு அக்கறை இருக்கின்றது என்று சொல்கின்றார்களே தவிர, செயலிலே இருக்கின்றதா என்றால் இல்லை. இந்த பட்ஜெட்டைப் பிரித்துப் பார்த்தால், அதிலே அனுதாபப்படக் கூடிய ஆசை வார்த்தைகள் இருக்கின்றனவே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை. அனுதாப வார்த்தைகள் மட்டும் போதாது. பிச்சை எடுக்கின்றவனைப் பார்த்து, நீயா பிச்சை எடுக்கின்றாய் என்று கேட்பதில் பயனில்லை. பிச்சை எடுக்கின்றவனுக்குத் தேவையான ஒரு கவளம் சோறு போட்டால்தான் அவனுடைய குறையைத் திருப்திப்படுத்துகின்ற நிலைமை ஏற்படும். எனவே, கிராம மக்களைப் பார்த்து, ஏழை மக்களைப் பார்த்து நாங்கள் உங்கள் மீது அனுதாபப்படுகிறோம் என்று ஆசை வார்த்தைகள் சொன்னால் மட்டும் போதாது. அவர்களுடைய குறைகளை நாம் போக்கிவிட முடியாது.

கிராமங்களிலே இப்போது பள்ளிகள் எல்லாம் பெரும்பாலும் இடிந்துவிழக் கூடிய நிலைமையிலே இருக்கின்றன. பல பகுதிகளிலே இந்த நிலைமை இருக்கின்றது. பல அங்கத்தினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே இருக்கக்கூடிய கிராமத்திலேகூட பள்ளிக்கூடம் இடிந்து விழும் நிலையிலே இருக்கின்றது. புதுக்கோட்டை, திருமயம், பில்லமங்கலம் போன்ற பகுதிகளிலேயும் பள்ளிகள் இடிந்து விழக்கூடிய நிலைமையிலே உள்ளது. இதுவரை இந்த அரசாங்கம் எந்தவிதமான உதவியும் செய்யாமல் இருக்கின்றது. அதேபோல், என்னுடைய தொகுதியிலே அரசம்பட்டு, சோமண்டார்குடி, சங்கராபுரம் போன்ற பகுதிகளிலும் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இடிந்து விழக்கூடிய அவல நிலையிலே இருக்கின்றன. அதேபோல், விருத்தாசலத்திலும், ஆலடியில் பள்ளிக்கூடக் கட்டிடம் இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கிறது. அங்கே, அந்த ஊரிலே இருக்கக்கூடிய மக்கள் இதற்காக நிதி திரட்டி 1,500 ரூபாயை பொதுப்பணி துறைக்கு அனுப்பியும், இன்னும் அதற்கான மதிப்பீடு செய்யப்படாமல் அங்கே வேலை நடைபெறவில்லை. 3 ஆண்டுக் காலமாக இந்த நிலைமை இருக்கின்றது.



[திரு. துரை முத்துசாமி]

அதற்கு அடுத்தாற்போல், இந்த ஹையர் செகண்டரி எஜுகேஷன் என்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால், தமிழகத்திலே 3,000 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. 400 பள்ளிகளை மட்டும் இதற்குத் திறந்துவிட்டால், மீதி இடங்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்படித் திறக்கின்ற நேரத்திலே கல்லூரிகளிலே இருக்கின்ற லாப் (lab.), ஆசிரியர்களுடைய நிலைமை எப்படியிருக்கும் என்பதைப்பற்றி திட்டவட்டமாக அறிவிக்கவில்லை.

அதே போல், இந்த ஹையர் செகன்டரி எஜுகேஷன் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது அதே நேரத்தில் அங்கே நல்ல ஆஸ்டல் வசதிகள் இருக்கின்றதா என்பதையும் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், 10, 20 மைல் தூரத்திலிருந்து இந்தப் பள்ளிகளுக்கு மாணவர்கள் வரக்கூடிய சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் குறைந்தது 4 ஹையர் செகண்டரி எஜுகேஷன் பள்ளிகளையாவது அமைக்க வேண்டும். அப்போதுதான் அங்குள்ள பல பள்ளிகள் பயன்பெற வாய்ப்பு ஏற்படும்.

இப்போது ஒரு சில இடங்களில் இந்த ஆசிரியர்கள் மாற்றப்படுவது வேதனைக்குரியதாக இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், இந்த டிரான்ஸ்பர் எனது மாவட்டமாகிய தென் ஆற்காடு மாவட்டத்திலே அதிகம் இருக்கின்றது. எப்படி மாற்றம் செய்யப்படுகின்றார்கள் என்றால், செல்வாக்கு இல்லாதவர்கள், அப்பாவிகள் மாற்றப்படுகிறார்கள். யாரெல்லாம் கிங் மேக்கராக இருக்கின்றார்களோ அவர்களை எல்லாம் எந்தெந்த ஊருக்கு வேலைக்கு வந்தார்களோ, அந்த ஊரிலேயே எவ்விதமான மாற்றமும் இல்லாமல் 10, 15 ஆண்டுகளாக அங்கேயே இருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்திலே செல்வாக்கில்லாத அபலைகள், யாரும் சிபார்சு செய்ய முடியாமல் இருப்பவர்கள் எல்லாம் அடிக்கடி, மாதா மாதம் மாற்றப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இவர்கள்தான் அடிக்கடி மாற்றப்பட்டு பழிவாங்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு அவல நிலை இருக்கிறது. இதை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு, இதை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், இப்போது கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் நாடெங்கிலும் போராட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். இன்றுகூட கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தது. குறிப்பாக, தென் ஆர்க்காடு மாவட்டத்தில், சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், அங்கே பல்கலைக் கழக இரண்டாவது மானியக் குழுவின் சிபார்சுப்படி அங்குள்ள பேராசிரியர்களுக்கு 80 ரூபாய் என்றும், அங்குள்ள லெக்சரர்களுக்கு 50 ரூபாய் என்றும் உயர்த்தியிருக்கிறார்களே ஒழிய, சொன்ன

[திரு. துரை முந்துச்சாமி]

திட்டத்தை இன்னும் அங்கே அமுல் நடத்தவில்லை. ஆனால், அதைத்தவிர, மற்றப் பல்கலைக் கழகங்களிலே, சென்னையிலும், அதே மாதிரி மதுரையிலும் உள்ள ஆசிரியர்களுக்கு இரண்டாவது பல்கலைக் கழக சம்பளக் குழு குறிப்பிட்டபடி 80 ரூபாயும், 50 ரூபாயும், அதற்கு மேலும் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். இதனால், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருக்கக் கூடிய ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்து கறுப்பு பாட்ஜை அணிந்து தங்கள் அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். அதை இந்த அரசாங்கமும் அறிந்திருக்கிறது. இதை உடனடியாகப் போக்குவதற்கு, அந்த ஆசிரியர்களுடைய குறைகளை எல்லாம் நிவர்த்திக்க வேண்டும்.

தேர்வு நெருங்குகிற நேரத்திலே மாணவர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம் என்று இருந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் எல்லாம் வருகிற தேர்தலைப் புறக்கணிக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஹையர் செகண்டரி கல்லூரி ஆசிரியர்களாக இருப்பவர்கள் 11 அம்சக் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். நேரடியாகச் சம்பளப் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பல்கலைக் கழக ஊதியக்குழு நிர்ணயித்த அடிப்படையில் 1973 ஆம் ஆண்டிலிருந்து சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை எல்லாம் வைத்திருக்கிறார்கள். அலுவலகத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு இருக்கும் ஃபேமிலி பெனிஃபிட் ஸ்கீமை கல்லூரியில் வேலை செய்கிறவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் பற்றி ஆராய ஒரு நான்-அஃபிஷியல்ஸ் எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி போட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த தேர்தலின்போது மக்கள் மத்தியில், தமிழகத்திலுள்ள அறிவாளிகளை, திறமைசாலிகளைப் பயன்படுத்திக் கொள்வேன் என்று வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். அந்த வகையில் ஒரு நான்-அஃபிஷியல் எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி போட்டு மாணவர்கள் ஆசிரியர்கள் போராட்டத்தைத் தவிர்க்க பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல் அரிசன சேவா சங்க ஹாஸ்டலுக்கு 25 ரூபாய் வீதம் கொடுக்கிறார்கள். அதை 40 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாப் பள்ளிகளுக்கும் ரேடியோக்கள் கொடுக்கப்பட வேண்டும். இவற்றை எல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு நல்கியமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. செ. ம. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்துள்ள கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



[திரு. செ. ம. இராசு]

இந்த அரசு பொறுப்பேற்று கல்விக்காக சுமார் 180 கோடி ரூபாயை ஒதுக்கி செலவு செய்ய இருப்பதை நான் பாராட்டுகிறேன். கல்வியை மத்திய அரசு பட்டியலில் சேர்த்து ஆணை வெளியிடுவதாக அறிந்து மிக்க வருத்தப்படுகிறேன். கோத்தாரி கமிஷன் அடிப்படையில் கல்வியை மாநில அளவில் சேர்த்துவிட வேண்டுமென்ற அந்த அறிக்கையின் தீர்ப்பை இந்த அரசு நடைமுறைப்படுத்துவது கண்டு வரவேற்கிறேன்.

ஆசிரியர்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு இடைநிலை ஆசிரியர்கள் ஆயிரம் பேர், தமிழாசிரியர்கள் 200 பேர், உடற்பயிற்சி ஆசிரியர்கள் 200 பேர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு வழங்க இருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். புதிய கல்வித் திட்டத்தை 10 பிளஸ் 2 பிளஸ் 3 திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு பள்ளி என்ற வீதத்தில் 400 பள்ளிகளை ஆரம்பிக்க இருப்பது பாராட்டுக்குரியது. இந்தப் புதிய கல்வித் திட்டத்தால் சுமார் 7,000 ஆசிரியர்கள் பதவி இழக்கின்ற நிலைமையில் அந்த ஆசிரியர்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு அவர்களுக்குப் பணி பாதுகாப்புத் தர இருப்பது வரவேற்கத்தக்கதாகும். மேலும் பட்டதாரி ஆசிரியர்களை 500-க்கும் மேல் மாணவர்கள் படிக்கும் தொடக்கப் பள்ளிகளில் அவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமனம் செய்யலாம் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன்.

பட்டதாரி ஆசிரியர்களில் 'ஏ விங்' 'பி விங்' 'சி விங்' என்று தனித் தனியாக இருப்பது சரியல்ல. ஒரே படிப்பு ஒரே தகுதி, ஒரே ஊதியம் இருந்தும் ஒரு சாராருக்குத்தான் பதவி உயர்வு வழங்க இருக்கும் முறை சரியானது அல்ல என்று கூறி அவை அனைத்தையும் ஒரே விங்காக இணைக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எல்லா பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு அளிக்க ஆசிரியர்கள்—மாணவர்கள் விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்லூரிக் கல்விக்கும். இடைநிலைக் கல்விக்கும் தனித் தனி இயக்குநரை நியமித்து நடைமுறைப்படுத்தி வருவது போல் ஆரம்பக் கல்விக்கென்று தனி இயக்குநரை நியமிப்பது சாலச் சிறந்ததாகும்.

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் சிறந்த திட்டமாகும். இதில் அரசு 10 பைசா, ஊராட்சி 5 பைசா வழங்கி வருகின்றது. சில ஊராட்சிகளுக்கு நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் நிதி வழங்குவது தடைப்படுகிறது, சில நேரங்களில் நிறுத்தி விடுவதும் உண்டு. இதை அனுசரித்து 15 பைசாவையும் அரசே வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. ம. இராசு]

பள்ளிகளில் இலவசப் புத்தகங்கள் வழங்கும்போது காலா காலத்தில் வழங்கப்படுவதில்லை. பள்ளி ஆரம்பித்த ஜூன் மாதத்திலேயே சிலேட்டு புத்தகங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–10)

மாணவர்களுக்குப் படிப்பின் சுமையைக் குறைக்க பாடத் திட்டத்தைக் குறைத்து இருப்பது வரவேற்கத் தக்கது. ஆரம்பப் பள்ளிகளில் புதிய கணிதத்தை அறவே நடைமுறையிலிருந்து நீக்கிவிட்டு அதை உயர்நிலைப் பள்ளிகளுக்கு வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி புகட்டும் பள்ளிகளில் இன்றைக்கு பல்வேறு துறைகளின்கீழ், அரிசன நலத்துறையின்கீழ் உள்ளாட்சித் துறையின் கீழ், நகராட்சிகளின்கீழ் தனியார்களின்கீழ் நடந்து வருகின்ற தனியார் பள்ளிகளிலே செய்கின்ற அட்டூழியங்கள் அதிகமானவை. இவை யெல்லாம் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு நடத்தப்படக்கூடிய அளவில் கல்விக்காக ஒரு தனி வாரியம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அநேக பள்ளிகளில் மேசை, நாற்காலி, பெஞ்சுகள், ஆய்வக வசதிகள், கட்டட வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அவைகளைப் பள்ளிகளுக்குப் பெற்றுத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் ஆத்தூரிலே ஒரு அரசினர் கலைக் கல்லூரி இருக்கிறது, அங்கே கட்டட வசதியோ, உறைவிட வசதியோ இல்லை, இந்தக் குறைகளைப் போக்க வேண்டுமேன்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியிலே கூடமலை, உலிபுரம் ஆகிய இடங்களில் சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது. அந்த ஊர்களிலே உயர்நிலைப் பள்ளிகளை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹையர்கிரேடு ஆசிரியர்கள், 5 ஆண்டுக் காலம் அல்லது 10 ஆண்டுக் காலம் பணியாற்றியிருந்தால் அவர்களை அவர்களுடைய பணியின் நிமித்தம் இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்க அரசாங்கம் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கண்ணன் பேசியபோது ஆசிரியர்கள் பள்ளிகளுக்கு வருவதில்லை என்று குறை சொன்னார்கள். ஆசிரியர்கள் அப்படி ஏதோ ஒரு சில இடங்களில் இருக்கலாம், அதற்காக ஒட்டுமொத்தமாகச் சொல்வது சரியாக இருக்காது. ஏனென்றால் ஆசிரியர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு, சென்ஸஸ் எடுத்தல், சிறு சேமிப்பு ஆகிய திட்டங்களினால் இதர வேலைகள் கொடுக்கப்படுகின்றன. சில நேரங்களிலே இப்படிப்பட்ட பணிகளின் காரணமாக பள்ளிக்குச் செல்லாத நிலைமை இருக்கலாம். ஒரு சில பள்ளிகளில் நடைபெறுவதை வைத்து அதை ஒரு பெரிய குறையாகச் சொல்வது சரியல்ல.





[திரு. செ. ம. இராசு]

தமிழ் வளர்ச்சியிலே பெரிதும் அக்கறை காட்டிவருகின்ற நம்முடைய அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும், தமிழைப் பாடமொழியாக ஏற்படுத்துவதற்கு பாடுபடுகிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ், உலகமெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவுகளை நனவாக்கக்கூடிய முறையில் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருவதை நான் பாராட்டுகிறேன்.

இப்போது தமிழ் வளர்ச்சித் துறை ஒன்று செயல்பட்டு வருகிறது. அதற்கு மேலும் முக்கியத்துவம் கொடுத்து அரசு அலுவலகங்களில் பெரும்பாலும் தமிழையே பயன்படுத்தக் கூடிய முறையில் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலம் பூராவும் உள்ள பள்ளி ஆய்வு, தணிக்கை அதிகாரிகளுக்கு வேண்டிய வாகன வசதிகளையும் மற்றவைகளையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி சீரிய பணிகளிலே பல நல்ல அம்சங்களுக்காகத் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகின்ற நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியைப் பாராட்டி நான் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்: தலைவர் அவர்களே, ஆளுநர் ஆட்சி தமிழகத்திலே நடந்தபோது பள்ளிகளின் வேலை நேரத்தை $7\frac{1}{2}$, 8, $8\frac{1}{2}$ மணி என்று ஆக்கப்பட்டது. இதனால் படிக்கிற மாணவ, மாணவிகளுக்கும் பெற்றோர்களுக்கும் பெரிய இன்னல்கள் ஏற்படுகின்றன. காலை நேரத்திலே குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டி இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய காலை உணவு, பலகாரம் போன்றவை செய்து கொடுப்பது பெற்றோர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அது மட்டுமல்ல, காலையில் பிள்ளைகள் படிப்பதற்கும் வசதியில்லாமல் இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள், தமிழகம் முழுவதும் 9 மணியிலிருந்து 12 மணி வரையிலும், $1\frac{1}{2}$ மணியிலிருந்து $4\frac{1}{2}$ மணி வரையிலும் பள்ளிகள் நடத்தக்கூடிய வகையில் ஒரு உத்திரவைப் பிறப்பிக்க வேண்டும். அப்படி எல்லாப் பள்ளிகளுக்கும் யூனிஃபார்மாக ஒரேபடியாக நேரம் இருக்குமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்யப்பட்டால் காலையிலே பிள்ளைகள் படிப்பதற்கும் நேரமும் வசதியும் இருக்கும், மாலையிலே அவர்கள் விளையாடுவதற்கும் பெற்றோர்கள் சிரமம் இல்லாமல் இருப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

[திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்]

இந்த மாநிலத்தில் 580 ஹையர் செகண்டரி ஸ்கூல்கள் அமைக்கப்படுகின்றன என்பதை நான் வரவேற்கிறேன். ஏன் என்றால் விளையாட்டு இந்த ஹையர் செகண்டரி ஸ்கூல்களில் கம்பல்சரி சப்ஜக்ட், கட்டாய பாடமாக அமைக்கப் பட்டிருக்கிறது. இது நல்ல திட்டம். இதை அரசு ஆதரித்து இதற்குப் பெருவாரியாக மானியம் கொடுத்து மாநிலத்தில் இன்னும் அதிகப்படியாக ஹையர் செகண்டரி ஸ்கூல்களை அமைக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பல பள்ளிகளில் விளையாட்டு அரங்கங்களே இல்லை. எந்தப் பள்ளியாக இருந்தாலும், அது செகண்டரி ஸ்கூலாக இருந்தாலும் சரி, ஹையர் செகண்டரி ஸ்கூலாக இருந்தாலும் சரி, எலிமெண்டரி ஸ்கூலாக இருந்தாலும் சரி, அந்த ஒவ்வொரு பள்ளியிலும் விளையாட்டரங்கம் கட்டாயமாக இருக்க வேண்டுமென்று அமல்படுத்த வேண்டும். அப்படி விளையாட்டரங்கம் இல்லாத இடத்தில் ரெகக்னிஷன் அதாவது அங்கீகாரம் கொடுக்கக்கூடாது, அப்படிக் கொடுத்திருந்தாலும் அந்த அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே கல்வித் துறைக்காக 176 கோடி ரூபாய் செலவிடப் போவதாக அறிக்கை விட்டிருக்கிறது இந்த அரசு. ஆனால், விளையாட்டுக்கு என்று சுமார் 16 இலட்சம்தான் ஒதுக்கியிருக்கிறது. ஏனைய மாநிலங்களான பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் எல்லாம் சுமார் 2 கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் என்ற அளவிற்கு விளையாட்டிற்காக என்றே தனியாகச் செலவிடுகிறார்கள்.

இப்பொழுது தமிழ்நாட்டிலே தமிழ்நாடு விளையாட்டுக் குழு ஒன்றும், மாவட்ட விளையாட்டுக் குழுக்கள் என்று 16 குழுக்களும் இருக்கின்றன. "Tamil Nadu State Sports Council, District Sports Council numbering 16" என்று இருக்கிறது. ஆக மொத்தம் 16 சங்கங்கள் உள்ளன. அவைகள் எல்லாவற்றிற்குமாக இப்பொழுது செலவிடப் போகும் தொகை 16 இலட்சம் ரூபாய். ஒவ்வொரு விளையாட்டுக் குழுவுக்கும் பகிர்ந்து கொடுத்தால் ஒரு இலட்சம்தான் கிடைக்கிறது.

ஆனால், இந்த ஒரு இலட்சமும், விளையாட்டுக் குழுவிலே பணி புரிபவர்களுக்கும், அதாவது ஒவ்வொரு விளையாட்டுக்கும் பயிற்சி கொடுக்கின்றவர்களுக்கும் சம்பளம் கொடுக்க செலவிடப்படுகிறது. விளையாட்டுப் போட்டிகள் நடத்தவோ, விளையாட்டுகளை முன்னேற்றத்திற்குக் கொண்டு வருவதற்கான கருவிகள், சாதனங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கோ பணமே இல்லாமல் இந்த ஸ்போர்ட்ஸ் கவுன்சில்கள் இருக்கின்றன. ஆகவே, குறைந்த பட்சம் ஒவ்வொரு மாவட்ட ஸ்போர்ட்ஸ் கவுன்சிலுக்கும் 3 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டும். சம்பளம் கொடுப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாயும், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஒரு இலட்சம் ரூபாயும், விளையாட்டுக் கருவிகளும், சாதனங்களும், தளவாடங்களும் வாங்குவதற்கு ஒரு இலட்சம் ரூபாயும் என்ற முறையில் அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும்.



[திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்]

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு ஸ்டேட் ஸ்போர்ட்ஸ் கவுன்சிலுக்கு வருடாந்தரச் செலவுக்காக ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கப்பட வேண்டும். ஆரம்பமாக இந்த அரசு சுமார் 50 இலட்சம் ரூபாயாவது செலவு செய்தால் தான் தமிழ் நாட்டிலே விளையாட்டு முன்னணிக்கு வரும் என்று கருதுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு ஸ்டேட் ஸ்போர்ட்ஸ் கவுன்சில் இயங்கவே இல்லை. ஆளுநர் ஆட்சிக் காலத்தில் அது நடத்தப்படுவது ரத்து செய்யப்பட்டது. பிறகு இந்த அரசு அமைக்கப்பட்டு ஏறத்தாழ எட்டு மாதங்கள் ஆகியும் இந்த ஸ்போர்ட்ஸ் கவுன்சில் அமைக்கப்படவில்லை. எனவே, உடனடியாக இந்த ஸ்போர்ட்ஸ் கவுன்சிலை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சென்னை நகரத்திலே இந்த ஸ்போர்ட்ஸ்களுக்காக கீழ்ப்பாக்கத்தில் நேரு பார்க்கிற்குப் பின்னால் ஒரு விளையாட்டரங்கம் அமைக்க இந்த அரசு இடம் ஒதுக்கியிருப்பதாகக் கேள்விப் பட்டேன். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்த இடத்தில் குடிசைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அந்தக் குடிசைகளை அகற்றி இந்த இடத்தை தமிழ்நாடு ஸ்டேட் ஸ்போர்ட்ஸ் கவுன்சிலின் கையில் ஒப்படைத்தால்தான் இந்த விளையாட்டரங்கத்தை அங்கே அமைக்க முடியும். அதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொங்கல் விளையாட்டு விழாக்கள் வருடந்தோறும் ஜனவரி மாதத்தில் ஒவ்வொரு வட்டத்திலேயும், மாவட்டத்திலேயும் சிறப்பாக நடைபெறுகிறது. ஆனால் அதற்கான பண உதவி மிகவும் குறைவாக அளிக்கப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு வட்டத்திற்கும் 20,000 ரூபாயும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு இலட்சம் ரூபாயும் வருடந்தோறும் பொங்கல் விழாவிற்காக ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வட்டங்கள்தோறும் ஒரு பெரிய உட்புற, வெளிப்புற விளையாட்டரங்கங்கள், அதாவது இன்டோர் ஸ்டேடியம், அவுட்டோர் ஸ்டேடியம் புதிய வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 3

[திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்]

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களிடத்திலும், மாணவிகளிடத்திலும் சிறப்புக் கட்டணம்-விளையாட்டுக் கட்டணம அதிகமாக இனிமேல் விதித்து வசூல் செய்து இப்படிப்பட்ட முறையில் வரும் வருவாயைக் கொண்டு அந்தப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் விளையாட்டுச் சாதனங்கள் வாங்கியும், அரங்கங்கள் அமைத்தும் மாணவர்களுக்குப் பயிற்சி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு தமிழ்நாடு ஹாக்கி சங்கத்திற்கு ஒரு பெருமை உண்டாகியிருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமென்றால் " Red letter day " ஏனென்றால், உலகக்கோப்பைக்கும், ஒலிம்பிக் போட்டிக்கும் இந்திய ஹாக்கி குழுவுக்கு இதுவரையிலே தமிழகத்திலே பிறந்த தமிழ் மகன் எவனும் கேப்டனாக நியமிக்கப்படவில்லை. இப்பொழுது நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன், இந்த ஆண்டு உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டி அர்ஜென்டினாவில் இந்த மாதம் 18 ஆம் தேதியிலிருந்து அடுத்த மாதம் 8-ஆம் தேதி வரையில் நடைபெற விருக்கிறது. அதற்கு இந்திய ஹாக்கி அணிக்கு வி. ஜே. பிலிப்ஸ் என்ற தமிழர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

[பிற்பகல் 12–20]

அவர் அந்த நாட்டிற்குச் செல்வதற்கு, அவருக்கு எந்தவிதமான பண உதவியோ, மற்ற உதவியோ செய்ய தமிழக ஹாக்கி குழுவிடம் பணம் இல்லை.

அதே போல், தமிழ் நாட்டைச் சேர்ந்த முகமத் கவுஸ் என்பவர் நடுவராக, சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்டு அழைக்கப் பெற்றிருக்கிறார். அவருக்கும் எந்தவித உதவியும் செய்ய வழியில்லாமல் இருக்கிறோம். அவர்களுக்கு, ஏதாவது வழிவகை செய்து மார்ச் 18 ஆம் தேதிக்குள் ஏதாவது மானியம் வழங்க வேண்டும், உதவி செய்ய வேண்டும், நன்கொடை வழங்க வேண்டும்.

அதே போல், முனீர்சேட் என்பவர் நடுவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார், அவருக்கு ரூ. 11,500ஐ நன்கொடையாகக் கொடுத்திருக்கிறது நமது அரசு என்ற செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது. அதற்காகப் பாராட்டுகிறோம். அதற்கிடையில் காப்டனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வி. ஜே. பிலிப்ஸ், இன்னொரு பிளேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பாஸ்கரன், அம்பயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முகமது கவுஸ் ஆகியோருக்கும் பணம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க, இந்த அரசு கிரிக்கெட் லான் டென்னிஸ் அஸோஸியேஷனைத்தவிர, இதர சங்கங்களுக்கு,



1978 மார்ச் 3]

[திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்]

குறிப்பாக தமிழ்நாடு ஹாக்கி, தமிழ்நாடு கால்பந்தாட்டச் சங்கங்களுக்கு வருடந்தோறும் ரூ 2 இலட்சம் செலவு செய்ய மானியம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைய அரசு இந்தியாவிலேயே சிறப்பான விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் அர்ச்சுனா அவார்ட், கொடுக்கிறது. அதேபோல் தமிழ்நாட்டிலே சிறப்பான விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், வருடந்தோறும் அண்ணா அவார்ட் என்ற பெயரிலே, அவார்ட் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, பல்கலைக் கழகங்களிலே, யூனிவர்சிட்டி டீம்ஸ் காப்டனாக இருப்பவர்களுக்கு, 'டைரக்ட் ரெக்ரூட்ஸ்' வேலை வாய்ப்புகளை அரசு கொடுக்க வேண்டும். டி.எஸ்.பி., ஆர்.டி.ஓ. போன்ற கிளாஸ்-1 ஆபீஸர்களாக, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத், தேர்வில்லாமல், அரசே டைரக்டாக எந்த எழுத்துப் பரீட்சையும் இல்லாமல், யூனிவர்சிட்டி தேர்வில் தேர்ச்சிபெற்றவுடன், வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில்தான் டைரக்டர் ஆப் ஸ்போர்ட்ஸ் இல்லை. இந்த விளையாட்டைக் கல்வி அமைச்சர் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவருக்குக் கல்வி அமைச்சர் என்ற 'டெசிக்னேஷன்' கொடுக்காமல், கல்வித் துறை, விளையாட்டுத் துறை என்ற 'டெசிக்னேஷன்' கொடுத்து, டைரக்டர் ஆப் ஸ்போர்ட்ஸ் என்று தனியாக இலாக்கா அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது, கேள்விப்படுகிறேன். செக்கரட்டேரியட்டிலே ஒரு அசிஸ்டன்ட் 7 சப்ஜெக்ட்ஸ் பார்க்கிறார். அதில், 7-வது சப்ஜெக்டாக ஸ்போர்ட்ஸ் இருக்கிறது. அப்படியில்லாமல், ஸ்போர்ட்ஸை முன்னணிக்குக் கொண்டு வர வேண்டுமென்றால், அதற்குத் தனி இலாக்கா ஏற்படுத்த வேண்டும்.

கடைசியாக, நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸ்போர்ட்ஸ் பஞ்சாபிலே இருக்கிறது. விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்றால், இங்கேயுள்ள ஒய். எம். சி. ஏ. காலேஜில் கவர்ன்மெண்ட் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸ்போர்ட்ஸ் வைத்து, அதில் விளையாட்டு வீரர்களைத் தேர்வு செய்யவேண்டும். அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம், நன்றி.

திரு. க. இராசி சின்னராசு : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இங்கே 17-வது எண்ணுள்ள கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு மீண்டும் ஒருதரம் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 3

[திரு. க. இரா. சின்னராசு]

இங்கே, ரூ. 180.9 கோடி கல்விக்காக நிதியை ஒதுக்கி,
மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற இந்த மானியக்
கோரிக்கையை நான் படித்துப் பார்த்தேன். இங்கே எதிர்க்
கட்சியிலே பேசியவர்கள் ஏதோ தேடித் தேடிப் பார்த்தேன்.
ஒன்றுமே இல்லை யென்று சொன்னார்கள். நானும், அதேபோல்,
தேடித் தேடிப் பார்த்தேன், பல நல்ல திட்டங்கள், நாட்டு
மக்களுக்கு நன்மை புரிகின்ற திட்டங்கள் இதிலே தீட்டப்பட்
டிருக்கின்றன.

இங்கே, 10 பிளஸ், 2 பிளஸ், 3 என்ற கல்வி முறையை இந்த
மாநிலத்திலும் அறிமுகப்படுத்துவதற்காக 400 பள்ளிகளிலே
அந்தப் பாட வகுப்புகளை ஆரம்பிக்க அரசு முடிவெடுத்திருப்பதை
வரவேற்காமல் இருக்க முடியாது.

அதே நேரத்தில், இந்த மானியக் கோரிக்கையில் 1,000 இடை
நிலை ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற வகையிலே
திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள்.

200 தமிழாசிரியர்களுக்கும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்
களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுப்பதற்காக திட்டங்கள் தீட்டி
யிருக்கிறார்கள். அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே
நேரத்தில் கிராமத்திலே கல்வியை வளர்ப்பதற்கு, முறைசாராக்
கல்வியை வளர்க்க, யூனியன் ஒன்றுக்கு 2 கல்வி முறையை அமைப்
பதற்கு, மாநிலம் முழுவதும் 1,500 இடங்களில் ஆரம்பிப்பதாகச்
சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டாமல் இருக்க முடி
யாது. அதைப் பார்த்தால் ஒரு காலத்திலே அறிஞர் அண்ணா
அவர்கள் கல்வி எப்படி வளர வேண்டுமென்று நினைத்தாரோ
அதை வளர்ப்பதற்குகந்த மானியக் கோரிக்கையாக இது இருக்
கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் முதியோர் கல்வியை மாநிலம் முழுவதும்
நடத்துவதற்கு இந்த அரசு எடுத்திருக்கிற முடிவைப் பார்க்கின்
றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்
பட்டு, சரியான முறையிலே நடத்தாமல் விட்டு விட்டார்கள்.
ஆனால் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த பல
கிராமங்களிலே முதியோர் கல்வியை நடத்த பலரும் விண்ணப்
பித்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, கிராமங்களிலே
கல்வி அறிவைப் புகுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இந்த முதியோர் கல்வியை நடத்து
வதற்காக நியமிக்கப்படுகிற ஆசிரியர்களுக்குத் தகுந்த முறையில்
ஊதியம் கொடுத்து அப்படி முதியோர் கல்வியிலே ஈடுபடுகிற
ஆசிரியர்களுக்கு பஞ்சாயத்துக்களிலே, நகராட்சிகளிலே இருப்
பவர்களுக்கு முதலிடம் கொடுத்து, வேலை வாய்ப்புத் தர வேண்
டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 3]

[திரு. க. இரா. சின்னராசு]

அதே நேரத்தில் பள்ளிக்கூடங்களிலே ஆய்வுக்கூடங்கள்
அமைக்கும் வசதிக்காக 14 லட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கி
யிருக்கிறது. இதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.
இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்கள் இந்தக் கல்வி மானியக்
கோரிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக இந்தத்
துறையை ஏற்றுக் கொண்டிருக்கிற கல்வி அமைச்சரைப் பாராட்
டாமல் இருக்க முடியாது.

தனியார் பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு அர
சாங்கத்தின் சார்பாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்தச்
சம்பளப் பணத்தை, அந்தப் பள்ளியை நடத்துகின்ற முதலாளி
கள் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு ஆசிரியர்
களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் கொடுப்பது இல்லை. இதை
அரசு பரிசீலனை செய்து, நேரடியாக அரசு ஊழியர்களுக்குக்
கிடைக்கிற வகையில் ஒன்றாம் தேதி சம்பளம் அவர்களுக்கும்
கிடைக்கிற வகையில் சட்டத்தைத் திருத்தி அந்த ஊழியர்
களுடைய நலன்களிலே கவனம் செலுத்த வேண்டும் என்று,
அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைப் படிக்கிறபோது பேரறிஞர்
அண்ணா அவர்கள் ஒரு காலத்திலே எப்படி இந்த நாட்டு மக்களுக்கு
கல்வியறிவைப் புகுத்த வேண்டும் என்று நினைத்தாரோ, அதை
இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
நடைமுறைக்குக் கொண்டு வந்திருப்பதை வரவேற்பது என்னு
டைய கடமை.

கிராம மக்களுக்கு கல்வியைப் புகுத்த நல்ல பல திட்டங்களை
வகுத்துத் தந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் வறுமையில் வாடும்
தமிழறிஞர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகை தந்திருப்
பதற்காக இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன்.
அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறை
சென்ற வீரர்களுக்குச் சென்ற அரசு உதவித் தொகை கொடுத்து
வந்தது. ஆனால் அதற்கிடையிலே அதைக் கொடுக்கக் கூடாது
என்று கோர்ட்டு உத்தரவின் பேரிலே நிறுத்தி வைக்கப்பட்டது.
மீண்டும் அந்த உதவித் தொகையை கொடுக்கும் முயற்சியை
இந்த அரசு மொழிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்
களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவித் தொகை கொடுப்பதற்கு
முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன்
என்று சொன்னால், அப்படி சிறை சென்றவர்களில் நானும்
ஒருவன். அப்படி சிறை சென்றவர்களுடைய குடும்பங்கள் எந்த
அளவிற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான்
நன்றாக அறிவேன். ஆகவே, அந்த இந்தி எதிர்ப்புப் போராட்ட
வீரர்களுக்கு உதவித் தொகை கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. இரா. சின்னராசு]

அதே நேரத்தில் தர்மபுரி மாவட்டத்தில் தொழி
கல்லூரி ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்து கொண்
ருக்கிறது. அந்தக் கல்லூரியை கிருஷ்ணகிரியிலே ஏற்படுத்
வதற்கு ஆவன செய்யுமாறு அரசை நான் கேட்டுக் கொ
கிறேன்.

கிருஷ்ணகிரியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களை
பொறுத்தவரையில் மிகவும் மோசமாக இருக்கின்றன. அர
அதிகாரிகள்கூட பார்வையிட்டு இருக்கிறார்கள். அவைக
100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கட்டங்கள்
எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய ஆபத்
இருக்கிறது; அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிரு
கிறது, அந்த அடிப்படையில் இந்தப் பள்ளிக் கட்டட
களையும் சீரமைக்க வேண்டும் என்று நான் அமைச்ச
அவர்களைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 12·30]

அதே நேரத்தில், பள்ளிக் கல்வித் தரம் உயர
மாணவர்களைச் சேர்க்கின்ற முறையில் 20 மாணவர்களுக்கு ஒ
ஆசிரியர் என்ற வகையில் திட்டம் கொண்டு வந்தால்
கண்டிப்பாக கல்வித் தரம் நன்றாக உயரும் என்று நான்
சொல்லிக் கொள்கிறேன், அதே நேரத்தில், படித்து பட்ட
பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கும்
ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் எடுத்துச் சொல்லக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

கிருஷ்ணகிரியில் உள்ள கல்லூரியில் மேல்படிப்பிற்கான
கிளாஸ் ஒதுக்க வேண்டும் என்று நாங்கள் அரசுக்கு அங்கே
யிருக்கிற அதிகாரிகள் மூலம் எடுத்துச் சொல்லயிருக்கிறோம்.
எம்.ஏ., எம்.எஸ். ஸி., பி. காம்., போன்ற பட்டப் படிப்புகள்
துவக்கவேண்டும் என அரசுக்கு எழுதியிருக்கிறார்கள்.
அதையும் இந்த அரசு செய்ய வேண்டும் என்று நான் இந்த
நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அந்தக்
கல்லூரிக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் வைக்கப்பட
வேண்டுமென்று அங்கேயிருக்கும் பெரியவர்கள் முடிவு செய்து
இருக்கிறார்கள். இதுவரையிலும் அந்தப் பெயர் அந்தக் கல்லூரிக்கு
வைக்கப்படவில்லை,. அதையும் செய்து தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்—தருமபுரி மாவட்டங்கள் இரண்டிற்கும் சேர்ந்து ஒரே
சி.இ.ஒ. தான் இருக்கிறார். எங்களுக்கு இது மிகவும் வேதனை
யைத்தரும் விஷயமாகும். எந்த வேலைக்குச் சென்றாலும் அந்த
வேலை துரிதமாக நடைபெறவில்லை. தருமபுரி மாவட்டத்திற்கு



[திரு. க. இரா. சின்னராசு.]

ரு தனி மாவட்டக் கல்வி அதிகாரி ஏற்படுத்தித் தர
வண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில்
ந்த சி.இ.ஒ. ஆபீஸ் கிருஷ்ணகிரியில்தான் வைக்க வேண்டும்
ன்று அங்கேயிருக்கும் மக்கள் விரும்புகிறார்கள். அங்கே
ருக்கும் பொதுமக்கள் அந்த சி.இ.ஒ. ஆபீசிற்கு இலவச
ாக கட்டிடம் தரத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே,
ந்த சி.இ.ஒ. ஆபீஸ் கிருஷ்ணகிரி நகரில் வைக்க வேண்டும்
ன்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி நல்ல பல திட்டங்கள் இந்தக் கல்வி மானியக்
காரிக்கையில் வைக்கப்பட்டிருக்கிற காரணத்தால் எங்கள்
ாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பாராட்டுகிறார்கள், வர
வற்கிறார்கள். ஆகவே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை
ான் வரவேற்று, பாராட்ட, எனக்கு வாய்ப்பளித்த தலை
ருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

<u>திரு. ப. சந்திரன் :</u> மாண்புமிகு சட்டப் பேரவைத்
லைவரவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால்
காண்டு வரப்பட்டுள்ள கல்வி மானியக் கோரிக்கை மீது
ழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் எனக்குப்
பச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண்
தரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தின் 42-வது திருத்தத்தின்
லம் மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு
ாற்றப்பட்டுள்ள கல்வி பற்றிய அதிகாரத்தை மறுபடியும்
ன்பு போலவே மாநிலங்களுக்கு மாற்றவேண்டுமென்று மத்திய
ரசு உணர்ந்து அது மாநிலப் பட்டியலுக்கு மாற்ற முடிவு எடுத்த
பின்னர் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு
இருக்கிறார்கள். எனவே, அது மாநில மக்களுக்குப் பாதகம்
விளைவிக்க வழிவகை உண்டு என்று இந்த அரசு உணர்ந்து இருக்கிற
ாரணத்தால் உழைப்பாளர் முன்னேற்றக்கழகம் இந்த அரசுக்கு
ந்த வகையிலே ஆதரவு தேவையோ அந்த வகையில் தருவ
ற்குத் தயாராக இருக்கிறது என்று தெவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சை எழுதி தோல்வி
பெற்ற மாணவர்கள் மறுபடியும் அவர்கள் தோல்விபெற்ற
ாடங்களை மட்டும் எழுதித் தேர்வு பெற வழிவகை செய்து
இருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. குறிப்பாக கிராமப்
புறங்களில் படிக்கும் மாணவர்கள் ஒரு முறை எஸ்.எஸ்.எல்.சி.
யில் தோல்வி பெற்றால் அவர்கள் மீண்டும் மொத்தமாகத் தேர்வு
பெறுவது அரிது என்று இருக்கின்ற நிலையில், அவர்கள்
தோல்வி பெற்ற பாடங்களில் மட்டும் மறுபடியும் தேர்வு
எழுதி வெற்றி பெறுவதற்கும், உயர்கல்வி செல்ல வாய்ப்பு
அதன் மூலம் வகுத்து இருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

[திரு. ப. சந்திரன்.]

அதோடு மட்டுமல்ல. கிராமப்புறங்களில் 1 முதல் 5 வ
வகுப்பு வரை படிக்கும் மாணவர்களில் 58 விழுக்காட்டின
5-ம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்கின்றனர் என்பதும்
மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்
நின்றுவிடுகின்றனர் என்கிற உண்மையை அரசு உணர்ந்
இருக்கிறது. அதை இந்த அறிக்கையிலேயே சொல்லியிரு
கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல; 1977–78 முதல் இம் மாநிலத்தி
உள்ள மாணவர்கள் 1–3 வகுப்பில் உள்ள மாணவர்க
ஆண்டிறுதித் தேர்வில் தோல்வியுறச் செய்யாமல் உய
கல்விக்கு அனுப்புவது என்று இந்த மானியக் கோரிக்கையி
வழிவகை செய்து இருக்கிறார்கள். இது பாராட்டத் தகுந்
தாகும். ஆரம்பக் கல்விகளில் மட்டுமல்லாமல் உய
கல்வியில் கூட இந்த நிலை நீடிப்பது, குறிப்பாக் கிராம
புறங்களில் இருந்து உயர்நிலைப் பள்ளிக்கு வருகின்ற மாணவ
களை ஊக்குவிப்பதாக இருக்கும் என்றும் தெரிவித்து
கொள்கிறேன்.

குறிப்பாக, முனுகப்பட்டு என்ற வடாற்காடு மாவட்டத்தி
உள்ள கிராமத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளி மாணவர்க
ஏராளமான பேர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்
னர். இதற்குக் காரணம் அந்தக் கிராமத்தில் உள்ள ஏழை
கைத்தறி நெசவாளர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அந்த
தொழிலைச் செய்யக் கற்றுக் கொடுத்து விடுகிறார்கள். அதன்
காரணமாக அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லா
நிலைமை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும்.

ஆரம்பப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ
அரசு இலவச புத்தகங்கள் அளிக்கின்றது; இலவச மதிய
உணவு அளிக்கின்றது. அப்படியிருப்பதால் ஆரம்ப நிலையில்
1 முதல் 5 வகுப்பு வரை மாணவர்கள் கட்டாயமாக
படிக்க வேண்டும் என்று ஏன் ஒரு திட்டம் கொண்டு வரக்
கூடாது. இதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். ஏனென்றால் இன்று கிராமப்புறங்களில் இருக்கி
மக்களுக்கு கையெழுத்து போடத் தெரியவில்லை. கையெழுத்
கூட போடத் தெரியாத மக்களாக இருப்பதால், அவர்களுக்
எழுத்தறிவைத் தர வேண்டுமென்ற அடிப்படையில்
முதல் 5 வகுப்புவரையிலாவது கல்வியைக் கட்டாயமாக்க
வேண்டும்.





[திரு. ப. சந்திரன்.]

அடுத்து, நண்பகல் உணவுத் திட்டம். சென்ட்ரல் கிச்சனில் சமையல் செய்து ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கிறார்கள். என்னுடைய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பள்ளி இருக்கிறது. அங்கே வழங்கப்பட்ட உணவைக் கொண்டுவரச் சொல்லி, சாப்பிட்டுப் பார்த்தேன். அப்பப்பா, அது சாப்பாடா, சகிக்கவில்லை. பசை மாதிரி சரியாக வேகாமல் இருக்கிறது. அவர்கள் எப்படித்தான் அதைச் சாப்பிடுகிறார்களோ தெரியவில்லை. ஆகவே, இந்த சென்ட்ரல் கிச்சன் முறையை மாற்றிவிட்டு, பள்ளிக்கூடத்திலே ஒரு ஆயா வைத்து, அந்த ஆயா மூலம் சமைத்து சாப்பாடு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1977–78-ம் ஆண்டு பட்ஜெட்டிலே பேசும்போது உதவித் தொகை வழங்குவதற்கான வருமானத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறினேன். பல உறுப்பினர்கள் அதைப் பற்றிப் பேசினார்கள். குறைந்தது 5,000 ரூபாய் வருமானம் என்ற அளவுக்காவது உயர்த்த வேண்டுமென்று பேசினார்கள். நானும் அதையே வலியுறுத்துகிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழில் படிக்கின்ற மாணவர்களை ஊக்குவிக்கின்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழக அரசில் ஊக்கத் தொகை அளித்தார்கள். அதற்கான சட்டம் இயற்றப்பட்டிருந்தது. ஆனால், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு, சட்டமியற்றப்பட்டு இரண்டாண்டுகளாகியும் ஊக்கத் தொகை வழங்காததால் அவர்கள் இந்தக் கோட்டைக்கு வந்து முதலமைச்சரை சந்தித்து தங்கள் கோரிக்கையை வைக்க வந்தார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள் காவல் துறையினரைவிட்டு, மாணவர்களை அடித்துத் துரத்தினார்கள். அதுமட்டுமல்லாமல் காவல் துறையினர் அவர்களை வானில் ஏற்றிச் சென்று வெகுதூரத்தில் விட்டு வந்தார்கள். அவர்கள் இழைத்த அந்த துரோகச் செயலை மாற்றி, தமிழில் பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு 150 ரூபாய், புகுமுகப்படிப்பு படிக்கிற மாணவர்களுக்கு 50 ரூபாய் வழங்குவது என்ற திட்டத்தை எல்லோருக்கும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு அருகில் செய்யாறு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. 1970-ல் நான் உயர்நிலைப் பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கும்போது மாவட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள செய்யாறு பள்ளிக்குச் சென்றிருந்தேன். அங்கே விளையாட்டு அரங்கு ஒன்று கட்டுவதற்கு வேலை ஆரம்பிக்கப்பட்டு, அந்த வேலை பாதியில் இருந்தது. அந்த விளையாட்டு அரங்கு இன்றும் கட்டி முடிக்கப்படவில்லை. அப்போது எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இன்னமும் இருக்கிறது. அதை உடனடியாகக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ப. சந்திரன்]

இன்றைக்கு மேல் உயர்நிலைப்பள்ளியில்—ஹையர் செகண்டரி—11, 12 வகுப்புகளில் தொழில் கல்வியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவு மேல் உயர்நிலைப்பள்ளியில் மட்டுமல்ல, பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்கள்கூட ஒரு தொழில் கல்வியை கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்ற நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள், அங்கே இருக்கிற ஆணையாளரிடம் அல்லது ஸ்பெஷல் ஆபீஸரிடம் சிக்கி, மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் பிடியிலிருந்து அவர்களை விடுவித்து, நேரடியாக மாவட்டக் கல்வி அதிகாரிகளின் கண்காணிப்பில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு உயர் நிலைப்பள்ளி சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக—அந்தப் பள்ளி ஓலை ஷெட்டில் நடந்து கொண்டிருந்தது — கீழே விழுந்து விட்டதால் அங்கே இருக்கிற மாணவர்கள் எல்லாம் மரத்தடியில் பயிலுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் கட்டடம் கட்டித்தர வேண்டும். பனைவட்டம் என்ற இடத்தில் இருக்கின்ற உயர் நிலைப்பள்ளியில் கட்டடம் சரிந்திருக்கிறது. அந்தக் கட்டடத்தை இந்த அரசு சீர்படுத்த வேண்டும். அதைப்போல சமீபத்தில் ஏற்பட்ட புயல், மழையினால் பாதிக்கப்பட்ட பள்ளிகளை எல்லாம், அவைகளுக்கு ஏற்பட்ட சீர்கேடுகளை எல்லாம் சரி செய்து, கிராமப்புற மக்களுக்கு கல்வியறிவைப் புகட்ட வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கிராமப் புறங்களில் இருக்கிற பள்ளிகளுக்கு சரியாக விளையாட்டு மைதானங்கள் இல்லை. அதனால் அங்கே இருக்கின்ற பள்ளிகளைச் சுற்றியிருக்கிற நிலங்களை கட்டாயமாக ஆர்ஜிதம் செய்து, நல்லமுறையிலே விளையாட்டு மைதானங்களை அமைத்துத் தர வேண்டும்.

அதோடு போதுமான விளையாட்டுப் பொருட்களையும் வாங்கிக் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



*திரு. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1978-79ஆம் ஆண்டுக்கான கல்வித்துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காகத் தங்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

1978-79-ஆம் ஆண்டுக்கான மொத்தச் செலவு ரூ. 727 கோடியிலே கல்விக்காக மட்டும் 176 கோடி ரூபாய் செலவு செய்ய மொத்தச் செலவிலே 24 சதவீதத்தை ஒதுக்கி இருப்பது பாராட்டத்தக்கது. தொடக்கக் கல்விக்காக மட்டும் 141 கோடி ரூபாயை ஒதுக்கி இருப்பது மேலும் என்னால் வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. 1978-79-ல் புதிதாக ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களையும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களையும், 200 முதல் நிலைத் தமிழாசிரியர்களையும் நியமிக்க இருக்கும் இந்த ஆட்சியினுடைய போக்கு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மேல் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேர்தெடுக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு உயர் நிலைப் பள்ளிக்கும் 1½ லட்சம் ரூபாய் செலவிலே ஒரு வகுப்பறையும் ஆராய்ச்சிக் கூடமும் கட்ட இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கின்ற நிலைமை பாராட்டத்தக்கது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இந்திய அரசியல் சட்டம் 42-வது திருத்தத்தின் மூலமாக மாநிலப் பட்டியலிலேயிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி பற்றிய அதிகாரத்தை மறுபடியும் முன்போலவே மாநிலப் பட்டியலுக்கு மாற்றியாக வேண்டும். இதில் இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்த கருத்துள்ளவர்களாக இருப்பார்கள் என ஐயத்துக்கு இடமின்றி கருதுகிறேன்.

மதிய உணவு மையங்களிலிருந்து பள்ளிகளுக்கு உணவு எடுத்துச் செல்லும் ஊர்திகள் சில கிராமங்களுக்கு எடுத்துச் செல்ல சரியான பாதைகள் போடப்படாத நிலை இருக்கிற காரணத்தால் அந்தக் கிராமங்களுக்கு மதிய உணவு கொண்டு செல்ல உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டு விளையாட்டு, உடற்பயிற்சி, முதியோர் கல்வி ஆகியவற்றிற்காக இந்த அரசு எடுத்து வரும் சீரிய செயல் முறைகளை மனமார வரவேற்கிறேன். விளையாட்டுகளுக்காக மாநில விளை

[திரு. ஆனூர் ஜெகதீசன்]

யாட்டுக் குழுவுக்கு 16 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது என்றாலும் கூட இது போதுமானதாக இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்ட விளையாட்டுக் குழுவும் நல்ல முறையிலே இயங்குவதற்குக் குறைந்த பட்சம் 2 லட்சம் ரூபாயாவது மேலும் இந்த ஆண்டிலே ஒதுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலுள்ள தனியார் பள்ளிகளுக்கு கட்டடவசதிபோதுமானதாகச் செய்து தரப்படவில்லை. இதை அறவே போக்கிட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப் போதுமான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்கள் நிர்வாகத்தினரால் வீட்டு வேலைக்காரர்கள் போல் பரிதாபகரமான நிலையில் நடத்தப்படுகிறார்கள். இந்த இழிநிலையைப் போக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக பள்ளிகளில் இடவசதி இல்லாத காரணத்தால் மைதானங்களிலும், மரத்தடிகளிலும் வகுப்புகள் நடத்தும் பழக்கம் இருந்து வருகிறது. அந்தப் பழக்கத்தை அடியோடு அகற்ற வேண்டும். இதனால் குழந்தைகள் படிக்க வேண்டிய நேரத்திலே படிப்பிலே கவனம் செலுத்த முடியாத நிலையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மருத்துவக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குத் தரப்படும் உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) டிசம்பர்-மார்ச் ஆகிய இரு மாதங்களில் இரு தவணைகளாக பிரித்துத் தரப்படுகிறது. சில நேரங்களிலே இது தாமதமாகக் கொடுக்கப்படுகிறது. இதனால் அவ்வாறு சேர்ந்து படிக்கின்ற மாணவர்கள் உணவுக்குக் கட்ட வேண்டிய கட்டணத்திலே தாமதமாகி பாக்கி ஏற்பட்டுவிடுகிற காரணத்தால் அவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். ஆகவே, குறித்த நேரத்திலே இந்த உதவித் தொகை அவர்களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும் அல்லது அரசு உதவித் தொகை கிடைக்கும் வரையில் விடுதியில் மாணவர்களுக்கு உணவு வழங்கிட அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு ரூ. 120 உதவித் தொகையாக அரசாலே தரப்படுகிறது. விடுதியில், அவனுடைய சாப்பாட்டுக்குக்கூட இது போதாமல் இருப்பதால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 600 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை சாப்பாட்டுக்குக் கூடுதலாகக் கடன் பெற்று பணம் தரவேண்டிய துர்பாக்கியமான நிலை இருக்கிறது. இந்த நிலை மாற அரசு தரும் உதவித் தொகையைக் கூடுதலாக்கித் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



[திரு. ஆனூர் ஜெகதீசன்]

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் பல மாதங்களாக எலும்பு முறிவு அறுவை சிகிச்சை ஆகியவற்றுக்கான பாடங்களை நடத்துகின்ற ஆசிரியர்கள் லீவ் போட்டுவிட்ட காரணத்தால் பல மாதங்களாக அந்த இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதனால் படிக்கின்ற மாணவர்கள் போதிய தேர்ச்சி அடைய முடியாமல் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தக் குறையை நீக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கற்பட்டு, சி.எம்.சி. கல்லூரி விடுதியின் கழிவு நீர்க் கால்வாய்கள் திறந்தவெளியில் பாய்ந்து கொண்டிருப்பதால் கொசுத் தொல்லையும் சுகாதாரக் கேடும் ஏற்பட்டு பல இளைஞர்கள் நோய்வாய்ப் பட்டிருப்பதால் இதனைப் போக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலும் கோவையிலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயில்கிற மாணவர்களின் ஆராய்ச்சித் திறனும் அறிவுத் திறனும் ஆண்டுக்காண்டு குறைந்து வருகிறது. நம் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு முன்னிருந்த பெருமையும் சிறப்பும் குறைந்து கொண்டு வருகிறது. மற்றப் பல்கலைக் கழகங்கள், குறிப்பாக டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது சுமார் 15, 20 ஆண்டு முன்னேற்றத்தில் பின்தங்கியிருக்கிறது என்று அறிஞர் பெருமக்கள் பலர் கருதுகிறார்கள். அனுபவத் திறனுக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் தூண்டுகோலாகவும் அடிப்படையாகவும் இருக்கக் கூடிய பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், ஆகியவற்றின் நூலகங்களில் ஆராய்ச்சிக்கான நூல்கள். சஞ்சிகைகள் கிடைக்கவில்லை. அங்குள்ள பல மதிப்பு வாய்ந்த நூல்களை அங்குள்ள பேராசிரியர்களும் மாணவர்களும் எடுத்துச் சென்று அவை திரும்பக் கொடுக்கப்படாததன் காரணமாக இந்த நூல்கள் மாணவர்களுக்கு தற்போது கிடைக்கவில்லை என்ற நிலையிருக்கிறது. ஆகவே நவீன ஆராய்ச்சி நூல்களும், சஞ்சிகைகளும், வெளியீடுகளும் மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் கிடைத்திட இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியான செங்கல்பட்டில் உள்ள சில கோரிக்கைகளைத் தங்கள் மூலம் கல்வி அமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன், பல ஆண்டுகளாக செங்கல்பட்டில் இருந்து வந்த ஆசிரியை பயிற்சிப் பள்ளி காரணம் ஏதுமின்றி உத்திரமேரூருக்கு மாற்றப்பட்டுள்ளது. பயிற்சி பெறும் மாணவிகள் தங்குவதற்கோ உண்ண உணவிற்கோ எந்தவித வசதியும் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே

[திரு. ஆனூர் ஜெகதீசன்]

ஊருக்கு வெளியே தனிமையில் உள்ள மேற்படி இடத்திலிருந்து அதை மீண்டும் செங்கல்பட்டுக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செங்கல்பட்டு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் இரண்டு ஏக்கர் 55 சென்ட் நிலத்தை செங்கல்பட்டு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் கட்ட இனமாகக் கொடுத்தும் இதுவரை அந்த இடத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. வயது வந்த பெண்கள் மைதானங்களிலும் மரத்தடிகளிலும் வைத்து கல்வி கற்பிக்கும் அவல நிலையைப் போக்க விரைவில் செங்கல்பட்டில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்ட முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றத்தில் உள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்து ஏக்கர் அதற்காக மலையடிவாரத்தில் நல்லமுறையில் ஒதுக்கப்பட்டிருந்தும் 2,25,000 ரூபாய் பொதுமக்கள் நன்கொடை செலுத்தப்பட்டிருந்தும், 1975–76 முதல் அரசு அங்கீகாரத்தோடு பள்ளி இயங்கிவந்தும் இதுவரை நல்லதொரு கட்டடம் அதற்குக் கட்டித் கொடுக்கப்படவில்லை. எனவே விரைவில் அப்பள்ளிக்கு ஒரு நல்ல கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு மேல் உயர்நிலைப் பள்ளி இருக்கும் என்றுஅரசு அறிவித்திருப்பதைப்பாராட்டுகிறேன். ஆனால் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில்ஐந்துஉயர்நிலைப்பள்ளிகள் இருந்தும் ஒரு அரசு மேல் உயர்நிலைப் பள்ளி அமைக்கப்படவில்லை. அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பெண்களுக்கான மேல் உயர்நிலைப் பள்ளி ஒன்றினை செங்கற்பட்டில் ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு நகரிலும், மதுராந்தகம், திருப்போரூர், அச்சரப்பாக்கம் சுற்று வட்டாரங்களில் கால் பந்து, கைப்பந்து, கூடைப் பந்து விளையாடுவதில் அக்கறை உள்ள பல இளைஞர்கள் இருக்கிறார்கள். அப்படி ஏராளமானவர்கள் இருப்பதால் அதற்கான பயிற்சியாளர்களைச் செங்கற்பட்டை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிட நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் நகரில் இதுவரை நல்ல விளையாட்டுத் திடல் இல்லை. இந்தக்குறையைப் போக்க நகர மையப்பகுதியில் உள்ள சுகாதாரக் குறைவான, எதற்கும் பயன்படாத கற்பூரச் செட்டிக்குளத்தை தூர்த்துவிட்டு அதை நல்லதொரு விளையாட்டு மைதானமாக அமைத்துக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



[திரு. ஆனூர் ஜெகதீசன்]

(பிற்பகல் 12–50)

மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆய்வாளர் அலுவலகம் செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதை ரத்து செய்து, செங்கற்பட்டிலேயே மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆய்வாளர் அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து செங்கற்பட்டில் ராஜேஸ்வரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. இங்குள்ள இட நெருக்கடி வேதனை தரத்தக்கதாக இருக்கிறது. இதைப் பற்றி இரண்டு ஆண்டுகளாக அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதோடு விஞ்ஞான ஆய்வுக் கூடத்திற்கும் உணவுக் கூடத்திற்கும் கட்டடம் வேண்டும் என்றும் கேட்கப் பட்டிருக்கிறது. இதற்கும் விரைவில் கட்டடம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும், செங்கற்பட்டு நகரத்திலிருந்து பல அலுவலகங்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரை சைதாப்பேட்டையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மாற்றிய நேரத்தில், செங்கற்பட்டிலுள்ள அலுவலகங்கள் ஒன்றும் வேற்று இடங்களுக்கு மாற்றப்படாது என்று அண்ணா அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். இப்போது அந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார்களோ என்னவோ? எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக பல அலுவலகங்கள் செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரத்திற்கும், உத்திரமேரூருக்கும் மாற்றப்பட்டு வருகின்றன. இதைப் பார்த்து நாங்கள் மிகவும் வேதனைப்படுகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு நகரத்தை அடுத்த, பொன்விளைந்தகளத்தூர் என்ற இடத்திலுள்ள பள்ளியின் கட்டடம் வசதி எதுவும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இங்கு படிக்கின்ற சுமார் 700 மாணவர்களும் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும், இந்தப் பள்ளிக்கென்று புதிய கட்டிடத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னும் கட்டடம் வரவில்லை. ஆகவே உடனடியாக புதிய கட்டடத்தை கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்டடம்

[திரு. ஆனூர் ஜெகதீசன்]

இல்லாததன் காரணமாக உள்ளே உட்கார்ந்து படிப்பதற்கு லாயக்கற்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலுள்ள சிங்கப்பெருமாள்கோவிலில் உள்ள பள்ளி பழுது பார்க்கப்பட்டு வருகிறது. இதற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டு இருந்தும், கதவு, ஜன்னல், மேல் கைத்துண்டு இவைகள் எல்லாம் மோசமான நிலைமையில் இருந்தும் கூட, காண்டிராக்ட் எடுத்துக் கொண்ட பெரியவர்கள், பழைய பொருட்களை எடுத்து இழைத்து புதுப் பொருட்களாக போட்டுக் காட்டுகின்ற அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இதை நிறுத்தி சரியானபடி புதிய பொருட்களை வாங்கி கட்டட வேலையை மேற்கொள்ளும்படியும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வாயலூர் என்ற உயர் தொடக்கப் பள்ளிகள் மூன்றும் தரை மட்டமாக இருக்கின்றன. காண்டிராக்ட் எடுத்தவர்கள் இதைப்பற்றி இன்னும் கவனிக்கவில்லை. காண்டிராக்ட் எடுத்தவர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வேலையை உடனடியாகச் செய்யுங்கள் என்று எந்தவிதமான தாக்கீதும் அனுப்பவில்லை. இதிலுள்ள பிள்ளைகள் பக்கத்திலுள்ள மணற் பகுதிகளிலும், மரத்தடிகளிலும் இருந்து படிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோத்தாரி குழு செய்த பரிந்துரைகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டு சொல்லப்பட்ட வாக்குறுதியை வரவேற்கிறேன். அதற்காக என் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன.. அதே நேரத்தில் பரிந்துரைக்கு மாறாக மத்தியிலுள்ளவர்கள், கல்வியை மையப் பட்டியலில் வைத்துக் கொள்வதற்கு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படும்போது, அவர்கள் செயல்படுகின்ற விதம் வேதனை தருவதாக இருக்கிறது. அதே நேரத்தில் மாநில அரசு இந்த விஷயத்தில் உறுதியோடு செயல்பட்டு, கல்வித் துறை மாநிலப் பட்டியலில் இருக்க வேண்டும் என்று பார்த்துக்கொள்ள மற்றவர்கள் சொன்ன கோரிக்கையோடு எனது கோரிக்கையையும் சேர்த்து இணைத்துக்கொள்கிறேன்.

பொதுவாக இன்றைக்குக் கல்வி எவ்வளவு முக்கியமானது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுடைய பேச்சுக்களிலிருந்து தெரிகிறது. அது மட்டுமல்ல. இந்த மானியத்தோடு பிற மானியங்களை அதற்கான நிதி ஒதுக்கீடுகளை ஒட்டுமொத்தமாக ஒப்பிட்டு பார்ப்போமேயானால் சுமார் 222 கோடி ரூபாயை



[திரு. எம். ஏ. லத்தீப்]

கல்விக்காக மட்டும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு செலவு செய்து, சமுதாயத்தில் இருக்கின்ற மக்கள் வாழையடி வாழையாக நல்ல முறையில் வருங்காலத்தில் பயனுள்ள மக்களாகத் திகழவேண்டும் என்ற அடிப்படையில் நமது கல்வித் திட்டம் அமைய வேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்ப்பது நியாயமான ஒன்று என்பதை நான் வலியுறுத்திச் சொல்லத் தேவையில்லை. கல்வி என்பது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சாதனையாக அமைந்திருக்கின்ற காரணத்தால் சமுதாய அமைப்புகளில் இருக்கின்ற பல்வேறு நிலைமைகளை மாற்றிக் கொள்கிற வகையில், கல்வி என்பது இன்றைக்கு அந்த அளவுக்கு உருவெடுத்து இருக்கின்ற காரணத்தால் அதற்கு எவ்வளவு செலவு செய்தாலும் அது பெரியதொரு செல்வமாக, பயனுள்ள செல்வமாக அமையும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்வி மட்டும் இருந்தால் பேதாது. கல்வித் துறையிலே படிக்கின்ற மாணவர்கள் எல்லாம், அப்படிப் படித்து பட்டதாரிகளாக வெளியே வந்து தங்களுக்கு வேலை கொடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு பிரச்னையாக இருக்கிறது. கல்விப் பிரச்னையைத் தீர்க்கின்ற அதே நேரத்தில், வேலையில்லாத பொருளாதாரப் பிரச்னையை சமுதாயத்திலே உருவாக்கிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவர்கள் சமுதாயத்தில் பெறுகின்ற நன்மை காரணமாக, அவர்கள் சமுதாயத்திற்காகப் பாடுபட வேண்டிய கடமைப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் நீதி உள்ளத்தோடும், நேர்மை உள்ளத்தோடும், மனிதாபிமான உள்ளத்தோடும், கடமை உணர்வோடும் அதேநேரத்தில் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி அவர்கள் பொறுப்புணர்வோடும், கடமை உணர்ச்சியோடும் சமுதாயத்தில் ஈடுபடாவிட்டால், அதற்கு நம்முடைய கல்வியிலே, கல்வித் திட்டத்திலே ஏதோ குறை, அடிப்படையான குறை இருக்கின்றது என்பதை நான் எடுத்துக்காட்டுவதோடு அமையாமல், அந்த அடிப்படைக் குறையைப் பற்றித் தயவுசெய்து நாம் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் நம்முடைய முதுபெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் ஆசார்ய கிருபளானி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களிடையே பேசும்போது ஒரு அருமையான கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும். மாணவர்கள் கல்விச்சாலைகளுக்கு

[திரு. எம். ஏ. லத்தீப்]

வருவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை அவர்கள் எடுத்துக்காட்டி, ' மாணவர்கள் அரசியல்வாதிகளுடைய அந்தப் போக்கிலே இருந்து தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் ' என்ற அழகான கருத்தை எடுத்து வைத்திருக்கிருர்கள்.

அரசியல்வாதிகள் தங்களுடைய காரணமாக எதிர்காலத்தில் இந்த நாட்டை உருவாக்குகின்ற மாணவர் சமுதாயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுடைய எதிர்கால நன்மைக்கு வேட்டு வைக்கின்ற முறையில் நாட்டிலே பல காரியங்கள் நடந்து வருகின்றன. அதிலே இருந்து அவர்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக்கொள்ள வேண்டுமென்று தந்தை உள்ளம் படைத்த இந்த நாட்டினுடைய பெருந்தலைவர் என்று கருதப்படுகின்ற ஆசார்ய கிருபளானி அவர்கள் சொல்லியிருக்கின்ற இந்தக் கருத்தை இந்த நாட்டு மக்கள் எல்லோரும் நிதானத்தோடு நினைவுபடுத்திப் பார்க்கவேண்டியது, சிந்தித்துப் பார்க்க வேண்டியது மிக அவசியம் என்றும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய கல்வியைப் பற்றிச் சொல்கின்ற நேரத்தில், ஒழுக்கமில்லாத கல்வி, கடிவாளமில்லாத குதிரைக்கு ஒப்பாகும்; ஒழுக்கமில்லாத கல்வி பிரேக் இல்லாத காருக்கு ஒப்பாகும்; ஒழுக்கமில்லாத கல்வி கார்காணுத பயிருக்கு ஒப்பாகும் என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சமுதாயத்தில் கல்வியை மட்டும் வளர்த்து விட்டால் போதாது. இந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற பல்வேறு துறைகளின் நல்லெண்ணத்தை உருவாக்குகின்ற ஒரு சாதனமாக கல்வித் துறை அமைந்திட வேண்டும். ஆகவே, பழங்காலத்தில், ஏகாதிபத்திய காலத்தில் வகுத்த, பிரிட்டன் நாட்டிலே இருந்த வரலாற்றின் அடிப்படையிலே அமைந்திருக்கின்ற இந்தக்கல்வி முறையை, அந்த முறையிலே எழுதிவைத்து இந்த நாட்டின் பல்வேறு சமுதாய அமைப்பிற்கு வழி வகுக்கின்ற அந்தச் சரித்திர குப்பைகளையெல்லாம், குப்பைத் தொட்டியிலே போட்டுவிட்டு, புதிதாக இந்த நாட்டின் சரித்திரத்தை உருவாக்க வேண்டும். இது நாட்டிலே இருக்கின்ற சமுதாயங்கள் இடையே அன்பையும், பாசத்தையும், பொறுப்பையும் ஏற்படுத்துகின்ற நல்ல வரலாருக எழுதப்பட வேண்டும்.

முஸ்லீம்கள், இந்துக்கள், மற்றவர்களிடையே பிணக்குகள் ஏற்படுகின்ற விதத்தில் பல்வேறு வகையான முயற்சிகள் பாடத் திட்டங்களிலே அமைத்து, இந்த நாட்டிலே ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படாமல் தடுக்கும் வகையிலே இந்த நாட்டினுடைய வரலாறு எழுதப்படுமானால், அது நாட்டிலே வாழ்கின்ற



[திரு. எம். ஏ. லத்தீப்]

வெவ்வேறு இன மக்களிடைய்ய பிணக்குகளை ஏற்படுத்துமானுல், நாம் பெறுகின்ற கல்வி பயனற்ற கல்வி முறையாகும். இத்தகைய சரித்திர வரலாற்றுப் பாடங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, நல்ல முறையில் புதிய வரலாறு எழுதுவதற்கு, பாடத் திட்டங்கள் எழுதப்படுவதற்கு இந்த முறை மாற்றி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது எனது நீங்காத கடமை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1–00]

அதே நேரத்திலே ஒழுக்கத்தை மாணவர்களிடத்திலே ஏற்படுத்த வேண்டுமென்ருல் அவர்களுக்கு நீதி போதனை வேண்டும். மார்க்க போதனை வேண்டும். மன உணர்வுகளில் மனிதாபிமானத்தைப் பேணுகின்ற எண்ணங்களை உருவாக்க அத்தகைய நீதி போதனைகள், மார்க்க போதனைகள்—ரிலிஜியஸ் எஜுகேஷன் அண்டு மாரல் எஜுகேஷன்—தரப்பட வேண்டுமென்று கூறுவது நியாயம். ' செக்குலர் என்ற பெயரில் இந்த போதனைகள் இன்றி பல்வேறு துறையில் மாணவர்களிடையே ஒழுக்கமின்மை நிலவுகிறது. இதற்குக் காரணம் என்ன ? அவர்களிடம் மார்க்க உணர்வு இல்லை ; பக்தி இல்லை ; நீதி பற்றி அச்சம் இல்லை. அவரவர்களுக்கு உரிய மார்க்கத்தை, அவர்கள் போற்றுகின்ற மார்க்கத்தை, அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற மார்க்கத்தை அனுசரித்து அவர்களுக்கு மார்க்க போதனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றைப் பாடப் புத்தகங்களில் இணைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் பிரச்சினை தீரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக வேதனையான ஒரு காட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆசு–இரியர்கள்—குறைகளை அகற்ற வேண்டிய ஆசிரியர்கள் இன்றைக்கு மாசு இரியர்கள் ஆகிவிட்டார்கள். அந்த ஆசிரியர்கள் இன்று தெரு வீதிக்கு வந்து ஆட்சிக்கு விரோதமாகப் போகிருர்கள் என்பது பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. மாணவர்கள் எழுதுகின்ற பரிட்சையை நாங்கள் கண்காணிக்க மாட்டோம் என் சொல்லும் அளவுக்கு ஆசிரியர்கள் வந்திருக்கிருர்கள் என்ருல் என்னநிலைமை நாட்டில் உருவாகியிருக்கிறது என்பதை அருள்கூர்ந்து கவனித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தொழிலாளர்கள் யூனியன்கள் மூலம் கோரிக்கையை வைக்கிருர்கள்; அவர்கள் போராடுகிருர்கள்; அது வேறு பிரச்சினை. ஆசிரியர்கள் என்ருல் அவர்கள் இறைவன் சந்நிதியில் வேலை செய்கிற அர்ச்சகர்களுக்கு ஒப்பாகும். அர்ச்சகர்கள் எல்லாம் கூட நாங்கள் சந்நிதானத்தை மூடிவிடுகிறோம் என்று சொல்லிப் போராட்டம் நடத்தினுல் எவ்வளவு அசிங்க

[திரு. எம். ஏ. லத்தீப்]

மாக இருக்குமோ அந்த அளவுக்கு சமுதாயத்தின் வருங் காலத்தை உருவாக்கும் பொறுப்பாளிகளாக இருக்கும் ஆசிரியர்கள் இன்றைக்குப் பரீட்சை நடத்துவதைக் கண்காணிக்க மாட்டோம் என்று கூறுவது இருக்கிறது. பரிட்சை நடக்காது என்று மாணவர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் அளவுக்கு அவர்கள் பரிட்சைக்குத் தங்களைத் தயார் செய்து கொள்ளாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் வராததன் காரணமாகப் பரிட்சைகள் இல்லையென்ற உணர்வை ஏற்படுத்துவது ஆசிரியர்களுக்கு அழகா? ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள் தங்களுடைய மாபெரும் பொறுப்பை நிதானத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதிலே அவர்கள் தவறிவிட்டார்கள் என்ற குற்றச் சாட்டை நான் சுமத்துகிறேன்.

நான் கூட ஒரு காலத்தில் ஆசிரியனாக இருந்தேன். பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்குப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்தேன். என்னிடத்தில் படித்தவர்கள் இன்றைக்கு பல்வேறு பதவியில் இருப்பவர்கள்தான்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் லத்தீப் அவர்களிடம் படித்த மாணவர்கள்தான் இன்று போராட்டத்தைத் துவங்கியிருப்பதாகத் தெரிகிறது.

திரு. எம். எ. லத்தீப் : நல்ல வேளையாக அவர்களிலே ஆசிரியர்களாக வெகு சிலரே இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து சில பேர் கலெக்டராகவும் இருக்கிறார்கள். நான் சொல்லுவது ஒரு தந்தையாக ஒரு தனயனை இந்த நாட்டில் வாழ வைக்கின்ற ஒழுக்கமுடையவனாக உருவாக்குகின்ற எண்ணத்தில் இந்த நிலை பெருத்த வேதனையை உண்டாக்குகிறது. இந்த நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்து இந்தக் கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் 200 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்படுகிறது. சாதாரண விவசாயி கிராமத்தில் இருந்து கொண்டு தன்னுடைய மகனை சென்னைக்குப் படிக்க, தான் ஒரு வேளை கூழ் சாப்பிட்டு இரண்டு வேளை பட்டினி கிடந்து மகனைப் படிக்க அனுப்புகிறேன். அந்த அளவுக்கு அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க அனுப்பும்போது அவர்களுக்கு ஒழுக்கத்தை கடமையைக் கற்றுத் தரவேண்டிய ஆசிரியர்கள் இன்றைக்குப் பேராட்டம் நடத்தி மாணவர்கள் பரிட்சை எழுதுவதற்கு உதவ மாட்டோம் என்று சொல்வார்களானால் அப்படிச் சொல்லுகிறவர்கள் மீது ஆட்சி நடவடிக்கை எடுக்கத் தயங்குவார்களானால் இந்தக் காலம் மட்டுமல்ல, வருங் காலம் கூட நம்மை மன்னிக்காது என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



[திரு. எம். ஏ. லத்தீப்]

நான் இதை அரசியல் வாதியாகச் சொல்லவில்லை. அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் சொல்லுகிறேன். தந்தை என்ற முறையில் சொல்லுகிறேன். வருங்கால சமுதாயத்தில் கவலை உள்ளவன் என்ற முறையில் சொல்லுகிறேன். ஆசிரியர்களுடைய இந்தப் போக்கை நான் கண்டிக்கிறேன், கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற முறையில் கண்டிக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: நேற்று என்னைச் சந்தித்த ஆசிரியர்கள் இந்த உணர்வுகளை மதிக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு எம். ஏ. லத்தீப் : அமைச்சர் அவர்கள் இந்த உணர்வுகளை ஆசிரியர்கள் மதிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். கல்வித் துறை நாயகராக கல்வித் துறையின் அங்கமாக இருக்கிற அவர்களே இதைச் சொன்னதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அவர்களுடைய கோரிக்கை என்ன என்பதைப் பற்றித் தயவு செய்து கேட்டுப் பாருங்கள். 1973ம் ஆண்டிலிருந்து ரிட்ராஸ்பெக்டிவ் ஆக கொடுக்க வேண்டும். அது சாத்தியமா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம்.

இப்போது புதிதாகத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்களே 10+2+3 திட்டம் என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு வேலை போய்விடுமோ என்ற அச்சத்தைக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். அந்த அச்சத்தின் காரணமாக இந்த அடிப்படையான போராட்டத்தை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் வேலை அவர்களுக்குப் போகாது என்ற ஒரு உறுதியான முடிவை ஏன் அரசு அறிவிக்கக் கூடாது/ தயவு செய்து அமைச்சரவர்கள் இந்தப் புதிய திட்டத்தின் காரணமாக எந்த ஆசிரியருக்கும் வேலை போகாது என்ற உத்திரவாதத்தை அளிப்பார்களானால் அவர்கள் திருப்தியடைகிறார்களா என்று பார்ப்போம்.

நீங்கள் ஆசிரியர்கள் மற்றவர்களைப் போல அல்ல மாணாக்கர்களை உருவாக்குகிறவர்கள் மாணாக்கன் என்ற தமிழ்ச் சொல் அழகான சொல் மாணாக்கன் என்றால் மாணவனை ஆக்குபவன் என்று பொருள். மாண்பினை ஆக்குபவன் என்று பொருள். அப்படிப்பட்ட முறையிலே மாண்பினை ஆக்கக் கூடியவர்களாக இருக்கிறவர்கள் ஏன் இப்படி ஊறுகளை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணாக்கர்களை உருவாக்கும், மாண்பினை உருவாக்கும் உயர்ந்த நிலையில் உள்ள ஆசிரியர்களை நான் இந்த

[திரு. எம். ஏ. லத்தீப்]

அவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன் தயவு செய்து பொறுப்பை உணர்ந்து பரீட்சைகளை நடத்துவோம் என்ற நல்ல அறிவிப்பைத் தாருங்கள், அது தான் என்னுடைய வேண்டுகோள்.

நம்முடைய பாரதத்தினுடைய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ராஜ்கோட்டிலே பேசுகின்ற போது இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கு ஒரு அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள்.

"There is going to be a basic change in the very set up of the educational system in all the levels in our country and education is going to be impaited particularly to achieve the emerging socio economic aspirations of the community."

என்றெல்லாம் அங்கே பேசியிருக்கிறார்கள். இந்தச் சமுதாய பொருளாதார அபிலாஷைகளுக்கு ஒப்ப நாங்கள் பாடத் திட்டங்களை மாற்றப் போகிறோம் என்று ஜனவரி மாதத்திலே பேசியிருக்கிறார்கள்.

இப்போது இந்த நிதிநிலை அறிக்கை இங்கே வந்திருக்கிறது. அவர்களுடைய பேச்சின் விளைவு என்ன? மத்திய அரசாங்கம் எந்த முறையிலே சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். கல்வித் துறையிலே அடிக்கடி மாற்றங்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவது என்பது அதிகச் சிக்கல்களை ஏற்படுத்தும். ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமென்றால் அதைத் தீர ஆலோசித்து முடிவான மாற்றம் செய்யுங்கள், அடிக்கடி மாற்றுவது என்று சொன்னால் மக்கள் கல்வியைப் பற்றி ஒரு சந்தேகத்தைக் கொண்டிருக்கிறார்கள், அது நல்லதல்ல, அதைப்பற்றி யோசித்து இப்படிப்பட்ட மாற்றங்கள் வரும் போது மிக ஜாக்கிரதையாக, முனைப்பாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹையர் செகண்டரி கல்வியை ஸ்கூல் நிலையிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று அரசு முடிவெடுத்து இருக்கிறது. இதற்குப் பொருளாதார காரணம், நிதிப் பற்றாக்குறை காரணமாக இருக்கலாம், எங்களுக்குத் தெரிகிறது, ஆனால் புகுமுக வகுப்பு கல்லூரிகளிலிருந்து எடுக்கப்படுமானால் அந்தக் கல்லூரிகளிலே புகுமுக நிலை இருந்தால்தான் அந்தக் கல்லூரிகளையே நடத்த முடியும் என்ற நிலை உருவாகும்போது, அந்தக் கல்லூரிகளிலே கட்டடங்கள் இருக்கின்றன, சாதனங்கள் இருக்கின்றன இவற்றையெல்லாம் பயன்படுத்துகின்ற வகையிலே மாணவர்களின் எண்ணிக்கை புரப்போர்ஷனுக்கு இல்லாமல் போனால் அந்தக் கல்லூரிகளிலே சீர்கேடு ஏற்படும். ஏன் அந்தக் கல்லூரிகளுக்கு சில ஆண்டுக் காலம் கொடுக்கக் கூடாது.



[திரு. எம். ஏ. லத்தீப்]

இங்கே பேசிய சில உறுப்பினர்கள் தனியார் பள்ளிகள் எல்லாம் ஏதோ பூதங்கள் பேய்கள் போலப் பேசினார்கள், அவற்றையெல்லாம் உடனடியாக அழித்துவிட வேண்டும் எனறு சொன்னார்கள். தனியார் கல்லூரிகள் இந்த மாநிலத்திலே ஒரு லயாலோ கல்லூரி இல்லாமலிருந்தால், கிறித்தவக் கல்லூரி இல்லாமலிருந்தால், பிஷப் கல்லூரி இல்லாமலிருந்தால், செயின்ட் ஜோசப் கல்லூரி இல்லாமலிருந்தால், செயின்ட் சேவியர்ஸ் கல்லூரி இல்லா, மலிருந்தால் செயின்ட்ஜான் கல்லூரி இல்லாமல இருந்தால் இஸ்லாமியக்கல்லூரி இல்லாமல் இருந்தால் விவேகானந்த கலலூரி இல்லாமலிருந்தால் இந்த நாட்டிலே உள்ள நிர்வாகத்திலே மேற்கொண்டிருக்கிற பல்வேறு துறையினர் என்ன நிலைமையில் இருப்பார்கள்? குறைகள் இருந்தால் அவை கண்டிக்கத் தக்கவை. தனியார் துறையிலே இருந்தாலும் சரி, பொதுத் துறையிலே இருந்தாலும் சரி........

<u>திரு. துரை முருகன்</u> : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், அதைப் போன்ற வாய்ப்பு எங்களுக்கும் தருகிறீர்களா?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : 10 நிமிடங்கள் பேசிவிட்டார், முடிக்கச் சொல்லிவிட்டேன், முடிக்கப் போகிறார்.

<u>திரு எம். ஏ. லத்தீப்</u> : தலைவர் அவர்களே கொடுத்த நேரமே இன்னும் இருக்கிறது. நான் பேசுவதைப் பற்றி துரை முருகன் ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறார் என்று தெரியவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நீங்கள் பேசுங்கள்.

[பிற்பகல் 1–10]

<u>திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : தலைவரவர்களே, அவர் கேட்டதற்குக் காரணம், துரை முருகன் லத்தீப் அவர்களிடம் படித்தவர், அதுதான் விவகாரம்.

<u>திரு எம். ஏ. லத்தீப்</u> : ஆகவே, தனியார்களைப் பற்றி இப்படியெல்லாம் பேசாதீர்கள். அவர்களும் சேவை செய்து வந்திருக்கிறார்கள், சேவை செய்ய இருக்கிறார்கள். எங்கே குறை இருந்தாலும் சுட்டிக் காட்டுங்கள், நானும் உங்களோடு சேர்ந்து கண்டிக்கிறேன். ஆகவே; இப்படியெல்லாம் பேச வேண்டாமெனறு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்]

அடுத்து சில விஷயங்களில் சில தவறுகள் நடக்கின்றன. 1977–78 ஆம் ஆண்டு காயிதே மில்லத் கல்லூரி பல்கலைக் கழகத்திலேயே ரொம்ப முதன்மைப் பெயரிலே வந்திருப்பதாக டைரக்டர் ஆப் காலேஜியேட் எஜுகேஷனிடமிருந்து வந்தது. நான் அப்பொழுது ஊரிலே இல்லை, வடநாட்டிலேயிருந்தேன். வந்த பிறகு, பிரசிடென்சி கல்லூரியில் பரிசு வழங்கப்படும் என்று அங்கு உறுப்பினர்கள் சென்றபொழுது, அது வேறு கல்லூரிக்கு கொடுக்கப்பட்டுவிட்டது, காரணம் பி.யூ.சி. யிலே அங்கே மூன்று செக்ஷன்கள், இங்கே இரண்டு செக்ஷன்கள் என்று சொன்னார்கள். இதையெல்லாம் பார்க்காமல் ஏன் அனுப்புகிறார்கள் அப்படியெல்லாம் அனுப்பிய பிறகு முதல் பரிசு என்று இல்லாவிட்டாலும் கன்சொலேஷன் பிரைசாவது கொடுத்திருக்கக் கூடாதா?

I demand, that the Kayathe Millath College should be given as per the notification issued by the Directorate of Collegiate Education a prize. I feel that there seems to be a patent discrimination against that Institution.

Notification ஏன் அனுப்புகிறீர்கள்? அனுப்பிவிட்டு இல்லை என்று சொல்வதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து சீக்கிரம் முடியுங்கள்.

திரு எம். ஏ. லத்தீப் : நான் இந்த நேரத்தில் கேட்டுக கொள்கிறேன. பொறியியல் கல்லூரிகள், தொழில் கல்லூரிகள் ஆகியவற்றை ஆரம்பிக்கும் பொழுது இந்தந்த இடத்திலே வைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று கவனத்தில் வைகக வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது அவசியம் எனறு சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, ஆலங்காயத்தில் புயல் வந்தபொழுது அங்குள்ள அரசினர் ஆண்கள் கல்லூரியின் கட்டடங்களெல்லாம் இடிந்து போயின. அதற்காக ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் சாங்ஷன் செய்திருப்பதாக ஒரு குறிப்பு வந்தது. ஆனால் இப்பொழுது கேட்டால் பணம் தீர்ந்து விட்டது என்று சொல்கிறார்கள். அங்கேயுள்ள மூலக கட்டடத்தை நாங்களே எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கட்டிக் கொடுத்து வந்திருக்கிறோம். மூலக் கட்டடத்தை நாங்கள் கட்டிக் கொடுத்து, பிறகும் கட்டிக் கொடுத்தோம். அப்படியென்றால் இதில் அரசினுடைய பொறுப்பு என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்,



[திரு. எம். ஏ. லத்தீப்]

ஆலங்காயத்தில் ஒரு ஹையர் செகண்டரி ஸ்கூல்தான் இருக்கிறது. அதைத் தவிர வேறு ஹைஸ்கூலே கிடையாது. ஜவ்வாது மலைப் பகுதியில் உள்ள அத்தனை மாணவர்களும் அங்கேதான் வந்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து முடியுங்கள், உங்களையடுத்து இரண்டு பேர் பேச வேண்டும். முடிக்கவில்லை யென்றால் வேறு பெயரை அறிவித்துவிடுவேன்.

திரு. ஏம். ஏ. லத்தீப் : ஆலங்காயத்திற்குக் கட்டட மானியத்தை அதிகமாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் என்னுடைய உணர்வுகளைச் சொல்லியிருக்கிறேன். அது எந்தச் சாராருக்கும் விரோத மானது அல்ல, ஒட்டு மொத்தமான சமுதாயத்தின் வருங்கால நன்மைக்கான வக்கீல் என்ற முறையில் பேசியிருக்கிறேனே தவிர எந்தச் சமுதாயத்திற்கோ அல்லது எந்தச்சாராருக்கோ விரோதமான எண்ணத்தில் அல்ல என்பது இந்த அவைக்குத் தெரியும், அவையிலே உள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்பிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. தி. அன்பழகன் அவர்கள் ஏழு நிமிடங்களில் முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 1978–79 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன. நாட்டின் வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையான தேவை கல்வி. அப்படிப்பட்ட கல்வியைப் புரட்சித் தலைவருடைய அரசு எப்படிச் செயல்படுத்தி வருகிறது என்பது இந்த மானியத்தின் மூலம் நன்கு விளங்குகிறது. 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கில் மொத்த செலவினமான ரூபாய் 727 கோடியில். ரூபாய் 176 கோடி கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. செலவிடப்படுகின்ற மொத்தத் தொகையில் 24 சதவிகிதம் கல்வி வளர்ச்சிக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வித் துறையில் இந்த அரசு எப்படி. அக்கறை செலுத்தி வருகிறது என்பது முந்தைய ஆண்டுகளுக்கும் இந்த ஆண்டுக்கும் உள்ள நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நமக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிகிறது. 1975–76 ஆம் ஆண்டில் 123 கோடி ரூபாயும்; 1976–77-ல் 143 கோடி ரூபாயும், 1977–78-ல் 169 கோடி ரூபாயும், நடப்பாண்டில் 176 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது,

[திரு. தி. அன்பழகன்]

கல்வி பற்றிய அதிகாரத்தைப் பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று இன்றைய அரசு விரும்புவது வரவேற்கத்தக்க ஒன்றாகும். மாநிலங்களில் கல்வி வளர்ச்சி பாதிக்காத அளவிற்குக் கல்வியின் தரம் உயர மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதற்குத் திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வரவேண்டுமென்று இங்கே நாம் வற்புறுத்தியாக வேண்டும்.

1978–79ஆம் ஆண்டில், 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களும், (உயர் தொடக்கப்பள்ளிகளுக்கும், உயர் நிலைப் பள்ளிகளுக்கும், சேர்த்து) 200 உடற்பயிற்சி ஆசிரியர்களும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 முதல்நிலைத் தமிழாசிரியர்களும் புதிதாக வேலை வாய்ப்புப் பெறுவார்கள் என்று இங்கே கூறப்பட்டிருக்கிறது. அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். குறிப்பாக, இன்று பல ஊராட்சி ஒன்றியங்களிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் குறைவாக இருந்தும் பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கிற நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதன்மூலம் அந்த நிலைமை ஓரளவுக்கு நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1978–79-ம் ஆண்டில் தொடக்கப் பள்ளிக் கட்டடங்களில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களுக்காக மட்டும் ரூ. 75 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமுதாய வளர்ச்சித் துறையின் கீழ் அந்தப் பணம் செலவழிக்கப்படும் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல இடங்களில் நீண்ட நெடு நாட்களாக நடந்து கொண்டிருக்கிற பள்ளிகள்கூட ஓலைக் கொட்டகைகளில் நடந்து கொண்டிருக்கிற நிலை தமிழகத்திலே பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையை இதன்மூலம் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிக் கட்டடப் பணிகளுக்காக இந்த ஆண்டு ரூ. 46 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களிலே கட்டடமே இன்றி பள்ளிகள் செயல்படுகிற நிலையும் இருக்கிறது. என்னுடைய நாட்ராம்பள்ளி தொகுதியில் கொரட்டி அரசு உயர்நிலைப்பள்ளி, நத்தம் அரசு உயர்நிலைப்பள்ளி, செயபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி, குரும்பேரி அரசு உயர்நிலைப்பள்ளி ஆகியவைகள் அறவே கட்டட வசதியின்றி நடந்து கொண்டிருக்கின்றன. இவைகளுக்குக் கட்டடங்கள் கட்ட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல் உயர்நிலைப்பள்ளி கல்வி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று இருக்க வேண்டுமென்று அரசு அறிவித்திருக்கிறது. குறிப்பாக, கிராமப் புறங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, பெரிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்தப் பள்ளியை அதிகப்படுத்த வாய்ப்பினை அளிகக வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



[திரு. தி. அன்பழகன்]

தவிர, மேல் உயர்நிலைப் பள்ளிகள் பெரும்பாலும் நகரங்களில் மட்டும்தான் நடத்தப்படுகின்றன. கிராமப்புறங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் கிராமங்களில் அதிக மேல் உயர்நிலைப் பள்ளிகளை அமைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழே பாடமொழியாக இருக்கும் என அரசு அறிவித்துள்ளது பாராட்டுக்குரிய ஒன்று. உயர் நிலைப் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு நீங்கி விடுகிற காரணத்தால், 7,000 பி.டி. ஆசிரியர்கள் வேலையிழக்காமல் பார்த்துக் கொள் வோம் என்று அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும், அதில் தீவிரமாகக் கவனம் செலுத்தி நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கல்லூரிகள் ஏற்படுத்தும் நேரத்தில், திருப்பத்தூர் பகுதியில் மகளிர் கல்லூரி அல்லது தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணத்தைச் செலவழிப்பதால் மட்டுமே கல்வியின் தரத்தை உயர்த்த முடியாது. கல்வி கற்றுத் தருகிற ஆசிரியர்களுக்கு மேலும் சலுகைகளை அளிக்க வேண்டும். கல்வித்துறை மற்ற துறைகளுக்குச் சமமாக இருக்க வேண்டும். கல்வித்துறை அல்லாத மற்றைய பல பணிகளை ஆசிரியர்கள் செய்வதைப் படிப்படியாகக் குறைத்து அவர்கள் கல்வித் துறையில் முழுமையாக ஈடுபட வாய்ப்பளிக்க வேண்டும்.

உயர்துவக்கப் பள்ளிகளுக்கு பி.டி. ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். கணவன் மனைவியாக இருக்கும் ஆசிரியர்கள் மாறுதல் இல்லாமல் ஒரே பள்ளியில் இணைந்து பணியாற்ற அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1970-ல் தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்களே மீண்டும் உயர் துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்ற வேண்டுமென்று புல் பெஞ்ச்-இல் தீர்ப்பாகி, ஜி.ஓ-ஆக வெளி வந்துள்ளது. இந்த உத்தரவையே தொடக்கப் பள்ளிகளுக்கும் அமுல்படுத்த வேண்டும். இதனால் பணிப்படி கிடைக்கும் வாய்ப்பு பல ஆண்டுகள் பணிபுரிந்த தலைமை ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்.

கல்வி கற்பிப்பதில் நல்ல ஒழுக்கமும், கட்டுப்பாடும் இருந்தால் தான் கல்வியின் தரம் சிறந்ததாக அமையும். எல்லாப் பள்ளிகளிலும் ஆசிரியர்-பெற்றோர் சங்கத்தை அமைத்து அதன்மூலம் மாணவர்களிடையே சுமுகமான, கட்டுப்பாடான நிலைமையை, தன்மையைக் கடைப்பிடித்து, கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும்.

[திரு. தி. அன்பழகன்]

பொறுப்பேற்றிருக்கிற கல்வியமைச்சரவர்கள் நீண்ட நெடு நாட்களாக ஆசிரியராகப் பணியாற்றி, இந்தப் பொறுப்புக்கு வந்திருக்கிற காரணத்தினால், கல்வித் துறையின் நெளிவுசுளிவுகளை அறிந்து கல்வியின் தரத்தை உயர்த்த முயற்சி செய்திருக்கிறார். அந்த முயற்சி கல்வி மானியத்திலே, குறிப்பாக, ஆசிரியர்களுக்குப் பயன்படுகிற வகையிலே அமைந்திருக்கிறது என்ற வகையிலே பாராட்டி, இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

[பிற்பகல் 1.20]

திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்தை இங்கே கூறுகிறேன்.

நம் மாநிலம் முழுவதிலும் பள்ளிக் கட்டடங்கள் சீர் செய்து மேம்படுத்த 1.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று தமிழகத்தில் பல பள்ளிகளில் கட்டட வசதிகள் இல்லாத காரணத்தால் மரத்தடி நிழலில் இருந்து படிக்கின்ற ஒரு நிலையினைப் பார்க்கிறோம். இதை மனத்தில் கொண்டு எண்ணிப் பார்ப்போமானால், இதற்காக ஒதுக்கப்பட்ட 1.54 கோடி ரூபாய் மிகவும் குறைவான தொகையாக இருக்கின்றன. ஆகையால், கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் பள்ளிக் கட்டடங்கள் சீர்செய்ய அதிக நிதி ஒதுக்கி கிராமப் புறங்களில் உள்ள பள்ளிகளுக்குக் கட்டட வசதியை அபிவிருத்தி செய்து தர அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது கல்வித் தரம் உயர வேண்டுமானால் ஆரம்பப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தாத வரையில் கல்வியின் தரத்தை உயர்த்த முடியாது. இன்று கிராமங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் கரும்பலகை, தேசப் படம் கூட இல்லாத நிலையினைப் பார்க்கிறோம். இது மாதிரியான சிறு குறைபாடுகளைப் போக்கி ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் நடைபெற்றுவரும் மதிய உணவுத் திட்டத்திற்கு அரசு ஒரு மாணவனுக்கு உணவளிக்க 10 காசும் ஒன்றியப் பொது நிதியிலிருந்து 5 காசும் ஆக 15 காசுகள் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி இல்லாத காரணத்தால் ஒன்றியங்களின் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற 5 காசுகள் கொடுக்கப்படவில்லை. ஒரு மாணவனுக்கு உணவளிக்க



[திரு. த. புஷ்பராஜ்]

15 காசுகள் என்பது மிக மிகக் குறைவு. அப்படி இருக்க 10 காசுகளுக்கு எவ்வாறு உணவளிக்க முடியும்? இதை நன்கு உணர்ந்து அரசு 15 காசுகளுக்கு மேல் அதிகப்படுத்த முடியாவிட்டாலும் எப்போதும் உள்ள 15 காசுகள் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வருகின்ற ஆண்டில் புதிய கல்வித் திட்டமாகிய 10+2+3 கல்வித் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இத்திட்டத்தினால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு மேல் வேலையை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பல ஆண்டு காலமாக வேலையில் இருந்து விட்டு இன்று வேலை இல்லையென்றால் அவர்களுடைய நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று தமிழகத்தில் சாதாரணப் பியூன் வேலை கிடைப்பது கூட அரிதாயுள்ளது. இந்த நிலைமையை நன்கு உணர்ந்து அரசு புதிய கல்வித் திட்ட முறையை கொண்டு வரும்போது எந்த ஒரு ஆசிரியரும் வேலை இழக்காவண்ணம் இந்த அரசு செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 10 ஆண்டுக் காலமாகத் தமிழகத்தில் உள்ள ஆரம்ப நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பதவிப் பிரச்சினை முறையாக தீர்க்கப்படாமல் இருந்து வருகிறது. இதனால் ஆசிரியர்கள் மத்தியில் நல்ல சூழ்நிலை உருவாகவில்லை. ஆகவே, முன்னுரிமை உள்ள ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமித்து அப்பிரச்சினைக்கு முடிவு காண அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசு மூலம் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையும் இலவச பாடப் புத்தகங்களும் உரிய காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. இதனால் ஏழை மாணவர்கள் பல துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவதுடன் கல்லூரி ஆசிரியர்கள்—மாணவர்கள் தகராறு ஏற்படுவதற்கு வழி வகுக்கின்றது. ஆகையால் தாமதமில்லாமல் உதவித் தொகையும் பாட புத்தகங்களும் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தொழிற் கல்வி (ஐ.டி.ஐ.) நிலையங்களில் மிகக் குறைந்த மாணவர்களே பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். இன்று தமிழகத்தில் உள்ள முக்கியப் பிரச்னைகளில் ஒன்றான வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இந்த மாதிரியான தொழிற் கல்வி நிலையங்களில் அதிகப்படியான மாணவர்களைச் சேர்த்து பயிற்சி அளிக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் தொழில் செய்ய வழிவகையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

128-267—17

[திரு. த. புஷ்பராஜ்]

புதுக்கோட்டை மாவட்டத்தின் தலைநகரான புதுக்கோட்டையிலேயே கல்லூரி அமைந்திருப்பதால், மாவட்டத்தின் தொலை தூரத்தில் உள்ள மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க வசதியில்லாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையினைப் போக்க எங்கள் மாவட்டத்தில், புதிய நகராட்சியாக ஆக்கப்பட்ட அறந்தாங்கியில், அரசினர் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கறம்பக்குடி யூனியன் மிகப் பெரிய யூனியன், ஆகையால் கறம்பக்குடி உயர்நிலைப் பள்ளியை ஹையர் செகண்டரி பள்ளியாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு திருவரங்குளம் யூனியன் கீரமங்கலம் டவுன் பஞ்சாயத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் தாலூகாவில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லை. ஆகையால் முதுகுளத்தூரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, இன்று தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளுக்குப் பதில் பல மாதங்களாக புதிய அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. இதனால் பொது மக்கள் வேலை மிக தாமதமாக நடைபெறுகின்றது. ஆகையால் ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளுக்குப் பதில் புதிய அதிகாரிகளை உடனடியாக நியமித்து பொது மக்கள் வேலை துரிதமாக நடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு மாதத்திற்கு முன்பு புதுக்கோட்டை நகரில் நடந்த தீ விபத்து சம்பந்தமாக 17 பேர் உயிர் இழந்தார்கள். ஆனால் இது வரையில் அரசு அவர்களுக்கு எந்தவிதமான உதவித் தொகையும் கொடுக்கவில்லை. ஆகவே, அரசு இது விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, உயிர் இழந்தவர்களுக்கும், காயம் அடைந்து ஆஸ்பிடலில் இருக்கின்ற நபர்களுக்கும், உதவித் தொகை கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நல்ல வாய்ப்பினை அளித்த சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 10 பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

296. அடுத்துவரும் தேர்தல் நடைபெறும் தேதி முதற் கொண்டு செயலுக்கு வரும் வகையில் மதுரை மாநகராட்சியை அறுபத்தைந்து வார்டுகளாகப் பிரிப்பது குறித்து ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ஆம் தேதி இடப்பெற்ற 1612-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

297. நிலக் கடலை, எள், நெல், எல்லா வடிவங்களிலுமான கரும்பு வெல்லம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், தென்னாற்காடு மாவட்டம் அவலூர்பேட்டை அங்காடிப் பகுதியை அறிவிக்கப்பெற்ற ஒரு அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்த, வேளாண்மைத் துறையின் 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் தேதியிடப் பெற்ற 105 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

89. உடுக்குறியிடாத வினா—விடைப் பட்டியல் (276 முதல் 295 வரை).

## இணைப்புகள்.

### இணைப்பு I.

[457-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 366-க்கான விடையைக் காண்க.]

(அ), (ஆ)—உயர் நீதிமன்றத்திற்குக் கீழ்ப்பட்ட சிவில், கிரிமினல் நீதி மன்றங்களில் 14—11—1976 முதல் தீர்ப்புகளையும், டிக்ரிகளையும், ஆணைகளையும் தமிழில்தான் எழுதவேண்டும் என்பதற்கு 1956 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஆட்சிமொழிச் சட்டத்தின் 4-பி பிரிவு வகை செய்கிறது. ஆணையில் குறிப்பிடப்படுகிற கால அளவுக்கும், சூழ்நிலைகளிலும் சிவில் அல்லது கிரிமினல் நீதி மன்றங்களின் தலைமை அதிகாரிகள் எவர்களேனும் தீர்ப்புகளையும், டிக்ரிகளையும், ஆணைகளையும் ஆங்கிலத்தில் எழுத அவர்களுக்கு அனுமதி வழங்க மேற்சொன்ன பிரிவின் வரம்பு நிபந்தனை உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. மேற் சொன்ன வரம்பு நிபந்தனையையொட்டி செஷன்ஸ் நீதிபதிகள் தீர்ப்புகளைத் தமிழில் எழுதுவது கடினமென்று அறிந்தால், அவர்கள் 2—11—1977 வரை அவற்றை ஆங்கிலத்திலும் எழுத உயர் நீதிமன்றம் இடைக்கால ஏற்பாடாக அனுமதித்தது. தாய் மொழி தமிழாக இல்லாத, அல்லது தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறாத, கிரிமினல் நீதிமன்ற நீதிபதிகள் அனைவரும் தீர்ப்புகளையும், ஆணைகளையும் 19—11—1977 வரை ஆங்கிலத்தில் எழுத உயர்நீதி மன்றம் அனுமதி அளித்தது, தங்கள் நீதி மன்றங்களில் தமிழ்த் தட்டச்சிலும், சுருக்கெழுத்திலும் போதுமான தகுதி பெற்ற தட்டச்சர்-சுருக்கெழுத்தர்கள்/தட்டச்சர்கள் இல்லை என்ற காரணத்திற்காகவும், மாஜிஸ்ட்டிரேட்டுகள் சிலருக்குத் தமிழில் நன்கு எழுதப் படிக்கத் தெரியாததாலும் அவர்கள் கேட்டுக் கொண்ட கால அளவிற்கு தீர்ப்புகளையும் ஆணைகளையும் ஆங்கிலத்தில் எழுதவும் உயர்நீதி மன்றம் அனுமதி அளித்தது. நீதிபதிகள் தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்ட கால அளவு ஏற்கெனவே முடிவடைந்துவிட்டது. இதனையடுத்து, தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதுவதிலிருந்து தங்களுக்கு விலக்கு அளிக்குமாறு ஒரு சில நீதிபதிகளே உயர்நீதி மன்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களுடைய வேண்டுகோள் உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. மற்ற அதிகாரிகளிடமிருந்து குறிப்பிட்ட வேண்டுகோள் வராததால், அவர்கள் தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் அனுமானிக்க வேண்டி உள்ளது. மேற் சொன்னவற்றால், நீதி மன்றங்களில் தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதுவது, தமிழ்த் தட்டச்சர்களும், சுருக்கெழுத்தர்களும் போதிய அளவில் கிடைக்காத காரணத்தினாலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று சொல்வது முற்றிலும் சரியல்ல. ஆயினும், தற்போதுள்ள ஆங்கில தட்டச்சர்களும், சுருக்கெழுத்தர்களும் குறிப்பிட்ட கால அளவுக்குள் தமிழ்த் தட்டச்சினையும், சுருக்கெழுத்தையும் கற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சுருக்கெழுத்தர்-தட்டச்சர்கள் தமிழ் சுருக்கெழுத்தில் உயர்நிலைத் தேர்வில் தேறியிருந்தால் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் சிறப்புச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்வில் அவர்கள் தேர்ச்சி பெறாவிட்டால், ஊதிய உயர்வும், பதவி உயர்வும் நிறுத்தி வைக்கப்படுகின்றன.



### இணைப்பு II.

[483ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 279-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) 68 தொழிற் பிரிவுகளுக்கு தவணைக் கடன் வாயிலாக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 41 தொழில் பிரிவுகள் உற்பத்தி தொடங்கி விட்டன. 41 தொழிற் பிரிவுகளில் 14 தொழிற் பிரிவுகள் இலாபத்துடன் இயங்கி வருகின்றன. 27 தொழிற் பிரிவுகள் இழப்பு அடைந்து இருக்கின்றன.

இலாபத்துடன் இயங்கி வரும் தொழிற் பிரிவுகள் :—

1. மெட்ராஸ் மோட்டார் லிமிடெட் (பிரிவு-1), போர்ஜ், ஷாப், அனைக்கரப்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்.

2. மெட்ராஸ் மோட்டார் லிமிடெட் பிரிவு 2 (ரோல் ரூம் பிளாண்ட்), அனைக்கரைப்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்.

3. ஸ்கேல்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

4. மார்சல்ஸ் சன்ஸ் அண்டு கம்பெனி உற்பத்தி லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

5. மெட்ராஸ் சிமெண்ட் லிமிடெட், இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம்.

6. அப்பலோ டியூப்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

7. ஐ. ஏ. இ. சி. பாய்லர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

8. ஆரோ புட் பிரைவேட் லிமிடெட், அரோவல்லி, தென்னாற்காடு மாவட்டம்.

9. லார்டு கிருஷ்ணா ஆயில் அண்டு எக்ஸ்டிராக்சன் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

10. சவுத் ஈஸ்டு டேனிங் கம்பெனி லிமிடெட், ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

11. கோரமாண்டல் லெதர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

12. டி. அப்துல் வஹத் டேனர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

13. எ. முகமது உசேன் அண்டு கம்பெனி, ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

14. சீத்தாலட்சுமி மில்ஸ் லிமிடெட், திருநகர், மதுரை.

இழப்பு அடைந்துவரும் தொழிற் பிரிவுகள்:—

1. ஸ்ரீவத்சா என்ஜினியர்ஸ், அனைக்கரைப்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்.

2. இன்டிராக் பார்மாட்டிக்கல்ஸ் லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

3. எஸ். பி. ஜி. சி. மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், விருதுநகர்.

4. திருமலை கெமிக்கல்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

5. ரால்ஸ்டன் கெமிக்கல்ஸ் உற்பத்தி கம்பெனி பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

6. பாலாஜி பேப்பர் போர்டு பிரைவேட் லிமிடெட், மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.

7. குன்னியூர் பேப்பர் போர்டு மில்ஸ் லிமிடெட், மன்னார்குடி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

8. டைமண்ட் சா அண்டு டூல்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

9. எஸ். ஆர். பி. டூல்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

10. சதர்ன் நைட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

11. சதர்ன் சிந்தடிக்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம். இராணிப்பேட்டை.



12. மதுரை ஆயில் அண்டு பெர்டிலைசர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், திண்டுக்கல், மதுரை மாவட்டம்.

13. சாம்கோ மெட்டல்ஸ் அண்டு அலாய்ஸ் பிரைவேட் லிமிடெட், கணியம்பாடி, வட ஆற்காடு மாவட்டம்.

14. ரெக்ஸின் சி (இந்தியா), முதுகளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

15. சங்கர் சால்வண்ட் ஆயில் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் மாவட்டம்.

16. ஒமேகா கேபில்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

17. ஸ்ரீ வடிவாம்பிகை டெக்ஸ்டைல் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்.

18. அப்பர் இந்தியா பேரிங்ஸ் அண்டு புஸ்ஸிங் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

19. கோதாரி பிளாண்டேசன் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், நகரி, மதுரை மாவட்டம்.

20. டியூப் சப்ளையர்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

21. ஸ்டென்ர்த்கோஸ், பட்டாபிராம், செங்கற்பட்டு மாவட்டம்.

22. மாலக் லெதர்ஸ், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

23. கோவலாங் பீச் ஹோட்டல் இந்தியா லிமிடெட், செங்கற்பட்டு மாவட்டம்.

24. அரக்கோணம் கேஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங் லிமிடெட், அரக்கோணம்.

25. அரவிந்து டிஸ்டெல்லரி அண்டு டேனரி லிமிடெட், இராணிப்பேட்டை.

26. ஹம்டன் மானூர் அண்டு கம்பெனி, கூனூர், நீலகிரி மாவட்டம்.

27. தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டை.

நிதியுதவி அளிக்கப்பட்டு, உற்பத்தியை தொடங்காத தொழிற் பிரிவுகள்—

1. இராமச்சந்திரன் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட், கீரனூர். புதுக்கோட்டை மாவட்டம்.

2. மார்சல்ஸ் சன்ஸ் அண்டு கம்பெனி உற்பத்தி லிமிடெட், அம்பத்தூர்.

3. தமிழ்நாடு பேப்பர் அண்டு பல்ப் பிராடக்ஸ் லிமிடெட், மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

4. ஸ்ரீவிக் கெமிக்கல்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

5. சதர்ன் ஆட்டோ பிரிண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சிப்காட்தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

6. ஹோசூர் எலெக்ட்ரிக் மெக்கோலிட் லிமிடெட், ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

7. சதர்ன் சால்வெண்ட் அண்டு எக்ஸ்ட்ராக்சன் கம்பெனி பிரைவேட் லிமிடெட், தியாகதுர்கம், தென்னாற்காடு மாவட்டம்.

8. நுமாட்டிக் டூல்ஸ் மானுபேக்சரிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

9. காலிமிக் இண்டஸ்ட்ரீஸ், அரூர் தாலூகா, தர்மபுரி மாவட்டம்.

10. நாகலட்சுமி ப்ளவர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், திண்டுக்கல், மதுரை மாவட்டம்.

11. லுமினிசர்ல் பெயின்ட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

12. மகாராஜ் பேப்பர் போர்டு வத்திராப், இராமநாதபுரம் மாவட்டம்.

13. சால்விக்ஸ் ஆயில் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

14. நியுமாட்டிக் ஆட்டோமைசிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.





15. சவுத் ஈஸ்ட் புட்வேர் லிமிடெட், ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

16. இராணிப்பேட்டை லெதர் பினிசிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

17. பேயன் டால்புரோஸ் லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

18. ஹைபிரோசெயின்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

19. லிட்டில்டன் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

20. அசிட்டிலிங் அண்டு இண்டஸ்ட்ரீஸ் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

21. கே. எச். லெதர்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், பிஞ்சி, வட ஆற்காடு மாவட்டம்.

22. டான்சி மெசின் டூல்ஸ், சிப்காட், தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

23. சிட்கோ, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

24. கீதா ஹோட்டல் பிரைவேட் லிமிடெட், சென்னை.

25. ரேவதி சி. பி. எக்கியூப்மெண்ட் லிமிடெட், கோயம் புத்தூர்.

26. பாபநாசம் பேப்பர் மில்ஸ் லிமிடெட், மேல் அம்பாச முத்திரம், திருநெல்வேலி மாவட்டம்.

27. இண்டர் காண்டிநெண்டல் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

[485ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 285-க்கான விடையைக் காண்க.]

கோவை மாவட்டத்தில் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வரும் குடிநீர்த் திட்டங்கள், அவற்றின் மதிப்பீடுகள், நடப்பு நிதியாண்டில் அவற்றிற்காகச் செலவிடப்படவிருக்கும் தொகை ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீடு. ரூ. | நடப்பாண்டில் செலவிடயிருக்கும் தொகை. ரூ. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பெருந்துறை ஊராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 60,85,000 | 58,000 |
| 2 | ஈரோடு குடிநீர் மேம்பாடுத் திட்டம் (முதல் கட்டம்). | 11,88,000 | 34,000 |
| 3 | காங்கேயம் குடிநீர்த் திட்டம். | 51,56,000 | 50,000 |
| 4 | சென்னிமலை குடிநீர்த் திட்டம். | 5,68,000 | 1,02,000 |
| 5 | சத்தியமங்கலம் குடிநீர் மேம்பாடுத் திட்டம். | 3,96,000 | 44,000 |
| 6 | வீரப்பன் சத்திரம் ஊராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 53,50,000 | 15,55,000 |
| 7 | கோபிசெட்டிப்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 3,62,000 | 3,15,000 |
| 8 | கொடுமுடி குடிநீர்த் திட்டம். | 11,92,000 | 7,75,000 |
| 9 | அந்தியூர் குடிநீர்த் திட்டம். | 28,00,000 | 15,08,000 |
| 10 | வெள்ளக்கோயில் குடிநீர்த் திட்டம். | 29,57,000 | 10,00,000 |
| 11 | மூலனூர் குடிநீர்த் திட்டம் | 10,72,000 | 5,00,000 |
| 12 | பவானி குடிநீர் மேம்பாடுத் திட்டம். | 1,52,000 | 5,000 |
| 13 | ஈரோடு குடிநீர் மேம்பாடுத் திட்டம் (இரண்டாவது கட்டம்). | 25,00,000 | 1,49,000 |
| 14 | ஈரோடு பால் பண்ணை குடிநீர்த் திட்டம. | 6,00,000 | 4,36,000 |
| 15 | பொள்ளாச்சி குடிநீர் மேம்பாடுத் திட்டம். | 35,86,000 | 76,000 |
| 16 | திருப்பூர் குடிநீர் மேம்பாடுத் திட்டம். | 23,00,000 | 6,00,000 |
| 17 | புஞ்சைப் புளியம்பட்டி குடிநீர்த் திட்டம். | 25,74,000 | 14,000 |
| 18 | சிறுமுகை குடிநீர்த் திட்டம். | 39,34,000 | 3,62,000 |
| 19 | உடுமலைப்பேட்டை குடிநீர் மேம்பாடுத் திட்டம் (முதல் கட்டம்). | 16,40,000 | 98,000 |
| 20 | தாராபுரம் குடிநீர்த் திட்டம். | 17,07,000 | 9,00,000 |
| 21 | கருமாத்தம்பட்டி குடிநீர்த் திட்டம். | 4,00,000 | 4,00,000 |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

### சனிக்கிழமை, 1978 மார்ச் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பரவை கூடியது.

### 1. வினுக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினுக்கள்.

### பாலத்துறை அருகே அணை.

*வினு 381.—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், பாலத் துறை கிராமம் அருகே ஓடும் ஆற்றின் குறுக்கே நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அணை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவ் வாண்டு அத் திட்டம் நிறைவேற்றப் படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது. ஆய்வு முடிந்து அரசு ஒப்புதல் அளித்த பின் இத் திட்டம் நிறை வேற்றப்படும்.

### நல்லூர் ஏரி.

*வினு 382.—திரு. பொ. எ. சீனிவாச ரெட்டியார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தோகை மலை பிர்க்கா, நல்லூர் ஏரி மராமத்து பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

[1978 மார்ச்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆ

(ஆ) தற்சமயம் மீதம் செய்ய வேண்டிய வேலைகளுக் டெண்டர் ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்க வேண்டி நிலையில் உள்ளது.

தகரை கிராமத்தில் பாசன் ஏரி.

*வினா 383.—சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வின களுக்கு விடையளிப்பாரா :

(அ) சின்னசேலம் ஒன்றியம், தகரை கிராமத்தில் சென் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் புதிய நீர்ப்பாச ஏரி கட்டும் பணி தொடங்கப்பட்டு முடிவுறாமல் உள்ள முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போ வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) 20·50 லட்ச ரூபாய்.

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்.

*வினா 384.—திரு. வி. கே. கோதண்டராமன்—திரு க. கந்தசாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்ச கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவுச் சட்டத்தை மாற்றி அமைக்கும் விஷயமா ஏற்படுத்தப்பட்ட கே. சந்தானம் கமிட்டியின் ரிப்போர்ட் எந்த ஆண்டில் வந்தது ?

(ஆ) அதில் இதுவரை எத்தனை பரிந்துரைகள் அமுல்படு தப் பட்டுள்ளன ?

(இ) எஞ்சியுள்ள பரிந்துரைகள் மீது என்ன நடவடிக்க எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) 1969 ஆ ஆண்டு மே திங்களில் திரு. கே. சந்தானம் தலைமையில் அமைக்க பட்ட குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது.



1978 மார்ச் 4]

(ஆ) மொத்த பரிந்துரைகள் 359. அதில் 248 பரிந் துரைகள் இதுவரை அமுல்படுத்தப்பட்டுள்ளன. 84 பரிந்துரைகள் ஏற்கப்படவில்லை.

(இ) எஞ்சியுள்ள 15 பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன. இன்னும் 12 பரிந்துரைகள் மீது மேல் நடவடிக்கை தேவை யில்லை என்று முடிவெடுக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்போது எட்டு வருஷம் ஆகிறது. இந்த ரிப்போர்ட் வந்த பிறகு இப்போது அமுல்படுத்தப்பட்டதாகச் சொல்லக்கூடிய அந்தப் பரிந்துரைகள் அப்படியே அமுல்படுத்தப்பட்டனவா ? அல்லது அதையும் மாற்றி திருத்தி அமுல்படுத்தப்பட்டதா ? அதற்கான காரணம் என்ன? மற்றவைகள் எப்போது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே பரிந்துரைகள் செய்யப்பட்டது குறிப்பாக விவசாயம்—விவசாயம் பற்றிய கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், துறை அமைப்பு ஆலோசனைகள், கூட்டுறவுக் கல்விப் பயிற்சி மற்றும் விளம்பரம் போன்றவற்றைப் பற்றி ஆராய்ந்து அவற்றைச் செயல்படுத்துவதற்கான பரிந்துரைகள். அந்த அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டப் பரிந்துரைகள், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல ஒப்புக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை 211. ஒத்திவைக்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப் பட்ட பரிந்துரைகள் 84 ; தொழில் துறைக்கு மாற்றம் செய்யப் பட்ட பரிந்துரைகள் 22 ; பகுதியளவு ஒப்புக்கொள்ளப்பட்டு அல்லது நிராகரிக்கப்பட்டவை 15.

பரிந்துரைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டனவா அல்லது மாற்றங்கள் செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டனவா என்று கேட்டார்கள். அதற்கான குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் தேவையான விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு.கே. கந்தசாமி: தலைவரவர்களே, திரு·சந்தானம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு மறைந்த வி.கே.சி. போன்ற நிபுணர்களைக் கொண்டு அமைக்கப்பட்டு, அவர்கள் 'ரூரல் இன்டெப்டெஸ்' என்பதை மாற்றியமைக்க ஆக்க பூர்வமான திட் டங்களைக் கொடுத்திருப்பதாக அறிகிறோம். அவைகள் இவ்வளவு காலதாமதமாக நிறைவேற்றப்படுவதற்குக காரணம் என்ன ? எந்த ஆண்டிலிருந்து அவை நடைமுறைக்கு வருகின்றன ? இன்னும் பல பிரிவுகளை நிறைவேற்றினால் கிராமப்புற மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதை ஆலோசனை செய்து, அந்தத் திட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, சந்தானம் குழு 1969 மே மாதம் 3 பகுதிகளைக் கொண்ட பரிந்துரைகளைச் சமர்ப்பித்தது. அந்த அடிப்படையில் இன்றைய தினம் அரசு அதில் பெரும்பகுதியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்பட்ட பரிந்துரை கூட்டுறவுத் துறை சட்டத் திட்டங்கள், அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதி முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்பது முக்கியமானது. அந்த அடிப்படையிலே கூட்டுறவுத் துறை சட்ட திட்டங்களையும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிமுறைகளையும் மாற்றுகின்ற முயற்சியில் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது; தற்போது அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: எந்த சொஸைட்டியையும் கலைத்துவிட வேண்டுமென்பதற்கு எந்த விதத்திலும் பரிந்துரைகள் கிடையாது. அப்படி இருந்தும் இந்த சொஸைட்டிகளை எல்லாம் முன்பு இருந்த ஆட்சியினர் அவர்களுக்குச் சாதகமாகக் கலைத்துவிட்டு நாமிநேஷன் செய்யப்பட்ட முறைகளில் அமைக்கப்படுவது நடைபெற்றது. அது விஷயமாக இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, சந்தானம் குழுவினுடைய பரிந்துரைக்கும் கூட்டுறவுச் சங்கங்களை கலைத்ததற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தமிழகத்தில் கூட்டுறவுத் துறையின் பல்வேறு சங்கங்களைக் கலைத்தது குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி நடைபெற்ற நேரத்திலேதான் நடந்தது. அதற்கான காரணங்கள் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, சந்தானம் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில், 60 சதவீதம் நாமினேஷன் முறையிலும் 40 சதவீதம் தேர்தல் முறையிலும் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை மாற்றி ஒழுங்கான முறையில் அமைப்பதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஒட்டி சட்ட திட்டங்கள் வரும்போது இவையெல்லாம் ஒழுங்காகச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் மக்கள் குழு அமைத்திருப்பதுபோல் கலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மக்கள் குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?





மாண்புமிகு திரு க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, மூலக் கேள்வி சந்தானம் குழு அறிக்கை பற்றியது, மக்கள் குழு அமைப்பது பற்றியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன்: கூட்டுறவு நூற்பு ஆலை, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை போன்றவைகள் இருக்கின்றனவே, அவைகளுக்குத் தேர்தல் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சந்தானம் கமிட்டியில் கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் இதுவரையில் நாமினேஷன் முறையில் செய்யப்பட்டு வருகிறது. இந்த அரசு இதுபற்றி ஆய்வு செய்து அது தேர்தல் முறையிலே எடுக்கப்படுகின்ற நிலைமையினை அமுல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, என்றாவது ஒருநாள் தேர்தல் நிச்சயமாக வந்துதான் ஆகவேண்டும்.

* வினா 385— திரு. ப. சந்திரன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கூட்டுறவு, சட்டம், அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளை திருத்தியமைப்பதற்கென Palani என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பணி எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு க. உரொா. எட்மண்ட்: தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளை திருத்தியமைப்பதற்கான பரிந்துரைகள், கூட்டுறவு பதிவாளரிடமிருந்து வந்துள்ளன. அவை அரசின் தீவிர ஆலோசனையிலும், ஆய்விலும் உள்ளன.

திரு ப. சந்திரன்: தலைவரவர்களே, திரு. பழனி தலைமையிலே ஒரு நபர் குழு அமைக்கப்பட்டதா? அதில் என்னென்ன பரிந்துரைகள் செய்யப்பட்டன என்று அறிய விரும்புகிறேன். அந்த விதிகள் அமுலுக்கு வந்துவிட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்டதிருத்தங்களை ஆராய்வதற்கும், அவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பழனி என்பவர் தலைமையிலே ஒரு நபர் குழு அமைக்கப்படவில்லை. பழனி என்பவர் அதிகாரியாகத்தான் அந்தக் குழுவிலே பணியாற்றி வருகிறார்.

திரு செ. சிவசாமி: கூட்டுறவுச் சங்கங்களுக்கு போர்ட் ஆப் டைரக்டர்களின் காலம் காலாவதியான பிற்பாடு புதிதாக இன்னும் டைரக்டர்கள் போடவில்லை. எப்போது போடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: சட்டதிட்டங்கள் திருத்தக் குழு செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. சட்டதிட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: கூட்டுறவுச் சங்கங்களிலே அரசாங்கம் பத்துப் பேர்களைக் கொண்ட குழுவைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்குமாறு கூறுகிறார்கள். அது எப்போது அமல் படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டும் என்று அதற்கான சட்ட திட்டங்கள் அமைக்கப்படும்போது தகுந்த நேரத்தில் அவைக்கு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு ஏதாவது அறிக்கைகள் மேஜை மீது வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு அதிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய பரிந்துரைகள் எல்லாம் கூட்டுறவுத் துறையினுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சட்ட திருத்தம் செய்வதற்குக் கொண்டுவரும்போது சபையிலே வைக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

*வினா 386.— திரு. ரா. மார்க்கபந்து,

திரு. வி. கே. கோதண்டராமன்,

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைக்கப்பட்ட கூட்டுறவு சொஸைட்டி தலைவர்கள் அங்கத்தினர்கள்மீது சுமத்தப்பட்ட ஊழல்களை விசாரிக்க கமிட்டி அமைக்கப்பட்டு, அறிக்கை அரசாங்கத்திற்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் தற்போதைய நிலை என்ன?

(இ) மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்பட்டுள்ளனவா?



மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் நடந்த ஊழல்களைக் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட தனி விசாரணைக் குழு தனது அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

(ஆ) மற்றும் (இ) அறிக்கைகளின் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

[முற்பகல் 9—10]

திரு. ரா. மார்க்கபந்து: கூட்டுறவு சொஸைட்டி ஆக்ட்டில் ஒரு குறிப்பிட்ட காலவரையறை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலவரையறைக்குள்ளாக சிவில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சொன்னால் It is barred by limitation என்ற நிலை இருப்பதால் அந்தக் காலத்திற்குள்ளாக நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அரசாங்கத்திற்கென்று சட்டத்தில் எந்தவிதமான விதி விலக்கும் கிடையாது என்பது கூட்டுறவுத்துறையில் இருப்பவர்களுக்குத் தெரியும். அந்த அடிப்படையில் லிமிட்டேஷன் பார் ஆகாத நிலையில் அதற்கான நடவடிக்கைகளுக்கு அரசு ஏற்கனவே ஏற்பாடு செய்து கொண்டுவருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: * *

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பாரதி விசாரணைக் குழு பற்றி எழுப்பப்பட்ட மூலக் கேள்வி இது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் அதிக ஆதாரங்களைத் திரட்டித் தர வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு தனிப்பட்ட நபரின் பெயரைச் சொல்லி அதற்கு ஆதாரங்களை அவையில் வைக்காமல் இப்படிக் கேள்வி எழுப்பாதீர்கள். இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. இதற்கு அமைச்சர் அவர்களிடம் பதில் இருப்பதற்கு நியாயமில்லை.

திரு ஏ. ஆர். மாரிமுத்து: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது பாயின்ட் ஆப் ஆர்டரா?

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

<u>திரு ஏ. ஆர் மாரிமுத்து :</u> உறுப்பினர் அவர்கள் ஒரு தனிப்பட்ட நபரைப் பற்றி ....................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர்கள் அந்தப் பெயரை உபயோகித்தபோதே நிறுத்தலாம் என்றிருந்தேன். மூலக் கேள்விக்கும் அந்தக் கேள்விக்கும் சம்பந்தமேயில்லை. ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரைச் சொல்லி அவர்கள் ஊழல் புரிந்தார்கள் தெரியுமா என்றெல்லாம் கேட்பது சரியல்ல. அதை நீக்கிவிடுவது நல்லது. அவர்கள் கேட்ட கேள்வியை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> நான் கேட்பது .........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மானியக் கோரிக்கை வரும் போது அதைப் பற்றி பேசலாம்.

<u>திரு வி. கே. கோதண்டராமன் :</u> * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர்கள் பேசுவது குறிப்பில் வரக் கூடாது. மானியக் கோரிக்கையில் தங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள். குறிப்பிட்ட தனி நபர் பற்றி இப்போது பேசாதீர்கள். அதைப்பற்றிப் பேசுவதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> நான் கேட்க விரும்புவது.. ........................................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்படி நான் பேசிக் கொண்டிருக்கும் போது நீங்கள் பேசிக் கொண்டிருப்பது நீங்கள் பெற்ற அனுபவத்திற்கு நல்லதல்ல. அமருங்கள். இப்படி பேசிக் கொண்டிருந்தால் எப்படி அவையின் மரபைக் காப்பது? இதுபற்றிய பிரச்சினையை எழுப்பக் கூடாது.

<u>திரு க. சுப்பு:</u> பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி விசாரணைக் கமிஷனின் அறிக்கை இந்த அவையில் தாக்கல் செய்யப்படுமா என்று கேட்டபோது தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இப்போது அது பற்றிய கேள்விகள் வந்திருக்கின்ற காரணத்தால் உடனடியாக அந்த அறிக்கையை தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



<u>மாண்புமிகு திரு க. உரொா. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி கமிஷனில் அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டிய காலகட்டம் வந்திருப்பதாக இந்த அரசு இன்னும் கருதவில்லை.

<u>டாக்டர் கே. சமரசம்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கூட்டுறவு சொஸைட்டி தலைவர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகள் எத்தனை, எவ்வளவு தொகைக்காக வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

<u>மாண்புமிகு திரு க. உரொா. எட்மண்ட் :</u> மாநிலம் முழுமைக்குமான விவரம் தான் என்னிடம் இருக்கிறது. மாவட்ட ரீதியாக என்னிடம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து பதில் தரலாம்.

<u>திரு கு. ரமணி :</u> தமிழ்நாட்டில் மிகப் பெரிய ஸ்தாபனமாகிய கோவை கூட்டுறவு சிறப்பு அங்காடியினுடைய நிர்வாகத்தை அரசு ஏற்றுக் கொண்டு தனி அதிகாரி இப்போது போடப்பட்டுள்ளது. அதில் ஏற்பட்டுள்ள ஊழல்கள் எல்லாம் இந்த விசாரணையில் வருமா, அமைச்சர் அவர்களால் அதைப் பற்றித் தெரிவிக்க முடியுமா? (மாண்புமிகு திரு க. உ.ரொா. எட்மண்ட் : தயவு செய்து மீண்டும் தெரிவிக்க வேண்டுகிறேன் ..................) அதாவது தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய கூட்டுறவு ஸ்தாபனமாக இருக்கின்ற சிந்தாமணி சிறப்பு அங்காடியில் இருந்து வந்த போர்டு கலைக்கப்படடு, அரசாங்கமே இதன் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு தனி அதிகாரி போடப்பட்டு நிர்வாகம் இப்போது நடந்து வருகிறது. இந்த ஸ்தாபனத்தி லுள்ள ஊழல்கள் பற்றி இந்த குழுவினுடைய விசாரணையில் வருகிறதா, அதன் விவரம் என்ன?

<u>மாண்புமிகு திரு க. உரொா. எட்மண்ட் :</u> தனிப்பட்ட எந்தக் கூட்டுறவு சங்கங்கள் பற்றியும் என்னிடம் தகவல் இல்லை. கோவையிலுள்ள சிந்தாமணி கூட்டுறவு சொஸைட்டியின்மீது சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் இதில் வருமா என்பதற்கு தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துப் பதில் தருகிறேன்.

<u>திரு எஸ். ஆர். இராதா:</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டு தனி அதிகாரி மூலம் நிர்வாகம் நடைபெற்று வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்படி ஊழல் என்று சொல்லுகிற நேரத்தில் இதற்கென்று விதிகள் எதுவும் இல்லை. பொதுவாக இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களில் எந்தெந்த முறையில் ஊழல்கள் நடைபெற்றன என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? எந்தெந்த ஊழல்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

[1978 மார்ச் 4

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பாரதி விசாரணைக்குழு முக்கியமான சில ஊழல்களைப் பற்றி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதாவது ...... (1) திராவிட முன்னேற்றக் கழகக் கட்சிக்காரர்களின் பரிந்துரைகளின் மீது லஞ்சம் பெற்றுக் கொண்டு அலுவலாளர்களை நியமனம் செய்தது. (2) கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தமான ஊர்திகள், தொலைபேசிகள் இவைகள் தனிப்பட்ட முறையில் கட்சி அலுவல்களுக்காகப் பயன்படுத்தியிருப்பது ........ (3) பொய் கடன்கள், அதாவது பினாமி லோன்ஸ் கொடுத்திருப்பது, அதிகப் பற்று பெற்றுக்கொள்ளுவது அதாவது ஓ.டி. தாராளமாக வழங்குவது........(4) கட்சி சார்புள்ள பத்திரிகைகளுக்கு மலர்களுக்கு, அதிகமான விளம்பரங்கள் கொடுத்து, வீணான செலவு செய்தது ........ (5) பொய்யான பயணப்படி பெற்றுக் கொண்டது.....இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை பாரதி கமிஷன் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதன் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பாரதி கமிஷனின் அறிக்கை ஒருதலைப் பட்சமான அறிக்கை என்ற கருத்து இருப்பதால், இந்த அரசு ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை நியமித்து, எந்தெந்த சங்கங்களின் மீது தவறுதல்கள் நடைபெற்றிருக்கிறது என்று கூறப்பட்டுள்ளதோ, அவைகளை மறுபரிசீலனை செய்து நல்லதொரு முடிவைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பாரதி கமிஷன் அறிக்கை ஒருதலைபட்சமான அறிக்கையாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் இதிலுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நீதி மன்றத்தில் வழக்குகள் வரும்போது, அதை எதிர்த்து வழக்காடுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. காளியப்பன்: தலைவர் அவர்களே, பாரதி கமிஷனின் பினாமி கடன்களை கூட்டுறவு சொஸைட்டிகள் கொடுத்திருப்பதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இதன் பேரில் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பொய் கடன்கள் எங்கெங்கு வழங்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1978 மார்ச் 4]

[முற்பகல் 9·20.]

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி கமிஷன் ஒருதலைப்பட்சமாக இருந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். இந்தியாவிலேயே முதலாவதாக கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி பரிசு பெற்றிருக்கிறது. அந்த வங்கிகூட இதனால் கலைக்கப்பட வேண்டியிருக்கிறது என்றால் யாருமே இந்தியாவிலேயே கூட்டுறவு வங்கிகளை நடத்த முடியாது. இந்த அறிக்கையை அனிமேடட் சஸ்பென்சில் வைத்துவிட்டு, நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. எனவே. அறிக்கையை வைத்து விட்ட பிறகு நடவடிக்கைகள் எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி விசாரணைக் குழு ஒருதலைப்பட்சமாக நடந்திருக்கிறது என்று நான் சொன்ன பொருள் வேறு; மாண்மிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொண்ட பொருள் வேறு; அவசரகால பிரகடனத்திற்குப் பின்னர், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப்பட்டதற்கு பின்னர் இந்த விசாரணை நடந்திருக்கிறது. அந்த நேரத்திலே விசாரணையை நடத்தியவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் அதற்கான விளக்கங்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற அடிப்படையிலேதான் நான் சொன்னேன். எனவே, பாரதி கமிஷன் ஒருதலைபட்சமாக விசாரணை நடத்தியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பொருளில் நான் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கை அவையிலே வைக்கப்படுமா என்று கேட்டார்கள். வைக்க வேண்டிய நேரத்திலே இந்தப் பரிந்துரை வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கை வெளியிடுகின்ற நேரத்திலே அதை மறுத்துச் சொல்வதற்கு யாருக்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டார்கள். சம்பந்தப்பட்டவர்கள் இந்த அறிக்கையை மறுத்து சொல்வதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டதால், நண்பர் திருவேங்கடம் அவர்கள் சொன்னபடி ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவதற்கு அரசு முன் வருமா? தவறான அறிக்கையை வைத்துக் கொண்டு, எந்த அடிப்படையில் நடவடிக்கையை எடுப்பது? எனவே, மறுபடியும் இப்படி ஒரு விசாரணை நடத்திய பிறகு நடவடிக்கை எடுத்தால் நல்லது. அந்த மாதிரி நடவடிக்கை எடுத்தால்தான், கூட்டுறவு துறை சரியான முறையிலே இயங்குவதற்கு வசதியாக இருக்கும். இந்தியாவிலேயே முதல் என்று கருதப்படுகின்ற வங்கி கலைக்கப்படுகிறது என்று சொன்னால், எந்த வங்கியும் நடத்த முடியாது.

எனவே, அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து, நடவடிக்கைகளை ஸ்டாப் செய்து, திரும்ப மறு விசாரணை நடத்தி அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொ எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதில் இன்னொரு நீதி விசாரணை வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். பாரதி கமிஷன் அறிக்கை மீது சம்பந்தப்பட்டவர்கள் மீது இந்தத் துறையாலே நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. நீதி மன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அத்தகைய குற்றச்சாட்டுகள் நீதி மன்றங்களிலே வரும்போது, சம்பந்தப்பட்டவர்கள் அதை எதிர்த்து வழக்காட வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக இருப்பவர்கள் ஊழல் செய்துவிடுகிறார்கள். ஆனால் ஊழல் செய்வதை டி. ஆர். போன்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்படி ஊழல் செய்திருக்கிறார்கள் என்று அவர்கள்மீது கிரிமினல் வழக்குகள் தொடரலாம் என்று ஒப்புதல் கேட்பதற்காக, பார்மாலிடிக்காக ஏ. பி. பி. அவர்களிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஒரு வக்கீலாக இருப்பதன் காரணமாக, ஏ. பி. பி ஒப்புதல் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பைல்களை எல்லாம் அரசாங்கமே வரவழைத்து, அவர்கள் மீது நேரடி நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க வழக்கறிஞர்கள் சில நேரங்களிலே பல்வேறு நபர்களின் தூண்டுதல் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது பரிந்துரையை ஒழுங்காக அனுப்புவது இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. காரணம், வழக்கறிஞர்களுடைய அபிப்பிராயம் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதமாக மாறலாம். ஆகவே, மாவட்ட ரீதியிலே இருக்கின்ற அரசு வழக்கறிஞர்கள் தேவையான விவரங்களைச் சேகரித்துத்தான் பரிந்துரை செய்வார்கள். என்றாலும், இதை மேல்மட்டத்திலே கொண்டுவந்து, விசாரணை செய்து, நீதி மன்றங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு வேண்டிய வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த பாரதி கமிஷன் அறிக்கை அரசுக்கு எப்போது சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும், இங்கே உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கேட்ட கேள்விக்கு இணங்க அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பல தரப்புகளில் அதாவது போன் உபயோகிக்கப்பட்டது, கார் உபயோகிக்கப்பட்டது, மற்றும் வேண்டிய கட்சிக்காரர்களுக்கு வேலை கொடுத்தது போன்ற தலைப்புகளில் ஊழல், லஞ்சம், நடத்தியதை இந்தக் கமிஷன் அறிவித்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எந்தெந்த வகையான குற்றச்சாட்டுக்கள் மீது இதுவரையிலே எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ? அப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், அதற்கான காரணங்கள் என்ன ? இப்போது பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள். பாரதி கமிஷன் விசாரணையிலே ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார்களே, இது உண்மையா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், நாட்டு மக்கள் யாரும் பாரதி கமிஷனிலே ஒன்றுமே இல்லை என்று பேசிக் கொண்டிருக்கவில்லை. இன்றைய தினம் நாட்டு மக்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று நாட்டு மக்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒன்றுமே இல்லை என்று சொல்வதற்கு இல்லை. பாரதி விசாரணைக் குழு அறிக்கையின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதும் தவறு. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் பல நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்றவாறு, அவைகள் பரிசீலனையிலும் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Action against journals

*Q. 387—Thiru S. GANESAN: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state.—

(a) the details of the newspapers and periodicals against which action has been taken during 1976 in this state by the Government; and

(b) the reasons therefor ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : (அ) மற்றும் (ஆ) விரிவான விடை* ஒன்று அவையின்முன் வைக்கப் பட்டிருக்கிறது.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தற்போது தமிழகத்தில் ஓரிரு பத்திரிகைகளில் இன்றைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே குறிப்பிட்டது போல் சில தனிப்பட்ட தலைவர்களைப் பற்றியும் குடும்பங்களைப் பற்றியும் தரக்குறைவாக எழுதி வருகின்ற பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்களே சில நாட்களுக்கு முன்னால் அறிவித்திருக்கிறார்கள். அத்தகைய பத்திரிக்கைகள் மீது என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இது 1976 ஆம் ஆண்டைப் பற்றிய கேள்வி. இன்றைக்குள்ள நிலையைப் பற்றித் தாங்கள் கேட்கிற கேள்விக்கு எப்படி விவரங்கள் இருக்க முடியும் ?

<u>திரு. என். கிட்டப்பா</u> : 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னால் முன்பு நான் கூறிய கேள்வியில் அடங்கிய நிலை பற்றி அறிவிக்க முன்வருவார்களா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் இன்றைக்குப் பத்திரிகைகள் சில எழுதிக் கொண்டிருப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்தார்கள். அம்மாதிரி முதல்வர் அவர்களே அறிவித்துவிட்ட பிறகு அதிலே அவர்களுக்கு ஐயம் தேவையில்லை. தேவையானபோது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. மி. வின்சென்ட்</u> : 1976 ஆம் ஆண்டு தி. மு. க. ஆட்சி கலைக்கப்படாமல் இருந்த நேரத்தில் மக்கள் குரல், தென்னகம் போன்ற பத்திரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தனிக் கண்ணோட்டம் கொண்டவை என்று பேசப்படுகிறது. அது உண்மையா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்தக் கேள்வியை எப்படி அனுமதிக்க முடியும் ?

<u>திரு. ஓ. சுப்பிரமணியம்</u> : 1975 ஆம் ஆண்டு எந்தெந்த நாளிதழ்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டன ? அதற்கான காரணங்கள் என்ன ?

*726ம் பக்கத்தில் இணைப்பு I—ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





<u>மாண்புமிகு திரு. ஆர். வீரப்பன்</u> : 1976 ஆம் ஆண்டைப் பற்றிய கேள்விக்கு விவரமான விடை வைக்கப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டில் மொத்தம் 39 பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுத்து தடை செய்யப்பட்டிருக்கிறது. 1976 ஆம் ஆண்டில் 14 பத்திரிகைகளின்மீது நடவடிக்கை எடுத்து தடை செய்யப்பட்டிருக்கிறது.

<u>திரு. கோ. இளங்கோவன்</u> : மாநில தணிக்கை அதிகாரி தந்த அறிக்கையின்மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல் அந்த அதிகாரி இப்போதும் தகவல் தந்துக் கொண்டிருக்கிறாரா ? அது போன்று தற்போதும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : இப்போது தணிக்கை அதிகாரி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. உமாநாத்</u> : அவ்வாறு தடை செய்யப்பட்டதற்கான காரணங்கள்—கிரவுண்ட்ஸ் என்ன ? எந்த அடிப்படையில் தடை செய்யப்பட்டது ? அந்தத் தடைகள் பூராவும் நீக்கப்பட்டனவா ? இல்லை என்றால் எத்தனை நீக்கப்பட்டன ? பாக்கி எவ்வளவு இருக்கிறது ? நீக்கப்படாமல் இருக்கக் காரணம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன்</u> : தடை செய்வதற்கு இரண்டு அடிப்படைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒன்று, மாநில அரசு தன் சொந்த விருப்பத்தில் தடை செய்திருக்கிறது. இன்னொன்று மாநிலத்திலுள்ள மத்திய சர்க்காருடைய தணிக்கை அதிகாரி தெரிவித்த கருத்தின்மீது தடை செய்யப்பட்டிருக்கிறது. மாநில அரசு தன்னுடைய சொந்தக் கருத்தில் தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் 1975-76 ஆம் ஆண்டில் 35. மத்திய சர்க்காருடைய அதிகாரி தெரிவித்த கருத்தின் மீது தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் 18. மொத்தம் தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் அல்லது நூல்கள் 53. அதிலே இந்த அரசு வந்ததற்குப் பிறகு 49 தடைகளை நீக்கிவிட்டிருக்கிறது. சில காரணங்களுக்குகாக ஐந்து தடைகள் இப்போது உள்ளன.

## <u>'முரசொலி' பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்ட அரசு விளம்பரங்கள்.</u>

*<u>வினா 388—திரு. அ. ப. பழனியப்பன்</u>: மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975 ஆம் ஆண்டு 'முரசொலி' பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, முரசொலிப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு நிதியாண்டு 1975—76-ல் 10 மாதங்களில் ரூ. 3,46,110.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டில் பத்திரிகை விளம்பரத்திற்காக அரசு செலவழித்த மொத்தத் தொகை எவ்வளவு? எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, 1975-76-ஆம் ஆண்டில் சுமார் 50 லட்சம் ரூபாய் அளவில் மொத்தச் செலவு செய்யப்பட்டிருக்கிறது? அதிலே மெயில் பத்திரிகைக்கு ரூ. 2,06,841, தினமணி 1,62,433, தினத்தந்தி 7,13,545, முரசொலி 3,46,110, மாலைமுரசு, 1,68,942, தமிழ் முரசு 97,911, விடுதலை 31,816, அலைஓசை 34,247, நவமணி 28,459, நாத்திகம் 24,790, தென்னகம் 195, அறமுரசு 19,528 சுதேசமித்திரன் 8,762, இனமணி 11,860, தினச்சுடர் 1,257 நம்நாடு ஒன்றுமே இல்லை, தினமலர் 289, மாலைமணி 414 நவசக்தி 17,706, பிற மாநிலங்களின் நாளிதழ்கள் 6,17,612, சஞ்சிகைகள் 3,19,869, சிறப்பு மலர்கள் 1,92,063. இந்தச் செலவில் கூட்டுறவுத்துறை விளம்பரமும், அறநிலையத்துறை விளம்பரமும் உள்ளடங்கவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பரங்கள் கொடுக்கப்பட்ட விவரங்கள் இங்கே தரப்பட்டன. அதிலே தினத்தந்தி பத்திரிகைக்கும், முரசொலி பத்திரிகைக்கும் பல லட்ச ரூபாய்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மக்களால் மதிக்கப்படுகிற தென்னகம் பத்திரிகைக்கு 195 ரூபாயும் மக்களால் அதிகமாக விரும்பப்படுகிற தினமலர் பத்திரிகைக்கு 289 ரூபாயும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விளம்பரங்களைத் தருவதற்கு அன்றைக்கு என்ன முறைகளைக் கடைப்பிடித்தார்கள்? அந்த முறைகள் சரிதானா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும், அந்தப் பட்டியலிலே முன்னாலே இருக்கின்ற விவரங்களை நான் முதலில் சொல்லவில்லை, இப்போது சொல்லி விடுகிறேன், சொல்லிவிட்டு பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதில் அளிக்கிறேன். இந்து பத்திரிகைக்கு ரூ. 11,08,738, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு ரூ. 13,06,800. மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு பதில் சொல்கிறேன். அன்று இருந்த அரசு எந்த அடிப்படையிலே விளம்பரங்களைத் தந்தது என்பதை இந்த அரசு சொல்ல முடியாது.



திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த விளம்பரங்களிலே பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதிலே முறைகேடுகள் இருக்கின்றனவா, அப்படி இருந்தால் அவைகள்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, விளம்பரம் தருவதில் ஒன்றும் இருப்பதில்லை. விளம்பரம் தந்திருக்கிறார்கள். விளம்பரத்திற்குப் பணம் தந்திருக்கிறார்கள், அதற்கான சில விதிமுறைகள் அன்றைக்கும் வகுத்திருக்கிறார்கள்: இன்றைக்கும் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஏற்கனவே விளம்பரங்கள் கொடுத்ததில் முறைகேடுகள் இருக்கின்றன என்பதை இந்த மன்றமே அறிகிறது. இப்போதாகிலும் முறைகேடுகள் தவிர்க்கப்பட்டு ஏதாவது ஒரு அடிப்படை கொள்கை வகுக்கப்பட்டு அரசு விளம்பரங்களைக் கொடுக்க முன்வருமா? எந்த அடிப்படையில் இப்போது கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முன்னாலே இருந்த முறைகேடுகள் பற்றி இந்த அரசுக்குத் தெரியாது. இன்றைக்கு அரசு விளம்பரம் கொடுப்பதற்கான சில விதிமுறைகளை வைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு அடிப்படையாக விற்பனையாகும் பிரதிகள், இதழ்களின் தரம், தன்மை, ஒழுங்காக வெளியிடப்படும் முறை, பத்திரிகை விதிமுறைகள் பத்திரிகை தர்மம் இவைகளைக் கடைப்பிடிக்கும் பழக்கம், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப்பத்திரிகைகள் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகாரப் பட்டியலில் இடம் பெறுகின்றன. அதற்குப் பிறகு அரசு விளம்பரம் வருகிறது.

## மாயூரம் ஒன்றியத்தின் பாலங்கள்.

* வினா 389— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், சேத்தூர் பஞ்சாயத்தில் உடையூர் பருத்திக்குடியை இணைக்கப் பாலம் ஒன்று ஒன்றியத்தின் மூலம் கட்டப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (இ):—இப் பாலம் கட்டும் பணி 1972-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒப்பந்தக் காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. வேலை அடித்தளம் மட்டம் வரை (Desk slab) செய்யப்பட்டு நிறுத்தப்பட்டுவிட்டது. உரிய காலத்தில் வேலை செய்து முடிக்கப்படாததால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. வேறு புதிய மதிப்பீடு தயார் செய்யப் பட்டுள்ளது. இந்தப் பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியம் சேத்தூர் பஞ்சாயத்தில் உடையூர் பருத்திக்குடியை இணைக்கின்ற பாலம் மிகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகையில் கட்டப்படக் கூடிய சாதாரண பாலம். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லி யது போல் 1972 ஆம் ஆண்டிலிருந்து இன்னும் சரிவரக் கவனிக்கப் படாமல்; கட்டப்படாமல் இருந்து வருகிறது. தயவு செய்து, அங்கே உள்ள நடைமுறைச் சிக்கல்களை நீக்கி மாண்புமிகு அமைச்சரவர் கள் ஏதாவது குறிப்பிட்ட ஆணையிட்டு, பெரும்பாலும் தாழ்த்தப் பட்ட மக்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். ஏன் எல்லோருமே தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள அந்தப் பகுதியில் விரைவில் பாலம் கட்டி முடிக்க இனியேனும் முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்த ஒப்பந்தக்காரர் அதை நடத்திக் கொடுக்காத காரணத்தால் அவர் கட்டிய அச்சாரத் தொகையும், பிணையத் தொகையும் பறிமுதல் செய்யப்பட்டது. எஞ்சிய பணியை மேற்கொள்ளப் புது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளதாகவும், அப்பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படுமென்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

*வினா 390—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், கொற்கை பஞ்சாயத்தையும், தாழஞ்சேரி பஞ்சாயத்தினையும் இணைக்க ஐயாவையனாறுக்குக் குறுக்கே பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) மாயூரம் ஊராட்சி மன்றம் இவ் வேலையை ரூ. 1,50,000 செலவில் தன் ஒன்றிய நிதியினின்றும் வைப்பு வேலையாக நெடுஞ்சாலைத் துறையினரிடத்தில் ஒப்படைத்து செயலாற்ற தீர் மானித்துள்ளது. இதற்கான ஆய்வு வேலைகளுக்குத் தேவையான செலவுத் தொகையை நெடுஞ்சாலைத்துறைக்கு செலுத்தப்பட்டு விட்டது. இந்த வேலையை விரைவாகத் துவங்குவதற்கான முன் நடவடிக்கைகளை எடுத்து விரைவில் முடிக்குமாறு தக்க அறிவுரை கள் வழங்கப்பட்டுள்ளது.



திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியம் கொற்கை பஞ்சாயத்தையும், தாழஞ்சேரி பஞ்சாயத்தையும் இணைக்க ஐயாவையனாற்றுக்குக் குறுக்கே இந்தப் பாலம் நீண்ட காலமாகக் கட்டப்படாமல் பல துறைகள், பொதுப்பணித் துறையிலே கட்ட வேண்டும் அல்லது நெடுஞ்சாலைத்துறை கட்ட வேண்டும், அல்லது ஊராட்சி ஒன்றியம் கட்ட வேண்டும் என்று எதுவுமே முடிவு செய்யப்படாமல் தவியாய் தவித்து, இப்பொழுது நெடுஞ்சாலைத் துறை கட்டியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த நெடுஞ்சாலைத் துறை மூலமாகவாவது விரைவில் அந்தப் பாலத்தைக் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நெடுஞ் சாலைத் துறை கட்ட இருப்பதாக நான் சொல்லவில்லை. சென்னை தலைமைப் பொறியாளரின் (நெடுஞ்சாலை) தொழில் நுட்ப அனுமதி கிடைத்த பிறகு ஊரக வளர்ச்சி இயக்குநர் இந்தப் பணி குறித்து நிர்வாக அனுமதி வழங்குவார்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பல ஆண்டுக் கால மாக இந்த வேலை முடிக்கப்படாமல் இருந்து வருகிறது. அந்தப் பாலத்திற்குப் பல நேரங்களில் டெண்டர் கால்பார் செய்தும் ஒப்பந்தப் புள்ளி கோர யாரும் முன் வர மறுக்கிறார்கள். எப்படி யாவது அந்தப் பாலத்தை எந்த வகையிலேனும் கட்டி முடிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆவன செய்யும்.

## மதுரையில் குடிநீர் பற்றாக்குறை.

*வினா 391—திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரையில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம், சுருக்கமாகத் தண்ணீர் வேண்டும் என்று சொல்லுங்கள். அமைச்சருக்கு அந்த டெக்னிக்கல் டீட்டெயில்ஸ் எல்லாம் சொல்லித் தரவேண்டாம்.........

திரு. வி. கே. கோதண்டராமன் : அமைச்சர் கவனத்திற்கு கொண்டுவரவில்லையென்று சொன்னார்கள். அதனால் ஞாபகப் படுத்த வேண்டியிருக்கிறது. லோ டென்ஷனிலே இரண்டு மணி நேரம் வேலை செய்ய முடியாத நிலையிலே ஸ்தம்பிக்கப்பட்டு, கனம் மின்சார அமைச்சருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் சொல்லப் பட்டது. இருந்தாலும், மின்சார அமைச்சரைக் கேட்டபொழுது, அவர் எப்படித் தட்டிக் கழித்து, தண்ணீர் கொடுக்கவேண்டுமென்றால் அந்த அமைச்சர்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள் சார். பேசிக் கொண்டே போகிறீர்கள். கோதண்டராமன், தயவுசெய்து கேள்வி கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கூட்டுப் பொறுப்பு இருப்பதால், மின்சார அமைச்சரை அணுகி, போதுமான அளவுக்கு மேலும் மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான கருவிகளை டிரான்ஸ்பார்மர்களை ஏற்படுத்தி, உடனடியாகத் தண்ணீர் கொடுப்பதற்கும் அந்த மில்களைத் தொடர்ந்து நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டதற்கு எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற தகவலை நான் படித்தேன். அதற்குப் பின்னால், சென்ற மாதம் 19-ம் தேதி அந்தத் தொகுதிக்கு மாண்புமிகு உறுப்பினரோடு சுற்றுப்பயணம் செய்த பொழுது, அவர் சொன்ன முறையீடுகளையெல்லாம் கேட்டு, இன்னும் சொல்லப்போனால் ஜி.எல்.ஆர். —கிரவுண்ட் லெவல் ரிசர்வாயர் வைத்து 6 குழாய்கள் வைக்கலாம் என்றிருந்ததை, அந்தக் கிராமம் விசித்திரமாக, நீளமாக இருப்பதால், 6 பொதுக் குழாய்கள் பப்ளிக் பவுண்டன் கட்ட வேண்டுமென்று, உத்தரவு புதிதாக மாற்றி அமைத்து விட்டு வந்திருக்கிறேன். அங்கே மின்சார பம்ப் ரிப்பேராகி யிருக்கிறது. அதை ரிப்பேர் செய்துவிட்டால், குடிதண்ணீர் பிரச்னைத் தீர்ந்துவிடும் என்று சொன்னேன். 24 மணி நேரமும் பாலார் ஹெட் ஒர்க்ஸ் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். அப்பொழுது குடி தண்ணீர் பிரச்னைத் தீர்ந்து விடும்.





மின்னல் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

*வினா 393 : திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், மின்னல் கிராமத்தில் 8—1—1961-லேயே மனைப்பட்டா பெற்றுக் கொண்ட அரிசனங்கள் இன்னும் வீடு கட்ட முடியாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டத்திலுள்ள மின்னல் கிராமத்தில் 1961-ம் ஆண்டிலேயே 31 அரிசனக் குடும்பங்களுக்கு 2·66 ஏக்கர் நிலப்பரப்பு வீட்டுமனைக்காக ஆர்ஜிதம் செய்யப்பெற்று மனைகள் வழங்கப்பட்டன. எனினும் அவர்களால் பொருளாதார வசதிகள் இல்லாததால் வீடுகள் கட்ட இயலவில்லை.

(ஆ) மேற்கண்ட கிராமத்தில் வீடுகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி 1977—78-ற்கான அரிசன வீட்டு வசதித் திட்டம் பற்றி அரசு ஆணை வழங்கப்பட்டபின் பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, 1961-லே போடப்பட்ட இந்த அரிசனங்களுக்கு வீடு கட்டக் கூடிய பிரச்னை இது வரையில் நீண்டு கொண்டு இருக்கிறது. அது கோர்ட்டுக்குப் போய் தடை செய்யப்பட்டு கோர்ட்டுக்களின் மூலமாகத்தான் தடையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் கோர்ட்டு நடவடிக்கைகளை நீக்கி இதை எடுத்துக்கொள்ள இந்த அரசு தீவிரமாக முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த நிலையெல்லாம் கடந்து, பட்டா வழங்கப் பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரக்கோணம் வட்டம் மின்னல் கிராமத்தைப் பற்றிய கேள்வி. கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறவர்களுக்கும் மின்னல் கிராமத்திற்கும் சம்பந்தம் இல்லை. தயவு செய்து மின்னல் கிராமம் சம்பந்தப்பட்ட விஷயமாகக் கேளுங்கள்.

திரு. சி. மாணிக்கம் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்டும் திட்டம் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகளில், ஏற்கெனவே உள்ள வீடுகளின் வடிவமைப்பை மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டிய வீடுகளின் வடிவமைப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்தது. முன்பு 4,000 ரூபாயில் 207 சதுர அடியில் வீடுகள் கட்டப்பட்டன. இந்த அரசாங்கம் 237 சதுர அடியில் 6,000 ரூபாயில் வீடு கட்ட முடிவு செய்திருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, அரிசனங்கள் பொருளாதார வசதியில்லாத காரணத்தால் அரசாங்கம் அளித்த மனைகளில் வீடு கட்ட முடியாமல் இருக்கிறார்கள். எனவே அரசு கூடுதலாக நிதி ஒதுக்கி அதிக அளவில் வீடுகள் கட்டித்தர ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமை காரணமாக குறைவாக நிதி ஒதுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நிதி ஆதாரம் அதிகரிக்குமானால் இந்தக் கோரிக்கையை அரசு செயல்படுத்தும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, முன்பெல்லாம் இந்த அரிசனங்களுக்கு 4,000 ரூபாயில் வீடு கட்டிக் கொடுத்தார்கள். இப்போது 6,000 ரூபாயிலே அதிகமான இடத்திலே கட்டி கொடுக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 6,000 ரூபாயிலே எவ்வளவு வீடுகள் நீங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள், இது ஒன்று.

இரண்டாவது, அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக 2 கோடி ரூபாய்கள், நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கான அரசாங்க ஆணை இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதுன் என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அதிகமான வீடுகள் என்று நான் சொல்லவில்லை. வீடு ஒன்றுக்கு ஆகும் கட்டிடச் செலவு தொகையைக் கூடுதலாக ஆக்கியிருக்கிறோம். ஆணை பிறப்பிக்க ஏன் தாமதம் என்று கேட்டார். இந்த வீட்டில் வடிவ அமைப்பை மாற்றி அமைப்பது, ஒரு வீட்டுக்கு எவ்வளவு தொகை ஒதுக்குவது, என்பது பற்றி ஆர அமர யோசித்து செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் ஆணை பிறப்பிப்பதில் தாமதம் ஆகிறது.





திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே; நான் கேட்ட கேள்விக்குச் சரியான பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கேட்ட கேள்விக்கு இப்படித்தான் பதில் சொல்ல வேண்டும் என்று அமைச்சரைக் கட்டாயப் படுத்த முடியாது. உங்களுக்குத் தெரியும் (குறுக்கீடு) கட்டாயப்படுத்த முடியாது என்று சொன்னேனே தவிர வேறல்ல.

திரு. துரை முருகன் : அதற்காக பொறுப்பில்லாமல் எதை வேண்டுமானாலும் பதிலாகச் சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அமைச்சர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. இப்படித்தான் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்ல முடியாது. இது உங்களுக்குத் தெரியும்.

திரு கா. வே. கந்தசாமி : மாமன்றத் தலைவர் அவர்களே, 1974—75-லே தமிழ் நாட்டில் பல பகுதிகளில் அரிசனங்களுக்கு அதிகமான வீடுகள் கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் 3 இடங்களில் 70, 80 வீடுகளைக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகளில் அரிசனங்களே குடியிருப்பது இல்லை. மேலும் கூரை, மற்றும் கான்கிரீட் அனைத்தும் கீழே விழுந்து கொண்டு இருக்கிறது. அதைப் பழுதுபார்த்துக் கொடுக்கும்படி அரிசன நல இலாகா அமைச்சரை இந்த கேள்வி நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, அப்படிப்பட்ட நிலைமை சில ஊர்களிலே இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அந்த பழுதுபட்ட வீடுகளைச் சீர்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

## Haiijan Colony at Chettikurichi

*394—Thiru A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Haijan Welfare be pleased to state.

(a) Whether the acquisition of lands for the construction of Harijan Colony at Chettikurichi Village. Aruppukkotai taluk, Ramnad district has been completed .

(b) if not, when it will be completed, and

(c) the reasons for the delay ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) : ஆம். பூர்த்தியாகி அரிசனங்களுக்குப் பட்டாக்களும் வழங்கப்பட்டன.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விகளுக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திருமதி சுப்புலட்சுமி : பேரவைத் தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்க நில ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதமாவதாகச் சொல்லப்படுவது உண்மையா, அதைப் போக்க அரசு ஏதேனும் புதிய திட்டங்கள் வைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, காலதாமதம் ஆவது உண்மை தான். இதைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரலாமா என்று யோசித்து இந்த நடப்புக் கூட்டத்திலேயே கொண்டு வர இருக்கிறது என்கிற நல்ல செய்தியையும் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆர். மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, அந்த இடங்களுக்கு அருகாமையில் குறைவான விலையில் நிலங்கள் இருக்குமானால், அல்லது அரசாங்க புறம்போக்கு நிலங்கள் இருக்குமானால், நில ஆர்ஜிதம் செய்வதில் உண்டாகும் காலதாமதத்தைத் தவிர்க்க, அப்படிப்பட்ட நிலங்களை வாங்க உத்தேசம் உண்டா, அல்லது அருகாமையில் இருக்கும் புறம்போக்கு நிலங்களை எடுத்துக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் செய்கிற நேரத்தில் முதலில் அந்தப் பகுதியில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவா என்று பார்க்கிறார்கள். இல்லையென்றால்தான் தனியார் நிலத்தைக் கையகப்படுத்த அரசு முயற்சிக்கிறது. விலை குறைவா இல்லையா என்பதை இந்த அரசாங்கம் பார்ப்பது இல்லை. மக்களுக்குத் தேவையா இல்லையா என்பதைத்தான் பார்த்துச் செய்கிறது.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்கு இந்தப் புதிய அரசு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை வீட்டு மனை கையகப்படுத்த ஆரம்பித்த 1948-ம் ஆண்டில் இருந்து குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலம் வரையில் நில ஆர்ஜிதத்திற்கு படிப்படியாக ஒதுக்கப்பட்ட தொகை 52 லட்சம் ரூபாய் தான். இந்தப் புதிய அரசு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்ற பிறகு இந்த 6—7 மாதங்களில் ஒதுக்கிய தொகை ரூ. 100 லட்சம் ஆகும்.

திரு. து. ராமசாமி : பேரவைத் தலைவரவர்களே, அரிசனங்கள் வீட்டு மனைக்கு விண்ணப்பங்கள் செய்து மாதக்கணக்கில், வருஷக் கணக்கில் அதிகாரிகள் அந்த விண்ணப்பங்களைப் பரிசீலிக்காமல் வைத்துக்கொண்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி காலதாமதம் ஆவதைத் தடுக்க, அரசு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பங்களைப் பரிசீலித்து அவற்றைக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, வீட்டு மனைக்கு மனு தருகிற காலத்தில் கீழ் மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்குக் காலதாமதம் செய்யப்படுவது உண்மைதான். அந்த நிலையை அறிந்த பிறகு, நானே அது பற்றித் தீவிரமான நடவடிக்கை எடுத்து, அந்த அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டு மேல் நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்து இருக்கிறேன். இது போன்ற தவறுகள் இனிமேல் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளப்படும்.

திரு க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க புதிய சட்டம் கொண்டுவருவது வரவேற்கத்தக்கது. காலதாமதத்தைத் தவிர்க்கக்கூடிய அம்சங்கள் எவையெவை அந்தச் சட்டத்தில் இடம் பெற இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சட்டம் வரும்போது திட்டம் தெரிவிக்கப்படும்.

திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வழங்கப்படுகிற மனைப்பட்டாக்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்படும்போது பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தவும், சிறிய நிலங்களை வைத்து இருப்பவர்களை விட்டு விடவும் இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இப்போது நடைமுறையிலே அந்த வழிவகை இருக்கிறது. இந்தச் சட்ட மன்றத்தில் சட்டம் வரும் நேரத்தில் அதுவும் பரிசீலிக்கப்படும்.

## பொருள் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்

*396. வினா—

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்கட்கு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணம் ரூ. 27 பொருள் போக்குவரத்துக்த் கழகத் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: ஆம் அளிக்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த இடைக்கால நிவாரணம் கொடுப்பதுபற்றிச் சொல்லும்போது ஸ்டிரைக் நோட்டீசில் கண்டுள்ளபடி அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி பற்றி எதுவும் சொல்லவில்லை,. தற்போது அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி பற்றிய கோரிக்கைகளைப் பற்றிப் பேசியதில் அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஆரம்பத்தில் தொழிற்சங்கங்கள் எழுப்பிய கோரிக்கைகளில் அடிப்படைச் சம்பளக் கோரிக்கையை பல சங்கங்கள் கோரவில்லை. ஐக்கிய சங்கத்தின் கோரிக்கை, இப்போது எழுப்பப்பட்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவுசெய்யப்படும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே இந்த பொருள் போக்குவரத்துக் கழக ஊழியர்களான சில முன்னாள் இராணுவத்தினரை பழிவாங்கக்கூடிய அடிப்படையில் வேலை நீக்கம் செய்தும், பலரை ஊர்விட்டு ஊர் மாற்றமும் செய்திருக்கிறார்கள். அவை சரி செய்யப்படும் என்று இந்தச் சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டும், இன்னும் அதற்கான நடைமுறைகள் எதுவும் செயல்படுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? எப்போது சீர்செய்யப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, பழிவாங்கும் அடிப்படையில் யார்மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனாலும் அப்படிப்பட்ட பொருள் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள் கோரிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கின்றன : விரைவில் முடிவு எடுக்கப்படும்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை சிறிது நீட்டிகிறேன்.

## விவசாயிகள் பிரச்சினை குறித்த ஆணைக் குழு.

*397. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) : விவசாயிகள் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தறிய கமிஷன் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ): இம் மாநில உழவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்திட ஓர் ஆணைக் குழு (Commission) அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும் அரசு, அரசாங்க அலுவலர்களும் அரசு அலுவலரல்லாதவர்களும் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும் அடங்கிய ஓர் குழுவை (Committee) அமைத்துள்ளது. இந்தக் குழு கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி ஆராயும்:—

1. விவசாய நீரேற்றும் குழாய்க்கான மின்கட்டணம்.
2. நெல் கொள்முதல் விலை.
3. கடன்களைத் திருப்பிக் கொடுப்பதில் காலம் அளித்தல்.
4. ஆக்க செலவுக்கேற்ப வேளாண்மை உற்பத்தி பொருட்களுக்கு குறைந்த அளவு விலை அறுதியிடல்.

இவற்றோடு இவை சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் இக்குழு ஆராயும்.

*398. வினா—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளின் குறைகளைப் பற்றி ஆராய மேல்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்ட பிறகும், வரிகள், மின் கட்டணம், கடன்கள் முதலியவைகளைக் கட்டவேண்டாம் என்று போராட்டம் நடத்த விவசாய மக்கள் முடிவெடுத்திருப்பதால் வடாற்காடு மாவட்டத்தில் பதட்டமான நிலை உருவாகியிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்பற்றி அரசு என்ன முடிவெடுத்திருக்கிறது?

[1978 மார்ச் 4

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> :—(அ) மற்றும் (ஆ) : விவசாய உபயோகத்துக்கான நீரேற்றும் பம்பு செட்டுகளுக்கான மின்கட்டணம், வரிகள், மற்றும் கடன்கள் பற்றி விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய அமைக்கப்பட்டுள்ள குழு பரிசீலித்து வருகிறது. இதற்கிடையில், மேல் கண்ட குழுவின் முடிவுகள் அரசுக்குக் கிடைக்கும் முன்னரே அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள், வரிகள், மின்கட்டணம் ஆகியவற்றைச் செலுத்தப் போவதில்லை என நோட்டீஸ்கள் அச்சடித்து, வட ஆற்காடு மாவட்டத்தில் வினியோகித்துள்ளதாகத் தெரிகிறது. இது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. முடிவு ஏதும் எடுக்கவில்லை.

(முற்பகல் 10-00).

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : இந்த மேல்மட்டக் குழுவிலே இடம் பெற்றிருக்கக் கூடிய நபர்கள் கூட அரசியல் காரணமாக அங்கே கிளைகளை ஆரம்பித்து, கழகங்களை ஆரம்பித்து அதன் மூலமாக எல்லா விவசாயிகளையும் அரசியல் கண்ணோட்டத்தோடு அவர்களை வரிகளைக் கட்ட வேண்டாம், மின் கட்டணம் கட்ட வேண்டாம் என்று வற்புறுத்துகிற நிலையை நீட்டித்துக் கொண்டிருக்கிற காரணத்தாலே சில நேரங்களிலே போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய பதட்டமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை உடனடியாக இந்த அரசு எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல் அந்த நிலைமைகளை எல்லாம் அரசு கவனித்துக்கொண்டு வருகிற அதே நேரத்திலே உரிய நடவடிக்கை எடுப்பதற்கான ஆக்கபூர்வமான ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. உடனடியாக நடவடிக்கைகள் எடுப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் வெகுவாக நெல் விலை வீழ்ச்சியின் காரணமாக அல்லலுற்றுக் கடன்களை அடைக்க முடியாமல் இருக்கிறார்கள். இந்த நிலையை அரசு அறியுமா, அதற்கான பரிகாரத்தை இந்த அரசு தேடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு அறியும். அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.



1978 மார்ச் 4]

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவரவர்களே, அமைக்கப்பட்டிருக்கின்ற குழு ஆற்றி வருகின்ற சில பணிகள் பற்றி அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம், நிலஉச்ச வரம்பு குறைப்பு, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்குதல் என்பது பற்றியும் ஆய்ந்து அவை பற்றிக் காரியங்களை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். அது பற்றிய பிரச்சினைகள் பற்றித்தான் இந்தக் குழு பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் பற்றியும் மற்றுமுள்ள பிரச்சினைகள் பற்றியும் இப்போது ஆராய முடியாது. ஏற்கனவே விவசாயிகளுடைய அந்தப் பிரச்சினைகள் பற்றி ஒரு பரிசீலனை செய்த பின்னால், அதன்மேல் முடிவு எடுத்த பின்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனைகளை அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. இரா. தாமரைக்கனி</u> : நெல்லுக்கு அடியில் புழு வைத்திருக்கிறது. அது விவசாயிகளுக்கு தெரியமாட்டேன் என்கிறது. ஆகவே சரியானபடி விளம்பரம் செய்து—இந்தப் புழுக்களை எப்படிக் கொல்வது என்பதைப்பற்றி சரியானபடி விளம்பரம் செய்ய வேண்டும். இதைக் கவனிக்க வேண்டிய கிராம சேவக்குகள் கிராமங்களில் குடியிருக்காமல் டவுனில் போய் குடியிருக்கிறார்கள். இந்நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : இதை அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கூத்தக்குடி ச. சண்முகம்</u> : இந்த மேல்மட்டக் குழு எவ்வளவு தடவை கூடியது? இறுதியாகக் கூடி முழுமையாக ஆலோசனைகளை கொடுப்பதற்கு முன்னால் இடைக்காலத்தில் ஏதாவது ஆலோசனைகளை அந்தக் குழு கொடுத்துள்ளதா? மின் கட்டணம், வரிகள் போன்ற பிரச்சினைகளில் சிரமமான சூழ்நிலை இருப்பதால் முக்கியமான சில பிரச்சினைகள் பற்றி முடிவு எடுக்க குழு கூடி அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்க முன் வருமா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u>: இதுவரையில் அந்த மேல்மட்டக்குழு நான்கு தடவை கூடியிருக்கிறது. 10—1—1978 27—1—1978, 28—1—1978, 9—2—1978 தேதிகளில் கூடியிருக்கிறது. இந்த மாதத்திலும் கூட இருக்கிறது. பிரச்சினைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. எந்த தனிப்பட்ட பிரச்சினைபற்றியும் உடனடியாக முடிவு எடுக்காமல் ஒட்டு

[மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு] [1978 மார்ச் 4

மொத்தமாக எல்லாப் பிரச்சினைகளிலும் முடிவு எடுக்குமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். உடனடியாக அந்தக் குழு அதுபற்றிப் பரிசீலனை செய்து ஆராய்ந்து இந்த அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தொடர்ச்சியாக தமிழ்நாடு மூன்று ஆண்டுகளாக பஞ்சத்தாலும் இந்த ஆண்டு புயலாலும் பாதிக்கப்பட்டு இருக்கும்போது விசாயிகளிடத்தில் கடுமையான முறையில் வெள்ளைக்கொடி காட்டி போலீஸை ஜீப்பில் வைத்து இன்று வரி வசூல் செய்யப்படுகிறது. இது தடுத்து நிறுத்தப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அரசாங்கம் நியமித்துள்ள இந்த விவசாயக் குழுவில் விவசாயிகளுக்கோ, விவசாயத் தொழிலாளர்களுக்கோ இடமளிக்கப்படவில்லை. ஆகவே, அவசர உணர்வோடு இந்தக் குழு செயல்படாது என்பதோடு இப்பிரச்சினைகள் குறித்து கவனித்து வேகமாகச்செயல்பட யாரும் உத்தியோகப் பற்றற்றவர்களும் இதில் நியமிக்கப்படவில்லை. ஆகவே, இனிமேலாவது அரசாங்கம் விவசாயிகள் அல்லது விவசாயத் தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகளை இணைத்து துரிதமாக அறிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்த மேல்மட்டக் குழுவில் 10 பேர்கள் அரசாங்க அலுவலர்களாகவும் 11 பேர்கள் அரசாங்க சார்பற்றவர்களாகவும் பணியாற்றுகிறார்கள், அக்குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். திரு. சுப்பு அவர்கள் சொல்லக்கூடிய யோசனை தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றியது. இப்போது விவசாயிகள் பிரச்சினை பற்றி ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை அவர்கள் சொல்வதுபோல் அரசின் கவனத்தில் இருக்கிறது. அதுபற்றி அரசாங்கம் கவனித்து சீக்கிரம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். பழனிவேல் : விவசாயிகள் பிரச்சினையில் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிற இந்த அரசு—எங்கள் பகுதியாகிய பழனியில் விவசாயக் கிடங்குகளில் இருந்து விவசாயிகளுக்கு பருத்தி விதை கொடுத்திருக்கிறார்கள். விதைத்து இருபது நாளாகியும் அவை முளைக்கவில்லை. அந்த விதையையும் அதோடு சேர்த்து ஒரு மனுவையும் விவசாயிகள் என்னிடம் கொடுத்திருக்கிறார்கள், அதைக் கொண்டுவந்திருக்கிறேன். வரலட்சுமி விதை கிலோ 82 ரூபாய் கொடுத்து வாங்கி இருக்கிறார்கள். அப்படி அதிகத் தொகை கொடுத்து வாங்கியும் அவை முளைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?



1978 மார்ச் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்க சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் தகவல் இருக்கும்படியான கேள்விகளைக் கேளுங்கள்.

## ஆவலூர் கிராமத்தில் உள்ள பள்ளிவாசல்.

*399 வினா. திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1977 ஏப்ரல் மாதத்தில் அரக்கோணம் தாலூகா, ஆவலூர் கிராமத்தில் உள்ள இஸ்லாமிய பள்ளிவாசலில் முத்தவல்லியால் 40 ஏக்கரில் உள்ள வருமானம் மோசடி செய்யப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) ஆவலூர் கிராமத்திலுள்ள இஸ்லாமிய பள்ளிவாசலின் சொத்துக்களுக்கான வரவு-செலவுக் கணக்குகளைச் சரியாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்ளவில்லை என்பதற்காக ஆவலூர் பள்ளி வாசலின் முத்தவல்லி தமிழ்நாடு வக்ஃப் குழுவால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வக்ஃப் குழுவின் ஆணையை எதிர்த்து பதவி நீக்கம் செய்யப்பட்ட முத்தவல்லி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். உயர்நீதி மன்றம், வக்ஃப் குழுவின் ஆணையைத் தற்காலிகமாக தடை செய்துள்ளது. வழக்கின் இறுதி முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இந்த நிலங்கள் மசூதிக்குச் சொந்தமான நிலங்கள். ஒரு சிலர் அந்த நிலங்களை ஆக்கிரமணம் செய்து கைப்பற்றி கைவசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து வருகிற வருமானம் சரிவர அந்தப் பள்ளிவாசலுக்குப் போய்ச் சேரவில்லை என்பதுதான் என் கேள்வியில் உள்ள கோரிக்கை. நாள் தள்ளுவதற்காகத்தான் அவர்கள் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்களே தவிர உள்ளபடியே அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை, அந்த ஸ்டேயை வக்கேட் செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முயற்சி என்ன ?

(முற்பகல் 10.10).

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் சட்டம் 43-வது பிரிவில் வக்ஃப் சொத்துக்களைப் பராமரிப்பதில் தவறுகள் ஏற்படுமானால் சொத்துக்களைப் பராமரித்துக் கொண்டிருக்கின்ற தலைவரை மாற்றுவதற்கான அதிகாரம் இருக்கிறது, ஆயினும் ஆவலூர் பள்ளி வாசலுக்குச் சொந்தமான விலைமதிப்பற்ற சொத்துக்களைப் பள்ளி வாசலின் முத்தவல்லி தவறாக நிர்வாகம் செய்ததால் அந்த முத்தவல்லியை பதவியைவிட்டு நீக்கவும், ஐந்து பேர்களைக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றை அமைக்கவும் வக்ஃபு குழு முடிவு செய்தது. அதன் மீது இப்போது உயர்நீதிமன்றத்தில் தற்காலிக தடை வாங்கியிருக்கிறார்கள்: உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னர் இதன் மீது அதாவது பள்ளிவாசலின சொத்துக்களின் மீது வக்ஃப் வாரியம் சீரானநடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி—எண்400 (திரு. எம். எ. லத்தீப் அவர்கள் எழுந்திருந்தார்........)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள் உங்களைப்போன்றுதான் யூசப் அவர்களும் எழுந்திருந்தார். அவரையும் உட்காரச் சொல்லிவிட்டேன். உட்கார்ந்து விட்டார். நீங்களும் தயவு செய்து உட்காருங்கள்...... நேரம் அதிகமாகிறது...... அடுத்த கேள்வி...... திரு. எ. கே. அரங்கநாதன்........

திரு. எம். ஏ. லத்தீப்: * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே சுமுகமாக நடைபெற்றுக்கொண்டு வந்த கேள்வி நேரத்தில், சற்றும் எதிர்பாராத விதமாக சூடு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்கு இந்தக் கேள்வியில் ஒரு இண்ட்ரஸ்ட், ஒரு தொடர்பு என்று கேள்விகேட்க விரும்பினாலும் பேரவைத் தலைவர் அவர்கள் அடுத்த கேள்வியைக்குறிப்பிட்டு மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களைப் பதிலிறுக்க அழைத்துவிட்டக் காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், நேரம் ஆகிக் கொண்டே போகிறது. கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்ற நிலை மாறி, அதற்கு மேலாகவே ஆகிற காரணத்தினால், அடுத்தக் கேள்வி என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதை அனைத்து உறுப்பினர்களும் வரவேற்பார்கள் என்றே நான் கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசும்போது* * * * என்று சொன்ன வார்த்தைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொன்னதை நானே சொல்ல வேண்டுமென்று இருந்தேன். கேள்வி நேரம் முடிந்த பிறகு சொல்கிறேன். முன்வரிசையிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் பேரவைத் தலைவரோடு பொறுப்புடன் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் லத்தீப் அவர்கள் கருதுவதுபோல், அவர்கள் எழுந்திருக்கும் போதெல்லாம் எல்லாக் கேள்விகளுக்கும் அவர் அழைக்கப்பட வேண்டுமென்பது கட்டாயமில்லை.

அது மாத்திரமல்ல. ஒன்று கூற விரும்புகிறேன். கட்சிகளிலே இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே, இனிமேல் நேரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, இதற்குத் தகுந்தபடி கூப்பிடுகிறேன். ஆகவே, தயவுசெய்து இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## கூட்டுறவு நூற்பு ஆலை, அரியூர்.

*400 வினா—திரு. அ. கு. அரங்கநாதன் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் அருகிலுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பு ஆலையை மேலும் விரிவு படுத்துவதற்கான திட்டமேதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வேலூர் அருகில் அரியூரிலுள்ள வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 13,824 கதிர்களிலிருந்து 25,056 கதிர்களுள்ள ஆலையாக அண்மையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

<u>திரு. துரை முருகன்</u> : தலைவர் அவர்களே, மிகத் தரமான நூல் உற்பத்தி ஆகின்ற காரணத்தினால், 13,000 கதிரில் இருந்ததை, 25,000 கதிராக அதிகமாக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். லாபத்திலே போய்க் கொண்டிருக்கிற மில்லை மேலும் விரிவுபடுத்துவதற்கு இல்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லாபத்திலே நடப்பதை ஏன் விரிவுபடுத்தக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவர் அவர்களே, தமிழகத்திலே, தமிழக அரசின் பொறுப்பிலே இருக்கின்ற மற்றக் கூட்டுறவு நூற்பாலைகளையும் இந்த அளவுக்கு முதலிலே விரிவுபடுத்த வேண்டும். இரண்டாவது, ஒரு ஆலையை விரிவுபடுத்துவதற்கு முன் இன்றைக்கு இருக்கக்கூடிய லாப நஷ்டத்தை மட்டும் வைத்துக்கொண்டு பார்ப்பதற்கில்லை. இந்த ஆலையிலே, உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு வகையான நூல்கள், (different counts) டிபரெண்ட் கவுன்ட்ஸ் பொதுச் சந்தையிலே எப்படி விற்பனையாகிறது என்பதைப் பொறுத்தும், மூலப்பொருள் கிடைப்பதைப் பொறுத்தும், மேலும் விரிவுபடுத்துவதற்கு அவசியமானால் அரசு நிச்சயம் பரிசீலனை செய்யும்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : தலைவர் அவர்களே, இந்த வேலூர் அருகிலுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை விஸ்தரிப்பதற்கு பள்ளிகொண்டாவிலே ஏறக்குறைய 4 ஏக்கர் நிலத்திலே, இது தொடர்பான ஒரு பகுதியை அமைப்பதற்கு ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. அதைக் கைவிட்டு விட்டார்களா? அல்லது மேற்கொண்டு ஆய்வு நடத்தி, ஆரம்பிப்பதற்கான ஏதாவது உத்தேசம் உண்டா?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவர் அவர்களே, ஏற்கனவே 13,000 கதிர்களாக இருந்ததை 25,000 கதிர்களாக ஆக்கவேண்டுமென்ற திட்டத்திற்கு வந்தபிறகு, குறிப்பிட்ட இடங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, 25,056 கதிர்களாக மாற்றப்பட்டு, 1977 மார்ச்சுத் திங்களில் விரிவு படுத்தும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, இப்போதுதான் அங்கே உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மேலும் தேவைப்பட்டால் எதிர்காலத்தில் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

<u>திரு. மி. வின்சென்ட்</u> : இந்த மாதிரி வேறு எத்தனை ஆலைகளை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளது? வேலை வாய்ப்பில் அகதிகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுப்பது உண்மையா?



<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் கேட்டபோதே பதில் சொல்லியிருக்கிறேன். தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் மேலும் ஆறு நூற்பாலைகளை விரிவுபடுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. விரிவுபடுத்தும் திட்டம் நிறைவேற்றப்படும்போது மத்திய அரசு விரிவு படுத்தும் திட்டத்திற்குப் பணஉதவி செய்கிற காரணத்தால் அகதிகளுக்கு முதலுரிமை கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(<u>குறிப்பு</u> : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நான் அவைக்கு வேண்டுகோளாக விடுகிறேன். கேள்விகளுக்காக எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் ஒரு மணி நேரம். அதிலே எல்லோருடைய எண்ணத்தையும் கவரத்தக்க அளவுக்கு கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புத் தரவேண்டும். எல்லாவற்றுக்குமே கையைத் தூக்கி கொண்டிருப்பதால் தவிர்க்க வேண்டிய நேரத்தில் தவிர்த்துத்தான் தீரவேண்டும். எல்லாவற்றுக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கோருவதில் பயனில்லை. முதல் வரிசையில் இருப்பவர்கள் மற்ற உறுப்பினர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். முதல் வரிசையில் இருப்பவர்கள் அதற்காக வருத்தப்படுவதில் நியாயம் இல்லை. இன்றைக்கு நடந்த வாதங்கள்—என்னைப் போன்றவர்களுக்கு, உறுப்பினர்களைப் போன்று அனுபவப்பட்டவர்கள் பேசுகிற வார்த்தைகளாக அமையவில்லை. ஆகவே, ஒலி பெருக்கி மூலமாக, ஒலி பெருக்கி இல்லாமல் உறுப்பினர் திரு. லத்தீப் பேசிய அத்தனையையும் நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

<u>திரு. டி. கே. கபாலி</u> : தலைவர் அவர்களே * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்த மாதிரிப் பிரச்சினைகளை எழுப்ப வேண்டுமென்றால் எழுதிக் கொடுக்க வேண்டும். தயவு செய்து அமருங்கள்.

<u>திரு. டி. கே. கபாலி</u> : * * * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இவ்வாறு கையகப்படுத்தினால் அதனால் அரசாங்கத்திற்கும் நட்டம் தான். ஒருவர் 14 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்றால், அவருடைய வண்டியைக் கையகப்படுத்தி ஏலம் விட்டால் 6 ஆயிரம் ரூபாய் தான் அரசுக்கு வருகிறது. இதனால் அரசாங்கத்திற்கும் நட்டம், அந்த டிரைவர்களுக்கும் நட்டம் ஏற்படுகிறது. இந்த நிலைமையில் கையகப்படுத்துவது சரியாக இருக்காது.

அவர்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியா நிலையில் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள், அந்தக் கடன்களை ஓரளவிற்கு ரீஷெட்யூல்டு செய்து சுலபமான தவணை முறையில் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். நான் அவைகளை ரைட் ஆப் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. அபராத வட்டியை ரத்து செய்ய வேண்டும். வட்டி வீதத்தையும் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கட்டத் தவறியவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்காக அப்படி முறை இருக்கிறது, ஆனால் கட்ட முடியாதவர்கள் என்ற நிலைமையிலே அவர்கள் இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பது உங்களுக்குத் தெரியும், அங்கே, பரமக்குடி, சிவகங்கை ஆகிய பகுதிகளில் உள்ளவர்களால் அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்ட முடியவில்லை. காரணம் யாரும் வண்டியில் ஏறுவது இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று எப்படி விவசாயத் துறையிலே நாம் சலுகைகள் அளிக்கவேண்டுமென்று சொல்கிறோமோ அதைப்போன்று வாடகைக் கார்கள் விஷயத்திலேயும் சலுகை காட்டி அந்தக் கடன்களை ரீஷெட்யூல்டு செய்யவேண்டும், இதே மாதிரி அபராத வட்டி முறையை நீக்கவேண்டும், வட்டி வீதத்தைக் குறைக்கவேண்டும். அரசாங்கம் இவைகளை உடனடியாகக் கவனிக்கவேண்டும். இதுவரையில் கவனத்திற்கு வராமல் இருக்கலாம், இப்போது நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம். கையகப்படுத்துவது போன்ற கொயர்சிவ் ஸ்டெப்ஸ் கூடாது, அவைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

கூட்டுறவு சங்கத்தில் வாங்கிய கடன்களை நியாயமான டிரைவர்கள் தான் இன்றைக்கு செலுத்தமுடியவில்லை, பினாமியாக இருக்கிறவர்கள் கட்டிவிடுகிறார்கள், பினாமிகள் என்பவர்கள் ஏதாவது ஒரு முறையில் கடன் வாங்கியிருப்பார்கள், ஒரு லாரி வைத்திருப்பார், அந்த ஓனர் இப்படி கடன்களை வாங்கியிருப்பார், அவர் கட்டிவிடுகிறார், 10 டாக்ஸி டிரைவர்களில் 2 டாக்ஸி டிரைவர்கள் ஒழுங்காகக் கட்டுகிறார்கள். அவர்கள் பினாமிகளாக



இருப்பார்கள். ஆகவே அவர்களை ஊக்குவிக்கக்கூடிய முறையிலே அரசாங்கத்தின் முறை இருக்கக் கூடாது. ஆகவே அரசாங்கம் சுலபமான தவணை முறையில் கட்டக்கூடிய வகையில் கடன்களை ரீஷெட்யூல் செய்யவேண்டும், அபராதத்தை நீக்கவேண்டும், வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும், இது பற்றியெல்லாம் விவாதிக்க மற்றஅலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, நண்பர் சுப்பு அவர்கள் விவரமாகச் சொல்லிவிட்டார்கள். கூட்டுறவு டாக்சி டிரைவர்களுடைய கார்களை அவர்கள் தவணைகள் சரியாகக் கட்டவில்லை என்ற காரணத்தாலே ஏறக்குறைய முக்கால் பகுதியை கைப்பற்றி விட்டார்கள். இன்னும் கைப்பற்றி விடுவதற்கு எத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு தந்தி வந்திருக்கிறது. அவர்கள் வாங்கிய கடன், ஒருவர் வாங்கிய கடனுக்காக 15,729 ரூபாய் திருப்பிச் செலுத்துகிறார் என்றால் அதிலே 3,200 ரூபாய் தான் அசலுக்காக வரவு வைக்கிறார்கள், வட்டி என்ற முறையிலே 8,041 ரூபாயும், அபராத வட்டி என்ற முறையிலே 3,000 ரூபாயும், அனுமத்து என்ற முறையிலே 473 ரூபாயும் வரவு செய்யப்படுகிறது. எவ்வளவு தான் கட்டினாலும் அது வட்டிக்கும் அபராதத்திற்கும் தான் சேருகிறதே தவிர அசலுக்குச் சேருவதில்லை.

திரு சுப்பு அவர்கள் சொல்லியதைப்போல் இராமநாதபுரம் மாவட்டம் 3 ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இந்த ஆண்டு மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதன் காரணமாக அங்கே டாக்ஸிகள் ஓடுவது குறைவாக இருக்கிறது, ஆகவே பாக்கியிருக்கிற தொகையை சுலபத் தவணையில் கட்டுவதற்கும் தண்ட வட்டியை அறவே நீக்குவதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த முறையிலே இதை விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி டாக்சிகளும், ஆட்டோக்களும் வாங்குவதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கு வட்டி வீதம் 1971ஆம் ஆண்டில் 10 சதவீதமாக இருந்தது. அது படிப்படியாக உயர்ந்து 14.5 சதவீதமாக ஆகியுள்ளது.

[முற்பகல் 10-30]

நடைமுறை நிர்வாகச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காக சங்கங்களுக்கு வங்கிகள் நிர்ணயிக்கும் வட்டி விகிதத்திற்கு மேல் இரண்டு சதவிகித வட்டி கூடுதலாக சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கிறது. சங்கங்களுக்கு இதுகாறும் மேற்கண்டவாறு பலவிகிதங்களில் வங்கிக்கு சங்கங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் தவணைகள் செலுத்தப்படாமல் நிலுவைகளாக இருக்கும்போது சாதாரண வட்டி விகிதத்திற்கு மேல் தண்டவட்டியாக இரண்டு சதவிகிதம் வங்கியால் வசூலிக்கப்படுகிறது. உறுப்பினர்களால் தவணைகள் சரிவரக் கட்டப்படாமல் நிலுவைகளாக இருக்கும்போது சங்கம் மேலும் இரண்டு சதவிகித தண்ட வட்டி உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கிறது.

பெட்ரோல் விலை உயர்வு காரணமாக டாக்ஸி ஆட்டோரிக்ஷா சங்கங்கள் தவணைத்தொகைகளைச் சரிவரச் செலுத்தத் தவறியதாலும், இந்தச் சங்கங்களின் செயல்முறை திருப்திகரமாக இல்லாததாலும் டாக்ஸி, ஆட்டோ சங்கங்களுக்கு நிதி உதவி வழங்கக் கூடாது என 1974-ல் கொள்கையளவிலான முடிவை வங்கியின் நிர்வாகக் குழு எடுத்தது. இயங்கி வருகின்ற சங்கங்களைப் பொறுத்து அவைகளிடமிருந்து வந்த முறையீடுகளின் காரணமாக தவணைத் தொகைகளைச் சுலமாகச் செலுத்த உதவும் பொருட்டு, திருப்பித்தர வேண்டிய கடன் தொகைக் காலத்தை 60 மாதங்களிலிருந்து 84 மாதங்கள் வரையில் வங்கி, நீட்டிப்புச் செய்தது. அப்படியிருந்தும் கூட தவணைகள் சரிவரக் கட்டப்படாமல் நிலுவையாக நின்ற தொகை அதிகரித்து வந்தது.

இச்சங்கங்களின் நடைமுறைப் பணிகளை ஆராய்வதற்காக சென்னையில் 1976 செப்டம்பர் திங்களில் டாக்ஸி மற்றும் ஆட்டோ ஓட்டுநர் சங்கங்களின் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. கடன் தொகைகளைச் சரிவர கட்டத் தவறியவர்களிடமிருந்து வசூல்களைச் செய்ய தக்க நடவடிக்கைகளை சங்கங்களினுடைய தலைவர்களும் சங்க நிர்வாக உறுப்பினர்களும் எடுக்க வேண்டுமென்று அந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் பிரச்சனைகள் மேற்கண்டவாறு விவாதிக்கப்பட்டும்கூட வசூல்களில் போற்றத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக, செலுத்தப்பட வேண்டிய தவணைத் தொகைகள்





குறித்த நிலுவைகள் கீழ்க்குறிப்பிட்டபடி அதிகரித்துக் கொண்டே வந்தன. 1976-ஆம் ஆண்டு 11.36 இலட்சம் ஆகவும் 1977-ஆம் ஆண்டு 19.52 இலட்சமாகவும், 1977 ஆம் ஆண்டு 19.90 இலட்சமாகவும் நிலுவைகள் அதிகரித்துக்கொண்டே வந்தன.

இந்த மாநிலத்தில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி இதுகாறும் 16 டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுதவி வழங்கியிருக்கிறது. இந்த 16 சங்கங்களில் முழுமையாகக் கணக்குத் தீர்த்துதான் பெற்ற கடன் தொகையான ரூபாய் 12 இலட்சத்தையும் வட்டியோடு மேற்படி வங்கிக்கு சென்னை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம் திருப்பிச் செலுத்தியிருக்கிறது. தற்போது 15 சங்கங்கள் மட்டுமே வங்கிக்கு கடன்பட்டவையாக இருக்கின்றன. கடன் அளிக்கப்பட்ட தேதியிலிருந்து 60 மாத காலக் கட்டத்தில் திருப்பிச் செலுத்தும் வகையில் 15 சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூபாய் 71.37 இலட்சங்களாகும்.

3—12—1977 அன்று சங்கங்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைகள் மொத்தம் ரூபாய் 28.74 இலட்சங்களாகும். இதில் தவணைகள் சரிவரச் செலுத்தப் படாதவகையில் நிலுவையாக நின்ற தொகை மொத்தம் ரூபாய் 18.37 இலட்சமாகும். தொழில் கூட்டுறவு வங்கி பெற்றுள்ள ரூபாயிலிருந்து இக்கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியிருக்கிறது.

டாக்சியைப் பொறுத்தவரையில் முதல் ஐந்தாண்டுக் காலத்தில் வண்டி நல்ல நிலையில் இருக்கும்போதுதான் வருமானம் நல்லமுறையில் இருக்கும்; கடனையும் திருப்பித்தர இயலும். ஐந்தாண்டைத் தாண்டிவிடின் பழுதுபார்க்கும் செலவு மிகையாவதால், உறுப்பினருக்கும் சிரமம், கூட்டுறவு வங்கிக்கும் நஷ்டம் என்ற நிலை இருந்து வருகிறது. கடனைத் திருப்பிக் கொடுக்க அளிக்கப்பட்ட ஐந்தாண்டுக் கால தவணைக் காலம் சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஏற்கனவே 7 ஆண்டு காலமாக ஆக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கி அதனுடைய ஆய்வில் நிலுவைகளை வசூலிக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளது. முறையற்றவாறு கெடுபிடி வசூல் செய்யாதிருக்க தொழில் கூட்டுறவு வங்கிக்கும், சங்கங்களுக்கும் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) தஞ்சை மாவட்டம் வளப்பக் குடியில் அரிசனங்கள் புறக்கணிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திருவாளர்கள் ஆர். உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. உமாநாத் அவர்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''தஞ்சை மாவட்டம், திருவையாறு காவல் சரகத்தைச் சேர்ந்த வளப்பக்குடியில் வசிக்கும் அரிசனங்களுக்கு சாதி இந்துக்கள் வேலை கொடுக்க மறுத்தும், வீதிகளில் நடமாட மறுத்தும் மற்றும் அவர்களைப் புறக்கணிப்பதால் அந்த வட்டாரம் முழுவதும் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து''.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மார்க்சீய கம்யூனிஸ்டு தலைவர்கள் தஞ்சாவூர் தாலுக்கா, வளப்பக்குடி கிராமத்தில் அரிசன மக்களை அடிக்கடி அணுகி அவர்கள் கொள்கைகளைப் பரப்ப முயன்றதைப் பெரும்பாலான சாதி இந்துக்கள் விரும்பவில்லை. அதனால் சாதி இந்துக்கள், அரிசனங்களை புறக்கணிக்கும் அளவிற்கு வேற்றுமை வளர்ந்து விட்டது.

டீக்கடைகளில் அரிசனங்களுக்காக தனி இடம் ஒதுக்கப்பட்டதால், தீண்டாமைக் குற்றத்தின்கீழ் ஐந்து வழக்குகளை காவல் துறையினர் பதிவு செய்தனர். இந்த ஐந்து வழக்குகள் ஒவ்வொன்றிலும் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் ரூபாய் 100 அபராதமும் விதிக்கப்பட்டன.





திரு. ஆப்ரஹாம் என்ற அரிசன கிருஸ்துவர் தனக்குச் சொந்தமான ரூபாய் 600 பெருமானமுள்ள நெல்லை தனக்குத் தெரியாமல் ஏழு ஜாதி இந்துக்கள் அறுவடை செய்து விட்டதாக 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதியில் கொடுத்த புகாரின் பேரில் மார்க்சீய கம்யூனிஸ்டுகள் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதியில் தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தின் முன் '' ஒரு நாள்'' அடையாள உண்ணாவிரதமிருந்தனர். 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் நாளில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் உள்ளது.

வட்டார வருவாய் அதிகாரியும் துணைக்காவல் துறை தலைவரும் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் தேதியில் அரிசனங்களையும், சாதி இந்துக்களையும் அழைத்துப் பேசி இருசாராரும் ஒத்துக்கொள்ளும்படி ஒரு உடன்பாடு செய்து வைத்தார்கள். சாதி இந்துக்களிடமிருந்து ஒப்பந்தமும் பெறப்பட்டது.

5—2—78 அன்று நடந்த தேரோட்டத் திருவிழாவின்போது அரிசனங்கள் சாதி இந்துக்களால் துன்புறுத்தப்பட்டனர் என்று தெரிய வந்ததும், தஞ்சாவூர் தாசில்தார் இடத்திற்கு விரைந்து இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தினார்.

இப்பொழுதும் வளப்பக்குடி இப்பகுதியில் பதட்டநிலை தொடர்ந்து உள்ளது என்பது சரியில்லை. அரிசனங்கள் சாதி இந்துக்களால் விவசாய வேலை மற்றவேலை மறுக்கப்படுகிறார்கள் என்பதும் சரியில்லை. இப்பொழுது அமைதி நிலவுகிறது.

திரு. ரா. உமாநாத் : அவைத்தலைவரவர்களே, அந்த வட்டாரத்தில் அமைதி நிலவுகிறது என்று கனம் அமைச்சர் சொன்னார். ஆனால், சமூகப் பகிஷ்காரம் தொடர்ந்து நடைபெறுகிறது என்பது உண்மையாக இருக்கிறது. அந்தச் சமூக பகிஷ்காரத்தை நீக்க வேண்டுமென்றால், அதற்கு 5 நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள். அதாவது,

1. அரிசனங்கள் டீக் கடைகளில் சமமாக அமர்ந்து மற்றவர்கள் குடிக்கக்கூடிய கிளாஸ்களில் டீ குடிக்கக் கூடாது.

2. சாதி இந்துக்கள் வாழும் தெருக்களில் குடை பிடித்தோ, செருப்பு அணிந்தோ, மாட்டு வண்டி, மிதி வண்டி முதலியவற்றில் ஏறியோ செல்லக்கூடாது.

3. தப்படித்தல், மாடு உரித்தல், பிணஞ்சுடுதல் போன்ற அடிமை வேலைகளைச் செய்ய வேண்டும்.

4. தைப் பொங்கல், ஆடி பதினெட்டு ஆகிய விசேஷ நாட்களில் சாதி இந்துக்கள் தெருவில் நுழையவே கூடாது.

5. தங்களது திருவிழாக் காலங்களில் அரிசனங்கள் சாதி இந்துக்கள் தெருவில் சப்பரம் விடக் கூடாது.

என்ற 5 நிபந்தனைகளை விதித்து, இன்றைக்கும் சமூகப் பகிஷ்காரம் நடைபெறுகிறது. இவை அமைச்சருக்குத் தெரியுமா ? தெரியவில்லையென்றால், தெரிந்து சீரியஸ்ஸான நடவடிக்கை எடுப்பாரா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இரண்டு ஜாதியினருக்கும் உடன்பாடு ஏற்பட்டு, அந்த உடன்பாட்டு விவரத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

(a) They are acting according to the resolution taken on 16—10—77 in the presence of Tahsildar, Thanjavur.

(b) That there is no objection to serve 'Tea' to Harijans in Glass tumblers and offering seats in Tea shops.

(c) That there is no objection to the movement of Harijans in the Hindu streets during 'Adi Pathinettu' and Thai Pongal festivals.

(d) That they never instigate or instruct or insist on Harijans to keep a watch on the streets on festival days or to skin cattle, etc.

(e) That they never objected to the Harijans to wear shirts or folded dhoties or to ride cycles or drive carts in Hindu streets, and

(f) That there is no objection on their part to be in good relationship with the Harijans based on the uninterrupted association.

என்றுதான் உடன்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த உடன்பாடு மீறப்படுமானால், அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும்.





திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவரவர்களே, இந்த உடன்பாட்டுக்குப் பிறகும் அந்த உரிமையைக் கொண்டாடுவதற்கு ஒரு அரிசன் டீ கடையிலே டீ கேட்டபோது அடிக்கப்பட்டார். அதுபற்றிய கேஸ்ஸை ரிஜிஸ்தர் செய்தார் அங்கேயிருக்கிற ஆய்வாளர். ஆனால், யாரையும் கைது செய்யவில்லை. என்னமோ, அரிசனங்களிடத்திலே கையெழுத்து வாங்கினார்கள். கடைசியிலே கேஸ் ரெஃபர்ட் என்று தந்திருக்கிறார்கள்.

இரண்டாவது சம்பவத்தில், அதிகாரி இம்மாதிரி செய்தது அமைச்சருக்குத் தெரியுமா ? தெரியவில்லையென்றால், விசாரித்து அவர்பேரில் சீரியஸ்ஸான நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வழக்குப் பதிவு செய்ததாகத்தான் இங்கே விவரம் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேறு தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) தேனீத் தொகுதியில் பெரும்பாலான கிராமங்களில், 'பெரிடோனியா' நோயால் பருத்திப் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து.

(முற்பகல் 10—40)

திரு. வி. ஆர். ஜெயராமன் : தலைவர் அவர்களே, தேனீத் தொகுதியில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் பருத்திச் செடிகளில் பெரிடோனியா என்ற வெட்டுப்புழு விழுந்து பருத்தி மகசூல் பெரிதும் பாதிக்கப்பெற்று, விவசாயிகள் பீதி அடைந்து அவர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை திரும்பச் செலுத்த முடியாத நிலை இருப்பதால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எம்.சி.யூ.—5, வரலட்சுமி ஆகிய பருத்தி வகைகள் பெரியகுளம் காட்டத்தில் சுமார் 21,000 ஏக்கர் பரப்பில் பயிராகியுள்ளன.

ஒத்து இருக்கிற காரணத்தால், எங்கள் இயக்கம், எங்கள் கழகம் இதற்கு ஆதரவு தருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் கல்வியமைச்சர் அவர்கள், இங்கே சமர்ப்பித்து இருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையில் 1978—79-ம் ஆண்டுக்கு 176 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற தலைப்பு மூலம் ஏறத்தாழ 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ. 222 கோடி இந்த கல்விக்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதை ஒரு புறத்தில் வரவேற்கிறோம். அப்படி வரவேற்றாலும் கூட, அந்தத் துறைக்கு இன்னும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆளும் கட்சியாக இருந்தபோது, இங்கே கல்வித் துறைக்கு பல்வேறு நன்மைகளைச் செய்து இருக்கிறது என்பதை யாரும் மறந்து விடக்கூடாது என்பதை நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1975—76 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் கணக்கில் ரூ. 530 கோடியில் 30 சதவீதம் நிதி கல்விக்காகச் செலவிடப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ ரூ. 148 கோடி மொத்தமாக 1975—76-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கல்விக்காக செலவிடப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்களுடைய கட்சியின் தலைவர், கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்தபோது பி.யு.சி. வரை இலவசக் கல்வி, கல்லூரிகளுக்குச் சுயாட்சி, கொடுக்கப்பட்டன. ஆசிரியர்களுக்கு திருமணக் கடன் வழங்கும் திட்டங்கள் வந்தன. விழாவிற்குக் கடன் வழங்குகிற திட்டம் கொண்டு வரப்பட்டது, பி.டி. ஆசிரியர்களுக்குச் சமமாக முதல் நிலை தமிழ் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. அண்ணாவின் பாதையைத் தொடர்ந்து இரு மொழிக் கொள்கையை நிறைவேற்றினோம். ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப நலத் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்து இருக்கிறது.



அது மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலே, தொடக்கப்பள்ளிகள் திறக்கப்பட்டன. பல்வேறு உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. கல்லூரிகள் திறக்கப்பட்டன. 1947-ல் தமிழ்நாட்டில் இருந்த கல்லூரிகள் 24. 1961-ல் தமிழ்நாட்டில் இருந்த கல்லூரிகள் 59. 1966—67-ல் தமிழ்நாட்டில் இருந்த கல்லூரிகள் 105. 1974—75-ல் இங்கே 183 கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 8 ஆண்டுகளில் 78 கல்லூரிகள் திராவிட முன்னேற்றக் கழக அரசால் தமிழ்நாட்டில் கட்டி வைக்கபட்டிருக்கின்றன. ஆனால் 20 ஆண்டு காலத்தில் காங்கிரஸ் ஆட்சி உருவாக்கிய கல்லூரிகள் 81-தான் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் உங்கள் மூலமாக இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இன்றைக்குக் கல்வியின் , பர்பார்மன்ஸ் '. அதனுடைய நோக்கம் எதுவாக இருக்கிறது என்று பார்க்கிற போது, நம்முடைய பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் மதிப்பிற்குரிய மரியாதைக் குரிய திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

The Education system tn Tamil Nadu is a wasteful education system. The curriculum is out dated and irrelevant. The present examination system is cholera of the Education Department.

பாடத் திட்டம் அறிவுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்கு ஒத்ததாக இல்லை. அது பழமையானதாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், தேர்வு முறை கூட நினைவுகளை சோதிப்பதாக இருக்கிறதே தவிர அறிவினைச் சோதிப்பதாக இல்லை என்று பொறுப்பில் உள்ள பெரிய பதவியில் உள்ள பல்கலைக் கழகத் துணை வேந்தர் சொல்லி இருக்கிறார். மேற்கு வங்கத்தில் மார்க்கிச தத்துவம், சோசலிசத் திட்டம் பாடமாக வைக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் கேரளாவில் இருக்கிறது, அதேபோல் இங்கே தமிழ் நாட்டிலும் அண்ணாவின் பாதையில் நடைபெறும் இந்த அரசு பெரியார் போதித்த பகுத்தறிவுக் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுக் கொள்கைகளையும், சோசலிசக் கொள்கைகளையும், ஜனநாயகக் கொள்கைகளையும், மொழி உணர்வினையும், இன உணர்வினையும்,

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 மார்ச் 4

நாட்டு உணர்வினையும் ஏற்படுத்தும் விதத்தில், மனிதப் பண்புகள் உருவாகும் விதத்தில், அறிவை வளர்க்கும் விதத்தில் கல்வித் திட்டங்கள். அமைய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பல்வேறு போராட்டங்கள் நடைபெறுவதைப் பார்க்கிறோம். சட்டக் கல்லூரி மாணவர்கள், போராடுகிறார்கள். மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராடுகிறார்கள். அதேபோல் மதுரையில் கல்லூரி மாணவர்கள் போராடுகிறார்கள். ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் போராடுகிறார்கள். அந்தப் போராட்டங்களுக்கு எல்லாம் என்ன காரணம், இந்த அரசின் அணுகுமுறை என்ன என்று பார்க்கிறபோது, அணுகுமுறை முதலில் சரியாக இல்லாமல் இருக்கிறது. அவர்களுடைய குறைகளை முதலில் கேட்க வேண்டும்.

ஆனால் அணுகுமுறை எப்படியிருக்கிறது என்றால், அவர்கள் மேல் பொய் வழக்குப் போடுகிறார்கள். தடியடிப் பிரயோகம் செய்கிறார்கள். மாணவர்கள் மீது கண்ணீர் பிரயோகம் செய்கிறார்கள். பிறகு துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள். இப்படிச் செய்வதன் காரணமாக இன்றைக்கு மாணவ சமுதாயம் ஒரு ஜனநாயகத்திற்கு விரோதமான போக்கில் தங்கள் பிரச்னைகளை அணுகுகிறார்கள். ஆகவே, மாணவர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு சரியான அணுகுமுறை வேண்டும். அந்த விதத்தில் அகடமிக் கவுன்சில், செனட், சின்டிகேட் இவைகளிலே எல்லாம் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10—50]

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகளில் பல்வேறு ஒழுங்கீனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிர்வாகம் வேலை நீக்கம் செய்தவர்களை மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கல்வித் துறையிலிருந்து சொல்லிய பிறகும் கூட வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் இன்னும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னொன்றையும் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்போது ஆசிரியர்கள் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் 11 அம்ச கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக 10 பிளஸ் 2 பிளஸ்



1978 மார்ச் 4] [திரு. ஏ. ரகுமான்கான்]

3 என்ற அந்த புதிய கல்வித் திட்டம் சரியான கல்வித் திட்ட
மல்ல. அதிலே அடிப்படையை மாற்றும் திட்டம் இல்லை என்று
பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் கருத்துத் தெரி
வித்திருக்கிறார்கள். இதனால் சமுதாயத்திற்கு என்ன பலன் என்று
விளங்கவில்லை. ஆனால் கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை பாது
காப்பு இல்லை. அமைச்சரவர்கள் வேலை பாதுகாப்புக்கு உத்தர
வாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இந்த நாட்டில் பல்வேறு உறுதி மொழிகளை முதல
மைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எந்த உறுதிமொழி
யும் நிறைவேற்றப்படவில்லை. ஆக, இது உறுதி மொழியாக
இருக்கிறதே தவிர நடைமுறைக்கு ஒத்துவருவதாகத் தெரிய
வில்லை. அவர்களுடைய வேலை பாதுகாப்புக்கு அமைச்சரவர்கள்
ஒரு சரியான, ஒரு தெளிவான திட்டத்தை இந்த மன்றத்தில்
அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் எனக்கு யார்
மீதும் வருத்தம் கிடையாது. கல்வித்துறை அமைச்சரவர்
களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நீங்கள் ஆட்சிப்
பொறுப்பை ஏற்றப்பிறகு, உங்கள் ஆட்சி புனிதமான ஆட்சி
என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இங்கே பல தவறு
கள் நடந்துகொண்டிருக்கின்றனவே, அதற்கு என்ன சொல்
கிறீர்கள்? பல சீர்கேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன, பல
ஊழல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இவைகளை உங்கள்
கவனத்திற்குக் கொண்டுவருகிறேன், காரணம் இவைகளுக்
குப் பரிகாரம் காணப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்
தோடு, மேலும் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடாது
என்ற நல்ல நோக்கத்தோடு குறிப்பிடுகிறேன்.

ஹாஜி ராவுத்தர் கல்லூரியில் ஆசிரியர்களுக்கு 8 மாதங்
களாகத் தொடர்ந்து சம்பளம் வழங்கவில்லை அதற்கு யார்
பொறுப்பு? என்ன காரணம்?

அதைப்போல புதுக்கல்லூரி: மரியாதைக்குரிய காயிதே
மில்லத் அவர்கள் சிறுபான்மை மக்கள் கல்வியில் முன்னேறி
னால்தான் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரும் என்று சொல்லி,
அதற்காக அரும்பாடு பட்டவர்கள் அவர்கள் பெயராலே
இன்றைக்கு அண்ணன் சாதிக் பாட்சா அவர்கள் தொகுதி
யில் கலைக்கல்லூரி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
இன்றைக்கு அங்கே சில வியாபாரிகளும், சில அ[illegible]
வியாபாரிகளும் புகுந்து கொண்டு முறைகேடுகளை செய்து
கொண்டிருக்கிறார்கள் [illegible] [illegible] கவனத்திற்கும்
கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த அரசு ஊழல் செய்
பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை

எடுக்கும் என்று சொல்கிறார்கள். அது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை இந்த நாடும், இந்த மன்றமும் அறிய ஆவலோடு இருக்கிறது. அதுபற்றிய அறிவிப்பை இங்கே வெளியிடவேண்டுமென்று கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்றேன்.

இன்னொன்றையும் துணைத்தலைவரவர்களே, தங்கள் மூலமாக இந்த மன்றத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அரசு தன்னுடைய கொள்கை என்று அறிவித்திருக்கிறது. அதாவது ஓய்வுபெற்ற யாரையும் மீண்டும் நியமிக்கக்கூடாது என்று இந்த அரசு ஒரு திட்டவட்டமான கொள்கையை வைத் திருக்கிறது' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இதை கொள்கை என்று சொல்லிய பிறகு ஓய்வு பெற்றவர்களை மீண்டும் கல்வித்துறையில் நியமிக்கவில்லையா? அமைச்சவரவர்களைக் கேட்கிறேன் ஓய்வு பெற்றவர்களை நியமிக்கவில்லையா? நியமித்திருக்கிறீர்கள். என்னிடம் ஆதாரம் இருக்கிறது, பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. இப்போது வேண்டுமானாலும் ஆதாரத்தைத் தருகிறேன். இல்லை யென்று உங்களால் மறுக்க முடியுமா?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அரசு நியமித் திருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர் களுடைய பதவி நீட்டிக்கப்படவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> தலைவரவர்களே, ஓய்வு பெற்றவர் களை மீண்டும் நியமித்திருக்கிறார்கள். ஆனால் நியமிக்க மாட்டோம் என்று கொள்கை வைத்திருப்பதாகச் சொல் கிறார்கள். அந்தக் கொள்கை நடைமுறையில் இல்லை.

இன்னொன்று, பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அமைச்சரவர்கள் பெயரைக் கேட்டால் நான் சொல்லத் தயார். ஒருவர் இங்கிலீஷ் அசிஸ்டன்ட் ஃபுரோஃபஸர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பெற்றிருக்கும் மார்க்ஸ் 'பி' மார்க்ஸ்தான். ஆனால் அவரைவிட தகுதி பெற்ற வேறு பலர் இருந்தும் அவரைத் தேர்ந்தெடுத்திருக் கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அடிக்கடிச் சொல் கிறார்களே அதைப்போல இதற்கும் அதிகாரிகள்தான் காரணம் என்று சொல்லப்போகிறார்களா அல்லது ஆளும் கட்சி தலையீடு இருக்கிறது என்று சொல்லப்போகிறார்களா என்று தெரிய வில்லை. அந்த அளவுக்கு இன்றைக்கு லஞ்சலாவண்யம் இந்த ஆட்சியிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.



இன்னொன்றையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் குற்றச்சாட்டிலும் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் அமைச்சர வர்கள் யார் என்று கேட்டால் பெயரைச் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். அதற்கான ஆதாரம் இருக்கிறதா என்று அமைச்சர் ஆர்த்தெழுவாரானால் என்னிடம் ஆதாரம் இருக்கிறது. ஒருவர் இங்கிலீஷ் டியூட்டராக நியமிக்கப் பட்டிருக்கிறார். அவர் கள்ளிக்கோட்டையிலிருந்து—கேரளத் திலிருந்து வந்தவர். அந்த பதவிக்கு இங்கே யாரும் கிடைக்க வில்லையா? கள்ளிக்கோட்டையிலிருந்து வந்தவரை நியமித்ததற்கு என்ன காரணம்? சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆள் இல்லையா? அவரை விட பலபேர் தகுதி உடையவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருந்தும்கூட ஏன் அவர்களை எல்லாம் தேர்ந்தெடுக்காமல் கள்ளிக்கோட்டை பல்கலைக் கழகத்திலிருந்து இங்லீஷ் டியூட் டரை நியமித்து இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிய வில்லை.

அதுமட்டுமல்ல, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இங்கே கணவன் மனைவியைப் பிரிக்கக்கூடாது. அவர்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தால் அவர்களை மாற்றக் கூடாது என்று ஜி. ஓ. போடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் மறக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இங்கே

As f.ır as poss ble, where husband and wifc are both in government se.vice, they should be posted or transferred to the same station in o:der to enable them to lead a normal family life and ensure health and education of their children.

என்று இருக்கிறது. எனவே குழந்தைகளைப் பெற்றோரிட மிருந்து பிரிக்கக்கூடாது. கணவன் மனைவி வேலை பார்க்கின்ற போது அவர்களை பிரிக்கக்கூடாது. அவர்களை மாறுதல் செய்யக்கூடாது என்பது இந்த அரசினுடைய கொள்கை. ஆனால் இந்த அரசினுடைய வேலையே கணவன் மனைவியைப் பிரிப்பதாகவே இருக்கிறது. நம்முடைய அமைச்சர் காளிமுத்து அவர்கள் கூட கேட்டார்கள்..........................

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> இப்படி ஒரு [illegible] வந்து உத்தரவைப் [illegible] கேட்டார். மனைவி இருக்குமிடத்திற்கு மாற்ற வேண்டுமென்று உத்தரவை அவர் மாற்றப்பட்டு அந்த மாற்றுதலுக்கான இருக்கக் வழங்குவதற்குள்ளாக, அவர் தன்னுடைய மனைவி சொல்லக்கூடிய கூடிய இடத்திற்கு போக மாட்டேன் என்று தெரிவித்துக் இப்படிப்பட்ட நிலையும் இருக்கிறது என்பதைத் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். நடராஜன் என்பது அவருடைய பெயர். மூன்றரை வருடமாக அவர் நங்கநல்லூரில் வேலை பார்த்தார். 1977ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8ம்தேதி யன்று ஊத்துக்காட்டுக்கு அவரை மாற்றினார்கள். 1978ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10ம் தேதி அன்று பழையபடியும் நங்கநல்லூருக்கு மாற்றினார்கள். 1978ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ம் தேதி அன்று திருமுடிவாக்கத்திற்கு மாற்றினார்கள். இப்படி 1977ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8ம் தேதியிலிருந்து மூன்று முறை அவர் மாற்றப்பட்டிருக்கிறார். குறிப்பாக 1978ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 தேதியிலிருந்து 1978ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ம் தேதிக்குள்ளாக இருமுறை இந்த பத்து நாட்களுக்குள்ளாக் டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார். நான் கேட்கிறேன். அவர் அப்ளிகேஷன் போட்டாரா? அல்லது முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வது போல இதையும் அதிகாரிகள் செய்தார்களா? ஆளும் கட்சி உறுப்பினர் தலையீட்டால் செய்யப்பட்டதா? அதற்குப் பின்னால் இருக்கும் பின்னணி என்ன? அமைச்சரவர்கள் இதைத் தெளிவாகக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். ஆதாரத்தோடு நான் சொல்லுகிறேன்.

நரசிம்மன் என்பவர் அதே நங்கநல்லூரில் வேலை பார்க்கிறார். அவர் செகன்டரி கிரேட் டீச்சர். அவரை அங்கிருந்து வேள்ச்சேரிக்கு மாற்றினார்கள். அங்கே போய் கேட்டால் மகாபலிபுரத்திற்கு மாற்றி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் கேட்பதெல்லாம் இது எப்படி நடந்தது? முதலமைச்சர் சொல்வது போல் வழக்கம்போல் இதை அதிகாரிகள் செய்தார்களா? ஆளும் கட்சி உறுப்பினர் தலையீடா? லஞ்ச லாவண்யமா? இது எப்படி நடைபெற்றது என்பதை அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது அருள் கூர்ந்து பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் திண்டுக்கல்லில் இராமசாமி என்பவர் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்துவந்தார். அவருக்கு ப்ரோமோஷன் கொடுக்கப்பட்டு முனிசிபல் பள்ளி பயிற்சி மேற்பார்வையாளராக 15 ஆண்டு காலம் பணிபுரிந்து வருகிறார். அவர் மீது குற்றச்சாட்டை சுமத்தி அவரைத் தூத்துக்குடிக்கு மாற்றி இருக்கிறார்கள். பிறகு அதே இடத்திற்கு வருகிறார் இந்த வித்தை எப்படி நடந்தது? ஆளும் கட்சி தலையீடா லஞ்ச லாவண்யமா? நான் அமைச்சரவர்களுக்கு ஆதாரத்தோடு சொல்கிறேன். எழுதி வைத்துக்கொண்டு விளக்கம் சொல்ல வேண்டுமென்று நான் அமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எஸ். எஸ். எல். சி. பப்ளிக் எக்சாமினேஷனில் 1975-ஆம் ஆண்டில் ஆன்சர் புக்குகள் 200 லிருந்து 250 வரைக்கும் அண்மையில் காணாமல் போய்விட்டன. இதை சி.ஐ.டி., சி.பி.ஐ. டிப்பார்ட்மெண்ட் மூலம் துப்பு துலக்கச் சொன்னார்கள் அது என்னாயிற்று? அது குறித்து சபைக்கு அறிவித்திருக்கிறதா? இந்த அரசே சொல்லி இருக்கிறதா இதிலே யாராவது தலையிட்டு இருக்கிறார்களா? இவைகளை எல்லாம் அமைச்சரவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 'ஸ்டேட் கவுன்சில் ஃபார் எஜுகேஷன்ஸ் அண்ட் டிரெயினிங் இதில் அஸிஸ்டென்ட் ப்ரோஃபசர்—உதவிப் பேராசிரியர்களை நியமிப்பதற்கு அட்காக் ரூல்ஸ்படி போஸ்ட் கிராடுவேட்ஸ் இன் ஆர்ட்ஸ் அண்ட் சையன்ஸ் என்று தகுதி இருக்கவேண்டும். அவர் எம். ஏ. ஆக இருக்கவேண்டும், அல்லது எம். எஸ். ஸி. யாக இருக்கவேண்டும். அல்லது எம். எட். ஆக இருக்கவேண்டும். அதிலே கிருஷ்ணமூர்த்தி என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் அட்ஹாக் ரூல்ஸ்படி ஆராய்ச்சிப் படிப்போ அல்லது எம்.ஏ. படிப்போ படித்தவர் அல்ல. இந்த அட்காக் ரூல்சையும் மீறி இது எப்படி நடந்தது. இது அதிகாரிகளுக்குத் தெரியுமா? கல்வியமைச்சருக்குத் தெரியுமா? இது எப்படி நடந்தது?

(முற்பகல் 11-00)

இது முதல் அமைச்சருக்குத் தெரியுமா? கல்வி அமைச்சருக்குத் தெரியுமா? அதிகாரிகளின் தலையீடா? ஏதாவது லஞ்ச லாவண்யமா? அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது)

இன்னொன்றை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் இரண்டு பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் பயிற்சிக் கல்லூரியில் இருந்து நியமிக்கப்பட்டார். இன்னொருவர் கலைக் கல்லூரியிலிருந்து நியமிக்கப்பட்டார். கலைக்கல்லூரியிலிருந்து நியமிக்கப்பட்டவருக்கு ரீ ட்ரெயினிங்—மறுபயிற்சி இருக்கிறதா, இல்லை. ஆராய்ச்சித் தகுதியிருக்கிறதா, இல்லை. மதிப்பீட்டு தகுதியிருக்கிறதா, இல்லை. தேர்வுச் சீர்திருத்தம் இருக்கிறதா இல்லை. இண்டர் சர்வீஸ் ட்ரெயினிங் இருக்கிறதா, இல்லை. கணக்கில் தகுதி இருக்கிறதா, இல்லை. அறிவியலில் தகுதியிருக்கிறதா, இல்லை. ஆனாலும் அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அட்ஹாக் ரூல்ஸ் திருத்தப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் இந்த அட்ஹாக் ரூல்ஸ் திருத்தப்பட்டது? இதற்கு என்ன பின்னணி என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 மார்ச் 4

கடைசியாக ஒன்றை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். 13 தமிழ் ஆசிரியர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து ஆசிரியர்களாக இருக்கிறார்கள். டிரில் மாஸ்டராக இருந்தவர்கள், செகண்டரிகிரேட் ஆசிரியர்கள், ட்ருயிங் மாஸ்டர்ஸ் போன்றவர்கள் தமிழ் வித்வான் படித்து தகுதி பெற்ற தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முகவை மாவட்டத்தில் ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து அப்படி பணியாற்றி வருகிறார்கள். இவர்களை பழையபடி முன்பிருந்த இடங்களுக்கு, பதவிகளுக்கு பதவியிறக்கம் செய்திருக்கிறார்கள். பழையபடி டிரில் மாஸ்டராக, டிருயிங் மாஸ்டர்களாக அனுப்பியிருக்கிறார்கள். எனது அருமை நண்பர் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டதுபோல், இப்பொழுது அவர்கள் பழைய இடத்திற்குச் சென்று வேலை பார்க்கும்போது யானைப்படம் போட்டால் பூனைப்படம்போல் இருக்கிறது என்று குழந்தைகள் சிரிக்கிறார்கள். ட்ருயிங் மாஸ்டர் போட்டிருப்பது யானைப்படம் அல்ல, இது பூனைப் படமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்களைக் கேட்டால் சொல்கிறார்கள், ஏழு ஆண்டுகள் எங்களுக்கு இதில் தொடர்பு விட்டுப் போய்விட்டது. இப்போது எப்படி படம் போடமுடியும் என்று சொல்கிறார்கள். ஆனால், இவர்கள் பதவியிறக்கம் செய்துவிட்டு நியமித்திருக்கிறார்களே, அப்படி நியமிக்கப்பட்டவர்கள், தகுதியுடையவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. இது எப்படி நடந்தது ?

<u>திரு. கே. கந்தசாமி :</u> பாயின்ட் ஆப் க்ளாரிபிக்கேஷன். யாரோ ஒரு ஆசிரியர் யானை படம் போட்டால் அது பூனைப்படம் போல் இருக்கிறது என்று சொல்வது ஆசிரியர்களை இழிவுபடுத்துவதாகும், அப்படிச் சொல்வது சரிதானா என்பதற்கு ஒரு ரூலிங் தேவை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> சொல்லும்போது சிறிது மிகைப்படுத்திச் சொல்கிறார்கள், அவ்வளவுதான்.

<u>திரு. கே. கந்தசாமி :</u> இது பத்திரிகைகளில் வருமே. இது ஆசிரியர்களை இழிவுபடுத்துவதாகாதா ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> இது ஆசிரியர்களின் மீது ஒரு தவறான கருத்தை ஏற்படுத்தும். இப்படிக்கூட நினைக்கலாம். ஓவிய ஆசிரியரை தமிழ் ஆசிரியராகப் போட்டால் அவர் யானையை இப்படித்தான் போடுவார் என்று நினைக்கக்கூடும். இது போன்ற கருத்துக்களைச் சொல்லாமல் இருப்பது நல்லது.

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> குழந்தைகள் இப்படிப் பேசிக்கொள்கிறார்கள் என்றுதான் சொன்னேன். ஆசிரியர்கள் திறமையானவர்கள்தான் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அடுத்து, நூலகங்கள்.

(மணியடிக்கப்பட்டு திரு. சண்முகம் பேச அழைக்கப்பட்டார்.)



1978 மார்ச் 4]

<u>*திரு. ஆர். சண்முகம் :</u> தலைவர் அவர்களே, 1978–79ம் ஆண்டு கல்விமானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கிராமங்கள் உண்மையில் வளர்ச்சியடைய வேண்டுமென்றால் அதற்கு அடிப்படைத் தேவை கல்வி அறிவு. அதை மையமாகக் கொண்டுதான் பேரறிஞர் அண்ணா அவர்களும் மகாத்மா காந்தியடிகளும் கண்ட கனவை நினைவாக்கும் வகையில் அதை நடைமுறைப்படுத்த நமது புரட்சித் தலைவர் அவர்கள் கல்விக்காக 180·9 கோடி ரூபாய் மானியமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். இதற்கு முந்தைய ஆண்டுகளில் 1975–76ல், 123 கோடி ரூபாயும், 1976–77ல் ரூ. 143 கோடியும், தற்போது 1978–79க்கு ரூ. 180·9 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை இந்த மாமன்றத்தில் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒதுக்கப்பட்ட இந்த மானியம் சீரானமுறையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

1978–79ல் ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களும், 200 முதல் நிலை தமிழ் ஆசிரியர்களும் புதிதாக நியமிக்கப்படவிருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

தொடக்கப்பள்ளியில் சேருகின்ற மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையை பெறுகின்றார்கள். ஆனால், ஐந்தாம் வகுப்புக்கு வரும்போது, இறுதிவரை படிக்க முடியாமல், குறைந்துவிடுகின்ற எண்ணிக்கையை—அதற்கான புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டி, 58 சதவிகிதத்தினர் முறையாக படிக்கிறார்கள் என்றாலும், 42 சதவிகிதத்தினர் ஐந்தாம் வகுப்பில் நின்று விடுகிறார்கள் என்றும் புள்ளிவ்வரங்களை சேகரித்து, அதற்கு என்னென்ன வழிமுறைகளை கொண்டு வரலாம் என்பதைப்பற்றியெல்லாம் ஆலோசித்து, அதற்காக நண்பகல் உணவு திட்டத்தை அமுல் நடத்தி, மதிய உணவுத் திட்டம், உடைகள், புத்தகங்கள், பலகைகள் இவைகள் எல்லாம் வழங்கி இந்த 42 சதவிகிதத்தினரும் நின்று விடாமல் இருக்க வேண்டிய திட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர். அதற்காக மேலும் மேலும் ஆண்டுதோறும் அதிகப்படியாக நிதியை ஒதுக்கி, பிற்பாடு புரட்சித் தலைவர் ஆட்சி காலத்தில் இன்னும் முன்னேற்றம் ஏற்படுவதற்காக தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், பின்தங்கிய மக்கள் சமுதாயத்தில் நல்ல முறையில் கல்வி பெறக்கூடிய அறிய வாய்ப்பை தந்திருப்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

1 முதல் 3 வரை வகுப்புகளுக்கு, கேரளா, ஆந்திரம் போன்ற மாநிலங்களில் தேர்வு இல்லாத முறையில் மாணவர்களை மாற்றம் செய்கின்ற முறையை தமிழக அரசும் செய்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும் பழைய முறைப்படி ஒவ்வொரு வகுப்பிலும், 50, 60 மாணவர்களை வைத்துக்கொண்டு ஒரே ஆசிரியர் பாடம் கற்பிப்பது என்றால், அது சரியான முறையாக

இருக்காது, ஏனென்றால், 50, 60 மாணவர்களை வைத்துக் கொண்டு ஒரே வகுப்பில் ஒரு மணி நேரம் ஒரு பீரியடு என்று வைத்து, மாணவர்களிடம் பாடம் கற்பித்து தருவது என்பது இயலாது. ஆகவே, இந்த முறையை மாற்றி ஒவ்வொரு வகுப்புக்கும் 20, 25 மாணவர்களை வைத்து ஒரு ஆசிரியர் பாடம் கற்பித்துக் கொடுக்கின்ற முறையை கொண்டு வருவது நல்ல முறையாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படியில்லையென்றால் இன்னும் புதிய கண்ணோட்டம் தோன்றி, பல தரப்பட்ட மக்களிடம் கல்வியின் தரம் இன்னும் கீழே போய்விடும் என்ற எண்ணம் வருவதற்கு இடமில்லாமல் இருக்கவேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்பொழுது, உயர்தொடக்கப் பள்ளிகளில் ஆய்வு முறை இருப்பது வரவேற்கத்தக்கதொன்று. முன்பெல்லாம் டி.ஈ.ஓ. சென்று தணிக்கை செய்வது என்பது இருந்தது, இப்போது எந்தெந்த இடத்தில் முதிர்ந்த ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அவர்களையும் அருகிலிருந்து அழைந்துச் சென்று, தணிக்கை செய்வது என்பது எல்லோராலும் பாராட்டக்கூடியதாக இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது விஞ்ஞான முறையில், புதிய அறிவியல் ஆய்வுக் கூடத்தை அமைத்து, அதற்கு கருவிகளை வழங்குவது என்று ஒரு திட்டத்தை உருவாக்கி, தொடக்கப்பள்ளிக்கு 300 ரூபாய் என்றும், உயர் தொடக்கப்பள்ளிக்கு 1,000 ரூபாய் என்றும் மான்யம் வழங்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இப்போது தொடக்கப் பள்ளிகள் 12,620ம் உயர்தொடக்கப்பள்ளிகள் 3,080ம் பயன் பெறும் என்றும், 1978–79ல், 150 பள்ளிகளுக்கு பயன் கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதில் கருவிகளை வழங்கிவிட்டு, அவைகளை நல்லமுறையில் பாதுகாக்க இடவசதியில்லாமல் இருக்கின்ற இடங்களில் எல்லாம் கருவிகளை சப்ளை செய்கின்ற இடங்களில் அவற்றை பத்திரமாக பாதுகாக்க கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்ற குறையை நிவர்த்திக்க வேண்டும் என்று இத்தருணத்தில் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சிறு குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பகல் உணவு திட்டத்தில், சென்ற ஆண்டு இதைப்பற்றி நான் பேசியபோது, மதிய உணவு வழங்கும் போது, மேல் மூடி இல்லாமல் இருப்பதால் பள்ளி மாணவர்கள் அதை எடுத்துச்செல்ல முடிவதில்லை என்று சொல்லியிருந்தேன். என்னுடைய திருத்தணித் தொகுதியிலிருந்து பல இடங்களிலும் வழங்கப்படுகின்ற இந்த மதிய உணவில் நண்டுக்கால், கந்தை இவை இருப்பதாகவும், இதனால் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் எனக்கு பல மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். அந்த நிலையில்லாமல் இந்தக் குறையை நீக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், முதியோர் கல்வித் திட்டத்தை வளர்க்கவேண்டும் என்பது நம் அரசின் கொள்கை. அத்துடன் கிராமப் பகுதிகளை உயர்த்தவேண்டுமென்றால், முதியோர் கல்வித் திட்டம் உறுதுணையாக இருக்கும் என்று கூறிக்கொண்டு........கடைசியாக.....

(முற்பகல் 11–00)

பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்றும் ஆசிரியர்கள் பணி மாற்றம் செய்யும்போது ஐந்து ரூபாய் அலவன்சு பெறும் தலைமை ஆசிரியர்கள் என்றும், 10 ரூபாய் அலவன்சு பெறும் தலைமை ஆசிரியர்கள் என்றும் பல வகையான இனத்தவர்களாக வைத்திருக்கிறார்கள். இதனால், அவர்களை மாற்றம் செய்யும் போது பல சிக்கலான பிரச்னைகள் ஏற்படுகின்றன. எனவே, இதைப் போன்று இல்லாமல் அவர்களை முன்பிருந்த முறைப்படி அவர்களை பணி மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிப் பள்ளிகளிலேயும், தனியார் பள்ளிகளிலேயும் பணியாற்றும் ஆசிரியர்கள் அவர்களுக்குக் கிடைக்கின்ற ஊதியம் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதிலே அரசு தலையிட்டு, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் தருணத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு டி. ஆர். இராஜாராம் ரெட்டி: பேரவை உதவித் தலைவர் அவர்களே, வணக்கம். கல்வியைப் பொறுத்த வரையிலே கிராமப்புறங்களிலே ஒன்றுமே அபிவிருத்தி இல்லை. அந்த அபிவிருத்தி இல்லாத கிராமங்களுக்கு இந்த பட்ஜெட்டில் ஏதாவது வழிவகை இருக்குமென்று எண்ணினேன். ஆனால், அதற்கு மாறாகவே உள்ளது நாட்டிலே 75 சதவிகிதம் மக்கள் கிராமங்களிலே தான் வாழ்கிறார்கள். ஆனால், கிராமங்களிலே பள்ளிக் கட்டிடங்களே கிடையாது. அப்படிப் பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கும் போதுமான தொகையை இந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை. பள்ளிகள் எல்லாம் எங்கே நடக்கின்றன என்றால், ஏதோ அவைகள் பேருக்காக நடக்கின்றன. இந்த நிலையில் தற்போது மூன்றாவது வகுப்புவரை தேர்வு இல்லையென்று தெரிவித்துள்ளார்கள்.

சாதாரணமாக, இங்கே அநேகமாக ஊராட்சி ஒன்றியங்களின் பெருந் தலைவர்களாக இருக்கின்றவர்கள் பல பேர்கள் இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இது நன்கு தெரியும். கிராமங்களிலே நிலைமை எப்படி இருக்கின்றது என்பது அவர்களுக்கெல்லாம் தெரியும். முதல் மூன்று வகுப்புகளுக்கு தேர்வு இல்லாமல் மாற்றியிருப்பதால், என்ன நிலை ஏற்படும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். இதனால் நான் எண்ணுவதெல்லாம், கிராமத்திலே உள்ள மக்களை படிக்காமலேயே செய்வதற்குத் தான் இந்த மூன்றும் வகுப்பு வரை தேர்வு இல்லாமல் இருக்கும்படி மாற்றம் செய்திருக்கிறார்கள், முடிவு செய்திருக்கிறார்கள் என்பது.

அங்கே பிள்ளைகள் வந்தால், உட்காருவதற்கு இடமில்லை. பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லப்போதுமான ஆசிரியர்கள் இல்லை. ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களில் சுமார் 2,000க்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள். பள்ளிகளில் ஒரு வகுப்பிலே 75 பிள்ளைகள் இருக்கிறார்கள். அல்லது ஒரே ஆசிரியர் பல் வகுப்புகளைப் பார்க்கவேண்டும். இந்த நிலைமையிலே நடக்கும் பள்ளிகளிலே இருந்து, தேர்வு பெறுமலேயே மூன்றாவது வகுப்புவரை மாற்றுவது என்று சொன்னால், படிப்பு நல்ல முறையிலே வளராது. இதனை பள்ளி நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள, உயர்நிலைப் பள்ளி நிர்வாக டைரக்டர் போன்றவர்களைக் கேட்டால் நன்கு தெரியும். உயர்நிலைப் பள்ளிகளுக்குச் செல்லும் பிள்ளைகள் எந்த அளவில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் எழுத்துக் கூடத் தெரியாத அளவுக்கு மேல் வகுப்புகளுக்குச் செல்கிறார்கள் என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும்.

ஆகவே, ஒன்று முதல் மூன்றாம் வகுப்புவரை தேர்வு இல்லாமல் மாற்றும் ஒரு முடிவை மாற்றியமைக்கவேண்டும். இல்லையானால், கிராம மக்கள் படிக்காமல் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும்.

கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பிள்ளைக்கு 10 பைசா என்று நிர்ணயம் செய்யப்பட்டது. இன்றைய விலைவாசி உயர்வு நிலையிலும் அதே 10 பைசா தான் இன்றும் இருக்கிறது. அது போதாது. அப்படியும் அந்த கிராம மக்களின் பிள்ளைகள், போடப்படுகிற புழுத்த உணவைத்தான் சாப்பிடுகிறார்கள். போடுகின்ற சாப்பாட்டை நல்ல சாப்பாடாக போடலாம் என்றால் முடியவில்லை. இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாகத் தெரிவிக்க வேண்டுமென்றால் என்னுடைய திண்டிவனம் தொகுதியில் இரட்டணை கிராமத்தில் இரண்டு முறை இவ்வாறு புழுத்த அரிசி சோற்றைப் போட்டதை எடுத்துக் காண்பித்து பிள்ளைகளுக்கு அதைப் போடக்கூடாது என்று கிராம மக்கள் தெரிவித்ததன் பேரில் மாதக் கணக்கில் உணவு போடாமலே விட்டு விட்டது அந்தத் துறை. சென்ற டிசம்பர் மாதத்தில் கூட ஊசிப்போன சோற்றைப் போடக் கூடாது என்று கிராமத்தார்கள் நிறுத்திவிட்டார்கள். இப்படி ஒரே இடத்தில் சமைத்த சாப்பாட்டை கிராமத்தில் வசதியற்ற பிள்ளைகளுக்குப் போடுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு புழுத்த சோற்றையும், ஊசிப் போன சோற்றையும் போட்டு அவர்களுடைய உடல் நலனைக் கெடுக்கிறார்கள். நருந்த வகையில் நல்ல உணவு போட வகை செய்ய வேண்டும்.



இப்போது 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற கல்வித் திட்டம் வருகிறது. 1962ம் ஆண்டுக்கு முன்னாலே இந்தக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது முதல்வராக இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் உயர்திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் கல்வியமைச்சராக இருந்தபோது கொண்டு வந்தார்கள். அந்த வகையில் 9வது வகுப்பு வரை மாற்றிக் கொண்டு வந்தார்கள். அதன் பின் அதனுடைய நடை முறை நமது கிராமப் பிள்ளைகள் எல்லோரும் சரியாகப் படித்து முன்னேற முடியவில்லை என்ற காரணத்தால் உயர்திரு பக்தவத்சலம் அவர்கள் வந்து அந்த நிலையை மாற்றினார்கள். அதன்பின் இதற்கு முன்னால் இருந்த உயர்திரு நெடுஞ்செழியன் அவர்கள் காலத்தில், 1972ல் இந்தக் கல்வியைக் கல்லூரியிலே வைத்து விடலாமா என்று முன்னாள் வைஸ் சான்ஸலர் உயர்திரு சுந்தரவடிவேலு அவர்கள் பரிசீலித்தார்கள். அப்படி பரிசீலித்ததில் நான்-ரெகரிங் எக்ஸ்பென்ஸ் 22 கோடி ரூபாயும் ரெகரிங் எக்ஸ்பென்ஸ் 1½ கோடிரூபாயும் ஏற்படுமென்ற நிலை ஏற்பட்டதால் அந்தக்கல்விமுறையைக் கைவிட்டுவிட்டார்கள். இப்போது இது அகில இந்திய பாட்டர்ன் என்று சொல்லப்படுகிறது.

நம் தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் சமஸ்கிருதம் படித்தவர்கள் தான் பெரிய மனிதர்களாக இருந்தார்கள். அதற்குப் பின்பு ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு வந்த பின்பு நாம் எல்லோரும் ஆங்கில பாஷையைக் கற்கத் தலைப்பட்டோம். இன்று வரை ஆங்கிலம் படித்தவர்கள்தான் நிபுணர்கள், தகுதி படைத்தவர்கள் எந்த வகையில் பார்த்தாலும் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் இருக்கிறது.

அதே நேரத்தில் நமது பாரதத்தில் பல மொழிகள் இருந்த போதிலும் பொதுவாக ஒரு மொழி அரசு மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த மொழியினை இங்கு நாம் படிக்கச் செய்ய வேண்டும். இங்கே இரண்டு மொழித் திட்டம் என்று கூறப்படுகிறது. இரு மொழி என்று சொல்லும்போது நகரத்தில் வாழ்கிறவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள், பதவியில் உள்ளவர்கள் பெரும் முதலாளிகள் வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளைக் கற்கிறார்கள். ஆனால் கிராமத்தில் இருக்கும் ஏழைப் பிள்ளைகள் இதனைப் படிக்க வசதி அற்றுப் போகிறது. (மணி அடிக்கப்பட்டது.)

[முற்பகல் 11—20]

நாங்கள் கிராமங்களிலிருந்து ஒரு தொகுதியிலிருந்து சிரமப்பட்டு இங்கே வந்திருக்கிறோம். எங்கள் உரிமையைப் பயன்படுத்தி நாங்கள் கருத்துக்களை சொல்ல முடியவில்லை என்றால் நாங்கள் உட்கார்ந்துவிடுகிறோம். பேசாமலே வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு போகச் சொன்னாலும் போய்விடு

கிறோம். இங்கே வீண் பேச்சுப் பேச நாங்கள் வரவில்லை. நகரங்களிலே உள்ளவர்கள் தனிப்பட்டு பயில வசதி இருக்கிறது, ஆங்கிலத்தோடு இந்தியும் சேர்த்து 2 மொழிகள் பேசும் பயில்வதற்கு வசதி இருக்கிறது. ஆனால் கிராமங்களிலே தான் 75 சதவீதம் பிள்ளைகள் படிக்கிறார்கள், இந்தி படிக்க வசதியில்லை, அதனால் மத்திய அரசாங்கத்தோடு தொடர்புகொள்ளவோ மத்திய அரசாங்கத்தில் பணிபுரியவோ வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே விருப்பம் உள்ளவர்கள் படிப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

அதுவும் தவிர இந்த ஆண்டு 2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் பேர்கள் வேலையற்றுப் போகலாம். ரிடையர்மெண்ட் அல்லது வேறு சில காரணங்களால் 40 ஆயிரம் ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறபோது 4 ஆயிரம் ஆசிரியர்களை மட்டும் எடுத்துக் கொண்டால் எத்தனை ஆண்டுக் காலத்திற்கு அவர்கள் காத்து இருப்பது என்பதைப் பார்க்கவேண்டும்.

முன்பெல்லாம் தகுதியுடையவர்கள், அந்தஸ்துள்ளவர்கள் தான் படிப்பார்கள், ஆனால் இப்போது படிப்பவர்கள் சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள்தான். அவர்கள் எந்தத் தொழிலுக்கும் வேலைக்கும் போக முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் அவர்கள் எல்லாம் வேலை வாய்ப்புப் பெறக் கூடிய திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மாலைக் கல்லூரிகள் இருக்கின்றன, அவைகளிலே பயில்வோருக்கும் கல்லூரிகளில் தருவது போன்ற உதவிகளைக் கொடுத்தால் அவர்கள் வாழ்க்கையில் தாங்களே சம்பாதித்துக் கொண்டு படிப்பதற்கு வசதியாக இருக்கும், ஆகவே அவர்களுக்கும் அந்த வசதிகளைத் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த 10+2+3 என்ற திட்டம் ஆல் இண்டியா பேட்டர்ன் அல்ல, பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற நான்கு மாநிலங்கள், அங்கே 8 இலட்சம் பிள்ளைகள் ஒரு வருஷம் அதிகமாகப் படிக்க சக்தியில்லை என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். இவையெல்லாம் பரிசீலனை செய்ய கல்வியில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை வைத்துத்தீர ஆலோசித்து நல்ல முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே. சௌந்தரராசன்</u>: மதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே அளித்திருக்கிற கல்வி மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



எனக்கு முன்னாலே பேசிய ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாற்றுதலைப் பற்றிப் பேசினார்கள். ஒவ்வொரு மாற்றுதலைப் பற்றியும் கூறி ஊழலால் நடைபெற்றதா, லஞ்சத்தால் நடைபெற்றதா அல்லது அதிகாரிகளின் தவறா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவதுபோல் அதிகாரிகள் செய்த தவறா என்று பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் கூறுவது எல்லாம், இன்றைய தினம் மாற்றுதலே கூடாது என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் கூறுகிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஏதோ முதலமைச்சர் அவர்கள் அத்தனை அதிகாரிகளையும் தவறாகக் கூறுகிறார்கள் என்று சொல்லி ஒரு பாவ்லாவை உருவாக்கி, அதன் மூலம் சித்து விளையாடலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஏதாவது ஒரு அதிகாரி தவறு செய்கிறபோது அத்தனை பேர்கள்மீதும் தவறு செய்தார்கள் என்று ஒட்டுமொத்தமாகக் கூறுகிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நாட்டிலே தவறு நடக்கிறபோது அதைச் சுட்டிக்காட்டுவதற்கு அரசுக்கு பொறுப்பு இருக்கிறதா இல்லையா என்பதை அவர்கள் சொல்லியாக வேண்டும். அவர்கள் முதலமைச்சர் அவர்களைப்பற்றிப் பேசுகின்ற நேரத்திலே அப்படிப்பட்ட கருத்துக்களை நாட்டிலே பரவவிட்டால் அது அதிகாரிகளுக்கும் நல்லதல்ல. அது நாட்டுக்குச் செய்கின்ற நல்ல காரியமும் ஆகாது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்கிறார்கள் ஆசிரியர்களுக்கு இவர்கள்தான் பல்வேறு வசதிகளையும் செய்து கொடுத்ததைப் போலப் பேசுகிறார்கள். நான் அவர்களிடத்தில் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம், பல்கலைக் கழக மானியக் குழு 1973 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு அந்த நிதி உதவியைத் தர வேண்டுமென்ற வகையில் திட்டம் தீட்டி அதற்கான நடைமுறைகளை அகில இந்தியாவிலே 12 மாநிலங்கள் ஏற்றுக்கொண்டு, இன்னும் சொல்லப்போனால் பிற்பட்ட மாநிலம் என்று சொல்லக்கூடிய ஒரிசா போன்ற மாநிலங்களில் நடைமுறைப்படுத்தியபொழுது இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைய தினம் ஏதோ ஆசிரியர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசிக்கொண்டிருப்பவர்கள்தான் அன்றைய தினம் பொறுப்பிலே இருந்தார்கள்.

1973 ஆம் ஆண்டிலிருந்து தர வேண்டிய அந்த உதவியை அன்றைய தினம் ஆட்சியிலே இருந்தவர்கள், 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையிலே ஆட்சியிலேயிருந்தவர்கள் ஏன் தரவில்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அன்றைய தினம் அவர்கள் கொடுக்க முன் வந்திருந்தால், கொடுக்க எண்ணியிருந்தால், ஆசிரியர்கள்மீது அவர்களுக்கு நல்லெண்ணம் இருந்திருந்தால் அன்றைய தினம் மானியக் குழு கூறிய

அந்தப் பரிந்துரையை ஏற்று நடைமுறைப்படுத்தியிருப்பார்களே யானால் இன்றைய தினம் இருக்கின்ற ஆட்சிக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் இவ்வளவு பெரிய பளு வந்திருக்காது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் நம்முடைய மாநிலத்திலேயிருக்கின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேதனைக்குரிய நிலையில், வருகிற 7 ஆம் தேதி உண்ணாவிரதம் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இதற்கு மூலகர்த்தா யார் என்று எண்ணிப்பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்தில் மதுரைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு 80 ரூபாயும், 50 ரூபாயும் உயர்த்திக் கொடுத்தார்கள், ஆனால் அந்த நேரத்தில் ஆட்சியிலே இருந்தவர்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள் பலபேர் அன்றைய தினம் அமைச்சர்களாக இருந்தார்கள், அன்றைய தினம் சட்டசபை உறுப்பினர்களாக இருந்தார்கள், எந்தப் பல்கலைக் கழகம் தங்களை உருவாக்கியதோ, எந்தப் பல்கலைக் கழகம் தங்களை வாழ வைத்ததோ அந்தப் பல்கலைக் கழகம் புறக்கணிக்கப்பட்ட நேரத்தில், அந்த ஆசிரியர்கள் வேதனைக் கண்ணீர் வடித்த நேரத்தில் வாளாவிருந்த காரணத்தால் அந்தப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வருகின்ற 7 ஆம் தேதி உண்ணாவிரதம் இருக்கின்ற நிலைமைக்கு மாறியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 1,000 இடைநிலை ஆசிரியர்கள், 200 தமிழாசிரியர்கள், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து கல்வியமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்வித்துறையைப் பொறுத்தவரையில், கல்வியானது மாநிலத்திற்கும், மத்திய சர்க்காருக்கும் இருந்த சூழ்நிலைகளை மாற்றி, இந்த நாட்டிலே எமர்ஜென்சி இருந்தபொழுது அது மத்திய சர்க்காரின் பொறுப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்குப்பிறகு கல்வித்துறை மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டு இன்றைய தினம் மீண்டும் அது மத்திய சர்க்காருக்குப் போகும் சூழ்நிலையிருக்கிறது. அதைத்தட்டிக் கேட்டுக் கொண்டிருக்கின்ற நம்முடைய ஆட்சியை, புரட்சித் தலைவருடைய ஆட்சியை உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலத்தின்கீழ் கல்வி வர வேண்டுமென்பது இந்த அரசினுடைய கொள்கை என்பதையும், அதை கோத்தாரி ஆணைக்குழுவும் பரிந்துரை கூறியிருக்கிறது என்பதையும் கண்டு அதற்காக உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து. திருச்சியிலும், கோவையிலும் இரண்டு பல்கலைக் கழகங்கள் அமைப்பதற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அது உள்ளபடியே பாராட்டப்பட வேண்டிய விவகாரம். அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற நேரத்தில், இந்த நாட்டில் மூடப் பழக்க வழக்கங்களில் மூடிக்கிடந்த மக்களைத் தட்டி எழுப்பிப் பகுத்தறிவு ஊட்டிய தந்தை பெரியார் அவர்களின் பெயராலே அந்தப் பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மத்திய தொழில் கல்வி பயில்வதற்குப் பல்கலைக் கழகம் நிறுவ உத்தரவிட்டிருகிறது. அந்த அடிப்படையிலே தொழில் கல்வி பல்கலைக் கழகத்தை தமிழ்நாட்டில் உடனடியாக உருவாக்கி, தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு பொறியியல் கல்லூரிகளையும் இணைத்து தொழில் கல்விக்கு இந்தச் சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தனியார் கல்வி நிலையங்களைப் பற்றி எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் மாற்றுக் கட்சியிலே இருப்பவர்கள் இன்றைய தினம் கூறுகிற கருத்து, ஏதோ தனியார் கல்வி நிலையங்களே கூடாது என்பது போன்ற நிலைமைகளுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுமோ என்று அச்சப்பட வேண்டியதாக இருக்கிறது. நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கூறியதைப்போல திருச்சி போன்ற பகுதிகளிலும், சென்னை போன்ற பகுதிகளிலும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் இன்றைய தினம் கல்விக்கூடங்கள் அமைத்து கல்வி அறிவைப் பெருக்கியிருக்கிறார்கள். அதில் தவறு இருந்தால் அவற்றைத் திருத்த முயல வேண்டுமே தவிர தனியார் கல்வி நிலையங்களே கூடாது என்ற அளவிற்குப் போய்விடக் கூடாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

(முற்பகல் 11·30)

**திரு. செ. சிவசாமி :** இதே கருத்து, நேற்றும் சொல்லப்பட்டது. இந்த நாட்டிலே கம்பனும், வள்ளுவனும்.....:

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்ன கேட்கிறீர்கள், நீங்கள் ?

**திரு. கே. சௌந்திரராசன் :** ஐ எம் நாட் யீல்டிங். திருச்சியிலே இருக்கிற கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், திருச்சியிலே செயின்ட் ஜோசப் கல்லூரியும், பிஷப் கல்லூரியும்......

**திரு. செ. சிவசாமி :** இந்தத் தனியார் கல்லூரிகள் இல்லாத காலத்தில்தான் இந்த நாட்டிலே கம்பனும் வள்ளுவனும் இருந்தார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : அங்கே ஒரு கம்பனும் இங்கே ஒரு வள்ளுவனும்தான் பிறந்திருக்க முடியுமே தவிர, இங்கே ஒரு சிவசாமி......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்பொழுது அரசுக் கல்லூரிகளும் இல்லையென்று கருதுகிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய கல்வியமைச்சரவர்கள், கல்வி மானியத்தில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஹையர் கிரேட் பள்ளிகள் இருப்பதற்குத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அது உள்ளபடியே வரவேற்கக்கூடிய விஷயம்.

ஆனால், அப்படி பார்க்கிறபொழுது, அங்கே இரண்டு ஆண்டுகளுக்குத் தேவைப்படுகிற, விஞ்ஞானக் கூடத்திற்குத் தேவையான சாதனங்கள் வாங்குவதிலே சில தொல்லைகள் இருக்கின்றன என்றும் குறிப்பிட விரும்புகிறேன். இதுபற்றிய என்னுடைய கருத்து என்னவென்றால், தற்பொழுது கல்லூரிகளிலே, பி.யூ.சி. போன்ற வகுப்புகளுக்காக இருக்கிற விஞ்ஞான சாதனங்களையும் இதர பொருள்களையும், பள்ளிகளுக்குக் கொடுத்தால், அதன் விளைவாகச் சிக்கனம் ஏற்படும். அதே நேரத்தில், கல்லூரிகளிலிருந்து, பி.யூ.சி. வகுப்புகளை எடுத்துவிடுவதால், பி.யூ.சி. வகுப்புகளுக்குத் தேவைப்படும் விஞ்ஞான சாதனங்கள், கல்லூரிகளுக்குத் தேவையில்லை என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த சம்பள விகிதத்தை, 1—1—1976-லிருந்து அமல் நடத்துவோம் என்று தெரிவித்தாலும், அடுத்த சம்பள இன்கிரிமென்ட்டை 1—4—1977-ல் தான் தருகிறார்கள். இதனால், அவர்களுடைய ஊதிய உயர்வு குறைவாகிறது. ஆகவே, அவர்களுக்கு ஊதிய உயர்வு வரவேண்டிய தேதியில் புதிய சம்பளத்தை அளித்தால், இப்பிரச்னை வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வேதனையோடு விடுத்திருக்கிற கண்ணீர் கடிதத்தைப் பேசிக்கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அருமை நண்பர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைய தினம் அந்த ஆசிரியர்கள் தந்திருக்கிற அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை, உங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

In Tamil Nadu, the Annamalai University teachers......

திரு. துரைமுருகன் : பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு சௌந்திரராசன் அவர்கள் நல்ல பேச்சாளர். அவர்கூடப் பார்த்துப் படிக்கவேண்டுமா? மற்றவர்கள்......



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : படிக்கவில்லை. அறிக்கையிலே இருக்கிற பகுதியை வாசிக்கிறேன் என்று சொல்லி வாசிக்கிறார்.

திரு. ரா. உமாநாத் : அவர் இப்பொழுது 'கொட்டேஷன்' தான் படிக்கிறார். மற்றபடி அடிக்கடி 'நோட்ஸை' ரெஃபர் பண்ணுகிறார்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு துரைமுருகன் இங்கே கவனித்துப் பார்த்தால் இந்தப் பிரச்னை இருக்காது என்று கருதுகிறேன்.

In Tamil Nadu, the Annamalai University Teachers are discriminated against. The interim relief of Rs. 80 for Lectuier, and Rs. 50 for Readers and Professors, which was granted to the teachers of the Universities of Madras and Madurai, some years back, and which is now included in the revised pay of these teachers, has not been incorporated in the fixation of the salaries of Annamalai University Teachers. They being denied this for the future, apart from their having lost it in the past is a double injustice. This amounts to discriminating the Annamalai University teachers from others, and reducing them to the status of third class University teachers in the country.

என்று வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள்......

(மணியடிக்கப்பெற்று அடுத்த உறுப்பினர் அழைக்கப் பெற்றார்)

* திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் ஏற்கனவே இருந்த போதிலும், ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது. அந்த ஆசிரியர்களை இப்போது தனியார் பள்ளிகளில் இருந்து எந்த நேரமும் விலக்கி விடுகின்ற அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஏற்கனவே சம்பளப் பாக்கியைப் பெறுவதற்காகக்கூட இன்றைக்கு ஆசிரியர்களுக்கு வாய்ப்பில்லாத நிலைமை இருக்கிறது. டிரிபூனலுக்குச் சென்றாலும் கூட சரியாக இல்லை. வேறுவிதமாக அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கிற நேரத்தில், அவர்கள் இன்னும் சிவில் கோர்ட்டு மூலமாக 100 ரூபாய்க்கு 7 ரூபாய் கோர்ட்டு பீஸ் கட்டித்தான் அவர்கள் சம்பள பாக்கியைப் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தனியார் பள்ளிகளின் முறைகேடுகளை நோக்கும் போது, கல்வித்துறைக்கு எந்தவிதமான பிடிப்பும் இல்லாமல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

குறிப்பாக தனியார் பள்ளிகளில் முறைகேடுகள் இருக்கின்றன என்று நிரூபிக்கப்பட்டாலும் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை, அந்தப் பள்ளிகளின் ரெகக்னிஷனை வாபஸ் பெறலாம். அப்படி ரெகக்னிஷனை வாபஸ் பெறும்போது மற்ற ஆசிரியர்களுக்கு என்ன பாதுகாப்பு, அல்லது அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு என்ன வாய்ப்புக்கள் அதைப்பற்றி எல்லாம் இந்தச் சட்டத்திலே ஒன்றும் சொல்லப்படவில்லை. அதை மாற்றி அமைக்கின்ற வகையில் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு டி.இ.ஓ.வுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல பகுதிகளிலே நாம் பார்க்கிறோம். தனியார் பள்ளிகளில் மட்டும்தான் இந்த ஆசிரியர் பதவிகள் நியமனம் செய்யப்படும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் ஏராளமான ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால் அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் சாங்ஷன் செய்யப்படுவதில்லை. அப்படிச் செய்யப்படும் சாங்ஷன்கள் எல்லாம் தனியார் பள்ளிகளுக்குத்தான் சாங்ஷன் செய்யப்படுகிறது. தனியார் பள்ளிகள் மட்டும்தான் அந்த வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்றன. அந்த நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் கோவில்பட்டியிலே நடந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரம் சரியாக இல்லை என்று பரவலாகப் பேசப்படுகிறது.

கிராமப்புறங்களில் இருக்கிற ஆசிரியர்களுக்கு, வீட்டு வசதியும் கிடையாது, வைத்திய வசதியும் கிடையாது. இவர்களுக்கு விசேடமான சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பள்ளி ஆசிரியர்களுடைய கோரிக்கை எல்லாம் 1-ம் தேதி சம்பளம் தரப்படவேண்டும் என்பதுதான். நேரடியாக வழங்கப்பட வேண்டும் என்பதுதான். அரசு கொடுக்கும் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாக பட்டுவாடா செய்தால் என்ன இன்னல் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, ஏ. பி. சி, பிரிவுகளைப் பற்றி முரண்பாடான கருத்துக்கள் நிலவி வருகின்றன. அந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் இப்படிப்பட்ட முறைகேடுகள் இருப்பதற்குக் காரணம், அவர்கள் இதனை ஒரு வியாபாரக் கூடமாகக் கருதிக்கொண்டு நடத்திக் கொண்டு வருகிறார்கள். அரியானா போன்ற மாநிலங்களில் எல்லாப் பள்ளிகளையும், குறிப்பாக எலிமென்டரி பள்ளிகள் நாட்டுடைமையாக ஆக்கப்பட்டுவிட்டன. அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் உருவாக வேண்டும்.



நாகர்கோயிலிலே இருக்கக்கூடிய பயனீர் குமாரசாமி கல்லூரியில், இன்றைக்கு நடைமுறையிலே எந்தவிதமான நன்கொடையும் வசூல் செய்யக் கூடாது என்று இருந்தாலும்கூட, அந்தக் கல்லூரியில் எம். எஸ். சுப்புலட்சுமி கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. [ஒரு காகிதத்தைக் காண்பித்தார்].

இப்படிப்பட்ட முறைகேடுகள் இருந்தாலும்கூட, அந்தக் கல்லூரியின் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இல்லை. இந்தக் குறைபாடுகள் அரசாங்கத்திற்கும், பல்வேறு முறையிலே கொண்டு வரப்பட்டும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திரு. அ. சுவாமிதாஸ் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, பயனீர் கல்லூரி, நாகர்கோவிலிலே இருக்கிறது, நான் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். கல்லூரி கட்டுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் இப்படிப்பட்ட எம். எஸ். சுப்புலட்சுமி போன்றவர்கள் கச்சேரியை நடத்தி, அதனாலே கல்லூரி விருத்தி செய்வது தவறு என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவையில் எப்பொருளைக் காண்பிக்கிறபோதும் என்னிடம் முதலில் காண்பித்து, அனுமதி பெற்றுத்தான் காண்பிக்க வேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

(முற்பகல் 11-40.)

*திரு. ரா. கிருஷ்ணன் : தனியார் பள்ளிகள் அப்படிப்பட்ட வசூல் செய்யக்கூடாது என்று இருந்தும், இப்படிப்பட்ட முறைகேடுகள் நடைபெறுகின்றன.

பாபநாசம் கல்லூரியிலும் ஒரு ஆசிரியர் நீக்கப்பட்டு இருக்கிறார். அரசிலிருந்து உத்தரவு அவர்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தும், மீண்டும் அந்த நிர்வாகம் அரசுக்கும், பல்வேறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதி, சந்தித்துப் பிறகு மீண்டும் உங்களுடைய அப்பீல் தள்ளுபடி செய்யப்படுகிறது காலம் கடந்து விட்ட காரணத்தால் மறுக்கப்படுகிறது என்று உத்தரவு வருகிறது. முதலில் அரசு அந்தக் கல்லூரிக்கு ஆலோசனை கூறுகிறபோது ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. ஆனால் பின்னர் ஏற்றுக் கொள்ள முடியாது என்று இன்னொரு உத்தரவு வருகிறது. இப்படி முரண்பாடான உத்தரவுகள் கல்வித் துறையில் வந்து கொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம்.

குறிப்பாக், பஞ்சாயத்து ஸ்கூல் டீச்சர்ஸ் பொறுத்த வரையில் ஆர். டி. எல். ஏ. டிபார்ட்மெண்டில் இருந்து ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஜி. ஓ., எம். எஸ். 1219, 18—7—1977 தேதியிட்ட உத்தரவில் முதலில் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போது சீனியாரிட்டிபடி நியமிக்கப்பட வேண்டும் என்று இருந்தது. மறுப்டியும் ஜி.ஓ.,எம்.எஸ். 130, 25—1—1978 முரண்பாடான உத்தரவு பிறபிக்கப் பட்டது. இப்படிப்பட்ட முரண்பாடான உத்தரவுகள் கல்வித் துறையில் இருந்து வருவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பள வெட்டு அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, மதுரையில் தெற்கு வாசல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஒருவருக்கு அவர் பணி புரிந்துள்ள காலத்திற்குச் சம்பளம் முறையாகக் கொடுக்கப்படவில்லை என்பதைக் கேட்டதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டு, அது அரசாங்கத்தின் கவனத்திற்கு ஆளும் கட்சியின் மூலமும் இங்கே தெரிவிக்கப்பட்டு இருந்தாலும், சம்பந்தப்பட்டவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற திட்டம் இப்போது கொண்டு வரப்படவிருக்கிறது, இதனால் 11-ம் வகுப்பு பாதிக்கப்பட இருக்கிறது. இதனால் அங்கேயிருக்கும் ஆசிரியர்களுக்கு என்ன பாதுகாப்பு, பி. யு. சி. மட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர் என்ன பாதுகாப்பு, அரசு அவர்களுக்கான பாதுகாப்பை வாய் மூலம் சொல்லாமல் உத்தரவு போட்டு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னையில் உள்ள பல்கலைக் கழகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்து இருக்கின்றன. அங்கேயிருக்கிற செனட் மெம்பர்கள் உள்பட பலர் ஏற்கனவே கவர்னரிடத்தில் மனு கொடுத்து இருக்கிறார்கள். 3 முறை கவர்னரிடத்தில் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

we had presented to him three petitions in respect of the charges of corruption, Maladministration, Misuse of Power, Victimisation of Staff Members, Emergency Excesses, Enactment of obnoxious Conduct Rules, Nepotism, Favouritism, etc. against the present Vice-Chancellor.

அந்தத் துணை வேந்தர் அல்லது சிண்டிகேட் உறுப்பினர்கள் ரிஜிஸ்டிரார் அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு இருந்தாலும் கூட, அவற்றைப் பற்றித் தகவல் கிடையாது. அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது தெரியவில்லை. அவர்கள் 6—3—1978 அன்று யூனிவர்சிடி செனட்டினரி கட்டடத்திற்கு முன்பாக உண்ணாவிரதம் இருப்பதாகவும் அறிக்கை விட்டு இருக்கிறார்கள். இது குறித்து அமைச்சர் அவர்கள் விசாரணை நடத்தி, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, கோவை சித்தாபுதூர் உயர் நிலைப் பள்ளி, மாஞ் சோலை எஸ்டேட் உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் படிக்கும் மாணவர்கள் இன்னும் சிமெண்ட் தரையில் உட்கார்ந்து படித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை மாற்ற வேண்டும். மாணவர்களைப் பொறுத்த வரையில் இன்று பல்வேறு நிலையில் அமைதியின்றி இருக்கிறார்கள். பல்கலைக்கழகத்தில் உறுப்பினர்களாக அவர்கள் வருவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். கேரளாவில் வாய்ப்பு இருக்கிறது. செமஸ்டர் முறை முறையில் இன்டர்னல் அசெஸ்மென்ட் இருப்பதை ஒழிக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்).

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவரவர்களே, கல்வித் துறைக்காக சுமார் 180 கோடி ரூபாய் முதன் முறையாகச் செலவிடப்படுகிறது. இந்தத் துறை இரண்டு அரங்கநாயகங்களின் தலைமையில் அழகாகச் செயல்பட்டு வருகின்றது. நான் கூறுவது அமைச்சர் அவர்களையும், கல்வித் துறைச் செயலாளர் ரங்கபாஷ்யம் அவர்களையும் ஆகும். இரு மொழிக் கொள்கை தீவிரமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த நேரத்தில், அது சென்னை உயர் நீதி மன்றத்தில் கூட பின்பற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே வருகின்ற ஒவ்வொரு தஸ்தாவேஜிலும் 'ஹைக்கோர்ட் ஆப் ஜுடிகேசர்' என்று சொல்லி விட்டு, கீழே 'சத்யமேவ ஜயதே' என்று— 'வாய்மையே வெல்லும்'—என்று போடாமல்—போட்டு இருக்கிறார்கள். இதைக் கண்டு உண்மையிலேயே மனம் வேதனைப்படுகிறது. ஆகவே, இந்த இருமொழிக் கொள்கையை அங்கேயும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அதைப் பரிசீலித்து அந்நிலைமையை மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் இப்போது படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகின்ற நிலை இருக்கிறது. அது மிகவும் வருந்தத் தக்கது. அதற்காக பல ஊக்கமளிக்கும் திட்டங்களை அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்று தான் மதிய உணவுத் திட்டம். ஆனால் அது சரியாக வழங்கப்படவில்லை அதற்குக் காரணம் ஊராட்சிகளில் பங்குத் தொகை சரியாகக் கொடுக்கவில்லை. சுமார் 7, 8 ஆண்டுகளுக்கு முன்னதாக அனுமதிக்கப்பட்ட அந்த மாணவர் எண்ணிக்கைதான் இன்றும் இருக்கிற காரணத்தால் தாழ்த்தப்பட்ட மாணவர்கள், வசதி இல்லாத மாணவர்கள்கூட இந்தத் திட்டத்தினால் பலனடைய முடியவில்லை.

அடுத்தபடியாக, உணவை சமைக்கின்ற பொறுப்பிலே உள்ளவர்கள், பெருச்சாளிகளுக்குப் பதிலாக அவர்களே பெருச்சாளிகளாக இருந்து உணவைச் சாப்பிட்டு விடுவது மிகவும் வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, எடுத்துச் செல்லும் வாகனங்கள் அடிக்கடி பழுது பட்டு போகும் காரணத்தால் மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும் சமைத்த உணவைக் கொண்டு சென்று அதற்காக தினம் 30 ரூபாய், 35 ரூபாய் வாடகை என்ற பெயரால் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, விடுபட்டுப் போகின்ற மாணவர்கள் முறைசாரா கல்வி மூலம் மாலை நேரங்களில் கல்வி பெறும் வாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த முறை அவ்வளவு பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. ஏனென்றால் படிக்கின்ற மாணவர்கள் பாதியிலே நிறுத்திவிட்டு, இந்த முறைசாரா கல்வியின் மூலம் படித்துக் கொள்ளலாம் என்ற முடிவு செய்து விட்டால் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். அதிகமான மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாவிட்டால் அந்த அளவுக்கு ஆசிரியர்களின் எண்ணிக்கையும் குறைந்துவிடும். அப்படியானால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும்.

ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை ; மாணவர்கள் இல்லாததால் ஆசிரியர்களை நியமிக்கவில்லை என்ற நிலை இப்படிச் சுழன்று சுழன்று வருகிறது. ஆகவே, அதிக அளவில் மாணவர்களை ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்க என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அத்தனையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் 'பி. டி. ஸ்கேல்' கொடுத்தால் திருப்திகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹையர் எலிமெண்டரி பள்ளிகளில் பி. டி. பட்டம் பெற்றவர்களை ஹெட்மாஸ்டர்களாகப் போட வேண்டும்.

சென்னை சர்வகலாசாலையில் ஏதோ ஊழல் நடந்திருப்பதாக வெளியே பரவலாகப் பேசப்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லால்குடி வட்டத்தில் ஒரு பள்ளியில் தமிழில் வருகைப் பதிவேடு எழுதினால் அங்கே இருக்கிற தலைமை ஆசிரியர் அது கூடாது என்று எழுதியிருக்கிறார். அதையும் கவனிக்க வேண்டும்.



படித்த ஆசிரியர்கள், பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியுமோ அவ்வளவு பேருக்கும் வேலை கொடுத்தால் நிச்சயமாக ஆரம்பப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை உயரும். அதன் மூலம் பள்ளிகளின் எண்ணிக்கைப் பெருகி, கல்லூரிகளின் எண்ணிக்கைப் பெருகி, அதன் மூலம் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் பெருகி, வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையிலேயே இந்த நிதிநிலை அறிக்கை ஒரு முழு நிலா 'புல் மூனாக' இருக்கும் போது நாம் 'நியூ மூனுக்கு' செல்ல வேண்டியதில்லை.

Finance Minister's speech is full moon's budget. We need not worry about new moon which is always criticising the full moon.

இன்னும் சொல்வதானால் கல்வி இலாகா முழுக்க முழுக்க வைஷ்ணவர் இலாகா என்று சொல்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்கிற காரணம் முதல் அமைச்சர் பெயர் இராமச்சந்திரன்— அது வைஷ்ணவ பெயர். கல்வியமைச்சர் பெயர் அரங்கநாயகம்— அது வைஷ்ணவ பெயர்; பெருமாள்—அது வைஷ்ணவ பெயர் ; வெங்கட சுப்ரமணியம், ஆதி சேஷையா, இராஜாராம் எல்லாம் வைஷ்ணவ பெயர்கள் ; மோகனரங்கம்—ரங்கம், ஸ்ரீரங்கம்— வைஷ்ணவப் பெயர். அவர் முன்பு இருந்தவர். ஆக, இப்படி எல்லோரும் வைஷ்ணவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏதாவது இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கத்தான் செய்வார்கள் சிலர்.

இன்னொன்றை முக்கியமாகச் சொல்ல விரும்புகிறேன். மாணவர்களுக்கு உரைப் பயிற்சி சொல்லித்தர வேண்டும். நோஞ்சான் போல் இருக்கிற மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து, ஏதாவது ஊசி போட்டாவது அவர்களை நல்ல ஆரோக்கியமானவர்களாகச் செய்ய வேண்டும். பள்ளிகளிலே உடற் பயிற்சி நிச்சயமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதோடு அவர்களுக்கு உடற் கூறு பற்றியும் சொல்லிக் கொடுக்க வேண்டும். பேச்சுப் பயிற்சியும் கட்டாயம் கொடுக்க வேண்டுமென்றுகேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

[முற்பகல் 11-50]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து 5 நிமிஷத்தில் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேசுகிறபோதே நிமிஷத்தை நினைவு படுத்தி, என்னைப் பேச அனுமதித்ததற்கு நன்றி கூறி என்னுடைய கட்சியின் சார்பாக, இந்திய தேசிய பார்வர்டு ப்ளாக் கட்சியின் சார்பாக நான் இந்த மானியத்தை வரவேற்று சில கருத்துக்களைச் சுருக்கமாக கூற முயலுகிறேன்.

176 கோடி, அதாவது மொத்த வருவாயில் 24 சதவீதம் கல்வி மானியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் செலவிடுகிற போது - குடும்பத்தில் பட்ஜெட் போட்டு கணவன் மனைவி சாப்பாட்டுக்காகவும் பயனுள்ள இதர வகைக்காகவும் செலவிடுவது என்று எண்ணுவது போல மாநில அளவில் அரசு செலவு செய்கிறபோது Pros and cons of every expenditure should be weighed while cons dering budget expenditure. என்ற விவரத்தைச் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வி அறிவு கண் போன்றது. நல்லதைப் பார்க்க நமக்கு கண்ணைக் கொடுத்திருக்கிறான் இறைவன். அதேபோல் கல்வி நல்ல முறையில் பயன்படுகிறதா என்பதைப் பற்றி அருள் கூர்ந்து அமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்''.

என்று கற்பிப்பது எதற்காக ? கீழ்ப்படிதல், தேசபக்தி உடையவர்களாக வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆரம்பிப்பது நல்லது. " பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்தது ''. என்கின்ற கதை போல இன்று மாணவர்களை அறிவு உள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்று கல்வியைக் கொண்டு வந்தால் அவர்கள் அறிவை வளர்ப்பதற்கு பதிலாக பெண்களோடு போட்டி போட்டுக் கொண்டு குடுமியை வளர்க்கிறார்கள். ஜாக்கெட் மாதிரி சட்டை போடுகிறார்கள். பெண்கள் பாவாடை போல் யானைக்கால் பேன்டைப் போடுகிறார்கள். நான் கோர்ட்டுக்குப் பேன்ட் போட்டுக் கொண்டு போனால் யாரோ கிராமத்து ஆள், பழைய ஆள் போகிறான் என்று கருதுகிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் நல்ல நோக்கத்தில் சொன்னாலும் கூட பொது வாழ்வில் இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களின் பேச்சு மாணவர்களைத் தரக்குறைவாகப் பேசுவது போல் ஆகிவிடும். ஆகவே இந்த நிலையை மாற்றிக் கொள்வதற்கு மாண்புமிகு அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா மாணவர்களும் அப்படி இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. சில மாணவர்கள் அப்படி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை.

திரு. கே. கந்தசாமி : நான் தந்தை ஸ்தானத்தில் இருந்து சொல்கிறேன். நாம் அத்தனை பேரும் தந்தை ஸ்தானத்தில் இருக்கிறோம். வயதில் பெரியவர்களாக இருக்கிறோம். எதிர் கால சந்ததியைப் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தந்தை ஸ்தானத்திலிருந்து கூறுவதாகச் சொல்கிறார்கள். கல்யாணம் ஆகாதவர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி : சிலர் வயதில் சிறியவர்களாக இருந்தாலும் பொறுப்பான கடமை உணர்வோடு இருக்கின்ற காரணத்தால் சொல்கிறேன். சிந்திக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. மிக வேதனையோடு குறிப்பிடுகிறேன். அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டியவர்கள் இப்படிப்பட்ட நிலைமையில் போய்க் கொண்டிருந்தால் நாடு என்னாவது.? ஆசிரியர்களும் மாணவர்களோடு போட்டிப் போடுவதைப் பார்க்கிறோம். இந்த அரசிடம் இருந்து ஏதாவது கருத்துக்கள் வரும் என்று எதிர்பார்க்கிறேன். நான் உண்மையை ஒரு நேரமாவது பேச வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். ஆடை ஆபரணங்களைப் போட்டு போட்டியை உருவாக்க வேண்டாம் என்பதற்காகத்தான் இவற்றைக் குறிப்பிடுகிறேன்.

We must have qualitative education. We are now interested in quantitative education. Character-moulding is what we require. Our education should be such as to infuse self-confidence, self-reliance in every individual student.

அந்த அளவுக்கு வந்தாலொழிய பயன் இல்லை என்பதை மிக்க வருத்தத்தோடு வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதில் ஜாப் ஓரியன்ட்டட் எஜுகேஷனை ஏன் கொண்டு வரக் கூடாது?

In West Bengal they have done it. வெஸ்ட் பெங்கால் மாதிரி ஏன் கொண்டு வரக்கூடாது?

I am not bothered about any form of Government. What I am interested is that our young graduates should not become frustrated. Something substantial should be done for the younger generation.

அங்கே இப்போது கூட கொண்டு வந்திருக்கிறார்கள். பல கோடிக் கணக்கான லட்சக்கணக்கான பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இலட்சக்கணக்கான மாணவர்கள் படித்து இரண்டு மூன்று டிகிரிகளை வைத்துக் கொண்டு தெருவில் அலைகிற வேதனையை நாம் காண்கிறோம். அதற்கு என்ன செய்யலாம்? நாம் சோசலிசம் பேசுகிறோம். லேண்ட் சீலிங்கைப் பற்றிப் பேசுகிறோம். ப்ராப்பர்ட்டி சீலிங்கைப் பற்றி பேசுகிறோம். அர்பன் சீலிங்கைப் பற்றிப் பேசுகிறோம். சர்க்கார் உத்தியோகத்தில் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மாத்திரம் ஏன் கொடுக்கக்கூடாது? வங்காளத்தில் அவ்வாறு கொண்டு வந்திருப்பதாக அறிகிறேன். அங்கே அந்த ஹைரார்க்கி ஏற்பட்டிருக்கிறது. ஒருவர் ஆசிரியர் மனைவி ஆசிரியர், மகன் என்ஜினியர், அடுத்தவர் டாக்டர் இப்படி ஒரே பேமிலி அரசாங்கத்தின் பெனிபிட்டை அனுபவித்துக் கொண்டிருப்பது சரியல்ல.

ஒரே பாமிலிக்கு அரசாங்க பெனிபிட்ஸ் முழுவதும் போனால் others get frustrated. Where can the rural folk go? மற்றவர்கள் எங்கேபோவது So let there be ceiling on Government appointment also. We are roducing graduates. They become frustrated in life. One day or other they are going to be extremists.

ஆகவே, ஒரு சிலருக்கு மட்டுமே போகாமல், எல்லோருக்கும் வேலை கிடைக்கக் கூடிய அளவிற்கு ஒரு திட்டத்தை, கல்வி அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களோடு கலந்து, கொண்டு வர வேண்டும். தற்போதுள்ள நிலைமை, கணவன், மனைவி ஒரு இடம், அப்பன் மகன் ஒரு இடம் என்ற நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கும் வேலை கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் மனிதாபிமான முறையில். நான் சொல்வது, தகுதியுடையவர்கள், பாதுகாப்பு பெறவேண்டியவர்கள் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள்.

ஒரு நாள் காலை ஐந்து அல்லது ஆறு மணிக்கு ஒரு கணவனும், மனைவியும் வந்தார்கள். அவர்கள் இருவரும் கண்ணீர் விட்டு அழுதுகொண்டு நின்றனர். அவர் சொன்னார், இவர் என் மனைவி எம்.எஸ்ஸி., (பர்ஸ்ட் க்ளாஸ்), நான் எம். ஏ. (லிட்) செகண்ட் க்ளாஸ், நாங்கள் இப்போது வேலையிழந்து நிற்கிறோம். என்று சொல்லி கண்ணீர் விட்டு அழுதார்கள். அந்த அம்மாள் மூன்று மாதம் வேலையிலிருந்து விட்டு, 'அவர்களை ஊஸ்ட் செய்திருக்கிறார்கள். எம். பி. எஸ். ஸி.-யில் இண்டர்வ்யூக்கு வந்திருக்கிறது, வேலை கிடைத்துவிடும் என்று கல்யாணம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். பத்து மாதத்தில் குழந்தை பிறந்துவிட்டது. ஆனால், வேலையில்லாமல் கைக்குழந்தையோடு கண்ணீர் விட்டார்கள். இப்படிப்பட்ட வேதனைக் காட்சிகளை எவ்வளவு நாட்கள் அனுமதிப்பது? இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஒரு வீட்டுக்கு ஒரு ஆள் என்று வையுங்கள்.



I want something substantial to be done for our younger generaon. I am not bothered about any form of Government.

The law of supply and demand operates. What is the demand in the market for educated youngsters for the educated young girls. சப்ளை அண்ட் டிமாண்ட் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). லட்சக்கணக்கான மக்களை கல்வியறிவு உடையவர்களாக, அறிவுக் கண் உடையவர்களாக் ஆக்க நமது மொத்த ரெவின்யூவில் 24 சதவிகிதம் செலவு செய்து வருகிறோம்.

Huge amount is allotted. Are they usefully spending it. ? என்பதை அருள் கூர்ந்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி : படித்தவர்கள், பட்டதாரிகள் தன்னம்பிக்கையோடு வாழ்கிறார்களா? வாழத் தகுதியுடையவர்களாக ஆக்குகிற விதத்தில் " நாம் மோட் ஆப் எட்யூக்கேஷன் வைத்திருக்கிறோமா? ஷேக்ஸ்பியர், ஷெல்லி, மில்டன் படித்து என்ன பயன்? அது எப்படி வாழ வைத்துக்கொள்ளும்? ஒரு உத்தியோகம் கிடைக்கவில்லை என்றால் நான்கு எருமை மாடுகளை வாங்கி வைத்துக் கொண்டு ஒரு பால்பண்ணை வைத்து வாழலாம் என்ற நம்பிக்கையிருக்க வேண்டும். Value of Labour should be included in there. (மணியடிக்கப்பட்டது)

அடுத்தபடியாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆங்கிலேயன் காலத்தில் அங்கு வாழ்ந்துவந்த மக்கள் மீது, மறவர் மக்கள் மீது குற்றப்பரம்பரைச் சட்டம் புகுத்தப்பட்டு இன்று அவர்கள் பாதுகாப்பிற்காக பிறமலைக்கள்ளர் ரிக்ளமேஷன் ஏற்படுத்தியிருப்பதால் ஒரு சிலர் அவர்கள் மத்தியில் அந்த மறுவாழ்வுத் திட்டத்தின் காரணமாக படித்துவர வாய்ப்பிருக்கிறது. அதே போல் மறவர்கள் ரிக்ளமேஷன் சீர்திருத்த இலாகா ஏற்படுத்தி இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் வாழ்கிற மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கிற வகையில் அவர்கள் வாழ்க்கை தரம் முன்னேற வழிவகை வகுத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிற் கல்லூரி அவசியமானது. (மணி அடிக்கப்பட்டது). நம் நாட்டில் மேஜர் இன்டஸ்ட்ரி அக்ரிகல்சர் Expert committee to analyse and understand the whole complicity arising today in the modern society especially in our State. என்ற குழு போடப்பட்டிருக்கிறது. திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் கூறியிருப்பதுபோல் தற்போதைய கல்வி பயனற்றதாகும். எனவே, கல்வி முறையை பயன் உள்ளதாக ஆக்க ஒரு

நிபுணர் குழு அமைத்து நடைமுறைக்கு உகந்ததாக ஆக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டு திரு. ஜேம்ஸ் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.).

(நண்பகல் 12-00)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவையிலே வைத்திருக்கின்ற கல்வி மான்யத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த ஆண்டு வருவாய்க் கணக்கில் வரும் மொத்தச் செலவில், கல்விக்காக 169 கோடி ரூபாயும், இன்னும் மருத்துவக் கல்லூரி, அரிசனங்களுக்காக ஏற்படும் செலவு இப்படி கல்வி வகையில் ஆக மொத்தம் 222 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதோடு மொத்தச் செலவைப் பார்க்கின்ற போது, 727 கோடி ரூபாய் மொத்த வருமானத்தில் 222 கோடி ரூபாய் கல்விக்காக நாம் செலவு செய்கின்றோம் என்று சொன்னால் நிச்சயமாக நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னாலும், இந்த அளவுக்கு செலவு செய்த பின்பும் நாட்டில் கல்வியினுடைய நிலைமை எந்த நிலைமையில் இருக்கிறது என்று பார்க்கின்ற பொழுது வேதனைப்படக்கூடிய சூழ்நிலையில்தான் இருக்கிறது என்று நிச்சயமாக இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய அத்தனை மக்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள். கடந்த எட்டு மாத காலத்தில் இந்த மாநிலத்தில் எத்தனை நாள் கல்லூரிகளில், பள்ளிகளில் பாடங்கள் சொல்லிக் கொடுத்தார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும்.

இந்த மாநிலத்தில் கல்விக்காக இவ்வளவு பெருந்தொகை செலவு செய்தும் எந்த அளவுக்கு இதில் அமைதியின்மை இருந்தது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கின்றோம். இந்த நிலைமையில் கூட கல்வித் துறை சிறப்பாக செயல்பட்டு இருக்கிறது என்று சொன்னால் உண்மையில் இதில் ஈடுபட்டிருக்கின்றவர்களை பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால், இந்த நிலை வருவதற்கு என்ன காரணம், இதையெல்லாம் தவிர்க்கவேண்டிய அவசியம் இல்லையா என்பதை எல்லாம் நாம் சிந்திக்க கடமைபட்டிருக்கின்றோம். சற்றேறக்குறைய நம்முடைய வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை செலவு செய்த பின்பும், அதனால் நாட்டில் எதிர்ப்பார்க்கக்கூடிய பலன் வரவில்லை என்று சொன்னால் இதைப்பற்றி மறு சிந்தனை செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இப்போது மாநிலத்தில் இருக்கின்ற பிரச்னையைப் பார்க்கின்ற போது, ஆசிரியர்கள் தங்கள் பிரச்னைகளுக்காக - போராட்டம் நடத்தினால்தான், தங்கள் கோரிக்கைகளை பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் இந்த அரசு பிரச்னைகளை அணுகுகின்ற முறையில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. என்பதை நாம் பார்க்கின்றோம்.



கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று சொன்னால், ஒரு வேளை—இப்படி போராட்டம் நடத்துவது வரவேற்கத் தகததில்லை என்றாலும், ஏன் போராட்டம் நடத்துகின்றார்கள்; ஏன் பரிட்சையை பகிஷ்கரிக்கின்றார்கள் என்பதைப் பார்க்கின்றபோது, பல நாட்களாக இதைப்பற்றி சொல்லியும் அரசு இதை நிறைவேற்றாத காரணத்தால், கடைசி கட்டமாக இந்த நிலைக்கு வந்திருப்பதாக கூறுகின்றார்கள்.

அவர்கள் கோரிக்கையைப் பார்க்கின்றபோது, வேலைக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்கின்றார்கள்; அதைத்தவறு என்று யாரும் சொல்ல முடியாது. அதைப் பற்றி அரசு அதிகாரப்பூர்வமாக அறிக்கையாக தெரிவித்து விட்டால், உண்மையில் இந்தப் பிரச்னையை கைவிட்டு விடுவதாக அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர்கள் அங்கங்கே வாக்கால் சொல்வதைவிட, அமைச்சர் சொல்வதை உத்திரவாதமான முறையில் ஓர் அறிக்கையை விட்டு விட்டால் இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டுவிடும். இதை நான் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

நேற்று பல்வேறு பிரச்னைகளை பேசி தீர்த்தாகி விட்டது என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், இன்றையதினம் அதைப்பற்றி கேள்விப்படுகின்ற நேரத்தில், அமைச்சர் அவர்கள் கூறினதைப் போல், பல பிரச்னைகளை இன்னும் ஏற்றுக் கொண்டதாக தெரியவில்லை என்பது தெரிந்தது. வேலை பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று ஏன் கூறுகின்றார்கள் என்று சொன்னால் மாணவர்கள் கல்லூரியில் குறைந்து விடுவார்களேயானால் ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள்.

வகுப்புக்கள் குறைக்கப்பட்டால் ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள். கல்வித் திட்டம் மாற்றி அமைக்கப்படும் நேரத்தில் ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள். ஆனால், பல ஆசிரியர்களும் பல ஆண்டுகளாக, பணியாற்றியவர்கள், எம். ஏ. பட்டம் எல்லாம் படித்து முடித்துவிட்ட பின்பும், ஒரு வேலையில் அமர்ந்து நிரந்தரமான ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பிறகு அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று சொன்னால் அதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, யு. ஜி. ஸி. சம்பள விகிதம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே பல சலுகைகள் கொடுத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. முக்கியமாக அவர்களுக்கு தரப்படவேண்டிய "அரியர்ஸ்"-க்கு பணம் உடனடியாக ரொக்கமாகத் தரவேண்டியதில்லை. கடன் பத்திரமாகத் தந்தால் போதும், வெள்ள நிவாரணத்திற்காக வேண்டுமென்றால் இப்போது எடுத்துக் கொள்ளலாம். ஆனால் திட்டத்தை இப்போது

எடுத்துக்கொண்டு அமல் நடத்தவேண்டும் என்று கேட்கின்றார்கள். வேறு பல்வேறு 12 மாநிலங்களில் இதை ஏற்றுக்கொண்டு நடத்துகின்ற பொழுது, தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு மட்டும் மறுப்பது நியாயம் அல்ல என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, 10 (ஏ) (1) சர்வீசிலே பல ஆண்டுகளாக ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். திடீரென்று சர்வீஸ் கமிஷன் நியமனம் செய்கின்றபோது, பல ஆண்டுகளாக் இந்த 10 (ஏ) (1)-ல் தற்காலிகமாக பணியாற்றுகின்ற ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்கின்ற நிலைமை ஏற்படுகின்றது. இதை உண்மையிலேயே நியாயம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இந்த 10 (ஏ) (1) சர்வீசிலே பல ஆண்டுகளாக பணி செய்யக்கூடிய ஆசிரியர்களை, நியாயமான முறையிலே அவர்களை நிரந்தரம் செய்வதற்கு இந்த அரசு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியிலே, அவர்களுக்கு இருக்கக்கூடிய கோரிக்கை என்னவென்றால், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் நேரடியாக வழங்கப்பட வேண்டுமென்பது. பல கல்லூரிகளிலே மாதாமாதம் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. அப்படி முறையாகவும், ஒழுங்காகவும் ஊதியம் கொடுக்கப்படாதது நியாயமற்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, கல்லூரி ஆசிரியர்களுக்கு இருப்பதுபோல், உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்குக்கூட வேலை பாதுகாப்புச் சட்டம் என்பது இருந்தாலும்கூட, அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. இதனால் பல பாதகம் எல்லாம் ஏற்படுகின்றது. சில தனியார் மானேஜ்மெண்டு நிர்வாகங்கள் வேண்டுமென்றே ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இத்தகைய ஆசிரியர்களுக்கு இலாகாவிலே நியாயம் வழங்கினாலும் அப்படிப்பட்ட ஆசிரியர்களை நிர்வாகம் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் அவர்கள் அத்தனை பேரும் நீதி மன்றங்களுக்குச் செல்கிறார்கள். இதிலும், அவர்களுக்கு நியாயமான உத்தரவு வந்தாலும்கூட, அதை ஏற்றுக் கொண்டு செயல்படுவதற்கு தனியார் நிர்வாகம் முன்வருவதில்லை. எனவே, அரசு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டு, எப்படியும் ஆசிரியர்களுக்கு நீதி வழங்குவதற்கு உதவி செய்யவேண்டுமென்பது அரசாங்கத்தின் கடமை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து இந்த ஆசிரியர்கள் பிரச்னைகளை நீண்டகாலமாகவே இப்படி நீடித்துக் கொண்டே போவதால், பாதிக்கப்படுவது நம்முடைய மாணவர்கள், இளஞ் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் கூறத் தேவையில்லை. என். ஜி. ஓ-க்கள் பிரச்னையைத் தீர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து அரசியல் கட்சிகளையும் கூட்டி, அதற்கான தீர்வினைக் காண முயற்சி எடுத்திருக்கிறார்கள்.





அதுபோல் ஆசிரியர்கள் பிரச்னைக்கும் தீர்வு காண அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் கூட்டி, அதற்குத் தீர்வுகாண இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்வதோடு, இது ஒரு லாங் ஸ்டாண்டிங் பிராப்ளமாக இருப்பதால், இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண ஒரு டிரிபியூனல் நியமித்தாலும்கூட, அது தேவையற்றதாக இருக்காது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இத்தனை ரூபாயை நாம் செலவழித்தாலும்கூட, படித்துவிட்டு வெளியே வருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கின்றதா என்று சொன்னால், ஒன்றுமில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். இதனால் நாட்டிலேயே சமாதான நிலைமை ஏற்படாமல் இருக்க, பல்வேறுப் பிரச்னைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், இன்றைய தினம் நிதி நிலை அறிக்கையில் 1,000 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல், 200 தமிழ் ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி எண்ணிக்கை அளவில் மட்டும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது என்பது, என்னவோ யானைப் பசிக்கு சோளப் பொரி அளித்ததுபோல்தான் இருக்கும். இந்த மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஆசிரியர்களிடையே எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதை இந்த அரசு உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களுக்காக நாம் பி. டி., செகண்டரி கிரேடு பயிற்சி என்றெல்லாம் எவ்வளவோ பணம் செலவழித்து வருகிறோம். மேலும், ஆசிரியர்களுக்கு லோன், ஸ்காலர்ஷிப் எல்லாம் கொடுத்து செலவு செய்கிறோம். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் எல்லாம் படித்துவிட்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவில்லை என்று சொன்னால், அது நாட்டுக்குப் பெரிய நஷ்டமாகும் என்பதை இந்த அரசு உணர்ந்தாக வேண்டும். ஆக, இந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு பல்வேறு முறைகள் இருக்கின்றன.

ஆசிரியர்கள், மாணவர்கள் ரேஷியோவை அதிகரித்து, அந்த முறையிலே வேலை செய்வதற்கான பல்வேறு திட்டங்களை இந்த அரசாங்கம் கொண்டு வரலாம். அரசாங்கம் நினைத்தால் இது ஒன்றும் பெரிய காரியமல்ல என்பதை நாம் அறிவோம்.

இந்தப் பிரச்னையைத் தீர்க்கும்வகையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே வேலையில்லாத ஆசிரியர்கள் சங்கம் என்று ஒன்று அமைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு அங்கு வந்திருந்த போது, 3,000 தமிழ்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 4

ஆசிரியர்களுக்கு ஆலயங்களிலே ஆசிரியர்கள் வேலை கொடுக்கப் போவதாகப் பத்திரிகையிலேகூட செய்திகள்வந்தன. அப்படி இந்த பட்ஜெட் உரையிலே முதல்வர் அவர்களுடைய கருத்து வந்திருக்கிறதா என்று பார்த்தால், இன்றையதினம் இந்த அறிக்கையிலே 200 தமிழ் ஆசிரியர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு தரப்போவதாகச் செய்தி வந்திருக்கிறது. ஆக, இந்த நிலைமையில் முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், 3,000 ஆசிரியர்களுக்கு வேலைபோட்டுக் கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே அந்த அளவுக்கு ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வயது வரம்பைத் தாண்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வயது அதிகமாக கூடிக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி இந்த அவையிலே பலர் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைப்போல் இவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்த வேண்டும். இதற்கு விதிவிலக்கு அளிப்பதாக அமைச்சர் அவர்கள்கூட கூறினார்கள்.

[பிற்பகல் 12-10]

ஆனால் இதுவரையில் நடைமுறைக்கு வரவில்லை. அதை உடனடியாக நடப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியின்போது பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி., வரை இலவசக் கல்வி கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பி.யு.சி., வரை இலவசக் கல்வி ஆக்கியது. இந்தத்தேசத்தில் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி ஆக்க வேண்டுமென்பது கோரிக்கை. அதை நாம் ஏற்றுக் கொண்டு அந்த வாக்குறுதியை மக்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்.

இன்றையதினம் புதிய கல்வி முறையில் ஆங்கில மீடியத்தில் படிப்பவர்களுக்குக் கட்டணம் உண்டு என்று கூறுகிறார்கள். வசதியுள்ளவர்கள்தான் ஆங்கிலம் மூலம் படிக்கிறார்கள். அதற்குக் கட்டணம் என்று வைப்பதன் காரணமாக வசதியுள்ளவர்களுக்குத் தரக்கூடிய கல்வியின் தரம் உயர்ந்ததாகவும், வசதி குறைந்தவர்களுக்குத் தரக்கூடிய கல்வியின் தரம் குறைந்ததாகவும் அமையக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, அனைவருக்கும் இலவசக் கல்வி தர ஏற்பாடு செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரீட்சைக்குக் கட்டணம் கட்ட வேண்டுமென்று இருப்பதைக் கூட விட்டு விடலாம். ஏழை மாணவர்கள் பரீட்சை பணம் கூடக்கட்ட முடியாத நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



1978 மார்ச் 4] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பள்ளிக் கட்டடங்களுக்காக 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நம் நாட்டில் பள்ளிக்கூடங்கள் எந்த நிலைமையில் இருக்கின்றன என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். நிதிநிலை போதுமானதாக இல்லாத காரணத்தால் மெதுவாகத்தான் போகவேண்டுமென்ற எண்ணம் இருக்கலாம். சில நாட்களுக்கு முன்பு 'இந்து' பத்திரிகையில் வந்த ஒரு படத்தை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்குக் காண்பித்தேன். அமைச்சர் அவர்களும் அதைப் பார்த்திருப்பார்கள். இந்து பத்திரிகையில் வந்தவற்றை நாம் பொதுவாக ஆதாரமாக வைத்துப் பயன்படுத்துகிறோம். ஒரு உயர்நிலைப் பள்ளியின் படத்தைப்போட்டு அவர்கள் கூறுகிறார்கள்.—

"This is not weather beaten cattleshed but very much part of the class room of a Government High School near Velachery, Tambaram Road"

இவ்வாறு கூறியது மட்டுமல்லாமல், அங்கு பெஞ்சுகள் இல்லை, ஆசிரியர்கள் உட்கார சேர் இல்லை.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவர் அவர்களே, பள்ளிக்கரணையில் இருக்கும் அந்த உயர்நிலைப் பள்ளியைப் பார்த்தேன். பக்கத்தில் கட்டடம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> விளக்கத்திற்கு நன்றி. இது ஒரு படமாக இருந்தாலும், நமது மாநிலத்தில் பல்வேறு பள்ளிகள் இந்த நிலைமையில் இருக்கின்றன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூற வேண்டிய அவசியம் இல்லை. என்னுடைய பகுதியில் இரண்டு ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. இந்த நேரத்தில் இரண்டு உயர்நிலைப் பள்ளிக் கூடங்களுக்காக அரசு பணம் ஒதுக்கியிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஆரம்பப் பள்ளிகள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. மஞ்சால்மோடு ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் பெண்கள்கூட ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடம் இருக்கிற இடமும் அரசுக்குச் சொந்தமானதல்ல; தனியார் இடத்தில் இருக்கிறது. கட்டிடமும் மோசமாக இருக்கிறது. ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகள் இல்லை என்று கூறுகிறபோது நான் விளக்கமாகக் கூற வேண்டியதில்லை. இது போன்று பல பள்ளிக்கூடங்களின் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகள் உடனடியாக மாற்றப்பட வேண்டும். அதற்கு அதிக பணம் ஒதுக்க வேண்டும்.

ஹையர் செகண்டரி திட்டம் வருகிறபோது 400 பள்ளிகள் நமது மாநிலத்தில் மொத்தமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு பள்ளிக்கூடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைப்பொறுத்த

மட்டில் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் அமலில் இருந்த இடம். அதிகமான உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு பள்ளிக்கூடம் என்ற விதியைத் தளர்த்தி அதிகமான பள்ளிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக அத்தனை பள்ளிகளையும் கூடிய மட்டும் கிராமங்களில்தான் கொடுக்கவேண்டுமென்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. கலைஞர்கள் என்று கூறுகின்றபோது நம்முடைய நாட்டில் சிலம்பம் போன்ற பல்வேறு கலைகள் இருக்கின்றன, அந்தக் கலைகள் அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கல்வி இலாகாவிற்கு இருக்கிறது. சிலம்பம், வாள் வீச்சு போன்ற கலைகள் அழிந்து போகாமல் பாதுகாக்க அதிலே ஈடுபட்டுள்ள ஆசான்களுக்கு உதவித் தொகைகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாடப் புத்தகங்களைத் தயார் செய்யும்போது மாணவர்கள் தலைவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக கல்விக் கண் கொடுத்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப்பாடப் புத்தகங்களில் சேர்த்து கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் வைக்கவேண்டும். அப்படிச் செய்தால் தான் மாணவர்கள் எதிர்காலத்திலே அவர்களைப்பற்றித்தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, மதுரைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே வைஸ் சான்சலரை நியமிப்பதிலே ஏதோ சிக்கல் அரசாங்கத்திற்கு இருப்பதாகத் தெரிகிறது. வைஸ் சான்சலர் இல்லாமல் பல்கலைக் கழகம் செயல்படுவது வரவேற்கத் தக்கதல்ல, ஆகவே அந்தச் சிக்கலைத் தீர்த்து வைஸ் சான்சலரை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைப்பல்கலைக் கழகத்திலே அட்மினிஸ்ட்ரேடிவ் ஸ்டாஃப் அந்த சிடியைச் சேர்ந்தவர்களையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளவர்களையும் நியமிப்பதாகவும் வெளியிடங்களில் உள்ளவர்களையும், அரிசன மக்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் நியமிப்பது இல்லை என்றும் புகார் வருகிறது. ஆகவே, எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத்தாக்கீது அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு பென்ஷன் என்பதைப் பொறுத்தவரையில் ஏற்கனவே தனியார் துறையில் இருந்த பள்ளிகளை ஆரம்பப் பள்ளிகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்கள். அங்கே பணியாற்றிய ஆசிரியர்களும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறார்கள்.



அவர்களுக்கும் அரசாங்க ஆசிரியர்களுக்குக் கொடுப்பது போன்ற பென்ஷன்தான் கொடுக்கவேண்டும், ஆனால் பல்வேறு காரணங்களைக் காட்டி அவர்களுக்கு பென்ஷன் வழங்கப்படாமல் இருக்கிறது. சில ஆசிரியர்களுக்கு 12 ரூபாய்தான் பென்ஷனாகக் கொடுக்கப்படுகிறது. தமிழ் நாடு அரசு பென்ஷன் விதிகள் அவர்களுக்கும் அப்ளை செய்யப்பட்டு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எக்ஸ்டென்ஷன் செண்டர்களைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகங்களில் பல எக்ஸ்டன்ஷன் செண்டர்கள் அமைக்கிறார்கள். நாகர்கோவிலிலே பல்வேறு கல்லூரிகள் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கும் அளவுக்கு இருந்தும், அங்கே குறைந்தது ஒரு எக்ஸ்டன்ஷன் செண்டராவது அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னபோது அமைச்சர் அவர்களும் அமைப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் இதுவரையிலும் அது கவனிக்கப்படவில்லை., ஆகவே அதையும் கவனித்து ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சேலம் மாவட்டத்திலே மேட்டூர், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் கல்லூரிகளே இல்லை என்ற குறை இருக்கிறது. அதன் காரணமாக அங்கே உள்ள பிள்ளைகள் எல்லாம் வெளியிடங்களுக்குச் சென்று படிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே தேவையான கல்லூரிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார், மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது அவர்களது ஆட்சிக் காலத்திலே எஸ்.எஸ்.எல்.சி. வரை இலவசக்கல்வி கொடுத்ததாகவும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பி.யூ.சி. வரை அளித்ததாகவும் இந்த அரசு பட்டதாரி வகுப்புவரை கொடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். படிப்பு முடித்தவர்களுக்கு எல்லாம் கியாரண்டி பார் ஜாப் கொடுத்தார்களா ? அதைக் கொடுக்க பிரதமர் மொரார்ஜி அவர்களை இவர்கள் வற்புறுத்துவார்களா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மொரார்ஜி அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டதால் கூறுகிறேன். இந்தத் தேதியில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 10 கோடி பேர்கள் இருக்கிறார்கள், முதலில் அவர்களை எழுதப்படிக்கச் செய்வதற்காக தேசிய அளவில் திட்டம் அமைப்பதற்காக மத்திய அரசாங்கம் நிதிநிலை அறிக்கையிலே கொண்டுவந்திருக்கிறது. ஆகவே அந்த அளவிற்கு மத்திய அரசாங்கம் செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. பி. மு. பெரியசாமி : திரு. ஜேம்ஸ் சொல்கிற போது மத்திய அரசாங்கம் தேசிய அளவிலே ஒரு திட்டம் தயாரித்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டம் உருப்படியான திட்டமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகியுங்கூட கல்வி படிக்க எழுதத் தெரியாதவர்கள் 10 கோடி பேர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். முதலாவதாக நாம் செய்யவேண்டிய பணி கல்வி எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக்கல்வி அறிவைப் புகட்டும் பணியாகும். அந்தப் பணி எவ்வளவு சிறப்பான பணி என்பதை உறுப்பினர் அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20].

THIRU A. EAKAMBARA REDDIAR : Mr. Speaker Sir, I rise to speak on Demand No. 17 Education which has an outlay of Rs. 176 crores. It represents 24 per cent of the total expenditure of Reveune Account, namely Rs. 727 crores.

Though the cost of elementary or Primary education works out to nearly 50 per cent of total cost of education i.e. Rs. 82,40,00,000, it remains to be improved qualitatively a lot. There are 33,000 elementary schools in Tamil Nadu, out of which 29,000 are in Panchayat Union area and in this 23,000 schools, 19,900 elementary and 3,100 Higher Elementary Schools are run by Panchayat Union Councils.

The Panchayat Union Councils experience a lot of difficulty to run the schools, even though they get 4/9 ths of the Local Cess and Rs. 6 per head of population based on 1971 census. The balance of expenditure on elementary education is shared by the Government and the Panchayat Unions according to the revised classification of the Blocks. As classifications were not made correctly based on per capita during 1972 by the Panchayat Education Finance Enquiry Committee constituted for the purpose many of the Panchayat Unions have become sick on account of erroneous classification of Blocks and are financially hard hit, to meet its share of contribution. In this regard, I suggest for consideration of Government that in the case of sick Panchayat Unions the balance cost of Elementary Education has to be entirely met by Government, till the latest population figures are taken into consideration and reclassification of Development Blocks are given effect to for purposes of grants to Panchayat Unions.

The Government and all of us are very anxious to have cent per cent enrollment in the Elementary stage. The drop-outs at this stage is 42 per cent. Only 58 per cent of the enrolled strength in 1st Standard remains till Vth Standard.



The proposal to abolish detention in Standards 1 to 3 in addition to the already existing schemes of free Midday Meals, free supply of books and slates is a welcome measure.

In this connection, I suggest free supply of books up to 5th Standard to those poor pupils receiving Midday Meals.

Book Bank Scheme also can be revived to help students of vulnerable section.

And then coming to the High Schools, only a provision of Rs. 20 lakhs have been made for the construction of new buildings. It is too meagre since many of the High Schools are in temporary sheds which require pucca buildings immediately. I request the Government to kindly provide more funds at least in Supplementary Budget so as to provide some more new buildings to the High Schools.

The introduction of compartmental system of pass at Secondary and Higher Secondary stage is a welcome measure.

Coming to the Higher Secondary schools the Government have come forward to introduce at the first instance 220 schools and latter 180 schools, and altogether 400 schools in this year. It is a welcome measure. Most of them will be benefited since the present Government envisages its stand in Rural infrastructure. At the same time the Government have come forward with a proposal to give free education to the Tamil medium students.

Government have directed collection of tution fees from English Medium students. Since English language serves as a link in between our State and Centre and other States and other countries, necessary encouragements has to be given for English medium also as in the case of Tamil medium. I request the Government kindly to reconsider this important issue and direct not to collect tution fees from English medium students also as in the case of Tamil medium students.

I thank the Government and especially the Hon. Education Minister for having selected Pallipat High School for the introduction of Higher Secondary in the first list.

At the same time I also request the Hon. Education Minister and the Government to kindly select 3 more schools in my constituency for introduction of Higher Secondary Schools, at the following places viz., Podattoorpet, Athimanjeripet, Ammaiyarkuppam or R.K. Pet.

Then, there are no Pucca School Buildings in Panchayat Unions. Not even 10 per cent is located in pucca school bulidings. I suggesest more number of school buildings to be constructed instead of rigid condition of only one school buildings for "C" Category and 2 for "D" Category. No provision had been made for the constiuction of school buildings for Higher Elemenraty Schools for many unions. At least a minimum of 3 elementary schools and one Higher Elementary school for each Panchayat Union liber alsed Government grants for construction of School Buildings have to be provided.

A word about the retired teachers: The retired teachers in the City of Madras enjoy the privilege of getting their pension remitted by Money Order at the cost of the Government, whereras the teacher-pensioners in the districts have to go long distance to the Treasury to draw their pension. The differential treatment should be removed and all teacher -pensioners in the district should be given the benefit of this concession, as in the City of Madras, and pension should be remitted to all of them by Money Order at Government cost.

In Colleges and High Schools, Librarians are included in the category of clerical staff. These Librarians are of a Higher Order. They have undergone a special course of training in Library Science. They should be classified in the category of Teaching staff in the Colleges and High Schools, and should be given all benefits which are intended to the teaching staff.

Finally the teacher in the Schools and Colleges have had the benefits of revised scales of pay and other better terms of service conditions with effect from 3rd October 1970 based on the recommendations of the Second Pay Commission and so they get comparatively better persion. But those teachers who retired before 2nd October 1970 are without the advantages of the recommendations of the Pay Commission and they get very poor pension. Some of them get 1/3rd of the Pension drawn by the present day pensioners. I request Government kindly to reconsider this issue and show some consideration in the matter of increasing the Pension of teachers who retired before 2nd October 1970.

Then, the Teacher Pensioners who retiied from Non-Government institutions are not getting the benefits of pension as the teachei pensioners of Government institutions. I request the Government kindly to extend the benefits to teacher pensioners of non-Government institutions also, as in the case of teachers retired from Government institutions.

I conclude my speech with thanks for having given me the opportunity to speak.



[பிற்பகல் 12·30]

__திரு. க. அன்பழகன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின் மீது எதிர்க்கட்சியின் சார்பில் பேசுவதற்கான வாய்ப்பினைப் பெற்றதற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

மக்களுடைய கவனத்தை இழுக்கவேண்டிய மிகவும் முக்கியமான ஒரு துறை கல்வித்துறை. மக்களுடைய எதிர்காலத்தை உருவாக்குகிற அதிக வாய்ப்புள்ள துறையும் இந்தக் கல்வித் துறையேயாகும். சமுதாயத்தினுடைய நிலையை மாற்றுவதற்கு ஏதேனும் ஒரு சிறந்த கருவி இருக்குமானால், அது இந்தக் கல்வித் துறையின் மூலமாக அமைகிற பணியின் விளைவாக உருவாகும் அல்லது மாணவர்களே மாணவர்களாக உருவாவதன் விளைவாகத் தான் தேவையான நல்ல மாற்றங்கள் வளர வேண்டும்.

எனவே, அத்தகைய இன்றியமையாத ஒரு துறையில் ஆங்கிலேயர்களுடைய ஆட்சிக் காலத்திலே இருந்து, ஏதோ ஒரு வகையிலே தமிழ்நாட்டிலே கல்வித்துறை முன்னேற்றமாக நடந்து வந்து, தொடர்ந்து காங்கிரசார் ஆட்சிக் காலத்திலேயும், அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும், மேன்மேலும் முன்னேறுகிறது என்ற எண்ணத்தோடுதான் செயல் பட்டு வருகிறது.

ஆனால், எவ்வளவுதான் அதிகமாக நிதி ஒதுக்கி இந்தக் கடமைகளை நிறைவேற்றினலும்கூட, மக்களுடைய தேவையை நோக்குகிறபோது, நிறைவேற்றுகிற அளவு மிகக்குறைவாக இருக் கிறது. பயன் விளைவிப்பதிலே இன்னும் குறைவாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நாம் எந்த நோக்கத்தோடு செயல் படுகிறேமோ அந்த நோக்கமே நிறைவேற முடியாமல் ஆகிவிடு கிறது; சதை இல்லாமல், இரத்த ஓட்டமே இல்லாமல், எலும்புக் கூடாக ஒரு தோற்றம் நமக்குத் தெரியுமேயானல், அது எப்படி காண்போர்க்கு வேதனையை உண்டாக்குமோ அந்த வேதனையைத் தான் சமுதாயத் தேவை நோக்கோடு காணும்போது கல்வித்துறை நமக்கு அளிக்கிறது. இதனல் ஆசிரியர்கள் எல்லாம் கடமையை ஆற்றவில்லை என்றே, அதிகாரிகள் ஒழுங்காகப் பணிபுரியவில்லை என்றே, அமைச்சர் எதையும் கவனிக்கவில்லை என்றே நான் சொல்லவில்லை. தேவையினுடைய அளவு, நாம் எதிர்நோக்கு கிற பயன் விளையவேண்டிய நன்மைகள், இவற்றை நோக்குகிற போது இந்த மாபெரும் குறைபாடுகள் இருப்பதை ஆட்சியிலே உள்ளவர்கள் ஆழ்ந்து எண்ணிப்பார்க்கவேண்டும்.

நாம் கடந்த ஆண்டு செய்ததைவிட, இந்த ஆண்டு அதிகம் நிதி ஒதுக்கம் செய்துவிட்டோம் என்ற எண்ணத்திலே ஒரு மகிழ்ச்சி, நிறைவு எற்படுவது இயற்கை. மொத்த வரவு-செலவு திட்டமும் உயருகிறபோது இதன் வரவு செலவுத் திட்டமும் உயர்வது இயற்கைதான். குறிப்பாக வரவு செலவுத் திட்டத்திலே,

முதல் பங்கீட்டு உரிமை கல்வித்துறைக்குத்தான் இயற்கையாக அமையும். ஆனால் தேவையின் அளவிலே எந்த அளவு நாம் நிறைவு செய்திருக்கிறோம் என்று பார்த்தால், ஏறத்தாழ 700 கோடி ரூபாய்க்குக் கல்விக்குத் தீட்டப்பட வேண்டிய வரவு செலவுத் திட்டம், 197 கோடி ரூபாய்க்குத் தீட்டப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதையும், இங்கே இருக்கிற வெட்டுத் தீர்மானங்கள், தந்திருக்கிற நண்பர்களுடைய அந்த வெட்டுத் தீர்மானங்களின் கோரிக்கைகளையும், அதன் மூலமாகப் பிரதிபலிக்கிற தேவை உணர்வுகளையும், அதை நிறைவு செய்வதற்கு எவ்வளவு செய்யலாம் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்கிறபோது அதற்கான ஒரு கணிப்பு இருக்குமானால், இங்கே அன்றாட நிர்வாகம், ஆசிரியர்களுடைய ஊதியம், பள்ளியை நடத்துகிற செலவு, பள்ளிக் கட்டிடங்களை உருவாக்குவதற்கான செலவு எவ்வளவு குறைந்து போயிருக்கிறது என்பது தெரியும்.

பள்ளிகளைப் பயனுள்ளதாக அமைக்கிற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகும் செலவு காரணமாக எந்த அளவு பள்ளிகளை அமைக்க முடியாமல் இருக்கிறது, மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துகிற சூழ்நிலையை உருவாக்க எந்த அளவு நிதி செலவு செய்யமுடியாமல் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்போமானால் உண்மையான நிலை விளங்கும். நான் அமைச்சருக்கு முதலிலேயே சுட்டிக் காட்ட விரும்புகிறேன், வெட்டுத் தீர்மானங்களிலே தரப்பட்டிருக்கிறபடி, இங்கே இவர்கள் எவ்வளவுதான் கல்வி முன்னேற்றத்துக்காகச் செலவிடுவதாகக் கூறினாலும், மேல் நிலைக் கல்வியை உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே தொடங்குவதாகச் சொன்னாலும், 14 உறுப்பினர்கள் மேல் உயர்நிலைக் கல்வி கற்பிக்கும் பள்ளிக் கூடங்களைப் பரவலாகத் தொடங்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். கல்லூரிகளைப் புதிதாகத் துவங்க மாட்டோம் என்று அரசு சொன்னாலும்கூட 10, 12 உறுப்பினர்கள் கல்லூரி துவங்கவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறி கேட்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாகக் கல்வி நிலையங்கள் வேண்டும் என்று கேட்டவர்கள் 10, 15 பேர்கள். பல்வேறு வெட்டுத் தீர்மானங்களில் துவக்கப் பள்ளிகளை நாடுமுழுவதும் உள்ள எல்லாக்கிராமங்களிலும் தேவை என்று கேட்டிருப்பவர்கள் பலபேர். துவக்கப் பள்ளிகளை மேலும் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்பவர்கள் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்பவர்கள் பலபேர். இப்போது பள்ளிகளிலே உள்ள விஞ்ஞானக் கூடங்கள் பள்ளிகளிலே மிகக் குறைவாக இருக்கிற காரணத்தாலே அவைகளை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்பவர்கள் பலபேர். நூலகம் தேவை, பெஞ்சு நாற்காலி தேவை, ஆசிரியர்களுக்கே நாற்காலிகள் இல்லை என்று குறிப்பிட்டிருப்பவர்கள் பலபேர். புதியக் கல்வித் திட்டம் வரும்போது ஆசிரியர்களுக்குப் பணிப்



பாதுகாப்பு தேவை என்று கேட்பவர்கள் சில பேர். இன்னும் சொல்லப்போனால் வேலை இழந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்பவர்கள் பலபேர். குறிப்பிட்ட பள்ளிகளுக்குக் கட்டடங்கள் தேவை என்று கேட்டவர்கள் ஏறத்தாழ 34 பேர்கள்.

இவற்றை எல்லாம் கணக்கிட்டு கூட்டிப் பார்ப்போமானால் 188 கோடி ரூபாய் அளவு அரசாங்கத்தில் நிதி ஒதுக்கினாலும் திட்டத்தில், மேலும் 188 கோடி ரூபாய்க்கு டிமாண்ட் இருக்கிறது, தேவை இருக்கிறது. நாம் நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளுகிற முயற்சியிலே வெற்றி பெற முடியாத அளவிற்குப் பொருளாதார சிக்கலிலே முடக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதைத்தான் நான் கடந்த ஆண்டு எடுத்துக்கூறி, ஒரு உண்மையையும் சொன்னேன். கல்விக்காகும் மொத்தச்செலவில் ஏறத்தாழ 2·5 விழுக்காடு அளவிற்குத்தான் கட்டிடத்திற்காக மூலதன நிதி ஒதுக்கம் செய்கிற நிலைமை இருக்கிறது. நூலகம் விஞ்ஞானக்கூடம் போன்றவற்றிற்கு 0·15 விகிதம் ஏறத்தாழ 200-ல் ஒரு பங்குதான் ஒன்றுதான் நூல் நிலையங்களுக்காக உதவித்தொகையாக நிதி ஒதுக்கம் செய்யும் நிலைமை இருக்கிறது.

ஏறத்தாழ 10 ஆண்டுகாலத்திற்கு பள்ளிக்கூட கட்டிடங்கள்கட்ட, அங்கே ஆராய்ச்சிக்கூடங்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தும் நிலைமைகளை உருவாக்க மூலதனச் செலவைக் கணக்கிட்டு 100 கோடி, 200 கோடி என்று கடன் பெற்று அந்தக் கடனை தனியார் பள்ளியாக இருந்தாலும், அரசாங்கப்பள்ளியாக இருந்தாலும் அதற்கு வழங்கி, 10 ஆண்டு காலத்தில் தொடர்ந்து பெறும் கடனை 30 அல்லது 40 ஆண்டு காலத்தில் திருப்பிச் செலுத்தும் அளவிற்கு ஏற்பாடு செய்தால் ஒழிய, கல்வித்துறை தேவை ஒன்றும் நிறைவேறாத நிலை நீடித்து பிச்சை எடுக்கும் ஓடாகத்தான் கல்வி நிலையங்கள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கனவே, அரசாங்கத்திடம் ஒரு குறிப்பு இருந்தது. ஒரு ஸ்கூல் 'எடுகேஷன் கார்ப்பரேஷன்' அமைப்பது என்று ஒரு திட்டம் இருந்தது. அந்த எடுகேஷன் கார்ப்பரேஷன் மூலம் கடன் பெற்று அந்தக் கடன் மூலம் கல்விச் சாலைகளுக்கான திட்டங்களை நிறைவேற்றுவது என்ற எண்ணம் இருந்தது. அண்மையில், அப்படிப்பட்ட முயற்சி கைவிடப்பட்டது. அப்படிச் செய்யமுடியாது என்ற எண்ணம் இருப்பதாகவும் தெரிகிறது. அப்படிச் செய்யாவிட்டால் அரசாங்க வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்படும் நிதியில் இருந்து உருப்படியான ஒரு முன்னேற்றத்தை நாம் உருவாக்க முடியாது.

நாம் எண்ணுகிற, அடி மட்டத்தில் இருக்கும், கிராமப்புறத்தில் உள்ள படிக்காமல் பரம்பரை பரம்பரையாகப் படிக்காமல் பின் தங்கியுள்ளவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னேறுவதற்கான உருப்படியான காரியம் செய்ய வேண்டுமென்று ஏண்ணுகிற எண்ணம் நிறைவேறுவது மிகவும் கடினம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்வித்துறையில் மாற்றம் வேண்டும். அந்த மாற்றம் சமூக முன்னேற்றத்தின் அடிப்படையாக அமைத்து எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இது அந்தத் துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த மாற்றம செயல்படுத்தப்பட வேண்டும். ஏற்கனவே இருந்த அரசு ' பேசிக் எஜுகேஷன் ' ஆதாரக் கல்வியில் தேவை என்று கருதி, அதைச் செயல்படுத்தி, அதற்காக அத்தனை ஆசிரியர்களுக்கும் பயிற்சி கொடுத்தும், அந்த ஆதாரக் கல்வி இன்றையதினம் கைவிடப்பட்ட ஒன்றாக, செயலற்ற ஒன்றாக ஆகியிருக்கிறது என்பதையும் ஒரு வகையில் பள்ளி உயர்நிலைக்கல்வி வளர்ந்து இருக்கும்போது, ஆதாரக் கல்வி ஏன் வெற்றி பெறவில்லை, ஏன் இந்த நாட்டு மக்களால் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை என்று எண்ணிப் பார்த்தல் அவசியமாகும். இன்றையதினம் மேல் உயர்நிலைக்கல்வியைச் சொல்லிக் கொடுக்கிற முறையைக் கொண்டுவரும் நேரத்தில், அந்த நோக்கம் சிதைந்துவிடக்கூடாது, அந்த நோக்கம் தோல்வியுறக்கூடாது என்பதற்காகவே நான் இதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாகச் சொன்னால், இப்போது ஏற்படுத்தியிருக்கும் இந்த மேல் உயர் நிலைக் கல்வியில் வொகேஷனல் ஸ்கீம் ஏற்படுத்துவதற்குத்தான் அகெடெமிக் ஸ்கீம் இருக்குமானால் அப்படி இருப்பதை கல்வித் துறை கைவிட்டுவிடக் கூறவில்லை. அதுவும் தேவை . இந்த மேல் உயர் நிலைக் கல்வி 10 பிளஸ் 2 முறை தேவைப்படுகிறது என்பது மட்டுமல்ல, பி. யு. சி. புகுமுக வகுப்பு நீக்கம் செய்வதற்கு மட்டுமல்ல, கல்லூரியில் அந்தப் பாடத்திட்டம் இருக்கக்கூடாது என்பதற்காக அல்ல. அதற்கு மாறாக மேல் உயர்நிலை மட்டத்தில் படிக்கிறவர்கள், கல்வித் துறையில் ஒரு நிறைவு பெறுகிற வகையில் அது இருக்கவேண்டும் என்கிற நோக்கத்தோடு அது செய்யப்பட வேண்டும். இந்த 10 பிளஸ் 2 என்ற மேல் உயர்நிலைக் க்ல்வி ஏற்படுத்தப்பட்ட பிறகும் பழைய கல்வி முறை ஏற்படுத்திய விளைவில் மாற்றம் இல்லை என்று சொன்னால், இந்தப் புதிய கல்வி மாற்றமே தேவை இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வெறும் பாடத்திட்டத்தில் படிப்பு ஆண்டில் மாற்றம் செய்வதால் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் எந்தப் பலனும் ஏற்படாது என்கிறபோது தமிழ் நாட்டில் மட்டும் அது எப்படி நல்ல பலனை ஏற்படுத்தி விடமுடியும்? இந்த மாற்றம் கல்வி





முறையில் ஒரு மிகப் பெரிய மாற்றம் என்று சொன்னால், மாநில அரசாங்கத்தின் பொருளாதார வசதியில் பெருமளவில் செலவு செய்ய நேரும் மாற்றம் என்பதால், அது சாதாரண மாற்றம் அல்ல. அந்த மாற்றம் உண்மையிலேயே நமக்கு நல்ல பலனைத் தருவதாக அமைய வேண்டும். கல்லூரியில் இருக்கும் வகுப்பை உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றுவதால், எந்த வகையில் பயன்படுவதாக உபயோகமாக இருக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு வேலைக்குப் போகவோ, ஒரு தொழிலை மேற்கொள்ளவோ தொழில் முறையில் கடிதத் தொடர்பு கொள்ள, அது ஆற்றல் தர வேண்டும். அந்த வகையில் மாணவனுடைய ஆற்றல் வளர்ச்சி அடையச் செய்யவேண்டும்.

[பிற்பகல் 12-40]

அந்த மாற்றத்தைச் செய்யும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும், அந்த மாற்றத்தை நிறைவேற்றுவதற்கான பொருளாதார வளர்ச்சியை நீங்கள் பெற்றிருக்க வேண்டும். அந்த ஆற்றல் இருக்கிறதா என்பதிலே எனக்கு ஐயப்பாடுதோன்றுகின்றது. ஏனென்றால், திட்டமிடுகிறபோது நீங்கள் விரிவாக, பரவலாகத் திட்டமிட வேண்டும். அதற்காக இப்போது எடுத்திருக்கும் முயற்சியை விட்டுவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நீங்கள் எடுத்துவைக்கிற ஒவ்வொரு அடியும் நிலைத்திருக்க வேண்டும் ; நீங்கள் எடுத்து வைக்கிற அடி சறுக்கிவிடக்கூடாது. இவ்வளவு முயற்சிகளையும் எடுத்து 2, 3 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த முறை எதுவும் சரியில்லை என்று கூறி கைவிரிக்கும் நிலை ஏற்படுமானால் அது பொருளாதார வகையில் பெருத்த இழப்பு மட்டுமல்ல, சமுதாயத்திற்கும் பெருத்த இழப்பாக ஆகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, இந்த மேல் நிலைக் கல்வியினுடைய நோக்கத்தை மிகத் தெளிவாக நீங்கள் விளக்கியாகவேண்டும். மற்ற பாடத்திட்டங்கள் எல்லாம் இதிலே இடம் பெற்றிருந்தாலும் கூட ' வொக்கேஷனல் ஸ்கீம் ' தான் மிகவும் முக்கியமானது. ஆங்கிலம், தமிழ், பல்வேறு வகை அறிவியல் பாடங்கள், தொழில் பாடங்கள் என்றெல்லாம் இடம் பெற்றிருந்தாலும்கூட இந்தக் கல்வி முறையிலே அந்த மாணவர்களை யெல்லாம் வாழ்வுக்குத் தயாராக்குவது ' வொக்கேஷனல் ஸ்கீம் ' தான் என்பதை மறந்து விடுவதற்கில்லை. ' வொக்கேஷனல் ஸ்கீம் ' என்று வருகிறபோது.

Agriculture Home science, Commerce and business, Engineering and Technology, Health and Miscellaneous.

என்று இருக்கிற இந்த 6 தலைப்புகளில் ஏறத்தாழ 30, 35 பாடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அது பற்றி, இந்த மேல் உயர் நிலைக் கல்வி வேண்டுமென்று கேட்கின்ற பள்ளிக்கூடங்களிலே என்னென்ன வசதிகள் இருக்கின்றன; என்னென்ன வசதிகள் இருக்க வேண்டுமென்பதைப் பார்க்க வேண்டும். இங்கே கல்வித்துறை இதுகுறித்துத் தயாரித்த அறிக்கையில் ' லாபரெட்டரி ' என்ற தலைப்பு வருகிறது. இது எஜுகேஷன் டிப்பார்ட்மெண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புதான்.

" For starting science courses provision should be made for separate laboratories in working condition for the teaching of physics, chemistry, botony and zoology. They should be fully equipped for conducting practicals as suggested in the syllabus ".

இவ்வாறு கூறப்பட்டுள்ள பகுதியில், ஏற்கனவே உள்ள விஞ்ஞானப், பாடங்களுக்குத் தேவையான விஞ்ஞானக்கூடம் என்பதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஏற்கனவே பள்ளிகளில் இருக்கிற லாபரட்டரி— விஞ்ஞானக் கூடங்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை அறிய இது போதும். ஆனால் வொக்கேஷன் கோர்ஸ் என்று சொல்லப்படுகிற இந்தப் புதிய பயிற்சிகளுக்கான பாடத்திட்டங்களுக்கு வேண்டிய அளவுக்கு அதற்கேற்ற லாபரட்டரி இருக்கிறதா, அதற்கு வேண்டிய கட்டிடம் கட்ட நிலப் பரப்பு இருக்கிறதா , அதற்கு எப்படிப்பட்ட வசதி தேவை ? ஒன்று, ஒன்றரை, இரண்டு லட்சம் ரூபாய் அளவு நிதி அந்த வசதிகளை ஏற்படுத்தத் தேவைப்படுமானால் அதற்கு நிதி ஆதாரம் எங்கிருந்து பெறுவது என்பவைகளைப்பற்றி முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும். ஒரு வேளை இத்தனையும் சொல்லிவிட்டு, தொழில் முறைப் பயிற்சி வகையில் பெயரளவுக்கு ஒன்றிரண்டை நிறைவேற்றுவது என்று நினைத்தீர்களானால் அதனால் எந்தப் பயனும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ' ஹோம் சைன்ஸ் ' பயிற்சி இருக்கிறது. ஹோம் சைன்ஸ் என்று சொல்லுகிற பாட வகையில் ' டிரஸ் டிசைனிங் அண்டு மேக்கிங் ' என்று இருக்கிறது. அதைக் கற்றுக் கொடுப்பதற்கு ஏதோ இரண்டு தையல் இயந்திரங்களை வாங்கி வைத்துக் கொண்டு, ஒன்று அல்லது இரண்டு தையல் ஆசிரியர்களையும் நியமித்துவிட்டால் போதும், அதையே எல்லாப் பள்ளிகளிலும் நடத்தினால் போதும் என்று நினைத்தால் நிச்சயமாகச்சொல்வேன், அது வீண் வேலை என்று. அப்படிப்பட்ட தொழில் படிப்பினால் பெருத்த ஏமாற்றந்தான் கிடைக்கும்.

இதில் சொல்லப்பட்டிருக்கிற பாடத் திட்டங்களில், நான்கு வகையானதில் தமிழ் நாட்டில் ஏதாவது ஒன்றை ஒரு மேல் உயர் நிலைப் பள்ளியில் கற்பிக்க வேண்டுமென்றால், அந்தப் பள்ளிக்கு



1 அல்லது 2 அல்லது 3 லட்சம் ரூபாய் அடிப்படை முதலீடு— காபிட்டல் இன்வெஸ்ட்மென்ட்—இருந்தால் தவிர யாராலும் அந்தப் பயிற்சியைத் தர முடியாது. வேண்டுமென்றால், ஒப்புக்கு இந்த 35 தொழிற் பயிற்சிப் பாடங்களில் ஒன்றிரண்டை சொல்லித்தரலாம்.

நான் வேளாண்மை— பொறியியல் வகைப் பயிற்சிக்கான பாடத் திட்டத்தை ' சிலபஸை ' பார்த்தேன். ஆனால், அந்த சிலபஸுக்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் இப்போது இல்லை. ஒருவேளை பாலிடெக்னிக்கில் இருக்கக்கூடிய ஆசிரியர்களில் ஒன்று அல்லது இரண்டு பேர்களை நியமித்து கற்பித்துக் கொடுப்போம் என்று சொல்லலாம். அப்படியானால் அதற்குத் தனியாக ஒரு தொழிற் பயிற்சிக்கான கூடம் ஏற்படுத்த வேண்டும். அப்படி பாலிடெக்னிக் அமைப்பதில் அச்சுப்பொறி பயிற்சி தருவதனால் அதற்கு 'பிரிண்டிங் டெக்னாலஜி'க்கு என்று ஒரு அச்சு இயந்திரமும் மற்றக் கருவிகளும் தேவைப்படும். அதற்கு என்ன செலவாகும் ? அதனால் அதை கைவிட்டுவிடுங்கள் என்று சொல்லவில்லை. திட்டம் போட்டு ஒவ்வொரு வகைப் பயிற்சியையும் செயல்படுத்தும் போது இவ்வளவையும் கவனத்திற் கொள்ள வேண்டும் ; அப்படியானால்தான் சரியாகச் செயல்படுத்த முடியும் என்பதற்கே சொல்கிறேன்.

' ஹெல்த் ' வகை பயிற்சிபற்றி இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு லாபரட்டரி வேண்டும். இ.இ.ஜி., இ.சி.ஜி. போன்றவைகளில் பயிற்சியளிக்கப் போதுமான கருவிகள் வேண்டும். அவைகளில் பயிற்சி பெற்ற டாக்டர்கள் அல்லது ஆடியோ மெட்ரி டெக்னிஷியன்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்த வசதிகள் இல்லாமல் இதில் பயிற்சி அளிக்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது.

அப்தால்மிக் டெக்னீஷியன்ஸ்-க்கு ஒருவேளை பயிற்சி தர முடியும். அவர்களுக்கு வேண்டுமானால் கண்ணுக்குக் கண்ணாடி போடுகிற அளவிற்குப் பயிற்சி தரலாம். டென்டல் மெக்கானிக்ஸ் பயிற்சிக்கு அதற்குத் தேவையான டென்டிஸ்ட்ரி வசதிகள் இல்லாமல் பயிற்சிதர முடியுமா ? ரேடியாலஜிக்கல் அஸிஸ்டன்ட்ஸ் என்று சொன்னால், அதற்கு எவ்வளவு வசதி இருந்தால் அந்த அஸிஸ்டென்ட்ஸ்க்குத் தேவையான பயிற்சி கொடுக்க முடியும் ? மருத்துவமனை இல்லாதயிடங்களில் நர்சிங் கோர்ஸ் பயன்படுமா ? மகப்பேறு மருத்துவம் வேண்டுமானால் சொல்லித் தரலாம். அதில்கூட விஞ்ஞான முறைப்படி நேர்முகப் பயிற்சி எல்லாம் தர முடியாது. அதேபோன்று ஹாஸ்பிட்டல், ஹௌஸ் கீப்பிங் போன்ற பயிற்சியை எப்படித் தர முடியும் ?

ஆக, இதைப் பார்க்கிறபோது, ஒரு பள்ளி அளவில் முடியாதவைகளையெல்லாம் அந்தந்தத் துறையிலுள்ள பேராசிரியர்களைக் கேட்டு மருத்துவத் துறையிலுள்ள ஒரு பேராசிரியர், என்ஜினி

யரின் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர், வேளாண்மைக் கல்லூரியில் உள்ள ஒரு பேராசிரியர் இவர்களையெல்லாம் கேட்டு அவ்வத் துறைகளுக்கான பாடத்திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ப்ராக்டிகல், யூஸ்புள் அன்ட் பாஸிபிள் ஸஜஷன்ஸ் என்று சொல்லத்தக்க வகையில் நடைமுறைப்படுத்தக் கூடிய பயனுள்ள பயிற்சியாக இந்தப் பாடத் திட்டங்கள் பெருமளவிற்கு அமையவில்லை.

ஆகவே, ஒரு நிபுணர் குழு அமைத்து இந்தப் பாடத் திட்டங்களைப் பள்ளிகளில் செயல்படுத்த முடியுமா என ஆராய்ந்து, என்ன என்ன, எப்படி எப்படிப் பாடத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும் என்று பார்த்து அதற்கேற்ப பாடத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். இதுபோன்ற ஸிலபஸை உருவாக்குவதற்கு இரண்டு அக்கடமிக் பீப்பிள் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டு வேறு படிப்புக்குள்ள பழைய ஸிலபஸைத் தேடிப் பார்த்து புதிய வகுப்புப் பாடத்திற்கான ஸிலபஸைத் தருவது என்பது சாதாரணமான காரியம். அப்படித் தந்திருக்கிற பாடத் திட்டங்களைப் பார்த்தேன். மேல் உயர்நிலைக் கல்வியை பயனுடையதாக நடைமுறைப்படுத்தக் கூடிய அளவிற்கு அவை ஏற்றவையாக இல்லை.

ஒவ்வொரு மேல் உயர்நிலைப் பள்ளியிலும் நான்கு தொழில் பாடங்களாவது பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஒரு பள்ளியில் 200 மாணவர்கள் சேர்ந்து, அதில் 100 பிள்ளைகள் தொழில் பயிற்சிப் பெறுவதற்கு வருவதாக இருந்தால் ஒரு தொழில் பாடத்தை மட்டும், ஒரு தொழிலை மட்டும் பயிற்றுவிப்பதாக இருந்தால் அது பயன் தராது. அந்த ஒரு தொழிலைப் பயிற்றுவிக்கவும் போதுமான வசதிகள் கிடையாது. ஆக நான்கு தொழில் பாடங்களைத் தொடங்க வேண்டுமென்றால் குறைந்தது ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபாயாகும். எனவே, குறைந்தது அந்த அளவிற்காவது வசதி செய்ய முடியுமா என்பதை முன் கூட்டியே தீர்மானிக்க வேண்டும். அவை செயல்படுத்தப்படக் கூடிய பயிற்சித் திட்டங்களாக அமைய வேண்டும்.

வேளாண்மைத் துறை கல்வியை எடுத்துக் கொண்டால், ஐந்து அல்லது பத்து ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு என்று வைத்துக் கொள்ளாமல், அதற்காகத் திட்டம் போடாமல் பிள்ளைகளுக்கு வேளாண்மைக் கல்வி பயிற்றுவிப்பது என்றால் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பதுபோல்தான் அமையும். தொழில் கல்வியைப் பொறுத்தளவிற்கு இது மறுக்க முடியாத உண்மை. இந்நிலை ஏற்படாதவாறு தகுந்தவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். மேல் உயர்நிலைக் கல்வி தொடங்குகிற பள்ளிகளில் எல்லாம் எவ்வளவு இடவசதி வேண்டும் என்பது குறிப்பிடப்படுகிறது.



*Building and site :* Normally the institution should be located in a campus of 10 acres in rural areas and 5 acres in urban areas with provision for play ground.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. 450, 500 பள்ளிக்கூடங்களை தேர்ந்தெடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு இடத்திலாவது பத்து ஏக்கர் நிலம் காட்ட முடியுமா?

நகர்ப்பகுதியில் ஒரு இடத்திலாவது 5 ஏக்கர் பரப்பு தேவை நிலம் காட்ட முடியுமா? அர்பண் ஏரியா என்றால் ஐந்து எக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரண ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒரு கிராமத்தில் ஏற்படுத்துவதென்றால் கூட தஞ்சை மாவட்டத்தில் கூட ஐந்து ஏக்கர் நிலம் கிடைப்பதில்லை. இலவசமாகக் கட்டிக் கொடுப்பதற்குக்கூட இடம் கிடைப்பதில்லை. ஆகவே, சூழ்நிலைகளை அறிந்து, தேவைகளை நிறைவேற்றக்கூடிய வழி அறிந்து விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்.

வொக்கேஷனல் கோர்ஸ் லாபரட்டரீஸ் குறித்து பரிசீலித்து அதற்கு ஒரு முக்கியத்துவம் தர வேண்டும். அப்படி முக்கியத்துவம் தரவில்லையென்றால் அந்தக் கல்வி பயனற்றக் கல்வியாக மாறிவிடும்.

வேலையில்லாத் திண்டாட்டம், வேலையில்லாத் திண்டாட்டம் என்று எதைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் அரசாங்கம் அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை கிடைக்கவில்லை என்பதைத்தான் ஒரு பெரிய காரணமாகச் சொல்கிறார்கள்.

இங்குகூடச் சென்னையில் சில நாட்களுக்கு முன் இராணுவத்திற்காக ஆட்களை எடுத்தபோது கேரளா, ஆந்திரா போன்ற வேறு மாநிலத்தில் இருந்து வந்தவர்களின் விளைவாக கூட்டம் மிகுதியாகி அடிதடி ஏற்படுகிற அளவிற்கு வந்தது. இனி எல்லாயிடங்களிலும் அப்படி ஏற்படக்கூடாது என்பதற்காக சொல்லப்படுகிற ஒரு கருத்துதான் தன் சார்பு நிலைமை ஏற்படுவதற்கு ஏற்ற ஊக்கமும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இம்முயற்சியில் குறைபாடுகள் ஏற்படாமல் இருக்குமானால், அதைத் திருத்துவதற்கு முன் வர வேண்டும். எவ்வளவு பேர்கள் இந்தப் படிப்பில் சேரத்தக்கவர்களாக இருப்பார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இப்பொழுது உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் மாணவர்கள் கல்லூரியில் உள்ள புதுமுக வகுப்பிற்குத்தான் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுபவர்களான 2½ லட்சம் பேர்களில் 1½ லட்சம் பேர்கள் தேர்வு பெற்று வருகிறார்கள் என்றால் அவர்களில் பாதிபேர் புதுமுக வகுப்பில்தான் சேரப் போகிறார்கள். இந்த ஆண்டு அதுபற்றிப் பிரச்னை இல்லை.

புதிய எஸ்.எஸ்.எல்.சி.-யான பத்தாவது வகுப்புத் தேர்வு எழுதுபவர்கள்தான் புதிய மேல் உயர்நிலைப் படிப்பு வகுப்பில், அதன் முதல் ஆண்டில் சேர வேண்டியவர்களாவர்.

[பிற்பகல் 12·50.]

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.]

அப்படி மூன்று லட்சம் பேர்கள் தேர்வு எழுதுவார்கள் என்றால், அதில் ஒன்றரை லட்சம் பேர்களாவது வெற்றி பெற்றாக வேண்டும். நியாயமான ஒரு அளவில் எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 2 லட்சம் பேர்களாவது தேர்வு பெற்று வருகிறவர்கள் இருக்கலாம். அதில் குறைந்தது ஒன்றரை லட்சம் பேர்களாவது மேல் உயர்நிலைப்பல்ளியில் படிக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு ஆளாவர். காரணம் உடனடியாக வேலை எதுவும் கிடைக்காது என்பதுடன் 15, 16 வயதிலுள்ளவர்களுக்கு இந்த எண்ணம் தான் வரும். வேலைக்குப் போக வேண்டுமென்றால், 18, 20 வயதாவது ஆக வேண்டும். இந்த நிலையில் 17 வயது, 16 வயது என்ற நிலைமையில் இருக்கக் கூடியவர்கள், இரண்டு ஆண்டு காலம் தொடர்ந்து படிக்கத்தான் விரும்புவார்கள்.

இந்தக் கல்வியை அளிப்பதற்காக 220 பள்ளிகள் தெரிந்தெடுக்க ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர் 400 பள்ளிகள் என்று கூறப்பட்டது. இதை வேண்டுமென்றால் 500 பள்ளிகள் என்று ஆக்கினாலும், ஒவ்வொரு பள்ளியிலும் 200 பேர்கள் கல்வி பயிலுவதற்கேற்ற போதுமான வசதியில்லை. இவ்விதம் 500 பள்ளிகளில் 200 மாணவர்கள் வீதம் முதல் வகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என்று எடுத்துக் கொண்டாலும், 200 மாணவர்களுக்கு எல்லா பள்ளிக்கூடங்களிலும் தகுந்த கல்வி வழங்க முடியாது. போதிய கட்டிடங்கள் அதற்கான வசதியில்லை. கட்டிட வசதி இருந்தாலும், தொழில் வகையில் பயிற்சிக்கான வசதி உருவாகவில்லை.

ஏதோ சில பள்ளிகளுக்கு நீங்கள் கட்டடங்களுக்காகவும் மற்றவற்றிற்காகவும் ஒன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தாலும், அதற்கான கட்டிடங்கள் கட்டுவது என்றாலும் 9 மாதங்கள் 10 மாதங்கள் ஆகலாம். எனவே அனுமதிக்கப்பட்ட பள்ளிகளில் உடனடியாக 200 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று திட்டமிட்டிருந்தாலும் நிச்சயமாக இட நெருக்கடி வரும்.

அது மட்டுமல்ல, ஏற்கெனவே 600 பேர்கள் கல்விபயின்று கொண்டிருந்த ஒரு பள்ளியில், இப்போது மேலும் 200 பேர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று வரும்போது நிச்சயமாக இட நெருக்கடி ஏற்படும், 200 பேர்களையும் சேர்த்துக் கொள்ள இயலாது என்று தலைமை ஆசிரியர் எண்ணிக்கையைக் குறைக்கவும் இயலாது, அவ்விதம் கூறிவிட்டு அவர்கள் எளிதில் தப்பித்துக்கொள்ள முடியாது, இதன் காரணமாக நிச்சயமாக பொது மக்களிடம் ஒருவிதமான கிளர்ச்சி மனப்பான்மை ஏற்படும். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் இதைத் தூண்டிவிடுகிறது என்று எண்ணிக்கொள்ளாதீர்கள். முன் கூட்டியே நிலைமையை எண்ணிப்பார்க்கவே கூறுகிறேன். அப்படிப்பட்ட ஒரு மனப்



பான்மை ஏற்படுவது இயற்கை. ஒவ்வொரு பள்ளியிலும் படிக்கும் மாணவர்களுடைய பெற்றோர், As right of the parent என்ற வகையில் உரிமையுடன் இடம் கேட்பர். இங்கு படித்த மாணவனை ஏன் வீட்டுக்கு அனுப்பவேண்டும், இங்கேயே ஏன் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்கின்ற மனப்பான்மை வருவது இயற்கை.

இதன் காரணமாக ஒன்றரை லட்சம் பேருக்கும் இடமில்லாத நிலை ஏற்படும் போது, ஒரு விதமான ஏமாற்றம் ஏற்படலாம். இவ்விதம் ஒன்றரை லட்சம் பேர்களுக்கு இடவசதிசெய்து தருவதற்கு 400 அல்லது 500 பள்ளிகளிலும் நிச்சயமாக ஒரு எண்பதாயிரம் பேர்களைத் தான் சேர்த்துக்கொள்ள இயலும். அப்படி வரும்போது, ஏறத்தாழ முதலாண்டில் 50 ஆயிரம் பேர்களைத் தான் சேர்த்துக்கொள்ள இயலும், அடுத்த ஆண்டில் இரண்டாவது ஆண்டு இரண்டு வகுப்புகளையும் நடத்துவதற்கான அளவில்அறை வசதிகள் தேவைப்படும். அதனையொட்டிய பிற தேவைகளும் வரும். ஆகவே இந்த 500 பள்ளிகளிலும் 200 மாணவர்கள் வீதம் சேர்த்துக்கொண்டாலே சிக்கல் தரும் என்று கணக்கு போடுவது— ஏமாற்றத்தை அளிப்பதாக அமையும், மேலும் இடம் கிடைக்காத மாணவர்களுக்கு எரிச்சலை ஊட்டுவதாக அமையும், நிறைவும் ஏற்பட்டுவிட முடியாது.

ஆகவே, இருக்கின்ற நிலைமையை கருத்திற்கொண்டு, முதலில் குறைந்தது 1,500 பள்ளிகளில் முதலில் இரண்டு செக்‌ஷன்களை தொடங்குவதற்கு அனுமதி தந்தது. அதில் ஓராண்டு காலத்தில், எல்லா வசதிகளுடனும் தொழில் படிப்பு கொடுப்பதற்கும் பெரு முயற்சி எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட 'ஒரு ஆல்டர்னேட்டீவ் அரேன்ஜ்மென்ட்,' மாற்று ஏற்பாடு செய்து தான் ஆகவேண்டும். காரணம், 10-வது வரை படித்து முடிக்கும் தங்கள் பிள்ளைகளை பெற்றோர் யாரும் சும்மா பள்ளியில் சேராது வைத்திருக்க மாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் படித்துக் கொண்டிருந்த பள்ளிகளிலேயே இடம் வேண்டும் என்று கேட்கக் கூடிய நிலையும் ஏற்படும்.

அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்குமானால், 10-வது வகுப்புக்கு மேல் புதிதாக ஒரு "ஸெலபஸ்" தயாரித்து 11-வது வகுப்பில் புதிய 'அக்கடமிக் கோர்ஸ்' ஆக 11-வது வகுப்பு அமைகிறது என்ற அளவில் அதில் பயின்று பி.யு.ஸி. படிப்பில் சேர்ந்து கொள்ள வகை செய்யும் முறையில் ஒரு திட்டத்தினை இடைக்காலத்திற்கு வகுக்கவேண்டும். புதிதாக இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் தெரிவித்தால் கல்வி இலாகா அதனை எளிதில் ஏற்றுக்கொள்ளாது — எண்ணிப்பார்க்கவும் தயாராகாது— அப்படி சொல்லப்படுவது இந்த இலாகாவுக்கு எளிதில் புரியவும் செய்யாது.

இப்போதுள்ள நிலை என்னவென்றால், 10-வது படித்து தேர்ச்சி பெற்றவர்கள் இரண்டாண்டு படிப்பில் சேர்ந்து கொள்ள முடியாத நிலைமையிலும் பி.யு.ஸி. படிப்பிலும் சேர்ந்து கொள்ள முடியாத நிலைமையிலும் வரக்கூடிய நிலைமை ஏற்படும், அதைத் தவிர்க்க ஓராண்டு படிப்பாக இருக்கக்கூடிய வகையில் ஏற்கனவே உள்ளதை ஒத்த ‘அகடமிக் கோர்ஸ்’ என்ற வகையில் பாட திட்டத்தினை அமைத்து, அதற்கு ஒவ்வொரு பள்ளியிலும் போதுமான அளவுக்கு எண்ணிக்கை வருமானால் — அப்படி எண்ணிக்கை வருகின்ற இடங்களில், இண்டரீம் ஸ்டேஜாக அப்படிப்பட்ட ஒரு கோர்ஸை —வகுப்பை நடத்துவதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல், கல்லூரியில் புகுமுக வகுப்பு இத்துடன் முடிந்துவிடப்போகிறது என்ற எண்ணத்தை உருவாக்காமல் படிப்படியாக பி.யு.ஸி.யில் படிக்கின்ற மாணவர் எண்ணிக்கை குறைந்து வரும் வகையில் கிரடேஷன் முறையில் அதாவது 80 ஆயிரம் பேர்கள் இப்போது பி.யு.சி.யில் இருக்கிறார்கள் என்றால், அதை 40 ஆயிரமாக கொண்டு வந்து, அடுத்த ஆண்டு 30 ஆயிரமாக ஆக்கி, தொடர்ந்து 20 ஆயிரமாக ஆக்கி, 10 ஆயிரமாக ஆக்கி, பின்னால் நிறுத்திவிடக்கூடிய ஒரு ஏற்பாட்டினை செய்யவேண்டும். இதைப் பற்றி இந்த அறிக்கையில் காணப்படுகிறது.

"Report of the Tamil Nadu Education Structure and Fattern Committee—Higher Sccondary to be with schools only, but can be with Colleges also for five years only".

75ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின் 55-வது பக்கத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த யோசனையை வலியுறுத்திச் சிறிது மாற்றிச் சொல்வதற்குக் காரணம், இடைக்காலத்தில், ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்கு கல்லூரியில் பி.யு.சி. படிப்பை வைத்துக் கொண்டால், இது மேல் உயர் நிலைப் படிப்பில் உள்ளப் பிரச்னையைப் பெருமளவில் தவிர்க்கும். இந்த டிரான்சிஷனல் ஸ்டேஜ் என்று சொல்லக்கூடிய காலத்தில் மேல் உயர் நிலைப் பள்ளிகளிலே முதல் ஆண்டில் மாணவர்கள் சேரமுடியாமல் இருப்பார்கள். எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலேயும் இப்போது 11-வது வகுப்பை எடுத்து விடுவதால் இதிலே இடமில்லாமல் போகக் கூடிய 50,100 மாணவர்களுக்கு 11-வது புதிய 11-வது வகுப்பு என்ற பெயரில் சேர்ப்பதற்கு வழி செய்து கொடுக்கலாம். கல்வி என்கின்ற முறையில் ஒரு வகுப்பை ஏற்படுத்தினால், நீங்கள் தொழில் முறையிலே பயிற்சி தரும் இந்த மேல் உயர் நிலைப் பள்ளிகளிலே ஏற்படுகின்ற பெருத்த குறைபாட்டை உடனடியாக இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்



கொள்ளாமல், தவிர்த்துக்கொள்ளக் கூடிய அளவிற்கு இதிலே கொஞ்சம் சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த அறிக்கையிலே தெரிவித்துள்ளபடி, இன்றுள்ள கல்லூரிகளில் அல்லாத மேல் உயர் நிலைப் படிப்பும் 1983ஆம் ஆண்டு இடம்பெறும் எனவும் பின்னரே நீக்கப்படும் எனவும் காணப்படுகிறது. After 1983 the colleges will offer dcgree course only என்று அதில் சொல்கிறார்கள். கல்லூரிகளில் மேல் உயர்நிலைப் படிப்பை ஏற்படுத்துவது நல்லதல்ல என்று கருதும் அரசு அந்த 1983ஆம் ஆண்டு வரையிலும் நீங்கள் இந்த இன்றுள்ள பி.யு.சி.யைத் தொடர்ந்து வைத்துக்கொள்வது இடைக்காலத்திலே ஏற்படக்கூடிய சிக்கலைத் தவிர்க்க உதவியாக இருக்கும் என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் மற்றொன்று, ஏறக்குறைய 7,000 ஆசிரியர்கள் இந்த உயர்நிலைப் பள்ளிகளில் 11-வது வகுப்பு எடுக்கப்படுகின்ற காரணத்தினால் வேலை இழப்பார்கள். அவர்களை முடிந்தவரை புதிய மேல் உயர்நிலை வகுப்புக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. 11-வது வகுப்பினை ஒரு சிறப்பு வகுப்பாக ஏற்படுத்துவதன் மூலம் ஒருபகுதி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கலாம். இந்த 7,000 பேரில், 3.000 பேர்கள் மேல் உயர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வந்தாலும் கூட, மிச்சம் இருக்கின்ற 4,000 ஆசிரியர்களை எடுக்கப்படும் பழைய 11-வது வகுப்பை முறையிலேயே இதை ஓராண்டிற்கு வேறு விதமாக மாற்றியமைப்பதன் மூலம், அதிலே பணியாற்றுகின்ற வாய்ப்பைக் கொடுக்கலாம். அதனால் மாணவர்களும் பயனடைவார்கள்; ஆசிரியர்களுக்கு வேலை இல்லை என்னும் நிலைமை இருக்காது.

அடுத்து, ஓராண்டிற்குப்பின் இந்தப் புகு முக வகுப்பு நீக்கப்படும் ஆதலால் அதில் பணியாற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிறோம் என்று சொன்னாலும், அவர்களுக்கு மனத் திருப்திக்கு வேலைக்குப் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று சொன்னாலும்கூட, அவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்க இயலுமா? என்பதையும் பார்க்கவேண்டும். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றால், பெரிய அளவிலே அந்தப் பிரச்னை ஏழாமல் அவ்சியமில்லாமல் இந்தப் பி.யு.சி.யை நீடிப்பதன் மூலம் மேலும் 3, 4 ஆண்டுகளுக்கு நீடிப்பது நல்லதாகும். இப்படி நீடிப்பதன் மூலம்—படிப்படியாக மாற்றம் செய்துஇந்தப் பிரச்னையை இப்படி ஓரளவு சுமுகமாகத் தீர்க்க முடியும்.

இதை இன்னொரு வகையிலே எண்ணிப் பார்த்தால், இந்த ஆண்டு 10ஆம் வகுப்பில் 3 லட்சம் பேர்கள் நியூ ரெகுலேஷன் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வை எழுத இருக்கிறார்கள். இந்த 10ஆம் வகுப்பில் இந்த ஆண்டு 3 லட்சம் பேர்கள் தேர்வு எழுதினால்,

ஏறத்தாழ 1½ லட்சம் பேர் வெற்றி பெறாது பெயிலாகி அடுத்த ஆண்டில் தேர்வு எழுதக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, இந்த எண்ணிக்கை அதிகமாகி 1979-ம் ஆண்டில் 4½ லட்சம் பேர் இந்தப் புதுவகையான எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை எழுதுகின்ற நிலைமை ஏற்படும். இந்த 10ஆம் வகுப்புத் தேர்வை எழுதக் கூடியவர்கள் 3 லட்சத்திலிருந்து 3¼ லட்சம் அளவுதான் உயருமென்று எதிர் பார்க்க முடியாது. வேண்டுமானால், 3 லட்சத்திலிருந்து 4 லட்சத்திற்குமேல் அதிகமாக உயரலாம்.

அப்படி உயரக்கூடிய நிலைமை வருகின்றபோது, அவர்களையெல்லாம் மறுபடியும் இந்த மேல் உயர்நிலை தொழிற்கூட கல்வி முறையில் இடந்தந்து சேர்க்க முடியுமா ? ஆகவே, இப்போது பள்ளிகளில் பதினொன்றும் வகுப்பை எடுத்து விட்டு, அப்படி எடுத்துவிடுவதன் காரணமாக, பின்னர் இப்பேர்பட்ட ஆசிரியர்கட்கும் வேலை கொடுத்து நிலைமையில் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க, முயற்சி ஒரு பக்கமும் பல்லாயிரம் மாணவர்கள் படிக்க வழியில்லாமல் தவிக்கும் நிலை ஒரு பக்கமும் ஏற்படாது. இந்த ஆசிரியர்களைப் பயன்படுத்த முன்வரவேண்டும். அப்படி அவர்களை வகையாகப் பயன்படுத்தினால், மாணவர்களும் பயன்பெறுவார்கள். யாரும் படிக்க இடம் இல்லாமல் நின்று விட்டவர்கள் என்ற நிலைமை ஏற்படக்கூடாது என்பது என்னுடைய கருத்து என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேல் உயர்நிலைப் பள்ளிகளை ஒரு தனி அமைப்பாக செபரேட் என்டிடியாக கருதக் கூடாது. அது தனியாக இருக்கக்கூடிய ஒரு வாட்டர் டைட் கம்பார்ட்மெண்டாக இல்லாமல், அதிலே உள்ள ஆசிரியர்கள் அந்த வேலையை மட்டும் பார்ப்பதாக இல்லாமல், உயர்நிலைப்பள்ளிகளிலும் பணியாற்றுகின்ற வகையிலே அமைக்க வேண்டும். மேல் உயர்நிலைப் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்கள் மொத்தத்திலேயே வாரத்தில் 6 அல்லது 8 மணி நேரம் அங்கு பணியாற்றினாலும், அவர்கள் உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். இங்கும் அவர்கள் 2, 3 வகுப்புக்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும். எஸ்.எஸ்.எல். சி,க்கு கீழே உள்ள 10, 9 வகுப்புக்களுக்காவது அவர்கள் பயிற்றுவிக்க வேண்டும். சில ஆண்டுகளுக்காவது இந்த அளவிலேயே அது இணைக்கப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, இரண்டு வகைச் செலவையும் அரசாங்கமே ஏற்பதால், இதைச் செம்மையாக நிறைவேற்ற முடியும் என்பதை நான் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது ஏற்படுத்தியிருக்கிற மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை, முதலில் சில ஆண்டுகளுக்கு உயர்நிலைப் பள்ளிக் கல்வியோடு இணைப்புடையதாக ஒன்றாக செயல்படுத்துகின்ற முறையிலே இது செயல்பட வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அதே நேரத்திலே, கல்லூரி ஆசிரியர்களைப்பொருத்தமட்டில் யூ.ஜி.சி. அறிவித்திருக்கிறபடி ஊதியச் சலுகை வழங்கப்படவில்லை என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். நேற்றைய தினம் இங்கு பேசிய திரு. லத்திப் அவர்கள் கடுமையாக, கோபமாக இன்னும் சொல்லவேண்டுமானால், மாறுபட்ட எண்ணத்திலேயே கூட அவர்களைக் கண்டித்தார்.

(பிற்பகல் 1-00)

ஒருவேளை அவர்கள் அறப் போராட்டம் தொடங்க உண்ணாவிரதம் இருப்பதைக் கேட்ட காரணத்தால் உணர்ச்சி வசப்பட்டிருக்கக்கூடும். உண்ணாவிரதம் இருப்பவர்கள் மீது சிறிதேனும் பரிதாபத்தைக் காட்டிவிட்டு அதற்குப் பிறகு உணர்ச்சி வசப்பட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் கேட்டார்கள், தி.மு.க. ஆட்சியில் ஏன் 1975ஆம் ஆண்டே செய்யவில்லை, 1974ஆம் ஆண்டே செய்யவில்லை என்று கேட்டார்கள். 1976ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு பட்ஜெட்டை நிதி நிலை அறிக்கையைத் தரக் கூடிய நிலை இருந்திருக்குமானால் நிச்சயமாகக் கொடுத்திருக்க முடியும், அதற்கான செலவில் 80 சதவீதத்தை யு.ஜி.சி. தருகிறது. நிச்சயமாக, நாஞ்சில் மனோகரன் அவர்கள் மத்திய அரசில் இருந்து வரக்கூடிய நிதி உதவியை வாங்கிக் கொள்வதில் அக்கறைகாட்டுவார். இதைச் செய்ய முன் வர வேண்டும் நாங்கள் இருந்திருந்தால் செய்திருப்போம். இன்று 1973ஆம் ஆண்டிலிருந்து அதைக் கேட்டு மட்டும் அவர்கள் போராடவில்லை. பணி பாதுகாப்புக் கோரி போராடுகிறார்கள். பல பேர் வேலை நீக்கம் செய்யப்படுவார்களோ என்ற காரணத்தால் போராடுகிறார்கள்.

அந்த நிலையை அட்வைசர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில், குடியரசுத் தலைவர் சார்பில் கவர்னர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில், அந்த ஆட்சி மத்திய சர்க்கார் ஒப்பு கொண்டு வந்த திட்டத்தைக் கூடி நிறைவேற்ற எண்ணம் இல்லாமல், ஆலோசனை இல்லாமல், ஆட்சி நடத்தினார்கள் என்பதைத் தயவு செய்து மறந்துவிடக் கூடாது. மத்திய சர்க்கார் கொடுத்த அந்த உதவித் தொகையை கொண்டு ஊதியத்தை உயர்த்தித்தராமல் விட்டு விட்டார்கள். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்யத் தவறிவிட்டது என்ற காரணத்தைக் கூறி இன்றைக்கு செய்ய மாட்டோம் என்ற வாதம் பொருத்தமானது அல்ல. கல்வி அமைச்சர் சொல்லவில்லை; வேறு சிலர் பொதுதாகச் சொன்னார்கள். (குறுக்கீடு) நிதியமைச்சரும் சொல்லவில்லை. ஆகவே, நிச்சயமாக அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு எதிர்ப்பார்க்கிறேன்.

அவர்கள் பிரச்சினை 1973-ல் இருந்து யு.ஜி.சி. விகிதத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள் அல்லது 1974-லிருந்தாவது ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்கிறார்கள். காரணம்—சர்வீஸ்

அதிகமானவர்களுக்கு கிடைக்க 'வேண்டிய பயன் இன்றைக்கு அரசு ஒப்புக் கொள்ளும் முறையில் 10, 15, 25 ரூபாய்க்கு மேல் இல்லை. தயவு செய்து பட்டியல் போட்டுப் பாருங்கள். ஐந்து ஆண்டுகள் வேலை பார்த்திருந்தால் எவ்வளவு உயர்வு வரும்? 10 ஆண்டுகள் வேலை பார்த்திருந்தால் எவ்வளவு அதிகம் வரும் ?.

யு.ஜி.சி.யிலும் ஒரு தவறு செய்கிறார்கள். காட்டிகிரி என்று பிரிக்கிறபோது இருக்கிற எல்லாப் பிரிவுகளையும் குறைத்து ஒன்று சேர்த்து விட்டார்கள். ப்ரொபசர் ஸ்கேல், லெக்சரர் ஸ்கேல் என்று வைத்த முறை சரியல்ல. ஒன்றாக வைத்து அவ்வாறு நிர்ணயித்திருப்பது முறை அல்ல. நானும் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறேன். பல்வேறு படிகள் இருந்தன. டியூட்டர் லெக்சரர், அசிஸ்டெண்ட் ப்ரொபசர், அடிஷனல் ப்ரொபசர், ப்ரொபசர், சீனியர் ப்ரொபசர், பிரின்சிபால், என்ற இவ்வளவு படிகளை எடுத்து விட்டது தான் யு.ஜி.சி. செய்த தவறு. Commitment new commitment for the State Government. இதனால்—மாநில அரசு நிதிப்பொறுப்பேற்க வேண்டிய அளவு எவ்வளவு என்று கணக்கைப் பாத்துக் கொள்வார்களானால் — 1973-ல் தொடங்கினால் 5 கோடி ரூபாய் வரும். 1974-ல் தொடங்கினால் 4 கோடி ரூபாய் வரும், 1975-ல் தொடங்கினால் மூன்று கோடி ரூபாய் வரும் என்று சொல்லுவார்களானால் அது ஆசிரியர்களுக்கு ஒரு மன நிறைவைக் கொடுக்கும். இந்தப் புள்ளி விவரங்கள் தரப்பட்டு 3 கோடியை ஏற்றுக் கொள்ள முடியும், 5 கோடியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று காரணம் சொன்னால் அரசாங்கத்திற்கு இடர்ப்பாடு இருக்கிறது என்பதையோ அரசாங்கப் பொறுப்பையோ எண்ணிப் பார்க்க முடியும் என்று கருதலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு சில வகையான ஊதிய உயர்வு தரப்படவில்லை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தரப்படவில்லை என்று சொன்னார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சுயாட்சி உள்ள நிர்வாக அமைப்பைக் கொண்டது டோடல் கிராண்ட் மொத்த மானியம் மாநில அரசு தருகிறது. இதைக் கவனித்திருக்க வேண்டியவர் நாவலர் நெடுஞ்செழியன்; அங்கே தான் இருக்கிறார். அவரையும் கேட்டு தெரிந்து கொள்ளலாம். மொத்த மானியம் என்ற முறையில் தருவதிலிருந்து சில திட்டங்களை அவர்களே நிறைவேற்றலாம். முழு உரிமையும் பல்கலைக் கழகத்திற்குத்தான். பல்கலைக் கழகம் தவறு செய்யுமானால் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் அரசாங்கத்தின் மூலமாகத் தெரிவித்து சரியான நடவடிக்கை எடுத்து அந்தக் குறையைப் போக்க வேண்டுமே தவிர, ஏற்கெனவே செய்யவில்லை என்ற காரணத்தைக் கூறினால், அவர்கள் குறை நீங்கி விடாது.



அகில இந்தியா என்ற பெயரால் யு.ஜி.சி. என்ற அமைப்பை அமைத்து அது உருவாக்கும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து நம் மீது திணிக்கிறார்கள். பல்கலைக் கழக நிலையில் யு.ஜி.சி என்றால் எலிமெண்டரி பள்ளி ஆசிரியர்களுக்காக என்று அப்படித் தனியாக ஒரு அமைப்பு ஏற்படுத்துவார்களா? பல்கலைக்கழக அளவில் கூடப் பாடத் திட்டங்கள் முதலானவற்றை ஒரு தரப்படுத்த அவர்கள் ஈடுபடலாமே தவிர, நிர்வாகத்தில் ஈடுபடக்கூடாது,

ஆயினும், இந்த நிலையை எற்றுக் கொண்ட பிறகு மாநில அரசு ஒருவாறு அதற்கு உட்பட்டுத்தான் தீர வேண்டும். ஆந்திராவில் இவ்வளவு தருகிறார்கள், கேரளாவில் அந்த அளவு ஊதியம் தருகிறார்கள் நம்முடைய மாநிலத்தில் ஏன் குறைத்துக் தருகிறார்கள் என்று கேட்கிறார்கள்.

நம்முடைய ஆசிரியர்களுக்குத் திறமை குறைந்து விட்டதா? அதற்கான பட்டப் படிப்பைப் படிக்காதவர்களா? அவ்வளவு பொறுப்புடன் கல்லூரியில் கடமை ஆற்றாதவர்களா? ஆகவே, அந்த அளவில் பார்க்கும்பொது யு.ஜி.சி. திட்டப்படி அந்த அளவிற்குச் சம்பளம் தரப்பட வேண்டுமென்பது நியாயமான கோரிக்கை.

நம்மால் முடிந்த அளவிற்கு, அந்தக் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றி, அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்துகிற அளவிற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

உண்ணாவிரதம் நாங்கள் தூண்டியிருப்பது அல்ல. இன்னும் சொல்லப்போனால், என்னிடத்தில் அவர்கள் வந்து பேசியபோது-நாஞ்சில் மனோகரன் நிதியமைச்சருக்கு சந்தேகம் வரக்கூடாது. சில நேரங்களில் வரும் நான் அவர்களுக்குச் சொன்னேன், உங்கள் குறைகளை நீங்கள் முழு அளவிற்கு விளக்கமாக அளிக்கவில்லை, நீங்கள் உங்கள் கோரிக்கைமுதலியவற்றை பட்டியல் போட்டுஅரசு ஏற்க வேண்டிய நிதிப்பொறுப்புக்கான புள்ளிவிவரங்களோடு தரவில்லை, அப்படிப் போட்டுத் தாருங்கள், நாங்கள் வலியுறுத்துகிறோம் என்று சொன்னேன்.

இதிலே கல்வி அமைச்சர் அவர்களுக்கு நியாயம் வழங்க ஆர்வம் இருக்கிறது, ஆனால் சூழ் நிலை அவருக்கு இடம் தரவில்லை போல் தெரிகிறது. அமைச்சரின் அந்த ஆர்வத்தைப் பயன்படுத்தி கொள்ள வேண்டும், போராட்டத்தில் நீங்கள் தீவிரமாக இருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். அவர்கள் உணர்ச்சிகளுக்குக் ஆட்பட்டவர்களாக இப்படி உண்ணாவிரதம் இருக்க நேரிடுகிறது. அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரச்சினைகள் தீர்ந்துவிட்டால், மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு இடையூறாகப் பிரச்சினைகள் வராது. பெரும் உதவியாக இருக்கும் என்டதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தக் காரியமாக இருந்தாலும் முன்கூட்டியே ஆலோசித்துச் செயல்படவேண்டும். அப்படி முன்கூட்டியே யோசிக்காமல் காலந்தாழ்ந்து ஆலோசிப்பது என்பது குறையாக இருக்கிறது. நோயை துவக்கத்திலேயே கண்டறிந்து தீர்ப்பதை விட்டுவிட்டு நோய் முற்றிப்போன பிறகு பெரிய டாக்டரை அழைப்பதைப் போல் இந்த அரசு முன்கூட்டியே ஆலோசிக்காமல் நடப்பது நல்லதல்ல—நான் எங்களுக்குப் பெருமை என்பதாலே சொல்லவில்லை, கலைஞர் அவர்களுடைய தனிப்பட்ட திறமை என்று கூட சொல்லவில்லை, திராவிட முன்னேற்றக் கழக அரசு முன்கூட்டி யோசித்துத் தான் எதையும் செய்யும்—நீங்கள் யோசிப்பது என்பதையே முன்கூட்டிச் செய்யாமல் பின்னுக்கு வைத்துக் கொள்கிறீர்கள்.

என்ன தான் பொருளாதாரத்தடை என்றாலும் முன்கூட்டியே யோசிக்கலாம், ஒரு 6 மாதங்கள் கழித்துக் கவனிக்கப்படும் என்று உறுதி சொல்லலாம், கோரிக்கை வைப்பவர்களுக்குக்கூட காத்திருக்கத் தகுந்த நிலைமை ஏற்படும். அப்படி இல்லாத காரணத்தால் தான் இன்றைக்கு உண்ணாவிரதத்திலே அவர்கள் ஈடுபட்டிகிறார்கள்.

யூ.ஜி.சி. ஊதிய உயர்வை 1973ஆம் ஆண்டிலேயிருந்து நடைமுறைப்படுத்தவேண்டுமென்று கேட்டிருக்கின்றனர். அப்படி ஊதிய உயர்வு வழங்குவது என்ற அடிப்படையை ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லது சம்பளத்தோடு டி.ஏ.யை அகவிலைப்படியைத் தனியாகத் தரவேண்டுமென்ற அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அவர்களது குறைகளைப்போக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

கல்லூரிகளிலே எதிர்காலத்திலே பி.யு.சி. வகுப்பு இல்லாத நிலை வருகிறபோது, அப்போது வேலைநீக்கம் ஏற்படாமல் தடுக்க அவ்வளவு ஆசிரியர்களையும் பட்டப்படிப்பு வகுப்புகளுக்குப் பயன்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. பி.யு.சி. வகுப்புக்கான ஆசிரியர்கள் அனைவரையும் பட்டப்படிப்பு வகுப்புகளுக்குப் பயன்படுத்திவிடமுடியுமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். அவர்களிலே எவ்வளவு பேர்களை எடுத்துக் கொள்ளமுடியுமோ அவர்களை எடுத்துக்கொண்டாலும், எடுத்துக்கொள்ள முடியாதவர்களைப்பற்றி என்ன செய்யப் போகிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

500 பள்ளிக்கூடங்கள், அளவில் மேல் உயர் நிலை கல்வியை ஏற்படுத்த வேண்டும் என்பதாகச் சொல்லப்படுகிறது, அப்படிச் செய்கிறபோது டிஸ்பிளேஸ்மெண்ட் ஆப் ஸ்டுடன்ட்ஸ் பிரச்சினை வரும். அந்தக் கல்வி பெற 6 மைல், 8 மைல் 10 மைல் என்று மாணவர்கள் வேறு ஊர்களுக்குச் சென்று படிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். போகிற ஊர்களிலே தங்கிப்படிக்க





வசதி இருக்காது. உறவினர் வீட்டிலேகூட வசதி கிடைக்காது, அதுவும் இந்தக் காலத்திலே அப்படிப்பட்ட வசதிகள் கிடைப்பது அரிது. அது மட்டுமல்ல, பஸ்கள் நேரத்திற்கு வராவிட்டால் நகரங்களிலே உள்ள நிலைமை போன்று கிளர்ச்சி மனப்பான்மை கிராமப்புறங்களுக்கும் வந்துவிடும், ஆகவே 3 ஆயிரம் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள்—புதிய கல்விபெறும் வசதியைப் பரவலாக்க ஏற்ற அளவில் 1,500 பள்ளிக்கூடங்கள் என்ற அளவிலே அமைக்க வேண்டும்.

மாணவர்கள் அவரவர் கிராமத்தில் இருந்தவாறே படிக்க 'accommodating in their own areas,' அவரவர்கள். வட்டாரங்களிலேயே மேல் உயர்நிலைக் கல்வி பெறும் வாய்ப்பை அமைப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சொல்கிற வாதத்திலே அமைச்சருக்கோ அமைச்சரவைக்கோ சந்தேகங்கள் இருக்குமானால் என்ன என்ன விவரங்கள் என்று விவாதிக்கவும், இங்கு சட்டமன்றத்தில் அல்ல, நான் தயாராக இருக்கிறேன்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது நான் எடுத்துச் சொன்ன கருத்துக்களையொட்டி சில திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தைக் கல்வித் துறை ஏற்றுக்கொள்கிறது, ஆனால், நிதித் -துறை ஏற்றுக்கொள்ளவில்லை என்ன காரணமோ தெரியவில்லை.

முறை சாராக் கல்வி என்ற சொற்றொடர் கருத்துடையதாக இல்லை என்றும் பள்ளிச் சாராக் கல்வி என்பது பொருந்தும் எனத் தோன்றுவதாகவும் கூறினேன். இப்போது கல்வித் துறையிலே பள்ளி சாராக் கல்வி என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், நிதிநிலை அறிக்கையிலே இன்னும் முறை சாராக்கல்வி என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் படித்துவிட்டுச் சொன்னால், நிதியமைச்சர் அவர்கள், முழுவதும் படித்துவிட்டு வாருங்கள் பாதி அளவில் படித்துவிட்டு வராதீர்கள். என்று நேற்றைய தினம் பொதுவாகச் சொன்னார்.

[பிற்பகல் 1—10.]

அப்படி இரண்டாவது முறை படிக்கலாம் என்று அவருடைய அறிக்கையைப் படித்தபொழுது கல்விக்காக 180.9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக அவரது வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் இருக்கிறது. 180.9 கோடி என்ற புள்ளி விவரத்தைப் படித்தவுடன் அந்த அளவுதொகை கல்விக்கு என்ற உணர்வு ஏற்படுகிறது, நிதிநிலை அறிக்கையில் வருவதுதான் அது.

ஆனால் கல்வியமைச்சரவர்களின் கல்வி மானியத்தில் 175.69 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதியமைச்சரவர்கள் தாராளமாகக் கொடுத்தும் அதைக் கல்வியமைச்சரவர்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லையோ என்றும் ஐயம் வருகிறது. நான் கல்வியமைச்சராக இருந்தால் இந்த நான்கு கோடி ரூபாயை விடமாட்டேன்.. நான்கு கோடி அல்ல, கல்வியின் நோக்கத்திற்காக உடனடியாக மேலும் 40 கோடிக்கான தேவை இருக்கிறது. நான் சொன்னபடி உயர்நிலைக் கல்வியை நிறைவேற்ற வேண்டுமென்றால் 15 கோடி ரூபாயைக் கடன் வாங்கியாவது ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கும், அல்லது மத்திய அரசின் திட்ட நிதியிலிருந்து கேட்டாவது செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பிரச்னை எளிதாக இருக்காது. 180.9 கோடி என்று நிதிநிலை அறிக்கையில் வருகிறதே என்றுகூட விளக்கம் கேட்டேன். அதற்குக் கல்வியமைச்சரவர்கள், கல்வி, கலை, பண்பாடு என்று 4.62 கோடி வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் அதையும் கூட்டிப் பார்க்கின்றபொழுது 180 கோடிக்கு மேலாக ஏறக்குறைய 0.32 என்று வருகிறதே ஒழிய 0.9 வரவில்லை. ஆகவே, இது புள்ளி விவர அறிக்கையாக இருப்பதால் சொல்கிறேனே தவிர குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

இந்தக் குறைபாடுகள் எங்களுக்கு எவ்வளவு குழப்பத்தை உண்டாக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அமைச்சர்களாக இருப்பவர்களுக்கே சில நேரங்களில் குழப்பம் வருவது எனக்குத் தெரியும். உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு இவைகளைப் படிக்கும்பொழுது எவ்வளவு குழப்பம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

அத்துடன் பிற துறைகளிலே செலவழிக்கப்படுகின்ற தொகையையும் சேர்த்து ஏறத்தாழ 187 கோடி ரூபாய் வரும். இந்த 187 கோடி ரூபாய்க்கு மேல் இன்னும் மற்றத்துறைகளில் செலவிடும் 35 கோடி ரூபாய் என்பதையும் சேர்க்கும்பொழுது 222 கோடி ரூபாய் என்பது ஏறத்தாழ நான்கே முக்கால் கோடி மக்களுக்குக் கல்வி, மருத்துவக் கல்வி, கால்நடை, வேளாண்மைக் கல்வி ஆகியவற்றிற்குச் செலவழிக்கப்பட வேண்டியதாகிறது.

80 இலட்சம், 85 இலட்சம் மாணவர்கள் இன்று பள்ளிகளில் படிக்கும் நிலையில் இன்னும் மூன்று, நான்கு ஆண்டுக்காலத்தில் அது ஒரு கோடியாக உயரும் நிலை ஏற்படும். ஆகவே, இதற்கான வசதிகளை உருவாக்கும் கடமை மிக வேகமாக நிறைவேற்ற வேண்டிய நிலைமைக்கு ஆளாக வேண்டி வரும். அப்பொழுது கல்வித்துறை நிர்வாகத்திலே மேலும் வளர்ச்சி ஏற்படும். மேல் உயர்நிலைக் கல்விக்கான போர்டு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். பல தொழிற்கல்வி வல்லுனர்களும் கலந்த விரிவான போர்டாக அது அமைய வேண்டி வரும்.



அடுத்து, திருச்சியிலேயும், கோவையிலேயும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்த வேண்டுமென்பது அது நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வருகின்ற ஒன்று. அவை விரைவில் அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெக்னிக்கல் யூனிவர்சிட்டி தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லப்படுகின்ற கருத்தும் மிகவும் வரவேற்கத்தக்க கருத்து. இன்னும் சொல்லப்போனால் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டு ரீஜினல் சென்டர்கள் வட்டார மையங்களை நாகர்கோவில், நெல்லை போன்ற நகர்களில் வைத்தால் பயன்தரத்தக்க வகையில் அமையும்.

அதைப்போலவே பிரசிடென்ஸி கல்லூரியினை இப்பொழுது மேல்பட்டப் படிப்புக் கல்லூரியாகச் செய்வது வரவேற்கத்தக்கது.

அப்பொழுதுகூட தனியாக மேல் உயர்நிலைப் பள்ளிகளுக்காக தனித்தியங்கும் யூனிவர்சிட்டி போன்ற ஒரு நிறுவனத்தை அமைத்து, 'செமி யூனிவர்சிட்டி' அமைப்பதுடன் கழகத்திலே உள்ள அத்தனை பாடத் திட்டங்களை அவ்வப்போது ஆராய்ந்து சீர்திருத்த ஏர் அமைப்பும் உருவாக்க வேண்டியிருக்கும்.

அடுத்து, மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரை நியமிப்பதிலே இன்னும் தாமதம் ஏற்படுவது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. தாமதத்திற்கு எது காரணமாக இருந்தாலும், உடனடியாக எந்த இடத்தில் பேச வேண்டுமோ அந்த இடத்தில் பேசி நல்ல முடிவை விரைவில் எடுக்கவில்லை என்றால் மக்கள் மத்தியிலே வதந்திகள் ஏற்பட்டு, அதன் காரணமாக சரியாகவோ தவறாகவோ சில கருத்துக்கள் பரவ இடம் அளித்துவிடும்.

அதோடு நான் ஒரு வேண்டுகோளைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்தபொழுது அதற்கு ஒரு தனி பெருமை ஏற்பட்டது. அதற்கு முன் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் அதன் முதல் துணை வேந்தராக விளங்கினார்கள். அவர்களை மிகப் பெரிய மொழிநூல் பேரறிஞர் என்று நான் ஒப்புக்கொண்டாலும் கூட அவர்கள் காலத்திலே இல்லாத சிறப்பு டாக்டர் மு. வ. அவர்கள் காலத்தில் ஏற்பட்டது. அந்த நிலைமையிலே அது தொடர, அப்படிப்பட்ட சிறப்புடையவர் அங்கே துணைவேந்தராக இருக்க வேண்டுமென்பதை அரசு எண்ணிப் பார்த்து நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இதை நான் தனிப்பட்டவர்களுக்காகச் சொல்லவில்லை, பொதுவான கருத்தாகவே நான் நினை ஊட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இப்பொழுது இந்த அரசு கல்விக்காக ஆற்றுகிற கடமையோடு சேர்த்து, கலைக்காக, பண்பாட்டுக்காக, இன்னும் சொல்லப்போனால், இசை போன்றவற்றிற்காக, பல்வேறு கடமைகளைச் செய்வதாக அறிவித்திருப்பதை நான் பொதுவாக வரவேற்கிறேன்.

இதனை ஒட்டி மதுரையிலே, இசைக் கல்லூரி துவக்கவிருப்பதை நான் வரவேற்கிறேன். இதெல்லாம், தனியார்கள் செய்யக்கூடிய காரியம். என்றாலும், அரசு இதிலே ஈடுபடுவதிலே எனக்கு மாறுபாடு கிடையாது.

மதுரைப் பல்கலைக் கழகத்திலே, இஸ்லாமியப் பண்பாட்டு வளர்ச்சிக்காக, இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்காக, உமறுப் புலவர் பெயரில் பேராசிரியர் பதவியை ஏறபடுத்துவதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதேபோல், பிற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களிலே, தமிழ் பேராசிரியர் பதவி (சேர்) ஏற்படுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும். அதுபற்றி அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள் ; அது போதாது.

கர்நாடக மாநிலத்திலேகூட, பெங்களூர் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்த விரும்புகிறார்கள். எனவே, அப்படி விரும்புகிறவர்களுக்கு உதவி செய்ய, பரவலான சுற்றறிக்கை அனுப்பி, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கிற முறையை நீங்கள் மேற்கொண்டால் அது நல்ல பயனளிப்பதாக இருக்கும்.

நினைவுச் சின்னங்கள் என்ற வகையில், கம்பர், வள்ளலார் போன்றவர்கள் பெயர் நிலைக்க நினைவுச் சின்னம் என்னும் முறையில் தமிழ்ப்பண்பாட்டு மைய நிலையம் ஒன்று ஏற்படுத்துவதோடு, அதில் நூலகமும், ஆராய்ச்சி நிலையமும் அமைப்பதோடு, பட அரங்கமும், கண்காட்சியும் அமைக்கப்படும் என்றும் அறிவித்து இருக்கிறீர்கள். கம்பர், வள்ளலார் போன்றவர்கள் என்று வரும் போது,அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உணர்வுகளுக்கு இணைந்து வருகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமெனக் கேட்கிறேன்.

கம்பர் என்று தொடங்கி இளங்கோவை எப்படியோ விட்டு விட்டார்கள் ? இளங்கோவடிகள், கம்பர், வள்ளலார் என்று நினைவுச் சின்னம் தொடங்குவதை விட்டு விட்டு, கம்பரையே பற்றிக் கொண்டால், இளங்கோவை யார் கைப்பற்றிக் கொண்டு போனார்கள் என்று கேட்கவிரும்புகிறேன். (குறுக்கீடு) நாஞ்சில் மனோகரன் அவர்கள் கம்பர் சான்றோர் என்று கூறுகிறார். அப்படியானால், இளங்கோவும் சான்றோர்தான், வள்ளுவரும் சான்றோர் தான். எப்படியோ உங்கள் இன்றைய நினைவில் கம்பருக்குக் கிடைக்கிற இடம் இளங்கோவுக்குக் கிடைக்கவில்லை என்பதும் வள்ளுவருக்கும் கிடைக்கவில்லை என்பதும் இளங்கோவும்,



கம்பரும், வள்ளுவரும் சேர்ந்து காட்சிதரும் வகையில், பாரதியார் பாடிய அந்த உணர்வுகளை எடுத்துக்காட்டுவதாக இல்லை. பெரிய காவியம் இயற்றாவிட்டாலும், மிகப் பெரிய சீர்திருத்தச் செம்மலாக விளங்கியவர் வள்ளலார். எனவே, வள்ளலாரைப் பாராட்டுவதை, போற்றுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன், அது வேறு. ஆனால், கம்பர், வள்ளலார் என்று மட்டும் குறிப்பிட்டுச் சொல்கிறபொழுது, இளங்கோவும், வள்ளுவரும் தவறாது இடம் பெற்றிருக்க வேண்டும். அத்துடன், சீத்தலைச் சாத்தனாரை விட்டு விட்டீர்களா என்றும் கேட்கலாம். ஆனால், கம்பரையும், வள்ளலாரையும் கூறுகிற நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் முன்பெல்லாம் பேசும்போது, இளங்கோவிலே ஆரம்பித்து, பாரதிதாசனிலேதான் அவருடைய பேச்சு முடியும். இப்பொழுது அது இளங்கோவைவிட்டு கம்பரிலே ஆரம்பித்து, இக்பாலிலே முடிகிறதே தவிர, பாரதிதாசனில் முடியவில்லை. எனவே, இளங்கோவையும், வள்ளுவரையும், பாரதியையும், பாரதிதாசனை விட்டது, அப்படிப்பட்ட எண்ணத்திற்கு அவர் ஆட்பட்டிருப்பது, நாட்டிலே ஏற்பட வேண்டிய தமிழ் உணர்வுக்கு ஏற்ற துணையாகவில்லை என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், சென்னையிலேயிருக்கிற வள்ளுவர் கோட்டம், நீங்கள் சொல்கிற அதே குறிக்கோளைக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான். நான் அதற்குள்ளே செல்ல நேரம் வரவில்லை. ஆனால், அந்த வள்ளுவர் கோட்டத்திலே, அடிமட்டத்திலே, பெரியதொரு இடம், ஆய்வகம் நடத்துவதற்கும் ஆராய்ச்சி நடத்துவதற்கும் ஏற்றவகையில், வள்ளுவர் கருத்துக்களை ஆராய்ச்சி செய்கின்ற வகையில், பண்பாட்டை வளர்க்கின்ற வகையில், தமிழ்ப்பணி செய்ய ஒரு மைய நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஒரு மைய நிலையம் தேவைப்படுகின்ற நிலையில், அங்கேயே வள்ளுவரையும், கம்பரையும், இளங்கோவையும் சேர்த்து முன்கூட்டியே இப்பொழுதே ஆராய்ச்சி தொடங்கும் வகையில், ஆராய்ச்சி நிலையத்தை அங்கு ஏற்படுத்த வேண்டும். பின்னர் வேண்டுமானால், மாபெரும் கூடம் கட்ட வேண்டுமென்றால், கலைஞர் கருணாநிதி அவர்கள் கட்டியதைவிடப் பெரிய கூடமாகத் தான் கட்ட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால், அவ்வளவும் தமிழுக்குத்தான். அப்படிப்பட்ட அந்த வகையிலே போட்டி இருப்பதை நான் வரவேற்கிறேன். பல்கலைக் கழகத்திலே ஏற்படுத்தவிருக்கும் அமைப்பினை நான் வரவேற்கிறேன். இன்னும் சொல்லப்போனால், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிலையம் சென்னையிலே இருக்கிறது, ஒரு கோடியிலே இருக்கிறது. அந்த ஆராய்ச்சி நிலையத்தைக்கூட விரும்பினால் இந்தக் கோட்டத்திலே அமைக்கலாம்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுக்கும் பணியில் இடையில் ஏற்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஆர்வம் காட்டவில்லை. அகரமுதலியை உருவாக்குவதற்கான முயற்சியை

[திரு. க. அன்பழகன்] [1978 மார்ச் 4

அரசு எடுத்துக்கொண்டதை நான் வரவேற்க விரும்புகிறேன். ஆனால், ஒரு சிறு வேண்டுகோள். அந்த அகரமுதலியை உருவாக்கும் திட்டத்தை இயக்குகிற தமிழ்ப் பேராசிரியர் திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் ஏறத்தாழ 70, 75 வயதானவர். அவருக்கு எல்லா வசதிகளும் செய்து தரவேண்டும். ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக் காலத்திலேயே இதிலே ஈடுபட்டு, ஓர் அகரமுதலியை அவரிடம் முழுவதுமாக முடித்துப் பெறுகிற முயற்சியில் அவருக்கு எல்லா வசதியையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் அமைச்சராக இருந்தபோது, சித்த மருத்துவத்தில் தேர்ச்சிமிக்க ஒரு அறிஞரை, 80 வயதானவர் வேண்டிக் கேட்டுக் கொண்டதன் பேரில் இரண்டாண்டுக்காலம் அரிய முயற்சி செய்து, சித்த மருத்துவ வரலாற்று நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி முடித்தார். ஆனால் அடுத்த ஓர் ஆண்டு 4 மாத காலத்திலே அவர் மறைந்துவிட்டார். சந்தேகம் கேட்கக் கூட அவர் இன்று இல்லை. சந்தேகம் தெளிவிக்கவும் வேறு ஆள் இல்லை, எனவே, இந்த அகரமுதலியை உருவாக்கும் சிறப்புவாய்ந்த பெரியவரின் வயதைக் கருதி அதை இயக்குவிப்பவருக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து பணி தடையின்றி நடைபெறச் செய்ய வேண்டும். பல ஆண்டுகட்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் லெக்சிகன் உருவானபோது, பல்கலைக் கழகத்திலே, தவறான நோக்கங்களைக் கொண்டு உருவாக்கப் பெற்றது என்ற குற்றச்சாட்டுக்கள் உருவானது. எனவே இந்த அகரமுதலியைக் குறித்து மொழிநூல் வல்லுநர்கள் சிலர் கருத்து வேறுபடலாம். ஆனால், இந்தத் தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி, செந்தமிழ் சொற்பிறப்பியலைத் தெரிந்துகொள்ளப் பயன்படும் என்பதால், இந்த அரிய முயற்சி தமிழ்மொழி வளர்ச்சிக்கு நன்கு பயன்படும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 1–20]

International School of Dravidian Linguistics என்பது தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய 4 மாநிலங்களும் சேர்ந்து ஒரு ஆண்டுக்கு 50 ஆயிரம், 60 ஆயிரம் என்று நிதி வழங்கி நடத்தப்படும் இந்த அமைப்பு மிகச் சிறந்த பணியாற்றிக் கொண்டு வருகிறது. பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் கேரளப் பல்கலைக் கழகத்தின் மதிப்பைப் பெற்றவர். தமிழ்நாடு அரசாங்கம், மற்ற அரசாங்கத்தைவிட குறையாத அளவில் நிதி தருகிறோம், நிரந்தரமாகத் தருகிறோம் என்று உறுதியளித்தால் அகில இந்திய அளவிலே திராவிட மொழி ஆராய்ச்சி வளருவதற்கேற்றதாக அது செயலாற்றக் கூடியதாக இருக்கிறது. அதிலே மிகச் சிறந்த பேராசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக, மலையாளம் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கிடையே புதிய உறவும் ஒத்துழைக்கும் சிந்தனை வளர்ச்சியும் ஏற்படுகிறது. அதன் மூலம் திராவிட மொழி ஆராய்ச்சி வளர்வதற்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.



1978 மார்ச் 4] [திரு. க. அன்பழகன்]

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புவது இது: கடந்த ஆண்டிலே சட்டக் கல்லூரி பற்றித் தெரிவித்தேன். சட்டக் கல்லூரி வளர்ச்சி அடைய வேண்டுமென்று நீங்கள் முடிவெடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். மதுரை சட்டக் கல்லூரிக் கட்டடம் கட்ட முன் வந்திருப்பதை வரவேற்கிறேன். சட்டக் கல்லூரியில் உள்ள ஆசிரியர்கள், 7 ஆண்டு, 8 ஆண்டுக் காலம் பணியாற்றியும், இது வரையில் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. இன்னும் Confirmation of Service இல்லை. இன்னும் டெம்பரரியாகவே இருக்கிறார்கள். இந்த மாதம் அக்கல்லூரியினுடைய முதல்வர் ஓய்வு பெற்ற நிலையில் இருக்கிறார். இன்னொருவர் நியமிக்கப்படவில்லை. இல்லை அவரே நீடிப்பாரா என்பதும் தெரியவில்லை.

Director of Legal Studies என்று ஒரு பதவி இருக்கிறது. இதற்குத் தகுந்த ஒருவரை நியமிக்காததால் நான்கு ஆண்டுகளாக காலியாக இருக்கிறது. இது ஒரு பெரிய குறை.

அதே போல சட்டத்தைத் தமிழிலே படிப்பதுதான் எதிர் காலத்துக்குத் தேவை. இதற்கு உபயோகமான வகையிலே காரியங்கள் செய்யப்படவில்லை.

அங்கே செக்கரட்டரி பொறுப்பில் ஒருவர் இருந்தார். இப்போது முன்னைய வேலைக்குத் திரும்ப அனுப்பப்பட்டுப் போய் விட்டார். அந்த பி.ஏ. பட்டதாரியான அவர் எல்லாத் தகுதியும் பெற்றவர். அவர் பேரன்ட் டிபார்ட்மென்டுக்கு, அரசாங்கத்தால் அனுப்பப்பட்டார். வேண்டுமென்றே அனுப்புப்பட்டார். தவறான தகவலின் பேரில் வேண்டுமென்றே அனுப்பப்பட்டார். அந்தப் பதவிக்குப் பட்டதாரியாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு பட்டப்படிப்பு இல்லாத எஸ்.எஸ்.எல்.சி. படித்தவரை நியமிப்பதற்காக ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அறிகிறேன். அவர் பல ஆண்டுக் காலமாகப் பணியில் உள்ளவராக இருந்தாலும் விதிமுறைகளுக்கு மாறாக அவரை நியமிக்க இருக்கிறார்கள். அவருக்கு உரிமை இருக்குமானால், தடையில்லை. செய்கிற காரியங்கள் முறையானவையாக இல்லை. நிறைவேற்றவேண்டிய பெரிய காரியங்கள் எல்லாம் தேங்கிப் போய் இருக்கின்றன. சட்டக் கல்லூரிக்கான ஆசிரியர்களை உடனடியாகப் பணி உறுதி செய்ய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவாவது உடனடியாகத் தேர்ந்தெடுப்பதற்கான ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இதையே கடந்த ஆண்டு நான் சொல்லியும் கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சட்டக் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் எல்லா மாணவர்களைப் போல அவ்வப்போது ஈடுபடுகிறார்கள். மாணவர்கள்மீது வழக்குப் போடுவது என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்

தில் தேவைப்படலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட அந்தக் காலம் கடந்தால் வழக்கு போடுவது தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. எனவே மாணவர்கள் நலனைக் கருதுகிற வகையில் போடப்பட்ட வழக்குகளைக் கைவிடுவது பெரிய அளவுக்கு விரும்பத்தக்கதாகும்.

இன்னும் சொல்லப்போனால், சட்டக் கல்லூரிக்குத் தேவையான பாட நூல்கள் தமிழிலே வரவேண்டும். ஆனால் அண்மைக் காலமாக வரவில்லை. மற்றும் தமிழ்ப்பாட நூல் நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டு 125 பாட நூல்கள் வெளியிடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டு வெளியிடப்பட்டது 65 நூல்கள் தான் என்று கூறப்பட்டுள்ளது. குறித்த அளவு கூட தமிழ்ப்பாட நூல்கள் வெளியிடப்படாதது வருந்தத்தக்கது. இன்னும் தீவிரமாகச் செயலாற்றி ஆண்டுக்கு 125 நூல்களையாவது வெளியிடவேண்டும். பாடநூல் துறையிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மேல் உயர்நிலைக் கல்விக்கான இன்னொரு பாடத் திட்டத்தில் மொழிகள் என்று வருகிற அந்தப் பாடப் பகுதியிலே ஃபஸ்ட் லாங்குவேஜுக்கு வாரத்திற்கு 4 மணி நேரந்தான். ஃபஸ்ட் லாங்குவேஜ் ஆக தமிழோ வேறு எந்த மொழியோ படிக்கலாம். ஆகு தமிழுக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு துர்பாக்கியமான நிலை. தமிழ் மட்டும் தான் மாணவர்கள் படிக்கக் கூடும் என்று சொல்கிற நிலையில் நாம் இல்லை. ஆனால் தமிழ்மட்டும் தான் இருக்கிறது. அது வேறு. ஆனால் உரிமை தமிழோ, தெலுங்கோ, கன்னடமோ, இந்தியோ வேறு எந்த மொழியோ, அந்த மொழி பயிலவும் உரிமை தருகிறோம். அதற்கு 4 மணி நேரம். அடுத்த இரண்டாவது மொழி—ஆங்கிலம். அதற்கு 4 மணி நேரம். இந்த பார்ட் ஒன்று பார்ட்டு இரண்டு தவிர, விருப்பப் பாடங்கள் — 4 பாடங்கள். அவற்றிற்கு மொத்தத்தில் வாரத்திற்கு 4×6, = 24 மணி நேரம்.

நான் இதை மேல் உயர்நிலைப் படிப்புப் பயிற்சி தரும் நிர்வாக முறைக்காகச் சொல்லுகிறேன். மொழிப் பாடத்தை நடத்தும்போது இருக்கிற நேரத்தை நீடித்துக் கொள்ளலாம். அதற்கு இப்போது இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் சிறப்பு பாடம் என்று இரண்டை எடுத்து கொண்டு 6, 6 மணி நேரம் தந்தால் கூட சரியாக இருக்க முடியும். ஆனால் நான்கு சிறப்புப் பாடங்களை—தொழில் பயிற்சிப் பாடங்களை மாணவர்கள் எடுத்துக் கொள்ளும் போது நான்கு வகையான சிறப்புத் தேர்ச்சிப்பெற்ற ஆசிரியர்கள் கூட உடனடியாகக் கிடைக்க மாட்டார்கள்.

வாரத்தில் அவ்வளவு நேரத்திற்கு அத்தகைய சிறப்புத் துறையில் பயிற்சி தர அவ்வளவு ஆசிரியர்கள் நியமனம் செய்யத் தயாரா? போதிய நிதிநிலை இருக்கிறதா? ஏற்கனவே இருக்கும் ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா?



வொகேஷனல் ஸ்கீம் என்ற பாடத்திற்கு ஆசிரியர்களை நியமித்தாலும் அவர்களுக்கு ஒவ்வொரு வகுப்பில் உள்ள பிரிவுக்கும் 18 மணி நேரம் பாடம் நடத்த பயிற்சி அளிக்க ஆசிரியர்கள் வேண்டும். அந்த அளவிற்கு ஆசிரியர்கள் கிடையாது. கிடைத்தாலும் அந்த வகை பயிற்சிக்கு வசதி உண்டா? 18 மணி நேரம் தொழிற் பயிற்சி படிப்பு என்பதை விட — பார் தி பிரசன்ட் சிட்டியுவேஷன்—தற்போது உள்ள நிலைமைக்கு ஏற்ப ஒவ்வொரு சிறப்புப் பாடத்துக்கும் 6 மணி நேரம் என்பதை விட 2 சிறப்புப் பாடங்களுக்கு 6 மணி நேரம் வீதமும் 2 சிறப்புப் பாடங்கட்கு 4 மணி நேரமும் ஆக அமைத்துக் கொள்ளலாம். அந்த அளவிற்குச் செய்தால் ஓரளவிற்கு இருக்கின்ற வசதிக்கு ஏற்றதாக இருக்கும்.

அப்படிக் குறைக்கச் சொல்கிறபோது, 24 மணி நேரம் ஒதுக்கும் சிறப்புப் பிரிவுக்கு, 20 மணியாக அமைத்துக் கொண்டு, மொழிப் பாடங்கள் இரண்டுக்கும் 8 மணி நேரம் என்பதை 12 மணி ஆக அமைக்கலாம்.

மூன்றாவது மொழிப் பாடமாக விரும்புகிறவர்கட்கு சிறப்புத் தமிழ் படிக்க வாய்ப்பிருப்பது போல், சிறப்பு ஆங்கிலத்தையும் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். மொழிப் பாடங்களில் ஆசிரியர்களை மொழிக்கு எவ்வளவு பயன்படுத்திக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு அது நல்ல பலனை உருவாக்கும். சென்னை போன்ற நகரங்களில் மூன்றாவது மொழியாக ஜெர்மன் பிரஞ்சு முதலான மொழிகளைக் கற்க வழிவகை செய்யமுடியுமானால் அவற்றையும் செய்யலாம்.

எந்த அளவிற்கு மொழிப் பாடத்திற்கு நாம் நேரத்தை ஒதுக்குகிறோமோ அந்த அளவிற்கு மொழி வளர்ச்சிக்கு, அந்த மொழி கற்றவர்கள் மற்றவர்களோடு தொடர்பு கொள்வதற்கு உதவியாக இருக்கும். அடுத்து நான் இங்கே உள்ள விவரங்களைக் காணும்போது சொல்கிறேன்; இசை என்பது மிஸ்ஸெல்லேனியஸ் பாடங்களிலும் வருகிறது, அடுத்தாற்போல் வொகேஷனல் பாடங்களிலும் வருகிறது, எப்படி இது இந்த இரண்டிலும் வர முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இவைகளையெல்லாம் நீங்கள் தந்து இருக்கும் குறிப்புகளை வைத்துச் சொல்லும்போது, குழம்பம் இருக்கிறது.

ஆகவே, அமைச்சர் அவர்கள் பதில் தரும் நேரத்தில் இவைகளைப் பற்றி ஆராய்ந்து தகுந்த பதிலை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாஞ்சில் மனோகரன் அவர்கள் நிதியமைச்சராக இருப்பதால் இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கம் கேட்டு அவர் அதிகமாக குறிப்பிட்டுள்ள 4 கோடி என்பதுடன் மேலும் 10 கோடி கேட்டுப் பெற்று, மேல் உயர்நிலைக் கல்வியை ஏற்படுத்துகிற

நேரத்தில், கல்வித் தரத்தில் பெரியகுறை ஏற்படாமல், சமுதாய வாழ்வுக்கு இன்றியமையாத கல்வி நீரோட்டம் கெட்டுவிடாமல், ஏற்கனவே பல குறைகள் இருந்தாலும், அதைப் புதிய கல்வியைத் தொடங்குகிறபோது, செம்மையாகத் தொடங்க எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய கருத்துரைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு ஜே. ஜேம்ஸ் : இப்போது மணி 1—30 ஆக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில்சொல்லி முடிக்க 3 மணியாகிவிடும். பிறகு நாங்கள் சாப்பாட்டிற்குப் போவது என்றால் சிரமம். ஆகவே, அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் நீங்கள் பேசும்போதே அதை யோசிக்கும்படி சொன்னேன். நீங்கள் கேட்க மாட்டேன் என்று சொல்லி விட்டீர்கள். பொறுத்துக் கொள்ளுங்கள். நாளைக்கும் மானியக் கோரிக்கைகள் இருப்பதால், இன்னும் ஒரு மணி நேரத்தில் முடித்து விடலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978—79 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின்மீது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் நான் பரிசீலனையில் எடுத்துக்கொள்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேசுகின்ற நேரத்தில் பாராட்டுகளும், வரவேற்புகளும்,— அதைப்போலவே குறைபாடுகளையும் எடுத்துச் சொல்கிற நிலைமைகளும் இருந்தன. என்றாலும், பொதுவாக கல்வி மானியக் கோரிக்கைமீது பல்வேறு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்ன எல்லா உறுப்பினர்களுக்கும் என்னுடை மகிழ்ச்சியையும், நன்றியையும் முதற்கண் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, நிதிநிலை விவாதத்தின்போதும், கல்வி மானியத்தின் தொடர்பாக நடைபெற்ற இந்த விவாதத்தின்போதும் நிதிநிலை அறிக்கை பற்றியும், இந்த மானியக் கோரிக்கைமீதும் பொதுவான சில ஐயப்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் கூட பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் இருந்து 30 ஆண்டுக் காலமாகப் போடப்பட்டு வருகிற நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து இப்படி உயர்வுகள் இருந்து கொண்டு இருக்கின்றன என்ற முறையில் ஒரு உயர்வு இருக்கிறதே தவிர இதிலே வேறு என்ன இருக்கிறது என்ற கேள்வியையும் இங்கே கேட்டார்கள்.



(முற்பகல் 1—30)

அப்படிப் பார்க்கின்றபோது நிதிநிலை அறிக்கை என்பது சாதாரணமாக ஒரு கம்பெனியின் பொது நிர்வாகக் கூட்டத்தில் சமர்ப்பிக்கின்ற '' பாலன்-ஷீட் '' ஆக அமைந்துவிடக் கூடாது என்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு அரசினுடைய நிதிநிலை அறிக்கை என்பது நாட்டின் சமுதாய முன்னேற்றத்தையும் வேறுபல பின் விளைவுகளையும் ஏற்படுத்த ஒரு அரசுக்கு கிடைத்திருக்கிற ஒரு முக்கியமான கருவி என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வாக்கெடுப்பு முடியும்வரை பேரவையின நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு சில சந்தர்ப்பங்களில் இந்த நிதிநிலை அறிக்கையை அதிகாரிகள் தயாரித்திருக்கின்றார்கள்; அவர்களுக்குக்கூட நன்றி தெரிவித்து விடலாம் என்ற வாதம் பேசப்பட்டது. ஆனால், நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெற்றிலை, பாக்கு ,சுண்ணாம்பு போடுவதிலே, வெற்றிலை எவ்வளவு, பாக்கு எவ்வளவு, சுண்ணாம்பு எவ்வளவு என்பதை அறிந்து போட வேண்டும். அளவிலே தவறு ஏற்படுமானால் வாய் வெந்துவிடும். அளவோடு முறையாகப் போட்டால் வாய் சிவப்பு அடையும். அதைப்போல் நாம் நிதிநிலை அறிக்கையில் எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு தொகை, எவ்வளவு அதிகரிப்பு என்ற முறையில் நாம் ஒழுங்கான முறையில் பட்ஜெட்டை தயாரிப்போமானால் அதன் மூலம் நாட்டிலே ஒரு முன்னேற்றத்தையும் அதில் தவறு செய்தால் வாய் வெந்துவிடுவதைப் போன்று நாட்டைத் தவறான வழியில் இழுத்துச் செல்வதும் தவிர்க்க முடியாததாகும். இதிலே அதிகாரிகள் வெற்றிலை வாங்கித் தருகிறார்கள், பாக்கு வாங்கித் தருகிறார்கள், சுண்ணாம்பு வாங்கித் தருகிறார்கள். இதுதான் அதிகாரிகளின் பணியாக இருக்குமே தவிர, அளவோடு, சேர்ப்பது அமைச்சரின் பணி, அமைச்சரவையின் பணி, முதலமைச்சரின் பணி என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டுவதில் எல்லோர்க்கும் ஒரு பெருமை இருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மூலம் கல்வி மானியக் கோரிக்கை மீது நாங்கள் எந்த அடிப்படையின்மீது பிரச்சனையைக் கவனிக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சிலர் இந்த மானியத்தை வரவேற்றுச் சொன்னார்கள்; சிலர் பாராட்டுக்களைச் சொன்னார்கள்.

சிலர் சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அதை சீர் செய்ய அரசுக்கு உதவி செய்திருக்கிறார்கள். ஆக, இந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தருகின்ற உறுப்பினர்கள் இன்னும் எங்கள் நற்பணியை தெளிவுபடுத்தினால் நிச்சயமாக நாங்கள் செலவிடும் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்புத் தந்து, அதன் மூலம் தமிழ்நாட்டுக்கு ஒரு நல்ல நிலையை உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே கூறியதைப்போல எங்கள் எல்லோருடைய கவனத்திலும் இருப்பது நம்முடைய மாநிலத்தில் வறுமையால் வாடுகின்ற மக்களின் எண்ணிக்கையாகும். 7 ஆண்டுகளுக்கு முன்னால் நூற்றுக்கு 50 பேராக இருந்த அந்த எண்ணிக்கை இன்றைக்கு நூற்றுக்கு 59 ஆக உயர்ந்திருக்கிறது என்கிறபோது எல்லோருடைய வாழ்க்கைத் தரமும் உயருகின்ற முறையிலே திட்டம் போடவில்லை ; போட்ட திட்டங்களில் உரிய முறையிலே நம்முடைய கவனத்தைச் செலுத்தி இருந்தால் வறுமை உயர்ந்து வருகிற இந்த தவறான நிலைமை, விரும்பத்தகாத நிலைமை விஸ்வ ரூபம் எடுத்து நம்மை கவ்வி விழுங்குகிற அபாயமான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது. அந்த அடிப்படையிலேதான் நாங்கள் பிரச்சினைகளைப் பார்க்கிறோம்.

'' எங்கே புரட்சி, எங்கே புரட்சி '' என்று கேட்கிறார்கள் புரட்சி என்றால் எந்தப் பொருளில் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் நினைக்கிற புரட்சி எல்லாம், இதுபோன்ற மானியக் கோரிக்கைகளில் செலவு செய்வதன் மூலம் நாட்டிலே எத்தகைய மாறுதல்களை எதிர்பார்க்கிறோம் என்றால்,—இதற்கு முன்னால் 30 பேர்களுக்குப் பயன்படுகிற, நன்மை பயக்கிற திட்டமாக இருந்தால் இப்போது 40 பேர்களுக்கு அல்லது 50 பேர்களுக்கு அல்லது 60 பேர்களுக்குப் பயன் தருமா என்ற அடிப்படையிலேதான் நாங்கள் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கின்றபோது நாங்கள் போடுகிற இந்தத் திட்டங்கள் பெரும்பான்மையான மக்களுக்கு, அல்லல்படுகின்ற மக்களுக்கு நிச்சயம் நன்மை பயக்கும் என்று கருதுகிறோம். இதைத்தான் நாங்கள் புரட்சி என்று கருதுகிறோம்.

அதற்கு மாறாக 30 என்பது 20 ஆகுமானால் அது புரட்சி அல்ல என்பது மட்டுமல்ல அது எதிர்புரட்சி என்ற தவறைச் செய்தவர்களாவோம் என்பதை உணர்ந்துதான் பேசுகிறேன். உங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற பல்வேறு விவரங்கள் அத்தகையதொரு புரட்சிகரமான மாறுதலை வேகப்படுத்திக்கொண்டு வருகிறது, விரைவுபடுத்திக் கொண்டுவருகிறது என்று நீங்கள் உணர்வீர்களானால் நிச்சயமாக நாங்கள் வைத்திருக்கிற அந்தத் திட்டங்களில் புரட்சி இருக்கிறது, இருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இந்த அடிப்படையில் நாங்கள் பிரச்னைகளை அணுக விரும்புகிறோம். இந்த அடிப்படையில் பிரச்னைகளை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்.



உதாரணத்திற்காக ஒன்று சொல்லப்போனால் இன்று கிராமம் கிராமம் என்று அநேக இடங்களில் இருக்கிறது என்று சொன்னார்கள். கிராமம் என்ற வார்த்தை மட்டுமல்ல. கிராமம் என்ற வார்த்தைக்கு இருபக்கத்திலும் பல்வேறு தமிழ் வார்த்தைகளைப் போட்டிருக்கிறோம். அதை நீங்கள் படித்திருப்பீர்களானால் முதல் அமைச்சர் அவர்களின் எண்ணம் என்ன என்பதை நிச்சயம் புரிந்துகொண்டிருக்கமுடியும்.

நான் கருதுவதெல்லாம், எவ்வளவோ ஆண்டுகளாக இருந்து வரும் கல்வி முறை, இதுவரை இருந்து வந்த பாடத் திட்டங்கள், அப்பாடத்திட்டங்களினால் ஏற்பட்ட விளைவுகள் இவற்றைப் பார்க்கும்போது ஒரு மிகப் பெரிய குறைபாட்டினைக் காண்கிறேன். கிராமங்களில் மாணவர்கள் படிக்கிறார்கள். கிராமங்களில் படித்துவிட்டுக் கல்லூரியில் சேர நகரத்திற்கு வருகிற மாணவர்கள் ஒரு பட்டம் பெற்றுவிட்டு இங்கேயே பதவியில் இருக்க வேண்டும் என்று கருதிக்கொண்டு இங்கேயே தங்கிவிட நினைக்கிறார்களே தவிர தான் பெற்ற அறிவாற்றலை வளர்த்துக்கொண்ட பிறகு, நம் கிராமத்திற்குச் செல்வோம், சென்று கிராமத்தில் பணியாற்றுவோம் என்று எண்ணுகிற எண்ணம் நாம் தருகிற கல்வியின் மூலம் இல்லை என்பதை உணர்கிறேன்.

கிராமங்களிலிருந்து அறிவு வெளியேற்றம் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். கிராமங்களில் இருக்கும் மிட்டாக்கள், மிராசுதாரர்கள், பத்தாயிரக்கணக்கில் சம்பாதிக்கக்கூடியவர்கள் பொதுவாக அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் கையில் காசு கிடைத்தவுடன் நகரத்திற்குப் போய் முடிந்தால் ஒரு வீடு கட்டிக்கொள்ளவும் ஒரு கார் வாங்கிக் கொள்ளவும் அங்கிருந்து கொண்டு கிராமத்திலுள்ள விவசாயத்தைக் கவனிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சம்பாதிக்கிற பணத்தை வைத்துக்கொண்டு, கிராமங்களில் சம்பாதிக்கிற பணத்தை வைத்துக்கொண்டு கிராமத்தில் செலவு செய்வோம், கிராமத்தில் முதலீடு செய்வோம் என்று எண்ணக்கூடிய நிலை இன்று நாட்டில் இல்லை. ஆகவே பொருளும் வெளியேறுகிறது, கிராமங்களிலிருந்து. அந்நிலையில் கிராமங்களில், பாடுபட்டு உழைத்துச் சம்பாதிக்கிற வர்க்கம் வேலை கிடைக்காத நிலையில், தான் பிறந்த மண்ணைவிட்டுவிட்டு, தன் நண்பர்களை விட்டுவிட்டு, உற்றார் உறவினர்களை விட்டுவிட்டு, குழந்தை குட்டிகளோடு நகரத்தைச் நோக்கிச் செல்கிற ஒரு நிலை ஏழை மக்களுக்கு ஏற்படுகிறது. அவ்விதத்தில் உழைப்புச் சக்தியும் ஆற்றலும் கிராமங்களை விட்டு வெளியேறுகிறது. இந்நிலை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில்தான் நகரங்களுக்கு வருவதன் மூலம் நகரங்களின் பிரச்சனை தீராமல் புதுப் பிரச்னைகளும் ஏற்படுகின்றன. புதுச் சேரிகள் உருவாகின்றன.

ஆகவே, கிராமங்களிலிருந்து நகரத்திற்குச் செல்கிற போக்கினை நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும், அப்போக்கினை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். கிராமங்கள் செழிப்பாக வளரும் நிலையில் நாம் நம் திட்டங்களைச் செயல்படுத்தியாக வேண்டும். அந்த அடிப்படையில்தான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், அதன் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசும்போதும் அல்லது இங்கு வைக்கிற பல திட்டங்கள், நிதிநிலை அறிக்கைகள், மானியக் கோரிக்கைகள் மூலம் அந்த அடிப்படையிலேதான் பாடுபடுகிறது என்று நான் சொல்வதற்கு மிக முக்கிய காரணம் எங்களுக்கு ஒத்துழைப்புத் தர விரும்புகிறவர்களுக்கு, ஆதரவு தர விரும்புகிறவர்களுக்கு, நாங்கள் நல்லது செய்தால் அதை ஆதரிப்போம் என்று சொல்லக்கூடிய அருமை நண்பர்களுக்கு இந்தளவு ஒரு தெளிவை ஏற்படுத்தினால் நிச்சயமாக அவர்களது ஒத்துழைப்பு இன்னும் பன்மடங்கு கிடைக்கும் என்பது மட்டுமல்ல, நாட்டிலுள்ள பல்வேறு முரண்பாடுகள் முன்னேற்றத்திற்குத் தடை என்ற அறிஞர்கள் கருத்து உண்மையாயிருக்குமானால் அந்த முரண்பாடுகளை, மாறுபாடுகளைக் குறைப்பதற்குக்கூட இது வழிவகை செய்ததாக இருக்கும் என்று கருதி இந்த விவரத்தை மட்டும் சொன்னேன்.

கல்வி மானியக் கோரிக்கைபற்றிச் சொல்கிறபோது பொதுவான ஒரு நோக்கத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கல்வி என்பது இதுவரையில் குமாஸ்தாக்களை உருவாக்குகிற கல்வித் திட்டம் என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். அப்படிப் பார்த்தால்கூட இந்தக் கல்வித் திட்டம் ஒழுங்கான குமாஸ்தாக்களைக்கூட உருவாக்க முடியாத நிலையில் இருக்கக் கூடிய திட்டம் என்பதைத்தான் பார்க்கிறோம். ஆகவே இந்தக் கல்வித் திட்டம் மாற்றப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை, அல்லது கருத்து வேறுபாடு இல்லை என்றே கருதுகிறேன். வளர்ந்துவருகிற சமுதாயப் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு, நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அளவிற்குக் கல்வித் திட்டம் அமைந்தாக வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வோமானால் வளர்ந்து வரும் சமுதாயத் தேவைகளுக்கேற்ப கல்வித் திட்டம் மாறிக் கொண்டுதான் இருக்கும், மாறக் கூடாது என்று சொன்னால் அது மிகப் பெரிய கொடுமையான நினைப்பு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1—40)

மாறுதல் வருகிறது, பல்வேறு மாறுதல்களைக் கொண்டு வர வேண்டும் என்று நினைக்கிறோம். அப்படிப்பட்ட நேரத்தில் எல்லாம் நம்முடைய கொள்கைகளை நாம் தெளிவுபடுத்தியாக வேண்டும். இந்த நாட்டிலுள்ள மாணவர்கள் சமுதாயத்திற்குப் பாரமாக இருக்கின்றார்கள் என்ற நிலைமையை மாற்றி, சமுதாயத்திற்கு இப்படிப்பட்ட மாணவர்கள் பயன் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்கின்ற நிலைமையை ஏற்படுத்துவதற்குரிய வகையில், கல்வித் திட்டம் அமைய வேண்டும். அதற்கான முறையில்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



" நான் படித்து விட்டேன், பட்டம் பெற்று விட்டேன், படித்துவிட்டுத். தொழில் இல்லாமல் இருக்கிறேன். சமுதாயத்திற்குப் பாரமாக இருக்கிறோம் " என்ற நிலைமை இல்லாமல், பயன்தரக் கூடியவர்களாக இருக்கின்ற சூழ்நிலையில், இப்போதுள்ள நிலைமையை ஒழித்து எங்களுக்குத் தொழில் தெரியும். என்னால் உழைக்க முடியும், ' நான் சமுதாயத்திற்குப் பயன்படுவேன் ' என்கின்ற அடிப்படையில், தகுதியையும், தன்மையும் உருவாக்கிக் கொள்கின்ற அளவில், கல்வி அமைய வேண்டும், முற்போக்கான கல்வியாக அமைய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு முற்போக்கான கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கு எங்களாலான முயற்சியை எடுத்துக் கொண்டு வருகிறோம். அதனுடைய விளைவுகள்தான் இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்கள். அவற்றைத் தான் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்ற கொள்கை அறிவிப்பில் உங்களால் பார்க்க முடிகிறது.

தொழில் கல்வி என்பது ஒரு மாணவன் படித்து—அதாவது பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துவிட்டு, அந்தக் கல்வி மட்டும் அவனது வாழ்க்கைக்குப் பயன்படுவதில்லை. கல்லூரிகளில் போய் 80 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்றார்கள் என்றால் 2 லட்சம் பேர்கள் படிக்காமல் தேங்கிவிடுகின்றார்கள். இப்படித் தேங்கி விடுகின்ற இரண்டு லட்சம் பேர்களுக்கும் தன்னம்பிக்கை ஏற்படக் கூடிய வகையில், உயர்நிலைக் கல்வியில் தொழில் கல்வி பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில். அதன் அடிப்படையில், அகில இந்திய அடிப்படையில் கொண்டு வரப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் எல்லோருக்கும் இந்த வாய்ப்பு இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தத் தொழில் கல்வியைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இதை நகரங்களில் மட்டும் என்றில்லாது, நகர்ப்புறங்களின் அருகாமையிலுள்ள கிராமங்களை அடுத்து இருக்கின்ற பள்ளிகளிலும் இதைக் கொண்டு வரவேண்டும் என்று திட்டமிட்டு, இதை, தீவிரமாகச் செய்தாக வேண்டும் என்று செயல்பட்டு வருகிறோம். நூறு பேர்கள் இருக்கிறார்கள் என்றால், 30 பேர்களுக்கு மட்டுந்தானா இந்தத் திட்டம், முப்பது பேர்களுக்கு மட்டும்தான் மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற வரிப்பணத்திலிருந்து செலவு செய்ய வேண்டுமா என்ற கேள்விகளுக்கு இடமில்லாமல், அதிகமான பேர்கள் இதனால் பயன் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன், மாணவர்களிடையே புதிய உற்சாகமும், தன்னம்பிக்கையும் உண்டு பண்ண வேண்டும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட திட்டத்தின் விளைவுதான் இது. குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் தான் என்றில்லாமல், இல்லை, இல்லை, 400 அல்ல

500 என்ற அளவிற்கு ஹையர் செக்கன்டரி இந்தக் கல்வி முறையைக் கொண்டு வந்து மக்களிடையே பெரியதொரு ஆர்வத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அந்த வகையில் இதை, மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக வரவேற்றார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஏன் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கத்தைத்தான் நான் விளக்கிச் சொன்னேன்.

அடுத்து, செய்திருக்கின்ற முக்கியமான மாறுதல் என்று கருதுவது, முதியோர் கல்வியாகும். எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சரி, முதியோர் கல்வித் திட்டம் என்பது மிகவும் முக்கியமானது என்று எடுத்துக் கொள்வது முக்கியமான கடமை என்று எடுத்துக் கொண்டு, அரசு அதனைச் செயல்படுத்தி வருகிறது. விவரம் தெரியாத மக்கள், அரசு போடுகின்ற திட்டங்களைப் புரிந்து கொள்ளாத வரைக்கும் அரசுத் திட்டங்களால் எந்த விதமான நன்மையும் பயக்காது என்பதையும், எவ்வளவு நல்ல முன்னேற்றகரமான திட்டங்களாக இருந்தாலும் கூட, அவை வரவேற்கக் கூடிய, வரவேற்க முடியாத நிலைமையில் போய்விடும். ஆகவேதான் முற்போக்கு எண்ணம் கொண்ட கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றிய இடங்களில் எல்லாம் தங்களுடைய முக்கியமான கடமையாக முதியோர் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தி, கல்வி அறிவு இல்லாத மக்களுக்கு கண் திறக்கும் பணியாக இதனைக் கருதி இத்திட்டம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

1967-ல் இந்தத் தமிழ் மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், முதியோர் கல்விக்கு முக்கியத்துவம் தந்து 500 இடங்களை ஒதுக்கி இதற்கான முயற்சிகளைச் செய்தார்கள். அவருடைய மறைவுக்குப் பிறகு, இத்திட்டம் கைவிடப்பட்டு விட்ட நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த அரசு இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் தருகிறது. இந்தத் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் திட்டத்திற்கேற்ப, இதிலுள்ள நியாயமான உணர்வுகளைப்பெற்று இது வெற்றி பெறக் கூடிய வகையில் இதற்கான திட்டங்களைத் தீட்டி செயலாற்றுவதற்குத் தீவிரமான நடவடிக்கை எடுப்பதில் தனி கவனம் செலுத்தி, வருகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம் அன்றைக்கு இருந்த அரசு இதை கைவிட்டதற்கு கூறும் காரணங்கள் நியாயமான காரணங்களாக இருக்கலாம் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் இதில் வெற்றி பெற எல்லோரும், கட்சி வேறுபாடின்றி, ஜாதி மத வேறுபாடின்றி, இது ஒரு சமுதாயப் பிரச்னை என்றும், இது முக்கியமான பிரச்னை என்றும் கருதி, சமுதாயத்தில் இப்படிப்பட்ட ஓர் இழிநிலையை போக்குவதற்கு எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்புக் கோரும் வகையில் இதற்கான மானியத்தை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





அதற்கடுத்து, சில அறிவிப்புகள் என்ற வகையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

"1977—78 முதல் 1—3 வகுப்புகளில் யாரும் தோல்வியுறச் செய்யப்பட மாட்டார்கள்"

என்று அரசு ஆணையிட்டிருப்பதாகும். இதைக் குறித்து ஒரு உறுப்பினர் தவறு என்கின்ற முறையில் விமர்சனம் செய்தார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால், அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இளம் பருவத்தில், அப்போது தான் பள்ளிக்கு வந்த இளம் தளிருக்கு தோல்வி என்ற உணர்வு உண்டாகாமல் இருக்க, அவர்களுக்கு படிப்பில் உற்சாகம் ஏற்படுகின்ற வகையில் இந்தச் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் 3-வது வகுப்புவரை தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும், பல்வேறு இடங்களில், பல்வேறு அறிஞர்களின் ஆதரவு பெற்று இந்தச் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

'உயர்நிலைப் பள்ளிகளில் மாவட்டக் கல்வி அலுவலருடன் பக்கத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரும் ஆய்வில் உதவி செய்தல்' என்கின்ற முறையையும் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இதன் மூலம், உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றபோது ஏதோ போலீஸ் ஸ்டேஷனில் மேலதிகாரி வந்து இன்ஸ்பெக்ஷன் செய்வது போன்ற ஒரு உணர்வில்லாமல், கல்வி நிலையங்கள் இருக்க வேண்டும் என்று நாங்கள் முயற்சி எடுத்திருக்கிறோம். இத்தகைய ஒரு குறைபாட்டைப் போக்குகின்ற வகையில், இவ்வாறு இரண்டு தலைமை ஆசிரியர்களும் உடன் இருந்து அங்கே கல்வித் தொடர்பான குறிப்புகளை கவனிப்பதற்கும், அதன் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும் இது உதவியாக இருக்கும் என்ற வகையிலே இத்தகைய சீர்திருத்தத்தையும் செய்திருக்கிறோம். இது நடைமுறையில் தற்போது இருக்கிறதென்றாலும், இதற்கு ஆசிரியப் பெருமக்கள் ஆதரவு தருகிறார்கள்; வரவேற்கின்றார்கள். இதனால் அவர்களுக்கு நல்ல பயன் விளைகின்றது என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, "1—10 வகுப்புப் பாடங்களை மாணவர் தகுதிக்கு மீறிய பளு இல்லாதபடி 1978—79 முதல் குறைத்திட ஆணையிட்டுள்ளமை" என்பது. இதிலே குறிப்பாக, புதிய கணிதம் பற்றி நான் சொல்லவேண்டும். இதை 1 முதல் 5 ஆம் வகுப்புவரை நீக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கு மேல் வகுப்புகளில் அதனுடைய பளுவைக் குறைப்பதற்கு நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்,

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 4

இதைப்போலவே, மற்றப் பாடங்களிலும் பளுவைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலே கல்வியைத் தொடருகின்ற நிலைமையில், அவர்களுக்கு எந்தவிதத்திலும் பாதகமான நிலைமையை உருவாக்காத வகையிலே இந்தக் குறைப்பினை நாங்கள் செய்ய இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வு ஊதியம் வழங்குவதில் பல்வேறு வகையிலே நிலுவை அதிகமாக இருந்தது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த நேரத்தில், ஏறக்குறைய 1,000 பேர்கள் இருந்தார்கள். 1977-ம் ஆண்டு தொடக்கத்தில் நிலுவையில் இருந்த பென்ஷன் கோரிக்கைகள் 1,000. பென்ஷனுக்கு உரிவர்கள், பென்ஷன் பெருத ஆசிரியர்கள் இந்த ஆண்டு 2,000 பேர்கள் சேர்ந்தார்கள். இந்த 3,000 பேரில், 2,700 பேர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, இன்றையத்தினம் அவர்களுக்கு பென்ஷன் தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. நாங்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் எல்லாம், மாவட்ட அளவிலே இருந்து, தலைநகரம் வரைக்கும் இந்தக் கடிதப் போக்குவரத்தினால் தாமதம் ஏற்படும் என்பதால், அதைத் தவிர்ப்பதற்கு இங்கேயிருந்து மாவட்டத் தலைநகருக்கு அனுப்பி, அத்தகைய ஒரு காரியம் செய்ததன் மூலம்; பெருவாரியான பென்ஷன் உத்தரவுகள் போடப்பட்டு, இதிலே இருந்த குறைபாடுகளை எல்லாம் போக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தோல்வி அடைகின்ற மாணவன் அடுத்த முறை தேர்வு எழுதுகின்ற நேரத்தில், எல்லாப் பாடங்களிலும் தேர்வு எழுத வேண்டுமென்ற ஒரு நிலை இருந்துவந்தது. இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, இது தேவையில்லை, எதிலே தவறி இருக்கிறார்களோ, அதிலே மட்டும் தேர்வு எழுதினால் போதும் என்று ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த உத்தரவுகூட, இந்த மார்ச் தேர்வு எழுதுகிற மாணவர்களுக்கு மட்டும் பொருந்துகின்ற அளவிலே இருந்தது. ஆனால் இப்போது, உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்னாலே தவறியிருக்கின்ற எல்லா மாணவர்களுக்கும் இந்தச் சலுகை தரப்படும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்.)

[பிற்பகல் 1—50]

அதன்மூலம் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த லட்சக்கணக்கான மாணவர்கள் நிச்சயம் பயன் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.



1978 மார்ச் 4] [திரு. செ. அரங்கநாயகம்]

மேல் உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஏற்பாடுகள் சிலவற்றை நாங்கள் செய்திருக்கிறோம். அதுபற்றி இங்கே பல உறுப்பினர்களும், குறிப்பாக பேராசிரியர் அவர்களும் நல்ல ஆர்வம் காட்டி பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறார்கள். இது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சொல்லுவதன் மூலம் ஓரளவு அந்தச் சந்தேகங்கள் தீரும் என்று கருதுகிறேன்.

250 அங்கத்தினர்கள் அடங்கிய, 32 துணைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

குறிப்புப் பாடத் திட்டம் 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வெளியிடப்பட்டது. இந்தக் குறிப்புப் பாடத் திட்டம், பொதுமக்கள், அறிஞர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடையே வழங்கப்பட்டு, கருத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

முடிவுற்ற பாடத் திட்டம், அரசு அச்சகத்தில் உள்ளது. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், இது தயாராகிவிடும்.

பாட நூல்கள்—அச்சிடப்பெற வேண்டிய தலைப்புகள் அல்லது நூல்கள் 42 ஆகும்.

இப்பணிக்காக, 150 ஆசிரியர்களும், ஆய்வு செய்வோரும் உள்ளனர்.

37 தலைப்புகள் அல்லது நூல்கள், பாடநூல் நிறுவனத்திற்கு அனுப்பட்டுவிட்டன.

பாடத்திட்டக் குழுத் தலைவரிடமிருந்து 5 தலைப்புகள் அல்லது நூல்கள் வரவேண்டியுள்ளது.

புவியியல், சுற்றுப் புறத்தைப் பற்றிய படிப்பு, வணிக இயல், கணக்குப் பார்க்கும் தொழில் (ஆங்கிலம், தமிழ்) ஆகியவை மட்டுமே வரவேண்டியுள்ளன.

இதற்காக 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 2-ம் தேதி அன்றும் 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ம் தேதி அன்றும், கல்விச் செயலாளருடன், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநருடனும் சந்திப்புகள் நிகழ்ந்தன.

இரண்டாம் ஆண்டு (XII) பாட நூல்களுக்காக, ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மார்ச் மாதம் 15-க்குள் ஆசிரியர்கள் நியமனம் முழுமை பெற்றுவிடும்.

பாட நூல்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் தேதியன்று பாடநூல் மேலாண்மை யக்குநருடன் சந்திப்பு நிகழும்.

ஆசிரியர்களுக்கான மறு ஏற்பாடுகள்—ஆசிரியர்கள் மறு ஏற்பாட்டிற்காக இரண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

21 கல்வி மாவட்டங்களினின்று அறிக்கைகள் வந்துள்ளன. மற்றவை விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன. இராமநாதபுரம் வருவாய் மாவட்டத்திற்கு, ஆசிரியர் மறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் மறு ஏற்பாடு பற்றி எல்லா முதன்மை மாவட்டக் கல்வி அலுவலர்களுடனும் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ம் தேதியன்று சென்னையில் ஆலோசித்து நிர்ணக்கப்படும்.

ஆசிரியர் மறு ஏற்பாடு 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15-க்குள் முடிவு செய்யப்படும். ஏப்ரல் 1978-ல் ஒவ்வொரு ஆசிரியரும் எங்கு பணியாற்ற வேண்டுமென்பதை அறிந்து கொள்வர்.

இந்த இடத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் ஏ-விங் பி-விங் என்ற இரண்டு பிரிவாக இன்றையதினம் இருக்கிறார்கள். இப்போது இந்த மறு ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு முன்னதாகவே அந்த இரண்டு பிரிவினரையும் இணைப்பதற்கான உத்தரவை இந்த அரசு பிறப்பிக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்.)

நிலையை நிர்ணயிக்கும் அல்லது புத்துணர்ச்சி பயிற்சி—இதைப் பற்றிய திட்டங்களுக்காக 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ல் ரூ. 5 இலட்சத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

ஆசிரியர்களுக்குக் கற்பிப்போர், பயிற்சி (கல்லூரிப் பேராசிரியர்கள்) 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் தேதியிலிருந்து 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் தேதி வரை கீழ்க்கண்டவாறு நடைபெறும்:—

| பாடங்கள். | இடம். |
|---|---|
| கணக்கு .. | கிருத்துவக் கல்லூரி, தாம்பரம். |
| பௌதீகம் .. | மாநிலக் கல்லூரி, சென்னை. |
| தாவர இயல் .. .. | மாநிலக் கல்லூரி, சென்னை. |
| விலங்கியல் .. | அரசினர் கலைக் கல்லூரி, கோயம்புத்தூர். |
| இரசாயனம் .. .. | பச்சையப்பன் கல்லூரி, சேத்துப்பட்டு, சென்னை-600 031. |

ஒவ்வொரு பாடத்திற்கும், ஆசிரியர்களுக்குக் கற்பிப்போர் 21 பேர் உள்ளனர்.



இதனால் உயர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள், புத்துணர்ச்சி பயிற்சி பெறுவர். இதைப் பற்றி 1977-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ம் தேதி அன்றும் 1978-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் தேதி அன்றும் பாடத் திட்டக் குழுத் தலைவருடன் விவாதிக்கப்பட்டது.

மே மாதம் 1978-ல் ஒவ்வொரு பாடத்திலும் 300 ஆசிரியர்கள் பயிற்சி பெறுவர்.

உயர்த்தப்பட்ட இருக்கும் கூடுதல் பள்ளிகளுக்காக ஒவ்வொரு பாடத்திலும் மேலும் 250 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டிய தேவை உள்ளது.

இடவசதி அல்லது தங்குமிடம்—1977–78-ம் ஆண்டிற்கு ரூபாய் இரண்டு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

1978-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3-ம் தேதியில் 4 வகைகளை அரசு அங்கீகரித்துள்ளது.

133 அரசு பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறை, ஓர் ஆய்வுக்கூடம் என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு வகையாகும்.

முதல் பட்டியலில் 91 பள்ளிகளும், இரண்டாம் பட்டியலில் 42 பள்ளிகளும் இடம் பெறும்.

91 பள்ளிகளுக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு பொதுப்பணித்துறை ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது பொதுப் பணித்துறையிலே கல்வி சம்பந்தமான கட்டடங்கள் கட்டுவதில் இன்னும் கொஞ்சம் வேகத்தை ஏற்படுத்த, விரைவுபடுத்துவதற்காக இதற்காகத் தனியான எக்ஸிகியூடிவ் எஞ்சினியர் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.) இதற்காக தனியாக ஒரு எஞ்சினியர் இருந்தால் கல்வி சம்பந்தமாக கட்டடங்கள் கட்டுகிறபோது பல்வேறு இடங்களுக்குப் போய்வரக்கூடிய நிலையில் தாமதங்கள் குறைக்கப்படுவதற்கும், கட்டடங்கள் கட்டுகிற பணி துரிதப்படுத்தப்படுவதற்கும் இப்படிப்பட்ட ஏற்பாடு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாம் பட்டியல் முடிவுபெற்றவுடன், 42 அரசு பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்படும். அறிவியல் கருவிகளுக்காக 17—2—1978 அன்று பொருளாதார அங்கீகாரம் கிடைத்துள்ளது. நடப்பாண்டில் கருவிகள் வாங்கி முடிப்பதற்குச் சிறிது காலமே இருப்பதால், இச்செலவினத்தை 1978–79-க்கு

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 4

அங்கீகாரம் செய்யுமாறு, அரசுக்கு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1978—79ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே, கருவிகள் வாங்கும் பணி முடிவுற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கு, முதல் ஆண்டில் தேவையான கருவிகளின் பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் 50 ஆயிரம் ரூபாய் வீதம் 200 அரசு உயர் பள்ளிகளுக்குக் கருவிகள் வழங்கப்படும்.

அடுத்து கல்லூரிகளின் இணைப்பு. கிராமப்புறங்களில் திறக்கப்படவிருக்கும் உயர் இடைநிலைப் பள்ளிகளில் போதிய வசதிகள் இருக்காது. குறிப்பாக, அறிவியல் கற்பிப்பதற்கான வசதிகள் இருக்காது. பள்ளிகளின் இணைப்பைப்போல் கல்லூரிகளின் இணைப்புத் திட்டத்தைத் துவக்கி இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். கல்லூரிகளிலிருந்து அறிவியல் கருவிகளைக் கடனாகப் பெறுதல், உயர் இடைநிலைப் பள்ளி மாணவர்கள், கல்லூரிகளுக்கும், தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளிகளுக்கும் சென்று அங்குள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல், கல்லூரிகளின் இணைப்புத் திட்டத்தின் வாயிலாக, உயர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு பேராசிரியர்கள் தாமாகவே முன்வந்து அறிவியல் சோதனைகளைச் செய்து காட்டிடவும் கற்பிக்கவும் இயலும். உயர்த்தப்பட்ட, புதுமையான பாடத் திட்டத்தில் புத்துணர்ச்சி பயிற்சி அளிக்க இயலும். நூல் நிலையங்கள் இதர வசதிகளைப் பெறமுடியும்.

உயர் இடைநிலைப் படிப்பைப் பற்றிய சிறுநூல் தயாரிக்கப்பட்டு அரசின் பார்வையிலுள்ளது. 5,000 பிரதிகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்பெறும்.

உயர் இடைநிலைக் கல்வி வாரியம் சந்தித்த நாள்களின் விவரம், 31—12—76 ; 20—1—77 ; 24—5—77 ; 17—11—77 ஆகிய நாட்களில் சந்தித்தது. அடுத்த சந்திப்பு 10—3—78ல் நடைபெறும்.

இருவகையான படிப்புகள் கொண்ட 354 மொத்த பள்ளிகளில், ஏறக்குறைய 261 பள்ளிகளில் உயர் இடைநிலைப் படிப்பை அளிக்கலாம்.

இப்படிப்பட்ட தீவிரமானத் திட்டங்களை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொடக்கப் பள்ளிகளிலே ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே பல பேர்கள் செகண்டரி கிரேடு தகுதிபெற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படித் தகுதி படைத்தவர்களுக்கு இந்த அரசு, அத்தனை பேருக்கும் செகண்டரி கிரேடு பதவியைத் தர ஏற்பாடு செய்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.)



1978 மார்ச் 4] [திரு. செ. அரங்கநாயகம்]

அடுத்து, உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு அந்த அந்தப் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து சீருடை வாங்கித்தர அரசு அனுமதித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதுள்ள ஆங்கிலோ—இந்தியப் பள்ளிகளில் பயிலும் மொத்த மாணவர்கள் 7,000 பேர்கள். அவர்களுள் தங்கிப் பயில்பவர்கள் சுமார் 700 பேர்கள். அவ்வாறு தங்கிப் பயிலும் மாணவருக்கு மாதம் தோறும் ஆளுக்கு ரூ. 20 வீதம் உணவுப்படி தரப்படுகிறது. இப்போது அந்தப் படியைப் பெறும் மாணவர்கள் 1—8 வகுப்புகளில் ஒரு தடவையும் 9—11 வகுப்புகளில் ஒரு தடவையும் தவறினாலும் அந்தப் படி நிறுத்தப்படாமல் தொடர்ந்து வழங்கப்படுகிறது. தவறும் ஆண்டுக்கும் சேர்த்து. இந்த இரு நிலைகளிலும் இரண்டாவது தடவையாக ஒரு மாணவன் தவறுவானானால் அந்தப் படி நிறுத்தப்படும். இதை மாற்றி உயர் தொடக்கப்பள்ளி வகுப்புகளில் இரண்டு முறையும் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் இரண்டு முறையும் தவறும் மாணவர்களுக்கும் உணவுப் படி அளிக்க அரசு அனுமதிக்க முடிவு செய்துள்ளது. (ஆரவாரம்.)

[பிற்பகல் 2-00].

தனியார் கல்லூரிகளுக்குப் புதிய முறைப்படி, சம்பளச் செலவில் நிகரப் பற்றுக்குறை முழுவதையும் அரசு ஏற்கும் முறை, சம்பள மானியம் ஆண்டுக்கு ஆறு தவணைகளில் தரப்படுகிறது. இந்தத் தவணைகளைக் கூட்டுவது குறித்து யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978—79-ல், ஏற்கனவே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள 800 தமிழ்ப் பாடநூல்களுக்கும் மேலாக, மேலும் 80 புதிய கல்லூரிப் பாட நூல்களைத் தமிழில் வெளியிட இருக்கிறது.

தொழில் நுட்பக் கல்வியைப் பொறுத்தமட்டில் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களை நடத்தும் தனியார்களுக்கு இதுவரையில் 80 சதவிகிதம்தான் மானியமாகத் தரப்பட்டது. கலைக் கல்லூரிகளுக்கு 100 சதவிகிதம் தருகிறோம். ஆனால் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்கு 80 சதவிகிதம்தான் தரப்பட்டது. ஆனால் அந்த மானியம் போதாத காரணத்தால் அந்தக் கல்லூரிகளை நடத்த முடியாது என்று பல்வேறு கோரிக்கைகள் வந்ததால் அந்த 80 சதவிகிதத்தை 90 சதவிகிதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பொறியியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் சென்ற ஆண்டு 1,422 பேர்தான் அனுமதிக்கப்பட்டார்கள். அதை இன்றைய தேவைக்கேற்ப 1,422 பேர் என்பதை 1,525 பேர்களாக உயர்த்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதனால் இன்னும் கொஞ்ச பேர் அதிகமாகப் படிக்கலாம்.

அதைப்போலவே, எஞ்ஜினியரிங் கல்லூரியிலும், பாலிடெக்னிக்கிலும் பெண்கள் படிப்பது இப்பொழுது அதிகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. அதை ஊக்கப்படுத்துவதற்காக ஆண்களுக்கான பாலிடெக்னிக்குகளில் மாணவிகள் சேர முன்வருவார்களேயானால் அங்கே சேர்த்துக் கொள்வதற்காக இப்பொழுதே இரண்டு மூன்று கல்லூரிகளில் நடைமுறையில் இருந்து வருகிறது. அதை மேலும் விஸ்தரிக்க முடிவு செய்திருக்கிறது.

அடுத்து, இன்னொரு முக்கியமான முடிவு. எஞ்ஜினியரிங் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் படிக்கும் மாணவர்கள் படித்து முடித்த பின்னர் அரசாங்கத்தை எதிர்பார்த்து வேலை தேடிச் செல்லும் நிலைமையிருப்பதை மாற்றி, அவர்கள் வேலை தேடிச் செல்பவர்களாக மட்டுமல்லாமல், வேலை தரக் கூடியவர்களாகவும் மாற வேண்டுமென்ற எங்களுடைய விருப்பத்திற்கிணங்க, அதற்கான பயிற்சி தர வேண்டுமென்று ஏழெட்டு மாதங்களாகவே சொல்லி வருகிறோம். அதற்கேற்ப எஞ்சினியரிங் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் அவர்கள் படிக்கும் தொழில் கல்வியோடு மேனேஜ்மெண்ட் கல்வியும் சேர்க்கப்படும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பரீட்சைத்தாள் காணாமற்போனதாகக் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது 1975–76 இல் நடைபெற்றது. அப்பொழுது நடைபெற்றது என்றாலும் அன்றையதினம் அது விசாரிக்கப்பட்டு, அது உண்மை அல்ல என்ற கருத்தை சி.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி யாருக்கும் அச்சம் இருக்கத் தேவையில்லை என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையைச் சொன்னார்கள். இளங்கோவன் அவர்கள்கூடச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களது நூல்களுக்கான தடையை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். 1974இல் நான் உறுப்பினராக வந்தபொழுதுகூட அதைப்பற்றி நான் சொன்னேன். அப்பொழுது அது கவனிக்க மறுக்கப்பட்டு விட்டது. எனக்கு முன்னாலேயே அப்பொழுது உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. விநாயகம் அவர்கள் அதைக் கேட்டிருக்கிறார்கள், 1971–72இல். அப்பொழுது கல்வியமைச்சராகவிருந்த..............

திரு. கோ. இளங்கோவன் : 1971–72இல் விநாயகம் இல்லை என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்கு முன், 1971–72-க்கு முன் மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் இதே பிரச்சினையைக்கிளப்பி இருக்கிறார்கள். அன்றையதினம் கல்வி



யமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் அதைகுறித்துப் பரிசீலிக்கிறோம் என்ற உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். ஆனால் அந்த உறுதிமொழியின்மீது நடவடிக்கை எடுத்தபொழுது கடைசியிலே என்னவாயிற்று என்றால் அன்றையதினம் முதலமைச்சரர்க இருந்த, நம்முடைய இன்றைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இப்போதைக்கு இது தேவையில்லை என்று உத்திரவிட்டு அதோடு அதை முடித்து வைத்து விட்டார்கள். ஆனால் பிறகு இந்தப் பிரச்னையை எழுப்பியவுடனே இன்றையதினம் முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவரவர்களைச் சந்தித்து, இப்படியொரு பிரச்னையைச் சொல்கிறார்கள், நானும்கூட ஒரு தடவை சொல்லியிருக்கிறேன் என்று நான் சொன்னபொழுது, தமிழ் நாட்டில் அண்ணாவின் நூல்களுக்குத் தடையா என்ற அடிப்படையில் அது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, தடையை எடுப்போம் என்ற முடிவை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் சார்பாக இந்த நல்ல செய்தியை அருமை நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவோடு கல்வி மானியக் கோரிக்கையின்மீது குறிப்பிட்ட கருத்துக்களுக்கு நான் மீண்டும் நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, ஹையர் செகண்டரி பள்ளிகள்—தனியார் மானேஜ்மெண்டுக்குத்தான்—அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அட்மிஷன் வரும்போது, அரசாங்கம் அதிலே கவனமாக இருந்து, எல்லா தரப்பு மாணவர்களுக்கும் இடம் கொடுக்கின்ற வகையிலே இருக்குமாறு பார்த்துக்கொள்ளுமாவென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலே வசதிகள் இருக்கிற காரணத்தால், அரசுக்கு அதிகச் செலவுகள் ஏற்படாது என்ற நிலையில், அதே நேரத்தில், பள்ளிகளுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற நிலையில், அவர்களிடம் தர வேண்டியதாக இருக்கிறது. ஆனால், மாணவர்களை அனுமதிப்பதில் நாம் சில கட்டுப்பாடுகளை விதிக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சில முறைகேடுகள் காரணமாக விசாரணை வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது ; அதுபற்றியும், 10 பிளஸ் 2 பிளஸ் 3 முறையினால் பாதிக்கப்படக்கூடிய கல்லூரி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா, என்பதையும் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம் :</u> தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு உண்டு என்ற உறுதிமொழியைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொன்னேன் ; இதே மன்றத்திலே சொன்னேன். அவர்கள் சந்தித்த நேரத்திலே சொன்னேன், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக் கழக குற்றச்சாட்டுக்களைப் பற்றி சிண்டிகேட் குழு ஆராய்ந்து, அவற்றிலே எந்தவிதமான அடிப்படையும் இல்லை. என்ற முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

நேரடியாகச் சம்பளம் தருவதில் உள்ள ஒரு உண்மையை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். பொதுவான ஒரு உத்தரவைப் போடுகிறபொழுது, அந்த உத்தரவு மைனாரிட்டி நிறுவனங்களுக்கு அமுலாக்கப்பட முடியாத நிலைமை இன்றைக்கிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில், பெரும்பான்மை மக்கள் நடத்துகிற கல்லூரிகளுக்கு மட்டுமேதான் நாம் கொண்டு வருகிற நேரடிச் சம்பளம் என்ற நிலைமை நீடிக்குமானால், அப்படி ஒரு நிலைமைக்கு மாறாக ஒரு கல்லூரி சம்பளம் தருகிற நேரத்தில், அது மைனாரிட்டி கல்லூரியாக இருந்தாலும், வேறு கல்லூரியாக இருந்தாலும், நாம் நடவடிக்கை எடுக்கமுடியும் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுப்போமானால் அந்த நேரடிச் சம்பளம் குறிப்பிட்ட கல்லூரிகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கலாம் என்கிற நிலைமைக்கு மாறாக எல்லா கல்லூரிகளுக்குமே நேரடி சம்பளம் வரும் என்ற நிலைமையில் அந்த முடிவை நாங்கள் எடுத்திருக்கிறோம்.

<u>திரு. அ. சுவாமிதாஸ் :</u> தலைவரவர்களே, ஹையர் செக்கண்டரி எஜுக்கேஷன இருக்கப்போகும் பள்ளிகளில் ஏற்கனவே 200 பள்ளிகள் பெயர்களைத்தான் அரசு அறிவித்திருக்கிறது. இன்னும் பல்வேறு இடங்களுக்கு ஹையர் செக்கண்டரி ஹைஸ்கூல்கள் வேண்டுமென்ற விண்ணப்பம் வந்திருக்கிறது. அரசு இன்னும் எத்தனை மேல் உயர்நிலைப்பள்ளிகளை அறிவிக்க இருக்கிறது? அந்த அறிவிப்பு எப்போழுது வெளிவரும்? அந்தப் பெயர்களை விரைவாக அறிவித்தால், பள்ளிகள் வேதயையான ஏற்பாடுகளைச் செய்ய உதவியாக இருக்கும். ஆகவே, கூடுதலாக மேல் உயர்நிலைப் பள்ளிகளின் பெயர்களை அரசு விரைவில் அறிவிக்க ஏற்பாடு செய்யுமா? அதற்கான ஏற்பாட்டை எப்போது செய்து முடிக்கும்?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவரவர்களே, ஏறக்குறைய 500 பள்ளிகளுக்குத் தருவதாக இப்பொழுது அரசு உத்தேசித்திருக்கிறது. அந்தப் பட்டியல் விரைவிலே தரப்படும். இன்னொன்றையும், நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். 6-வதிலிருந்து, 8-வது வரைக்கும் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்றபொழுது, 5-வது வகுப்பு முடித்தவுடனே, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு மேலே, படிக்க விரும்பவில்லையென்றோ அல்லது படிக்கின்ற சூழ்நிலை இல்லையென்ற



லையோ இருக்கிறது. ஆகவே, 'டிராப் அவுட்ஸ்,' —விலகிச் செல்கிற—எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, அவர்கள் மேலே படிக்க வேண்டுமென்பதற்காக ஒரு திட்டத்தை அமுல் நடத்த இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. முதலமைச்சர் சார்பிலே அதனை நான் சொல்ல விரும்புகிறேன். 6-வதிலிருந்து 8-வது வரை படிக்கிற தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் சீருடை இலவசமாகத் தருவது என்ற முடிவை இந்த அரசு செய்திருக்கிறது.

இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோருகிற நான், அதன்மீது தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் வாங்குமாறு கேட்டுக்கோள்கிறேன்.

[பிற்பகல் 2·10]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(திரு.ஏ. ரகுமான்கான் எழுந்தார்)

உங்களுக்கு ஏற்கனவே வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள், நேரம் இல்லை.

<u>திரு.ஏ.ரகுமான்கான் :</u> நான் அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறேன். அவர் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நீங்கள் மானியத்தில் பேசிவிட்டீர்கள். இப்போது மீண்டும் பேச வேண்டும் என்றால் எப்படி? நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அவையை எப்போது முடிப்பது?

<u>திரு.ஏ.ரகுமான்கான் :</u> நான் மானியத்தில் பேசியிருக்கிறேன். எனக்குக் கேள்வி கேட்பதற்கு உரிமை இருக்கிறது. This is my right of opportunity.

கல்வி அமைச்சரிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஆதாரத்தோடு எடுத்து கூறியிருக்கிறேன். இவைகளுக்கு பல்வேறு விசாரணை உண்டா என்பது முதல் கேள்வி.

இரண்டாவதாக, மதுவிலக்கு சம்பந்தமாக ஒரு அறிக்கை வந்தபோது, தமிழ்தெரியாத அதிகாரிகள்தான் இதற்குக் காரணம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கெல்லாம் உங்களுக்கு உரிமை கிடையாது. இது கேள்வி நேரம் இல்லை. அமைச்சர் அவர்களும் பதில் சொல்லி முடித்துவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே குற்றச்சாட்டுகள் இருந்தால், விசாரணையும் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திருவாளர்கள் என். கிட்டப்பா, செ. சிவசாமி, ப. சந்திரன், எம். ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.—

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், கு. ரமணி, மு. ஆறுமுகம் ஆகியோர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். பேரவையின் முன்னுள்ள கேள்வி,

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,75,69,28,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## (6) அறிவிப்பு.

## பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஜப்பான் செல்லவேண்டி இருப்பதால் அவரது மானியக்



கோரிக்கைகளை வேறு தேதிகளில் மாற்றி எடுத்துக்கொள்ளும்படி கேட்டு இருப்பதால் 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள் அன்று அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்படுகின்றன :—

| | |
|---|---|
| 13—3—1978 திங்கட்கிழமை | 13 நீதி நிர்வாகம். |
| | 14 சிறைச்சாலைகள். |
| 14—3—1978 செவ்வாய்க் கிழமை. | 2 மாநில ஆயத் தீர்வை. |
| | 4 பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம். |
| | 5 முத்திரைத்தாள்கள்— நிர்வாகம். |
| | 58 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். |
| 27—3—1978 திங்கட்கிழமை | 21 மீனளம். |
| | 35 நுகர் பொருள் வழங்கல் |
| | 57 பல்வகை மூலதனச் செலவு. |
| 28—3—1978 செவ்வாய்க் கிழமை. | 6 பத்திரப் பதிவு. |
| | 23 கூட்டுறவு. |
| | 25 சின்கோனா. |
| | 45 காட்டு வளத்துறை. |
| | 56 காட்டுவள மூலதனச் செலவு |

1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28ஆம் நாள் அன்று வாக்கெடுப்புக்கு விடப்படும் மற்ற மானியக் கோரிக்கைகளிலும், மற்ற நிகழ்ச்சிகளிலும் மாறுதல் இல்லை. மற்ற நாட்களின் நிகழ்ச்சிகளிலும் மாறுதல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—14 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

[1978 மார்ச் 4

298. தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரிய தொழில் நுட்பம் சாராத சார்நிலைப் பணி விதிகளுக்கான சிறப்பு விதிகளில் சில நிருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதித் துறையின் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதியிட்ப் பெற்ற 306 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

90. 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத் திற்கிணங்க, 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு திரு. ரெ. வீ. சவுந்தரராஜன், சட்டமன்றப் பேரவை உறுப்பினரது சொத்திருப்புக்கள் பற்றிய விவரக் கணக்கு பேரவை முன் வைக்கப்பெற்றது.

**91. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவிற்கான இணைப்பு.

### இணைப்பு

[600-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 387—க்கான விடையைக் காண்க].

(அ) பாதகமான கருத்துக்களை வெளியிட்டதற்காகவும், பத்திரிகைத் தணிக்கை ஒழுங்கு முறைகளை மீறியதற்காகவும், மாநில அரசு தாமாகவே நடவடிக்கை எடுத்ததன் பேரிலும் மாநிலத் தணிக்கை அதிகாரி அனுப்பியதன் பேரிலும், கீழ்க் கண்ட செய்தித் தாள்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் பிரதிகள் இந்திய எல்லைப் பாதுகாப்பு உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின் 47, 48-வது விதிகளைச் சேர்ந்த விதித்துறையின் கீழ் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்று 1976ல் ஆணையிட்டது:

நாளிதழ்கள் —

(1) இனமுரசு .. .. (7—5—1976, 8—5—1976)
(2) நவமணி .. .. (21-5-76, 22-5-76)
(3) செங்கொடி .. (20-7-75, 21-7-75)
(4) விடுதலை .. .. (29-12-75 முதல் 1-1-76 வரை)
(5) விடிவெள்ளி .. .. (11-12-76 முதல் 1 -12-76 வரை)—இரண்டு ஆணைகள்.

** 2—3—1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றுள்ளன.



D
V211, 31 N78
N29-13-31

1978 மார்ச் 4]

மாத இதழ்கள்—

(1) தென்மொழி .. (1976ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி).
(2) முஸ்லீம் முரசு .. (1976 ஆம் ஆண்டு செப்டம்பர்).
(3) நல்ல தமிழோசை .. (1—2—1976, —1976).

பிற சிற்றேடுகள்—

(1) வணக்கமும் வாழ்த்தும்.
(2) தேச பக்தர்களுக்கு.
(3) வாளும் கேடயமும்.
(4) எங்கள் மாதவன்.

(5) சர்க்காரியா கமிஷன் விசாரணையில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக திரு. மு. கருணாநிதியும் பிற அமைச்சர்களும் விடுத்த அறிக்கைகள்—ஆங்கிலம்.

மாநிலத் தணிக்கை அதிகாரி அறிக்கை அனுப்பியதன்பேரில் விடுதலை, விடிவெள்ளி, செங்கொடி, முஸ்லிம் முரசு, வாளும் கேடயமும், எங்கள் மாதவன் ஆகிய பத்திரிகைகள் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்தது. மொத்தத்தில் 1976-ம் ஆண்டில் 14 பறிமுதல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவற்றில் மறு ஆய்வுக்குப் பின்னர் 13 ஆணைகள் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம் முரசு மீது பிறப்பிக்கப்பட்ட ஆணை மட்டும் ரத்து செய்யப்படவில்லை. ஏனெனில், இந்திய ஒருமைப் பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் விவரங்கள் கொண்ட தேசப் படத்தை அது வெளியிட்டது.

(ஆ) அவசர நிலையின் போது பாதகமான கருத்துக்களை வெளியிட்டதற்காகவும், பத்திரிகைத் தணிக்கை ஒழுங்கு முறைகளை மீறியதற்காகவும் இந்தப் பறிமுதல் ஆணைகள் அனைத்தும் பிறப்பிக்க வேண்டியிருந்தன. மேற்சொன்னவை தவிர, இந்தித் திணிப்பை எதிர்த்துப் பாதகமான அறிக்கையை வெளியிட்டதற்காக 1976ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ஆம் நாளிட்ட 'தென்னவன்' என்ற இரு வார இதழின் பிரதிகளை, இந்திய எல்லைப் பாதுகாப்பு உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின் 46 (5) விதியின் கீழும், கி. பு. கோ. 102-ஆவது பிரிவின் கீழும் மேற்கு தஞ்சாவூர் காவல் துறையினர் பறிமுதல் செய்தனர். சென்னையில் உள்ள இந்திய அரசின் பத்திரிகைத் தகவல் கழக இயக்குநர் (Director, Press Information Bereau) இது குறித்து நடவடிக்கை எடுத்ததால், பறிமுதல் செய்யப்பட்ட பிரதிகளை என்ன செய்ய வேண்டும் என்பதற்கான கட்டளைகளை மேற்படி இயக்குநரிடமிருந்து பெறுமாறு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி அன்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.